

26 JUL 1976






# இருபது அம்சத் திட்டச் சாதனை ஆண்டு விழா!

இருபது அம்சத்திட்டச் சாதனை ஆண்டு விழா, மத்திய, மாநில செய்தித் துறையின் ஒருங்கிணைப்புக் குழுவினரால், கலைவாணர் அரங்கத்தில் 1-7-'76 அன்று மாலை 6 மணியளவில் கொண்டாடப் பெற்றது.

தமிழ்நாடு அரசின் செய்தி, மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு என். கிருஷ்ணமூர்த்தி அவர்கள், விழா நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்ற மேதகு ஆளுநர் சுகாதியா அவர்களையும், விழாவில் கலந்து கொண்ட ஏனைய பெருமக்களையும், விழாவுக்கு வந்திருந்த பொதுமக்களையும் வரவேற்றுப் பேசினார்.

அதன் பின்னர், மேதகு ஆளுநர் அவர்கள் தலைமை உரை ஆற்றினார். 'குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் தீவிரம் தேவை' என்று வலியுறுத்திய ஆளுநர், தமது உரையில், குறிப்பிட்டதாவது :

''இருபது அம்சத் திட்டத்தின் சாதனைகளைக் கொண்டாடுகின்ற விழாவாக இது அமைந்துள்ளது. திட்டங்கள் அனைத்தும் நல்ல முறையில் செயல்பட, பொது மக்கள் அனைவரும் ஒத்துழைப்புத் தர வேண்டும்.

''20 அம்சத் திட்டத்தால் தேசிய வாழ்வில் புதிய வேகம் ஏற்பட்டுள்ளது. தமிழ்நாட்டு மக்கள் அதன் பயன்களை அனுபவிக்கத் தொடங்கியுள்ளார்கள். மக்களது நல்வாழ்வை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் பலன்கள் எல்லோருக்கும் கிடைக்க வகை செய்ய வேண்டும்.

''எவ்வளவு திட்டங்கள் வகுத்துச் செயல்பட்டாலும் நாட்டில் கட்டுப்பாடும், கடமை உணர்ச்சியும் இல்லாவிட்டால், வெற்றி பெற முடியாது.

''இருபது அம்சத் திட்டங்களின் முழுப் பயனையும் அடைய வேண்டுமானால், நாட்டின் மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்.

''குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைத் தீவிரமாக அமல்படுத்துவதில் அதிகாரிகளும் பொது மக்களும் தங்களது கவனத்தைச் செலுத்த வேண்டும்.

''மக்களை நல்வழிப் படுத்தி அவர்களிடம் 20 அம்சத் திட்டங்களைப் பற்றி எடுத்துச் சொல்ல வட்டாரங்கள் வாரியாகக் குழுக்கள் அமைத்துச் செயல்பட வேண்டும்.

''தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் விவசாய, தொழில் வளர்ச்சிக்கு ஆற்றிவரும் பணிகள் பாராட்டுக்குரியன. அவை சாதாரண மனிதனின் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு உதவி செய்ய வேண்டும்.

''இந்த நல்ல நாளில், '20 அம்சத் திட்டம் முழு வெற்றியடையச் செய்வோம்' என்ற உறுதி மொழியை நாம் எடுத்துக் கொள்வோம்.''

தமிழ்நாடு அரசும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியும் இணைந்து தயாரித்துள்ள 20 அம்சத் திட்ட விளக்கத் திரைப்படத்தினை ஆளுநர் அவர்கள் வெளியிட்டார்கள்.

அதன் பின்னர், திருமதி சௌந்தரா கைலாசம் அவர்களும் இந்திய தேசிய தொழிற் சங்க காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு இராமானுஜம் அவர்களும் சிறப்புரை ஆற்றினார்கள்.

திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள் குறிப்பிட்டதாவது :

''இருபது அம்சத் திட்டம் — பல முனைகளை — பல பிரிவுகளை ... வகைகளைப் படைத்துள்ளது ... இந்தியாவிற்குக்


தமிழரசு அட்டைப் படம்: கொடைக்கானல் ஏரி மலர்-7
1—7—1976 இதழ்-1

26 JUL 1976



20 அம்சத் திட்ட விளக்கத் திரைப்படத்தை மேதகு ஆளுநர் அவர்கள் வெளியிட்டார்.

திருப்பு முனையாக அமைந்துள்ளது.''

தமது உரைக்குப் பின்னர், அம்மையார் அவர்கள் ஆளுநரையும் பொதுமக்களையும் வரவேற்று, அழகுத் தமிழில் பாடிய வரவேற்புக் கவிதை சிறப்பாக இருந்தது.

திரு. இராமானுஜம், தமது உரையில் குறிப்பிட்டதாவது :

''20 அம்சத் திட்டம் நாடெங்கும் அமலாகி ஓராண்டு ஆகிறது. ஆனால், தமிழகத்தில் 5 மாதங்கள் தான் ஆகின்றன. 5 மாதங்களிலேயே மாபெரும் முன்னேற்றத்தைக் காண முடிகிறது என்றால், சாதனை சாதாரணமானது அல்ல; குறிப்பிடத் தகுந்தது தான்.''

இறுதியில், மத்திய அரசின் தணிக்கை அதிகாரி திரு. வள்ளியப்பன் அவர்கள் நன்றி கூறினார்.

அதன் பின்னர், இருபது அம்சத் திட்டத்தை விளக்கும் வகையில், தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் அளித்து, திரு. ஏ.வி.எம். ராஜன் குழுவினர் நடித்த 'இமயம்' என்னும் ஓரங்க நாடகம் நடைபெற்றது. நகைச்சுவை விருந்தையும் நல்ல கருத்துக்களையும் இருபது அம்சத் திட்டத்தினால் விளைகின்ற நன்மைகளையும் எடுத்துக் கூறி, காண வந்த மக்களுக்குக் கருத்து விருந்து வழங்கியது.

9 மணியளவில் விழா இனிது நிறைவுற்றது.



'இமயம்' நாடகத்தில் ஒரு காட்சி.

# ஆளுநர் சுற்றுப் பயணத்திலே...





②





1. தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள் 28.6.'76-ல் சங்கரன் கோயில் வட்டாரத்தில், நெடுஞ்சாலை மற்றும் கிராமப்புறச் சாலைத் துறையால் மேற்கொள்ளப் படும் சாலை அமைப்புப் பணிகளைப் பார்வையிட்டார்.
2. இராமநாதபுரம் பெரிய கண்மாயில் நடைபெறும் வறட்சி நிவாரணப் பணிகளையும், கூலி விவரத்தையும் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், 27.6.'76-ல் கேட்டறிந்தார்.
3. திருமங்கலம், ஜவஹர் நகரில் பொதுப்பணித் துறையினரால் அமைக்கப்பட்டுள்ள குழாய்க் கிணறை தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 29.6.'76-ல் பார்வையிட்டார்.



# வேளாண்மையில் பெண்களின் பங்கு


டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன்,
தலைமை இயக்குநர்,
இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம்,
புதுடெல்லி.


வேளாண்மை பண்டு தொட்டு இந்தியப் பெருங்குடி மக்களின் முக்கியத் தொழிலாக இருந்து வருகிறது. இத்தொழிலில் பெண்கள் ஆற்றும் பங்கு மகத்தானதாகும். வீட்டிலும், வயலிலும் அவர்கள் செய்கின்ற பணிகளை ஆராய்ந்தால், ஆண்களைவிட வேளாண்மைத் தொழிலில் பெண்களின் பங்கே அதிகம் என்று கூடச் சொல்லத் தோன்றும்.

வயலில் நாற்று நடுதல், களையெடுத்தல் முதலான பலவேலைகளைப் பெரும்பாலும் பெண்களே செய்கிறார்கள். வயல்களுக்கு வேண்டிய தழை, சருகு முதலான பசுந்தழை உரங்களைச் சேகரித்துக்கொண்டு வருகிறார்கள். வயலுக்கு நீர் பாய்ச்சும் வேலையில், ஆண்களுக்குத் துணையாக நின்று தண்ணீர் இறைக்க உதவி புரிகிறார்கள். பாத்திகளில் தண்ணீரைச் செலுத்துவது மற்றும் பல வேலைகளிலும் பெண்கள் துணை புரிகிறார்கள்.

பயிர் வளரும் காலத்தில் பறவை முதலானவைகளை விரட்டிப் பயிரைக் காக்கிறார்கள். அறுவடை சமயத்தில் கதிர் அறுத்தல், தானியங்களைத் தூற்றுதல், போரடித்துப் பிரித்தெடுத்தல் மற்றும் பல வேலைகளையும் பெண்களே செய்கிறார்கள்.

வீட்டில் கொண்டு போய்த் தானியங்களைச் சேமித்த பிறகுங்கூட, அவற்றை அடிக்கடி உலர வைத்துக் கெட்டுப் போகாமல் பேணுவதில் பெண்களே அதிகக் கவனம் செலுத்துகிறார்கள். வேளாண்மைக்குத் துணைபுரியும் ஆடு மாடுகளுக்குக் காலத்தில் தீவனம் வைத்துப் பேணிக் காக்கிறார்கள். அவற்றின் எருவையும், கழிவுப் பொருட்களையும் சேகரித்து, சேமித்து, வயலில் கொண்டு போய்க் கொட்டுகிறார்கள்.

காப்பி, தேயிலை, ரப்பர்த் தோட்டங்களில் காப்பிக்கொட்டை சேகரித்தல், தேயிலை கிள்ளுதல், பால் சேகரித்தல் முதலான வேலைகளைப் பெண்கள் செய்கிறார்கள். ஏலம், மிளகு, முந்திரித் தோட்டங்களில் பெரும்பான்மையான வேலைகளும் பெண்களாலேயே நடைபெறுகின்றன.

மலைப் பிராந்தியங்களில், சிறப்பாக இமயமலைப் பிராந்தியங்களில், வேளாண்மையின் எல்லா முக்கிய நடவடிக்கைகளையும் பெண்களேதான் செய்கிறார்கள். அவர்களுடைய கடின உழைப்பு இல்லாவிடில், மலைப் பிராந்திய வேளாண்மையே இல்லாமல் போய்விடும் என்றுகூடச் சொல்லி விடலாம். மலைப் பிராந்தியங்களில் உழுவது ஒன்று தவிர இதர எல்லாச் சாகுபடி வேலைகளிலும் பெண்கள் பெரும் பங்கு கொள்கிறார்கள். மலைப்பிராந்தியங்களில் வேளாண்மை செய்வது சமவெளிகளில் செய்வதைவிட அதிகக் கடினமானதாகும்.

மலைப்பிராந்திய நிலங்கள் மேடும் பள்ளமுமாகவும், உயரத்திலும் பள்ளத்திலும் ஒரு வித ஒழுங்குமின்றியிருக்கும். அவை சிறு சிறு நிலங்களாக இருக்குமாதலால், டிராக்டர் முதலிய நவீன சாதனங்களை உபயோகிப்பதற்கும் அதிக வாய்ப்புக்கிலை. ஆகவே, அங்கு கையினாலேயே உழுதல் முதலிய எல்லா நடவடிக்கைகளையும் செய்ய வேண்டும். இதில் மலைப்பிராந்தியங்களில் உள்ள பெண்கள் ஆண்களோடு இணையாக நின்றும், தனித்தும் கடினமாக உழைக்கிறார்கள். பலசமயம் ஆண்களின் உதவியில்லாமல்கூட, அவர்கள் பலவித வேளாண்மை வேலைகளையும் செய்து முடித்து விடுகிறார்கள்.

இப்படி இந்திய நாட்டின் முக்கிய தொழிலான வேளாண்மையில் இன்றியமையாத அங்கமாக விளங்கி, பலப்பல பணிகளையும் புரியும் பெண்களில் பெரும்பாலோர் எழுத்தறிவில்லாதவர்களாக இருப்பதால், நவீன வேளாண்மை முறைகளை அவர்கள் அதிகமாக அறிந்திருக்கவில்லை. அவர்களுக்கு நவீன முறைச் சாகுபடியில் பயிற்சி அளிப்பதற்கான முயற்சிகளும் இதுவரை அதிகமாக மேற்கொள்ளப்படவில்லை. அரசு மேற்கொள்ளும் வேளாண்மை விரிவாக்கத் திட்டங்களிலும் அவர்கள் கலந்து கொண்டு நலம் பெறவில்லை. இந்தக் குறையை நீக்கும் வகையிலும், கிராமப்புறப் பெண்களுக்கு நவீன சாகுபடி முறைகளில் அறிவுண்டாக்கும் நோக்கத்தோடும், சில கிருஷி விஞ்ஞான கேந்திரங்களைத் தனிப்பட அமைக்க இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் முயற்சி எடுத்துள்ளது.

இந்திய வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்திற்கு இன்றியமையாத பங்கினை ஆற்றி வரும் பெண்களுக்கு, நவீன சாகுபடி முறைகளில் பயிற்சியும், விஞ்ஞான அறிவும் தரப்பட்டால் அவர்களது துணையால் வேளாண்மைத் துறையில் நாம் இன்னும் பல மகத்தான சாதனைகளை உண்டாக்க முடியும். இதைக் கருத்திற்கொண்டு அரசும், வேளாண்மைப் பல்கலைக் கழகங்களும், இதர நிறுவனங்களும் செயல் புரிய வேண்டும்.

# புற்று நோயைப் போக்குவோம்




டாக்டர் ஆர். சரசாபாரதி, எம்.டி.
பேராசிரியர்,
நரம்பு நோய்க் குறியியல் துறை,
சென்னை மருத்துவக் கல்லூரி.


வலுவான மணற்பரப்பையும் மிக எளிதில் ஆழமாகத் துளைத்து உள்ளே சென்றுவிடும் ஆற்றல் பெற்றுள்ள கடல் நண்டைப் போலவே, புற்றுநோய் என்னும் பயங்கர நோயும் மனிதர்களின் வலுவான உடலில் எளிதில் பற்றிப் பரவிவிடுகிறது.

இந்தக் காரணத்தினால்தான் புற்றுநோயும் கடல்நண்டும் ஆங்கிலத்தில் கேன்சர் (Cancer) என்னும் ஒரே பெயரால் வழங்கப் படுகின்றன என்று அறிகிறோம்.

குணப்படுத்தும் முயற்சியில் ஈடுபடும்போது எளிதில் நீங்காமலும் சிகிச்சைக்குக் கட்டுப்படாமலும் நிலைத்து நிற்கும் தன்மை பெற்றது புற்றுநோய்.

பன்னெடுங்காலமாகவே புற்று நோய் உலகத்தில் இருந்து வருகிறது. நம்முடைய சிற்ப, சித்திர நூல்களிலும் இந்நோய் பற்றிய குறிப்புகளையும் விவரங்களையும் காணலாம். எகிப்திய அரசர்களுடைய உடல்களை மருந்திட்டுப் பாதுகாத்துவரும் 'மம்மி'களிலிருந்தும் இக்கொடிய நோய் பற்றி அறியலாம். சுசுருதர் இந்நோயைப் பற்றி விவரமாகக் கூறியிருப்பதுடன், இதை அறுவைச் சிகிச்சையின் மூலம் அகற்றும் முறை பற்றியும் வேறு பல சிகிச்சை முறைகளால் குணமாக்குவது பற்றியும் கூறியிருக்கிறார். தகுந்த முறைகளாலும் இந்நோயைக் குணப்படுத்த முடியாதிருப்பது பல நூற்றாண்டுகளாக விஞ்ஞானிகளுக்கு ஒரு சவாலாக இருக்கிறது. பல நூற்றாண்டுகளாகவே இருந்துவரும் வேறு கொடிய நோய்களில் சிலவற்றைப் பூரணமாக குணமாக்க முடிகிறது. ஒருசிலவற்றிற்கு ஓரளவு குணம் அளிக்க முடிகிறது; ஆனால் புற்றுநோய் மட்டும் மனித இனத்துக்கு ஒரு பெரிய சவாலாகவே அமைந்துள்ளது.

சிகிச்சையினால் இந்நோய் அவ்வப்போது தற்காலிகமாகக் குறைவதுபோலக் காணப்படுகிறதேயன்றி முழுதுமாகக் குணம் ஆவதில்லை. உலகத்தின் பல பாகங்களிலும் இந்நோய் உண்டாகும் காரணம் பற்றி ஆராய்ச்சிகள் நடைபெற்றும் இந்நோய் வரக்காரணம் எது என்று தெரியவில்லை.

**பரவியுள்ளமை:** நோய்களிலேயே கொடுமையான இவ்வியாதியை உலகமெங்கும் பரவலாகக் காணலாம். உலகின் சில பாகங்களில் புற்றுநோயில் பல்வேறு வகைகள் அதிக அளவில் இருக்கின்றன. இது ஓர் அளவு உண்மையாக இருப்பினும். இந்நோயைப் பற்றிய புள்ளிவிவரம் ஒரே சீராக இருந்தால்தான் இதைப்பற்றி முழுமையாக அறிவிப்பு அளிக்கப்படும். உதாரணமாக, 'பர்கிட்டிஸ், லிம்போமா' (Burkitt lymphoma) என்னும் நோய்கள் தென் ஆப்பிரிக்க எல்லைக்குட்பட்டவை என, ஒரு காலத்தில் எண்ணியிருந்தார்கள். பிறகு இந்நோய்கள் உலகின் வேறு பாகங்களிலும் குறிப்பாக, அமெரிக்கா, இங்கிலாந்து, சிங்கப்பூர், இந்தியா ஆகிய நாடுகளிலும் பரவலாக இருக்கின்றன என்பது தெரிய வந்தது.

**வயது:** அநேகமாக எல்லா வயதினருமே இந்நோயால் பீடிக்கப்படுகிறார்கள். ஆயினும் இரு கட்டங்களில் இந்நோயை அதிகமாகக் காணலாம். ஒன்று, சிறு வயது-அதாவது 6 மாதங்களில் இருந்து 2 ஆண்டுகள் வரை; மற்றொன்று, வயது வந்த கட்டம் ஆதாவது 40-லிருந்து 50 வயதுக்குள்! மேற்சொன்ன இருவகைப் பிரிவினரிடையே இந்த நோயை அதிகம் காணலாம். சிலவகைப் புற்றுநோய் சில குறிப்பிட்ட வயதினரைத் தாக்குவதும் உண்டு எனவே இது விஞ்ஞானிகளுக்கு ஒரு சவாலாகவே இருக்கிறது.

**பால் (Sex)** ஆண், பெண் இரு பாலரையும் இது பாதிக்கிறது. பெண்களைவிட இருமடங்கு ஆண்களைத் தாக்குகிறது. ஆண்களைப் பொறுத்தவரை இனப்பெருக்கு உறுப்புகளைத் தவிர எல்லா உறுப்புகளையும் இந்நோய் தாக்குகிறது. பெண்களைப் பொறுத்த வரையில், இனப்பெருக்கு உறுப்பான கர்ப்பப்பையையும், மார்பகத்தையும் இந்நோய் தாக்குகிறது. இவ்வகை நோயால் பெண்கள் அதிகமாக அவதியுறுகிறார்கள்; ஆண்களின் இனப்பெருக்கு உறுப்புக்களை இந்நோய் அவ்வளவாகப் பாதிப்பதில்லை.

**பாதிக்கப்படும் உறுப்புக்கள் :**

இந்நோயினால் சாதாரணமாகப் பாதிக்கப்படும் உறுப்புக்கள் பின்வருமாறு:

## சிறந்த ஊராட்சிக்குப் பரிசு.

தமிழ்நாட்டில் உள்ள கிராம ஊராட்சிகளில் சிறந்த ஊராட்சியாக தருமபுரி மாவட்டம் பாலக்கோடு வட்டம் ஜெர்த்தலா கிராம ஊராட்சி தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது.

இந்த ஊராட்சிக்கு ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கப்படும்.

2-வது இடத்தை இராமநாதபுரம் மாவட்டம் சிங்கம்புணரி வட்டம் ஏ. காளப்பூர் கிராம ஊராட்சி பெற்றுள்ளது. இந்த ஊராட்சிக்கு 500 ரூபாய் பரிசு தரப்படும்.

ண்கள் :

கர்ப்பப்பை
மார்பகம்
கருமூளை
தைராயிடு சுரப்பி
இரைப்பை-குடல்சார்ந்த பரப்பு
எலும்பு
நுரையீரல்
மூளை

ண்கள் :

நுரையீரல்,
வாய்ப்புண்,
இரைப்பை, குடல்சார்ந்த பரப்பு
எலும்பு,
மூளை
தைராயிடு சுரப்பி
விரைகள் (Testis)

நாய்க்குறி ஆய்வியல் :

இவை எந்த உறுப்புக்களை ாதிப்பவை என்று அறிய வேண் ம். உறுப்பு ஆழமாக அமைந்து நாய் பரவுவதற்கு வேண்டிய டமும் இருந்தால் வெகு நாட் ளுக்கு இந்நோய் பற்றியிருப் து வெளியே தெரியாது. சொல் லாளுத ஊறு விளைக்கும் வரை வெளியே தெரிய வாய்ப்பில்லை. ாதிக்கப்பட்ட உறுப்பு கண்ணுக் க் தெரிவது போலவும் முக்கிய ான இடங்களிலும் (அதாவது தால், மூளை, கண் போன்றவை) ருந்தால் அது ஆரம்ப நிலை லேயே எளிதில் கண்டுபிடிக்கப் டும்.

நோய், நுரையீரலைப் பாதித் ருந்தால், நாட்பட்ட இரும ானது சாதாரண சிகிச்சைக் ம் ஆரம்ப நிலையிலும் பயன் ராது. பிற்பட்ட நிலைகளில் வற்றுடன் மற்ற இயல்பான அடையாளங்களான காய்ச்சல், டல்நிறை குறைதல், குரலில் ாறுதல், சளியும், சளியில் இரத் மும் கலந்து இருப்பது ஆகி வை தோன்றும். நுரையீரலைக் டுமையாகப் பாதித்திருந்தால், தன், பின் விளைவு சுவாசமுறை ல் தெரியவரும்.

இரைப்பை-குடல் சார்ந்த ரப்பில் புற்றுநோய் ஏற்பட்டி ந்தால் அவற்றின் அடையாளம் ஆரம்பத்திலேயே தெரியவரும். யிற்றுப் போக்கிலும், மலம் ிறைக் கழியாமையிலும், மலத் ில் இரத்தம் கழிவதிலும் இருந்து தெரியவரும். நோய், இரைப் பையைக் கடுமையாகத் தாக்கி இருந்தால் பசியின்மை, உணவின் மீது வெறுப்பு, வாந்தி ஆகியவை ஆரம்பக் கட்டத்திலும், பிந்திய நிலைகளில் வலியும் ஏற்படும். குணமாக்குவதும் எளிதாயிருக் காது. ஏனெனில் நோய் மிகக் கடுமையான நிலையை எய்தி இருக்கும்.

எலும்பைப் பீடித்திருக்கும் புற்று நோயின் அறிகுறியாவது; ஒரு கால அளவிற்கு, எந்த எலும் பில் நோய் கண்டிருக்கிறதோ, அங்கு கட்டியாக ஒன்று இருக் கும், ஆனால் வலி இருக்காது. பிந்திய நிலைகளில் எலும்பில் ஒரு முறிவு ஏற்படும். இதைக் குணப் படுத்துவது மிகக் கடினம். மேலும் சில காலத்திற்குப் பிறகு, கண்டிருக்கும் வலி, தாங்க முடி யாததாகிவிடும். இது குணப் படுத்த முடியாததாகி விடும்.

கருப்பையில் கண்டிருக்கும் புற்று நோய், ஆரம்பநிலையில், கருப்பையிலிருந்து ஒரு வெள்ளை நீர்க்கசிவினால் அறியப்படும். பிறகு, இந்நீர்க்கசிவு தொடர்ந்து இருக்கும். இதனுடன் இரத்த மும் கசியும்; ஒருவகை துர்நாற்ற மும் வீசும். அடிக்கடி சிறுநீர் கழிப்பதும் கடுமையான வலியும் தோன்றும். இதற்குத் தகுந்த சிகிச்சையை ஆரம்பத்திலேயே அளிக்க வேண்டும்.

**மார்பகங்களில் புற்றுநோய் :**

மார்பகங்களில் மேல் பாகத் தில் வலியில்லாக் கட்டிகளாக ஆரம்பத்தில் ஏற்படும்; பிறகு மார்பகம் முழுதும் பரவும். இவ் வாறு பரவுவதால் நிணநீர் சுரப்பி சுரப்பது தடைப்படும். இதனால் கை முழுவதும் வீங்கிவிடும். சில சமயங்களில், மார்பகக் காம்பு களில் ஏற்படும் புற்றுநோயில், ஆரம்பத்தில் இரத்தம் கசியும், பிறகு கட்டிபோன்று ஏற்பட்டு வலியும் ஏற்படும்.

புற்றுநோய், உதட்டிலும், முகத்திலும், தோலிலும் முதலில் சிறுசிறு கட்டிகளாக ஆரம்பித்துப் பிறகு வேகமாக வளர்ச்சி



யடைந்து, கடுமையான வலி கொடுக்கும்.

திடீரென்று வளரும் மச்சங்கள் புற்றுநோயின் விளைவாக இருக்க லாம். இவை பிறகு புண்ணாகி இரத்தம் கசிந்து, கடுமையான வலியுடையதாய் மாறிவிடும்.

தோலில் ஏற்படும் புற்றுநோய் பழைய வடுக்களில் இருந்தும், குறிப்பாக தீப்புண்களில் இருந் தும் உண்டாகும்.

இரத்தத்தில் ஏற்படும் புற்று நோய் ஆரம்பத்தில், பொதுவாக கடுமையான அயர்ச்சியை ஏற் படுத்தும், விரைவில் நிணநீர் கணுக்களை விரிவாக்கும்; ஈரலை யும், மண்ணீரலையும் பெரிதாக் கும். பின்னர், ஈறு, மூக்கு, காதுகள் ஆகிய உறுப்புகளில் இருந்து இரத்தம் கசியும். மலத்தி திலும் இரத்தம் வெளிவரும். இருமலில் அல்லது வாந்தியில் இரத்தக் கக்கல் இருக்கும்.

வேறு உறுப்புக்களில் ஏற்படும் புற்றுநோய் அவ்வுறுப்புக்களின் செயல்முறைகளுக்கு இடையூறு விளைவித்து நோய்க்குரிய அடை யாளங்களை உண்டாக்கும்.

## 2,250 செகண்டரி கிரேடு ஆசிரியர்கள்

தமிழ்நாட்டில், செகண் டரி கிரேடு தகுதி பெற் றிருந்தும், ஹையர் கிரேடுகளாகப் பணி புரிந்து வந்த 2,250 துவக் கப் பள்ளி ஆசிரியர்களை செகண்டரி கிரேடு ஆசிரி யர்களாகப் பதவி உயர்வு செய்வதற்குத் தமிழ்நாடு அரசு அனுமதி அளித்துள் ளது. ஜூன் முதல் நாள் முதல் இந்நிலை அமல் செய்யப்படுகிறது. இத னால் நடப்பு நிதியாண்டில் மீதமுள்ள 9 மாதங்களுக் கும் ரூ. 8.10 இலட்சம் கூடுதலாகச் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள் ளது.

மூளையில் தோன்றும் புற்று நோய் கடுமையான தலைவலி, இழுப்பு நோய், பார்வை குறை தல், வாந்தியெடுத்தல், கைகால் சுவாதீனமற்றுப் போதல் ஆகிய வற்றை ஏற்படுத்தும்.

ப்ராஸ்டேட் (Prostate) சுரப்பியில் ஏற்படும் புற்று நோயால் அடிக்கடி சிறுநீர் பிரி யும்; சிறுநீரகங்களிலும் ஈரலி லும் ஏற்படும் புற்றுநோய் அவ் வுறுப்புக்களின் செயல்முறைகளைக் கெடுக்கும்.

**புற்று நோய் ஏற்படக் காரணம் என்ன ?**

குறிப்பிட்ட காரணம் ஏதும் இதுவரை கண்டுபிடிக்கவில்லை. ஆனால் பல செயல். எதிர்ச் செயல்களினால் (Inter-actions) பல காரணங்கள் தோன்றுகின் றன.

பாரம்பரியமாகப் புற்றுநோய் வரக் காரணம் உண்டு.

மஞ்சள் ரக வெண்ணெய்யில் (Butter Yellow) சேர்க்கப்படும் ஒருவகை இரசாயனப் பொருளைக் கலக்கும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வருபவர்களுக்கு இந் நோய் உண்டாக இடமிருக்கிறது.

ஐரோப்பிய நாட்டின், அருகே, வடக்குக் கடலில் (North Sea) பரவியிருக்கும் 'அல்ட்ரா வயலட்' கதிர் வீச்சில் (Ultra violet light) தொடர்ந்து பணியாற்றி வரும் மாலுமிகளும் இந்நோயினால் தாக்கப்படுகிறார்கள்.

காஷ்மீர மக்களிடையே கணப் புச்சட்டியை வயிற்றுடன் வைத் துக் கட்டிக்கொள்ளும் வழக்கம் உண்டு. இவ்வாறு நீண்ட காலத் திற்குச் செய்வதால் 'கங்கிரி' என் னும் புற்று நோய்க்கு அவர்கள் ஆளாகிறார்கள்.

ஆந்திர மக்கள் புகையிலையைச் சுருட்டிப் பற்ற வைத்து, எரியும் பாகத்தை வாயினுள் வைத்துக் கொள்வார்கள். இது ஒரு வகைப் புற்றுநோயை உண்டாக்குகிறது.

புடவையையோ, வேட்டியை யோ நீண்டகாலமாக இறுக்கக் கட்டுவதனால் அவ்விடத்தில் புற்றுநோய் வருவதற்கு ஏது வுண்டு. வெற்றிலையை எப்பொ ழுதும் குதப்புவதால் கன்னத்தில் புற்றுநோய் வருவதற்கு இட முண்டு. எப்பொழுதும் புகை பிடிப்பதால் நுரையீரலில் புற்று நோய் வரும்.

அடிக்கடி பிரசவித்தல், கருப் பையில் புற்றுநோயை உண்டாக் கும். வயதானவர்களுக்கு ப்ராஸ் டேட்டிலும் இந்நோய் வரும். யூதர்களில் ஆண்களுக்கு (Circum cision) அறுவைச் சிகிச்சை செய்கிறார்கள். ஆண்குறியில் அடிக்கடி ஏற்படும் கசிவினால் தொடர்ந்து எரிச்சல் ஏற்படும். இதனால் புற்றுநோய் வரும். இச்



சிகிச்சை இதைத் தவிர்க்கிறது. யூதர்களில் ஆண்களுக்குப் புற்று நோய் வருவதில்லை. யூதப் பெண் களில் கருப்பைப் புற்றுநோய் உள்ளவர்களைக் காண்பதரிது.

மிருகங்களின் பலவித புற்று நோய்களிலிருந்தும் மனிதனின் இரத்தத்தில் உள்ள புற்றுநோயி லிருந்தும் பலவகையான நோய்க் கிருமிகள் கண்டுபிடிக்கப்பட்டி ருக்கின்றன. நோய்க் கிருமிகளி லிருந்து புற்றுநோய் பரவும் என் பது 1908-ம் ஆண்டே கண்டு பிடிக்கப்பட்டது. ஆயினும் இயல் பான நிலையில் உள்ள ஒரு 'செல்' எவ்வாறு திடீரென்று இயல்பை மீறி எந்த ஒரு வரையுமின்றி வளர்கிறது என்பது இன்னும் புரி யாத ஒரு புதிராகவே இருக்கிறது

**வளர்ச்சியும் இயங்கும் முறையும்**

ஒருமுறை புற்றுநோய் வளர ஆரம்பித்தால், பொதுவாக அதன் வளர்ச்சி வேகமாகவும், பல வழிகளிலும் ஆழ்ந்து பரவி, நிணநீர்க் குழாய்களில் அமிழ்ந்

## மாம்பழத்தின் மகிமை

மாம்பழம் உணவுப் பொருள் மட்டுமல்ல, புற்றுநோய் வராமல் தடுக்கும்ஒப்பற்ற சஞ்சீவி யாகவும் திகழ்கிறது.

பெருங்குடல் புற்று நோய் வருவதைத் தடுக் கக் கூடிய ஆற்றல் மாம் பழத்திற்கு இருக்கிறது என்று ஆய்வின் மூலம் தெரிய வருகிறது.

ஹெர்னியா, இரத்தக் குழாய் வெடிப்பது, குடல் வால் நோய், இருதய நோய் போன்றவையும் வராமல் தடுக்கும் சக்தி மாம்பழத்திற்கு உண்டு.

பொதுவாக நார்ச் சத்து நிறைந்த உணவுகள் புற்றுநோய் வராது தடுக் கின்றன என்று ஆய்வா ளர்கள் கண்டுபிடித்துள் ளனர். மேலை நாடுகளில் சாப்பாட்டில் நார்ச்சத் துள்ள பொருள்கள் கிடை யாதாகையால், அங்கெல் லாம் நுரையீரல் புற்று நோயும், பெருங்குடல் புற்று நோயும் அதிகமாக இருக்கின்றன.

கஞ்சி மாவு, கைக்குத் தல் அரிசிகள், சூரிய காந்தி விதை ஆகியவற் றிலும் கத்திரிக்காய், முட்டைக் கோசு, வெள் ளரிக் காய், தக்காளி, காலிஃப்ளவர், வாழைக் காய் ஆகிய காய்களிலும் காரட், உருளைக்கிழங்கு ஆகிய கிழங்குகளிலும், ஆப்பிள் பழத்திலும்,வெங் காயத்திலும் நார்ச்சத்து நிறைந்திருக்கிறது இவ் வகை உணவுப் பொருள் களை உண்பதால், புற்று நோய் வராமல் தடுக்க இயலும் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தும் உடலின் உள் உறுப்புக்களி லும் பரவி, மனிதனைக் கொல்லு கிறது. பல்வேறு புற்றுநோய் வகைகளின் வளர்ச்சி பல்வேறு விதமாக இருக்கிறது. சிலவற்றில் அதிவேகமாக வளர்ச்சி ஏற்படு கிறது. மூளையில் ஒருவித புற்று நோய் ஏற்பட்டால் அதிகபட்சம் 8 மாதங்களே உயிர் வாழ முடி யும். வேறு சிலவற்றில் மிகத் தாமதம் ஆகும். நிணநீர் ஸார்கோமாவில் ( Sarcoma ) ஏற்பட்டால், 20-25 ஆண்டுக் காலமாகும். நோயாளி வேறு ஏதேனும் நோயினுல்கூட இறந்து விடக் காரணம் உண்டு.

**சிகிச்சை :**

எந்தவிதப் புற்றுநோயையும் ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து விட்டால் முழுமையான குண மடைய இடம் உண்டு. இது, அறுவைச் சிகிச்சையினுல் முடியும்; அதாவது புற்றுநோய் ஏற்பட்ட பாகத்தை உடலிலிருந்தே வெட்டி எறிதல்; பிந்திய நிலை களில் கதிரியல் சிகிச்சையினுல் ஓரளவு குணம் காணலாம், இன் னும் சில நோயாளிகளுக்கு இந் நோயைத் தடுக்கும் மருந்துகளி னுல் ஐந்தாண்டுகள் உயிர் வாழ ஏதுவாகிறது. மொத்தத்தில் ஒவ்வொரு வகை நோயையும் தனித்தனியாக அதன் குணம் அறிந்து சிகிச்சை நடத்துவதே நோய் நீக்கச் சிறந்த வழியாகும்.

# எளிதில் பரவும் பயங்கர நோய்

'பால் வினை நோய்' பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்.

இதனை ஆங்கிலத்தில் 'வெனரல் டிசீஸ்' ( Venereal Disease ) என்கிறோம்.

இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் பல தொல்லைகளுக்கு ஆளாகின்றனர். இந்நோய் கண்டவர்கள் உடனே தக்க சிகிச்சை செய்து கொள்வார்களேயானுல், இதனை மேலும் பரவாமல் தடுத்துக் கொள்ளமுடியும்.

சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் (Govt. General Hospital) இதற்கான தனிப்பிரிவு ஒன்று செயல்பட்டு வருகிறது.

மருத்துவமனை வெளியிட்ட அறிக்கையிலிருந்து, பால்வினை நோய் பற்றிய பயங்கரத் தகவல்கள் வெளியாகியுள்ளன:

சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் உள்ள பால்வினை நோய்ப் பிரிவில் கடந்த 1975-ஆம் ஆண்டு 54,000 பேருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது!

இவர்களில் 10 சதவீதம், அதாவது 5 ஆயிரத்து 400 பேர் மாணவர்கள், இவர்களில் சிலர் மாணவிகள்.

1974-ஆம் ஆண்டு சென்னை நகரில் 45 ஆயிரம் பேர்களுக்குப் பால்வினை நோய்க்கான சிகிச்சை அளிக்கப்பட்டது: ஆனுல், இந்த எண்ணிக்கை 75-ஆம் ஆண்டில் 54 ஆயிரமாக அதாவது ஒரே ஆண்டில் 20 சதவீதம் அதிகரித்துள்ளது.

இந்த நோயினுல் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலோர் 20 வயதிலிருந்து 24 வயதுக்குட்பட்டவர்கள். அடுத்து திருமணமான பெண்களும், திருமணம் ஆகாத ஆண்களும் அதிகமாக பாதிக்கப்பட்டு இருக்கிறுர்கள். அதாவது திருமணமான பெண்களில் 64 சதவீதமும், திருமணம் ஆகாத பெண்களில் 22 சதவீதமும் பால்வினை நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறுர்கள்.

ஆண்களில் திருமணமானவர்கள் 43 சதவீதமும், திருமணம் ஆகாதவர்கள் 52 சதவிகிதமும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

பால்வினை நோய்க்குச் சிகிச்சை பெற வருபவர்களில் திருமணம் ஆகாத பெண்கள் சிலர் தாங்கள் திருமணம் ஆனவர்கள் என்றும், திருமணமான ஆண்கள் சிலர் தாங்கள் திருமணம் ஆகாதவர்கள் என்றும் கூறிக் கொள்கின்றனராம்.

14 வயதுக்குட்பட்டவர்களும், 55 வயதுக்குமேற்பட்டவர்களும் கூட பால்வினை நோய் கண்டு சிகிச்சைக்கு வருகிறுர்கள் !

அடுத்து இந்த நோய் கண்டவர்களில் 10 பேருக்கு ஒருவர்தான், மருத்துவமனை சென்று சிகிச்சை பெறுகிறுர்கள். இந்தக் கணக்குப்படி பார்த்தால், சென்னை நகரில் மட்டும் 5 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் பால்வினை நோயினுல் பாதிக்கப்பட்டிருக்கிறுர்கள் என்று புள்ளி விவரம் கூறுகிறது.

சென்னை நகர மக்கள்தொகைக் கணக்குப்படி, சென்னையில் 'பால்வினை' நோய் கடுமையாக உள்ளது.

பால்வினை நோய், எளிதில் பரவக்கூடிய கடுமையான ஒரு தொத்துநோய். இந்த நோய் கண்டவர்களைப் பாதிப்பது மட்டுமல்லாமல், அவர்களின் சந்ததியையே இது பாதிக்கும். இந்த நோய் காரணமாக உடல் ஊனம் ஏற்படுவதுடன், பார்வை இழந்து குருடாகவும் நேரிடும். மேலும் இதன் மூலம் மனநோய் (பைத்தியம்), பக்கவாதம், இதயத்திலிருந்து உடலின் எல்லாப் பகுதிகளுக்கும் இரத்தத்தை எடுத்துச் செல்லும் மிகப் பெரிய இரத்தக் குழாயில் (மகாதமனி) வெடிப்பு ஆகியவையும் ஏற்படும்.

கர்ப்பிணிகளுக்கு இந்த நோய் கண்டால், கருச்சிதைவு ஏற்படலாம்; குறிப்பிட்ட காலத்துக்கு முன்பே முழு வளர்ச்சி அடையாத குழந்தை பிறக்கலாம். அல்லது பிறக்கும் குழந்தைக்கும் அந்த நோயின் பாதிப்பு ஏற்படலாம். அதாவது அந்தக் குழந்தையின் தோல், எலும்பு, எலும்புகள் சேரும் இடம் ஆகியவற்றில் பாதிப்பு ஏற்படலாம்.



# சென்னை சிறு தொழில் சேவா நிலையத்தின் சீரிய பணிகள்!

—எஸ். நாகராஜன்,
இயக்குநர்,
சென்னை சிறு தொழில்
சேவா நிலையம்.

நமது பாரதப் பிரதமரின் 20 அம்சத் திட்டங்களுள் வேலையற்றோருக்கு வேலை வாய்ப்புகள் அளிப்பது முக்கியமானதொன்ருகும்.

நாட்டின் வளர்ச்சி குன்றிய பகுதிகளில் தொழில் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதிலும், அதிகரித்து வரும் மக்கட்தொகைக்கு வேலை வாய்ப்புஅளிப்பதிலும், சிறு தொழில்களின் வளர்ச்சியும், அபிவிருத்தியும் முக்கிய துணை செய்கின்றன.

இதனைக் கருத்தினில் கொண்டே, இந்திய அரசின் தொழில் அமைச்சகம் சிறு தொழில் அபிவிருத்தி ஆணையரின் கீழ், சிறு தொழில் அபிவிருத்தி நிறுவனம் ஒன்றை அமைதது்ள்ளது. இது நாடெங்கிலும்உள்ள சிறுதொழில் சேவை நிலையங்கள், விரிவாக்க நிலையங்கள் (Extension centres) மூலம் சிறு தொழில்களின் சீரிய வளர்ச்சிக்குத் தேவையான பல நடவடிக்கைகளை மேற்கொள்ளுகிறது. சென்னையில் சிறுதொழில் சேவை நிலையம் 65/1, தெற்கத்திய நெடுஞ்சாலை, கிண்டி, சென்னை-32 என்ற முகவரியில் அமைந்துள்ளது. இந்நிலையம் தமிழ் நாடு மற்றும் புதுவை மாநிலத் தொழில் வளர்ச்சிக்கான பணியில் ஈடுபட்டு வருகிறது.

சிறு தொழில் அதிபர்களுக்கு இந்நிலையம் பல துறைகளில் ஆலோசனை கூறுகின்றது. பின்வரும் தொழில்களுக்குப் பொதுவான பணி வசதியும், பரிசோதனை வசதியும் அளிக்கின்றது.

1. இயந்திரப் பொறியியல்.
2. மின் முலாம் பூசுதல்.
3. இரசாயன இயல்.
4. பீங்கான் பொருட்கள். செங்கல், ஓடுகள்.

மேலும் பின்வரும் தொழில்களில் தொழிலாளர்களுக்குத் தொழில் நுட்பப்பயிற்சியும் அளிக்கிறது.

இயந்திரம் இயக்குதல்.
இயந்திரப் பட்டறைப் பயிற்சி.
தச்சுத் தொழில்.
அறிவியல் கண்ணுடிக் கருவிகள்.
நியான் ஒளி விளக்குகள்.
பட்டுத் திரை அச்சு.
வரைபடம் பார்த்தறிதல்.
மின் முலாம் பூசுதல் முதலியன.

இந்நிலையம் நான்கு விரிவாக்க நிலையங்களை—மதுரை, கோயம்புத்தூர், பாண்டிச்சேரி, ஈரோடு ஆகிய இடங்களில்—கொண்டுள்ளது.

மதுரை தொழில் பேட்டையில் அமைந்துள்ள விரிவாக்க நிலையம் இயந்திரப் பொறியியல்—மின் முலாம் பூசுதல் போன்ற தொழில்களுக்குப் பரிசோதனை வசதிகளையும், மற்றும் பல தரப்பட்ட தொழில்களுக்கு தொழில் நுட்பப் பயிற்சியும் அளிக்கின்றது.

கோயம்புத்தூர் பட்டேல் ரோட்டில் அமைந்துள்ள விரிவாக்க நிலையம்—வார்ப்படச் சாலை, மணல் மற்றும் உலோகங்களுக்கான பரிசோதனை வசதி அளிக்கின்றது. மேலும், கோயம்புத்தூரில் அமைந்துள்ள ஆய்வுக் கூடத்தில் மின்சார மோட்டர்களுக்கான பரிசோதனை வசதியும் அளிக்கப்படுகின்றது. இவ்வாய்வுக் கூடத்தின் உதவியால் சுமார் 25 சிறு தொழில் நிறுவனங்கள் இந்தியத் தர நிர்ணய நிலையத்தினரின் தர எண்களை (I.S.I. Mark) பெற்றுள்ளன. இவ்வாய்வுக் கூடம் ஆரம்பிப்பதற்கு முன் கல்கத்தாவிலுள்ள (National Test house) ஆய்வுக் கூடத்திற்கு மின்சார மோட்டார்களைப் பரிசோதனைக்காக அனுப்ப வேண்டிய நிலை இருந்ததென்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

ஈரோடு பெரிய அக்கிரகாரத்தில் அமைந்துள்ள தோல்பக்குவப்படுத்தும் விரிவாக்க நிலையம், தோல் பக்குவப்படுத்தும் முறை பற்றியும், சாடின, மற்றும் மென்மை பயிற்சி அளிக்கிறது. விரிவாக்க நிலையத்தின் உதவியால் முடிவு செய்யப்பட்டதோல் தயாரிக்கும் தொழில் (Finished Leather Industry) அபிவிருத்தி அடைந்து வருகிறது.



ஈரோடு நகரில் அமைந்துள்ள முடிவுசெய்யப்பட்ட தோல் தயாரிக்கும் நிலையத்தைச் சிறுதொழில் அபிவிருத்தி ஆணையாளர் பார்வையிடுகிறுர்.

பாண்டிச்சேரி தொழிற்பேட்டையில் அமைந்துள்ள விரிவாக்க நிலையம், இயந்திரப் பட்டறைப் பயிற்சி மற்றும் பொருத்துதல் (Fitting) பயிற்சி அளிக்கின்றது. இவ்வாறு சென்னையிலுள்ள நிலையத்தின் மூலமும் மற்ற விரிவாக்க நிலையங்கள் மூலமும் பல இடங்களிலுமுள்ள பின்வரும் சிறு தொழில்களுக்கு உதவி அளிக்கப் படுகிறது.

1. இயந்திரப் பொறியியல்.

2. உலோகவியல்.

3. மின் அணுக்களும், மின் இயலும்.

4. இரசாயனவியல்.

5. மின் முலாம் பூசுதல்.

6. தோல் தொழில்.

7. கண்ணாடி மற்றும் பீங்கான் தொழில்கள்.

8. உணவுப் பண்டங்கள் தயார் செய்தலும், அவற்றைப் பாது காத்தலும்.

### தொழில்நுட்ப ஆலோசனை :

தொழில் துவங்க விரும்புகின்றவர்களுக்கு, வளர்ச்சிக்கு வாய்ப்புள்ள தொழில்களைத் தேர்ந்து எடுக்க உதவுவதுடன், அவர்கள் தேர்ந்தெடுத்த தொழில்களுக்கு உரிய மாதிரித் திட்டங்களையும் அளிக்கிறோம். சரியான இயந்திர சாதனங்களைத் தேர்ந்தெடுப்பதிலும், உற்பத்தி முறை பற்றியும், தகுந்த மூலப் பொருள்களைப் பற்றியும் தொழில் நுட்ப ஆலோசனை அளிக்கிறோம்.

நவீன இயந்திரச் சாதனங்களை நன்கு பயன்படுத்தி - தொழில் நுட்ப வளர்ச்சிக்குத் தேவையான வடிவ அமைப்பு (Design) ஆராய்ச்சி பற்றிய பணிகளையும் பிற நிருவாகங்களின் துணை கொண்டு செய்து வருகிறோம்.

தொழிற்சாலைகளுக்குரிய தொழில் நுட்ப ஆலோசனைகளைத் தலைமையகத்தில் உள்ள தங்கள் தொழிற் கூடங்கள் மூலமும், முன்பு குறிப்பிட்ட விரிவாக்க நிலையங்கள் மூலமும், கிராமப் பகுதிகளில் நடமாடும் தொழில் ஊர்திகள் மூலமும் அளிக்கிறோம். அரசாங்கம் தனக்குத் தேவையான பொருள்களைச் சிறுதொழிற் சாலைகளிடம் வாங்கும் திட்டத்தில் அதிக அளவில் பங்கு பெற சிறு தொழில்களை ஊக்குவிக்கிறோம். இறக்குமதிப் பொருட்களைத் தவிர்க்கும் நோக்குடன் நம் நாட்டிலேயே கிடைக்கக் கூடிய மூலப் பொருள்களை உபயோகித்து அவற்றை உற்பத்தி செய்ய உதவுகிறோம்.



கோயம்புத்தூரில் உள்ள மின்சார மோட்டர் பரிசோதனை நிலையத்தில் ஒரு மின்சார மோட்டர் பரிசோதிக்கப்படுகிறது.

### துணைத் தொழில் முன்னேற்றம் :

சிறு தொழில்களின் வளர்ச்சிக்கான வாய்ப்பை அதிகரிக்க துணை தொழில் முன்னேற்றச் சிறப்புத் தகவல் நிலையம் எங்களிடம் உள்ளது. இந்நிலையம் பெரு ரகத் தொழில்களுக்கும், மற்றும் சிறு தொழில்களுக்கும் தேவையான பாகங்களையும், உறுப்புக்களையும் செய்யத் தகுதியுள்ள சிறு தொழில்களுக்கு உதவியளிக்கிறது. பாதுகாப்பு, இரயில்வே போன்ற நிறுவனங்களுக்குத் தேவையான பொருட்களைத் தயாரிப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கிறது. சிறு தொழில்களின் இயந்திரத் தொழில் நுட்பத் திறன்களை அறிந்து அவற்றைத் துணைத் தொழில் நிறுவனமாகப் பதிவு செய்து கொள்கிறது. ஐக்கிய நாடுகள் வல்லுநர் ஒருவரது துணையுடன் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் நாடு துணை ஒப்பந்த தொடர்பகம் என்ற சிறப்புத் தகவல் நிலையம் எங்களிடம் உள்ளது. இந்நிலையம் சிறு தொழில்களின் உற்பத்தித் திறன்களைப் பதிவு செய்து கொள்கிறது. பெரு ரகத் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான இயந்திர பாகங்கள், உறுப்புக்கள் பற்றிய தகவல்களை அவற்றிடமிருந்து பெற்று, அவற்றைத் தயாரிப்பதற்குத் தகுந்த இயந்திரத் திறன் அமையப் பெற்ற சிறுதொழில் நிறுவனங்கள் மூலம் தயாரிக்க வழி வகுக்கிறது.

### பொருளாதாரத் தகவல் பணி :

குறிப்பிட்ட பகுதிகளில் தொழில்களுக்குள்ள வாய்ப்புக்களைக் கண்டறியும் பொருட்டு ஆய்வுகளை மேற் கொள்ளுதல், தொழிற் பேட்டைகளை அமைக்க தொழில் நுட்ப—பொருளாதார ஆய்வுகளை நடத்துதல், சிறு தொழில்களைப் பற்றிய அடிப்படைப் புள்ளி விவரங்களைச் சேகரிப்பதற்கென தனிப்பட்ட ஆய்வுகளைச் செய்தல், விற்பனை நிலவரங்களைப் பரிசிலனை செய்து குறிப்பிட்ட பொருள்களின் விற்பனைக்குள்ள வாய்ப்புகள் பற்றி தகவல்வழங்குதல் போன்ற பணிகளையும் செய்கின்றோம். இந்த ஆய்வுகளின் மூலமாக நாங்கள் தொழில் துவங்குபவர்களுக்குத் தேவையான சிறந்த தகவல்களை அளிக்கிறோம்.

### தொழில் நிருவாகப் பயிற்சி வசதிகள் :

சிறு தொழில்களைச் சார்ந்த தொழிலாளர்களுக்கு அளிக்கப் பெறும் பல்வேறு தொழில் நுட்பப் பயிற்சிகளோடு, நாங்கள் தொழில் நிருவாகப் பயிற்சியும் அளிக்கிறோம். தொழில் நுட்பம் சம்பந்தப்பட்ட தொழில்களுக்கு நிருவாக ஆலோசனை கூறுதல்,

சிறு தொழில் நிருவாகம் பற்றி ஆய்வு நடத்துதல், தொழில் நுட்பம் மற்றும் நிருவாகம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காணக் கருத்தரங்குகள் நடத்துதல், நலிவுற்ற தொழில்களுக்கான காரணம் அறிந்து அதை நீக்குவதற்குத் தேவையான தீர்வு கூறுதல், இந்நிலையத்தின் மற்றுமொரு சிறப்பு அம்சம் ஆகும். தொழில் கல்வி பெற்று தொழில் துவங்க விரும்பும் இளைஞர்களுக்கு, புதிய தொழில்களை துவங்கி நிருவகிப்பதற்காக 3 மாதப் பயிற்சி—உபகாரச் சம்பளத்துடன்—அளிக்கிறோம். இதுவும், நம் பாரதப் பிரதமரின் 20 அம்சத் திட்டங்களில் ஒன்றாகிய தொழில் திறமை மிக்க இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தைத் திறம்பட நடத்த உதவுகிறது.

### மத்திய பாத அணி பயிற்சி நிலையம் :

இந்நிலையத்தோடு இணைக்கப்பட்டு கிண்டியிலுள்ள, மத்திய பாத அணிப் பயிற்சி நிலையம் பாத அணிகள் தயாரிப்பதில் பயிற்சி அளிக்கிறது. வெளிநாட்டு மாணவர்களும் இங்கு பயிற்சி பெறுகின்றனர். இப்பயிற்சியின் பயனாய் பாத அணித் தொழில் பெரும் அளவில் வளர வாய்ப்பு உள்ளது.



கோயம்புத்தூரில் அமைந்துள்ள சிறுதொழில் விரிவாக்க நிலையம் வார்ப்படச்சாலை மணல் மற்றும் உலோகங்களுக்கான பரிசோதனை வசதி அளிக்கிறது.

### ஏற்றுமதி மேம்பாட்டுப் பணி :

பொருள்களை ஏற்றுமதி செய்வதற்காக கவனிக்க வேண்டிய வழி முறைகள், ஏற்றுமதியாகும் பொருள்களின் விலையை நிர்ணயித்தல், பொருள்களை ஏற்றுமதி செய்வதற்குரிய பாத்திரங்கள் தயாரித்தல் ஆகிய பணிகளிலும் உதவியளிக்கிறோம்.

ஏற்றுமதிக்கு வாய்ப்புள்ள பொருள்களைக் கண்டறிந்து அவற்றின் தயாரிப்பை மேற்கொள்ளத் தகுதி வாய்ந்த சிறு தொழில் நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்தல், ஏற்றுமதி வாணிபத்தில் சிறப்புப் பயிற்சி அளித்தல் போன்ற பணிகளையும் மேற் கொள்ளுகிறோம்.

### சிறு தொழில்களை நவீனமயமாக்கும் திட்டம் :

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சில தொழில்களைப் படிப்படியாக நவீன மயமாக்கும் திட்டத்தையும், சிறு தொழில் சேவா நிலையம் மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின் முன்னோடியாகப் பின்வரும் 10 தொழில்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன :

1. ஊர்திகளின் பாகங்கள் மற்றும் துணைப் பொருள்கள்.
2. இயந்திரக் கருவிகள்.
3. வார்ப்பு மற்றும் வார்ப்பு உலைப் பொருட்கள்.
4. வீடுகளுக்குரிய மின்சார சாதனங்கள்.
5. பின்னல் உள் ஆடைகள்.
6. சைக்கிள் மற்றும் சைக்கிள் பாகங்கள்.
7. கைக் கருவிகள்.
8. தோல் மற்றும் தோல் பொருட்கள்.
9. அறிவியற் கருவிகள்.
10. சேமிக்கும் மின் கலம் மற்றும் பாகங்கள்.

சிறு தொழில்களின் உற்பத்தியை முன்னேற்றுவதும், உற்பத்தி செலவைக் குறைப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். போட்டி சக்தியை வளர்த்து அதன் மூலம் உள் நாட்டிலும், வெளிநாட்டுச் சந்தையிலும் பொருட்களின் விற்பனைக்குச் சிறந்த சாதக நிலையை உருவாக்குவதும் இத்திட்டத்தில் அடங்கும். நவீன மயமாக்குதல் என்பது பொருள்களின் நவீன மயமாக்கும் திட்டத்தை உட்படுத்தியதாகும். அவை பின்வருமாறு :

1. வடிவ அமைப்பு, பொருள்களின் தரநிர்ணயம்.
2. சிக்கனம், திறமை, தரம் உட்பட்ட தொழில் நுணுக்கத்தை உயர்த்தல்.
3. இயந்திரங்களையும், கருவிகளையும் நவீன மயமாக்குதல்
4. நிருவாகத் திறமையை நவீன மயமாக்குதல்.

இத்திட்டத்தின் கீழே தேர்ந்தெடுக்கப்பட்ட சிறு தொழில் நிறுவனங்களுக்கு ஒட்டு மொத்தமான உதவிகளை அளிக்கக் கருதப் படுகிறது. நேரடித் தொழில் நுணுக்க ஆராய்வு, தொழில் வாரியான தொழில் கூடங்கள், தொழில் 'கிளினிக்', கருத்தரங்குக் கூடங்கள், ஆழ்ந்த தொழில் நிருவாக உதவி, சிறு தொழில்களுக்குத் தேவையான கிடைத்தற்கரிய மூலப் பொருட்களை வழங்குதல், இறக்குமதி செய்யப்பட்ட, மற்றும் உள் நாட்டில் தயாரான இயந்திரங்களும், இயந்திரக் கருவிகளும் வழங்குதல், கடன் உதவி வழங்குதல் ஆகியவையும் இத்திட்டத்தில் அடங்கும்.




TNSCB: 112

# தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் "சிறுமலர்கள் சேமிப்பு திட்டம்."

## மாணவர்களும், சிறு வியாபாரிகளும் எளிதாக சேமிக்க, தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் ஒரு புதிய திட்டம்.

உங்கள் சக்திக்கு ஏற்ப, சிரமமின்றி சேமிப்பது நலம். எங்கள் "சிறு மலர்கள் சேமிப்பு திட்டம்" அதற்கு உதவுகிறது. உண்டியல் சேமிப்பு திட்டத்தின் மூலம் மாணவர்களும், சிறு வியாபாரிகளும் தங்கள் சேமிப்பை எங்கள் தலைமை அலுவலகம் அல்லது சென்னையில் உள்ள 28 கிளைகளில் சேமிப்பு கணக்கில் முதலீடு செய்யலாம்.

ரூ. 5/- செலுத்தி புதிய சேமிப்பு கணக்கு ஆரம்பிக்கும் ஒவ்வொருவருக்கும் அழகான ஒரு உண்டியல் வழங்கப்படும்.

உண்டியலில் அவ்வப்பொழுது சேரும் சில்லறை காசுகளை சேர்த்து மாதம் ஒரு முறையாகிலும் அல்லது உண்டியல் நிறைந்தவுடனும் எங்கள் வங்கியில் செலுத்தி உங்கள் சேமிப்பு கணக்கில் வரவு வைத்துக் கொள்ளலாம்.

உங்கள் சேமிப்பு கணக்கில் உள்ள முதலீட்டின் பேரில் 5.75% வட்டி வழங்கப்படுகிறது. மேலும் உங்கள் சேமிப்பு கணக்கில் உள்ள பணத்தை லாபகரமாக முதலீடு செய்ய வழிவகைகளை எங்கள் கிளை மேனேஜர் தெரிவிப்பார். இத் திட்டத்தின் மூலம் சிறுக சேர்த்து உங்கள் எதிர்கால தேவைக்கு முதலீடு செய்யுங்கள்.

TNSC BANK

**தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்**

379, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சாலை, சென்னை-600 001.

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி உங்கள் சேமிப்பை அதிகரிக்கவும், நாட்டின் விவசாய மற்றும் பொருளாதார வளர்ச்சிகளுக்கும் உதவுகிறது.

பின்வரும் தொழில்களைப் பற்றிய ஆய்வுகள் இந்நிலையத்தால் ஏற்கனவே செய்யப்பட்டு விட்டன.

1. ஊர்திகளின் பாகங்கள் மற்றும் துணைப் பொருட்கள்.
2. வார்ப்பு மற்றும் ஊதுஉலைப் பொருட்கள்.
3. சேமிக்கும் மின்கலம்.
4. தோல் மற்றும் தோல் பொருட்கள்.

இதன் விளைவால் வார்ப்படங்களுக்கான இந்தியத் தரநிர்ணய நிலையத்தின் ஐ. எஸ். 210 என்ற தர எண்ணை இந்தியாவிலேயே முதல் முறையாகச் சிறு தொழில் பகுதியில் கோயம்புத்தூரிலுள்ள உள்ள ஒரு சிறு தொழில் நிறுவனம் பெற்றுள்ளது என்பது பெருமைக்குரியதாகும்.

**ஆராய்ச்சி, முன்னேற்ற, வடிவ அமைப்பு ஆலோசனைக் குழு:**

சிறு தொழில்களுக்கான ஆராய்ச்சி, முன்னேற்றம், வடிவு அமைப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு மாநில அளவில் 'ஆர். டி. டி.' (R.D.&D.) குழுக்கள் நாடெங்கிலும் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ் நாடு, பாண்டிச்சேரியில் உள்ள சிறு தொழில்களுக்கு மாநில அளவில் 'ஆர்.டி.டி.' குழு ஒன்று சென்னையில் செயல்பட்டு வருகின்றது.

தேசிய ஆராய்ச்சி ஆய்வகம், தொழில் நுணுக்க நிலையம், பொறியியல் கல்லூரிகள், தொழில் மற்றும் வாணிப நிறுவனம், சிறு தொழில்கள் குழு மற்றும் சிறு தொழில் சேவா நிலையம் ஆகிய நிறுவனங்கள் இவ்வாலோசனைக் குழுவின் உறுப்பினர்களாகச் செயல்படுகின்றன. இக் குழுவின் பணிகளை முன்நின்று நடத்துபவர் (CONVENOR) சிறு தொழில்கள் சேவை நிலைய இயக்குநர் ஆவார். சிறு தொழில்களுக்குத் தேவையான ஆராய்ச்சி, முன்னேற்ற, வடிவ அமைப்பு பற்றிய பிரச்சினைகளைக் கண்டு அறிந்து அவற்றைத் தொழில் நுணுக்க ஆராய்ச்சிக் கூடங்களின் மூலம் தீர்த்து வைப்பதே இக் குழுவின் முக்கிய நோக்கமாகும். மாநில அளவு குழுவோடு, பிரதேச அளவு குழுக்களும் உள்ளன. இக்கிளைக் குழுக்கள் திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை, பாண்டிச்சேரியில் அமையப்பெற்று, மாநில அளவுக் குழுவின் கீழ்ச் செயல்படுகின்றன. தன்னுடைய ஒப்பந்த காலத்திற்குள் (கடந்த இரண்டு ஆண்டுகளில்) சிறு தொழில்களின் பல பிரச்சினைகள் தொழில் நுணுக்க ஆராய்ச்சி நிலையங்களால் தீர்வு காணப்பட்டுள்ளன.

## கோவை மாவட்டத் தொழில் நிறுவனங்களில் தொழிலாளர்களின் பங்கு

பிரதமரின் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தின் கீழ் "தொழில் நிருவாகத்தில் தொழிலாளர்கள் மேலும் சிறந்த முறையில் பங்கு கொள்வதற்குப் புதிய திட்டங்கள்" பல செயல்படுத்தப் பட்டு வருகின்றன. இவ் வகையில் தொழில் நிறுவனங்கள் பலவற்றில் கூட்டுக் குழுக்கள், பட்டறை மட்ட அளவில் அமைக்கப்பட்டு, அவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தினை முனைந்து செயல்படுத்தும் வகையில் கோயம்புத்தூர் மாவட்டம் பெரிதும் பாடு பட்டு வருகின்றது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் 500-ம் அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களும் பணியாற்றுகின்ற தொழில் நிறுவனங்கள் 59 உள்ளன. இத் திட்டத்தின் கீழ் இதுவரை பட்டறை மட்ட அளவில் 57 தொழில் நிறுவனங்களில் இக் குழுக்கள் அமைக்கப்பட்டு விட்டன. இன்னும் இரண்டு நிறுவனங்களில் மட்டும் இவை அமைக்கப்படாமல் உள்ளன.

மாநில அளவுக் குழு, "தமிழ் நாட்டில் பரிசோதனை வசதிக்கான வழிகாட்டி" என்ற தலைப்பில் ஒரு சிறிய வெளியீட்டைக் கொண்டு வந்துள்ளது. இந்த வெளியீடு தமிழ் நாட்டில் கிடைக்கும் பரிசோதனை வசதிகளை அறிய உதவுகிறது. தமிழ் நாடு—பாண்டிச்சேரி பகுதியில், ஆராய்ச்சி— முன்னேற்ற — திட்டங்களால் கிடைக்கும் உதவிகளை பற்றிய முழுக் கூறுகளை மற்றொரு பதிப்பில் இக்குழு வெளியிட இருக்கிறது. சிறு தொழில்களின் நலனுக்காக, இந்த வெளியீட்டை விரைவில் கொண்டு வர இக்குழு எதிர்பார்க்கிறது.

இவ்வாறு எங்கள்நிலையமானது சிறு தொழில்களுக்கு அவசியமான தொழில் நுட்பம், பொருளாதாரம் போன்ற பல வேறுபட்ட தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.

**கிராமம் மற்றும் பின் தங்கிய பகுதிகள் முன்னேற்றம்:**

பின் தங்கிய பகுதிகளில் சிறு தொழில் வளர்ச்சிக்கு மிக முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது. இப் பகுதிகளில் தொழில் வளர்ச்சிக்காக மிக நெருக்கமான உறவு வைத்துக் கொள்ளப்படுகின்றது. சிறு தொழில் முன்னேற்றத்திற்காக, தீவிரத் தொழில் வளர்ச்சி இயக்கங்கள் எல்லா மாவட்டங்களிலும் குறிப்பாகப் பின்தங்கிய மாவட்டங்களில் நடத்துகிறோம். இத் தீவிரத் தொழில் வளர்ச்சி இயக்கங்களில் வணிகத் துறை இயக்குநர், தமிழ்நாடு தொழில் மற்றும் காப்பு (மூலதனம்) நிறுவனம், தேசிய சிறு தொழில்கள் நிறுவனம், இந்திய மாநில வங்கி, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், மற்றும் நிதி வழங்கு துறை நிறுவனங்கள் பங்கு கொள்கின்றன.

இம்மாதிரி தீவிர இயக்கங்களின் மூலம் சிறு தொழில் அதிபர்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளும் உடனடியாக ஒரு குடையின் கீழ் கிடைக்க வசதிகள்—வழி வகைகள்-செய்யப்படுகின்றன. அண்மையில் தருமபுரி மாவட்டத்தில் துவங்கப்பட்ட இம்மாதிரி இயக்கத்தின் மூலம் நல்ல பயன் ஏற்பட்டு பல தொழில்கள் அம்மாவட்டத்தில் துவங்கப்பட்டுள்ளன.

தொழில் வளர்ச்சியடையாத பின்தங்கிய கிராமப் புறப் பகுதிகளிலும், சிறு நகரப் பகுதிகளிலும், பரவலாகத் தொழில்கள் துவங்க உதவுவதே எங்களின் தற்போதைய முக்கியப் பணிகளுள் ஒன்றாகும். இவ்வாறு கிராமப் புறங்களிலும், சிறு நகரங்களிலும் சிறு தொழில்கள் பரவலாக இயங்குமாயின் இப்பகுதிகள் வளமடைவதுடன், மக்களின் வேலை இல்லாத் திண்டாட்டம் நீங்கவும் வழி பிறக்கும். நம் பிரதமரின் 20 அம்சத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படவும் இது துணை செய்யும்.



# தேசியக் கல்மரப் பூங்கா

இவ்வுலகில் உயிர் வாழ்ந்த பண்டைக் கால விலங்கினங்கள் மற்றும் தாவரங்களின் அடையாளங்களாகத் திகழும் கல்லினுள் பதிந்த படிவங்களில் (Fossils) இருந்து முந்நூறு கோடி ஆண்டுகளுக்கும் முற்பட்ட காலத்தில் வாழ்ந்த உயிரினங்களின் வரலாற்றை நாம் கண்டறிய முடிகிறது. இவைகளின் உதவியால் உயிரினங்களின் ஆரம்பத் தோற்றம் முதல் மனிதத் தோற்றம் வரையிலான வளர்ச்சியைக் கண்டறியலாம். குறிப்பிடப்பட்ட புவியியல் காலங்களில் சில வகை உயிரினங்கள்தான் மிகுந்த அளவில் வாழ்ந்தன என்றும் அறிய முடிகிறது. எனவே இந்தப் படிமங்கள் மூலம் வண்டல் பாறைகளின் வயதைத்தெரிந்துகொள்ள இயலுகிறது. இப் படிமங்களைப் பற்றிய ஆராய்ச்சி மூலம் பூமியின் மேற்பரப்பிலுள்ள வண்டல் மண் பாறைத் தொகுப்புகளின் வரலாற்றையும் அறிய முடிகிறது. பிராணிகளின் உடல் பகுதிகள் மட்டுமல்லாமல் அவைகளின் அடிச் சுவடுகள், பற்குறிகள், கழிவுப் பொருள்களும் படிமங்களாகப் பாதுகாக்கப்பட்டுள்ளன.

இந்தியாவின் பல இடங்களில், வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களில் வாழ்ந்த உயிரினங்கள் சிறந்த அளவில் பாதுகாக்கப்பட்டு கல்லினுள் பதிந்த படிமங்களாகக் கிடைக்கின்றன. தமிழ் நாட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள சாத்தனூர் என்னுமிடத்திலும், தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள திருவக்கரை என்னுமிடத்திலும் கல்லினுள் பதிந்த பல அரிய கல் மரங்கள் சுமார் 2 கோடி வயதுள்ள வண்டல் பாறைகளில் எல்லாரும் ஆச்சரியப்படுகின்றஉருவ அமைப்பில் காணப்படுகின்றன. இந்தியப் புவியியல் ஆய்வுத் துறை இவ்விரு இடங்களிலும் இக் கல் மரங்களை வருங்காலச் சந்ததியார்களுக்கென பாதுகாத்து வருவதற்கும், பொது மக்களுக்கு இவைகளின் முக்கியத்துவத்தைத் தெரியப்படுத்துவதற்கும், தேசியக் கல்மரப் பூங்காக்களை 1951-ஆம் ஆண்டில் உருவாக்கியது.

திருவக்கரை தேசியக் கலமரப் பூங்கா சென்னைக்குத் தென் மேற்கே ஏறத்தாழ 155 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இப் பூங்கா 8 சதுர கி.மீ. பரப்புள்ளது. திருவக்கரை,கடகம்பட்டு ஆகிய கிராம எல்லைக்குள் அமைந்துள்ளது. 225-க்கும் மேலான கல்மரங்கள் இங்கே உள்ளன. இவைகள் 3 மீட்டர் முதல் 15 மீட்டர் வரை நீளம் கொண்டவையாகும். இங்குள்ள கல்மரங்கள் 2 கோடி ஆண்டுகளுக்கு முந்திய காலத்தில் கடலூர் மணற் பாறைகளில் படுக்க வாட்டமாய் புதைந்துள்ளன. இவ்வகையான கடலூர் மணற்பாறைகள் சோழ மண்டலக் கடற்கரையோரமாக, தமிழ் நாட்டிலுள்ள தூத்துக்குடியிலிருந்து ஆந்திரப் பிரதேசத்திலுள்ள விசாகப்பட்டினம் வரை நீண்டுள்ளது. நீரோடைகளினால் அரிக்கப்பட்ட இடங்களிலும் சிறு குன்றுகளிலும் இக் கல்மரங்கள் வெளித் தெரியக் கிடக்கின்றன. இவைகள் சிதறிய மரத் துண்டுகளாகவும், குறுக்கு இணைப்புகளில் விரிசல் காரணமாக மரத் தொட்டிகளில் அறுத்த மரத் துண்டுகளைப் போல சிறுசிறு கல்மரத் துண்டுகளாகவும் சிதறிக் காணப்படுகின்றன.

திருவக்கரையில் கல்மரங்கள் கிடைப்பது பல காலங்களாகத் தெரிய வந்திருக்கிறது. இவை ஊசியிலை மரங்கள் மற்றும் கிளையில்லா மரங்களின் ஓர் அரிய இனத்தைச் சார்ந்தவையாகும். படுக்க வாட்டில் கிடைக்கப்பெற்றுள்ள கிளைகளும் வேர்களும் அற்ற இக் கல்மரங்கள் வெகு தொலைவிலிருந்த மலைப்பாங்கான இடங்களிலிருந்து ஆறுகளினால் இழுத்துச் செல்லப்பட்டு உள்நாட்டுக் கடல் நிலங்களில் புதையுண்டவை என்பதைத் தெளிவுறுத்துகின்றன. இவ்வகையான ஊசியிலை மர இனங்கள் கடல் மட்டத்திலிருந்து ஏறத்தாழ 2,500 அடி உயரத்தில் வளர்பவைகளாகும். இவைகள் இப்போது சமவெளியில் கிடைப்பதனால் மலைப்பாங்கான இடங்களிலிருந்து ஆறுகளினால் இழுத்து வரப்பெற்றன என அறியலாம். இவ்வாறு இழுத்து வரப்பெற்ற மரங்கள் கல்லாக மாற்றம் பெற்று கல்மரங்களாக ஆகியுள்ளன. புதையுண்ட மரங்களி...



உதகமண்டலம் அரசினர் தாவரப் பூங்காவில் கல்மரம் ஒன்றினை மைய அரசின் எஃகு மற்றும் சுரங்கத்துறை அமைச்சர் திரு. சந்திரஜித் யாதவ் அவர்கள் திறந்து வைத்தார்.

உள்ள நீர், மேலேயுள்ள வண்டல் படிவங்களில் அழுத்தத்தினால் வெளியேற்றப்பட்டு மரத்தின் இடத்தை மணல் ( Silica ) அடைந்து கல்மரமாகக் காலப் போக்கில் மாறின. மரத்தின் மிக நுண்ணிய அமைப்புகள், வட்டங்கள், முடிச்சுகள் முதலியன இக் கல்மரங்களில் அதிசயிக்கத்தக்க வகையில் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன.

உலகில் சில இடங்களில் கல்லாக மாற்றம் பெற்ற மரங்கள் பல்வேறுபட்ட கால அளவுகளையுடைய பாறைகளில் கிடைக்கின்றன. மரம் கல்லாக மாறுவதற்குத் தேவையான மணல் ( Silica ), எரிமலைக் குழம்பு சாம்பலாகச் சிதையும்போதோ அல்லது திரவமாக உள்ள நில நீரிலோ உண்டாகிறது. எண்ணிலடங்கா அடிமரங்கள் வளர்ந்த இடங்களிலே, நின்ற நிலையிலேயே எரிமலைச்சாம்பல்களினால் புதையுண்ட பின் கல்லாக மாற்றப்பட்டுள்ளதை அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள 'மஞ்சள் பாறை' தேசியப் பூங்காவின் கற்காடுகளில் நாம் காணலாம். ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கப்பட்ட 15 காடுகள் எரிமலைச் சாம்பல் படிவத்தால் பிரிக்கப்பட்ட நிலையில் மஞ்சள் பாறை தேசியப் பூங்காவில் உள்ள 'அமிதிஸ்ட்' மலையில் காணலாம். அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள அரிசோனாவிலும் 20 கோடி ஆண்டு வயதுடைய கல்மரக் காடுகளில் மரத் துண்டுகள் நமது திருவக்கரையில் உள்ளது போல வெகு தொலைவிலிருந்து ஆறுகளால் இழுத்துச் செல்லப்பட்டு இப்போதுள்ள இடங்களில்-வண்பாறைகளில் கல்லாக மாற்றப்பட்டுள்ளன.

திருவக்கரை தேசிய கல்மரப் பூங்கா ஈடு இணையற்றதாகும். இங்கு மரங்கள் முழுமையான அளவில் கல்லாக மாற்றம் பெற்று உள்ளன. இத்தகைய செயல் மிக அரிதானதாகும். இப் பூங்கா நமது வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட தாவரங்களின் வாழ்க்கையை அறிவதற்கு ஒரு கண்ணேட்டமாக அமைந்துள்ளது.

திருவக்கரையிலுள்ள கல்லாக மாற்றப் பெற்ற காடுகளைப் பற்றி மக்கள் நன்கு அறிவதற்காக இந்தியப் புவியியல் ஆய்வுத் துறை, நாட்டின் முக்கியமான பூங்காக்களில் இக்கல்மரங்களைக் காட்சிப் பொருளாக அமைத்துக் கொண்டிருக்கிறது. இவ்வாறாக இக் கல்மரங்கள் சென்னையிலுள்ள கிண்டி குழந்தைகள் பூங்கா, கேரளாவிலுள்ள தேசிய வரலாற்றுப் பொருட்காட்சி, ஐதராபாத்தில் உள்ள நேரு வன விலங்குப் பூங்கா, பெங்களூரிலுள்ள கப்பன் பூங்கா, புது டெல்லியிலுள்ள தேசியப் பொருட்காட்சி ஆகிய இடங்களில் வைக்கப்பட்டு, மக்களுக்குக் கல்வி அறிவைப் புகட்டும் வகையில் சிறப்புப் பெற்று உள்ளன. இப் புவியின் உயிரின வளர்ச்சி பற்றி அறிவதற்கான ஒரு ஊக்கத்தையும், வாய்ப்பினையும் இக் கல் மரங்கள் வழங்குகின்றன.

இத்தகைய வகையில் இரண்டு கோடி ஆண்டுகளுக்கு முற்பட்ட திருவக்கரை கல் மரம் ஒன்று உதகமண்டலம் அரசினர் தாவரப் பூங்காவில் பொது மக்களின் காட்சிக்காகவைக்கப்பட்டுள்ளது. இந்தியப் புவியியல் துறையின் 125-ஆம் ஆண்டு விழாவினையொட்டி 23—5—1976 - ஆம் நாளன்று காட்சிக்காக வைக்கப்பட்டுள்ள இக்கல் மரத்தினை மைய அரசின் எஃகு மற்றும் சுரங்கத் துறை அமைச்சர் திரு. சந்திரஜித் யாதவ் அவர்கள் திறந்து வைத்து, இதன் சிறப்புகள் பற்றிக் கூறினார்கள். தமிழக ஆளுநரின் ஆலோசகர் திரு. பி. கே. தவே அவர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டார்.

# உங்கள் நிலத்தில் உரச் செலவைக் குறைத்து பயிர் விளைச்சலை 15% அல்லது அதற்கும் மேலாக அதிகப்படுத்துவதற்கு உபயோகியுங்கள்

## ஏரீஸ் எக்ரோ-ஏஸோ

## மற்றும் ஏரீஸ் எக்ரோ-ரைஸோ

நைட்ராஜன் அளிக்கும் கிருமிகள்

எப்படி?
ஏரீஸ் எக்ரோ-ஏஸோ மற்றும் எக்ரோ-ரைஸோ நைட்ரஜன் அளிக்கும் கிருமிகள். பாக்டீரியாக்கள் வளிமண்டலத்திலிருக்கும் நைட்ரஜனை எடுத்து ஆர்கானிக் நைட்ரஜனாக மாற்றி, செடிகள் கிரகித்துக் கொள்ளும்படியாகச் செய்கின்றன. எனவே உங்களுக்கு நைட்ரஜன் அடிப்படையில் அமைந்த ரசாயன உரங்கள் 25% மிச்சமாகின்றன. இந்த மிச்சம் மட்டுமே ஏரீஸ் எக்ரோ-ஏஸோ அல்லது எக்ரோ-ரைஸோவின் விலையை விட அதிகமாக இருக்கிறது.



ஆராய்ச்சித் தயாரிப்புகள்:
நைட்ரஜனை ஏற்று இணைக்கும் பாக்டீரியாக்கள் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் நடத்தப்பட்ட பரந்த ஆராய்ச்சியின் பயனாக விளைந்தவையாகும். ஏரீஸ் எக்ரோ-ஏஸோ மற்றும் எக்ரோ-ரைஸோ, ஏரீஸ் விஞ்ஞானிகள் கடுமையான ஆராய்ச்சிகளின் பயனாக உருவாக்கியுள்ள உன்னதமான தயாரிப்புகளாகும்.

உங்கள் பயிர் விளைச்சல் 15% அல்லது அதற்கும் மேலாக அதிகமாக வழி செய்வது: • விதைகள் சிறப்பாக முளைவிடுதல் • நாற்றங்கால்களின் விரைவான வளர்ச்சி • மேம்பட்ட செடி வளர்ச்சி • வேர்களின் சிறந்த வளர்ச்சிக்கு மேம்பட்ட மண் அமைப்பு மற்றும் சூழ்நிலைகள் • வேர்மண்ணில், வளிமண்டல நைட்ரஜனின் அதிகமான சேர்க்கை • உயிர்ப் பொருட்களின் சிதைவு போன்ற சாதாரண மண் மாற்றச் செயற்பாடுகள் துரிதப்படுதல் • மண் வழியாகப் பரவும் நோய்களுக்கு எதிர்ப்பு • மண்ணில் உள்ளார்ந்த நுண்ம உயிர்ப் பொருட்களின் எண்ணிக்கை அதிகமாதல்.

உபயோகிப்பது கலயம்:
அ) விதைப் பதனம் ஆ) நாற்றுநேர்க்கும் முறை இ) மண் பதனம்.
இந்தப் பயிர்களுக்கு:
பயறு இனத்தைச் சாராத பயிர்களுக்கு எக்ரோ-ஏஸோ,
தானியங்கள், பருத்தி, கரும்பு, புகையிலை, மிளகாய், எள், குசும்பு, சூரியகாந்தி, பழங்கள், காய்கறிகள் முதலியன.
பயறு இனங்களுக்கு மட்டும் எக்ரோ-ரைஸோ:
நிலக்கடலை, சோயாபீன், பட்டாணி மற்றும் அவரையினம், பருப்பு வகைகள், பீன்ஸ் முதலியன.



விசேஷ அம்சங்கள்:
• அதிகமான பாக்டீரியா எண்ணிக்கை (பிரதி கிராமிற்கு 100 முதல் 1000 கோடி)
• நீண்டகாலம் கெடாமலிருப்பதற்கென பிரத்யேகமான பாதுகாப்புப் பேக்கிங்
• பிரிக்கப்பட்டுள்ள ... தரத்தின் நிர்ணய ... 

இவர்களுடைய ஆராய்ச்சித் தயாரிப்புகள்:
ஏரீஸ் எக்ரோ-வெட் இண்டஸ்ட்ரீஸ் பிரை. லிட்.,
த.பெ. எண் 9417, பம்பாய் 400 093.

Grant.18 T76




# கேளுங்கள் கொடுக்கப்படும்!

**வினா** : 16-2-1976 தேதிய "தமிழரசு" இதழில், இருதயத்தைச் சோதனை செய்வதுபோல் புகைப்படம் வெளியிடப்பட்டிருந்தது. நான் இருதய நோய்க்குப் பல இடம் சென்றும் பலன் இல்லாமல் போய்விட்டது. ஆகவே, இருதய நோய்க்கு முழுமையாக எங்கெங்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவிக்கவும். நீங்கள் அளிக்கும் பதில் என் போன்ற இருதய நோயாளிகள் பலருக்குப் பயன்படுமாதலின் தயவு செய்து கண்டிப்பாகப் பதில் அளிக்கவும்.

—பி. முருகையன்,
வாய்மேடு,
மேலக்காடு அஞ்சல்,
(வழி) தகட்டூர்,
திருத்துறைப்பூண்டி வட்டம்
தஞ்சை மாவட்டம்.

**விடை** : சென்னையில் உள்ள பொது மருத்துவமனை (General Hospital), ஸ்டான்லி மருத்துவமனை, இராயப்பேட்டை மருத்துவமனை ஆகியவற்றில் இருதய நோய்க்குத் தீவிர சிகிச்சை அளிக்கும் பிரிவு (Intensive Coronary Care Unit) உள்ளது. அப்பிரிவுகளில் இருதய நோய்க்கு முழுமையான சிகிச்சை அளிக்கப்படுகிறது. எனவே, சென்னைக்கு வந்து மேற்கூறிய ஏதேனும் ஒரு மருத்துவ மனையில் சேர்ந்து, உங்கள் இருதய நோய்க்குச் சிகிச்சை பெறுவதே சிறந்தது.

**வினா** : என் வீட்டில் 5 வருட காலமாக கத்தரி சாகுபடி செய்து வருகின்றோம். நோயின் காரணமாகச் செடிகள் காலப்போக்கில் அழிந்து விடுகின்றன. காய்க்கும் பருவத்தில் மண்ணிற்குக் கீழேயுள்ள பகுதிகள் உலர்ந்து விடுகின்றன. இதன் காரணமாக இளங்குருத்து முதலிலும், மற்றைய பகுதிகள் காலப் போக்கிலும் அழிந்து விடுகின்றன. நாங்களும் என்னென்னவோ செய்து பார்த்தோம். இந்நோய் ஒழிந்த பாடில்லை! ஆகவே, இது என்ன நோய் - என்றும், எந்த மருந்து தெளிந்தால் சரியாகும் என்றும், அம்மருந்தை எங்கு வாங்கலாம் என்றும் தெரியப்படுத்தும்படிக் கேட்டுக் கொள்கின்றேன்.

—சூரிய மூர்த்தி,
ஆத்திக்கோட்டை.

**விடை** : தங்கள் வீட்டுத் தோட்டத்தில் உள்ள கத்தரிச் செடி வாடல் நோயினால் (Wilt) தாக்கப்படுகிறது என்று நம்புகின்றோம். இது பூஞ்சாளத்தால் (Fungus) ஏற்படும் நோயாகும். இப்பூஞ்சாளம் கத்தரிச் செடியின் வேர்களைத் தாக்கி அழுகச் செய்துவிடும். இதனால் மண்ணிற்குக் கீழே உள்ள, கத்தரிச் செடியின் வேர்ப் பாகம் உலர்ந்து விடும். அதன் பின் செடிகள் தானாக வாடி இறந்துவிடும். இந்நோயினைத் தடுக்கப் பின்கண்ட முறைகளை மேற்கொள்ளுங்கள்.

1. இந் நோயினால் தாக்கப்பட்ட கத்தரிச் செடிகளை உடனுக்குடன் அப்புறப்படுத்தி விட வேண்டும்.

2. அவ்வாறு செடிகளை அகற்றிய இடத்தில் கரையும் 0.1 சத செரசான் மருந்தைத் (ஒரு கிலோ செரசான் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளித்து, மண்ணை நனைக்கவும்.

3. அடுத்த பருவத்தில் கத்தரி பயிரிடாமல், வேறு காய்கறிச் செடிகளைப் பயிரிட முயற்சி செய்வதும் சிறந்தது.



மேற்கூறிய மூன்று முறைகளையும் தவறாது மேற்கொண்டால், உங்கள் கத்தரிச் செடிகளை வாடல் நோயிலிருந்து காப்பாற்ற முடியும்.

கரையும் செரசான் மருந்து, உங்கள் ஊராட்சி ஒன்றிய வேளாண்மைக் கிடங்கில் கிடைக்கக்கூடும். அவ்வாறு கிடைக்காவிட்டால், உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களிடம் கூறி, கரையும் செரசான் மருந்தைத் தருவித்துக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளலாம்.

**வினா** : என்னுடைய ஊர் பந்தல்குடி. நான் ஒரு இளம் அறிவியல் பட்டதாரி. நான் கோழிப் பண்ணை வைத்து நடத்துவதற்கு ஆசைப்படுகிறேன். தமிழ் நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் மூலமாகப் பயிற்சி பெற்று, அதன் உதவியுடன் கோழிப் பண்ணை நிறுவ ஆசைப்படுகிறேன். ஆதலால் தமிழ் நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் முகவரியைத் தயவு செய்து தெரிவிக்கும்படி வேண்டுகின்றேன்.

—எஸ். சோமசுந்தரம்,
பி.எஸ்சி.,
பந்தல்குடி.

**விடை** : உங்களுடைய ஊர் பந்தல்குடி என்பதை மட்டும் தெரிவித்து விட்டு, அஞ்சலக முகவரியைத் தெரிவிக்காமல், கையெழுத்தை மட்டும் போட்டு உள்ளீர்கள். உங்கள் முகவரியைத் தெரிவிக்க வேண்டாமா?

கோழிப் பண்ணை அமைப்பதற்கான பயிற்சியும், உதவியும் பெற பின்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

நிருவாக இயக்குநர்,
தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம்,
98, லாயிட்ஸ் சாலை,
சென்னை—600 086

வினா : நான் சிறு தொழில் செய்ய விரும்புகிறேன். உதாரணம் : செங்கல் தயாரிப்பு. இத்தொழில் செய்ய அரசாங்க வங்கிகள் கடனாகப் பணம்தருமா? தரும் என்றால் எந்த வங்கியுடன் அல்லது அதிகாரியோடுதொடர்பு கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவிக்கவும்.

—மு. குழந்தை கவுண்டர்,
கூத்தாப்பாடி (அஞ்சல்).
(வழி) பென்னாகரம்,
தருமபுரி மாவட்டம்.

விடை : மிகவும் பின் தங்கிய மாவட்டமாக உள்ள தருமபுரி மாவட்டத்தைத் தொழில்துறையில் முன்னேற்ற வேண்டும் என்பதற்காகத் தமிழ் நாடு அரசு முனைந்து செயலாற்றி வருகிறது.

எனவே, தருமபுரி மாவட்டத்தில் சிறு தொழில் துவங்குவதற்கு 'சிட்கோ' எனப்படும் 'தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம்' 'டி. ஐ. ஐ. சி.' எனப்படும் 'தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகம்' ஆகியவற்றின் உதவியும், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் உதவியும் உங்களுக்குக் கிடைக்கும். 'தருமபுரி மாவட்டத்தில் எவ்வகைச் சிறு தொழிலைத் துவக்குவது இலாபகரமாக இருக்கும்?', 'எப்படி நிதி உதவி பெறுவது?' என்பன போன்ற விவரங்களை அறிய, தருமபுரி மாவட்டத்தில் உள்ள தொழில் வணிகத் துறையின் உதவி இயக்குநர் அவர்களை நீங்கள் கலந்தாலோசிப்பதே சிறந்தது. அவரைச் சந்திக்க இயலாவிட்டால், உங்கள் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தொழில் விரிவாக்க அலுவலர் (Extension Officer for Industries) அவர்களையோ அல்லது உங்கள் ஊர்நல உதவியாளர் (Gramasevak) அவர்களையோ கலந்தாலோசிக்கவும். வங்கிகளில் இருந்து கடனுதவி பெற உங்கள் அருகாமையில் உள்ள நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கியையோ அல்லது ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியாவையோ கலந்தாலோசிக்கவும்.



வினா : எங்கள் சங்கத்திற்கு 'தமிழரசு' பத்திரிகை வரவழைக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டு உள்ளது. அதற்கு 6 மாத சந்தா எவ்வளவு? ஒரு வருட சந்தா எவ்வளவு என்று தெரியப்படுத்த வேண்டுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

—தலைவர்,
விவசாயிகள் சங்கம்,
கன்னந்தேரி (அஞ்சல்),
(வழி) கொங்கணாபுரம்,
சேலம் மாவட்டம்.

விடை : ''தமிழரசு'' இதழ் (தமிழ் பதிப்பிற்கு) பெற பின்கண்டவாறு சந்தா செலுத்தலாம் :

6 மாத சந்தாத் தொகை ரூபாய்—6.00.

1 ஆண்டுச் சந்தாத் தொகை ரூபாய்—12.00

சந்தாத் தொகையை மணியார்டர் மூலமாகப் பின்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

பொது நிருவாக மேலாளர்,
''தமிழரசு'' அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை—600 002.

வினா : நான் ஒரு இளம் விவசாயி. என் கேள்விக்குத் தவறாது பதில் அளிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

பன்றியின் கழிவில் இருக்கும் N,P,K எவ்வளவு? இக்கழிவை எல்லா வகைப் பயிர்களுக்கும் இடலாமா? உயர் விளைச்சல் தரும் நெல் வகை, சோளம் ஆகியவற்றிற்கு எத்தனை கிலோ இட வேண்டும்?

—ஜி. பத்மநாபன்,
குச்சிப்பாளையம்,
ராதாபுரம் அஞ்சல்,
விழுப்புரம் வட்டம்,
தென் ஆர்க்காடு மாவட்டம்

விடை : பன்றியின் எருவில் (உலர்ந்த நிலையில்) கீழ்க்கண்ட அளவில் சத்துக்கள் உள்ளன :

தழைச்சத்து (N)—3.7 சதம்.
மணிச்சத்து (P)—3.3 சதம்.
சாம்பல் சத்து(K)—0.4 சதம்.

அதாவது 100 கிலோ பன்றி எருவில், 3.7 கிலோ தழைச்சத்து, 3.3 கிலோ மணிச்சத்து, 0.4 கிலோ சாம்பல் சத்து அடங்கியுள்ளது.

பன்றி எரு, நன்கு மக்குவதற்கு நாளாகும். அவ்வாறு மக்கும் போது (Decomposition) வெப்பம் வெளிப்படும். போதிய தண்ணீர் வசதி இல்லாவிட்டால், இவ்வெப்பம் பயிர்களைத் தாக்கித் தீய்த்துவிடும். எனவேதான், உழவர்கள் பெரும்பாலும் போதிய தண்ணீர் வசதி இல்லாத இடங்களில் பன்றி எருவைப் பயன்படுத்துவதில்லை. ஆனால், மானாவாரிப் பயிர்களுக்கு பன்றி எருவைப் பயன்படுத்துதல் சிறந்ததல்ல.

பொதுவாக உழவர்கள் பன்றி எருவைக் கரும்புக்குப் பயன்படுத்துவது உண்டு. போதிய தண்ணீர் வசதி இருப்பின் நெல்லிற்கும் பன்றி எருவைப் பயன்படுத்தலாம்.

நன்கு மக்கிய பன்றி எருவை உயர் விளைச்சல் நெல் ரகங்களுக்கும் அடியுரமாகப் பயன்படுத்தலாம். சோளத்திற்குப் பயன்படுத்துதல் நல்லதல்ல. ஒரு ஏக்கருக்கு 20 கிலோ தழைச் சத்தை அடியுரமாக இட வேண்டுமென்றால் 540 கிலோ பன்றி எருவை அடியுரமாக இடவேண்டும்.

வினா : கோழிப் பண்ணை அமைக்க எனக்கு நல்ல தரமான 100 கோழிக் குஞ்சுகள் தேவைப்படுகின்றன. ஆஸ்ட்ரலாப் வளர்ப்பது நல்லதா? அல்லது வெள்ளை லெக்கார்ன் வளர்ப்பது நல்லதா? அவைகளை எங்கிருந்து பெறலாம்?

—பி. ஆனந்தன்,
மேல மாசி வீதி,
மதுரை.

## ஆஸ்டரோலார்ப்



## வெள்ளை லெக்கார்ன்



விடை: 'ஆஸ்ட்ரோலார்ப்'(Austrolorp) வளர்ப்பதை விட 'வெள்ளை லெக்கார்ன்' (White Leghorn) வளர்ப்பதேசிறந்தது. ஏனெனில், 'ஆஸ்டரோலார்ப்' கோழிகளைவிட 'வெள்ளை லெக்கார்ன்' கோழிகளே அதிக முட்டையிடும் தன்மையுடையவை.

'ஆஸ்டரோலார்ப்' அதிக தீவனம் உட்கொள்ளக் கூடியதாகும். ஆனால் அதற்கேற்ப அதிக எடையுடையதாக இருக்குமே தவிர இலாபகரமாக முட்டையிடக் கூடியதல்ல. 'வெள்ளை லெக்கார்ன்' குறைந்த தீனியே உண்டு, குறைந்த எடையுள்ளதாகவே இருப்பதால், ஆண்டிற்கு 185 முதல் 220 முட்டைகள் இட்டு அதிக இலாபம் தருவதாக உள்ளது. எனவே, 'வெள்ளை லெக்கார்ன்' கோழிக் குஞ்சுகளை வாங்கி வளர்ப்பதே சிறந்ததாகும்.

மதுரை மாவட்டத்தில் கப்பலூர் என்ற இடத்தில் தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் கோழிப் பண்ணை மற்றும் கோழிக் குஞ்சு பொரிப்பு நிலையம் உள்ளது. அங்கு சென்று உங்களுக்குத் தேவையான கோழிக் குஞ்சுகளைப் பணம் கட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

வினா : 1—4—76 தேதிய ''தமிழரசு'' இதழில் 37-ஆம் பக்கத்தில் வேலை வாய்ப்புக் குறித்துத் தகவல் அளிக்கும் வார ஏடு 'பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதை எப்படிப் பெறுவது என்பதைத் தெரிவிக்கவும்.

—இரா. முத்தையா,
காரைக்குடி,
ராமநாதபுரம் மாவட்டம்.

(குறிப்பு : இதே கேள்வியைப் பலர் கேட்டுள்ளனர்).

விடை : வேலைவாய்ப்புப் பற்றி தகவல் அளிப்பதற்காக ''எம்ப்ளாய்மெண்ட் நியூஸ்'' (Employment News) என்ற பெயரில் ஒரு வார ஏடு வெளிவருகிறது. இதன் விலை 25 காசுகள்தான். நியூஸ் ஏஜெண்டுகள் மூலமாகவே இவ்வார ஏடு விற்பனை ஆகிறது. சென்னை நகரில் உள்ள பத்திரிகைக் கடைகளில் கிடைக்கிறது. அது போல் காரைக்குடியிலும் கிடைக்கக்கூடும். கிடைக்காவிட்டால் அங்குள்ள நியூஸ் ஏஜெண்டுகளிடம் தெரிவித்தால் வரவழைத்துத் தர அவர்கள் முயற்சிக்கக்கூடும்.

நேரடியாகச் சந்தா செலுத்தினால் இவ்வார ஏடு அனுப்பப்படுமா என்பதை அறிய மடல் எழுதியுள்ளோம். விவரம் தெரிந்ததும் 'கேளுங்கள் கொடுக்கப்படும்' பகுதியில் தெரிவிக்கப்படும். எனவே, இதுபற்றி கேள்வி அனுப்பியவர்கள் அடுத்த இதழ் வரை பொறுத்துக்கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றோம்.

— ஆர். மாணிக்கம்.

## குடும்ப நல அறுவைச் சிகிச்சை... சில புள்ளி விவரங்கள் !

சர்வதேச பெண்கள் ஆண்டான 1975-ல் இந்தியாவில் பத்து மாநிலங்களில் ஆண்களைவிட அதிகமான பெண்கள் குடும்பக்கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்து கொண்டிருக்கிறார்கள்.

பத்து மாநிலங்களில் ஆந்திரப் பிரதேசம் முதலிடம் பெற்றுள்ளது. 1975-76ல் அந்த மாநிலத்தில் 87,995 பெண்கள் அறுவைச் சிகிச்சை செய்துகொண்டிருக்கிறார்கள். அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட ஆண்களின் எண்ணிக்கை 21,067 ஆகும். இரண்டாவது இடம் பெற்றுள்ள கர்நாடகத்தில் 69,521 பெண்கள் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டுள்ளனர். அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட ஆண்கள் எண்ணிக்கை 6,974 தான்.

மற்ற மாநிலங்களில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களில் பெண்களை விட ஆண்கள் எண்ணிக்கை தான் அதிகம். இதில் மகாராஷ்டிரம் முதலிடமும், தமிழ் நாடு இரண்டாவது இடமும் வகிக்கின்றன. விவரம் பின்வருமாறு:

மகாராஷ்டிரம் :

ஆண்கள் : 1,76,974
பெண்கள் : 1,65,145

தமிழ்நாடு :

ஆண்கள் : 1,61,884
பெண்கள் : 74,135

அஸ்ஸாம் :

ஆண்கள் : 1,12,065
பெண்கள் : 12,147

ஒரிஸ்ஸா :

ஆண்கள் : 53,727
பெண்கள் : 24.066

புத்துணர்வு பெற்ற

புதுமை மிகு நாடு—1975-76

# கிராம வாழ்வில் புத்தொளி

- 6½ மில்லியனுக்கு மேலும் இலவச வீட்டுமனைகள் கொடுக்கப்பட்டுள்ளன. 3,68,000 வீட்டுமனைகள் அபிவிருத்தி செய்யப்பட்டவை; 2,46,000 கட்டி முடிக்கப்பட்டவை.

- கொத்தடிமை விலங்கொடிக்கப்பட்டு, 47,000 பேர் விடுதலை பெற்றனர். நில உச்ச வரம்புச் சட்டம் மூலம் 16,67,000 ஏக்கர் உபரி நிலம் கிடைத்தது. அதில் 4,24,000 ஏக்கர், நிலமில்லாதோருக்கு வழங்கப்பட்டன. பயனடைந்தோர் 1,80,000.

- 19 கிராமிய வங்கிகள் அமைக்கப்பட்டன; 1976-77ல் மேலும் 50 வங்கிகள் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள் பலப்படுத்தப்படுகின்றன.

davp 76/88

# பொது அறிவு என்னும் கூரிய பார்வை!

மாணவர் அரங்கம்



நாளையத் தலைமுறைகளான இன்றைய மாணவ, மாணவியர் எல்லா நற்பண்புகளிலும் தனி சிறந்து விளங்கிட வேண்டும். இதற்குப் பெற்றோர்கள் பெருந்துணை புரிந்திட வேண்டும். தங்கள் பிள்ளைகள் கல்வி, அறிவு, ஒழுக்கங்களில் தடம் மாறிப் போகாமல் கவனித்துக் கொள்ள வேண்டும்.

மாணவர்கள் தம் அறிவு வளர்ச்சியில் கண்ணும் கருத்தாய் இருத்தல் வேண்டும். அதற்கு நல்ல நூல்களைப் படிக்கும் ஆர்வம் மிகுந்திட வேண்டும். நல்ல தரமான பத்திரிகைகளையும், இதழ்களையும் படித்துத் தம் அறிவை அவர்கள் வளர்த்துக் கொள்ளலாம்.

சென்னையில் நூலகங்களுக்குக் குறைவில்லை. கன்னிமாரா நூலகம், சென்னைப் பல்கலைக் கழக நூலகம், சென்னை மாவட்ட மத்திய நூலகம், கிளை நூலகங்கள் முதலியன உள்ளன. இவை தவிர தனியார் நூலகங்களும் ஆங்காங்கே உள்ளன. இவற்றை மாணவமணிகள் பெருமளவில் பயன்படுத்திக் கொள்ள முன்வர வேண்டும்.

ஓய்வு நேரங்களிலும், விடுமுறை நாட்களிலும் பொழுதை வீணே கழிக்காமல் நூலகங்களுக்குச் செல்லலாம்.

பள்ளி, கல்லூரிகள் நமக்குக் கல்வி என்னும் கண்ணைத் தருகிறதென்றால், நூலகமும் பத்திரிகைகளும் பொது அறிவு என்னும் கூரிய பார்வையைத் தருகின்றன.

உலகில் எத்தனையோ நிகழ்ச்சிகள் அன்றாடம் நடக்கின்றன. அவற்றுள் முக்கியத்துவம் பெறும் நிகழ்ச்சிகள் சிலவே.

குறிப்பாக இந்தியாவில் நடந்த நிகழ்ச்சிகள் அதிலும் முதன் முதலில் நடந்த நிகழ்ச்சிகளுக்கான சில வினாக்களும், பொதுவான விஷயங்கள் குறித்த வினாக்களும் கீழே தரப்பட்டிருக்கின்றன :

தேர்வின் போது வினாக்களுக்கு விடைகள் எழுதுகிறீர்கள். இதோ, உங்களுக்காக ஒரு பொது அறிவுத் தேர்வு! அதற்கான வினாக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுக்கு விடை காண முடிகிறதா, பாருங்கள்.

**வினாக்கள் :**

1. (அ) விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் தளபதி யார்?

   (ஆ) முதல் இந்திய கவர்னர் ஜெனரல் யார்?

   (இ) விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் பெண் கவர்னர் யார்?

   (ஈ) இந்தியாவில் முதன் முதலில் அஞ்சல் தலை எப்போது வெளியிடப்பட்டது?

2. 'உங்டாட் மாநாடு' என்றால் என்ன? (அண்மையில் இது நைரோபியில் நடந்தது)

3. ஊட்டி, கொடைக்கானல், ஏர்க்காடு ஆகியவை கோடைக்கால வாழுமிடங்கள் என்பது நமக்குத் தெரியும். பின்வரும் இந்த இடங்கள் எங்கெங்கு உள்ளன?

   (அ) டல்ஹௌசி, (ஆ) குல்மார்க், (இ) காலிம்பாங் ( Kalimpong ), (ஈ) மஹாபலேஷ்வர்.

4. தலைமைச் செயலகம், மாநிலக் கல்லூரிக் கட்டடங்கள் எப்போது கட்டப்பட்டன?

5. சென்னை மாநகராட்சியின் வயது என்ன?

6. 'பேப்பர்' ( Paper ) என்ற சொல் எப்படி வந்தது?

7. இந்தியாவின் தற்போதைய மக்கள் தொகை எவ்வளவு?

8. 'பிரதாப முதலியார் சரித்திரம்' யாரால் எழுதப்பெற்றது?

9. இந்திய தேசியப் பாடல் முதலில் எங்கே எப்போது பாடப்பட்டது?

10. இந்தியச் செய்தி நிறுவனத்தின் பெயர் 'சமாசார்'. அதேபோல அமெரிக்க, ரஷ்ய நாட்டுச் செய்தி நிறுவனங்களின் பெயர்கள் யாவை?

(விடைகள்: பக்கம் 48 பார்க்க)

# வேலூரில் 20 அம்சத் திட்டத்தை விளக்கும் இனிய திருவிழா

உலக உத்தமர் காந்தி யடிகள் 'Unto the last' என்ற அருமையான நூலைப் படித்து முடித்ததும் அவர் உள்ளத்தில் உருவானதே 'கடையனுக்கும் கடைத்தேற்றம்' அளிக்கும் 'சர்வோதயம்'. 'சர்வோதய சமுதாய அமைப்பில், , ஏழையென்றும், அடிமையென்றும் யாருமிருக்க மாட்டார்கள். 'உழைக்கப் பிறந்தவர்கள்'—'உண்டு கொழுக்கப் பிறந்தவர்கள்' என்கிற இரு வேறு பிரிவினர் இருக்கமாட்டார்கள். 'இல்லாரும் உடையாரும்' என்றிருக்கமாட்டார்கள், சர்வோதய அமைப்பில், எல்லார்க்கும் எல்லாம் என்றிருக்கும்—'எல்லார்க்கும் எல்லாம்' இருக்கும். இத்தகையதொரு சமுதாயத்தை உருவாக்கவே, இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள், 1-7-75-ல் '20 அம்சத் திட்டத்தினைப் பிரகடனப் படுத்தினார்கள். வாழ்வுக்கு வழி காட்டியாக - முன்னேற்றத்தின் முன்னோடியாக விளங்கும் அந்த '20 அம்சத் திட்டம்'-தமிழகத்தினைப் பொறுத்தவரை சற்று காலந்தாழ்த்தியே நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. எனினும் மிகத் தீவிரமாக நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகள் எல்லாக் கட்டங்களிலும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

20 அம்சத் திட்டத்தின் அடிப்படையில் தமிழகத்தில் கடந்த நான்கு மாதங்களில் நிகழ்ந்துள்ள மகத்தான சாதனைகளை விளக்கும் வகையில் மாவட்டந்தோறும் '20 அம்சத் திட்டப்பலமுனை விளக்க விழா'க்கள் சிறப்பான முறையிலும், மக்களுக்கான இந்த மக்கள் திட்டத்தை மக்களே உணர்ந்து நடைமுறைப் படுத்துவதில் தீவிரமான முனைப்பும் ஆர்வமும் கொள்ளத்தக்க வகையிலும் நடத்தப்பட்டு வருகின்றன.

புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், சேலம் ஆகிய நான்கு மாவட்டங்களில் ஏற்கெனவே இந்த 20 அம்சத் திட்டப் பலமுனை விளக்க விழாக்கள் நடைபெற்றுள்ளன. அண்மையில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் இவ் விழா 9-6-76-ல் தொடங்கி 12-6-76-ல் நிறைவெய்தியது.

வரலாற்றுப் புகழ்மிக்க வேலூர் கோட்டை மைதானத்தில் அமைக்கப்பட்ட அலங்காரக் கண்காட்சிக் கலையரங்கில், தமிழக அரசின் செய்தி-மக்கள் தொடர்பு துறையும் இந்திய அரசின் செய்தி ஒலிபரப்புத் துறையின் அனைத்து விளம்பரப் பிரிவுகளும் ஒருங்கிணைந்து இந்த விளக்க விழாவை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்தனர்.

வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மு. பரமசிவம் ஐ. ஏ. எஸ். அவர்கள், விழாவிற்குத் தலைமை வகித்தார். அவர் தம் தலைமையுரையில்,

''இந்தியப் பிரதமர் அவர்களின் 'சிந்தனையில் பிறந்த திட்டம்' என்று 20 அம்சத் திட்டத்தை வருணித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ''சமுதாய அடித்தளத்தில் வாழும் ஏழை எளிய மக்களுக்கு எல்லா நலன்களும், சிந்தாமல் சிதறாமல் போய்ச் சேர உதவும் இத் திட்டம், 73-74-க்குப் பிறகு ஏறியுள்ள விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்தி ஒருநிலைக்குக் கொண்டு வந்துள்ளது'' என்றும் குறிப்பிட்டார்.

விழாவைத் துவக்கி வைத்த அனைத்திந்திய வானொலியின் சென்னை நிலைய இயக்குநர் திரு எம். எஸ். கோபால் அவர்கள்,

''அரசு கொண்டு வருகிற திட்டம் எதுவும் வெற்றிகரமாக நிறைவேற வேண்டுமானால், அதற்கு மக்கள் ஒத்துழைப்பு அவசியம்; இந்த அடிப்படையில் தான், பிரதமரின் 20 அம்சத் திட்டத்திற்கும் மக்களின் ஒத்துழைப்பு வேண்டப்படுகிறது. நமது நாட்டைப் பொறுத்தவரை எழுத்தறிவு இல்லாதவர்களே அதிகமாக இருக்கிறார்கள். எனவே, அவர்களிடத்தில் அரசுத் திட்டங்களை-அவற்றால் அவர்கள் பெறுகிற நன்மைகளை எடுத்துச் சொல்லக் கண்காட்சி, கலை நிகழ்ச்சி, நாடகங்கள் முதலிய சாதனங்களைப் பயன்படுத்தி வருகிறோம்.

''ஏழை எளிய மக்களின் வாழ்வுக்காகவே 20 அம்சத் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. அதை நிறைவேற்றுவதற்கு மக்கள் முழு ஒத்துழைப்பையும் தரவேண்டும்'' என்றார்.

அடுத்து, மத்திய அரசின் மண்டல களவிளம்பர அலுவலர் திரு டி. ஆஞ்சநேயலு அவர்கள் கண்காட்சியைத் திறந்து வைத்து உரையாற்றினார்.

பின்னர், ''பிறந்தது புதுயுகம் மலர்ந்தன முகங்கள்'' என்னும் தலைப்பில் மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலகம் வெளியிட்ட 20 அம்சத் திட்டத்தின் 100 நாள் சாதனைகள் அடங்கிய அழகிய சின்னஞ்சிறு தொகுப்பை தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்புத் துறைத் துணை இயக்குநர் திரு சி. என். கிருஷ்ண பாரதி அவர்கள் வெளியிட்டு, அதன் முதல் பிரதியை மேலவை உறுப்பினர் திரு பலராமன் அவர்களிடம் வழங்கினார்.

திரு கிருஷ்ணபாரதி அவர்கள் பேசுகையில், ''இந்த நாட்டின் சுதந்திரத்திற்காக எத்தனையோ ஆயிரம் பேர் பல்வேறு தியாகங்கள் செய்துள்ளனர். அவர்களெல்லாம் தாமிரப்பட்டயம் கிடைக்குமென்றோ, தியாகி மானியம் கிடைக்குமென்றோ தியாகம் செய்யவில்லை. வருங்காலத்தில், தங்கள் எதிர்காலச் சந்ததியினர் நல்வாழ்வு வாழ வேண்டும் என்பதற்காகத்தான்-நல்வாழ்வு வாழ்வார்கள் என்ற நம்பிக்கையில் தான்.

''கடந்த 29 ஆண்டுகளில் - சுதந்திரப் போராட்டம் என்ற முதற்கட்டத்தைத் தாண்டி, பொருளாதார விஞ்ஞானத் திட்டங்களை உருவாக்குதல் என்ற இரண்டாவது கட்டத்தில்-பல்வேறு திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றியிருக்கிறோம். இதன் பயனாக, உலகில் தொழில்நுட்ப வளர்ச்சியில் நாம் 6-வது இடத்தில் இருக்கிறோம். இதற்காக நாம் பெருமைப்பட வேண்டும்.

''மூன்றாவதாக, சமுதாய நீதியை நிலைநாட்ட வேண்டிய கட்டத்தில் நாம் இருக்கிறோம்.

'கஞ்சி குடிப்பதற்கில்லார்-
அதன்
காரணம் இவை என்னும் அறிவு
மிலார்''

என்றார் பாரதியார். அவ்வாறு கஞ்சியின்றிச் சமுதாயத்தின் கடைக்கோடியில் கிடக்கும் ஏழை எளிய மக்களுக்கெல்லாம் கஞ்சி ஊற்றுகிற மாபெரும் திருவிழா தான் இந்தத் திருவிழா.

''இங்கு மக்களிடத்தில் ஒரு புதுச் சிந்தனையை உருவாக்க வேண்டும்; அவர்களுக்குள்ள பொறுப்பை அவர்களுக்கு உணர்த்தியாக வேண்டும். அடித்தளத்தில் வாழும் எல்லா மக்களுக்கும் எல்லா நன்மைகளும் கிடைக்கச் செய்தாக வேண்டும். இதற்குத் தான், பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் 20 அம்சத் திட்டத்தை உருவாக்கினார்கள் இந்த 20 அம்சத்திட்டம், அரசின் திட்டமல்ல - உத்தியோகஸ்தர்களின் திட்டமுமல்ல-மக்களின் திட்டம்-மக்களுக்கான திட்டம். இந்த உண்மையை மக்கள் நன்கு உணர்ந்து செயல்பட்டால், நாம் 'சமுதாய நீதியை நிலைநாட்டுவது' என்ற மூன்றாவது கட்டத்திலும் வெற்றி பெற்றவர்களாவோம்!'' என்றார்.

விழாத் தொடக்கத்தில் மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் திரு டி.பி.எஸ். சுந்தரநாதன் அனைவரையும் வரவேற்றார்.

தொடர்ந்து, 20 அம்சத் திட்டத்தினை விளக்கும் 'ஒரே மந்திரம்' என்ற நாடகம் நடைபெற்றது!

பொதுவாக 20 அம்சத் திட்ட பலமுனை விளக்கவிழா, ''மக்களிடையே ஒரு புதிய சிந்தனையையும் புதிய எழுச்சியையும் உருவாக்கும் இன்பத் திருவிழாவாகவே விளங்கியது!

—சாமி பழனியப்பன்

## அளவான குடும்பம் அளவற்ற இன்பம்

இந்திய மக்கள் தொகை, 1976 மார்ச் முதல் தேதியன்று 60 கோடியே 62 இலட்சமாக ஆகியுள்ளது. அதாவது ஆண்டுக்கு 2 சத விகிதம் என்ற கணக்கில் மக்கள் தொகை அதிகரித்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் நமது மக்கள் தொகையில் ஒரு கோடியே 20 இலட்சம் அதிகரித்திருக்கிறது!

பரிசீலனை ஆண்டில் பிறந்தவர்களின் எண்ணிக்கையிலிருந்து இறந்தவர்களின் எண்ணிக்கையைக் கழித்து இந்தத் தகவல் தரப்பட்டுள்ளது. இதோ, சில புள்ளி விவரங்கள்:

ஒவ்வொரு ஆண்டும் 2 கோடியே 10 இலட்சம் குழந்தைகள் பிறக்கின்றன. 90 இலட்சம் பேர் இறக்கின்றனர். அதாவது நமது மக்கள் தொகையில் ஒரு கோடியே 20 இலட்சம் எண்ணிக்கை கூடுகிறது. இதே அடிப்படையில் கணக்கில் மாதத்திற்கு 17½ இலட்சம் குழந்தைகள் பிறக்கின்றன. தினசரி 60 ஆயிரம் குழந்தைகள் பிறக்கின்றன. மணிக் கணக்கில் பார்த்தால் சுமார் 2,500 குழந்தைகள் பிறக்கின்றன. ஒவ்வொரு 1½ நொடிக்கும் ஒரு குழந்தை பிறக்கிறது!

ஓர் ஆண்டில் இந்தியாவில் அதிகரிக்கும் மக்கள் தொகை, ஆஸ்திரேலியாவின் மொத்த மக்கள் தொகைக்குச் சமமாகும்.

## கடன் முன்பணம் பற்றிய கையேடு விற்பனையாகிறது!

''கடன், முன்பணம் பற்றிய கையேடு'' (Manual of Loans and Advances) முதல்பதிப்பு (First edition) தமிழ்நாடு அரசின் நிதித்துறையால் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இந்தக் கையேட்டில், பொதுமக்களுக்கும் அரசுப் பணியாளர்களுக்கும், பொதுத்துறை நிறுவனங்களுக்கும் அரசிடமிருந்து கிடைக்கும் பல்வேறு வகையான கடன் வசதிகள் அனைத்தையும் தொகுத்தளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கடன் திட்டம் பற்றியும், சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்கப்பட்டுள்ளது. இந்நூல் பொது மக்களுக்கு மிகவும் பயனுடையதாக அமைந்துள்ளது.

வருவாய் வாரியம், வேளாண்மைத்துறை, பால்வளத்துறை, தொழிலாளர்துறை, பிற்பட்டோர்நலத்துறை, கல்லூரிக் கல்வித்துறை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, மீனளத் துறை, கைத்தறித்துறை, அரிசன நலத்துறை, தொழில் வணிகத் துறை, மருத்துவக் கல்வித்துறை, பொது நூலகத் துறை, மறு வாழ்வுத் துறை, சர்க்கரைத் துறை, தொழில் நுட்பக் கல்வித் துறை, கால்நடை மருத்துவக் கல்வித்துறை, சிறைக்கூடத்துறை, கூட்டுறவுத்துறை, துறைமுகத் துறை, கிராமப்புற வீட்டுவசதி மையம் ஆகிய 20 துறைகளின் மூலம் பொதுமக்களுக்குக் கிடைக்கக்கூடிய கடன் வசதிகளைப்பற்றியும், உள்ளாட்சி நிறுவனங்களுக்குக் கிடைக்கும் கடன்வசதிகளைப் பற்றியும், அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் பல்வேறு கடன் வசதிகளைப் பற்றியும், பொதுத்துறை நிறுவனங்களுக்கு வழங்கப்படும் கடன்களைப் பற்றியும் இந்நூலில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

338 பக்கங்கள் அடங்கிய இந்நூலின் விலை ரூபாய் 10-00 தான். இந்நூலை, அரசினர் வெளியீடுகள் விற்பனை நிலையத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

# படமும் செய்தியும்



சென்னை தேனாம்பேட்டை அண்ணா சாலையில் அமைந்துள்ள தமிழ்நாடு பீங்கான் தொழில். (சிராமிக்) நிறுவனத்தின் நவீன காட்சி அறையைத் தமிழ்நாடு அரசின் தொழில் துறைச் சிறப்புச் செயலாளர் திரு டி. என். சேஷன் அவர்கள் 18-6-'76-ல் திறந்து வைத்தார்.

அனைத்து இந்திய வானொலியின் சென்னை நிலயத்தால் தயாரிக்கப்பட்ட இருபது அம்சப் பொருளாதாரத் திட்டம் பற்றிய 'சலங்கைக் கதிர்' (Spots and Jingles) என்ற நிகழ்ச்சியைத் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு வி. கார்த்திகேயன் அவர்கள் 20-6-'76 அன்று துவக்கி வைத்தார்.





திருச்சிக்கு அருகே காவிரியாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள புதிய பாலத்தை மத்திய உள்துறை அமைச்சர் திரு கே. பிரம்மானந்த ரெட்டி அவர்கள் 19-6-'76-ல் திறந்து வைத்தார். அவ்விழாவிற்கு ஆளுநர் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் தலைமை வகித்தார்.





மத்திய அரசின் பாதுகாப்பு உற்பத்தித் துறை அமைச்சர் திரு வி. என். காட்கில் அவர்கள் 27-6-'76-ல் ஆவடியில் உள்ள படைவீரர் உடை தயாரிக்கும் தொழிற்கூடத்தின் சிற்றுண்டிச் சாலையைத் திறந்து வைத்தார்.

JL
V211m, N70
N76.7



இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தின் ஓராண்டு விழாவையொட்டி, மத்திய, மாநில செய்தி விளம்பரத் துறைகள் ஒருங்கிணைப்புக் குழுவினர் சென்னை கலைவாணர் அரங்கத்தில் அமைத்திருந்த 'வளர்ச்சியும் வளமும்' என்ற பொருட்காட்சியைத் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு வி. கார்த்திகேயன் அவர்கள் 26-6-'76 அன்று திறந்து வைத்தார். அப்பொருட்காட்சியைத் தலைமைச் செயலாளர் அவர்களும், திரு ஆர். வெங்கட்ராமன் அவர்களும் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்.



69678



செங்கற்பட்டு மாவட்டத்தில் 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தின் கீழ் ஏற்பட்டுள்ள சாதனைகளை விளக்கும் வகையில் காஞ்சிபுரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'பலமுனை விளக்க விழா'வினைத் தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு டி. கே. ஏ. திவான் முகம்மது அவர்கள் தலைமையில் 27-6-'76-ல் துவக்கி வைத்தார்.

அவ்விழாவினை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு ஊர்வலத்தில் ஒருபகுதி.

**செங்கற்பட்டு மாவட்டத்தில் 20 அம்சப் பொருளாதாரத் திட்டப் பலமுனை விளக்க விழா.**



அவ்விழாவில் தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்களை வழங்கினர்.



அவ்விழாவில் தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் ஏழைகளுக்கு நிலப்பட்டா வழங்கினர்.




உடல் ஊனமுற்றவர்களுக்கு மூன்று சக்கர வண்டிகள் வழங்கினர்.

தமிழ்நாடு அரசு

பிற்பட்டோர் நலத் துறை, சென்னை—600 006

## 1976—77ஆம் ஆண்டில் வழங்கப்படும் மாநில அரசு உதவித் தொகை அறிவிப்பு

1. பிற்பட்டோர் நலத் துறையினரால் மாநில அரசு உதவித் தொகை திட்டத்தின் கீழ் பல்வேறு துறைகளில் கல்வி பயிலும் தமிழ் நாடு முழுவதிலுமுள்ள பிற்பட்ட வகுப்பினர், மிக பிற்பட்ட வகுப்பினர் மற்றும் விமுக்த சாதியினர் (Denotified Tribes) ஆகிய வகுப்பினைச் சேர்ந்த மாணவ, மாணவியருக்கு 1976—77-ஆம் ஆண்டுக்கு உதவித் தொகைகள் சென்னையிலுள்ள பிற்பட்டோர் நல இயக்குநர், சென்னை நகரம் உட்பட எல்லா மாவட்டங்களிலுமுள்ள மாவட்ட பிற்பட்ட வகுப்பு நல அலுவலர்கள் மற்றும் மதுரையிலுள்ள கள்ளர் சீரமைப்புத் தனித் துணை ஆட்சியர் ஆகியோரால் வழங்கப்படும். பெற்ரோர்/பாதுகாவலர்/கணவன்/மனைவி ஆகியோரின் ஆண்டு வருமானம் ரூ. 2500/-க்குட்பட்டுள்ள, பிற்பட்ட, மிக பிற்பட்ட மற்றும் விமுக்த சாதியைச் சேர்ந்த மாணவ மாணவியர்கள் மட்டுமே மேற்கண்ட உதவித் தொகை பெறத் தகுதி வாய்ந்தவர்கள். பெற்ரோர்/பாதுகாவலர்/கணவன்/மனைவி ஆகியோரின் ஆண்டு வருமானம் ரூ. 2500/-க்கு மேற்பட்ட மாணவர்கள் உதவித் தொகை கோரி விண்ணப்பிக்க வேண்டாம்.

2. உதவித் தொகைக்கான விண்ணப்ப மனுக்கள் மாவட்டங்களில் பிற்பட்ட வகுப்பு நல அலுவலர்கள் அலுவலங்கள் மூலமும், மதுரையிலுள்ள கள்ளர் சீரமைப்புத் தனித் துணை ஆட்சியர் அலுவலகம் மூலமும் நேரிடையாக கல்வி நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்படும். சென்னை மாநகரத்தில் பள்ளிப் படிப்பு உதவித் தொகை மனுக்கள் மட்டும் சென்னை மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலரின் அலுவலகம் மூலம் விநியோகிக்கப்படும். கல்லூரி மற்றும் தொழிற் பயிற்சி நிறுவனங்களுக்கு பிற்பட்டோர் நலத் துறை இயக்குநர் அலுவலகத்திலிருந்து நேரிடையாக விநியோகிக்கப்பட்டுள்ளன.

3. உதவித் தொகை பெற தகுதியுள்ள மாணவர்கள் மனுக்களைச் சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களில் பெற்றுச் சரியான முறையில் பூர்த்தி செய்து தக்க சாதி, வருமானம் மற்றும் முந்திய ஆண்டின் இறுதித் தேர்வில் பெற்ற மதிப்பெண்களையும் தக்க சான்றுகளுடன் சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனத் தலைவர்கள் மூலம் பிற்பட்டோர் நலத் துறை இயக்குநர் அலுவலகம், சென்னை-6, மாவட்ட பிற்பட்டோர் நலத்துறை அலுவலர்களின் அலுவலகங்கள் மற்றும் மதுரையிலுள்ள கள்ளர் சீரமைப்புத் தனித் துணை ஆட்சியர் அலுவலகத்திற்கும் அனுப்ப வேண்டிய கடைசி நாட்கள் கீழ் வருமாறு:

| | | |
|---|---|---|
| பள்ளிப் படிப்பு | பள்ளி திறந்த 10 தினங்களில் | 15-7-76 அல்லது பள்ளி திறந்த 15 தினங்களில் |
| கல்வி நிலையங்கள் : புகுமுக வகுப்பு | ... ... | 15-8-76 |
| இளங்கலை மற்றும் தொழிற் பயிற்சி கல்விகள் : ஜூன் 76-ல் திறப்பன | 31-7-76 | 15-8-76 |
| ஜூலை 76-ல் திறப்பன | 31-7-76 | 31-8-76 |
| முதுகலை, மருத்துவம், பொறியியல் கல்விகள் : | 30-9-76 | 30-9-76 |

குறிப்பு : நடப்பு (1976—77) ஆண்டிலிருந்து புதுப்பித்தல் உதவித் தொகைகளையும் பிற்பட்டோர் நலத் துறை அலுவலர்களாலேயே வழங்கப்படும்.

4. சாதி, ஆண்டு, ஊதியம் பற்றிப் பொய்ச் சான்றிதழ் வழங்கினால் உதவித் தொகை திரும்பப் பெறப்படுவதோடு, மற்ற நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்.

5. குறிப்பிடப்பட்ட தேதிகளுக்குப் பின்னர் வரும் உதவித் தொகை மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

6. தகுதி அட்டைகள் (Entitlement Cards) இந்தத் துறையிலிருந்து வழங்கப்பட மாட்டாது.

இயக்குநர்,
பிற்பட்டோர் நலத் துறை.
சென்னை-6.




உழுது, விதை நட்டுப் பாத்தி கட்டி, நீர் பாய்ச்சிப், பாதுகாக்காமலும் பராமரிக்காமலும் இயற்கையாகவே தரிசு நிலங்களில் வளர்ந்து பயன் தரும் இனிய செல்வம் பனைச் செல்வம். நாலு கோடிப் பனை மரங்கள் தமிழகத்தின் இயற்கைச் செல்வமாக விளங்குகின்றன.

பனை தரும் பல்வேறு செல்வங்களுள் குறிப்பிடத் தக்கது பதநீர். இது, உடலுக்குத் தேவையான பல்வேறு ஊட்டச் சத்துக்களையும் தன்பாற் கொண்டு விளங்கும் இனிய இயற்கைச் சுவை நீர்.

''சாக்கரின்' கலவாத இந்த இன்சுவைப் பதநீரைப் பற்றித் தேசத் தந்தை காந்தியடிகள்,

''புத்தம் புதிய பதநீர், போதை தரக் கூடியதன்று—இந்துஸ்தானியில் இது நீரா எனப்படும்.

''பதநீர் பருகியதால் ஏராளமானவர்கள் மலச்சிக்கலிலிருந்து விடுதலை பெற்றிருக்கின்றனர். நாள்தோறும் காலையில் தேநீர் பருகுவதற்குப் பதிலாக ஒரு குவளைப் பதநீர் அருந்தினால் காலை உணவாக வேறெதுவும் தேவைப்படாது''

என்று பாராட்டியிருக்கிறார்.

விஞ்ஞான முறைப்படிப் பலர் பதநீரை ஆராய்ந்திருக்கிறார்கள். உடலை நன்கு வளர்த்து உறுதிப்படுத்தக் கூடியதும்; ஈறும் பல்லும்; கண் பார்வையும் பாதுகாக்கக் கூடியதுமான சத்துப் பொருள்கள் பதநீரில் நிறைந்திருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்த டாக்டர் வி. பான்ஸ்லே என்பவர், பதநீரில் உள்ள ஊட்டச் சத்துக்கள் எவ்வாறு உடலுக்குப் பயன்படுகின்றன என்பதை மெய்ப்பிக்கப் பள்ளி மாணவர்களுக்குப் பதநீர் கொடுத்து அதன் பெருமையை நிலைநிறுத்தியிருக்கிறார். இதற்காக, மராட்டியப் பல்கலைக் கழகம், இவருக்கு 'டாக்டர்' பட்டமே வழங்கியிருக்கிறது.

மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்த அரசாங்க சத்துப் பொருள் நிபுணர் டாக்டர் எம். வி. இராதாகிருஷ்ண ராவ் என்பவர், பதநீரை ஆராய்ந்து அதில் கீழ்க்கண்டவாறு சத்துப் பொருள்கள் அடங்கியிருப்பதாக அறிவித்திருக்கிறார்.

திடத்தன்மை—1.07 கிராம்.

காரத்தன்மை—6.7—6.9 கிராம்.

வெடியுப்பு (100 க.செ. மீட்டரில்)—0.056 கிராம்.

புரதம் — 0.35 கிராம்

மொத்த சீனி — 10.93 கிராம்.
குளுக்கோஸ் வகைச் சீனி — 0.96 கிராம்

உலோகச் சாம்பல் — 0.54 கிராம்

சுண்ணாம்பு — சிறிதளவு

பாஸ்பரஸ் — 0.14 கிராம்

இரும்புச் சத்து — 0.4 கிராம்

வைட்டமின் சி — 13.25 மி.கிராம்.

வைட்டமின் பி1 — 3.9

(International Units)

தமிழ்நாடு கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் இயங்கும் சென்னை மாநிலப் பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம் இத்தகைய ஊட்டச் சத்து நிறைந்த பதநீரைக் குளிர் வித்து, பாட்டலில் அடைத்து, சென்னை நகரில் சிறப்பான முறையில் விற்று வருகிறது. அது, இவ்வாண்டு பிப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே ஆகிய 4 மாதங்களில் சென்னை நகரில் 3.6 இலட்சம் ரூபாய்க்குப் பதநீர் விற்பனை செய்திருக்கிறது. சுமார் 15 இலட்சம் பேர் இனிக்கும் பதநீர் பருகிப்பயனடைந்து மகிழ்ந்திருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

—சாமி பழனியப்பன்.



# பசுக்களும் எருமைகளும் சினைக்கு வந்திருப்பதை அறியும் முறைகள்

—டாக்டர் ஐ. எம். ராட்ரிக்ஸ்
ஆராய்ச்சி அலுவலர்,
கால்நடை மருத்துவக் கல்லூரி,
சென்னை-7.

**கா**ல்நடை உற்பத்தியின் முன்னேற்றம் திறமையான செயற்கை முறை இனவிருத்தி முறையையே பெரிதும் சார்ந்து இருக்கின்றது. அதன் மூன்று படிகளாவன:

1. உயர் இனக் காளைகளிலிருந்து தரமான விந்துவைச் சேகரித்தல்.

2. நவீன விஞ்ஞான முறைகளைக் கையாண்டு அவற்றைப் பதப்படுத்தி, சேமித்து வைத்தல்.

3. பசுக்களையும், எருமைகளையும் சரியான நேரத்தில் செயற்கை முறையில் இனவிருத்தி செய்தல்.

இம்மூன்றும் சிறந்த முறையில் செயல்படுத்தப்பட வேண்டும். முதல் இரண்டு படிகளும் செயற்கைமுறை இனவிருத்தி ஆய்வகத்தில் செவ்வனே பூர்த்தி செய்யப்பட்டு விடுகின்றன. மூன்றுவது படியின் வெற்றி கால்நடை வளர்ப்போர், அவை சினைக்கு வந்திருப்பதை உடன் அறிந்து, கால்நடை மருத்துவருக்குத் தெரிவிப்பதன் மூலம் சாத்தியமாகின்றது. கால்நடை வளர்ப்போர் அவை சினைக்கு வரும் காலத்தில் வெளிப்படுத்துகின்ற குறிகளையும், நடத்தையையும் அறிந்துகொள்ள வேண்டுவது அவசியமாகின்றது.

**'சினைத் தருணம்' என்ருல் என்ன?**

கால்நடைகள் பருவம் எய்தும் போது 'ஓவரி' எனப்படுகின்ற சினை முட்டை உற்பத்தி செய்யும் உறுப்புக்கள் செயல்பட ஆரம்பித்து, பருவ காலத்தில் உண்டாகும் மாற்றங்களை ஏற்படுத்துவதோடு, அவற்றைச் சினைக்கும் வரச்செய்கின்றன. இந்தச் சினைத் தருணம் என்பது 18 முதல் 19 மணி நேரம் வரை இருக்கும். இப்பருவச் சுற்றுக்காலம் 19 முதல் 20 நாட்களாகும். கிடாரிகளில் சினைத் தருணம் 15 மணி நேரம் வரைதான் நீண்டிருக்கும்.

எருமைகளில் சினைத்தருணம் சாதாரணமாகப் பசுக்களைவிட நீண்டு, 24 மணி நேரம் வரை இருக்கும். பருவச் சுற்றுக்காலம் 21 நாட்களாகவும் உள்ளது.

**பசுக்கள் சினைக்கு வந்திருக்கும்போது காணும் அறிகுறிகள்:**

சினைத் தருண அறிகுறிகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம் அவை—

1. சினைத் தருணத்திற்கு (heat) முன் காணும் அறிகுறிகள்.

2. சினைத் தருண அறிகுறிகள்

3. சினைத் தருணத்தின் பின் அறிகுறிகள்.

**சினைத் தருணத்திற்கு முன் காணும் அறிகுறிகள்:**

சினைத் தருணத்திற்கு 6 மணி முதல் 10 மணி நேரம் முன்னிருந்து கீழ்க்காணும் அறிகுறிகள் காணப்படும்.

1. மற்ற பசுக்களை முகரும்.

2. மற்ற பசுக்களின் மேல் தாண்டும்.

3. பெண் உறுப்பின் வெளிப் பகுதி ஈரமாகவும், சிறிது வீங்கியும் காணப்படும்.

இக்காலத்தில் பசுக்களை இனவிருத்தி செய்தல் பயன் தராது.

**'சினைத் தருண' அறிகுறிகள்:**

இது சினைத்தருணம் (heat) ஆரம்பித்து, 18 மணி முதல் 19 மணி நேரம் வரை இருக்கும். இக்காலத்தில்—

1. மாடுகள் அடிக்கடி கத்தும்.

2. காலையில் நேரத்திலேயே விழித்துக் கொள்ளும்.

3. மற்ற பசுக்களின் மேல் தாண்டும்.

4. மற்ற பசுக்களைத் தன்மேல் ஏற அனுமதிக்கும்.

5. துடிப்புடன் உணர்ச்சி வசப்பட்டிருக்கும்.

6. தீனி உட்கொள்ளாதிருக்கும்.

7. பால் உற்பத்தி கணிசமான அளவு குறைந்திருக்கும்.

8. அடிக்கடி சிறுநீர் கழிக்கும்.

9. வாலைச் சற்றுத் தூக்கிக் கொண்டிருக்கும்.

10. பெண் உறுப்பின் வெளிப்புறம் ஈரமாயும், வீங்கியும் சிவந்தும் காணப்படும்.

11. வழவழப்பான கண்ணாடி போன்ற திரவம் பெண் உறுப்பிலிருந்து வடியும்.

12. கண்மணிகள் கறுத்திருக்கும்.

**சினைத்தருண பின் அறிகுறிகள்:**

சினைத்தருணம் கடந்தபின், பசுக்களை மற்ற மாடுகள் தாண்டும்போது பசு நிற்காது. சிறிதளவு வழவழப்பான திரவ ஒழுக்கு, சினைத்தருணம் முடிந்து 10 மணி நேரம் வரையும் காணப்படும்.

**சினை ஏற்படுத்தச் சரியான நேரம்:**

பரிசோதனைகளின் மூலம் சினை சேர்க்கச் சரியான நேரம் சினைத் தருணம் ஆரம்பித்து 9 முதல் 24 மணி நேரமே என்று கருதப்படுகிறது.

**எருமைகளில் சினைக்கு வந்திருக்கும் அறிகுறிகள்:**

பொதுவாக எருமைகளில் பசுக்களைபோலச் சினை அறிகுறிகள் காணப் படுவதில்லையாதலால், இவற்றைச் சரியாக, உன்னிப்பாக கவனிக்காவிடில் சினைத் தருணத்தை நாம் தவறவிட நேரிடலாம்.

**பொதுவாக எருமைகளில் காணப்படும் அறிகுறிகள்:**

1. அமைதியற்றிருக்கும்.

2. பசுக்களைப்போல் கத்துதல் காணப்படாவிடினும், நீண்ட உறுமல் போன்ற ஒலி எழுப்பும்.

3. பால் உற்பத்தி கணிசமாகக் குறைந்திருக்கும்.

4. பெண் உறுப்பு வெளிப் பக்கம் சிவந்திருக்கும். வீங்கியிருத்தல், வழவழப்பான திரவ ஒழுக்கு போன்றவை பசுக்களை விடச் சற்றுக் குறைந்து காணப்படும்.

5. தீனி தின்னுதிருக்கும்.

6. பசுக்களைவிட அதிகமாக அடிக்கடி சிறுநீர் கழிக்கும்.

எருமைகளைச் சினை ஏற்படுத்தச் சரியான நேரம் சினைத்தருணம் ஆரம்பித்த 16 மணி நேரத்திலிருந்து 24 மணி நேரம் வரையிலான நேரமாகும்.

குறைந்த சதவிகித மாடுகள் கருத்தரிப்புக்குக் காரணம், கால்நடை வளர்ப்போரின் தவருன கவனிப்பே ஆகும். அவைகளில் சில—

1. சினைக்கு வந்திருப்பதைக் கவனியாது விட்டுவிடுதல்.

2. சரியான பதிவேடுகள் அல்லது குறிப்புகள் வைத்திருக்காமலிருத்தல்.

3. சினையா, இல்லையா என்பதைச் சோதனை செய்து அறியாதிருத்தல்.

4. சரியான நேரத்தில் கால்நடை மருத்துவரைக் கலந்தாலோசிக்காமலிருத்தல்.

ஆகவே, கால்நடை வளர்ப்பவர்கள் மிக உன்னிப்பாக மேற்சொன்ன அறிகுறிகளைக் கண்டுபிடித்து, சரியான நேரத்தில் மாடுகளைச் செயற்கைமுறைக் கருத்தரிப்பு செய்வதுடன், அவை பற்றிய குறிப்புகளையும் எழுதி வைத்தல் அவசியம்.



# பீங்கான் பொருள்கள் கண்காட்சி காண வாரீர் !

தமிழ்நாடு அரசின் பீங்கான் பொருள்கள் தயாரிப்பு நிறுவனம் (தமிழ்நாடு சிராமிக்ஸ் லிமிடெட்) உற்பத்தி செய்துள்ள 200-க்கும் மேற்பட்ட கலைப்பொருள்களின் கண்காட்சியை 3—7—1976 அன்று மாலை, சென்னை அரசினர் தோட்டத்தில் உள்ள சென்னை இராஜாஜி மண்டபத்தில், ஆளுநர் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் துவக்கி வைத்தார். இவ்விழாவிற்கு தமிழ்நாடு அரசின் தொழில்துறைச் செயலாளர் திரு. டி. என். சேஷன் அவர்கள் தலைமை தாங்கினுர்.

இந்தக் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ள எழில்மிகு பொருள்களில் சிறந்தவையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருள்களை உருவாக்கியவர்களுக்கு, ஆளுநர் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்களின் துணைவியார் திருமதி மீரு சுப்பிரமணியன் அவர்கள் பரிசுகளை வழங்கினுர்.

பீங்கான் பொருள்களின் கண்காட்சி 18—7—76 வரை தொடர்ந்து நடைபெறும். காலை 10 மணி முதல் இரவு 7 மணி வரை இக்கண்காட்சியைப் பார்வையிடலாம். கலையழகு மிகுந்த, வீட்டு உபயோகத்திற்குரிய பீங்கான் பொருள்களும் இக்கண்காட்சியையொட்டி விற்பனை செய்யப்படுகின்றன. எனவே இக்கண்காட்சியைக் காண வருமாறு பொது மக்களை அழைக்கின்ருேம்.

# வாழ்வு சிறக்க வளம்பெற சேமியுங்கள்

எங்களிடம் போடப்படும் வைப்புத் தொகை (Fixed Deposits) என்றைக்கும் பாதுகாப்பாய் இருக்கும். காரணம் எங்களது நிறுவனம் தமிழக அரசுக்குச் சொந்தமானது.
எங்களிடம் போடப்படும் வைப்புத் தொகை உங்களுக்கு நிறைய வட்டியை ஈட்டித் தருகிறது. அதனுல் உங்களின் வருவாய் விரைவில் கூடுகிறது.

| | ஓர் ஆண்டிலிருந்து இரண்டு ஆண்டுக்குள் | இரண்டு ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் | மூன்று ஆண்டிலிருந்து நாங்கு ஆண்டுகளுக்குள் | நான்கு ஆண்டும் அதற்கு மேலும் |
|---|---|---|---|---|
| வைப்புத்தொகைக்கு அளிக்கப்படும் வட்டிவிகிதம் | $11\frac{1}{2}$% | 12% | $12\frac{1}{2}$% | 13% |

விபரங்களுக்கு தயவு செய்து அணுகவும்:-
**தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம்**
(தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானது)
5, கிரீம்ஸ் ரோடு, ஆயிரம்விளக்கு, சென்னை-600 006

சுகவனேஸ்வர், ஐ.ஏ.எஸ்.
நிர்வாக இயக்குநர்.






# வேலை வாய்ப்பு அலுவலகங்களின் பணி


**ஏ. பிச்சை**
செயலாளர்
உடல் ஊனமுற்றோர்
மறுவாழ்வு
மாநில வாரியம்


"உலகத்திலேயே மகிழ்ச்சியான மனிதன் நான் தான்" என்ருர் பேரறிஞர் பெர்ஞட்ஷா. அதைக் கேட்டுக் கொண்டிருந்த நண்பர் திருப்பிக் கேட்டார்; "மற்றவர்களுக்குக் கிடைக்காத மகிழ்ச்சி உங்களுக்கு மட்டும் எப்படிக் கிடைத்தது" என்று. பெர்ஞட்ஷா பதில் பேசுகிருர். மனிதனுக்கு மகிழ்ச்சி வேண்டுமென்ருல், அவனுக்கு இரண்டு அடிப்படைத் தேவைகள் சரியாகப் பூர்த்தி செய்யப்படவேண்டும். ஒன்று; மனத்துக்குப் பிடித்த மனைவி இருக்கவேண்டும்; இரண்டு; தனது தகுதிக்கும், திறமைக்கும், விருப்பத்திற்கும் ஏற்ற தொழிலும் இருக்க வேண்டும். எனக்கு மனத்துக்குப் பிடித்த மனைவி இருக்கிருள். எனது விருப்பத்திற்கேற்ற தொழிலும் இருக்கிறது. "ஆகவே தான் மகிழ்ச்சியாக இருக்கிறேன்" என்ருர். பெர்ஞட்ஷாவின் கருத்திலிருந்து ஒரு உண்மை நமக்குப் புலப்படுகிறது. அதாவது மகிழ்ச்சிக்கு மனத்துக்குப்பிடித்தமனைவி; தகுதிக்குஏற்ற தொழில் என்பதாகும். மனத்துக்குப் பிடித்த மனைவியைத் தேடுவது தனிப்பட்டவர்களின் பொறுப்பாகும். ஆனுல் ஒவ்வொருவருக்கும் அவருடைய தகுதிக்கு ஏற்ற தொழிலை அளிப்பது ஒரு சேம நல அரசின் கடமையாக அமைகிறது. இக்கடமையின் அடிப்படையாகத் தான் அரசு வேலைவாய்ப்பு அலுவலகங்களின் மூலமும், அரசு அலுவலர் தேர்வு ஆணைக் கழகங்கள் மூலமும், முடிந்த அளவு தகுதிக்குத் தகுந்தாற்போல் வேலைகள் அளிக்கப்படுகின்றன.

"என் கடன் பணி செய்து கிடப்பதே"—என்பது ஆன்ருேர் வாக்காகும். ஆனுல் வேலை வாய்ப்பு அலுவலகங்களின் குறிக்கோள் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதாகும். அரசின் சில துறைகளில் சில பணிகளைச் செய்வதற்கு அரசின் விருப்பப்படி கட்டணம் வசூலிக்கிருர்கள். ஆனுல் வேலை வாய்ப்புத் துறையின் பணி இலவசமானது; பாரபட்சம் அற்றதும் ஆகும். "சரியான வேலைகளுக்கு சரியான நபர்களைப் பரிந்துரை செய்வதே" வேலை வாய்ப்புத் துறையின் இலட்சியம் ஆகும்.

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் ஏழு விதமான பணிகள் ஆற்றப்படுகின்றன. அப்பணிகளின் தன்மையையும் விவரங்களையும் இனி ஒவ்வொன்ருக விளக்கிச் சொல்ல விரும்புகிறேன்.

முதலாவதாக வேலை அளிக்கும் பணியின் கீழ் படித்தவர்கள், படியாதவர்கள், பட்டதாரிகள், ஆண்கள், பெண்கள், அனுபவமுள்ளவர், அனுபவமற்றவர்—ஆகிய வேலை வேண்டுவோரும், தாங்கள் ஏற்கெனவே பார்க்கும் பணியை விடச் சிறந்த பணி வேண்டுவோரும், வேலைவாய்ப்பு அலுவலகத்தில் சில விதிமுறைகளுக்கு உட்பட்டுப் பதிவு செய்யப்படுகிருர்கள். பதிவு செய்யப்பட்டவர்கள், அரசு விதிமுறைகளின்படியும், வரிசைப்படியும் வேலைக்குக் காலி இடங்கள் அறிவிக்கப்படுகின்ற பொழுது, பரிந்துரைக்கப்படுகிருர்கள். தற்காலிகப் பணிகள், நிரந்தரப் பணிகள், மத்திய அரசுப் பணிகள், மாநில அரசுப் பணிகள், தனியார் நிறுவனங்கள் சில அறிவிக்கும் பணிகள்-ஆகிய அனைத்திற்கும் காலியிடங்கள் அறிவிக்கப்படும்போது, தகுதியுடையவர்கள் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு பரிந்துரை செய்யப்படுகிருர்கள். பரிந்துரை செய்வதோடு வேலை வாய்ப்பு அலுவலகங்களின் பணி முடிகிறது. ஆட்களைத் தேர்ந்தெடுத்து நியமனம் செய்யும் முழுப் பொறுப்பும் சம்பந்தப்பட்ட நிறுவனத்தையே முழுமையாகச் சாரும்.

இவ்வாறு வேலை தேடுவோரின் பெயரைப் பதிவு செய்வதும், காலி இடங்களுக்குப் பரிந்துரைப்பதுமாகிய பணியை வேலை வாய்ப்பு அலுவலகங்கள் செய்கின்றன. இப்பணியை ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் உள்ள ஒரு மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் ஆற்றுகிறது. சில பெரிய மாவட்டங்களில், அவசியத்தையும் தேவையையும் உணர்ந்து அம்மாவட்டங்களில் குறிப்பிட்ட சில பகுதிகளுக்கென்று ஒரு துணை வேலைவாய்ப்பு அலுவலகமும் இயங்குகிறது. இத்தகைய துணை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் காஞ்சிபுரம், அம்பத்தூர், ஈரோடு, திண்டுக்கல், நாகப்பட்டினம், தூத்துக்குடி, மண்டபம், கஞ்சமலை ஆகிய இடங்களில் இயங்குகின்றன.

ஆனுல் சென்னையில் மட்டும் இந்த அமைப்பு மாறுபட்டு இயங்குகிறது. அதாவது மற்ற மாவட்டங்களில் மாவட்டத்திற்கு ஒரு வேலைவாய்ப்பு அலுவலகம் என்ருல், சென்னையில் மட்டும் ஐந்து வேலைவாய்ப்பு அலுவலகங்கள் இயங்குகின்றன. அவை:

1. பள்ளி இறுதி வகுப்புக்குக் குறைவாகப் படித்தோருக்கென்று ஒரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் வட சென்னையில் இயங்குகிறது.

2. பள்ளி இறுதி வகுப்புத் தேறியோருக்கும், புகுமுக வகுப்புத் தேறியோர், பட்டதாரிகள், தட்டச்சர் சுருக்கெழுத்தர் போன்ருேருக்கென்று ஒரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் நந்தனத்தில் இயங்குகிறது.

3. 'எம். ஏ., எம். எஸ். சி., எம். காம்., போன்ற முதுநிலைப் பட்டதாரிகளுக்கென்றும், பொறியியல், மருத்துவப் பட்டதாரிகளுக்கென்றும் ஒரு சிறப்பு வேலை வாய்ப்பு அலுவலகம் நந்தனத்தில் இயங்குகிறது.

4. தொழில் நுட்பக் கல்வி பயின்று அதில் சான்றிதழ் அல்லது டிப்ளமா பெற்றவர்கள், கைவினைஞர்கள் ஆகியோருக்கென்று ஒரு மாவட்ட வேலை வாய்ப்பு

அலுவலகம் (தொழில் பயின்றோர்) நந்தனத்தில் செயல்படுகிறது.

5. உடல் ஊனமுற்றோருக்கென்று ஒரு சிறப்பு வேலை வாய்ப்பு அலுவலகம் நந்தனத்தில் இயங்கி வருகிறது.

தமிழக அரசின் வேலைவாய்ப்புத் துறை ஆண்டுதோறும் சுமார் 35,000 பேர்களை வேலையில் அமர்த்துகிறது.

இவை தவிர, சென்னை, மதுரை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் பயிலும் மாணவர்களுக்குத் தொழில் முறை வழிகாட்டவும், வேலைவாய்ப்பு அளிக்கவும் 'பல்கலைக் கழக வேலைவாய்ப்பு, தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையங்கள்'' இயங்கி வருகின்றன.

**தொழில் முறை வழிகாட்டும் பணி**

'எண்ணித் துணிக கருமம்' என்பது பழங்காலத் தமிழ்மொழி. ஆனால் இது எக்காலத்திற்கும் பயன்படும் பழமொழி ஆகும். எச்செயலைச் செய்தாலும், நன்கு ஆராய்ந்து, சிந்தித்துச் செயல்பட ஆரம்பிக்க வேண்டும். அதே போல் வேலை தேடும் பிரச்சினையிலும், முன்னதாகச் சிந்தித்து, திட்டமிட்டு முடிவெடுக்க வேண்டும். இன்றைய இளைஞர்கள் வேலை தேடும் பிரச்சினையில் முன்னதாகத் திட்டமிட்டு முயற்சிக்க வேண்டும். அப்படி முயன்றால் பிரச்சினை சுலபமாகத் தீர வாய்ப்புண்டு. இளைஞர்கள் வேலை தேடும் பிரச்சினையில் முன்னதாகத் திட்டமிடுவதற்கு அவர்கள் சரியான முறையில் வழிகாட்டப்பட வேண்டும். அதற்கு இன்றைய பொருளாதாரச் சூழ்நிலை, வேலை நிலவரம், தேவையுள்ள வேலைகள், பணி பயிற்சி பற்றிய தகவல்கள் ஆகியவை பற்றிய விவரங்கள் இளைஞர்களுக்கு வழங்கப்பட்டு, அவர்களது ஈடுபாட்டிற்கு ஏற்ற தொழிலைத் தேர்ந்தெடுக்க அவர்கள் சரியாக வழிகாட்டப்பட வேண்டும்.

இவ்வாறு வழிகாட்டுவதற்காகவும், வேலைபற்றிய விவரங்களை வழங்குவதற்காகவும் ஒவ்வொரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலும், தொழில் முறை வழிகாட்டும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் நியமிக்கப்பட்டு, பணி புரிந்து வருகிறார். இந்த அலுவலர் வேலை வேண்டி அலுவலகம் வருவோரைக் கூட்டமாகச் சந்தித்து அறிவுரை வழங்குகிறார். வேண்டுவோருக்குத் தனித்தனியாக பணி, பயிற்சி பற்றிய விவரங்களைத் தருகிறார். அவர் ஒருவருடைய விருப்பு, வெறுப்பு, ஈடுபாடு, திறமை, பொருளாதாரச் சூழ்நிலை ஆகியவற்றை ஆராய்ந்து அவருக்குப் பொருத்தமான துறை, பணி, பயிற்சி ஆகியவற்றைத் தேர்ந்தெடுக்க ஆலோசனை வழங்குகிறார். பள்ளி, கல்லூரிகளுக்குச் சென்று, மாணவர்களைச் சந்தித்து மாணவர்கள், தொழிலைத் தேர்ந்தெடுக்க வேண்டிய பிரச்சினையை அணுகும் முறையையும், வழியையும் விளக்குகிறார். கருத்தரங்கு, பொருட்காட்சி, மாணவர்—வேலையளிப்போர் சந்திப்பு, பெற்றோர்—ஆசிரியர் கழகக் கூட்டங்கள் ஆகியவற்றின் மூலம் மாணவர்களுக்குப்பலவிதப் பணிகள், பயிற்சிகள் பற்றிய விவரங்கள் தந்து விளக்குகிறார்; வழிகாட்டுகிறார். அதன் மூலம் தங்கள் வருங்கால வேலைப் பிரச்சினையைச் சுலபமாகத் தீர்க்க உதவுகிறார். இன்றைய இளைஞர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரும் தொழில் முறை வழிகாட்டும் வேலைவாய்ப்பு அலுவலரை அணுகி, தொழில் பற்றிய விவரங்களைத் தெரிந்து, அதன்பின் வேலைக்கு முயற்சிக்குமாறு நான் அன்போடு வேண்டுகிறேன்.

**வேலை நிலவரத் தகவல் பணி.**

வேலை நிலவரத் தகவல் திட்டத்தின்படி தமிழகத்தில் உள்ள வேலை அளிப்போரிடமிருந்து மூன்று மாதத்திற்கு ஒரு முறை வேலை நிலவரத் தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. பொதுத் துறையின் எல்லா நிறுவனங்களும், குறைந்த அளவு 10 பேர்களையாவது வேலைக்கு அமர்த்தியுள்ள தனியார் நிறுவனங்களும் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.



தமிழகத்தில் மொத்த வேலை அளவு வளர்ந்துள்ளதா, குறைந்துள்ளதா, தேங்கியுள்ளதா என்பதை அறியவும், எழுந்த காலி இடங்களின் எண்ணிக்கை, அவை நிரப்பப்பட்ட விதம், மனிதசக்தி, பற்றாக்குறை போன்ற விவரங்களும் சேகரிக்கப்படுகின்றன. சேகரிக்கப்பட்ட தகவல்கள் பகுக்கப்பட்டு, ஆராயப்பட்டு பல பயனுள்ள முடிவுகள் எடுக்க அரசினரால் பயன்படுத்தப்படுகின்றன.

**தொழில்கள் பற்றி ஆராய்வதும், பகுத்து ஆய்தலுமான பணி**

பலவிதத் தொழில்கள் மற்றும் பணிகள் பற்றிய விவரங்கள் இத்துறையின் ஒரு பிரிவால் சேகரிக்கப்பட்டு, பகுத்து ஆராயப்படுகின்றன. அவ்விவரங்கள் படிப்போருக்கும், வேலை தேடுவோருக்கும் பயன் அளிக்கும் வகையில் சிறு கையேடுகளாகத் தயாரிக்கப்பட்டு, இலவசமாகவும் வழங்கப்படுகின்றன. இதனால் மாணவர்களும், வேலை தேடுவோரும், இளைஞர்களும் பயனடைகின்றனர். இப்பிரிவால் வெளியிடப்படும் நூல்களும் கையேடுகளும் வேலை தேடுவோருக்கு வேலை தேடும் முயற்சியில் ஒரு வழிகாட்டியாக அமைகின்றது.



**உடல் ஊனமுற்றோருக்கு வேலை மற்றும் பயிற்சி அளிக்கும் பணி.**

உடல் ஊனமுற்றோருக்குப் பயிற்சி அளித்து அல்லது வேலை அளித்து அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது வேலை வாய்ப்பு அலுவலகங்களின் முக்கியப் பணிகளின் ஒன்றாகும். சென்னையில் உள்ள உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகமும், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களும் உடல் ஊனமுற்றோருக்கு வேலை அளித்து, அவர்களது இருண்ட வாழ்வை ஒளிமயமானதாக ஆக்கப் பாடுபட்டு வருகின்றன. இத்துறை ஆண்டுதோறும் சுமார் 400 உடல் ஊனமுற்றவர்களைப் பணியில் அமர்த்தி வருகிறது. உடல் ஊனமுற்றோரின் நலனைப் பாதுகாக்கவும், அவர்களுக்கு அளிக்கப்படும் மறுவாழ்வுப் பணியை விரைவுப்படுத்தவும் ''உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வு மாநில வாரியம்'' ஆரம்பிக்கப்பட்டு பணி புரிந்து வருகிறது.

**இலங்கையிலிருந்தும், பர்மாவிலிருந்தும் தாயகம் திரும்பியோருக்கு மறுவாழ்வு அளிக்கும் பணி**

இலங்கையிலிருந்தும், பர்மாவிலிருந்தும் தாயகம் திரும்பியோருக்கு மறுவாழ்வு அளிக்கும் பணியைத் தமிழக அரசின் மறுவாழ்வுத் துறையோடு சேர்ந்து வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வெற்றிகரமாகச் சமாளித்து வருகின்றன. அவர்களின் மறுவாழ்வுக்காகப் பல திட்டங்கள் தீட்டி, அவர்கள் நேரடியாக வேலையில் சேர்வதற்கும், பயிற்சி அளித்து அதன் பின் வேலையில் அமர்த்துவதற்கும் ஆகிய பணியினை இத்துறை ஆற்றி வருகிறது. இலங்கையிலிருந்தும், பர்மாவிலிருந்தும் தாயகம் திரும்பியவர்களில் சுமார் 800 பேருக்கு ஆண்டுதோறும் வேலைவாய்ப்பு வழங்கி வருகிறது.

**தமிழ்நாடு சிறப்பு வேலை பழகுநர் பயிற்சித் திட்டம்**

தொழில் கல்வி பயின்ற பட்டதாரிகள், டிப்ளமோ பெற்றவர்கள், கைவினைஞர்கள் - ஆகியோருக்கு, பணியில் முன் அனுபவம் இல்லாததால் வேலை கிடைப்பது கடினமாகிறது. அவர்களுக்குத் தகுந்த வேலைப் பயிற்சி அளிப்பதன் மூலம் அனுபவத்தைப் பெறுகிறார்கள். அந்த அனுபவம் அவர்களுக்கு வேலை கிடைக்க உதவுகிறது. இத்தகைய பயிற்சி அளித்து அதன் மூலம் பொறியியல் கல்வி பயின்றவர்களின் வேலைவாய்ப்பைப் பெருக்கும் நோக்கத்துடன், ''தமிழக அரசு சிறப்பு வேலை பழகுநர் பயிற்சித் திட்டத்தை'' இத்துறை செயல்படுத்தி வருகிறது. இதுவும் வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பணிகளில் ஒன்றாகும்.

''எல்லாருக்கும் வேலை; வேலை இல்லை என்போரே இல்லை'' என்ற நிலை ஏற்பட வேண்டும் என்பதே எல்லாரின் குறிக்கோளும் ஆகும். ஆனால் அக்குறிக்கோளை வேலைவாய்ப்பு அலுவலகங்களால் மட்டுமே அடைந்து விட முடியாது. அதற்கு வேலை வாய்ப்புகள் புதிதாக நிறைய உருவாக்கப்பட வேண்டும். அது நாட்டின் பொருளாதாரச் சூழ்நிலை, தீட்டப்படும் திட்டங்கள், திறக்கப்படும் தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றைப் பொறுத்தது ஆகும். இவை எல்லாம் வேலை வாய்ப்பு அலுவலகங்களின் எல்லைக்குள் வருவதில்லை.

உண்மையில் வேலை அளிக்கும் பிரச்சினை என்பது மலை போன்றது. அதில் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் ஆற்றி வரும் பணி கடுகளவு போன்றதுதான். ''நீ செய்கின்ற செயல் எது என்பது கேள்வியல்ல; செய்யும் செயலை மனத்தூய்மையுடனும், முழுமையாகவும் செய்து முடிப்பது என்பது கடவுளுக்குச் செய்யும் பணிவிடையாகும்'' என்கிறார் மாசற்ற மாணிக்கம், மாற்றுக்குறையாத தங்கம் காந்தி அடிகள். அதே அடிப்படையில் தான் வேலை வாய்ப்பு அலுவலகங்கள் தங்களின் சிறிய பணியைக் கடமை உணர்வோடு ஆற்றி வருகின்றன. அப்பணியை இன்றைய இளைஞர்களும், மாணவர்களும், வேலை தேடுவோரும் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்! அது அவர்களுக்கும் நன்மை! நாட்டுக்கும் நன்மை பயக்கும்! !

**(நன்றி: சென்னை வானொலி நிலையம்.)**

## குண்டாறு நீர்த்தேக்கத் திட்டத்துக்கு திட்டக் குழுவின் அனுமதி

தமிழ்நாட்டின் குண்டாறு நீர்த்தேக்கத் திட்டத்துக்கு திட்டக் குழு அனுமதி வழங்கியுள்ளது. சாத்தனூர் நீர்த்தேக்க அணைக் கட்டுத் திட்டத்தின்கீழ் வலதுபுறக் கால்வாய் வெட்டுவதற்கும் அது அனுமதி அளித்துள்ளது.

குண்டாறு நீர்த்தேக்கத் திட்டத்தின்படி, குண்டாறு நதிக்குக் குறுக்கே 351.50 மீட்டர் நீளமும், 14.12 மீட்டர் உயரமும் கொண்ட ஓர் அணை கட்டப்படும். குண்டாறு தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டத்திலுள்ள சிற்றாறின் உபநதியாகும். சிற்றாறு, தாமிரபரணி ஆற்றின் உபநதியாக உள்ளது. மழைக்காலத்தில் வீணாகச் செல்லும் வெள்ளத்தை தேக்கி, நீர்ப்பாசனத்துக்குப் பயன்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதனால், தற்போதுள்ள 454.40 எக்டேர் ஒருபோகச் சாகுபடி ஆயக்கட்டுக்கு உறுதியான பாசனவசதி கிடைக்கும். மொத்தம் 12 ஏரிகள், 6 அணைக் கட்டுகள் ஆகியவற்றிலிருந்து தற்போது நிலையற்ற நீர்ப்பாசன வசதி கிடைக்கிறது. மேலும் 39.69 எக்டேர் நிலத்தை இருபோகச் சாகுபடிக்கு ஏற்றதாக மாற்றவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு 58.3 இலட்சம் ரூபாய் செலவாகும். இதனால் 908 எக்டேர் நிலத்துக்கு ஆண்டுதோறும் நீர்ப்பாசனம் கிடைக்கும். இத்திட்டம் 200 சதவிகித நீர்ப்பாசனத்திறன் கொண்டிருக்கும்.

1957-58-ல் பொன்னியாற்றுக்குக் குறுக்கே சாத்தனூர் அணை கட்டப்பட்டது. அந்த அணையின் இடதுபுறக் கால்வாய் 8,498 எக்டேர் நிலப்பரப்புக்குப் பாசனவசதி அளிக்கிறது. அதற்கும் கீழே, திருக்கோவிலூர் மற்றும் இதர அணைக்கட்டுக்களின் கீழ் 10 ஆயிரம் எக்டேர் பரப்புக்குப் பழைய ஆயக்கட்டு ஒன்றும் உள்ளது.

சாத்தனூர் அணைக்கட்டின் வலதுபுறக் கரையில் 28 கிலோமீட்டர் நீளத்துக்குப் புதிய கால்வாய் ஒன்றை வெட்டுவதற்கு இப்பொழுது உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தக் கால்வாய், புதிதாக 3,648 எக்டேர் நிலப்பரப்புக்கு பாசனவசதி அளிக்கும்; மேலும் தற்போது 34 ஏரிகளிலிருந்து நிலையற்ற நீர்ப்பாசனம் பெறும் 1,249 எக்டேர் நிலப்பரப்பு உறுதியான பாசன வசதி பெறும். நீர்ப்பாசனம் பெறும் இந்த ஆயக்கட்டுப் பகுதி, தென் ஆர்க்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டத்தில், வறட்சியால் பாதிக்கப்பட்ட, பின்தங்கிய பகுதியில் அமைந்துள்ளது.

வலதுபுறக் கால்வாயை வெட்டுவதற்குச் சுமார் 3 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவாகும். 100 சதவிகித நீர்ப்பாசனத் திறன் கொண்ட இத்திட்டம், ஆண்டுதோறும் 4,895 எக்டேர் நிலப்பரப்புக்கு நீர்ப்பாசனம் அளிக்கும்.

# அஞ்சலக வங்கியின் மாபெரும் பரிசுத் திட்டம்

**ஆண்டுக்கு இருமுறை**

**குலுக்கல்கள் ஜனவரியிலும் ஜூலையிலும் நடைபெறும்**

**ரூ. 20½ இலட்சத்திற்கு**
**11,116 பரிசுகள்**

*ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட 11,116 பரிசுகள் உண்டு.*

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. | 1,00,000 |
| 5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50,000 |
| 10 மூன்றும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 20,000 |
| 100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 5,000 |
| 1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 500 |
| 10,000 ஆறும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50 |

*ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.*

*உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெறாதவர்க்கும் அளிக்கப்படும்.*

*விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.*

**இயக்குநர்,**
**தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,**
**சென்னை-600 002.**


# கோவை மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையின் பணிகள்

ஏழை எளியோர் ஏற்றம் பெற்றிடவும், நடுத்தர மக்கள் நல்வாழ்வினை எய்திடவும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் தரமான வாழ்வினைக் கண்டிடவும், மாணவ—மாணவியர் ஒளிமயமான எதிர்காலத்தை அடைந்திடவும் வழி செய்கின்ற வகையில் அமைந்துள்ளது நமது பிரதமர் அவர்களின் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டம்.

இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தின் அனைத்துப் பலன்களும் எல்லா வகையிலான மக்களுக்கும் எளிதில் கிடைத்திடும் வகையில் அரசினுடைய அனைத்துத் துறைகளும் அயராது பாடுபடுகின்றன — முனைந்தும் செயல்படுத்தி வருகின்றன. இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதில் கூட்டுறவுத் துறை பெரும் பங்கினை மேற்கொண்டு சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது.

**கூட்டுறவுத் துறையின் பங்கு:**

''இருபது அம்சப் பொருளாதார திட்டங்களைச் சார்ந்த 'இன்றியமையாப் பொருட்களின் விலைகளைக் குறைத்தல்', 'தரமான துணிகளைக் கட்டுப்பாட்டு விலையில் பொது மக்களுக்கு வழங்குதல்', 'மாணவர் விடுதிகளுக்குத் தேவையான இன்றியமையா உணவுப் பொருட்களைச் சலுகை விலையில் விநியோகித்தல்', 'மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் மற்றும் இதரப் பொருட்களைக் கட்டுப்படுத்தப்பட்ட விலையில் வழங்குதல்'' என்பனபோன்ற திட்டங்களை நிறைவேற்றுவதில் கூட்டுறவுத் துறை உயர் நிலையான பங்கினை மேற்கொண்டு வருகின்றது.

இத்துறையின் கீழ் செயல்பட்டு வருகின்ற கூட்டுறவுச் சங்கங்கள் இது வரையில் போதிய அளவில் சாதனைகளைக் கண்டிருந்த போதிலும், தொடர்ந்து இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தில் பெரும் பங்கு கொண்டு செயலாற்றிடத் தகுந்த நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றன. தமிழகத்தில் கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்களில் இதுவரை கூட்டுறவுச் சங்கங்கள் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டங்களை நிறைவேற்றுவதில் —எடுத்த— எடுத்து வருகின்ற நடவடிக்கைகள், செயல் முறைகள் போன்றவைகளை இங்குக் காண்போம்!

**வேளாண்மைத் தொழிலுக்குக் கடனுதவி:**

வேளாண்மைத் தொழில் வளர்ச்சி பெற்றால்தான் நாடு வளமடையும் என்பதனை நன்கு உணர்ந்து, வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக விவசாயிகளுக்கு குறுகிய காலக் கடன், நடுத்தரக் காலக் கடன் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. கோவை மாவட்டத்திற்கு 1975—76ஆம் ஆண்டிற்கான மொத்தக் கடனுதவித் தொகை ரூ. 1,020 இலட்சம் ஆகும். இதில் குறுகிய காலக் கடன் தொகை ரூ. 950 இலட்சமும், நடுத்தரக் காலக் கடனுதவி தொகை ரூ. 70 இலட்சமும் ஆகும். 1975—76-ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடனாக வழங்கப்பட்ட உதவித் தொகை மட்டும் ரூ. 930.37 இலட்சமாகும். இதில் சிறு விவசாயிகள், மிகச் சிறு விவசாயிகள், நிலமற்ற — குத்தகையாகப் பயிர் செய்வோர்களுக்கென வழங்கப்பட்ட குறுகிய காலக் கடன் தொகை ரூ. 142.48 இலட்சமாகும்.

வழங்கப்பட்டு வருகின்ற கடனுதவித் தொகைகளை அதிகரித்து, வேளாண்மைத் தொழிலுக்கு மேலும் ஊக்கம் தர வேண்டும் என்பதற்கென 1976—77—ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடனாக ரூ. 1,100 இலட்சமும், நடுத்தரக் காலக் கடனாக ரூ. 70 இலட்சமும் வழங்கத்திட்டமிடப்பட்டுள்ளது. இதில் சிறு விவசாயிகள், மிகச் சிறிய விவசாயிகள், நிலமற்ற குத்தகைதாரர்களுக்கென குறுகிய காலக் கடனாக ரூ. 210 இலட்சமும், நடுத்தரக் காலக் கடனாக ரூ. 10 இலட்சமும் வழங்கப்படும்.

**நகை மீதான கடனுதவித் திட்டம்:**

பொருள் உற்பத்தி மற்றும் நுகர் காரணங்களுக்கென மக்களுக்கு நகை மீதான கடனுதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. நகராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள கூட்டுறவு நகர வங்கிகள்; நத்தியக் கூட்டுறவு வங்கியின் கிளைகள், வேளாண்மைக் கடன் வங்கிகள், மற்றும் தெரிந்தெடுக்கப்பட்ட கிராமக் கூட்டுறவுகளுடன் சங்கங்கள் போன்றவைகள் தற்பொழுது நகைகளின் மீதான கடன் உதவிகளைச் செய்து வருகின்றன. இவ்வாறு வழங்கப்பட்டு வருவது இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தின் நேரடி விளைவு எனலாம்.

இவ்வகையில் வழங்கப்படும் கடன் தொகைகள் சீராக வழங்கப்பட வேண்டும் என்பதற்காகக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், கடன் வழங்குகின்ற எல்லாக் கூட்டுறவு நிலையங்களுக்கும் நகை மீதான கடன்களைப் பரவலாக வழங்க வேண்டுமென அறிவுறுத்தியுள்ளார். அதிக அளவிலான மக்களுக்கு இத்தகைய கடன் உதவிகளை வழங்க வேண்டுமென்பதற்காகத் தனிநபர் ஒருவர் நகை மீது பெறுகின்ற அதிகபட்சக்கடன் தொகை ரூ. 1,000 எனக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வகையில் இம்மாவட்டத்தில் ஏறத்தாழ ரூ. 316.60 இலட்சம் ரூபாயினை கூட்டுறவுச் சங்கங்கள் 1975—

76-ஆம் ஆண்டு வழங்கியுள்ளது. மேலும் ரூபாய் 348.30 இலட்சம்.

தொகையினை, 12 கூட்டுறவு நகர் வங்கிகள், 15 கூட்டுறவு வங்கிக் கிளைகள், 3 வேளாண்மைக் கடன் வங்கிகள் மூலம் நகைகள் மீது கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மலைப் பகுதி, பிற்பட்ட பகுதிகளில் வாழ்கின்ற நலிவுற்ற சமுதாயத்தினருக்கு இந்த வகைக் கடன்கள் வழங்குவதில் தனிக் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. முழு அளவில் சிறுவிவசாயிகளும், மிகச்சிறு விவசாயிகளும் இத்திட்டத்தில் பங்கு பெறத் தகுந்த வழி வகைகளும் செய்யப்பட்டுள்ளன.



**நுகர்வோர் பயன் பெற்றிட....**

நுகர்வோர் நலன்களைப் பாதுகாத்திடவும், அவர்களுக்குத் தேவையான பொருட்களின் விலைகளை நிலைப்படுத்தி, அவைகளைச் சீராக விநியோகித்திடவும் தேவையான ஏற்பாடுகளை இத்துறை மேற்கொண்டுள்ளது. இப்பணியில் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் இன்றியமையாத பங்கினை ஏற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

நுகர்வோர்கள் தக்க பலன்களைப் பெற்றிடுவதற்கென கோயம்புத்தூர் மாவட்டத்தில் 632 பலதரப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களால் 726 நியாய விலைக் கடைகள் இயங்குகின்றன. இவைகள் அனைத்தும் நியாய விலையில் பொருட்களை நுகர்வோருக்கு வழங்கி வருகின்றன. பிரதமரின் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 1976-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரை விற்பனையான இன்றியமையாப் பொருட்களின் மதிப்பு ரூ. 8,64,32,262.00 ஆகும்.

கூட்டுறவுச் சங்கங்களால் செயல்படுத்தப்படும் நியாய விலை கடைகளோடு கோவையில் 121 தனியார் உணவுப் பங்கீட்டுக் கடைகளும் செயல்படுகின்றன. இவைகளையும் கோவையிலுள்ள 23 கூட்டுறவுச் சங்கங்களுடன் இணைத்திடுவதற்கான ஏற்பாடுகளும் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தவிர, நுகர்வோரின் நலனுக்கென நவீன திட்டம் ஒன்றும் வகுக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் நகரின் மக்கட் தொகையினைக் கணக்கில் கொண்டு — அதாவது 2,000 குடும்பங்களுக்கு ஒரு கடை என ஏற்படுத்தி நுகர்வோருக்குத் தேவையான பொருட்களை வழங்கிடுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி கோவை நகரின் மக்கள் தொகை 4 இலட்சமாகும். இந்த வகையில் மொத்தம் 40 கடைகள் அமைக்க வேண்டியுள்ளது. தற்பொழுது 28 சில்லறைக் கடைகள் உள்ளன. இத்துடன் இன்னும் 12 கடைகள் ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு கடைக்கும் ரூபாய் 45,000 வரை நிதி உதவி அளித்திட அனுமதி வழங்குமாறு சென்னைக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்குப் பரிந்துரை ஒன்றும் அனுப்பப்பட்டுள்ளது.

**மாணவர் கூட்டுறவு விற்பனை நிலையம்:**

மாணவச் சமுதாயத்தினருக்குத் தேவையான உதவிகளை நல்கிடுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் கூட்டுறவுத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாணவர்களுக்கென ''மாணவர் கூட்டுறவு விற்பனை நிலையங்களை'' உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் ஆகிய அனைத்திலும் அமைத்து அவர்களுக்குத் தேவையான பொருட்களைச் சேமித்து, நியாயமான விலையில் வழங்கிட வகை செய்யப்படுகின்றன.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் 261 உயர்நிலைப் பள்ளிகளும், 28 கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. தற்பொழுது 41 உயர்நிலைப் பள்ளிகளிலும், 8 கல்லூரிகளிலும் 'மாணவர் கூட்டுறவு விற்பனை நிலையங்கள்' செயல்படுகின்றன. இன்னும் 220 உயர்நிலைப் பள்ளிகளிலும், 20 கல்லூரிகளிலும் இத்தகைய விற்பனை நிலையங்கள் ஏற்படுத்தப்படவிருக்கின்றன.

தேசிய பாட நூல்களை விநியோகிக்கின்ற பொறுப்பினையும் கூட்டுறவுச் சங்கங்களிடம் அரசு ஒப்படைத்துள்ளது. கோவை மாவட்டத்தில் 10 வட்டங்களைச் சார்ந்த கூட்டுறவு மொத்த மற்றும் சில்லறை விற்பனைச் சங்கங்கள் 'மொத்த விற்பனைக் கூடங்களாகச்' செயல்படுகின்றன. சிந்தாமணி கூட்டுறவுச் சிறப்பு அங்காடியும் இப்பணியில் ஈடுபட்டுச் சிறப்புற செயலாற்றி வருகின்றது.

தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் குறிப்பிட்டுள்ள விலைகளின் பாடநூல்களை இச்சங்கங்கள் விற்பனை செய்ய வகை செய்யப்பட்டுள்ளது. பாடநூல்களை மட்டும் இச்சங்கங்கள் விநியோகம் செய்யவில்லை; கட்டுப்பாட்டு விலையில் நோட்டுப் புத்தகங்களை விநியோகம் செய்திடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**அரசுத் தொழில் நிறுவனங்கள் :**

பொதுமக்கள், மாணவர்களுக்கு மட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டால் போதாது. தொழிலகங்களுக்கும், தொழிலாளர்களுக்கும் உதவிடும் வகையில் அவைகள் செயல்பட வேண்டும் என்பதனை நன்கு உணர்ந்து, அரசு தொழில் நிறுவனங்களிலும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்திட தீர்மானித்தது. இவ்வகையில் 200,





அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றும் தொழில் நிறுவனங்களில் இவ்வகைச் சங்கங்கள் நிறுவப்படுகின்றன. கோவை மாவட்டத்தில் தற்பொழுது 143 தொழில் நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இவைகளில் 87 தொழில் நிறுவனங்களில் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டு விட்டன. மீதம் உள்ள 56 நிறுவனங்களிலும் இச்சங்கங்கள் நிறுவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களைப் பல்கலைக் கழகத்திலும், பட்டப் படிப்புக் கல்லூரிகளிலும் வலுவுள்ளதாகவும், வளர்ச்சி பெறுவதாகவும் அமைத்திட, நடவடிக்கைகள் இத்துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பரவலான திட்டங்கள் வாயிலாக திறமையாகவும், முனைப்பாகவும் மாணவர்களுக்கு நுகர்பொருள்களை வழங்கிட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. பல்கலைக் கழகம், பட்டப் படிப்புக் கல்லூரியின் உள்ளேயே கூட்டுறவு மொத்த விற்பனைக் கூடங்கள், மாவட்ட விற்பனை மற்றும் விநியோகச் சங்கங்கள் போன்றவைகளின் கிளைகளை அமைத்திட அரசு உத்தேசித்துள்ளது. இந்தத் திட்டம் ஒரு இலட்சம் மக்கட் தொகைக்கு மேற்பட்ட நகரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தற்பொழுது கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு போன்ற நகரங்களில் இவைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாணவர்களுக்குப் பயனளிக்கின்ற வகையில் நுகர்பொருள்கள் கலுகை விலையில் வழங்கப்படுகின்றன. இவைகளில் பெரும்பாலானவை உணவு தானியங்கள், எண்ணெய் வகைகள், சோப்புகள், காய்கறிகள், வாசனைப் பொருட்கள், வீட்டிற்குரிய சாமான்கள், புத்தகங்கள், எழுது பொருள்கள், துணி வகைகள் போன்றவைகளாகும். கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர் ஆகிய கல்லூரி மாணவர்களுக்குச் சிந்தாமணி, திருப்பூர், ஈரோடு கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கங்கள் நுகர் பொருட்களை வழங்கி வருகின்றன. இவ்வகையில் ஏறத்தாழ 10,376 மாணவர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

சிந்தாமணி கூட்டுறவுச் சிறப்பு அங்காடி இப்பணியில் பெரிதும் ஈடுபட்டு சிறப்புற பணியாற்றி வருகின்றது. மாணவர்கள் நலனில் அதிக அக்கறையும், ஆர்வமும் கொண்டு விடுதிகளுக்கு ஒரு மாதத்திற்குத் தேவையான நுகர் பொருட்களையும், உணவுப் பொருட்களையும் வட்டியில்லாமல் கடனுக்கு வழங்குகிறது என்பது குறிப்பிடத் தக்கதாகும். பொருட்கள் விநியோகத்திற்கான போக்குவரத்துச் செலவையும் பெற்றுக் கொள்வதில்லை. காய்கறி போன்றவைகளை மொத்த விற்பனை விலைக்கு வழங்குகின்றது. மாணவர்களுக்கான புத்தகங்களுக்கு 5 முதல் 10 சதவிகிதம் வரை கழிவும் தரப்படுகின்றன.

தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், கோயம்புத்தூர் கூட்டுறவு மற்றும் விற்பனைச் சங்கத்தையும், மற்ற 9 கூட்டுறவுச் சங்கங்களையும் உபரியாக விளைந்துள்ள மாவட்டங்களில் நெல் கொள்முதல் செய்து கொள்வதற்கான அனுமதியையும் வழங்கியுள்ளது. இவ்வகையில் 20,900 டன் நெல் கொள்முதல் செய்து கொள்ளலாம். தற்பொழுது தஞ்சாவூர், தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு போன்ற மாவட்டங்களிலிருந்து ஏறத்தாழ 7,739 மெட்ரிக் டன்கள் வரை நெல் கொள்முதல் செய்யப்பட்டு உள்ளது.

பொதுமக்கள் பயன் பெறுகின்ற வகையில் இச்சங்கங்கள் குறைந்த விலையில் அரிசியை விற்பனை செய்கின்றது. நுகர் பொருள் வாணிபக் கழகச் சில்லறை அங்காடிகளைக் காட்டிலும் குறைந்த விலையில் விநியோகம் செய்கின்றன. நுகர்பொருள்கள் வாணிபக் கழகச் சில்லறை அங்காடிகளில் முதல் ரக அரிசி கிலோ ரூ. 2.00 மோட்டா ரகம் கிலோ ரூ. 1.60 என வழங்கப்படுகின்றன. ஆனால் இச்சங்கங்கள் முதல் ரகம் கிலோ ரூ. 1.65, மோட்டா ரகம் கிலோ ரூ. 1.50 ஆக விநியோகம் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

இவை தவிர, கட்டுப்பாட்டு விலையில் தரமான துணிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. மிகச் சிறிய கிராம மக்களுக்கும் துணிமணிகள் எளிதில் கிடைத்திடுவதற்கான விநியோக முறை பரவலாக்கப்பட்டுள்ளது. மாவட்டம் முழுவதிலுமுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் சில்லறை விற்பனை நிலையங்களாக நியமிக்கப்பட்டுள்ளன.

கிராமப் புறங்களில் 584 சில்லறை விற்பனை நிலையங்களும் நகர்ப்புற பகுதிகளில் 43 சில்லறை விற்பனை நிலையங்களும் செயல்படுகின்றன. 30-4-7[illegible] வரை ஏறத்தாழ ரூ. 64.1[illegible] இலட்சம் மதிப்புள்ள துணிகள் பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. கட்டுப்பாட்டு விலையில் துணிகளை விநியோகம் செய்வதற்கென தமிழ் நாடு அரசு இம்மாவட்டத்திலுள்ள நிலையங்களுக்கு ரூ. 2,04,40[illegible] வரை நிதியும் ஒதுக்கியுள்ளது.

இவ்வாறு பெருமைப்படத்தக்க வகையில் கோவைமாவட்ட மக்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பல்வேறு பயன்மிகு பணிகளைச் செய்து வருகின்றன.

— ஆயிரராமன்




# குறைந்த விலையில் சத்துணவு




காலைச் சிற்றுண்டி என்று 10 இட்டிலிகள் அல்லது 6 தோசைகளை நம்மில் பலர் சாப்பிட்டு வருகிறோம். அது மனத்திற்கு மகிழ்ச்சியைத் தருமே தவிர, உடலுக்கு நலத்தையோ வளத்தையோ தரும் என்று சொல்ல முடியாது. சத்துள்ள உணவை நாம் உண்ண வேண்டும் என்பதை எக்காலத்திலும் மறக்கக் கூடாது. அது மட்டுமல்ல, சத்துள்ள உணவு குறைந்த செலவிலும் உருவாக்கப்பட வேண்டும் என்பது நினைவிருக்கட்டும். அத்தகைய உணவு வகைகள் சிலவற்றைப் பார்ப்போம்.

**கேழ்வரகுக் கஞ்சி அல்லது ராகிக் கஞ்சி**

**தேவையான பொருள்கள் :**

கேழ்வரகு மாவு — 85 கிராம்
உப்பு — போதுமான அளவு

**செய்முறை :**

கேழ்வரகு மாவைத் தண்ணீரில் கரைத்துக்கொள்ள வேண்டும். வாணலியில் அதனை ஊற்றிக் கொதிக்க வைக்கவும். கொதிக்கும் போது விடாமல் கிளறிக் கொண்டே இருக்க வேண்டும். தக்க சூடு வந்தவுடன் அடுப்பை விட்டு இறக்கி வைக்க வேண்டும். அதன் பின்னர் தேவையான அளவுக்கு உப்பைச் சேர்க்க வேண்டும். இப்போது சுவையும் ஊட்டமும் நிறைந்த கேழ்வரகுக் கஞ்சி தயார்!

ஏறக்குறைய 6 கிராம் புரதமும் 300 கலோரி சத்தும் கொண்ட உணவு கிடைத்து விடுகிறது. இதன் தயாரிப்புச் செலவு 7 காசுகள்தாம். காலைச் சிற்றுண்டி குறைந்த விலையில் உருவாகி விடுகிறது. 6 மாதக் குழந்தைகளுக்கு, இந்தக் கஞ்சி மிகவும் பயன் தரும் உணவாகிறது.

கோதுமையைப் பூரி போடுவதற்கும் சப்பாத்தி தயாரிப்பதற்கும்தான் பலர் பயன்படுத்துகிறார்கள். அதைக் கொண்டு சோறும் தயாரிக்கலாம் என்பதும் அது உடலுக்கு 300 கலோரி சத்துணவைத் தருகிறது என்பதும் பலருக்குத் தெரிவதில்லை. அதன் தயாரிப்பு முறையைப் பார்ப்போம்.

**கோதுமைச் சோறு**

**தேவையான பொருள்கள் :**

உடைத்த கோதுமை—85 கிராம்.
தண்ணீர், உப்பு — போதுமான அளவு

**செய்முறை :**

தண்ணீரில் உப்பிட்டுக் கொதிக்க வைக்க வேண்டும். உடைத்த கோதுமையை உலையில் இட்டுக் கிளறிக் கொண்டே இருக்க வேண்டும். அடுப்பில் உள்ள நெருப்பின் வெம்மையினால், தண்ணீர் சுண்டத் தொடங்கும். முழுதும் சுண்டியவுடன் நெருப்பை அகற்றிவிட வேண்டும்; சில விநாடிகளில் உலையைக் கீழே இறக்கி வைக்க வேண்டும். சுடச்சுட, சுவையான கோதுமைச் சோறு தயார். 8 காசுகள் மதிப்பில், 10 கிராம் புரதச் சத்தும் 300 கலோரிகளும் கொண்டது இது.

கம்பு என்னும் தானியத்தை நகரவாசிகளில் பலர் அறிந்திருக்க மாட்டார்கள்; சிற்றூர்களில் வாழ்வோர் அதனை, மிகவும் சுவைத்து உண்கிறார்கள். அதனால் ஊட்டச் சத்து நிறைந்தவர்களாகத் திகழ்கிறார்கள். மாலை நேரத்தில் உண்பதற்கேற்ற கம்பு மாவு உணவு ஒன்றினைப் பார்ப்போம்.

**கம்பு மாவுச் சிற்றுண்டி**

**தேவையான பொருள்கள் :**

வறுத்த கம்பு மாவு—25 கிராம்
வறுத்த பாசிப் பருப்பு—25 கிராம்
கடலைப் பிண்ணாக்கு மாவு—15 கிராம்
வெல்லம் அல்லது
பழுப்புச் சர்க்கரை—35 கிராம்
தண்ணீர் — போதுமான அளவு

**செய்முறை :**

வெல்லத்தில் போதுமான தண்ணீர் விட்டுப் பாகாக்கிக் கொள்ள வேண்டும். பாசிப் பருப்பு மாவு, கம்பு மாவு, கடலைப் பிண்ணாக்கு மாவு மூன்றையும் சேர்த்துக் கலக்க வேண்டும். (கலக்கும்போது, அவை கட்டியாகாதபடி பார்த்துக் கொள்ள வேண்டியது முக்கியம்) ஆறிய பின்னர் பரிமாற வேண்டும். சாப்பிடுவதற்கு பாயசம் போலச் சுவையாக இருக்கும்.

இதனை வேறொரு முறையிலும் தயாரிக்கலாம். முன் குறிப்பிட்ட வறுத்த மாவுகளைப் பழுப்புச் சர்க்கரையுடன் கலந்து வைத்துக் கொண்டு மாவாகவே உண்ணலாம். சுவையாக இருக்கும்.

சிறிது தண்ணீரில் அல்லது பாலில் கலந்து பானம் போலவும் சாப்பிடலாம்.

10 காசுகள் விலையில் 15 கிராம் புரதச் சத்தும் 300 கலோரிகளும் கொண்ட கம்பு மாவுச் சிற்றுண்டி கிடைத்து விடுகிறது.

குறிப்பு : ஒருவருக்குத் தயாரிப்பதற்குத் தேவைப்படும் அளவுகளே இங்கு கொடுக்கப்பட்டுள்ளன.

—எஸ். எஸ்.

## அரிசன, ஆதிவாசிகள் நலத்துறை

# கல்வி உதவித் தொகை மற்றும் இதர சலுகைகள்

## வழங்குதல் பற்றிய அறிவிப்பு

பள்ளிப் படிப்பும் அதற்கு மேலும் கல்வி பயிலும் அரிசன—ஆதிவாசி மாணவ—மாணவியர்க்கு அரிசன ஆதிவாசிகள் நல இயக்குநராலும், மாவட்ட அரிசன நல அலுவலர்களாலும் (சென்னை மாவட்ட அரிசன நல அலுவலர் உட்பட) வழக்கம் போல் 1976—'77-ஆம் ஆண்டிலும் கல்வி உதவித் தொகை வழங்கப்படும். மாநிலக் கல்வி உதவி பெறுவதற்கு ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ. 3,000 என்றும், மத்திய அரசு உதவித் தொகை பெறுவதற்கு ரூ. 9,000 வரை உச்ச வரம்பு என்றும் ஆணையிடப்பட்டுள்ளது. ஒரு குடும்பத்தில் கல்லூரிப் படிப்புக்கு உதவித் தொகை (Post-Matric Scholarships) பெறுகின்றவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தது இந்த வருமான வரம்பு. இந்து அரிசனங்களுக்கும், புத்த மதத்தை, சீக்கிய மதத்தைத் தழுவிய அரிசனங்களுக்கும், ஆதிவாசிகளுக்கும் (எம்மதத்தினராயினும் சரி) மத்திய அரசு உதவிச் சலுகை அளிக்கப்படும். எஸ்.எஸ்.எல்.சி. படிப்பிற்கு மேலான படிப்பு பெறுபவர்களுக்கு மட்டும் மத்திய அரசு உதவிச் சலுகை உண்டு.

(2) புதிய மனுக்கள் கல்லூரிகளில் சேர்ந்த பின் 15 நாட்களுக்குள்ளும், புதுப்பிக்கப்பட வேண்டியவற்றை கல்லூரியில் கோடை விடுமுறை முடிந்து மீண்டும் சேர்ந்த பின்னர் உடனடியாகவும், அனுப்பப்பட வேண்டும். எனினும், உதவித் தொகை விண்ணப்பப் பாரங்களை மாணவ—மாணவியர் அனுப்புவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கடைசித் தேதி கீழே தரப்பட்டுள்ளது :

**புதியது**

| | | |
|---|---|---|
| புகுமுக வகுப்பு மற்றும் பட்டப் படிப்பு | ஜூன், 76-ல் திறக்கவிருக்கும் கல்லூரிகளுக்கு | 15-8-76 |
| புகுமுக வகுப்பு மற்றும் பட்டப் படிப்பு | ஜூலை, 76-ல் திறக்கப்படும் கல்லூரிகள் | 31-8-76 |
| மருத்துவம், பொறியியல், கால்நடை, விவசாயம், மற்றும் மேல் பட்டப் படிப்பு | ... | 30-9-76 |

**புதுப்பித்தல் :**

| | | |
|---|---|---|
| **பட்டப்படிப்புகள்** | ... | 31-7-76 |
| மருத்துவம், பொறியியல், மற்றும் மேல் பட்டப் படிப்புகள் | ... | 30-9-76 |

மேலே குறித்துள்ள காலவரம்பைக் கடந்து வரும் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. கல்வி உதவித் தொகை முதல் தவணை செல்லுச் சீட்டில் (acquittance) கையெழுத்திடுவதில் மாணவ மாணவியர் காலம் தாழ்த்தினால் இரண்டாம் தவணையாக அவர்களுக்குச் சேர வேண்டிய தொகை வழங்கப்படாமல் போக நேரிடும் என அறிவிக்கப்படுகின்றது.

(3) கல்லூரிகளில் கட்டணம் செலுத்தாமல் சேர்ந்து கொள்வதற்காக மத்திய அரசு, மாநில அரசு உதவித் தொகை பெறுவதற்குத் தகுதி உள்ளவர்களுக்கு உறுதிச் சான்று அட்டைகள் (Entitlement Cards) கொடுக்கப்படும். சென்னை நகரில் உள்ள கல்லூரிகளில் பயில்வோர் அரிசன-ஆதிவாசிகள் நல இயக்குநரிடமிருந்தும், வெளியூர்களில் உள்ள கல்லூரிகளில் பயில்பவர்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட அரிசன நல அலுவலர்களிடமிருந்தும் இதைப் பெற்றுக் கொள்ள வேண்டும். சென்னையிலும் தமிழ்நாட்டின் இதர மாவட்டங்களிலும் உதவித் தொகை வழங்கும் அலுவலர்கள் பற்றிய விவரம் கீழே தரப்பட்டுள்ளது :

| **சென்னை நகரம்** | **வழங்கும் அலுவலர்கள்** |
|---|---|
| எஸ். எஸ். எல். சிக்கு உட்பட்ட படிப்பிற்கு மாநில உதவிச் சலுகைகள் அனைத்தும். | சென்னை மாவட்ட அரிசன நல அலுவலர் (இவரது அலுவலகம் மாவட்ட ஆட்சியரின் அலுவலகத்தில் உள்ளது. சென்னை — 600001). |
| எஸ். எஸ். எல். சிக்கு மேற்பட்ட படிப்பிற்கான மாநில மத்திய அரசு உதவிச் சலுகைகள் அனைத்தும். | அரிசன ஆதிவாசிகள் நல இயக்குநர், 'எழிலகம்', சேப்பாக்கம், சென்னை-600005. |
| **மாவட்டங்களில் :** | |
| எல்லா வகையான மாநில மத்திய அரசு சலுகைகள் | அந்தந்த மாவட்டங்களில் உள்ள மாவட்ட அரிசன நல அலுவலர்கள். |
| **தமிழ்நாடு முழுவதும் :** | |
| 1. காந்தி நினைவுத் தொகை | |
| 2. சார்டர்ட் அக்கௌண்டண்ட் | |
| 3. சட்ட பட்டதாரிகளுக்கு உதவித் தொகை அளித்தல் | அரிசன ஆதிவாசிகள் நல இயக்குநர், 'எழிலகம்', சேப்பாக்கம், சென்னை-600005. |

சலுகைகள் பெறுவதற்கான படிவங்களை அந்தந்த அரிசன நல அலுவலர்களிடமிருந்தோ அல்லது படிப்பகங்களிலிருந்தோ (Colleges and other institutions) பெற்றுக்கொள்ளலாம். அஞ்சல் மூலம் விண்ணப்பங்கள் பெற விரும்புவோர் 55 பைசா மதிப்புள்ள அஞ்சல் தலை ஒட்டிய தன் முகவரி எழுதப்பட்ட கூடுடன் விண்ணப்பித்தல் வேண்டும்.

**காந்தி நினைவுப் பரிசு (Award) :**

ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் இந்து மத தாழ்த்தப்பட்ட இனத்தவர் இருவருக்கு (ஒரு மாணவன் ! ஒரு மாணவி) 1976-ஆம் ஆண்டு மார்ச்—ஏப்ரல் திங்களில் முழு நேர பகல் கல்லூரிகளின் மூலம் நடைபெற்ற புகுமுகத் தேர்வில் முதல் முறையிலேயே எழுதித் தேர்ச்சி பெற்ற மாணவ மாணவிகளுக்குள் அதிக மதிப்பெண்கள் (விழுக்காடு) பெற்று, நடப்புக் கல்வி ஆண்டில் புகுமுக படிப்பைத் தொடர்ந்து மேல் கல்வி பயிலும் மாணவ மாணவிகளே இப்பரிசுத் தொகையைப் பெறத் தகுதி உடையவராவர்.

இத்தொகை பெற வருமான வரம்போ, வயது வரம்போ கிடையாது. வழங்கப்படும் தொகை முதல் ஆண்டு ரூ. 1,500 ஆகவும், பின்னர் ஆண்டொன்றிற்கு ரூ. 1,000 ஆகவும் இருக்கும். இத்துறையால் வழங்கப்பெறும் மற்ற உதவித் தொகையுடன் இந்தப் பரிசும் வழங்கப்படும். சென்ற ஆண்டுகளில் காந்தி நினைவுத் தொகை பெற்ற மாணவர்கள் இந் நடப்பு ஆண்டிலும் தொடர்ந்து கல்வி பயின்று கொண்டிருந்தால், தங்கள் கல்வி நிறுவனத் தின்மூலம், இவ்வாண்டிற்கும் உதவித் தொகை பெற உரிய விண்ணப்ப மனுவில் 15-8-76-க்குள் புதுப்பித்தல் வேண்டும்.

கல்லூரியில் சேர்ந்த 15 நாட்களுக்குள் புதிய மனு அனுப்ப வேண்டும். புதிய மனு அனுப்ப வேண்டிய கடைசி நாள் 31-8-76. இத்தேதிக்குப் பிறகு வரும் மனுக்கள் கவனிக்கப்பட மாட்டா.

(5) **தகுதி அடிப்படையில் பரிசு** (Merit-Cum-Means Award) :

புகுமுக வகுப்பு இறுதித் தேர்வில் பெறும் மதிப்பீட்டு எண்களின் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஆதிவாசிகள் இனத்தைச் சேர்ந்த ஒரு மாணவரும், ஒரு மாணவியும், இதே போல் தாழ்த்தப்பட்ட இனத்திலிருந்து கிருத்துவ மதத்தைத் தழுவிய ஒரு மாணவரும், ஒரு மாணவியும் இப்பரிசுக்கு உரியவராக தேர்ந்தெடுக்கப்படுவர். வழங்கப்படும் தொகை, முதல் ஆண்டு ரூ. 1,500 ஆகவும், பின்னர் ஆண்டொன்றிற்கு ரூ. 1,000 ஆகவும் இருக்கும்.

காந்தி நினைவுப் பரிசுக்குள்ள விதி முறைகளே இப்பரிசுத் திட்டத்திற்கும் பொருந்தும்.

(6) **சார்டர்ட் அக்கௌண்டண்ட்** (Chartered-Accountant) :

ஒவ்வொரு வருடமும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஐந்து தாழ்த்தப்பட்ட—மலைவாசி இனத்தைச் சேர்ந்த சார்டர்ட் அக்கௌண்டண்ட் படிப்பு (மூன்று வருடம்) படிக்கும் மாணவர்களுக்கு இத்துறையினரால் மாநில உதவித் தொகை விதிமுறைகளின்படி உதவித் தொகை வழங்கப்படும். வருட வருமான உச்ச வரம்பு ரூ. 3,000.

(7) **சட்ட பட்டதாரிகளுக்குப் பண உதவி அளித்தல் :**

தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட—ஆதிவாசி இனத்தைச் சேர்ந்த சட்டம் பயின்று வழக்குரைஞர் தொழிலை மேற்கொள்ளும் மாணவர்கள் ஐவருக்கு ரூ. 500 மான்யமாகவும், வட்டியில்லாக் கடனுக ரூ. 750-ம் வழங்கப்படும்.

1-6-75-க்குப் பிறகு வழக்கறிஞர் மன்றத்தில் சேர்ந்துள்ளவர்கள்தான் இவ்வுதவி பெறத் தகுதியுள்ளவர்களாவர்.

வருட வருமானம் சென்ற மார்ச், 76 முடிய ரூ. 3,000-க்குள் இருத்தல் வேண்டும்.

ஏ. பி. முத்துசாமி, ஐ.ஏ.எஸ்.,
அரிசன ஆதிவாசிகள் நல இயக்குநர்.



advt.



# "கற்றுக் கொடுப்பதன் மூலம் கற்றுக் கொள்"

ஒரு நாட்டின் போர்த்திறன், அந்நாட்டின் தொழில் மற்றும் பொருளாதார அமைப்பு, முப்படைகளின் வலு, தளவாடங்களின் தன்மை போன்ற பலவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆனால் பெருமளவுக்கு முப்படைகளுக்கு அளிக்கப்படும் பயிற்சி அடிப்படையில்தான் ஒரு நாட்டின் போர்த்திறன் அமைந்திருக்கும்.

**இருவகைப் பயிற்சி :**

தாம்பரத்திலுள்ள விமானப் படைப் பயிற்சி நிலையத்தில் இருவகையான பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்நிலையத்தில் தொழில் நுட்பப் பயிற்சியாளர்களுக்குப் படை விமானங்கள் பொறியியல் சம்பந்தமாகத் தொழில் நுட்பப் பயிற்சியும், விமானிகளுக்கு விமானம் ஓட்டும் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. இத்தகைய பயிற்சி பெறும் விமானப் பயிற்சியாளர்கள், விமானப்படையில் புதிதாகச் சேருவோர்க்கு விமானம் ஓட்டுவதில் பயிற்சி அளிக்கிறார்கள்.

**தளப் பயிற்சிப் பள்ளி :**

இந்நிலையத்திலுள்ள தளப் பயிற்சி பள்ளி, புதிதாக விமானப் படையில் தளப் பிரிவில் சேருவோர்க்கு விமானப் பொறியியல் சம்பந்தமாகப் பயிற்சி வகுப்பு நடத்துகிறது.

இந்தப் பயிற்சி வகுப்பு மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. புதிதாகத் தளப் பிரிவில் சேருவோர் எந்தச் சூழ்நிலையையும் சமாளித்து தன்னம்பிக்கை அடையும் வகையில் இந்தப் பயிற்சி வகுப்பு நடத்தப்படுகிறது.

வேலைநோக்கில் இந்தப் பயிற்சி வகுப்பு அமைந்துள்ளது. தொழில் பட்டறைகளில் பயிற்சி அளிக்கும் விஷயத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. புதிதாகச் சேருவோர்க்கான பயிற்சி வகுப்பு தற்போது ஒரு ஆண்டுக் காலத்திற்கு நடைபெறுகிறது. விமான தளங்களில் 4 அல்லது 5 ஆண்டுகள் பணிபுரிந்தபின், தளசிப்பந்திகள், அவரவர் தொழிலில் உயர் பயிற்சி பெறுவதற்காக மீண்டும் இப்பள்ளிக்கு அனுப்பப்படுகின்றனர்.

**விமானம் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி :**

விமானம் ஓட்டுவதில் பயிற்சி அளிக்கும் பள்ளி, ஆசியாவில் ஏற்படுத்தப்பட்ட மிகப் பழைமையான பள்ளியாகும். மிகப் பிரபலமான இப்பள்ளியில் புதிதாக விமானம் ஓட்டக் கற்றுக் கொள்பவர்களுக்கு, நவீன முறைகளில் எப்படிப் பயிற்சி அளிப்பது என்பது பற்றி விமான ஓட்டும் பயிற்சியாளர்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்படுகிறது.

நகரத்திலிருந்து 35 கி.மீ. தூரத்தில் நல்ல சூழ்நிலையில் அமைந்துள்ள இப்பள்ளியின் குறிக்கோள்: ''கற்றுக் கொடுப்பதன் மூலம் கற்றுக்கொள்'' என்பதுதான்.

கடமையைச் சிறந்த முறையில் ஆற்றி, மிக வலுவாய்ந்த விமானப்படையை உருவாக்க வேண்டும் என்ற குறிக்கோளை அடையும் நோக்கம் கொண்ட, ஒரு சில ஊழியர்களைக் கொண்டதாக இப்பள்ளி விளங்குகிறது.

# இரயில்பெட்டித் தொழிற்சாலையின் மகத்தான சாதனை

## — மாடி இரயில் பெட்டி!



**மத்திய அரசுத் தொழில் திட்டம் – 3**

சென்னை பெரம்பூரில் உள்ள இரயில் பெட்டித் தொழிற்சாலை' (Integral Coach Factory) புதிய வரலாற்றுச் சாதனையொன்றைப் புரிவதில் முனைந்து ஈடுபட்டு வெற்றிக்கனியைக் கொய்துள்ளது.

ஆசியாக் கண்டத்திலேயே வேறு எந்த நாட்டிலும் இதுகாறும் இப்படியொரு முயற்சி மேற்கொள்ளப்பட்டதில்லை என்று இந்தியர்களாகிய நாம் பெருமிதம் கொள்ளத்தக்க வகையில் இரட்டை அடுக்குகள் கொண்ட மாடி இரயில் பெட்டியை (Double Decker Coach) இந்தத் தொழிற்சாலை உருவாக்கியுள்ளது.

அத்தகைய முதல் பெட்டியின் வெள்ளோட்டம் கடந்த 8-6-76 அன்று நடைபெற்றது. தொழிற்சாலையிலிருந்து ஏறத்தாழ இரண்டு கிலோ மீட்டர் தூரம் வரை ஓடித் திரும்பிய அதில், முதன்முதல் இன்பப் பயணம் புரியும் இனிய வாய்ப்பினைப் பெற்றவர்கள் தமிழ்நாட்டைச் சார்ந்த பத்திரிகையாளர்களே!

'இரயில் பெட்டித் தொழிற்சாலை'யின் பொது நிருவாக மேலாளர் திரு ஜே. மாத்தன் அவர்களும் இந்த வெள்ளோட்டப் பயணத்தில் பங்கு கொண்டு புதிய மாடி இரயில்பெட்டியின் சிறப்புக்களையெல்லாம் விளக்கிக் கொண்டே வந்தார்.

பிரயாணிகளின் நெரிசலைத் தவிர்ப்பதற்கு இந்த இரட்டை அடுக்கு இரயில் பெட்டி, பெருந்துணை புரியும் என்பதில் சந்தேகமே இல்லை.

**மாடி இரயிலின் தனிச் சிறப்புகள்**

தற்போதுள்ள இரண்டாம் வகுப்பு (ஒற்றை அடுக்கு) இரயில் பெட்டியில் 90 பேர்தான் பயணம் செய்யலாம்; ஆனால் புதிய இரட்டை அடுக்கு மாடிப் பெட்டியில் 148 பேர் வரை பயணம் புரியலாம்.

இவ்வளவுக்கும் இரண்டு பெட்டிகளின் அமைப்பு அளவுகளில் அதிகமான வேறுபாடுகள் இல்லை.

தற்போதைய சாதாரணப் பெட்டியின் நீளம் 21,337 மில்லி மீட்டர்; அகலம் 3,245 மி.மீ., உயரம் 4025 மி.மீ; புதிய பெட்டியின் நீளம்: 21,337 மி.மீ. அகலம் 3,050 மி.மீ; உயரம், 4,265 மி.மீ.

உயரம் சற்று அதிகமானதாகத் தோன்றினாலும் நம் நாட்டில்' அகல இருப்புப்பாதைகளில் எதிர்ப்படுகின்ற மலைக்குகைகள் பாலங்கள் ஆகியவற்றை இடிக்காமல் கடக்கின்ற வகையிலேயே இது அமைக்கப்பட்டுள்ளது.

இதன் கீழ்த்தளத்தில் 55 பேரும், மேல்தளத்தில் 61 பேரும், பெட்டியின் இரு கோடிப் பகுதிகளிலும் 32 பேரும் ஆக 148 பேர் இதில் பயணம் புரியலாம். கோடிப் பகுதிகளில் தான், மேல்தளத்திற்கும் கீழ்த்தளத்திற்கும் செல்வதற்குப் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன.

தற்போதைய சாதாரணப் பெட்டிக்கு ரூ. 4.5 இலட்சம் செலவாகிறது; அதைவிட 58 பேர் வரை அதிகமாகப் பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய புதிய மாடி இரயில் பெட்டிக்கு ரூ. 8 இலட்சம் செலவாகிறது.

ஆரம்பக் கட்டச் சோதனைகளையெல்லாம் கடந்துவிட்ட இப்பெட்டி, 1976 ஜூலை மாதத்தில் இரயில்வே வாரியத்திடம் (Railway Board) ஒப்படைக்கப்படும். அவர்கள், இப்பெட்டியை முதலில் டெல்லிக்கும் ஆக்ராவுக்கும் இடையே செல்லும் 'தாஜ்' எக்ஸ்பிரசில்' இணைத்து ஓட்டுவதற்கு ஏற்பாடு செய்வார்கள்.

நெடுந்தூரப் பயணத்தைக் காட்டிலும் 5 அல்லது 6 மணி நேரத்திற்குள் சேரக்கூடிய குறுகிய தூரப் பயணத்திற்கே இது ஏற்றதாகும். ஏனெனில் ஏராளமான சாமான்களை எடுத்துச் செல்வதற்கோ தூங்கிக் கொண்டு செல்வதற்கோ இப்போதைக்கு இதில் வசதிகள் இல்லை.

44 டன்கள் எடையுள்ள இப்பெட்டி மணிக்கு 1?0 [illegible]

டார் தூரம் ஓடக்கூடியதாகும். சாதாரணமாகத் தற்போது 12 ஒற்றையடுக்குப் பெட்டிகள் கொண்ட இரயில் வண்டியில் 1,080 பேர்தான் பயணம் செய்ய முடியும். ஆனால் புதிய மாடிப் பெட்டிகள் பதினென்று பூட்டப் பட்ட வண்டியில் 1.628 பேர் வரை பயணம் புரிய முடியுமாம்.

பரிசோதனை முறையில்தான் இந்த முதல் மாடி இரயில்பெட்டி இப்போது உருவாக்கப்பட்டுள்ளது. இதற்குக் கிடைக்கும் வரவேற்பைப் பொறுத்து இரயில்வே வாரியம் ஒப்புதல் தருமானல், பேலும்பல பெட்டிகள் தயாரிக்கப்படலாம் என்றும் 90 பயணிகளேனும் தூங்கும் வசதியுடன் செல்லக்கூடிய மாடி இரயில் பெட்டிகளை இங்குள்ள தொழிற்சாலையில் உருவாக்க முடியும் என்றும் செய்தியாளர்களின் கேள்விக்கு விடையாகக் கூறினர் ஜெனரல் மானேஜர்.

## கடந்த காலச் சாதனைகள்

புதிய வரலாற்றுச் சாதனையொன்றைப் புரிய முற்பட்டிருக்கும் பெரம்பூர் இரயில்பெட்டித் தொழிற்சாலை கடந்த காலத்திலும் பல வியக்கத்தக்க சாதனைகளை விளைவித்திருக்கிறது.

இந்திய அரசின் இரயில்வே துறைக்கு உட்பட்ட ஓர் உற்பத்திப் பிரிவாக விளங்கும் இத்தொழிற்சாலை, 1955-இல் முதன் முதல் அமைக்கப் பெற்றதாகும்.

சுவிட்சர்லாந்து நாட்டைச் சார்ந்த சூரிச் (Zurich) நகரில் உள்ள 'சுவிஸ் கார் அண்ட் எலிவேட்டர் மேனுபெக்சரிங் கார்ப்பரேஷன்' (The Swiss Car and Elevator Manufacturing Corporation) என்னும் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் இது முதன் முதலில் இயங்கத் தொடங்கியது. 1961-இல் அந்த ஒத்துழைப்பு ஒப்பந்தம் முடிவடைந்த பிறகு, தானகவே தனித்த முறையில் உற்பத்தியில் இறங்கியது இத்தொழிற்சாலை.

இது இரண்டு பிரிவுகளாக இயங்கி வருவதாகும். ஒரு பிரிவில் இரயில் பெட்டியின் கூரைப் பகுதியுள்ளிட்ட 'கூண்டுகள்' (Shells) தயாராகின்றன; இன்னெரு பிரிவில் உட்கார்ந்து செல்வதற்கேற்ற வசதிகள் அனைத்தும் அமைந்த 'செப்பம் செய்யப்பட்ட பெட்டிகள்' (Furnished Coaches) உருவாகின்றன.

1955-இல் 'ஷெல் டிவிஷன்' [illegible] கோடிச் செலவில் முதலில் அமைக்கப்பட்டது. அதற்கு ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு 1962-இல் ரூ. 3.69 கோடிச் செலவில் உருவாக்கப்பட்டதே 'பர்னிஷிங் டிவிஷன்' (Furnishing Division). 'ஷெல் டிவிஷ'னில் பதினென்று பட்டறைக் கொட்டகைகளும் (Sheds), 'பர்னிஷிங் டிவிஷனில்' ஏழு பெரிய பட்டறைக் கொட்டகைகளும் உள்ளன.



இரட்டை மாடி இரயில் பெட்டியில் மேல்மாடிக்குச் செல்லும் வழி.

இத்தொழிற்சாலையின் மொத்த உற்பத்தித் திறன் ஆண்டுக்கு 750 பெட்டிகள் ஆகும். தற்போதைய நிதி ஒதுக்கீட்டுக்கு ஏற்ப ஆண்டொன்றுக்குத் தயாராகிற கூண்டுகள் (Shells) 535; செப்பம் செய்யப்படுகின்ற பெட்டிகள் 518.

1955 அக்டோபர் மாதம் முதல் 31-5-1976 முடிய கடந்த இருபதரை ஆண்டுகளுக்குள் 11,339 கூண்டுகளையும், 9312 செப்பம் செய்யப்பட்ட பெட்டிகளையும் இத்தொழிற்சாலை தயாரித்துள்ளது.

தொடக்கத்தில் அகல இருப்புப் பாதைகளுக்கு (பிராட்கேஜ்) மட்டுமே இரயில் பெட்டிக்கூண்டுகளைத் தயாரித்து வந்த இத்தொழிற்சாலை, நாளாவட்டத்தில் 62 வகையான புதுப்புதுப்பெட்டிகளை உருவாக்குகின்ற நிலைக்கு உயர்ந்துள்ளது.

'பிராட்கேஜ்' 'மீட்டர் கேஜ்' பாதைகளுக்கு உரிய சாதாரணப் பெட்டிகளை மட்டுமன்றி, நவீன வசதிகள், குளிர்சாதன ஏற்பாடுகள் கொண்ட மின்சார-'டீசல்'-இரயில் பெட்டிகளையும் இத்தொழிற்சாலை உருவாக்குகின்றது. புதுடில்லிக்குக் கல்கத்தாவுக்கும், பம்பாய்க்கும்-புதுடில்லிக்கும் மிக மிக விரைவாகப் பாய்ந்தோடும் 'ராஜதானி எக்ஸ்பிரஸ்' - இரயில் பெட்டிகளும் இங்கே தயாரிக்கப்பட்டவையே!

## ஏற்றுமதியில் ஏற்ற விலை

உள் நாட்டுத் தேவைகளை நிறைவு செய்வதோடு வெளிநாடுகளிலும் வெற்றிக் கொடியை நாட்ட முற்பட்டுள்ளது இத்தொழிற்சாலை.

முதன் முதல் 1968-ல் பர்மா நாட்டுக்குப் பதினறரை இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 66 போகிகள் (Bogies) இங்கிருந்து ஏற்றுமதி ஆயின.



இரட்டை மாடி இரயில் பெட்டியின் கீழ்ப் பகுதி.

அதனைத் தொடர்ந்து, தாய்லாந்து, தைவான், பிலிப்பைன்ஸ் சாம்பியா ஆகிய ஆசிய-ஆப்பிரிக்க நாடுகளுக்கு இதுவரை மொத்தம் 309 போகிகளையும் 266 'கோச்' பெட்டிகளையும் இத்தொழிற்சாலை ஏற்றுமதி செய்துள்ளது. அவற்றின் மதிப்பு ரூபாய் பத்துக் கோடிக்கு மேல் இருக்கும்.

தற்போது கிழக்கு ஆப்ரிக்க இரயில்வே கார்பொரேஷனில் உள்ள டான்சானியா பிராந்தியத்திற்கு 17 மீட்டர்கேஜ் இரயில் பெட்டிகள் ஏற்றுமதி செய்வதற்குக் கோரிக்கை வந்துள்ளது. அந்தப் பெட்டிகள் அனைத்தும் வருகிற ஜூலை மாத இறுதிக்குள் அனுப்பி வைக்கப்பட்டு விடும்.

கென்யா, நைஜீரியா ஆகிய நாடுகளின் இரயில்வேக்களுக்கு இங்கிருந்து பெட்டிகளை வழங்குவதற்குரிய 'விலைப்புள்ளிகள்' (Tenders) அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட நாடுகள் அவற்றுக்குச் சம்மதம் தெரிவித்தால் நைஜீரியாவுக்கு 160 இரயில் பெட்டிகளும், கென்யாவுக்கு 32 இரயில்பெட்டிகளும் ஏற்றுமதி ஆகலாம். வங்காள தேச (Bangla Desh) நாட்டுக்கு 50 பெட்டிகள் அனுப்புவதற்குரிய விலைப்புள்ளிகளும் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இந்தோனேசியா, மலேசியா, தாய்லாந்து, ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளிலிருந்தும் கோரிக்கைகள் வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## வருங்காலத்தில் வளரும் சாதனை

எதிர்காலத்தில் மேலும் பல புதிய சாதனைகளை-புதிய வகைப் பெட்டிகளைத் தயாரிக்கின்ற திட்டங்களையும் இந்த இரயில் பெட்டித் தொழிற்சாலை மேற்கொள்ளவிருக்கிறது.

எந்த வகையான வண்டியிலும் பூட்டத்தக்கதாகவும், விளக்குகள், குளிர்சாதனம் முதலானவற்றுக்குத் தேவையான மின்சக்தியைத் தானே உற்பத்தி செய்து கொள்ளத்தக்கதாகவும் தூங்குவதற்கேற்ற இரண்டு அடுக்குகள் கொண்ட குளிர்சாதன இரயில் பெட்டிகளைப் புதிய முறையில் விரைவில் தயாரிப்பதையும் இத்தொழிற்சாலை மேற்கொள்ளவிருக்கிறது.

சென்ற ஆண்டு இங்கே உருவாக்கப் பெற்ற 48 படுக்கைகள் கொண்ட இரண்டு அடுக்குத் தூங்கும் குளிர்சாதனப் பெட்டிக்குப் பிரயாணிகளிடையே மிகுந்த செல்வாக்கு இருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனால், குளிர் சாதனம், வெளிச்சம் ஆகியவற்றுக்குத் தேவையான மின்சக்திக்கு அந்தப் பெட்டிகளிலேயே ஏற்பாடு இல்லாததால், மின்சக்தி ஏற்பாடுள்ள 'டீ. லக்ஸ்' வண்டிகளிலேயே அவை பூட்டப் படவேண்டிய கட்டாய நிலை இருந்தது.

இப்போது புதிதாகத் தயாரிக்கப்படவிருக்கும் பெட்டிகளில் அந்தக் குறையும் இருக்காது. தானே மின்சக்தியைத் தயாரித்துக்கொள்ளும் வகையில் தகுந்த கருவிகள் அவற்றில் பொருத்தப்படும். இதனல் முன்னர்க் கூறியவாறு எந்த வகையான வண்டிகளிலும் புதிய பெட்டிகளை இணைக்கலாம். அதே போன்று, இன்னெரு புதியவகைக் குளிர்பதன 'காம்போசிட்' இரயில் பெட்டியும் இப்போது உருவாகிய வண்ணம் இருக்கிறது. அதில் முதல் வகுப்புப் படுக்கைகள் பத்தும், இரண்டாம் வகுப்பு நாற்காலி இருக்கைகள் முப்பத்து

இரட்டை மாடி இரயில் பெட்டியின் மேல் மாடி.



நான்கும் இருக்கும். இத்தகைய 'காம்போசிட்' இரயில் பெட்டிகள் சிலவற்றில் நாற்காலி இருக்கைகளுக்குப் பதிலாக இரண்டு அடுக்குப் படுக்கை வசதிகள் செய்யப்பட்டவையும் இருக்கின்றன. நடப்பு ஆண்டின் முடிவிற்குள்ளாக இம்மாதிரியான 'காம்போசிட்' இரயில் பெட்டிகள் பயணத்திற்கு விடப்படும் என்று கூறப்படுகிறது.

'காஸ்' (Gas) மூலமே உணவுகளைத் தயாரித்துக் கொள்ளக்கூடிய சமையல் வசதி கொண்ட 'பாண்ட்ரி கார்கள்' (Pantry Cars) பெட்டிகளும் இங்கே இப்போது உருவாக்கப்படுகின்றன. நிலக்கரிக்குப் பதிலாக 'காஸ்' மூலம் சமையல் செய்வதால் இந்தப் பெட்டிகள் துப்புரவாகவும் தூய்மையாகவும் விளங்க வழியுண்டாகும். பிரயாணிகளுக்கு இன்னும் சிறப்பான முறையில் சேவை செய்யவும் முடியும். இவ்வாறு 'காஸ்' அடுப்புச் சமையல் அறைகொண்ட இரயில் பெட்டிகள் நடப்பு ஆண்டு முடிவதற்குள் புழக்கத்திற்கு வந்து விடுமாம்.

நகர்ப்புறங்களில் பிரயாணிகளின் நெரிசலைத் தவிர்ப்பதில் தற்போது மின்சார இரயில் வண்டிகள் (Electric Trains) ஆற்றி வரும் பணி அளவிடற்கரியதாகும். ஆனால் அவற்றைவிட அதிகமான எண்ணிக்கையில் பயணிகளை ஏற்றிச் செல்லக் கூடிய 'டீசலில்' ஓடவல்ல வண்டிகளும் இப்போது இத்தொழிற்சாலையில் உருவாகி வருகின்றன. இந்தப் புதியவகைப் பெட்டியில் 70 இருக்கைகளுக்கு மட்டுமின்றி, 120 பேர் நின்று கொண்டு செல்லவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இத்தகைய பெட்டி ஒவ்வொன்றின் அடக்க விலை ரூபாய் நாலரை இலட்சம் ஆகும். முதலில் டில்லி நகரைச் சுற்றிலும் உள்ள 'பரிக்கிராம இரயில்வே வளையப் பணிக்கு' (Parikrama Ring Railway Service) பயன்படுத்துவதற்காக இப்புதிய வகைப் பெட்டிகள் 29 இப்போது தயாரிப்பில் உள்ளன. இன்னும் சில மாதங்களில் இவை பயணத்திற்கு விடப்படும்.

இரயில் பெட்டிகளை உற்பத்தி செய்வதுடன் நில்லாமல் 'டிராம் கார்' தயாரிப்பிலும் இத்தொழிற்சாலை ஈடுபடவிருப்பதாக இதன் ஜெனரல் மானேஜர் தெரிவிக்கிறார்.

ஒவ்வொன்றும் ரூபாய் ஏழு இலட்சம் விலையில் இரட்டை டிராம் கார் 100 உற்பத்திசெய்து வழங்க முடியும் என்று கல்கத்தா-டிராம்வேஸ் கம்பெனிக்குக் கடிதம் எழுதியிருப்பதாக அவர் அறிவிக்கிறார்.

**பெருமிதம் தரும் வளர்ச்சி**

பார் புகழும் பண்டித ஜவகர்லால் நேரு அவர்களால், 'தேசத் தந்தை' மகாத்மா காந்தியடிகளின் பிறந்த நாளான 1955 அக்டோபர் இரண்டாம் நாள் தொடங்கி வைக்கப் பெற்ற இந்தப் பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற்சாலை நாளுக்கு நாள் புதிய புதிய சாதனைகளைப் புரிந்த வண்ணம் ஓங்கி உயர்ந்து கொண்டே செல்கிறது.

இதில் உருவாகின்ற வகைவகையான இரயில் பெட்டிகள் பயணிகளுக்கு வசதிகள் பலவற்றை வாரி வாரி வழங்கி, உள்நாட்டில் செல்வாக்குப் பெறுவதோடு நில்லாமல், வெளிநாட்டிலும் வெற்றிக் கொடியை நாட்டி வருகின்றன.

மத்திய அரசு நிறுவனங்களில் ஒன்றான இந்த இரயில் பெட்டித் தொழிற்சாலையின் வளர்ச்சி இந்தியர்கள் பெருமிதம் அடையக் கூடிய ஒன்றே என்பதில் சந்தேகமே இல்லை.

—அ. வேதாசலம்

# விடைகள்:

1. (அ) ஜெனரல் கரியப்பா
   (ஆ) திரு. சி. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள்
   (இ) திருமதி சரோஜினி நாயுடு அவர்கள்
   (ஈ) 1825-ல் (கராச்சியிலிருந்து சிந்து மாநிலத்திற்கு மட்டும் வெளியிடப்பெற்றது)
2. ஐ.நா. வர்த்தக வளர்ச்சி மாநாடு
3. (அ) பஞ்சாப்
   (ஆ) காஷ்மீர்
   (இ) மேற்கு வங்காளம்
   (ஈ) பம்பாய்
4. 1857-ஆம் ஆண்டு
5. 288. இது 1688-ல் துவக்கப்பட்டது.
6. 'பேபரைஸ்' (Papyrus) என்னும் கோரைப்புல்லை எகிப்தியர் முதன் முதலில் எழுதப் பயன்படுத்தினர். அதனால் 'பேபரைஸ்' என்னும் பெயரே 'பேப்பர்' என வழங்கலாயிற்று.
7. இந்திய மக்கள் தொகை இன்று (1976, மே கணக்குப்படி) 60 கோடியே 50 இலட்சம்
8. மாயூரம் முனிசீப் வேதநாயகம் பிள்ளை அவர்களால்
9. இந்திய தேசியப்பாடல் முதலில் 1911-ஆம் ஆண்டு, கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் கூட்டத்தில் பாடப்பட்டது.
10. (அ) அசோசியேடெட் பிரஸ் அண்டு யுனைடெட் பிரஸ் இன்டர்நேஷனல் (Associated Press and United Press International)
    (ஆ) 'டாஸ்' (Tass)

தொகுப்பு: பி. வி. கிரி.




பதிவு எண். M. 8676




ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.




COMMISSIONER OF TAMIL NADU
ARCHIVES AND HISTORICAL RESEARCH
55
16-7-1976
EGMORE, MADRAS-8.
P
R.R.No 261/55/76 53






# பெருந்தலைவருக்குப் பெருமை சேர்த்த விழா !

தமிழகத்தின் முதலமைச்சராகவும்—அகில இந்தியத் தலைவராகவும் திகழ்ந்த திரு. காமராஜ் அவர்களின் பிறந்த நாளான ஜூலை 15 அன்று அவரது உருவம் பொறிக்கப்பட்ட அஞ்சல் தலையை வெளியிட்டு அவருக்குச் சிறப்புச் செய்துள்ளது இந்திய அரசின் அஞ்சல் துறை.




கலைவாணர் அரங்கில் ஜூலை 15-ந் தேதி காலை 10 மணிக்கு நடைபெற்ற அவ்விழாவிற்கு மேதகு தமிழக ஆளுநர் மோஹன் லால் சுகாதியா அவர்கள் தலைமை ஏற்றார்கள். தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. கார்த்திகேயன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

தலைமைச் செயலாளர் அவர்கள் தமது வரவேற்பு உரையின் போது குறிப்பிட்டதாவது :

'' தலைவர் காமராஜ் அவர்கள அரசாங்க நிர்வாகத்தில் குறுக்கிட்டதோ, தலையிடு செய்ததோ,


தமிழரசு

மலர்: 7 16—7—1976 இதழ்: 2

பொரிச செய்ததோ கிடையாது. அவர், அதிகாரிகளை கௌரவித்து வந்தார். அதிகாரிகள் தவறு செய்தாலும் அதை நுணுக்கமான முறையில் எடுத்துக் காட்டி, அவர்களைத் தட்டிக் கொடுத்து வேலை வாங்குவார். அவர் உழைப்பின் உருவமாக விளங்கினார். உழைப்பதற்கு அவர் அஞ்சியது இல்லை. அப்படிப்பட்ட உயர்ந்த தலைவருக்கு அவரது பிறந்த நாளில் நினைவு அஞ்சல் தலை வெளியிடும் இந்த விழாவில் பங்கு கொள்ளும் அனைவரையும் வரவேற்கிறேன்.''

வரவேற்புரைக்குப் பின்னர், ஆளுநர் மோகன் லால் சுகாதியா அவர்கள் தலைமையுரை ஆற்றினார். உரையில் ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டதாவது :

''காமராஜ் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். சாதாரணத் தொண்டராக இருந்து சிறந்த நாட்டுப் பற்றினாலும், உண்மையான உழைப்பினாலும், தமிழ் நாட்டின் முதலமைச்சராகவும் தேசத் தலைவராகவும் திகழ்ந்தார்.

தமிழ் நாட்டின் முதலமைச்சராக அவர் பணி புரிந்த போது, தொழில் துறையின் வளர்ச்சிக்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் பலமான அடிப்படையை உருவாக்கினார். இலவசக் கல்வித் திட்டத்தையும், மதிய உணவுத் திட்டத்தையும் அவர் கொண்டு வந்தார்.

''ஏழை எளிய மக்களுடன் அவருக்கு எப்போதும் தொடர்பு இருந்தது. அவர்களுக்காகவே பாடுபட்டார். மாற்றுக் கட்சியினராலும் மதிக்கப்பட்ட தலைவராகத் திகழ்ந்தார். அவர் நினைவாகத் தபால் தலை வெளியிடுவது சிறப்பானதாகும்.''

அஞ்சல் தலையை வெளியிட்ட அஞ்சல் மற்றும் தந்தித் துறைத் துணை அமைச்சர் திரு. ஜகந்நாத் பகாடியா தம் உரையில் குறிப்பிட்டதாவது :

''காமராஜ் கடைசிவரை எளிய வாழ்க்கை வாழ்ந்து காட்டினார். செல்வாக்கு மிக்க தலைவராகத் திகழ்ந்தார். திட மனத்துடன் நாட்டுக்காக உண்மையுடன் உழைத்தார்.

''சாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்கவும், வறுமை, வேலை இல்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கவும் அரும்பாடு பட்டார். அவரது சேவைகளை நினைவு கூரும் வகையில் இந்த அஞ்சல் தலை வெளியிடப்படுகிறது.''

தமது உரையை முடித்து, அஞ்சல் தலையை வெளியிட்டு வைத்த அஞ்சல் துறைத் துணை அமைச்சர் திரு. பகாடியா அவர்கள், காமராஜ் உருவம் பொறிக்கப்பெற்ற அஞ்சல் தலைகள் கொண்ட ஆல்பத்தை, ஆளுநர் சுகாதியா அவர்களிடம் வழங்கினார்.

விழாவின் இறுதியில், மாநில அஞ்சல் துறைத் தலைமை அலுவலர், திரு. ஞானகிராமன் அவர்கள் நன்றி கூறினார்.

''அஞ்சல் துறை, காமராஜ் அவர்களுக்கு நினைவு அஞ்சல் தலை வெளியிடுவதன் மூலம் தனது மரியாதையைச் செலுத்தி உள்ளது''. —இவ்வாறு நன்றி உரையில் அவர் குறிப்பிட்டார்.

காமராஜ் அஞ்சல் தலையை விற்பனை செய்வதற்குக் கலைவாணர் அரங்கத்தில் அன்றைய தினம் மட்டும் திறக்கப்பட்டிருந்த தனி நிலையத்தில் ஏராளமான பொது மக்கள் வரிசையில் நின்று, ஆர்வத்துடன் அஞ்சல் தலைகளை வாங்கிச் சென்றனர்.

பெரும் புகழ் பெற்ற அகில இந்தியத் தலைவருக்குப் பெருமை செய்யும் வகையில் அமைக்கப்பட்டிருந்த அஞ்சல் தலை வெளியீட்டு விழா நிகழ்ச்சி, சிறப்பாக அமைந்தது மட்டுமல்ல, பொது மக்களின் உள்ளங்களில் தக்க வகையில் இடம் பெற்று விட்டது என்றும் சொல்லலாம்.

## உடல் ஊனமுற்றவர்களுக்கு இரயில் பயணக் கட்டணச் சலுகைகள்!

உதவிக்கு ஒரு நபரை அழைத்துக் கொண்டு இரயில் பயணம் செய்யும் உடல் ஊனமுற்றவர்களுக்கு இரயில் பயணக் கட்டணத்தில், இரயில்வேக்கள் சலுகைகளை அளிக்கின்றன. பாதுகாப்புத்துறையைச் சேர்ந்த உடல் ஊனமுற்ற நபர்களுக்கும் இந்தச் சலுகைகள் கிடைக்கின்றன.

உடல் ஊனமுற்ற நபரும், அவருக்கு உதவியாக வரும் நபரும் இரண்டாம் வகுப்பு டிக்கட் ஒன்றை வைத்துக்கொண்டே இரண்டாம் வகுப்புப் பெட்டியில் பயணம் செய்யலாம்.

முதல் வகுப்பில் பயணம் செய்தால் உடல் ஊனமுற்ற நபர் ஒருவரிடமிருந்து அடிப்படைக் கட்டணத்தில் 15 சதவிகிதம் வசூலிக்கப்படமாட்டாது. அவருடன் உதவிக்குப் பயணம் செய்யும் நபர் தனியாக டிக்கட் வாங்க வேண்டும்.

கண்பார்வையிழந்த ஒருவர், இரயில் டிக்கட் கட்டணத்தில் கால் பாகத்தை மட்டும் செலுத்தி, இரயில் பயணம் செய்யலாம்.

உடல் ஊனமுற்றதற்கான, அல்லது கண் பார்வை இழந்ததற்கான சான்றிதழின் பேரில் இரயில் நிலைய அலுவலர் இத்தகையோருக்கான சலுகை டிக்கட்டுகளை வழங்குகிறார்.



# வளமான எதிர்காலத்திற்கு வழி வகுக்கும் கல்வித் திட்டம்!


சி. ஜி. ரெங்கபாஷ்யம் ஐ. ஏ. எஸ்.,
செயலாளர்,
கல்வித்துறை,
தமிழ்நாடு அரசு.


கல்வித் துறையில் சில பல முக்கியமான வளர்ச்சிப் பணிகள் தொடங்கியுள்ள நேரம் இது. எனவே, சில ஆண்டுகளில் நம் தமிழ்நாட்டு அரசு செயல்படுத்த இருக்கும் 10 + 2 + 3 ஆண்டுக் கல்வி வரம்பு பற்றி முதலில் சில சொல்லலாம் என்று நினைக்கிறேன். தற்பொழுது பதினொரு ஆண்டுகள் படித்தபின் 'எஸ்.எஸ் எல். சி' எழுத வேண்டும். பின்னர் ஓராண்டு புகுமுக வகுப்பு. கல்லூரிப் பட்ட படிப்பு அதாவது 'பி.ஏ.' 'பி.எஸ்சி.,' 'பி. காம்' ஆகியவை மூன்றாண்டுகள். புதிய முறை வந்த பின்னரும் கல்லூரிப் பட்டப் படிப்பு மூன்றாண்டுகளாக நீடிக்கும். பள்ளிப் படிப்பு பத்தாண்டுகளாகக் குறையும். அதாவது பத்தாண்டுகளில் 'எஸ். எஸ்.எல்.சி' பெறலாம். 1977-78-ஆம் ஆண்டில்-அதாவது அடுத்த ஆண்டு-பத்தாவது வகுப்புக்கு வரும் மாணவர்கள்தான் அநேகமாகப் பத்தாண்டு 'எஸ். எஸ். எல். சி'.யின் முதல் அணியினராக இருப்பார்கள். அவர்கள் 1978 மார்ச்சில் 'எஸ் .எஸ். எல். சி.' எழுதுவார்கள். முன்னர் பதினொரு ஆண்டுகளில் பயின்ற விஷயங்கள் அனைத்தும் புதிய முறையில் பத்தாண்டுகளுக்குள் கற்பிக்கப்பட்டுவிடும். எனவே, பதினோராண்டு 'எஸ். எஸ். எல். சி.' 'பத்தாண்டு எஸ். எஸ். எல். சி' இரண்டின் தரமும் ஒன்றுபோல் தான் இருக்கும்.

புதிய ஆண்டு வரம்பில் முக்கியமான பகுதி, நடுவிலுள்ள இரண்டு ஆண்டுகள்தான். அதுதான் 'ஹையர் செகண்டரி' கல்வி எனப்படும். ஓராண்டு புகுமுக வகுப்பு, கல்வித் தரத்துக்கு உகந்ததல்ல என்பது, அது தொடங்கிய ஆண்டாகிய 1956-57 முதல், கல்வி வல்லுநர் அனைவரும் ஒத்துக் கொண்ட ஒன்றாகும். அதற்குப் பதிலாக புதிய முறையில் இரண்டு ஆண்டு 'ஹையர் செகண்டரி' கல்வி பயில வேண்டும். தமிழ்நாடு அரசு இதுபற்றி ஒரு வல்லுநர் குழு அமைத்தது. 'ஹையர் செகண்டரி' சில உயர்நிலைப் பள்ளிகளில்தான் இருக்க வேண்டும் என அக்குழு பரிந்துரைத்தது. மைய அரசு அமைத்துள்ள கல்வி வல்லுநர் குழுக்களின் கருத்தும் அதுதான். தற்பொழுது தமிழ்நாட்டிலுள்ள சுமார் 3,000 உயர்நிலைப் பள்ளிகளில் சுமார் 400 பள்ளிகளை 'ஹையர் செகண்டரி' பள்ளிகளாக உயர்த்த வேண்டுமென்று நம் அரசு அமைத்த குழுவின் பரிந்துரை. முதல் ஐந்து ஆண்டுகளுக்கு மட்டும் தற்பொழுதுள்ள 190 கல்லூரிகளும் இரண்டாண்டு 'ஹையர் செகண்டரி' வகுப்புகளை நடத்த அனுமதிக்கப்படும்.

### தற்போதைய கல்வி முறையில் உள்ள குற்றச்சாட்டு

தற்போதைய கல்வி முறையின் மீதுள்ள ஒரு பெரும் குற்றச்சாட்டு அது வேலைவாய்ப்பு அளிப்பதாக இல்லை என்பதேயாகும். நம்நாடு விடுதலை அடைந்த 1947-ஆம் ஆண்டில் தற்போதைய தமிழ்நாட்டுப்





பகுதியில் இருந்த கலை அறிவியல் கல்லூரிகள்24; அவற்றில் பயின்ற மாணவர்கள் 17,000 பேர். தற்பொழுது உள்ள கல்லூரிகள் சுமார் 190; அவற்றில் பயிலும் மாணவர்கள் சுமார் 2 இலட்சம் பேர். 1975, டிசம்பர் 31-ஆம் தேதிய நிலவரப்படி, தமிழ்நாட்டில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களில் வேலை தேடிப் பதிவு செய்திருந்த பட்டதாரிகள் 64,000 பேர்கள். அவர்களுள் ஐயாயிரம் பேருக்குமேல், 'எம்.ஏ., முதலிய பட்ட மேற்படிப்பு படித்தவர்கள். புதிய கல்வி முறை இப்பிரச்சனைக்குத் தீர்வு காணும் நோக்கில் வகுக்கப்படும்.

### வேலைவாய்ப்புக்கு வகைசெய்யும் புதிய கல்வி முறை

புதிய முறையில் 'ஹையர் செகண்டரி' கல்வி இரண்டாண்டுகளில் வேலைவாய்ப்புக்கு வகை செய்யும் படிப்பு முறைகள் பலவும் புகுத்தப்படும். இதுபற்றி அரசும், கல்வித்துறையும் தீவிரமாக ஆய்வு செய்து வருகின்றன.

### கல்வி வளர்ச்சிக்கு 170 கோடி ரூபாய்!

ஆண்டுதோறும் அரசு பட்ஜெட்டில் கணிசமான பகுதி கல்விக்கு ஒதுக்கப்படுகிறது. 1976-77-ஆம் ஆண்டு தமிழ்நாட்டு அரசின் மொத்தரெவின்யூ கணக்குச் செலவு ரூ. 588 கோடி. அதில் ரூ. 127 கோடி, கல்வி மானியத்தில் மட்டும், கல்விக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 1975-76ல் ஒதுக்கப்பட்ட ரூ. 118 கோடியை விட இது ரூ. 9 கோடி அதிகம். மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, அரிசன நலத்துறைப் பள்ளிகள் போன்றவற்றுக்கு வேறு மானியங்களின் கீழ் பணம் ஒதுக்கப்படுகிறது. அவ்வகைக் கல்விகளுக்காக, வேறு மானியங்களில் 1976-77-ல் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையையும் சேர்த்தால் மொத்தம் சுமார் ரூ. 170 கோடிக்குமேல் ஆகும். ஆக அரசு பட்ஜெட்டில் சுமார் 30 விழுக்காடு கல்விக்காகச் செலவிடுகிறது.

### அன்றும் இன்றும்!

கல்விக்காக ஆகும் செலவு உறு பயன் விளைப்பதாக இருக்க வேண்டும் என்பதில் அரசு இடைவிடாத நாட்டம் கொண்டுள்ளது. 1947-ஆம் ஆண்டில் தற்போதைய தமிழ்நாட்டுப் பகுதிகளில் இருந்த தொடக்கப் பள்ளிகள் 15,000. அவற்றில் பயின்ற மாணவர்கள் 15 இலட்சம். அப்பொழுது இருந்த உயர்நிலைப் பள்ளிகள் 440. அவற்றில் பயின்ற மாணவர்கள் இரண்டு இலட்சம் பேர் தான்.

தற்பொழுது தமிழ்நாட்டில் உள்ள தொடக்கப் பள்ளிகள் சுமார் முப்பத்து மூன்றாயிரம். சுமார் ஆறாயிரம் உயர் தொடக்க பள்ளிகளுட்பட-அவற்றில் பணி செய்யும் ஆசிரியர்கள் ஒன்றே முக்கால் இலட்சம் பேர்; பயிலும் மாணவர்கள் அறுபத்தொரு இலட்சம் பேர். உயர்நிலைப் பள்ளிகள் மூவாயிரத்தில் பணி செய்யும் ஆசிரியர்கள் முக்கால் இலட்சம் பேர். பயிலும் மாணவர்கள் 17 இலட்சம் பேர். ஆக பள்ளி மாணவர்கள் எழுபத்தொரு இலட்சம் பேருக்கும் தரமான கல்வி அளிக்க வேண்டும் என்பதையும், ஆசிரியர்கள் இரண்டரை இலட்சம் பேரையும் சிறந்த கல்விப் பணி செய்திட ஊக்குவிக்க வேண்டும் என்பதையும் பள்ளிக் கல்வித் துறையும், அரசும் அடிப்படை நோக்கமாகக் கொண்டுள்ளன.

### அறிவியலுக்கு முக்கியத்துவம்

அறிவியல் கல்வித்தர மேம்பாட்டுக்காகப் பல திட்டங்கள் செயல்படுகின்றன. உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் ஆய்வுக் கூடங்கள் அமைக்கப்படுகின்றன. உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு அறிவியல் ஆய்வுக் கருவிகள் வாங்கப்படுகின்றன. இவ்வாண்டுடன் புதிய பாடத் திட்டம் 10-ஆம் வகுப்பு முடிய அமலுக்கு வந்துவிட்டது. அதில் அறிவியலுக்கு முதன்மைஅளிக்கப் பட்டு வருகிறது. அறிவியல் ஆசிரியர்கள் அனைவருக்கும் தக்க மறுபயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

### இருபது அம்சத் திட்டத்தால் மாணவர் பெற்ற பயன்கள்

நமது பாரதப் பிரதமரின் இருபது அம்சத் திட்டத்தில் ஒரு அம்சம் பாடநூல்களும், நோட்டுப் புத்தகங்கள் போன்றவையும் மலிவு விலையில் மாணவர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதாகும். தமிழ்நாட்டில் 1-3 வகுப்புகளில் பயிலும் மாணவர்களுள் மூன்றில் ஒரு பங்கினருக்கு அதாவது ஆண்டுக்குச் சுமார் 12 இலட்சம் பேருக்கு இலவசமாகப் பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. இது தவிர அனைத்துப் பள்ளிகளிலும் புத்தக வங்கிகள் நிறுவிடவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மைய அரசு கண்ட்ரோல் விலைக்குத் தரும் பேப்பரைக் கொண்டு மலிவு விலையில் நோட்டுப்புத்தகங்களைத் தயாரித்து விற்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கல்லூரி மாணவர்களுக்கும் இந்த மலிவு விலை நோட்டுப் புத்தகங்கள் கிடைக்கும்.



பள்ளி, கல்லூரி விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு உணவு போன்ற பொருள்கள் அனைத்தும் மலிவு விலைக்கு கிடைக்கும்படி செய்ய உணவுப்பொருள் வழங்கு துறை போன்றவை மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுவும் இருபது அம்சத் திட்டத்தின்கீழ் செய்யப்படும் மற்றொரு பணியாகும்.




தமிழ்நாட்டில் தற்பொழுது 6-11 வயதுச் சிறுவருள் 90 விழுக்காடு பேரும், 11-14 வயதுச் சிறுவருள் 52 விழுக்காடு பேரும், 14-17 வயதுச் சிறுவருள் 33 விழுக்காடு பேரும் பள்ளிக்குச் செல்கின்றவர். இன்னும் பள்ளிக்குச் செல்லாமல் இருக்கும் சிறுவர் சிறுமியருக்குக் கல்வியளிப்பதை அரசு தனது முதன்மையான கடமையாகக் கருதுகிறது. நம்நாட்டில் கல்விப் பணி முழுமையடைய வேண்டுமானால் அது மாற்று முறைக் கல்வி (Non-formal Education) மூலம்தான் இயலும் என்பது இப்பொழுது அனைத்து மட்டத்திலும் உணரப் பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மாற்று முறைக் கல்விவளர்ச்சிக்கென ஒரு தனி இயக்குநரை நியமித்துள்ளோம். இவ்வாண்டு இம் மாநிலத்தில் உள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களில், ஒவ்வொன்றிலும் ஒரு மாற்றுமுறைக் கல்விநிலையம் அமைக்கப்படும். ஏழ்மை காரணமாகவோ, பிற காரணங்களினாலோ பள்ளி வயதில் பள்ளிக்குச் செல்ல இயலாது போனவர்கள், சில வகுப்புகள் படித்த பிறகு நின்று விட்டவர்கள் போன்றவர்கள் எல்லாம், வயதாகி விட்ட போதிலும் மாற்று முறைக்கல்வி வகுப்புகளில் சேர்த்து கல்வி பெறலாம்.



### வளமான எதிர்காலமே நமது குறிக்கோள்!

நாட்டு முன்னேற்றத்துக்கும், சமுதாய முன்னேற்றத்துக்கும் கல்வி வளர்ச்சி முதன்மையானதொரு கருவியாகும். நம் நாட்டு மக்களுக்கு நிலையான—வளமான எதிர்காலத்தை உருவாக்கச் சமுதாய, பொருளாதாரத் துறைகளில் பல மாபெரும் திட்டங்களை உருவாக்கி, தீவிரமாகச் செயல்படுத்தி வரும் காலகட்டம் இது. கல்வித் துறையிலும் அவற்றுக்கு இசைந்த மாற்றங்களை ஆங்காங்கு செய்து கொண்டு நம் நாட்டின் வளமான எதிர்காலத்தைக் குறிக்கோளாகக் கொண்டு, அரசு, கல்வித் துறையினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகிய அனைவரும் கல்வி வளர்ச்சிப் பணியில் ஊக்கமாக தீவிரமாக ஈடுபடுவோமாக! வணக்கம்.

(சென்னை வானொலியில், 20-6-76 அன்று தமிழ்நாடு அரசின் கல்வித்துறைச் செயலாளர் திரு. சி. ஜி. ரெங்காஷ்யாம் அவர்கள் ஆற்றிய உரையின் தொகுப்பு.)



# நாட்டிற்காக நாமும் நம்மால் இயன்ற அளவு உதவிடுவோம்!

—ஆர். பாலசுப்பிரமணியம்,
துணை மண்டல இயக்குநர்,
தேசிய சேமிப்பு இயக்ககம்.

நம் பிரதமரின் 20-அம்சத் திட்டத்தின் சாதனைகள் நாடறிந்த உண்மை. உலகமே கண்டு வியக்கும் வண்ணம், பணவீக்கம் கட்டுப்படுத்தப்பட்டு, அத்தியாவசியப் பண்டங்கள் அனைத்தும் நியாயமான விலையில், தேவைக்கு ஏற்ற அளவில் கிடைக்கும் உண்மை நிலையை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. நாட்டு மக்களிடையே கடமை உணர்வும், கட்டுப்பாடுடன் செயல்படும் செயலாக்கமும் ஏற்பட்டுள்ளன. மக்கள் எல்லாரும் எல்லாமும் கிடைக்கப் பெற்று, பொருளாதார மேம்பாடுடைய வாழ்வை உருவாக்கிட, 20 அம்சத் திட்டத்தின் மற்ற அம்சங்களும் விரைந்து செயல்படுத்தப்பட வேண்டும். மூலதனப் பற்றுக்குறை, முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக அமைந்திடுவதை நாம் அனுமதிக்கக்கூடாது. நம் பிரதமர் கூறியதுபோல கடின உழைப்பு, உழைப்புக்கு ஏற்ற ஊதியம், அளவறிந்து வாழும் சிக்கன மனப்பாங்கு, சேமிப்பைச் சிறந்த வழியில் முதலீடு செய்யும் தீர்க்க தரிசனம் இத்தகைய மன உறுதியுடன் நாம் செயல்பட்டால்தான் நம் இலட்சியங்கள் நிறைவேறும்.

''அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல இல்லாகித் தோன்றாக் கெடும்'' என்ற வள்ளுவன் வாய்மொழியை மக்களிடையே பரப்பிடும் நோக்கத்தோடு 1948-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட மத்திய அரசின் தேசிய சேமிப்பு நிறுவனம், தனக்கிட்ட பணியினை இயன்ற அளவு வெற்றிகரமாக நிறைவேற்றி வந்துள்ளது என்பதைப் புள்ளி விவரங்கள் தெளிவுபடுத்துகின்றன.

முதல் 5 ஆண்டுத் திட்டகாலத்தில் சிறுசேமிப்பு மூலமாக 242 கோடியும், இரண்டாம் திட்ட காலத்தில் 401 கோடியும், மூன்றாம் திட்ட காலத்தில் 574 கோடியும் திரட்டப்பட்டுள்ளது. இவ்வளவு பெரும் தொகையைச் சேமித்து, அதை அரசின் சிறுசேமிப்புத் திட்டங்கள் வாயிலாக நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்கு அர்ப்பணித்திருப்பது திட்ட முன்னேற்றத்தில் மக்களுக்கு உள்ள ஈடுபாட்டையும், நம்பிக்கையையுமே காட்டுகிறது.

வசதி படைத்தோரும், வசதி அற்றோரும் பங்குபெறும் வகையில் பலதரப்பட்ட சிறுசேமிப்புத் திட்டங்கள் உள்ளன.

மாத ஊதியம் பெறும் அலுவலக ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்களிடையே ''சம்பளப்பட்டியல் சேமிப்புத் திட்டம்'' மிகவும் பிரபலமாகியுள்ளது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மாதச் சம்பளம் பெறும் 13 இலட்சம் ஊழியர்களில் ஏறக்குறைய 8 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் இத்திட்டத்தின் வாயிலாக ஒவ்வொருமாதமும் 5, 10, 15,20 ரூபாய் என்ற வகையில் ரூபாய் 60 இலட்சத்திற்கும் அதிகப்படியான தொகையைச் சேமித்து வருகிறார்கள்.

இதேபோன்று பள்ளிகளில் மாணவர்களுக்காக மாணவர்களாலேயே நடத்தப்படும் 'சஞ்சாயிகா' ( Sanchayika )என்றழைக்கப்படும் பள்ளிச் சேமிப்புத் திட்டம் தமிழ்நாட்டிலே 1,650 பள்ளிகளில் இப்போது நடத்தப்பட்டு வருகின்றது. 5 இலட்சத்துக்கு மேற்பட்ட மாணவ மாணவியர் இத்திட்டத்தில் இதுவரையில் பங்கு பெற்றிருக்கிறார்கள். அவர்கள் சேமித்து வைத்திருக்கும் தொகை ரூ. 13.5 இலட்சத்திற்கும் அதிகமே. பள்ளிப் பருவத்திலேயே சேமிக்கும் பழக்கத்தில் ஈடுபடுவதால் சிக்கனத்தைக் கற்றுக்கொள்வதோடு, பணத்தை வைத்து நிர்வாகம் செய்யும் திறனையும் பெறுகின்றார்கள். இவர்கள் நாளை பெரியவர்களாகி, சம்பாதிக்க ஆரம்பிக்கும்பொழுது சிக்கனப் பழக்கத்தைக் கடைப்பிடித்து வரவுக்குட்பட்ட செலவு செய்து, தங்கள் வீட்டிலும், நாட்டிலும் சுபிட்சத்தை நிலவச் செய்ய உதவுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

குறைந்த வருவாயுள்ளவர்கள் கூட, தங்களால் இயன்றபோது இயன்ற அளவில் சேமிக்க அஞ்சலக சேமிப்பு வங்கி பயன்படுகிறது. இந்தக் கணக்கில் ரூபாய் 200-க்குக் குறையாமல் 6 மாதங்கள் வரை வைத்திருப்பவர்களுக்கு ஆண்டுக்கு 2 முறை நடக்கும் பரிசுக்குலுக்கலில் ரூ. 50 முதல் ரூ. 1 இலட்சம் வரை பரிசு பெற வாய்ப்புள்ளது.

பணவீக்கத்தைக் குறைக்கவும், விலைவாசியின் உயர்வைத் தடுக்கவும் அரசினர் மேற்கொண்ட பல நடவடிக்கைகளில் ஊதியம் மற்றும் அகவிலைப்படி முடக்க நடவடிக்கையும் (Impounding of additional wages and Dearness allowances) ஒன்றாகும். இதன் விளைவாக இன்றையதினம் அத்தியாவசியப் பொருள்களின் விலை வீழ்ச்சியடைந்திருப்பதைக் காண்கிறோம்.

நம் இந்திய அரசு இப்பணியில் கண்ட வெற்றியை, பல வெளிநாட்டினர் புகழ்ந்துள்ளார்கள்! ''விலைவாசி உயர்வு'' எனும் வியாதியைப் போக்க, கொடுக்கப்பட்ட மருந்துதான் ஊதியமுடக்க நடவடிக்கை. மருந்து மிகக் கசப்பாக முதலில் இருந்தாலும் வியாதி விரைவில் குணமடைந்து விட்டதால் மருந்தின் தன்மையை சகித்துக் கொண்டோம். 'பொருள் விலையேற்றம்' என்ற வியாதி மீண்டும் நம்மைத் தாக்காதிருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை உணர்கிறோம்.

1974-75 ஆண்டுகளில் ஊதியம் மற்றும் அகவிலைப்படியை முடக்கி வைத்ததன் மூலம் இதுவரை ரூபாய் 1,000 கோடிக்கும் மேலாகச் சேர்ந்திருக்கிறது. இத்தொகையை ஏற்கெனவே வாக்களித்தபடி 5 ஆண்டுத் தவணைகளில் திருப்பித் தரவிருக்கிறார்கள். முதல் ஆண்டு தவணையாக ஜூலை மாதம் சுமார் 270 கோடி ரூபாயைப் பலதுறைகளில் பணி புரிவோர் ஒவ்வொருவரும் சுமார் ரூ. 40- முதல் ரூ. 500 வரை பெற இருக்கின்றார்கள். இவ்விதம் கிடைக்கும் அவ்வளவு பணத்தையும் வீணாக விரயம் செய்யாமல் அதில் குறைந்த பட்சம்பாதித்தொகையையாவது சிறந்த வகையில் முதலீடு செய்து வைத்தோமானால் நமது அவசர, அவசியத் தேவைக்கு, பின்னர் உபயோகப்படுத்த உதவும்.



அஞ்சலக 5 ஆண்டுத் தொடர் வைப்புத் தொகைத் திட்ட (Recurring Deposit) வாயிலாகச் சேமிப்பது பல வகையிலும் இலாபகரமானது. 60 ரூபாய் அல்லது 120 ரூபாயை அதாவது மாதம் 5 ரூபாய் அல்லது 10 ரூபாய் வீதம் ஓர் ஆண்டுக்கான மொத்தத் தொகையையும் 'அட்வான்ஸ் டெபாசிட்'டாகச் செலுத்தி விடலாம். இப்படிச் செய்வதன் மூலம் எந்த ஒரு நல்ல காரியத்துக்கும் பயன்படாமல் வீணாகப் பணம் செலவாவதைத் தடுக்கவும், 5 ஆண்டுகளுக்குப் பிறகு நம் குடும்பங்களில் நடக்கவிருக்கும் நல்ல பல காரியங்களுக்கு உபயோகப்படுத்தவும் முடிகிறது.

தொடர்வைப்புத் திட்டக் கணக்கில் போடும் பணத்துக்கு 9.25 சதவிகித வட்டி தரப்படுகிறது. மேலும் கணக்கை ஆரம்பித்த தேதியிலிருந்து ஓர் ஆண்டுக்குப் பிறகு எப்போது வேண்டுமானாலும் அவசரத் தேவைக்குச் சேர்ந்திருக்கும் மொத்தப்பணத்தில் பாதியை உடனடியாகக் கடனாகப் பெறவும் வசதியிருக்கிறது. வாரிசு நியமனம் மற்றும் வேறு ஊருக்கு கணக்கை மாற்றிக் கொள்ளும் வசதியும் உள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக 2 ஆண்டு வரை தொடர்ந்து பணம் செலுத்திய பிறகு, கணக்கு வைத்திருப்பவர் தெய்வாதீனமாக இறக்க நேரிட்டால், அவரின் வாரிசுதாரருக்கு உடனடியாக 5 ஆண்டு முடிவில் கிடைக்கும் மொத்தத் தொகையும் கிடைக்கிறது. அதாவது மாதம் 5 ரூபாய் வீதம் சேமிப்போருக்கு 375 ரூபாயும், 10 ரூபாய் வீதம் சேமிப்போருக்கு 750 ரூபாயும் கிடைக்கிறது. இத்தகைய பாதுகாப்புடைய சேமிப்பு, மற்ற எந்த பாங்குகளிலும் நடத்தப்படும் தொடர்வைப்புத் திட்டக் கணக்குகளில் கிடைப்பதில்லை.

இந்த அஞ்சலகத் தொடர் வைப்புத் திட்டம், தமிழ்நாட்டிலுள்ள பல அலுவலகங்களில் பணிபுரியும் மாதாமாதம் சம்பளம் வாங்குவோருக்குப் புதிதல்ல! இந்தக் கணக்கிலேதான் தமிழ்நாட்டில் சுமார் 8 இலட்சம் பேர் அவரவர்கள் சக்திக்குத் தகுந்தபடி மாதாமாதம் 5, 10, 15, 20 ரூபாய் என்ற வகையில் சம்பளப்பட்டியலில் பிடித்தம் செய்வதன் மூலம் சேமித்து வருகிறார்கள். 5 ஆண்டு முடிவில் கணக்கு பூர்த்தியானவுடன் மொத்தத் தொகையையும் அவரவர்கள் பணிபுரியும் அலுவலகத்திலேயே அஞ்சல் நிலைய அலுவலர்களால் பட்டுவாடா செய்யப்படுகிறது. அஞ்சலகத்திற்குப் போய்ப் பணம் பெறத் தேவையில்லை. இதன் காரணமாக மேலும் ஒரு புதிய கணக்கைத் தொடர்ந்து சேமிக்கவும் இதுவரை இத்திட்டத்தில் சேராதோர் புதிய கணக்கை ஆரம்பிக்கவும் முற்படுகின்றனர்.

தொடர் வைப்புத் திட்டம் தவிர, ஒன்று, இரண்டு, மூன்று, ஐந்து ஆண்டு அஞ்சலகக் கால வரை வைப்புத் திட்டங்களிலும் (Time Deposit) முதலீடு செய்யலாம். இதற்கு 8 முதல் 10 சதவீத வட்டி தரப்படுகிறது.




என்னுடைய பணிவா
வேண்டுகோள் என்னவென்
ஜூலை மாதத்தில், முடக்கப்ப
திருப்பிப் பெறவிருக்கும் ஊதி
மற்றும் அகவிலைப்படி
(Refund of Impounded wages a
dearness allowances.) ஒவ்வொ
நபரும் இப்போதே அவர
களுடைய நிர்வாகத்தினருக்
தங்களுக்குக் கொடுக்கவிருக்
தொகையிலிருந்து ஒரு கு
பிட்ட பகுதியைப் பிடித்
செய்துதங்கள் பெயரில் அஞ்
சுத் தொடர்வைப்புத் தொ
கணக்கிலோ ஒன்று, இரண்
மூன்று, ஐந்து ஆண்டுக் காலவ
வைப்புத் தொகைக் கணக்கி
அல்லது 7 ஆண்டு தேசிய சே
புப் பத்திரத்திலோ முதல
செய்யும்படி விண்ணப்ப
கொடுத்து விடவேண்டும். இ
கிணங்க, நிர்வாகத்தினர் வி
ணப்பத்தில் குறிப்பிட்ட
தொகையைப் பிடித்தம் செய்
அஞ்சலகத்தில் முதலீடு செய்
உதவுவார்கள். இல்லையெனி
கையில் மொத்தப் பணத்தைய
பெற்ற பிறகு முதலீடு செய்ய
மென்றிருந்தால், அது அவ்வள
சாத்தியமாகாது. முதலீடு
நடக்காது.

இது குறித்து மத்திய, மாநி
அரசு உயர் அலுவலர்களு
தனியார்துறை நிர்வாகிகளு
Chamber of Commerce, Sou
India Mill Owners Associatio
L.I.C. ஆகியவையும், மேலு
பல தொழிற்சங்கத் தலைவர்களு
மற்றபலரும் அவரவர்களுக்கு
சம்பந்தப்பட்ட துறையில் பன
புரிவோருக்கு அன்பு வேண்
கோள் விடுத்துள்ளார்கள். இத
விளைவாக ஆயிரக்கணக்கானே
தங்களுக்கு ஜூலை மாதத்தி
கிடைக்கவிருக்கும் முடக்க
தொகையிலிருந்து ஒரு பகுதியை
அஞ்சலகத்தில் முதலீடு செய்ய
பிடித்தம் செய்து கொள்ளும்ப
தாமாகவே விண்ணப்பித்து
கொண்டு வருகிறார்கள்.

இவ்விதம் ஊதிய முடக்க
தொகையில் ஒரு பகுதியை மு
வீடு செய்வதன் மூலம், நம
கென, அத்தியாவசியமான நேர
தில் உதவ ஒரு கணிசமா
தொகை எப்போதுமே தயாரா
நிலையில் இருப்பதோடு, பொரு
களின் விலையேற்றம் ஓரள
கட்டுப்படுத்தப்பட்டு, அதனிலு
மேலாக நாட்டின் அபிவிருத்தி
பணிகளுக்கு நம் சேமிப்பு த
காலிகமாகப் பெரும் துணையா
அமையும். எல்லாவற்றுக்கு
மேலாக, நாடு நமக்கு என்ன செ
தது என்று கேளாமல், 'நாட்டி
காக, நாமும், நம்மால் இயன்
அளவு உதவிடுவோம்' என்ற மன
நிறைவும் ஏற்படும்.

# சென்னை, எண்ணெய் தூய்மைப் படுத்தும் ஆலையின் சாதனைகள்



கடந்த ஓர் ஆண்டுக் காலத்தில் நாட்டில் தொழில் துறை உற்பத்தி பொதுவாக உயர்ந்து வந்த போக்குக்கு ஏற்ப சென்னை, எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலையும் (Madras Refineries) எண்ணெய் தூய்மைப்படுத்தும் பணியை 2 இலட்சம் டன் அதிகரித்து 27 இலட்சம் டன்னாக உயர்த்தியது. இதற்கு முந்தைய ஆண்டில் 25 இலட்சம் டன் கச்சா எண்ணெய்யை இந்நிறுவனம் தூய்மைப்படுத்தியது. அதே போன்று சமையல் எரி வாயு உற்பத்தியும் மும்மடங்கு அதிகரித்தது. 19.5 இலட்சம் சிலிண்டர், சமையல் எரி வாயு உற்பத்தி செய்யப்பட்டது. இதற்கு முந்தைய ஆண்டில் 6.5 இலட்சம் சிலிண்டர், சமையல் எரிவாயு தான் உற்பத்தி செய்யப்பட்டது. கடந்த ஆண்டில் ஆஸ்பால்ட் உற்பத்தியும் 80,000 டன்னிலிருந்து 2,40,000 டன்னுக்கு அதிகரித்தது.

1969-70-இல் இந்நிறுவனத்தின் மொத்த விற்று முதல் 27 இலட்சம் ரூபாய்தான். ஆனால் 1975—76-இல் இது ரூ. 250 கோடியாக அதிகரித்தது. ஆண்டு மொத்த விற்று முதல் அடிப்படையில் பார்க்கும்போது முதல் 10 அரசுத் துறை நிறுவனங்களில் 7-வது இடத்தை வகிக்கிறது சென்னை எண்ணெய் தூய்மைப்படுத்தும் நிறுவனம்.

அந்நியச் செலாவணியை ஈட்டுவதிலும் இந்நிறுவனம் சிறந்து விளங்கியுள்ளது. 35,000 டன் உயர் ரக ஆஸ்ஃபால்ட் ஏற்றுமதி செய்து 35 இலட்சம் அமெரிக்க டாலர் மதிப்புக்கு அந்நியச் செலாவணி பெற்றது இந்நிறுவனம். இரயில்வேக்களுக்கு 13,660 மெட்ரிக் டன் மசகெண்ணெய் வழங்கி ரூபாய் 1.56 கோடிக்கு அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தியுள்ளது.

நிர்வாகத்தில் தொழிலாளர்களும் பங்கு கொள்வதை ஊக்குவிப்பதற்காக சென்னை எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலையில் உற்பத்தி மட்டத்தில் கூட்டுச் சபைகளும், பல்வேறு மட்டங்களில் செயற் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. சிறந்த முறையில் பணியாற்றுவதால் இந்நிறுவனத்தின் உற்பத்தி அதிகரித்துள்ளது. எல்லாத் துறைகளிலும் சிக்கனமும் கடைப்பிடிக்கப்படுகிறது. எரிபொருளைச் சிக்கனப்படுத்தியதன் மூலம் ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் மிச்சப்படுத்தப்பட்டுள்ளது. அன்றாடம் உபயோகிக்கப்படும் தண்ணீர் அளவும் 3 இலட்சம் காலன்களிலிருந்து 26 இலட்சம் காலனாகக் குறைந்துள்ளது.

சென்னை எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலை, மற்ற எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலை ஊழியர்களுக்கும், எண்ணெய் தூய்மைப்படுத்துதல் சம்பந்தப்பட்ட மற்ற நிறுவனங்களின் ஊழியர்களுக்கும் தொழில் நுட்பப் பயிற்சி அளித்து வருகிறது. ஐ.நாவின் சிறப்புத் திட்டங்களின்படி வெளிநாடுகளுக்கும் நிபுணர்களை அனுப்புகிறது இந்நிறுவனம். தொழில் பயிலுநர் திட்டத்தின்படி 80 தொழில் பயிலுநர்கள், பொறியியல் பட்டதாரிகள், டிப்ளமோதாரர்கள் ஆகியோர் தொழில் பயிற்சி பெறுகின்றனர். குறியளவில் இத்தகையோரின் எண்ணிக்கை இரு மடங்காகும்.

சென்னை எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலை சுற்றுப்புறச் சூழ்நிலை பாதிக்கப்படாமல் இருக்கப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இந்த ஆலைப் பகுதியில் 1,35,400 சதுர அடி நிலப்பரப்பில் புல்வெளி உருவாக்கப்பட்டு உள்ளது. இந்த ஆலைப் பகுதியில் சுமார் ஆயிரம் செடிகள் நடப்பட்டுள்ளன. அவை விரையில் வளர்ந்து மரங்களாகி அப்பகுதியை அழகுறச் செய்யும். இந்த நிறுவன ஊழியர்கள் வீட்டு வசதிக்காக 1975—'76-இல் 38 இலட்சம் ரூபாய் கடன் பெற்றுள்ளனர். இது வரை வீட்டு வசதித் திட்டங்களுக்காக இந்நிறுவன ஊழியர்களுக்குக் கிட்டத்தட்ட ரூ. 1.20 கோடி வழங்கப்பட்டுள்ளது.

## வளரும் தமிழகத்தில்

# தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்

ஆர். சண்முகம், ஐ.ஏ.எஸ்.,
நிருவாக இயக்குநர்,
தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்.

'டான்சி' என்ற பெயரில் நாட்டு மக்களுக்கு நன்கு அறிமுகமாகியுள்ள தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்திற்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. பொதுத் துறை நிறுவனங்களுள், பலதரப்பட்ட தொழில்களை ஒருங்கிணைத்துத் திறம்படச் செயல்படுத்தும் ஒரே நிறுவனமாக 'டான்சி' செயல்பட்டு வருகிறது. 57 உற்பத்திக் கூடங்களை மாநிலத்தில் பலப்பல இடங்களில் நிறுவி, செம்மையாகச் செயல்படும் 'டான்சி' நிறுவனம் 1965-ஆம் ஆண்டு துவக்கப்பட்டதாகும். அகில பாரதத்தின் ஆக்கப் பணிகளுக்காக அயராது பாடுபடும் நமது பாரதப் பிரதமர் அவர்கள், நாடு முன்னேற—நாட்டு மக்கள் நல்வாழ்வு பெற நல்ல பல திட்டங்களை உருவாக்கி அவற்றை விரைவில் நிறைவேற்ற எடுத்துள்ள நன் முயற்சிகள் அனைத்தையும் நாம் அறிவோம். நம் தமிழ்நாட்டில் அந்த நல்ல திட்டங்களை விரைந்து நிறைவேற்ற சமீப காலமாக அரசுத் துறையினர் எடுத்துக் கொண்ட துரித நடவடிக்கைகளின் விளைவாக, தமிழகத்தில் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றங்கள் பல காணப்பட்டுள்ளன. தொழில் துறையில் குறிப்பாக தொழில் தகராறுகள் (Industrial Disputes) வெகுவாகக் குறைக்கப்பட்டு, தமிழகத்தில் தொழில் அமைதி நிலவுவதை நாம் நன்கு காணுகின்றோம்: நம் பாரதப் பிரதமர் நமக்கு அளித்துள்ள திட்டங்கள் பலவற்றைத் தமிழக அரசுத் துறை நிறுவனங்களுள் ஒன்றான "தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்" எவ்வாறு மேற்கொண்டு, நாடு வளர, மக்கள் நல்வாழ்வு பெறச் சேவை செய்து வருகின்றது என்பதை விளக்கிட விழைகின்றேன்.

ஆரம்பக் காலத்தில் ஆண்டொன்றிற்கு சுமார் ரூ. 400 இலட்சம் மதிப்புள்ள பொருள்களை உற்பத்தி செய்து வந்த இந்த நிறுவனம், தனது உற்பத்திக் கூடங்களைப் பொருளாதார ரீதியில் வலிமையுள்ளதாக ஆக்கி, இடைப்பட்ட இன்னல்கள் பலவற்றையும் கடந்து, உற்பத்தியைக் கணிசமான அளவு உயர்த்தி, சில உற்பத்திக் கூடங்களை வேறு அரசுத் துறை நிறுவனத்திற்கு மாற்றிய பிறகுங்கூட, சென்ற 1975-76 நிதி ஆண்டில் ரூ. 1,100 இலட்சம் மதிப்புள்ள பொருள்களை உற்பத்தி செய்யுமளவிற்கு அரிய சாதனைகள் புரிந்திருக்கிறது. மேலும், உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடன் தொழிலாளிகளுக்கு ஊக்க ஊதியம் அளிக்கும் திட்டங்கள் இந்நிறுவனத்தின் வார்ப்படத் தொழிற்சாலைகள் மற்றும் மூலாம் பூசும் தொழிற்சாலைகளில் செயல்படுத்தப்படுகின்றன.

"'டான்சி'யின் கீழ் இயங்கி வரும் தொழிற்சாலைகள் பல வகைப்பட்டவையாகும். அவை பெரிய கட்டுமானத் தொழிற்சாலைகள், பொறியியல் தொழிற்சாலைகள், இரும்பு பர்னிச்சர் தொழிற்சாலைகள், மர பர்னிச்சர் தொழிற்சாலைகள், கருவிக் கூடங்கள், இரும்பு வார்ப்படத் தொழிற்சாலைகள், விவசாய உபகரணங்கள் செய்யும் தொழிற்சாலைகள், தோல் தொழிற்சாலைகள், 'மோபெட்' தொழிற்சாலை ஆகும்.





மத்திய இரயில்வேயினருக்காக 'ஜான்சி' என்ற இடத்தில், 'டான்சி' நிறுவியுள்ள 100 மீட்டர் உயரமுடைய 'மைக்ரோவேவ்' கம்பங்கள்.

ின கட்டுமானத் தொழிற்
கள் (Structural Works)
சி' யின் ஓர் ஆண்டின்
த உற்பத்தியில், கால்
உற்பத்தியைத் தருகின்றன.
தொழிற்சாலைகள் சென்னை
த்தூரிலும், திருச்சி மாவட்
ல் திருவெறும்பூரிலும்,
மாவட்டத்தில் மேட்டூர்
பிலுமுள்ளன. மேட்டூர்
யில் உள்ள தொழிற்சாலை
கட்டுமான வேலைக்கான
களுடன், தென்னிந்தியாவி
மிகப் பெரிதாக உள்ள
ம் பூசும் அறையும் உள்ளது.
ல்வேயினருக்காக இந்தத்
ழிற்சாலையில் செய்து தரப்
''மைக்ரோவேவ்'' கம்
ன் அனைத்திந்தியப் பாராட்
பெற்றுள்ளன. இதே
றயில் தபால் தந்தி துறை
நக்கும் வானளாவிய கம்
ள் பலவற்றை 'டான்சி'
க் கொடுத்துள்ளது. இவற்
ஒன்று நம் நாட்டினர் விண்
ியில் அனுப்பியுள்ள செயற்
கோள் ஆர்யப்பட்டாவிட
ந்து வரும் சமிக்ஞைகளை
து அளிக்கின்றது.

ந்தந்த மாவட்டங்களின்
றியியல் தேவைகளைப் பூர்த்தி
வதற்காக டான்சியின்
றியியல் தொழிற்சாலைகள்
gineering Works) திருப்
சூர், செம்பரம்பாக்கம்,
ப்புரம், மாயவரம், கரூர்,
ப்பூர், நாமக்கல், திருவண்ணா
, கிருஷ்ணகிரி, தஞ்சாவூர்,
ச்சி, மதுரை, விருதுநகர்,
ளியூர், தூத்துக்குடி ஆகிய
ங்களில் செயல்பட்டு வரு
றன.

டான்சியின் கீழ் இயங்கிவரும்
ம்பு பர்னிச்சர் தொழிற்
லகள் வேலூர், கும்பகோணம்
ளி, ராஜபாளையம் ஆகிய
ங்கு இடங்களில் உள்ளன.
லுவலகங்களுக்கும், அழகிய
லங்களுக்கும், பலவகைத்
ாழிலகங்களுக்கும் தேவைப்
ம் மேஜை, நாற்காலி, அல
ி, கட்டில் போன்ற பர்னிச்சர்
கைகளை 'டான்சி' திறம்பட
பத்தி செய்கின்றது. மருத்துவ
னகளுக்கான பர்னிச்சர் வகை
ாயும் இந்தத் தொழிற்சாலைகள்
ய்து அளிக்கின்றன. இருதய
ாயால் பாதிக்கப்பட்டவர்கள்
ிச்சிக்குட்படாமல், சாய்ந்த
ையமே 'எக்ஸ்ரே' (X-ray)
ப்பதற்கு ஏற்ப திருத்தியமைக்
பட்ட பௌலர் (Fowler)
டில் ஒன்றையும் டான்சி உரு
க்கி யுள்ளது.

மர பர்னிச்சர் உற்பத்திக்காக
... தொழிற்சாலைகள்



வள்ளுவர் கோட்டத்தின் அரங்கத்தில் 'டான்சி' நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ள இருக்கைகள்.

பரவலாக கிண்டி, கிருஷ்ணகிரி, கடலூர், சேலம், மன்னார்குடி, மதுரை, புதுக்கோட்டை, திருநெல்வேலி, பத்தமடை, பொள்ளாச்சி ஆகிய பத்து இடங்களில் செயல்பட்டு வருகின்றன. தரத்தால் உயர்ந்த இந்தத் தொழிற்சாலைகளின் பொருள்கள் பொது மக்களைப் பெரிதும் கவர்ந்து மாநில முழுவதும் நன்கு அறிமுகமாகியிருக்கின்றன. உறுதிக்கும் எழிலுக்கும் எடுத்துக் காட்டான மரச்சாமான்கள் இவை. தமிழகத்தில் பெரும்பான்மையான பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் டான்சி மர பர்னிச்சர் வகைகள் உபயோகப்படுத்தப் படுகின்றன என்பது கண்கூடு.

கிண்டி, அம்பத்தூர், ஈரோடு ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள டான்சியின் கருவிக் கூடங்களில் (Tool Rooms) கிண்டி கூடம் அனைத்து இந்தியாவிலும் நன்கு அறிமுகமாகியிருக்கின்றது. பாரத விண்வெளி ஆராய்ச்சி அமைப்பிற்குப் பல கருவிகளை இவை செய்து அளித்துள்ளன.

கிண்டி, காட்பாடி, தஞ்சாவூர் திருநெல்வேலி, ஈரோடு ஆகிய இடங்களில் செயல்பட்டு வரும் வார்ப்படத் தொழிற்சாலைகள், குடிநீர் வாரியம், வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் ஆகிய பொதுத்துறை நிறுவனங்களுக்கும், இன்னும் தனியார் . துறை நிறுவனங்களுக்கும் இரும்பு வார்ப்படக் குழாய்களையும், பிற வார்ப்படப் பொருள்களையும் செய்து அளிக்கின்றன.

விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் டான்சி உற்ற தோழன் என்பதனை மக்கள் நன்கு அறிவர். கலப்பை, இழுவை (Trailer) போன்ற பலவகை விவசாயத் தேவைகளை திருச்சியில் இயங்கி வரும் விவசாயக் கருவிகள் தொழிற்சாலை (Farm implement Unit) உற்பத்தி செய்கிறது. விவசாயிகளுக்கு மிகவும் தேவையான, பூச்சிகளைக் கட்டுப்படுத்த உதவும் உபகரணங்கள் (Pest Control) கும்பகோணம் டான்சி தொழிற்சாலையில் (Equipments) உற்பத்தி செய்யப்படுகின்றன.



தோல் துறையில் டான்சி பெரும் சாதனைகள் புரிந்திருக்கின்றன. வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள விண்ணமங்கலம் என்ற சிற்றூரில் இயங்கிவரும் தோல்



பதனிடும் தொழிற்சாலை ('TANSI' Tannery) பலவகை தோல்களை (Finished leathers) அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் அனைத்துலகிற்கும் நன்கு அறிமுகமாகியிருக்கின்றது. இதே ஊரில் இயங்கிவரும் டான்சியின் ஆட்டு உரோமத் தொழிற்சாலையின் (Wool Processing Centre) உற்பத்தி அனைத்துமே அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.



தோல் துறையில் இயங்கி வரும் மற்ற மூன்று தொழிற்சாலைகளில் இரண்டு சென்னை பெரம்பூரிலும், மற்றொன்று பல்லவபுரத்திலும் இயங்கி வருகின்றன. இவைகள் காலணிகள், (Foot Wear) கையுறைகள் (Gloves) தோலினுலான இன்ன பிற பொருள்களை உற்பத்தி செய்கின்றன. பெரம்பூர் தொழிற்சாலை சில நாட்களுக்கு முன்பு ஏற்றுமதி ஆணை (Export Order) ஒன்றைப் பெற்று அதற்கான உற்பத்தியில் ஈடுபட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழக மக்களுக்கு மற்றொரு மகிழ்ச்சி தரும் செய்தி, 'மோபெட்' இரு சக்கர மோட்டார் சைக்கிள்களை 'டான்சி' உற்பத்தி செய்ய முனைந்திருப்பது. 'டான்சி மோபெட்' விலை மலிவானது. பராமரிப்புச் செலவு குறைவானது. 'டான்சி மோபெட்' வண்டிகளைத் தருவித்து அளிப்பதற்குப் பதிவு செய்து கொண்ட பொதுமக்கள், தொடர்ந்து தங்கள் நல் ஆதரவை இந்த நிறுவனத்திற்கு அளிப்பார்கள் என நம்புகிறேன்.





அம்பத்தூரில் அமைந்துள்ள 'டான்சி' கருவிக்கூடத்தில் (Tool Room) ஒரு பகுதி.

முன் கூறிய பிரிவுகளில் அடங்காது இன்னும் பத்துத் தொழிற்சாலைகள் பலவகைப்பட்ட உற்பத்திகளுக்காக இயங்கி வருகின்றன. இவைகளில் எட்டு தொழிற்சாலைகள் கிண்டியிலேயே அமைந்துள்ளன. கண்ணாடி உபகரணங்கள் தொழிற்சாலை, (Scientific Glass Works) கல்லூரிகள், பள்ளிகள், பிறதொழில் நிறுவனங்களுக்குத் தேவையான கண்ணாடி உபகரணங்களை உற்பத்தி செய்கிறது. தகடு அழுத்தப்பட்டறை (Sheet Pressing Works) அழுத்தப்பட்ட உபகரணங்களை பிற தொழிலகங்களுக்குச் செய்து கொடுக்கிறது. இவை தவிர கிண்டியிலுள்ள மற்ற தொழிற்சாலைகள் டான்சி கொல்லுலை (Forging Works), இயந்திர இயல் தொழிற்சாலை (Machine Shop) அழுத்த அச்சு வார்ப்படத் தொழிற்சாலை (Peessure Die Castings) மின்¥ கம்பித் தொழிற்சாலை (Enamelled Wires Factory) மின் கருவிகள் பழுது பார்க்கும் தொழிற்சாலை (Electrical Works), டான்சி அச்சகம் ('Tansi' Press) ஆகியவை ஆகும்.

கோவையில் அமைந்துள்ள டான்சி கொல்லுலை, மின் வெப்பத்தால் எஃகுப் பொருள்களை சரிநிலைப் படுத்தும் சாதனங்களையும் பெற்றிருக்கிறது. திண்டுக்கல்லில் உள்ள பூட்டுத் தொழிற்சாலை ரயில் பெட்டித் தொழிற்சாலைக்குத் தேவையான சிறப்புப் பூட்டுக்களை உற்பத்தி செய்வதுடன், நகராட்சிகளுக்கும் பால்வள நிறுவனத்திற்கும் எஃகு விற்பனைச் சாவடிகளைத் (Steel Bunks) தயார் செய்கிறது.

டான்சியில் தயார் செய்யப்படும் பொருள்கள் ஆறு விற்பனைக் கூடங்கள் மூலமாக விற்பனை செய்யப்படுகின்றன. இவைகளில் மூன்று சென்னை ஜார்ஜ் டவுன்,

புத்துணர்வு பெற்ற

புதுமை மிகு நாடு—1975-76

# மின் உற்பத்தியில் புதிய சாதனை

- 79,764 மில்லியன் யூனிட் மின் சக்தி உற்பத்தி ஒரு புதிய சாதனை. நாள்தோறும் 260 மில்லியன் யூனிட் உற்பத்தியாகிறது.

- 25 புதிய மின் திட்டங்கள் மூலம் 1,800 மெ. வா. மின்சக்தி சேர்க்கப்பட்டது. இவற்றில் 20 திட்டங்கள் 1975 செப்டம்பருக்கும் 1976 மார்ச்சுக்கும் இடைப்பட்ட காலத்தில் நிறுவப்பட்டவை.

- நடப்பு ஆண்டில், 20,50,000 ஹெக்டர் நிலம் புதிதாகப் பாசன வசதி பெறும்.

- புதிதாக 6,356 கிராமங்கள் மின்வசதி பெற்றன. இதைச் சேர்ந்த மொத்தம் 1,74,079 கிராமங்கள் மின் வசதி பெற்றுள்ளன. 1,40,000 பம்பு செட்டுகளும் மின் வசதி பெற்றுள்ளன.

davp 76/89

## தருககுறள ஆராயசச நலயம



வள்ளுவர் கோட்டத்தில் உள்ள திருக்குறள் ஆராய்ச்சி நிலையத்தின் எழில்மிகு கதவுகள் 'டான்சி'யால் உருவாக்கப்பட்டவையே!

அண்ணாசாலை, ராயப்பேட்டை ஆகிய இடங்களில் செயல்படுகின்றன. எஞ்சிய மூன்று மதுரை, கோவை, திருச்சி ஆகிய நகரங்களில் அமைந்திருக்கின்றன.

இனிய வாழ்வு மலர்ந்திட பாரதப் பிரதமரால் அறிவிக்கப்பட்டுள்ள இருபது அம்சத் திட்டங்கள் இனிதே செயல்பட 'டான்சி' தன்னலியன்ற முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

நிறுவனத்தின் செலவுகளில் சிக்கனம் கடைப்பிடித்து, உற்பத்தி செய்யப்படும் பொருள்களில் விலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிலத்தடி நீரைப் பயன்படுத்தும் திட்டத்திற்காக குடிநீர் வாரியத்திக்காக 'டான்சி' இரும்பு வார்ப்படக் குழாய்களைத் தயார் செய்து அளிக்கிறது. முடுக்கி விடப்பட்டுள்ள மின்சாரத் திட்டங்களுக்காக 'டான்சி' மின்வாரியத்திற்குப் பாதை உபகரணங்களையும், இன்ன பிற பொருள்களையும் உற்பத்தி செய்கிறது. தொழிலாளர்கள் அன்றாட நிர்வாகத்தில் பெரும் பங்குகொள்ளும் பொருட்டு இந்நிறுவனத்தின் ஒவ்வொரு தொழிற்கூடத்திலும்



'டான்சி'யால் உருவாக்கப்பட்டுள்ள 'மோபெட்' மோட்டர் சைக்கிள்.

கூட்டு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்தக் குழுக்களில் தொழிற்சாலை மட்டத்தில் நிர்வாகத்தில் பொறுப்பிலுள்ளோர் மற்றும் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கின்றனர். இக்குழுக்களின் முக்கிய அலுவல்கள்:

1. தொழிலாளிகள் சுமுகமாகப் பணியினை மேற்கொள்ள ஏதுவாகும் சூழ்நிலைகளைப் பெருக்குதல்.

2. தொழிற்கூடங்களின் உற்பத்தி அளவு மற்றும் திறன் இவைகளில் முன்னேற்றம் காணுதல்.

3. பொதுவாக நிருவாகத்துடன் தொழிலாளர்கள்தொடர்பு எளிதாக்கப்படுதல் ஆகியவைகளாகும்.

தொழிற்சாலையில் உள்ள ஊழியர்களின் எண்ணிக்கையைப் பொருட்படுத்தாமல் இந்நிறுவனத்தின் எல்லாத் தொழிற்கூடங்களிலுமே இக்குழுக்கள் அமைக்கப்படுகின்றன.

மற்றொரு அம்சமான பயிற்சித் திட்டம் இந்நிறுவனத்தில் செவ்வனே நடைபெறுகிறது. எல்லாத் தொழிற்கூடங்களிலும் உள்ள பயிற்சி இடங்களைச் சேர்த்து தொழில் பயிற்சி பெற்றவர்களுக்கான இடங்கள் மொத்தம் 298, பொறியியல் பட்டதாரிகள் பயிற்சி இடங்கள் 28, 'டிப்ளோமா' பெற்றவர்களுக்கு பயிற்சி இடங்கள் 30. மற்றும் அலுவலக வேலை சம்பந்தமான பயிற்சி இடங்கள் 13 ஆகும். இவைகளில் தொழிற்பயிற்சி பெற்றவர்களுக்கான இடங்கள் எல்லாமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. மற்ற இடங்கள் சமீபத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. அவைகளுக்கும் துரிதமாக பயிற்சியாளர்கள் சேர்க்கப்படுகின்றனர்.

அவசர நிலைமை அகில இந்தியாவிலும் அறிவிக்கப்பட்ட பிறகு, நாடு பலதுறைகளில் முன்னேற்றம் கண்டுள்ளது என்பதனை அனைவரும் நன்கு அறிவோம். அரசினரின் அரிய உதவிகளாலும், அறிவுரைகளாலும் சீரிய முறையில் செயல்பட்டு வரும் 'டான்சி' நிறுவனத்திற்குப் பொதுமக்களும் தொடர்ந்து தங்களது நல் ஆதரவை நல்க வேண்டும் என வேண்டுகின்றேன்.

(நன்றி: சென்னை வானொலி நிலையம்).



# காமாலை

டாக்டர்
எம். எஸ். ராமச்சந்திரன்,
எம்.டி.,
ரீடர், மருந்தியல் துறை,
ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி,
சென்னை.

சென்னையைப் போன்ற பெரிய நகரங்களில் அடிக்கடி தோன்றி, பலரையும் பிடிக்கும் தொற்று நோய்களுக்குள் காமாலையும் ( Jaundice ) ஒன்றாகும். பல சமயங்களில் பெருவாரியான அளவில் (Epidemic form) இது மக்களை வாட்டுவதும் உண்டு. இவ்வாறு இந்நோய் தோன்றியவுடன் மக்கள் குடிதண்ணீரைக்கொதிக்க வைத்துக் குடிக்க வேண்டுமென்றும், சுகாதார முறைகளைக் கைக்கொள்ள வேண்டுமென்றும், நகர நோய்த் தடுப்பு அதிகாரிகள் செய்தித்தாள்களில் அறிக்கை விடுவதைப் பலரும் பார்த்திருப்பர்.

காமாலை என்றால் என்ன? அதன் இயல்புகள் யாவை? அது எவ்வாறு நம்மைப் பிடிக்கிறது என்பன போன்ற சில அடிப்படைகளைத் தெரிந்து கொள்வதும், இதனை வராமல் தடுப்பது எவ்வாறு, வந்தபின் அதனை எவ்வாறு போக்கிக் கொள்ள வேண்டும் என்பன பற்றி அறிந்து கொள்வதும் நல்லது.

நம் உடம்பினுள் இரத்தத்தில் கலந்துள்ள பித்தநீர் (Bile) இருக்க வேண்டிய அளவில் மிகுந்துவிடுமானால் காமாலை நோய் என்று அந்த நிலையைக் குறிக்கிறோம்.

### நோயின் அறிகுறிகள்

இந்த நோய் வந்தால் ஓரளவு ஜுரமும், உணவைக் கண்டாலே வெறுத்து ஒதுக்குகின்ற நிலையும், சிகரெட் முதலானவற்றை ஒதுக்குகின்ற நிலையும் ஏற்படும். அடிக்கடி வாந்தி எடுப்பதும், சில சமயங்களில் வயிற்றுப் போக்கும் ஏற்படும். இவையே இந்நோயின் இயல்புகளாகும்.

### பரவும் முறை

இந்த நோய் ஒருவரிடமிருந்து மற்றவர்கட்குப் பரவுவதற்கு மூலகாரணமாக உள்ளது ஒரு வகை 'வைரஸ்' என்று கூறப்படும் உயிர் அணுவாகும். நோய் உடையவர்களுடன் ஒட்டி உறவாடும்போது இது தொற்றுகிறது. தொற்றப்பட்ட உணவு, தண்ணீர், பால், ஷெல்மீன் இவற்றின் மூலமாக இது பரவுகிறது. நோயுற்றவர்களுடைய மலம், சிறுநீர் முதலியவற்றில் உள்ள இந்தநோயின் மூல காரணமான 'வைரஸ்' அங்கு, இங்கு என்னாமல் எங்கும் நிறைந்திருக்கும். ஈயின் மூலம் முன்னர்க்கூறிய உணவு, தண்ணீர் முதலியவற்றில் தொற்றியபிறகு அவற்றை உட்கொள்ளும் அனைவருக்கும் ஒட்டிக் கொள்கிறது.

கொள்ளை நோயாக இந்த நோய் பரவுவதற்கு வாய்ப்பாக உள்ள இடங்கள், பல இடங்களிலிருந்து வரும் பலரும் கூடும் இடங்களாகிய பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், தொழிற்சாலைகள் முதலியவைகளாகும். குறிப்பாக சென்னையைப் போன்ற பெரிய நகரத்தில் அதிக மக்கள் கூட்டமும், இடநெருக்கடியும், சுகாதாரக் குறைவும் உள்ள (திருவல்லிக்கேணி, இராயப்பேட்டை, ஜார்ஜ் டவுன் முதலிய) பகுதிகளில் இது கொள்ளை நோய் போல் பரவுகிறது.

ஈக்களைப் போல, காமாலையின் 'வைரசைப்' பரப்ப உதவுகின்ற மற்றொன்று எலிகளாகும். நம் நாட்டிலும், வீடுகளிலும் எலிகள் இல்லாத இடத்தைப் பார்ப்பது அரிது. சாக்கடை வசதி குறைவான இடங்களிலும் வீடுகளிலும் வாழும் எலிகள் நாம் பயன்படுத்தும் உணவு, நீர் முதலியவற்றில் தம் கழிப்புப் பொருளாகிய பிழுக்கை முதலியவற்றைக் கலப்பதாலும் இந்நோய் பரவுகிறது. ஈ, எலி போன்ற உயிர்ப்பிராணிகளால் இந்நோய் பரவுவது ஒருபுறமிருக்க, நோயுற்றவர்கட்குப் போடும் ஊசிகள், மருந்தேற்றி (Syringes), இரத்த பரிமாறல்கள் (Blood transfusions) இவற்றின் மூலமும் இந்நோயின் வைரஸ் தொற்றிப் பரவுகின்றன. எனவே மனிதர்களுடைய கவனக்குறைவாலும், மருந்தேற்றும் ஊசி முதலியனவற்றைத் தக்கமுறையில் சுத்தம் செய்யாமையினாலும் இந்நோய் பரவுகிறது என்பதனை அறியலாம்.

### காமாலை வகைகள்

மக்களில் பலரும் நம்புவது போல 'காமாலைக்காரனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சளாகத் தெரிவதில்லை'. பல்வேறு நோய்களுக்குக்கூட காமாலை வெளித் தெரியும் ஓர் அடையாளம் வருவதுண்டு. பொதுவாகக் காமாலை மூன்று வகைப்படும். அதிகம் காணப்படும் வகை 'பாக்டீரியா', வைரஸ், அமீபா முதலியவற்றின் மூலம் வருவது.

இரண்டாவது வகை 'பித்த நீர்ச்சுரப்பி' எனப்படும் 'கால் பிளாடரில்' கற்கள். 'ரவுண்ட் வோர்ம்ஸ்', அரிதாகத் தோன்றும் புற்றுநோய் (கான்ஸர்) முதலியவற்றால் பித்தநீர் வருவது தடைப்படுவதால் காமாலை தோன்றலாம்.

'மலேரியா, பாம்புக்கடி முதலியவற்றின் காரணமாக இரத்தத்தின் பல்வேறு உறுப்புக்கள் முறிந்து போவதாலும், சில சமயங்களில் தவறான இரத்தம் உடம்பில் ஏற்றப்படுவதாலும் மூன்றாவது வகைக் காமாலை ஏற்படலாம்.

இந்நோய் பாதித்த 3 முதல் 7 நாட்களுக்குப் பிறகு காமாலையின் அறிகுறிகள் கண்கள், நகங்கள் ஆகிய பகுதிகளில் காணப்படும். காமாலையின் அறிகுறிகள் கண்ணுக்குத் தெரிவதற்கு முன்பேகூட சிறுநீரைச் சோதிப்பதின் மூலம் இந்நோயால் பாதிக்கப் பெற்றுள்ளதை அறிந்து கொள்ளலாம். இந்நோயின் சிறப்பு என்னவென்றால் ஒரு குறிப்பிட்ட கால அளவு இருந்து மறைந்து விடுவதாகும். இதனை 'Self limiting' என்று கூறுவார்கள். நோய் பாதித்த வேகத்திற்கேற்ப 2 முதல் 6 வாரங்களில் இது தானே குணமாகிவிடும். ஆனால் 'லாகிரிப்' பொருட்களைப் பயன்படுத்தி அவற்றுக்கு அடிமை ஆனவர்கள், ஊட்டமான உணவு உட்கொள்ள முடியாதவர்கள், மது அருந்துபவர்கள், கர்ப்பமான மகளிர் ஆகியவர்களை இந்நோய் பாதித்தால், இதிலிருந்து விடுபட நாட்கள் அதிகமாகும்.

### தடுப்பு முறைகள்

''வந்தபின் காப்பதைவிட வராமல் தடுப்பதே சிறந்தது'' என்ற பழமொழி மற்ற நோய்களைவிட காமாலைக்குத்தான் அதிகம் பொருந்தும். நோயுற்றவர்களின் மலம், சிறுநீர் ஆகியவற்றை அப்புறப்படுத்தித் துப்புரவாக்கியபின் கிருமிக்கொல்லி மருந்துகளாகிய 'டெட்டால்' ஆகியவற்றால் அந்த இடத்தைத் தூய்மைப்படுத்த வேண்டும். உணவுப்பண்டங்களில் நோயைப் பரப்பும் ஈ முதலியன உட்காராமல் மூடிவைத்துப் பாதுகாப்புடன், குடிக்கும் தண்ணீரையும் நன்கு காய்ச்சி ஆற வைத்துக் குடிக்க வேண்டும். சாக்கடை கழுவாய் நீர் முதலியன ஒழுக்கல் இல்லாமல் இணைக்கப்பட வேண்டும். நோயுற்றவர்களைக் கவனித்துக் கொள்பவர், கைகளைக் கழுவிச் சுத்தம் செய்து கொள்ள வேண்டும். நோயுற்றவர்கள் பயன்படுத்தும் 'தர்மா மீட்டர்' உணவு உட்கொள்ளும் தட்டுகள் நீர் முதலிய அருந்தும் தம்ளர் முதலியவற்றைத் தனியாக வைப்பது நலம்.

இந்த நோய் கொள்ளை நோயாகப் பரவியுள்ள இடங்களில் பள்ளிக்கூடம் செல்லும் சிறுவர் சிறுமிகளுக்கும் தடுப்பு ஊசி போடலாம். இது அதிக விலையுள்ளதாயினும் ஆறுமாத காலத்திற்கு நோய் வராமல் தடுக்கும்.

இந்த நோய் தானே ஓரளவு வளர்ந்து இறுதியில் மறைந்து போகும். ஆகையால் நோய் இரண்டு முதல் நான்கு வாரத்திற்குள் நீங்கிவிடும். நோயுற்ற நேரத்தில் முழு ஓய்வு கொள்ள வேண்டும். லாகிரிப் பழக்கம், மதுபானப் பழக்கம் உடையவர்களுக்கு இன்னும் கொஞ்ச அதிக நாட்கள் இது நீடிக்கும் இந்நோயுற்றவர்கள் கொழுப்பு

சத்துள்ள உணவை உட்கொள்ள கூடாது என்பதெல்லாம் பாட்டி கதையாகும். நல்ல புரதச் சத்துள்ள உணவை (பால், தயிர் பருப்பு), 'குளுகோஸ்', வைட்டமின் முதலியவற்றுடன் கொள்ள வேண்டும். உணவு முறையில் எவ்வித மாற்றமும் தேவையில்லை என்பது இன்றைய விஞ்ஞா மருத்துவம் கண்டுள்ள உண்மை யாகும்.

மிகக் கொடுமையான மஞ்ச காமாலை நோய் வந்தால் சி பேர் நினைவு இழந்துபோகக்கூடு அம்மாதிரிச் சமயங்களில் இர தம் மாற்றும் சிகிச்சை அளிக் வேண்டும்.

### இரத்தம் மாற்றும் சிகிச்சை முறை

இரத்தம் மாற்றுதல் என் தாவது நோயாளியின் கெட் இரத்தத்தை அப்புறப்படுத் விட்டு அவர் 'குரூப்'புக்குத் தகுந் மாதிரி புது ரத்தத்தை உடம்பி 6-10 பாட்டில் செலுத்துவத கும். சில சமயங்களில் உயிரை காப்பாற்றும் முறையாக இது இருந்து வருகிறது.

கை வைத்திய முறை என் பல்வேறு வைத்தியங்கள் செ யப்படுகின்றன. அவை உடலு குத் தீமை விளைவிக்கும். ஆகை யால் அவற்றை உட்கொள்ள கூடாது. இவற்றில் பல வை தியங்கள் 'கல்லீரலுக்கு' (Live தீமை உண்டாக்கும். 'வைரஸ் காரணமாக வரும் காமாலை அஞ்சத் தகுந்த நோயன்று. ச துள்ள உணவும், ஓய்வும் இரு தால் இதிலிருந்து நலம் பெற் விடலாம்.

(நன்றி: சென்னை வானொலி நிலையம்

## தமிழ்நாட்டின் குழந்தைகளுக்கு இரண்டு இலட்சம் ரூபாய்!

*தமிழ்நாட்டில், ஊட்டச் சத்து இன்மை, வைட்டமின் 'ஏ' குறைவு ஆகியவற்றின் காரணமாகப் பார்வையை இழக்கும் அபாயத்தில் இருப்பதாகக் கூறப்படும் குழந்தைகளுக்கு உடனடியாக உதவி புரிவதற்காக, பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி அவர்கள், பிரதம மந்திரியின் நிவாரண நிதியிலிருந்து 2 இலட்சம் ரூபாயை அனுப்பியுள்ளார்.*



# குழந்தைக்குத் தேவை சத்தான உணவு
# பயிருக்குத் தேவை விஜய்

குழந்தையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவும் சத்துணவைப்போலவே பயிர்களும் நன்கு வளர்ந்து முழுப் பலனையும் தர தழை, மணி, சாம்பல் சத்துக்கள் அவசியம்.

ஆனால் நெற்பயிருக்கு தழைச்சத்தைத்தரும் யூரியாவை மட்டும் இட்டால போதுமானது எனக் கருதக்கூடும். அவ்வாறு யூரியாமட்டும் இட்டால் பயிர்கள் பூச்சிகளால தாக்கப்படும். வறட்சியைத் தாங்காது. மேலும் நாளடைவில் மண்ணின் தன்மைகெட்டு விளைச்சலும் குறையும்.

தழைச்சத்துடன் மணி, சாம்பல் சத்துக்களை இடுவதுதான் லாபகரமானது என ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன:—

நெல் (ஏக்கருக்கு)

| உரம் | சாகுபடி செலவு ரூ. | விளைச்சல் (மூட்டை 75 கிலோ) | வருவாய் (1 மூட்டை 60 ரூ. விகிதம்) |
|---|---|---|---|
| 40 கிலோ தழைச்சத்து மட்டும் | 1040 | 18 | 1080 |
| 40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து | 1180 | 23 | 1380 |
| 40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து 20 கிலோ சாம்பல்சத்து | 1215 | 30 | 1800 |

இவ்வாறு மூன்று சத்துக்களையும் இடும் போது கூடுதல் செலவு ரூ. 175க்கு அதிக வருவாய் ரூ. 720 கிடைக்கிறது.

அதிக வருவாய் தரும் தழை, மணி, சாம்பல் சத்துக்களை சமச்சீர் அளவில் கொண்டது விஜய் 17-17-17. இத்துடன் விஜய் யூரியாவையும்.உங்கள் நெற்பயிருக்கு உபயோகித்து அதிகப்பயன் பெறுங்கள்.

VIJAY
MADRAS FERTILIZERS

மேலும் விவரங்களுக்கு கீழ்கண்ட முகவரிக்கு எழுதுங்கள்:
ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், திருச்சி 620 017










கடந்த சில நாட்களாகத் தமிழ்நாட்டில் கடலை எண்ணெய் விலை ஏறிவந்துள்ளது! கடந்த கோடைப் பருவத்தில் இறைவை மணிலா உற்பத்தி குறைந்துவிட்டதனுல்தான், கடலை எண்ணெய் விலை ஏறிவிட்டது என்று சில வியாபாரிகள் கூறிவருகிருர்கள். இக்கூற்று, முற்றிலும் தவருனதாகும்.

தமிழ்நாட்டில் 1976-ஆம் ஆண்டின் கோடைப் பருவத்தில் 2.69 இலட்சம் எக்டேர் பரப்பில் மணிலா சாகுபடி செய்யப்பட்டுள்ளது என்பது புள்ளி விவரத் துறையின் முன்மதிப்பீட்டிலிருந்து தெரிய வருகிறது. ஆனுல் 1975-ஆம் ஆண்டின் கோடைப் பருவத்தில் தமிழ்நாட்டில் 2.36 இலட்சம் எக்டேர் பரப்பில் மட்டுமே மணிலா சாகுபடி செய்யப்பட்டிருந்தது. எனவே, கடந்த கோடைப்பருவத்தில் 16.1 சத அளவுக்கு மணிலா சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளது என்பது தெளிவாகிறது.

மேலும், மணிலாவில் நடத்தப்பட்ட பயிர் மதிப்பீடு ஆய்வு ( Crop estimation survey ) மூலம், 1976-ஆம் ஆண்டின் கோடைப் பருவத்தில் தமிழ்நாட்டில் 4.15 இலட்சம் டன்மணிலா உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்பதும் தெரியவருகிறது. 1975-ஆம் ஆண்டில் அதே பருவத்தில் 2.96 இலட்சம் டன் மணிலா மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டுள்ளதால், 1976-ஆம் ஆண்டின் கோடைப் பருவத்தில் மணிலா உற்பத்தி 40 சத அளவுக்கு உயர்ந்துள்ளதுஎன்பதும்தெளிவாகிறது. எனவே கடந்த கோடைப் பருவத்தில் மணிலா உற்பத்தி குறைந்துவிட்டது என்று கூறுவது முற்றிலும் தவருனதாகும்.

தற்பொழுது நிலவும் கடலை எண்ணெய்யின் விலை ஏற்றத்தை தடுத்திட, தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. ஆயினும், நாட்டு மக்கள் அனைவருக்கும் அன்ருடம் இன்றியமையாது தேவைப்படும் கடலை எண்ணெய்யின் விலையைக் குறைக்க, மணிலா மற்றும் கடலை எண்ணெய் வியாபாரிகள் பெருந்தன்மையுடன் முன்வர வேண்டியது நெருக்கடி நிலை நிலவுகின்ற இந்நேரத்தில் அவர்களுடைய கடமையாகும்.

அதுபோலவே, கடலை எண்ணெய் விலையைக் குறைத்திட முயலும் தமிழ்நாடு அரசுக்கு, நல் ஒத்துழைப்பை நல்கும் வகையில் இருப்பில் உள்ள மணிலாவை விற்பனைக்குக் கொடுத்து உதவுவதுடன், இந்த மானுவாரி பருவத்தில் மணிலா உற்பத்தியைப் பெருக்கித் தருவது தமிழக உழவர் பெருமக்களுடைய தலையாய கடமையாகும். ஏனெனில் நாட்டு மக்களின் நல்வாழ்வே உழவர்களின் கைகளில்தான் உள்ளது. இதனுல்தான் திருவள்ளுவர்,

''சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனுல்
உழந்தும் உழவே தலை''

என்று கூறியுள்ளார்.

ஊட்டச்சத்துணவு ஆராய்ச்சியின்படி வயதுவந்த ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு 28.3 கிராம் (1 அவுன்சு) தாவர எண்ணெய் (Vegetable Oil )தேவைப்படுகிறது. இந்த அளவுக்கு தாவர எண்ணெய் கிடைக்க வேண்டுமானுல், நாம் மணிலா உற்பத்தியை உடனடியாகப் பெருக்க வேண்டியது நமது தலையாய கடமையாகும்.

இக்கடமையை-நெருக்கடி நிலை நிலவுகின்ற இந்நேரத்திலே - மனமுவந்து செய்வது தமிழக உழவர் பெருமக்களுடைய தலையாய கடமையாகும். இக்கடமையைச் சரியாகச் செய்யாவிட்டால், கடலை எண்ணெய் உற்பத்திக்குக் காரணமான மணிலாவை உற்பத்தி செய்கின்ற உழவர்களுக்கே கடலை எண்ணெய் கிடைப்பது அரிதாகிவிடும் அபாயநிலை ஏற்படலாம்! எனவே, மானுவாரி மணிலா உற்பத்தியைப் பெருக்குவது, உழவர்கள் வீட்டிற்கும் நாட்டிற்கும் செய்யும் நற்பணியாகும்!

குறிப்பாக மானுவாரி, மணிலாவைப் பொறுத்தவரையில் எதிர்பார்க்கும் அளவுக்கு உற்பத்தி பெருகவில்லை. இதற்கு முக்கிய காரணம் கடந்த சில ஆண்டுகளாகப் பருவ மழை பொய்த்துவிடுவதேயாகும். இதன் காரணமாகவே, பெரும்பாலான உழவர் பெருமக்கள் மானுவாரி மணிலாவில் ஏக்கருக்கு 10 மூட்டைகள் (ஒவ்வொன்றும் 40 கிலோ கொண்டது)கூட விளைவிக்க முடியவில்லை. ஆனுல் மானுவாரி மணிலா சாகுபடியின் நுட்பங்களை அறிந்து, சாகுபடி செய்தால் வறட்சி வாட்டினுலும், மானுவாரிமணிலா உற்பத்தியைப் பெருக்க முடியும்.

வேளாண்மைத் துறையினர் பரிந்துரைக்கும் ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை(Package of practices ) மேற்கொண்டு மணிலா சாகுபடி செய்தால் மானுவாரி மணிலாவிலும், ஏக்கருக்கு 20 மூட்டை (ஒவ்வொன்றும் 40 கிலோ கொண்டது) அளவுக்குக் குறையாமல் விளைவிக்க முடியும் என்பது பல்வேறு இடங்களில் பல உழவர் பெருமக்களின் வயல்களில் நடைபெற்ற பரிசோதனைகளிலிருந்து தெளிவாகியுள்ளது. ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை மேற்கொண்டு மானுவாரி மணிலா சாகுபடி செய்தால், சாதாரண முறையில் சாகுபடி செய்யப்படும் மணிலாவிலிருந்து கிடைக்கும் மகசூலைவிட ஏக்கருக்கு 10 மூட்டை மணிலாவை அதிகமாக உற்பத்தி செய்ய முடியும். அதாவது தற்போதுள்ள மானுவாரி மணிலா உற்பத்தியை குறைந்தது 2 மடங்காகப் பெருக்கிடலாம்.

இந்த அடிப்படையில் கணக்கிட்டால் தமிழ் நாட்டில் சராசரியாகச் சாகுபடி செய்யப்படும் 21 இலட்சம் ஏக்கர் மானாவாரி மணிலாவிலிருந்தும் ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை மேற்கொள்வதன் மூலம் 2 கோடியே 10 இலட்சம் மூட்டை அல்லது 8 இலட்சத்து 40 ஆயிரம் டன் மணிலா அதிகமாக விளைவிக்க முடியும்!

இவ்வாறு மானாவாரி மணிலா உற்பத்தி பெருகினால் உழவர் பெருமக்களின் வருவாய் பெருகுவதுடன், கடலை பிண்ணாக்கு, கடலை எண்ணெய் விலையும் கணிசமாகக் குறையும். மேலும், அதிகமாக உற்பத்தியாகும் கடலை எண்ணெய்யைக் கொண்டு உள்நாட்டுத் தேவையை ஈடு செய்வதுடன், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியையும் ஈட்டலாம்! எனவே, மானாவாரி மணிலாச் சாகுபடி செய்யவிருக்கும் உழவர் பெருமக்கள், ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை மேற்கொண்டு, மானாவாரி மணிலா பயிரிட்டு வீட்டிற்கும், நாட்டிற்கும் நற்பணி செய்ய வேண்டும் என்பதற்காகத் 'தமிழரசு' இதழின் சார்பாக பின்கண்ட ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை உழவர் பெருமக்களுக்கு அன்புடன் படைத்துள்ளதுடன் அவைகளைப் படித்துப் பயன்படுத்தி பயன் பெறுமாறு விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கின்றோம்.

## ஒருமித்த செய்நேர்த்தி முறைகள்

**விதைக்கும் பருவம்** : மானாவாரி மணிலா விதைக்கும் பருவம் பருவ மழையைப் பொறுத்தே அமைகிறது. பொதுவாகப் பருவமழை பெய்யும் காலத்திற்கு ஏற்ப ஜூன் முதல் ஆகஸ்ட் வரையான காலத்தில் மானாவாரி மணிலா விதைக்கலாம். ஆயினும் ஆடி (ஜூலை-ஆகஸ்ட்) மாத விதைப்பு நல்ல மகசூலைத் தரும்.

### ஏற்ற இரகங்கள்

மானாவாரி மணிலா பயிரிட விரும்புகின்றவர்கள் தங்கள் தேவைக்கும், விருப்பத்திற்கும் பகுதிக்கும் ஏற்ப கொடி மணிலா இரகங்களையோ அல்லது கொத்து (குத்து) மணிலா இரகங்களையோ பயிரிடலாம். கொடி மணிலா இரகங்கள் அதிக வயதுடையவையாதலின், அவைகளை அதிக நாட்கள் பருவமழை பெய்யும் பகுதிகளில் மட்டுமே பயிரிடுவது சிறந்தது. கொத்து மணிலா இரகங்கள் குறுகிய கால வயதுடையவையாதலின், அவைகளை குறிப்பாகக் குறுகிய காலத்திற்கு மட்டுமே பருவ மழை பெய்யும் பகுதிகளிலும், பொதுவாக எல்லா இடங்களிலும் பயிரிடலாம். உங்களுக்கு ஏற்ற இரகங்களைப் பின்கண்ட அட்டவணையில் இருந்து தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.

| மணிலா வகையும் இரகத்தின் பெயரும் | வயது நாட்கள் |
|---|---|
| கொடி வகை (Spreading Variety) | |
| 1. டி.எம்.வி. 1 | 135 |
| 2. டி.எம்.வி. 3 | 135 |
| கொத்து வகை (Bunch Variety) | |
| 1. டி.எம்.வி. 2 | 105 |
| 2. டி.எம்.வி. 7 | 105 |
| 3. பி.ஓ.எல் 1 | 105 |
| 4. பி.ஓ.எல். 2 | 105 |
| அதிகம் படராதது (Semi-spreading) | |
| 1. டி.எம்.வி. 10 | 125 |

மேற்கூறிய இரகங்களில் 'டி.எம்.வி.7', 'பி.ஓ.எல். 2' ஆகியவை அதிக மகசூல் தரக்கூடியவைகளாகும்.

### ஏற்ற மண்

மணல் கலந்த வண்டல் மண், செம்மண் அல்லது கருவண்டல் மண் போன்ற மிருதுவான மண்ணே மானாவாரி மணிலாச் சாகுபடிக்குச் சிறந்தது.

### நிலம் தயாரித்தல்

மானாவாரி மணிலா மகசூலைப் பெருக்குவதற்கு நிலத்தை நன்கு உழுது பண்படுத்த வேண்டும். மணிலாச் செடிகள் நன்றாக வேர்விட்டு வளரவும், விழுதுகள் தடையின்றி மண்ணிற்குள் சென்று நிலக்கடலைகள் உருவாகவும், 6 அங்குல ஆழம் வரை நிலத்தை புழுதியாகும்படி உழவேண்டும். நிலம் நன்கு புழுதியாக ஆக இரும்புக் கலப்பையால் 4 முதல் 6 தடவை நன்கு உழவேண்டும். ஆழமாய் உழுவதைத் தவிர்க்க வேண்டும்.

### அடியுரமிடுதல்

விதைப்பதற்கு 15 நாட்களுக்கு முன்பு, கடைசி உழவில் ஏக்கருக்கு பின்கண்ட அளவு உரங்களை அடியுரமாக இட வேண்டும்.

தொழு எரு:—
பத்து வண்டி (5 டன்) இடவேண்டும். தொழு எரு கிடைக்கா விட்டால் 10 வண்டி (5 டன்) கலவை எரு (கம்போஸ்ட்) இடலாம்.
இரசாயன உரம்:—
தழைச்சத்து—4 கிலோ.
மணிச்சத்து—8 கிலோ.
சாம்பல் சத்து—12 கிலோ.

மேற்கூறிய அளவு சத்துக்கள் அளிக்க ஏக்கருக்குக் கீழ்க்கண்ட அளவு இரசாயன உரங்களை இட வேண்டும்.

அமோனியம் சல்பேட்—20 கிலோ.
சூப்பர் பாஸ்பேட்—50 கிலோ.
மியூரியேட் ஆப் பொட்டாஷ்-20 கிலோ.



அமோனியம் சல்பேட் 20 கிலோ இடுவதற்குப் பதிலாக 9 கிலோ யூரியா இடலாம்.

மேறகூறியவாறு உரமிடத் தனித்தனி இரசாயன உரங்கள் கிடைக்கா விட்டால், 7-ஆம் எண் கலப்பு உரத்தில் (4:8:12) ஏக்கருக்கு 100 கிலோ அடியுரமாக இடலாம்.

அல்லது

23 கிலோ 17:17:17 கூட்டு உரம், 25 கிலோ சூப்பர் பாஸ்பேட், 13 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை இடலாம்.

அல்லது

18 கிலோ டை-அமோனியம் பாஸ்பேட்டையும், 2 கிலோ யூரியாவையும்,20 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தையும் சேர்த்து அடியுரமாக இடலாம். இதுவே மிகவும் குறைந்த செலவில் சிக்கனமாக உரமிடும் முறையாகும்!

இவ்வாறு இரசாயன உரமிட்ட 15 நாட்களுக்குப் பிறகு, மழை பெய்து விதைப்பதற்கு முன்னர் ஏக்கருக்கு 'போராக்ஸ்' எனப்படும் வெண்காரம் 4 கிலோ இட்டு, உழுதுவிட வேண்டும்.

'போராக்ஸ்' நிலக்கடலைச் செடியின் வளர்ச்சிக்கும், தரமான நிலக்கடலை உருவாவதற்கும், பருப்பு நன்கு முதிர்வதற்கும் உதவுகிறது. 'போராக்ஸ்' போடுவதால் 15 முதல் 20 சதம் வரை மணிலாவின் மகசூல் அதிகரிக்கும். மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை 'போராக்ஸ்' இட்டால் போதுமானது!

ஆண்டுதோறும் தொடர்ந்து மணிலா சாகுபடி செய்வதால், மண்ணிலுள்ள சுண்ணாம்புச் சத்து குறைந்து விடக்கூடும்! இதனால் மகசூல் குறைந்து விடும்! இக்குறையைத் தவிர்க்க 'ஜிப்சம்' இடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது. விதைத்த 40-ஆம் நாள் இரண்டாம் முறை களையெடுக்கும் பொழுது, ஏக்கருக்கு 80 கிலோ 'ஜிப்சம்' தூவி, பிறகு களை எடுக்கவும். இதனால் மணிலா மகசூல் பெருகும்.

### நுண்ணுயிர் கலத்தல்

மணிலாச் செடியின் வேரில் முடிச்சுகள் (Root Nodules) காணப்படும்! அம் முடிச்சுகளில் 'ரைசோபியம்' என்னும் நுண்ணுயிர்கள் உள்ளன. அவைகளின் உதவியால் வேர் முடிச்சுக்கள் காற்றிலுள்ள தழைச்சத்தை இழுத்துக்கொண்டு செடிகளுக்குப் பயன்படும்படி செய்கின்றன. எனவே, மணிலாச் செடிகளில் அதிக அளவு வேர் முடிச்சு உண்டாக ஏக்கருக்கு 3 குடுவை நுண்ணுயிர்களை 10 கூடை மணல் அல்லது மரத்தூளுடன் கலந்து விதைப்பதற்கு முன்பு நிலத்தில் தூவுதல் சிறந்தது.





### விதையளவு

கொடி மணிலாவை விட கொத்துமணிலாவை நெருக்கமாக விதைக்க வேண்டியதாதலின், கொத்து மணிலாவிற்கு அதிக அளவு விதைப்பருப்புகள் (உடையாதது) விதைக்க வேண்டும். வகைக்கும் இரகத்திற்கும் ஏற்ப, பின்கண்ட அளவில் விதைக்க வேண்டும்.

| இரகம் | ஏக்கருக்கு தேவைப்படும் விதை அளவு (கிலோவில்) |
|---|---|
| டி.எம்.வி. 1 | 45 |
| டி.எம்.வி. 2 | 45 |
| டி.எம்.வி. 3 | 50 |
| டி.எம்.வி. 7 | 55 |
| டி.எம்.வி. 10 | 45 |
| பி.ஓ.எல். 1 | 60 |
| பி.ஓ.எல். 2 | 48 |

### விதையுடன் மருந்து கலத்தல்

விதைப்பதற்கு முன்பு விதைப் பருப்புக்களுடன் 'கேப்டான்' அல்லது 'டீ.எம்.டீ.டி.' என்ற மருந்தை 1 கிலோ விதைக்கு 2.5 கிராம் மருந்து வீதம் கலந்து 6 மணி நேரம் வைத்திருந்து பிறகு விதைக்கவும்.

### இடைவெளி

கொடி மணிலா இரகங்களுக்கு வரிசைக்கு வரிசை 9 அங்குலமும், செடிக்குச் செடி 9 அங்குலமும் இடைவெளி இருக்குமாறு விதைக்க வேண்டும்.

கொத்து மணிலா இரகங்களுக்கு வரிசைக்கு வரிசை 6 அங்குலமும் செடிக்குச் செடி 6 அங்குலமும் இடைவெளி இருக்குமாறு விதைக்க வேண்டும்.

### விதைப்பு

ஏரின் பின்னால் விதைப்பருப்புகளை மேற்கூறியவாறு இடைவெளியிலும், 1.5 முதல் 2 அங்குல ஆழத்திலும் போட வேண்டும். மேற்கூறிய இடைவெளியில் விதைக்காமல், பெரும் இடைவெளி விட்டு விதைத்தால் பயிரின் அடர்த்திக் குறைந்து மகசூல் குறைந்துவிடும்! ஆகவே, மானாவாரி மணிலாவில் நிறைந்த மகசூல் பெறக் குறிப்பிட்ட இடைவெளியில் விதைக்க வேண்டும். ஏரின் பின்னால் விதைகளைப் போட்ட பிறகு, விதைகள் மண்ணில் மறைக்கப்படுவதற்குப் பச்சைக் கிளைகளை வெட்டிப் படலமாகக் கட்டிக் கொண்டு அல்லது மூங்கில் படலின் மேல் கற்களை வைத்துப் பளு ஏற்படுத்திக் கொண்டு நிலத்தின் மேல் இழுத்துச் செல்ல வேண்டும். இல்லையெல் விதைப் பருப்புகள் காக்கை, கருடன், குருவி போன்ற பறவைகளுக்கு இரையாகி விடும்!

### கலப்புப் பயிர்

மணிலா விதைகளை விதைக்கும்பொழுது சாலுக்குச்சால் 6 முதல் 8 அடி வரை இடைவெளி விட்டு, ஏக்கருக்கு 2 கிலோ 'எஸ்.ஏ. 1 துவரை' அல்லது 1 கிலோ 'டி.எம்.வி. 2 ஆமணக்கு, அல்லது 1 கிலோ 'கே. 1 சூரியகாந்தி' விதைகளை விதைப்பதால் கூடுதல் இலாபம் பெறலாம்!



### களை எடுத்தலும் 'ஜிப்சம்' இடுதலும்.

மானாவாரி மணிலாவில் நல்ல மகசூல் காண களை எடுத்தல் மிகவும் இன்றியமையாதது! விதைத்த 20-ஆம் நாள் முதல் முறையும், விதைத்த 40-ஆம் நாள் இரண்டாவது முறையும், களைக் கொட்டால் கொத்தி விட்டுக் களைகளை அகற்ற வேண்டும். இரண்டாவது களை எடுப்பிற்குப் பிறகு களைக்கொட்டால் களை எடுக்கக் கூடாது! அப்படிச் செய்தால், விழுதுகளைப் பாதிக்கும். எனவே, அதன் பின் தோன்றும் பெரிய களைகளைக் கைகளால் எடுத்து விட வேண்டும்.

கொத்து மணிலாவிற்கு இரண்டாவது களை எடுக்கும்போது மண் அணைக்க வேண்டும்.

நன்கு காய்ந்த நிலத்திலும், அதிக ஈரம் உள்ள நிலத்திலும் களை எடுக்கக் கூடாது!

### பயிர்ப் பாதுகாப்பு

மானாவாரி மணிலாவில் முக்கியமாக 'சிகப்புக் கம்பளிப் பூச்சி', 'சுருள் பூச்சி', 'அசுவணி' ஆகிய பூச்சிகளும், 'டிக்கா' இலைப்புள்ளி நோயும் தோன்றக்கூடும்.

#### 1. சிவப்புக் கம்பளிப் பூச்சி .

மானாவாரி மணிலாவை அதிகம் தாக்குவது சிவப்புக் கம்பளிப் பூச்சியே! மழை பெய்த பிறகு இப் புழுக்கள் தோன்றக் கூடும்!

கோவை மாவட்டத்தில் வைகாசி முதல் ஆவணி வரை தோன்றக்கூடும்! மற்ற மாவட்டங்களில் ஆனி முதல் ஐப்பசி வரை தோன்றக்கூடும்! இதன் தாய்ப் பூச்சிகள் (வண்ணாத்திப் பூச்சிகள்) மழை பெய்த 3-ம் நாள் இரவு, கூட்டுப் புழுவிலிருந்து தோன்றும். அப்பூச்சிகளை இரவில் 'பெட்ரோமாக்ஸ்' விளக்கு வைத்துப் பிடித்து அழித்து விடலாம். இப்பூச்சிகளை அழிக்காவிடில், அவை முட்டையிட்டு பிறகு அம் முட்டைகளில் இருந்து சிவப்புக் கம்பளிப் பூச்சிகள் தோன்றி மணிலாவை அழிக்கும். சிவப்புக் கம்பளிப் புழுக்கள் அழிக்க ஏக்கருக்கு பின்கண்ட அளவில் மருந்து தெளிக்கலாம்.

1. 'என்ட்ரின்' 0.45 சதவீதம் (400 மில்லி லிட்டர் மருந்து, 200 லிட்டர் தண்ணீர்) அல்லது

2. 'பாரத்தியான்' 0.05 சதவீதம் (200 மில்லி லிட்டர் மருந்து 200 லிட்டர் தண்ணீர்) அல்லது

3. 'நுவான்' (டி.டி.வி.பி.) 0.1. சதவீதம் (200 மில்லி லிட்டர் மருந்து, 200 லிட்டர் தண்ணீர்) அல்லது,

4. 'ஹீலியோடாக்ஸ்'—1500 மில்லி லிட்டர் 200 லிட்டர் தண்ணீர்.

5. 'பி.எச்.சி.' 10 சதவீதம் தூள்—ஏக்கருக்கு 10 கிலோ இளம் புழுக்களை மட்டுமே அழிக்க ஏற்றது.

6. 'தயோடான்'—500 மில்லி லிட்டர், 200 லிட்டர் தண்ணீர்—முதிர்ந்த புழுக்களை அழிக்க வல்லது.

#### 2 சுருள் பூச்சி

இவை வறட்சியான காலங்களில் தோன்றும். இளம் இலைகளைத் தின்பதுடன், இலைகளை மடக்கிச் சேதம் விளைவிக்கின்றன. இவைகளை அழிக்கப் பின்கண்டவாறு மருந்து தெளிக்க வேண்டும்.

1. 'பாரத்தியான்' 0.05 சதவீதம் ஏக்கருக்கு (200 மில்லி லிட்டர் மருந்து, 200 லிட்டர் தண்ணீர்) அல்லது

2. 'பெனிட்ரோதியான்' 0.05 சதவீதம் (200 மி.லி. மருந்து 200 லிட்டர் தண்ணீர்) அல்லது

3. 'டேக்ஸோபின்'+'டி.டி.டீ'+'டைமேதோட்' (1500 மில்லி லிட்டர் மருந்து 200 லிட்டர் தண்ணீர்) அல்லது

4. 'பெனிட்ரோதியான்' 2சதவீதம் தூள்—ஏக்கருக்கு 10 கிலோ.

5. 'டி.டி.டீ.' 5 சதத்தூள்—ஏக்கருக்கு 10 கிலோ.

#### 3. அசுவணி

இவை நுண்ணிய கறுப்புப் பூச்சிகள்: இலைகளில் காணப்படும்; இலைகளின் சாற்றை உறிஞ்சி செடிகளை வாடச் செய்யும். இவைகளைப் பின் கண்டவாறு அழிக்கலாம்.

1. 'கார்போஃபினோதியான்' (டிரைதியான்) 0.06 சதவீதம் (600 மி.லி. 200 லிட்டர் தண்ணீர்) அல்லது ,

2. 'மீதெயல் டெமிடாடன்' (மொடாசிஸ்டாக்ஸ்) 25 சதவீதம் (200 மி.லி. மருந்து 200 லிட்டர் தண்ணீர்) அல்லது,

3. 'தயோமிடான்' (எகடின்) 0.25 சதவிகிதம் (200 மி.லி. மருந்து 200 லிட்டர் தண்ணீர்) அல்லது,

4. 'டைமதோட்' (ரோகார்) 0.03 சதவிகிதம் (200 மி.லி. மருந்து 200 லிட்டர் தண்ணீர்) அல்லது,

5. 'ஃபாஸ் ஃபாமிடான்' 0.5 சதவீதம் (டைமக்ரான்) (150 மி.லி. மருந்து, 300 லிட்டர் தண்ணீர்) அல்லது,

6. 'ஃபார்மோதியான்' (ஏன்தியோ) 0.05 சதவிகிதம் (400 மில்லி மருந்து 200 லிட்டர் தண்ணீர்) அல்லது,

7. 'வாமிடோதியான்' 0.06 சதவிகிதம் (200 மி.லி. (மருந்து 200 லிட்டர் தண்ணீர்) அல்லது,

8. 'பாஸேலோன்' 0.06 சதவிகிதம் (200 மி.லி. மருந்து 200 லிட்டர் தண்ணீர்) தெளிக்க வேண்டும்.

மருந்து தெளித்தல்: கையால் இயக்கும் மருந்து தெளிக்கும் கருவி (Hand operated Sprayer) உபயோகிக்கும் போது மேலே கூறியுள்ள அளவு நீர் தேவைப்படுகிறது. விசைக் கருவி (Power Sprayer) உபயோகிக்கும்போது முன்னால் கூறிய நீரின் அளவுகளை 40 சதவிகிதமாகக் குறைத்துக் கொள்ளவும். ஆனால் மருந்தின் அளவைக் குறைக்கக்கூடாது!

''டிக்கா'' என்னும் இலைப்புள்ளி நோய் காணப்படும் இடங்களில் 1 கிலோ தாமிரக் கலவை மருந்தை ஏனைய மருந்துடன் கலந்து விதைத்த 20-25 நாட்களில் முதல் முறையும், விதைத்த 40-45 நாட்களில் மறுமுறையும் தெளிக்கவும்.

காலையில் 9 மணிக்குள்ளாகவும், மாலையில் 4 மணிக்கு மேற்பட்டும் மருந்து தெளித்தல் சிறந்தது.

மண்ணில் கரையான், வெள்ளைப்புழு, ஏனைய பூச்சிப்புழுக்கள் காணப்பட்டால் 'அல்டிரின்', 'டைஅல்டிரின்', 'ஹெப்டோக்ளோர்' போன்ற மருந்துகளை ஏக்கருக்கு 10 கிலோ விதம் உழவில் போடலாம்.

### அறுவடையும் மகசூலும்

கடலைத் தோலின் உள்பாகம் கறுப்பு நிறமாகவும், பருப்பின் மேலுள்ள தோல் சிவப்பு நிறமாகவும் மாறிய பிறகு மணிலாவை அறுவடை செய்வதே சிறந்தது.

மேற்கூறிய முறைகளில் சாகுபடி செய்தால், ஏக்கருக்குப் பின்கண்ட அளவு மகசூல் கிடைக்கும்.

| இரகம் | மகசூல் (மூட்டைகள்) |
|---|---|
| டி.எம்.வி. 1 | 15—20 |
| டி.எம்.வி. 3 | 18—22 |
| டி.எம்.வி. 10 | 20—25 |
| டி.எம்.வி. 2 | 15—20 |
| டி.எம்.வி. 7 | 20—25 |
| பி.ஓ.எல். 1 | 18—22 |
| பி.ஓ.எல். 2 | 20—25 |

(1 மூட்டை—40 கிலோ)

எனவே, மானாவாரி மணிலாச் சாகுபடி செய்யவிருக்கும் தமிழக உழவர் பெருமக்கள் அனைவரையும், மேற்கண்ட ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை மேற்கொண்டு மகசூலைப் பெருக்கிப் பெரும் இலாபம் பெறுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

—R. மாணிக்கம்

## உழவர் பெருமக்களுக்கு மின்சார வாரியம் அளிக்கும் இரு சலுகைகள்!

தமிழ்நாட்டில் பரவலாக வறட்சி நிலவுவதாலும், பருவமழை பொய்த்துள்ளதாலும், தமிழ்நாடு மின்சார வாரியம் உழவர்களுக்கு இரு சிறப்புச் சலுகைகளை அளித்துள்ளது.

நடப்பு மின்சார உபயோகக் கட்டணங்களில் ஒரு பகுதியாக, ஒரு மாதத்திற்கு ஒரு குதிரைச் சக்திக்கு ரூ. 2.50 நிர்ணயக் கட்டணம் வசூலிக்கப் படுகிறது. ஒரு மாதத்திற்கு 50 யூனிட்டும், அதற்குக் குறைவாகவும் வேளாண்மைப் பணிகளுக்காக மின்சாரத்தைப் பயன்படுத்தும் உழவர்களைப் பொறுத்தவரையில், இந்த நிர்ணயக் கட்டணம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வேளாண்மைப் பணிகளுக்காக மின்சாரத்தைப் பயன்படுத்தும் உழவர்கள் மூன்று மாத மின்சார உபயோக அளவின் அடிப்படையில் பிணை வைப்புத் தொகையை (Additional Security Deposit) செலுத்த வேண்டும். இதுவும் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள வறட்சி நிலைமை மாறிய பிறகு, ஒத்தி வைக்கப்பட்டுள்ள இந்தக் கட்டணங்களை வசூலிப்பது பற்றி பரிசீலிக்கப்படும் என மின்சார வாரியம் அறிவித்துள்ளது.



திரு. பாப்பி ரெட்டியார்

## "எடப்பாடியில் வேளாண்மைச் செம்மல்கள்"



திரு. ஜே. சண்முகம்,

சேலம் மாவட்டத்திலுள்ள எடப்பாடி ஒன்றியத்தைச் சார்ந்த பூலம்பட்டி கிராம வேளாண் வீரர் திரு. ஜே. சண்முகம், 1973—'74 ஆண்டுக்கான மாநில நெல் விளைச்சல் பரிசினைப் பெற்றவர். ஒரு ஏக்கருக்கு 4,148 கிலோ கிராம் 'ஐ. ஆர். 8' நெல்லினை விளைவித்துக் காட்டிய இவரை ''வேளாண்மைச் செம்மல்'' என்ற பட்டம் நாடி வந்ததில் வியப்பில்லை!

இதே ஊரைச் சார்ந்த திரு. பாப்பி ரெட்டியார் வேளாண்மைத் துறையில் மற்றொரு செயல் வீரர் ஆவார். இவருக்கும் ''வேளாண்மைச் செம்மல்'' என்ற பட்டம் அளிக்கப்பட்டுள்ளது. 1974—'75, 1975—'76 ஆண்டுகளில் அகில இந்தியப்பயிர் விளைச்சல் போட்டியில் கலந்து கொண்ட இவருடைய வெற்றிப் பட்டியல் இதோ :

*1968—'69*-ஆம் ஆண்டு மாவட்ட அளவுப் போட்டியில் முதல் பரிசு — விளைச்சல் : 4,229 கிலோ கிராம்.

*1970—'71*-ஆம் ஆண்டு மாநில அளவுப் போட்டியில் இரண்டாம் பரிசு—விளைச்சல் : 3,642 கிலோ கிராம்.

*1971—'72*-ஆம் ஆண்டு மாநில அளவுப் போட்டியில் முதல் பரிசு—விளைச்சல் : 4,280 கிலோ கிராம்.

*1972—'73*-ஆம் ஆண்டு மாநிலப் போட்டியில் முதல் பரிசு—விளைச்சல் : 4,375 கிலோ கிராம்.

திருமதி லட்சுமி



## எலச்சிப்பாளையம் மகளிர் மன்றத்தின் மகத்தான பணிகள்!

*1973—74*-ஆம் ஆண்டில் எலச்சிப்பாளையம் மகளிர் மன்றம் மாவட்ட அளவில்சிறந்த மகளிர் மன்றமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூபாய் 400 பரிசளிக்கப்பட்டது. அப்பரிசுப் பணத்தில் இரண்டு அம்பர் இராட்டைகள் வாங்கப்பட்டன. 25 உறுப்பினர்களைக் கொண்ட இம்மன்றத்தில் தலைவி திருமதி லட்சுமி அவர்களும், கன்வீனர் திருமதி டி. தனலெட்சுமி அவர்களும் மன்றத்தின்வளர்ச்சியில் மிக்க கருத்துடையவர்களாகப் பணி புரிகின்றனர்.

திருமதி டி. தனலெட்சுமி



# வீட்டுக்கு இரண்டு-நாட்டுக்கு இருபது!

''நிலமற்றவர்களுக்கு நிலங்களையும் வீட்டு மனைகளையும் வழங்கும் ஏற்பாடு இன்னும் துரிதமாக்கப்படும். அரிசனங்களுக்கு இன்னும் வசதியாக உள்ள புது மாதிரியான வீடுகள் கட்டித்தரப்படும். இவ்வாண்டில் இன்னும் அதிகக் குழந்தைகள், பள்ளிகளில் சேர்க்கப்படுவர். வீட்டு வசதி, உணவுக் கட்டணம் சற்று குறைக்கப்படும். அதேபோல புத்தகங்கள், பேனா, பென்சில் விலைகளும் மலிவாக இருக்கும்.''

இவ்வாறு காஞ்சிபுரத்தில் நடந்த இருபது அம்சத் திட்டப் பலமுனை விளக்க விழாவைத் துவக்கி வைத்து, ஆளுநரின் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்.

செங்கற்பட்டுமாவட்டஇருபது அம்சத் திட்டப் பலமுனை விளக்க விழா ஜூன் திங்கள் 27 முதல் 30 முடிய நான்கு நாட்கள் மிகச் சிறப்பாக நடந்தது.

முதல் நாள் காலை, செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள 20 ஊராட்சி ஒன்றியங்களின் சார்பில் 20 அலங்கார வண்டிகள் கொண்ட பெரிய ஊர்வலம் நடந்தது. ஒவ்வொரு அலங்கார வண்டியும் இருபது அம்சத்தின் ஒவ்வொரு அம்சத்தை விளக்குவதாக இருந்தது.

பிறகு, அண்ணா கலையரங்கில் நடந்த விழாவுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. டி. கே. ஏ. திவான் முகமது அவர்கள்தலைமை வகித்தார். அவர் பேசுகையில்,

''இந்த விழாவின் நோக்கம் இருபது அம்சத் திட்டங்களைப் பாமர மக்களிடம் விளக்குவதும், அதன் பலன் என்ன என்பதைத் தெரியப்படுத்துவதும் ஆகும்'' என்றார்.

விழாவைத் துவக்கி வைத்து ஆளுநரின் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்:

''உணவுத் தானியங்களின் விலைவாசி நிலவரம் தற்போது திருப்திகரமாக உள்ளது. விலைகள் உயருமானால், அரசு தனது கையிருப்புப் பொருட்களை வெளிமார்க்கெட்டில் விடுவித்து விலை உயர்வைக் கட்டுப்படுத்தும். ஓட்டல் பண்டங்களுக்கு அரசு நிர்ணயித்துள்ள விலை நியாயமானதேயாகும்.

''எல்லா நெசவாளர்களையும், கைத்தறித் தொழில்களையும் கூட்டுறவின் கீழ்க் கொண்டுவர அரசு தீர்மானித்துள்ளது.

''அண்மையில் அறிவிக்கப்பட்ட பள்ளி இறுதி வகுப்புத் தேர்வுகளில் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த சுமார் 580 மாணவர்கள் 75 சதவிகிதத்துக்கும் கூடுதலான மதிப்பெண்கள் பெற்றுத் தேறியுள்ளனர். இவர்களுக்குப் புது ஊக்கத் திட்டத்தின் கீழ் மேற்படிப்புக்கான வசதிகள் செய்து தரப்படும்.''



ஆளுநரின் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடன் வழங்கினார்.

விழாவில், நிலமற்ற ஏழைகள் 100 பேருக்கு குடிமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. செங்கை மாவட்டத்தில் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் 541 மதிப்பெண்கள் பெற்று முதலாவதாகத் தேறிய ஜெயந்தி என்ற மாணவிக்குப் பதக்கம் வழங்கப்பட்டது. சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்குக் கடன்களும், அனாதைக் குழந்தைகளுக்கு இலவசச் சீருடையும், அரிசன நலத் துறைச் சார்பில் 6 ஏழைப் பெண்களுக்குத் தையல் இயந்திரங்களும் வழங்கப் பெற்றன.

மனநிலை தளர்ச்சியுற்றோருக்காக சமூக சேவை நிறுவனம் — கில்டு ஆஃப் சர்வீஸ் நடத்தும் பள்ளியையும், கருத்தடைத் திட்ட தீவிர இயக்கத்தையும், சிறு சேமிப்புத் தீவிர இயக்கத்தையும் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் துவக்கி வைத்தார்.

கலை அரங்கத்துக்கு முன்புறம் பல்வேறு காட்சி அரங்குகள் மக்களைக் கவரும் வகையில் அமைக்கப்பட்டிருந்தன. இவற்றைத் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் பார்வையிட்டார்.

இரண்டாம் நாள் நடந்த விழாவில் செய்தி, மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. என். கிருஷ்ணமூர்த்தி, ஐ.ஏ.எஸ். அவர்கள் கலந்து கொண்டு இருபது அம்சத் திட்ட நோக்கத்தினை விளக்கினார்.

விழாவையொட்டி சொற்பொழிவுகள், கலை நிகழ்ச்சிகள், கவியரங்கம், கருத்தரங்கு முதலியவை நடந்தன. இந்த நிகழ்ச்சிகளைத் திரளான மக்கள் நாள்தோறும் வந்து கண்டு களித்தனர்.

'வீட்டுக்கு இரண்டு—நாட்டுக்கு இருபது' என்பதைச் சொல்லாமல் சொல்லும் அரிய விழாவாக இந்த இருபதம்சத் திட்டப் பலமுனை விளக்க விழா அமைந்து அனைவரின் கவனத்தையும் கவர்ந்தது என்றால் அது மிகையல்ல.

—பி.வி.ஜி

# படமும் செய்தியும்



தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும் எல்லா வகையான செயல் முறைகளுக்கும் தலைமைச் செயலகப் பணியாளர்கள் அனைவரும் மனப் பூர்வமான ஒத்துழைப்பை நல்குவதாக உறுதி மொழி அளித்த மனுவைத் தலைமைச் செயலகப் பணியாளர்கள் சங்கத்தின் அலுவலகப் பணியாளர்கள், தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்களிடம் 2-7-'76 அன்று அளித்தனர்.





பிரதம மந்திரியின் 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தின்கீழ் டி.பி. ஜெயின் கல்லூரி மாணவர்கள் சைக்கிள் வாங்குவதற்கும், அக்கல்லூரியில் புத்தக வங்கி அமைப்பதற்கும் 'இந்தியன் பாங்கு' அளித்த கடன் உதவியை 2-7-'76 அன்று தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள் வழங்கினர்.



தமிழ்நாடு பீங்கான் தொழில் நிறுவனத்தின் (TACEL) கலையழகுமிக்க, பயன்மிகு பீங்கான் பொருட்கள் கண்காட்சியைத் தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் 3-7-'76-அன்று சென்னை இராஜாஜி அரங்கில் துவக்கி வைத்துப் பார்வையிட்டார்.



தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 3-7-'76 அன்று 'எஸ்.ஐ.இ.டி.' கல்லூரியைப் பார்வையிட்டார்.

உடல் ஊனமுற்றவர்களுக்கும், கைவினைஞர்களுக்கும் ''பாங்க் ஆப் பரோடா'' அளித்த கடன் உதவியைத் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 3-7-'76-ல் 'எஸ்.ஐ.இ.டி.' கல்லூரியில் வழங்கினர்.





தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்ல[illegible] சுகாதியா அவர்கள். 5-7-'76-ல் கோவை மாவட்டத்தில் வறட்சிப் பகுதிகளைப் பார்வையிட்டார்.



கோவை மாவட்டச் சுற்றுப்பயணத்தின் போது வயதான மூதாட்டிக்கு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் உதவிப்பணம் வழங்கினர்.



ஆளுநர் ஆலோசகர் திரு. பி. [illegible] த[illegible] அவர்கள் தாளவாடியில் 5-7-'76 அன் கொத்தடிமையினின்று மீட்கப்பட்டுள்[illegible] கை ஊனமடைந்[illegible] பெண்ணுக்குப் புட[illegible] வழங்கினர்

99
JL
V211m,N70
N76
69678



பாராளுமன்ற மக்கள் அவையின் தலைவர் திரு பி. ஆர். பகத் அவர்கள் தலைமையில், ஜகார்த்தா செல்லும் இந்தியப் பாராளு மன்றக் குழுவைத் தமிழ்நாடு அரசின் சட்ட மன்றப் பேரவைச் செயலாளர் அவர்கள் 6-7-'76 அன்று மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வரவேற்றார்.

சென்னை நகரக் காவற்படைப் பிரிவில் ணியாற்றி, 55-வயது அடைந்து ஓய்வுபெற்ற வலர்களுக்கு சென்னை இராஜரத்தினம் டேடியத்தில் 9-7-'76-ல் விடையனுப்பு ணிவகுப்பு மரியாதை நடத்தப்பெற்றது. தையொட்டி நடைபெற்ற விழாவில் தமிழ் டு காவல்துறைத் தலைமை அலுவலர் திரு. . எல். ஸ்ட்ரேசி அவர்கள், ஓய்வு பெற்ற வலர்களுக்கு வயது முதிர்வு ஓய்வூதிய வணம் வழங்கினார்.



'வார்னிஷ்' குடித்து உயிரிழந்த 121 பேர் ின் குடும்பங்களுக்கு மனிதாபிமான அடிப் டையில் குடும்பம் ஒன்றுக்கு ரூபாய் 1,000 தம் வழங்கத் தமிழ்நாடு ஆளுநர் திரு ாஹன்லால் சுகாதியா அவர்கள் ஆணையிட் ர். முதற்கட்டமாக 11 குடும்பங்களுக் ளுநர் அவர்களின் துணைவியார் திருமதி ாதியா அவர்கள் 7-7-'76-ல் உதவிப்பணம் ங்கினார்.

ஒரு விதவைக்கு உதவிப்பணம் வழங்கு தை படத்தில் காணலாம்.



வள்ளுவர் கோட்டத்தில் ஜூலை 9, 10, 11 ஆகிய 3 நாட்களில் "திருக்குறள் கருத்தரங்கு" நடைபெற்றதை யொட்டி, மறைமலை அடிகள் நூலகத்தினரால் திருக்குறள் பற்றிய புத்தகக் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது. அக்கண்காட்சியைத் தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள், 9.7.'76 அன்று வெகு ஆர்வத்துடன் பார்வையிட்டார்.





தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களு உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனமு சேர்ந்து வள்ளுவர் கோட்டத்தி நடத்திய திருக்குறள் கருத்தரங்கை தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹ லால் சுகாதியா அவர்கள் 9.7.'7 அன்று துவக்கி வைத்து உரையாற் ார்.



தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹ லால் சுகாதியா அவர்கள் 9.7.'7 அன்று வள்ளுவர் கோட்டத்தில் திரு குறள் கருத்தரங்கைத் துவக் வைக்க வந்தபோது, தென்னங்கன் ஒன்றை நட்டு, தண்ணீர் ஊற்றினா

# நெடுஞ்சாலை - ஊரகப் பணித் துறையின் வளர்ச்சி

திரு. சி. வி. பத்மனுபன், பி.இ., எப்.ஐ.இ.
தலைமைப் பொறியாளர்,
நெடுஞ்சாலை ஊரகப் பணிததுறை,
தமிழ்நாடு அரசு.

இரு நாட்டினுடைய பொரு ாதார வளர்ச்சிக்கும், சமு ாய ஒருமைப்பாட்டிற்கும், மறு லர்ச்சிக்கும் சாலை அமைப்பே டித்தளமாக அமைகின்றது. ற்றூர்களில் விளையும் பொருட் ளையும், நாட்டின் தேவைக்கான த்தியாவசியப் பண்டங்களையும் கரங்களுக்குக் கொண்டு செல்ல ல்லதோர் சாலையமைப்பு இன்றி மையாததாகும். இதனைக் ருத்திற்கொண்டு, நமது பாரதப் ரதமர் இந்திரா காந்தி அவர்கள் ருவாக்கிய 20 அம்சங்கள் காண்ட இணைந்ததோர் பொரு ாதாரத் திட்டத்திலே தங்கு டையேதுமின்றி சாலைப் பாக்குவரத்து அமைந்திட வழி ுத்தமை இங்கு சுட்டிக் காட் ப்பட வேண்டியதொன்றாகும்.

தமிழ்நாட்டில் 1946-ஆம் ண்டு, சாலைகளின் மேம்பாட் டைப் பேணிக்காத்திட நெடுஞ் ாலைத்துறை உருவாக்கப்பட்டது. ற்போது தமிழ்நாட்டில் உள்ள ாலைகளின் மொத்த நீளம் 2,184 கி.மீ. இதில் நெடுஞ் ாலை ஊரகப் பணித்துறையின் ராமரிப்பின்கீழ் 29,248 கி.மீ. ளச் சாலைகளும், மற்றவை ஊராட்சி மற்றும் ஊராட்சி ன்றியங்களின் பராமரிப்பிலும் ள்ளன.

இச்சாலை மேம்பாட்டுப் பணிகள் யாவும் மாநில அரசு நிதியிலிருந்து மேற்கொள்ளும் திட்டங்கள் மூலமாகவும், மத்திய அரசின் நிதி உதவியுடன் மேற் கொள்ளும் திட்டங்கள் மூலமாக வும் நிறைவேற்றப்பட்டு வரு கின்றன.

### முக்கிய பாலங்கள்

மாநில அரசுத் திட்டங்களின் கீழ் அரசுச் சாலைகள், பிற சாலைகள், இவற்றின் முன்னேற் றப்பணிகளும் தற்போதுள்ள இருப்புப்பாதைக் கடவுகளுக்குப் பதிலாக மேம்பாலங்கள் அல்லது சுரங்கப் பாதைகள் அமைத்தல், கரும்பு ஆலைகளுக்குச் செல்ல, சாலை வசதி செய்து தரல், பெரு நகர் சாலை மேம்பாடு செய்தல், பேருந்து தடச் சாலைகளை அரசு வசம் மேற்கொள்ளல் போன் றவை இடம் பெறுகின்றன. அவற்றில் முக்கியமானவை சில வற்றை இங்கு குறிப்பிடுகிறேன்.

1. சென்னையில் ஜெமினி அருகே ரூ. 66 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள வனப்புமிகு மேம்பாலம்.

2. நெல்லையில் செங்கோட் டைச் சாலையில் ''திருவள்ளுவர்'' பெயரில் ரூ. 47 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள எழில்மிகு இரண்டடுக்குப் பாலம்.

3. கோவையில் அவிநாசிச் சாலையில் ரூ. 53.50 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள மூன்றடுக்குப் பாலம்.

4. திருமானூரில் கொள்ளி டம் ஆற்றின் குறுக்கே, தஞ்சை திருச்சி மாவட்டங்களை இணைக் கும் வண்ணம் ரூ. 65.70 இலட் சம் செலவில் அமைக்கப்பட்ட பாலம்.

5. வேலூருக்கும்காட்பாடிக்கும் இடையே குறுக்கிடும் பாலாற்றில் ரூ. 69 இலட்சம் செலவில் அமைக் கப்பட்ட பாலம்.

6. மதுரையில் மீனாட்சி நூற் பாலை அருகில் ரூ. 32 இலட் சம் செலவிலும், சுப்பிரமணிய புரத்தில் ரூ. 36 இலட்சம் மதிப்பி லும் அமைக்கப்பட்டுள்ள இரு மேம்பாலங்கள்.



கோயம்புத்தூர் அவிநாசிச் சாலையில் அமைக்கப்பட்டுள்ள மூன்றடுக்குப்பாலம்.

7. கும்பகோணத்தில் ரூ. 16.50 இலட்சம் செலவிலும், மாயூரத்தில் ரூ. 49 இலட்சம் செலவிலும் அமைக்கப்பட்டுள்ள இரு மேம்பாலங்கள்.

இவை தவிர சென்னையில், அண்ணாசாலையில் ஒரு சுரங்கப் பாதையும், மத்திய ரயில் நிலை யம் அருகில் ஒரு சுரங்கப் பாதை யும், காமராஜர் சாலையில் 'லைட் ஹவுஸ்' அருகில் ஒரு சுரங்கப் பாதையும், மாநகராட்சிக் கட்ட டம் எதிரில் பூங்கா ரயில் நிலையம் அருகில் அமைக்கப்பட்டுள்ள சுரங்கப் பாதையும், அடையாற் றின் குறுக்கே அமைக்கப்பட் டுள்ள திரு. வி. க. பாலமும் மாநில அரசு திட்டத்தின் கீழ், சென்னை நகரில் மேற்கொள்ளப் பட்ட குறிப்பிடத்தக்க சாலை வளர்ச்சிப் பணிகளாகும்.

மேலும் ''ஸ்பிக்'' (SPIC) என வழங்கும் தூத்துக்குடி இரசாயன உரத் தொழிற்சாலைக்கு உதவும் வண்ணம் ரூ. 112 இலட்சம் மதிப்பளவில் சாலை மேம்பாட்டுப் பணிகளும், சேலம் உருக்காலை அமைப்புக்கென ரூ. 104 இலட்சம் மதிப்பில் 50 சதவிகிதம் மத்திய அரசின் நிதி உதவியோடு சூரமங்கலம்-தாரமங்கலம் சாலை மேம்பாட்டுப் பணிகளும் நடை பெற்று வருகின்றன.

திருச்சியில், வற்றாத காவிரியில் ரூ. 102.50 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள வனப்புமிகு காவிரி ஆற்றுப் பாலத்தை சமீ பத்தில் மாண்புமிகு மத்திய உள் துறை அமைச்சர் திரு. கே. பிரமானந்தரெட்டி அவர்கள் திறந்து வைத்துள்ளார்கள்.

இவையன்றி சென்னை நகரில் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே 'பைகிராப்ட்ஸ்' சாலை, 'சேமி யர்ஸ்' சாலை, 'எட்வர்ட் எலி யட்ஸ்' சாலை ஆகிய இடங்களில் உள்ள குறுகலான பழைய பாலங்கள் அனைத்தும் புதுப்பிக்கப் பட்டு. போக்குவரத்திற்கு உகந்த தாக விரிவாக்கப்பட்டுள்ளன. மற்றும் வாலாஜா சாலையில் வரு வாய்த்துறை அலுவலகக் கட்டி டத்திற்கு (எழிலகம்) அருகிலும் ஒரு பால வேலை முடியும் தறு வாயில் உள்ளது.

### சுரங்கப் பாதைகள்

''காமராஜர் சாலையில்'' கண் ணகி சிலை அருகில், 'பை கிராப்ட்ஸ்' சாலை சந்திப்பில் புதி தாக ஒரு சுரங்கப்பாதை அமைக் கப்பட்டுள்ளது.

மேலும் சாந்தி திரையரங்கு அருகிலும், ஆயிரம் விளக்குப் பகுதியிலும் ஆக இரு இடங்களில் பாத சாரிகளுக்கெனச் சுரங்கப் பாதைகள் அமைத்திட அரசு அனுமதி வழங்கியுள்ளது. இவ் வேலைகள் நடப்பு ஆண்டில் துவக் கப்பட இருக்கின்றன. மற்றும் அண்ணா சாலையில் சைதாப் பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல் லூரி அருகிலும் விரைவில் ஒரு சுரங்கப்பாதை அமைக்கப்பட விருக்கிறது. அண்ணாசாலையில் ஆயுள் ஈட்டுறுதிக் காப்பகக் கட்டி டத்திற்கு அருகிலும், பூவிருந்த வல்லி சாலையில் 'தாசப்பிரகாஷ்' உணவு விடுதி அருகிலும், கீழ்ப் பாக்கம் மருத்துவமனை அருகிலும் சுரங்கப்பாதைகள் அமைத்திட வும், 'வால்டாக்ஸ்' சாலையில் இரயில்வே அலுவலகத்திற்கு அருகிலும், 'வால்டாக்ஸ்' நாடக அரங்கு அருகிலும் நடை மேம் பாலங்கள் அமைத்திடவும் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவை தவிர மத்திய அரசின் உறுதுணையோடு உலக வங்கியின் ரூ. 5 கோடி கடனுதவியுடன் ''இந்து நாளிதழ்'', ''சபையர்'' திரையரங்கு, காவல்துறை போக்குவரத்து உதவி ஆணையர் அலுவலகம் இவற்றின் அருகில் நடந்து செல்வோருக்கான சுரங்க வழிகள் அமைப்பதற்கான திட் டங்கள் பரிசீலனையில் உள்ளன. மேலும், சென்னை மாநகராட்சி யின் சாலை மேம்பாட்டுப் பணி களாக ஆறு இடங்களில் நடந்து செல்வோருக்கான நடைபா லங்கள் அல்லது சுரங்க வழிகள் அமைப்பதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நுங் கம்பாக்கம் புகைவண்டி நிலையம் அருகில் வாகனங்கள் செல்லும் வகையில் ஒரு சுரங்கப் பாதை யும், வட சென்னை வைத்தியநா முதலி தெருவில் ஒரு மேம்பா மும் அமைக்கத் திட்டமிடப்ப டுள்ளது.



திருநெல்வேலி செங்கோட்டைச் சாலையில் கட்டப்பட்டுள்ள ''திருவள்ளுவர்'' பாலம்.

### மேம்பாலங்கள்

இன்னும் பிற பணிகளா சென்னை மாநகரில் உள்ள இரு புப் பாதை கடவுகளைக் கட 8 இடங்களில் மேம்பாலங்க அல்லது சுரங்கப்பாதைக அமைத்திடும் பணிகளும் உ வங்கியின் உதவியுடன் செயலா றப்படவிருக்கின்றன.

இனி, சிற்றூர்களுக்கான சா வளர்ச்சிப் பணிகளைப் பற்ற் குறிப்பிடுகிறேன்.

### சிற்றூர்களில் சாலை வளர்ச்சி

மக்கள் தொகை 1,500- அதற்குமேலும் உள்ள பல சி றூர்கள் பெருநகரங்களி தொடர்பின்றி இருந்திட்ட நிலை தனைப் போக்கிடும் வண்ண அரசுச் சாலைகளுடன் சிற்றூர்க இணைத்திடவும், இருக்கின் சாலைகளைத் தரம் உயர்த்தி மே பாடு செய்திடவும் ''ஊரக சாலை வளர்ச்சித் திட்டம்'' செ லாற்றப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின்கீழ், இ காறும் சுமார் 1,164 சிற்றூர்க பயனடைந்துள்ளன. 2,8 கி.மீ. நீளமுள்ள சாலைக அமைக்கப்பட்டும், மேம்பா செய்யப்பட்டும் உள்ளன. இதனு மேலும் இடையிலுள்ள 1,4 சிற்றூர்களும் பயனடைந்து ளன. இதற்காக இதுநாள் வ செலவு செய்யப்பட்ட தொ 1,219 இலட்ச ரூபாய் ஆகு



சென்னையில், ஜெமினி அருகே கட்டப் பட்டுள்ள எழில்மிகு மேம்பாலம்.

இதைத் தவிர, சாலை வசதி பற்ற சிற்றூர்களுக்கு சாலை அமைத்துத் தரும் "கடும் விரைவுத் திட்டமும், அரிசன குடியிருப்புக்களிலிருந்து இடுகாட்டிற்குச் செல்ல சாலை வசதி செய்து தரும் திட்டமும் தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**வறட்சி நிவாரணத்தின் கீழ் சாலை அமைப்பு**

இவையன்றி தமிழகத்தில் ஏற்பட்ட கடுமையான வறட்சியினால் இன்னலுற்ற மக்களின் துயர் துடைக்கும் முகத்தான் புதிய சாலைகள் அமைத்துத் துயருறும் மக்களுக்கு உடனடியாக வேலை வாய்ப்பினை அளிக்கும் வண்ணம் நடப்பு ஆண்டில் வறட்சிப் பகுதிகளில் சாலை அமைக்க, தமிழ்நாடுஅரசு ரூபாய் 60 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

**வணிக வளர்ச்சி இணைப்புச் சாலைகள்**

நான்காவது ஐந்தாண்டு திட்டக்காலத்தில் மத்திய அரசு, வணிக வளர்ச்சி-இணைப்புச் சாலைகளுக்கான பணிகளில் 10 அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டதில் காவிரிப் பாசனப் பகுதிகளுக்கான அபிவிருத்தித் திட்டம் தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்டது.

தஞ்சை மாவட்டத்தில் ஒரு பகுதியும், முசிறி, குளித்தலை, திருச்சி, லால்குடி, ஆகிய திருச்சி மாவட்டப் பகுதிகளும், தென்னார்க்காடு மாவட்டத்தில் சிதம்பரம் வட்டமும் இத்திட்டத்தினால் பயனடைந்த பகுதிகளாகும்

**கரும்பாலைப் பகுதிகளில் சாலை வளர்ச்சி**

தமிழகத்தில் மட்டும் பதினாறு கரும்பாலைகள் உள்ளன. இந்த ஆலைகளில் பல, கூட்டுறவுத்துறையின் கீழும், சில, தனியார் துறையின் கீழும் இயங்கி வருகின்றன. இந்த ஆலைகளுக்குத் தேவையான கரும்பைக் குறைந்த செலவில் எடுத்துச் செல்லும் பொருட்டு, கரும்பு அதிகமாக விளையும் இடங்களில் இருந்து ஆலைகள் உள்ள இடங்களுக்கு, சாலை அமைத்தும், அபிவிருத்தி செய்தும் தர வேண்டியது அவசியமெனக் கருதி, இதுகாறும் 320 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் அமைக்கப்பட்டும், மேம்படுத்தப்பட்டும் அரசின் பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஆண்டு மேற்படி திட்டப் பணிகளுக்காக அரசு ரூ. 75 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

**ஊராட்சி சாலைகளின் தரம் உயர்ந்தது!**

ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பிலுள்ள சாலைகளில் பேருந்துகள் செல்லும் சாலைகளின் தரத்தை உயர்த்த வேண்டியது அவசியமெனக் கருதி, நமது அரசு, தனது பராமரிப்பிற்கு சுமார் 4,940 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை மேற்கொண்டுள்ளது. இதே போன்று நகராட்சிகளின் பராமரிப்பிலுள்ள சாலைகளிலும் இதுவரை சுமார் 120 கிலோ மீட்டர் நீளமுள்ள பேருந்து வழித்தடச் சாலைகளை அரசின் பராமரிப்பிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.



வேலூருக்கும்-காட்பாடிக்கும் இடையில் பாலாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம்.

மலைப் பகுதியிலே வாழ்கின்ற பிற்பட்ட மக்களின் நலனைப் பெருக்கவும், சுற்றுலாப் பயணிகளைக் கவரவும் நீலகிரி மாவட்டத்தில் ஒரு கோடி ரூபாய் மதிப்பில் சாலை அமைத்திடவும், மேம்படுத்தவும் மத்திய அரசு முன் வந்து நிதி உதவி செய்யும் ஒரு திட்டத்தை இவ்வாண்டு முடிக்க ஏற்பாடு நடந்து வருகிறது.

முன் சொன்னவாறு தமிழ்நாட்டில் சாலைகளை மேம்படுத்தி வருவதோடல்லாமல், மத்திய அரசினுடைய முழு நிதி உதவியுடன் தமிழ்நாட்டிலுள்ள 1,852 கிலோ மீட்டர் நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலைகள் அனைத்தும் சீரான முறையில் பயன்தரத்தக்க வகையில் அமைந்திட தனியானதொரு பிரிவாக தேசிய நெடுஞ்சாலைத் துறை உருவாக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றது.

இத்துறையானது தேசிய நெடுஞ்சாலைகளின் வளர்ச்சியோடு, மற்றும் பல சாலைகளையும் "மத்திய சாலை வளர்ச்சி நிதி"யின் மூலம் மேற்கொள்ள வேண்டியபணிகளையும் எடுத்துச் செயலாற்றி வருகின்றது.

**ஒருமைப்பாட்டை வளர்க்கும் பாலம்!**

இவைகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் குறிப்பிட வேண்டிய முக்கிய பணி தேசிய ஒருமைப்பாட்டினை வளர்க்கும் வகையில் அமைந்து வரும் இராமேஸ்வரம் கடற்பாலமாகும். இதற்குப் பாம்பன் பாலம் என்றும் பெயர். அனைத்திந்திய முக்கியத்துவம் வாய்ந்த ஆலயத்தினைக் கொண்ட இராமேஸ்வரம் தீவையும், தமிழ்நாட்டின் முக்கிய நிலப் பரப்பையும் இணைத்திடும் வண்ணம் பாம்பன் நீர்ச்சந்தியின் குறுக்காக இப்பாலம் பாங்குற எழுப்பப்படுகிறது. பாரதத்திலேயே இப்பாலம்தான் கடலின் மத்தியில் அமைக்கப்படும் முதல் இயங்கும் பாலமாகும். இப்பாலம் அமைப்பதற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 5.32 கோடி ஆகும். 1978-ஆம் ஆண்டிற்குள் இப்பாலத்தைக்கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக மத்திய அரசு, நெடுஞ்சாலைத் துறையில் மாநில அரசு மூலம் தனிப் பிரிவு ஒன்றை அமைத்துள்ளது. இப்பிரிவு இப்பால வேலையை நிறைவேற்றுவதோடு அண்டை மாநிலங்களைத் தமிழகத்துடன் இணைப்பதற்கான சாலை வசதிகளை "பொருளாதார பல மாநில முக்கியத்துவ திட்டத்தின்கீழ்" மத்திய அரசின் முழு நிதி கடன் உதவியுடன்



மதுரை சுப்பிரமணியபுரம் பாலம்.

மேற்கொண்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் மத்திய அரசு 2 கோடியே 61 இலட்சம் ரூபாய் மதிப்பில் கிழக்குக் கடற்கரைச் சாலை அமைப்பில் 40 பாலங்களை நிறுவ வழிவகுத்துள்ளது.

பலதரப்பட்ட நவீன சாலைகள் ஏற்படுவதால் போக்குவரத்து சுலபமாகவும் பொருளாதார வளர்ச்சி குறைந்த செலவிலும் கூடி வர ஏதுவாகிறது. இந்த வகையில் சாலைகள் வளர, போக்குவரத்து வளருகிறது. அதனால் வாணிபம் பெருகி அரசுக்கு வருவாய் அதிகரிக்கிறது. இதனால் சாலைகளுக்கு மேலும் அதிக நிதி ஒதுக்க வழி உண்டாகிறது. இந்த வகையில் சாலைகளும் போக்குவரத்துத் துறையும் ஒன்றை ஒன்று பேணி வளர்ப்பது தெளிவாகும்.

இவ்வாறு தமிழகம் சாலை வளர்ச்சிப் பணிகளில் தன்னிறைவு காண இந்தியத் துணைக்கண்டத்தில் மற்ற மாநிலங்களுக்கு ஒரு முன்னோடியாக விளங்குகிறது.

(சென்னை வானொலியில் 4-7-'7 அன்று 'வளநம் தமிழகம்' என்ற தலைப்பில் ஆற்றிய உரையின் தொகுப்பு.)

## தமிழ்நாடு சட்டமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டம்

தமிழ்நாடு சட்டமன்ற ஆலோசனைக் குழுவின் இரண்டாவது கூட்டம் வருகிற ஆகஸ்ட் மாதம் 2-ஆம் தேதி டில்லியில் நடைபெறும். மத்திய உள்துறை அமைச்சர் திரு. கே. பிரம்மானந்த ரெட்டி அவர்கள் இக்கூட்டத்துக்குத் தலைமை வகிப்பார்.

குழுவின் முதலாவது கூட்டம்சென்றமே மாதம் முதல் தேதியன்று சென்னையில் நடைபெற்றது. நாடாளுமன்றத்தின் இரு அவைகளையும் சேர்ந்த 60 உறுப்பினர்கள் இக்குழு உறுப்பினர்களாக உள்ளனர்.







# கற்பூர வரலாறு

சிறுவன் சிகாமணியும் அவன் தந்தை அருட்பிரகாசரும் சாமி சந்நிதிக்குள் அடியெடுத்து வைப்பதற்கும், கற்பூர ஆரத்தி நடைபெறுவதற்கும் சரியாக இருந்தது.

கற்பூர ஆரத்தியைப் பார்த்த அருட்பிரகாசர் பக்தியுடன் கன்னத்தில் போட்டுக் கொண்டார்.

கற்பூர ஆரத்தியின் ஒளியில் மூலவரின் உருவம் தெளிவாகத் தெரிந்தது மட்டுமல்ல, கற்பூரத்தின் மணம் அங்கிருந்த அனைவரின் மனத்திலும் ஒருவகை பக்தி உணர்வை உருவாக்கிக் கொண்டிருந்தது. அநேகர் மெய் மறந்து துதித்தனர்.

கற்பூரத்தின் மணம் சிறுவன் சிகாமணியையும் கவர்ந்தது. சாதாரண வெள்ளைப் படிவத்திற்கு அவ்வளவு ஆற்றல் எப்படி ஏற்படுகிறது என்று வியந்த சிகாமணி, கற்பூரம் எவ்வாறு கிடைக்கிறது என்று சிந்திக்கத் தொடங்கினான். அப்பாவிடம் கேட்கலாம் என நினைத்தான். அங்கேயே கேட்டால் அப்பா கோபித்துக் கொள்ளக்கூடும் என்று அவனுக்குத் தோன்றியது. அதனால் தரிசனம் முடித்துவிட்டு, வீட்டுக்குத் திரும்பும் வழியில் கேட்டுக்கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்தான்.

தரிசனம் முடிந்தது; வீட்டை நோக்கி நடைபோட்டனர் அப்பாவும் மகனும்.

மகன் சிகாமணி, தன் சந்தேகத்தை வினவாக்கித் தந்தையிடம் தொடுத்தான்.

''அப்பா! மனத்தைக் கவரும் மண மிக்க கற்பூரம் எங்கேயிருந்து கிடைக்கிறது?''

''சிகாமணி! கற்பூரம் ஒரு வகை மரத்திலிருந்து தயாராகிறது!''

''ஆச்சரியமாக இருக்கிறதே! அந்த மரத்தின் பெயர் என்ன அப்பா?''

''தாவர இனத்தில் லாரசியா குடும்பம் என ஒன்று உள்ளது. அதைச் சேர்ந்த சின்ன மோமம் கம்பூரா என்று சொல்லப்படும் பெரிய மரத்திலிருந்து கற்பூரம் கிடைக்கிறது.''

''நமது மாவட்டத்தில் அந்த மரம் இருக்கிறதா அப்பா?''

''நமது மாவட்டத்தில் கிடையாது; நமது மாநிலத்தில் நீலகிரியிலும், நமது நாட்டில் டேராடூன், சகரன்பூர், கல்கத்தா ஆகிய பகுதிகளிலும் கற்பூரமரம் வளர்கிறது.'' இது சீனா, ஜப்பான்: தைவான் முதலிய நாடுகளில் தான் முதன் முதலில் தோன்றியது. அங்கெல்லாம் இது காலங் காலமாகப் பயிரிடப்பட்டு வருகிறது. அங்கு, கற்பூரத் தயாரிப்பு ஒரு முக்கியத் தொழிலாகவும் நடைபெற்று வருகிறது''

''இந்த மரம் எவ்வளவு உயரம் வளரும் அப்பா?''

''இது சுமார் 30 மீட்டர் உயரம், 2 மீட்டர் அகலம் வளரும். 60 டிகிரி முதல் 100 டிகிரி வரை மழை பெய்யும் பகுதியில் இது நல்ல முறையில் வளர்ச்சி பெறுகிறது!''

''அப்பா! இந்த மரம் விதைகளின் மூலம் தானே வளர்கிறது?''

''விதைகளின் மூலமாக மட்டுமல்ல, கணுக்களை நடுவதன் மூலமாகவும் இது வளர்கிறது.''

''கற்பூர மரத்தில் பூ உண்டா? காய் உண்டா?''

# அஞ்சலக வங்கியின் மாபெரும் பரிசுத் திட்டம்

ஆண்டுக்கு இருமுறை

குலுக்கல்கள் **ஜனவரியிலும் ஜூலையிலும்** நடைபெறும்

**ரூ. 20½ இலட்சத்திற்கு 11,116 பரிசுகள்**

ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட 11,116 பரிசுகள் உண்டு.

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. | 1,00,000 |
| 5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50,000 |
| 10 மூன்றாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 20,000 |
| 100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 5,000 |
| 1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 500 |
| 10,000 ஆறாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50 |

ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.

உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெறாதவர்க்கும் அளிக்கப்படும்.

விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**இயக்குநர்,**
தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,
சென்னை-600 002.


''காயும் கிடையாது! கனியும் விளையாது! சில என்சைம்களின் உதவியினால், செடிகளில் உள்ள எண்ணெய் செல்களில் படிகின்ற படிவம்தான் கற்பூரம் எனப்படுகிறது. இந்த எண்ணெய் செல்கள் ஏறக்குறைய செடிகளின் எல்லா பாகங்களிலும் பரவியுள்ளன. எண்ணெய் செல்கள் செடிகளின் இளம் பருவத்திலேயே உற்பத்தி ஆகிவிடுகின்றன. மஞ்சள் நிற எண்ணெய்யால் நிறைக்கப்படுகின்றன. சிறிது காலம் கழித்து, எண்ணெய்ப் பசை ஆவியாகி வெண்மையான, திடமான கற்பூரம் உருவாகிவிடுகிறது. இலைகள் நீராவி முறையில் வடிகட்டுவதன் மூலமும் கற்பூரப் படிவம் கிடைக்கிறது.''

''அப்பா, செடிகளின் எந்தப் பாகத்திலிருந்து கற்பூரம் அதிக அளவில் கிடைக்கிறது?''

''வேர்ப்பகுதியில்தான் கற்பூரப் படிவம் மிக அதிக அளவில் படிகிறது.''

''அதிகமான கற்பூரம் கிடைப்பதற்கு நல்ல தரமான செடிகளின் விதைகளைத் தானே விதைக்க வேண்டும்!''

''அப்படி இல்லை! உயர்ந்த உற்பத்தியைத் தருகின்ற மரங்களின் விதைகள் உயர்ந்த விளைச்சலைத் தரும் செடிகளை உருவாக்கும் என்று உறுதியாகச் சொல்லிவிட முடியாது!''

''வியப்பாக இருக்கிறதே அப்பா!'

''அதுமட்டுமல்ல சிகாமணி'' நிழல் மிகுந்த பகுதியில் காணப்படும் செடிகள், குறைந்த அளவு கற்பூரத்தையும் திறந்த வெளிப் பகுதியில் வளர்ந்துள்ள செடிகள், அதிக அளவு கற்பூரத்தையும் தருகின்றன-முதிர்ந்த இலைகளைவிட, இளம் இலைகள்தான் அதிக கற்பூரத்தைத் தம்மிடம் கொண்டுள்ளன.''

''பொதுவாக, கற்பூரம் தரும் மரங்கள் எந்த வயதைச் சார்ந்தவையாக இருக்கும்?''

''முன்பெல்லாம் 60 வயது நிறைந்த மரங்களிலிருந்தே கற்பூரம் எடுக்கப்பட்டு வந்தது. இந்த நவீன காலத்தில் 4 அல்லது 5 வயது நிரம்பிய மரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.''

''நமது இந்தியாவில் எந்த மாநிலத்தில் கற்பூரம் அதிக உற்பத்தியாகிறது அப்பா!''

''கேரள மாநிலத்தில் கொச்சிப் பகுதியில் உள்ள ஒரு ரகம், மற்



**கற்பூர மரக்கிளை**

றெல்லாப் பகுதிகளிலும் உள்ள ரகங்களையும் விட அதிக அளவு கற்பூரத்தை உற்பத்தி செய்கிறது. பொதுவாக, கற்பூர உற்பத்தி, இலையின் மொத்த எடையில் 1 சதவீதமாகத்தான் இருக்கிறது.''

''அப்பா! கற்பூரம் ஆலயத்தில் ஆரத்திக்கு மட்டும்தான் பயன்படுத்தப்படுகிறதா? வேறு வகையிலும் பயன்படுத்தப்படுவது உண்டா?''

''கற்பூரம் ஆலயத்தில் மட்டுமல்ல, பல்வேறு வகைகளிலும் பயன்படுத்தப்படுகிறது. விருந்துக்கு மெருகேற்றும் பாயசம் முதல், மருந்துக்கு இனமாகத் திகழும் மாத்திரை தயாரிப்பு வரை, கற்பூரம் பயன்படுத்தப்படுகிறது. கற்பூரம் சிறந்த நச்சுத்தடை ஆற்றல் (Anti Septic) கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது! சில சமயங்களில் மயக்க மருந்தாகவும் பயன்படுகிறது. கடும் ஜுரம் ஏற்பட்டு, தன்னுணர்வை இழக்கின்றவர்களுக்கு உணர்வு ஊட்ட இது பயன்படுத்தப்படுகிறது.

''பல்வேறு வகையான இரத்த ஓட்டக் கோளாறுகளையும் இருதய நோய்களையும் குணப்படுத்துவதற்கு கற்பூரம் ஆலிவ் எண்ணெய்யுடன் கலக்கப் பெற்று ஊசி மருந்தாக உடலுக்குள் செலுத்தப்படுகிறது. உடல் எரிச்சல் ஏற்படும்போது தோலில் தடவுவதற்கேற்ற புறமருந்தாகவும் பயன்படுகிறது.

''அப்பா! சாதாரண கற்பூரத்திற்கு இவ்வளவு சிறப்பு இருக்கின்றதா?''

''ஆமாம் சிகாமணி! கற்பூரம் பல சிறப்புக்களைக் கொண்டுள்ளது. அது தன்னை அழித்துக் கொண்டு, பிறருக்கு மணம் தரும் குணமும் கொண்டது-மனிதர்கள். தமக்குக் கேடு வந்தாலும் கூட அதைப் பொறுத்துக் கொண்டு பிறருக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற தத்துவத்திற்கு அடையாளச் சின்னமாகத் திகழ்கிறது கற்பூரம்!''

''அப்பா! செயற்கை முறையில் ரேயான், டெர்லின் போன்ற துணிகள் தயாரிக்கப்படுகின்றனவே, அவற்றைப்போல, கற்பூரமும் தயாரிக்கப்படுவது உண்டா!''

''சரியான கேள்வி கேட்டாய் சிகாமணி! இயற்கையில் கிடைத்து வரும் கற்பூரம் மனித இனத்தின் முழுத் தேவையையும். பூர்த்தி செய்வதற்குப் போதுமானதாக இல்லை. அதனால் இரசாயன முறையில் துணிகள் தயாரிக்கப்படுவதைப் போலவே, கற்பூரமும் செயற்கை முறையில்-இரசாயன முறையில் தயாரிக்கப்படுகிறது! ஆனால் இந்த இரசாயனத் தயாரிப்பு அவ்வளவு சுத்தமானதாக இல்லை; இதன் செயல் திறனும் குறைவு!''

"அப்பா! செயற்கைக் கற்பூரம் எதற்குப் பயன்படுத்தப்படுகிறது?"

''செலுலாய்டு, பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிப்பில் செயற்கைக் கற்பூரம் மிகுதியான அளவில் பயன்படுத்தப்படுகிறது! இந்தப் பொருள்களுக்கெல்லாம் இயற்கைக் கற்பூரத்தைப் பயன்படுத்தினால், கற்பூரத்திற்குப் பஞ்சமே ஏற்பட்டுவிடும்!''

சிகாமணியின் தந்தை சொல்லி முடிப்பதற்கும் அவர்கள் வீட்டை நெருங்குவதற்கும் சரியாக இருந்தது. சிகாமணி, மகிழ்ச்சியுடன் வீட்டுக்குள் நுழைந்தான். ''கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை'' என்று நண்பர்கள் இவன் மேல் தன்னைக் கேலி செய்தால் ''கற்பூர வாசனை மட்டுமல்ல-வரலாறே தெரியும்'' என்று பதில் சொல்லிவிடலாம் என்ற நம்பிக்கை அவனுக்கு ஏற்பட்டுவிட்டது!

— எஸ். சண்முகசுந்தரம்




## நெருக்கடி நிலையில் தேசிய மாணவர் படையின் பங்கு

—•○•—

தேசிய மாணவர் படை இளைஞர்களிடையே தலைமைத் தன்மை, ஒழுக்கம், சகோதரத்துவம், விளையாட்டு உணர்வு, சேவையின் மகத்துவம் ஆகியவற்றை ஏற்படுத்துவதற்கான பணியில் இனி ஈடுபடும். தேசிய நெருக்கடி நிலைமை உள்ள இச்சூழ்நிலையில் நாட்டுக்கு உதவ, கட்டுப்பாடு உணர்வுடன் கூடிய பயிற்சி பெற்ற ஆள் பலம் கொண்ட படையை ஏற்படுத்துவதைத் தனது குறிக்கோளாகக் கொண்டிருக்கும். அதிகாரிகள் போன்று திறம் படைத்தவர்களாக விளங்கும் விதத்தில் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். அதன் மூலம் இராணுவ சேவையில் கமிஷன் அந்தஸ்துப் பெறமுடியும்.

தேசிய மாணவர் படையின் 21வது மாநிலப் பிரதிநிதிகள் மாநாடு புது தில்லியில் 17-4-'76 அன்று நடைபெற்றபோது தலைமை வகித்த பாதுகாப்பு அமைச்சகச் செயலாளர் திரு. டி. ஆர். கோஹிலி, தேசிய மாணவர் படையின் குறிக்கோள்களில் கொண்டுவரப்பட்டுள்ள புதிய மாற்றங்களைத் தெரிவித்தார்.

இம்மாநாட்டிற்குப் பாதுகாப்பு அமைச்சர் திரு பன்சிலால், சிறப்புச் செய்திவிடுத்தார். அதில் அவர், மாநிலங்களில் தேசிய மாணவர் படையுடன் சமூக சேவைத் திட்டங்களைஒருங்கிணைத்துத் செயல்படுத்துவதன் அவசியம், தேசிய மாணவர் படையின் தலைமை அதிகாரியின் அதிகாரங்களைத் தேசிய மாணவர் படையின் மாநில இயக்குனர்களுக்கு அளிப்பது, துப்பாக்கி சுடுவதில் பயிற்சி பெறுவதற்கான இடவசதி, தேசிய மாணவர் படைப் பிரிவுச் சிப்பந்திகளுக்கு வீட்டு வசதி எங்கெங்கு இல்லையோ அப்பகுதிகளில் நிலம் ஒதுக்கீடு செய்து வீட்டு வசதி அளிப்பது போன்றவை குறித்து எடுத்துக் கூறினர்.

தேசிய மாணவர் படை, சமூக சேவையில் மேலும் அதிகமாக ஈடுபடும். பயிற்சி முகாம் நடைபெறும் போது சம்பந்தப்பட்ட மாநில அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைந்துத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் உதவும். இத்தகைய பயிற்சிக் களங்களின் காலம், ஒரு வாரம் நீட்டிக்கப்படும் எனத் தெரிகிறது. தண்ணீரில் சறுக்கு விளையாட்டு, பனிக்கட்டி மலை மீது ஏறுவது போன்றவற்றிலும் பயிற்சி வகுப்புகளை நடத்த வேண்டும் என்று இம்மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

தேசிய மாணவர் படையின், இளநிலைப் பிரிவில் உள்ளவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து 7 இலட்சமாகவே இருக்கும். முதுநிலைப் பிரிவில் உள்ளவர்களின் எண்ணிக்கை படிப்படியாக 4 இலட்சத்திற்குக் குறைக்கப்படும். அரசு ஏற்றுக் கொண்டு இம்மாநாட்டில் அறிவிக்கப்பட்ட மஹாஜன் குழுவின் மற்றொரு பரிந்துரை, தேசிய மாணவர் படையில் கமிஷன் அந்தஸ்துப் பெற்ற அதிகாரிகளுக்கும் 'காடட்' பயிற்சியாளர்களுக்கும் நீண்ட சேவைக்கான பதக்கங்களையும் ரிப்பன்களையும் வழங்கும் முறையைக் கொண்டு வர வேண்டும் என்பதுதான். இந்தப் பதக்கங்களும் ரிப்பன்களும் 5 ஆண்டு, 10 ஆண்டு, 15 ஆண்டு சேவைக்குப் பிறகு அளிக்கப்படும்.

தேசிய மாணவர் படையைச் சேர்ந்த மாணவர்களுக்கு முதுநிலைப் பிரிவிலும் இளநிலைப் பிரிவிலும் இரண்டு வருட காலப் பயிற்சி அளிக்கப்படும். முதுநிலைப் பிரிவு காடட்டுகளில், இராணுவ சேவை புரிய விரும்புவோர்க்கு மேலும் ஓர் ஆண்டுக் காலப் பயிற்சி அளிக்கப்படும். தேசிய மாணவர் படையில் நிரந்தர இராணுவ அதிகாரிகளை வேலைக்கமர்த்தும் போது அதிகக் கவனம் செலுத்தப்படும். பகுதி நேர அதிகாரிகளுக்கு அளிக்கப்படும் கௌரவ ஊதியத் தொகை அதிகரிக்கப்படும். அவர்கள் 15 வருட காலமோ அல்லது 45 வயது வரையோ, இவற்றில் எது முன்னதாக நிகழ்கிறதோ அது வரை இச்சேவை புரியலாம்.

## மாணவர்க்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி

நடப்புக் கல்வியாண்டில் உதவி தேவைப்படும் கல்லூரி மாணவர்களுக்குக் கல்வி கற்கும்போதே சம்பாதிக்கவும் வகை செய்யும் திட்டத்தை தேசிய பஞ்சாலைக் கார்ப்பரேஷன் கொண்டு வருகிறது.

பிரதமர் அவர்களின் 20 அம்சத் திட்டத்தின் ஒரு பகுதியான இந்தத் திட்டம், மாணவரிடை தொழில் முயற்சி, தன்னம்பிக்கை, தேசிய வளர்ச்சியில் பங்கு கொண்டுள்ள உணர்ச்சி ஆகியவைகளை ஊட்டும்.

இந்தத் திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்கு நடப்புக் கல்வியாண்டில் தேசிய பஞ்சாலைக் கார்ப்பரேஷன் மில்களின் "ஷோ ரூம்"களில் தினசரி 2 மணி நேரத்துக்குப் பகுதி நேர வேலையும், கோடை விடுமுறையில் முழுநேர வேலையும் அளிக்கப்படும். பகுதி நேர வேலைக்கு தினசரி ரூ. 5 ஊதியம் கொடுக்கப்படும்.

மற்றொரு திட்டத்தின் கீழ், மாணவர்கள் ரொக்க டிபாசிட் உத்தரவாதத்துக்கு உட்பட்டு தேசிய பஞ்சாலைக் கார்ப்பரேஷன் துணிகளை குறிப்பிட்ட சில்லறைக் கடையிலிருந்து எடுத்துக் கொண்டு போய் வீடு வீடாக விற்கலாம். துணிகளின் மாதிரிகள் மாணவர்களுக்குத் தரப்படும் அவைகளைக் காட்டி ஆர்டர்கள் பெற்று மறுநாள் பட்டுவாடா செய்யலாம்.

மாணவர்கள் செய்யும் விற்பனையில் 8 முதல் 1[illegible] சதவிகிதம் கமிஷன் பெறுவர். மாணவர்கள் ஒரு குழுவாகச் சேர்ந்து ஒரு பல்கலைக் கழகம், அல்லது கல்லூரி விடுதியில் விற்பனைக் கடைகள் திறந்து நடத்தலாம்.

# மக்கள் விழிப்பே

# மலேரியா ஒழிப்பு!



சில நாட்களாகச் சென்னை நகரில் மலேரியா என்று பத்திரிகைகளில் பரபரப்பூட்டும் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன! அரசினர் மருத்துவமனைகளில் மலேரியா நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கவென்று தனி ஏற்பாடுகள் நடந்த வண்ணமிருக்கின்றன!

இம் மலேரியா நோய் சில ஆண்டுகளுக்கு முன்பே, நம் நாட்டிலிருந்து அறவே ஒழிக்கப் பட்டிருந்தும், திரும்பத் தலைதூக்க ஆரம்பித்துள்ளது. இது சென்னையில் மட்டுமல்ல, இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்தின் பல பாகங்களிலும், திரும்பவும் தோன்ற ஆரம்பித்துள்ளது! மலேரியாவை அறவே ஒழிக்க முடியும். எப்படி? அது பொதுமக்களின் கையில்தான் உள்ளது! எனவே, மலேரியாவைப் பற்றிப் பொது மக்கள் அனைவரும் தெரிந்து கொள்வது கடமையாகும்.

### மலேரியாக் காய்ச்சலின் அறிகுறிகள்

மலேரியா காய்ச்சல் ஒரு கொடியநோய். இதன் அறிகுறிகள் கடுமையான குளிர்காய்ச்சல், வியர்த்துக் கொட்டுதல், தலை, கை, கால், முதுகு வலி ஆகியவை. குறிப்பிட்ட நேரங்களில் காய்ச்சல் விட்டு விட்டு வரும். ஒரு நாள் விட்டு ஒரு நாள், இரண்டு நாட்களுக்கு ஒரு முறை அல்லது நான்கு நாட்களுக்கு ஒரு முறை வருவதும் உண்டு. சிலருக்குக் காய்ச்சல் தொடர்ந்து இருப்பதும் உண்டு.

இது நம் உடல் நலனைக் கெடுக்கின்றது; உழைப்பை வீணாக்குகிறது; வேலைத் திறனைக் குறைக்கிறது. இவற்றின் விளைவாக நாட்டின் பொருளாதார நிலையும் உற்பத்தித் திறனும் பாதிக்கப்படுகின்றன.

### நோய் பரவும் முறை

'மலேரியா' எனப்படும் முறைக் காய்ச்சல் ஒரு நுண்ணிய உயிரணுவினால் வருவது. 'அனுபிலிஸ்' என்ற ஒரு வகைக் கொசு மலேரியா நோயாளியைக் கடித்து விட்டு, நம்மைக் கடித்தால்—நோயாளியின் உடலில் இருந்து நோய்க் கிருமி நம் இரத்தத்தில் கலக்கிறது; மலேரியா காய்ச்சல் வருகிறது.

### கொசுக்களை ஒழிக்கும் முறை

மலேரியா காய்ச்சலைப் பரப்பும் 'அனுபிலிஸ்' என்னும் பெண் கொசுக்களை ஒழிக்க வீட்டினுள்ளும், மாட்டுத் தொழுவத்திலும் டி. டி. டீ. (D. D. T.) மருந்து தெளிக்க வேண்டும். கொசுக்கள், தேங்கிய நீரில் உற்பத்தியாவதால், நீர் பாய்ந்தோடுவதற்கு ஏற்ற வகையில் கால்வாய்களை வெட்டி வழி செய்ய வேண்டும். கொசு உற்பத்தியைத் தடுக்க எண்ணெய் தெளிக்கலாம். ''பாரிஸ் கிரீன்'' தூவினால் கொசுப் புழுக்கள் இறந்து விடும். நீர் தேங்கிய இடங்களில் மண்கொட்டி நிரப்பலாம். நீர் நிலைகளில் 'கம்பூசியா' மீன்களை விடலாம்.

கொசுக் கடியைத் தடுக்க கொசு வலை உபயோகப்படுத்துவது மிகவும் நல்லது. வீடுகளில் கதவுகள், சன்னல்கள் ஆகியவற்றில் கொசு உள்ளே போகாத வண்ணம் கம்பி வலைகளைப் பொருத்தலாம்.

### இரத்தப் பரிசோதனை செய்து கொள்ளுங்கள்

காய்ச்சல் வந்தால், எந்த விதக் காய்ச்சலானாலும், இரத்தப் பரிசோதனை செய்து கொள்வது மிகவும் அவசியமாகும். ஏனென்றால், இப்பொழுது எங்கு பார்த்தாலும் மலேரியா நோய் காணப்படுகிறது.

ஒரு துளி இரத்தம் எடுத்தால் போதும், அதை உருப்பெருக்கியால் (Microscope) பார்த்தால் மலேரியா கிருமிகள் (Parasite) உள்ளனவா என்று தெரியும்.

### நல்வாழ்வுப் பணியாளர்கள் ஆற்றும் பணிகள்

மலேரியாவை ஒழிக்க, சென்னை நகரில் தற்போது நல்வாழ்வுப் பணியாளர்கள் பின்வருமாறு பணியாற்றுகிறார்கள் :

1. நல்வாழ்வுப் பணியாளர்கள் வீடு வீடாகச் சென்று காய்ச்சலைப் பற்றிக்கேட்டு அறிந்து கொள்கிறார்கள்.

2. அதன்பின் அவர்கள், வீட்டிலேயே எல்லாவிதக் காய்ச்சலுக்கும் இரத்தம் எடுத்து பரிசோதிக்கிறார்கள்.

3. காய்ச்சலால் பாதிக்கப்பட்டு மருத்துவ மனைகளுக்கு வரும் எல்லா நோயாளிகளிடமிருந்தும் இரத்தம்எடுத்து பரிசோதிக்கிறார்கள்.

4. மலேரியா நோய் கண்டவர்களின் மண்ணீரல் (Spleen) பருத்திருக்கும், சுகாதார அதிகாரிகள் அவற்றைப் பரிசோதித்து அறிகிறார்கள்.

5. மலேரியாவைப் பரப்பும் கொசுக்களைக் கண்டறிய வீடுகளுக்குச் சென்றுகொசுக்களைப் பிடித்துப் பரிசோதனை செய்கிறார்கள். இது அந்தப் பகுதியில் உள்ள கொசுக்களின் வகைகளைக் கண்டறிந்து தடுப்பு நடவடிக்கை எடுக்க உதவும்.

6. மலேரியாக் காய்ச்சல் என்று அறிந்ததும் வீட்டிற்கே சென்று மலேரியா பணியாளர்கள் நோயாளிகளுக்குத் தொடர்ந்து 5 நாட்களுக்கு மாத்திரை கொடுக்கிறார்கள்.

7. நீர்த் தேக்கங்களில் எல்லாம், ஊழியர்கள் கொசு மருந்து தெளிக்கிறார்கள்.

8. நீர்த் தேக்கங்களில்தான் கொசு உற்பத்தியாகிறது. அங்கே சுகாதார அதிகாரிகள் சென்று பரிசோதனைக்காக மாதிரி (Sample) எடுக்கிறார்கள்.

9. விசைக் கருவிகள் மூலமும் கொசு ஒழிப்புப் பணி செய்கிறார்கள்.

10. மலேரியா உள்ள பகுதிகளில் வீடு தோறும் சென்று எல்லா இடங்களிலும் 'டி.டி. டீ' மருந்து தெளிக்கிறார்கள்.



11. சென்னை நகரில் பெரும்பாலும் வீடுகளில் மேல்நிலைத் தண்ணீர்த் தொட்டி உள்ளது. (Over head tank) இங்குதான் பெரும் அளவில் இந்தக் கொசுக்கள் உற்பத்தி ஆகின்றன. இவைகளில் 'கம்பூசியா' என்னும் சிறிய மீன்களை விடுகிறார்கள். அவை கொசுப் புழுக்களை உட்கொண்டு கொசு உற்பத்தியைத் தடுக்கின்றன.

12. தற்போது சென்னை நகரில் பெருவாரியாக மலேரியா பரவி வருகிறது. ஆகையால் உங்களுக்கோ, உங்கள் வீட்டில் யாருக்கேனும் காய்ச்சல் கண்டால், உடனே அருகிலுள்ள மருத்துவமனைக்குப் போய் இரத்தப் பரிசோதனை செய்து கொள்ளுங்கள். ஏனெனில், அது மலேரியாவாக இருக்கலாம்.

### மலேரியா காய்ச்சலிலிருந்து விடுபட: ...

காய்ச்சல் வந்தவர்கள் தவறாமல் மருந்து உட்கொள்ள வேண்டும். அப்போது தான் நோயிலிருந்து நலம் பெறமுடியும். இதன் மூலம் மற்றவர்களுக்கும் நோய் பரவாமலிருக்க வழி செய்ய முடியும்.



உங்கள் வீடு தேடி நலப் பணியாளர், 'டி.டி.டீ' முதலான மருந்து தெளிக்க வரும் போது, வீட்டிலுள்ள பொருட்களை அப்புறப் படுத்திக் கொடுத்து, அவர்கள் தங்கள் கடமையைச் செய்ய ஒத்துழைப்புத்தர வேண்டும்.

நீர் தேங்கிய இடங்களில் கொசுஒழிப்பு மருந்திட அனுமதியுங்கள்.

தற்போது சென்னை நகரில், மலேரியா ஒழிப்புப் பிரசாரம் தீவிரமாக நடந்து வருகிறது. பலவிதமான துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், சினிமா சிலைடுகள், அலங்கார வண்டிகள் முதலான விளம்பரச் சாதனங்களைப் பயன்படுத்தி பிரசாரம் நடந்து வருகிறது.

இந்நற்பணிக்கு உங்கள் ஒத்துழைப்பு மிகவும் அவசியம். மக்கள் விழிப்பே மலேரியா ஒழிப்பு!






# குடியரசுத் தலைவர் ஆட்சியில் தமிழ்நாட்டில் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம்!

—டாக்டர் பா. சின்னதுரை
கூடுதல் இயக்குநர்,
கால்நடை வளர்ப்புத் துறை,
தமிழ்நாடு.

சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் என்பது இன்றைய சமுதாயத்தில் பின் தங்கிய சமூகத்தினர் என்று கருதப்படும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், சிறு விவசாயிகளின் நலன்களைக் கருதி, குடியரசுத் தலைவரின் ஆட்சியில் மிக முக்கியத்துவம் கொடுத்து, கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தையும், வருமானத்தையும் உயர்த்தி, நல்ல குடி மக்களாக - தங்கள் தேவையை, தாங்களே பூர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட திட்டமாகும்.

விவசாயத்திலிருந்து மட்டுமே சிறு விவசாயிகளுக்குப் போதிய வருமானம் கிடைக்காது. ஆகவே அவர்களின் வருமானத்தையும், வாழ்க்கை தரத்தையும் உயர்த்த, பால் பண்ணைகள், ஆடு, கோழி, பன்றி வளர்த்தல் போன்ற உப தொழில்களில் ஆர்வம் காட்டினால் அவர்களின் வருமானத்தை அதிகரித்து, சுய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு இந்தச் சிறு விவசாயிகளின் மேம்பாட்டுத் திட்டம், ரூ. 5 கோடி நிதி உதவியுடன் மிகப் பெரிய அளவில் தமிழகத்தில் முதல்கட்டமாக 8 மாவட்டங்களில் 15 செயல் திட்ட முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

### கன்று வளர்க்கும் மானியத் திட்டத்தின் கீழ் :

1976 முதல் 1979 வரையில் உள்ள, 3 ஆண்டுக் காலத்தில் நல்ல தரமான கன்றுகளுக்கு ரூ. 800 முதல் ரூ. 1,066 வரை நிதி உதவி வழங்கப்படும். ஒவ்வொரு மாவட்டத்திலும் 5,000 பேர் வீதம் சேலம், மதுரை, தஞ்சை, திருச்சி, கோவை ஆகிய 5 மாவட்டங்களிலும் 25,000 சிறு விவசாயிகள் ரூ. 2.15 கோடி நிதி உதவி பெற்றுப் பலன் அடைவர்.

ஆடு வளர்க்கும் திட்டத்தின் கீழ் இதே போன்று 20 பெட்டை ஆடுகளும், 1 கிடா ஆடும் கொண்ட ஒரு சிறிய ஆட்டுப் பண்ணைக்கு (ஒரு யூனிட்டுக்கு) ரூ. 750 முதல் ரூ. 1,000 வரை நிதி உதவி அளிக்கப்படுகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் 3,000 பேர் வீதம் சேலம், வட ஆர்க்காடு, திருநெல்வேலி ஆகிய மூன்று மாவட்டங்களிலும் சுமார் 9,000 சிறு விவசாயிகள் ரூ. 83.25 இலட்சம் நிதி உதவி அடைவர்.

பன்றி வளர்ப்பதில் நல்ல இலாபமிருப்பதால் 3 பெண் பன்றிகள் கொண்ட ஒரு சிறிய யூனிட்டுக்கு ரூ. 425 முதல் ரூ. 570 வரை மானியம் கொடுக்கப்படுகிறது. பன்றி வளர்ப்போர் ஒவ்வொரு மாவட்டத்திலும் 1,500 பேர் வீதம், மதுரை, தென்ஆர்க்காடு,



வட ஆர்க்காடு ஆகிய 3 மாவட்டங்களிலும் சுமார் 4,500 குடும்பங்கள் ரூ. 7.89 இலட்சம் நிதி உதவி அடைய வாய்ப்புண்டு.

கோழி வளர்ப்பது மிகச் சிறந்த உப தொழிலாக இருப்பதால் 50 முட்டை இடும் கோழிகள் கொண்ட சிறிய கோழிப் பண்ணைக்கு ரூ. 666 முதல் ரூ. 888 வரை மானியம் அடையலாம். கோழி வளர்ப்போர் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்து 3,000 பேர் வீதம், சேலம், மதுரை, தென் ஆர்க்காடு, திருநெல்வேலி ஆகிய 4 மாவட்டங்களிலும் சுமார் 12,000 பேர் ரூ. 98.56 இலட்சம் நிதி உதவி அடைந்து பலனடையலாம்.

இவ்வரிய திட்டத்தில் 50,500 சிறு விவசாயிகள் பலன் அடைய முடிகிறது. வேலை வாய்ப்பு குறைவாக உள்ள இந்த நேரத்தில் இத்திட்டம் சிறு விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை நிச்சயமாக உயர்த்தி நல்ல பலனை அளிக்கும் என்பதில் ஐயமில்லை. மேலும் இத்திட்டத்தை நல்ல முறையில் மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகின்றேன்.


## சேலம் மத்திய கூட்டுறவு வங்கி (வரை) எண் 151.
## சேலம்-1.

தபால் பை எண். 171 தொலைபேசி எண்: 2402

கிளைகள் : நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி, சேந்தமங்கலம், கொங்கணாபுரம் சிறப்பு அங்காடி, சேலம் கடைவீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்ப்பேட்டை, பெத்தநாய்க்கன் பாளையம், மேட்டூர் டேம், நாமகிரிப்பேட்டை, கொண்டலாம்பட்டி, மல்லூர், தலைவாசல், எருமைப்பட்டி, வாழப்பாடி, ஏற்காடு, எளம்பிள்ளை, மகுடஞ்சாவடி.

சொந்த நிதி ரூ. 327 லட்சம். நடைமுறை மூலதனம் 1711 லட்சம்.

**வட்டி விகித அட்டவணை**

கால் டெபாசிட்டுகள் : ரூ. 5,000/-க்கும் அதற்கு மேலும் (முன் அறிவிப்பு இல்லாமல்) 3¼%
ரூ. 10,000/-க்கும் அதற்கு மேலும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்) 3½%

சீசன் டெபாசிட்டுகள்: ரூ. 1,000/-க்கும் அதற்கு மேலும்
15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்களுக்கும் 3%
46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்களுக்கும் 3½%

பிக்செட் டெபாசிட்டுகள் : ரூ. 50/-ம் அதற்கு மேற்பட்ட பிக்செட் டெபாசிட்டுகளுக்கு :

1. 91 நாட்களுக்கும் அதற்குமேல் 6 மாதத்திற்குள் 6%
2. 6 மாதத்திற்கும் அதற்குமேல் 9 மாதத்திற்குள் 6½%
3. 9 மாதத்திற்கும் அதற்குமேல் 12 மாதத்திற்குள் 7½%
4. 12 மாதத்திற்கும் அதற்குமேல் 36 மாதத்திற்குள் 8½%
5. 36 மாதத்திற்கும் அதற்குமேல் 60 மாதத்திற்குள் 9½%
6. 61 மாதத்திற்கும் அதற்குமேலும் 10½%

சேமிப்புக் கணக்கு 6%

ரூ. 5000/-க்கு மேற்கொண்டு பிக்செட் டெபாசிட் போடுபவர்களுக்கு இலவச பாதுகாப்பு பெட்டக வசதி உண்டு. பிக்செட் டெபாசிட்டுகளின்மீது மாதாந்திர வட்டி உண்டு. ரெக்கரிங், பிராவிடெண்ட் டிபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்புகொள்க.




அட்டைப்படக் கட்டுரை

# ஒருமைப்பாட்டுக்கு ஓர் உல்லாசத் தலம்

அருவி என்றதும் நம் நினைவுக்கு வருவது குற்றாலமாகும்.

'தென்றல் இசைபாட, தேனருவி தாளம்போட என்றென்றும் இனிய சுகம் தருகின்ற குற்றாலம், தமிழ்நாட்டிற்கே பெருமை சேர்க்கும் திருத்தலமாகும்.

கோடையின் வாடையே இல்லாத திருக்குற்றாலம், திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசியிலிருந்து மேற்கே மூன்றரை மைல் தொலைவிலுள்ளது. இது மேற்கு மலைத் தொடரின் தென் கிளையின் மேல் சுமார் 500 அடி உயரத்தில் அமையப் பெற்றுள்ளது.

ஜூன் திங்கள் முதல் செப்டம்பர் திங்கள் வரை இங்கு மக்கள் திரளாக வருகின்றனர். இதுவே குற்றாலத்தின் சிறப்புக் காலமாகும். (SAARAL SEASON) இந்தக் காலத்தில் இலேசான மழையும் சிறு தூறலும் இங்கே அடிக்கடி பெய்வது, சுற்றுலாப் பயணிகளுக்கு இதமாக இருக்கும்.

திருக்குற்றாலம் மலைவளமும், நீர்வளமும் மிகுந்த எழில்மிகு நகராகும். கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தூட்டும் இயற்கைக் காட்சிகள் நமக்கு இன்பத்தை வாரி வழங்குவனவாகும். சிறப்புக் காலத்தில் திருக்குற்றாலம் குளுமையாகத் திகழும். இந்நகரில் சூழ்ந்துள்ள காற்று அந்நகரின் 10 மைல் தொலைவில் உள்ள காற்றை விட 10 டிகிரி குறைவாக இருக்கும்.

சிற்றாறு (சித்ராநதி) குற்றால மலையைக் கடந்து சமநிலத்தை அடைவதற்கு முன் பல அருவிகளாக விழுந்து ஒன்று சேர்கின்றது. இது 200 அடி உயரத்தில் உள்ள காட்டிலிருந்து கீழே விழுந்து சமவெளியை அடைகிறது. இதை 'வேத அருவி' என்றும் கூறுவர்.

இந்த அருவியின் இடையில் உள்ள ஒரு பாறை அருவியைத் தடுக்கின்றது; இப்பாறையில் நீர் மோதித் தெறித்ததன் காரணமாகப் பள்ளம் ஏற்பட்டு, அதில் அருவி பாய்ந்து பொங்கி எழுவது கடல் பொங்குவதுபோல் காட்சியளிக்கிறது. அதனால் இது 'பொங்குமாங்கடல்' எனப்பெயர் பெற்றது. இதிலிருந்து விழும் அருவியே 'குற்றால அருவி' யாகும்.

பொங்குமாங் கடலிலிருந்து சுமார் 2 மைல் தொலைவில் 'சண்பக அருவி' சல சலக்கிறது. இதனருகில் சண்பகாதேவி என்னும் காளி கோயில் ஒன்றும் இருக்கிறது. இதற்கு மேல் இரண்டு மைல் தொலைவில் இருப்பதுதான் 'தேனருவி'.

குற்றாலநாதர் கோயிலுக்குத் தென்மேற்கில் 'ஐந்தருவி' என்னும் அழகிய அருவி காட்சி தருகின்றது. இவை ஐந்தும் தனித் தனியே 30 அடி தூரத்திலிருந்து விழுகின்றன.

குற்றால அருவி மனத்துக்கு மட்டும் இன்பம் பயப்பதல்ல; அது உடல் நலத்துக்கும் உறுதுணையாய் இருக்கிறது.

சுற்றுப் புறச் சூழ்நிலை, இனிய மென்காற்று, சுத்தமான அருவி நீர்-இவை மனித உடலுக்கும் உள்ளத்துக்கும் புத்துணர்ச்சியையும், புதுத்தெம்பையும் உண்டாக்குகின்றன.

அழகிய மலைகளிலே உள்ள அரிய மூலிகைகளைத் தொட்டுத் துள்ளிக்கீழே இனிய நாதத்துடன் வீழும் அருவியில் மருந்துச் சக்தி இருப்பது இயல்புதானே? அது மட்டுமன்று, அருவியிலே தாதுப் பொருள்களும் இழைந்திருக்கின்றனவாம். இத்தகு தனித்தன்மை பெற்ற குற்றால அருவியில் குளிப்பதால் உடல் நலம் பெறும் என்பதில் ஐயமென்ன?

'திங்கள் முடி சூடுமலை தென்றல் விளையாடுமலை' யில் மா, பலா, கமுகு, எலுமிச்சை, கிராம்பு போன்றவை மிகுதியாக விளைகின்றன. இவையின்றிக் கண்ணைக் கவரும் பன்னிற மலர்க்கூட்டங்களுக்கும் அங்கே குறைவில்லை.

ஜூன் முதல் செப்டம்பர் வரையுள்ள சிறப்புக் காலங்களில் தமிழ்நாட்டில் மட்டுமின்றி 'இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் வந்தவண்ணமிருக்கின்றனர். இவர்களெல்லாம் தங்கி இருந்து மகிழ்வதற்கு ஏற்ற இருப்பிடங்களுக்கும் இங்கே குறைவில்லை. அவை:

1. இந்திய பாணியில் நவீன உணவு விடுதிகள்.

2. தனியாரின் அடுக்கு மாடி மற்றும் தனி இல்லங்கள்.

3. பேரூராட்சியின் ஓய்வு இல்லங்கள்.

4. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் சுற்றுலா மாளிகை.

5. வனத்துறையின் ஓய்வு இல்லம்.

6. குற்றாலநாதர் கோயிலுக்குச் சொந்தமான பல வீடுகள், அறைகள்.

7. இலட்சுமி புரத்திலுள்ள பாண்டியன் லாட்ஜ்.

குற்றாலத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் சுற்றுலா மாளிகைகளைக் கட்டுவதற்குத் திட்டமிட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகள் குற்றாலம் சென்றுவருவதற்கும் இது ஏற்பாடு செய்துள்ளது. ஒன்பது நாள் சுற்றுப்பயணத்தில் (9 days Package Tour) இதற்கு வழி வகை செய்யப்பட்டுள்ளது. இப்பயணம் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனிக்கிழமையன்று தொடங்குகிறது.

குற்றாலத்தைக் கண்டு களிப்பதற்குப் போக்குவரத்து வசதிகளும் இப்போது நிறைய உள்ளன. மதுரை திருவனந்தபுரம் வழித்தடத்தில் தென்காசி இரயில் நிலையம் முக்கியமான ஒரு இரயில் நிலையமாக அமைந்துள்ளது. மதுரை, திருநெல்வேலி, திருவனந்தபுரம் ஆகிய இடங்களிலிருந்தும் குற்றாலம் செல்லப் பேருந்து வசதிகள் உள்ளன. இவையன்றி உள்ளூரில் போக்குவரத்துக்கான பேருந்துகளும், வாடகைக் கார்களும் உள்ளன.

இந்தியாவிலுள்ள எல்லா மாநிலத்தவரையும் ஒன்று சேர்க்கும் ஒருமைப்பாட்டு உல்லாசத் தலமாகத் திருக்குற்றாலம் திகழ்கிறது என்று நாம் பெருமையோடு சொல்லிக் கொள்ளலாம்.

—பி. வி. கிரி



# பருத்திக்குச் சிக்கனப் பாசன முறை

—ஆர். கே. சிவணப்பன்,
பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்,
மண், நீர்ப்பாதுகாப்பு துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்—3.

தமிழகத்தின் தொழில் வளத்தையும், பொருளாதாரத்தையும் பெருக்கும் முக்கியப் பயிர்களில் பருத்தியும் ஒன்றாகும். தமிழ் நாட்டில் பருத்தி சுமார் 3.10 இலட்சம் எக்டர் நிலத்தில் பயிரிடப்படுகின்றது. அதில் 83,000 எக்டருக்கு, பெரும்பாலும் கிணற்று நீரால் பாசனம் செய்யப்படுகின்றது. மொத்தம் பயிரிடப்படும் பரப்பில் பாசனப் பருத்தி மூன்றில் ஒரு பங்கு இருப்பினும், மகசூலில் இது மூன்றில் இரண்டு பங்கு அளவு இருக்கின்றது. இந்த முக்கியப் பயிரின் உற்பத்தியைத் திருந்திய கட்டுக்கோப்புச் சாகுபடி முறைகளாலும், உள்ளீடுகளை திறமையாகப் பயன்படுத்தியும் வெகுவாகப் பெருக்கலாம். நீர், பருத்தி உற்பத்திக்கு ஒரு முக்கியமான உள்ளீடு ஆகும். ஆனால், நீர், பொதுவாக தமிழ் நாட்டிலுள்ள, குறிப்பாக கோவை, சேலம் மாவட்டங்களில், ஓர் அரிய பொருளாகக் கருதும் காலம் வந்துவிட்டது. மற்றும் இதை ஆழக் கிணற்றில் இருந்து வெளியே கொண்டு வர ஆகும் செலவும் மிகவும் அதிகமாக உள்ளது. அவ்வாறு இருக்க, இந்த நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி எவ்வாறு அதிக மகசூலை எடுக்க முடியும் என தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்நடத்திய ஆராய்ச்சியின் முடிவுகளை வேளாண் குடி பெரு மக்களாகிய உங்களுக்குத் தெரிவிக்க ஆசைப்படுகின்றேன்.

### பாசன முறைகள் :

பொதுவாக நம் மாநிலத்தில் பருத்திக்கு கீழ்க்கண்ட முறைகளில் நீர் பாய்ச்சப்படுகின்றது.

1. சால் முறை (Furrow)
2. பாத்தி முறை (Basin)
3. பரவல் பாசன முறை (Border)

மேலே கண்ட பல்வேறு பாசன முறைகளை ஒப்பிட்டுப் பார்த்து நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த எந்த முறைப் பாசனம் மிகவும் சிறந்தது எனக் கண்டுபிடிக்க 'எம். சி. யு. 5' பருத்தியில் ஆராய்ச்சி நடத்தப்பட்டது. இந்தப் பரிசோதனையில் நீண்ட சால், பரவல், சிறுசால், பாத்தி ஆகிய முறைகளை ஐந்து முறையாகப் பிரித்து பரிசோதிக்கப்பட்டது. இந்தப் பரிசோதனையில் சாலின் நீளம், பரவல் பாசனத்தின் அகலம், நீளம் முதலியவைகளை மண்ணின் நீர் எடுக்கும் தன்மை, நிலச் சரிவு, நீரின் அளவை முதலியவைகளைக் கணக்கில் கொண்டு நிர்ணயிக்கப்பட்டது. அதன்படி சால் 100 அடி (30 மீட்டர்) நீளமும், பரவல் முறையில் 100 அடி நீளமும், 10 அடி அகலமும் கொண்டதாகவும், பாத்தி, 20 அடிக்கு 10 அடி அகலம், குறுகிய சால் 20 அடி நீளம் கொண்டதாகவும் இருந்தது. எல்லா வயல்களுக்கும் நீர் ஒரே சீராகப் பாய்ச்சப்பட்டது. பிறகு பருத்தியின் மகசூலை நான்கு முறை, ஒரு வார இடைவெளியில் எடுத்துக் கணக்கிடப்பட்டது.

### நீளசால் பாசன முறையே சிறந்தது!

இந்த ஆராய்ச்சிகளில் கண்டறிந்த முடிவின்படி பருத்தி விளைச்சல் எல்லாப் பாசன முறைகளிலும் ஒரே மாதிரி மகசூல் கொடுத்தது. ஆனால் நீர் உபயோகித்த அளவு, பாத்தி பாசனத்தை விட நீண்ட சால் பாசன முறையில் 30 சதவீதம் குறைவாகவே இருந்துள்ளது. அதாவது ஒரு குறிப்பிட்ட நீர் அளவில், பருத்தியின் உற்பத்தி நீண்ட சாலில் 18.1 கிலோ கிராமாகவும், சிறு சாலில் 16.5 கிலோ கிராம் ஆகவும், பாத்தியில் 12.2 கிலோ கிராமாகவும், பரவல் பாசனத்தில் 10.8 கிலோ கிராம் எனவும் இருந்துள்ளது. எனவே, நீள் சால் பாசன முறையை உபயோகித்து, பருத்திக்கு நீரை வெகுவாகச் சிக்கனப்படுத்த முடியும் என அறியப்பட்டது. மற்றும் இந்த முறையில் களையின் பாதிப்பும் மற்ற முறைப் பாசனத்தை விடக் குறைவாக இருந்தது. ஆகையால் 'எம். சி. யு.5' பருத்திக்கு நீள சால் பாசன முறையை உபயோகித்து நீரை மிச்சப்படுத்த முடியும்.

### கிணற்றுப் பாசனத்திற்கு ஏற்ற 2—வகைச்சால் பாசன முறை:

சால் பாசன முறையை உபயோகித்து இன்னும் தண்ணீரை எவ்வளவு சிக்கனமாகப் பயன்படுத்த முடியும்என மேற்கொண்டு ஆராய்ச்சி நடத்தப்பட்டது. அதில் கீழ்க்காணும் இரு முறைகள் கையாளப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டது.

1. சால் முறையில் ஒன்றுவிட்டு ஒரு சாலில் பாசனம் செய்தல்.

2. அதிக இடைவெளி விட்டு சால் அமைத்து, சாலின் இருபுறமும் பயிர் செய்தல்.

இவற்றில் முதன் முறையில், முதல் 2 பாசனத்தின்போது எல்லாச் சாலிலும், எப்போதும் தண்ணீர் பாய்ச்சுவது மாதிரி விட்டு கட்ட வேண்டும். ஆனால் அடுத்து வரும் பாசனத்தின்போது ஒரு சால் விட்டு ஒரு சாலில் தண்ணீர் கட்ட வேண்டும். இதைத் தொடர்ந்து கொடுக்கும் பாசனத்தின்போது, இதற்கு முன்னால் செய்த பாசனத்தின் போது நீர் கட்டப்படாத சால்களில் மட்டும் தண்ணீர் கட்ட வேண்டும். இவ்வாறாக ஒவ்வொரு பாசனத்தின் போதும் ஒரு சால் விட்டு ஒரு சாலில் தண்ணீர் கொடுத்துப் பார்த்ததில், எல்லா சால்களிலும் எல்லாப் பாசனத்தின் போதும் நீர் கட்டியதன் மூலம் கிடைத்த மகசூலின் அளவே இதிலும் கிடைத்தது. ஆனால் தண்ணீர் சுமார் 30—40 சதவீதம் அளவு மிச்சப்படுத்த முடிந்தது. இந்த முறை மணற்பாங்கான நிலத்திற்கு மிகவும் ஏற்றது.

அடுத்த முறையில், (அதாவது அதிக இடைவெளி விட்டு சால் அமைத்து சாலின் இரு புறமும் பயிர் செய்யும் முறை), ஒரு சாலில் நீர் பாய்ச்சினால் அது இரண்டு வரிசையில் இருக்கும் பயிர்கட்கும் பயன்படும். மற்றும் சாலுக்குச் சால் அதிக இடைவெளி இருப்பதால், அதில் ஒரு குறுகிய கால பயிர் வகையைப் பயிரிட முடிகின்றது. உதாரணமாகச் சாலுக்குச் சால் 75 செ.மீ. இடைவெளி இருக்கும். ஒரு சாலில் ஒரே வரிசை பருத்தியை நட்டு நீர் பாய்ச்சுவது வழக்கம். இப்புதிய முறையில், சாலிற்குச் சால் 90 செ.மீ. தூரமும், சாலின் அகலம் 60 செ.மீ. ஆகவும் இருக்கும்படி போடப்பட்டது. சாலின் இருபக்கமும் இரு வரிசை பருத்தி நட்டு, நீர் பாய்ச்சப்பட்டது. ஆராய்ச்சியின் முடிவுப் படி விளைச்சலில் குறைவு இன்றி நீரில் 50 சதவீதம் வரை மிச்சப்படுத்த முடிந்தது. இத்துடன், சால்களுக்கு நடுவில் பயிரிடப்பட்ட பச்சைப் பயிரின் மூலமாக ஓரளவு மகசூலும் கிடைக்கப் பெற்றது. ஆகையால் கிணற்றுப் பாசனத்தில், நீரை மிச்சப்படுத்த மேற்கூறிய இரு முறைகளையும் கையாளலாம்.




சாதாரண பாசன முறைக்குத் தேவைப்படும் நீரில், மூன்றில் ஒரு பங்கே துளிநீர்ப்பாசன முறைக்குப் போதுமானது!

### தெளிநீர்ப் பாசன முறை:

பருத்திச் சாகுபடிக்கு மேற்பரப்புப் பாசன முறைகளைத் தவிர, தெளி நீர்ப் பாசன முறையையும் பயன்படுத்தலாம். கோவையில் நடத்திய ஆராய்ச்சியின் முடிவுப்படி இம்முறைப் பாசனத்தில், மேற்பரப்பு முறையைக் காட்டிலும் 20-30 சதவீதம் அளவுக்கு நீரைக் குறைவாகப்பயன்படுத்தி, அதே மகசூலை எடுக்க முடியும் என அறியப்பட்டது. ஆனால் தெளிநீர் சாதன அமைப்பு நிறுவ, ஒரு எக்டருக்கு 5,000 முதல் 6,500 ரூபாய் வரை செலவு ஆகும்.

மேற்கூறிய பாசனத்தைக் காட்டிலும் மிகவும் சிக்கனமாக நீரை உபயோகித்து நல்ல மகசூல் எடுக்க, புதிய முறை ஒன்றைச் சமீப காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டு, அதை விரிவாகப் பயன்படுத்துகிறார்கள். அந்த முறையைச் சொட்டு நீர்ப் பாசனம் அல்லது துளி நீர்ப்பாசனம் என்பார்கள். இந்தப் பாசனம் உண்மையிலேயே பாசனக் கலையில் ஒரு முன்னேற்றமாகும்.

### துளி நீர்ப்பாசனம் :

இம் முறையில் செடிகட்குத் தேவையான நீரைத் தேவைப்படும் பொழுது வேரின் பக்கத்தில் கொடுக்க முடிகின்றது. இதில் தண்ணீரைக் குழாய் மூலம் எடுத்துச் சென்று ஒவ்வொரு செடியின் வேருக்கும், அதன் தேவைக்கேற்பக் கொடுக்கப்படுகிறது. இந்தப் பாசன முறையில் நீரின் தேவை சாதாரணமான பாசன முறைக்கு ஆகும்நீரில்மூன்றில் ஒரு பங்கே ஆகும். ஆனால் பயிர் மகசூலில் மேற்பரப்பு பாசனத்தில் கிடைத்த அளவே கிடைக்கிறது. ஆனால் இப்பாசன முறையை அமைப்பதற்கு ஒரு எக்டேருக்கு சுமார் 10,000 ரூபாய் செலவு ஆகும். இந்த முதலீடு மேற்சொன்ன நீர்த் தேவை, மகசூல் முதலியவைகளைப் பார்க்கும் போது அதிகமல்லஎனக் கூறலாம்.

நீர் தட்டுப்பாடான இந்தக் காலத்தில், நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த ஒவ்வொரு விவசாயியும் முயல வேண்டும். அப்பொழுதுதான், இருக்கும் தண்ணீரைக் கொண்டு அதிக பரப்பளவில் பயிர் விளைவித்து, மகசூல் பெருக்கத்திற்குத் தேவையான உணவு உற்பத்தியைச் செய்ய முடியும். மேற்சொன்ன முறைகளை, அவரவர்கட்கு ஏற்ற முறையில் நடைமுறையில் கொணர்ந்து நீரைச் சிக்கனமாக உபயோகித்து ஒவ்வொரு உழவர் பெருமகனும் வளம் பெறவும், அதன் மூலம் நாடு செழிக்கவும் வழி வகுக்க வேண்டும்.

# தொழிலாளர் நலங்காக்கும்
# தொழிலாளர் அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டம்

—எஸ். அருணசலம்,
மண்டல இயக்குநர்,
இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன்,
சென்னை.



தொழிலாளர் அரசாங்க இன்ஷியூரன்ஸ் திட்டம் சென்ற 24 ஆண்டுகளாக நமது நாட்டில் செயல்பட்டு வருகிறது. டெல்லி, கான்பூர் இரண்டு இடங்களிலும் 1952 பிப்ரவரி 24-ஆம் தேதி முதல் அமல் செய்யப்பட்டு, பின்னர் படிப்படியாக இத்திட்டம் ஏனைய இடங்களுக்கும் விரிவாக்கப்பட்டு, இன்று நம் நாட்டில் 18 மாநிலங்களில் 365 இடங்களில் 48 இலட்சம் தொழிலாளர்கள் இதன் பயன்களை அடைந்து வருகின்றனர். இன்ஷியூர் செய்யப்பட்ட தொழிலாளர்களும், அவர்களுடைய குடும்பத்தினருமாக 185 இலட்சம் நபர்கள் இத்திட்டத்தின் மருத்துவ வசதிகளைப் பெறுகின்றனர்.

தமிழ்நாடு, பாண்டிச்சேரி, உள்ளிட்ட தமிழ்நாடு மண்டலத்தில் 44 இடங்களில் 4 இலட்சம் தொழிலாளர்கள் இந்தத் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டிருந்தனர். தமிழ்நாட்டில் 42 இடங்களில் 3,82,000 தொழிலாளர்கள் இந்தத் திட்டத்தின் பயன்களைச் சென்ற ஆண்டுவரை அனுபவித்து வந்தனர். சென்ற நவம்பர் மாதம் 30-ஆம் தேதி முதல், இத்திட்டத்தின் கீழ் வருவதற்கான ஊதிய உச்சவரம்பை உயர்த்தியதன் விளைவாக, மேலும் 80,000 ஊழியர்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டனர். தொழிலாளர்களும், அவர்களுடைய குடும்பத்தினருமாக, தமிழ்நாட்டில் ஏறக்குறைய 18 இலட்சம் நபர்கள் இத்திட்டத்தின் கீழ் மருத்துவ வசதிகளைப் பெற்று வருகின்றனர்.

தனியாக மருந்தகங்களும், மருத்துவ மனைகளும் இத்திட்டத்தின் கீழ் செயல்படுகின்றன. சென்னை, கோவை, மதுரை ஆகிய முக்கிய நகரங்களில் தனி 'இ.எஸ். ஐ.' மருத்துவ மனைகள் இருக்கின்றன. சென்னை அசோக் நகரில் இரண்டாவது மருத்துவ மனை ஒன்று கட்டப்பட்டு வருகிறது. வேறு சில இடங்களில் இணைப்பு மருத்துவ மனைகளும் (Annex) மற்ற இடங்களில் அரசு மருத்துவ மனைகளில் இன்ஷியூர் செய்யப்பட்ட ஊழியர்களுக்கெனத் தனிப் படுக்கை வசதிகளும் இருக்கின்றன. இவ்வாறாக, தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் கீழ் 1,597 படுக்கைகள் இருக்கின்றன. சென்னையில் இரண்டாவது மருத்துவ மனை செயல்படும்போது 500 படுக்கைகள் உபயோகத்துக்கு வரும். பாண்டிச்சேரியிலும் 50 படுக்கைகள் கொண்ட 'இ.எஸ். ஐ.' மருத்துவமனை ஒன்று கட்டப்பட்டு வருகிறது. இது இவ்வாண்டு இறுதிக்குள் உபயோகத்துக்கு வரும்.

மனைவி அல்லது கணவன், மைனர் பிள்ளைகள், பெண்கள், சார்ந்திருக்கும் பெற்றோர் ஓர் ஊழியரின் குடும்பத்தினராவர். தொழிலாளர்களுக்கும், அவர் குடும்பத்தினருக்கும் மருந்தகங்களில் வெளியிருப்புச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. மருந்தகங்களிலேயே சிறுசோதனைக் கூடங்கள் உண்டு. விரிவான பரிசோதனை தேவைப்படுபவர்களை மருத்துவர்களே மருத்துவ வல்லுநரிடம் (Specialists) அனுப்பி, அவர்தம், ஆலோசனைப்படி மருத்துவம் செய்கின்றனர். தேவைப்பட்டால் நோயாளிகளை அவர்களுடைய விடுகளிலேயே சென்று பார்க்கும் வசதியும் இத்திட்டத்தில் உண்டு. உள்ளிருப்புச் சிகிச்சை தேவைப்படுபவர்களை மருந்தக மருத்துவர்களே, மருத்துவ மனைகளில் சேர்க்க ஆவன செய்வர். மருந்தகங்களும், மருத்துவ மனைகளும் மாநில அரசால் நிர்வகிக்கப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் பணவசதிகளை அளிப்பதற்காக ஆங்காங்கு உள்ளூர் அலுவலகங்கள் (Local Offices) ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவைகளை மேற்பார்வையிடுவதுடன், கட்டணங்களை வசூலிக்கவும், கணக்குகளை வைத்துக் கொள்ளவும், மாநில அரசுகளுடன் தொடர்புகொண்டு இத்திட்டத்தின் நடைமுறைக்கும், முன்னேற்றத்துக்கும் ஆவன செய்யவும், மண்டல அலுவலகம் (Regional Office) சென்னையில் இயங்குகிறது. இது, தமிழ்நாடு, பாண்டிச்சேரி மாநிலங்களில் இத்திட்டம் இயங்குவதற்கான பணிகளைக் கவனிக்கிறது.

நோய்க் காலத்திலும், தாய்மைப் பேறு பெறும் காலத்திலும் தற்காலிக, நிரந்தரகால ஊனங்களுக்கும், விபத்துக் காரணமாக இறந்துவிட்ட தொழிலாளியைச் சார்ந்தோருக்கும், இறந்த தொழிலாளியின் ஈமச்சடங்குக்காகவும் குறிப்பிட்ட பண உதவிகள் உள்ளூர் அலுவலகங்களில் வழங்கப்படுகின்றன. இவைகளில் நோய்க்கால, தாய்மைப் பேறுகால, தற்காலிக ஊனகால, ஈமச்சடங்குக்கான பணஉதவிகளை உள்ளூர் அலுவலகமே நிர்ணயம் செய்து வழங்குகிறது. நிரந்தரக்கால ஊன உதவியும், சார்ந்தோருக்கான பணஉதவியும் மண்டல அலுவலகத்தினால் நிர்ணயிக்கப்படுகின்றன.

தொழிலாளர்களுக்கு இன்றியமையாது தேவைப்படும் சமூகப் பாதுகாப்பு இத்திட்டத்தின் கீழ் கிடைக்கிறது. இதனால் "சிரமமான காலங்களில் என்ன செய்வோம்" என்ற கவலையில்லாமல், தொழிலாளர்கள் தம் வேலைகளில் முழுமூச்சுடன் ஈடுபட்டு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்குத் தேவையான உற்பத்திப் பெருக்கத்தில் ஈடுபட முடிகிறது. இந்தத் திட்டத்தின் நிர்வாகத்தில், இத்திட்டத்தினால் பயன் அடையும் தொழிலாளர்களும் ஈடுபடுத்தப்படுகின்றனர். தொழிலாளர் அரசாங்க இன்ஷியூரன்ஸ் கார்ப்பொரேஷன், அதன் நிலைக்குழு (Standing Committee) அதற்கு மருத்துவ விஷயங்களில் ஆலோசனை கூற ஏற்படுத்தப்பட்டிருக்கும் மருத்துவ நன்மைக் குழு (Medical Benefit Council) ஆகிய அகில இந்திய அமைப்புகளில் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கிறார்கள். அதேபோல மாநிலங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் மண்டல வாரியங்களிலும் உள்ளூர் அளவில் இயங்கும் உள்ளூர்க் குழுக்களிலும் (Local Committees) தொழிலாளர் பிரதிநிதிகளுக்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நமது பாரதப் பிரதமரின் 20 அம்சத் திட்டத்தில் ஒன்றான 'நிர்வாகத்தில் தொழிலாளர் பங்கு' என்ற அம்சம் இங்கு கடைப்பிடிக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இத்திட்டத்தின்கீழ் கொடுக்கப்படும் வசதிகள், சென்ற பல ஆண்டுகளில் மேலும் விரிவாக்கப்பட்டு வந்திருக்கின்றன. ஓராண்டில் 56 நாட்களுக்கு என்றிருந்த நோய்க்காலப் பணஉதவி, 21 குறிப்பிட்ட நோய்களுக்கு நீட்டிக்கப்பட்டு இவ்வாண்டு ஏப்ரல் முதல் தேதியிலிருந்து நீட்டிக்கப்பட்ட நோய்க்காலப் பணஉதவி சாதாரண நோய்காலப் பண உதவியைவிட 25 சதம் அதிகமாக ஆக்கப்பட்டிருக்கிறது. தாய்மைக் காலப் பண உதவியும் அதிகரிக்கப்பட்டு, இப்பொழுது குறைப் பிரசவத்துக்கும் அளிக்கப்படுகிறது. தாய் இறந்து, குழந்தை உயிருடன் இருந்தால், தாய்க்கு வேண்டிய முழு உதவியும் குழந்தைக்காக, தாய் நியமிக்கும் நபரிடம் கொடுக்கப்படுகிறது.

ஊனகாலப் பண உதவி, நோய்க்கால உதவியை விட 25 சதம் அதிகமாக்கப்பட்டிருப்பதும் ஈமச்சடங்குக்கான பண உதவி ரூபாய் 100 அளிப்பதும், உறுப்பிழந்தவர்கட்குச் செயற்கை உறுப்புகள் பொருத்துவதும், விபத்துக் காரணமாக கண் பார்வை மங்கியவர்களுக்குக் கண்ணாடிகளும், கேட்கும் சக்தி இழந்தோருக்குக் கேட்கும் கருவியும், பற்களை இழந்தோருக்குச் செயற்கைப் பற்கள் பொருத்துவதும் இந்தத் திட்டத்தின் வளர்ச்சியைக் குறித்துக் காட்டும்.

ஒருபுறம் திட்டத்தில் முன்னேற்றங்களை எய்தி வருவதுடன் மறுபுறம் மேலும் அதிகத் தொழிலாளர்களையும், ஏனைய ஊழியர்களையும் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வருவதற்கும் ஆவன செய்யப்பட்டு வருகிறது. திட்ட ஆரம்ப நாட்களில் மாத வருவாய் ரூ. 400/-ம் அதற்குக் குறைவாகவும் பெறும் ஊழியர்கள் மட்டுமே இத்திட்டத்தின் பயன்களை அடைந்தனர்.

1968-ல் இது ரூ. 500/- ஆக உயர்த்தப்பட்டது. அத்துடன் தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்களுடன் கூட அதன் நிர்வாக ஊழியர்களுக்கும் கச்சாப் பொருள் வாங்கி, உற்பத்தியான பொருட்களை விற்பனை செய்யும் ஊழியர்களுக்கும், இத்திட்டம் விரிவாக்கப்பட்டது.

சென்ற ஆண்டு செய்யப்பட்ட திருத்தத்தின்படி அதிகப் பட்ச மாத வருவாய் ரூ. 500/- என்பது ரூ. 1,000/- ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக தமிழ்நாட்டில் மேலும் 80,000 ஊழியர்கள் இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டிருக்கின்றனர்.

தொழிலாளர் அரசாங்க இன்ஷியூரன்ஸ் சட்டத்தின்படி, சம்பந்தப்பட்ட அரசு இத்திட்டத்தை ஏனைய தொழிலகங்கட்கும், வியாபாரக் கூடங்களுக்கும் மற்ற நிறுவனங்களுக்கும் விரிவுபடுத்தலாம். இத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்தும் யோசனை கூறும் பொருட்டு பாரத அரசு தொலைநோக்குத் திட்டக் குழு (Perspective Planning Committee) ஒன்றை ஏற்படுத்தியது. அதன் சிபாரிசுகளின்படி இத்திட்டத்தைப் படிப்படியாக மற்ற நிறுவனங்களுக்கும், மலைத் தோட்டங்களுக்கும் அமல் செய்யப்பட வேண்டும் என்ற கருத்தை மாநில அரசுகள் ஏற்றுக்கொண்டு அதற்கான காரியங்களை மேற்கொண்டிருக்கின்றன. இதன் அடிப்படையில் பாண்டிச்சேரி அரசு இத்திட்டத்தை ஏனைய நிறுவனங்களுக்கும் சென்ற 29-2-'76 முதல் விரிவுபடுத்தியுள்ளது.

தமிழ்நாட்டில் தற்போது விசை உபயோகித்து, 20 பேரும் அதற்கு மேலும் வேலை செய்யும் தொழிற்சாலைகளுக்கு மட்டும் தான் இத்திட்டம் விரிவாக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் விரைவிலேயே, ஏனைய சிறுவிசைத் தொழிற்சாலைகள், 20 பேருக்கு மேல் வேலைசெய்யும் விசை உபயோகிக்காத தொழிற்சாலைகள், கடைகள், மற்றும் நிறுவனங்கள், ஓட்டல்கள், சிற்றுண்டிச் சாலைகள், சினிமா தியேட்டர்கள், போக்குவரத்து நிறுவனங்கள் உழைக்கும் பத்திரிகையாளர்கள் ஆகியோருக்கு இத்திட்டத்தை விரிவுபடுத்துவதற்கான அரசிதழ் (Gazette) அறிவிப்பைத் தமிழக அரசு இவ்வாண்டு ஏப்ரல் மூன்றாம் தேதி வெளியிட்டிருக்கிறது. வரும் அக்டோபர் மாதம் 3-ம் தேதிக்குப் பின், தமிழக அரசு முடிவு செய்யும் நாளிலிருந்து, குறிப்பிட்ட இடங்களில் உள்ள இத்தகைய நிறுவனங்களுக்கு இத்திட்டம் விரிவாக்கப்படும். இதற்கான பூர்வாங்க வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் சுமார் 1.5 இலட்சம் ஊழியர்கள் இத்துறைகளில் பணிபுரிகின்றனர்.

மக்கள் தொகைப் பெருக்கம் நம் நாட்டை எதிர்நோக்கியுள்ள மாபெரும் பிரச்சினையாக உள்ளது. நாட்டு நலனிலும், எதிர்காலச் சமுதாயத்தின் நலனிலும் அக்கறையுள்ள பலரும் குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தை வலியுறுத்துகின்றனர். இந்தப் பணியில் தொழிலாளர் அரசாங்க இன்ஷியூரன்ஸ் கார்ப்பரேஷனும் ஈடுபட ஆரம்பித்துள்ளது. இதற்காக ஐக்கியநாடுகள்





உதவியுடன் ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

இத்திட்டத்தின்கீழ் பயன் பெறுபவர்களில் 20 சத வீதத்தினர் குடும்பக்கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. வரும் மூன்று ஆண்டுகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். நாட்டில் உள்ள எல்லா 'இ.எஸ்.ஐ.' மருத்துவமனைகளிலும், மற்றும் மருந்தகங்களிலும் குடும்பக் கட்டுப்பாடு யூனிட்டுகள் நிறுவப்படும். இவ்வாண்டு 50 யூனிட்டுகள் ஒவ்வொன்றும் 25,000 நபர்களுக்கு மேல் ஈடுபடுத்தக்கூடியதாகவும், 1977-ல் 70 யூனிட்டுகள் ஒவ்வொன்றும் 10,000 முதல் 25,000 நபர்களை ஈடுபடுத்தக் கூடியதாகவும், 1978-ல் 100 யூனிட்டுகள் ஒவ்வொன்றும் 10,000 நபர்களுக்குக் குறைவாக ஈடுபடுத்தக்கூடியதாகவும் செயல்படத் துவங்கும். ஒவ்வொரு யூனிட்டும் மாதமொன்றுக்கு 30 குடும்பக் கட்டுப்பாட்டு அறுவைகளாவது செய்யும். தாய்-சேய் நலனும் பெரிதும் பேணிக் காக்கப்படும்.

தமிழ்நாட்டில் சென்னை, கோவை, மதுரை ஆகிய இடங்களில் உள்ள 'இ. எஸ். ஐ.' மருத்துவ மனைகளில் குடும்பக்கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சைக்காக தலா 6 படுக்கைகள் ஒதுக்கப்படும். முதல் ஆண்டில் சென்னையில் ஐந்து மையங்களும், கோவை மதுரை, திருச்சி ஆகிய இடங்களில் முறையே ஒரு மையமும், மொத்தம் எட்டு மையங்களும், ஒவ்வொன்றும் 25,000 நபர்களுக்குப் பயனளிக்கும் வகையில் ஏற்படுத்தப்படும்.

இந்த இன்ஷியூரன்ஸ் திட்டத்துக்கான நிதி, தொழிலாளர், தொழிற்சாலை அதிபர் ஆகிய இருவரும் செலுத்தும் சந்தாவின் மூலம் கிடைக்கிறது. இச்சந்தாவைத் தொழிலாளர்களிடமிருந்து வசூலித்து, தமது பங்கையும் சேர்த்து, தொழிலதிபர்கள் 'இ.எஸ்.ஐ.' நிதியில் கட்டவேண்டும். அப்படிக் கட்டத் தவறுபவர் மேல் நடவடிக்கை எடுத்து, பணத்தை வசூல் செய்ய வேண்டியது மண்டல அலுவலகத்தின் பணியாகும். பல தொழிலக உரிமையாளர்கள் இவ்வாறு கட்டணம் செலுத்த வேண்டியதில் தவறிவிடுகிறார்கள். இக் கட்டணத்தை நிலவரி பாக்கியாக வசூல் செய்தும், தவறுபவர்கள் மீது 'கிரிமினல்' நடவடிக்கை எடுத்தும், மேற்கொண்டு அவர்கள் தவறாமல் இருக்கச் செய்வதும் அவசியமாகிறது.



சென்ற ஆண்டு செய்த திருத்தங்களின்படி. 'பிராசிகியூஷன்' செய்யப்பட்ட தொழிலதிபருக்குச் சிறைத் தண்டனை அளிப்பது கட்டாயமாக்கப் பட்டிருக்கிறது. அத்துடன்கூட, கட்டத் தவறிய தொகையைப் போல இன்னொரு மடங்குவரை நட்ட ஈடாகப் போட்டு வசூல் செய்யவும் வகை செய்யப்பட்டிருக்கிறது. தொழிலாளர்களிடம் வசூல் செய்யும் தொகை பாதுகாப்பானது. அதைக்கட்டத் தவறுபவர் தண்டனைக்குள்ளாவார்கள் எனத் திருத்தப்பட்ட சட்டம் கூறுகிறது.

இம்மாநிலத்தில் நோய்க்காலப் பண உதவியைத் தவறான வழியில் பெறுவது என்ற ஒருநிலை இருந்து வந்தது. தொழிற்சாலைகளில் வேலை நிறுத்தம்., கதவடைப்பு. 'லே-ஆப்' என்று வந்தால் தொழிலாளர்கள் 'இ.எஸ்.ஐ.' மருந்தகங்களை அணுகி, நோய் இல்லாத போதும் அதற்கான சர்ட்டிபிகேட்டுகளைப் பெற்று நோய்க்கால பண உதவியைத் தவறாகப்பெற்று வந்தனர். நாட்டில் நெருக்கடி நிலைமை பிரகடனப்படுத்தப் பட்டிருப்பதன் பயனாகத் தொழிற்சாலைகள் மூடப்படாத ஒருநிலை உருவாகியிருப்பது இந்த நிலைமையைச் சீர்திருத்தியிருக்கிறது. நெருக்கடி நிலைமையின் சாதனைகளாக ஒழுங்கும், கட்டுப்பாடும் ஏற்பட்டிருக்கும் இன்றைய நிலையில் தொழிலாளர்கள் இத்திட்டத்தின் பயன்களைத் தவறாக உபயோகப்படுத்துவது நின்றிருப்பதும், 'இ. எஸ். ஐ.' கார்ப்பொரேஷன் அலுவலகங்கள் சீரான முறையில் செயல்படுவதும் வரவேற்கப்படக்கூடியதாக உள்ளது.




 பதிவு எண். M. 8676




[illegible] மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை









# “வறட்சியை வென்றிட வகை வகையாய் உதவி செய்வீர்!”

— ஆளுநர் வேண்டுகோள்

‘தொடர்ந்து இரண்டாண்டுகளாக வடகிழக்குப் பருவ மழை பொய்த்து விட்டதன் காரணமாக, திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை, கோயம்புத்தூர், தர்மபுரி, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, சேலம், வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் கடும் வறட்சி நிலைமை இருந்து வருவதை அனைவரும் அறிவீர்கள். மொத்தம் 4,131 கிராமங்களும் 10,000 சிற்றூர்களும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன. முக்கியமான மழைப் பிடிப்புப் பகுதிகளில் தென்மேற்குப் பருவ மழை வெகுவாகப் பொய்த்துவிட்டது. இதனால், தென்மேற்குப் பருவ மழையினால் நிலைமை ஓரளவுக்குச் சீர்திருந்தலாம் என்ற நம்பிக்கையும் குறைந்துவிட்டது.

பாதிக்கப்பட்ட இந்த மாவட்டங்கள் அனைத்திலுமே பெரும் அளவில் வறட்சி நிவாரணப் பணிகள் நடைபெற்று வருகின்றன. குடிதண்ணீர் வழங்குவதற்கு முதலிடம் தரப்பட்டு, மொத்தம் ரூ. 8.5 கோடி செலவில் குடிதண்ணீர் வழங்கு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஒரு லட்சம் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கக் கூடிய வகையில், வேலை வாய்ப்புத் திட்டங்கள் முழு வேகத்துடன் நடக்கின்றன. பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நிலைமை முழுதும் கட்டுக்கடங்கியே இருக்கிறது என்று பொதுமக்கள் உறுதியாக நம்பலாம்.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள இன்றைய நிலையில், பொது மக்களையும், குறிப்பாக, சமூக நல ஊழியர்களையும் பொது நல நிறுவனங்களையும் பாதிக்கப்பட்ட மக்களின் துயரைத் துடைக்க தாங்களே முன்வந்து தங்களால் இயன்ற உதவிகள் அனைத்தையும் அளித்திட வேண்டு மென விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் அளிக்கும் உதவி பல்வேறு முறைகளில் அமையலாம். குடிதண்ணீர் வசதிக்காக கிராமங்களையோ சிற்றூர்களையோ ஏற்கலாம். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்துக்கு ஆழ் குழாய்க் கிணறுகள் அமைக்கவும், உள்ள குழாய்க் கிணறுகளை மேலும் ஆழப்படுத்தவும் வேண்டிய கருவிகள் வழங்கலாம். பாதிக்கப்பட்ட நகராட்சிகளுக்கும் இதே போல் குடிதண்ணீர் வழங்க லாரிகள் வழங்கலாம். இது போன்ற உதவிகளைத் தவிர, கால்நடைகளுக்கு வேண்டிய தீவனங்கள், குறிப்பாக திருநெல்வேலி மாவட்டத்தில் வரவேற்கப்படுகின்றன.

வறட்சி நிவாரணத் திட்டங்களில் அரசுக்கு உதவ விரும்பும் நிறுவனங்கள் சென்னையில் உள்ள வருவாய்த் துறைச் செயலாளருடனோ, அல்லது பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களுடனோ தொடர்பு கொள்ளலாம்.

வறட்சி நிவாரணப் பகுதிகளில், பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்கும் பணியில் அரசுடன் ஒத்துழைத்து தங்களாலான எல்லா உதவிகளையும் பொது நல நிறுவனத்தினர் அளிப்பார்கள் என உறுதியாக நம்புகிறேன்.


மலர் : 7
இதழ் : 3
தமிழரசு
1—8—1976

# பசுமை வளம் கொழிக்கச் செய்வீர்!



நமது பொருளாதார வளர்ச்சியில் மரங்கள் மிக இன்றியமையாதவை. கட்டிட மரம், விறகு, பழங்கள் மற்றும் பல்வேறு இன்றிமையாத பொருட்களை அவை அளிப்பதுடன் நில்லாமல் சுற்றுப்புறத் தூய்மை கெடுவதை யும் தடுக்கின்றன. நமதுநாட்டில் காடுகள் மிகவும் குறை வாகவே உள்ளன. நாட்டின் பரப்பளவில் 23 சதவிதம் மட்டுமே காடாக உள்ளது. அதிலும், தமிழ்நாட்டில் 17 சத விதத்தில் தான் காடுகள் அமைந்துள்ளன.

இருபது ஆண்டுகளுக்கு மேலாக மரம் நடும் விழா ஆண்டு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. ஆனால் அதன் காரணமாக நாம் எதிர்பார்த்த அளவு வெற்றி பெற வில்லை. நமது நாட்டில் மரங்கள் வெட்டப்படுவது குறித்து நமது அன்பிற்குரிய தலைவர் நேருஜி அவர்கள் பன்முறை வருத்தம் தெரிவித்தார். "மரத்தை வெட்டுவது எளிது. ஆனால், அதை வளர்ப்பதற்கோ ஒரு தலைமுறை ஆகிறது" என்று அவர் குறிப்பாகச் சொல்லியுள்ளார். எனவே, மரங்களை வளர்த்து அவற்றைப் பாதுகாப்பதற்கான தீவிர இயக்கம் ஒன்று தொடங்கப்பட வேண்டும்.

ஆண்கள், பெண்கள், இளைஞர், முதியோர் உருகவுள்ள ஒவ்வொரு குடிமகனும் நமது நாடு வளமானதொரு நாடாக உருவாக வேண்டும் என்றுதான் விரும்புவார். எனவே, மனஉறுதியுடனும், கட்டுப்பாட்டுடனும் முயற்சிகளை மேற் கொண்டால் காடுகள் அழிக்கப்பட்ட பகுதிகளில் கணிச மான பரப்பளவில் குறிப்பிட்ட கால வரையரைக்குள் மீண்டும் காடுகளை வளர்க்க இயலும்.

தமிழ்நாட்டில் 51,849 ஹெக்டேர் ஊராட்சி நிலங் களிலும் பயன்படுத்தப்படாமல் உள்ள பிற அரசு தரிசு நிலங்களிலும் மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. மேலும், பெரும்பாலும் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள கால்வாய், ஆற்றங்கரைகள் நெடுக 10,535 ஹெக்டேர்களில் மரங்கள் வளர்க்கப்பட் டுள்ளன. இத்தகைய நடவடிக்கைகளை அரசு மேற்கொண் டால் போதுமெனக் கருதி வாளாயிராமல் நாட்டின் ஏற்ற மிகு இத்திட்டத்தில் பொதுநிறுவனங்களும், உள்ளாட்சி மன்றங்களும் பங்கு கொள்ள வேண்டும்.

செடிப்பண்ணைகளை ஏற்படுத்திப் பொதுமக்களுக்கு இளஞ்செடிகளை வழங்குவதற்கு மாநகராட்சிகளும், நகராட்சிகளும் தற்போது சில வசதிகளைப் பெற்றிருக்க லாம். இவ்வசதிகள் தற்போது இல்லையெனில் செடிப் பண்ணைகள் தொடங்குமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களை நயந்து கேட்டுக் கொள்ள வேண்டியதுடன் நகர்ப்புறங் களில் செயல்படுத்தப்படும் மர வளர்ப்புப் பணிகளில் பெரும ளவிற்கு அவற்றை ஈடுபடுத்தவும் வேண்டும். மர வளர்ப்புப் பணியில் ஏற்கெனவே ஈடுபட்டுள்ள வேளாண்மை தோட்டக்கலைச் சங்கம் போன்ற பிற நிறுவனங்களையும், இதில் பங்கேற்குமாறு செய்ய வேண்டும். இதைத் தவிர வனத்துறையும், வேளாண்மைத்துறையும் மாநகரங்களிலும், பெரிய பட்டணங்களிலும் செடிப்பண்ணைகளைத் தோற்று விக்க முடியும். அழகிய மலர்கள் அல்லது பெரிய கண்கவர் வடிவுடைய உச்சிப் பகுதிகளுடைய மரச் செடிகளை வளர்ப் பதில் வனத்துறை அக்கறை காட்டலாம். வேளாண்மைத் துறை, மா, கொய்யா, எலுமிச்சை போன்ற பழமரங்களை வளர்ப்பதில் கவனம் செலுத்தலாம். நிலப்பரப்பில் இயற்கை எழிலைக் கூட்டுவதற்காகவும், வெட்டுமரமாகவும், எரிபொரு ளாகவும் பிறவகைகளிலும் பயன்படுத்தப்படுவதற்காகவும் பல்வகை மரங்களை வளர்க்கலாம். அந்தந்த இடங்களின் மண்வளம், தட்ப, வெப்பநிலைகளுக்கு ஏற்ப மரவகைகள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். எனவே, ஏற்ற மரங்களை ஏற்ற இடங்களில் உரிய காலத்தில் நட்டு அறிவார்ந்த முறையில் அவற்றைப் போற்றி வளர்ப்பது அவசியம் ஆகும். மரங்களை வைத்து வளர்ப்பதால் கிராமப்புறங் களுக்கு வனப்பும், வண்ண எழிலும் ஏற்படும்.



27-வது 'வனமகோத் சவ' விழாவை முன் னிட்டுத், தமிழ்நாடு ஆளு நர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள், கிண்டி ராஜ்பவன் தோட் டத்தில் 25-7-'76 அன்று ஒரு மாங்கன்றை நட்டார்.

இவ்வாண்டில் மரம் நடும் திட்டத்தைப் பெருமளவில் வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்காக விரிவான திட்டம் ஒன்றை அரசு வகுத்துள்ளது. எனவே, இத்திட்டத்தை செவ் வனே செயற்படுத்துவதற்குத் தமிழ்நாட்டு மக்கள் தங்கு தடையின்றித் தங்கள் ஒத்துழைப்பை நல்குமாறும், புத்தார் வத்துடன் மரங்களை நட்டுப் பாதுகாத்துத் தமிழ்நாட்டில் பசுமை வளம் கொழியச் செய்யுமாறும் நான் அவர்களை மனப்பூர்வமாக வேண்டுகிறேன்.

—மோகன்லால் சுகாதியா
ஆளுநர், தமிழ்நாடு.

# பொதுமக்களின் உரிமைகளும் காவல் துறையினரின் பொறுப்புகளும்

1. சட்டத்தில் எல்லாக் குற்றங்களும், கைது செய்தற்குரியவை, கைது செய்வதற்குரியதல்லாதவை என இருவகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.



2. கொலை, கொள்ளை, திருட்டு, மோசடி, தீ வைத்தல், கலகம், கொடுந்துன்பம், சூதாட்டம், விபச்சாரம், மது வகைக் குற்றங்கள், இலஞ்சம், கள்ளக் கடத்தல், பதுக்கல், தீண்டாமை முதலியன, கைது செய்வதற்குரிய குற்றங்களாகும் (Cognizable Offences).

3. அற்பத்துன்பம், குறும்புத்தனம், சிவில் விவகாரங்கள் முதலியன கைது செய்வதற்குரியதல்லாத குற்றங்களாகும் (Non-cognizable offences).

4. எல்லா வகைக் குற்றங்களையும் தடுத்து, பொதுமக்களின் உயிர், உடைமைகளைப் பாதுகாப்பது காவல் துறையினரின் தலையாய பொறுப்பாகும். கைது செய்வதன் மூலம், கைது செய்வதற்குரிய குற்றங்களைத் தடுப்பதற்கு, காவல் துறையினருக்கு அதிகாரமுண்டு.

5. வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ, பெறப்படும் எல்லா வகைக் குற்றம் பற்றிய தகவல்களையும் காவல் நிலையத்தார் பதிவு செய்தாக வேண்டும்.

6. கைது செய்வதற்குரிய குற்றங்களைத்தான் காவல்துறையினருக்கு விசாரணை செய்ய அதிகாரமுண்டு. நீதிபதி (Magistrate) உத்தரவின்றி கைது செய்தற்குரியதல்லாத குற்றங்களை விசாரணை செய்ய அதிகாரம் கிடையாது.

7. கைது செய்தற்குரியதல்லாத குற்றத்தைப் பற்றி வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ தகவல் பெற்றால் அதன் சுருக்கத்தை நிலைநாட்குறிப்பில் (Station General Diary) பதிவு செய்து, தகவல் கொடுப்பவரை நிவாரணம் பெற, நீதிமன்றத்திற்குச் செல்லும்படி காவல் நிலையத்தார் தெரிவிக்க வேண்டும்.

8. கைது செய்தற்குரிய குற்றம் பற்றிய தகவல், வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ காவல் நிலையத்தில் கொடுக்கலாம். வாய்மொழியாகக் கூறியதை எழுதிக் கொள்ள வேண்டும்; இவ்வாறு எழுதிக் கொண்ட அல்லது எழுத்தில் பெற்ற தகவல் மீது தகவல் கொடுப்பவருடைய கையொப்பம் பெற வேண்டும்.

9. கைது செய்தற்குரிய குற்றம் பற்றிய தகவலை முதல் தாக்கல் அறிக்கையில் (F.I.R.) பதிவு செய்து, அதன் பிரதியை உடனேயே தகவல் கொடுத்தவருக்கு இலவசமாகக் கொடுக்க வேண்டும்.

10 மேற்கூறிய சட்ட விதிகள் காவல் நிலையத்தாரால் மீறப்பட்டால் மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளருக்குப் பொதுமக்கள் தெரிவிக்க வேண்டும்.

11. புலன் விசாரணைக்காக சாட்சிகள் காவல் நிலையத்துக்கு அழைக்கப்படலாம். ஆனால் பெண்களும், குழந்தைகளும் அவர்கள் இருப்பிடத்திலேயே தான் விசாரிக்கப்பட வேண்டும்.

12. புலன் விசாரணைக்கு ஒரு தஸ்தாவேஜோ அல்லது பொருளோ, தேவைப்பட்டால், காவல் நிலையப் பொறுப்பிலுள்ளவர் எழுத்து மூலம் அதை ஆஜர் செய்ய உத்தரவிட வேண்டும்.



13. காவல் துறையினர் தேக பரிசோதனையில் பொருள் கைப்பற்றினால், பரிசோதனையிடப்பட்டவருக்கு, உடனே ரசீது வழங்க வேண்டும்.

14. காவல் துறையினர் எந்த இடத்தைச் சோதனையிட்டாலும், அந்த இடத்தின் பொறுப்பிலுள்ளவரை சோதனை நடக்கும் பொழுது இருக்க அனுமதி அளிப்பதுடன், சாட்சிகள் கையொப்பமிட்ட சோதனை ஜாபிதாவின் பிரதியை அவருக்கு வழங்க வேண்டும்.

15. கைது செய்தற்குரிய குற்றத்தில் சம்பந்தப்பட்டவர், பிடி—ஆணையின்றி (Without a Warrant) காவல்துறையினரால் கைது செய்யப்படலாம். பிடி-ஆணையின்பேரில் கைது செய்யப்பட்டவருக்கு பிடி—ஆணையைக் காட்ட வேண்டும்.

16. கைது செய்யப்பட்டவருக்கு கைது செய்வதின் காரணங்களை உடனடியாகத் தெரிவிக்க வேண்டும். ஜாமீனில் விடக் கூடிய குற்றங்களில், அதன் தன்மையைத் தெரிவித்து, தகுந்த ஜாமீன் வந்தவுடன் கைது செய்யப்பட்டவரை விட்டுவிட வேண்டும்.

17. கூடியமட்டில் பெண்களும், குழந்தைகளும் காவல் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்படக் கூடாது என்பது விதி.

18. நீதிபதி (Magistrate) முன்னியில் ஆஜர் செய்யாமல் எந்த ஒரு ை
யையும், 24 மணி நேரத்திற்கு மே
காவலில் வைக்கக் கூடாது.

19. புலன் விசாரணை முடிந்தவுட
அதன் முடிவைப் புகார் செய்தவரு
எழுத்து மூலமாகத் தெரிவிக்க வேண்(

20 கைதிகள் தப்பி ஓடுதலைத் தவி
தல், தலைமறைவான கைதிகளைப் பி
தல், பொது அமைதிக்குக் குந்தகம் ஏற்
வதைத் தடுத்தல், பொதுச் சொத்துக்
பங்கம் ஏற்படாமல் பாதுகாத்தல், கை
செய்தற்குரிய குற்றம் புரிவோரைப்
றித் தகவல் அளித்தல் போன்ற நடவ
கைகள் மூலம் காவல் துறையினருக்
பொது மக்கள் அனைவரும் உதவி செ
வேண்டும்.



21. ஜாமீனில் விடக்கூடாதது
கைது செய்தற்குரியதுமான குற்றத்தை
தன் முன்னிலையில் புரிவோரைக் கை
செய்வதற்கு, பொதுமக்களுக்கு
காரம் உண்டு.

22. நிலம், வாய்க்கால, ..
கட்டடம், சந்தை, மீன் பிடிப்பு, ப
போன்றவைகளின் உடைமை, உரி
பற்றிய சர்ச்சைகளில் காவல் துறை
ருக்குத் தலையிட அதிரம் கிடைய
இதுபோன்ற விவகாரங்களில், பா
கப்பட்டவர் நீதிமன்றத்தில்தான் நி
ணம் தேட வேண்டும்.

தமிழ்நாடு காவல்து



# பாரத நாட்டில் சாதனைகள் நிறைந்த ஓராண்டு!

சங்கர் கோஷ்,
மத்திய திட்ட ராஜாங்க அமைச்சர்.

இந்திய வரலாற்றில் 1975 ஜூன் முதல்
6 ஜூன் வரையிலான காலம் நினைவு
த்தக்க காலமாகும். இந்தக் காலத்தில்
தம மந்திரி திருமதி இந்திரா காந்தி அவர்கள்
வித்த 20-அம்சப் பொருளாதாரத் திட்டம்
த்தின் பொருளாதாரத்துக்குப் புதியஊக்க
, பொலிவும் அளித்ததோடு மட்டுமல்லா
சமூக-பொருளாதாரம், அரசியல் மற்றும்
துறைகளிலும் பல்வேறு பலன்களை அளித்
ளது. பொருளாதாரத்தில் வலிமைபெற்ற
ாக இந்தியா எழுச்சி பெற்றுள்ளது.
பெரும் அரசியல் ஸ்திரத்தன்மையும் அடை
பட்டுள்ளது. வாழ்க்கையின் ஒவ்வொரு
சத்திலும் ஒழுங்கு, கட்டுப்பாடு ஏற்பட்
ளது.

அதிக சமூக நீதியுடன் வளர்ச்சி வேகத்தை
தப்படுத்துவதே 20-அம்சப் பொருளா
திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்
படி, முன்னுரிமைப் பகுதிகள் குறிப்பிடப்
டு, அங்கு முற்போக்கான உடனடி நட
க்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.
திட்டம், வழக்கமான திட்டச் செயல்
றக்கு துணைத்திட்டமாக விளங்குகிறது.

இருபது அம்சத் திட்டத்தின் பல அம்
ள் மாநிலத்துறையைச் சேர்ந்தவை.
ற்றில் சிலவற்றுக்கு அதிக நிதி உதவியும்
வைப்படவில்லை; ஆனால் சட்ட, நிர்வாக
டிக்கை மட்டுமே தேவைப்படுகிறது. இத்
த்தை செயல்படுத்தும் பொருட்டு மத்
அரசாங்கமும், மாநில அரசாங்கங்களும்
ளமான சட்டமன்ற நடவடிக்கைகளை
ப எடுத்துள்ளன.

புதிய பொருளாதாரத் திட்டம், நெருக்
லை ஆகியவற்றின் வியக்கத்தக்க பலன்
பணவீக்கத்துக்கு எதிரான போராட்டத்
கிடைத்த வெற்றியும் ஒன்றாகும். பணவீக்
ாக்கு வெற்றிகரமாக தடுத்துத் திசை
பப்பட்டதோடுகூட, அது இறங்கு முகத்தைக் காட்டியுள்ளது. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்திய ஒரு சில நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக இருக்கிறது.

விவசாயத்துறை, தொழில்துறை ஆகிய இரண்டிலும் உற்பத்தி வேகம் கணிசமாக உயர்ந்துள்ளது. மேலும் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கும், உற்பத்தித் திறனவை நன்கு பயன்படுத்திக் கொள்வதற்கும் தொழில்துறை கொள்கைகளும், செயல்முறைகளும் ஒழுங்குபடுத்தப்பட்டும் தளர்த்தப்பட்டும் உள்ளன.

தொழில்துறையில் குறிப்பிடத்தக்க உற்பத்தி உயர்வு அடையப்பட்டுள்ளது. 1974-75-ல் 2.5 சதவிகிதமாக இருந்த தொழில்துறை உற்பத்தியின் வளர்ச்சி விகிதம், 1975-76-ல் 5.9 சதவிகித அளவுக்கு உயர்ந்துவிட்டது. 1975-76-ன் கடைசி காலாண்டின் வளர்ச்சி விகிதம், முந்தைய ஆண்டின் இதே காலத்தைவிட 10 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

அரசுத்துறை நிறுவனங்களின் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க உயர்வு ஏற்பட்டுள்ளது, இந்த ஆண்டு தொழில்துறை வளர்ச்சியின் சிறப்பு அம்சமாகும். குறிப்பாக எஃகு, நிலக்கரி, இரும்பு அல்லாத உலோகங்கள், பெட்ரோலியப் பொருட்கள், இயந்திரக் கருவிகள், கனரக மின்சாதனங்கள் முதலியவற்றின் உற்பத்தி அதிகரித்துள்ளது. 1975 ஏப்ரல்-டிசம்பர் காலத்தில், தேசிய ஜவுளிக் கார்ப்பொரேஷன் ஆலைகள் நீங்கலாக மற்ற அரசுத்துறை நிறுவனங்களின் சராசரி வளர்ச்சி வேகம், முந்தைய ஆண்டின் இதே காலத்தோடு ஒப்பிடுகையில் சுமார் 15 சதவிகிதமாக இருந்தது. தற்போதைய குறிப்புக்களின் படி, 1975-76-ல் மத்திய அரசுத்துறை நிறுவனங்களின் நிகர இலாபம் (வரிவிதிப்புக்கு முன்னால்) 350 கோடி ரூபாயாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

1975-76-ஆம் ஆண்டில் எஃகு, நிலக்கரி, மின்சக்தி ஆகியவற்றின் உற்பத்தியில் சாதனை ஏற்பட்டுள்ளது. நடப்பு ஆண்டின் முதல் காலாண்டிலும் இந்த உற்பத்தி உயர்வின் வேகம் தொடர்ந்து பராமரிக்கப்பட்டது.

1975-76-ல் உணவு தானியங்களின் உற்பத்திக்குறியளவாக நிர்ணயிக்கப்பட்டிருந்த 11.4 கோடி டன்னுக்குப் பதில் 11.6 கோடி டன் உணவுதானியங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. உணவு உற்பத்தி கணிசமாக உயர்ந்ததன் பலனாக மற்ற பண்டங்களின் விலைகளும் கடந்த ஓராண்டில் பொதுவாகக் குறைந்துள்ளன.

கடத்தல் தொழில் பெருமளவுக்கு ஒழிக்கப்பட்டுள்ளது. வெளிச்செலாவணி மோசடிக்காரர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சுமார் 1,500 கோடி ரூபாய் கறுப்புப் பணத்தை வெளிக்கொணர்வதில், வருமானம், சொத்து பற்றிய விவரங்களைத் தாமாகவே முன்வந்து அறிவிக்கும் திட்டம் வெற்றி அடைந்துள்ளது.

பரிசீலனை ஆண்டில், ஏழ்மையை முழுமையாகக் குழிதோண்டிப் புதைக்க நாட்டில் பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 20-அம்சப் பொருளாதாரத் திட்ட நிறைவேற்றத்தின் முன்னேற்றத்தை கீழ்க்கண்டவாறு சுருக்கமாகக் கூறலாம்:



## 1. இன்றியமையாப் பண்டங்களின் விலைகளைக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்; இன்றியமையாப் பண்டங்களின் விநியோக முறைகளை மாற்றியமைத்தல் முதலியன.

அன்றாட வாழ்வுக்குத் தேவைப்படும் பல்வேறு இன்றியமையாப் பண்டங்களின் மொத்த விற்பனை விலைகளும், சில்லறை விற்பனை விலைகளும் குறைக்கப்பட்டுள்ளன. 1975-76-ல் விவசாய உற்பத்தி கணிசமாக உயர்ந்ததனாலும், நெருக்கடி நிலைப் பிரகடனத்துக்குப் பிறகு ஏராளமான தீவிர, கடுமையா
கொள்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள
பட்டதினாலும் இந்தச் சாதகமான வி
நிலைமை ஏற்பட்டுள்ளது. பணவீக்கப் போ
குக்கு எதிரான நடவடிக்கைகள் தவிர, கள்
மார்க்கெட்காரர்கள், கொள்ளைலாபக்காரர்க
கடத்தல்காரர்கள் முதலான பொருளாத
குற்றவாளிகளை முறியடிப்பது, பதுக்கலை
கண்டு பிடிப்பதற்கான தீவிர இயக்கங்க
கறுப்புப்பணப் புழக்கத்தைக் கட்டுப்படுத்
வது ஆகிய நடவடிக்கைகள் அவற்றில் அட
கும். பொதுமக்களுக்கு இன்றியமைய
பண்டங்களை விநியோகிக்கும் முறை ப
படுத்தப்பட்டு, பரவலாக்கப்பட்டது. உண
தானியக் கொள்முதலும் நிர்ணயிக்கப்பட
ருந்த குறியளவைத் தாண்டியுள்ளது. சும
ஒரு கோடியே 50 இலட்சம் டன் உண
தானியம் கையிருப்பில் வைக்கப்பட்டுள்ள

### அட்டை சொல்லும் செய்தி

*நூற்றி இருபது ஆண்டுக
அணுகிக் கொண்டிருக்கும் சென்னை
பல்கலைக் கழகம், இந்தியாவில் மு
முதலாகத் தோன்றிய பல்கலைக் கழ
களில் ஒன்று. 1857-ல் துவக்கப் பெ
இந்தப் பல்கலைக் கழகம் இலட்சக் கண
கான பட்டதாரிகளை உருவாக்
பெருமை படைத்ததாகும். புதிய பு
துறைகளில் எல்லாம் பட்ட மேற்படி
வகுப்புக்களைத் தொடங்கியிருக்
இந்தப் பல்கலைக் கழகத்தின் புகழ், ந
தோறும் ஓங்கி வருகிறது. எதிர்காலத்
இன்னும் புகழ் பெறுவது உறுதி!*

நிதி பற்றுக்குறை அளவைக் கட
படுத்துவதன் மூலமும், கடன்திட்டக் கெ
கையைக் கடைப்பிடிப்பதன் மூலமும் ப
புழக்கத்தின் வளர்ச்சிப் போக்கு தொட
கண்காணிக்கப்பட்டு வருகிறது.

தொழில்துறையில் கணிசமான உற்
உயர்வு பதிவு செய்யப்பட்டுள்ளது. அ
துறை நிறுவனங்கள் அனைத்தும் உற்ப
சாதனை புரிந்துள்ளன. தெரிந்தெடுக்கப்ப
அரசுத்துறை நிறுவனங்களின் உற்ப
திறன் உபயோகத்தில் குறிப்பிடத்தக்க
பாடு எய்தப்பட்டுள்ளது.

## 2. விவசாய நில உச்சவரம்பு

மாநிலங்களின் நில உச்சவரம்புச்
டங்கள் தேசிய வழிமுறைகளுக்கு
திருத்தியமைக்கப்பட்டுள்ளன; அல்லது
சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.
மாநிலச் சட்டங்களில் பெரும்பாலா
அரசியல் அமைப்புச் சட்டத்தின்
பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளன. இதுவ
சுமார் 13 இலட்சம் நில அறிக்கைகள் த
செய்யப்பட்டுள்ளன. அவற்றில் சுமா



ட்சம் அறிக்கைகள் பைசல் செய்யப்பட் ளன. பைசல் செய்யப்பட்ட அறிக்கை ன்படி, 18 இலட்சம் ஏக்கர் நிலங்கள் உபரி மாக அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றில் ார் 10 இலட்சம் ஏக்கர் நிலத்தை நிலங்கள் இதுவரையில் எடுத்துக்கொண் ளன. அந்நிலங்களில் 4 இலட்சம் ஏக்கருக் மேல் ஏற்கெனவே விநியோகிக்கப்பட்டு டது. மாநில முதலமைச்சர்களின் மாநாடு ச்சீர்திருத்த நிறைவேற்றத்தின் முன்னேற் தைப் பரிசீலித்து, அவற்றைத் துரிதப் த்துவதற்குப் பல்வேறு நடவடிக்கைகளைப் துரைத்துள்ளது. அப்பரிந்துரைகளின் ப்படையில் மாநில அரசாங்கங்கள் சரி நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன.

## 3. நிலமற்றவர்களுக்கும், நலிந்தவர் க்கும் வீட்டுமனை வழங்குதல்.

நிலமற்றவர்களுக்கும் நலிந்த பிரி ர்களுக்கும் வீட்டுமனைகள் வழங்குவது சம் ப்பட்ட வேலை அநேக மாநிலங்களில் சமாக முடிக்கப்பட்டுள்ளது. இதுவரை சுமார் 65 இலட்சம் வீட்டுமனைகள் அவர் கு வழங்கப்பட்டுள்ளன. கேரளம், கர்ந ், தமிழ்நாடு, மத்தியப் பிரதேஷ், மஹா டிரா, ஆந்திரப் பிரதேஷ், ஒரிஸ்ஸா, கு வங்காளம் ஆகிய சில மாநிலங்களில் ற்றவர்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுமனை வீடுகள் கட்டுவதற்கான திட்டங்கள் ொள்ளப்பட்டுள்ளன; வீட்டுமனைகள் கப்பட்டவர்களுக்கு வீடுகள் கட்டு கான நிதி உதவிகளும் சில மாநிலங்களில் கப்பட்டிருக்கின்றன.



## 4. அடிமை ஊழிய முறை ஒழிப்பு.

அடிமை ஊழிய முறையை ஒழிப்பதற்கு சட்டம் ஒன்று ஏற்கெனவே இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் கீழ்படும் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கும், அவர்கள் மீது வழக்கு தொடருவதற்கும் மாவட்ட அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மாநில அரசாங்கங்கள் எடுத்துள்ளன. அடிமை ஊழியமுறை ஒழிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக அநேக மாநிலங்களில், கிராமக் குழுக்கள் செயல்படுகின்றன. இதுவரையில் சுமார் 58,400 அடிமை ஊழியர்கள் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். விடுவிக்கப்பட்ட அடிமை ஊழியர்களின் மறுவாழ்வுக்கான திட்டங்களை வகுத்து நிறைவேற்றும்படி மாநிலங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

## 5. கிராமப்புறக் கடன் தொல்லை.

கிராமப்புறத்தில் மக்களின் கடன்பட்டத் தன்மையை ஒழிப்பதற்காக பல்வேறு மாநிலங்கள் பல நடவடிக்கைகளை எடுத்துள்



ளன. அந்நடவடிக்கைகளில், நிலமற்றத் தொழிலாளர்களும், சிறிய-மிகச்சிறிய விவசாயிகளும், கிராமப்புற கைவினைஞர்களும் தனிப்பட்ட பணலேவாதேவிக்காரர்களிடம் வாங்கிய கடன்களை காலந்தாழ்த்தி திருப்பிக் கொடுப்பதற்கான சட்டப்பூர்வ அனுமதி வழங்கப்பட்டதும் ஒன்றாகும். அவற்றைத் தொடர்ந்து, பழைய கடன்கள் தீர்க்கப்படுவதற்கும், குறைக்கப்படுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

சமுதாயத்தின் நலிந்த பிரிவினர்களுக்கு கடன் அளிப்பதற்கு கூட்டுறவு நிறுவனங்கள் ஊக்கப்படுத்தப்பட்டு வருகின்றன. சில மாநிலங்களில், நலிந்த பிரிவினர்களுக்கு கடன் வழங்குவதற்காக குறிப்பிட்ட சதவிகித அளவு நிதி ஒதுக்கும்படியும் அந்த நிறுவனங்களுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது. ஏராளமான இடங்களில் கிராமப்புற பாங்குகளும் நிறுவப்பட்டுள்ளன.

( தொடரும். )



# கிராமங்களில் தொலைக்காட்சி



"தொலைக் காட்சி நாட்டு மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம், அதற்குள்ள சக்தி அளவிட முடியாதது. எனவே, செய்திகளைப் பரப்புவதற்கு மட்டுமின்றி, அறிவை வளர்க்கவும், தொலைக்காட்சி நன்கு பயன்படுத்தப்பட வேண்டும். தொலைக் காட்சியைக் கண்டு களிப்போரும், தொலைக் காட்சி நிலையத்தினரும் ஒருவருக்கொருவர் இணைந்து நின்று, தமது கருத்துக்களையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ள வேண்டும். இந்த இணைப்பு இல்லையென்றால், இருதரப்பினருக்கும் முழுப் பயன் ஏற்படாது. தொலைக் காட்சி வரலாற்றில் பதினேழு ஆண்டுக்காலமாக நடைபெற்ற சோதனைகளும், உருவான படைப்புகளும், வளர்ந்த எண்ணங்களும் மேலும் சிறந்த முறையில் இப்போது மக்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. தமிழ்நாட்டுக்கு இத்தகைய சிறந்த சக்தி வாய்ந்த சாதனமான தொலைக் காட்சியை வழங்கியதற்காக மத்திய அரசிற்குத் தமிழ்நாட்டு மக்களின் உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.'' என்று ஆளுநர் ஆலோசகர் திரு பி. கே. தவே, அவர்கள் 4-7-'76 அன்று முற்பகலில் சென்னை தொலைக்காட்சி நிலையத்தில் நடைபெற்ற புதிய ஒளிபரப்பு கோபுரத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

சென்னை நகரத் தொலைக் காட்சி நிலையம் முதன்முதலாக 1975-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15-ஆம் நாள் மாண்புமிகு மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. வி.சி. சுக்லா அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. சென்னை தொலைக் காட்சி நிலையம் தொடங்கும் பொழுது 1 கிலோ வாட் சக்தியை உடைய அதன் ஒளிபரப்பு ஆற்றல் ஏறத்தாழ 19 கிலோ மீட்டர் சுற்றுப்பரப்பிற்கே பயன்பட்டது. தற்பொழுது 175 மீட்டர் உயரமும், 10 கிலோ வாட் சக்தியையும் கொண்ட ஒலி-ஒளிபரப்புக் கோபுரம், 4-7-'76 முற்பகலிலிருந்து தனது பணியைத் தொடங்கிவிட்டது. அதன் ஒலி-ஒளிக்கதிர்கள் 90 கிலோ மீட்டர் சுற்றுப்பரப்பிற்குப் பரவக் கூடிய ஆற்றலைக் கொண்டது.

இந்த விழாவிற்கு வருகை தந்தோரை வரவேற்று உரையாற்றிய திரு பி.வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் (அகில இந்திய தொலைக் காட்சித்தலைமை இயக்குநர்) 1959 முதல் இந்திய நாட்டில் குறிப்பாக டில்லியிலும், பம்பாயிலும் தோன்றிய தொலைக்காட்சி ஏற்பாடுகளை நினைவு கூர்ந்தார். 1975-ஆம் ஆண்டு சென்னையிலும் கல்கத்தாவிலும், லக்னோவிலும் தொலைக்காட்சி நிலையங்கள் தொடங்கின. மேலும் செயற்கைக்கோள் வாயிலாக, இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் தொலைக்காட்சியின் பயன் மக்களுக்குக் கிடைக்க வழி பிறந்தது. இவ்வாறாக சென்ற ஆண்டு நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளுக்கெல்லாம் ஊக்கமூட்டி உற்சாகமளித்த பெருமை, இன்றைய விழாவின் தலைவரான துணை அமைச்சரைச் சாரும் என்று அவர் குறிப்பிட்டார்.

இப்புதிய ஒலி-ஒளிக் கோபுரத்தை 'மாண்புமிகு மத்திய தகவல் ஒலிபரப்புத் துணை அமைச்சர் திரு தர்ம் வீர் சின்ஹா அவர்கள் இயக்கி வைத்து உரையாற்றும்போது, சென்னையைச்

சி. வேங்கடசாமி, எம்.ஏ.,
மக்கள் தொடர்பு அலுவலர்
மற்றும் மாநில தொலைக்காட்சி
இணைப்பாளர்,
ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறை.

புத்துணர்வு பெற்ற

புதுமை மிகு நாடு—1975-76

# கறுப்புப் பண வேட்டை தொடரும்!

- கடத்தல்காரர்களின் ரகசிய சாம்ராஜ்யம் தகர்த்தெறியப்பட்டது. கடத்தல் மன்னர்கள் என்று கருதப்பட்டவர்கள் யாவரும் கம்பி எண்ணுகின்றனர். தலைமறைவாய்த் திரியும் 42 கடத்தல் புள்ளிகளின் சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டு விட்டன.

- நகர்ப்புற காலி மனைகட்கு உச்ச வரம்பு. இந்த உச்சவரம்புக்குட்பட்ட சொத்துகள் பரிவர்த்தனைக்குத் தடை.

- குடியிருப்பு மனைகளுக்கு உச்ச வரம்பு. வரி ஏய்ப்பு செய்வோரைச் சிறையிலிட ஆடம்பர வீடுகளின் மதிப்பு மறுபரிசீலனை. வரி ஏய்ப்பு திடீர் சோதனைகளைத் தொடர்ந்து, 1975 ஜூலையிலிருந்து மட்டும் நேர்முக வரி வசூல் மூலம் 27.4 சதவிகிதம் கூடுதல்.

- "வாலண்டரி டிஸ்குலோஷர்' திட்டத்தின் கீழ் 2,50,000 பேர் ரூ. 15,870 மில்லியன் வருமானம், சொத்து போன்றவற்றை அறிவித்துள்ளனர். இதிலிருந்து வரியாக ரூ. 2,490 மில்லியன் கிடைத்துள்ளது.

davp 76 90


சுற்றியுள்ள 12,000 சதுர கிலோ மீட்டர் பரப்பிலுள்ள 2,100 கிராமங்களிலும், சிறு நகரங்களிலுமுள்ள 61 இலட்சம் மக்கள் இனி தொலைக்காட்சியின் நிகழ்ச்சிகளைக் காண இயலும். நமது நாட்டில் தொலைக் காட்சியின் முக்கியக் குறிக்கோள் சமுதாயத்தை நவீன மயமாக்குவதும், சமூகப் பொருளாதார ஒற்றுமையை அடைவதுமே; மேலும் நம் நாட்டின் முன்னேற்றத்துக்கு இன்னும் தடங்கலாக இருக்கும் இனம், பிரிவு வேறுபாடுகளை அறவே ஒழித்து நம்நாடு துரிதமாக ஒற்றுமையுடன் முன்னேறுவதற்குத் தொலைக் காட்சி பெரிதும் துணை புரியும் என்றார்.

* * * *



தொலைக் காட்சியின் ஆற்றல் மிகுந்த பயன்களை, கிராம மக்களும் பகிர்ந்து நற்பயன் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு "ஊரகத் தொலைக் காட்சி"க் குழு ஒன்றினை அரசுத் தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் ஏற்படுத்தியுள்ளது.

சென்னை தொலைக்காட்சி நிலைய இயக்குநர், தொலைக்காட்சி நிலையத் தலைமைப் பொறியாளர் முதலியோர் ஒத்துழைப்புடன், பல்வேறு துறையினரின் ஒருங்கிணைப்புடன் ஒலி-ஒளிபரப்புப்பணி திறம்பட நடைபெறுகிறது. சமுதாயத் தொலைக்காட்சிப் பெட்டிகளைப் பராமரிக்க 41 வானொலி மேற்பார்வையாளர்கள் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர்.

**கிராமங்களில் மந்திரப் பெட்டி!**

அண்மையில், சமுதாய வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இம்மாநிலத்திற்கு மத்திய அரசின் தகவல் ஒலிபரப்பு அமைச்சரகம், 114 தொலைக்காட்சிப் பெட்டிகளை, குறிப்பாக கிராமப்புறங்களில் நிறுவுதற்கு, நன்கொடையாக அளித்துள்ளது.

மத்திய அரசின் தகவல் ஒலிபரப்பு துணை அமைச்சர் திரு தர்ம் வீர் சின்ஹா அவர்கள், மத்திய அரசு நன்கொடையாக அளித்த தொலைக்காட்சிப் பெட்டியை முதன் முதலாக சோழவரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஒரக்காடு கிராமத்தில் 4-7-'76 அன்று மாலை 6-30 மணிக்கு இயக்கி வைத்து, அதை ஊராட்சி ஒன்றியத் தலைவரிடம் அளித்தார்.

தொலைக்காட்சிப் பெட்டியை இயக்கி வைத்துப் பேசிய அமைச்சர் அவர்கள் "நம்நாட்டில் ஒற்றுமையை உருவாக்கி, வளத்தைப் பெருக்குவதற்கு உதவும், ஒரு சக்திமிகுந்த பெட்டியே இந்த தொலைக் காட்சிப் பெட்டியாகும். எனவே, இதை மந்திரசக்தி வாய்ந்த பெட்டி, (Magic Box) என்று கூறுவேன். நம் நாட்டின் பல பகுதிகளில் வாழும் மக்கள் ஒருங்கிணைந்து, அவர்களின் எண்ணங்கள், இலட்சியங்கள், அபிலாஷைகள், ஆற்றல் முதலியனவற்றை ஒருங்கிணைத்து, நாம் அனைவரும் இந்தியர்கள், நம் நாடு இந்தியா என்ற அசைக்க முடியாத நம்பிக்கையை உருவாக்கும் பெட்டியே, இந்த மந்திரப் பெட்டி" என்றார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில் "வேளாண்மைக்கு இப்பெட்டி பெரிதும் பயன்படும். அதிலும் சிறப்பாக விதைகள், உரம், பயிர்ப் பாதுகாப்பு, பூச்சி மருந்துகளை நல்ல முறையில், உரிய காலத்தில் பயன்படுத்திக் கொள்ள இத் தொலைக்காட்சி பெரிதும் உதவும்" என்றார்.

வானொலியையும், தொலைக் காட்சியையும் ஒப்பிட்டுக் கூறும் போது அவர், "வானொலியில் பேச்சை மட்டுமே கேட்கமுடியும்; ஆனால் தொலைக் காட்சியில். சொல் விளக்கங்களுடன், செயல் முறைகளையும் நேரில் கண்டு, அவற்றை நேரில் கிராமவாசிகள் செயலில் கொண்டு வர இப் பெட்டி உங்களுக்கு நாள்தோறும் பெருமளவில் பயன்படும். அதனால் நம் நாடு மேலும் பயனடையும்" என்றார்.

**ஆடம்பரமல்ல, அவசியம்!**

விழாவின் தொடக்கத்தில் வரவேற்புரை ஆற்றிய சோழவரம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு ஆர். ஸ்ரீராமுலு நாயுடு அவர்கள் தொலைக் காட்சிப் பெட்டியை ஓ[illegible] ஆடம்பரப் பொருளாகக் கருத[illegible] முடியாது. சமுதாய முன்னே[illegible]றத்திற்கு, குறிப்பாக, கிராம ம[illegible]களுக்கு மிகவும் தேவையான[illegible] செய்தி விளக்கச் சாதனம் இது' என்றார்.

ஊரக வளர்ச்சி இயக்குநரா[illegible] திரு டி.வி. வாசுதேவன், ஐ.ஏ. எஸ். அவர்கள், அமைச்சர் அவ[illegible]களின் ஆங்கில உரையினை கிரா[illegible] வாசிகள் நன்கு புரிந்து கொ[illegible]ளும் வகையில் தமிழில் உணர்ச்ததும்ப மொழி பெயர்த்தா[illegible] இத்தகைய வரப்பிரசாதத்தை கிராம மக்களுக்கு அளித்த அ[illegible]சிற்கு, கிராமவாசிகளின் சா[illegible]பாக, நன்றி கூறினார்.

அன்றைய மாலை கிரா[illegible] நிகழ்ச்சியில், பொய்க்கா[illegible] குதிரை நடனமும், "சொன்[illegible] தான் தெரியுதுங்க" என்ற தலை[illegible]பில் திரைப்பட நடிகை மனோர[illegible] அவர்கள் வழங்கிய குடும்[illegible] கட்டுப்பாட்டுச் சித்திரமும், ஒ[illegible] பரப்பப்பட்டதைக் கிரா[illegible] மக்கள் கண்டு களித்தது க[illegible] கொள்ளாக்காட்சியாக இருந்த[illegible]. அதற்குப் பின்னர் "ஸ்ரீ வள்[illegible] திரைப்படம் தொடர்ந்து ஒ[illegible] பரப்பப்பட்டது.

விழாவிற்கு முன்னரும், பின்ரும் பெய்த பெருமழை[illegible] வேளாண்மை வீரர்களின் எ[illegible] கால நல்வாழ்வைக் குறிக்[illegible] மங்களகரமான அறிகுறி, [illegible] மக்களின் மகிழ்ச்சி ஆரவார[illegible]டையே துணை அமைச்[illegible] அவர்கள் குறிப்பிட்டார்.

# சத்துணவில் மீன்!



மீன் ஒரு சுவையான, சத்து நிறைந்த, எளிதில் செரிக்கக்கூடிய. யர்தர புரதமும், கனிமங்களும் அடங்கிய உணவாகும். ஆகவே ளர்ந்து வளரும் சிறுர்களுக்கும், முதியோர்களுக்கும் மிகத் தேவையானதாகும். நமது உணவில் போதுமான அளவு அமினோ அமிலங்களும், உயிர்ச் சத்துக்களும், காழுப்புச் சத்துக்களும் அமைந்ராத குறையை, மீனை நமது ன்றுட உணவுடன் சேர்த்துக் காள்வதால் போக்க முடியும். வளாண்மை முன்னேற்றம் திக அளவில் இருந்தபோதிலும், க்கள் பெருக்கத்தின் காரணத் ால், நமக்கு கிடைக்கின்ற உணவு ண்டத்திற்கும் நமது தேவைக் ம் உள்ள இடைவெளி அதிகரித் க்கொண்டே செல்கிறது. இத ல் குறைந்த செலவில் உயர்தர ணவு உற்பத்தி செய்வதுமிகவும் தவையான தொன்ருகும்.

இந்தியாவில் ஒரு மனிதனுக்கு ள் ஒன்றுக்குக் கிடைக்கின்ற மிசப் புரதத்தின் அளவு 6 ராம் மட்டுமே. இது அமெரிக் வில் ஒரு மனிதனுக்குக் கிடைப் ல் பத்தில் ஒரு பங்கும், ஆஸ் ரலியாவில் ஒரு மனிதனுக்கு டைப்பதில் பதினென்றில் ஒரு குமாகும். இந்தியாவில் ஒரு ி மனிதனின் உணவில் அதிக க இடம் பெறுவது மாவுச் து ஆகும். சம ஊட்டச் சத் ணவு பெற உயர்தர புரதமும், ாழுப்பும், கனிமங்களும் ங்கே–தகுந்த அளவில்–அடங் மீனை உணவில் சேர்த்தால் ம் பயக்கும். புரதச் சத்து ந்தைகளுக்கும், மகப் பேற் எதிர் நோக்கியிருக்கும் ண்களுக்கும், பாலூட்டும் ப்க்கும் மிகத் தேவையான ான்ருகும் என்பதில் ஐயமே லே. சாதாரணமாக தேவைப் கின்ற புரதத்தைக் காட்டி , ஒரு மகப் பேற்றிற்கு, சரி ஒரு கிலோ கிராம் புரதம் அதிகமாகத் தேவைப் படுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது மட்டுமல்ல, கடைசி இரு நிறை மாதங்களில் இதன் தேவை மிகவும் இன்றியமையாததாகும். ஒரு கிராம் பால் புரதத்தைப் பெற இரண்டு கிராம் உணவுப் புரதம் தேவைப் படுவதால், புரதச் சத்தடங்கிய உணவு பாலூட்டும் பெண்களுக்கு மிகவும் இன்றியமையாத ஒன்று ஆகும்.

## மீன் தருவது தரம் உயர்ந்த புரதமே!

உடலின் திசு வளர்ச்சிக்குத் தேவையான அமினேஅமிலங்களை அதிக அளவில் மீன் புரதம் தன்னுள், கொண்டிருப்பதால், மீன் புரதம் இணையற்றதாகக் கருதப் படுகிறது. ஒரு மனிதனின் அன்ருடப் புரதத் தேவையில் பாதி அளவை, 250 கிராம் சாதாரண மீன் மூலம் பூர்த்தி செய்ய முடியும். மறுபாதி புரதத்தேவையை மற்ற உணவுப் பண்டங்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். உயர்தர மீனுக்கும் சாதாரண மீனுக்கும் புரத அளவு வேறுபடினும், அமினே அமில அமைப்பு மாறுபடாததால் தரம் குறைபடுவதில்லே.

அமினே அமிலங்களில் இரு வகை உண்டு. முதல் வகை நாம் உண்ணும் உணவிலிருந்து பெற்றுக்கொள்பவை. இரண்டாம் வகை நமது உடல் தன்னுள்ளே தயாரித்துக் கொள்பவை. முதல் வகை அமினே அமிலங்களில் 'லேசின்', 'மெதியோனின்', 'சிஸ்டின்', 'அர்ஜினேன்', 'கிஸ்டிடின்' போன்றவைகள், குழந்தைகளின் திசுக்கள் நன்கு வளர இன்றியமையாதது ஆகும். மீனில் 'அர்ஜினேன்' என்ற அமினே அமிலம் அதிக அளவில் உள்ளது. 'மெதியோனின்', 'சிஸ்டின்' என்ற அமினே அமிலங்களும் மித அளவில் அடங்கியுள்ளன. இவை கல்லீரல் தொடர்பான நோய்களைத் தடுக்கும் சக்திஉடையன. தைரோசின் என்ற அமினே அமிலமும் தகுந்த அளவில் மீனில் உள்ளது. இது, 'அயோடின்' குறையைத் தவிர்க்கும் சக்தி பெற்றது ஆகும். இவ்விதம் தனித் தன்மை வாய்ந்த புரதம் ஈரம் நீக்கிய மீனில் சராசரி 85 சதம் உள்ளது.

## கொழுப்புச் சத்து

நாம் உண்ணும் உணவில் இருக்கும் கொழுப்பின் அளவிற்கும், தரத்திற்கும், இருதய நோய்க்கும் உள்ள தொடர்பைக் குறித்து ஆராய்ச்சி தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. மாமிச உணவில் அடங்கி இருக்கும் கொழுப்பு இருதய நோய் ஏற்பட ஒரு காரணமாய் அமைந்துள்ளது என்று ஆய்வு மூலம் கண்டிருக்கின்றனர். இருதய நோய் உள்ளவர்களும், இரத்த அழுத்தம் சம்பந்தமான நோய் உள்ளவர்களும் தமது உணவில் ஓரிரு மாற்றங்கள் செய்யும்படி பரிந்துரைக்கப்படுதல் சாதாரண வழக்கம் :

1. உணவில் கொழுப்பையும், சக்தியையும் (Calorie) குறைத்துக் கொள்ளுதல்.

2. ஒன்றுக்கு மேற்பட்ட நிறைவு பெருத கொழுப்பு அமிலங்களை (Poly unsaturated fattyacid) நிறைவு பெற்ற கொழுப்பு அமிலங்களுக்கு ( Saturated fatty acid ) பதில் பயன்படுத்துதல்.

3. அதிகம் 'கொலஸ்டிரால்' அடங்கிய உணவை விலக்குதல்.

நமது உடலின் கொழுப்புத் தேவையை மீன் சரிப்படுத்துவதோடு (Regulate), சக்தியையும் வெகுவாகக் குறைத்து உடலுக்கு போதுமான அளவு புரதத்தையும் தருகிறது. 250 கிராம் கொழுப்புக் குறைந்த மீன், 100 கலோரி சக்திக்குமேல் தருவதில்லே. இது ஆடு, மாடு இவைகளின் மாமிசம் தரும் கலோரிச் சக்தியை விட மூன்று மடங்கு குறைவே ஆகும். இவ்விதம் கொழுப்புக் குறைந்த மீன், புரத வளத்தை அதிகரித்து கலோரிச் சக்தியையும், கொழுப்பையும் குறைக்கும் ஒரு உணவாக பயன்படுகிறது.

ஒன்றுக்கு மேற்பட்ட நிறைவு பெருத கொழுப்பு அமிலங்களுக்காகச் சிலர் எண்ணெய் வகைகளை உட்கொள்ளுவது வழக்கம். இதற்குப் பதிலாக மீனே உணவில் சேர்த்துக் கொண்டால் சுவை மிகுந்த உணவாக அமைவதோடு அன்றி, எண்ணெய்ச் சத்தையும் தருகிறது. 100 கிராம் மீன், சராசரி 10 கிராம் நிறைவு பெருத கொழுப்பு அமிலங்கள் அடங்கிய எண்ணெய்ச் சத்தைத் தருகிறது.

மீனின் கொழுப்பு மீனுக்கு மீனும், காலத்திற்குக் காலமும் மாறுபடும். கொழுப்பு குறைந்த மீன்களை எடை கட்டுப்படுத்த விரும்புகிறவர்கள் பயன்படுத்தலாம்.

ஒன்றிற்கு மேற்பட்ட நிறைவு பெருத கொழுப்பு அமிலங்கள் மிக அதிக விகிதத்தில் மீனில் அடங்கியுள்ளதால் இரத்த நாளங்கள் தொடர்பான நோயுடையோர் மீனே அதிக அளவில் உண்ணும்படி மருத்துவர்கள் கூறுகின்றனர்.

மனித இரத்தத்தில்கலந்துள்ள 'கொலஸ்டிரால்' என்ற கொழுப்புப் பொருள் இரத்த அழுத்தத்தை அதிகப்படுத்தி, இரத்தக் கொதிப்பு நோய்க்கு மூல காரணமாய் அமைவதை நாம் அறிவோம். ஒன்றுக்கு மேற்பட்ட நிறைவு பெருத கொழுப்பு அமிலங்கள் அடங்கியுள்ள எண்ணெய்யை உட்கொள்வதால், இரத்த அழுத்தத்தைக் குறைக்க இயலும்.

பொதுவாக இரத்தக் கொதிப்பு நோயினர் மற்ற மாமிசத்தைப் போல மீன் உணவையும் ஒதுக்குவது வழக்கம். இது ஒரு வகையில் தவருன கருத்தாகும். ஏன் எனில், மீன் உணவில் 'கொலஸ்டிரால்' மற்றைய மாமிசத்தைக் காட்டிலும் சராசரி பத்து மடங்கு குறைவாகவும், கோழி முட்டையைக் காட்டிலும் இருபதுமடங்கு குறைவாகவும் உள்ளது.

உயிர்சத்துக்களை நீரில் கரைவன (Water soluble) என்றும், கொழுப்பில் கரைவன (Fat soluble) என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். நீரில் கரையும் உயிர்ச்சத்துக்கள் மீனின் சதைப் பகுதியிலும், கொழுப்பில் கரையும் உயிர்ச்சத்துக்கள் மீன் எண்ணெய்யிலும், மீனின் கொழுப்பிலும் உள்ளன. மீன் எண்ணெயில் உயிர்ச்சத்து 'ஏ'யும், 'டி'யும் முக்கியமாக உள்ளது. உயிர்ச்சத்து 'ஏ' பாலைக் காட்டிலும் சராசரி ஆயிரம் மடங்கும், மற்றைய மாமிசத்தைப் பார்க்கிலும் ஏழாயிரம் மடங்கும் அதிகமாக உள்ளது. கொழுப்பான மீன்களில் உயிர்ச்சத்து 'டி' யும் அதிக அளவில் அடங்கியுள்ளனது. நீரில் கரையும் உயிர்ச்சத்துக்களான 'பி6', 'பி12', 'பையாட்டின்', 'நையாஸின்' ஆகியவைகளும் தகுந்த அளவில் உள்ளன. மீனுணவில்உள்ள உயிர்ச்சத்து 'பி12', நெய்யைவிட ஐந்து மடங்கு அதிகமாகவும், மற்றைய மாமிசத்தைவிட பத்து மடங்கு அதிகமாகவும் உள்ளது.

## கனிமங்கள் (தாது உப்புக்கள்)

பொதுவாக மீன் உணவில் சுண்ணும்புச் சத்து (Calcium) பாஸ்பரஸ், பொட்டாசியம், இரும்புச்சத்து ஆகியவைகள் தேவையான அளவில் அடங்கியுள்ளன. ஒரு சில மீன்களை தவிர, மற்றைய மீன்களி 'சோடியம்' மிகக் குறைவாக உள்ளது. ஆகவே, 'சோடிய குறைவாகவே பயன்படுத் வேண்டிய இரத்தக் கொதிப் நோயாளிகள், தயக்கமின்றி மீ உணவில் சேர்த்துக்கொள்ளலா வளரும் சிறுர்களின் எலும் வளர்ச்சிக்கும், அவைகளின் உறுதி கும் தேவையான சுண்ணும்பு சத்தை மீன் உணவா திருப்தி செய்ய முடியும், இ சுண்ணும்புச் சத்து உடலில் த மயமாக, மாமிசப்புரதம் உத செய்வதாக கருதப்படுகிறது ஏனெனில், மாமிசப் புரதத் லுள்ள 'லைசின்' என்ற அமினே அமிலத்திற்கு கட்டும் திற (Bindirg Capacitv) ஒரு சிறப்பு பண்பாகும். இது மட்டுமல்ல மல் புரதக்குறை ஏற்படுமாயின் உடலின் சுண்ணும்புச் சத்து மூன்றில் ஒரு பங்கு வ குறைந்து விடுவதாக கணித்திரு கின்றனர். இவ்வாறு குறையு சுண்ணும்புச்சத்தை ஈடு செய்ய எலும்பு தனது சுண்ணும்புச் ச தைக் கொடுத்து பலமிழந்



# அஞ்சலக வங்கியின்
# மாபெரும் பரிசுத் திட்டம்

ஆண்டுக்கு இருமுறை

குலுக்கல்கள் **ஜனவரியிலும் ஜூலையிலும்** நடைபெறும்

**ரூ. 20½ இலட்சத்திற்கு**
**11,116 பரிசுகள்**

ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட 11,116 பரிசுகள் உண்டு.

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. | 1,00,000 |
| 5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50,000 |
| 10 மூன்றாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 20,000 |
| 100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 5,000 |
| 1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 500 |
| 10,000 ஆறாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50 |

ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.

உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெறாதவர்க்கும் அளிக்கப்படும்.

விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**இயக்குநர்,**
தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,
சென்னை-600 002.


விடவும் செய்யும். ஆகவே இவ்வாறு கருதப்படும் பெருங்குறைகளை மீன் உணவு தவிர்க்கும் சிறப்புப் பண்புகளைக் கொண்டது

**செரிக்கும் திறன்**

மீன் உணவு அதிவிரைவில் செரித்து விடுவதால் மருத்துவர்கள் மற்றைய மாமிச உணவுக்குப் பதில் மீன் உணவை உண்ணும்படி கூறுகின்றனர். அது மட்டுமல்ல, **மீன் உணவு ஜீரணச் சுரப்பிகளை தூண்டி, ஜீரண நீரை சுரக்கச் செய்யும் பண்பையும் கொண்டுள்ளது** ஆடு, மாடு, கோழி இவைகளின் மாமிசம் சராசரி 85 சதம் தான் செரிக்கிறது. ஆனால் மீன் உணவு அநேகமாக 95 சதமும் செரித்து விடுகிறது. மீன் உணவில் செரிக்கும் பகுதி அதிகமாய் இருப்பதாலும், நார்ப் பகுதி இல்லாததாலும் மீன் உணவை சிறார்களும், முதியோர்களும், குடற்புண் போன்ற நோயால் தாக்கப்பட்டவர்களும் உணவில் சேர்த்துக் கொள்வது நலம்.

**சில மீன்களின் முக்கியப் பண்புகள்**

**சாதாக் கெண்டை :** இதில் சராசரி சுண்ணும்புச் சத்து 1.26 சதமும், இரும்புச் சத்து 0.013 சதமும் உள்ளது. குளங்களில் அதிவேகத்தில் வளரும் திறனும் இதற்கு உண்டு.

**தட்டரி ஞான் :** இதில் சுண்ணும்புச் சத்து 0.79 சதம் உள்ளது.

**ரோகு:** இதில் உயிர்ச்சத்து 'ஏ', 'பி', 'சி' ஆகியவைகள் ஒருங்கிணைந்து அதிக அளவில் இருப்பதால், கண் ஒளி குன்றியவர்கள் இதை அதிக அளவில் உணவில் சேர்த்துக் கொள்ளலாம். 'அயோடின்' இதில் சராசரி ஒரு கிலோவுக்கு 3.1 மி.கி. என்ற விகிதத்தில் அடங்கியுள்ளது. 'தைராய்டு' சம்பந்தமான குறை நோயுடையோர்களுக்கு இது நல்லது.

**தோப்பா:** இதில் சுண்ணும்புச் சத்து 0.510 சதமும், பாஸ்பரஸ் 0.21 சதமும் உள்ளது. இதன் அயோடின் சத்து 1 கிலோவுக்கு சராசரி 1.5 மி.கி. என்ற அளவில் உள்ளது. இவ்வகை மீனும் குளங்களில் அதிக வேகத்தில் வளரும்.

**தகவல்:** **சாமுவேல் பால்ராஜ்,**
மீன்வள அறிவியல்துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர்-3.

121

## வேளாண்மையுடன் மீன் வளர்ப்பு



வேளாண்மையுடன் மீன் வளர்ப்புத் தொழிலையும் மேற்கொண்டு கூடுதல் உணவுப் பொருள் உற்பத்தியையும், வருவாயையும் பெறலாம் என்பதைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலுள்ள மீன் வள அறிவியல் துறையினர் கண்டுள்ளார்கள். வேளாண்மைக்குப் பயன்படும் தண்ணீரையே பயிர்களுக்குப் பாய்ச்சும் முன்னர் சிமெண்ட் தொட்டிகள் அல்லது மண் குளங்களில் தேக்கி, மீன் வளர்த்து மீன் உற்பத்தியையும், வருவாயையும் பெருக்கிக் கொள்ளலாம்.

இப்பல்கலைக் கழகத்திலுள்ள சிமெண்ட் தொட்டிகள் பல்வேறு பயிர்களுக்கு வேண்டும்போது நீர்ப் பாய்ச்சுவதற்காக, நீர் தேக்கி வைக்கும்தொட்டிகளாகப் பயன்படுகின்றன. 12 மீட்டர் குறுக்களவும், 0.85 மீட்டர் ஆழமும் கொண்ட இரண்டு தொட்டிகளில் ஓர் ஆண்டு வயதான மீன் வகைகளை விட்டு வளர்த்துப் பரிசோதனை செய்யப்பட்டது. முதல் தொட்டியில் சேல் கெண்டை, மிர்கால், காக்கா மீன் இனங்களை எக்டருக்கு 6,000 எண்ணிக்கை-450 கிலோ விதம் விடப்பட்டது. இரண்டாவது தொட்டியில் தோப்பா, ரோகு, சாதாக் கெண்டை, செத்தக் கெண்டை என்ற நான்கு வகை மீன்களை எக்டருக்கு 8,850 எண்ணிக்கை (400 கிலோ) என்ற அளவில் இருப்பு செய்யப்பட்டன. இவைகளின் எடையில் 5 சதவித அளவு கடலைப் பிண்ணாக்கு, அரிசித்தவிடு முதலியன சரிபாதி விகிதத்தில் உணவாகக் கொடுக்கப்பட்டது.

ஒரு ஆண்டில் எக்டருக்கு நி[...] உற்பத்தி எடை 2,300 கிலோ என்று மூன்று வகை மீன்களை கொண்டு பரிசோதித்த தொட்டியிலும், எக்டருக்கு 1,157 கிலோ என நான்கு வகை மீன்க[...] இருப்பு செய்த தொட்டியிலு[...] கிடைக்கப் பெற்றது. இந்[...] எடை இந்தியாவில் குளங்கள் எக்டருக்குச் சராசரி ஆண்டு உ[...] பத்தியாகக் கிடைக்கும் 6[...] கிலோ என்பதைக் காட்டிலு[...] 2 முதல் 4 மடங்கு அளவு அதி[...] மாகக் காணப்படுகிறது.

மேலும், 180 சதுர மீட்ட[...] அளவுள்ள ஐந்துமண் குளங்கள் ஏழு வகையான மீன் குஞ்சுகளை கொண்டு சோதனை செய்யப்பட்டது. தோப்பா, மிர்கால், சே[...] கெண்டை, சாதாக் கெண்டை, பால் கெண்டை, வெள்ளி நி[...] கொண்டை, புல் உண்ணு[...] கெண்டை ஆகிய ஏழு மீன் இன[...]களின் குஞ்சுகளை எக்டருக்[...] 4,750 என்ற எண்ணிக்கையி[...] விட்டு வளர்த்ததில் நிகர உ[...]பத்தி எக்டருக்கு ஆறுமாத[...]களில் 1,400 கிலோ முதல் 1,6[...] கிலோ வரை கிடைத்தது.

விவசாயிகள் இயன்ற வ[...] வேளாண்மைக்குப் பயன்படு[...] நீரையே பயன்படுத்தி ம[...] குளங்களிலோ அல்லது சிமெண்[...] தொட்டிகளிலோ மீன் உற்பத்[...] செய்து சத்துணவையும், வரு[...]யையும் பெறலாம்.

**தகவல் :** மீன் வள அறிவிய[...]
துறை,
தமிழ்நாடு வேளாண்மை[...]
பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-641003.




TNSCB: 112

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின்
"சிறுமலர்கள் சேமிப்பு திட்டம்."
மாணவர்களும், சிறு வியாபாரிகளும் எளிதாக
சேமிக்க, தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின்
ஒரு புதிய திட்டம்.

உங்கள் சக்திக்கு ஏற்ப, சிரமமின்றி சேமிப்பது நலம். எங்கள் "சிறு மலர்கள் சேமிப்பு திட்டம்" அதற்கு உதவுகிறது. உண்டியல் சேமிப்பு திட்டத்தின் மூலம் மாணவர்களும், சிறு வியாபாரிகளும் தங்கள் சேமிப்பை எங்கள் தலைமை அலுவலகம் அல்லது சென்னையில் உள்ள 23 கிளைகளில் சேமிப்பு கணக்கில் முதலீடு செய்யலாம்.

ரூ. 5/- செலுத்தி புதிய சேமிப்பு கணக்கு ஆரம்பிக்கும் ஒவ்வொரு நபருக்கும் அழகான ஒரு உண்டியல் வழங்கப்படும்.

TNSC BANK

உண்டியலில் அவ்வப்பொழுது சேரும் சில்லறை காசுகளை சேர்த்து மாதம் ஒரு முறையாகிலும் அல்லது உண்டியல் நிறைந்தவுடனும் எங்கள் வங்கியில் செலுத்தி உங்கள் சேமிப்பு கணக்கில் வரவுவைத்துக் கொள்ளலாம்.

உங்கள் சேமிப்பு கணக்கில் உள்ள முதலீட்டின் பேரில் 5.75% வட்டி வழங்கப்படுகிறது. மேலும் உங்கள் சேமிப்பு கணக்கில் உள்ள பணத்தை லாபகரமாக முதலீடு செய்ய வழிவகைகளை எங்கள் கிளை மேனேஜர் தெரிவிப்பார். இத் திட்டத்தின் மூலம் சிறுக சேர்த்து உங்கள் எதிர்கால தேவைக்கு முதலீடு செய்யுங்கள்.

**தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்**
379, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சாலை, சென்னை-600 001.
தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி உங்கள் சேமிப்பை
அதிகரிக்கவும், நாட்டின் விவசாய மற்றும் பொருளாதார வளர்ச்சிகளுக்கும் உதவுகிறது.

# மின்சார வாரியத்தின் சீரிய பணிகள்

எஸ். பி. அம்புரோஸ், ஐ. ஏ. எஸ்.,
தலைவர், தமிழ்நாடு மின்சார வாரியம்.

நாட்டின் வளமும் மின்சார வளர்ச்சியும் ஒன்றுக்கொன்று இணைந்துள்ளது. 20 அம்சத் திட்டத்தின் 8-வது அம்சத்தில் மின் உற்பத்தி சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 20 அம்சத் திட்டப்பாதையில் மின் வாரியம் தீவிர கவனம் செலுத்தி, மின்வளர்ச்சிக்கான பல திட்டங்களை ஏற்று நடைமுறைப்படுத்தி வருகிறது. குறிப்பாக எண்ணூர் அனல் மின் நிலையத்தைச் சீர்படுத்தி, மின் உற்பத்தியை நல்ல முறையில் அதிகப்படுத்தியுள்ளது. கடந்த 5 மாதங்களில் எண்ணூர் அனல் மின் நிலையத்தில் 787.63 மில்லியன் யூனிட்டுகள் மின் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இது கடந்த ஆண்டு மின் உற்பத்தியைவிட 1.5 மடங்கு அதிகமாகும்.

தூத்துக்குடியில் 420 மெகா வாட் திறன்கொண்ட அனல் மின் நிலையத்தை அமைக்கும் வகையில் தீவிரமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன் மொத்த மதிப்பீடு ரூ. 129.29 கோடிகள். இந்த ஆண்டு இத்திட்டத்திற்கு ரூ. 34.5 கோடி அனுமதிக்கப்பட்டு, ஏப்ரல், மே ஆகிய இரு மாதங்களில் ரூ. 1.36 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. இந்த அனல் மின் நிலயத்தின் முதல் மின்பிரிவு 78-79-ஆம் ஆண்டில் உற்பத்தியைத் துவக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் ஆண்டிற்கு 40 மி.யூ. மின் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட "குட்டியாறு பம்பிங்" திட்ட வேலையும் முடியும் தறுவாயில் உள்ளது.

76 மி.யூ. திறன் கொண்ட குந்தா 4-வது பகுதித் திட்டவேலை தீவிரமாக நடைபெற்று வருகிறது இந்தத் திட்டம் 77-'78-ஆம் ஆண்டில் முடிக்கப்படும்.

114 மி.யூ. உற்பத்தித் திறன் கொண்ட "சுருளியாறு மின் திட்ட" வேலை தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது. '78-'79-ஆ ஆண்டில் இந்த வேலை முடிக்க படும் என்று எதிர்பார்க்கப்பட கிறது.

தமிழ்நாட்டின் ஜனத்தொகை யில் 70 சதம் கிராமத்தில் வசி கிறார்கள். ஆகையால் கிரா மின்வசதியில் மின்வாரியம் தீவ கவனம் செலுத்தி வந்துள்ள கடந்த 5 மாதங்களில் 70 சிற்று களுக்கும், 150 அரிசன கு யிருப்புகளுக்கும் மின் வச வழங்கியுள்ளது. இதன் மூல 98.3 சதவிகிதம் சிற்றூர்களுக் மின்வசதி இதுவரை வழங்க பட்டுள்ளது.

விவசாயப் பெருக்கத்திற்கா கடந்த 5 மாதங்களில் 20,3 விவசாய பம்புசெட்டுகளுக் மின் இணைப்பு வழங்கி, மகத்தா சாதனையை தமிழ்நாடு மின்சா வாரியம் செய்துள்ளது. இ வரை 62.7 சதவிகித விவசா கிணறுகளில் உள்ள பம்புசெட் களுக்கு மின் இணைப்பு வழங் யுள்ளது.

மேலும் வறட்சிப் பகுதிகள மக்கள் நலனைக் கருதிக் குடிதண்ணீர்த் திட்டங்களுக்கு மி இணைப்பு வழங்குவதில் எவ்வித தாமதமும் இன்றி, மாவட் ஆட்சித் தலைவரைக் கலந்து, மு ஆய்வு இல்லாமல், மின் இணை வழங்குவதற்கு உத்தரவு வ கப்பட்டுள்ளது.

மின்வாரியம் மக்கள் நல்வா விலும், கிராம முன்னேற்ற லும், பொருளாதார உயா லும் கவனம் செலுத்தி வந்து ளது. மின்சாரத்தைச் சீர வழங்கவும் பல திட்டங்களை மே கொண்டு செயல்பட்டு வருகிற



என்னூர் மின் நிலையம்

# ஊட்டச் சத்துணவு பெற

# வீட்டுத் தோட்டம் அமைத்திடுங்கள்!





—ஆர். மாணிக்கம்.

நாம் அனைவரும் அறிவுடனும், ...ற்றலுடனும், அழகுடனும் ...ாழவேண்டுமானால் நம் நாட்...ன் வளத்தைப் பெருக்கவேண்டு...ானால்-நாம் அனைவரும் நம்மு...டைய அன்றாட உணவில் காய்...றிகளைச் சேர்த்துக் கொள்ள ...வண்டியது மிகமிக இன்றியமை...ாததாகும். ஏனெனில், காய்...றிகள் நமக்குத் தேவையான ...ட்டச்சத்துக்களை அளிப்பதுடன் ...ம்மைத் தாக்கவல்ல நோய்களைத் ...டுக்கவல்ல காப்பு உணவாகவும் ...rotective food) விளங்குகிறது. ...னவேதான், அன்றாட உண...ல் காய்கறிகளைச் சேர்த்துக் ...காள்ள வேண்டியதின் அவசி...த்தை ஊட்டச் சத்துணவு அறி...ர்கள் வற்புறுத்தி வருகின்...ர்கள்.

...ஊட்டச்சத்துணவு ஆராய்ச்சியின் ... வயதுவந்த ஒவ்வொருவரும் ...ள்தோறும் 285 கிராம் (10 அவுன்சு) காய்கறிகளை உட்கொள்ள வேண்டும் என்றும், அதில் 115 கிராம் (4 அவுன்சு) இலைவகைக் (கீரை) காய்கறிகளாகவும் (Leaf Vegetables), 85 கிராம் (3 அவுன்சு) கிழங்கு மற்றும் வேர் வகைக் காய்கறிகளாகவும் (Tuber and Root Vegetables), 85 கிராம் (3 அவுன்சு) விதை மற்றும் பழவகைக் காய்கறிகளாகவும் (Seeds and Fruit Vegetables) அமைந்திருக்க வேண்டும் என்றும் ஊட்டச்சத்துணவு வல்லுநர்கள் (Nutrition Experts) பரிந்துரைத்துள்ளார்கள்.

பல்வேறு உணவியல் அறிஞர்கள் பரிந்துரைத்துள்ள உணவு அட்டவணைகளையெல்லாம் ஒப்பிட்டுப் பார்த்தபின் திரு. பி. சி. பான்சில் என்ற திட்ட வல்லுநர், ''70 கோடி மக்களுக்கான வேளாண்மைத் திட்டம்'' என்ற நூலில், 'சமநிலை உணவு' (Balanced Diet) பெற, வயது வந்த ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு 7 அவுன்சு காய்கறிகளும், 2 அவுன்சு வேர் மற்றும் கிழங்குகளும் தேவை என்று திட்டவட்டமாக விளக்கியுள்ளார்.



ஆனால் தற்பொழுது நாம் ஒவ்வொருவரும் நாள்தோறும் உட்கொள்ளும் காய்கறிகளின் சராசரி அளவு ஏறத்தாழ 3 அவுன்சு என்ற நிலையில்தான் உள்ளது. இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இயக்கம் நடத்திய கள ஆய்வின் மூலம் 61 சதவீதக் குடும்பங்களே நாளொன்றுக்கு ஒருமுறையாவது காய்கறிகளை உண்பதாகவும், நாளொன்றுக்கு வயது வந்த ஒருவர் அவ்வாறு உண்ணும் அளவும் 2.8 அவுன்சு என்ற அளவிலேயே உள்ளது என்றும் தெரியவந்துள்ளது. மேலும், அந்த ஆய்வின் மூலம் சென்னையில் வாழும் மக்களே உயர்ந்த அளவாக-நாளொன்றுக்கு 4.8 அவுன்சு என்ற அளவில் காய்கறிகளை உண்பதாகவும், கோயம்புத்தூரில் உள்ளவர்கள் நாளொன்றுக்கு 4.5 அவுன்சு காய்கறிகளையே உண்பதாகவும், நீலகிரியில் வாழும் மக்களே மிகக் குறைந்த அளவில்-நாளொன்றுக்கு 0.8 அவுன்சு என்ற அளவில்-காய்கறிகளை உண்பதாகவும் தெரியவந்துள்ளது.



ஊட்டச் சத்துணவு வல்லுநர்கள் பரிந்துரைக்கும் அளவில் நாம் காய்கறிகளை உண்பதில்லை. இதற்கு முக்கிய காரணங்கள் மூன்று; அவை:

1. காய்களில் உள்ள ஊட்டச் சத்துக்களை உணராமை.

2. காய்கறிகளின் உற்பத்திக் குறைவினால் ஏற்பட்டுள்ள பற்றாக்குறை.

3. அதிக விலை.

எனவே, முதலில் காய்கறிகளில் உள்ள ஊட்டச் சத்தினை எல்லாருக்கும் உணர்த்த வேண்டியுள்ளது. அடுத்து, காய்கறிகளின் உற்பத்தியைப் பெருக்கி, குறைந்த விலையில் கிடைக்கச் செய்ய வேண்டியது மிகவும் இன்றியமையாததாக உள்ளது.

இவ்விரு பணிகளையும் செவ்வனே செய்தால்தான், சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள ஏழை, எளிய, சாமான்ய, பாமர, பாட்டாளி, தொழிலாளி மக்கள் முதல், சமுதாயத்தின் மேல்மட்டத்தில் உள்ளவர்கள் வரை எல்லாரும் ஊட்டச்சத்துணவு பரிந்துரைக்கும் அளவில் காய்கறிகளை அன்றாடம் உண்ண முடியும்!

## காய்கறிகளை ஏன் உண்ண வேண்டும்?

(1) காய்கறிகள் புரதச்சத்து (Protein), மாவுப் பொருள்கள் (Carbo hydrates), தாது உப்புகள் (Mineral Salts), உயிர்ச் சத்துக்கள் (Vitamins) ஆகிய சத்துக்களை நமக்குக் கொடுக்கின்றன.

2. உணவில் சுவை ஏற்படுத்துகின்றன.

3. நமக்குத் தேவையான எல்லா சக்திகளையும் அளித்து உடல் நலத்தைப் பாதுகாக்கின்றன.

4. நம் உடலுறுப்புகள் வலுவடையவும், நாம் ஊக்கத்துடன் பணிகளில் ஈடுபடவும் உதவுகின்றன.

5. நமக்கு வலிவை மட்டுமல்ல வனப்பையும் தருகின்றன.

எனவே, நாம் ஒவ்வொருவரும் நம் உணவில் காய்கறிகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.



நாம் அரிசி உணவை மட்டுமே உட்கொள்பவர்களாக இருந்தால் நாள்தோறும் நம் உடலுக்குத் தேவையான சுண்ணாம்புச் சத்தை (கால்சியம்) அரிசி உணவு கொடுப்பதில்லை. ஆனால் இலை வகைக் காய்கறிகள் (Leafy Vegetables) நமக்குத் தேவையான சுண்ணாம்புச் சத்தைப் பெற உதவுகின்றன.

இலைவகைக் காய்கறிகளான தண்டுக்கீரை, அகத்திக் கீரை, முட்டைக்கோஸ், முருங்கை இலை, 'ஸ்பைனஸ்', புதினா போன்றவைகள் சிறந்த பாதுகாப்பு உணவாகும். ஏனென்றால் அவைகளில் சுண்ணாம்புச் சத்து, இரும்புச் சத்து ஆகியவை அடங்கிய தாது உப்புகளும் வைட்டமின்களும் நிறைந்துள்ளன.

விதை வகைக் காய்கறிகளான (Seed Vegetables) 'பீன்ஸ்' பட்டாணி, இளம் மக்காச்சோள விதை போன்றவைகள் வயிறு நிரம்புவதற்கான திடப்பொருள்களையும் (Roughage) புரதச்சத்து, வைட்டமின் 'சி' ஆகியவைகளையும் கொடுக்கின்றன.

பழவகைக் காய்கறிகளான (Fruit Vegetables) தக்காளி, பலாக்காய், வாழைக்காய், முருங்கைக் காய், கத்தரி, வெண்டை, பூசணி, பறங்கி போன்றவைகள் சிறந்த சத்துக்களைக் கொண்டுள்ளன. தக்காளியில் வைட்டமின் 'சி' யும், முருங்கைக்காயில் சுண்ணாம்புச் சத்தும், வைட்டமின் 'சி'யும் நிறைய உள்ளன. பறங்கிக் காயில் வைட்டமின் 'ஏ' பெருமளவில் உள்ளன.

கிழங்கு மற்றும் வேர் வகைக் காய்கறிகளான (Tuber & Root Vegetables) உருளைக் கிழங்கு, சர்க்கரை வள்ளிக் கிழங்கு, மரவள்ளிக் கிழங்கு கருணைக் கிழங்கு, சேனைக் கிழங்கு கேரட், பீட்ரூட், முள்ளங்கி 'டர்னிப்' போன்றவைகள் தானியங்களைப் போலவே மாவுப் பொருள்களையும், வைட்டமின் 'சி'யையும் வழங்குகின்றன. சர்க்கரை வள்ளிக்கிழங்கும், கேரட்டும் வைட்டமின் 'ஏ' யைக் கொடுக்கின்றன. இவ்வகைக் காய்கறிகள், உடலுக்குத் தேவையான சக்தியைக் கொடுக்கும் மாவுப் பொருள்களைக் கொடுப்பதால், நமது உணவில் தானியங்களுக்குப் பதிலாக இவைகளைப் பயன்படுத்தி, தானியங்களில் ஒரு பகுதியைக் குறைத்து, மீதப்படுத்தலாம். இவ்வகைக் காய்கறிகளே குறைந்த செலவில் சக்தியைத் தரும் உணவுகளாகும்.

சில முக்கிய காய்கறிகளில் உள்ள ஊட்டச் சத்துகளைப் பின் கண்ட அட்டவணை 1 - இல் இருந்து அறிந்து கொள்ளலாம்.

அட்டவணை-1.

## ஒரு அவுன்சு (28 கிராம்) காய்களில் உள்ள ஊட்டச்சத்துகள்

| வரிசை எண் | காய்களின் பெயர் | புரதச்சத்து (கிராம்) | கொழுப்பு (கிராம்) | மாவுப்பொருள் (கிராம்) | சுண்ணும்பு (மில்லிகிராம்) | பாஸ்பரஸ் (மில்லிகிராம்) | இரும்பு (மில்லிகிராம்) | உயிர்ச்சத்து-ஏ (இண்டர்நேஷனல் யூனிட்) | உயிர்ச்சத்து-பி (மில்லிகிராம்) | நிகோடினிக் அமிலம் (மில்லிகிராம்) | ரிபோபிளேவின் (மில்லிகிராம்) | உயிர்ச்சத்து-சி (மில்லிகிராம்) | கலோரி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) |
| 1. | முட்டைக்கோசு | 0.5 | 0.1 | 1.8 | 8 | 14 | 0.2 | 568 | 14 | 0.1 | 9 | 35 | 9 |
| 2. | காலிபிளவர் | 1.0 | 0.1 | 1.5 | 8 | 17 | 0.4 | 122¼ | 31 | 0.3 | 23 | 19 | 11 |
| 3. | காரட் | 0.3 | 0.1 | 3.0 | 23 | 8 | 0.4 | 568 | 17 | 0.1 | 6 | 1 | 13 |
| 4. | பீட்ருட் | 0.5 | 0.1 | 3.9 | 57 | 17 | 0.3 | சிறு அளவு | 20 | 0.1 | 26 | 25 | 18 |
| 5. | முள்ளங்கி | 0.2 | 0.1 | 1.2 | 14 | 6 | 0.4 | 1 | 17 | ... | ... | 4 | 6 |
| 6. | உருளைக்கிழங்கு | 0.5 | 0.1 | 6.5 | 3 | 9 | 0.2 | சிறு அளவு | 6 | 0.3 | 3 | 1 | 28 |
| 7. | மரவள்ளிக்கிழங்கு | 0.2 | 0.1 | 10.9 | 10 | 10 | 0.2 | ... | 4 | 0.1 | 28 | ... | 45 |
| 8. | சர்க்கரை வள்ளிக் கிழங்கு | 0.3 | 0.1 | 8.8 | 6 | 10 | 0.2 | 3 | ... | 0.2 | 11 | 7 | 37 |
| 9. | கத்தரி | 0.4 | 0.1 | 1.8 | 60 | 17 | 0.4 | 1 | 4 | 0.2 | 26 | 6 | 10 |
| 10. | வெண்டை | 0.6 | 0.1 | 2.2 | 25 | 23 | 0.4 | 16 | 6 | 0.2 | ... | 4 | 12 |
| 11. | தக்காளிக்காய் | 0.5 | 0.1 | 1.3 | 6 | 11 | 0.7 | 91 | 7 | 0.1 | 17 | 9 | 8 |
| 12. | தக்காளிப்பழம் | 0.3 | 0.1 | 1.1 | 3 | 6 | 0.1 | 91 | 11 | 0.1 | 17 | 7 | 6 |
| 13. | பெல்லாரி வெங்காயம் | 0.3 | 0.1 | 3.3 | 50 | 14 | 0.2 | ... | 11 | 0.1 | 3 | 3 | 14 |
| 14. | நாட்டு வெங்காயம் | 0.5 | 0.1 | 3.7 | 11 | 39 | 0.3 | 7 | 22 | 0.1 | ... | ... | 17 |
| 15. | புடல் | 0.1 | 0.1 | 1.2 | 14 | 6 | 0.4 | 45 | ... | 0.1 | 17 | சிறு அளவு | 6 |
| 16. | பாகல் | 0.5 | 0.1 | 1.2 | 6 | 20 | 0.6 | 60 | 7 | 0.1 | 26 | 25 | 7 |
| 17. | பறங்கி | 0.4 | 0.1 | 1.5 | 3 | 8 | 0.2 | 24 | 6 | 0.1 | 11 | 1 | 8 |
| 18. | வெள்ளரி | 1.0 | 0.1 | 0.8 | 3 | 8 | 0.4 | சிறு அளவு | 8 | 0.1 | 1 | 2 | 4 |
| 19. | முருங்கைக்காய் | 0.7 | 0.1 | 1.0 | 8 | 30 | 1.5 | 52 | ... | 0.1 | ... | 34 | 7 |
| 20. | கருணைக்கிழங்கு | 0.4 | 0.1 | 7.5 | 17 | 6 | 0.4 | ... | 7 | 0.2 | ... | சிறு அளவு | 32 |
| 21. | பீன்ஸ் | 1.3 | 0.1 | 2.8 | 14 | 17 | 0.5 | ... | ... | 0.2 | ... | 3 | 17 |
| 22. | வாழைக்காய் | 0.4 | 0.1 | 4.2 | 3 | 8 | 0.2 | 14 | 4 | 0.1 | 57 | 7 | 18 |
| 23. | ஸ்பைனஷ் | 0.5 | 0.3 | 1.1 | 17 | 3 | 1.4 | 994 | 20 | 0.1 | 17 | 14 | 9 |
| 24. | புதினு | 0.5 | 0.2 | 2.2 | 56 | 21 | 4.2 | 756 | 14 | 0.1 | ... | 3 | 16 |
| 25. | தண்டுக்கீரை | 1.4 | 0.1 | 1.6 | 14 | 3 | 6 | 700 முதல் 3,080 | 8 | 0.3 | ... | 48 | 17 |
| 26. | கறிவேப்பிலை | 1.7 | 0.3 | 4.4 | 224 | 17 | 0.8 | 3,528 | 22 | 0.6 | ... | 1 | 27 |



காய்கறிகளில் ஊட்டச் சத்துக்கள் நிறைந்துள்ளதால் நாம் ஒவ்வொருவரும் இலை, விதை, பழம், வேர் மற்றும் கிழங்கு வகைக் காய்கறிகளை நமது உணவில் நாள்தோறும் சேர்த்துக் கொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

### வீட்டுத் தோட்டத்தின் இன்றியமையாமை

ஊட்டச்சத்துணவு ஆராய்ச்சியாளர்களின் பரிந்துரைப்படி தமிழ்நாட்டின் மக்களுக்கு இந்த ஆண்டில் (1976-77), ஏறத்தாழ 42 இலட்சம் மெட்ரிக் டன் காய்கறிகள் தேவைப்படுகின்றன. ஆனல் தற்பொழுது தமிழ்நாட்டில் ஆண்டு தோறும் சராசரியாக 10 அல்லது 12 இலட்சம் மெட்ரிக் டன் காய்கறிகளே உற்பத்தியாகி வருகின்றன. எனவே, நமக்குத் தேவைப்படும் காய்கறிகளில் நான்கில் ஒரு பகுதியையே நாம் தற்பொழுது உண்ண முடிகிறது.

ஊட்டமளிக்கும் காய்கறிகள் தேவையான அளவுக்கு நமக்குக் கிடைக்காததால், நம்மில் பலர் தேவையான அளவுக்கும் அதிகமான தானிய உணவை உண்ணுகின்றோம். இதனல் ஊட்ட உணவுப் பற்றாக்குறை (Under nutrition ) ஏற்படுவதுடன், தானியப் பற்றாக்குறையும் ஏற்படுகிறது. ஊட்ட உணவுப் பற்றாக்குறையால் உடல் நலம் கெடும்; கண்பார்வை மங்கும்; உடல் வலிமை குன்றும்; உழைக்கும் ஆற்றல் குறையும்; உடல் எளிதில் கொடிய நோய்களால் தாக்கப்படும்.

இந்தியாவில் 100-க்கு 50 பேர்கள் ஊட்ட உணவுப் பற்றாக்குறை அல்லது ஊட்டக் குறைவினல் (Malnutrition ) பாதிக்கப்படுகின்றார்கள் என்று உலக நல்வாழ்வு நிறுவனம் (World Health organisation ) கருத்துத் தெரிவித்துள்ளது. இந்தியாவில் தற்பொழுது நிலவி வரும் ஊட்ட உணவுப் பற்றாக்குறை, ஊட்டக் குறைகளைப் போக்கிட காய்கறி உற்பத்தியைப் பெருக்கி நம் உணவில் காய்கறிகளைத் தேவையான அளவு சேர்த்துக் கொள்ள வேண்டியுள்ளது. எனவே, காய்கறி உற்பத்தியைப் பெருக்கிட, நாம் ஒவ்வொருவரும் வீட்டுத் தோட்டம் அமைக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

### வீட்டுத் தோட்டத்தின் பயன்கள்

''பதினறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழு'' என்பதுபோல், வீட்டுத் தோட்டம் அமைத்தால் கீழ்க்கண்ட பதினறு பயன்கள் கிடைக்கும்.

1. புத்தம் புதிய காய்கறிகளைப் (Fresh Vegetables) பெறலாம்.

2. விருப்பமான காய்களைப் (Choice Vegetables) பெறலாம்.

3. பலவகைக் காய்களையும், பசுமையாகப் (Green Vegetables) பெறலாம்.

4. வேண்டியபோது, காய்களைப் பறித்துக்கொள்ளலாம்.

5. சுவை குன்றுத காய்களைப் (Tasteful Vegetables) பெறலாம்.

6. உயிர்ச் சத்துக்கள் மிகுந்த காய்களைப் (Vitamin-rich Vegetables) பெறலாம்.

7. குறைந்த செலவில் காய்களை விளைவிக்கலாம்.

8. சமையலறைக் கழிவு நீரையும் உபயோகப்படுத்த முடியும்.

9. வீட்டுக்கு அழகு சேர்க்கும்.

10. பொழுது போக்காகவும் அமையும்.

11. உடற் பயிற்சியாகவும் இருக்கும்.

12. கண்ணிற்குக் குளிர்ச்சி தரும்.

13. மனத்திற்கு அமைதியும், மகிழ்ச்சியும் கிடைக்கச் செய்யும்.

14. நல்வழியில் நாட்டம் ஏற்படுத்தும்.

15. சுவையான உணவு கிடைக்கச் செய்யும்.

16. நலமான வாழ்வு தரும்.

### வீட்டுத் தோட்டம்
#### —அமைக்கும் முறை

1. குடும்பத்தினரின் விருப்ப திற்கேற்றவாறும்,

2. கிடைக்கும் இடத்தின் அ வுக்குத் தகுந்தாற்போலவும்,

3. நிலத்திற்கும், பருவத்திற்கும் ஒத்ததாகவும்,

4. ஆண்டு முழுவது தொடர்ந்து காய்கள் கிடைக்கு வகையிலும்,

5. வரப்பின் பக்கம், வாய்க்கால் ஓரங்கள், மூங்கிலால் செ யப்பட்ட தட்டிகள், வேலிச அல்லது உயிர் வேலிகள் முதல் இடங்களை நன்கு பயன்படுத்து முறையிலும்,

6. குறைந்த செலவில் நிறை மகசூல் பெறும் வகையிலும்,

வீட்டுத் தோட்டத்தைத் திட மிட்டு அமைக்க வேண்டும். ஆ சிலர் வீட்டுத் தோட்டம் அமை பதில் வெகு ஆர்வம் காட்டி பட்டாலும், முதல் முயற் லேயே தோல்வி கண்டுவிடுகி னர். இதற்குக் காரணம் வீட் தோட்டம் அமைப்பதில் உ நுட்பங்களை உணராமை எனவே, வீட்டுத் தோட் அமைப்பதில் உள்ள நுட்பங் ஒவ்வொன்றுகக் கீழே விள யுள்ளோம்.

### இடம்

5 பேர் கொண்ட குடு திற்கு வேண்டிய காய்கறி உற்பத்தி செய்ய 5 சென்ட் ந வேண்டும்.

அந்த 5 சென்ட் நில குறைந்தது நாள்தோறும் 6 நேரமாவது சூரிய வெளி படக்கூடிய திறந்த வெளி இருக்க வேண்டும்.

(28-ஆம் பக்கம் பார்க்கவு




தேசிய இலக்கிய மன்றத்தினரால் ற்பாடு செய்யப்பட்டிருந்த ''இமயமும் குமரி ம்'' என்ற இரண்டு நாள் கருத்தரங்கை 7-7-'76 அன்று, தமிழ்நாடு ஆளுநர் திரு. மாஹன்லால் சுகாதியா அவர்கள் துவக்கி வைத்தார்.

## டமும் செய்தியும்

இந்திய அரசின் தொழில் மற்றும் நுகர்பொருள் அமைச்சர் திரு டி. ஏ. பை அவர்கள் திருச்சிராப்பள்ளி பாரத் கனரக மின் சாதன உற்பத்தித் தொழிற்சாலையில் ரூபாய் 58.2 கோடி செலவில் அமையவிருக்கும் பற்றவைப்பில்லாத எஃகுக் குழாய்த் தொழிற்சாலைக்கு, 19-7-'76-ல் அடிக்கல் நாட்டினர்.






கள்ளக்கடத்தலை ஒடுக்கும் முயற்சியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், முடிவு ஆகியவைகளைப் பற்றி இந்திய அரசின் உள் விவகாரத் துறை மாநிலங்களின் அமைச்சர் திரு ஓம் மேத்தா அவர்களும் இந்திய அரசின் நிதித் துறை மாநிலங்களின் அமைச்சர் திரு பிரணாப் குமார் முகர்ஜி அவர்களும் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகத்தில் 23-7-'76 அன்று இந்திய அரசின் உயர் அலுவலர்களுடன் விவாதித்தனர்.

காஞ்சிபுரத்தில் தீவிர கைத்தறி மேம்பாட்டுத் திட்டத்தை இந்திய அரசின் வர்த்தகத் துறை துணை அமைச்சர் திரு விஸ்வநாத் பிரதாப் சிங் அவர்கள், 23—7—'76 அன்று, தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் துவக்கி வைத்தார்.





செங்கற்பட்டு மாவட்டம், கூடுவாஞ்சேரியில் 25—7—'76-ல் நடைபெற்ற இருபது அம்சப் பொருளாதாரத் திட்ட விளக்க விழாவில், இந்திய அரசின் உள்விவகாரத் துறை அமைச்சர் திரு ஓம் மேத்தா அவர்கள் நிலமற்றவர்களுக்கு நிலப்பட்டா வழங்கினர்.



தென்னார்க்காடு மாவட்ட இருபது அம்சத் திட்டப் பலமுனை விளக்க விழா 4—7—'76 அன்று திண்டிவனத்தில் துவக்கப் பெற்றது. அவ்விழாவில், இந்திய அரசின் ள் விவகாரத் துறை மாநிலங்களின் அமைச் ர் திரு. ஓம். மேத்தா அவர்கள் கூட்டுறவு ங்கியால் அனுமதிக்கப்பட்ட நகைக் கடன் ளை வழங்கினர்.



திண்டிவனத்தில் 24-7-'76-ல் நடைபெற்ற பலமுனை விளக்க விழாவில் மத்திய வங்கியால் விவசாயிகளுக்குக் கடனில் கொடுக்கப்பட்ட உழவு மாடுகளை திரு ஓம் மேத்தா அவர்கள் வழங்கினர்.



சென்னை மாநகராட்சியும், 'டி. சைக்கிள்ஸ்' நிறுவனமும் கூட்டாகச் சேர்ந் தவணை கொள்முதல் திட்டத்தின் கீ சென்னை மாநகராட்சி ஊழியர்களு அளித்த சைக்கிள்களைத் தமிழ்நாடு ஆளு அவர்கள் 24—7—'76-ல் வழங்கினர்.



கூடுவாஞ்சேரியில் 25-7-'76 அன்று நடைபெற்ற பலமுனை விளக்க விழாவையொட்டி திரு ஓம் மேத்தா அவர்கள், ஏழைத்தையற்காரர்களுக்குத் தையல் இயந்திரம் வழங்கினர்.



பெங்களூரில் நடைபெற்ற காங் ரஸ் பொருட்காட்சியில் பங்கேற்றிருந்த தமி நாடு அரசு செய்தி, மக்கள் தொடர்பு துறையின் அரங்கத்திற்கு முதற் பரி கிடைத்தது. அப்பரிசினை கர்நாடக மாநி காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு பட்டு அவர்களிடமிருந்து, தமிழ்நாடு அரசு செய் மக்கள் தொடர்புத் துறையின் பொருட்காட் அலுவலர் திரு. கோவிந்தராஜ் அவர்க 5—5—'76-ல் பெறுவதை இப்படத்தில் காண லாம்.



கூடுவாஞ்சேரியில் 25-7-'76 அன்று நடைபெற்ற பலமுனை விளக்க விழாவையொட்டி திரு ஓம் மேத்தா அவர்கள் உழவர் பெருமக்களுக்கு விசைத் தெளிப்பான் வழங்கினார்.



தமிழ்நாட்டில் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தைச் செயல்படுத்துவது பற்றிய கூட்டம், தலைமைச் செயலகத்தில் 25—7—'76 அன்று திரு. ஓம் மேத்தா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஆளுநர் ஆலோசகர்கள், தலைமைச் செயலாளர், முதுநிலை அலுவலர்கள், இந்திய குற்றவியல் துறை, சுங்கத் துறை ஆகியவற்றின் அலுவலர்கள், காவல் துறையின் தலைமை அலுவலர் ஆகியோர் அக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.



'வன மகோத்சவ' விழாவை முன்னிட்டு, கூடுவாஞ்சேரி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், திரு. ஓம் மேத்தா அவர்கள் 25—7—'76-ல் தென்னங் கன்று ஒன்றை நட்டார்.



மதுராந்தகத்தில் 26-6-'76-ல் நடைபெற்ற அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக் கால்கோள் விழாவின் போது, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் உழவர்களுக்குக் கடன் வழங்கினார்.



கூடுவாஞ்சேரியில் 25-7-'76 அன்று நடைபெற்ற பலமுனை விளக்க விழாவையொட்டி அமைக்கப்பட்டிருந்த பொருட்காட்சியைத் திரு ஓம் மேத்தா அவர்கள் பார்வையிட்டார்.




தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 26—7—'76 அன்று பத்திரிகைச் செய்தியாளர் கழகத்திற்கு வருகை தந்து, செய்தியாளர்களுடன் கலந்துரையாடினார்.

(21-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்து சென்டு பரப்பு இல்லை யனில், 100 சதுர அடியில்கூட [வீ]ட்டுத் தோட்டம் அமைக்க [லா]ம்.

### மண்

மணலும், களிமண்ணும் சரி [சம]ான விகிதத்தில் அடங்கிய இரு-[ம]ண்பாடு நிலமே காய்கறி பயி[ரி]ட மிகவும் சிறந்தது.

மணற்பாங்கான மண்ணாக இருந்தால், மாட்டெரு, கலவை எரு (கம்போஸ்டு) போன்ற கரிம எருக்களைப் போட்டு வளமான மண்ணாக்கி விடலாம்.

களி மண்ணாக இருந்தால், மணல், மக்கிய தழை, கரிம எருக்கள் ஆகியவைகளை இட்டும், வடிகால் வசதிகளை அமைத்தும் காய்கறி பயிரிடுவதற்கு ஏற்ற மண்ணாகச் செய்து விடலாம்.

### நிலம் தயாரித்தல்

5 சென்ட் நிலத்தையும், கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரி வீட்டுக் காய்கறித் தோட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள படி பாத்திகள், நடைபாதை, மைய நடைபாதை, நிரந்தரப் பயிர்களுக்கான பகுதி என்று பிரித்துக் கொள்ள வேண்டும்.

நிலத்தின் பிற்பகுதியை நிரந்தரப் பயிர்களுக்காக ஒதுக்குதல் வேண்டும்.

படத்தில் குறிப்பிட்டுள்ளது போல் நான்கு கம்போஸ்டு குழிகளையும் தோண்டுங்கள்.

பாத்திகள் ஒவ்வொன்றும் 20 அடி நீளமும், 10 அடி அகலமும் உள்ளதாக இருக்க வேண்டும்.

பாத்திகளின் மேல் மண்ணை 1.5 அடி ஆழத்திற்குத் தோண்டி எடுத்து, அம்மண்ணிலுள்ள கற்களையும், கண்ணாடித் துண்டுகளையும், புற்பூண்டுகளையும் அப்புறப் படுத்திவிட்டு, அம்மண்ணை ஒரு புறமாக வைக்க வேண்டும்.

1.5 அடிக்குக் கீழுள்ள மண்ணை மேலும் 1 அடி ஆழத்திற்குத் தோண்டி, மண் கட்டிகளை உடைத்து, இரு மண்பாடு நிலம் போல ஆக்க வேண்டும்.

அதில் 500 சதுர அடிக்கு 0.5 டன் அல்லது ஒரு வண்டி தொழு எரு அல்லது கலவை எருவை (கம்போஸ்டு) அடியுரமாக இட்டு மண்ணில் நன்கு கலக்குமாறு கொத்தி விட வேண்டும்.

எருவிட்ட மண்ணின் மேல், முதலில் எடுத்த 1.5 அடி மண்ணைப் போட்டுச் சமப்படுத்த வேண்டும்.

விதைப்பதற்கு 10 நாட்களுக்கு முன்னதாக 'செரசான்' என்ற பூஞ்சாள மருந்தை மண்ணில் கலந்து, பயிர்களை நோய்கள் தாக்காவண்ணம் தடுக்க வேண்டும்.

விதைப்பதற்கு 3 நாட்கள் முன்னதாக டி.டி.டீ. மருந்தை மண்ணில் கலந்து எறும்புகளைக் கட்டுப்படுத்த வேண்டும்.

### பட்டம்

காய்கறி சாகுபடி செய்ய (1) ஜூலை-ஆகஸ்ட் (ஆடி), (2) ஜனவரி-பிப்ரவரி (தை) ஆகிய இரண்டும் முக்கிய விதைப்புப் பட்டங்களாகும்.

வீட்டிற்கு வேண்டிய காய்கறிகளை ஆண்டு முழுவதும் தொடர்ந்து பெற அட்டவணை-2 இல் கண்டபடி பயிரிடுவதே சிறந்ததாகும்.

## மாதிரி வீட்டுக் காய்கறித் தோட்டம்
### 5 சென்ட் பரப்பு (50 அடி X 44 அடி)




கம்போஸ்டு குழிகள். வேலி அல்லது தட்டி.

தனிக் குச்சிகள் அல்லது கம்புகளில் இணைத்துக்கட்டப்பட்ட தக்காளிச் செடிகள்.

……. அரைக் கீரை, புதினா, சிறுக் கீரை, பசப்புக் கீரை, முள்ளங்கி, வெங்காயம் முதலியன…



அட்டவணை—2.

## ஆண்டு முழுவதும் காய்கறி பெறுவதற்குரிய வழிமுறை

| பாத்தி எண் | காய்கறிகளின் பெயர் | பயிர் செய்வதற்கான பட்டங்கள் |
|---|---|---|
| பாத்தி 1 | கத்தரி, முள்ளங்கி | ஜூன் முதல் செப்டம்பர் வரை. |
| | முட்டைகோஸ் | அக்டோபர் முதல் ஜனவரி வரை. |
| | வெண்டை | பிப்ரவரி முதல் மே வரை. |
| பாத்தி 2 | கொத்தவரை | ஜூன் முதல் செப்டம்பர் வரை. |
| | பீட்ரூட் | அக்டோபர் முதல் டிசம்பர் வரை. |
| | கீரை வகைகள் | ஜனவரி முதல் பிப்ரவரி வரை. |
| | தட்டைப்பயறு | மார்ச்சு முதல் மே வரை. |
| பாத்தி 3 | காராமணி, | ஜூன் முதல் செப்டம்பர் வரை. |
| | கத்தரி, டர்னிப் | அக்டோபர் முதல் ஜனவரி வரை. |
| | கொத்தவரை | பிப்ரவரி முதல் மே வரை. |
| பாத்தி 4 | வெண்டை | ஜூன் முதல் செப்டம்பர் வரை. |
| | தட்டைப்பயறு | அக்டோபர் முதல் ஜனவரி வரை. |
| | முள்ளங்கி | பிப்ரவரி முதல் மார்ச் வரை. |
| | கீரை வகைகள் | ஏப்ரல் முதல் மே வரை. |
| பாத்தி 5 | மிளகாய், முள்ளங்கி | ஜூன் முதல் செப்டம்பர் வரை. |
| | வெண்டை | அக்டோபர் முதல் ஜனவரி வரை. |
| | கத்தரி, வெங்காயம் | பிப்ரவரி முதல் மே வரை. |
| பாத்தி 6 | பெல்லாரி, வெங்காயம் | ஜூன் முதல் செப்டம்பர் வரை. |
| | மிளகாய் | அக்டோபர் முதல் ஜனவரி வரை. |
| | கீரை வகைகள் | பிப்ரவரி முதல் மார்ச் வரை. |
| | முள்ளங்கி | ஏப்ரல் முதல் மே வரை. |

கீரை வகைகள், முள்ளங்கி, கத்தரி, வெண்டை, தக்காளி, கொத்தவரை ஆகிய வகைகளை ஆண்டு முழுவதும் பயிரிடலாம்.

அவரை, பூசணி, பாகல், புடலை ஆகியவைகளை ஜூலை- ஆகஸ்ட் (ஆடி), டிசம்பர் - ஜனவரி (மார்கழி) ஆகிய பட்டங்களில் விதைக்கலாம்.

முட்டைக்கோஸ், 'காலிபிளவர்', 'நூல்கோல்', 'பீட்ரூட்', 'கேரட்' ஆகியவைகளை அக்டோபர் முதல் டிசம்பர் வரை விதைக்கலாம்.

### விதைப்பு

கலப்பில்லாத, திடமான நல்ல முளைப்புத் திறன் உடைய விதைகளை விதைப்பதே சிறந்தது. விதைப்பதற்கு முன் விதைகளை 'அக்ரசான்' மருந்தில் கலந்து விதைக்க வேண்டும். கத்தரி, மிளகாய், தக்காளி, ஆகியவைகளை மேடான பாத்திகள் (Raised Beds) அமைத்து நாற்று விடுதலே சிறந்தது.

நாற்றுவிட மரப்பெட்டிகளையும் உபயோகிக்கலாம்.

கீரை போன்ற சிறிய விதைகளோடு எட்டு பாகம் மணலைக் கலந்து விதைத்தல் நல்லது.

நாற்றங்காலில் விதைகளைப் பரவலாக விதைப்பதே நல்லது.

வரிசைகளில் நாற்று விடுவதும் நல்லது.

விதைத்த விதைகள் முளைத்து வரும்போது, அவைகளைப் பறவைகள் தின்றுவிடாமல் தடுக்க, விதைப் பாத்திகளின் மேல் வைக்கோலைப் பரப்பி வைக்கலாம்.

விதைப் பாத்திகளுக்கு பூவாளியால் தண்ணீர் தெளிப்பதே நல்லது.

ஒரு மாதத்திற்குப் பின் நாற்றுகளைப் பறித்து நடவு செய்தல் வேண்டும்.

நாற்றுகளைப் பறித்து நடுவதற்கு முன் நாற்றங்காலில் தாமிர பூசண கொல்லி மருந்து, எண்ட்ரின் அல்லது பாரத்தியான் மருந்து ஆகியவைகளைத் தண்ணீரில் கலந்து தெளித்தல் நல்லது.

நாற்றுகளை வரிசை வரிசையாக நடுவதே சிறந்தது.

கிழங்கு வகைச் செடிகளுக்கு வரிசையில் செடிக்குச் செடி [1] அடி இடைவெளியும், வெண்டை கத்தரி, தக்காளி ஆகியவை களுக்கு 1.5 முதல் 2 அடி இடைவெளியும் விட்டு நடுதல் சிறந்தது

### உரமிடுதல்

பொதுவாக எல்லாக் காய்கறி செடிகளுக்கும் (பூசணி ரகங்களைத் தவிர) ஒரு சதுர மீட்டருக்கு 5[0] கிராம் வீதம் இரசாயன உரங்கள் இடவேண்டும். அதில்,





அமோனியம் சல்பேட் அல்லது கால்சியம் அமோனியம் நைட்ரேட்—1 பங்கும்

சூப்பர் பாஸ்பேட்—2 பங்கும்

மூரியேட் ஆப் பொட்டாஷ்—1 பங்கும் கலந்திருக்க வேண்டும்.

சிறப்பாக நல்ல மகசூல் எடுப்பதற்கு அட்டவணை 4-இல் குறிப்பிட்டுள்ளது போல, குறிப்பிட்ட காய்கறிப் பயிருக்கு, குறிப்பிட்ட இரசாயன உரங்களைக் குறிப்பிட்ட அளவில் இட வேண்டும்.

அடிஉரத்தை, நாற்றுகளை நடுவதற்கு ஒருவாரம் முன்பாக இட்டுவிட வேண்டும்.

மேலுரமாக இரசாயன உரங்களை இட ஊடுழவு செய்யும்போது அல்லது களையெடுக்கும் பொழுது இடுவதே நல்லது. இரசாயன உரங்களை செடிகளினின்று 10 செ. மீ. தூரம் தள்ளி வைத்து அவைகளை மண்ணுடன் நன்றாகக் கலக்குமாறு செய்ய வேண்டும்.

இரசாயன உரமிட்டவுடன் தண்ணீர் பாய்ச்சுதல் அவசியம்.

பூசணி, புடலை, பீர்க்கு, பாகல், சுரை ஆகியவைகளுக்கு ஒரு குழிக்கு 25 கிலோ தொழு எரு அல்லது கலவை எருவையும், அட்டவணை-4-ல் குறிப்பிட்டுள்ள உரங்களையும் விதைகளை நடுவதற்கு முன்பு இடவேண்டும். பூக்கும்பொழுது ஒரு குழிக்கு 12 கிலோ தொழு எரு இடுவது சிறந்தது.

### களை எடுத்தலும் —மண் அணைத்தலும்

மண்ணில் தகுந்த காற்றோட்டம் ஏற்பட்டு, செடிகள் நன்கு வளர களை எடுத்தல் அவசியம். களைகள் தோன்றிய உடனேயே அவைகளை அகற்றிவிட வேண்டும்.

களையெடுக்கும் போது செடிகளின் வேர்களுக்கு கெடுதி ஏற்படாமல் களையெடுக்க வேண்டும். கிழங்கு வகைப் பயிர்களுக்கு மண் அணைக்க வேண்டும்.

### நீர்ப்பாசனம்

விதைகள் முளைக்கும்போது பூவாளியால் தண்ணீர் தெளிப்பதே நல்லது.

இளஞ்செடிகளுக்கு வாரத்திற்கு 2 அல்லது 3 முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

குறைந்த ஈரத்தன்மை, அதிக ஈரத்தன்மை ஆகிய இரு நிலைமைகளுமே செடிகளுக்குக் கெடுதல் விளைவிக்கக் கூடும். எனவே தண்ணீர் பாய்ச்சுவதற்கு முன்பே, மண்ணில் 5 முதல் 6 செண்டிமீட்டர் ஆழத்தில் உள்ள மண்ணின் நிலைமையை அறிந்து அதற்கேற்பத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

இரசாயன உரமிட்டவுடன் தண்ணீர் பாய்ச்சுவது மிகவும் அவசியம்.

''கேரட்'' போன்ற வேர்க் காய்கறிப் பயிர்களுக்கு அறுவடைக்கு 15 நாட்கள் முன்னதாகவே தண்ணீர் பாய்ச்சுவதை நிறுத்தி விடுவது நல்லது. இவ்வாறு செய்வது கிழங்குகளுக்கு நல்ல சுவையையும், நல்ல நிறத்தையும் கொடுக்கிறது.

### பயிர்ப்பாதுகாப்பு

விதைகளை விதைப்பதற்கு முன்பாக 'அக்ரசான்' அல்லது 'செரசான்' மருந்து கலந்து விதைக்க வேண்டும்.

செடிகளில் பூச்சிகளையோ அல்லது நோய்களையோ கண்டால் உடன் வேளாண்மைத் துறை அலுவலர்களுக்குத் தெரிவித்து, அவர்களிடமிருந்து தகுந்த தடுப்பு முறைகளை அறிந்து, அதன்படி, செய்யுங்கள்.

பூச்சிகள் வராமல் இருக்க, முன் தடுப்பாக 15 நாட்களுக்கு ஒரு தடவை 'என்ட்ரின்' அல்லது 'பாலிடால்' அல்லது 'ரோகார்' தெளிக்க வேண்டும். அது போலவே நோய்கள் வராமல் இருக்க முன் தடுப்பாக மாதமொருமுறை தாமிரப் பூசணக் கொல்லி மருந்து தெளிக்க வேண்டும்.

புடல், பாகல், பறங்கி, பீர்க்கு போன்ற பூசணி வகைக் காய்கறிச் செடிகளுக்கு டி.டி.டீ. (D. D. T.) அல்லது பி.எச்.சி. (B. H. C.) ஆகிய மருந்துகளைத் தூவுதலோ அல்லது தெளித்தலோ கூடாது.

பூசணி வகைக் காய்கறிச் செடிகளைப் பூச்சி தாக்கா வண்ணம் பாதுகாக்க 'லின்டேன்' தெளிக்க வேண்டும்.

காய்களை அறுவடை செய்வதற்கு 2 வாரத்திற்கு முன்பாகவே மருந்து தெளிப்பதையோ அல்லது மருந்து தூவுதலையோ நிறுத்திட வேண்டும்.



### எல்லா இடங்களையும் பயனுள்ள முறையில் சாகுபடி செய்தல்:

வீட்டுத் தோட்டத்தின் எந்தப் பகுதியையும் வீணாகப் போடாமல் நன்கு பயன்படுத்தினால் மிகுந்த பலன் பெறலாம். திட்டமிட்டுப் பயிர் செய்தால், ஒரு அங்குல மண்ணைக்கூட வீணாக்காமல், பயன்படுத்தலாம்.

குறிப்பாக குடும்பத் தலைவிகள் வீட்டுத் தோட்டத்தில் ஆர்வம் கொண்டு ஒரு நாளைக்கு ஒரு மணி நேரமாவது வீட்டுத் தோட்டத்திற்கென ஒதுக்கி எல்லா வேலைகளையும் செய்ய முயன்றால், ஒரு அங்குல இடத்தைக்கூட வீணாக்காமல் பயன்படுத்தி, காய்கறிகள் விளைவை அதிகப்படுத்த முடியும். வீட்டுத் தோட்டத்திலுள்ள நடைபாதைகள், மைய நடை பாதை, வரப்பின் ஓரங்கள், மூங்கிலால் செய்யப்பட்ட தட்டிகள், உயிர் வேலிகள், கலவை எருக் குழிகள், நிரந்தரப் பயிர்கள் பகுதி ஆகியவைகளைப் பின்கண்ட முறையில் நன்கு பயன்படுத்தி, மிகுந்த பயன் பெறலாம்.

### நடைபாதை

வீட்டுத் தோட்டத்தைச் சுற்றியுள்ள நடைபாதை, மைய நடைபாதை ஆகியவற்றின் ஓரங்களில் குறுகிய கால வயதுடைய பலவகைக் கீரைகளை வளர்க்க வேண்டும். அவ்வோரங்களில் தண்டுக்கீரை, கொத்தமல்லி, வெந்தயக்கீரை, ஸ்பைனாஷ், புதினா'' ஆகியவைகளைப் பயிரிடுங்கள். நடைபாதையின் ஒவ்வொரு ஓரத்திலும் ஒவ்வொரு வகைக்கீரை பயிரிடுங்கள். கீரைகளை வெவ்வேறு பட்டங்களில் மாற்றி மாற்றிப் பயிரிடுங்கள்.

### மைய நடைபாதை

மாதிரி வீட்டுக் காய்கறித் தோட்ட வரை படத்தில் குறிப்பிட்டுள்ளது போல், மைய நடைபாதையின் இரண்டு ஓரங்களிலும் செடிக்குச் செடி 2 முதல் 4 அடி இடைவெளிவிட்டு, தக்காளிக் கன்றுகளை நட்டு வளருங்கள். தக்காளிச் செடிகளை தனிக்குச்சிகளில் இணைத்துக் கட்டி 4 முதல் 5 அடி உயரம் வரை வளர விடலாம்.

மைய நடைபாதையில் பன்னீர் திராட்சை (''மஸ்காட்''), ''அனாப்-இ-ஷாஹி' போன்ற திராட்சைகளின் பதியங்களை நடுங்கள். மையநடைபாதையின் மேல் ஓர் பந்தல் அமைத்து அதன் மேல் திராட்சைக் கொடியைப் படரவிடுங்கள்.

### வரப்பின் ஓரங்கள்

இரண்டு முக்கிய பாத்திகளை நீண்ட வாக்கில் பிரிக்கும் வரப்புகளின் ஓரங்களில் கீரை வகைகள் முள்ளங்கி, வெங்காயம் போன்றவைகளைப் பயிரிடுங்கள்.

### தட்டிகள், வேலிகள்

வீட்டுத் தோட்டத்தைச் சுற்றிலும் அமைக்கப்பட்டுள்ள மூங்கிலால் செய்யப்பட்ட தட்டிகள், வேலிகள் அல்லது உயிர் வேலிகளில் பசலை, பாகல், பீர்க்கன், கோவைக் காய், சௌ-சௌ முதலிய கொடி வகைச் செடிகளை வளர்க்க வேண்டும். இவைகளையும் வெவ்வேறு பட்டங்களில் மாற்றி மாற்றிப் பயிரிடுங்கள்.

### கலவை எருக் குழிகள்

காய்கறிச் செடிகளிலிருந்து விழும் காய்ந்த இலைகள், அறுவடைக்குப் பின் வெட்டப்பட்ட செடிகள், வீட்டில் கிடைக்கும் கழிவுப் பொருட்கள் ஆகியவற்றை அவ்வப்போது கலவை எருக் குழிகளில் (கம்போஸ்ட் குழிகள்) நிரப்பி, மண்ணால் மூடி எரு தயாரிக்கவும்.

கலவை எருக் குழிகளை மூடியுள்ள மேல் மண்ணிலேயே புடல், அவரை போன்ற விதைகளை ஊன்றலாம். அல்லது தொட்டிகளில் விதைகளை ஊன்றி கலவை எருக் குழிகளின் மேல் வைக்கலாம்.

கலவை எருக் குழிகளின் மேல் பந்தல் அமையுங்கள். அப்பந்தலின் மேல் புடல், அவரை போன்ற கொடிகளைப் படர விடுங்கள்.

### நிரந்தரப் பயிர்கள் பகுதி

நிரந்தரப் பயிர்களுக்காக, வீட்டுத் தோட்டத்தின் பின் பகுதியில் ஒதுக்கப்பட்ட இடத்தில் வாழை, கறி வேப்பிலை, ஜாப்னா முருங்கை, தவசிக்கீரை அல்லது, செக்கூர் மணிஸ்' எனப்படும் உயிர்ச்சத்துக் கீரை (Multi-Vitamin Greens) மரவள்ளிக் கிழங்கு, கத்தரி, தென்னை ஆகிய நிரந்தரப் பயன்தரும் செடிகளை வளர்க்க வேண்டும்.

ஒவ்வொரு வீட்டிலும் இப்பகுதியில் ஒன்றிரண்டு பழச் செடிகளையும் வளர்த்தல் நல்லது. ஏனென்றால் பெரும்பாலான பழங்கள் குடற்பகுதிகளை நல்ல நிலையிலும், சுறுசுறுப்பாகவும் வைப்பதற்கு வேண்டிய திடப் பொருட்களைக் (Roughage) கொடுத்து உதவுவதுடன் உயிர்ச் சத்து (வைட்டமின்) 'ஏ' உயிர்ச் சத்து (வைட்டமின்) 'சி' தாது உப்புகள் ஆகியவற்றையும் கொடுக்கின்றன.



மேலும் வயது வந்த ஒவ்வொருவரும் நாள்தோறும் குறைந்தது 84 கிராம் (3 அவுன்சு) பழங்களை உண்ண வேண்டும் என்று ஊட்ட உணவு ஆராய்ச்சி வல்லுநர்கள் கூறுவதால் நமக்குத் தேவையான பழங்களை வீட்டுத் தோட்டத்திலேயே உற்பத்தி செய்துகொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாததாக உள்ளது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் பப்பாளியை நிரந்தரப் பயிர்கள் பகுதியில் வளர்க்கலாம். பப்பாளி ஆண்டு முழுவதும் பழம் கொடுப்பதுடன், நமக்குத் தேவையான வைட்டமின் 'ஏ' யையும் கொடுக்கிறது.

நமக்குப் பலவகையிலும் பயன்படும் எலுமிச்சையையும், வைட்டமின் 'சி' நிறைந்த 'மேற்கு இந்திய செர்ரி' ( West-Indian Cherries ) போன்றவைகளையும் நிரந்தரப் பயிர்கள் பகுதியில் வளர்க்கலாம்.

நிரந்தரப் பயிர்களின் இடைவெளிகளில் சர்க்கரை வள்ளி, தட்டைப் பயறு, பீன்சு போன்றவைகளைப் பயிரிடலாம்.

வாழையின் நிழலில் ஓரிரண்டு சேனைக் கிழங்குகளையும் நடலாம்.

(தொடரும்.)

# நினைவாற்றல் மனிதனின் மாபெரும் சக்தி!

**மாணவர் அரங்கம்**

நாம் அன்றாடம் பல பத்திரிகைகளைப் படிக்கிறோம். ஆனால், நாம் படித்ததை மறவாமல் இருக்கிறோமா? அதைப்பற்றி மறுநாள் கேட்டால்கூட நமக்கு நினைவு இருப்பதில்லையே! படிக்கும்போது முக்கியமான செய்திகளை நாம் கிரகித்துக் கொள்ள வேண்டும். அந்தச் செய்திகள் பொது அறிவுச் செய்திகளாக இருக்கும். அவை என்றைக்கும் நமக்குப் பயன்படும். எனவே, படித்ததை மறவாத தன்மையை நாம் பெற வேண்டும்.

நல்ல நல்ல விஷயங்களை மனத்தில் பசுமரத்தாணி போல் பதித்துக் கொள்கின்ற பழக்கம் நமக்கு இயல்பாய் அமைதல் வேண்டும். அதற்கேற்ப நம்மை நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

'பகல் உண்டதே மறந்துவிடும்போது, என்றோ படித்தது எப்படி நினைவுக்கு வரும்?' என்று கேட்பது நகைச்சுவையாக இருக்கலாம். ஆனால், நம் அறிவு வளர்ச்சிக்கு அது நல்லதல்லவே!

நீங்கள் ஒரு ஞாபக மறதிப் பேராசிரியராக இருப்பதைவிட, ஞாபகம் உள்ள சாதாரண மனிதனாக இருப்பதே மேல் அன்றோ?

என்றோ நடந்ததை இன்று அப்படியே கூறும் நினைவு ஆற்றல் படைத்தவனை எல்லாரும் விரும்புவர்; பாராட்டுவர். நினைவாற்றல் என்பது மனிதனுக்குக் கிடைத்த மாபெரும் சக்தி. அந்தச் சக்தி இல்லாதவன் வெறும் மனிதன்; முழு மனிதனல்ல!

உங்கள் நினைவாற்றல் சரியாக இருக்கிறதா என்பதற்கு ஒரு சோதனை. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடைகள் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். என்றோ, எப்போதோ பத்திரிகைகளிலோ, நூல்களிலோ படித்திருக்கலாம். அவற்றை இப்போது நினைவுப்படுத்தி, சரியான விடை சொல்லத் தெரிகிறதா, பாருங்கள்!

**வினாக்கள் :**

1. இந்தியா-பாகிஸ்தான் இரயில்வே தொடர்பு மீண்டும் எப்போது துவங்கியது?

2. அமெரிக்கா, செவ்வாய் கிரகத்தில் செலுத்திய ராக்கெட்டின் பெயர் என்ன?

3. 21- வதுஒலிம்பிக் போட்டி எங்கே, எப்போது நடந்தது?

4. ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தினால் கௌரவிக்கப்பட்ட முதல் இந்தியர் யார்?

5. .ஐ. நா. சபையின் முதல் பெண் தலைவர் யார்?

6. 'தாக்ஷிணாத்ய கலாநிதி' என்ற பட்டம் பெற்ற தமிழ் அறிஞர் யார்?

7. சாகித்திய அகாடெமி (Sahitya Academy) எப்போது முதல் செயற்பட்டு வருகிறது?

8. சாரணர் இயக்கம் யாரால், எப்போது தொடங்கப் பெற்றது?

9. கீழ்க்காணும் ஐ. நா. சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் சுருக்கப் பெயர்கள், எதைக் குறிக்கின்றன?

(அ.) ஐ. எல். ஓ. (I.L.O)
(ஆ.) எஃப். ஏ. ஓ. (F.A.O)
(இ.) ஐ. டி. ஏ. (I.D.A)
(ஈ.) ஐ. டி. யூ. (I.T.U)

10. சாய்ந்த கோபுரம் (Leaning Tower) எங்கே உள்ளது? அதைக் கட்டும்போதே சாய்வாகக் கட்டினார்களா?

**விடைகள் : 48-ஆம் பக்கம்**



## மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதில் உள்ள குறைகளைத் தீர்க்க தமிழக அரசு ஏற்பாடு!

விரைவான முறையில் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்காகவும், உதவிப்பணம் வழங்குவதிலும், அதற்கான ஆணைகள் செல்வதிலும் ஏற்படும் தாமதம் பற்றிய குறைகளைத் தீர்ப்பதற்காகவும் அரிசன மற்றும் மலைவாழ் மக்கள் நல இணை இயக்குநரைத் தொடர்பு அலுவலராக தமிழக அரசு நியமித்துள்ளது. மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்கும் தொடர்புடைய அனைத்துப்பணிகளுக்கும் இவ்வலுவலரே பொறுப்புடையவராக இருப்பார்.

உதவித்தொகை வழங்குவதில் தாமதம் மற்றும் இதர குறைபாடுகள் இருப்பின் மத்திய, மாநில அரசு அலுவலகங்களை அணுகுவதற்குப் பதிலாக மாணவர்கள் அதனை எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அரிசன மற்றும் மலைவாழ்-மக்கள் நல இணை இயக்குநரிடம் தெரிவிக்கலாம்.



**உங்களுக்குத் தெரியுமா ?**

# அம்மை நோய்



பல நூற்றுண்டுகளாக உலகத்தில் உள்ள மிகக் கொடுமையான நோய்களில் ஒன்று அம்மை நோய்.

ஐரோப்பாவில் 18-வது நூற்றுண்டில் பிறந்த குழந்தைகளில் 20 சதவிகிதம் அம்மை நோயினால் இறந்துவிட்டன.

1796-இல் எட்வர்ட் ஜென்னர், அம்மை நோய்க்கான 'வாக்சின்' மருந்தைக் கண்டு பிடித்தார்.

'வைரஸ்' எனப்படும் நுண்கிருமிகளால் அம்மை நோய் ஏற்படுகிறது.

தும்மல், இருமல் மூலம் இந்நோய் பரவுகிறது. தடுப்பு ஊசி போட்டுக் கொள்ளாத ஒருவர், அம்மை நோயினால் பீடிக்கப்பட்டு உள்ளவரின் அருகில் சென்று, காற்றை சுவாசித்தால், 7-லிருந்து 17 நாட்களுக்குள் அவருக்கும் அம்மை நோய் பீடிக்கும்.

இரண்டு முதல் 4 நாள் காய்ச்சலில் உடல் முழுவதும், குறிப்பாக, முகம், கைகள், கால்களில் அம்மை பூரித்துவிடும்.

அம்மை நோயினால் பீடிக்கப்படுவோரில் 15 முதல் 30 சதவிகிதத்தினர் இறந்துவிடுகின்றனர். இந்நோயில் பிழைப்பவர்களுக்கு உடல் ஊனம் ஏற்படுகிறது. அல்லது கண் பார்வை இழந்துவிடுகிறார்கள்.

இந்நோயைக் குணப்படுத்த மருந்து கிடையாது. இருந்தாலும் தக்க நேரத்தில் மருத்துவ சிகிச்சை அளித்தால் நோய்முற்றாது.

குழந்தை பிறந்தவுடன் அதற்கு அம்மை நோய்த் தடுப்பு ஊசி போடுவதன் மூலமாகவும், பின்னர் அவ்வப்போது தடுப்பு ஊசிபோடுவதன் மூலமாகவும் இந்நோய் வராமல் தடுக்கலாம்.

இந்தியாவில் ஒவ்வொரு மணியிலும் சராசரியாக 6 பேர் அம்மை நோயினால் பீடிக்கப்படுகின்றனர்.

அவர்களில் மூன்றில் ஒருவர் இறந்துவிடுகின்றனர்.

1956-ஆம் ஆண்டிலிருந்து 1975-ஆம் ஆண்டு வரை இந்தியாவில் 11,28,286 பேர் இந்நோயினால் கஷ்டப்பட்டுள்ளனர். அதாவது சராசரியாக நாள்தோறும் 144 பேர் இந்நோயினால் பீடிக்கப்பட்டனர். 1973-இல் தான், மிக அதிக அளவுக்கு மக்கள் இந்நோயினால் பாதிக்கப்பட்டனர்.

கடந்த ஆண்டு ஜூலை முதல் இந்தியாவில் இந்நோயினால் எவரும் பாதிக்கப்படவில்லை.

இருந்தாலும் தொடர்ந்து அம்மை நோய் பற்றி கண்காணிக்கப்படுகிறது.

அம்மை நோய் பற்றி முதலில் தெரிவிக்கும் நபருக்கு 1,000 ரூபாய் ரொக்கப் பரிசு அளிக்கப்படுகிறது. ஒரு இலட்சம் பணியாளர்கள் அம்மை நோய் பீடித்துள்ளவர்களைக் கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

காய்ச்சல், உடல் அரிப்பு போன்றவற்றால் பல நூற்றுக்கணக்கானவர்கள் பாதிக்கப்பட்ட போதிலும் அவர்களை அம்மை நோய் பீடிக்கவில்லை.

''பொன்னுக்கு வீங்கி'', சிறிய அம்மை நோய், சொறி போன்ற நோய்களும் வைரஸ் என்னும் நுண்கிருமிகளால் பரவுகின்றன.

உடல் அரிப்புடன் கூடிய காய்ச்சல் ஏற்பட்டால், உடனடியாகச் சுகாதார அலுவலர்களிடம் அறிவிப்பது நலமாகும். இதனால் மேலும் நோய் பரவாமல் தடுத்துவிடமுடியும்.

# அம்மை நோய் அறவே ஒழிந்த ஆண்டு நிறைவு விழா!

இந்த ஆண்டு ஜூலை 5-ஆம் தேதியன்று அம்மை நோயிலிருந்து விடுதலை பெற்ற ஓராண்டை இந்தியா பூர்த்தி செய்துள்ளது. இந்த நாள், "அம்மை நோய்த் தடுப்புக்கு எச்சரிக்கை" என்ற கருத்தில் நாடெங்கிலும் அனுசரிக்கப்பட்டது.

இந்த அருஞ்செயல் "செயற்கைக்கோள் ஏவுவதை விட முக்கியத்துவத்தில் சற்றும் குறைந்ததல்ல" என்று மத்திய நல்வாழ்வு குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் கரண்சிங் வர்ணித்தார்.

இந்தச் சாதனையைப் பாராட்டிய உலக சுகாதார நிறுவனத்தின் தலைமை இயக்குநர் டாக்டர் ஹாஃப்தன் மேலர், "சாதிக்க முடியாததை இந்தியா சாதித்துவிட்டது; அம்மை நோயின் முதுகெலும்பை அது முறித்துவிட்டது. இது ஒரு சரித்திரச் சாதனையாகும்; முழு உலக அம்மை நோய் இயக்கத்தின் மாபெரும் வெற்றிகளில் ஒன்றாக இது விளங்குகிறது" என்று கூறினார்.

1974-ஆம் ஆண்டின் இறுதிவாக்கில் கூட மொத்தம் 1,88,003 பேர் அம்மை நோயினால் பாதிக்கப்பட்டதாகவும், 31,262 பேர் அதனால் இறந்து போனதாகவும் அறிவிக்கப்பட்டது. இந்த உண்மையிலிருந்து, இப்பொழுது அடைந்துள்ள சாதனையின் அளவை நன்கு மதிப்பிட முடியும்.

1962-ல் துவக்கப்பட்ட தேசிய அம்மை ஒழிப்புத் திட்டம், பொதுமக்களுக்கு அம்மைத் தடுப்பு ஊசி போடுவதற்குத் துவக்கத்தில் முக்கியத்துவம் அளித்தது. இதனைத் தொடர்ந்து அம்மை நோய் பாதிக்கப்பட்டுள்ளவர்களைத் தேடிக் கண்டுபிடித்து, அந்நோய் மேலும் பரவாமல் தடுப்பது சம்பந்தமான மிகத் தீவிரக் கொள்கையை அது மேற்கொண்டது.

தொடர்ந்து கண்காணிப்பதும், தகவல் திரட்டித் தருவதும் இந்நோயைக் கட்டுப்படுத்துவதில் இன்னொரு முக்கிய அம்சமாகும். அம்மை நோய் கண்ட வீடுகளில் காவலரைப் பயன்படுத்துவது, இந்நோயுடன் காய்ச்சல் கொண்டிருப்பவர் பற்றிய விவரங்களைப் பதிவு செய்வது, அம்மை நோய் பற்றி அறிவிப்பவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகையை 25 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தியது ஆகியவை இதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் முக்கியமானவைகளாகும்.

அம்மை நோய் இல்லாத நிலைமையை அடைந்திருப்பது இந்நோயை ஒழிப்பதன் முதல் கட்டமாகும். இரண்டாண்டு காலத்துக்கு நாட்டில் எவரும் அம்மை நோயால் பாதிக்கப்படாமல் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால், 1977-ல் அம்மை நோயை ஒழித்துவிட்டதாக நாம் கூற முடியும்.

இது, தேச முழுதும் பெருமிதம் கொள்ளக்கூடிய சாதனையாகும் என்று மத்திய நல்வாழ்வு, குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் கரண்சிங் அவர்கள் வாழ்த்துச் செய்தி ஒன்றில் கூறியுள்ளார். அம்மை ஒழிப்பு இயக்கம் திறமையாக மேற்கொள்ளப்பட்டதையும், இந்த இயக்கத்துக்கு முழு வெற்றி தேடித் தந்துள்ள சுகாதார ஊழியர்களின் அயராத கண்காணிப்பையும் மத்திய அமைச்சர் புகழ்ந்துள்ளார்.

"கடந்த ஓராண்டு காலத்தில் நாட்டில் எவருக்கும் அம்மை நோய் வரவில்லை என்பது மகிழ்ச்சியளிக்கிறது; அம்மை ஒழிப்புக்கான நமது இயக்கம் எவ்வளவு திறமையுடன் மேற்கொள்ளப்பட்டது என்பதை இது காட்டுகிறது. இந்த இயக்கத்தில் பங்கு கொண்ட நாடெங்கிலுமிருக்கும் ஆயிரக்கணக்கான சுகாதார ஊழியர்களைப் பாராட்டுவதற்கு இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கிறேன். மேலும் ஓராண்டு காலத்திற்கு நாம் தொடர்ந்து விழிப்போடு இருக்க வேண்டியுள்ளது. அதன் பிறகு, வருங்காலம் அனைத்திலும் அம்மை நோயிலிருந்து விடுதலை பெற்றவர்களாக நாம் இருப்போம்" என்று அம்மை நோயிலிருந்து முழுதும் விடுபட்ட முதலாவது ஆண்டு நிறைவு விழாவுக்கு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் டாக்டர் கரண்சிங் குறிப்பிட்டுள்ளார்.


## "தமிழரசு" படியுங்கள்!

தமிழ்நாடு அரசின் கொள்கைகளையும், திட்டங்களையும் தெளிவாகத் தெரிந்து கொள்ளவும், நவீன வேளாண்மை முறைகளையும், இதர துறைகளின் பணிகளையும் அறிந்து கொள்ளவும் "தமிழரசு" படிக்கத் தவறாதீர்கள். "தமிழரசு" இதழ் தவறாமல் கிடைக்க உடனே சந்தாதாரராகச் சேரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

**சந்தா விவரம்**

ஆண்டுச் சந்தா — ரூபாய் 12.00
6 மாதச் சந்தா — ரூபாய் 6.00
தனி இதழ் — 50 காசு

**சந்தா அனுப்பவேண்டிய முகவரி**

பொது நிருவாக மேலாளர்
(Circulation Manager),
"தமிழரசு" அலுவலகம்
அரசினர் தோட்டம்
சென்னை — 600 002.




# கப்பல் மாலுமிகளுக்குத் தேர்வு நிலையம்



கடலில் பயணம் செய்கின்றவர்களின் வாழ்வுக்குப் பாதுகாப்பு அளிக்கவும், அவர்களின் உயிருக்கு எந்தவித ஊறும் நேர்ந்திடா வண்ணம் பார்த்துக் கொள்ளவும் இந்திய அரசு 1958-ஆம் ஆண்டில் கப்பல் போக்குவரத்துச் சட்டத்தினை உருவாக்கியது. தற்பொழுது இந்தியக் கப்பல்களில் பயணம் செய்கின்ற மாலுமிகள், கப்பல் பயணத்திலும், இயந்திரங்களிலும் பொறுப்பேற்றுள்ள அலுவலர்கள் போன்றவர்கள் குறிப்பிட்ட தரத்தில் தகுதிச் சான்றிதழ்களைப் பெற்றிருக்க வேண்டும் என இச்சட்டம் வற்புறுத்துகிறது. தகுதிச் சான்றிதழ்களில் ஏறத்தாழ 12 தரங்கள் (Grades) உள்ளன. இச்சான்றிதழ்களின் தரம் கப்பலினுடைய வகை, அளவு, அது ஏற்றிருக்கும் வாணிபத்தின் வரையறை போன்றவைகளைக் கொண்டு பிரிக்கப்பெறுகின்றது.

இந்தச் சான்றிதழ்கள் மைய அரசால் வழங்கப்படுகின்றன. இதற்கென நியமிக்கப் பெற்றுள்ள தேர்வாளர்களால் நடத்தப்படுகின்ற குறிப்பிட்ட தேர்வில் தேர்ச்சி பெற்ற பின்னரே சான்றிதழ்கள், வழங்கப்படும். இங்கிலாந்து நாட்டின் தொடர்புடைய ஏனைய நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் நம் நாட்டின் தேர்வுத் தரம் மிகவும் உயர்ந்து காணப்படுகின்றது. இந்தச் சான்றிதழ் தேர்வு, பெரும்பாலும் இங்கிலாந்து நாட்டின் தேர்வு வகையை அடிப்படையாகக் கொண்டதாகும். சான்றிதழ்தாரர்கள் தகுதி வாய்ந்தவராக இல்லையெனப் பொறுப்பாளர்களால் அறியப்பட்டால் அவர் பெற்றிருக்கும் சான்றிதழை நீக்கவோ ரத்துச் செய்யவோ அவர்களுக்கு முழு உரிமை உண்டு.

இத்தகு சிறப்பு வாய்ந்த தகுதிச் சான்றிதழ் தேர்வு நிலையங்கள் இந்தியாவில் பம்பாய், கல்கத்தா ஆகிய இரண்டு இடங்களில் மட்டும் செயல்பட்டு வந்தன. நம்முடைய வாணிபத்திற்குப் பயன்படும் கப்பல்கள் பெருகி வருவதாலும், முன்னேற்றம் கண்டுள்ள நாடுகளின் கப்பல் நிறுவனங்கள் இத்தகு சான்றிதழ் தாரர்களைக் கவர்ந்திழுப்பதாலும் சான்றிதழ் பெற்றுள்ள கப்பல் அலுவலர்களின் தேவையும் நாளுக்குநாள் உயர்ந்து கொண்டு வருகின்றது.

பம்பாய், கல்கத்தாவிலுள்ள தேர்வு நிலையங்கள் சிறப்பான முறையில் இயங்கி வந்தாலும், மூன்றாவதாக சென்னை மாநகரில் தேர்வு நிலையம் ஒன்றினை ஏற்படுத்திட வேண்டுமென மைய அரசின் 'மாலுமிகள் பயிற்சி வாரியம்" முடிவெடுத்தது. எனவே, இந்த முடிவும் செயல்படுத்தப் பெற்று, சென்னையில் குறிப்பிட்ட சில தரங்களுக்கான தேர்வு 7-7-'76-ஆம் நாளில் துவங்கியது. இது இந்தியாவின் மூன்றாவது தேர்வு நிலையமாக இருந்தாலும், தென்னிந்தியாவின் முதல் தேர்வு நிலையம் என்பதும் பெருமைப்படத்தக்க ஒன்றாகும். தற்பொழுது துவக்கப் பெற்றுள்ள இத்தேர்வு முதல்படியாக இருப்பதால் மிகவும் கடினமானதாகவே இருக்கும்.

சென்னையில் இத்தேர்வு நிலையம் திறக்கப் பெற்றது மிகச் சிறந்த செயலாகும்-ஒப்பற்ற முயற்சியாகும். 1958-ஆம் ஆண்டு கப்பல் போக்குவரத்துச் சட்டத்தின்கீழ் நகரில் அளிக்கப் பெறும் ஒவ்வொரு பணியையும் சென்னை கப்பல் போக்குவரத்துத் துறை கவனித்துக் கொள்கிறது. கூடுதலாக இத்தேர்வு நடத்தும் பணியிலும் இந்தத் துறையே ஈடுபடும்.

சென்னையில் துவக்கப் பெற்றுள்ள இந்தத் தேர்வு மையம் தென்னிந்தியாவைச் சார்ந்த விண்ணப்பதாரர்களுக்குப் பரந்த அளவில் பயனளிக்கும். மற்ற நிலையங்களில் இடம் பெற முடியாதவர்களுக்கு இங்கு இடம் கிடைத்திட வாய்ப்புண்டு! தேர்வுகள் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும். தென்னிந்தியாவில் மீன் பிடி தொழில் மிகுந்த அளவில் இருப்பதாலும், மீன் பிடி பயிற்சி நிலையங்கள் பரந்த அளவில் காணப்படுவதாலும் கப்பல் மாலுமிகளுக்கு இந்தத் தேர்வு நிலையம் பெரிதும் பயனுள்ளதாக அமையும் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

சென்னையில் இத்தேர்வு மையத்தினை பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத் தலைவர் திரு. எம். ஜி. ராஜாராம் அவர்கள் 7-7-'76-ல் துவக்கி வைத்தார். பெருஞ்சிறப்பு வாய்ந்த இந்த மையம் சென்னை மாநகரில் துவக்கப் பெற்றிருப்பது அனைவர்க்கும் மிகுந்த மகிழ்ச்சியையும் பெருமையையும் அளிக்கும் என்றால் அது மிகையாகாது.

— ஆயிரராமன்




# கால்நடைகளின் உணவும், உணவிடும் முறைகளும்



டாக்டர் இரா. வெங்கிட கிருட்டினன்,
பேராசிரியர், விலங்கின ஊட்டச்சத்துத் துறை.
கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை.

பழங்காலத்தில், நம் மக்கள் கால்நடைகளை நன்கு உணவிட்டுப் பராமரித்து வந்தனர். அவ்வாறு அவர்கள் செய்யும்போது, தங்கள் அனுபவத்தின் அடிப்படையிலும் பழக்க வழக்கங்களை அனுசரித்தும் தீவன முறையைக் கடைப்பிடித்தனர். இம்முறை, பயனளிப்பதாய் இருந்தாலும், இதில் சில குறைபாடுகள் இருந்தன. சிலவற்றிற்கு, தேவைக்கு அதிகமான உணவும், அதே நேரத்தில் சிலவற்றிற்கு தேவைக்குக் குறைவான உணவும் அளிக்கப்பட நேர்ந்தது.

கால்நடை உணவியலில் கண்ட ஆராய்ச்சிகளின் விளைவாய், விஞ்ஞான ரீதியாக கால்நடைகளின் உணவியல் முறை மாற்றி அமைக்கப்பட்டது. இதன் விளைவாக, கால்நடைகளின் தீவன முறையில் உணவு மிச்சமும் இலாபமும் கிடைக்க வழிபிறந்தது.

**கால்நடைகளுக்கு உணவு இடும் முறைக்கு சில குறிப்புகள் :**

1. **தாராளமாக உணவிடுதல்**—இப்படிக் கூறுவதால் வீணடிப்பதை அனுமதிக்கவில்லை. திருப்தியான முறையில் உணவளிக்க வேண்டும்.

2. **தனிப்பட்ட முறையில் கவனிக்கவும் :** ஒவ்வொரு மாடும் தனி இயல்பு உடையது. ஆதலால் அதன் தரத்திற்கு ஏற்ப உணவிடல் வேண்டும்.

3. **சரியான சமன் உணவு:** சமன் உணவு என்பது, தேவையான எல்லாச் சத்துக்களையும் தகுந்த அளவில் குறைபாடின்றி அளிப்பது ஆகும்.

4. **திடீர் மாற்றங்களைத் தவிர்த்தல் :** கால்நடைகளின் அன்றாட உணவிடு முறையில் திடீரென்று மாற்றங்களைச் செய்வது கெடுதல். எந்த மாற்றமும் படிப்படியாகப் புகுத்தப் படல் வேண்டும்.

5. **தாராளமான பசும் தீவனம் :** பொதுவாகக் கால்நடைகளுக்குப் பசுந்தீவனம் தாராளமாய் அளிக்க வேண்டும்.

**உணவு வகைகள் :**

கால்நடைகளின் இயல்பு, அவைகளின் இனம் இவற்றிற்குத் தகுந்தாற்போல், உபயோகப்படுத்தப்படும் உணவுகள் வேறுபடுகின்றன. பொதுவாக, கீழ்க்கண்ட உணவுகள் பெரும்பாலும் கையாளப்படுகின்றன :

(1) பிண்ணாக்குகள், (2) எண்ணெய் வித்துக்கள், (3) தவிடு, (4) தானிய வகைகள், (5) பருப்பு வகைகள், (6) பொட்டுகள் முதலியவை. இவற்றுடன் கோழி, பன்றி இவைகளின் உணவில், சில சமயங்களில் மீன் தூள், வெல்லப் பாகு போன்ற பொருட்களும் உபயோகமாகின்றன.

மாடுகள், குதிரைகள், ஆடுகள் போன்றவைகளுக்கு வைக்கோல், காய்ந்த புல், பச்சைப் புல் இவைகள் அதிக அளவில் பயன்படுத்தப் படுகின்றன.

**உணவின் அளவு :**

உணவின் அளவு கணக்கிடப்படும்போது, ஒரு நாளைக்குத் தேவையான சத்துணவு அடிப்படையில், கணக்கிடப்படுகிறது.

தேவை என்னும்போது, எந்தப் பிராணிக்கும் உணவின் தேவை இருவகையாகிறது. ஒன்று அதன் உடலைப் பேணி வளர்ப்பதற்கும், இரண்டாவது, அத்துடன் உற்பத்தி செய்வதற்கும் உணவு தேவைப்படுகிறது. உற்பத்தி என்று நோக்குமிடத்து, பால், முட்டை இவை மட்டுமின்றி வேறு பிறவும் இதனுள் அடங்குகிறது. ஆடுகளின் கம்பள உற்பத்தியும், மாமிசத்திற்காக வளர்க்கப்படும் ஆடு, பன்றி, கோழி இவைகளின் மாமிச உற்பத்தியையும் கூடச் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

ஒரு நாளைக்கு அளிக்கப்படும் உணவு கீழ்க்கண்ட தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்:

1. பிராணிகளின் பசியைத் தீர்க்க வேண்டும்.

2. புரதம், மாவுச்சத்து, கொழுப்பு போன்ற எல்லாச் சத்துணவுகளையும் அது நிறைவாகக் கொடுக்க வேண்டும்.

3. அத்துடன் உடல் வளர்ச்சிக்கும், உற்பத்திக்கும் தேவையான உலோகச் சத்துக்களை அளிக்க வேண்டும்.

4. தேவையான வைட்டமின்களை அந்த உணவு தர வேண்டும். இதில் தேவையைப் பொறுத்த மட்டில் பிராணிகளிடையே வேறுபாடு உள்ளது. மாடுகளுக்கும், ஆடுகளுக்கும், குதிரைகளுக்கும், 'பி' வைட்டமின்களை உணவில் தர வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், அவைகள், தங்கள் உடல் உறுப்புகளில் இவைகளை உற்பத்தி செய்து கொள்கின்றன. இவைகளுக்கு முக்கியமாய் 'ஏ' வைட்டமின் அளிக்கப்படவேண்டும். பசும் புல் மற்றும் பசும் தீவனங்கள் நிறையக் கொடுத்தால் அவைகளிலிருந்து 'ஏ' வைட்டமின் தேவை பூர்த்தியாகிறது.

பன்றி, கோழி இவைகளுக்கு எல்லா வைட்டமின்களும் தரப்படவேண்டும்.

கால்நடைகளின் உற்பத்தி பெருக, கன்றுகளைப் பேணிக் காக்க வேண்டும்!





நன்கு உணவு அளித்து நன்முறையில் பராமரிக்கப்பட்டால், நான் தருகின்றேன் நிறையப் பால்!

**உணவிடும் முறை:**

எந்தப் பிராணிக்கும் உணவிடும் முறையின் அடிப்படை ஒன்றுதான். அவற்றின் உடலுக்கும், அதற்கு மேல் அவை தரும் உற்பத்திப் பொருளுக்கும் தேவையான சத்து உணவை அளிக்க வேண்டும்.

எது எவ்வாறு சாத்தியமாகிறதென்றால், இரண்டு முக்கிய விவரங்களை நாம் அறிய வேண்டும்.

1. கால்நடைகளின் தேவை. தேவையென்றால், தேவைப்படும் புரதம், கொழுப்பு, சக்தி, மற்ற உலோகப் பொருள்கள் முதலியவை.

2. நம்மிடம் உள்ள அல்லது நமக்குக் கிடைக்கக் கூடிய பொருள்களில் உள்ள சத்து விவரங்கள். இவ்விரண்டு குறிப்பைக் கொண்டு, தேவையான உணவுப் பொருட்களைத் தகுந்த அளவில் கலந்தளிக்க வேண்டும்.

உலோகச் சத்துக்களை அளிக்கும் வகையில் ஏதாவது தகுந்த மினரல் உப்புக் கலவையைத் தகுந்த அளவில் சேர்க்கலாம்.

**கால்நடைகளுக்கு உணவு முறை:**

கால்நடைகள் எனும்போது நாம் பெரிது கவனம் கொள்வது பசுக்களும், அடுத்து எருமைகளும். ஏனென்றால், பால் உற்பத்தி ஒரு முக்கிய நோக்கமாகும்.

பசுக்களுக்கோ அல்லது எருமைகளுக்கோ உணவிடும்போது அவற்றின் உடல் தேவை, அத்துடன் அவை கொடுக்கும் பால் பெருக்கத்தின் தேவை இரண்டும் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

இதன் அடிப்படையில், பசுக்களுக்கும், எருமைகளுக்கும் கொடுக்கப்படக் கூடிய சில உணவு முறைகள் தரப்பட்டுள்ளன. இவை சில உதாரணங்களே; நிலைமைக்கேற்ப இவை மாறுபடலாம்.

உடல் எடை 400 கிலோ.
பால் தரும் அளவு 8 கிலோ.

**தீவனம்:**

| | | |
|---|---|---|
| கடலைப் பிண்ணாக்கு | ... | 1.0 கிலோ |
| பருத்திக் கொட்டை | ... | 0.5 கிலோ |
| கொண்டைக் கடலைப் பொட்டு | ... | 0.5 கிலோ |
| தவிடு | ... | 1.00 கிலோ |
| பசும் புல் | ... | 10.00 கிலோ |
| வைக்கோல் | ... | 5.00 கிலோ |
| இத்துடன் மினரல் உப்புக் கலவை | | 2 அவுன்ஸ் |
| சாதாரண உப்பு | | 2 அவுன்ஸ் |

சேர்க்கப்பட வேண்டும்.

**எருமை:**

உடல் எடை—450 கிலோ.
பால் தரும் அளவு—10 கிலோ.

| | | |
|---|---|---|
| கடலைப் பிண்ணாக்கு | ... | 2 கிலோ |
| கடலை | ... | 0.5 கிலோ |
| தவிடு | ... | 1.0 கிலோ |
| பொட்டு | ... | 2.0 கிலோ |
| பசும் புல் | ... | 10.0 கிலோ |
| வைக்கோல் | ... | 5.0 கிலோ |
| இத்துடன் மினரல் உப்புக் கலவை | | 2 அவுன்ஸ் |
| சாதாரண உப்பு | ... | 2 அவுன்ஸ் |

**பால் தராத பசு:**

| | | |
|---|---|---|
| கடலைப் பிண்ணாக்கு | ... | 0.5 கிலோ |
| கடலைப் பொட்டு | ... | 0.5 கிலோ |
| பசும் புல் | ... | 10.0 கிலோ |
| வைக்கோல் | ... | 5.0 கிலோ |

**கன்றுகள் பராமரிப்பு:**

இளம் கன்றுகளைச் சரிவரப் பராமரிக்கவேண்டும். இல்லாவிடில், அவைகள் பிற்காலத்தில் நல்ல பசுவாகவோ, காளையாகவோ வளரா. முதல் மூன்று நாட்களுக்கு கன்றுகளுக்குச் சீம்பால் அவசியம் தர வேண்டும். சீம்பால் முக்கிய சத்துப் பொருள்கள் நிறைந்தது. சுலபமாக ஜீரணமாகக் கூடியது.



நன்கு பராமரிக்கப்படாத நான் வீட்டிற்கும் நாட்டிற்கும் நட்டத்தையே ஏற்படுத்துவேன்!

கீழ்க்கண்ட அட்டவணைப்படி உணவளிக்கலாம்:

| கன்றின் வயது | உணவு அளிக்க வேண்டிய விவரம் |
|---|---|
| 1—2 வாரம் | தாய்ப் பசுவின் பாலே உணவு. |
| 2—3 வாரம் | பசுப்பால் கொடுக்கலாம் (10 கிலோ உடல் எடைக்கு 1 கிலோ பால்). |
| 3—4 வாரம் | 60 அவுன்ஸ் பால், 20 அவுன்ஸ் கஞ்சி. |
| 4—6 வாரம் | பாலைச் சிறுகச் சிறுகக் குறைத்துக் கஞ்சியை அதிகரிக்கவும். |
| 6—7 வாரம் | கஞ்சியின் அளவை அதிகரிக்கவும்; 80 முதல் 100 அவுன்ஸ் |
| 7—8 வாரம் | கஞ்சியைக் குறைத்து, சத்துணவு அளிப்பதற்குப் பிண்ணாக்கு, தவிடு போன்றவை சிறிதளவு தரவும். |
| 8 வாரத்திற்குப் பிறகு | பிண்ணாக்கு, தவிடு போன்றவைகள் கலந்த உணவும், பசும் புல்லும் போடலாம். |

சினைக் காலத்தில் தாய்ப்பசுவுக்கு நல்ல உணவு அளிக்கப்பட்டால், கன்றும் வளமாக உள்ளது!



கீழ்க்கண்ட முறைப்படி தீவனக் கலவையைத் தயார் செய்து கொள்ள வேண்டும். இக்கலவையைக் கஞ்சியாகவோ அல்லது கடின உணவாகவோ கன்றுகளுக்கு அளிக்கலாம். கீழ்க்கண்ட கலவையைக் கஞ்சியாகத் தரும் போது, ஒரு பாகம் கலவைத் தீவனத்திற்கு 4 முதல் 5 பாகம் தண்ணீர் கலந்து, கஞ்சியாக்க வேண்டும்.

**கலவைத் தீவனம் :**

| | | |
|---|---|---|
| மக்காச் சோளம் | ... | 39 பங்கு |
| கடலைப் பிண்ணாக்கு | ... | 40 பங்கு |
| தவிடு | ... | 12 பங்கு |
| மரவள்ளிக் கிழங்கு மாவு | ... | 5 பங்கு |
| மீன் தூள் | ... | 3 பங்கு |
| உலோக உப்புக் கலவை | ... | 2 பங்கு |
| வைட்டமின் கலவை | | 1 கிராம்-ஒரு கிலோவிற்கு |

நன்றாகப் பராமரிக்கப்பட்ட கன்றுகள் தான், பிற்காலத்தில் சிறந்த மாடுகள் ஆகின்றன.

வயது வந்த கன்று (1 வயது முதல் 2 வயது வரை) கீழ்க்கண்ட தீவனமளிக்கலாம் :

தவிடு—1 பாகம்
கடலை நொறுக்கியது—2 பாகம்

இதில் கன்றுக்கு 0.5 முதல் 1 கிலோ வீதம் கொடுக்கலாம். இத்துடன் நல்ல பசும் புல் தேவையான அளவு தர வேண்டும். பசும் புல் 5 கிலோ முதல் 8 கிலோ வரை தரலாம்.

**ஆடுகளுக்கு உணவிடுதல் :**

பொதுவாக ஆடுகளுக்கு நல்ல மேய்ச்சல் இருக்க வேண்டும். மேய்ச்சல் வசதி குறைவான இடங்களில், பசும் புற்களை அறுத்துக் கொண்டுவந்து போட வேண்டும்.

நல்ல மேய்ச்சல் வசதி இருக்கும் நேரத்தில் கீழ்க்கண்ட தீவனக் கலவையில் 0.5 முதல் 1 கிலோ வரை கொடுக்கலாம்.

தவிடு— 1 பாகம்
கடலை நொறுக்கியது— 2 பாகம்

மேய்ச்சல் வசதி இல்லாத நேரத்தில் கீழ்க்கண்டவாறு உணவளிக்கலாம் :

**பன்றிகள் உணவு முறை :**

சாதாரணமாகப் பன்றிகள் மாமிசத்திற்காக வளர்க்கப்படுகின்றன. ஆகையால் அவை நன்றாக வளர்ச்சி பெற்று, நிறைய மாமிசம் கொடுப்பவையாக வளர வேண்டும்.

**தீவனக் கலவை :**

மக்காச் சோளம் —6 பாகம்
கோதுமைத் தவிடு —3 பாகம்
கடலைப் பிண்ணாக்கு —1 பாகம்

இதில் 0.5 முதல் 1 கிலோ வரை கொடுக்க வேண்டும். அத்துடன் 2 அல்லது 3 கிலோ புல்லும் தேவை.



கவனிப்பாரற்ற நிலையில் கண்டதைத் தின்று வாழும் என்னால், நிமிர்ந்துகூட நிற்க முடியவில்லை. நானெப்படி நல்ல பயன் தரமுடியும்?

**தீவனக் கலவை:**

தானியம் (சோளம்)—60 பங்கு
தானியக் குருணை —30 பங்கு
கடலைப் பிண்ணாக்கு — 5 பங்கு
மீன் தூள் — 5 பங்கு
தாது உப்புக் கலவை—1 பங்கு

இதில் 2 கிலோ வரை கொடுக்கலாம்.

**குதிரைகளுக்கு உணவிடுதல் :**

சாதாரணமாக, குதிரைகள் வண்டி இழுப்பது போன்ற வேலைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. ஆதலால் அவைகளுக்கு, சக்தி மிக்க ஆகாரம் தேவை.

கொள்ளு—2 கிலோ
தவிடு—0 5 கிலோ
புல்—10 கிலோ
இத்துடன் 2 அவுன்ஸ் உப்பு அவசியம்.

இந்த உணவு வகைகளைக் கடைப் பிடித்தால் கால்நடைகள், நல்ல வளர்ச்சி பெற்று, மனித சமுதாயத்துக்கு மிகவும் பயன் படும் என்பது உறுதி.



# மாவட்டங்களிலிருந்து...

குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்பட்டபின் தமிழகத்தில் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தை நிறைவேற்றுவதில் புதிய வேகம் பிறந்துள்ளது! இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தின்கீழ், சேலம், தருமபுரி, மதுரை, புதுக்கோட்டை, கோயம்புத்தூர், தென்னார்க்காடு ஆகிய ஆறு மாவட்டங்களில் அரிய சாதனைகள் ஏற்பட்டுள்ளன. அச்சாதனைகள் அனைத்தையும் விரிக்கின் பெருகும் என்றஞ்சி, அவைகளில் ஒருசில மட்டும் ஈண்டு தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

## தருமபுரி மாவட்டம்

பிரதமரின் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தின்கீழ் தருமபுரிமாவட்டத்தைப் பொறுத்தவரையில், கடந்த 6 மாதத்திற்குமுன் ஏழை எளிய மக்கள் நெருங்கிப் பார்க்க முடியாமல் இருந்த உணவுப் பண்டங்கள் விலை கணிசமான அளவு குறைக்கப்பட்டும், தரம் குறையாமலும் வழங்கப்படுகின்றன.

குறிப்பாகச், சென்ற ஆண்டு ஜூன் மாதத்தில் 320 ரூபாய் முதல் 350 ரூபாய் வரை விற்ற 100 கிலோ கொண்ட ஒரு மூட்டை சன்னரக கிச்சடி அரிசி, தற்போது ரூபாய் 150 முதல் ரூபாய் 160 வரையிலும், சென்ற ஆண்டு 120 ரூபாய் முதல் 125 ரூபாய் வரை விற்ற 17.5 லிட்டர் கொண்ட கடலை எண்ணெய் டின் தற்போது 70 ரூபாய் முதல் 72 வரை விற்கப்படுகிறது.

பொதுமக்களுக்கு உணவு விடுதிகளின் மூலம் ஒரு ரூபாய்க்குத் தரமான சாப்பாடு கிடைக்கிறது.

சென்ற நான்கு மாத காலத்தில் இம்மாவட்டத்தில் நிலமற்ற ஏழைகள் 364 பேருக்கு 924 ஏக்கர் நிலப்பட்டா வழங்கப்பட்டுள்ளது.

தாழ்ந்த நிலையில் உள்ள ஏழை எளியவர்களுக்கு, குடியிருக்க, கடந்த நான்கு மாதத்தில் மட்டும் இம்மாவட்டத்தில் 3,500 பேருக்கும், ஓசூர் கோட்டத்தில் 1,500பேருக்கும் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

சித்தேதி, முக்கனூர், கொடகரை, தொட்டமஞ்சி ஆகிய மலைப்பகுதிகளில் வாழ்ந்து வரும் மலைவாசிகளுக்காக தமிழ்நாடு அரசு 15 இலட்சம் ரூபாய் மதிப்பில் திட்டமொன்றைத் தயாரித்திருக்கிறது.



பணம் கொடுத்துப் புத்தகம் வாங்கிப் படிக்க இயலாத ஏழை எளிய மாணவ மாணவிகள் பயன் பெறத்தக்க வகையில் 1,500 பள்ளிகளில் புத்தக வங்கிகள் துவக்கப்பட்டுள்ளன.

வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள குறைந்த கால கடனை, நீண்டகால கடனாக மாற்றவும், தனியார் கடன் பிடியிலிருந்து ஏழை எளிய மக்களை மீட்கவும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் துரித நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள்.

தொட்டப்பட்டி என்ற இடத்தில் தொழிற்சாலைகளுக்குத் தேவையான இன்டஸ்ட்டிரியல் ஆல்கஹால் என்ற எரிசாராயம் செய்யும் தொழிற்சாலை கட்டுவதற்காக 30 ஏக்கர் நிலத்தை அண்மையில் அதிகாரிகள் சென்று பார்வையிட்டனர்.

இம்மாவட்டத்தில் 87 நிரந்தரக் குடிதண்ணீர் திட்டத்திற்காக 13 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும், 53 துவக்கப்பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்காக 7.5 இலட்சம் ரூபாயும், கிராமப் புறச்சாலை வசதித்திட்டத்திற்காக இரண்டு லட்சத்து 43 ஆயிரத்து 400 ரூபாயும் தமிழ்நாடு அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

சென்ற மே மாதம் 20-ந் தேதி முதல் 30ந் தேதி வரை தமிழக அரசால் நடத்தப்பட்ட இலவச கண்சிகிச்சை முகாம் மூலம், தருமபுரி கோட்டத்தில் 424 பேருக்கும் ஓசூர் கோட்டத்தில் 341 பேருக்கும் இலவச அறுவைச் சிகிச்சை செய்து, கண்ணாடிகள் வழங்கப்பட்டன. மேலும் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டது.

மத்திய அரசுத் திட்டப்படி மகளிர் நலத்துறை, 'கேர்' நிறுவனம், 'யூனிசப்' ஒருங்கிணைந்த குழந்தைகள் நல்வாழ்வுத் திட்டம், இம்மாவட்டத்தில் தனி ஒன்றியத்தில் 50 இடங்களில் இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் முதல் அமல்படுத்தப்படுவதாக, மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

## சேலம் மாவட்டம்

சேலம் மாவட்டத்தில் பல்வேறு துறைகளிலும் 20 அம்சத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. நாமகிரிப் பேட்டையில் கைத்தறி நெசவாளர்களுக்கும், சிறுதொழில் செய்வோருக்கும் யுனைடெட் கமர்ஷியல் பாங்கு 57 ஆயிரம் ரூபாய் கடன் வழங்கியுள்ளது. செவ்வாய்ப் பேட்டையில் உள்ள பஞ்சாப் நேஷனல் பாங்கு, கைத்தறி நெசவாளர்களுக்குக் கடன் தொகை அளித்துள்ளது. சேலத்தில் உள்ள இந்தியன் ஓவர்சீஸ் பாங்கு இருபது ஏழைகளுக்கு தலா ஆயிரம் ரூபாய் வீதம் கறவை மாடு வாங்கிக் கொள்ளக் கடன் உதவி வழங்கியுள்ளது.

நெருக்கடி நிலை அமல் செய்யப்பட்ட பின், சேலம் மாவட்டத்திலும் அத்தியாவசியப் பண்டங்களின் விலை கணிசமாகக் குறைந்திருக்கிறது. எந்தப் பொருளுக்கும் தட்டுப்பாடும் இல்லை. ஓட்டல்களிலும் உணவுப் பண்டங்களின் விலை குறைக்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் எல்லா ஓட்டல்களிலும் ஜனதா சாப்பாடு போடப்படுகிறது. அரசு நிர்ணயித்த எடை, விலை ஆகியவை ஓட்டல்களில் அமல்படுத்தப்படுகிறதா என்பதைத் திடீர் சோதனைகள் மூலம் அலுவலர்கள் அவ்வப்போது கண்காணித்து வருகிறார்கள்.

கிராமப் பகுதிகளிலும், நகரப் பகுதிகளிலும் உள்ள ஏழை மக்களுக்கு மலிவு விலையில் துணி விற்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த மலிவு விலைத் துணிகள் மொத்த அளவில் விறபனை செய்யப்படுகின்றன. நகரப் பகுதிகளில் 19 சங்கங்களும், கிராமப் பகுதிகளில் 210 சங்கங்களும் இவற்றை விற்பனை செய்கின்றன. கடந்த மாதம் 86 பேல் துணி விற்பனைக்காக எடுக்கப்பட்டது.




வறட்சி நிலைமையையொட்டி சேலம் மாவட்டத்தில் மொத்தம் 114 கிராமங்களில் போதிய அளவு பயிர் விளையாத விவசாயிகளின் நிலங்களுக்கு அரசாங்கக் கடன் வசூல், கூட்டுறவுக் கடன் வசூல் ஆகியவை தள்ளி வைக்கப்பட்டுள்ளன. தலைவாசல், கெங்கவல்லி, வீரகனூர் வட்டங்களில் உள்ள 40 கிராமங்களில் 25 சதவிகிதத்தைவிடக் குறைவான மகசூல் உள்ள நிலங்களுக்கு நில வரி ரத்து செய்யப்படும் எனத் தெரிகிறது.

மரவள்ளிக்கிழங்கிலிருந்து தயாரிக்கும் ஜவ்வரிசி போன்றவற்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வரையிலான தயாரிப்புக்கு உற்பத்தி வரியிலிருந்து விலக்கு அளித்தும், விசைத்தறி மூலம் தயாரிக்கும் உயர்த்த ரகத் துணிகளுக்கான வரி 14 சதவிகிதத்திலிருந்து 12 சத விகிதமாகக் குறைத்தும், மத்திய நிதி அமைச்சர் திரு. சி. சுப்ரமணியம் அவர்கள் சமீபத்தில் அறிவித்தது, ஜவ்வரிசித் தொழிற்சாலைகளும் விசைத்தறித் தொழிற்சாலைகளும் நிறைந்த இந்த மாவட்டத்திற்கு ஒரு வரப் பிரசாதமாகும்.

## மதுரை மாவட்டம்

குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்பட்டபின், மதுரை மாவட்டத்தில் 352 பேருக்கு நிலப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. சுமார் 116 பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. இம்மாவட்டத்தில் உள்ள 255 உயர்நிலைப் பள்ளிகளில் 148 பள்ளிகளில் புத்தக வங்கிகள் தொடங்கப் பட்டிருக்கின்றன. மேலூர், கொட்டாம்பட்டி, நத்தம் ஊராட்சி ஒன்றியங்களில் விவசாயிகள் 'செயல்முறை விளக்க நூலகக் கேந்திரங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன.

பிரதமரின் இருபது அம்சத் திட்டத்தின் கீழ் திண்டுக்கல் வட்டம் சாணார்பட்டி வட்டாரத்தில் உள்ள மூன்று பூதான கிராமங்களை இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் தன் பொறுப்பில் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அந்தக் கிராமங்களின் தேவைகளை, பாங்க் பூர்த்தி செய்யும். எல்லைப் பட்டி, மார்க்கம்பட்டி, கொத்தப் புலிப்பட்டி கிராம மக்களுக்கு விவசாயம் செய்யவும், ஆடு, மாடுகள் வாங்கவும், இந்தப் பாங்க் உதவும்.

மதுரை மாவட்டத்தில் வருவாய்த்துறை அலுவலர்கள் ஓட்டல்களில் அடிக்கடி திடீர் சோதனை செய்து வருவதன் பயனாக, உணவுப்பண்டங்களின் தரமும், எடையும் சீராக இருக்கின்றன.

மதுரையில் விஞ்ஞான மியூசியம் ஒன்றைத் தொடங்கவும், தமிழர் பழங்காலப் பொருட்கள் பார்வை அறை ஒன்றைத் தொடங்கவும், மதுரைப் பல்கலைக் கழகம் திட்டமிட்டிருக்கிறது.



நடப்பு நிதியாண்டில் கிராமக் குடிநீர் வசதிக்காக இம்மாவட்டத்திற்குப் பத்தொன்பது இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

வேலைவாய்ப்பற்றவர்கள் சுயமாகத் தொழில் செயலவதை ஊக்குவிக்கும் பொருட்டு, மதுரை மாவட்ட வேலைவாய்ப்பு நிறுவனம் புதிய திட்டமொன்றைத் துவக்கியிருக்கிறது. தேசீய மயமாக்கப்பட்ட பாங்குகள் ஆதரவில் சுயவேலை வாய்ப்புத் திட்டங்கள் பற்றி விவரிக்க, கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்வதே இந்தத் திட்டம், இதனால், வேலை வாய்ப்பற்றவர்கள் பயனடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

## புதுக்கோட்டை மாவட்டம்

புதுக்கோட்டை மாவட்டத்தில் அண்மையில் ஏழைச் சலவைத் தொழிலாளர்கள் 82 பேருக்கு சலவைப் பெட்டிகளும், முடி திருத்துவோர் 85 பேருக்குத் தொழிற்கருவிகளும், தச்சுத் தொழிலாளர்கள் இரண்டு பேருக்குத் தொழிற்கருவிகளும், மற்றும் தையல் மிஷின், கொல்லுத் தொழிற் கருவிகளும் இலவசமாக வழங்கப்பட்டன.



இம்மாவட்டத்தில் 7.5 இலட்சம் ரூபாய் செலவில் சாலைத் திட்டங்கள் மேற் கொள்ளப்படவிருக்கின்றன. இம்மாவட்டத்தில் 150 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. இங்கு புதிய வேலைவாய்ப்புத் திட்டங்கள் உடனடியாகத் துவக்கப்படும்.

வறட்சிப் பகுதிகளில் 20 குடிநீர்க்கிணறுகளை ஆழப்படுத்த உடனடி உத்தரவும் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. மேலும் 80 கிணறுகளை ஆழப்படுத்த அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. இங்கு பஞ்சாப் போன்று ஏரியுடன் குளங்கள் அமைக்க ஏற்பாடு செய்யவிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சென்ற ஆண்டு இம்மாவட்டத்தில் 3,000 நிலப்பட்டாக்கள் தான் வழங்கப்பட்டன. கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் 9,000 நிலப்பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

சிறியலூர் கிராமத்தில் பாட்டன்பட்ட கடனுக்காக கொத்தடிமையாய் இருந்த துரைராஜ் என்கிற பதினைந்து வயதுப் பையன் விடுவிக்கப்பட்டான். அவனது பாட்டனாரால் பறிகொடுக்கப்பட்ட 56 சென்ட் புஞ்செய் நிலமும் மீட்கப்பட்டு, நன்கொடையாக அவனிடம் ஒப்படைக்கப்பட்டது.

## கோவை மாவட்டம்

நெருக்கடி நிலைப்பிரகடனத்தாலும், இருபது அம்சத் திட்டத்தாலும் நாடுபெற்ற நலன்களையும் கோயம்புத்தூர் மாவட்டமும் கணிசமாக அனுபவிக்கிறது. இம்மாவட்டம் தொழில்வளம் பெற்ற மாவட்டம். அரசியல் சலனங்கள் அலைவீசும் மாவட்டம். கடந்த நான்கு மாதங்களாக இம்மாவட்டத்தில் நிலவும் அமைதியும் கட்டுப்பாடான ஒழுங்கான வாழ்க்கையும் இதற்கு முன் எப்போதுமே கற்பனையிலும் காணப்பட்டிராத ஒன்றாகும். மேலும் உணவுப் பொருள்கள் மலிவாக, தாராளமாகக் கிடைக்கின்றன.



தென்னிந்திய மில்லதிபர்கள் சங்கத்தின் தலைமை அலுவலகம் கோவையில் இருக்கிறது. இந்தச் சங்கம் அடுத்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டில் பஞ்சு உற்பத்தியை இரு மடங்கு ஆக்கத் திட்டம் ஒன்றை வகுத்திருக்கிறது. இத்திட்டத்தின் கீழ், நடுத்தர, நீண்ட இழைப்பஞ்சு தரும் பருத்தியில் தரமான ரகங்களைச் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு ஊக்கம் தரப்படும். இந்திட்டத்தில் சேரும் விவசாயிகளுக்குத் தரமான நல்ல விதைகளை மில்லதிபர்கள் சங்கமே விநியோகிக்கும்.

### கொத்தடிமைக்கு விடுதலை

கடந்த நான்கு மாதங்களுக்குள் மாவட்ட அலுவலர்களின் முனைப்பான நடவடிக்கைகளின் விளைவாக, இம்மாவட்டத்தில் ஜூன் 23 வரை 440 கொத்தடிமைகள் விடுதலை அடைந்திருக்கிறார்கள். சத்தியமங்கலம் வட்டத்தில் இந்தக் கொத்தடிமைகள் இருந்து வந்திருக்கிறார்கள். விடுதலை பெற்றவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பணியும் தொடர்ந்து எடுக்கப்பட்டுள்ளது. சுமார் 800 ஏக்கர் நிலம், ஒவ்வொருவருக்கும் மூன்று ஏக்கர் வீதம் பலருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. நாட்டுடைமையாக்கப்பட்ட பாங்க் ஒன்றும் இவர்களுக்குக் கடன் உதவிகள் தர முன் வந்திருக்கிறது.

இருபது அம்சத் திட்டத்தை நிறைவேற்றும்போது, கூடவே, வேறு திட்டங்களைச் சேர்த்து தீவிரமாக நிறைவேற்ற வேண்டும் என்று, பிரதமர் கூறியிருப்பது நினைவிருக்கலாம். கோவை நகரில் உள்ள வட்டமேஜை நிறுவனங்கள், மாதர் வட்டங்கள் ஆகியவற்றுடன் இணைந்து கோவை நகராட்சி ஒரு சிறப்பு குடும்பக் கட்டுப்பாடுத் திட்ட இயக்கத்தை சென்ற மார்ச் மாதத்தில் தொடங்கி, அண்மையில் முடித்திருக்கிறது. இந்த 82 நாட்களில் 1250 ஆண்களுக்கும் 120 பெண்களுக்கும் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. இந்த அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களில் 800 பேர் ஆலைத் தொழிலாளர்கள், 450 பேர் சேரிவாசிகள் என்பது குறிப்பிடத்தக்க தாகும்.

'ஜனதா' சாப்பாடு மலிவான விலையில் வயிற்றுக்குப் போதிய உணவாக மட்டும் இருந்தால் போதுமா? அது சத்துள்ள உணவாகவும் இருக்க வேண்டும் அல்லவா? அவ்வாறு மலிவான விலையில் தரமானதாகவும் சத்தானதாகவும் மக்களுக்கு உணவு அளிப்பது எப்படி என்று முன்னுதாரணம் காட்டும் முறையில், கோவை அவினாசிலிங்கம் பெண்கள் மனையியற் கல்லூரி, கோவைமாவட்டத்தில் போக்குவரத்துகளுக்கு இருதயம் போன்ற கோவை மத்திய பஸ் நிலையத்தில் ஓர் உணவகத்தைத் திறந்து நடத்துகிறது. இங்கு வழங்கப்படும் உணவு வெறும் ஜனதா உணவல்ல; சரிவிகித ஜனதா சத்துணவு.

வசதிக்குறைவாலோ, வேறு காரணங்களாலோ படிப்பை பாதியில் விட்ட கிராமத்துச் சிறுவர்களுக்கு இங்கே வேலை தரப்படுகிறது. வேலை நேரத்திற்குப் பிறகு கல்வி அறிவும் போதிக்கப்படுகிறது.

## தென்னார்க்காடு மாவட்டம்

தென்னார்க்காடு மாவட்டம் இருபது அம்சத் திட்டத்தின்கீழ் நல்ல முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. அரசு நடவடிக்கைகள் காரணமாக விலைவாசி குறைந்த நிலையில் நீடிக்கிறது. இம்மாவட்டத்தில் உபரி நிலமாகக்கிடைத்ததில் 276 ஏக்கர் நிலமற்றவர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. கடந்த பிப்ரவரி முதல் இன்றுவரை 619 வீட்டுமனைப் பட்டாக்களும், 100 நிலமற்றவர்களுக்கு சுமார் 118 ஏக்கர் நிலத்திற்குரிய பட்டாக்களும் வழங்கப்பட்டுள்ளன. அரிசன நலத்துறையினரால் 4,107 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.



இம்மாவட்டத்தில் 542 கொத்தடிமைகள் விடுதலை செய்யப்பட்டு உள்ளனர். இவர்களில் 17 பெண்களும், 39 சிறுவர்களும் உள்ளனர். சிறுவர்கள் படிக்க வேண்டும் என்ற ஆர்வமுள்ளவர்கள். ஒரு சிறுவனது படிப்பின் பொறுப்பை திருக்கோயிலூர் அரிமா சங்கத்தினர் ஏற்று உள்ளனர். மற்ற சிறுவர்கள், அரசு விடுதிகளில் தங்கிப் படிப்பதற்கு வசதி செய்து கொடுக்கப்படும்.

விடுதலை பெற்ற கொத்தடிமைகளில் 98 பேருக்கு மறுவாழ்விற்கான வகைகள் செய்யப்பட்டுள்ளன. இவர்களில் 40 பேரை சிறு விவசாயிகள் மேம்பாடுத் திட்டத்தின் கீழ் ஏற்று, அவர்களுக்கு கூட்டுறவு மத்திய வங்கிகள் மூலம் உதவிகள் செய்யப்பட்டுள்ளன.

இன்றியமையாப் பண்டங்கள் குறைந்த விலையில் கிராமப்புற மக்களுக்குக் கிடைப்பதற்காக கள்ளக்குறிச்சி பகுதியில் 20 கிராம கூட்டுறவு மையங்கள் மூலம் விற்பனை செய்ய மாவட்டக்

விவசாயிகள் சேவையில் வளர்ந்துவரும் ஒரு கூட்டுறவு!

BASF

SHAW WALLACE

பி ஏ எஸ் எஃப் -ஷா வாலஸ் கூட்டுறவு, விவசாயத் துறையில் தன்னிறைவு பெறுவதற்கு நம்நாடு எடுக்கும் முயற்சிகளுக்கு ஒரு புதிய பரிமாணம் கொடுக்கும் — விளைச்சல் அதிகரிக்கவும், விரயத்தைக் குறைக்கவும் உதவும் புதிய வகை பயிர் பாதுகாப்பு மருந்துகள் மூலம்.

பி ஏ எஸ் எஃப் தயாரிப்பு வகை:

பாவிஸ்டின்— ஊடுருவிச் செயலாற்றும் பூசணக் கொல்லி—50க்கும் அதிகமான பயிர்களில் 150க்கும் மேலான நோய்களை தடுக்கிறது மற்றும் குணப்படுத்துகிறது. சிறிதளவே போதும், சிறந்த பயனளிக்க.

பாஸாலின் — பகுத்துச் செயலாற்றும் களைக்கொல்லி— களைகள் முளைத்தவுடனேயே அவற்றை அழிக்கிறது; விலையுயர்ந்த உரத்தை மீதப்படுத்துகிறது; 30—50% அதிக மகசூல் பெற உதவுகிறது.

லிஹோஸின்—பயிர்வளர்ச்சி சீரணி— தேவையற்ற தாவரப் பொருள் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துகிறது; வறட்சி நிலையிலும் பயிர் செழித்துவளர உதவுகிறது; பயிர் விரைவாகவும், ஒரேசீராகவும் முதிர்ச்சிபெறச் செய்து, மகசூலையும் அதிகரிக்கிறது.

பி ஏ எஸ் எஃப்-பின் அகில உலக ஆராய்ச்சியின் விளைவுகளான இத்தயாரிப்புகள், ஷா வாலஸ் நிறுவனத்தின் விற்பனையாளர்கள் மற்றும் விற்பனை நிலையங்கள் மூலம் நாடெங்கும் கிடைக்கும்.

இந்த பி ஏ எஸ் எஃப் -ஷா வாலஸ் கூட்டுறவு, உலகெங்கிலும் உற்பத்தித் திறனை அதிகரித்து வரும் பயிர் பாதுகாப்பு மருந்துகளை இந்திய விவசாயிகளுக்குக் கிடைக்கச்செய்யும்.

பி ஏ எஸ் எஃப், ஷா வாலஸ் இருவரும் சேர்ந்து புதியவகை பயிர் பாதுகாப்பு மருந்துகளை இந்திய விவசாயிகளுக்கு அளிக்கின்றனர்


கூட்டுறவு விற்பனைக் கழகம் ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

அரிசன நலத்துறை 27,273 மாணவர்கள் பயனுற 68,385 பாடப் புத்தகங்களையும், 43,239 நோட்டுப் புத்தகங்களையும் இலவசமாக வழங்கியுள்ளது.

இருபது அம்சத் திட்ட நிறைவேற்றத்தின் பயனாக, தென்னார்க்காடு மாவட்ட கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம், ஒரு லட்சத்து 3 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள இன்றியமையாப் பண்டங்களை மாணவர் விடுதிகளுக்கு வழங்கியுள்ளது. 156 கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 35 இலட்சத்து 82 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள 16 இலட்சத்து 27 ஆயிரம் மீட்டர் தரமான துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 134 கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 4 இலட்சத்து 76 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள பாடப் புத்தகங்கள் மாணவர்களுக்கு அரசு நிர்ணயித்த விலையில் வழங்கப்பட்டுள்ளன.

(நன்றி:
சென்னை வானொலி நிலையம்.)

# உடல் ஊனமுற்றவர்களுக்கு உபகாரச் சம்பளம்

உடல் ஊனமுற்றவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள பல்வேறு சுயசேவை நிறுவனங்களுக்கு 50 இலட்சம் ரூபாய் மானியம் வழங்க மத்திய அரசின் சமூக நல்லாழ்வுத் துறை முடிவு செய்துள்ளது. மொத்தச் செலவினத்தில் 90 சதவிகிதம் இத்தகைய நிறுவனங்களுக்கு மானியமாக அளிக்கப்படும்.

உடல் ஊனமுற்றவர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்குவதற்காக, மேலும் 20 இலட்சம் ரூபாய் ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. உடல் ஊனமுற்றவர்களுக்கு இந்த உபகாரச் சம்பளம் 9-ஆம் வகுப்பு முதல் அளிக்கப்படும். மேலும் தொழில் நுட்பத் துறையில் 'டிப்ளமா' அல்லது பட்டப்படிப்பு வகுப்புக்கும் இந்த உபகாரச் சம்பளம் வழங்கப்படும்.

அஞ்சல்வழிக் கல்வி பயிலும் உடல் ஊனமுற்றவர்களுக்கும் இனி உபகாரச் சம்பளம் அளிக்கப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சாலைகளிலோ அல்லது வர்த்தக நிறுவனங்களிலோ 14 வயதிலிருந்து 40 வயது வரம்பிலுள்ள தொழில் பயிலுனர்களாகப் பணி புரியும் உடல் ஊனமுற்றவர்களுக்கும் உபகாரச் சம்பளம் வழங்கும் புதிய முறையொன்று கொண்டு வரப்பட்டுள்ளது. ஆராய்ச்சி வகுப்புகளில் உள்ள மாணவர்களுக்கும் தற்போது உபகாரச் சம்பளம் கிடைக்கிறது. உபகாரச் சம்பளம் வழங்கும் திட்டங்களின் மூலம் 6,250-க்கும் அதிகமான உடல் ஊனமுற்றவர்கள் பயனடைவார்கள்.

# கோவை மாவட்டத்தில் வேலை வாய்ப்பளிக்கும் வறட்சி நிவாரணத் திட்டங்கள்!

கோயம்புத்தூர் மாவட்டத்தில் வறட்சி நிவாரண வேலைத் திட்டத்தின்கீழ் வேலை வாய்ப்பளிக்கும் திட்ட முன்னேற்றம் பற்றி தமிழ்நாடு அரசு பரிசீலனை செய்தது. அதன் காரணமாக இம்மாவட்டத்தின் வறட்சிப் பகுதிகளில் விவசாயிகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும் எண்ணிக்கையை உடனடியாக அதிகரிக்க தீர்மானித்துள்ளது.

இதையொட்டி கோவை மாவட்டத்தில் ரூ. 7 இலட்சம் செலவில் விரைவாக நடக்க வேண்டிய சிறு பாசனத் திட்டம், சிறப்புச்சிறு பாசனத் திட்டங்கள் ஆகியவை துவக்கப்படும். வேலை வாய்ப்பு அளிக்கப்படுவதன் அவசியத்தை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் 30-9-'76-க்குள் முடிக்கக் கூடிய பணியினை மட்டும் உடனடியாக மேற்கொள்வார்.

இதைத் தவிர ரூ. 17.85 இலட்சம் செலவில் 25 புதிய சிறப்புச் சிறு பாசனத் திட்டங்களைச் செயல்படுத்தவும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

கோவை மாவட்டத்தில் ரூ. 6.93 இலட்சம் செலவில் குறிப்பிட்ட 13 மித வெப்பச் சாலைகளை அமைக்கும் பணிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளதுடன், வேலை வாய்ப்பு அளிக்க கோவை மாவட்டத்தில் மேலும் ரூ. 3 இலட்சம் செலவில் புதிய மித வெப்பச் சாலைகளை அமைக்கும் பணியையும் அரசு மேற்கொண்டுள்ளது.

# காய்கறி விதைகள்!

## ஒரு ரூபாய்க்கு 11 ரகம்!!

"ஆடிப்பட்டம் தேடி விதை" என்ற பழமொழியையொட்டி சென்னை நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும், மாவட்டங்களிலும் காய்கறிகளைப் பயிரிடுவதை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழ்நாடு அரசு தீவிர முயற்சி எடுத்துக் கொண்டுள்ளது. இம்முயற்சியின் முதற்படியாக சென்னை நகரில் ஒரு ரூபாய்க்கு 11 வகைக் காய்கறி விதைகளைப் பொதுமக்களுக்கு விற்பனை செய்ய தமிழக அரசு ஏற்பாடு செய்துள்ளது.

"சென்னை நகரில், உள்ள ஒவ்வொரு பால் விநியோக நிலையத்திலும் ஆகஸ்டு 2-ந் தேதியிலிருந்து இந்த விதைகள் விற்பனை செய்யப்படும். மொத்தம் 2 டன் விதைகள் ஒன்றரை இலட்சம் 'பாக்கெட்டு'களில் விற்பனை செய்யப்படவிருக்கின்றன.

"மேலும் விவரங்கள் வேண்டுவோர், உரம், நாற்றுக்கள் தேவைப்படுவோர் சென்னை நகரில் அண்ணாநகர் 534-15 கட்டடத்திலும், தேனாம்பேட்டை எல்டாம்ஸ் ரோடு 4-31 எண் கட்டடத்திலும் தொடர்பு கொள்ளலாம். இந்த அலுவலகங்கள் ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாலை 2 மணியிலிருந்து இரவு 7-30 மணிவரை திறந்திருக்கும். நகரிலுள்ள பள்ளிக்கூடங்கள் கல்லூரிகளிலும் காய்கறித் தோட்டங்களை அமைக்க ஏற்பாடு செய்யப்படும்" என்று வேளாண்மைத்துறை இயக்குநர் திரு. எ. வெங்கடராமன் அவர்கள் நிருபர்களிடம் தெரிவித்தார்.

மாவட்டங்களில் ஊராட்சி ஒன்றிய வேளாண்மைக் கிடங்குகளிலும் காய்கறி விதைகள் விற்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, காய்கறி விதை வேண்டுவோர் உடன் மேற்கூறிய இடங்களில் இருந்து காய்கறி விதைகளை வாங்கி ஆடிப்பட்டத்திலேயே பயிரிட்டுப் பயனடையலாம்!

---

TNPSC Advt. No. 24

# தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வு ஆணைக்குழு

கீழ்க்குறித்த பதவிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**55 உதவியாளர்கள்** — கருவூலம் மற்றும் கணக்குத் துறையில், தமிழ்நாடு அரசு அலுவலகப் பணியாளர் தொகுதியில்.

| | |
|---|---|
| தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பழங்குடியினர்கள் .. | 10 |
| பிற்பட்ட வகுப்பினர்கள் .. | 18 |
| பகிரங்கப் போட்டி .. | 27 |

**சம்பளம் :** மாதத்திற்கு ரூபாய் 250—10—330—15—450 (வரையறுக்கப்பட்ட பயிற்சி அல்லது போதனைக் காலத்தில் மாதத்திற்கு ரூபாய் 240 மட்டும் வழங்கப்படும்)

**வயது :** பிற்பட்ட வகுப்பினர்களுக்கும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கும், பழங்குடியினர்களுக்கும் வயது வரம்பு இல்லை. மற்ற வகுப்பினர்களுக்கு 1—7—76-ல் 26 வயது முடிந்திருக்கக் கூடாது.

**கல்வித் தகுதி :** மானியம் வழங்குவதற்காக பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட எந்தப் பல்கலைக் கழகத்தையும் அல்லது நிறுவனத்தையும் சார்ந்த 'பி.ஏ'., 'பி. எஸ்சி'., 'பி. காம்'., அல்லது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் 'பி.ஓ.எல்'., பட்டம்.

வணிக இயலில் பட்டம் பெற்றுள்ள மனுதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

படைக்கலைப்பின் காரணமாக வேலையிழந்த படைவீரர்களுக்கும், இலங்கை, பர்மா, அகதிகளுக்கும் வயது வரம்பிலும், கல்வித் தகுதியிலும் சில சலுகைகள் வழங்கப்படும்.

**கடைசி நாள் :** 2—9—1976 மாலை 5.00 மணி

விவரங்கள் மற்றும் விண்ணப்பப் படிவங்கள் பெற சுயவிலாசமிட்ட போதிய அஞ்சல் தலை (ரூபாய் 1.00) ஒட்டிய, உறை (23 செ. மீ. நீளமுள்ளது) இணைத்து, செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வு ஆணைக்குழு, அரசினர் தோட்டம், சென்னை—600 002 அவர்களுக்கு எழுதிக் கேட்கவும்.

தமிழ்நாடு அரசுப்பணியாளர்,
தேர்வு ஆணைக்குழு.

DIPR/34715/76

---



ஆடுதுறை-31

# காவிரிப் பாசன உழவர் பெருமக்களுக்குக் காலத்திற்கு ஏற்ற சில யோசனைகள்!

சுருட்டுப் பாய் நாற்றங்கால்



குறுவைச் சாகுபடிக்கு மேட்டூரிலிருந்து தண்ணீரைத் திறந்து விடுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக அதிக அளவுக்கு பயிர்ப் பாதிப்பு ஏற்படாமலிருக்க, பின்கண்ட சில யோசனைகளை வேளாண்மைத் துறை இயக்குநர் திரு. அ. வேங்கடராமன் அவர்கள் வெளியிட்டார்.

1. 'ஏ.டி.டி. 31', 'கோ. 32' ஆகிய இரண்டு வகையான நெல் விதைகளை இந்தச் சூழ்நிலையில் சாகுபடி செய்வது சிறந்தது. எக்காரணம் கொண்டும் 'ஏ.டி.டி. 27'ஐ விதைக்க வேண்டாம்.

2. தண்ணீரை மிதமாகப் பகிர்ந்து முறையாகப் பராமரிக்க வேண்டும்.

3. 25 அல்லது 30 நாட்களுக்கு முன்பு விதை விதைக்கப்பட்டிருந்தால், அதைப் பிடுங்கி விட்டுப் புதிதாக விதைப்பதே சாலச் சிறந்தது.

4. சுருட்டுப் பாய் நாற்றங்கால் முறை சிறந்தது.

7. நெருக்கிப் பயிரிடுவதும் உத்தமமானது. ஒரு சதுர மீட்டருக்கு 66 குத்து வீதம் பயிரிடுவது சிறந்தது.

6. பூச்சி மருந்து தெளிப்பு போன்ற பணிகளுக்காக 9 அங்குலம் முதல் ஒரு அடி வரை இடை இடையே பாதை விடுவது நல்லது.

## பொதுமக்களின் குறைகளைத் தீர்க்க தமிழ்நாடு அரசின் நடவடிக்கை

அதிகாரங்களைத் தவருகப் பயன்படுத்துதல் மற்றும் அரசின் கீழ் மட்டத்தில் உள்ள அலுவலர்களின் தவருன நடவடிக்கை ஆகியவற்றை விரைவான முறையில் ஆய்வு செய்வதுடன், தவறு செய்த அலுவலர்களின் மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

குறைகளைப் பற்றிய மனுக்கள் மீது நடவடிக்கை எடுப்பதில் தகுந்த கவனத்துடனும், அனுதாபத்துடனும், விரைவாகவும் செயலாற்றவேண்டும் என்றும், சமுதாயத்தின் ஏழை, எளிய மக்களுக்கு உதவி செய்யவேண்டுமென்ற ஒரு கருத்தினை உருவாக்க வேண்டும் என்று அரசு கருதுகிறது. இக்குறிக்கோளோடு வருவாய்த்துறை உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் ஆகியோர் கிராமப்பகுதிகளில்-வட்டம் மற்றும் வட்டார அளவில் —சுற்றுப்பயணம் செய்தல் வேண்டும் என அரசு முடிவு செய்துள்ளது.

அரசின் உயர் அலுவலர்கள், ஏழை எளிய மக்களுக்குப் பணிபுரிய எப்பொழுதும் தயாராயிருப்பதுடன் தங்களின் கீழ் பணிபுரிபவர்கள் எவ்வாறு இப்பணியைச் செய்கிருர்கள் என்பதைக் கவனத்துடன் கண்காணிக்க வேண்டும். மேலும் தேவையான பொழுது, தகுந்த முறையில் அவர்களின் பணியைத் தீவிரம் ஆக்க வழி வகைகள் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிருர்கள்.

### விடைகள்



1. இவ்வாண்டு ஜூலை 22 முதல் (அமிர்தசரஸ்—லாகூர் எக்ஸ்பிரஸ்).
2. 'வைகிங்-1'.
3. கனடாவிலுள்ள மாண்ட்ரீல் நகரில், 17.7.76 முதல் 1—8—'76 வரை.
4. சர். ஏ. இராமசாமி முதலியார் அவர்கள்.
5. திருமதி விஜயலட்சுமி பண்டிட் அவர்கள்.
6. டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள்.
7. 12.3.1954 முதல்.
8. பேடன் பவல் பிரபு (**Lord Baden—Powell**) என்பவரால் 1908-ஆம் ஆண்டில்.
9. அ. சர்வதேசத் தொழிலாளர் நல நிறுவனம்.
   ஆ. உணவு வேளாண்மை நிறுவனம்.
   இ. சர்வதேச வளர்ச்சிச் சங்கம்.
   ஈ. சர்வதேசத் தொலைத் தகவல் யூனியன்.
10. இத்தாலி நாட்டிலுள்ள பைசா நகரத்தில் உள்ளது; இல்லை.

தொகுப்பு: பி. வி. கிரி




 பதிவு எண். M. 8676



# வாழ்வு மலர
# வளம் பெருக
# 20 அம்சத்திட்டம்

# தமிழரசு

16-8-1976 50 காசு



1-SEP 1976

# அரசு-மிகவுயர்ந்த தரமான

## போர்ட்லெண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர்நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனுல் கட்டப்படும் எதையும் திண்மையும், தீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப் படுகிறது.

**தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்**
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

**அரசு** -வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16


# ஒன்றுபட்டு உழைப்போம்! ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்குவோம்!!

—ஆளுநர் உரை

நண்பர்களே,

இந்திய விடுதலை நாளான இன்று தமிழ் நாட்டு மக்களுக்கு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாட்டின் சுதந்திர உரிமையையும், ஒருமைப்பாட்டையும் போற்றிப் பாதுகாப்பதற்கு நம்மை நாமே மீண்டும் அர்ப்பணித்துக் கொள்ளத் தக்க சமயமாகும் இவ்விடுதலை நாள். வலிவும் வளமும் மிக்க இந்தியாவை உருவாக்கும் முன்னேற்றப் பாதையில் விரைந்து செல்வதற்கான நமது உறுதியைத் தெரிவித்துக் கொள்வதற்குரிய நாளாகவும் திகழ்கிறது இவ்விடுதலை நாள்.

வேற்றுமையில் ஒற்றுமை கண்டு, கூட்டுக் கலாச்சாரமும் பொதுநோக்கமும் உடைய மக்களைக் கொண்ட இந்தியா எனப்படுவது— ''ஆஸேது ஹிமாச்சலம்''—''சேது முதல் இமாசலம் வரை''—என்ற தொடர்மூலம் விளக்கப் படுகிறது. இது மூவாயிரம் ஆண்டுக்காலப் பழமை பெற்றதாகும். நாட்டின் பல்வேறு பகுதிகளின் கலாச்சாரம், மொழி ஆகியவற்றின் மறுமலர்ச்சி இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தினுல் முனைப்புடன் ஊக்குவிக்கப் பட்டது. அந்தப் போராட்டத்தில் வங்காளம், மராட்டியம், பஞ்சாப் ஆகியவற்ருேடு தமிழ்




மலர்: 7 16—8—1976 இதழ்: 4



# இன்றையத் தேவை

‘உற்பத்தியை கூட்டி, விநியோக அமைப்பை சீர்செய்து, சோசலிஸ்ட் திட்டங்களை அமல் செய்வது மட்டுமல்ல; எல்லாவற்றையும் விட நாட்டின் ஒற்றுமையை கட்டிக்காப்பதே முக்கியமானது.’

—இந்திரா காந்தி

## தேச நிர்மாணப்

பணியைத் தொடர்வோமாக—

நாடும் முன்னணியில் நின்றது. லோகமானிய திலகர், லாலா லஜபதிராய், பிப்பின் சந்திர பால், ராஷ் பிகாரி போஸ் இன்னும் மற்றவர்கள் ஆகியோருடன் தமிழ்நாட்டில் மகாகவி சுப்ரமணிய பாரதியார், வ.வே.சு. ஐயர், வ.உ. சிதம்பரம் பிள்ளை ஆகியோரும் மற்றவர்களும் விடுதலைக் கொடியேந்தி, சுதேசி இயக்கத்தை மேற்கொண்டு, மகாத்மா காந்திக்கு உறுதுணையாக ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தைத் தலைமையேற்று நடத்துவதற்கும், மக்கள் சக்தியைத் திரட்டுவதற்கும் நல்லதொரு அடிப்படையை உருவாக்கினர்.

“தரித்திர நாராயணர்” களான ஏழைகளோடு தம்மை இணைத்துக் கொள்வதற்கென காந்திஜி ஆடம்பர ஆடைகளை உதறி எறிந்து விட்டு, அரையாடை அணிய முடிவு செய்தது தமிழ்நாட்டில்தான்! தொடர்ந்து நவ இந்தியாவின் சிற்பிகளாகவும், விடுதலைப் போராட்டத்தில் காந்திஜியினுடைய தளபதிகளாகவும் திகழ்ந்த இராஜாஜி, சத்தியமூர்த்தி, சீனிவாச ஐயங்கார், காமராஜ் ஆகியோரும் மற்றும் பெருந்தலைவர்களும் தமிழ்நாட்டிலிருந்து முன்வந்தனர்.

தேசிய ஒருமைப்பாடு என்ற தொடர் வழக்கில் வருமுன்பே, இக்கோட்பாடு சுப்ரமணிய பாரதியாரால் தெளிவாகவும், விளக்கமாகவும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

“வெள்ளிப் பனி மலையின் மீதுலாவுவோம்-அடி
மேலைக் கடல் முழுதும் கப்பல் விடுவோம்

“வங்கத்தில் ஓடி வரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்.

“முத்துக்குளிப்பதொரு தென்கடலிலே
மொய்த்து வணிகர் பலநாட்டினர் வந்தே
நத்தி நமக்கினிய பொருள் கொணர்ந்து
நம்மருள் வேண்டுவது மேற்கரையிலே

“காசிநகர்ப் புலவர் பேசும் உரைதான்
காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்

“வானையளப்போம் கடல் மீனையளப்போம்”

இவ்வாறெல்லாம் பாரதியார் அன்று கனவு கண்டார் இந்தியாவைப் பற்றி. இத்தகைய தொலைநோக்கு—புரட்சிகரக் கோட்பாடுகள் ஆகியவைகளிலே மட்டுமின்றி, விஞ்ஞான தொழில் நுட்ப சாதனைகளிலும் தமிழ்நாடு இந்தியாவுக்கு வளமை சேர்ந்துள்ளது.

சி. வி. இராமன், இராமானுஜம், கே. எஸ். கிருஷ்ணன், சந்திரசேகர் ஆகியோர் இந்தியாவின் விஞ்ஞான வளர்ச்சிக்கு முன்னோடிகளாக விளங்கியோர் ஆவர். அணு மற்றும் விண்வெளி ஆராய்ச்சி ஆகிய துறைகளில் இந்தியா எய்தியுள்ள சாதனைகளில் தமிழ்நாட்டின் பங்கு மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

இன்றைய உலகில், பல்வேறு சமுதாயங்களினூடே மையத்தை நோக்கிச் செல்லக்கூடிய சக்திகளும், மையத்திலிருந்து புற நோக்கிச் செல்கிற சக்திகளும் இயங்கி வருதலைக் காண்கிறோம். ஆயினும், சோவியத் யூனியன், ஐக்கிய அமெரிக்க நாடுகள் போன்று பெரியனவாகவும், கூட்டாக இணைந்தும் விளங்குகின்ற நாடுகள் மிக்க வெற்றியும், வல்லமையும் கொண்ட சமுதாயங்களாகத் திகழ்கின்றன. மேற்கு ஐரோப்பா போன்ற முன்னேற்றமடைந்துள்ள நாடுகள் சார்ந்த இதரபகுதிகள்கூடப் பெருமளவில் ஒற்றுமையும் ஒருமைப்பாடும் கொள்வதில் முனைந்துள்ளன. உலக மக்கள் தொகையில் எழில் ஒரு பகுதியைக் கொண்ட இந்தியாவிலும், நாம் கூட்டாக இணைந்த ஒரு சமுதாயமாக ஒருமைப்பாடுமிக்க சமுதாயமாகத்தான் விளங்குகிறோம். உலக அரங்கில் ஐக்கிய அமெரிக்க நாடுகள், சோவியத் யூனியன், சீனா ஆகிய நாடுகளின் வரிசையில் இடம் பெற நமக்கும் அருகதையுண்டு. இத்தகைய ஒரு நிலை ஏற்படவேண்டுமானால், மாநிலங்களுக்கும் இந்திய யூனியனுக்குமிடையே ஒருங்கிணைந்து செயல்படும் நல்லுறவு நிலவ வேண்டும். இந்த உறவு இருதரப்பினரையும் வளம் பெறச் செய்வதாகும்.

**நல்ல தமிழனாகவோ, நல்ல வங்காளியாகவோ, நல்ல பிகாரியாகவோ இல்லாத ஒருவன் எப்படி நல்ல இந்தியனாக இருக்க முடியாதோ, அதுபோலவே முதற்கண் நல்ல இந்தியனாக இல்லாதவன் தன்னை நல்ல தமிழன் என்றோ, நல்ல ஆந்திரன் என்றோ கூறிக் கொள்ள முடியாது!**

நமது ஒற்றுமை உணர்வு என்பது—நாம் ஒன்றாக இருந்து பகிர்ந்துகொள்ளும் வரலாற்று உணர்வு, ஒன்றியிருந்து உணரும் மகிழ்ச்சியும் துயரும், ஒருமித்து நின்று எய்தும் சாதனைகள்—ஆகிய அனைத்தாலும் உருவாக்கப்படுவதாகும். ஆரம்பத்தில் நான் குறிப்பிட்டதுபோல, வரலாறு தெரிந்த கடந்த 3,000 ஆண்டுகளாக இத்தகைய ஒருமைப்பாட்டு உணர்வை நாம் பெற்றிருந்தோம். நமது சுதந்திரப் போராட்டத்தின் போது இது மேலும் வலுப்பெற்றது. சுதந்திரம் பெற்ற கடந்த 29 ஆண்டுகளில் கட்டுக்கோப்பான அமைப்பை ஏற்படுத்தியுள்ளோம்.

இவைபோன்ற ஒன்றுபட்ட அனுபவங்களினால் உரம்பெற்று மகாத்மா காந்தி, மகாகவி பாரதியார், ஜவஹர்லால் நேரு போன்ற ஒப்பற்ற தலைவர்களின் பொதுநோக்கால் புத்துணர்வு பெற்று விளங்கும் நம் முன்னுள்ள இப்போதைய பணி, 29 ஆண்டுகளுக்கு முன்னர் நாம் சுதந்திரம் பெற்றபோது நமக்கென வகுத்துக் கொண்ட இலட்சியங்களை நோக்கி வேகமாக முன்னேறுவதேயாகும். இம்மாபெரும் பணியில், நாம் அனைவரும், குறிப்பாக இளைஞர் சமுதாயத்தினரும் இன்றைய நாளில் ஈடுபடுத்திக் கொள்வோமாக!

வணக்கம், ஜெய்ஹிந்த்!

**(1976-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 15-ஆம் நாள் விடுதலை நாள் விழாவினையொட்டி தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள் வானொலியில் ஆற்றிய உரை.)**

*அட்டைப்படம்: தாயின் மணிக்கொடி, தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகத்தில் பட்டொளி வீசிப் பறக்கும் காட்சி!*



# நாளைய குடிமக்கள் நல்லவர்களாய் அமைய...

ஆர். வி. சுப்பிரமணியன், ஐ. ஏ. எஸ்.,
ஆளுநர் ஆலோசகர்.

நமது குழந்தைகளின் எதிர்காலமே பள்ளிக் கல்வியின் அடிப்படையில்தான் அமைந்திருக்கிறது. ஆகவே; பள்ளிக் கல்வியைத் தக்க வகையில் அமைப்பது மிகவும் முக்கியமானதாகும். இம்முயற்சியில் மாணவர், ஆசிரியர், அரசு அனைவருமே பங்காற்ற வேண்டியுள்ளது.

நமது நாட்டில் நிகழும் பெருத்த சமூகப் பொருளாதார மாற்றங்களைப் பள்ளியிலுள்ள இளம் நண்பர்கள் அறிந்துள்ளார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை. இத்தருணத்தில் நமது தேசிய வரலாற்றில் மாணவர்கள் தங்களுக்காகவும், நாட்டுக்காகவும் செய்ய வேண்டிய பொறுப்புக்கள் மிகவும் முக்கியமானவைகளாகும். உடலையும், உள்ளத்தையும் வளர்ப்பதற்காக மாணவர்கள் தமது முழு நேரத்தையும் செலவிடுவதே; அவர்களுக்கும், நாட்டுக்கும் நல்லதென நம்புகிறேன். நம் சிறுவர்களும், சிறுமிகளும் முழுமையாக வளர வேண்டும். நமது சுதந்திரக் குடியரசின் குடிமக்களாகப் பொறுப்பேற்கத் தக்க வகையில் அவர்களை ஆக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே நம் கல்விக் கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளன.

## இருபது அம்சத் திட்டமும்; இளைய தலைமுறையினரும்

நமது சமுதாயப் பொருளாதார வளர்ச்சித் திட்டத்தில்-அதாவது நமது மதிப்பிற்குரிய பிரதமர் சமர்ப்பித்துள்ள 20 அம்சத் திட்டத்தில்-மாணவரின் தேவைகளை நிறைவு செய்ய வேண்டும் என்று சிறப்பாக வலியுறுத்தப்பட்டுள்ளது. 20 அம்சத் திட்டம் பற்பல நோக்கங்களுக்கிடையில், புத்தக வங்கிகளை அமைக்கவும், நிர்ணயிக்கப்பட்ட விலையில் புத்தகங்களும், எழுது பொருள்களும் வழங்கவும், விடுதிகளில் வாழும் மாணவர்கட்கு இன்றியமையாப் பொருட்களை நியாயவிலைக்குப் போதிய அளவில் கிடைக்கச் செய்யவும் வழி வகுத்துள்ளது. இம்முயற்சிகளில் எல்லாம் பெரும் வெற்றி கிடைத்துள்ளதென்பதில் மகிழ்கின்றேன்.

**இதுவரை பள்ளிகளில் 14,408 புத்தக வங்கிகள் நிறுவ முடிந்துள்ளது!**

**பள்ளிப் பாட புத்தகங்களின் விலையை 20 முதல் 30 சதம் வரை குறைக்க முடிந்துள்ளது!**

**பயிற்சிப் புத்தகங்களும், எழுதுபொருள்களும் நியாயமான விலைக்கு எளிதில் கிடைக்கின்றன!**

**நம் மாணவர் விடுதிகளில் குறிப்பிடத் தக்கவாறு செலவு குறைந்துள்ளது!**

## நமது மாணவர்களின் சிறப்பு

நமது மாணவர் அறிவுக் கூர்மையிலும், அதைப் பயன்படுத்துவதிலும் யாருக்கும் குறைந்தோரல்லர்! இவ்வாண்டு பள்ளியிறுதி தேர்வுகளில் நம் பள்ளிகள் நல்ல வெற்றி கண்டுள்ளதற்கு மிகவும் மகிழ்கின்றேன். குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட வகுப்பினரையும், பழங்குடிகளையும் சார்ந்த மாணவர்களின் அரிய சாதனை கண்டு மகிழ்கின்றேன். அவர்களில் 584 பேர்கள், மொத்த மதிப்பெண்களில் 70 சதத்துக்கும் அதிகமான மதிப்பெண்களைப் பெற்றுள்ளனர். இவர்களின் மேற்படிப்புக்குச் சிறப்புத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. கல்லூரியில் சேரும்போது ஆகின்ற செலவுக்காக சிறப்பு உதவித் தொகைகளை வழங்குகிறோம். தற்போது கல்விக்குத் தரப்படும் ஊக்குவிப்புக்கள், எதிர்காலம் பற்றிய ஆர்வம், நம்பிக்கை, கனவு ஆகியவை நிறைந்த புதிய மாணவர்களை உருவாக்க உதவுவதுடன், அவர்களுடைய தகுதிக்கும், திறமைக்கும் ஏற்ற வகையில் அவர்களை உருவாக்கவும் உதவ வேண்டுமென்று விரும்புகிறேன்.

## மாணவர் கடமை

மாணவர்கள் தங்களது தகுதிக்கும், ஆர்வத்திற்கும் ஏற்ப மாணவ வாழ்வில் போதிய அளவு முன்னதாகவே தமது எதிர்காலத்தைப் பற்றி திட்டமிட்டுக் கொள்ள நினைப்பது உண்மையிலே பயனுடையதாக இருக்கும். தொழிற் கல்வி, அரசின் தனிக் கவனிப்பைத் தொடர்ந்து பெறும். மாணவர்களுக்காக நாம் ஏற்படுத்தியுள்ள மற்றும் ஏற்படுத்தவிருக்கின்ற எல்லா வசதிகளையும் மாணவர்கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றேன்.

## புத்தகப்புழுக்களாக இருக்காதீர்!

வகுப்பு, நூலகம், விளையாட்டு மைதானம் என்ற அளவில் மாணவரின் ஆர்வம் இருந்து விடக் கூடாது. புத்தகப் புழுக்களாக இருப்பதைத் தவிர்க்க வேண்டும். படிக்கும்போதே கலாசாரத்திலும், ஆன்மீகத் துறைகளிலும் மாணவர்கள் நாட்டம் செலுத்த வேண்டும். அதேசமயம், பாடத் திட்டத்திற்கு அப்பாற்பட்ட இத்தகைய ஈடுபாடுகள், கல்வித் தேவைகளைப் பாதித்து மாறான விளைவுகளைத் தோற்றுவிப்பதாக இருக்கக் கூடாது.

## மாணவரின் எதிர்காலம் ஆசிரியர் கைகளிலே!

நம் மாணவ-மாணவியரின் எதிர்காலம் பெரும்பாலும் ஆசிரியர்களின் கைகளில்தான் உள்ளன. கற்றுக் கொள்ளும் வயதில் மாணவன் ஆசிரியரையே உதவிக்கும், துணைக்கும் எதிர்பார்க்கிறான். அவனது வாழ்க்கைப் போக்கே பெருமளவுக்கு ஆசிரியரால்தான் உருவாக்கப்படுகிறது. இதைக் கருத்தில் கொண்டு, கற்பதில் அளவற்ற ஆர்வத்தை மாணவர்களுக்கு ஏற்படுத்தும் வகையில், பயிற்றும் முறைகளை ஆசிரியர்கள் உருவாக்க வேண்டும்.

## ஆசிரியர்-மாணவர் உறவு

கற்பிப்பதில் இந்தியாவுக்கு ஒரு மகத்தான பாரம்பரியம் உண்டு. புராதனக் காலத்தில் கற்பிப்போருக்கும், கற்பிக்கப்படுவோருக்கும் இடையில் நல்லுறவு இருந்தது. அதனால் ஆசிரியரின் மதிநுட்பத்தையும், எழுச்சியையும், அறிவையும் மாணவர்கள் அடைய முடிந்தது. இந்நோக்கத்தை எப்பொழுதும் நினைவில் கொண்டு, நமது மாபெரும் நாட்டின் நல்லகுடிமக்களாக மாணவர்கள் வளர்வதற்கு தேவைப்படும் இன்றியமையாத ஆசிரியர்-மாணவர் உறவுக்குத் தீங்கு விளைவிக்கும் எதனையும் விலக்க வேண்டும் என்று ஆசிரியர்களை வேண்டுகின்றேன்.

## ஆசிரியர் கடமை

ஆசிரியர் தம் பாதுகாப்பிலுள்ளவர்களை அன்புடன் நோக்கி, அவர்களிடமுள்ள ஆர்வங்களையும், திறமையையும், தகுதியையும் காண வேண்டும். ஆசிரியர் ஒவ்வொரு மாணவரின் ஆர்வத்தையும், திறமையையும் ஊக்கி, வளர்க்க உதவ வேண்டும். அதே சமயத்தில் ஆசிரியரின் நோக்கமும், ஆதிக்கமும் இளைஞர்களின் மேல் திணிக்கப்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். கற்பிப்பது நுணுக்கமான ஒரு கலை. அதைக் கவனமாகவும், மிகுந்த பொறுப்புணர்வுடனும் செய்ய வேண்டும்.

## ஒருமைப்பாடு தேவை

இன்றைய வாழ்வில், நமது தனிப்பட்ட வாழ்விலும், தேசிய வாழ்விலும் ஒருமைப்பாடு தேவைப்படுகிறது. பிரிவினைப்போக்குகளையும் எண்ணங்களையும் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும். ஆசிரியரும், மாணவரும் நாட்டுத் தேவைகளை முழுமையாக உணர்ந்துள்ளார்கள் என்று நம்புகின்றேன். ஆசிரியர்கள், மாணவர்களுக்குத் தகுந்த வழிகாட்டியாகவும், தலைமை தாங்கிச் செல்வோராகவும் இருக்க இயலுமென நம்புகின்றேன்.

## பெற்றோர் கடமை

சிறுவரின் உள்ளமும், தனித்துவமும் முழுமையாக வளர்வதற்கான சூழ்நிலையை வீட்டில் உருவாக்க வேண்டுமெனப் பெற்றோர்களை இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன். இன்றைய மாணவரும், ஆசிரியரும், பெற்றோரும் தம் தம் பங்கைச் செய்தால், இன்றைய சிறுவர்கள் நாளைய நல்ல குடிமக்களாவார் என்பது உறுதி. பள்ளி ஒலிபரப்புத் திட்டம் வெற்றி பெற வாழ்த்துகின்றேன். நமது ஆசிரியர்களும், மாணவர்களும் நலம் பெற வாழ்த்துகின்றேன்!

**(தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் 19-7-76-அன்று சென்னை வானொலியில் கல்வி ஒலிபரப்பைத் துவக்கி வைத்து ஆற்றிய உரை. தமிழாக்கம்: மலரை ப. இரன்)**



# பாரத நாட்டில் சாதனைகள் நிறைந்த ஓராண்டு!

சங்கர் கோஷ்,
மத்திய திட்ட இராஜாங்க அமைச்சர்.

(சென்ற இதழ் தொடர்ச்சி).

### 6. குறைந்தபட்ச விவசாய ஊதியம் ற்றிய சட்டங்கள்

விவசாயத் தொழிலாளர்களுக்கான றைந்தபட்ச ஊதியம் திருத்தியமைக்கப் ட்டுள்ளது; அநேக மாநிலங்களில் ஊதிய கிதம் உயர்த்தப்பட்டிருக்கிறது. குறைந்த ட்ச ஊதிய விகிதத்தை செயல்படுத்துவதற் ன நிர்வாக ஏற்பாடுகளை பலப்படுத்து தற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### 7. மேலும் அதிக நிலத்திற்கு பாசன சதி அளித்தல் மற்றும்

### 8. மின்சார உற்பத்தித் திட்டம்

நீர்ப்பாசன வசதிக்கும், மின்சார உற் த்தித் திட்டங்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள தி கணிசமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. தற் பாது இயங்கிவரும் நீர்ப்பாசன மின்சக்தித் ட்டங்களின் வேலைகளைத் துரிதப்படுத்து தற்கு 1975-76-ல் மாநிலங்களுக்கு சுமார் 85 கோடி ரூபாய் கூடுதல் மத்திய உதவி அளிக்கப்பட்டது. பெரிய, நடுத்தர, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் மூலம் 1975-76-இல் கூடுதலாக 19 இலட்சத்து 40 ஆயிரம் ஹெக்டர் நிலத்துக்குப் பாசன வசதி அளிக்கப் படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

1976-77-க்கான ஆண்டுத் திட்டத்தில் இந்நோக்கத்துக்காக 20 கோடி ரூபாய் ஒதுக் கப்பட்டுள்ளது. நிலத்தடி நீர்வளத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. நாட்டில் முறை யான நிலநீர் ஆய்வுகள் நடத்தப்பட்டு வரு கின்றன.

### 9. கைத்தறித்துறை அபிவிருத்தி

கைத்தறித்துறை அபிவிருத்திக்குச் சிறப்பு கவனம் அளிக்கப்பட்டுள்ளது. இத்தொழில் துறைக்குப் புத்துணர்ச்சி அளித்து, அபிவிருத்தி செய்வதற்கான சிறப்புத் திட்டமொன்று மேற் கொள்ளப்பட்டுள்ளது. 13 தீவிர அபிவிருத் தித் திட்டங்களையும், 20 ஏற்றுமதி வளர்ச்சி நிலையங்களையும் நிறுவுவதற்கான மத்திய திட்டமொன்று எடுத்துக் கொள்ளப்பட்டிருக் கிறது. அலுவல் மூலதனத் தேவைகளுக்கான நிதி வரம்புகள் உயர்த்தப்பட்டுள்ளன. மேலும் ஐந்து பொருட்கள் கைத்தறித் துறைக்கு தனியாக ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த அபிவிருத்தித் திட்டத்தின் நிறைவேற் றத்தைக் கவனிப்பதற்காக அபிவிருத்தி ஆணையாளர் ஒருவர் நியமிக்கபபட்டுள்ளார்.





### 10. மக்களுக்குத் தரமான துணிகள் ஒழுங்காகக் கிடைக்க வகை செய்தல்

மேம்பட்ட, தரம் கொண்ட மலிவுவிலை துணி இப்பொழுது அதிக அளவில் கிடைக் கிறது. சில்லறைக்கடைகள் திறக்கப்பட்டிருக் கின்றன. மொத்தம் 50 ஆயிரத்துக்கும் மேற் பட்ட சில்லறை விற்பனைக் கடைகளில் 80 சதவிகிதம் கிராமப் பகுதிகளில் செயல்படு கின்றன. கூட்டுறவு நிறுவனங்களின் மூலமாக வும் மலிவுவிலைத் துணிகளை விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தொலை தூரப்பகுதிகள், மலைப்பிரதேசங்கள் உட்பட எல்லா இடங்களிலும் மலிவு விலைத் துணி கிடைப்பதை உறுதி செய்வதற்குச் சரக்குப் போக்குவரத்து சமஈட்டுநிதி ஒன்று செயல் படுகிறது.



### 11. நகர்ப்புற நில உச்சவரம்பு

1976-ஆம் வருடத்திய நகர்ப்புற நிலச் (உச்சவரம்பு, ஒழுங்குமுறை) சட்டம் இந்த ஆண்டு பிப்ரவரி 17-ஆம் தேதியிலிருந்து அம லுக்கு வந்துள்ளது. ஆந்திரப் பிரதேஷ், குஜராத், ஹரியானா, ஹிமாசலப் பிரதேஷ், கர் நாடகா, மஹாராஷ்டிரா, ஒரிஸ்ஸா, பஞ்சாப், திரிபுரா, உத்தரப் பிரதேஷ், மேற்கு வங்கா ளம் ஆகிய மாநிலங்களுக்கு இந்தச் சட்டம் பொருந்தும். அரசியலமைப்புச் சட்டத்தின் 252-ஆம் பிரிவின் முதல் ஷரத்தின் நிபந்தனை களின்படி இதனை ஏற்கும் மற்ற மாநிலம் எதற்கும், இச்சட்டம் பொருந்தும்.

ஒருவருக்குச் சொந்தமான காலிநில விஷ யத்தில் உச்சவரம்பை இந்தச் சட்டம் நிர்ண யிருக்கிறது. உபரி நிலத்தை, சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கம் எடுத்துக் கொள்வதற்கும் அது வகை செய்கிறது. தகுந்த அதிகாரம் கொண்ட அதிகாரியின் முன் அனுமதியின்றி காலிநிலத்தையோ, நகர்ப்புறச் சொத்தை யோ வேறொருவர் பெயருக்கு மாற்றுவதை யும் அது தடுக்கிறது. எதிர்காலத்தில் கட்டப் படும் குடியிருப்பு வீடுகளின் உயர்ந்தபட்ச பரப்பளவை இச்சட்டம் வரையறுக்கிறது. மத்திய, மாநில மட்டங்கள் இரண்டிலும் இச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக் கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### 12. ஆடம்பர கட்டிடங்களை மதிப்பீடு செய்வதற்கான சிறப்புக் குழுக்களை நிய மித்தல். வரி ஏய்ப்பைத் தடுத்தல்.

பம்பாய், கல்கத்தா, சென்னை, டில்லி, புனா, கான்பூர், பெங்களூர், ஜெய்ப்பூர், நாக்பூர் ஆகிய நகரங்களில் ஆடம்பர வீடுகள் கட்டுவதில் முதலீடு செய்யப்பட்டுள்ள—கணக் கில் காட்டப்படாத—தொகைகளை, கண்டு பிடிப்பதற்காக சிறப்புக் குழுக்கள் நியமிக்கப் பட்டுள்ளன. ஏற்கெனவே 17 கோடி ரூபாய் மதிப்புக்கு மேற்பட்ட இத்தகைய முதலீடு களும், அல்லது சொத்துக்களைக் குறைத்து மதிப்பிட்டு அறிவித்துள்ளதும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

### 13. கடத்தல்காரர்களின் சொத்துக் களைப் பறிமுதல் செய்வதற்குச் சிறப்புச் சட்டம்.

கடத்தல்காரர்கள், வெளிச்செலாவணி மோசடிக்காரர்கள் (சொத்துப் பறிமுதல்) அவசரச் சட்டத்துக்குப் பதிலாக, நாடாளு மன்றத்தில் சட்டம் ஒன்று இயற்றப்பட்டுள் ளது. குறிப்பிட்ட சில சட்டங்களின் கீழ் பிடிக்கப்பட்டு, குற்றவாளி என்று தீர்ப்பளிக் கப்பட்ட சில நபர்களும், அவர்களின் உறவினர் களும், நண்பர்களும் இப்புதிய சட்டத்துக்குட் படுவார்கள். அத்தகைய நபர்களும், அவர் களின் உறவினர்கள், நண்பர்கள் முதலானோ ரும் சட்டத்துக்குப் புறம்பாகச் சொத்து எதை யும் வாங்குவதை இச்சட்டம் சட்டவிரோத மாகச் செய்துள்ளது.

### 14. நடுத்தர மக்களுக்கு வருமான வரி விலக்கு அளவு ரூபாய் 8,000/-க்கு உயர்த்தப்பட்டது.

குறைவான வருமானம் கொண்ட மக்க ளுக்கு நிவாரணம் அளிப்பதற்காக 1975-ஆம்



வருடத்திய நிதித்துறை திருத்தச் சட்டத்தின்படி, வருமான வரி கட்ட வேண்டிய வருமான அளவு 6,000 ரூபாயிலிருந்து 8,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால், வருமான வரி கட்டும் சுமார் 7 இலட்சத்து 30 ஆயிரம் பேர் பயனடைந்துள்ளார்கள். அவர்களுக்கு முழு நிவாரணம் கிடைத்துள்ளது. 1976-77-க்கான மத்திய வரவு செலவுத் திட்டத்தில், 15 ஆயிரம் ரூபாய் வரையில் வருமானம் கொண்டிருப்பவர்களுக்கான வருமானவரி விகிதங்கள் மேலும் குறைக்கப்பட்டுள்ளன.

### 15. முதலீடு செய்வதற்கான விதிமுறைகளை தளர்த்துதல்.

சிறிய தொழில்முனைவோர்கள் முதலீடு செய்வதை ஊக்குவிப்பதற்கும், முன்னுரிமைத் துறைகளில் வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கும், நிறுவப்பட்ட திறனளவை முழுவதும் பயன்படுத்திக் கொள்வதற்கும் தொழில்துறை 'லைசென்ஸ்' கொள்கை தளர்த்தப்பட்டுள்ளது. தொழில்களின் முதலீட்டு அளவை உயர்த்துவதற்கு மற்ற பல்வேறு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. 1974-ஆம் வருடத்திய கம்பெனிகள் (டிவிடெண்டுகள் மீதான தாற்காலிகக் கட்டுப்பாடு) சட்டத்தின் திருத்தம், போனஸ் பங்குகளை வழங்குவதற்கான 'விரைவுச் சோதனை'களின் தளர்ச்சி, வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் முதலீடு செய்வதை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் ஆகியவை அவற்றில் அடங்கும். இறக்குமதி ஏற்றுமதிக் கொள்கைகள் தளர்த்தப்பட்டுள்ளன. இறக்குமதி ஏற்றுமதி வசதிகள் சம்பந்தப்பட்ட பொருளாதாரக் குற்றங்களுக்கு அதிகக் கடுமையான தண்டனைகளை விதிப்பதற்கான இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.



### 16. தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் பங்கு கொள்ளும் புதிய திட்டம்.

தொழிற்சாலைகளில், விற்பனை கொள்முதல் மட்டத்திலும், நிர்வாக அளவிலும் தொழிலாளர்கள் பங்கேற்பதற்கான புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இதன் பலனாக நாட்டின் தொழில்துறை நிலவரத்திலும், தொழில்துறை உறவுகளிலும் குறிப்பிடத்தக்க மேம்பாடு எய்தப்பட்டுள்ளது. பொருளாதாரத்தின் பல்வேறு முக்கியத்துறைகளின் உற்பத்தி இதன் காரணமாக அதிகரித்துள்ளது. இது, தொழில்துறை-பொருளாதார வளர்ச்சிக்கு நேரடிப் பலன் தந்துள்ளது.

### 17. சாலைப் போக்குவரத்துக்குத் தேசிய அனுமதித் திட்டம்.

1931-ஆம் வருடத்திய, மோட்டார் வாகனங்கள் சட்டத்தைத் திருத்தியமைத்ததன் மூலம் சரக்கு வாகனங்களுக்கான தேசிய அனுமதித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நாடு முழுவதிலுமோ அல்லது ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட தொடர்ந்த மாநிலங்களிலோ இப்பொழுது சரக்கு வண்டிகள் சரக்குகளை ஏற்றிச் செல்ல முடியும். முன்னாள் ராணுவ வீரர்கள், வேலையில்லாத காரோட்டிகள் ஆகியோர் உட்பட புதிய தொழில்முனைவோர்களுக்கு தேசிய அனுமதிகளில் 25 சதவிகித அளவை ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 18. விடுதிகளில் மாணவர்களுக்கு கட்டுப்படுத்தப்பட்ட விலைகளில் இன்றியமையாப் பண்டங்களைக் கொடுத்தல்; மற்றும்



### 19. புத்தகங்களும், எழுதும்பொருட்களும் நியாய விலைக்குக் கிடைக்கச் செய்தல்.

இளைஞர்கள், குறிப்பாக மாணவர்கள் 20-அம்சத்திட்டத்தின்கீழ் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டுள்ளார்கள். மாணவர் விடுதிகள் அல்லது பல்கலைக்கழகங்கள் அல்லது கல்லூரிகள் மூலமாக மாணவர்களுக்கு இன்றியமையாப் பண்டங்களைக் கட்டுப்படுத்தப்பட்ட விலைகளில் அதிகமாக விநியோகிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பாடப் புத்தகங்களும், பயிற்சிப் புத்தகங்களும் முன்னைவிட இப்பொழுது மிகச் சுலபமாகக் கிடைக்கின்றன. சலுகை விலைகளில் வெள்ளை அச்சுக்காகிதங்கள் விநியோகம் செய்யப்படுவதன் காரணமாக பாடப்புத்தகங்களின் விலைகளைக் குறைக்க முடிந்துள்ளது. ஏழை மாணவர்களுக்கு, குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடிப் பிரிவினர், சமுதாயத்தில்

(தொடர்ச்சி 41 -ம் பக்கம் பார்க்கவும்)



# நலிவுற்றோர் நலம் காக்க தமிழ்நாடு அரசு இட்டுள்ள கட்டளைகள்!

குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்பட்ட பிறகு, தமிழ்நாட்டில் இருபது அம்சத் திட்டம் தீவிரமாக நிறைவேற்றப்படுவதால், சமுதாயத்தில் நலிவடைந்தவர்களின் நலன்கள் நியாயமான முறையில் கவனிக்கப்பட்டு வருகின்றன. கொத்தடிமை ஒழிப்பு முறை, அரிசனங்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்குதல், விவசாயிகளின் குறைந்த பட்ச ஊதியம் உயர்த்தப்பட்டது முதலிய திட்டங்கள் அனைத்தும் நலிவடைந்தோருக்கு உதவுவதற்காகவே தீட்டப்பட்டதாகும். இத்திட்டங்களை நிறைவேற்றும் பொழுது கிராமப்புறங்களில்உள்ள சில சுயநலக்காரர்களின் எதிர்ப்புச் சக்திகளால் இடையூறுகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. இத்தகைய எதிர்ப்புகள் அரிசனங்களையும் மற்றும் நலிவடைந்தோர்களையும் அச்சுறுத்தும் பாங்கில் அமையலாம். கிராமப்புறங்களில் உள்ள அரிசனங்கள் மற்றும் நலிவடைந்தவர்களுக்கு ஏற்படும் இடையூறுகளைக் கண்காணித்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், காவல் துறை அலுவலர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், காவல் துறையினருக்கும் இந்த நிலைமையைச் சமாளிப்பதற்குத் தேவையான எல்லா அதிகாரங்களும் உள்ளன. தீண்டாமையை ஒழிப்பதில் மிகுந்த கவனம் செலுத்துமாறு காவல் துறையினருக்கு முன்பே அறிவிக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த போதிலும், தொன்றுதொட்டுக் கிராமங்களில் நிலவி வந்துள்ள பழக்க வழக்கங்களை அறவே நீக்குவது என்பது எளிதல்ல! அரிசனங்கள் அச்சுறுத்தப்பட்ட சில நிகழ்ச்சிகள், அண்மையில் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. இத்தகைய நிகழ்ச்சிகள் முன்பு இருந்ததை விட தற்பொழுது குறைவாக இருந்தாலும், குடியரசுத் தலைவர் ஆட்சியும், இருபது அம்சத் திட்டமும், அரிசனங்கள் மற்றும் நலிந்தோர்களின் நலனைப் பேணுவதில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், காவல் துறையினருக்கும் சிறப்பான பொறுப்பினை ஏற்படுத்தியுள்ளன. எனவே, அரிசனங்களிடமிருந்து வரும் புகார்கள் உடனுக்குடன் ஆய்வு செய்யப்பட வேண்டும். எங்காவது அரிசனங்களோ மற்ற நலிவடைந்த சமுதாயத்தினரோ அச்சுறுத்தப்படுவது விசாரணையின் வாயிலாக வெளிப்பட்டால், அதற்குக் காரணமாக இருந்தவர்கள்,

மீது 'உடனுக்குடன் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அந்துடன் அந்தப் பகுதியில் வசிக்கும் மக்களிடையே, '**அரிசனங்களுக்கும், நலிவடைந்தோருக்கும் அநீதி விளைவித்தால், கடுமையான தண்டனைக்கு உள்ளாவோம்**' என்ற எண்ணம் ஏற்படும் வகையில் மேல்நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும்.

தீண்டாமை ஒழிப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றுவதில் உள்ள சங்கடங்களில் ஒன்று, சார்நிலைப் பணியாளர்கள் சம்பிரதாய கௌரவம் மற்றும் முறைகளினூடே ஒன்றியிருப்பதாகும்! எனவே, அரிசனங்களுக்கும் சமுதாயத்தில் நலிவடைந்தவர்களாக உள்ளவர்களுக்கும் போதிய பாதுகாப்பு அளிக்கும் உணர்வுக்கு, தவறான எண்ணம் மற்றும் சார்நிலைப் பணியாளர்களுக்கும் உள்ளூர் சுயநலக்காரர்களுக்கும் இடையே உள்ள பிணைப்பும் ஆகியவை குறுக்கே நிற்காமலிருக்க, குறிப்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். கொத்தடிமைகளை விடுவிக்கும் பொழுது சில எதிர்ப்புகளும், பின் விளைவுகளும் வருவதை எதிர்நோக்க வேண்டியுள்ளது. ஆகவே, கொத்தடிமை முறையானது பின்வாசல் வழியாக வந்து, மீண்டும் தலைதூக்கி விடாமலிருக்க சிறப்புக் கவனம் செலுத்துதல் மிக மிக அவசியமாகும்.

அரசியல் காரணங்களுக்காக நலிவடைந்த சமுதாயத்தினரைப் பயன்படுத்தும் சில சுயநலச் சக்திகளும் இருந்துதான் வருகின்றன. இம்மாதிரியான நிலையில், நலிவடைந்தோர்களின் நலன் பாதிக்கப்படாமலும், அதே சமயத்தில் அவர்கள் சுரண்டப்பட்டுவிடாமலும் நிலைமையை உறுதியாகவும், தந்திரமாகவும் சமாளிக்க வேண்டும். ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர்களும், கோட்டாட்சியர்களும் வட்டாட்சியர்களும் மற்றும் காவல் துறை அலுவலர்களும் அமைதியை நிலைநாட்டுவதுடன் மட்டும் நின்றுவிடாமல், அதற்கு மேலும் தீவிரமாகப் பணியாற்றி நலிவடைந்த மக்களிடையே '**நம்பிக்கை மற்றும் தங்களுக்குப் பாதுகாப்பு உள்ளது என்ற உணர்வு**' ஆகியவற்றை ஏற்படுத்த வேண்டும். அப்படி செய்வதே நலிவடைந்த மக்கள், சுயநலகாரர்களின் சூழ்ச்சிக்குப் பலியாகாமல் இருக்கவும், சச்சரவுகளை ஏற்படுத்தும் கருவியாக அவர்கள் பயன்படாமல் இருக்கவும் வழிவகுக்கும்.

# குழந்தைக்குத் தேவை சத்தான உணவு
# பயிருக்குத் தேவை விஜய்

குழந்தையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவும் சத்துணவைப்போலவே பயிர்களும் நன்கு வளர்ந்து முழுப் பலனையும் தர தழை, மணி, சாம்பல் சத்துக்கள் அவசியம்.

ஆனால் நெற்பயிருக்கு தழைச்சத்தைத்தரும் யூரியாவை மட்டும் இட்டால போதுமானது எனக் கருதக்கூடும். அவ்வாறு யூரியாமட்டும் இட்டால் பயிர்கள் பூச்சிகளால தாக்கப்படும். வறட்சியைத் தாங்காது. மேலும் நாளடைவில் மண்ணின் தன்மைகெட்டு விளைச்சலும் குறையும்.

தழைச்சத்துடன் மணி, சாம்பல் சத்துக்களை இடுவதுதான் லாபகரமானது என ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன:—

நெல் (ஏக்கருக்கு)

| உரம் | சாகுபடி செலவு ரூ. | விளைச்சல் (மூட்டை 75 கிலோ) | வருவாய் (1 மூட்டை 60 ரூ. விகிதம்) |
|---|---|---|---|
| 40 கிலோ தழைச்சத்து மட்டும் | 1040 | 18 | 1080 |
| 40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து | 1180 | 23 | 1380 |
| 40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து 20 கிலோ சாம்பல்சத்து | 1215 | 30 | 1800 |

இவ்வாறு மூன்று சத்துக்களையும் இடும் போது கூடுதல் செலவு ரூ. 175க்கு அதிக வருவாய் ரூ. 720 கிடைக்கிறது.

அதிக வருவாய் தரும் தழை, மணி, சாம்பல் சத்துக்களை சமச்சீர் அளவில் கொண்டது விஜய் 17-17-17. இத்துடன் விஜய் யூரியாவையும்.உங்கள் நெற்பயிருக்கு உபயோகித்து அதிகப்பயன் பெறுங்கள்.

மேலும் விவரங்களுக்கு கீழ்கண்ட முகவரிக்கு எழுதுங்கள்:
ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், திருச்சி 620 017






MFL-1162




# ஊட்டச் சத்துணவு பெற
# வீட்டுத் தோட்டம்
# அமைத்திடுங்கள்!

(சென்ற இதழ் தொடர்ச்சி)

— ஆர். மாணிக்கம்

*வீட்டுத் தோட்டம் அமைக்கப் போதிய இடம் இல்லை என்றால் என்ன செய்வது?*

5 பேர் கொண்ட குடும்பத்திற்கு வீட்டுத் தோட்டம் அமைக்க 5 சென்ட் நிலம் தேவை என்ற விகிதப்படி காலி இடம் இல்லை என்றாலும், பெரும்பாலான வீடுகளின் பின்புறத்தில் மிகக் குறைந்தது 100 சதுர அடி பரப்பு இடமாவது காலியாக (வெறுமனே) கிடக்கிறது. அந்தக் காலி இடங்களில் கீழே படத்தில் கண்டபடி வீட்டுத் தோட்டம் அமைக்கவும்.

*100 சதுர அடி மாதிரி வீட்டுத் தோட்டம் அமைக்கும் முறை:*

படத்தில் குறிப்பிட்டுள்ளது போல், நிலத்தைச் சுற்றிலும் மூங்கிலால் செய்யப்பட்ட வேலி ஒன்றை அமையுங்கள். இவ்வேலியில் பசலை, பாகல், பீர்க்கு, தொண்டங்காய் முதலிய கொடி வகைக் காய்கறிச் செடிகளைப் படர விடுங்கள்.

4 அடி நீளமும், 4 அடி அகலமும் கொண்ட 4 பாத்திகளை அமையுங்கள், அப்பாத்திகளை முன்பே குறிப்பிட்டுள்ளதுபோல் தயார் செய்யுங்கள்.

நிலத்தின் நடுவில் 2 அடி அகலத்திற்கு நடைபாதை அமையுங்கள். நடைபாதையின் இருபுறத்திலும் ஓரங்களில் கொத்தமல்லி, வெந்தயம், புதினா முதலியவைகளைப் பயிரிடுங்கள்.

நிலத்தின் குறுக்காகச் செல்லும் அடுத்த நடைபாதையின் இருபுறத்திலும் முள்ளங்கியை பயிரிடுங்கள். முள்ளங்கி விதை களை 1 அடி இடைவெளிக்கு ஒ ருக நடுங்கள்.




அல்லது படத்தில் கண்டுள்ள போல் தக்காளிக் கன்றுகளை நடவு செய்து, கம்புகள் அல்ல குச்சிகளுடன் இணைத்துக் க டுங்கள்.

100 சதுர அடி பரப்புள் வீட்டுத் தோட்டத்திலிருந் ஆண்டு முழுவதும் தொடர்ந் காய்களைப் பெற, 4 பாத்திக ளும் அட்டவணை-3-இல் கண் படி பயிரிடுங்கள்.

ஏறத்தாழ எல்லா வீடுகளிலு வீட்டுத் தோட்டம் போட குறைந்தது 100 சதுர அடி இட கிடைக்குமாதலின், 100 சது அடியில் பயிரிடுவதற்கு ஏற் முக்கிய காய்கறிகள், அவைக விதைக்கும் காலம், அறுவை செய்யும் காலம், மகசூல் ஆகி வைகளை அட்டவணை-4-இல் வி வாகவும், விளக்கமாகவும் குறி பிடப்பட்டுள்ளது.

அட்டவணை—3.

| பாத்தி எண் | பருவம் | காய்கறிகளின் பெ |
|---|---|---|
| பாத்தி 1 | ஜூன்—ஜூலை | கீரை வகைகள் |
| | ஆகஸ்டு—நவம்பர் | வெண்டை |
| | டிசம்பர்—பிப்ரவரி | வெங்காயம் |
| | மார்ச்—ஜூன் | கத்தரி |
| பாத்தி 2 | ஜூன்—செப்டம்பர் | வெண்டை |
| | அக்டோபர்—மார்ச் | கத்தரி |
| | பிப்ரவரி—மார்ச் | கீரை வகைகள் |
| | ஏப்ரல்—மே | முள்ளங்கி |
| பாத்தி 3 | ஜூன்—செப்டம்பர் | தக்காளி |
| | அக்டோபர்—டிசம்பர் | முள்ளங்கி |
| | ஜனவரி—பிப்ரவரி | கீரை வகைகள் |
| | மார்ச்—ஜூன் | வெண்டை |
| பாத்தி 4 | ஜூன்—செப்டம்பர் | கத்தரி |
| | அக்டோபர்—நவம்பர் | கீரை வகைகள் |
| | டிசம்பர்—நவம்பர் | வெண்டை |
| | ஏப்ரல்—ஜூன் | காராமணி |



அட்டவணை—1

# 100 சதுர அடி பரப்பில், காய்கறி பயிரிடுவதற்கான குறிப்புகள்



| காய்கறிகளின் பெயர் | நடும் முறை | 100 சதுர அடிக்கு விதை அளவு (சுமாராக) | செடிக்குச் செடி விட வேண்டிய இடைவெளி | வரிசைக்கு வரிசை விட வேண்டிய இடைவெளி | விதைப்பதற்கும், நடுவதற்கும் ஏற்ற பட்டம் | அறுவடை காலம் | வயது | 100 சதுர அடிக்கு இட வேண்டிய எரு, உரங்கள் | 100 சதுர அடியில் விளையக்கூடிய காய்களின் எடை | பயிரிடுவதற்கு ஏற்ற சிறந்த ரகங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
| கத்தரி | மேடான பாத்திகளில் மணலோடு விதைகளைக் கலந்து விதைக்கவும். ஒரு மாத வயதான நாற்றுகளை நடவும். | 0.3 முதல் 0.4 கிராம் தேவை. ஆனால் ஒரு கிராம் விதைப்பது சிறந்தது. | 60 செ.மீ. (2 அடி) | 75 செ.மீ. (2½ அடி) | ஆண்டு முழுவதும் பயிரிடலாம். 1. ஜூன்-ஜூலை, 2. பிப்ரவரி-மார்ச்சு விதைப்பு அதிக மகசூல் கொடுக்கும், | நட்ட 50 நாட்களில் முதல் காய்ப்பு அறுவடைக்கு வரும். | 3 முதல் 7 மாதங்கள் | நடுவதற்குமுன்னர் 25 கிலோ தொழு எரு, 230 கிராம் அமோனியம்சல்பேட், 275 கிராம் சூப்பர் பாஸ்பேட், 50 கிராம் மியூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகிய உரங்களை அடியுரமாக இடவும். நடவு செய்த 3 வாரம் கழித்து 115 கிராம், 6 வாரம் கழித்து 115 கிராம் அமோனியம் சல்பேட்டை மேலுரமாக வைத்து மண் அணைத்துத் தண்ணீர் விட வேண்டும். | 20 முதல் 36 கிலோ | பூசா நீண்ட ஊ, பூசா உருண்டை, கொத்து வெ (எஸ். எம். 62), கறுப்பு அழகு, ஊதா நீளம் (எஸ். எம். 60), வரிக் கத்தரிக்கா (எஸ். எம். 68). |
| தக்காளி | ,, | ,, | 60 செ.மீ. (2 அடி) | 75 செ.மீ. (2½ அடி) | 1. பிப்ரவரி-மார்ச்சு, 2. ஜூலை-ஆகஸ்ட், 3. அக்டோபர்-நவம்பர் | நட்ட 60 நாட்களில் முதல் காய்ப்பு அறுவடைக்கு வரும். | 3.5 முதல் 5 மாதங்கள் | அடியுரமாக 25 கிலோ தொழு எரு, 230 கிராம் அமோனியம் சல்பேட், 460 கிராம் சூப்பர் பாஸ்பேட், 70 கிராம் மியூரியேட் ஆஃப் பொட்டாஷ் ஆகியவைகளை இடவும். 4 வாரம் கழித்து 230 கிராம் அமோனியம் சல்பேட்டை மேலுரமாக இட்டு மண் அணைத்துத் தண்ணீர் விடவும். | 24 முதல் 30 கிலோ | கோ. 1 தக்காளி கோ. 2 தக்காளி பூசா ரூபி, பாண்டு ரோசா, மார் குளோப், 'ஆர்.டி.இ.சி'–1, மார்ட்டன், பெஸ்ட் ஆஃப் ஆ மீருட்டி, ஆக்ஸ்ஹார்ட். |
| மிளகாய் | ,, | ,, | 45 செ.மீ. (1.5 அடி) | 60 செ.மீ. (2 அடி) | 1. மே-ஜூன்; 2. ஆகஸ்ட்-செப்டம்பர்; 3. டிசம்பர்-ஜனவரி | நட்ட 2 மாதத்திற்குப் பின்னர் முதல் மகசூல் கிடைக்கும். | 7 முதல் 8 மாதங்கள் | அடி உரமாக 25 கிலோ தொழு உரு, 250 கிராம் சூப்பர் பாஸ்பேட், 60 கிராம் மியூரியேட் ஆஃப் பொட்டாஷ் இடவும். மேல் உரமாக நட்ட 30-வது, 50-வது, 75-வது நாட்களில் 115 கிராம் அமோனியம் சல்பேட் இடவும். | 10 முதல் 12 கிலோ | கோவில்பட்டி -1 (கே. 1) கோவில்பட்டி-2 (கே. 2), பி. 24, ஏ. 2, என். பி. 46-ஏ, ஜி.1, ஜி.2. |





| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வெண்டை | பார்களில் விதையை ஊன்றவும். | 6 கிராம் | 30 செ.மீ. (1 அடி) | 60 செ.மீ. (2 அடி) | எல்லாக் காலங்களிலும் பயிரிடலாம்— 1. ஜூன்-ஜூலை, 2. பிப்ரவரி-மார்ச, விதைப்பு அதிக மகசூல் கொடுக்கும். | விதை ஊன்றிய 40 நாட்களுக்குப் பின்னர் காய் பறிக்கலாம். | 3 முதல் 4 மாதங்கள் | அடியுரமாக 25 கிலோ தொழு எரு, 100 கிராம் கிராம் சூப்பர் பாஸ்பேட், 50 கிராம் மியூரிபேட் ஆஃப் பொட்டாஷ் இடவும். 4 வாரம் கழித்து 100 கிராம் அமோனியம் சல்பேட்டை மேலுரமாக இடவும். | 6 முதல் 12 கிலோ | பூசா சவானி, சிவப்பு வெண்டை, இந்தியன் வெண்டை, வெள்ளை வெல்வெட் |
| காராமணி (தட்டைப் பயறு) | பாத்திகளில் விதைகளை வரிசையாக விதைக்கவும். | 32 கிராம் | 75 செ.மீ. (2.5 அடி) | 90 செ.மீ. (3 அடி) | 1. ஏப்ரல்-மே, 2. ஜூலை-ஆகஸ்ட், 3. நவம்பர்-டிசம்பர். | 4 முதல் 6 வாரங்கள் | 4 மாதங்கள் | கத்தரிக்குச் செய்வது போல் அடி உரம் இடவும். | 3 முதல் 4 கிலோ | கோ. 1; கோ. 2, இ.சி. 455, இ.சி.419 பூசா பால்குனி. |
| அவரை | குழியில் விதைகளை ஊன்ற வேண்டும். பந்தல் தேவை. | 5 விதைகள் | ... | 10 அடி | ஜூலை—ஆகஸ்ட். | நட்ட 60 நாட்களுக்குப் பின்னர் மகசூல் கிடைக்கும். | 6 முதல் 8 மாதங்கள். | விதை ஊன்றுவதற்கு முன்பு அடி உரமாக குழிக்கு 25 கிலோ தொழு எரு அல்லது கம்போஸ்ட், 115 கிராம் அமோனியம் சல்பேட், 290 கிராம் சூப்பர் பாஸ்பேட் இடவேண்டும். பூப் பூக்கும் பொழுது 10 கிலோ தொழு எரு இட வேண்டும். | 8 முதல் 10 கிலோ. | கோ.2, கோ. 3, கோ. 4, கோ. 5. |
| ஒட்டு விரிய அவரை | வரிசை வரிசையாக விதைகளை ஊன்றவும். பந்தல் தேவை இல்லை. | 100 விதைகள் (20 கிராம்) | 6 அங்குலம் | 2 அடி | ஆண்டு முழுவதும் விதைக்கலாம். ஆனால் ஜூலை— ஆகஸ்ட் மார்ச்-ஏப்ரல் பருவங்கள் சிறந்தவை. | விதைத்த 45-ஆம் நாள் முதல், காய்கள் கிடைக்கும். | 4 மாதங்கள். | விதைக்கும் முன்பு 25 கிலோ தொழு எரு, 115 கிராம் அம்மோனியம் சல்பேட், 290 கிராம் சூப்பர் பாஸ்பேட்டையும் அடியுரமாக இடவும். | 3 முதல் 6 கிலோ. | கோ.1, கோ. 6, கோ. 7, கோ. 8. |
| கொத்தவரை | விதைகளை வரிசைகளில் ஊன்றவும் | 10 கிராம் | 15 செ.மீ. (6அங்குலம்) | 45 செ.மீ. (1.5 அடி) | (1) ஜூலை—ஆகஸ்ட் (2) ஜனவரி-பிப்ரவரி | ,, | 4 மாதங்கள். | கத்தரிக்கு இடுவது போல் அடி உரம் இடவும். | 5 முதல் 6 கிலோ. | பூசா மௌஸ்மி, பூசா நௌபஹார். |
| புடல் | குழியில் விதைகளை ஊன்ற வேண்டும். பந்தல் தேவை. | 5 விதைகள் | ... | 8 அடி | (1) ஜூலை-ஆகஸ்ட் (ஆடிப்பட்டம்) (2) ஜனவரி-பிப்ரவரி (தைப்பட்டம்) | விதைத்த 50 நாளில் அறுவடைக்கு வரும். | 5 மாதங்கள் | குழிக்கு 25 கிலோ தொழு எருவையும், 100 கிராம் 6:12:12 கலப்பு உரத்தையும் அடி உரமாக இடவும். விதை ஊன்றிய 30-ஆம் நாள் குழிக்கு 0.5 கிலோ அமோனியம் சல்பேட் இடவும். பூப் பூக்கும் பொழுது 10 கிலோ தொழு எரு இடவும். | 10 முதல் 16 கிலோ. | ஆடுதுறை நீளம், நீண்ட பச்சை, நீண்ட வெள்ளை, கோடுகளுடன் கூடிய நீண்ட பச்சை, கே. எம். 1, குட்டைப் புடல் (பன்றிப் புடல்) கோடைப் பருவத்திற்கு ஏற்றது. |
| பாகல் | ,, | ,, | ... | 8 அடி | ,, | ,, | 5 மாதங்கள். | ,, | 5 முதல் 10 கிஜோ. | ஆடுதுறை நீண்ட பச்சை, நீண்ட வெள்ளை. |
| பீர்க்கு | ,, | ,, | ... | 8 அடி | ,, | ,, | 5 மாதங்கள். | ,, | 6 முதல் 12 கிளோ. | அதி நீள உயர் ரகப் |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | பறங்கி | குழியில் விதைகளை ஊன்ற வேண்டும். பந்தல் தேவை இல்லை. | 5 விதைகள் | ,, | 10 அடி | (1) ஜூலை-ஆகஸ்ட் (2) ஜனவரி-பிப்ரவரி | விதைத்த 120 நாட்களில் அறுவடைக்கு வரும். | 6 முதல் 8 மாதங்கள். | புடலைக்குச் செய்ததுபோல அடி உரம் இடவும். விதைத்த 45வது நாள் 0.5 கிலோ அமோனியம் சல்பேட்டை மேலுரமாக இடவும். | 4 முதல் 5 காய்கள். | கோ. 1 பறங்கி, கோ. 2 பறங்கி. |
| 13 | பூசணி | ,, | ,, | ... | ,, | ,, | விதைத்த 90 நாட்களில் அறுவடைக்கு வரும். | 4 முதல் 6 மாதங்கள். | ,, | ,, | கோ. 1 பூசணி. |
| 4 | சுரைக்காய் | ,, | ,, | ... | 8 அடி | (1) ஜூன்-ஜூலை (2) டிசம்பர்-ஜனவரி | விதைத்த 80 நாளில் அறுவடைக்கு வரும் | 6 மாதங்கள். | ,, | 12 முதல் 16 கிலோ வரை | துடியலூர் ரகம் |
| 5 | முட்டைக் கோஸ் | கத்தரி போலவே நாற்று விட்டு நட வேண்டும் | 1 கிராம்  | 60 செ.மீ. (2 அடி) | 75 செமீ. (2.5 அடி) | சமவெளிகளில் அக்டோபர் மாதங்களிலும், மலைப் பிரதேசங்களில் மார்ச் மாதங்களிலும் விதைக்கலாம். | நட்ட 45 நாட்களில் முதல் அறுவடை. | 4 மாதங்கள் | 25 கிலோ தொழு எரு, 75 கிராம் அமோனியம் சல்பேட், 230 கிராம் சூப்பர் பாஸ்பேட், 185 கிராம் பொட்டாஷ் ஆகியவைகளை அடி உரமாக இடவும். நட்ட 30-வது, 60-வது நாட்களில் 75 கிராம் அமோனியம் சல்பேட்டை மேலுரமாக இடவும். | 20 முதல் 30 கிலோ. | ஏர்லிட்ரம் ஹெட், கோல்டன் ஏக்கர், ஓ. எஸ். கிராஸ், பூசா டிரம் கெட், பிரைட் ஆப் இந்தியா. |
| 6 | காலிஃப்ளவர் | ,, | ,, | ,, | ,, | ,, | நட்ட 85 நாளில் முதல் அறுவடை செய்யலாம். | 4 முதல் 5 மாதங்கள். | ,, | 16 முதல் 24 கிலோ. | ஸ்னோபால், பூசா கட்கி, எர்லி பாட்னா. |
| 7 | பீட் ரூட் | விதைகளை வரிசைகளில் ஊன்றவும் | 5 கிராம் | 10 செமீ. (4 அங்.) | 45 செமீ. (1.5 அடி) | ,, | விதைத்த 90 நாட்களில் அறுவடை செய்யலாம். | 3.5 முதல் 4 மாதங்கள். | 25 கிலோ தொரு எழு, 60 கிராம் அமோனியம் சல்பேட், 150 கிராம் சூப்பர் பாஸ்பேட், 165 கிராம் பொட்டாஷ் ஆகியவைகளை அடி உரமாக இடவும். | 16 முதல் 20 கிலோ. | கிரிம்சன்குளோப், டெட்ராயட் கருஞ் சிவப்பு. |
| 8 | கேரட் | ,, | ,, | ,, | ,, | | விதைத்த 3 மாதத்திற்கு பின்னர். | 3.5 முதல் 4 மாதங்கள். | ,, | 16 முதல் 20 கிலோ. | லேட் நான்டிஸ், பூசா கேசன். |
| 19 | முள்ளங்கி | ,, | ,, | 15 செமீ. (0.5 அடி) | 30 செ.மீ. (1 அடி) | ஆண்டு முழுவதும் | விதைத்த 40 நாட்களில் அறுவடை செய்யலாம். | 1.5 முதல் 2 மாதங்கள். | பீட்ரூட்டுக்குச் செய்வது போலவே உரமிடவும் | 20 முதல் 30 கிலோ | வெள்ளை முள்ளங்கி (எச். 113), சிவப்பு முள்ளங்கி, பூசா ராஷ்மி. |
| 0 | டர்னிப் | விதைகளை வரிசையில் ஊன்றவும் | 5 கிராம் | 10 செ.மீ. (4 அங்) | 45 செ.மீ. (1.5 அடி) | (1) ஆகஸ்ட்-செப். (2) அக்-நவம்பர். (3) ஜன-பிப்ரவரி. | விதைத்த 90 நாளில் அறுவடை செய்ய | 3 முதல் 4 மாதங்கள் | பீட் ரூட்டுக்குச் செய்வது போலவே உரமிடவும். | 9 முதல் 12 கிலோ. | பர்பிள் டாப், ஒயிட் குளோப், பூசா காஞ்சன். |
| 1 | கீரைகள் | 6 அடிக்கு 6 அடி பாத்திகளில் விதைக்கவும் | 2 கிராம்  | 10 செ.மீ. (4 அங்) | 45 செ.மீ. (1.5 அடி) | ஆண்டு முழுவதும் விதைக்கலாம். | விதைத்த 40 நாளில் அறுவடைக்கு வரும். | 3 மாதங்கள் | விதைப்பதற்கு முன் 25 கிலோ தொழு எரு அல்லது கம்போஸ்ட், 275 கிராம் சூப்பர் பாஸ்பேட், 115 கிராம் அமோனியம் சல்பேட், 60 கிராம் மியூரியேட் ஆஃப் பொட்டாஷ் உரமிடவும். | வாரத்திற்கு 4 கிலோ. | கோ. 1 தண்டுக்கீரை, அரைக்கீரை, சிறுகீரை, பருப்புக்கீரை, முளைக்கீரை. |
| 2 | சமவெளிக்கு ஏற்ற உருளைக் | பார்களில் நடவும் | 1 கிலோ முளை விட்ட கிழங்கு | 20 செமீ. (8 அங்) | 60 செ.மீ. (2 அடி) | (1) ஏப்ரல்-மே, (2) செப்டம்பர், (3) பிப்ரவரி. | விதைத்த 110 நாட்களில் அறுவடை செய்யலாம். | 110 முதல் 120 நாட்கள் | 25 கிலோ தொழு எரு. 460 கிராம் அமோனியம் சல்பேட், 1,400 கிராம் சூப்பர் பாஸ்பேட், 140 கிராம் மியூரியேட் ஆஃப் பொட்டாஷ் ஆகியவைகளை அடியுரமாக இட வேண்டும். | 10 முதல் 12 கிலோ. | கோ - சிம்லா. |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 23 | நூல்கோல் | நாற்று விட்டு 20 முதல் 25 நாட்கள் வயதுடைய நாற்று நடவும். | 2 கிராம் விதைகளை நாற்று விடவும் | 20 செமீ. (8 அங்) | 30 செ.மீ. (1 அடி) | (1) ஆகஸ்ட்-செப்டம்பர். (2) அக்டோபர்-நவம்பர். | 90 நாட்களில் அறுவடைக்கு வரும். | 90 முதல் 100 நாட்கள். | 25 கிலோ தொழு எரு. 60 கிராம் அமோனியம் சல்பேட், 150 கிராம் சூப்பர் பாஸ்பேட், 165 கிராம் ஆஃப் பெட்டாஷ் ஆகியவைகளை அடியுரமாக இடவும். | 18 முதல் 24 கிலோ. | வெள்ளை வியன்னு ஊதா வியன்னு. |
| 24 | பீன்ஸ் | பாத்திகளில் அல்லது பார்களின் சரிவில் (அ) வரப்பு ஓரங்களில் ஊன்றலாம் | 400 கிராம் | 20 செ.மீ. (8 அங்) | 60 செ.மீ. (2 அடி) | ஆண்டு முழுவதும் பயிரிடலாம். அக்டோபர்-நவம்பர் விதைப்பு அதிக மகசூல் தரும் | நட்ட 100 நாட்களில் அறுவடை செய்ய (சில குறுகிய காலரகங்கள் நடவுசெய்த 40 நாட்களிலேயே மகசூல் தருகின்றன.) | 4 மாதங்கள். | 25 கிலோ தொழு எரு. 1 கிலோ 6:12:12 கலப்பு உரத்தை அடியுரமாக இட வேண்டும். | 8 முதல் 10 கிலோ. | கண்டெண்டர், கென்டக்கிவொண்டர். |
| 25 | வெள்ளரி | குழியில் விதைகளை ஊன்றவும். (ஒரு குழிக்கு 5 விதைகள்) | 5 கிராம் | 6 அடி | 6 அடி | (1) ஜூலை-ஆகஸ்ட் (2) ஜனவரி-பிப்ரவரி | நட்ட 75 நாட்களில் அறுவடைக்கு வரும் | 4 மாதங்கள். | குழிக்கு 25 கிலோ தொழு எரு, 100 கிராம் 6:12:12 கலப்பு உரத்தை நடுவதற்கு ஒரு வாரம் முன்பு இடவும். | 15 முதல் 20 காய்கள். | ... |
| 26 | சௌ-சௌ | வேலிகளின் ஓரத்தில் நட்டுப் படர விடலாம் அல்லது பந்தலில் படர விடலாம். | குழிக்கு 2 முளை விட்ட காய்களை நட வேண்டும் | 10 அடி | 10 அடி | ஜூன்-ஜூலை. | நட்ட 9 முதல் 10 மாதங்களில் அறுவடைக்கு வரும். | 2 முதல் 3 ஆண்டுகள் | குழிக்கு 25 கிலோ தொழு எரு, 100 கிராம் 6:12:12 கலப்பு உரத்தை நடுவதற்கு ஒரு வாரம் முன்பு இடவும். பிறகு 6 மாதங்களுக்கு ஒரு முறை ஒவ்வொரு குழிக்கும் 50 கிராம் அமோனியம் சல்பேட்டை மேலுரமாக இடவும். | ஒரு கொடியில் 20 கிலோ (அ) 200 காய்கள் கிடைக்கும். | ... |
| 27 | பெல்லாரி வெங்காயம் | நாற்று விட்டுப் பார்களின் இருபுறமும் அல்லதுபாத்திகளில் நடவும். | 4 கிராம் | 10 செ.மீ. (4 அங்) | 10 செ.மீ. (4 அங்) | 1. ஜூன்-ஜூலை. 2. டிசம்பர்-ஜனவரி. | 1. அக்டோபர்-நவம்பர் 2. மே-ஜூன். | 5 முதல் 6 மாதங்கள். | நடுவதற்கு முன் 24 கிலோ தொழு எரு இடவும். 140 கிராம் அமோனியம் சல்பேட், 175 கிராம் சூப்பர் பாஸ்பேட், 50 கிராம் பொட்டாஷ்ஆகியவற்றை அடியுரமாக இடவும். நட்ட ஒரு மாதத்திற்குப் பின், 140 கிராம் அமோ யம் சல்பேட் மேலுரமாக இடவும். | 9 முதல் 12 கிலோ. | |
| 28 | நாட்டு வெங்காயம் | ஒரு அடி இடைவெளியில் பார்களை அமைத்து இருபுறமும் நட வேண்டும் அல்லதுபாத்திகளில் நடவும். | 1 கிலோ வெங்காயம் | 10 செ.மீ. (4 அங்) | 10 செ.மீ. (4 அங்) | ஆண்டு முழுவதும் பயிரிடலாம். 1. ஏப்ரல்-மே, 2. அக்டோபர்-நவம்பர். விதைப்பு அதிக மகசூல் தரும். | 80 முதல் 90 நாட்கள் | 60 முதல் 90 நாட்கள். | 12 கிலோ தொழு எரு, 140 கிராம் அமோனியம் சல்பேட், 175 கிராம் சூப்பர் பாஸ்பேட், 50 கிராம் மியூரியேட் ஆஃப் பொட்டாஷ் ஆகியவைகளை அடியுரமாக இடவும். 30-வது நாள் 140 கிராம் அமோனியம் சல்பேட்டை மேலுரமாக இடவும். | 9 முதல் 12 கிலோ. | கோ. 1 வெங்காய கோ.2 வெங்காய |
| 29 | மரவள்ளி | 75 செ.மீ. (2.5 அடி) இடைவெளியில் பார்கள் அமைக்கவும் | 16 கரணைகள் | 75 செ.மீ. (2.5 அடி) | 75 செ.மீ. (2.5 அடி) | ஆண்டு முழுவதும் பயிரிடலாம். ஆனால் ஜூன்-ஜூலை, டிசம்பர்-ஜனவரி பருவங்களில் நட்டால் அதிக மகசூல் கிடைக்கும். | 8 முதல் 12 மாதங்கள். | 9 முதல் 12 மாதங்கள். | அடியுரமாக 25 கிலோதொழு எரு, 1.25 கிலோ 6:6:12 கலப்பு உரம் இடவும். நட்ட 2 மாதங்களுக்குப் பிறகு 1.25 கிலோ கலப்பு உரத்தை மேலுரமாக இடவும். | 24 முதல் 32 கிலோ. | மலவெள்ளா, ஆனைக்கொம்பன், எச். 226, எச். 165, எஸ். 2, எஸ். 5, எம். 4. |
| 30 | முருங்கை | வீட்டின் பின்புறத்தில், வேலியோரத் நடலாம். | கிளையின் துண்டுகளை நடவேண்டும் | ... | ... | ஜூலை-ஆகஸ்ட் | நட்ட6 முதல் 7 மாதத்தில் காய்கள் பறிக்கலாம். | பல்லாண்டுகளுக்குப் பயன்தரும். | முதலாண்டில்70 காய்களும், 2 ஆண்டுகளுக்குப் பிறகு 500 காய்களும் கிடைக்கும். | ... | ஜாப்னு முருங்கை |





புத்துணர்வு பெற்ற
புதுமை மிகு நாடு—1975-76

# இளைய பாரதத்தினாய் வா! வா!

■ அவசியப் பண்டங்கள் கன்ட்ரோல் விலையில் 10,490 மாணவ விடுதிகளுக்குக் கொடுக்கப்படுகின்றன. இதனால் 9,56,000 மாணவ மாணவியர் பயன் பெறுகின்றனர்.

■ குறைந்த விலையில் பாடப் புத்தகங்களும், நோட்டுப் புத்தகங்களும் கிடைக்க, சலுகை அடிப்படையில் வெள்ளை அச்சுக் காகிதம் கொடுக்கப்படுகிறது. கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் 88,600 புத்தக வங்கிகள் செயல்படுகின்றன.

■ தொழிற் பயிற்சித் திட்டத்தின் கீழ் புதிதாக 103 வர்த்தகப் பிரிவுகளும், 216 தொழில்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

■ இந்தத் தொழிற் பயிற்சித் திட்டத்தின் மூலம் 18,800 இடங்களைப் புதிதாக சேர்த்துள்ளதால் மொத்த இடம் 1,33,000-மாக உயர்ந்துள்ளது. இவற்றில் 1,28,000 இடங்களுக்குப் பயிற்சியாளர்கள் ஏற்கெனவே அமர்த்தப்பட்டு விட்டனர். அதில் 28,000 (20 சதவிகிதம்) இடங்கள் ஷெட்யூல்டு ஜாதியினர், ஷெட்யூல்டு பழங்குடியினர் மற்றும் பிற்பட்ட சமூகத்தினருக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

davp 76/91



# வரலாற்றுச் சின்னங்களைக் காப்பதில் தமிழக மாணவர்களின் சீரிய பணி

—டாக்டர் இரா. நாகசாமி,
இயக்குநர்
தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறை

நாட்டின் பல பாகங்களிலும் உள்ள வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாக்கவும், தூய்மைப்படுத்தவும் மாணவ இளைஞர் சமுதாயத்தை ஊக்குவிக்க வேண்டும் என்று பாரதப் பிரதமர், நமது அன்பிற்குகந்த திருமதி இந்திரா காந்தி அவர்கள் அளித்துள்ள திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பள்ளி அல்லது கல்லூரி தங்கள் நிறுவனத்துக்கு அருகில் உள்ள வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கோயில், கோட்டை, மசூதி, கல்வெட்டுக்கள், சிற்பங்கள் முதலியவற்றைத் தங்களதாகப் பாவித்துக் கொள்ள வேண்டும். 15 நாட்கள் அல்லது மாதம் ஒரு முறை அங்கு சென்று, அவ்வரலாற்றுச் சின்னங்களையும் அவற்றைச் சுற்றியுள்ள இடங்களையும் தூய்மைப்படுத்த வேண்டும். அந்த வரலாற்றுச் சின்னங்களின் சிறப்பையும், கலை, கல்வெட்டு முதலியவற்றின் பெருமையையும் அறிந்துகொள்ள வேண்டும். அந்தப் பகுதிக்கு வரும் வெளியார்களுக்கு அவற்றின் சிறப்பை, தேவையானால் எடுத்துக் கூறுதல் வேண்டும்.

வரலாற்றுச் சின்னங்களின் மீது கிறுக்கவோ, எழுதவோ, அவற்றுக்கு ஊறுவிளைவிக்கவோ கூடாது என்ற எண்ணத்தை மாணவர்கள் சமுதாயத்தில் நிலவச் செய்தல் வேண்டும். இவை நமது நாட்டின் பண்டைய கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் எடுத்துரைக்கும் செல்வங்கள். இவற்றைக் காத்தல் நமது கடன் என்ற உணர்வு ஒவ்வொருவரிடமும் தோன்றும் வகையில் இதைச் செய்தல்வேண்டும் என்ற கருத்துக்களின் அடிப்படையில் இந்தத் திட்டமானது மேற்கொள்ளப்பட்டு, தமிழ்நாட்டில் இப்பொழுது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன்படி கல்லூரிகள் மற்றும் பள்ளிகளின் மொழி, வரலாறு, பொருளாதாரம் முதலிய துறைகளைச் சார்ந்த ஆசிரியர்களும், பேராசிரியர்களும் மாணவர்களை இச் செயலில் ஊக்குவிக்கக் கேட்டுக் கொள்ளப்பட்டு இருக்கிறார்கள். இது தவிர தமிழ்நாட்டில் ஏராளமான பண்டைய கோயில்களும் அவற்றில் நம்

வரலாற்றை எடுத்துரைக்கும் ... லாயிரக் கணக்கான கல்வெட்... களும் இருக்கின்றன. இவற்... மீது சுண்ணாம்பு, வர்ணங்... முதலியவை பூசப்பட்டுள்ளத... மறைந்து கிடக்கின்றன. ... இடங்களில் இவை உடைந்... இப்பொழுது அகற்றப்பட்டு... டன. பல இடங்களில் த... களில் பாவு கற்கள் ஆகக் ... வெட்டுக்கள் கிடக்கின்றன. ... காறும் படி எடுத்துள்ள ... வெட்டுக்கள் சுமார் முப்ப... யிரம் இருக்கும். இன்னும் ... எடுக்கப்பட வேண்டியவை... முப்பதாயிரத்துக்கு மேற்பட்... கல்வெட்டுக்கள் இருக்கு... இவற்றையும் அந்தந்தப் பகு... மாணவர்கள் உதவி கொண்டு ... எடுக்க ஒரு திட்டத்தைத் த... நாடு அரசு தொல் பொரு... ஆய்வுத்துறை வகுத்துள்ள... இதன்படி மாணவர்கள் கல்வெ... டுக்களைப் படி எடுக்கப் பயி... அளிக்கப்படுகின்றனர்.

கல்வெட்டுக்களின் மீது சு... ணாம்பு, வர்ணம் பூசுவது ... தாயக் குற்றம் ஆகும் என்று



*திருவொற்றியூர் கோயிலில் சோழர் கல்வெட்டுக்கள் மீது படிந்திருந்த சுண்ணும்புக் காரையை வடசென்னை மகளிர் கல்லூரி மாணவிகள் இரசாயனக் கலவையால் தூய்மையாக்கினர்.*

ற்றை மீறுபவர்கள் மீது
ம் நடவடிக்கை எடுக்கப்படும்
றும் இந்து சமய அறநிலைய
ணயர் அவர்கள் அனைத்துக்
யில்களுக்கும் ஆணை பிறப்
துள்ளார்கள். இந்தக் கல்
ட்டுக்களைப் படி எடுக்க ஆகும்
லவுகளை அந்தந்தக் கோயில்
ா மேற்கொள்ளலாம் என்றும்
நிலைய ஆணையர் அவர்கள்
ழ்நாட்டில் உள்ள அனைத்துக்
யில்களுக்கும் உத்தரவு
டுள்ளார்கள். இதன்படி இப்
ாழுது தமிழ்நாட்டில் பல்
று பகுதிகளிலும் மாணவர்கள்
ந்த ஆர்வத்துடனும், உற்
த்துடனும் இந்தப் பணியில்
ற்றுக்கணக்கில் ஈடுபட்டிருக்
ர்கள். 'இதற்கு இதைச்
ய்தல் வேண்டும்', 'இதைச்
ய்தல் கூடாது', 'இப்படிச்
ய்ய வேண்டும்' என எடுத்
ரக்கத் தொல்பொருள்
வுத்துறை தனது செயலகத்
இருந்த கல்வெட்டு ஆய்வா
களையும் அகழ்வாய்வாளர்களை
இப்பணியில் ஈடுபடுத்தி
ற்றைத் தீவிரமாக அமல்
ய்து வருகிறது. தஞ்சை
வட்டத்தில் திருத்துறைப்
ண்டி வட்டத்தில் உள்ள கோயில்
ல் இருந்த கல்வெட்டுக்கள்
தந்தப் பகுதிகளிலேயிருந்த
ணவர்களால் தூய்மைப்
த்தப்பட்டுப் படி எடுக்கப்
டன. வட்டம் முழுவதும் 15
களுக்குள் படி எடுத்து முடித்
ர்.

கும்பகோணத்தில் உலகப்
ழ் வாய்ந்த கீழ்க் கோட்டம்
னும் நாகேசுவர சுவாமி
ாயில் இருக்கிறது. இது கி.பி.
ஆம் நூற்றாண்டில் தோற்று
கப்பட்ட அழகு மிகுந்த

சோழர் காலக் கோயிலாகும். இதில் மிக மிக எழில் வாய்ந்த சிற்பங்கள் இருக்கின்றன. பராந்தக சோழன், இராஜராஜன் முதலிய சோழ மன்னர்களுடைய கல்வெட்டுக்கள் ஏராளமாக இங்கு இருக்கின்றன. இந்தக் கோயிலில் உள்ள அழகிய சிற்பங்களும், கல்வெட்டுக்களும் சுண்ணும்பாலும், புதர்களாலும் மறைந்து கிடந்தன. இவற்றை, குடந்தை 'என். எஸ். எஸ்' மாணவர்கள் சுமார் 80 மாணவர்களும் 60 மாணவியர்களும் சேர்ந்து தூய்மைப்படுத்தினர். இவற்றில் உள்ள கல்வெட்டுக்களைப் படியெடுத்தனர். சுண்ணும்பால் மறைந்து கிடந்த அழகிய சிற்பங்களும் அவர்களால் தூய்மைப் படுத்தப்பட்டு எழில் ஓவியங்களாக வெளிப்பட்டன.

இதே மாணவ அணியினர். கும்பகோணத்திற்கு அருகில் பட்டீஸ்வரம் என்னும் இடத்தில் இருந்த ஒரு கோயிலையும் தூய்மைப்படுத்தினர். இக்கோயில் தஞ்சை மாமன்னன் முதலாம் இராஜராஜ சோழனின் தேவியருள் ஒருவரான பஞ்சவான் மாதேவிக்கு எடுக்கப்பட்ட பள்ளிப்படைக் கோயிலாகும். அக்கோயிலில் இராஜேந்திர சோழனுடைய கல்வெட்டு இருக்கிறது. அழகிய சிற்பங்கள் இருக்கின்றன. ஆனுல் அக்கோயில் முழுவதும் புதர் மண்டி, புல் மண்டி, அங்கு செல்வதற்கே வழி இல்லாமல் வழிபாடின்றிக் கிடந்தது. அதைக் குடந்தை 'என். எஸ். எஸ்.' மாணவர்களும், மாணவிகளும் தீவிரமாக இருந்து மிக அழகாகத் தூய்மைப் படுத்தினர். கோபுரத்தின் உச்சியில் வளர்ந்து இருந்த செடி கொடிகளை எல்லாம் அகற்றினர். புதரிலே இருந்து வெளிப்போந்த ஒரு பாம்பை ஒரு மாணவச் சிங்கம் கையால் பிடித்துச் சுற்றி அடித்ததும், அங்கு எவ்விதச் சலசலப்பும் இன்றிப் பணி தொடர்ந்ததும் காண்போர் வியக்கும் வகையில் இருந்தது. அக்கோயிலில் தூர்ந்து பாழாய்க் கிடந்த கிணற்றை மாணவர்கள் தூர் வாரிச் சீர் ஆக்கினர்.

சென்னைக்கு அருகில் இருக்கும் திருவொற்றியூர் ஆதிபுரீசுவரர் கோயிலை வட சென்னை மகளிர் கல்லூரியைச் சார்ந்த 80 மாணவியர் தூய்மைப் படுத்துவதில் ஈடுபட்டனர். அவர்கள் இக்கோயிலின் வரலாற்றையும் பல்லவர், சோழர் காலக் கலை, வரலாற்றையும் அக்கோயிலிலேயே வகுப்புக்களாக நடத்தி அறிந்து கொண்டனர். அன்று மாணவிகள் செய்த பணி அனைவருடைய போற்றுதலையும் பாராட்டுதலையும் பெற்றது.

*திருவொற்றியூர் கோயிலில் மாணவிகள் கல்வெட்டுக்களைப் படியெடுக்கும் காட்சி !*



இந்தப் பணியிலே ஏராளமான கல்லூரிகளும், பள்ளிகளும் பங்கு பெற, நாள்தோறும் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறைக்குக் கடிதம் எழுதிய வண்ணம் இருக்கின்றனர். இந்தப் பணியில் மாணவர்கள் பங்கு பெற, அவர்களுக்கு ஊக்கம் ஊட்ட பல தனியார் நிறுவனங்களும் முன்வந்து அவர்களுக்குப் போக்குவரத்து, தேனீர் முதலியவற்றைக் கொடுத்து உதவுகின்றனர். கும்பகோணத்தில் ராமன் அண்டு ராமன் கம்பெனியார் மாணவர்களைத் தங்களது வாகனத்தில் பட்டீஸ்வரத்திற்கு அழைத்துச் சென்று மீண்டும் கும்பகோணத்திற்குக் கொண்டு வந்து விட்டதோடு அன்றி அவர்களுக்குச் சிற்றுண்டிகளும் வழங்கி ஊக்குவித்தனர்.

இதை மேலும் பரவலாக நடத்துவதற்கு வேண்டிய பயிற்சி பெற்றவர்கள் உடனடியாகத் தேவைப்படுகிறுர்கள். ஆதலின் வரும் செப்டம்பர் மாதம் என். எஸ். எஸ். பிரிவு மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்குப் பயிற்சி அளிக்கத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை திட்டம் இட்டுள்ளது. இது தவிர ஒவ்வொரு மாவட்டங்களிலும் வரலாற்றுச் சின்னங்களின்



*பட்டீஸ்வரத்தில் பஞ்சவன் மாதேவீச்சுரம் என்னும் சோழர் கோயிலில் பாழடைந்த கிணற்றை மாணவர் படை தூர் எடுத்தக் காட்சி !*

பெருமையை உணர்த்தும் வகையில் சிறப்புக் கண்காட்சியும் நடத்தத் திட்டமிட்டுள்ளது. அதே சமயம் அந்தந்தப் பகுதி, கலைக்கும், வரலாற்றுக்கும் செய்துள்ள தொண்டுகளை அறிந்து கொள்ளும் வகையில் கருத்தரங்குகளை மாவட்டம் தோறும் நடத்தத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை திட்டமிட்டுள்ளது. ஆகஸ்ட் மாதம் தஞ்சை மாவட்டக் கருத்தரங்கு, குடந்தையில் நடைபெற இருக்கிறது. இதில் ஏராளமான ஆசிரியப் பெருமக்களும், பிறரும் பங்கு கொள்ள இருக்கின்றனர். பல வரலாற்றுப் பிரிவின் கிளைகள் இந்தக் கருத்தரங்கைச் சிறப்பிக்க அவர்களது ஒத்துழைப்பை கொடுக்க முன்வந்துள்ளன.

ஊர்தோறும் வரலாற்று சிறப்பு வாய்ந்த கோயில்களும் கலைச் செல்வங்களும், கல்வெட்டு களும் நிறைந்து நிற்கும் தமிழகத் தில் இவை அனைத்தையும் அறிந்து கொள்ள, போற்றிப் பாதுகாக்க ஒரு புத்துணர்ச்சியே தோன்றி யுள்ளது எனில் அது மிகையாகாது. இதற்கு வழி காட்டிய பாரத பிரதமர் அவர்களுக்கு மக்கள் இதயம் கனிந்த நன்றியை எ றென்றும் தெரிவிப்பர்.

*அழகிய சிற்பங்கள் மீதுள்ள சுண்ணும்பை நீக்கியதுடன், கோபுரத்தின் மீதுள்ள செடிகளையும் மாணவர்கள் வெட்டி அகற்றினர்.*



# படமும் செய்தியும்




↑

தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள் தலைமையில், சிறு தொழில் நிறுவன அரங்கில், 28—7—'76 அன்று, தமிழ்நாடு மற்றும் புதுவை மாநிலத்தைச் சேர்ந்த தோல் மற்றும் தோல்பொருள் தொழிற்சாலைகளை நவீனமயமாக்குதல் பற்றிய கருத்தரங்கு நடைபெற்றது. மத்திய அரசின் தொழில் மற்றும் நுகர்பொருள்துறை இராஜாங்க அமைச்சர் திரு. ஏ. பி. சர்மா அவர்கள் அக்கருத்தரங்கு பற்றிய மலரை வெளியிட்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்களிடம் வழங்கினார்.



தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகத்தால், கிண்டி தொழிற்பேட்டையில் உள்ள வேளாண் இல்லத்தில் (Agro-House) நிறுவப்பட்டுள்ள மீன்வலை உற்பத்தி நிலையத்தை 29—7—'76 அன்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் துவக்கி வைத்தார்.

இந்துஸ்தான் வாணிபக் கழகத்தின் 13-வது ஆண்டுப் பொதுக் கூட்டம் 30—7—'76-ல் நடைபெற்றது. அவ்விழாவில் தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியன் ஐ.ஏ.எஸ்., அவர்கள் உரையாற்றினார்.





தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள் 28—7—'76 அன்று சென்னையில் "தொழிலாளர் நலச் சட்டமும், சமுதாய மாற்றமும்" என்ற கருத்தரங்கைத் துவக்கி வைத்து உரையாற்றினார்.

சென்னை, மீனம்பாக்கத்தில் உள்ள ஜெயின் கல்லூரி நூலகக் கட்டடத்தை 30-7-'76-ல் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் துவக்கி வைத்தார்.






தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு பி. கே. தவே, ஐ. ஏ. எஸ்., அவர்கள் 27—7—'76 அன்று சாத்தனூர் அணைக்கு வருகை தந்தார். அவ்வமயம் அங்குள்ள மீன் பண்ணையில் வளர்க்கப்படும் மீன்களைப் பார்வையிட்டார்.



மொரிஷியஸ் தீவின் நிதி அமைச்சர் திரு. வீராசாமி ரிங்காடு அவர்கள் 30-7-'76 அன்று தமிழ்நாட்டுக்கு வருகை தந்தார். அவரை, மீனம்பாக்கம் விமான நிலையத்தில் தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் ஐ.ஏ.எஸ்., அவர்கள் வரவேற்றார்.



மத்திய அரசின் உள்துறை அமைச்சர் திரு கே. பிரம்மானந்த ரெட்டி அவர்கள் 31—7—'76 அன்று சிதம்பரத்தில் நடைபெற்ற 20 அம்சப் பொருளாதாரத் திட்ட விளக்க விழாவில், கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

மத்திய அரசின் உள்துறை அமைச்சர் திரு கே. பிரம்மானந்த ரெட்டி அவர்கள் சிதம்பரத்தில் கட்டப்பட்டுள்ள மருத்துவமனையை 31—7—'76 அன்று திறந்து வைத்தார்.





மத்திய அரசின் தொழிலாளர் நல அமைச்சர் திரு. கே. வி. ரகுநாத ரெட்டி அவர்கள், தொழிலாளர் நலம் மற்றும் வேலைவாய்ப்புத் துறையில் 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தின்கீழ் நடைபெற்றுள்ள பணிகளைப் பற்றித் தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு அரசின் அலுவலர்களுடன் 30—7—'76 அன்று ஆய்வு செய்தார்.





தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் துணைவியார் திருமதி மோஹன்லால் சுகாதியா அவர்கள், மார்ச்சு 1976-ல் நடைபெற்ற பள்ளி இறுதித் தேர்வில் 70 சதம் மற்றும் அதற்கு மேற்பட்ட மதிப்பெண்களைப் பெற்ற தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு 31—7—'76-ல் தகுதிப்பரிசு (*Merit award*) அளித்தார்.

மத்திய அரசின் இரயில்துறை அமைச்சர் திரு கமலபதி திரிபாதி அவர்கள், 7—8—'76 அன்று சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தில், சென்னையில் இருந்து புதுடில்லி செல்லும் "தமிழ்நாடு எக்ஸ்பிரஸ்" இரயிலின் வெள்ளோட்டத்தைத் துவக்கி வைத்தார்.








## ஸ்டேட் பாங்க்
## ரிக்கரிங் டெபாஸிட் திட்டம்
### மாதந்தோறும் சேமிக்கும் பழக்கம்—நாளை நலன் தரும்.

ஒவ்வொரு மாதமும் எத்தனை சேமிக்க வேண்டும், மற்றும் எத்தனை காலம் சேமிக்க முடியும் என்று தீர்மானித்துக் கொள்ளுங்கள். ஆரம்பித்த வுடன், உங்கள் சேமிப்பு வட்டியுடன் வளரும் வேகத்தைக் கண்டு மலைத்துப் போவீர்கள்.

இன்னும் எளிதாக்க வேண்டுமானால், ஸ்டேட் பாங்கில் ஒரு சேமிப்புக் கணக்கு ஆரம்பியுங்கள். மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையை உங்கள் ரிக்கரிங் டெபாஸிட் கணக்கில் மாற்றும்படி உங்கள் ஸ்டேட் பாங்க் கிளைக்குக் கூறி விடவும்.

வசதியான காலவரையறைக்கு, ரூ. 5/-ன் மடங்கில் நீங்கள் சேமிக்கலாம். வட்டி விகிதம் ஆண்டொன்றுக்கு வருமாறு: 12 மற்றும் 24 மாதங்களுக்கு 8%, 36, 48, மற்றும் 60 மாதங்களுக்கு 9%, 61, 72, 84, 96, 108 மற்றும் 120 மாதங்களுக்கு 10%.

இன்னும் என்ன? நீங்கள் போகுமிடமெல்லாம் உங்கள் பணமும் கூடவே வரும். காரணம், இந்தியாவில் 3800க்கும் மேற்பட்ட வெவ்வேறு இடங்களில் உங்களுக்கு சேவை புரிகிறது ஸ்டேட் பாங்க்.

ஸ்டேட் பாங்க்

SBI-9-203 TAM


(87)




# தமிழ்நாடு கிராமப்புறக் கடன் நிவாரணச் சட்டம்

இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தின் மிக முக்கியக் கூறுகளில் ஒன்று கிராம மக்களின் கடன் தொல்லைகளை நீக்கும் திட்டம். இத்திட்டத்தின் முதல் கட்டம்—அதாவது சமுதாயத்தில் ஏழை எளியவர்கள் வாங்கியுள்ள அனைத்துக் கடன்களையும் திருப்பித் தருவதற்கு கால நீட்டிப்பளித்தல். கால நீட்டிப்புச் சட்டங்களை நிறைவேற்றியதன் மூலம் தமிழ் நாட்டில் இது முன்னரே முழுமையாக நிறைவேற்றப்பட்டுவிட்டது.

இப்பொழுது இரண்டாவது கட்டமாக தமிழ் நாட்டில் புதிதாக நிறைவேற்றப்பட்டுள்ள 1976-ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ் சமுதாயத்தில் உள்ள எளிய மக்களின் அனைத்துக் கடன்களையும் ரத்து செய்ய வகை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டம் தமிழ்நாடு முழுவதிலும் உடனடியாக அமலுக்கு வருகிறது.

**பயனடைவோர் எவர்?**

இச்சட்டத்தின் கீழ், ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2,400-க்கு மேற்படாத குடும்ப வருமானம் (அதாவது குடும்பத்தில் உள்ள அனைவருடைய அனைத்து வழியாக வரும் மொத்த வருமானம்) உள்ள நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், கிராமப் புறக் கைவினைஞர்கள் மற்றும் சிறு விவசாயிகள் கடன் சுமையிலிருந்து முற்றிலும் நிவாரணம் பெறுவார்கள். குடும்பம் என்பது கணவன், மனைவி, திருமணமாகாத மைனர் குழந்தைகள் முதலானோர் அடங்கியதாகும்.

சிறு விவசாயி என்பவர் மலை ஜாதியினராக இருப்பின—2 யூனிட் விவசாய நிலமும், மற்றெல்லாருக்கும் 1 யூனிட் நிலமும் சொந்தமாகவோ, குத்தகையாகவோ, அல்லது சுவாதீன அடமானமாகவோ பெற்றிருந்து அதன் மூலம் தன வாழ்க்கைக்குத் தேவையானவற்றை பெறுபவர்.

யூனிட் நிலம் என்பதற்குக் கீழ் கண்ட விளக்கங்கள் தரப்பட்டுள்ளன :

1. பாசன வசதியற்ற இரண் ஹெக்டேர் நிலம்.

2. ஒரு பயிர் செய்யப் பாச வசதி பெற்ற அரை ஹெக்டேர் நிலம்.

3. தோட்டப் பயிர்கள் அல்ல திராட்சை, அல்லது தென்னை அல்ல பாக்கு அல்லது முசுக்கட்டை ஆகி வற்றைப் பயிரிடப் பயன்படும் அரைஹெ டேர் நிலம்.

4. எப்போதும் பாசன வசதிபெற் அல்லது ஓராண்டில் ஒரு போகத்துக் மேல் பயிர் செய்யப் பாசன வசதிபெற் கால் ஹெக்டேர் நிலம்.

நிலமற்ற விவசாயக் கூலி என்பவ பயிர் செய்வதற்கான நிலமற்ற வரு பயிர் செய்யும் நிலத்தில் உடல் உழைப் மூலம் தனது பிழைப்பை நடத்தி வருபவ மாவார்.

கிராமக் கைவினைஞர்கள் என்பவர் பயிர் செய்யும் நிலம் எதுவுமின்றி கிராம தில் (அதாவது கிராமம் என்பது சென்னை மதுரை நகரங்களிலோ அல்லது ஒரு ந ராட்சியிலேயோ நகரியத்திலோ உட்பட தது) தனது உழைப்பாலும் அல்ல தனது குடும்பத்தினர் உழைப்பாலு தொழில் செய்து தன் பிழைப்பை நடத் பவர், அல்லது விவசாயத் தொழிற் கரு களைச் செய்வது அல்லது பழுது பார்ப் தன் மூலம் தனது பிழைப்பை நடத்துபவ ஆவார்.

**கடன் கொடுத்தோர் விவரம் தரவேண்டு**

கடன் கொடுத்தோர் தங்களிடம் அட மானம் வைக்கப்பட்டுள்ள ஜங்கம சொ துக்கள் பற்றிய விவரங்களை தாசில்தாரிட

கொடுக்க வேண்டும். கடன் பெற்றவர்களும் கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ் நிவாரணம் கோரி அதாவது தாங்கள் அடமானம் வைத்த ஜங்கம சொத்துக்களைத் திருப்பிக் கொடுக்குமாறு கோரி ... கலாம். பிறகு தாசில்தாருக்கு மனு ... தாசில்தார் விசாரணை செய்து கடன் பெற்றவர்களில் யார் நிவாரணம் பெற உரிமை பெற்றவர்கள் என்பதற்கான ஆணையைப் பிறப்பிப்பார்.

கடன் நிவாரணச் சட்டத்தின் மூலம் கடன் தீர்க்கப்பட்டவரது அடமானம் வைக்கப்பட்ட சொத்துக்களை அவருக்குத் திருப்பிக் கொடுப்பது கடன் கொடுத்தவர்களின் பொறுப்பு ஆகும்.

கடன் கொடுத்தவர் அடமான ஜங்கம சொத்துக்களை செக்ஷன் 13 (ஜி) இல் குறிப்பிட்ட வங்கி வேறு மற்ற நிறுவனங்கள் உள்பட வேறுஎவரிடமோ மீண்டும் அடமானம் வைத்திருந்தால், அவைகளை அந்தக் கடன் கொடுத்தவர்களே வங்கி நிறுவனம் உள்பட அந்த நபரிடமிருந்து திரும்பப் பெற்று அச்சொத்துக்களை தாசில்தாரிடம் ஒப்படைக்க வேண்டும். அப்படி அவர்கள் செய்யத் தவறினாலும் மேலும் கடன் கொடுத்தவரிடமிருந்து மீண்டும் அடமானம் வைக்கப்பட்ட இடம் ஒரு வங்கியோ, அல்லது வேறு நிறுவனமோ இல்லை எனில் அவ்வகையான கடன் கொடுத்தவர் வசிக்கும் கட்டிடத்தில் நுழைந்து சொத்துக்களைக் கைப்பற்றி அவற்றை அடமானம் வைத்தவரிடம் திருப்பித் தர உரிமையுண்டு.




வங்கியாகவோ வேறு நிறுவனமாகவோ இருந்தால் அடமானம் வைக்கப்பட்ட சொத்துக்களை அவரிடம் ஒப்படைக்குமாறு தாசில்தார் ஆணையிடலாம். அத்துடன் அந்தவங்கிக்கோ அல்லது நிறுவனத்திற்கோ சேரவேண்டிய நில வரி பாக்கியாகக் கருதப்பட்டு கடன் கொடுத்தவரிடமிருந்து வசூல் செய்யப்பட்டு, வங்கிக்கோ அல்லது நிறுவனத்திற்கோ வழங்கப்படும் என்பதற்குரிய சான்றிதழினை தாசில்தார் வழங்குவார். அதன் பிறகு, நிலவரி பாக்கியைப் போல் அத்தொகையை தாசில்தார் வசூலித்து வங்கிக்கோ அல்லது நிறுவனத்திற்கோ செலுத்துவார். அடமானம் வைக்கப்பட்ட சொத்துகள் கடன் பெற்றவர்களுக்கு திருப்பித் தரப்படும்.

அடமானம் வைத்தவர் கொடுக்கும் மனு மீது விசாரணை செய்து, அடமானம் வைத்துள்ள சொத்துக்களை விடுவித்து தாசில்தார் ஆணை பிறப்பித்தது சொத்து விடுவிக்கப்பட்டது என்ற சான்றிதழை வழங்குவார். இச்சான்றிதழ் நீதி மன்றங்களில் இது குறித்து ஏற்படும் வழக்குகளில் காட்சியங்களாக ஏற்றுக் கொள்ளப்படும். அடமானம், வைத்தவர் அடமானம் வைத்துள்ள சொத்தினை திரும்ப அடையாமல் இருந்தால் அச்சொத்துக்களை அடமானம் வைத்தவரிடம் திருப்பிக் கொடுக்குமாறு தாசில்தார் ஆணையிடுவார். மேலும், தாசில்தார் கடன் கொடுத்தவரிடமுள்ள அடமானப் பத்திரத்தையோ மற்ற பத்திரத்தையோ தம்மிடம் ஒப்படைக்க ஆணையிட்டுக் குறிப்பிடப்பட்ட சொத்துகள் மீட்டு தரப்பட்டதாக அப்பத்திரத்தில் சான்றிதழ் இடுவார்.

## தாசில்தார் ஆணை மேல் அப்பீல் உண்டு

இச்சட்டத்தின் கீழ் தாசில்தார் பிறப்பிக்கும் ஆணையை எதிர்த்து அதிகாரிக்கு அப்பீல் செய்து கொள்ள அனுமதி உண்டு. அந்த அப்பீலில் பிறப்பிக்கப்படும் உத்தரவு முடிவானது. அதை எந்த நீதிமன்றத்திலும் ஆட்சேபிக்க முடியாது.

இந்தச் சட்டம் தொடர்பான விவகாரங்களில் எந்த வழக்கிற்கும் ஆஜராக முடியாது.

குற்றங்கள் பிடியாணை வேண்டாக் குற்றங்களாகும். மேலும் சிறைத் தண்டனைக்குரியது.

## சிறைத்தண்டனை, அபராதம் உண்டு!

இந்தச் சட்டத்தில் கண்டுள்ள பிரிவுகளை அல்லது இச்சட்டத்தின் கீழ் போடப்பட்டுள்ள உத்தரவுகளை அல்லது கட்டளைகளை அமுல்படுத்தாத நபர்களுக்கும் அல்லது இச்சட்டத்தின் பிரிவுகளை மீறி நடப்பவர்களுக்கும் குறைந்த அளவு மூன்று மாதங்கள் முதல் அதிக அளவு ஓராண்டு வரை சிறை தண்டனையும் குறைந்த அளவு ரூபாய் ஆயிரம் முதல் அதிக அளவு ரூபாய் ஐயாயிரம் வரை அபராதமும் விதிக்கப்படும்.



இச்சட்டத்தின் கீழ் தண்டனை அளிக்கக் கூடிய குற்றங்கள் ஒவ்வொன்றும் பிடியாணை வேண்டாதவை. ஆகவே அவை உடன் விசாரிக்கப்பட வேண்டியவை. குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 262 முதல் 265 வரை உள்ள பிரிவுகள் இது போன்ற விசாரணைகளுக்குப் பொருந்தும்.

கம்பெனிகளைப் பொறுத்த வரையில் இச்சட்டத்தின் கீழ் ஒரு கம்பெனியால் செய்யப்பட்ட குற்றத்திற்கு அதன் நிர்வாக நடவடிக்கைகளை நடத்துகிறவரும் அக்குற்றம் செய்யப்பட்ட காலத்தில் அக்கம்பெனியின் பொறுப்பாளராக இருக்கிறவரும் அந்தக் கம்பெனியும் அக்குற்றத்தைச் செய்ததாகக் கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன் மேல் தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

இது தொடர்பான எந்த வழக்கு அல்லது நடவடிக்கையிலும் இச்சட்டத்தின் கீழ் கடன் பட்டவருக்குப் பாதுகாப்பு அளிக்கப்படக் கூடாது என்பதைக் கடன் கொடுத்தவரே நிரூபிக்க வேண்டும்.

## எந்தெந்த கடன்களுக்குப் பொருந்தாது?

(அ) ஒரு குறிப்பிட்ட கடனாளிக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ள விவசாய நிலம் மற்றும் ஏனைய சொத்துக்களின் வாடகை பாக்கி.

(ஆ) நில வரி பாக்கியைப் போல் வசூலிக்கப்படத் தக்க தொகைகள்.

(இ) நம்பிக்கை மோசடி காரணமாக ஏற்படும் எந்தக் கடன்களும்.

(ஈ) பணிசெய்ததற்காகக் கிடைக்கும் ஊதியம் சம்பளம் கூலி ஆகியவற்றின் பாக்கிகள் தொடர்பான கடன்கள்.

(உ) நீதி மன்ற டிக்ரியின்படி அல்லது மற்றப்படி உண்டான ஜீவனாம்ச கடன்கள்.

(ஊ) (1) மத்திய மாநில அரசுக்கு கொடுக்கப்பட வேண்டிய கடன்கள்.

(2) ஓர் உள்ளாட்சி மன்றத்திற்கு கொடுக்கப்பட வேண்டிய கடன்கள்.

(எ) (1) இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவைகளோடு கீழே சொல்லப்பட்டுள்ள நிறுவனங்களுக்குச் சேர வேண்டிய கடன்கள்—

(அ) 1949-ம் ஆண்டு வங்கிகள் ஒழுங்கு முறைச் சட்டம் பொருந்துகின்ற ஒரு வங்கிக்கு

(ஆ) 1955-ம் ஆண்டு இந்திய ஸ்டேட் வங்கிச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட இந்திய ஸ்டேட் வங்கிக்கு

(இ) இந்திய ஸ்டேட் வங்கிச் சட்ட 2-வது பிரிவு (கே) பகுதியில் துணை வங்கிகள் சட்டம், 1959 வரையறுக்கப்பட்டுள்ள துணை வங்கிக்கு

(ஈ) 1970-ம் ஆண்டு பாங்கிக் கம்பெனிகள் (தொழில் நிறுவனங்களைக் கைப்பற்றுதல், மாற்றுதல்) சட்டத்தின் இரண்டாம் செக்ஷன் டீ பகுதியில் வரையறுக்கப்பட்டவைகளுக்கு

பொருத்தமான ஒரு புதிய வங்கிக்கு

(2) 1963-ஆம் ஆண்டு விவசாய மறுநிதி உதவி வளர்ச்சிக் கழகச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட விவசாய மறுநிதி உதவி வளர்ச்சிக் கழகத்திற்கு.

(ஊ) தமிழ்நாடு அரசிதழில் மாநில அரசால் அறிவிக்கப்பட்டுள்ள வேறு எந்தக் கடன் வழங்கும் நிறுவனத்திற்கு

(2) 1956-ம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தில் பொருள் கூறப்பட்ட அரசாங்கக் கம்பெனிக்கு

(3) மத்திய மாநில அரசுகளுக்கு சொந்தமான அல்லது அவற்றினால் நிர்வகிக்கப்படுகிற நிறுவனங்களுக்கு

(4) இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு

(5) 1961-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்படுகிற நிலவள வங்கி உட்பட எந்த ஒரு கூட்டுறவுச் சங்கங்கள்

(ஏ) ஒரு கடனாளியால் கிரயத்திற்கு வாங்கப்பட்ட அசையும்—அசையா சொத்து சம்பந்தமான கடனுக்கு அல்லது தவணை ஒப்பந்தத்தின் கீழ் நிலுவையாயுள்ள கடனுக்கு இச்சட்டத்தை அமுல் நடத்துவதற்காக, இதன் கீழ் இயற்றப்பட்டுள்ள விதிகளையும் அரசு அறிக்கையிட்டுள்ளது.

இச்சட்டம் சமுதாயத்தில் கிராமப் பகுதிகளில் வாழும் ஏழை எளிய மக்களின் கடன் சுமையைத் தீர்ப்பதற்குப் பெரிதும் பயன்படுவதோடு, உதவி புரிந்து அவர்கள் கடன் தொல்லையின்றிப் புது வாழ்வு தொடங்க அவர்களுக்குப் பேருதவியாகவும் அமையும்






# கால்நடை மேம்பாட்டிற்கு உதவும் மத்திய அரசுத் திட்டங்கள்!

பா. சின்னதுரை
கூடுதல் இயக்குநர்,
கால்நடை வளர்ப்புத்துறை,
தமிழ்நாடு.

உலகிலேயே அதிகக் கால்நடைகளின் எண்ணிக்கைகளை நமது பாரதம் பெற்றிருந்த போதிலும், வெளிநாட்டுப் பசுக்களுடன் ஒப்பிடும்போது பால் கொடுக்கும் திறனும் பசுக்களின் தரமும் மிகவும் தாழ்ந்த நிலையில் உள்ளன.

ஆகவே நமது உள்ளூர் பசுக்களின் தரத்தையும், திறமைகளையும் உயர்த்தும் பொருட்டு நமது கால்நடைப் பராமரிப்புத் துறை, அரிய பல திட்டங்களை நமது அரசின் நிதி உதவி கொண்டு இயங்குவதுடன், மத்திய அரசு நிதி உதவியுடன் (Centrally Sponsored Scheme) பல அரிய திட்டங்கள் நமது மாநிலத்தில் இயங்கி வருகின்றன.

அவைகளில்,

1. வெக்கை நோய் ஒழிப்புத் திட்டம்,

2. வம்சா வழி ஆய்வுத் திட்டம்,

3. தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஈச்சங்கோட்டையில்வெளி நாட்டு உயரின கால்நடை வளர்ப்புப் பண்ணை நிறுவுதல்,

4. இராணிப்பேட்டையில் உள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து தயாரிக்கும் நிலயத்தை முன்னேற்றுவதற்கான திட்டங்கள் ஆகியவை மிக முக்கியமானவைகளாகும். அவைகளின் விவரம் வருமாறு :

## வெக்கை நோய் ஒழிப்புத் திட்டம்

வெக்கை நோய், மிக வேகமாக கால்நடைகளுக்குப் பரவும் ஒரு கொடிய 'வைரஸ்' நோயாகும். இந்த நோயின் விளைவால் உண்டாகும் இறப்பினாலும், கால்நடைகளின் பலக் குறைவினாலும் ஏற்படும் பொருளாதார நட்டம் மிகப் பெரிய அளவாகும். எனவே, வெக்கை நோயை முற்றிலும் ஒழிக்கும் பொருட்டு 1965-ஆம் ஆண்டில் மத்திய அரசு முழு நிதி உதவியுடன் தமிழகத்தில் வெக்கை நோய்த் தடுப்புத் திட்டத்தின் கீழ் 20 வெக்கை நோய்த் தடுப்புச் சாவடிகளும், 4 எல்லையோர, தடுப்பூசிக் குழுக்களும் செயல்பட ஆரம்பித்தன.

1968ஆம் ஆண்டில் தமிழகத்தில் வெக்கை நோய் மிக வேகமாகப் பரவவே, இத்திட்டத்தின் கீழ் பணி புரிந்த ஊழியர்களை 14 குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு மாவட்டத்திலும் வெக்கை நோய்த் தடுப்பூசி போடும் பணியில் தீவிரமாக ஈடுபட்டது. மேலும் மாநில எல்லைகளைத் தாண்டிச்செல்லும், தடுப்பூசி போடாத கால்நடைகளுக்கு, தடுப்பூசி போட்டு, அவைகளை இக்கொடிய நோயிலிருந்து காக்கும் பொருட்டு மாநில எல்லையோரப் பகுதிகளில் 3 வெக்கை நோய்த் தடுப்புச்சாவடிகள் ( Rinderpest check-post ) நிறுவப்பட்டன.

1970-ஆம் ஆண்டில் மத்திய வெக்கை நோய்க் தடுப்புக் குழுவின் (Central Rinderpest Control Committee) சிபாரிசுக்கு இணங்க மத்திய அரசின் முழு நிதி உதவியுடன் 5 தடுப்புச் சாவடிகளும், 4 வெக்கைநோய்த் தடுப்பு விழிப்புக் குழுக்களும் ( Vigilance Units ) ஏற்படுத்த ஒப்புதல் அளித்தது.

மொத்தம் 8 தடுப்புச் சாவடிகள் தமிழகத்தில் இயங்கிவரு கின்றன.

மாநில எல்லையோரப் பகுதிகளில் ( Inter-State Borders ) 15 கிலோ மீட்டர் தூரத்திற்குள் உள்ள கால்நடைகளுக்கு வெக்கை நோய்த் தடுப்பூசிகள் போட்டு மிக கவனத்துடன் காத்து அப் பகுதிகளை வெக்கை நோய்த் தடுப்பு இடைநிலைப் பகுதியாக (Immune Belt against, Rinderpest உருவாக்கியுள்ளனர்.

5-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மேலும் ஆறு விழிப்புக் குழுக்களும் ஒரு தடுப்புச் சாவடியும் தமிழகத்திற்கு அவசியமென வலியுறுத்திய மாநில கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநரின் கோரிக்கையை மத்திய அரசு ஏற்று, 100 சதவிகிதம் நிதி உதவி அளிக்க ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, பொள்ளாச்சி, டெ[illegible]கனிக் கோட்டை, கிருஷ்ணகிரி திருப்பத்தூர், அரக்கோணம் பொன்னேரி ஆகிய 6 இடங்களில் விழிப்புக் குழுக்களும், குடியா[illegible]தம் அருகில் தடுப்புச் சாவடியும் நிறுவப்பட்டுள்ளன. இவைகளுக்காக 1—1—1975 முதல் 31—3—1979 வரையான ஆண்டுக் காலத்திற்கு ரூ. 21.6 இலட்சம் மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இத்திட்டம் ஒரு வெக்கை நோய்த் தடுப்பு அலுவலரின் கீழ் 23 கால்நடை உதவி மருத்துவர்கள், 187 கால்நடை உதவியாளர்கள், 76 கால்நடைப் பணியாளர்கள் ஆகியோருடன் இயங்கி வருகின்றது.

இத்திட்டம் செயல்பட ஆரம்பித்த பின், வெக்கை நோய், தமிழகத்தில் ஓரளவு ஒழிக்கப்பட்டுள்ளதுடன், வெக்கை நோயினால் ஏற்பட விருந்த பெரும் நட்டமும் கால்நடைப் பராமரிப்புத்துறையின், சீரிய பணிகளால் தவிர்க்கப்பட்டுள்ளது.

**வம்சா வழி ஆய்வுத் திட்டம்**

தமிழகத்தின் கால்நடைகளில் நல்ல இனவிருந்தி ஏற்படுத்தும் பொருட்டு, கால்நடைப் பராமரிப்புத் துறை பல்வேறு திட்டங்களில் தீவிரமாகச் செயலாற்றி வருகிறது. இத்திட்டங்கள் அனைத்தும் எதிர் நோக்கும் பலனை அளிக்க வேண்டுமாயின், சிறந்த சந்ததிகளை உருவாக்க வல்ல, நல்ல தரமுள்ள காளைகள் இன்றியமையாததாகும். இவ்வித ஆற்றல் மிக்க பொலி காளைகளின் திறனை மதிப்பிடுவதற்காக, வல்லுணர்கள் கையாளும் முறையே வம்சா வழி ஆய்வுத் திட்டம் ஆகும்.

வம்சா வழி ஆய்வுத் திட்டத்தின் மூலம் சீரான பராமரிப்பும், நல்ல தீவன முறையும், மேற்கொள்ளப்பட்டு இன விருத்தி செய்த தாய்ப் பசுவின் செயல் திறனுடன் அதே முறையில் வளர்க்கப்படும் அதற்குப் பிறந்த கன்றுகளின் செயல் திறனை ஒப்பிட்டு, அக்காளையின் 'குணங்களை வழங்கும் திறன்' (transmitting ability) நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஒவ்வொரு ஆண்டிலும் நல்ல சந்ததிகளைத் தேர்ந்தெடுக்க முடிகின்றது. மேலும், இத்திட்டத்தின் மூலம், பின்சந்ததிகளில் காணப்படும் தனித் தன்மைகளை ஆராய்ந்து, இத்தன்மைகளைக் கொண்டு வளர்ச்சியின் மதிப்பை நிர்ணயிக்க இயலும்.

பால் வளம் பெருக்குவதற்கான வளமான சந்ததியை உருவாக்குவதில் வேகமான முன்னேற்றம் காண்பதற்காக, ஓசூர் மாவட்டக் கால்நடைப் பண்ணையில் மத்திய அரசு நிதி உதவியுடன் சிவப்பு சிந்தியினக் காளைகளைப் பெருக்கும் நோக்கத்துடன் ஒரு திட்டம் துவக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு 1971—'72-ஆம் ஆண்டு முதல் 1974-ஆம் ஆண்டு வரையான மூன்று ஆண்டுக் காலத்திற்கு, ரூ. 13.37 இலட்சம் வரை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1973-74-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டவை இளம் பசுக்களாதலால் அவை ஈனும் நிலையை அடைவதற்கு 3 ஆண்டுகளாகும். ஆகவே, இத்திட்டத்தின்படி பலனடைய சாத்தியமில்லாததால் குறிப்பிட்ட காலத்தை விட ஓராண்டுக் காலத்திற்குப் பின்னரே இத்திட்டம் செயல்பட ஆரம்பித்தது. எனவே, மீண்டும் 3 ஆண்டுக் காலத்திற்கு இத்திட்டத்தை நீடிப்பது அவசியமாகும்.

இத்திட்டம் தொடர்ந்து செயல்படுமாயின், தமிழகத்தில் மிகச் சிறந்த பொலி காளைகளைத் தேர்ந்தெடுத்து, அதன் மூலம் திறமை வாய்ந்த சந்ததிகளைப் பன் மடங்காகப் பெருக்கி, பாரதத்தின் கால்நடை வளர்ச்சியில் தனிப் பெரும் இடத்தைத் தமிழகம் வகிக்கும் என்பதில் ஐயமில்லை.

**தஞ்சை மாவட்டத்திலுள்ள ஈச்சங் கோட்டையில் உயரின வெளிநாட்டுக் கால்நடை வளர்ப்புப் பண்ணை நிறுவுதல்.**

வெளிநாட்டு உயரின 'ஜெர்சி' 'பிரிசியன்', 'ரெட்டேன், 'ப்ரவுன் ஸ்விஸ்' போன்ற பசுக்களின் பால் கொடுக்கும் திறனை விட, நம் உள்ளூர் பசுக்களின் பால் தரும் திறன் மிகக் குறைவு.

மேலும், நமது உள்ளூர் பசுக்கள் பெரும்பாலும் (Non-descript type) வகைப்படுத்தப் படாத இனங்களாக உள்ளன. வெளிநாட்டு (Exotic bulls) காளைகளைக் கொண்டு கலப்பு இன விருத்தி செய்வதின் மூலம் இப்பசுக்களின் தரத்தையும், பால் கொடுக்கும் திறனையும் விரைவில் முன்னேற்றமடையச் செய்யலாம்.

தமிழகத்தில் 28 இலட்சம் பசுக்கள் இருக்கின்றன. ஆனால் சுமார் 150 உயரின வெளிநாட்டுக் காளைகள் மட்டுமே உள்ளன. இதுவரை 52 காளைகள் பல்வேறு நாடுகளிலிருந்து அன்பளிப்பாக கிடைக்கப் பெற்றவை. இக்காளைகளுடன் வெளிநாட்டு உயரினப் பசுக்களையும் மைய இருப்பாக (necleus female stock) பராமரித்தால், தங்குதடையின்றி வெளிநாட்டு உயரினக் காளைகளைத் தொடர்ந்து கிடைக்குமாறு செய்யலாம். மேலும், ஒவ்வொரு முறையும் பொலி காளைகளுக்காக வெளி நாடுகளை எதிர் நோக்கி இருக்கவேண்டிய அவசியமில்லை.

எனவே, சுய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உயரினக் காளைகளையும் பசுக்களையும் நாமே நமது சீதோஷ்ண நிலைக்குத் தக்கவாறு உற்பத்தி செய்து கொள்ளுவது அவசியம் என உணர்ந்து நமது அரசும், மத்திய அரசும் தஞ்சை மாவட்டத்திலுள்ள ஈச்சங்கோட்டையை, டென்மார்க் அரசின் சிறப்பு ஆய்வாளர்களைக் கொண்டு பார்வையிட்டு, அங்கு மத்திய அரசு நிதி உதவியுடன் வெளிநாட்டு உயரினக் கால்நடைப் பண்ணையை நிறுவ இசைந்துள்ளன.

இப்பண்ணையை நிறுவுவதற்காக 1975—'76-ஆம் ஆண்டு முதல் 1976—'79ஆம் ஆண்டு வரையிலான நான்கு ஆண்டு காலத்திற்கு ரூ. 93.33 இலட்சம் நிதி உதவி அளிப்பதற்கு மத்திய அரசு இசைந்துள்ளது. இத்தொகையில் 75 சதம் மத்திய அரசின் உதவியாகவும், 25 சதம் மாநில அரசிற்கு அளிக்கும் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது.



ஜெர்சீ பசு

மத்திய அரசு வழங்கும் இப்பெருந் தொகையைப் பயன்படுத்தி தமிழகத்தின் எதிர்கால வளத்திற்கு வழி கோலும் வெளிநாட்டு உயரினக் கால்நடைகளை வளர்ப்பதற்கான உடனடி ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

**கால்நடை நோய் தடுப்பு மருந்து தயாரிக்கும் நிலையம், இராணிப் பேட்டை.**

கால்நடைத் தொத்து நோய்களினால் ஏற்படும் பெருத்த பொருளாதார நட்டத்தினைத் தவிர்ப்பதற்காக, நோய்த்தடுப்பு முறையில் தனிக்கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

கால்நடை உற்பத்தியின் வெற்றி, நோய்த் தடுப்புத் திட்டங்களைச் சார்ந்திருப்பதால் பல வகையான நோய்த் தடுப்பு மருந்துகளை உற்பத்தி செய்ய வேண்டியது மிக அவசியமாகும். இதனை அடிப்படையாகக்கொண்டு வெக்கை நோய்த்தடுப்புமருந்தை (Anti-serum against Rinderpest) உற்பத்தி செய்வதற்காக 1932-ஆம் ஆண்டு, முதன் முதலாக சென்னையில் நோய்த் தடுப்பு மருந்து தயாரிக்கும் நிலையம் ஒன்று நிறுவப்பட்டது. பின் இந்நிலையம், 2-வது மகா யுத்தத்தின் போது, இராணிப்பேட்டைக்கு மாற்றப்பட்டது. கால்நடைகளையும், கோழிகளையும் தொற்று நோயிலிருந்து பாதுகாக்கும் பல்வேறு வகையான தடுப்பு மருந்துகளைத் தயாரிப்பது மட்டுமின்றி, மருந்துகளின் தரத்தை உயர்த்துவது, புதிய மருந்துகளையும், நோயின் மூல காரணங்களைக் கண்டறிதல் போன்ற பல்வேறு வகையான ஆராய்ச்சிகளிலும் இந்த நிலையம் ஈடுபட்டுள்ளது.

தற்சமயம் இந்நிலையத்தில் சப்பை நோய், தொண்டை அடைப்பான், வெக்கை நோய் போன்ற கொடிய நோய்களிலிருந்து கால்நடைகளைக் காப்பதற்காக 23 வகையான பல்வேறு தடுப்பு மருந்துகள் தயார் செய்யப்படுகின்றன. இவைகளில் உற்பத்தியை மேலும் அதிகப்படுத்துவதுடன், பல புதிய வகையான தடுப்பு மருந்துகள் தயாரிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



சிந்திப் பசு



ப்ரீஷியன் காளை

இந்நிலையம், மாநிலத் தடுப்பு மருந்துகள் தேவையைப் பூர்த்தி செய்வதுடன், மற்ற மாநிலங்களுக்கும் கொடுத்து வருகிறது. பெரிய அளவில் கலப்பின விருத்தித் திட்டங்கள் செயல்படுத்தும் இந்த நேரத்தில், கால்நடைகளின் நலங் காப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதால், நோய்த் தடுப்பு மருந்துகளின் தேவை, நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. வரும் காலங்களில் இந்தேவை 100 சதவிகிதமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப் படுகின்றது. ஆகவே, ஐந்தாண்டுத் திட்டப் பிரேரணையில் இந்த நிலையத்தை விரிவுபடுத்துவதற்காக ரூ. 54.03 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவற்றிற்கெல்லாம் சிகரமாக சிறு விவசாயிகள், நடுத்தர விவசாயிகள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் தங்கள் வருமானத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திட புரட்சிகரமான கால்நடை அபிவிருத்தித் திட்டங்களைச் சுமார் 5 கோடி ரூபாய்ச் செலவில் 1976—'77லிருந்து 78—79 வரை, மூன்றாண்டுக் காலங்களில் செயல்படுத்த ஏற்பாடாகியுள்ளது. இத்திட்டத்தின்படி தமிழகத்தில் 8 மாவட்டங்களில் உயர் ரக கன்று வளர்ப்பு, ஆடு, கோழி, மேலைநாட்டுப் பன்றி வளர்ப்பு ஆகிய தொழில்களில் சுமார் 50,500 பேர் ஈடுபட்டுப் பயன் பெறுவார்கள்.

இதுபோல, கால்நடைகளின் வளத்தையும், நாட்டு வளத்தையும் பெருக்கும் பொருட்டு மத்திய அரசு முழு நிதி உதவியுடனும், மாநில அரசு நிதியுடனும் பல திட்டங்களைத் தீட்டிச் செயல்பட்டு வரும் இந்நாளில், கால்நடைப் பராமரிப்புத் துறையின் அரிய பணிகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு உழவர் பெருமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# அஞ்சலக வங்கியின் மாபெரும் பரிசுத் திட்டம்

**ஆண்டுக்கு இருமுறை**

**குலுக்கல்கள் ஜனவரியிலும் ஜூலையிலும் நடைபெறும்**

**ரூ. 20½ இலட்சத்திற்கு 11,116 பரிசுகள்**

ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட 11,116 பரிசுகள் உண்டு.

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. | 1,00,000 |
| 5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50,000 |
| 10 மூன்றும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 20,000 |
| 100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 5,000 |
| 1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 500 |
| 10,000 ஆறும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50 |

ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.

உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெறாதவர்க்கும் அளிக்கப்படும்.

விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**இயக்குநர்,**
தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,
சென்னை-600 002.





# நில், கவனி, புறப்படு!

மின்சார ரயில் வந்து நிற்கிறது. மக்கள் அவசர அவசரமாக ரயிலில் ஏறிக்கொள்கின்றனர். ஒரு சில நிமிடங்களில் ரயில் புறப்படுகிறது.

அப்போது—

ரயில் புறப்படும் வரை ஏறாமல் இருந்த அந்த இளைஞன், ரயில் கிளம்பியதும் ஓடிப்போய் ஒரு பெட்டியில் தொற்றிக் கொள்கிறான். மின்சார ரயில் வேகத்துக்கு இவன் ஓட்டம் எம்மாத்திரம்?

கைப்பிடி நழுவுகிறது. அலறியபடி கீழே விழுகிறான். விபத்துக்குள்ளாகிறான்.

**அவசரம் கூடாது!**

சென்னை பேசின்பிரிட்ஜ் ரயில் நிலையத்தில் அண்மையில் நடந்த ஒரு சம்பவம்.

ஓடும் ரயிலிலிருந்து இறங்கிய ஒரு பெண்மணி, ரயிலில் சிக்கி இரண்டு கால்களும் துண்டிக்கப்பட்டு, பிறகு இறந்துவிட்ட செய்தி நம் நெஞ்சத்தை நெகிழ வைக்கிறது.

இந்த நிலைமை ஏன்?

இந்த நிலைமையை நாமே அல்லவா உண்டாக்கிக் கொள்கிறோம்?

படித்துப் பட்டம் பெற்று நாளைய நாயகனாக விளங்கவேண்டிய ஒருவன், நடுவிலேயே உயிரை மாய்த்துக் கொள்ளலாமா?

இளமையின் வேகத்தில்-மற்றவர்கள் தன்னைப் பெருமையாக நினைத்துக் கொள்ள வேண்டும் என்ற அற்ப ஆசையில் • ஓடும் ரயிலில், பஸ்சில் ஏறுவதும் இறங்குவதும் எத்தனை மடமைத்தனம்?

கார்-லாரி மோதல்!

பஸ் உருண்டு பலர் பலி!

சைக்கிளில் போன வாலிபர் சாவு!

மாட்டு வண்டி-பஸ் மோதி இருவர் மரணம்!

இப்படி, சாலை விபத்துக்கள் பல உண்டு. இந்த விபத்துக்களுக்கெல்லாம் காரணம் என்ன?

அஜாக்கிரதைதான்!

சாலை விதிகளைக் கடைப்பிடிக்காததுதான்!

இன்னும் சொல்லப்போனால், அவசரம்தான்!

**சட்டத்தை மதிக்க வேண்டும்!**

சாலையில் போவோர் வருவோர், அவர் பாதசாரியாக இருக்கட்டும் அல்லது வாகன மோட்டுபவராக இருக்கட்டும் எல்லோருமே சாலை விதிகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும்; சட்டத்தை மதிக்க வேண்டும். சட்டத்தையோ, விதியையோ மீறினால் அது விபத்து வடிவில் நம்மையே மிதித்துவிடும்!

சைக்கிளில் அதிக பாரத்தை ஏற்றிக் கொண்டு போவது, ஸ்கூட்டரில் குடும்பத்தையே ஏற்றிக் கொண்டு செல்வது, பஸ் படிகளில் நின்றுகொண்டோ அல்லது தொற்றிக் கொண்டோ செல்வது-இவையெல்லாம் விபத்துக்கு வழி வகுக்கும் செயல்களாகும்!

நெரிசல் மிகுந்த நேரங்களில் பயணத்தைத் தவிர்ப்பது நல்லது. அல்லது குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னதாகவே வந்து பயணத்தை மேற்கொள்வது நல்லது. பஸ் படிகளில் நின்று கொண்டோ தொற்றிக் கொண்டோ செல்வோமானால், 'நிச்சயம் நம் உயிர் நம்மிடமில்லை!' என்று தீர்மானித்துக் கொள்ளலாம்.

அவசரமும், பொறுப்பு இல்லாத தன்மையுமே எல்லாக் காரியங்களுக்கும் தடையாக இருப்பவை.

பொதுவாக நின்று நிதானத்துடன் செயல்பட்டால், நாம் நினைத்ததை நிறைவேற்றலாம்.

**படித்தால் மட்டும் போதுமா!**

சாலையில் நடந்து செல்வதற்கு, குறுக்கே போவதற்கு, வாகனங்கள் போய் வருவதற்கு என தனி இடங்கள் உள்ளன. கண்ட இடத்தில் குறுக்கே போவதும் நடந்து செல்வதும் உயிருக்கே ஆபத்து என்பதைப் பத்திரிகைகள் நமக்கு எச்சரிக்கின்றன அல்லவா!

சாலை விதிமுறைகளைக் கடைப்பிடித்து நடக்க வேண்டும் என்பதற்காகவே; போக்குவரத்துத் துறைக் காவலர்கள் 'வேன்'களில் சுற்றிய வண்ணம் சாலை விதிமுறைகளைத் தெரிவிக்கின்றனர். சில முக்கிய இடங்களில் ஒலி பெருக்கி மூலமும் எச்சரிக்கை செய்கின்றனர். நடமாடும் நீதிமன்றமும் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று சாலை விதிகளை மீறுவோரைத் தண்டிக்கின்றது.

பள்ளி மாணவர்கள் சாலை விதிமுறைகளைப் பாடத்தில் படித்து



அண்ணாசாலையில் பள்ளி மாணவர்கள் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துகின்றனர்.

விட்டால் மட்டும் போதாது, அதனைக் கடைப்பிடிக்கவும் செய்ய வேண்டும்.

சென்னை அண்ணாசாலையிலுள்ள கிறித்தவ சர்ச் உயர்நிலைப்பள்ளியில் (Christ Church High School) சாலைவிதி முறைகள் கற்பிக்கப்படுவதுடன், அம்மாணவர்கள் போக்குவரத்து ஒழுங்கைக் கண்காணிக்கவும் ஈடுபடுத்தப்படுகின்றனர். அண்ணாசாலையில் அம்மாணவ, மாணவியர் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதையும் நாம் பார்க்கலாம்.

**குறுக்குவழி கூடாது!**

வீட்டை விட்டு வெளியே வருவோர்க்கு, சாலைவிதிகளே கவனத்துக்கு வர வேண்டும். படித்தவர், படிக்காதவர், குழந்தைகள்-பெரியோர்கள் வரை யாவருக்கும் இது பொருந்தும்.

சென்னை நகரின் நெரிசல் மிகுந்த இடங்களில் சுரங்கப் பாதைகள் பல இலட்சக்கணக்கான ரூபாய் செலவில் கட்டப்பட்டிருக்கின்றன. அவைகளைப் பயன்படுத்திக் கொள்ள என்ன தயக்கமோ, சோம்பலோ தெரியவில்லை. 'குறுக்கு வழி' தான் அவர்களுக்கு உடனே நினைவுக்கு வருகிறது!

நம்முடைய அலட்சியப் போக்கினால் நாம் அடைவது சாக்காட்டையே என்பதை நாம் உணர வேண்டும்.




**சாலை விபத்துக்களின் பட்டியல்!**

இந்தியாவில் ஆண்டுதோறும் சாலை விபத்துக்களுக்குப் பலியாகிறவர்கள் எத்தனைப்பேர் தெரியுமா? 11 ஆயிரம் பேர்! இவர்களில் 50 சதவிகிதம் பேர் பாதசாரிகள். 25 சதவிகிதம் பேர் சைக்கிள் ஓட்டுபவர்கள். இந்தத் தகவலை இந்தியப் போக்குவரத்து ஆய்வுக் கழக அதிகாரி டாக்டர் என். எஸ். சீனிவாசன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதோ இன்னும் சில புள்ளி விவரங்கள்!

1973-74-ஆம் ஆண்டில் சென்னை நகரில் நடந்த சாலை விபத்துக்களாவன:

அவ்வாண்டில் நடந்த மொத்த விபத்துக்கள்—7,521

இதில் இறந்தவர்களின் தொகை—248

காயமடைந்தவர்களின் எண்ணிக்கை—4,418

அவ்வாண்டில் நடந்த மொத்த வாகன விபத்துக்கள்—11,752.

**குடிபோதையில் கார் ஓட்டாதீர்!**

விபத்துக்களுக்கு இன்னொரு காரணம், குடிபோதையில் கார் ஓட்டுவதும் ஆகும்.




இது சம்பந்தமாகச் சென்னை நகரக் காவல்துறை ஆணையாளர் திரு கே. செந்தாமரை பத்திரிகைக் குறிப்பு ஒன்றில் கூறுவதாவது:

''மது பெர்மிட் வைத்திருப்பவர்கள் மது அருந்தியவுடன் தங்களது மோட்டார் கார்களை ஓட்டிச் செல்ல வேண்டாம்.

''அண்மையில் அவ்வாறு குடித்துவிட்டு காரோட்டிய ஒருவரது கார் விபத்துக்குள்ளானது. அவருக்கு நீதிமன்றத்தில் ரூ. 1,000 அபராதம் விதிக்கப்பட்டது; அத்துடன் அவரது டிரைவிங் லைசென்சும் ரத்து செய்யப்பட்டது.

''குடிபோதையில் அல்லது போதை தரும் மருந்தை அருந்தியவுடன் மோட்டார் வாகனங்களை ஓட்டிச் செல்வதென்பது மோட்டார் வாகனச் சட்டத்திற்கு முரணானது மட்டுமல்ல, மிகப் பெரிய விபத்துக்கள் ஏற்படுவதற்கும் அல்லது மரணம் சம்பவிக்கக்கூடிய நிலை ஏற்படுவதற்கும் காரணமாகும்''.

**நிதானம் தேவை!**

பள்ளிக் குழந்தைகள் அநியாயமாகச் சாலை விபத்துக்கு ஆளாகும் அவல நிலைமையையும் நாம் அவ்வப்போது பார்க்கிறோம். சாலை விதிகள் ஓரளவு தெரிந்த பெரியோர்களே விபத்துக்கு ஆளாகிறபோது, பிஞ்சு உள்ளங்களுக்கு என்ன தெரியும்? பெற்றோர்களாகிய நாம்தான் அவர்களுக்குச் சாலை விதி முறைகளைக் கற்றுத் தர வேண்டும்.




பள்ளிகளிலிருந்து வெளியே வரும் குழந்தைகள் நாலா பக்கமும் சிதறி ஓடி வருவதை நாம் பார்க்கின்றோம். அந்தச் சமயத்தில், எங்கிருந்தோ வரும் ஒரு வண்டி மோதிவிட்டு மின்னல் வேகத்தில் மறைந்துவிடும்!

வாகனமோட்டிகள் பள்ளிகள் இருக்கின்ற இடத்தில் சற்று வேகத்தைக் குறைத்து நிதானமாகச் சென்றால் என்ன?

சாலையில் வாகனமோட்டுவோர், பாதசாரிகள் ஆகியோர் முக்கிய இடங்களில் பொருத்தப்பட்டுள்ள போக்குவரத்து விளக்கு சமிக்ஞைகளைக் (Traffic Light Signals) கண்டிப்பாய் கவனிக்க வேண்டும்.

போக்குவரத்தைக் கண்காணிக்கும் காவலரின் சைகைகளுக்கும் எல்லாரும் பணிய வேண்டும்.

**கிராமப் பகுதியில் கவனிக்க வேண்டியவை**

நகரை விட்டு கிராமப் பகுதிகளுக்குச் செல்கின்ற வாகன மோட்டிகள், சாலைப் போக்குவரத்து அடையாளக் குறிப்புகளை (Road Traffic Signs.) கவனிக்க வேண்டும். கண்ணை மூடிக்கொண்டு மின்னல் வேகத்தில் சென்றால் நம் உயிரும் மின்னல் வேகத்தில் பறிக்கப்பட்டுவிடும் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இரயில் பாதை, வளைவுப்பாதை, செங்குத்துப்பாதை, மலைப் பாதை, சாலைச்சந்திப்பு, திருப்பங்கள் முதலானவற்றைக் குறிக்கும் அடையாளக் குறிப்புகளைக் கவனித்து நடக்க வேண்டும். அதேபோல் வேகக் கட்டுப்பாட்டு இடத்திலும், 'ஹாரன் அடிக்கக் கூடாது' என்ற இடத்திலும் நாம் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

கிராமப் பகுதியில் வாகன மோட்டுவோர், எச்சரிக்கையுடன் செல்வது நல்லது. ஆடுமாடுகள் அல்லது மாட்டு வண்டிகளைத் தாண்டிச் செல்லும்போது அவர்கள் மெதுவாகத்தான் போகவேண்டும். விலங்குகளை மிரள வைக்கும் செயல் எதையும் செய்யக்கூடாது.

விலங்குகள் பயந்த சுபாவமுள்ளதால். ஹாரன் அடித்தோ, வேகத்தைக் கூட்டியோ சென்றால் அவை நாலாபக்கமும் சிதறி ஓடும். அதனால் விபத்துக்கு நாம் ஆளாக நேரிடும்.




போக்குவரத்து நிறைந்தசாலைகளுக்கு அருகில் உள்ள கிராமங்களில் வாழும் மக்கள் தங்கள் சிறு குழந்தைகளைச் சாலையில் விளையாட அனுமதிக்கக் கூடாது. அதேபோல் தங்கள் கால்நடைகளைச் சாலையின் வழியாக ஓட்டிச் செல்லும்போது, சாலையின் ஓரமாகவே ஓட்டிச் செல்ல வேண்டும்






பல கிராமங்களில் தார்ச் சாலைகளின் மேல் நெல், கடலை முதலியவைகளைக் காய வைக்கின்றார்கள். இதனால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுகிறது. இவ்வாறு செய்வதைத் தவிர்ப்பது பொதுமக்களின் கடமையாகும்.

**நில், கவனி, புறப்படு!**

சென்னைப் போக்குவரத்துத் துணை ஆணையாளர் அலுவலகத்தில் நாள்தோறும் சாலை விபத்துக்களைப் பற்றிய புள்ளி விவரம், கிரிக்கெட் பந்தய 'ஸ்கோர்' மாதிரி குறிக்கப்படுவது நமக்கெல்லாம் ஒரு எச்சரிக்கையாய் இருக்கிறது. அதேசமயம் நம் நெஞ்சம் வேதனையால் விம்முகிறது!

அஜாக்கிரதை!

அலட்சியப்போக்கு!

அவசரம்!

இவை ஆபத்துக்கு வழிவகுக்கும் என்பதை உணர்ந்து விழிப்புணர்ச்சியுடன் நாம் செயல்படுவோமானால் விபத்தென்னும் கோரப் பிடியிலிருந்து விடுபடலாம்.

அதற்கு நாம் கடைப்பிடிக்க வேண்டிய மிக முக்கியமான சாலைப்பாதுகாப்பு: விதி 'நில், கவனி, புறப்படு!' என்பது அன்றோ?

—பி. வி. கிரி.






(41-ம் பக்கத் தொடர்ச்சி.)

மற்றப் பின்தங்கியப் பிரிவினர்கள் ஆகியோருக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு புத்தகப் பாங்குகள் திறக்கப்பட்டுள்ளன.

### 20. புதிய தொழிற்பயிற்சித் திட்டம்

குறிப்பாக நலிந்த பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு பயிற்சி வசதிகளை விரிவாக்கும் நோக்கத்துடனும், அதன் மூலம் வேலைவாய்ப்பு அளிக்கும் கருத்துடனும் வேலையில்லாத இளைஞர்களுக்குப் பயனளிப்பதற்காக தொழில் பயிற்சியாளர் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. தொழில்பயிற்சி அளிப்பதற்கு மொத்தம் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் இடங்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டிருந்தது. இத்துடன் மேலும் 25 ஆயிரம் இடங்கள் ஏற்படுத்தப்பட்டு, தற்போது சுமார் ஒரு இலட்சத்து 35 ஆயிரம் இடங்கள் தொழிற் பயிற்சியாளர்களுக்கு உள்ளன. 43 புதிய வர்த்தகங்களும், 13 தொழிற்சாலைகளும் தொழில் பயிற்சியாளர் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. அவற்றைச் சேர்த்து மொத்தம் 103 வர்த்தக நிறுவனங்களிலும், 216 தொழிற்சாலைகளிலும் இந்த வசதி இப்பொழுது உள்ளது. 20 அம்சப் பொருளாதார திட்டம் அறிவிக்கப்படுவதற்கு முன்பு 40 ஆயிரம் தொழில் பயிற்சி இடங்களுக்கு மேல் பயன்படுத்தப்படாமலிருந்தன. தற்போது மேற்கொள்ளப்பட்ட சிறப்பு இயக்கத்தின் பலனாக, பெரும் முன்னேற்றம் அடையப்பட்டு, இப்பொழுது பயன்படுத்தப்படாத தொழில்பயிற்சி இடங்களே பெரும்பாலும் இல்லை என்னும் நிலை ஏற்பட்டுள்ளது. உதவிப் பண விகிதங்கள் உயர்த்தப்பட்டுள்ளன. தாழ்த்தப்பட்ட வகுப்பு, பழங்குடிப் பிரிவு ஆகியவற்றைச் சேர்ந்தவர்களுக்கும் உடல் ஊனமுற்றவர்களுக்கும், சமுதாயத்தின் மற்ற நலிந்த பிரிவினர்களுக்கும் தொழில் பயிற்சியாளர் இடங்களில் ஒரு நியாயமான பங்கு அளிக்கப்பட்டுள்ளது.

### புத்துணர்வுகள் பிறந்தன! புதிய சாதனைகள் மலர்ந்தன!

பொதுவாக, நெருக்கடி நிலைப் பிரகடனத்தினால் ஒழுங்கு, கட்டுப்பாடு, அர்ப்பணிப்பு ஆகியவற்றுக்கான புதிய உணர்வு எழுந்துள்ளது. இந்திய வரலாற்றின் நெருக்கடியான நேரத்தில் பிரதம மந்திரி அறிவித்த 20-அம்சத் திட்டம், அந்தப் புத்துணர்வுகளுக்கு மேலும் ஊக்கமளித்தது. நெருக்கடிநிலை, 20-அம்சத்திட்டம் ஆகியவற்றின் பலன்களை இப்பொழுது அனைவரும் காண்கிறோம். நெருக்கடி நிலைப் பிரகடனத்திலிருந்து அடைந்துள்ள சாதனைகளைக் கண்டு நாடு பெருமிதம் கொள்கிறது. மக்களிடையே இப்பொழுது தன்னம்பிக்கை நிறைந்துள்ளது. வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் நல்ல செயல்பாடும், மேம்பட்ட ஒழுங்குக் கட்டுப்பாடும் நிலவுகிறது.

இருபது அம்சப் பொருளாதாரத்திட்டம் நீண்டகால மற்றும் குறுகியகால அம்சங்கள் இரண்டையும் கொண்டிருக்கிறது. எனவே, இதுவரையில் அடையப்பட்ட பலன்களை ஒன்று திரட்டி நிலைப்படுத்துவதற்கும், 20-அம்சப் பொருளாதாரத் திட்டத்துக்கு மேலும் முக்கியத்துவம் அளிப்பதற்கும் உறுதியான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

## தமிழ்நாடு மின்சார வாரியம்

## ஒரு வேண்டுகோள்

சாதாரணமாக ஜூன் மாத மத்தியில் தென்மேற்குப் பருவக் காற்றால் ஏற்படும் பருவ மழை தமிழ்நாட்டில் தீவிரமாகவில்லை. எனவே நீர்த் தேக்கங்களில் நீர் சேமிப்பு, குறைந்துவிட்டது. 1975 மற்றும் 1974-ல் முறையே 1075 MV மற்றும் 505 MVவாக இருந்த சேமிப்பு தற்போது 148 MV மட்டுமே உள்ளது. எனவே நீர் மின் உற்பத்தியைக் குறைக்கவும் நீர்த் தேக்கங்களில் கிடைக்கும் நீரைச் சேமிக்கவும் அவசிய மேற்பட்டுள்ளது. **எனவே தொழிலகங்களின் மின் உபயோகத்தில் 25 முதல் 30 சதவிகிதம்வரை வெட்டை அமுலாக்க வேண்டிய அவசியம் தமிழ்நாடு அரசுக்கு ஏற்பட்டுள்ளது.** அனல் மின்நிலையங்களில் உற்பத்தியை அதிக அளவுக்கு அதிகரிக்கவும் மேற்கண்ட மின்வெட்டுடன் நிலைமையை சமாளிக்கவும் எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு உற்பத்தித்திறன் இல்லாததால், நெய்வேலி மற்றும் எண்ணூர் அனல் மின் நிலையங்களில் டர்போ செட்டுகளின் பாதுகாப்பை உறுதி செய்ய, அனுமதிக்கப்பட்டுள்ள எல்லைக்குள் அலைவெண் இருக்க வகை செய்து, தேவையில் 20 முதல் 40 சதவிகிதம் வரையும் மின்வெட்டும் அமுலாக்கப்படுகிறது.

தங்களது அவசியமற்ற மின் உபயோகத்தை நிறுத்திக் கொண்டும் மின் உபயோகத்தை குறைத்துக் கொண்டும் தமிழ்நாடு மின்சார வாரியத்துடன் அன்புடன் ஒத்துழைக்கும்படி எல்லா தொழிலதிபர்களையும் மற்றும் மின்சாரம் உபயோகிப்போர் அனைவரையும் நான் வேண்டிக் கொள்ளுகிறேன். மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட ஜெனரேட்டிங் செட்டுகளை சொந்தமாக வைத்துள்ள தொழிலதிபர்கள் முடிந்த வரை அதிகபட்ச அளவுக்கு அவைகளை உபயோகித்து மின்சார சப்ளையிலிருந்து தங்களது உபயோகத்தைக் குறைத்துக் கொள்வதின் மூலம் தற்போது நிலவும் கஷ்டமான மின்சார தட்டுப்பாடு நிலைமையை சமாளிக்க உதவும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**மின்சார பற்றுக்குறைநிலை அடிக்கடி பரிசீலிக்கப்படுகிறது தற்போதைய கட்டுப்பாடு காரணமாக தொழிலதிபர்களுக்கும் மற்றும் மின்சாரத்தை உபயோகிக்கும் மற்றவர்களுக்கும் ஏற்படும் கஷ்டங்களை குறைக்க தகுந்த நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படும்.**

S. P. அம்ப்ரோஸ்,
தலைவர்,
தமிழ்நாடு மின்சார வாரியம்.

**TNPSC Advt. No. 25**

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழு

கீழ்க்கண்ட உத்தியோகங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன:

**1. பதினைந்து உதவிப் பல்நோய் அறுவை மருத்துவர் (அசிஸ்டெண்ட் டெண்டல் சர்ஜன்கள்)** : (ஷெ. வ. மற்றும் ஷெ. ப. 3; பி. வ. 4 மற்றும் ப. போ. 8)

**சம்பளம்** : மாதத்துக்கு ரூ. 525-25-600-30-690-35-900.

**வயது**: 30 வயதுக்குக் கீழ்.

குறைந்த பட்சப் பொதுக்கல்வித் தகுதிக்கு உயர்ந்ததான பொதுக்கல்வித் தகுதி பெற்றிராத ஷெ. வ. மற்றும் ஷெ. ப. யைச் சேர்ந்த மனுதாரர்களின் விஷயத்தில் 35 வயதுக்குக் கீழ்.

**கல்வித்தகுதி** (1) பல்நோய் அறுவை மருத்துவத்தில் ஒரு பட்டம் அல்லது (2) இந்திய பல்நோய் மருத்துவக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதொரு அமைப்பின் 'L.D.S.', அல்லது L.D.S.C.' தகுதி

**2. ஐந்து கொதிகலன் ஆய்வாளர் (இன்ஸ்பெக்டர் ஆப் பாய்லர்ஸ்)** : (ஷெ. வ. மற்றும் ஷெ. ப. 1; பி.வ.-1 மற்றும் ப. போ-3

**சம்பளம்** : மாதத்துக்கு ரூ. 575-25-600-40 1,000.

**வயது** : 25 வயதுக்கு மேல் மற்றும் 35 வயதுக்குக் கீழ். குறிப்பு:
குறைந்தபட்ச வயது வரம்பு 25 வயது என்பது ஷெ. வ., ஷெ. ப. மற்றும் பி.வ ஆகியோருக்கும் பொருந்தும். குறைந்த பட்ச பொதுக்கல்வித் தகுதி உயர்ந்ததான பொதுக்கல்வித் தகுதி பெற்றிராத ஷெ. வ. மற்றும் ஷெ. ப. யைச் சேர்ந்த மனுதாரர்கள் விஷயத்தில்: 40 வயதுக்குக் கீழ்.

**கல்வித்தகுதி** : (1) மெகானிகல் இஞ்ஜினீரிங்கில் ஒரு பட்டம் பெற்றிருத்தல் அல்லது இந்தியாவைச் சேர்ந்த 'இன்ஸ்டிடியூஷன் ஆஃப் மெகானிகல் இஞ்ஜினியர்ஸின் அஸோஸியேட் மெம்பர்ஷிப் எக்ஸாமினேஷனில்' தேறியிருத்தல் அல்லது இஞ்சினியராக முதல் வகுப்பு 'போர்ட் ஆஃப் டிரேட் சர்டிபிகேட் ஆஃப்காம்பிடென்ஸி, பெற்றிருத்தல் மற்றும் (2) ஸ்டீம் இஞ்ஜின்கள் மற்றும் பாய்லர்களின் டிசைன் கன்ஸ்ட்ரக்ஷன், ரிப்பேர், பராமரிப்பு மற்றும் அவற்றை வேலைசெய்ய வைப்பதில் செய்முறை இஞ்ஜினியராக இருந்து ஒரு வருட காலத்துக்குக் குறையாமல் அனுபவம் பெற்றிருத்தல். அந்த அனுபவ காலத்தில் அவர் ஒரு ஸ்டீம் ஜெனரேஷன் பிளாண்ட் அல்லது 'பேட்டரி ஆப் பாய்லர்ஸ்' கொண்டதான பாய்லர் பிளாண்டை தமது பொறுப்பில் ஏற்றிருக்க வேண்டும். இரண்டில் எந்த ஒரு பிளாண்டின் மொத்த உற்பத்தி திறனும் மணி ஒன்றுக்கு 15,000 பவுண்டுக்குக் குறையாமல் நீராவி உற்பத்தி செய்யக் கூடியதாக இருக்க வேண்டும்.

**3. இருபது நல்வாழ்வு அலுவலர்கள் (ஹெல்த் ஆபீசர்கள்)** (ஷெ. வ. மற்றும் ஷெ. ப. 3; பி.வ.-6: மற்றும் ப. போ.-11)

**சம்பளம்** : மாதத்துக்கு ரூ. 700-40-1,100-இத்துடன் 'பிராக்டிஸ்' செய்யாதிருப்பதற்கான மாதாந்தர அலவன்ஸ் ரூ.100

**வயது** : 35 வயதுக்குக் கீழ்.
குறைந்தபட்சப் பொதுக் கல்வி யோக்கியதாம்சத்துக்கு உயர்ந்ததான பொதுக் கல்வி யோக்கியதாம்சம் பெற்றிராத ஷெ.வ. மற்றும் ஷெ. ப. யைச் சேர்ந்த அபேட்சகர்களின் விஷயத்தில் 40 வயதுக்குக் கீழ்.

**கல்வித்தகுதி**: (1)B.Sc., பட்டம் அல்லது கல்கத்தா பல்கலைக் கழகத்தின் 'டிப்ளமா இன் பப்ளிக் ஹெல்த்' அல்லது (2) சென்னையிலுள்ள மருத்துவக் கல்லூரியில் ஒரு வருடத்துக்குக் குறையாத காலத்துக்கு 'சானிடரி சயன்ஸின்' விசேஷ பயிற்சி வகுப்புத் தொடர் ஒன்றில் பயின்றிருந்து, அந்த பயிற்சி வகுப்புத் தொடரின் இறுதியில் நடைபெற்றதான 'லைசென்ஸியேட் இன் பப்ளிக் ஹெல்த்' பரிட்சை தேறியிருப்பதற்கான சர்ட்டிபிகேட் அல்லது (3) தேவைப்படும் எண்ணிக்கை வரையில் முழு தகுதி பெற்றுள்ள மனுதாரர்கள் கிடைக்காமல் போனால், 'M.B.B.S.' பட்டம் பெற்றுள்ளவர்கள் அல்லது 'டிப்ளமா இன் மெடிஸின் அண்ட் சர்ஜரி' பெற்றுள்ளவர்கள் அல்லது சென்னையிலுள்ள மருத்துவக் கல்லூரியில் 'போர்ட் ஆஃப் எக்ஸாமினர்ஸ்' வழங்கியுள்ள 'L. M. P.' டிப்ளமா பெற்றுள்ளவர்கள் ஆகியோரின் விண்ணப்பங்கள்-அபேட்சகர்களுக்கான தகவலில் அறிவிக்கப்பட்டுள்ள சில நிபந்தனைக்குட்பட்டு-தேர்வு செய்யப்படுவதற்காக பரிசீலிக்கப்படும்.

**4. (1) மூன்று இளநிலை விரிவுரையாளர்கள் (ஜூனியர் இன்ஸ்ட்ரக்டர்கள்) (மெகானிகல்)**-அரசினர் பல்துறைத் தொழிற் பயிற்சி கல்லூரிகளுக்காக . (ஷெ. வ. மற்றும் ஷெ. ப. 1; மற்றும் ப. போ. 2)

**(2) நான்கு முதுநிலை விரிவுரையாளர்கள் (சீனியர் இன்ஸ்ட்ரக்டர்கள்) (எலக்ட்ரானிக்ஸ்,)** — அரசினர் பல்துறைத் தொழிற் பயிற்சிக் கல்லூரிகளுக்காக— மற்றும் ஒரு முதுநிலை விரிவுரையாளர் (காஸ்ட்யூம் டிஸைனிங் அண்ட் டிரெஸ் மேக்கிங்)-பெண்களுககான பல்துறை தொழிற் பயிற்சி கல்லூரியில் (பி.வ. 2 மற்றும் ப. போ. 3)

**(3) ஒரு இணை விரிவுரையாளர் (அசோசியேட் லெக்சரர்)**-காஸ்ட்யூம் டிஸைனிங் அண்ட் டிரெஸ் மேக்கிங்கில்-பெண்களுக்கான பல்துறைத் தொழிற் பயிற்சிக் கல்லூரிக்காக (ஷெ. வ. மற்றும் ஷெ. ப. 1.)

குறிப்பு: பெண்களுக்கான அரசாங்க பல்துறைத் தொழிற் பயிற்சிக் கல்லூரியில் உள்ள காலி ஸ்தானங்களுக்குப் பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியுள்ளவர்களாவர். மற்ற காலி ஸ்தானங்களுக்கு ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இருபாலருமே விண்ணப்பிக்கத் தகுதியுள்ளவர்களாவர்.

**சம்பளம்** : இளநிலை விரிவுரையாளர்—மாதத்துக்கு ரூ. 325-15-550.
முதுநிலை விரிவுரையாளர்-மாதத்துக்கு ரூ. 400-15-475-20-575-25-650.
இணை விரிவுரையாளர்-மாதத்துக்கு ரூ. 475-25-650-30-800.

**வயது** : (1) இளநிலை விரிவுரையாளர் (மெக்கானிகல்)-27 வயதுக்குக் கீழ்.
(2) முதுநிலை விரிவுரையாளர் (எலக்ட்ரானிக்ஸ்)-30 வயதுக்குக் கீழ்.
(3) முதுநிலை விரிவுரையாளர் மற்றும் காஸ்ட்யூம் டிஸைனிங் அண்ட் டிரெஸ் மேக்கிங்கில் இணை விரிவுரையாளர்-பெண்களுக்கான பல்துறைத் தொழிற் பயிற்சிக் கல்லூரிகளில் 36 வயதுக்குக் கீழ்.

**கல்வித் தகுதி** : (1) இளநிலை விரிவுரையாளர் (மெகானிகல்)—மெகானிகல் இஞ்ஜினீரிங்கில் ஒரு பேச்சலர்ஸ் டிகிரி.

(2) முதுநிலை விரிவுரையாளர் (எலக்ட்ரானிக்ஸ்)—எலக்ட்ரானிக்ஸ் இஞ்ஜினீரிங்கில் ஒரு முதல் வகுப்பு பேச்சலர்ஸ் டிகிரி.

(3) முதுநிலை விரிவுரையாளர் (காஸ்ட்யூம் டிஸைனிங் அண்ட் டிரெஸ் மேக்கிங்)-

(1) டெக்ஸ்டைல் டெக்னலஜியில் ஒரு முதல் வகுப்பு அல்லது இரண்டாவது வகுப்பு பேச்சலர்ஸ் டிகிரி அல்லது க்ளோத்திங் மற்றும் டெக்ஸ்டைல் துறையுடன் கூடிய ஹோம் சயன்ஸில் ஒரு மாஸ்டர்ஸ் டிகிரி. அல்லது (2) (i) ஆர்ட்ஸ், சயன்ஸ் அல்லது காமர்ஸில் ஒரு டிகிரி பெற்றிருந்து, சென்னையில் உள்ள அரசினர் தொழில் நுட்பத் தேர்வுகள் ஆணையாளரால் அல்லது லண்டனைச் சேர்ந்த 'டெய்லர் அண்ட் கட்டர் அகாடமியால்' அல்லது பூனாவிலுள்ள 'படாஸ்கர் இன்ஸ்டிடியூட்டால் அல்லது பம்பாயிலுள்ள 'கமர்ஷியல் டெய்லரிங் காலேஜால்' வழங்கப்பட்டதான 'கட்டிங் அண்ட் டெய்லரிங்' (ஹையர் கிரேடு) சர்ட்டிபிகேட் ஒன்றோ அல்லது டிப்ளமாவோ பெற்றிருக்க வேண்டும். மற்றும்.

(ii) தையல் தொழில் நடத்தும் ஸ்தாபனம் ஒன்றில் அல்லது உடைகள் உருவாக்கல் (க்ளோத்திங்), தையல் தைத்தல் (டெய்லரிங்) மற்றும் பூத்தையல் தைத்தல் (எம்பிராய்டரி) ஆகிய பாடத்துறைகளைப் போதிப்பதில் இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாமல் செய்முறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும். அல்லது

(3) (i) 'க்ளோத்திங் மற்றும் டெக்ஸ்டைல்ஸ்' பாடத்துறைகளுடன் 'ஹோம் சயன்ஸில்' ஒரு முதல் வகுப்பு அல்லது இரண்டாவது வகுப்பு பேச்சலர்ஸ் டிகிரி பெற்றிருக்க வேண்டும். மற்றும்

(ii) பெண்களுக்கான பாலிடெக்னிக் ஒன்றில் இன்ஸ்ட்ரக்டர் அந்தஸ்துக்குக் குறையாத பதவியில் இருந்து அல்லது மற்ற ஸ்தாபனத்தில் அதற்கு சமமான . கிரேடு பதவியில் இருந்து. போதனை மற்றும் அல்லது தயாரிப்பில் (teaching and/or Production ) இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாமல் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(4) இணை விரிவுரையாளர் — 'காஸ்ட்யூம் டிஸைனிங் அண்ட் டிரெஸ் மேக்கிங்கில்
(i) 'டெக்ஸ்டைல் டெக்னலஜியில் ஒரு முதல் வகுப்பு அல்லது இரண்டாவது வகுப்பு 'பேச்சலர்ஸ் டிகிரி' அல்லது 'க்ளோத்திங் மற்றும் டெக்ஸ்டைல்ஸ்' பாடத்துறைகளுடன் 'ஹோம் சயன்ஸில்' ஒரு 'மாஸ்டர்ஸ் டிகிரி' பெற்றிருக்க வேண்டும். அல்லது
(2) (i) ஆர்ட்ஸ் சயன்ஸ் அல்லது காமர்ஸில் ஒரு டிகிரி பெற்றிருந்து சென்னையிலுள்ள அரசினர் தொழில் நுட்பத் தேர்வுகள் ஆணையாளரால் அல்லது லண்டனைச் சேர்ந்த 'டெய்லர் அண்ட் கட்டர் அகாடமியால்' அல்லது பூனாவிலுள்ள 'படாஸ்கர் இன்ஸ்டிடியூட்டால்' அல்லது பம்பாயிலுள்ள 'கமர்ஷியல் டெய்லரிங் காலேஜால்' வழங்கப்பட்டதான 'கட்டிங் அண்ட் டெய்லரிங்கில்' ஒரு ஹையர் கிரேடு சர்ட்டிபிகேட் அல்லது டிப்ளமோ பெற்றிருக்க வேண்டும். மற்றும்
(ii) டிசைன் செய்தல், தயாரித்தல் அல்லது போதனை செய்வதில் (design production or teaching) பிரபல ஸ்தாபனம் ஒன்றில் இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாமல் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**முடிவுத் தேதி : 1—9—76.**

வயது வரம்பு: 1-7-1976 அன்று உள்ளபடி.

சுருக்கச் சொற்கள்: ஷெ. வ. —ஷெட்யூல் வகுப்பு; ஷெ. ப.—ஷெட்யூல் பழங்குடி; பி.வ.—பின் தங்கிய வகுப்பு; ப. போ.—பகிரங்கப் போட்டி.

குறிப்பு: பகிரங்கப் போட்டிக்குரிய காலி ஸ்தானங்களுக்கு ஷெ. வ., ஷெ. ப., மற்றும் பி.வ. க்களைச் சேர்ந்த அபேட்சகர்களுங்கூட, தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவதற்கு அருகதையுடையவர்களாவர்.

விவரங்களுக்கும் விண்ணப் பாரத்துக்கும் சுயவிலாசம் எழுதிய உறையின் தலைப்பில் உத்தியோகத்தின் பெயரைக் குறிப்பிட்டுப் போதிய அஞ்சல் தலை (70 பைசா அஞ்சல் தலை) ஒட்டிய உறை (23 செ.மீ. நீளமுள்ள) ஒன்றை இணைத்துச் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழு, அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை — 600002 அவர்களுக்கு எழுதிக் கேட்கவும்.

ஷெ. வ., ஷெ. ப. மற்றும் பி.வ. இராணுவத்திலிருந்து விடுவிக்கப்பட்ட சிப்பந்திகள் முதலியோருக்கு வயது மற்றும் அல்லது கல்வி யோக்கியதாம்சங்களின் விஷயத்தில் அனுமதிக்கப்படும் சலுகைகள், குறித்த விவரம் அபேட்சகர்களுக்கான குறிப்புரைகளில் கொடுக்கப்பட்டுள்ளது.

செயலாளர்,
**தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வு ஆணைக்குழு.**

DIPR/35596/76

## வறட்சிப் பகுதியில் வாடும் மக்களின் துயர் துடைப்பதற்காக....

தமிழ்நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் துயர் துடைப்புப் பணிகளுக்காக இதுவரையில் நாலரைக் கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்கள் ஏறத்தாழ ஒரு இலட்சம் பேருக்கு இந்தத் துயர் துடைப்புப் பணிகளின் மூலம் வேலைவாய்ப்புக் கிட்டி உள்ளது.

மாநிலம் முழுவதும் குடிநீர்த் தட்டுப்பாடு உள்ள இடங்களில் சுமார் நாலாயிரம் கிணறுகளை ஆழப்படுத்த ஒரு கோடி ரூபாய்க்கான திட்டமொன்றிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மிகவும் பாதிப்புக்கு உட்பட்டு உள்ள திருநெல்வேலி மாவட்டத்தின் குடிநீர்ப் பிரச்சினையைக் கவனிக்க 600 ஆழ்துளைக் கிணறுகள் தோண்டத் திட்டமிடப்பட்டது. ஆனால், நிர்ணயிக்கப்பட்ட இலக்குக்கும் மேலாக 686 ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. ஜூன் மாதத்திலிருந்து செப்டம்பருக்குள் மாநிலம் முழுவதும் 3,900 ஆழ்துளைக் கிணறுகள் தோண்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதில், நெல்லை மாவட்டத்தில் மட்டும் 900 கிணறுகள் தோண்டப்படும்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் நகரப் பகுதிகளில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்களுக்காகத் தமிழ்நாடு அரசு 39 நகராட்சிகளுக்கு 54 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கி உள்ளது. இதில் நெல்லை மாவட்டத்திற்கு மட்டும் ரூபாய் 20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வறட்சியால் பாதிக்கப்பட்டப் பகுதிகளில் ஏப்ரல் மாதத்திலிருந்து செப்டம்பர் மாதம் வரை நிறைவேற்றப்படும் குடிநீர் வழங்கு திட்டங்களுக்காக ரூபாய் 8 கோடி செலவிடப்படும். கிராம, நகர குடிநீர் வழங்குத் திட்டங்கள், குடிநீர்க் கிணறுகள் ஆழப்படுத்துவது ஆகியவற்றுக்காக இது செலவிடப்படும். செப்டம்பருக்குப் பிறகு நிலைமை மேலும் பரிசீலிக்கப்படும். பிரச்சினையின் தன்மையை மத்திய அரசு நன்கு உணர்ந்துள்ளது.

வறட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படும் பணிகள், நிரந்தரப் பலன் தரத்தக்கதாக இருக்க வேண்டும் என்பது அரசின் கருத்து.

சாலை அமைப்பு, பராமரிப்புக்கான 900 பணிகள் ரூபாய் ஒரு கோடியே 64 இலட்சம் செலவிலும், 1100 சிறுபாசன மேம்பாட்டு வேலைகள் ரூபாய் 3 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவிலும், மண்வளப் பாதுகாப்புப் பணிகள் 1 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களின் துயர் துடைக்க அரசு திட்டங்கள் முனைப்புடன் அமல் நடத்தப்படும்.

(19-7-'76 அன்று ஆளுநர் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் செய்தியாளர்களிடையே தெரிவித்த கருத்துக்கள்.


## சேலம் மத்திய கூட்டுறவு வங்கி (வரை) எண் 151.
## சேலம்-1.

தபால் பை எண். 171 | தொலைபேசி எண் : 2402

கிளைகள் : நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி, சேந்தமங்கலம், கொங்கணாபுரம் சிறப்பு அங்காடி, சேலம் கடைவீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்ப்பேட்டை, பெத்தநாய்க்கன்பாளையம், மேட்டூர் டேம், நாமகிரிப்பேட்டை, கொண்டலாம்பட்டி, மல்லூர், தலைவாசல், எருமைப்பட்டி, வாழப்பாடி, ஏற்காடு, எளம்பிள்ளை, மகுடஞ்சாவடி.

சொந்த நிதி ரூ. 327 லட்சம். | நடைமுறை மூலதனம் 1711 லட்சம்.

### வட்டிவிகித அட்டவணை

| | | |
|---|---|---|
| கால் டெபாசிட்டுகள் : | ரூ. 5,000/-க்கும் அதற்கு மேலும் (முன் அறிவிப்பு இல்லாமல்) | 3¼% |
| | ரூ. 10,000/-க்கும் அதற்கு மேலும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்) | 3½% |
| சேவிங்ஸ் டெபாசிட்டுகள் : | ரூ. 1,000/-க்கும் அதற்கு மேலும் | |
| | 15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்களுக்கும் | 3% |
| | 46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்களுக்கும் | 3½% |

பிக்செட் டெபாசிட்டுகள் : ரூ. 50/-ம் அதற்கு மேற்பட்ட பிக்செட் டெபாசிட்டுகளுக்கு :

| | | |
|---|---|---|
| 1. | 91 நாட்களுக்கும் அதற்குமேல் 6 மாதத்திற்குள் | 6% |
| 2. | 6 மாதத்திற்கும் அதற்குமேல் 9 மாதத்திற்குள் | 6½% |
| 3. | 9 மாதத்திற்கும் அதற்குமேல் 12 மாதத்திற்குள் | 7½% |
| 4. | 12 மாதத்திற்கும் அதற்குமேல் 36 மாதத்திற்குள் | 8½% |
| 5. | 36 மாதத்திற்கும் அதற்குமேல் 60 மாதத்திற்குள் | 9½% |
| 6. | 61 மாதத்திற்கும் அதற்குமேலும் | 10½% |

சேமிப்புக் கணக்கு 6%

ரூ. 5000/-க்கு மேற்கொண்டு பிக்செட் டெபாசிட் போடுபவர்களுக்கு இலவச பாதுகாப்பு பெட்டக வசதி உண்டு. பிக்செட் டெபாசிட்டுகளின்மீது மாதாந்திர வட்டி உண்டு. ரெக்கரிங், பிராவிடெண்ட் டிபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்புகொள்க.


# தமிழ்நாடு நகர நில உச்சவரம்பு சட்டம்



இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் தமிழ்நாடு நகர நில உச்சவரம்பு மற்றும் ஒழுங்கு முறைச் சட்டம், 1976-ஐ, 3-8-1976 அன்று பிறப்பித்தார். இச் சட்டம் மத்திய நகர நில உச்ச வரம்புச் சட்டத்தின் மாதிரியிலேயே அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டம் உடனடியாக அமலுக்கு வந்துள்ளது.

தமிழ்நாட்டின் கீழ்க்கண்ட பகுதிகளில் இந்தச் சட்டம் அமலுக்கு வந்திருக்கிறது:

(1) சென்னை நகரப் பகுதி—8 கிலோ மீட்டர் (சுமார் ஐந்து மைல்) சுற்றுப்பகுதி உள்பட. (இது 'ஏ' வகையைச் சேர்ந்தது).

(2) மதுரை நகரப்பகுதி—5 கிலோ மீட்டர் (சுமார் 3-1/8 மைல்) சுற்றுப்பகுதி உள்பட (இது 'சி' வகையைச் சேர்ந்தது).

(3) கோயமுத்தூர் நகரப் பகுதி—5 கிலோ மீட்டர் (சுமார் 3-1/8 மைல்) சுற்றுப் பகுதி உள்பட (இது 'சி' வகையைச் சேர்ந்தது).

(4) சேலம் நகரப் பகுதி—5 கிலோ மீட்டர் (சுமார் 3-1/8 மைல்) சுற்றுப் பகுதி உள்பட (இது 'சி' வகையைச் சேர்ந்தது).

(5) திருச்சிராப்பள்ளி நகரப் பகுதி—5 கிலோ மீட்டர் (சுமார் 3-1/8 மைல்) சுற்றுப் பகுதி உள்பட. (இது 'சி' வகையைச் சேர்ந்தது).

(6) திருநெல்வேலி நகரப்பகுதி—ஒரு கிலோ மீட்டர் (சுமார் 5/8 மைல்) சுற்றுப் பகுதி உள்பட (இது 'டி' வகையைச் சேர்ந்தது).

நகரங்களில் உள்ள நிலம் ஒரு சிலரின் கையில் குவியாது தடுக்கவும், அதில் ஹேஷ்ய பேரங்களுக்கும், இலாப வியாபாரங்களுக்கும் இடமளிக்காமல் செய்யவும், பொது நலன்களுக்கு உகந்த முறையில் நேர்மையாக நிலம் விநியோகம் ஆகுமாறு செய்யவும் மேற்கண்ட 6 நகர்களிலும் உள்ள காலி இடங்களுக்கு இந்தச் சட்டம் உச்ச வரம்பு நிர்ணயம் செய்கிறது. உச்சவரம்புக்கு மேல் உள்ள நிலத்தை ஆர்ஜிதம் செய்ய வகை செய்கிறது. இப்படிப்பட்ட நிலத்தில் கட்டிடங்கள் கட்டுவதையும் ஒழுங்குபடுத்துகிறது.

நகர வகைகளை அனுசரித்து இந்தச் சட்டத்தில் வெவ்வேறு விதமான உச்சவரம்புகள் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு நகரப் பகுதியிலும் ஒருவர் அதிகப்படியாக வைத்திருக்கக் கூடிய காலி நிலங்களுக்குரிய உச்சவரம்பு கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

''ஏ'' வகை— சென்னை-500 சதுர மீட்டர். (சுமார் 5,280 சதுர அடி)

''சி'' வகை— மதுரை, சேலம், கோயமுத்தூர், திருச்சி— 1,500 சதுர மீட்டர். (சுமார் 15,840 ச. அடி.

''டி'' வகை— திருநெல்வேலி—2,000 சதுர மீட்டர். (சுமார் 21,120 ச. அடி.)

உச்ச வரம்புக்கு மேல் காலி நிலம் வைத்திருக்கும் ஒவ்வொருவரும் குறிப்பிட்ட படிவத்தில் ஓர் அறிக்கையை சம்பந்தப்பட்ட அதிகாரி முன்னிலையில் சமர்ப்பிக்க வேண்டும்.

10 ஆண்டுகளாக நகரப் பகுதியில் இருந்து முக்கியமாக விவசாயத்துக்காகப் பயன்படுத்தும் நிலத்தைக் கூட, சம்பந்தப்பட்ட அதிகாரியின் முன் அனுமதியில்லாமல், விற்பனை செய்வதையும், அடமானம் வைப்பதையும், வெகுமதியாக அளிப்பதையும், அல்லது 10 ஆண்டுகளுக்கு மேல் குத்தகைக்கு விடுவதையும் இந்தச் சட்டம் தடை செய்கிறது.

குடியிருப்புக்காகக் கட்டப்படும் கட்டிடப் பகுதியின் பரப்பு சென்னையில் 300 சதுர மீட்டர் (சுமார் 3,170 சதுர அடி) அளவுக்கு மேல் போகக் கூடாது என்றும், மற்ற நகர்களில் அது 500 சதுர மீட்டர் (சுமார் 5,280 சதுர அடி) பரப்புக்கு மேல் போகக் கூடாது என்றும் இந்தச் சட்டம் தடை செய்கிறது.

மத்திய சட்டத்திலிருந்து தமிழ்நாடு நகர நில உச்சவரம்புச் சட்டம் இரண்டு அம்சங்களில் மாறுபடுகிறது. முதலாவதாக, ஒரு குறிப்பிட்ட நகரப் பகுதிக்குள் ஒரு கிராமத்தின் பகுதியோ அல்லது ஊராட்சி நகரத்தின் பகுதியோ வந்தால், அது முழுவதுமே முற்கூறப்பட்ட நகரப் பகுதிக்குள் வந்ததாகக் கருதப்படும்.

இரண்டாவதாக நகரப்பகுதிக்குள், சம்பந்தப்பட்ட அதிகாரியின் முன் அனுமதி இல்லாமல் விவசாய நிலமாற்றம் நடைபெறுவது தடை செய்யப்பட்டிருக்கிறது.




## தமிழ்நாடு அரசு நிதித்துறை. சென்னை.

# முக்கிய அறிவிப்பு

தமிழ்நாடு அரசின் நிதித்துறையின் அறிவிப்பு எண் 21 (எல்) டபிள்யு. எம். 1/64 நாள் 4-8-1964-ன் படி வெளியிடப்பட்ட '$4\frac{3}{4}$ சத சென்னை கடன் (Madras loan), 1976-ல் நிலுவையிலுள்ள மீதியை 24-8-1976 அன்று, சேர வேண்டிய எல்லா வட்டியுடன் 23-8-1576க்குள்ள வட்டியையும் சேர்த்து திருப்பிக் கொடுக்கப்படும். இக்கடனுக்கு 24-8-1976-க்குப் பிறகு வட்டி கிடையாது. ஆனால் கீழே பாரா 2-ல் கண்ட விதிவிலக்குக்கு வட்டி உண்டு.

2. இந்த ஆண்டில் வெளியிடப்பட விருக்கும் புதிய பகிரங்கக் கடன் பற்றிய விதிமுறைகளை தமிழ்நாடு அரசு, விரைவில் அறிவிக்கும். $4\frac{3}{4}$ சத சென்னை கடன், 1976-ஐ வழங்கியுள்ளவர்கள், அதைப் புதிய கடனுக்கு மாற்றிக் கொள்ள விருப்பம் தெரிவிக்கலாம். இவ்வாறு விருப்பம் தெரிவித்து மாற்றிக் கொள்பவர்கள், அவர்களுடைய உடைமைக்குப் புதிய கடன் வெளியிடப்படும் நாளுக்கு முந்திய நாள் வரைக்கும் வட்டி பெறலாம். அவ்வாறு வழங்கப்படும் வட்டி, முடிவடைந்த கடனுக்கு வழங்கப்பட்ட வட்டி விகிதத்திற்குக் குறையாமல் இருக்கும். எனவே இவ்வாறு மாற்றிக் கொள்ள விரும்பும் உடைமையாளர்கள், தாங்கள் வழங்கிய கடன் தொகையைத் திருப்பிப் பெறுவதற்காகத் தங்களிடம் உள்ள அரசுக் கடன் ஆவணங்களை இந்த நிலையில் கொடுக்கக் கூடாது.

3. $4\frac{3}{4}$ சத சென்னை கடன் 1976 உடைமையைக் கொடுத்து பணம் பெற விரும்புகின்றவர்கள், உரிய தேதியில் பணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்கு வசதியாக, தங்களிடமுள்ள அரசுக் கடன் ஆவணங்களை, அரசுக் கடன் அலுவலகம், கருவூலம், துணைக்—கருவூலம், அல்லது ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் கிளை அல்லது வட்டி பெறுவதற்காக ஒப்படைக்கப்பட்ட பதிவு செய்யப்பட்டுள்ள ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் துணை வங்கிகளில் 18-8-1976 அன்று அல்லது அதன் பிறகு ஒப்படைக்கலாம். பணத்தைத் திருப்பிப்பெற அரசுக்கடன் ஆவணங்களின் பின்னால் பின் கண்டவாறு எழுத வேண்டும்.

(அ) கடன் உறுதிச் சீட்டுகளைப் (பிராமிசரி நோட்டுகளை) பொறுத்தவரையில்,

''இந்த உறுதிச் சீட்டின் முதலைப் பெற்றுக்கொண்டேன்''

(ஆ) ஸ்டாக் சர்ட்டிபிகேட்டைப் பொறுத்த வரையில்,

''இந்த ஸ்டாக் சர்ட்டிபிகேட்டின் முதலைப் பெற்றுக் கொண்டேன்''

கருவூலப்பணிகள் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் ஒரு கிளையால் அல்லது அதனுடைய துணை வங்கியில் மேற்கொள்ளப்படும் இடங்களில், அரசுக்கடன் ஆவணங்கள் ஸ்டாக் சர்ட்டிபிகேட் வடிவில் இருப்பின், அவைகளை சம்பந்தப்பட்ட வங்கியின் கிளையிலேயே கொடுக்க வேண்டுமே அல்லாது கருவூலத்திலோ துணைக் கருவூலத்திலோ அல்ல என்பதைக் குறிப்பாக அறிந்து கொள்ள வேண்டும்.

பணத்தைத் திருப்பிப் பெறுவதற்காக அரசுக்கடன் ஆவணங்களை என்பேஸ் செய்துள்ள இடத்தில் அல்லாமல் வேறு இடத்தில் பணத்தைப் பெற விரும்பினால், ஆவணங்களை சம்பந்தப்பட்ட அரசுக் கடன் அலுவலகத்திற்கு முறையாக பதிவு செய்தும் இன்ஷ்யூர் அஞ்சலிலும் அனுப்ப வேண்டும்.

தமிழ்நாட்டிலுள்ள கருவூலம்/துணைக்கருவூலம் அல்லது கருவூலப் பணியாற்றிடும் ஸ்டேட் பாங் ஆப் இந்தியாவின் கிளை அல்லது ஸ்டேட் பாங் ஆப் இந்தியாவின் துணை வங்கிகளில் மாற்றிக் கொள்ளக் கூடிய பண வரைவாக (டிராப்ட்) அரசுக்கடன் அலுவலகம் கடனைத் திருப்பி வழங்கும்.

எஸ். குகன்,
அரசுச் செயலாளர்.

DIPR/34736/76

## வட ஆர்க்காடு, தருமபுரி மாவட்டங்களில் வறட்சி நிவாரணப் பணிகள்!

வட ஆர்க்காடு, தருமபுரி ஆகிய இரு மாவட்டங்களுக்கும் வறட்சி நிவாரணப் பணிகளுக்கெனத் தமிழ்நாடு அரசு ரூ. 8.90 இலட்சத்தினைச் செலவிட அனுமதித்துள்ளது. இதில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் குடியாத்தம் மற்றும் கே. வி. குப்பம் ஊராட்சி ஒன்றியங்களில் சாலை அமைப்புப் பணிகளுக்கென ரூ. 3.90 இலட்சமும், தருமபுரி மாவட்டத்தில் 20 குளங்கள் தோண்டும் பணிகளுக்கென ரூ. 5.00 இலட்சமும் செலவிடப்படும். மாவட்டங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் வாழும் விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வசதிகளைப் பெருக்கும் வகையில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# கண் கவர் உயர் வட்டி காணீர்!

நான்கு ஆண்டுகளும் அதற்கு மேலும்

**13%**

| ஒரு ஆண்டிலிருந்து இரண்டு ஆண்டுக்குள் | இரண்டு ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுக்குள் | மூன்று ஆண்டிலிருந்து நான்கு ஆண்டுக்குள் |
|---|---|---|
| $11\frac{1}{2}$% | 12% | $12\frac{1}{2}$% |

எங்களிடம் போடப்படும் வைப்புத் தொகைக்கு (FIXED DEPOSITS) கவர்ச்சி மிக்க உயர் வட்டியும், பாதுகாப்பும் அளிக்கப்படுகிறது. காரணம், எங்களது நிறுவனம் தமிழக அரசுக்குச் சொந்தமானது.

**தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம்,**
(தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானது)
5 கிரீம்ஸ் ரோடு, ஆயிரம் விளக்கு,
சென்னை-600 006

சுகவனேஸ்வர், ஐ.ஏ.எஸ்.
நிர்வாக இயக்குநர்

சேமிப்பு பாதுகாப்பாக இருக்க எம்மிடம் சேமியுங்கள்!


## கொத்தடிமையிலிருந்து விடுதலை பெற்ற தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு!

கொத்தடிமைத் தொழிலினின்று விடுதலை பெற்ற தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளித்திடும் பணியில், தமிழ்நாடு அரசு அதிக அக்கறையும், ஆர்வமும் காட்டி வருகின்றது. விடுதலை அடைந்த கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு விவசாய நிலங்கள் வழங்கும் பணியினை அரசு மேற்கொண்டு வருகின்றது. தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிலங்களில் உற்பத்திப் பணிகளை மேற்கொள்வதற்கென இவர்களுக்கு உதவித்தொகை, கடன் போன்ற பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் 1-8-1976-ஆம் நாள் வரையில் கொத்தடிமைத் தொழில் முறையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 2,400 ஆகும். இவர்களில் ஏற்கனவே 1,000 தொழிலாளர்களுக்கு நில ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டன. மற்றவர்களுக்கு நிலம் ஒதுக்கீடு செய்வதில் அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு அரசு, நாட்டுடைமையாக்கப்பெற்ற வங்கிகளுடன் கூட்டாகச் சேர்ந்து நிதி உதவி வழங்கும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. மறுவாழ்வுப் பணிகளுக்கென ரூ. 10 இலட்சத்திற்கான திட்டம் ஒன்றினைத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு குடும்பத்திற்கும ரூ. 7,250 வழங்கப்படும். இதில் மூன்றில் ஒரு பங்கினை அரசு உதவித்தொகையாகவும், மீதமுள்ளதை நாட்டுடைமையாக்கப் பெற்ற வங்கிகள் கடனாகவும் வழங்கும்.

இந்தப் பணிகள் அனைத்தும் மாவட்ட ஆட்சியாளர் பொறுப்பில் நடைபெறும். இதற்கென வட்டாட்சியர் தகுதியிலுள்ள தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். கொத்தடிமைத் தொழில் முறையினின்று விடுதலை பெற்ற தொழிலாளர்கள் இந்த உதவிகளைப் பெறுவதற்கும், அவர்கள் உழவு மாடுகள் மற்றும் வேளாண்மைச் சாதனங்களைப் பெறுவதற்கும் இந்தத் தனி அலுவலர்கள் துணை புரிவார்கள்.




# கோ-ஆப்டெக்ஸ் மக்கள் விரும்பும் வகைகள்! நியாயமான விலைகள்!



கோ-ஆப்டெக்ஸ் சேலைகள்,
**அழகு மிளிரும் ஆரணங்குகள்!**
ஆரணி, கும்பகோணம், காஞ்சிபுரம் அசல் பட்டுச் சேலைகள், உறையூர், கோயமுத்தூர், சேலம், மதுரை பருத்தி கைத்தறிச் சேலைகள், அச்சிட்ட சுங்கடி சேலைகள் மற்றும் சின்னாளப்பட்டி சேலைகள்.



கோ-ஆப்டெக்ஸ்
**படுக்கை விரிப்புகள், மலர்ப் படுக்கைகள்!**
நேர்த்தியான நெசவு கைத்தறிப் படுக்கை விரிப்புகள் மற்றும் தலையணை உறைகள். உங்களுக்கு சொகுசு அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
**துவாலைகள், தூய்மையான துவாலைகள்!**
சாதா, டர்கிஷ் வகைகள், மென்மையான மற்றும் ஈரத்தை உறிஞ்சும் வகைகள். உங்களது சுகாதாரத்துக்கு இன்றியமையாதவை!



கோ-ஆப்டெக்ஸ்
**லுங்கிகள், வசதியானவை நீடித்துழைப்பவை!**
உங்கள் விருப்பத்துக்குகந்த சாதா, கோடிட்ட அல்லது கட்டமிட்ட பல வகைகளில்.

மற்றும் கைத்தறிப் பருத்தி வகைகள், வேட்டிகள், உடுப்புகளுக்கான துணிகள், அலங்காரத் துணிவகைகள்—குடும்பத்தினர் அனைவருக்குமே உகந்த முழுதும் புதிய வகைகள்.

கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறியே வண்ணத்துப்பூச்சி




ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
[illegible] கோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.








# தமிழரசு

1-9-1976

மலர்: 7 இதழ்: 5


0 SEP 1976



இந்த இதழில்


| | பக்க எண் |
|---|---|
| நாட்டின் வளங்களை முழுமையாகப் பயன் படுத்துவோம்! ... | 2 |
| சமூக நலத் திட்டங்கள் வெற்றி பெற... | 9 |
| கை கொடுக்கும் மருத்துவம் ... | 13 |
| நீர்வளம் பெருக்கி நிலவளம் பெருக்கு வோம்! ... | 17 |
| கிராமப்புற வளர்ச்சியில் சமுதாய நோக்குடைய காடுகளின் பங்கு ... | 18 |
| தொட்டியிலும், மரப்பெட்டியிலும், மாடியிலும் காற்கறி பயிரிடலாம் ... | 21 |
| படமும் செய்தியும் ... | 24 |
| சோமங்கலம் ஊரக அபிவிருத்தித் திட்டப் பணிகளில் கால்நடைத் துறையின் பங்கு | 30 |
| சென்னையில் அமுதம்! ... | 33 |
| நாதியற்றுக் கிடந்த 24,000 பேர்களுக்கு நல்வாழ்வு பிறந்தது! ... | 41 |
| உழவர் பெருமக்களுக்கு உதவும் செய்திகள் | 47 |




# நாட்டின் வளங்களை முழுமையாகப் பயன்படுத்துவோம்!



யாவின் 30-வது சுதந்திர தினத்தை யொட்டி ல்லியிலுள்ள செங்கோட்டையில் 15—8—1976 , நமது பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

## பிரதமர் உரை

"இன்று போல் என்றுமே இந்தியா வலிமை மிக்கதாக இருந்ததில்லை. நாம் கண்காணிக்க வேண்டியதெல்லாம் நம்மிடமுள்ள வளங்களை முழுமையாகப் பயன்படுத்தி நமது மக்களும் நாடும் இன்னும் அதிக வேகத்தில் முன்னேற்றம் அடையச் செய்வதுதான்'' என்று பிரதம மந்திரி, திருமதி இந்திரா காந்தி அவர்கள்,

இந்தியாவின் சுதந்திர தினத்தையொட்டி புது டில்லியிலுள்ள செங்கோட்டைக் கொத்தளத்திலிருந்து 15-8-1976 அன்று காலை, நாட்டுக்கு உரை நிகழ்த்தினார்.

''சோனியின் வலிமை'' என்ற குருதேவர் தாகூரின் வாசகத்தை அவர் நினைவுகூர்ந்து, உறுதியுடனும் ஒற்றுமையோடும் திடச்சித்தத்துடனும் செயல்பட்டால் வலுவற்றவர்கள் கூட ஒரு மகத்தான சக்தியாக உருவாகலாம் என்று குறிப்பிட்டார்.

பிரதமர் இந்தியில் ஆற்றிய உரையின் மொழியாக்கம் வருமாறு:—

''நான் இங்கு தேசியக் கொடியைப் பறக்கவிடும் ஒவ்வொரு சமயத்திலும், ஜவாஹர்லால் நேரு, முதல் தடவையாகச் சுதந்திர இந்தியாவின் தேசியக் கொடியை இங்கு ஏற்றியது என் நினைவுக்கு வருகிறது. நாடு அடைந்த துன்பங்களும் புரிந்த தியாகங்களும், ஆசைகளும் என் நினைவுக்கு வருகின்றன. அவற்றின் மூலமாகவே தேசியக் கொடியை நாம் இங்கு பறக்க விட்டோம்.

### நாம் நடந்து வந்த பாதை!

கடந்த ஆண்டுகளை நாம் திரும்பிப் பார்க்கும்போது, நமக்காகத் தேர்ந்தெடுத்துக் கொண்ட பாதையில் நாம் நீண்ட தூரம் வந்திருப்பதைக் காணுகிறோம்.

''வழியில் நாம் தவறுகள் புரிந்தோம்; குறைபாடுகளும் இருந்தன. நாம் முன்னேற்றமடைந்தபோது, இன்னும் நீண்ட தூரம் நாம் கடக்க வேண்டியிருப்பதை உணர்ந்தோம். ஒவ்வொரு அடி முன்னேறியபோதும், நமது கஷ்டங்கள் குறைவதற்குப் பதில் அதிகரித்தன! நாம் சில தேவைகளைச் சமாளிக்க முடிந்தது. புதிய தேவைகள் அவ்விடங்களை நிரப்பியதையும் நாம் கண்டோம். வாழ்க்கை அப்படித்தான்! எனினும், நமது மாபெரும் தலைவர்கள் நமக்கு முன்பும் நாட்டுக்கு முன்பும் வைத்துள்ள இலட்சியங்களை நிறைவேற்றுவதற்கு நாம் முயற்சித்துள்ளோம்.

### விடுதலையின் பொருள்

"விடுதலை, பலவகையானது. நாம் விழிப்புணர்வோடு போராடி, முழு சுதந்திரத்தையும் வெற்றி கொண்டோம். இது சரியானதே; ஏனெனில், வேறு எந்த விடுதலையையும் உண்மையான விடுதலையாகக் கூறமுடியாது. முழுமையான சுதந்திரம் என்பதற்கு, உங்கள் சொந்தப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பது மட்டுமே அர்த்தமல்ல. அல்லது செய்திப் பத்திரிகைகள், தாம் விரும்பும் எதையும் வெளியிடுவதற்காக மிகச் சிலரின் கருத்துக்களைப் பிரதிபலிப்பது ... அதற்குப் பொருளல்ல. விடுதலை என்பது, அதன் பலன்கள் ஒவ்வொரு இந்தியக் குடும்பத்தையும் எட்ட வேண்டும் என்பதையும், தங்களின் தேவைகளை எடுத்துக் கூற இயலாத, தங்களின் விருப்பத்தை முழுமையாகக்கூட உணராத, இதுவரையில் புறக்கணிக்கப்பட்ட பிரிவினராக இருக்கும் மக்களை அந்தப் பலன்கள் சென்றடைய வேண்டும் என்பதையும் குறிப்பிடுகிறது. அத்தகைய ஒரு 'ஸ்வராஜ்யத்தை' நோக்கி நமது நாட்டை வழி நடத்திச் செல்ல நாம் முயற்சி செய்து வருகிறோம்; ஆனால் இந்த மார்க்கத்தில் பல தடைகள் உள்ளன. இந்தப் பாதையில் நாம் எதைச் செய்தாலும் அது சில வகுப்பினர், சில குழுவினர் அல்லது சில தனிநபர்களின் நலத்தைச் சிறிதளவு புண்படுத்துகிறது. இப்பூமியில் உயர்ந்தவராக இருந்தாலும் தாழ்ந்தவராக இருந்தாலும் ஒவ்வொரு இந்தியரின் வாழ்க்கையையும் மேம்படுத்துவதற்கு நாம் விரும்புகிறோம். ஆனால், இருப்பவர்கள் மேலும் மேலும் பெற்றுக் கொண்டே போனால் இல்லாதவர்களுக்கு நாம் எப்படி எதையும் அளிக்க முடியும் என்பதை நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். எனவேதான், நமது திட்டங்கள், எல்லாருக்கும் பயனளிக்கும் அதே நேரத்தில் குறிப்பாக சமுதாயத்தின் பலவீனப் பிரிவு மக்களுக்காகவே ஏற்படுத்தப்பட்டுள்ளன. பல்வேறு காரணங்களினால் அவர்கள் பலவீனமடைந்திருக்கலாம். அவர்களின் ஜாதியோ, அவர்களின் பொருளாதார நிலைமையோ அல்லது நாட்டின் வளர்ச்சி குன்றிய சில பிராந்தியங்களை அவர்கள் சேர்ந்தவர்கள் என்பதோ அதற்குக் காரணமாக இருக்க முடியும். ஒவ்வொரு படியிலும் நாம் ஒன்றை அல்லது மற்றொன்றைச் சமாளிக்க வேண்டியுள்ளது. இருந்தபோதிலும் அவற்றினால் நாம் தடுமாறவில்லை. கடந்த ஓராண்டுக் காலத்தில் நாடு அடைந்துள்ள பிரம்மாண்டமான முன்னேற்றத்தைப் பற்றிப் பேசுவதற்கு உண்மையில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

### நாட்டின் வளர்ச்சி!

''நாங்கள், மக்களுக்கு முன்னால் திட்டம் ஒன்றை வைத்தோம். அத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்தின் பங்கில் சில கடமைகளும், மக்கள் ஆற்ற வேண்டிய சில கடமைகளும் இருந்தன. அது, ஒழுங்குக் கட்டுப்பாட்டை உருவாக்கியது; மக்களின் இதயங்களில் நம்பிக்கை வித்தை ஊன்றியது; மக்கள் அனைவரும் ஒத்துழைத்தார்கள். நிறைவேற்றப்பட வேண்டியது அனைத்தும் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவோ அல்லது நாம் சாதிப்பதற்காக விரும்பி நிர்ணயம் செய்த இலக்கை அடைந்துள்ளதாகவோ கூறமாட்டேன். அத்தகைய நிலைமை இல்லை. இன்னும் உறுதியான, சக்திவாய்ந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன. சம அளவில் இல்லாவிட்டாலும் எல்லா இடங்களில் இந்தச் செயல்முறை நடைபெறுகிறது. மக்கள் விழிப்போடும், தொழிலாளர்கள் வலிமையோடும் இருக்கும் இடங்களிலெல்லாம் பணி விரைவாக முன்னேற்றமடைந்துள்ளது. உற்பத்தி உயர்ந்திருப்பதை நீங்கள் அனைவரும் நன்கு அறிந்திருப்பீர்கள். சுமார் ஏழு சதவிகித வளர்ச்சி வேகத்தை நாடு எட்டியுள்ளது.

### நமது தவறுகளைச் சரி செய்யும் வழி

"ஏழைகளுக்கு ... வழங்கும் திட்டம் ஒன்றை நாங்கள் துவக்கினோம்; 70 இலட்சம் மக்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. மின் சக்தி உற்பத்தி 2,000 மெகாவாட் அதிகரித்துள்ளது. நமது நீர்ப்பாசனத் திட்டங்கள் நல்ல முன்னேற்றமடைந்துள்ளன; வருங்காலத்தில் இன்னும் சிறப்பாக, நம்பிக்கையுடன் பணி புரிவோம். எனினும் நிலச்சீர்திருத்தத்திட்டம் விரும்பிய அளவுக்கு முன்னேற்றமடையவில்லை. அது ஒரு புதிய திட்டமல்ல; பழையதுதான். ஆனால், அத்திட்டத்தை நாம் எடுத்துக்கொள்ளும் போதெல்லாம், நிலம் மறுபடியும் பகிர்ந்தளிக்கப்படுகிற இடங்களிலெல்லாம் புதிய பிரச்சினைகள் முளைக்கின்றன. தொலைதூர இடங்களில் நடப்பவற்றை நாம் கண்காணிக்க

## தமிழ்நாட்டில் பசுவதை தடை!

தமிழ்நாட்டில் பசுவதை தடை செய்யப்படுகிறது. பசுவதையைத் தடை செய்ய வேண்டும் என்று கோரி, தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து அரசுக்கு கோரிக்கைகள் வந்தன. பசுவதை காரணமாக கிராமங்களில் வசிக்கும் சிறிய விவசாயிகளுக்கு கிடைக்கும் உபரி வருமானம் குறைவதுடன், பால் கொடுக்கும் மாடுகளின் தரத்தை மேம்படுத்துவதற்கு கிடைக்கக்கூடிய மாடுகளின் எண்ணிக்கையும் குறைகிறது. மேலும் சாணி உரம் கிடைப்பதும் குறைகிறது.

ஆகவே, பால் உற்பத்தியை அதிகரிக்கவும், கிராமப் பொருளாதாரத்தை முன்னேற்றவும் பசுவதையைத் தடை செய்யவேண்டும் என்று அரசு கருதுகிறது. ஆகவே, பசுக்களையும், கிடாரிக் கன்றுகளையும், வதை செய்வதை அரசாங்கம் தடை செய்து உத்தரவு போட்டுள்ளது.

இந்த தடை உத்தரவு உடனடியாக அமுலுக்கு வருகிறது.

## ஜனநாயகமும் தேர்தலும்!

தேர்தல்களைக் கைவிடும் எண்ணமே கிடையாது, ஆனால் ஜனநாயகத்தில் தேர்தல் நடத்துவதோடு எல்லா அலுவல்களும் முடிவடைந்து விடுவதில்லை. நாட்டு நலன், நாட்டு ஒற்றுமை, எதிர்ப்பு அல்லது போராட்டத்திலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கான திறன், அதிக உற்பத்திக்கான திறமை, மேலும் சிறந்த முறையில் உற்பத்திப் பண்டங்களை விநியோகிப்பது போன்ற அம்சங்களை நாம் ஒதுக்கி விட முடியாது. ஜனநாயக முறை இந்தியாவில் கடைப்பிடிக்கப்படுகிறது என்பதற்காகவோ அல்லது தேர்தலை நடத்த வேண்டும் என்பதற்காகவோ இந்த அம்சங்களை ஒதுக்கித் தள்ளிவிடக் கூடிய சூழ்நிலை உருவாக நாம் அனுமதிக்கக் கூடாது.

—இந்திரா காந்தி

முடியாது. தவறுகள் இழைக்கப்படும் நேரங்களில் மக்களும் எங்களுக்குத் தெரிவிப்பதில்லை. இதையெல்லாம் நான் அறிவேன். அதனால் தான், ஒவ்வொரு ஆண்டும் இங்கேயோ அல்லது வேறு எந்த இடத்தில் நான் பேசிய போதிலும், குடிமக்கள்—அவர் விவசாயியோ, அல்லது தொழிலாளரோ அல்லது ஏழை மனிதரோ யாராயினும் சரி—எந்த இடத்தில் அநீதி நடைபெற்றாலும் அது குறித்துப் புகார் செய்வதன் மூலமாக மட்டுமல்லாமல் எங்கு என்ன தவறு நிகழ்ந்து விட்டது என்று நினைவுறுத்துவதன் மூலமும் அத்தவறை எங்களின் கவனத்துக்குக் கொண்டுவரத் தம்மை ஈடுபடுத்திக் கொள்வது அவசியம் என்று மக்களுக்கு வலியுறுத்தி வருகிறேன். இவ்வாறு நாம் இருவருமாக நமது தவறுகளைச் சரிசெய்ய முடியும். இந்த வழியில் மக்களும் இப்பொழுது அதிகமாகச் சிந்தித்து வருகிறார்கள்.

### இந்தியாவின் வலிமை கூடியுள்ளது!

"கடந்த ஆண்டு பொதுமக்களின் விழிப்புணர்ச்சியும் மக்கள் அளித்த ஒத்துழைப்பும் முன்னெப்போதும் இருந்திராத அளவு மிக அதிகமானவை. அதற்கு முன்பு ஒன்றுமே செய்யப்படவில்லை என்று நான் சொல்லவில்லை. நீண்ட காலம் முன்பே உறுதியான அஸ்திவாரங்களை நாம் நாட்டியிராவிட்டால், கடந்த ஆண்டில் விவசாயத் துறையிலும், தொழில் துறையிலும் இதுபோன்ற முன்னேற்றத்தைச் சாதித்திருக்க முடியாது. ஆனால், ஒழுங்குக் கட்டுப்பாடும், மக்கள் ஒத்துழைப்பும் இல்லாவிட்டால் அந்த அஸ்திவாரம் மட்டுமே இந்தியாவின் தோற்றத்தை மாற்றுவதற்குப் பயன்பட்டிருக்காது என்பதும் உண்மை. பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும், தொழிற்சாலைகளிலும், தெருவீதிகளிலும்-எல்லாவிடங்களிலும் கட்டுப்பாடின்மை தலைவிரித்தாடியதை நீங்கள் நினைவு கூரலாம். பொருளாதாரக் கஷ்டம் நிறைந்திருந்த காலத்தில் வேலை நின்றுவிட அது வழிகோலியது. அத்தியாவசியப் பண்டங்களுக்கு அப்போது தட்டுப்பாடு இருந்தது. உற்பத்தி நின்றுவிட்டதன் காரணமாக அப்பொருட்களின் தட்டுப்பாடு மேலும் அதிகரித்தது. கதவடைப்பு, புரட்சி ஆகிய கோஷங்கள் எங்கும், எதிரொலித்தன. புரட்சியில் எங்களுக்கும் நம்பிக்கை உண்டு. மாபெரும் புரட்சிவாதியாகக் கருதப்பட்ட காந்திஜியும் புரட்சியைத் துவக்கினார். ஆனால் அமைதி, நட்புறவு அடிப்படையிலான வன்முறையற்ற வகையில் அப்புரட்சி நடைபெற்றது. அவருடைய வழியிலிருந்து தவறியிருந்தாலோ அஞ்சா நெஞ்சம் மிக்க ஒரு சில தலைவர்கள் தங்கள் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தாமலிருந்தாலோ, நாடு இன்னமும் சுதந்திரத்திற்காகப் போராடிக் கொண்டிருந்திருக்கும். காந்திஜி வகுத்த பாதையில் நாம் உறுதியுடன் முன்னேறியதால் தான் நாட்டிற்கு சுதந்திரம் வாங்கிக் கொடுக்க முடிந்தது. ஜனநாயக முறைக்கான அடிக்கல் நாட்டினோம். நாட்டை விரைவில் தொழில்மயமாக்கி ஒவ்வொரு விதத்திலும அதன் வலிமையையும் திறமையையும் கூட்டினோம். நம்மைக் குறைத்துக் கூறி, நம்மீது குற்றங்கள் சுமத்திய போதிலும், உலக நாடு எதுவும் 'இந்தியா வலுக்குன்றிவிட்டது' என்று கூறிவிட முடியாது.

"இந்தியா தற்போதைய அளவுக்கு வலிமை படைத்ததாக எப்போதும் இருந்ததில்லை. தற்போது பெற்ற வல்மை இன்றி இந்தியா முன்னேறி இருக்க முடியும் என்று எவரேனும் கூற இடியுமா? இந்த வலிமை இன்றி, நமது தொழில்துறையை அபிவிருத்தி செய்திருக்க முடியாது, நமது மக்களுக்கு எந்த வசதிகளையும் செய்து கொடுத்திருக்கமுடியாது.

### உலகமே நீ மௌனியாகி விடுவது ஏன்?

"நாம் போராடிப் பெற்ற சுதந்திரம் எப்போதும் நீடிக்க வேண்டும் என்று நாங்கள் நினைக்கிறோம். ஆனால் சில சமயங்களில் இராணுவப் போராட்டத்தைச் சமாளித்திருக்கிறோம். பயங்கரமான, கண்ணுக்குப் புலப்படாத, மறைமுகமாக ரகசியத் தாக்குதல்களாலும் நாம் கஷ்டப்பட்டிருக்கிறோம். இந்த உட்பகைமை முன்னதாகவே இருந்தது. ஆனால் கடந்த சில ஆண்டுகளில் இது வெளிப்படையாகக் கூறப்பட்டது. எந்தவிதத் தடைகளும் இல்லாதபோது எவரும் சிறை செய்யப்படவில்லை. எந்தப் பத்திரிகை மீதும் கட்டுப்பாடுகள் கொண்டுவரப்படவில்லை. இந்தியாவைப் பல நாடுகள் அப்போது ஆதரிக்கவில்லை. இராணுவ ஆட்சியின்கீழ் உள்ள நாட்டிற்கோ அல்லது மக்களின் கருத்துக்களை அடக்கி வைத்த அரசுகளுக்கோ தான் வெளிநாடு உதவியது.

"இந்தியாவுக்கு எப்போதுமே உதவாத நாடு தான் அது. ஒருவர் இருவர் மட்டும் அல்லாமல் இலட்சக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டு அந்நாட்டு மக்கள் பேசா மடந்தைகளாக இருந்தனர். இத்தகைய மக்கள்தான் தற்போது இந்தியாவின் புகழ் பாடுகின்றனர்.

"இது முதன் முறையாக நடைபெறுவது இல்லை என்பதை நீங்கள் நினைவு கூர வேண்டும். காந்திஜி உயிருடன் இருந்தபோது அவர் மீது என்னென்ன குற்றங்கள் சுமத்தப்பட்டனவோ, அவை ஜவஹர்லால் நேரு மீதும், என் மீதும் சுமத்தப்படுகின்றன. என் மீது குற்றங்கள் சுமத்தப்படும் முன், இந்தியா பற்றிக் குறைத்துக்கூறப்பட்டது. இந்தியா ஏன் அணுப் பரிசோதனை நடத்த வேண்டும்? இந்த 'மாபெரும் அபாயம்' குறித்து உலகமே கவலை கொண்டிருக்கிறது. ஆனால் அணு குண்டுகளைக் குவித்து இதற்காகக் கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து வரும் நாடுகள் விஷயத்தில் உலகம் மௌனியாகிவிடும். மாறாக இத்தகைய ஆயுதங்களை விற்க முயற்சிக்கப்படுகின்றன.

"இருந்தாலும் நமது பொருளாதார நிலையை மேம்படுத்த நடவடிக்கையை மேற்கொண்டால் அவை தவறானவை என்று கண்டிக்கப்படுகின்றன. உதாரணமாக, நம் நாட்டில் எஃகுத் தொழிலை ஏற்படுத்தியபோது 'ஏழை நாடான இந்தியாவில் கிராமங்கள் சம்பந்தமான எல்லாப் பிரச்சினைகளும் இருக்கும். அதற்கு இரும்பு அல்லது எஃகு தேவையில்லை' எனக் கூறி விவாதிக்கப்பட்டது. நவீன நாட்டிற்கான அடித்தளமாக எஃகுத்துறை விளங்குகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். விவசாயிகள், தொழிற்சாலைகள், சாதாரண மனிதர்கள் ஆகியோரின் தேவைகளை ஆயிரக்கணக்கான வழிகளில் அது சமாளிக்கிறது. ஜவஹர்லால் நேரு மட்டும் இத்தொழிலுக்கு அடிக்கல் நாட்டியிராவிட்டால், நாம் இன்னமும் பழைய நிலையில் தான் இருந்திருப்போம்.

### நாம் பிச்சை எடுக்க மாட்டோம்!

"நமக்கு இன்னமும் பல பொருட்கள் தேவைப்படுகின்றன. ஆனால் நாம் பிச்சை எடுக்கமாட்டோம்! சில ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் உணவுப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்று பலர் கூறுவது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு 12 கோடி டன் உணவு தானியங்களை உற்பத்தி செய்திருக்கிறோம். தானிய சேமிப்புதான் தற்போதைய பிரச்சினை!

### எல்லா வளங்களையும் முழுமையாகப் பயன்படுத்துவோம்!

"பருவமழை கைகொடுத்தது உண்மை தான். ஆனால் அரசு, விவசாயிகளுக்கு உதவாமலிருந்தால், இந்த உதவியை ஏற்றுக்கொண்டு நவீன விவசாய முறைகளை உழவர்கள் கடைப்பிடித்துக் கடுமையாக உழைத்திருக்காவிட்டால், இந்த அளவுக்கு உணவு தானிய உற்பத்தி உயர்ந்திருக்காது. சில பகுதிகளில் பருவமழை குறைவாகவே பெய்தது. குறிப்பாக தென்னிந்தியாவில், தமிழ்நாட்டில் வறட்சி நிலைமை ஏற்பட்டது. மற்ற பகுதிகளில் அதிக மழை பெய்ததால், நமது விவசாயிகள் கஷ்டப்பட வேண்டியிருந்தது. அவர்களிடம் நான் முற்றிலும் இரக்கம் கொள்கிறேன். ஆனால் அவர்களால் நிலைமையைச் சமாளிக்க முடியும் என்பதை நாம் உணர்வோம். இத்தகைய சூழ்நிலையைச் சமாளிக்கும் திறன் விஞ்ஞான, தொழில்நுட்ப உதவியுடன் அதிகரித்துள்ளது என்பதையும் அறிவோம். விஞ்ஞான, தொழில்நுட்பப் பலன்கள் இன்னமும் நாட்டின் எல்லா பாகங்களுக்கும் போய்ச் சேரவில்லை. நாட்டில் மூலைமுடுக்குகளில் எல்லாம் இத்திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும். மலைப் பிராந்தியங்களின் விசேஷத் தேவைகள், பாலைவனப் பகுதிகள், அதிக மழை மற்றும் வெள்ளம் ஏற்படும் பகுதிகள் ஆகியவற்றின் தேவைகள் ஆகியவற்றிற்கு ஏற்ப, குறிப்பிட்ட பகுதிகளுக்கான சிறப்புத் திட்டங்களை வகுக்க வேண்டும். நாம் இந்த நோக்கில் திட்டம் தீட்ட வேண்டும். எஃகுத் தொழிற்சாலையோ அல்லது வேறு பெரிய தொழிற்சாலையோ இருந்தால் போதாது. நமக்குக் கிடைக்கும் எல்லா வளங்களையும் நாம் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதிலேயே கவனம்

அடுத்த இதழ்!

## பாரதியார் சிறப்பிதழ்!

இந்திய விடுதலைக்குத் தமது எழுச்சிமிகு கவிதையால் உணர்ச்சியூட்டிய மகாகவி பாரதியார் அவர்களின் நினைவுநாளையொட்டி, 16-9-1976 தேதிய "தமிழரசு" இதழ். 11-9-1976 அன்றே வெளிவரவிருக்கின்றது. அவ்விதழில் அமரகவி பாரதியார் அவர்கள் தம்கைப்பட எழுதிய உணர்ச்சிமிகு கவிதைகளின் புகைப்படங்களும், நீங்கள் இதுவரை அவரைப்பற்றி கேள்விப்பட்டிராத அரிய நிகழ்ச்சிகளும், புகழ்பெற்ற எழுத்தாளர்கள், கவிஞர்கள் ஆகியோர் பாரதியாரைப் பற்றி எழுதியுள்ள கட்டுரைகளும், கவிதைகளும் இடம் பெறும்! எனவே, அடுத்துவரும் "தமிழரசு" இதழ் வாங்கத் தவறாதீர்கள் என்று அன்புடன் வேண்டுகின்றோம்.

செலுத்த வேண்டும். நம்மிடையே இந்த உணர்வு ஏற்பட்டால் நமது நாடும் மக்களும் விரைவில் முன்னேற்றம் அடைய முடியும்.

### தொழிலாளர்களுக்கு வாழ்த்து!

''அரசுத்துறையின் கீழ் உள்ள நிறுவனங்கள் பற்றி விமர்சிப்பதைப் பத்திரிகைகள் வழக்கமாகக் கொண்டிருந்தன. அரசுத்துறை நிறுவனங்களை நடத்த முடியாது என்றும், அவற்றிற்கு இழப்பு நேரிடும் என்றும் பெரிய தொழில் அதிபர்கள் ஆருடம் கூறியது உண்டு. இருந்தாலும் அந்நிறுவனங்களில் பல, தற்போது இலாபம் சம்பாதித்து வருகின்றன. அவற்றின் உற்பத்தியும் அதிகரித்துள்ளன. நமது மொத்த உற்பத்தி அதிகரிப்புக்கு அரசுத்துறை நிறுவனங்கள் தான் பெரும்பாலும் காரணம் ஆகும். தற்போது திருப்திகரமாகச் செயல்பட்டு வரும் சில அரசுத்துறை நிறுவனங்கள், தங்கள் உற்பத்தித் திறனை விரைவில் மேம்படுத்திக் கொள்ளும் என நாங்கள் நம்புகிறோம். இந்த விஷயத்தில் நாங்கள் முயற்சி மேற்கொண்டு வருகிறோம். எல்லா விஷயங்கள் குறித்தும் எப்போதும் நாம் கண்காணிக்க வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு குடிமகனும் தமது கடமைகளை உணர்ந்தால்தான் இது சாத்தியமாகும். நமது தொழிலாளர்களுக்கு வாழ்த்துக் கூற விரும்புகிறேன். உற்பத்தி மேம்பாட்டுக்கு அவர்களுடைய கடின உழைப்புதான் காரணம்.

## கல்வி காட்ட வேண்டிய வழி

*நமது புலன்களின் திறனைக் கண்டுபிடித்து ஏற்று, ஆக்கப்பூர்வமான செயல்களில் ஈடுபடுவதற்கான ஒரு பயிற்சியை அளிக்கிறது கல்வி. ஒருவர் சுயமாக முன் வந்து பொறுப்பை ஏற்றுக் கொள்ள விருப்பம் தெரிவிப்பதைக் குறிக்கும் விதத்தில் மனமுதிர்ச்சி அடைய, கல்வி, வழி காட்ட வேண்டும். ஒத்துழைப்பு உணர்வு, மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்ற தன்மை, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களில் ஈடுபட வேண்டும் என்ற ஓர் உணர்வு ஆகியவை கல்வி கற்பதன் மூலம் மனத்தில் ஏற்பட வேண்டும்.*

—இந்திரா காந்தி.

### ஒருவருக்கொருவர் உதவிக் கொள்வோம்!

''இன்னும் சில மணி நேரங்களில் அதாவது இன்று மாலை ஸ்ரீலங்காவுக்கு நான் புறப்பட்டுச் செல்கிறேன். கூட்டுச்சேரா நாடுகளின் உயர் மட்ட மாநாடு அங்கு நடைபெறுகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். தங்கள் சுதந்திரத்தை எப்படிப் பாதுகாப்பது என்பது பற்றி அந்த உயர்மட்ட மாநாட்டில் கலந்து கொள்ளும் நாடுகள் விவாதிக்கும். ஒரு நாட்டின் எல்லைப் பகுதிகளைப் பாதுகாப்பது மட்டுமே பெரிய விஷயமாகிவிடாது. நாடு வலுப் பெற்று சுபிட்சம், அபிவிருத்திப் பாதையில் முன்னேற தனக்கென இலட்சியங்களை வகுத்துக் கொண்டு அவற்றை அடையப் படுபடுவதற்கான சுதந்திரம் பற்றிதான் தற்போது முக்கியமாக விவாதிக்கப்படவிருக்கிறது.

''நம் யாவருக்கும் ஒரே விதமான பிரச்சினைகள் தான் உள்ளன. ஆகையால் நாம் ஒத்துழைத்து பரஸ்பரம் உதவி புரிந்து கொண்டால், நாம் வல்லரசுகளாக வளர்ந்து விட முடியும். 'நலிவுற்ற சக்திகளின் வலிமை' என்பதை விளக்கிய குருதேவர் தாகூர், நலிவுற்ற சக்திகள் கூட உறுதியாகச் செயல்பட்டால் மாபெரும் சக்தியாக மாறிவிட முடியும் என்று கூறியுள்ளார். இது தான் நமது அனுபவமும் கூட. சுதந்திரப் போராட்டத்தின் போது இந்திய மக்களின் வலு என்ன? அவர்கள் வறுமையாலும், பீதியாலும் கீழ்ப்படியும் உணர்விலும் கஷ்டப்பட்டனர். ஆனால் விமர்சனங்கள், தாக்குதல்கள் இருந்த போதிலும் நாம் ஒட்டுமொத்தமாக எழுச்சி பெற்றதால் தான் நமது இலட்சியத்தை அடைய முடிந்தது. நம் நாட்டு ஏழை விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள் ஆகியோரின் பலம் அப்போதைய வல்லரசுகளின் வலுவைவிட அதிகமாக அதிகரித்தது. உலகிலுள்ள ஏழை நாடுகளுக்கு இதே வலுவை நாம் ஊட்ட வேண்டும்.

### உள்நோக்கத்துடன் கொடுக்கும் உதவியை ஏற்க மாட்டோம்!

''சில நாடுகள், மற்ற நாடுகளால் ஏமாற்றப்பட அனுமதிப்பதுதான் பிரச்சினையாக உள்ளது. சில உதவிகள் கிடைத்தால் அவற்றை ஏற்றுக் கொண்டு விடலாம் என அவை நினைக்கின்றன. தங்கள் சுதந்திரத்திற்கு இணையாக அந்த உதவிகள் இருப்பதை அவை கவனிப்பதில்லை. ஆகையால் அவை எப்போதும் வலுப் பெற முடியாது. இனி அவை, இத்தகைய உதவிகளுக்காக மற்ற நாடுகளை நம்பியிருக்க வேண்டும்.

''பல்வேறு குறிக்கோள்களைக் கொண்ட எல்லா அரசுகளிடமிருந்தும் நாமும் உதவி பெற்றுக் கொண்டிருக்கிறோம். ஆனால் நாம் விரும்பும் வகையில் அமைந்த, நமது முன்னேற்றத்திற்கு இடையூறு விளைவிக்கக் கூடிய விதத்தில் இருக்கக் கூடிய உதவிகளை நாம் ஏற்றுக் கொள்வதில்லை என்ற கொள்கைப் பிடிப்புக் கொண்டிருக்கிறோம். உள்நோக்கத்துடன் கொடுக்கப்படும் உதவியை நாம் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்பதை நாம் எப்போதும் கூறி வருகிறோம். இக்கொள்கையை நாம் தீர்மானமாகக் கடைப் பிடித்து வருகிறோம். இனியும் தொடர்ந்து நாம் இதைக் கடைப்பிடிப்போம்.



### மாற்றாரின் விமரிசனம் நமக்கு வலிவூட்டும்!

''ஒரு சில நடவடிக்கைகள் மேற்கொண்டதன் காரணமாகவோ அல்லது ஒரு சிலர் சிறையில் இருப்பதனாலோ அல்லது பத்திரிகைகள் மீது சில கட்டுப்பாடுகள் இருப்பதனாலோ நாம் இன்னமும் பின்னோக்கிச் செல்லவில்லை. மற்றவர்களின் விமர்சனத்தை மதிக்காமல், ஏழை நாடு ஒன்று எப்படி உறுதியாக முன்னேற்றம் கண்டு வருகிறது என்று பல நாடுகள் நினைப்பதுதான் இதற்கு முக்கிய காரணம். நாம் முன்னேறி வர வேண்டும். நம்மைப் பழித்துக் கூறி, நலிவடையச் செய்ய, அதிக முயற்சி மேற்கொள்ளும்போது, நாம் மேலும் வலுவு பெறுவோம் என்பதை, நம்மை விமர்சிப்போருக்கு நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அவர்களின் விமர்சனம் நமக்கு மேலும் வலுவூட்டும். நமது முன்னேற்றப் பாதையில் விரைந்து செல்வோம்.

## நாம் பெற்ற சுதந்திரத்தின் பொருள்!

*இந்தியா தனக்கென முன்னேற்றப்பாதை ஒன்றை வகுத்துக் கொண்டு அறிவுத் திறன், பொறுப்புணர்ச்சி, கூர்ந்த மதி ஆகியவை கொண்ட அறிவாளிகளை உருவாக்க வேண்டும். சமுதாயத்தில் மகிழ்ச்சியை உண்டாக்கி, ஆக்கப் பூர்வமான அலுவலில் காணப்படும் திறமையைக் கண்டு இந்திய மக்கள் பெருமிதம் கொள்ள வேண்டும். பரந்த உலகத்தோடு இந்தியாவை ஒப்பிட்டு மிகவும் தன்னடக்கத்துடன் இருக்க வேண்டும். மேலும் இந்த உலகில் சமச் சீரான சூழ்நிலை எப்போதும் இருந்து வருவதைக் கண்டு ஆச்சரியப்பட வேண்டும். இத்தகைய இந்தியாவை நாம் உருவாக்காவிட்டால் நாம் அடைந்த சுதந்திரத்திற்குப் பொருளே இருக்காது.*

—இந்திரா காந்தி.

''எந்த விதப் போராட்டத்திற்கும் அடிபணியமாட்டோம் என்பதைக் கடந்த சில ஆண்டுகளில் நீங்கள் நேரில் கண்டீர்கள். பனிப் புயல்கள் போன்று சிலர் நம்மை எதிர்த்த போதிலும் நாம் அதனால் பாதிக்கப்படவில்லை. நாம் தொடர்ந்து முன்னேறி வந்தோம். போராட்டமும் துன்பமும் கொண்ட சரித்திர வாழ்க்கையைக் கொண்டது இந்திய சரித்திரம்.

### இளைய தலைமுறையே எண்ணிப்பார்!

''சகிப்புத் தன்மை, அமைதி ஆகியவற்றிற்குப் பெயர் போனது நம் நாடு. அதே சமயத்தில் அஞ்சா நெஞ்சம், உறுதித் தன்மை, உயர் இலட்சியங்கள் போன்றவற்றையும் உள்ளடக்கியது இந்தியா என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. இன்று ஒவ்வொரு குடிமகனும் நாட்டு வரலாற்றை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். புதிய இந்தியாவின் பிரதிநிதிகளாகவும், சான்றுகளாகவும் தங்களைக் கருதிக் கொள்ள வேண்டும். குழந்தையாக இருந்தாலும் சரி, வயோதிகராக இருந்தாலும் சரி அவர்கள் யாவரும் இதைப்புரிந்து கொள்ள வேண்டிய பொறுப்பில் உள்ளனர். யார் நம்மைப்போற்றுகிறார்கள், யார் நம்மைத் தூற்றுகிறார்கள் என்பது பற்றிக் கவலை இல்லை. வாழ்க்கையில் இவை சர்வ சாதாரண விஷயங்கள். நாட்டை முன்னேறச் செய்வது எப்படி என்பது தான் முக்கியம். ஒரு சிலர் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி, நாம் இதை ஏற்றுக் கொள்ள வேண்டும். புத்திக் கூர்மை மிக்க குழந்தைகள் சரிவரப் பாடம் படிக்காவிட்டாலோ அல்லது விளையாட்டில் அக்கறை காட்டாவிட்டாலோ அவர்களுக்கு உடல் வலிமையோ மனவலிமையோ இருக்காது. இளைய தலைமுறை வலுவாகவோ ஆக்கப்பூர்வமான முறையில் ஈடுபடாமலோ அல்லது நாட்டுப்பற்று உணவு இன்றியோ அல்லது நாட்டிடம் அன்பு கொள்ளாமல் இருந்தாலோ அது நமது மாபெரும் நலிவாக அமையும். நாட்டுக்கு அதிகபட்சக் கேடு விளைவிக்கும்!

### நமது வலிமைக்கு ஊட்டம் தருவது கட்டுப்பாடே!

''ஒரு நாட்டின் எல்லைப்புறங்களை முப்படைகள் பாதுகாக்கின்றன. அப்படைகள் குறித்து நாம் பெருமிதம் கொள்வதில் நியாயம் உள்ளது. அஞ்சா நெஞ்சம் மிக்க வலுவான நாடு அவர்களுக்குத் துணை நின்றால் அவர்களால் தீரத்துடன் போராட முடியும். நமது சரித்திரம் குறித்தும், வருங்காலம் குறித்தும் நாம் இன்றைய தினத்தில் நினைத்துப் பார்க்க வேண்டும். நாடு எந்த அளவுக்கு வலுப்பெறும் என்பதையும் எந்த அளவுக்கு முன்னேற்றம் அடையும் என்பதையும் நாம் தீர்மானிக்க வேண்டும். இதற்கு வேறு ஒருவரின் உதவி தேவை இல்லை. நமது வலிமை, திடசிந்தனை, நுண்ணறிவு போன்றவற்றின் மூலம் நாம் ஒருங்கிணைந்து செயல்பட்டுத் தீர்மானிக்க முடியும். தற்போது உருவாகி உள்ள கட்டுப்பாடு உணர்வு நமது வலிமைக்கு ஊட்டம் கொடுக்கும் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உண்டு.

### நெருக்கடி நிலை தளர்த்தப்பட்டுள்ளது!

''நாட்டில் சிலர் நெருக்கடிநிலை ரத்து செய்வது பற்றி விவாதித்து வருகிறார்கள்.

கடந்த பல மாதங்களாக நெருக்கடிநிலை தளர்த்தப்பட்டுள்ளதையும் இதனால் ஏற்பட்ட விளைவுகளையும் எவரும் கவனிப்பதில்லை. சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் அராஜகம், போராட்டங்கள், வேலைநிறுத்தம் போன்ற நாட்டுக்குத் தீங்கிழைக்கும் செயல்களை விட்டொழிக்க ஒப்புக்கொள்கிறார்களா அல்லது இன்னமும் பழைய பாதையிலேயே தொடர்ந்து செல்லத் தீர்மானித்துள்ளார்களா? இக்கேள்வியை நாம் இன்று கேட்க வேண்டும். தீர்மானிக்க வேண்டியது நமது கைகளில் இல்லை. நாட்டைச் சின்னாபின்னமாக்கி, கட்டுப்பாட்டு உணர்வைக் குலைத்து, ஜனநாயகத்திலும், நாம் புரிந்து கொண்ட சுதந்திரத்திலும் நம்பிக்கையில்லாதவர்களையும், கூட்டுச் சேராமல் இருப்பவர்களையும் சமூக வேறுபாடுகளை ஒழிப்பதில் அரசுக்கு உதவாதவர்களையும் ஊக்குவிக்கும் ஒருசிலர் கைகளில் தான் உள்ளது. இவர்கள் இந்த இலட்சியங்களை அடைய ஒருபோதும் துணை போகவில்லை. இந்த இலட்சியங்களுக்கு எதிராகப் போராட்டம் நடத்தத் தூண்டிவிட்டனர்.

### ஏழைகளுக்கு உதவும் திட்டங்கள் !

''பல ஆண்டுகளுக்குப் பிறகு நாம் முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கிறோம். முதன் முறையாக ஏழைகளுக்கு உதவும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்கின்றன. நாம் எதிர்பார்த்த வேகத்தில் அவை செயல்படாவிட்டாலும் நல்ல முறையில் செயல்படுத்தப்படுகின்றன. 70 இலட்சம் மக்களுக்கு வீடுகள் அளிக்கப்பட்டுள்ளன. என்பது, பல கோடி மக்கள் வாழும் மாபெரும் நாட்டில் சிறிய விஷயம் தான். ஆனால் முந்தைய நிலையோடு ஒப்பிடுகையில் 70 இலட்சம் என்பது பெரிய சாதனைதான்! 70 இலட்சம் பேருக்குக் கூட வீடுகள் கொடுக்க வேண்டாம் என நாம் நினைத்தால் நாம் எப்படி மேலும் பலருக்கு வீடுகள் கொடுக்க முடியும்?

### கடமை இன்றி உரிமையைக் கொண்டாட முடியாது !

''இத்தகைய விஷயங்கள் குறித்து தற்போதுதான் நாம் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும். அரசோ அல்லது எந்த நிறுவனமோ மக்களை அச்சுறுத்துவதை நாம் விரும்பவில்லை. அதை நாம் தவிர்க்க முயற்சிக்க வேண்டும். யாவரும் கட்டுப்பாட்டு உணர்வுடனும், நாட்டுப்பற்று மிக்கவர்களாகவும் இருக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். கடமை இன்றி உரிமையைக் கொண்டாட முடியாது என்று காந்திஜி கூறியதை நீங்கள் யாவரும் அறிவீர்கள். கடமைகளின் மூலம் உரிமைகள் கிடைக்கும்போது தான் உண்மையான ஜனநாயக முறை ஏற்படும். இத்தகைய ஜனநாயக முறையில்தான் ஏழைகளின் குரல் கேட்கும்; நீதி அல்லது சமூக அந்தஸ்து போன்றவை காரணமாக எவரும் மற்றவர்கள் மீது ஆதிக்கம் செலுத்த முடியாது; இத்தகைய ஜனநாயக முறை கொண்ட நாட்டில்தான் ஏழைகளுக்கும், பின்தங்கியவர்களுக்கும் உரிமைகள் ...ப்பார்கள்.

RNING-END OF ROLL WARNIN

...படுவதைப் ...நக்காகவும் நாம் போராட வேண்டும். இந்த உணர்வு யாவரிடமும் தோன்றும்போது எல்லோருக்கும் உரிமைகள் கிடைக்கும். ஆனால் ஒரு சிலருக்கு மட்டும் உரிமைகள் இருக்க வேண்டும் என்றும் மற்றவர்களுக்கு என்ன நேர்ந்தாலும் அதைப் பற்றிக் கவனிக்காமல் இத்தகையோரின் வார்த்தைகளுக்கே செவிமடுக்க வேண்டும் என்றும் நாம் நினைத்ததால் தான், நமது சுதந்திரத்தை இழந்தோம். ஆகையால் இதே தவறை மீண்டும் நாம் செய்யக்கூடாது.

### என்னோடு தோளோடு தோள் சேர்ந்து நடந்து வாரீர் !

''இந்தியா ஒரு தியாக பூமியாக விளங்குகிறது. ஆனால் தற்போது பெரிய தியாகங்கள் எதையும் செய்ய வேண்டியதில்லை. நமது மக்களுக்கும், நாட்டுக்கும் புத்துயிர் அளிப்பதற்கு மனவலிமையும் உறுதியும் தேவைப்படுகின்றன. மரங்கள் நிறைந்த பகுதி அல்லது மலைகளை நாம் விரும்பி அபிவிருத்தி செய்யலாம். ஆனால் நாடு என்றால் மரங்கள் நிறைந்த பகுதி அல்லது மலைகள் என்பது அர்த்தம் அல்ல. வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டிய கோடிக்கணக்கான மக்களை, நாடு குறிக்கிறது. அவர்களுக்கு மேலும் அதிக வசதிகளைச் செய்து கொடுத்து, அவர்களுடைய குழந்தைகளின் வாழ்க்கைத் தரத்தைச் சிறக்கச் செய்ய வேண்டும். எனது மாபெரும் பயணத்தில் என்னோடு தோளோடு தோள் சேர்ந்து நீங்கள் யாவரும் நடந்து வாருங்கள்.

''இன்று உங்களுக்குப் பாராட்டுத் தெரிவிக்கிறேன். வருங்காலத்திற்கு நல்லாசிகள். இளைஞர்களும் முதியவர்களுமாகிய நீங்கள் யாவரும் என்னுடன் சேர்ந்து 'ஜெய் ஹிந்த்' எனக் கூறுங்கள்.

''ஜெய் ஹிந்த், ஜெய் ஹிந்த், ஜெய் ஹிந்த்.''

(நன்றி : பத்திரிகைத் தகவல் அலுவலகம், சென்னை.)

### அட்டைப்பட விளக்கம்

இருபது அம்சப் பொருளாதாரத் திட்டம் என்னும் ஒளி விளக்கின் மூலம் அறியாமை இருள் அகல்வதால், ஆண்டாண்டுக் காலமாய் அடிமையாய் உழன்ற கல்ராயன் மலைவாழ் பழங்குடி மக்கள் முன்னேற்றப் பாதையில் வீறுநடை போடுகின்றனர்!



# சமூக நலத் திட்டங்கள் வெற்றி பெற



**திருமதி தாரா செரியன்**
**தலைவர்,**
**மாநில சமூக நல வாரியம்,**
**தமிழ்நாடு.**

சமூக நலம் என்பது பெண்களின் சுதந்திரத்தைப் பற்றியதல்ல; பெண்களுக்கு மேலும் மேலும் உரிமைகளைக் கேட்கும் பணியுமல்ல. சமமான கல்வியும் இணையான தகுதியும் படைத்த பெண்களுக்கு எல்லாத் துறைகளிலும் அலுவல்களைத் தரவேண்டும் என்று மாநில அரசுகளையும் மத்திய அரசையும் கேட்பதே சமூகநலம் ஆகும்.

எல்லாத் துறைகளிலும் ஆண்களும் பெண்களும் இணைந்து பணியாற்ற வேண்டியுள்ளது. ஆணுக்குப் பெண் எதிரி என்ற எண்ணமோ, தாழ்வு என்ற மனப்பான்மையோ ஏற்படக் கூடாது. இருவரும் சேர்ந்து பணியாற்ற வேண்டும். சான்றாக, குடும்ப நலத்தை எடுத்துக் கொள்வோம். கணவன், மனைவி இருவரும் ஒருமுகப்பட்ட அபிப்பிராயம் கொண்டுதான் அதனை நிறைவேற்ற முடியும். ஆணினால் மட்டுமோ, பெண்ணினால் மட்டுமோ நிறைவேறக்கூடிய பணி அல்ல இது! இருவரும் ஒரே எண்ணத்துடன் அமர்ந்து எடுத்துக் கொள்ள வேண்டிய சூளுரை ஆகும். ஒருவர்க்கொருவர் ஒத்துப் போவதனால் மட்டுமே நிறைவேறக் கூடிய பணி இது!

இதுபோலவே சமூகத்தின் எல்லாத் துறைகளிலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒருமைப்பாடு இருக்க வேண்டும். அப்போதுதான் சமூகம் உண்மையாகவே நலம் பெற்றுத் திகழ முடியும்.

பெண்களுக்கெனத் தனி வேலை வாய்ப்பு நிறுவனம் தேவை என்று சிலர் கருதுகிறார்கள். இது தேவையில்லை! ஆணும் பெண்ணும் சமம் என்ற கொள்கையைக் கொண்டிருக்கும் நமது சமுதாயம் பிரிவுபடுவதற்குத்தான் இது வழி வகுக்கும். மேலும் பெண்களுக்கென ஒரு தனி வேலைவாய்ப்பு நிறுவனத்தை உருவாக்கினால், அதற்கென ஊழியர்கள், அலுவலகம், நிர்வாகம் எனப் பல்வேறு நிலைகள் தேவைப்படுவதுடன், அரசுக்கும் அதிகச் செலவு ஏற்படும். எனவே இது தேவையில்லாதது; ஒற்றுமை உணர்ச்சிக்கு ஊறு செய்வது.

சமூக நலத்துறையைச் சார்ந்த மகளிர் நிறுவனங்களில் பாய் பின்னுதல், கூடை முடைதல் போன்ற பணியிலேயே நாம் இருக்கிறோம். திரும்பத் திரும்ப இதையே செய்து வருகிறோம். நாம் அவற்றை மாற்ற வேண்டும்

அரசாங்கமும் வர்த்தக சபையும் இது விஷயத்தில் கலந்து, நல்ல, மாற்றங்களைச் செய்ய வேண்டும். மகாராஷ்டிராவில் சில நிறுவனங்களின் தயாரிப்புகள் மகளிர் மன்றங்களுக்கு அனு... படுகின்றன. பெரிய கூட... 20 அல்லது 30 பெண்கள் அம... அந்த வணிகப் பொருள்... கட்டுகளாகக் கட்டி அனுப்பு...றனர். சாக்லெட்டு... சோப்புகள் ஆகியவை ... களால் கட்டுகளாக்கப்பட்டு... பனை நிலையங்களுக்கு அனு... படுகின்றன. இந்த முறை... நமது தமிழகத்திலும் அறி... படுத்தலாம். இந்தப் பணி... செய்வதற்கு உடல் ஊன... வர்கள் எளிதில் பயன்படு... படலாம். இதனைச் செ... பெண்களுக்கு கை வேலை (... Work) தெரிந்திருக்க வே... என்ற அவசியம் இல்லை. ஆர்... அக்கறையும் இருந்த... போதும்.

நமது மாநிலத்தில், (... களுக்கு, 'பகுதி நேர அ... (Part Time Work) தரப்ப... மிக அவசியம். அவ... தங்கள் வீட்டு வேலைக... செய்துகொண்டு, இந்தப் ... நேர அலுவலையும் செய்ய... யும்; பகுதி நேர அலுவ... அவர்கள் பெறுகின்ற ஊ... அவர்களது குடும்பச் செல...



யன்படுவது உறுதி. அரசு பல
றைகளில் இலட்சக்கணக்கில்
ணத்தைச் செலவிடுகிறது.
வற்றில் மிகக் குறைவான
ணத்தை, 'மகளிர் பகுதி நேர
வலைக்குச்' செலவிட்டால் மிக
ம் நல்லது.

அரசு எவ்வளவோ பணம்
சலவு செய்து பெண் டாக்டர்
ளையும், பெண் நர்சுகளையும்
சிரியைகளையும் உருவாக்கு
றது. திருமணம் செய்தவுடன்
ு பெண்கள் தங்களின் பணி
பத் தொடர முடியாது போய்
டுகிறது. அத்தகையவர்களின்
றமை-படிப்பு ஆகியவற்றை
ரசு பயன்படுத்திக் கொள்ள
ண்டும்: எனவே அவர்களுக்கு,
ுதி நேர அலுவலை அரசு
ரிக்க வேண்டும்.

நமது சமூகத்தில் எதற்கும்
சையே எதிர்பார்ப்பது என்ற
ணமே பொதுமக்களிடம்
றந்துள்ளது. ஜனநாயக
றையில் அரசு மட்டும்தான்
களுக்குப் பணி ஆற்றவேண்
என்பதில்லை; பொதுமக்களும்
ி ஆற்ற வேண்டும்; அப்போது
ன் சமூகமும், நாடும் முன்
ற்றப் பாதையில் பீடுநடை
ட முடியும். இதயம் நிறைந்த
தக் கூட்டுறவு உணர்வுதான்
ற்றி என்னும் கதிர்மணியை
ர்காலத்தில் நமக்கு விளை
துத் தர முடியும்.

மூகநலப்பணி என்பது பருவ
லப் (Seasonal Job) பணி
ல; இது தொடர்ந்து நடை
பும் தூய பணி. எனவேதான்
டன் பொது மக்களும்
ந்து பணி புரிய வேண்டியுள்
இரு கரம் தட்டினால்தான்
எழும்; அது போல அரசு,
துமக்கள் என இரு பிரிவின
சேர்ந்து பணிபுரிந்தால்தான்
றி என்னும் இனிய நாதத்
கேட்க முடியும்! ஆகவே,
துமக்கள் உள்ளன்புடன்,
உணர்வுடன் பணி ஆற்ற
டும்!

து பிரதமர் திருமதி
ரா காந்தி அவர்கள் அறி
ள்ள 20 அம்சத் திட்டம்
றி பெறுவதற்கும் பொது
ள் மிகுந்த ஒத்துழைப்புத்
வண்டும். அனைவரின் கூட்டு
தான் அரசின் திட்டங்கள்
றி பெற முடியும்! எனவே
நலத்துறையின் திட்டங்கள்
றி பெற்றிட—சாதனைகள்
ிட சகல மக்களும் மனப்
மாக ஒத்துழைக்க வேண்டும்
தெரிவித்துக் கொள்

## செங்கற்பட்டு மாவட்டத்தில் பாசன வசதிகள்...

செங்கற்பட்டு மாவட்டத்தில் தற்போதுள்ள பாசன வசதிகளை நிலைப்படுத்தவும், கூடுதலாக 7263 டன் உணவுத் தானியம் விளைவிக்கவும் ரூ. 2 கோடியே 16 இலட்சம் செலவு பிடிக்கும் 3 பாசனத் திட்டங்கள் அமல் படுத்தப்படும்.

இம்மாவட்டததில் மிகப் பெரியதான செம்பரம்பாக்கம் ஏரியை ரூ. 16 இலட்சம செலவில் அபிவிருத்தி செய்வது, அதற்கு அடுத்த பெரிய ஏரியான மதுராந்தகம் ஏரியை ரூ. 80 இலட்சம் செலவில் அபிவிருத்தி செய்வது, ரூ. 70 இலட்சம் செலவில் ஆரணியாற்றின் மீது அணை கட்டுவது ஆகியவை இத் திட்டங்களாகும்.

மேலும் அதிக விளைபரப்பில் உயர்விளைச்சல் நெல் ரகங்களைச் சாகுபடிக்குக் கொண்டு வந்ததன் மூலம் இம்மாவட்டம் உணவுத் துறையில் ஏற்கெனவே தன்னிறைவு பெற்றுள்ளது. கடந்த நவரைப் பருவத்தில் 2.13 இலட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. கடந்த ஆண்டில் இது 1.12 இலட்சம் ஏக்கராக இருந்தது. உயர் விளைச்சல் ரகங்களின் சாகுபடி நிலப்பரப்பை 'காரிப்' (ஐப்பசி—கார்த்திகை அறுவடை) பருவத்தில் 2.9 இலட்சம் ஏக்கராகவும் "ராபி" (சித்திரை—வைகாசி அறுவடை.) பருவத்தில் 4 லட்சம் ஏக்கராகவும் உயர்த்தத் திட்டமிடப் பட்டுள்ளது.

## மாம்பழ ஏற்றுமதி அதிகரிப்பு

1975-76-இல் இந்திய மாம்பழ ஏற்றுமதி வெகுவாக அதிகரித்தது. அந்த ஆண்டில் 1 கோடியே 61 லட்சதது 40 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள 3906 டன் மாம்பழ வகைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இதற்கு முந்தைய ஆண்டில் 68 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள 1619 டன் மாம்பழ வகைகள் தான் ஏற்றுமதியாயின. ஆல்ஃபோன்ஸா - ரக மாம்பழம் தான் அதிக அளவுக்கு ஏறறுமதி செய்யப்பட்டது. இந்தியாவிலேயே பல்வேறு ரக மாம்பழங்களை உற்பத்தி செய்யும் மாநிலம் உத்தரப் பிரதேஷம் தான். தஸ்ஸேரி, லங்கரா, சௌன்ஸா போன்ற மாம்பழரகங்களை வெளிநாட்டவர்கள் விரும்பி விலைக்கு வாஙகுகின்றனர்.

1975—76-ஆம் ஆண்டில் முதல் 9 மாதக் காலத்தில் துபாய், குவைத், பாஹ்ரைன் தீவுகள், பிரிட்டன் ஆகிய நாடுகள் மாம்பழங்களை மிக அதிக அளவுக்கு இந்தியாவிடமிருந்து விலைக்கு வாங்கின. சோவியத்யூனியன், சவூதி அரேபியா, எத்தியோப்பியா ஆகிய நாடுகள் மாம்பழச்சாறு அடங்கிய புட்டிகளை அதிகமாக விலைக்கு வாங்கிக் கொண்டன.



# மலிவான செலவில் வலிவு அளிக்கும் சிற்றுண்டிகள்!

மகளிர் அரங்கம்

கிராமங்களில் அரிசியினால் மட்டுமல்ல கம்பு, சோளம், கேழ்வரகு முதலிய தானியங்களைக் கொண்டும் புட்டு தயாரிக்கிறார்கள். நகர நாகரிகம் இவற்றை எல்லாம் மறப்பதற்கு வழி செய்ததோடு, அரிசிப் பொருள்களையே உண்ணவைத்து, அளவுக்கு மீறிய மாவுச்சத்தை (Starch) உடலுக்கு ஊட்டி, பலவித நோய்களுக்கு ஆளாக்குகிறது. எனவே, எப்போதும் எதற்கும் அரிசியையே பயன்படுத்தும் வழக்கம் மாறவேண்டும். அவ்வப்போது கோதுமையைப் பயன்படுத்தி வரவேண்டும்.

கோதுமை என்றால் நம்மில் பலருக்குக் கசப்பாக இருக்கிறது. கோதுமைப் பண்டங்களை உண்பதென்றால் சிலர் மிகுந்த சிரமப்படுகிறார்கள். கோதுமையில் சுவையான பண்டங்கள், உணவு வகைகள் யாவும் தயாரிக்க முடியும் என்பதை முந்திய இதழ்களில் 'மகளிர் அரங்கம்' பகுதியில் வெளிவந்துள்ள கட்டுரைகள் தெரிவித்துள்ளன. இந்த இதழிலும் கோதுமைத் தயாரிப்புகள் இரண்டைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

### கோதுமைப் புட்டு

தேவையான பொருள்:

கோதுமை ரவை – 85 கிராம்
உப்பு—சுவைக்கேற்ப

செய்முறை:

உப்புக் கலந்த நீரை ரவையில் தெளிக்க வேண்டும். பின்னர் ரவையை ஆவியில் வேக வைக்க வேண்டும். ரவை வேகும்போது அதைக் கிளறிவிட வேண்டும். (ரவை வேகும்போது தீ அதிகம் எரியவிடாது, குறைக்க வேண்டும்) தேவையென்றால் வெல்லம் கலந்து கொள்ளலாம். சுவையாக இருக்கும்.

300 கலோரிகள் சத்தும், 10 கிராம் புரதச் சத்தும் கொண்ட கோதுமைப் புட்டு, 8 காசு மதிப்பில் கிடைத்துவிடுகிறது.

### கோதுமை லட்டு

தேவையான பொருள்கள்:

கோதுமை மாவு—30 கிராம்
பச்சைப் பயறு—20 கிராம்
வேர்க்கடலை—8 கிராம்
பழுப்புச் சர்க்கரை—20 கிராம்

செய்முறை:

பச்சைப் பயற்றையும் வேர்க்கடலைப் பருப்பையும் வறுத்துப் பொடி செய்துகொள்ள வேண்டும். பின்னர், கோதுமையை வறுத்துக் கொள்ள வேண்டும். வறுத்த கோதுமையுடன் பச்சைப் பயறு, வேர்க்கடலைப் பருப்பு ஆகியவற்றின் பொடியைக் கலக்க வேண்டும். பழுப்புச் சர்க்கரையையும் இவற்றுடன் கலக்க வேண்டும். கலவையை உருண்டைகளாகச் செய்ய வேண்டும். இதுதான் கோதுமை லட்டு, சுவையாக இருக்கும்; குழந்தைகளுக்கு இடைவேளைச் சிற்றுண்டியாகக் கொடுக்கலாம்.

300 கலோரிச் சத்தும், 10 கிராம் புரதச் சத்தும் கொண்ட கோதுமை லட்டு, 10 காசு மதிப்பில் கிடைத்துவிடுகிறது.

### பருப்புக் கூட்டு

சிற்றுண்டி என்ற பெயரால் எத்தனையோ உணவுப்பொருள்கள் உள்ளன. அவை எல்லாம் உடலுக்கு ஊட்டச்சத்தைத் தருகின்றன என்று சொல்லிவிட மு
யாது.

பருப்புக்கூட்டு என்னும் உ
வுப் பொருள் ஊட்டச்சத்
மிகுந்ததாகவும் சுவையானதா
வும், விளங்குகிறது. அதன் த
ரிப்பைப் பார்ப்போம்.

தேவையான பொருள்கள்:

பச்சைப் பயறு அல்லது கடலை
பருப்பு—50 கிராம்
எலுமிச்சை அல்லது மாங்காய்
தேங்காய்த் துருவல்—2 கரண்
பச்சை மிளகாய்—4
எண்ணெய்—7 கிராம்
கடுகு—சிறிதளவு
உப்பு—தேவைக்கு ஏற்ப.

செய்முறை:

பருப்பைச் சுத்தம் செய்
சுமார் 2 மணி நேரம் தண்ணீரி
ஊற வைக்க வேண்டும்.

பின்னர், கழுவி, நீரை வடித்
விட்டு, மாங்காய்த் துண்டுகளையு
தேங்காய்த் துருவலையும் கலக்
வேண்டும். பின்னர் சுவை
கேற்ப உப்புச் சேர்த்துக் கொள்
வேண்டும். பச்சை மிளகாை
அரிந்து, கடுகையும் சேர்த்து
எண்ணெய்யில் இட்டுத் தாளிக்
வேண்டும்; அதனைப் பருப்பு
கலவையில் சேர்க்க வேண்டு
240 கலோரிகள் சத்தும், 1
கிராம் புரதச் சத்தும் கொண்
சுவையான பருப்புக் கூட்டு 1
காசுகள் விலையில் தயாராகிவி
கிறது. (மாங்காய்க்குப் பதி
எலுமிச்சைச் சாற்றைச் சேர்க்
லாம்.)

குறிப்பு: ஒருவருக்குத் தயாரி
கும் அளவுதான் இங்கு கொடு
கப்பட்டுள்ளது. ஆட்களை
பொறுத்து, அளவை, நேர்வி
தத்தில் கணக்கிட்டுக் கொள்ள
வேண்டும்.

—எஸ். எஸ்

# அஞ்சலக வங்கியின் மாபெரும் பரிசுத் திட்டம்

**ஆண்டுக்கு இருமுறை**

**குலுக்கல்கள் ஜனவரியிலும் ஜூலையிலும் நடைபெறும்**

**ரூ. 20½ இலட்சத்திற்கு**
**11,116 பரிசுகள்**

ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட 11,116 பரிசுகள் உண்டு.

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. | 1,00,000 |
| 5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50,000 |
| 10 மூன்றாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 20,000 |
| 100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 5,000 |
| 1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 500 |
| 10,000 ஆறாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50 |

ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.

உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெறாதவர்க்கும் அளிக்கப்படும்.

விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**இயக்குநர்,**
தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,
சென்னை-600 002.




# 'கை' கொடுக்கும் மருத்துவம்!

**கை**யை நம்பியே நம் வாழ்க்கையும் அமைகிறது.!

சின்னஞ்சிறிய கைகளே இந்தப் பெரிய உலகத்தை உருவாக்குகின்றன. காட்டைத் திருத்திக் கழனியாக்குவதும், ஆயுதம் செய்வதும் நல்ல காகிதம் செய்வதும், அற்புதமான படைப்புகள் அனைத்தும் படைத்து வழங்குவதும் இந்தக் கைகளே அன்றோ?

மனித உடலின் மிக இன்றியமையாத உறுப்பான இந்தக் கைகளுக்கு ஏதேனும் ஊனம் ஏற்பட்டுவிட்டால், வாழ்க்கையே அல்லவா ஊனமாகிவிடும்? இத்தகைய நிலை ஏற்படாமல் இருக்க சென்னை அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனையின் ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சைத் துறை (Plastic Surgery Department) பேருதவி செய்து வருகிறது.

அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனையின் ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சைப் பிரிவு ஆற்றிவரும் பணியைக் குறிப்பாக தொழிலாளர்களுக்குத் ''தமிழரசு'' இதழ் மூலம் தெரிவிக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன், பேட்டி காண்பதற்காக ஸ்டான்லி மருத்துவ மனையின் ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சைத் துறைக்குச் சென்றோம். அத்துறையின் பேராசிரியர் டாக்டர் ஆர். வெங்கடசாமி அவர்கள் ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சை பற்றி விளக்கியதுடன் அவர் தமது அறைக்குள் ஒரு சிறிய திரையில் வண்ண 'ஸ்லைடு' களைப் போட்டுக் காண்பித்தார்.

எத்தனை எத்தனைத் தொழிலாளியின் கைகள், எப்படியெல்லாம் உருமாறி இருக்கின்றன!

ஆலைத் தொழிலாளியின் அழகிய கைகள், இயந்திரத்தில் சிக்கிச் சீரழிந்துள்ள காட்சியைக் கண்டபோது நெஞ்சம் துணுக்குறுகிறது. ஆயிரமாயிரம் கருவிகளைப் படைத்த அந்தக் கையின் விரல்கள் நசுக்குண்டு, வெட்டுண்டு, உருமாறி.....அப்பப்பா! நம் இதயத்தையே பிழிந்தெடுக்கிறதே!

உருத்தெரியாமல் போன கை விரல்களுக்குப் புது உருவம் தந்து மீண்டும் அது உதவும்படியாக ஆக்கும் அரிய பெரிய பணியில் ஈடுபட்டிருக்கிறது சென்னை அரசினர் ஸ்டான்லி மருத்துவமனையிலுள்ள ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சை 'பிளாஸ்டிக் சர்ஜரி'—துறை.

இத்துறையிலிருக்கும் கைக் காயங்களுக்கான சிகிச்சைப் பிரிவு இந்தியாவிலேயே முதலாவதாகவும், முன்னோடியாகவும் திகழ்கிறது என்பதை நாம் பெருமிதத்துடன் இங்கே குறிப்பிட வேண்டும்.

வடசென்னை, தொழிலாளர்கள் நிறைந்த பகுதியாகும். பல்வேறு சிறிய பெரிய தொழிற்சாலைகள் அங்கே ஏராளமாக உள்ளன. தங்கச்சாலை வண்ணாரப்பேட்டை, திருவொற்றியூர், மணலி போன்ற பகுதிகளிலும், மற்றும் ஐ.சி.எப். ஆவடி, அம்பத்தூர் போன்ற பகுதிகளில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இரவும் பகலும் பணியாற்றுகிறார்கள்.

இரவிலோ பகலிலோ வேலையில் ஈடுபட்டிருக்கும்போது விபத்து ஏற்பட்டு விடுகிறது.

ஒருவருக்கு நான்கு விரல்களு துண்டிக்கப்பட்டு விட்டன.

பஸ் விபத்தில் ஒரு பெண்ணுக்கு கை நசுங்கிய நிலையில் இருகிறது.

ஒரு தொழிலாளியின் கை சின்னாபின்னமாகக் காட்சி அளிகிறது.

இப்படி ஒரு நாளைக்குச் சுமா 10 அல்லது 12 பேர் இந்த மருதுவ மனைக்கு வருகிறார்கள். அவகளுக்கெல்லாம் உடனே இங்கு துரித சிகிச்சை அளிக்கப்ப கிறது. அதாவது 12 மணி நேர தில் நோயாளிக்குத் தக்க சிகிச்சை அளிக்கப்படுகிறது.

கையில் காயம்பட்ட ஒருவ இங்கே வருகிறார் என்றால், மு வில் அவருக்கு ஏற்பட்ட விபத் பற்றிய முழுவிவரங்களும் (O patient Hand Case record.) சே ரிக்கப்பட்டு அவை பதிவு செ யப்படுகின்றன.

இந்தத் துறை செம்மையா இயங்குவதற்கு இத்துறையி பேராசிரியர் டாக்டர் ஆர். வெ கடசுவாமி அவர்களின் தலைமை யில், நான்கு மருத்துவர்கள் பய யாற்றுகின்றனர்.

கடந்த ஐந்து ஆண்டுகளா இந்த ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சைத் துறை இயங்கி வ கிறது. இத்துறையின் பு நோயாளி சிகிச்சைப் பிரிவு (O patient clinic), வாரத்தி திங்கள், வெள்ளிக் கிழமைகள் காலை 10 மணி முதல் 1 மணி வரை, அறை எண்: 24-ல் இயங் கிறது.





சிகிச்சைக்கு முன்னும் பின்னும்

புதிய நோயாளிகள் வாரத்தின் எல்லா நாட்களிலும் இம்மருத்துவ மனைக்கு வரலாம். அவர்களுடைய நோயின் தன்மையை அறியவும், துரிதமாகச் சிகிச்சை அளிப்பதற்கான யோசனைகளைக் கூறவும் இங்கே ஒரு மருத்துவ அலுவலர் நாள்தோறும் பணியாற்றுகிறார்.

இங்கே வரும் பல்வேறு நோயாளிகள் பற்றிய விவரங்கள்: உதடு பிளவுபட்டவர், தீக்காயமுற்றோர், புற்று நோயாளர், கைக்காயங்கள் பட்டவர் இவர்களைப் பற்றிய தகவல்கள் ஒழுங்காகச் சீராகச் சேகரிக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டுள்ளன. எந்த நேரத்திலும் எப்போதும் இந் நோயாளிகள் பற்றிய குறிப்புகளை (Case records) ஒரு சில நிமிடங்களில் எடுத்துவிடலாம்.

ஸ்டான்லி மருத்துவமனையிலுள்ள ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சைத் துறை மூன்று பிரிவுகளாகச் செயல்படுகின்றது. அவை:

1. பெண்கள் மற்றும் குழந்தைகள் பகுதி (Women and Children Ward)

2. கைக் காயங்களுக்கான அறுவைச் சிகிச்சைக் கூடம் (Hand injury Operation Theatre)

3. காயங்களுக்கான கட்டுப் போடும் கூடம் (Dressing Theatre)

கைக்காயங்களுக்குச் சிகிச்சை பெறும் நோயாளிகள் பகுதிக்குச் செல்வோமா?

இப்பகுதி மிகவும் துப்புரவாக இருக்கிறது. அமைதி நிலவும் இந்தப் பகுதியில் சில வாசகங்கள் நம் கவனத்தைக் கவருகின்றன:

*உங்கள் கைகள் கண்களுக்கு ஒப்பானவை.

*பணியில் ஈடுபடும்போது கவனமும் சுறுசுறுப்பும் தேவை. உங்கள் மனத்தை அங்குமிங்கும் அலையவிடாதீர்கள்.

*கை விபத்துகளுக்குக் காரணம் கவனக்குறைவுதான்.

—இவை பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல அங்கே வருகின்ற அனைவருக்கும் 'இனி விழிப்புணர்ச்சி தேவை!' என்பதைச் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருக்கின்றன!

இந்த நோயாளிகள் பகுதியில், ஒரு புள்ளி விவர அட்டவணையையும் நாம் காண முடிகிறது. அதில் கைக் காயங்களுக்காகச் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை ஆண்டு வாரியாகக் குறிக்கப் பெற்றுள்ளது. அதன் விவரம் வருமாறு:

| | |
|---|---|
| 1971 | 853 |
| 1972 | 1,110 |
| 1973 | 1,364 |
| 1974 | 2,570 |
| 1975 | 3,615 |

இவ்வாண்டில் (1976) கைக் காயங்களுக்காகப் பதிவு செய்யப் பெற்ற நோயாளிகளும், அறுவைச் சிகிச்சை பெற்ற நோயாளிகளும் பற்றிய தகவல்களை இன்னொரு அறிவிப்புப் பலகையிலிருந்து அறிய முடிகிறது.

கைக் காயங்களுக்காகப் பதிவு செய்யப் பெற்ற நோயாளிகள்:

| | | |
|---|---|---|
| ஏப்ரல் | — | 260 |
| மே | — | 231 |
| ஜூன் | — | 238 |

அறுவைச் சிகிச்சை பெற்ற நோயாளிகள்:

| | | |
|---|---|---|
| ஏப்ரல் | — | 162 |
| மே | — | 169 |
| ஜூன் | — | 166 |

கைவிரல்கள் இழந்தவர்கள் அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு வேலை செய்யவும், சாப்பிடவும், எழுதவும் முடிகிறது.

பொதுவாகத் தொழிலாளிகள் விபத்துகளுக்குக் காரணம் என்ன என்பதை உணர வேண்டும்; நேரம் சரியில்லை என்றோ, விதி என்றோ கூறி சமாதானப்படுத்திக் கொள்வதைவிடக் 'கவனக் குறைவே இதற்குக் காரணம்' என்பதை உணர வேண்டும்.

ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சைத் துறையில் கைக் காயங்களுக்கு மட்டுமின்றி, கண், வாய் முதலான உறுப்புகளில் ஏற்படும் புற்றுநோய்களுக்கும் அறுவைச் சிகிச்சை செய்யப்படுகிறது.

இன்னொரு முக்கிய அறுவைச் சிகிச்சையையும் இத்துறை மேற்கொண்டுள்ளது.

பிறக்கும்போது எல்லாரும் முழுமையாகப் பிறந்து விடுவதில்லை. பிறக்கின்ற சிலருக்குச் சில குறைகள் இருக்கத்தானே செய்கின்றன?

மூக்கு சப்பையாகவோ அல்லது பெரிதாகவோ வாய் கோணலாகவோ அல்லது மேலுதடு பிளவுபட்டோ, கண் சிறிதாகவோ அல்லது பெரிதாகவோ இப்படி உடலின் உறுப்புகள் குறைந்தும் மிகுந்தும் காணப்படுகின்றன.

பிறவிலேயே சிலருக்கு உதடு கோணலாகவோ, இரண்டாகப் பிளவுபட்டோ அமைந்து விடுகிறது. இந்தக் குறைபாடு 770 பேருக்கு ஒருவர் வீதம் உள்ளதாம்.

இந்தக் குறை உள்ளவர்கள் மற்றவர்களைப் போல நாமும் அழகாக இருக்க முடியவில்லையே என்று எண்ணி ஏங்குவதுண்டு, அந்த ஏக்கத்திலேயே காலத்தைக் கழிப்பதுண்டு.

அத்தகையவர்கள் — உறுப்புக் குறைபாடுள்ளவர்கள் — அந்தக் கவலை இல்லாமல் வாழ்வதற்கு ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சைத் துறை அவர்களுக்கு உதவ முன் வருகிறது.

அதன் மூலம் சப்பை மூக்கு உள்ளவர் சரியான அழகிய மூக்கைப் பெறலாம்; உதடு பிளவுபட்டவர் ஒழுங்கான உதடு பெற்று மகிழலாம்.

எம். எஸ். அறுவைச் சிகிச்சைக்காகத் (M. S. General Surgery) தம்மைப் பதிவு செய்திருக்கும் பட்டமேற்படிப்பு பட்டதாரிகள், இத்துறையில் ஒரு மாதக் காலம் பயிற்சி பெற நியமிக்கப்படுகின்றனர். பயிற்சிக் காலத்தில் ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சையின் அடிப்படை நுட்பங்கள் கற்பிக்கப்படுகின்றன. இது சம்பந்தமான முக்கிய சொற்பொழிவுகளும் நிகழ்த்தப்படுகின்றன.

ஸ்டான்லி மருத்துவ மனையிலுள்ள இத்துறையில், பட்டமேற்படிப்புப் பட்டதாரிகள் ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சையில் பயிற்சி பெறுவதற்குப் போதுமான வசதிகளும், பரிசோதனைக் கூடங்களுக்கான கருவிகளும் உள்ளதால், ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சையில் எம். சிஎச்., படிப்பு (M. Ch., Course) ஒன்றைத் துவக்குவதற்கான தீர்மானம் முன் வைக்கப்பட்டுள்ளது.

இங்கு மிக்கப் பயனுள்ள ஒரு நூலகம் காட்சி தருகிறது. இந் நூலகத்தில் ஆண்டுதோறும் புதிய புதிய நூல்கள் சேர்க்கப்படுகின்றன. ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சை சம்பந்தமான 150 அரிய நூல்கள் இந்நூலகத்தில் உள்ளன. இச்சிகிச்சை சம்பந்தமான இதழ்களும் தருவிக்கப்படுகின்றன.

இந்தத் துறை பல்வேறு இடங்களில் நடைபெறும் விஞ்ஞானக் கருத்தரங்குகளில் கலந்து கொண்டு, ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சை சம்பந்தமான பயனுள்ள கட்டுரைகளை வழங்கியிருக்கின்றது.

## பிளாஸ்டிக் சர்ஜரி.....

விஞ்ஞானம் தந்த நன்கொடைகளில் ஒன்று இந்த ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சை! இந்தச் சிகிச்சையே புதுமையானதுதான். பாதிக்கப்பட்ட கைவிரல்கள் புது வடிவம் பெறுவது நமக்கு விந்தையாகவே இருக்கிறது. இந்த அறுவைச் சிகிச்சையை எப்படிச் செய்கிறார்கள்?

அறுந்து விழுந்த விரல் என்றால் அதை அதே இடத்தில் வைத்துப் பொருத்தி விடலாம். கையே நசுங்கிவிடுகிறது என்றால்? கைவிரல்களில் சில பாதி அளவுக்குத் துண்டித்து விடுகிறது என்றால்?

'தன் கையே தனக்கு உதவி' என்பது போல இந்தச் சிகிச்சைக்கு நம் உடலே நமக்கு உதவி செய்கிறது. ஆம். நம் உடலில் உள்ள சதையே இவ்வாறு ஒட்டுவதற்கு உதவுகிறது. தொடை போன்ற சதைப்பற்றுள்ள இடங்களிலிருந்து தேவையான அளவு சதையை எடுத்து இந்த ஒட்டுறுப்பு அமைக்கப்படுகிறது.

'பிளாஸ்டிகா' (Plastica) என்ற கிரேக்கச் சொல் "மோல்டபிள்" (Mouldable) என்னும் பொருளில் வழங்கப்பெறுகிறது. 'மோல்டபிள்' என்றால் உருவம் கொடுக்க உதவுவது என்று பொருள். கை விரல் போன்று உருவம் கொடுத்து அல்லவா இந்தச் சிகிச்சையைச் செய்கிறார்கள்?

பாதிக்கப்பட்ட கைவிரலுக்கு பதில், தொடையிலிருந்து சிறிது சதை எடுத்துப் பொருத்திவிடுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு அந்த விரலுக்கு உணர்ச்சிகள் இருக்குமா?

இருக்கும். ஏற்கெனவே பாதிக்கப்பட்ட விரலிலுள்ள உணர்ச்சி நரம்புகளை இணைத்தே அறுவைச் சிகிச்சை செய்யப்படுகிறது. நாளாவட்டத்தில் அந்த விரலுக்கும் உணர்ச்சிகள் வந்துவிடும்.



சிகிச்சைக்கு முன்னும்



பின்னும்

இவ்வாறு குறை உறுப்பு உள்ளவர்களின் குறைவை நீக்கி மன நிறைவை உண்டாக்கி-இருளடைந்த அவர்கள் வாழ்க்கையிலே ஒளிவிளக்கேற்றி வைக்கிறார்கள் மருத்துவர்கள் என்பதை எவரும் மறுத்துக் கூற முடியுமா?

—பி. வி. கிரி.




# நீர் வளம் பெருக்கி நிலவளம் பெருக்குவோம்!



பரந்த பரப்பிற்கு நீர்ப்பாசன வசதியை விரைந்து விரிவாக்குவதே இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தின் 7-வது அம்சக் குறிக்கோளாகும். இக்குறிக்கோளுக்கு ஏற்பவே, தமிழ்நாட்டின் நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக நடப்பாண்டிற்கு ஏறத்தாழ ரூபாய் 24 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகை 1975-76 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட ரூபாய் 19.69 கோடியை விட 25 சதம் அதிகமாகும்.

தமிழ்நாட்டில் மழையினால் கிடைக்கும் மேல்மட்ட நீர் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. கிடைக்கின்ற நீரைச் சிறந்த முறையில் பயன்படுத்தவும், மேலும் புதிய பகுதிகளுக்கு பாசனவசதி ஏற்படுத்தவும் வேண்டி, தற்பொழுதுள்ள பாசனத் திட்டங்களை நவீனப்படுத்தும் திட்டம் துவக்கப்பட்டுள்ளது. நீர்வளம் பெருக்கி நிலவளம் பெருக்க வேண்டுமென்பதற்காக, முடிவு பெறுமல் உள்ள நீர்ப்பாசனத் திட்டப் பணிகளை விரைவாகவும், திறமையாகவும் முடித்திடுவதில் தமிழ்நாடு அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது.

## சிறு பாசனத் திட்டங்கள்

சிறப்புச் சிறுபாசனத் திட்டங்களுக்காக 1975-76-ஆம் ஆண்டில் ரூபாய் 310 கோடி செலவிடப்பட்டதற்கு மாருக, 1976-77-ஆம் ஆண்டில் ரூபாய் 500 இலட்சம் செலவிடப்படும். இது, சென்ற ஆண்டில் செலவிடப்பட்டதைவிட 78 சதம் கூடுதலாகும். வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் முடிவுறுமல் பாக்கியுள்ள சிறுபாசனத் திட்டங்களை விரைந்து முடித்திடுவதற்கும், வறட்சியைத் தாங்கிக் கொள்ள உதவுதல், அதிக உற்பத்தி, பெரும்பான்மையினர்களுக்குப் பயன்தருவதாக உள்ளது போன்ற நிலையான பயன்தரக்கூடிய திட்டங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும். இதனுல் 16,000 ஏக்கர் நிலப்பரப்புக்குக் கூடுதலாகப் பாசனவசதி ஏற்படும்.

## நடுத்தரப் பாசனத் திட்டம்

நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்காக 1976-77-ஆம் ஆண்டிற்கு ரூபாய் 18.67 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இவ் ஒதுக்கீடு 1975-76-ம் ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ள ரூபாய் 15.68 கோடியை விட 20 சதம் அதிகமாகும். இந்திய அரசின் அனுமதி வேண்டி 7 நடுத்தரப் பாசனத் திட்டங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அவற்றில் 3 திட்டங்களின் வேலை விரைவில் துவக்கப்பட உள்ளன.

முன்பே எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள பின்கண்ட 4 திட்டங்களின் பணி துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

## நிலநீர்

நிலநீர் ஆய்வுப் பணிகளுக்கா 1976-77-ஆம் ஆண்டிற்கு ரூபா 247.16 இலட்சம் ஒதுக்கப்ப டுள்ளது. விரைவு நிலநீர் ஆய் 7 வட்டாரங்களில் முன்னேற் நிலையில் உள்ளது. 9 வட்டார களில் முடிந்துள்ளது.

கடுமையான வறட்சியா பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளி உள்ள கிணறுகளை ஆழப்படுத் வும், தண்ணீர் பற்றுக்குறையை தவிர்க்கவும், தமிழ்நாடு நிலநீர் துறை 2,000 கிணறுகளை ஆ வுக்கு எடுத்துக் கொண்டுள்ள

குறைந்தபட்சத் தேவைத் தி டத்தின்கீழ், வறட்சியால் பாதி கப்பட்ட பகுதிகளில், அவச அடிப்படையில் 1976 ஏப்ர முதல் ஜூன் வரை 2,400 ஆ குழாய்க் கிணறுகள் அமைக்க பட்டுள்ளன. மேலும், தமிழ்நா அரசு தற்பொழுது 2,000 கிண களை ரூபாய் 40 இலட்சத்தி ஆழப்படுத்திடுவதற்காக அனும யளித்துள்ளது.

கேரள மாநிலத்தில் உற்பத் யாகி, மேற்கு நோக்கிப் பாய்ந் அரபிக்கடலில் பயனின்றிக் கல கும் ஆறுகளின் தண்ணீரை திருப்பி தமிழகத்தைச் செழிக்க செய்வதற்கான பேச்சு வார் தைகளைக் கேரள மாநில அர டன் துவக்கிடத் தமிழ்நா அரசு திட்டமிட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு விரைந் மேற்கொண்டு வரும் இத்தகை பணிகளில், தமிழ்நாட்டில் வின வாக நீர்வளம் பெருகி, நிலவள செழிக்கும் என்பது திண்ணம்.

| திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுச் செலவு (ரூபாய் இலட்சத்தில்) | பாசன வசதி பெற விருக்கும் பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1. வறட்டுப் பள்ளம், கோவை மாவட்டம். | 30 | 1,6?0 |
| 2. குண்டேரிப்பள்ளம், கோவை மாவட்டம் | 15 | 1,140 |
| 3. வராக நதி, மதுரை மாவட்டம். | 30 | 5,200 |
| 4. வட்டமலைக்கரை ஓடை, கோவை மாவட்டம். | 15 | 2,960 |

இந்நான்கு திட்டங்களின் மூலம் கூடுதலாக 10,970 ஏக்கருக்குப் பாசனவசதி கிடைக்கும்.



# கிராமப்புற வளர்ச்சியில் சமுதாய நோக்குடைய காடுகளின் பங்கு



கே. ஏ. போஜா ஷெட்டி
வனத்துறைத் தலைவர் (பொது)
தமிழ்நாடு

மரங்கள் அடர்ந்துள்ள பகுதி காடு என்று அழைக்கப்பெறும். அது இயற்கையான காடு, செயற்கையான காடு என வகைப்படுத்தப்படும். செயற்கையான காடு மனித முயற்சியால் உருவாக்கப்படுவது.

**சமுதாய நோக்குடைய காடுகள் :**

செயற்கைக் காடு ஒரு பயன் நோக்கி வளர்க்கப்படும் போது சமுதாய நோக்குடைய காடு என அழைக்கப்படுகிறது. இதன் தனிச் சிறப்பு என்ன வென்றால், இது மக்களுக்காக மக்களால் வளர்க்கப்படுதலே யாகும்! 'சமுதாய நோக்குடைய காடுகள்' என்ற தொடரில் காடுகள் என்ற சொல் மரக் கூட்டத் தொகுதியை மட்டும் குறிக்காமல், அவை சமூகத்தில் விளைவிக்கும் பல்வேறுபட்ட பயன்களையும், பாதிப்புகளையும் உணர்த்தி நிற்கிறது எனக் கருதல் வேண்டும்.

வேளாண்மைத் தேசியக் குழு (The National Commission on Agriculture), ''சமுதாய நோக்குடைய காடுகள்—இடைக்கால அறிக்கை 1973'' என்ற தன்னுடைய அறிக்கையில், பின் வரும் வகைப்பாடுகளைச் சமுதாய நோக்குடைய காடுகளின் வகைகளாக அமைத்துக் காட்டியுள்ளது!

(அ) பண்ணைகளிலும் தனியார் நிலங்களிலும் பண்ணைக் காடுகள் வளர்த்தல்.

(ஆ) ஊராட்சி நிலங்கள், புறம்போக்கு நிலங்களில் பழ மரம், விறகு மரம், தழை மரம், புல்வெளி முதலிய வளர்த்தல், காற்றரிப்பு (Shelter Belts) தடை மரங்கள் வளர்த்தல்; ஆறு; கால்வாய்க் கரைகள், சாலை, புகை வண்டிப் பாதை ஆகியவற்றின் ஓரங்களில் மரங்கள் வளர்த்தல் ஆகிய மிகைக் காடுகள் (Extension Forestry) ஏற்படுத்தல்.

(இ) பாழ்பட்ட காட்டுப் பகுதிகளில் மரம் வளர்த்தலைப் புதுப்பித்தல்.

(ஈ) இன்பப் பொழுதுபோக்கிற்குப் பயன் தரும் வகையில் காடுகளைப் பாதுகாத்தல்.

எனவே, குறிப்பிட்ட நிலம் என்று இல்லாமல் வாய்ப்பான நிலங்களில் எல்லாம் பசுமைத் தோற்றத்தை உருவாக்குவது இதன் பொதி பொருள் எனலாம்.

நம் நாட்டில், காடு வளர்ப்புக் கலை, இது நாள் வரை பெரிதும் அரசு சார்ந்ததாக—அரசுக் காப்புக் காடுகளின் எல்லைக்குள் நடைபெற்று வருவதாக — இருந்து வந்துள்ளது. ஆனால், சமுதாய நோக்குடைய காடுகள் வளர்ப்புத் திட்டம், சமூக நிலங்கள், ஆற்றங்கரைகள், கால்வாய் பகுதிகள், சாலை ஓரங்கள், பண்ணைகள், வளாகங்களைத் தழுவி அதன் எல்லையை மேலும் விரிவு படுத்துகிறது. அதற்கு மேலே, இத்திட்டம் மக்களது சிறந்த பங்கினையும் உட்கொண்டு விளங்குகிறது!

**நாட்டுப்புற வளர்ச்சிக்குத் துணையாதல் :**

கானியல் பணி, மிகுதியும் தொழிலாளர்கள் தீவிரமாகப் பங்கேற்கும் பணியாகும். இப்பணிக்காகச் செலவிடப்படும் தொகையில் எண்பது விழுக்காடு (80 சதம்) உடலுழைப்பாளர்களுக்கு ஊதியமாகவே (கூலி) செலவழிகிறது. இதிலிருந்து, கானியல் பணி, நாட்டுப்புற மக்களுள், வேலையில்லாத அல்லது வேலை குறைந்த ஆட்களுக்குக் கணிசமான அளவுக்கு வேலை வாய்ப்பைத் தரக்கூடும் என அறியலாம். மேலும், கிராமங்களில் பயன் கொள்ளப் பெறுமல் கிடக்கும் நிலங்களிலும், தனியாருடைய நிலங்களிலும் மரம் வளர்ந்தால், அது, எரு, தீவனம், மரம், விறகு முதலியவற்றின் வளர்ந்து வரும் தேவையை நிறைவு செய்யத் துணை புரியும். மர வகைகள் ஊர்ப் புறத்தே சிறிய பெரிய தொழில்கள் உருவாவதற்கான மூலப் பொருள்களை வழங்குவதுடன், நாட்டுப்புறத் தொழில் வளர்ச்சிக்கு நல்ல துணை செய்யும். கூடை, பாய், பொம்மை, பென்சில், தீக்குச்சி, நறுமணப் பொருள்கள், உண்ணத்தகா எண்ணெய், காகிதம், அட்டைப்பலகை, செயற்கைப் பட்டு முதலிய பொருள்களை உருவாக்கும் தொழில்கள் காடுபடு பொருள்களைச் சார்ந்தன என்பதை இங்கே நினைவு கூர்க. மரச் செறிவு, மழை நீர் விரைந்து உலர்தலைத் தடுத்து மண்ணில் ஈரப் பசையைத் தங்கச் செய்வதால், ஊர்ப் புறக் காடுகள் வேளாண்மைத் தொழிலுக்கும் உதவுகிறது. இவை மண்ணரிப்பைத் தடை செய்யும் ஆற்றல் வாய்ந்த தடைகளாகவும் விளங்குகின்றன. பசுமையான இலைகள் முதன்மையான தழை எருவாகும்!

**தமிழ் நாட்டில் சமுதாய நோக்குடை காடுகள் :**

தமிழ் நாட்டில் வளர்க்கப்படும் சமுதாய நோக்குடை காடுகளைப் பொதுவாகக் கீழ்வருமாறு வகைப் படுத்தலாம்.

1. புறம்போக்கு நிலங்களில் காடு வளர்ப்பு.

2. ஆற்றங்கரை, கால்வாய்க் கரைகளில் மரம் வளர்ப்பு.

**புறம்போக்கு நிலங்களில் காடுகள் :**

பயிர் செய்யத் தக்க புறம்போக்கு நிலம், தரிசு நிலம், பயிர் செய்யப் பயன்படாத நிலம் என்று வகைப்படுத்தப்படும் நிலங்கள் அனைத்தும் காடு வளர்ப்புக்கு ஏற்றவையே. இந் நிலங்கள் அரசு நிலங்களாகவோ, ஊராட்சி நிலங்களாகவோ இருக்கின்றன. 1956-60-இல் வனத்துறை மேற்கொண்ட பூர்வாங்கமான நில அளவை மதிப்பீட்டின் படி, தமிழ் நாட்டில் பயன் கொள்ளப் பெறுமல் கிடக்கும் காடு வளர்ப்புக்கு ஏற்ற நிலப் பரப்பு ஏறக் குறைய ஐந்து இலட்சம் எக்டேராகும்! எனவே 60-61-ஆம் ஆண்டில் முன் மாதிரியாக மூன்று மாவட்டங்களில் காடு வளர்ப்புப் பணி மேற்கொள்ளப்பட்டது. பிறகு தொடர்ந்து ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ், இக்காடு வளர்ப்புப் பணி மற்ற மாவட்டங்களிலும் மேற்கொள்ளப் பெற்று முதன்மைப்படுத்தப் பெற்றது. 1975-ஆம் ஆண்டு வரை ஏறக்குறைய 55,000 எக்டேரில் 180 இலட்சம் ரூபாய் செலவில் மர வளர்ப்புப் பணி முடிக்கப்பட்டுள்ளது. இம் மர வளர்ப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலங்கள் பெரும்பாலும் ஏரிக்கரை முனங்குகளே (ஏரிக் கரையோரப் பகுதிகள்)! இங்கே கரு வேல மரங்கள் செழித்து வளர்ந்து நல்ல பயனைத் தந்தன. தாழ்ந்த மலைச் சரிவுகளில் பரம்பை, ஓடை, செம்மரம், வாகை, ஆச்சா மரங்கள் வளர்க்கப்பட்டன. 1,500 மீட்டர் உயரத்திற்கு மேம்பட்ட சரிவு நிலங்களில் பொதுவாக நீலகிரி தைல மரங்களும், 'வாட்டில்' மரங்களும் வளர்க்கப்பட்டன.

**ஆறு, கால்வாய்க் கரை காடுகள் :**

பல ஆண்டுகளாகக் காவேரி, கொள்ளிடம் ஆற்றங்கரைகளின் சில பகுதிகளில் மட்டும் வனத்துறையால் சவுக்கு வளர்க்கப்பட்டு வந்தது. ஆனால், திட்டமிட்ட அடிப்படையில், தஞ்சை, திருநெல்வேலி, திருச்சி மாவட்டங்களில் கால்வாய்ப் பகுதிகளில் மரம் வளர்த்தல் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் 1956-இல் தான் மேற்கொள்ளப்பட்டது. பின்னல் இத்திட்டம் மற்ற மாவட்டங்களிலும் செயல் படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், தேக்கும் 'சிசு'வும் முதன்மையாக வளர்க்கப்பட்டன. 1975-ஆம் ஆண்டு வரை 49.5 இலட்சம் ரூபாய் செலவில் 10,500 எக்டேரில் இத்திட்டத்தின் கீழ் மரங்கள் வளர்க்கப் பட்டன.

**தனியார் நிலங்களில் காடுகள் :**

சமுதாய நோக்குடைய காடுகளை வளர்த்தல் என்பது தமிழ் நாட்டு உழவர் பெருமக்கள் அறியாத ஒன்று அன்று. அவர்கள் தம்முடைய நிலங்களில் சவுக்கு வளர்ப்பதை யாரும் காணக் கூடிய ஒன்று ஆகும். ஆயினும், தனியார் நிலங்களில் மரம் வளர்த்தலுக்கு இன்னும் வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன. குறிப்பிட்ட நிலம் என்று இல்லாமல், வீட்டைச் சுற்றி இடைவெளிகளிலும், கிணற்றுப் பகுதிகளிலும், வரப்புகளிலும் மரங்களை வளர்க்கலாம். காற்று அரிப்புக்கு இலக்காகும் இடங்களில், காற்றுத் தடைகளா மரங்களை வளர்க்கலாம். சில நேரங்களில், ஓரளவுக்கே பயன் தரும் உழவு சார்ந்த பயிர்களை விடுத்து, மரங்களை வளர்த்தல் நல்ல ஆதாயம் தரக்கூடியதாக அமையும்.

**மக்களை ஈடுபடுத்தும் மாபெரும் திட்டம் :**

சமுதாய நோக்குடை காடுகளை வளர்த்தல் என்பது மக்களை ஈ(





படுத்தும் மாபெரும்திட்டமாகும். அண்மையில் கானியல் மையக் குழு ( Central Board of Forestry ) விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கஇத்திட்டம்நடைமுறைப் படுத்தப்படுகிறது. இத்திட்டத் தின்படி, தமிழ்நாடு முழுதும் இந்த ஆண்டு மரம் வளர்க்கும் பணி பெரிய அளவில் துவக்கப் பட்டுள்ளது. தனியார் நிலங்கள், பள்ளிக்கூடம், கல்லூரி, அரசு அலுவலகங்கள், பிற நிறுவனங் கள் சார்ந்த இடங்கள், சாலை ஓரங்கள், ஊராட்சி நிலங்கள் முதலிய பகுதிகளில் வாய்ப்பான மரம் வளர்க்கக் கான் துறையும் வேளாண்மைத் துறையும் சுமார் 40 இலட்சம் நாற்றுகளையும் கன்றுகளையும் வளர்க்கின்றன. இந்தப் பெரிய அளவான ஏற்பாடு தமிழ்நாட்டின் புகழ் பெற்ற பசுமைத் தோற்றத்தைப் புதுப் பிக்கவே மேற்கொள்ளப்பட்டுள் ளது இப்பணியில் அரசுத் துறை களும், மாணவர்களும், பொது மக்களும் ஈடுபடுவது சிறப்பான செய்தியாகும்.

ஒரு நாட்டின் நிலப்பரப்பில் குறைந்தது 33 விழுக்காடு காடாக இருக்க வேண்டும் என்பது யாவ ரும் ஒப்பும் கருத்தாகும். அவ் விழுக்காட்டு அளவிற்குக் குறைந் தளவு பரப்பே காடாகவும், காடுபடு பொருள் வளம் —குறிப் பாக வறண்ட பகுதிகளில் உள்ள காடுபடு பொருள் வளம் — குறைவாகவும் உள்ள தமிழ்நாடு போன்ற மாநிலங்களில், சமு தாய நோக்குடைக் காடுகள் வளர்ப்பு, காட்டின் பரப்பை மிகு விப்பதில் மிகுந்த பங்கு பெற முடியும். மேலும், மாநிலத்தில் பரவலாக இருக்கும் வறட்சியைத் தணிவிக்கும் தொலைநோக்குள்ள முனைப்பான பணியாகவும் இது அமையும். இங்கே முதன்மை யாகக் கருத வேண்டியது யாது எனில், சமுதாய நோக்குடைய காடுகள் வளர்க்கும் திட்டம், உழவர்களால், மாணாக்கர்களால் மக்களால், ஏன் ஒவ்வொரு குடி மகனாலும் செயல்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகும் என்பதே! இது; காடுகளைக் காத்துச் சுற்றுப் புறச் சூழலைப் போற்றும் புதிய விழிப்புணர்வை அவர்களிடத்து ஏற்படுத்தும் என நம்பலாம்.










# தொட்டியிலும், மரப் பெட்டியிலும், மாடியிலும் காய்கறி பயிரிடலாம் !

—R. மாணிக்கம்

வீட்டுத் தோட்டம் அமைத்துக் காய்கறிச் செடிகளை வளர்க்க ஆர்வம் இருப்பினும், இடம் இல்லையே என்று நகரங்களில் உள்ள பலர் கவலைப்படக்கூடும்!

இடம் இல்லை என்று கவலைப் பட வேண்டாம்!

தொட்டிகளிலும்,
மரம்பெட்டிகளிலும்,
கூடைகளிலும்,
வீட்டுக் கூரைகளிலும்,
குடிசைகளிலும்,
மாடிகளிலும்,
வராந்தாக்களிலும்,
வீட்டிற்குள்ளும்,
உடைந்த பானைகளிலும்,
காலி டப்பாக்களிலும்,
தொங்கும் தொட்டிகளிலும்,
வேலியிலும்
காய்கறிச் செடிகளைப் பயிரிடலாம்!

## எப்படி ?

### 1. தொட்டிகளில் காய்கறி பயிரிடும் முறை:

மண்தொட்டிகளையோ அல்லது சிமெண்டு தொட்டிகளையோ உப யோகியுங்கள்.

தொட்டிகளின் அடிப்பாகத் தில் 1 அல்லது 2 துவாரங்களை ஏற்படுத்துங்கள்.

தொட்டிகளின் அடிப்பாகத் தில், ஒரு அடுக்கு சிறு கற்களை யோ அல்லது கூழாங்கற்களையோ நிரப்புங்கள்.

அதன் மேல் உடைந்த ஓடு களைப் பரப்புங்கள்.

ஓடுகளின் மேல் சிறிது நல்ல மணலைப் பரப்புங்கள்.

மணலின் மேல், பின்கண்ட வைகள் கலந்த கலவை மண்ணைப் போட்டுத் தொட்டியில் முக்கால் அளவு வரை நிரப்புங்கள்.

| | | | |
|---|---|---|---|
| செம்மண் | ... | 2 | பாகம் |
| தொழு எரு அல்லது கலவை எரு | ... | 2 | பாகம் |
| ஆற்று மணல் | ... | 1 | பாகம் |
| இலைமக்கு | ... | 1 | பாகம் |

இவ்வாறு நிரப்பப்பட்ட தொட் டிகளில் தக்காளி, கத்தரி மிளகாய் போன்றவற்றின் நாற்று களை நடுங்கள்.

ஒவ்வொரு தொட்டியிலும் அல்லது 2 நாற்றுகளை நடுங்கள்

தொட்டிகளைக் காயவிடாமல் 3 நாட்களுக்கு ஒருமுறை தண் ணீர் ஊற்றுங்கள்.

தக்காளி, பட்டாணி ஆகிய வைகளுக்கு கம்புகள் அல்லது குச்சிகளில் இணைத்துக் கட்டி வளர விடுங்கள்.

நாற்று நட்ட 30-ஆம் நாள் ஒரு தேக்கரண்டி அளவு 6:12:12 கலப்பு உரத்தை ஒவ்வொரு தொட்டிக்கும் போடவும்.

இதுபோலவே மீண்டும் பூக்கள் தோன்றுவதற்கு முன் போடவும்.

அல்லது நாற்று நட்ட ஒரு மாதத்திலிருந்து 15 நாட்களுக்கு ஒருமுறை ஒரு அவுன்சு (28கிராம் 6:12:12 கலப்பு உரத்தை 4. லிட்டர் (1 காலன்) தண்ணீரில் கரைத்துப் போதிய அளவு ஒவ் வொரு தொட்டியிலும் ஊற்றி செடிகளை வளமாக வளரச் செய் யுங்கள்.

பூச்சிகளைத் தடுக்க நாற்று நட்ட 15 நாட்களில் தொடங்கி 15 நாட்களுக்கு ஒரு முறை வீதம் 3 அல்லது 5 தடவை என்ட்ரின் (1 மில்லி லிட்டர் மருந்தை லிட்டர் தண்ணீரில் கலந்து அல்லது டி. டி. டீ. 50 சத மருந்தை (2 கிராம் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து செடிகளின் மேல் தெளியுங்கள்

பெரிய தொட்டிகளில் புடல் விதைகளை ஊன்றி, வளர்த்த கொடிகள் படர, தொட்டிகளில்

ம்புகளை நட்டுப் பந்தல் அமை ங்கள்.

நல்ல பலன் பெற, தொட்டி ளில் உள்ள மண்ணை ஆண்டிற்கு ரு முறை மாற்றுங்கள்.



ண் தொட்டியில் கத்தரிச் செடி

### கூடைகளிலும், காலி ப்பாக்களிலும் உடைந்த ானைகளிலும் பயிரிடலாம்:

கூடைகளில் துவாரம் இருப்ப ால், கூடைகளிலும் மேற்கூறிய டி கல், மண் ஆகியவைகளை ரப்பிக் காய்கறி பயிரிடலாம்.

காலி டப்பாக்களின் அடியில் வாரம் செய்துவிட்டு மேற் ண்டபடி நிரப்பியும் காய்கறி யிரிடலாம்.



இதே முறையில் உடைந்த பானைகளிலும் காய்கறி பயிரிட லாம்.

### 3. மரப்பெட்டிகளில் சாகுபடி செய்யும் முறை:

மரப்பெட்டியின் உட்புறம் தண்ணீரால் பாதிக்கப்படாமல் இருக்க 'வார்னிஷ்' பூசுங்கள்.

அடிப்பாகத்தில் துவாரம் செய்து நல்ல வடிகால் வசதியை ஏற்படுத்துங்கள்.

மரப்பெட்டிகளை நிற்க வைப்ப தற்காக 4 பக்கத்திலும் கால் களைப் பொருத்துங்கள். இல்லை யேல் உருளைகளைப் பயன்படுத் துங்கள்.

அதோடு மற்ற இடங்களுக்கு நகர்த்திச் செல்வதற்கு வசதி யாக நாற்புறமும் கைப்பிடி அமைத்துக் கொள்ளுங்கள்.

மரப்பெட்டியில் முக்கால் அளவு உயரம் வரை அடிப்பாகத் திலிருந்து முறையே கற்கள் ஓடுகள் மணல், கலவை மண் ஆகியவைகளைப் போட்டு நிரப் புங்கள்.

பெரிய மரப்பெட்டிகளில் (75 செ. மீ. நீளம், 45 செ. மீ. அகலம், 50 செ. மீ. உயரம்) கத்தரி, தக்காளி, முட்டைக் கோஸ் போன்றவற்றின் நாற்று களை 30 செ. மீ. முதல் 40 செ.மீ இடைவெளி விட்டு நடுங்கள்.

குறைந்த உயரமுள்ள (20 செ. மீ. முதல் 30 செ. மீ. வரை) மரப்பெட்டிகளில் தண்டுக்கீரை, புதினா, அரைக்கீரை, கொத்த மல்லி, வெந்தயக் கீரை ஆகிய குறுகிய காலக் கீரை வகைகளை சாகுபடி செய்யலாம்.

எத்தகைய அளவு மரப் பெட்டிகள் கிடைத்தாலும் காய் கறிச் சாகுபடி செய்ய முயலுங்கள்

### 4. குடிசைகளின் மேலும், வீட்டுக் கூரைகளின் மேலும் பயிரிடும் முறை:

பூமியில் பறங்கி, பூசணி, சுரை போன்றவற்றை வளர்த்து அவைகளின் கொடிகளை குடிசை களின் மேலும், கூரை வீடுகளின் மேலும் ஏற்றி, படரவிட்டு, ஏராளமான காய்களை கிராமத்த வர்கள் பெறுகிறார்கள்.



அதுபோலவே நகரங்களில் உள்ள குடிசைகளின் மேலும், கூரை வீடுகளின் மேலும் காய் கறிச் செடிகளைப் படர விடுங்கள்.

### 5. மாடிகளில் காய்கறிச் செடிகளைப் பயிரிடும் முறை:

மாடிகளின் மேல் தளத்தில் குறுகிய அகலமுள்ள நீண்ட பாத்திகளை சிமெண்டினால் கட்டுங்கள்.

அப்பாத்திகளில் போதிய அளவு மண்கலவையை இட்டு கத்தரி, தக்காளி, வெண்டை, கொத்தவரை, மிளகாய் ஆகிய வைகளைப் பயிரிடுங்கள்.

மழைக் காலத்தில் முட்டைக் கோஸ், பூக்கோஸ், டர்னிப், பீட்ரூட் போன்றவற்றைப் பயிரி டுங்கள்.

மொட்டை மாடிகளில் பந்தல் போட்டு அல்லது கயிறுகளால் வலைபோல் அமைத்து, அதில் தொட்டியில் வளர்க்கப்பட்ட பீர்க்கு, புடல், சுரை, பாகல் ஆகியவற்றைப் படர விடுங்கள்.

நகரங்களில் உள்ள மொட்டை மாடிகளிலும், கீழே பூமியில் வளர்க்கப்பட்ட செடிகளை கம்பிகள் அல்லது கயிறுகள் மூலம் ஏற்றி, கயிறுகளால் வலைகள் அல்லது பந்தல் அமைத்து அதன் மேல் கொடிகளைப் படரவிட்டுக் காய்கறிச் செடிகளைப் பயிரி டுங்கள்.

### 6. வராந்தாக்களில் காய்கறி பயிரிடும் முறை:

வீட்டின் வெளிப்புற, உட்புற வராந்தாக்களில் சூரிய வெளிச் சம் படுமானால், பாகல், பசலைக் கீரை போன்றவைகளைத் தொட்டி களில் வளர்த்து, மூங்கில் தட்டி களில் படர விடுங்கள்.

### 7. வீட்டிற்குள்ளும் பயிரிடும் முறை:

வீட்டிற்குள்ளே நிழலிலும் வளர்ந்து பலனளிக்கக்கூடிய பசலை (BASELLA) சிலோன் பசலை (CEYLON SPINACH), ஆகியவைகளைத் தொட்டிகளில் வளர்த்துப் பயன் பெறுங்கள்.

இதனால் வீட்டிற்குப் பசுமை கொண்ட அழகும், உங்கள் உண விற்கு வேண்டிய கீரைகளும் கிடைப்பதால் மகிழ்ச்சியும், நல் வாழ்வும் கிடைக்கும்.

### 8. தொங்கும் தொட்டிகளில் பயிரிடும் முறை:

தொங்கும் பெரிய தொட்டி களில் பூச்செடிகளுக்குப் பதிலாக தவசிக்கீரை, கொடிப் பசலை போன்ற நிரந்தரப் பலன் தரும் கீரை வகைகளைப் பயிரிட்டு அழகும், பயனும் பெறுங்கள்.

தொங்கும் சிறு தொட்டிகளில் 'சிலோன் பசலை' வளர்த்துப் பயன் பெறுங்கள்.

### 9. வேலியில் பயிரிடும் முறை:

வீட்டைச் சுற்றியுள்ள வேலி களில் கொடி வகைக் காய்கறிச் செடிகளைப் படர விடுங்கள்.

மேற்கூறிய ஒன்பது வகைகளில் காய்கறி பயிரிட்டால் காய்கறி களுக்காகும் செலவும் குறையும்!

சிறந்த பொழுது போக்காக அமையும்! வாழ்வும் வளம் பெறும்!

### வேண்டுகோள்

வீட்டுத் தோட்டம் அமைப்பது நாட்டிற்கு நல்லதோர் சேவை யாக இருப்பதால் மேற்கண்ட முறைகளைப் பின்பற்றிக் காய்கறி உற்பத்தியைப் பெருக்கி, காய் கறிக்காக ஆகும் செலவைக் கணிச மாகக் குறைத்துக் கொள்ளுங்கள்.

வீட்டுத் தோட்டம் அமைப்பதி லும், காய்கறிச் சாகுபடி முறை களிலும், குறிப்பாகத் தாய்மார் களும், குழந்தைகளும் சிறந்த



பொழுது போக்காகக் கருதி நாளொன்றுக்கு ஒரு மணி நேரம் ஈடுபட்டால் புத்தம் புதிய, சுவையான காய்களைப் பெற்று வளமான வாழ்வு வாழலாம்.

எனவே,

நாட்டுக்கு நல்லசேவை

செய்திட

வீட்டுக்கு ஒரு தோட்டம்

அமைத்திடுவீர் !!

என்று 'தமிழரசு' இதழ் சார்பில் அனைவரையும் கேட்டுக் கொள் கின்றோம்.



# படமும் செய்தியும்

ழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்
ல் சுகாதியா அவர்கள் 13-8-'76
ன்று செங்கற்பட்டு மாவட்டம் செய்
ரில், ஊரகப் பால்பெருக்குத் திட்டத்
தத் துவக்கி வைத்தார். பட்டதாரி
ளைஞர் ஒருவருக்குப் பால்பண்ணை
மைப்பதற்கான கடனை ஆளுநர்
வர்கள் வழங்குவதை இப்படத்தில்
ணலாம்.





"வரதட்சணை ஒரு சமுதாயத் தீங்கு" என்ற மாநிலக் கருத்தரங்கைத் தமிழ் நாடு ஆளுநர் அவர்கள் சென்னையில் 14-8-'76 அன்று துவக்கி வைத்து உரையாற்றினார். அவ்விழாவில், வரதட்சணை வாங்காமல் திருமணம் செய்து கொண்ட-மாயவரத்தைச் சேர்ந்த திரு வி. எம். குமார் என்ற இளைஞருக்கு, ஆளுநர் அவர்கள் பரிசு வழங்கினார்.

ழ்நாடு ஆளுநர் திரு மோஹன்லால்
தியா அவர்கள், கன்னியாகுமரி
பட்டத்தில் உள்ள கருங்கல் என்ற
ல் 18-8-'76 அன்று நடைபெற்ற
ாவில் ஊனமுற்றவர்களுக்கு
று சக்கர வண்டிகளை இலவசமாக
ங்கினார்.





வல்லரசுகளுடன் கூட்டுச் சேராமல் நடுநிலை வகிக்கும் நாடுகளின் மாநாடு ஸ்ரீலங்கா நாட்டின் தலைநகரான கொழும்பு நகரில் 16-8-1976 அன்று துவங்கியது. அம்மாநாட்டில் கலந்து கொள்வதற்காகச் செல்லும் வழியில், 14-8-1976-ல், சென்னைக்கு வருகை தந்த பூடான் மன்னர் திரு. வான்சாக் அவர்களைத் தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள் வரவேற்று உபசரித்தார்.

கூட்டுச் சேரா நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காகக் கொழும்பு செல்லும் வழியில் 14-8-1976 அன்று சென்னைக்கு வருகை தந்த சைப்ரஸ் நாட்டுத் தலைவர் திரு. மெக்காரியஸ் அவர்களைத் தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு. பி. கே. தவே அவர்கள் மாலை அணிவித்து வரவேற்றார்.





கன்னியாகுமரி மாவட்டத்தில் கடற் கரையை யொட்டியுள்ள இணையம் மீனவர் கிராமத்தில், கடல் அரிப்பினால் சில வீடுகள் கடலில் மூழ்கின. அப் பகுதியைத் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 18-8-'76 அன்று பார்வை யிட்டார்.

ட்டுச் சேரா நாடுகளின் மாநாட்டில் கலந்து காள்வதற்காக இலங்கை செல்லும் வழியில் -8-1976 அன்று சென்னைக்கு வருகை தந்த ாவோஸ் நாட்டு மக்களுடைய ஜனநாயகக் டியரசின் தலைவர் அவர்களைத் தமிழ்நாடு ஆளு ின் ஆலோசகர் திரு. பி. கே. தவே அவர்கள் ரவேற்றுக் கலந்துரையாடினர்.







தேசிய ஈரான் எண்ணெய்க் கம்பெனியின் தலைவர் டாக்டர் மானுட்செர் எக்பால் அவர் களுக்கு சென்னைப் பல்கலைக்கழகம் 21-8-1976 அன்று கௌரவ டாக்டர் பட்டம் அளித்துச் சிறப் பித்தது. சென்னைப் பல்கலைக் கழகத்தின் வேந்த ரான தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள், டாக்டர் மானுட்செர் எக்பால் அவர்களுக்குக் கௌரவப் பட்டம் அளித்துக் கை குலுக்கி மகிழ்வதைப் படத்தில் காணலாம்



தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 20-8-'76-ல் திருநெல்வேலி மாவட்டத் தில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளைப் பார்வையிட்டு, மக்களிட மிருந்து குறைகளைக் கேட்டு அறிந்த துடன், மனுக்களையும் பெற்றுக் கொண்டார்.




மிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தால் (டான்சி) திதாக உற்பத்தி செய்யப்பட்டுள்ள 'மோபெட்' மாட்டார் சைக்கிள்களின் விற்பனையை 23-8-1976 ன்று 'டான்சி' அலுவலகத்தின் முன்பு தமிழ்நாடு ளுநரின் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிர ணியன் அவர்கள் துவக்கி வைத்தார்.



நமது பிரதமர் அவர்களின் இருபது அம்சத் திட்டத் தின், 7-வது அம்சத்தின் கீழ், துணையிடும் புதிய விசைக்கருவி ஒன்றை திரு. ஏ. பி. ஷிண்டே அவர்கள் கிண்டி தொழிற்பேட்டையில் உள்ள வேளாண்மை இல்லத்தில், 18-8-1976 அன்று இயக்கி வைத்தார்.

மத்திய அரசின் இராஜாங்க வேளாண்மை அமைச்சர் திரு. ஏ. பி. ஷிண்டே அவர்கள், சென்னை கிண்டி தொழிற்பேட்டையில் உள்ள வேளாண்மை இல்லத்தில், 18-8-1976 அன்று நடைபெற்ற விழா வில் பாரத் புல்டோசர் ஒன்றை வேளாண்மைத் துறை இயக்குநர் அவர்களிடம் வழங்கி, அந்தப் புல்டோசரை இயக்கி வைத்தார்.

திருநெல்வேலி மாவட்டம் எட்டைய புரம் பேரூராட்சியில் கட்டப்பட்டுள்ள மேல்நிலைத் தண்ணீர்த் தொட்டியை 20-8-1976 அன்று, தமிழ்நாடு ஆளுந அவர்கள் துவக்கி வைத்தார்.








# சோமங்கலம் ஊரக அபிவிருத்தித் திட்டப் பணிகளில் கால்நடை பராமரிப்புத் துறையின் பங்கு

பா. சின்னதுரை
கூடுதல் இயக்குநர்
கால்நடை வளர்ப்புத் துறை
தமிழ்நாடு அரசு

செங்கை மாவட்டத்தினைச் சார்ந்த சோமங்கலம் கிராமத்தில் ஊரக அபிவிருத்தித் திட்டம் 1976-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் பதினைந்தாம் நாள் நமது பாரதப் பிரதமர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இத்திட்டம் செயலாக்கம் பெறும் பகுதியில் வாழும் ஒவ்வொரு குடும்பமும், குறைந்த பட்சம் 400 ரூபாய் மாத வருவாய் பெறத்தக்க வகையில் திட்டமிட்டுச் செயல்படுதல் இத்திட்டத்தின் நோக்கமாகும். திட்ட அடிப்படையே குடும்ப வருவாயை அதிகரிக்கச் செய்வதாய் உள்ளதால், இப்பகுதியில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் உருவாக்கப்படும்பொழுது, தற்போது இங்கு வாழும் மக்களின் குடும்ப வருவாய், அவர்களது தொழில், மூலதனவசதி, இப்பகுதியில் உற்பத்தி செய்யத் தகுந்த பயிர், ஆகியவை போன்ற உண்மைகள் கருத்திற் கொள்ளப்படுகின்றன.

இத்திட்டத்தின் இலட்சியக் குறிக்கோள் பலவாகும். அவற்றுள் கால்நடை வளர்ப்பு சம்பந்தப்பட்டவையில், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், சிறு விவசாயிகள், மிகக் குறைந்த வருவாயினைக் கொண்ட விவசாயிகள், ஆகிய இனங்களைச் சார்ந்த 2,025 குடும்பங்களின் வருவாயை அதிகரிக்கச் செய்ய, பால் அபிவிருத்தி, கோழிவளர்ப்பு, ஆடு வளர்ப்பு ஆகிய திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பகுதியில் உள்ள தரக் குறைவான கால்நடைகளின் தரத்தைச் செயற்கை முறைக் கருத்தரிப்பு மூலம், உயரினமாக தரமுயர்த்தப்படும். தரமற்ற கால்நடைகளின் வளர்ச்சி தடுத்து நிறுத்தப்படும். காரணம், தரமற்ற கால்நடைகளால் மக்கள் அடையும் பயன் மிகக்குறைவு. இவ்வினக் காளை மாடுகள், இன விருத்திக்குப் பயன்படாத வகையில் ஆண்மை நீக்கம் செய்யப்படுகிறது. இவ்வினப் பசுக்கள் அதிக அளவு பால் தரக்கூடிய 'ஜெர்சி', 'பிரிசியன்' ஆகிய உயரினக் காளை விந்தினைக் கொண்டு செயற்கை முறையில் கருவூட்டப்படுகின்றன. இதன் மூலம் நான்காண்டுக் காலத்திற்குள் புதிய இனக் கால்நடைகள் மட்டுமே இப்பகுதியில் இருக்கும். மேலும் உருவாகி வரும், புதிய உயரினக் கால்நடைச் செல்வங்களை நோயற்றதாகக் காத்திட, இலவசமாக வைத்திய வசதியும் செய்து தரப்படுகின்றது. இக்கால்நடைகளிடமிருந்து அதிக அளவு பலன் கிடைக்க, நல்ல முறையில் இவற்றைப் பராமரிக்க, விவசாயிகளுக்கு வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. இப்பணிகளைச் செவ்வனே செய்து முடித்திட சோமங்கலத்தில் கால்நடை மருந்தகம் ஒன்று புதிதாகத் துவக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் காரணமாக, நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், சிறுவிவசாயிகள், ஆகியோரைக் கொண்ட குடும்பங்களின் மாத வருமானம் கூடுதலாகும்.

சிறு விவசாயிகள் மேம்பாடுத் திட்டத்தின் கீழ், தரமுள்ள எருமை ஒன்று வங்கியின் கடனுதவியுடன் தரப்படும். ஒழுங்காக பால் வழங்கி வரும் விவசாயிக்கு எட்டு மாதங்களுக்குப் பின் இரண்டாவது எருமையும், பதினாறு மாதங்களுக்குப் பின் மூன்றாவது எருமையும் வழங்கப்படும். கன்று ஈன்ற மூன்றாவது மாதத்தில், எருமைகளுக்கு ஒழுங்காகச் செயற்கை முறையில் கருவூட்டப்படும். பதினான்கு மாதங்களுக்குப் பின், இந்த உழவர்களிடம் எருமைகள் கறவையில் இருந்து வருமாததால், கடனில் வழங்கப்பட்ட எருமைகளுக்கான தொகையினைத் திருப்பித் தருவதில் சிரமம் ஏதும் இருக்காது. மூன்று ஆண்டுகளுக்குள், இக்கடன் தொகை முழுவதும் திருப்பிச் செலுத்தப்பட்டுவிடும். அதற்குப் பின்னர் 3 எருமைகளும் 3 கன்றுகளும் அவருக்குச் சொந்தமாகிவிடும்!

பால் விற்பனையில் சிரமமின்றிச் செயல்பட, தமிழ்நாடு பால் வள நிறுவனம் இப்பொறுப்பை ஏற்றுத் திறம்படச் செயல்படுத்தி வருகிறது. பாலிலுள்ள கொழுப்புச் சத்துக்குத் தகுந்தபடி விலை நிர்ணயிக்கப்படுகிறது.

ஆடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் ஆடு வளர்ப்பினைத், தொழிலாகக் கொண்ட குடும்பங்களுக்கு, ஒரு குடும்பத்திற்கு 20 ஆடுகளும் ஒரு கிடாவும் வழங்கப்படும். வழங்கப்பட்ட பின்னர் ஒவ்வொரு ஆண்டின் முடிவிலும், ஆடுகள் ஈனும். அந்த ஆட்டுக் குட்டிகள் ஆறுமாத காலம் வளர்க்கப்பட்டுப் பின்னர் அவற்றில் 50 சதவீத கிடாக்கள் விற்கப்படும். இவ்விற்பனையின் மூலம் கிடைக்கும் தொகையில் பாதியினை, அவ்விவசாயி தனக்கு எடுத்துக் கொண்டு மீதியைக் கடனாகத் திருப்பித்தர வேண்டும். ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் இவ்விவசாயியிடம் உள்ள ஆடுகள் இரண்டு மடங்காக இருக்கும். இவ்வாறு வழங்கப்படும் ஆடுகளுக்கு ஒழுங்காகக் குடற்பூச்சி அகற்றுதல், நோய்த் தடுப்பு ஊசி போடுதல் ஆகிய பணிகளைக் கால்நடைப் பராமரிப்புத் துறை செய்து வரும். குடற்பூச்சி நீக்குவதினால் ஆடுகளில் ஏற்படும் சேதத்தைத் தவிர்ப்பதுடன், ஆட்டின் வளர்ச்சியை நன்கு அதிகரிக்கச் செய்ய முடிகிறது.



அடுத்து புழக்கடைக் கோழி வளர்ப்புத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு வீட்டிற்கும் 10 இளம் பெட்டைக் கோழிகளும், ஒரு சேவலும், என்ற விகிதத்தில் கோழிகள் வழங்கப்பட உள்ளன. தேவைப்படும் கோழிகள் தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தினரால் வழங்கப்படும். இக்கோழிகளின் விலையில் 50 சதவீதம் சிறு விவசாயிகள் அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் மானியமாக வழங்கப்படும். இப்பகுதியில் வாழும் மக்களிடையே உயர்ரகக் கோழிகளை வளர்க்கும் பழக்கம் இல்லை. ஆகவே, இந்நிலையை மாற்றிட வெள்ளை 'லெக்ஹார்ன்' போன்ற அதிக அளவு முட்டைகள் தரக்கூடிய உயர் இனக் கோழிகள் வழங்கப்படும். இம்முட்டைகளைத் தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் பெற்றுக் கொண்டு முட்டையின் கிரயத்திற்குத் தீனி வழங்கும்.

மேலும், வாத்து வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 119 குடும்பங்கள் பயன் அடைய உள்ளன. ஒவ்வொரு குடும்பத்திற்கும் வாத்துகள் வழங்கப்படும். அறுவடைக் காலத்தில் இவ்வாத்துகளை மேய்ச்சலுக்காக வயல்களுக்குக் கொண்டு செல்லலாம். இதன் காரணமாகத் தீவனச் செலவு குறைந்து விடும். வாத்துகள் வாங்க சிறு விவசாயிகள் அபிவிருத்தித் திட்ட நிதியிலிருந்து மானியம் வழங்கப்படும். இவ்வாத்துகள் ஆறு மாதங்களைக் கொண்ட ஒரு பருவத்திற்கு 50 முட்டைகள் இடும். எனவே, ஆறு மாதத்திற்கு 5,000 முட்டைகள் கிட்டும்!. ஒரு முட்டையின் விலை 30 காசுகள் எனக் கொண்டாலும், ஆறு மாதத்தில் 1,500- ரூபாய் கிடைக்கும். இத்திட்டத்தின் வாயிலாக நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், சிறு விவசாயிகள், நடுத்தர விவசாயிகள், ஆகியோர் தங்கள் குடும்ப வருவாயினைப் பெருக்கிக் கொள்ள முடிகிறது.

இவைகளைத் தவிர வெள்ளாடு வளர்ப்பையும் ஊக்குவிக்க, வெள்ளாடுகள் வாங்கக் கடன் உதவி அளிக்கப்படும். வெள்ளாடுகளுக்குத் தீவனத்திற்கான மரங்கள் வளர்த்துப் பராமரிக்க, தனிப்பட்ட நிலங்களை ஒதுக்கீடு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இப்போது சோமங்கலம் மற்றும் அதைச் சார்ந்த கிராமங்களில் ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், கால்நடைப் பராமரிப்புத் துறை பின்கண்ட அடிப்படைப் பணிகளைச் செய்து முடித்துள்ளது.

ஒவ்வொரு வீட்டிலும் வளர்க்கப்படும் கால்நடைகளின் எண்ணிக்கை கணக்கெடுக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டுள்ளது. கால்நடை வளர்ப்பின் மூலம் ஒவ்வொரு குடும்பமும் பெற்று வரும் வருவாய் பற்றிய புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு விட்டன. தீவனப் பயிர்கள் வளர்க்கக் கூடிய நிலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்புத் திட்டங்களின் மூலம் இப்பகுதி மக்களின் குடும்ப வருவாயைப் பெருக்க வழிமுறைகள் வகுக்கப்பட்டுவிட்டன.

கால்நடை நோய்த் தடுப்பிற்காகவும், கால்நடைகளை நன்முறையில் பராமரிக்கவும் கால்நடை மருந்தகம் ஒன்று 22-3-'76 அன்று சோமங்கலத்தில் திறக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அமையும் கிளை நிலையம் நடுவீரப்பட்டில் அல்லது எருமையூரில் அமைக்கப்பட உள்ளது. இவை தவிர நந்தம்பாக்கத்திலும் ஒரு கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பங்கு பெற்றுப்பலன் அடையும் மக்களையெல்லாம் நேரடியாகச் சந்தித்து, திட்டங்களின் நடைமுறை பற்றி விவாதிக்கப்பட்டுள்ளது.

ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் 12-3-'76 அன்று பதிவு செய்யப்பட்டு, 15-3-'76 முதல் இயங்கி வருகிறது. இருபது ஆடுகளும் ஒரு கிடா ஆடும் வாங்குவதற்கு ரூ. 2,100- கடனாக வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

கால்நடைப் பராமரிப்புத் துறை இயக்குநர், கூடுதல் இயக்குநர் ஆகியோரும், பிற அலுவலரும் இப்பகுதிக்கு அடிக்கடி சென்று, திட்டம் வேகமாகச் செயல்பட எல்லாவித நடவடிக்கைகளும் எடுத்து வருகின்றனர். கால்நடை வளர்ப்பில் மக்களுக்கு நல்லறிவு ஊட்டும் கருத்துக்கள்

அடங்கிய விளம்பர போர்டுகள் கிராம மக்களின் நன்மைக்காக இப்பகுதி முழுவதும் நிறுவப் பட்டுள்ளன. கிராம மக்களை ஒவ் வொரு மாதமும், குறிப்பிட்ட நேரத்தில், அலுவலர்கள் நேரில் சந்தித்துத் திட்ட அபிவிருத்தி பற்றியும், பிற பிரச்சினைகள் பற்றியும் விவாதிக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

திட்டங்கள் மக்கள் நலனுக்காகச் செயல்படுத்தப்படுகின்றன. மக்களது முழு ஆதரவும் திட்டப் பணிகளுக்கு இருந்திட்டால்தான் எதிர்பார்க்கப்படும் பலனைத் திட்டங்கள் தரும். இதனை உணர்ந்து, இப்பகுதி மக்கள், திட்டப்பணிகளில் ஆர்வமுடன் . ஈடுபட்டு உழைத்திடுதல் அவசிய மாகும். அப்பொழுதுதான் அவர்கள் வாழ்வில் வளங்கொழிக்கும். நாட்டின் பொருளாதாரமும் மேம்படும். கிராம மக்கள் நல்வாழ்வு பெற்றிட—பொருளாதார வசதிகள் பெருகிட—சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகள் அகன்றிட—வேலையில்லாமையும் வறுமையும் நீங்கிட—நம் பாரதப் பிரதமர் அவர்கள் அறிவித்துள்ள இருபது அம்சத் திட்டம் துணை செய்கிறது. ஊரக வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் அது போன்ற பிற திட்டங்களை வெற்றிபெறச் செய்ய, கடுமையாக நாம் உழைத்திட வேண்டும். அப்பொழுதுதான் நம் பாரத அரசு எடுத்து வரும் முயற்சிகள், நல்ல முறையில் பலனளிக்கும். ஒவ்வொரு கிராமமும், தனது சுய தேவைகளைத் தானே பூர்த்தி செய்து கொள்ள வேண்டும் என்ற கருத்தினை தேசத்தந்தை அண்ணல் காந்தியடிகள் வலியுறுத்தி வந்துள்ளார்கள். அவர்தம் கருத்தினை மனத்தில் கொண்டு, கடுமையாக உழைத்து நமது புதிய பொருளாதார திட்டம் வெற்றி பெறப் பாடுபடுவோமாக!



# தாழ்த்தப்பட்ட மலைச் சாதியினருக்கு சிறப்புப் பயிற்சி நிலையங்கள்!

தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட மலைச்சாதி வகுப்பினர்களுக்கென 1976-ஆம் ஆண்டில் 15 சிறப்புப் பயிற்சி நிலையங்களைத் துவக்குவதற்குத் தமிழ்நாடு அரசு ஆணை ஒன்றினைப் பிறப்பித்துள்ளது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழுவால் 1976-ஆம் ஆண்டு அக்டோபரில் நடத்தப் பெறுகின்ற 'குரூப்' 4' தேர்வுக்குரிய பயிற்சியினை இந்தச் சிறப்புப் பயிற்சி நிலையங்கள் அளிக்கும். இவ்வகையில் ஒவ்வொரு பயிற்சி நிலையத்திலும் 60 விண்ணப்பதாரர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். ஒவ்வொரு பயிற்சி நிலையத்திலும் தாழ்த்தப்பட்ட, மலைச்சாதி வகுப்பினர்கள் 40 பேர்களும் கிறித்துவ மதத்திற்கு மாறிய தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள் 20 பேர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

தமிழகத்தில் இந்த நிலையங்கள் சென்னை, செங்கற்பட்டு, திட்டக்குடி, தஞ்சாவூர், நிலக்கோட்டை, பரமக்குடி, சங்கரன்கோயில், ஆர்க்காடு, குளித்தலை, பெரம்பலூர், கிருஷ்ணகிரி, ஒண்டிப்புதூர், கூனூர் ஆகிய இடங்களில் துவக்கப்படுகின்றன. அனைத்துக்கல்வி நிலையங்கள் செயல்படுவது போன்று இவைகளும் செயல்படும். அரசின் எல்லா வேலைநாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 4.30 மணி வரையில் பயிற்சி வகுப்புகள் நடைபெறும். பயிற்சிக் காலம் இரண்டு மாதங்களாகும்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழுவால் வரையறுக்கப்பட்ட பாடத்திட்டங்களின் அடிப்படையில் பயிற்சியளிக்கப்படும். அதாவது, பொது அறிவு, கட்டுரை எழுதுதல், மொழி பெயர்ப்பு, சுருக்கி எழுதுதல், நேர்முகப் பேட்டி ஆகியவற்றில் பயிற்சியளிக்கப்படும். தாழ்த்தப்பட்ட, மலைச்சாதி வகுப்பைச் சார்ந்த 'எஸ். எஸ். எல். சி.' தேறியவர்கள், 'பி.யு.சி.' தேறிய மற்றும் தேர்ச்சி பெறாதவர்களுக்கு மட்டும் இப்பயிற்சி நிலையங்களில் பயிற்சியளிக்கப்படும். இப்பயிற்சிக்கு விண்ணப்பதாரர்கள் , தாங்கள் எஸ். எஸ். எல். சி. யில் பெற்றுள்ள மதிப்பெண்களின் தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மாவட்ட அரிசன நல அலுவலரின் கலந்துரையின்பேரில் மாவட்டத் தலைமைக் கல்வி அலுவலர் இவர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர் ஒவ்வொருவரும் மாதம் ஒன்றுக்கு ரூ. 45 உதவித் தொகையும் பெறுவார். தங்குமிடம் இல்லாதவர்கள், விடுதிகளில் தங்கிப் பயிற்சிபெற வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு வழங்கப்படுகின்ற உதவித்தொகை, விடுதியின் உணவுத் தொகைக்குத் தேவையான அளவுக்கு ஈடு செய்யப்படுகின்றது.



# சென்னையில் அமுதம்!

மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளில் மிக இன்றியமையாததாகத் திகழ்வது நுகர் பொருள்.

எப்பொருள் கிடைத்தாலும் இப்பொருள் கிடைப்பது சில சமயங்களில் அரிதாகி விடுகின்றது. சில சமயம் இதன் விலை ஏறும்; சில சமயம் திடீரென இறங்கும். பதுக்கல் என்னும் அரக்கன் பிடியில் சிக்கித் தவிக்கும்பொழுது இதன் விலைகள் விஷம் போல் ஏறுவதை நாம் பார்க்கலாம். அரசின் 'தக்க நடவடிக்கை' என்னும் சிகிச்சை மூலமே இந்தக் கொடிய விஷத்தை இறக்க முடிகின்றது.

மக்களின் உயிர்ப் பிரச்சினைகளுக்குத் தடையாக இருக்கும் தரமில்லா நுகர் பொருட்களுக்கெல்லாம் தடைவிதித்துக் குறைந்த விலையில் தரமான நுகர் பொருள்களை ஒரே இடத்தில் மக்களுக்குக் கிடைக்கச் செய்யும் நோக்கத்தோடு தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் 'அமுதம்' என்ற பெயரில் சிறப்பு அங்காடிகளைத் ( Departmental Stores ) துவக்கி இருக்கின்றது.

தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் சில்லறை அங்காடிகள் ஏற்கெனவே சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் உணவு தானியங்கள், பயறு வகைகள் மிளகாய், சோப்பு, குழந்தை உணவுப் பொருள், வனஸ்பதி, எண்ணெய் வகைகள் போன்ற, உணவுப் பங்கீட்டு முறையில் அடங்காத பொருட்களை விநியோகம் செய்து வருகின்றன.

நாட்டில் அவசரச் சட்டம் அறிவிக்கப் பெற்றதன் விளைவாலும், தமிழகத்தில் ஜனாதிபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டதன் பயனாலும் பலசரக்கு மற்றும் இதர நுகர்பொருள்களின் விலைகள் சாதாரணமாகவே இருந்து வந்தன. ஆனால் அண்மையில் சில சமூக விரோத சக்திகளும், கள்ள வணிகர்களும் இன்றியமையாத பொருட்கள் சிலவற்றைப் பதுக்கி வைக்க முற்பட்டனர். இதன் காரணமாக அத்தகைய பொருட்களின் விலைகளும் உயர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

பொதுச் சந்தையில் இன்றியமையாத நுகர் பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்திடும் முறையிலும், பிரதமர் அவர்களின் 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தின் முதல் அம்சமான 'இன்றியமையாப்பொருட்களின் விலைகளைக் குறைத்தல்; அவைகளைச் சீராக விநியோகம் செய்தல்' முறையினைச் சீராகச் செயல்படுத்திடும் வகையிலும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் சிறப்பு அங்காடிகளைத் தொடங்க ஆரம்பித்தது.

'அமுதம்' என்னும் பெயரினைத் தாங்கியுள்ள இத்தகைய அங்காடிகள் தற்பொழுது சென்னை மாநகரில் கீழ்க்காணும் 7 இடங்களில் தொடங்கப்பட்டு அவை



ரான முறையில் செயல்பட்டு ருகின்றன. அவை:

. என். 75, ஹாரிங்டன் சாலை சத்துப்பட்டு.

2. பூந்தமல்லி நெடுஞ்சாலை-ளவர்ஸ் சாலை சந்திப்பு, கீழ்ப் ாக்கம்.

3. என் 24-ஏ, சாமியர்ஸ் ாலை, நந்தனம்.

4. அசோக் நகர் வீட்டுவசதி ாரிய விற்பனை நிலையக் கட்ட ம், அசோக்நகர்.

5. எம். பி. டி. குடியிருப்பு, ண்டையார்ப்பேட்டை.

6. தங்கச்சாலை உணவுப் பாருள் சேமிப்புக் கிடங்குக் ட்டடம். (பேருந்து நிலையம் ருகில்), தங்கசாலை.

7. அண்ணா நகர் உணவுப் பாருள் சேமிப்புக் கிடங்குக் ட்டடம். அண்ணாநகர்.

ூகிய இடங்களில் செயல்பட்டு ருகின்றன. இன்னும் பல அங் ாடிகளை விரைவில் துவக்குவதற் ான பணிகள் மேற்கொள்ளப் ட்டு வருகின்றன.

இத்தகு அங்காடிகளைத் திறப்ப ன் முக்கிய நோக்கம், சமுதாயத் துள்ள ஒவ்வொரு மனிதனும் னக்குத் தேவையான எல்லாப் பாருட்களையும் குறைந்த விலை ல்-ஒரே இடத்தில் பெறச் செய் தேயாகும். இலாபம் தேடும் றிக்கோள் இன்றியும், பொது க்களுக்கு உதவிட வேண்டும் ன்கின்ற நல்லெண்ணத்துடனும் ான் இந்த அங்காடிகள் தொடங் ப்பெற்றுள்ளன.

சில பொருட்களின் விலைகள், தன் தயாரிப்பாளர்கள் நிர்ண த்த விலைகளைக் காட்டிலும் றைவாகவே மக்களுக்கு விற் னை செய்யப்படுகின்றன. இது, பாதுச் சந்தையில் விற்பனை ாகும் பொருட்களின் விலைகள் றைவதற்கு வழிகோலுகிறது; அம்சப் பொருளாதாரத் திட் த்தின் முகப்பாகவும் அமை றது.

பொதுவாக 'அமுதம்' சிறப் ங்காடியில் விற்பனை செய்யப் டுகின்ற பொருட்களின் விலை ய — குறிப்பாகத் தேயிலை, ாப்பித்தூள், காப்பிக்கொட்டை, லசரக்குப் பொருட்கள் போன்ற ற்றின் விலையை நகரிலுள்ள னைய கூட்டுறவுச் சங்க அங் ாடிகள், சிறப்பு அங்காடிகள், முன்னணியில் நிற்கின்ற தனியார் அங்காடிகள் போன்றவற்றின் விலைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால், அமுதம் சிறப்பங்காடியில் மிகவும் குறைவான விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன என்பது தெளிவாகிறது.

இந்த அங்காடிகளில் ஏறத்தாழ 300 வகையான நுகர் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இவைகளில் பலசரக்குப் பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள், பற்பசை பல்துலக்கும் 'பிரஷ்' (Tooth Brush), குழந்தை உணவு மற்றும் சத்து உணவுப்பொருட்கள் சோப்புகள் போன்றவைகள் அடங்குகின்றன.

நெசவுத் தொழில் நிறுவனத்தினுடைய (N. T. C.) துணிகள் இங்கு விற்பனை செய்யப்படுகின்றன. தவிர, தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனமும் தனது விற்பனை நிலையத்தை இங்கே அமைத்து முட்டைகள், சிறகு, தோல் நீக்கப் பெற்ற கோழிகள் போன்றவைகளையும் நுகர்வோருக்கு விற்பனை செய்கின்றது. இவைகளின் விற்பனை நிலையங்கள் விற்பனையில் 'கமிஷன்' அளித்திடும் ஒப்பந்தத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு பால்வள நிறுவனத்துடன் ஓர் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பெற்று, அதன் தயாரிப்புகளான நெய், வெண்ணெய் போன்றவைகளை விற்பனை செய்திடவும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஏற்பாடு செய்துள்ளது.



மேலும் புதுவகைப் பொருட்களின் தேவை எழுகின்ற நேரத்தில் அத்தகைய பொருட்களையும் வாங்கி, பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படும். இதற்கெனப் புதிய இருப்புக்களும், உடனுக்குடன் நிரப்பி வைக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

நுகர் பொருட்களை மட்டும் விநியோகித்தால் போதாது; ஏழை, எளியவர்கள், நடுத்தர மக்கள் ஆகியோர் பயன்பெறுகின்ற வகையில், கட்டுப்பாட்டு விலையிலும், நியாயமான விலையிலும் துணிகளையும் விநியோகித்திட வேண்டும். எனவேதான் தேசிய

நுகர்வோரின் வசதியைக் கருத்திற்கொண்டு, இந்த அங்காடிகளின் அருகில் திறந்தவெளி இடம் கிடைத்தால் இங்கே சிற்றுண்டி, மற்றும் குளிர் பானங்கள் போன்றவைகளையும் வழங்கிடும் திட்டமும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பலசரக்குப் பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள், சோப்புகள் போன்ற பல்வேறு நுகர்பொருட்களை, முடிந்த அளவிற்கு மிகவும் குறைந்த விலையில் பெற்று, பொதுமக்கள் பெரும் பயன் பெற்றிடும் அளவிற்கு அவைகளை விற்பனை செய்து வருவதும் சிறப்பான அம்சமாகும். குழந்தையுணவு மற்றும் சத்துணவுப் பொருட்களையும் தட்டுப்பாடின்றி, போதிய இருப்பில் வைத்து அவைகளைச் சீரான முறையில் விநியோகமும் செய்கின்றன.





பொது மக்களின் வசதியைக் கருத்திற்கொண்டு சென்னை நகரில் மட்டுமல்லாமல் சில மாவட்டங்களின் தலைநகர்களிலும் இத்தகைய அங்காடிகளைத் துவக்கிடும் திட்டத்தினையும் இத்துறை மேற்கொண்டுள்ளது.

பொதுமக்கள் பெரிதும் பயன் பெற்றிடும் விதத்திலும், சமுதாயத்திலுள்ள அனைத்து மக்களின் வாங்கும் சக்திக்கேற்ற வகையில் குறைந்த விலையில் நுகர்பொருள்களை விற்பனை செய்திடும் முறையிலும், தரமான பொருட்களைத் தட்டுப்பாடின்றி, சீராக விநியோகம் செய்வதிலும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் 'அமுதம்' சிறப்பங்காடி முனைப்பாகச் செயலாற்றுகிறதென்றால் அது மிகையாகாது!

—ஆயிரராமன்



# "சொந்தக்காலில் நிற்போம்!"

"இங்கு இருபதம்சத் திட்டம் செயல்வடிவம் பெற்றிருப்பதைப் பார்த்தேன். உழைத்துப் பிழைக்கின்றவர்களுக்கு நிலப் பட்டா, உழவுக் கருவிகள் முதலானவை வழங்கப்பட்டுள்ளன. ஏழை எளியவர்களுக்கு, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் உதவி செய்து வருவதன் மூலம் அன்றைய கனவு இன்று நனவாகிக் கொண்டிருக்கிறது. இந்தப் பகுதி மக்கள் சொந்தக் காலில் நிற்பார்கள் என நினைக்கிறேன்.''

இவ்வாறு மத்திய உள்துறை இராஜாங்க அமைச்சர் திரு. ஓம் மேத்தா அவர்கள், செங்கற்பட்டு மாவட்டம் நந்திவரம்-கூடுவாஞ்சேரி ஊராட்சி சார்பில் 1976 ஜூலைத் திங்கள் 25-ஆம் நாள் நடைபெற்ற இருபது அம்சத் திட்ட ஓராண்டு நிறைவு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

முதலில் நந்திவரம் பயணிகள் விடுதியில் தென்னங்கன்று, சப்போட்டா, மாங்கன்று ஆகியவைகளை மத்திய உள்துறை இராஜாங்க அமைச்சர் திரு. ஓம் மேத்தா அவர்கள் நட்டார். பிறகு பல்வேறு துறைகள் பங்கேற்ற கண்காட்சியைத் துவக்கி வைத்தார்.

சிறுவிவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தாம்பரம் ஸ்டேட் வங்கி கடன் வழங்கியதன் மூலம் பெறப்பட்ட 28 பால்மாடுகள், 21 ஆடுகள், 10 தழை மிதிக்கும் கருவிகள், 30 கலப்பைகள் மற்றும் விசைத் தெளிப்பான்கள் ஆகியவற்றை மத்திய உள்துறை இராஜாங்க அமைச்சர் அவர்கள் வழங்கினர்.

நந்திவரம், கூடுவாஞ்சேரியில் இரண்டு பள்ளிக் கட்டடத்திற்கான அடிக்கல்லையும் அமைச்சர் நாட்டினர்.

இவையன்றிக் காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கூடுவாஞ்சேரி ஊராட்சி, வில்லியம்பாக்கம் ஊராட்சி, சிங்கப்பெருமாள் கோயில் ஊராட்சி ஆகியவற்றிற்குத் தொலைக்காட்சிப் பெட்டிகளையும் அமைச்சர் வழங்கினர்.

பள்ளி மாணவர்க்கான 'சஞ்சாயிகா' சிறுசேமிப்புத் திட்டத்தில் இப்பகுதியைச் சேர்ந்த 1,037 மாணவர்கள் கணக்கு வைத்துள்ளனர். அவர்களுக்கு பாஸ் புத்தகங்களை அமைச்சர் வழங்கினர்.

இவை மட்டுமா?

101 பேர்களுக்கு மனைப் பட்டாக்கள், புத்தக வங்கிகள் மூலம் மாணவர்களுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள், மலிவு விலையில் தரமான துணிகள், அரிசன நலத்துறை மூலம் தையல் இயந்திரங்கள், சவரத் தொழிற் கருவிகள், 138 பேருக்கு நிலப் பட்டா, உடல் ஊனமுற்றோர்களுக்கு 5 மூன்று சக்கர வண்டிகள், இறந்த அரசு ஊழியர் குடும்பத்துக்கு ரூ. 10 ஆயிரம் ஆகியவற்றையும் அமைச்சர் வழங்கினர்.

—பி. வி. ஜீ




TNSCB: 112

# தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் "சிறுமலர்கள் சேமிப்பு திட்டம்."

## மாணவர்களும், சிறு வியாபாரிகளும் எளிதாக சேமிக்க, தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் ஒரு புதிய திட்டம்.

உங்கள் சக்திக்கு ஏற்ப, சிரமமின்றி சேமிப்பது நலம். எங்கள் "சிறு மலர்கள் சேமிப்பு திட்டம்" அதற்கு உதவுகிறது. உண்டியல் சேமிப்பு திட்டத்தின் மூலம் மாணவர்களும், சிறு வியாபாரிகளும் தங்கள் சேமிப்பை எங்கள் தலைமை அலுவலகம் அல்லது சென்னையில் உள்ள 23 கிளைகளில் சேமிப்பு கணக்கில் முதலீடு செய்யலாம்.

ரூ. 5/- செலுத்தி புதிய சேமிப்பு கணக்கு ஆரம்பிக்கும் ஒவ்வொரு நபருக்கும் அழகான ஒரு உண்டியல் வழங்கப்படும்.

TNSC BANK

உண்டியலில் அவ்வப்பொழுது சேரும் சில்லறை காசுகளை சேர்த்து மாதம் ஒரு முறையாகிலும் அல்லது உண்டியல் நிறைந்தவுடனும் எங்கள் வங்கியில் செலுத்தி உங்கள் சேமிப்பு கணக்கில் வரவுவைத்துக் கொள்ளலாம்.

உங்கள் சேமிப்பு கணக்கில் உள்ள முதலீட்டின் பேரில் 5.75% வட்டி வழங்கப்படுகிறது. மேலும் உங்கள் சேமிப்பு கணக்கில் உள்ள பணத்தை லாபகரமாக முதலீடு செய்ய வழிவகைகளை எங்கள் கிளை மேனேஜர் தெரிவிப்பார். இத் திட்டத்தின் மூலம் சிறுக சேர்த்து உங்கள் எதிர்கால தேவைக்கு முதலீடு செய்யுங்கள்.

**தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்**

379, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சாலை, சென்னை-600 001.

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி உங்கள் சேமிப்பை அதிகரிக்கவும், நாட்டின் விவசாய மற்றும் பொருளாதார வளர்ச்சிகளுக்கும் உதவுகிறது.



# சேலம் மாவட்டத்தில் தேனீ வளர்ப்புத் திட்டம்

சேலம் மாவட்டத்தில் 1958-ம் வருடம் முதல் தேனீ வளர்ப்புத் திட்டம் செயல்பட்டு வருகிறது.

இந்த மாவட்டத்தில் தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரிய நிர்வாகத்தின் கீழ் 21 ஊராட்சி ஒன்றியங்களிலும் ஏர்க்காடு மற்றும் கொல்லிமலைப் பகுதிகளிலும் 8 தேனீ வளர்ப்பு உபகிளைகளும், டேனிஷ்பேட்டையில் ஒரு மாதிரி தேனீ வளர்ப்பு நிலையமும் செயல்பட்டு வருகின்றன.

598 கிராமங்களில் 2,939 பேர் தேனீ வளர்ப்புத்தொழிலைச் செய்து வருகின்றனர். இதன் மூலம் சென்ற ஆண்டு (75-76) சுமார் 33,610 கிலோ தேனும், 304 கிலோ மெழுகும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

தேனீ வளர்ப்போர்களால் உற்பத்தி செய்யப்படும் தேன், ஏர்க்காடு தேனீ வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமும், கொல்லிமலை தேனீ வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமும் கொள்முதல் செய்யப்படுகிறது.

தேனீ வளர்ப்புத் தொழிலை அபிவிருத்தி செய்ய, தேனீ வளர்ப்போர்களை ஊக்குவிக்கும் பொருட்டு அவர்களுக்குக் கடன் மற்றும் மான்யம் வழங்கப்படுகிறது. தேனீ வளர்ப்புத் தொழிலை அபிவிருத்தி செய்யும் பொருட்டு வருடந்தோறும் கோடைக்காலப் பயிற்சி ஒன்று நடத்தப்படுகிறது. 1975'-76-ம் ஆண்டு முடிய 10,964 தேனீப் பெட்டிகள் மான்ய விலையில் (50 சதவீதம் விலை) தேனீ வளர்ப்போர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன..

தற்சமயம் தேனீ வளர்ப்புத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசுடைமை ஆக்கப்பட்ட வங்கிகளில் குறைந்த வட்டிக்குக் கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் சேர்வராயன் மலையில் வாழும் மலைவாழ் மக்களுக்குத் தேனீ வளர்ப்புத் தொழிலை அபிவிருத்தி செய்ய நபர் 1-க்கு ரூ. 1,500 வீதம் 20 மலைவாழ் மக்களுக்கு சேலம் யுனைடெட் கமர்ஷியல் பாங்கு கடன் வழங்கி உதவியுள்ளது.

ஏர்க்காடு பகுதியில் கிடைக்கும் தேனைப் பக்குவப்படுத்தி, வெளி இடங்களுக்கு அனுப்புவதற்குத் தேவையான இடவசதியை ஏற்படுத்த (Construction of a Honey House) தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியம் ரூ. 25,000 கடனுகை கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கியுள்ளது. இத்திட்டத்தினால், அதிக உழைப்போ, சிரமமோ சிக்கலான தொழில் நுட்பமோ தேவையின்றி, மலைவாழ் மக்கள் தங்களது வருவாயைப் பெருக்கிக் கொள்ள உதவுவதால் மலைவாழ் மக்களிடையே, சிறப்பாக பெண்களிடையே இத்திட்டம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

## நாம் சிந்திக்க வேண்டியது என்ன?

பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மிகச் சிறந்த முறையில் இயங்கி வந்த இந்த உலகம் தற்போது அச்சுறுத்தப்படுகிறது. ஏனெனில் ஒவ்வொரு மனிதரும் தாம் எதைப் பெறலாம் என்ற கேள்வியை எழுப்புகிறார்கள். இந்த வழக்கம் நம் நாட்டிலும் உள்ளதைப் பார்க்கிறோம். "அரசிடமிருந்து நாம் எதைப் பெறமுடியும்? ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையை நமக்குச் சாதகமாக்கிக் கொள்வது எப்படி?" நாடு நமக்காக என்ன செய்கிறது என்ற கேள்விக்குப் பதிலாக நாட்டிற்கு நாம் என்ன செய்ய முடியும் என்பது பற்றி யோசிக்க வேண்டிய நேரம் வந்துள்ளது. திறமை, சேவை, அறிவுத் திறன் ஆகிய வடிவங்களில் நமது சமுதாயத்திற்குத் தொண்டாற்றுவது பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

—இந்திரா காந்தி.

# சுயவேலைத் திட்டம் உருவாக்குவோம்!

"கிராமப்புறப் பால் வளப் பெருக்கும் திட்டம் மூலம் கால்நடைகளைப் பெருக்குதல், காத்தல், பாலை விற்பனை செய்தல் போன்ற பணிகளைத் தமிழ்நாடு பால்வள நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் 53 ஆயிரம் மக்கள்தொகை கொண்ட 15 கிராமங்களின் மக்கள் பயன் அடைவர்.

இவ்வாறு தமிழக ஆளுநர் மேதகு மோகன்லால் சுகாதியா அவர்கள், ஆகஸ்டு 13-ஆம் நாள் செய்யூரில் நடந்த கிராமப்புறப் பால்வளம் பெருக்கும் திட்ட விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.



செய்யூர் வட்டக் கிராமப் பகுதிகளில் ஆளுநர் அவர்கள் கறவை மாடுகளைப் பார்வையிடுகிறார்.

தமிழ்நாடு பால்வள நிறுவனம், மதுராந்தகம் வட்டத்திலுள்ள செய்யூரில் கிராமப்புற பால்வளம் பெருக்கும் திட்டத்தை அமைத்துள்ளது. இதன் மூலம் சோத்துப்பாக்கம், மழுவங்கரணை, சித்தாமூர், பொலம்பாக்கம், சரவம்பாக்கம், கோட்டிவாக்கம், காட்டுதேவாதூர், வெண்மணி முதலான கிராமங்கள் பயனடைகின்றன.



கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்ட திரு. நடேசன் என்பவருக்கு ஆளுநர் அவர்கள் கறவை மாடு வழங்குகிறார்.

மேற்கண்ட ஒவ்வொரு கிராமத்திற்கும் ஆளுநர் அவர்கள் சென்று கிராம மக்களின் குறைகளை நேரில் கேட்டறிந்தார். இந்தக் கிராமங்களில் உள்ள கறவை மாடுகளையும் அவர் பார்வையிட்டார்.

காட்டுதேவாதூரிலுள்ள அரிசனக் குடியிருப்புக்கு ஆளுநர் அவர்கள் திறந்த ஜீப் காரில் சென்று, அரிசன பால் பண்ணை விவசாயிகள் பால் திரட்டும் முறை, சோதனை நடத்தும் முறைகளைப் பார்வையிட்டார்.

செய்யூரில் பால்வள நிறுவனமும், கால்நடைப் பராமரிப்புத் துறையும் அமைத்திருந்த கண்காட்சியையும் ஆளுநர் அவர்கள் பார்வையிட்டார்.



செய்யூரில் நடந்த கிராமப்புறப் பால்வளம் பெருக்கும் திட்ட விழாவில், ஆளுநர் அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்:

"தமிழ்நாடு பால்வள நிறுவனம் கால்நடைகளை 2 மடங்கு உயர்த்தியும், விற்பனையை 3 மடங்கு உயர்த்தியும் உள்ளது. கால்நடைகளை நோய்களிலிருந்து தடுப்பதில் தீவிரம் காட்ட வேண்டும். கால்நடை மருத்துவ அதிகாரிகள் இதில் தக்க கவனம் உரிய காலத்தில் செலுத்த வேண்டும்.

"வேலை இல்லாமல் திண்டாடும் 20 பட்டதாரிகளுக்கு மாடுகள் வாங்க 30 ஆயிரம் ரூபாயை சென்ட்ரல் வங்கி கொடுத்துள்ளது. கனரா வங்கி 600 பேருக்குக் கறவை மாடுகள் வாங்க 16 இலட்ச ரூபாய் கொடுத்துள்ளது.

"இன உற்பத்திக்காகச் செயற்கைக் கருமுறை செய்யப்படுகிறது என்று தெரிவித்தார்கள். இந்த உற்பத்தி முறையைக் கால்நடை வைத்திருப்பவர்களுக்கு உரிய காலத்தில் செய்துகொடுக்க வேண்டும். மாடுகள் வளர்ப்போர் தீவனம் கொடுப்பதிலும் தக்க கவனம் செலுத்த வேண்டும். நல்ல சத்துணவு கொடுத்தால் தான் மாடுகள் அதிகப் பால் கொடுக்கும்.

"கிராமப்புறங்களில் மக்களுக்குச் சுயவேலைத் திட்டங்களை உருவாக்க வேண்டும். மனித உழைப்பைப் பயன்படுத்தும் வகையில் இது இருக்க வேண்டும்."

பிறகு, அரிசனங்கள், நிலமற்ற உழைப்பாளர்கள், மிகச் சிறிய விவசாயிகளுக்குக் கறவை மாடுகளையும், சிறு விவசாயிகள் திட்ட மானிய உதவியையும், மீட்கப்பட்ட கொத்தடிமைகள் 12 பேர்களுக்குப் பசுமாடுகளையும் ஆளுநர் அவர்கள் வழங்கினார்.

திரு. ஆர். சுப்பிரமணியம் என்பவரின் மாடு ஒன்று 'இன்சூர்' செய்த மறுநாளே இறந்து விட்டது. கனரா வங்கி இன்சூரன்சு திட்டத்தின்கீழ் அவருக்குக் கொடுத்த 1,300 ரூபாயையும், வேலையற்ற பட்டதாரி இளைஞர்களுக்குப் பால்பண்ணை அமைக்கக் கடனுதவியையும் ஆளுநர் அவர்கள் வழங்கினார்.

இவையன்றி, சிறந்த எருமை மாடு வைத்திருக்கும் திருமதி பாப்பம்மாள் என்பவருக்கும், கறவை மாடுகள் போட்டியில் வெற்றி பெற்ற திரு. முகமது அலி என்பவருக்கும் விழாவில் பரிசுகள் வழங்கப் பெற்றன.

செய்யூரில் நடந்த இந்த விழா. இருபதம்சத் திட்டம் செயல் வடிவம் பெறும் விழாவாக அமைந்தது என்றால் அது மிகையல்ல.

—பி.வி.ஜி.

# தொழுநோய் குழந்தைகளையும் விடவில்லை!

செங்கற்பட்டு நகரில் உள்ள 'லியோ' கிளப்பைச் சேர்ந்த இளம் டாக்டர்கள் அடங்கிய ஒரு குழு சமீபத்தில் அகரம் கிராமத்தில் ஓர் ஆய்வை நடத்தியது. அந்தக் கிராமத்தில் தொழுநோய் (குஷ்டநோய்) தொற்றிய நிலை 24 சதவிகிதம் குழந்தைகளிடையே இருப்பதை அந்த ஆய்வு கண்டு பிடித்தது. தொழுநோய் தொற்றிய நிலை குழந்தைகளிடையே இவ்வளவு அதிகமான அளவில் காணப்படுவது அசாதாரணம் என்று கருதப்படுகிறது.

தொழுநோயைக் கட்டுப்படுத்துவதற்காக இத்தனை ஆண்டுகளாகப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் தொழுநோய் தொற்றிய நிலை 4 சதவிகிதம் குழந்தைகளிடையே இருப்பது அசாதாரணமானது என்று கருதப்படுகிறது.

டாக்டர்கள் குழு அந்தக் கிராமத்தில் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று மிகவும் கவனமாக ஆய்வு நடத்தியது. குழந்தைகளிடையே தொழுநோய் தொற்றிப் பரவுவதற்கான வாய்ப்பு அதிகம். தொழுநோய் தொற்றிய குழந்தைகள் மூலமாக மேலும் பிற குழந்தைகளுக்கும் அந்த நோய் பரவும்.

தொழுநோய் தொற்றியவர்களுக்கு 'டி.டி.எஸ்.' மாத்திரைகளைத் தரலாம். இது உடனடியாகக் கிடைக்கக்கூடியது. நோய் தொற்றியவுடன் இதனை அளிக்க ஆரம்பித்தால் பலன் ஏற்படும். இதன் விலையும் மலிவு 10 கிராம் மாத்திரைகள் ஆயிரம் ரூ. 10-க்கு வாங்கலாம். 25 கிராம் மாத்திரைகள் ஆயிரம் ரூ. 25-க்கு வாங்கலாம். இந்த மாத்திரைகளைக் குறிப்பிட்ட காலத்திற்குக் கொடுக்க வேண்டியிருக்கும். சம்பந்தப்பட்ட நோயாளியின் நிலையையொட்டி இதை எவ்வளவு காலத்திற்குக் கொடுப்பது என்பதை முடிவு செய்ய வேண்டும்.

லியோ கிளப் டாக்டர்கள் கால விரயம் செய்யாமல் பழைய செய்தித்தாள்களை நன்கொடையாக வசூலித்து அவற்றை விற்றுக் கிடைத்த பணத்தைக் கொண்டு 'டி. டி. எஸ்.' மாத்திரைகளை வாங்கினர். அகரம் கிராமத்துக் குழந்தைகள், ஒரு மாதத்திற்கு உபயோகிக்கக் கூடிய மாத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன.

பம்பாயில் தொழுநோய் சிகிச்சைக்கு ஊசி மூலம் செலுத்த ஒரு மருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. லியோ கிளப் டாக்டர்கள் இதனையும் கேட்டிருக்கிறார்கள். 'டி.ஏ.டி.டி.எஸ். இன்ஜெக்ஷன்' என்று இதற்குப் பெயர். இதை ஒரு நோயாளிக்கு ஒருமுறை ஒரு 'இன்ஜெக்ஷன்' வீதம் தர வேண்டும். நான்கு முறை கொடுத்ததும் முழுக் குணமேற்படும் என்று சொல்லப்படுகிறது.

இந்த 'இன்ஜெக்ஷனின்' விலை அதிகமாக இருக்கக் கூடும். ஆனால், நிவாரணம் நிச்சயம் என்பதால் இதனைப் பயன்படுத்தலாம்.

திருமணியில் உள்ள மத்திய தொழுநோய் பயிற்று மற்றும் ஆராய்ச்சிக் கழகம் இந்த 'இன்ஜெக்ஷனை' முயற்சிக்கத் தொடங்கியுள்ளது.

அகரம் குழந்தைகளின் உணவு முறை பற்றியும் 'லியோ' டாக்டர்கள் ஆய்வு நடத்தினர். அகரம் கிராம குழந்தைகளுக்குப் பொதுவாக 'ஏ' வைட்டமின் சத்து, குறைவாக இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.






அட்டைப்படக் கட்டுரை

# நாதியற்றுக்கிடந்த 24,000 பேர்களுக்கு நல்வாழ்வு பிறந்தது!

**கொ**டுத்த கடனைத் திருப்பித் தரவில்லை என்பதற்காக, கடன் வாங்கியவர்களின் குடும்பப் பெண்களை இழுத்துச் சென்று— கடனைத் திருப்பித்தரும் வரையில் கடன் கொடுத்தோர் தங்களுடன் வைத்திருந்துள்ளனர்!

அதுமட்டுமல்ல!

கடனைத் திருப்பித் தரவில்லை என்பதற்காகக் கணவனின் முன்னாலேயே மனைவியின் கற்பைச் சூறையாடியுள்ளனர்.! தகப்பன் முன்னாலேயே மகளை மானபங்கம் செய்துள்ளனர்! பயத்தின் காரணமாகக் கணவனோ அல்லது தகப்பனோ இக்கொடுமையைத் தடுப்பதும் இல்லை.

நினைத்தாலே நெஞ்சம் பதறும் இத்தகைய கொடுமைகள் தென்னார்க்காடு மாவட்டம், கல்ராயன் மலைப்பகுதியில் 14-4-1976-க்கு முன்னால் நடைபெற்று வந்துள்ளன!

உங்களால் நம்ப முடியவில்லை அல்லவா?

ஆனால் கல்ராயன் மலைப்பகுதியில் வாழும் பழங்குடி மக்கள், காலங்காலமாகத் தாங்கள் அனுபவித்த இன்னல்களைக் கூறக் கேட்ட யாரும் நம்பாமல் இருக்க முடியாது!

வெளி உலகத் தொடர்பு அற்றிருந்த அவர்களுக்கு, நமது நாட்டில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டங்களைப் பற்றி எதுவுமே தெரியாது!

மனித வாழ்வுக்கு இன்றியமையாது தேவைப்படும் அடிப்படை வசதிகளான குடிநீர், பள்ளிகள், மருத்துவ வசதிகள், சாலைகள் ஆகியவை இல்லாமல் அவர்கள் இன்றுவரை வாழ்ந்து வருகின்றார்கள்!

## அறியாமை என்னும் இருள் அகலுகிறது!

தென் ஆர்க்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள கல்ராயன் மலைப்பகுதி ஏறத்தாழ 40 கி. மீட்டர் நீளத்திற்கும், 20 கி.மீ. அகலத்திற்கும் பரந்துள்ள ஒரு மலைப்பகுதியாகும். இம்மலைத் தொடர் 600 மீட்டர் முதல் 900 மீட்டர் வரை உயர்ந்துள்ளது. குறும்பக் கவுண்டன், சடையக் கவுண்டன், அரியக் கவுண்டன் என்றழைக்கப்படுகிற முன்னாள் ஜாகீர்ப்பகுதிகள் மூன்று இம்மலைப்பகுதியில் அடங்கியுள்ளன. இப்பகுதியில் 103 கிராமங்கள் உள்ளன. இங்கு வாழும் மக்கள் தொகை சுமார் 24,000 ஆகும். அவர்களில் பெரும்பாலோர் 'மலையாளிகள்' (மலைவாசிகள்) என்று அழைக்கப்படும் பழங்குடிகளாவர். இப்பகுதியிலுள்ள பழங்குடி மக்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளனர். அறியாமை இருளிலும், ஏழ்மையிலும் அவர்கள் மூழ்கியுள்ளனர். பல்வேறு வகைகளில் அவர்கள் வெளியாரின் சுரண்டலுக்கும், ஆதிக்க… கும் ஆளாகியுள்ளனர்.

அறியாமை என்னும் இருளில் மூழ்கியிருந்த அம்மக்களுக்கு, நமது பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களால் கொண்டு வரப்பட்ட இருபது அம்சப் பொருளாதாரத் திட்டம் என்னும் ஒளிவிளக்கின் வெளிச்சம் 14-4-'76 அன்றுதான் முதன் முதலாகத் தெரிந்தது! ஆம்! தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பத்மநாபன் அவர்கள் 14-4-1976 அன்று இருபது அம்சத் திட்டம் என்னும் ஒளிவிளக்கை எடுத்துச் சென்று, கல்ராயன் மலைவாழ் பழங்குடி மக்களிடையே 'இருபது அம்சத் திட்டத்தின் பயன்' என்னும் ஒளியைப் பரப்பிய பின்புதான், அவர்களிடையே சூழ்ந்திருந்த அறியாமை என்னும் இருள் கொஞ்சம் கொஞ்சமாக அகல ஆரம்பித்துள்ளது!



ஒளிமயமான எதிர்காலம் உருவாகுமா என்று ஏங்கும் கல்ராயன் மலைவாழ் பழங்குடிமக்களில் ஒரு பகுதி.

## அரசின் முயற்சிகளுக்கு முட்டுக் கட்டை!

மாவட்டத்தின் பிற பகுதிகள் வளர்ச்சியடைந்தபோது இப்பகுதி மட்டும் தனித்துநின்றதால் இந்நிலை நேர்ந்தது. தமிழ்நாடு இனும் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்து வாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (சட்டம் எண். 26/1963) விதித்துறைகளைச் செயல்படுத்தி, இந்தப் பகுதியில் ரயத்து வாரி நிலவரி ஏற்பாட்டைக் கொண்டுவர அரசு முயற்சி செய்தது. ஆனால் இந்த முயற்சியில் அரசு வெற்றிபெற முடியவில்லை. ஏனென்றால், இப்பகுதியின் ஜாகீர்தார்கள் 'ரிட்' மனுக்களையும், உரிமை வழக்குகளையும் இடைவிடாமல் தொடுத்து, நீதிமன்றங்களிடமிருந்து தடை ஆணைகளைப் பெற்றுவந்தனர். எனவே, இப்பகுதியில் ஊராட்சிகளையோ, வளர்ச்சி வட்டாரங்களையோ அரசால் நிறுவ முடியவில்லை. இதன் விளைவாக, சுமார் 500 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள பகுதி முழுவதும் எந்த வளர்ச்சியும் அடையாமல் பின்தங்கிய நிலையில் இருந்து வந்தது. இப்பகுதி முழுவதும் நிலஅளவை செய்யப்படாமலும் உள்ளது.

## வனமும் வனப்பும் நிறைந்துள்ளன!

தொலைவிலிருந்து பார்த்தால் கல்ராயன்மலைத்தொடர்மேற்குப் புறத்திலிருந்து பிற பகுதிகளைக் காணவொட்டாது தடுக்கின்ற ஒரு பெரிய சுவர்போல் தோற்றமளிக்கிறது. இம்மலைத் தொடரின் தெற்கு முனையில் சேலத்திற்குச் செல்கிற ஆத்தூர் கணவாய் அமைந்துள்ளது. தென் மேற்குப் பருவ மழையின் போது இக்கணவாய் மூலமாகக் குளிர் காற்று வீசுகின்றது. அரிப்புக் காரணமாக இம்மலைத் தொடர்களிலுள்ள பள்ளத்தாக்குகள் வடிநிலப் பள்ளத்தாக்குகளாக மாறியுள்ளன. இம்மலைத் தொடர்கள் பொதுவாக கிழக்குப் புறமாகச் சரிந்துள்ளன. அந்தத் திசையில் முக்கிய ஆறுகள் பாய்கின்றன. மணிமுத்தா நதி, கோமுகி நதி, மயூர நதி, ஆகிய நதிகள் இங்கு பாயும் முக்கிய நதிகளாகும். இந்த நதிப் பள்ளத்தாக்குகள் குறிப்பாக தும்பா பள்ளத்தாக்கு (இதற்குக் கீழ்ப் புறமாக மணிமுக்தா நதி பாய்கின்றது)-ஆழமான பிளவுகளைக் கொண்டுள்ளது. இவற்றின் பக்கங்கள் மிகச் செங்குத்தாக உள்ளன. இப்பகுதியின் சராசரி 30 அங்குலம் முதல் 35 அங்குலம் வரை மழைபெய்கின்றது. இப்பகுதியின் மண் வளம் தோட்டப் பயிருக்கு உகந்ததாகும். இப்பகுதியிலுள்ள பழங்குடி மக்கள் வேளாண்மையைப் பொறுத்த வரையில், மிகப் பழங்கால முறைகளையே பின்பற்றி வருகின்றனர். சந்தன மரம், மூங்கில், பலாமரம், மிலாறு (Wattle) மாசிக்காய். புளிய மரம் ஆகியவை இங்கு பொதுவாக வளரும் மரவகைகளாகும்.

'லன்டானு (Lantana) என்னும் ஒருவகை புதர்ச்செடி கல்லும் தரிசுமாகவுள்ள இந்நிலத்தில் எங்கு பார்த்தாலும் வளர்கின்றது. மலையிடுக்குகளில் பாயும் ஓடைகளின் மூலம் தண்ணீர் வசதி பெற்று ஆங்காங்குத் தோட்டப்பயிர்கள் பயிர் செய்யப்பட்டுள்ளன. சில பகுதிகளில் கேழ்வரகு, சோளம், கூவைக்கிழங்கு ( Arrow-root ) தினை, சாமை ஆகியவை பயிரிடப்படுகின்றன. சில பகுதிகளில் மரவள்ளிக் கிழங்கும் பயிரிடப்படுகின்றது. சில பகுதிகளில் இலையுதிர்காடுகளும், பசுமை இலைக்காடுகளும் மண்டியுள்ளன. ஏற்கெனவே குறிப்பிட்டுள்ள லண்டானு புதர்ச் செடிகளின் வளர்ச்சி, இப்பகுதிக்குப் பசுமைத் தோற்றத்தை அளிக்கிறது. பல இடங்களில் காந்த இரும்புக் கனிகள் கிடைத்தாலும், இப்பகுதியில் காணப்படுகிற பள்ளங்களிலும் பள்ளத்தாக்குகளிலும் அடர்ந்த காடுகள் மண்டிக் கிடப்பதால், சிறிது தொலைவுக்கு மட்டுமே இந்த இரும்புக்கனிகள் புலப்படுகின்றன. வெண்மையான களிமண் போன்ற ஒரு வகையான மண்ணும் இங்கு காணப்படுகிறது. இவற்றில் 'பாக்சைட்' கலந்திருப்பதற்கான வாய்ப்பும் உண்டு. பெரிய வேட்டை விலங்குகள் இங்கு அரிதாகவே காணப்படுகின்றன. பண்டைய நாட்களில் இக்குன்றுகள் ஆனைக்குன்றுகள் எனவும் வழங்கப்பட்டு வந்தன. இப்போதெல்லாம் இங்கு யானைகள் காணப்படுவது மிகவும் அரிது. ஆனால் கரடிகளை ஆங்காங்கே காணலாம். புள்ளிமான்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாகத் திரிகின்றன. காட்டுப் பன்றிகளும், குள்ள நரிகள் குழி முயல்கள் போன்ற சிறு வேட்டை விலங்குகளும் பொதுவாக ஆங்காங்கே உலவுகின்றன. இக்குன்றுகளில் வனப்பும் பொலிவும், வாய்ந்த மலர்களைக் கொத்தாகக் கொண்டு பூத்துக் குலுங்கும் எண்ணற்ற கொடிகளும் செடிகளும் மண்டிக் கிடக்கின்றன. இவ்வண்ண மலர்களின் வசீகரத்தால் கவரப்பட்டு ஏராளமான பறவை இனங்கள் இவ்வனங்களில் எழிற்காட்சியை வழங்கிக் கொண்டிருக்கின்றன.



குறும்பக் கவுண்டன் ஜாகீரில் உள்ள பாச்சேரி கிராமம்.

## பழங்குடி மக்களின் பூர்வீகம்!

இயற்கையோடு இயைந்த வனப்பு மிக்க எளிய வாழ்க்கைச் சூழலில் வாழும் இம்மலைப் பகுதி மக்கள், பிற மக்களால் சுரண்டப்படுவது இன்னும் புரியாத புதிராகவே உள்ளது! மலையாளிகள் எனப்படும் இப்பகுதி வாழ் பழங்குடியினர் அடக்கத்தையும் அமைதியையும் விரும்பும் மக்களாவார்கள். அவர்கள் ஏதுமறியாதவர்கள், எழுதப்படிக்கத் தெரியாதவர்கள். மொத்தத்தில் நேர்மையான குணம் படைத்தவர்கள். குறுநில மன்னர்கள் ஐந்து சகோதரர்களின் வழித் தோன்றல்கள் இவர்கள் என்று சொல்லப்படுகிறது. இவர்கள் ஏறத்தாழ 16-வது நூற்றாண்டில் காஞ்சிபுரத்திலிருந்து இங்கு வந்து குடியேறி உள்ளூர்ப் பெண்டிரை மணந்து கொண்டு இம்மலைகளில் வாழ்ந்து வந்ததாகச் சொல்லப்படுகிறது. இவர்கள் இந்து சமயத்தினரே என்றாலும், இவர்களது சமூகப் பண்பாட்டு நடைமுறைகள் மிகத் தெளிவாகப் பழங்குடி மரபினையே குறிப்பனவாகும்.

ஆண்கள், கோவணம் அணிந்து தங்களுக்கு மிக முக்கியமான அணியாகக் கருதி தலைப்பாகையைக் கட்டிக் கொள்கிறார்கள். பெரும்பாலும் அவர்கள் மேல் துண்டு அல்லது சட்டை அணிந்து கொள்கிறார்கள். பெண்கள் சேலை உடுத்துகின்றனர்.

## கொடுமையோ கொடுமை!

இப்பகுதியில் ஆதிக்கம் செலுத்தும் ஜாகீர்தார்கள் பத்தாம் பசலித்தனமானவர்கள் என்றால் அது மிகையாகாது. ஜாகீர்தார்கள் மணம் ஆகாத ஆடவர் வரி, விதவை வரி, மேய்ச்சல் வரி போன்ற வரிகளை விதிக்கும் அதிகாரங்களைப் பெற்றும், பழங்குடியினரிடமிருந்து நன்கொடைகள் வாங்கியும் வருகின்றனர். இது, கொடுமை வாய்ந்த நிலப்பிரபுத்துவ முறையைப் புலப்படுத்துகிறது. இந்த ஜாகீர்தார்கள், மலையடிவாரப் பகுதிகளிலேயே வாழ்வதால் மலைப்பகுதி மக்களின் நலனில் எவ்வித அக்கறை

அதிக மகசூல் தரும் புதிய காய்கறி விதைகள் வழங்கப்படுகின்றன.



யும் காட்டியதாகத் தெரியவில்லை. ஆண்டுக்கு ஒரிரு முறைதான் அவர்கள் மலைக்குப் போவார்கள். இவர்களின் அதிகாரம் பெற்ற ஏஜெண்டுகளான நாட்டான்களும், மூப்பன்களும், கவுண்டன்களும், கங்காணிகளுமே இப்பழங்குடி மக்களிடம் வரி வசூலிக்கும் வகையில் ஏகபோக அதிகாரத்தைச் செலுத்தி வருகின்றனர். நாட்டான்களும், மூப்பன்களும் சில கிராமத் தொகுதிகளின் தலைவர்களாவர். கவுண்டன்களும், கங்காணிகளும் ஒவ்வொரு கிராமத்தையும் சேர்ந்தவர்களாவர். இத்தகைய ஏஜெண்டுகளிடம் சிக்கி ஆறுத் துயரையும், வேதனையும் இம்மக்கள் அனுபவித்து வருகின்றனர்.

பழங்குடியினர் சமூக விழாக்களுக்கும் சடங்கு, சம்பிரதாயங்களுக்கும் கணிசமான தொகையைச் செலவிடும் பழக்க முடையவர்கள். இதற்காக இவர்கள் அடிவாரப் பகுதிகளில் வசிக்கும் வட்டிக் கடைக்காரர்களிடம் கடன் வாங்குகின்றனர். இதற்கு வசூலிக்கப்படுகின்ற வட்டி விதம் கடுமையானது மட்டுமல்ல. சில வேளைகளில் ஒருவர் எவ்வளவு கடன் கொடுத்தாரோ அத்தொகையைப் போல் நான்கு மடங்குக்கும் அதிகமான தொகைக்குக் கடன் பத்திரங்கள் எழுதி வாங்கப்படுகின்றன.

வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் அடிவாரத்திலிருந்து மலைப்பகுதிகளுக்கு வந்து, அம்மக்களிடம் தாம் கொடுத்த கடன்களைத் திருப்பிக் கொடுக்குமாறு வற்புறுத்துவதோடு, வாங்கிய கடனைத் திருப்பித் தரவில்லையெனில், பழங்குடி வாசிகளின் குடும்பப் பெண்களைத் தங்களுடன் அழைத்துச் சென்றுவிடுவதாகக் கூறப்படுகின்ற கொடுமை, சகிக்க முடியாததாகும். அது மட்டுமன்று. வட்டிக்குக் கடன் கொடுக்கின்ற சிலர், மேற்சொன்னவாறு மலைவாழ் மக்களிடம் கொடுத்த கடனைத் திருப்பிக் கேட்கையில் அவர்களால் திருப்பித் தரமுடியாவிட்டால், அந்த மலைவாழ் மக்களின் கண்முன்னுலேயே அவர்கள் வீட்டுப் பெண்களின் கற்பைச் சூறையாடும் அளவிற்கும் சென்றனர் என்றும் அதிகாரிகளிடம் அறிவிக்கப்பட்டது. இந்தக் கொடுமைக்கெல்லாம் காரணம் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத அவர்களது அவல நிலையேயாகும்.

இம்மலைவாழ் மக்கள் மிகவும் சுகாதாரக் கேடான சூழ்நிலையில் வாழ்கின்றனர். இக்காரணத்தால் இவர்கள் பல்வகைப்பட்ட நோய்கட்கும் இரையாகின்றனர். இவர்களது குழந்தைகளோ சத்துணவுக் குறைவால் நலிந்து மெலிந்து காணப்படுகின்றனர். சத்துணவுக் குறைகளினுல் வளர்ச்சி குன்றுவதோடு, புரதக் குறைவால் ஏற்படும் நோய்க்கும் உடல் மெலியும் நோய் வகைக்கும் அவர்கள் ஆளாகின்றனர். இப்போது இங்கே குடிநீர், பள்ளிகள், மருத்துவ நிலையம், சாலைகள் போன்ற இன்றியமையாத அடிப்படை வசதிகள் எவையுமே முற்றிலுமாகவே இல்லையெனலாம். இந்த மக்கள் யாவரும் அடிமை நிலைக்கும், கொத்தடிமை வாழ்வுக்கும் உட்பட்டு, குறிப்பாக ஒப்பந்தக்காரர்கள், இடைத்தரகர்கள் தயவில்தான் வாழ்ந்து வருகின்றனர்.

## புதுவாழ்வு தோன்றியது!

தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்பட்ட பிறகு தமிழ்நாடு அரசு, இந்த ஏழைப் பழங்குடி மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக ஆழ்ந்த அக்கறை காட்டியது. மலைவாழ் பழங்குடி மக்களின் வளர்ச்சிக்கான துணைத்திட்டம் ஒன்றைச் செயற்படுத்துவதற்காக இப்பகுதி தெரிந்தெடுக்கப்பட்டது. இப்பழங்குடியினரின் நிலைமையை அறிவதற்காக குறும்பக் கவுண்டன் ஜாகீர் பகுதிக்கு, பல்வேறு துறைகளைச் சார்ந்த அதிகாரிகள் குழுவுடன் மாவட்ட ஆட்சித் தலைவர் 14-4-'76-ஆம் நாளன்று நேரில் சென்று பார்வையிட்டனர். கொத்தடிமைத் தொழிலாளர் முறை (ஒழிப்புச்) சட்டத்தின் விதித்துறைகள் எல்லாம் இப்பழங்குடி மக்களில் பல பிரிவினருக்குப் பொருந்துவதைக் கண்டு, அவர்களுக்குப் புது வாழ்வளிக்கத் திட்டமிடப்பட்டது. ஆனால் இப்பழங்குடியினர், மலைப் பகுதியை விட்டுக் கீழறங்கி வர மறுத்தது ஒரு சங்கடமான நிலையை உருவாக்கியது. மலைப் பகுதி முழுவதும் நீதி மன்றங்களில் தொடுக்கப்பட்ட வழக்குகளுக்குட்பட்டிருந்ததால். அவர்களுக்கு மலைப்பகுதிகளிலேயே புது வாழ்வு அளிக்க முடியாமல் இருந்தது. மாவட்ட ஆட்சித் தலைவர், மலைப் பகுதிக்குச் சென்று பார்வையிட்டபோது, மேற்படி மூன்று ஜாகீர்தாரர்களும் உடன் இருந்தனர். அவர்களுடன் விவாதித்த பின்னர், மேற்படி மூன்று ஜாகீர்தாரர்களும் இப்பகுதியின் மொத்த வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு, மலைப் பகுதியில் தங்களுக்குச் சொந்தமாகவுள்ள எஸ்டேட்டுகளை அரசிடம் ஒப்படைத்து விடுவதாக அவர்கள் அறிவித்தனர்.


ஓம்

# அதிசய நீர் ஊற்று நிபுணர்!

1. குழாய் கிணறு இறக்கவும், புதிய கிணறு வெட்டவும், (பழைய கிணற்றில் போரிங் குழி இறக்கவும்) குறிப்பிட்ட பூமியில் தெற்குத் திசையிலிருந்து வடக்கு நோக்கியும், மேற்கு திசையிலிருந்து கிழக்கு நோக்கியும் சென்று கொண்டிருக்கும் எல்லா நீர் ஊற்றுகளையும் விஞ்ஞான முறைப்படி கண்டுபிடித்து அந்த நீர் ஊற்றுகளிலேயே மிக அதிகமான தண்ணீர் உள்ள இரண்டு நீர் ஊற்றுகள் கிராஸ் செய்யும் சரியான இடம் கண்டுபிடித்துக் குறிக்கப்படும். நீர் ஊற்று உள்ள ஆழமும், அதில் கிடைக்கும் தண்ணீரின் அளவும் தெரிவிக்கப்படும்.

2. என்னுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு நான் குறிக்கும் இடத்தில் குழாய் கிணறு இறக்குபவர்களுக்கு அதில் போதுமான அளவு தண்ணீர் சப்ளை கிடைக்கவில்லை என்று நிரூபித்தால், 2:3 என்ற விகிதத்தில் 3 ஆயிரம் ரூபாய் நஷ்ட ஈடு கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு—25 பைசா ஸ்டாம்பு அனுப்பவும்.

கே. கந்தசாமி,
(Ex-Member of the British Society of Diviners, London)
நீர் ஊற்று நிபுணர்,
கணபதி அஞ்சல் கோயமுத்தூர்-6

தொலைபேசி எண். 31912.






அன்றட வாழ்வுக்குத் தேவைப்படும் இன்றியமையாப் பொருள்களும், மலிவு விலைத் துணிகளும் கல்ராயன் மலைவாழ் பழங்குடி மக்களுக்கு வழங்கப்படுகின்றன.

## மீண்டும் பயணம்!

மீண்டும் 22-6-76-ஆம் நாளன்று மாவட்ட ஆட்சித் தலைவர் சடையக் கவுண்டர் ஜாகீர் பகுதிக்குச் சென்றார். அவரோடு பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் குழு ஒன்றும் சென்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் முதல் தடவை சென்றதற்குப் பிறகு, பழங்குடிகளுக்கான துணைத் திட்டத்தின் கீழ் அப்பகுதியை மேம்படுத்துவதற்கான திட்ட அறிக்கை ஒன்றைத் தயாரித்து அரசுக்கு அனுப்பி வைத்தார். இரண்டாம் தடவை சென்று வந்த பிறகு, 1976-'77-ல் நிறைவேற்றப்படுவதற்காகக் குறிப்பிட்ட சில திட்டங்களை எடுத்துக் கூறி, மீண்டும் செயற்குறிப்புகளை அரசுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பி வைத்தார்.

## பாத யாத்திரை பயன் தந்தது!

மாவட்ட ஆட்சித் தலைவரும் ஏனைய அதிகாரிகளும் அந்த மலைப் பகுதிகளுக்கு 9-8-'76-ஆம் நாளன்று பாதயாத்திரை சென்றனர்.

ஆரம்பத்தில் இம்மலைவாழ் மக்கள் அதிகாரிகளுடன் முகம் கொடுத்துப் பேசவில்லை. அவர்களைப் பேசச் செய்வதே பெரும் பாடாக இருந்தது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 14-4-'76, 22-6-'76 ஆகிய நாட்களில் சென்றபோதுகூட அவர்களுடைய கஷ்டங்கள் பற்றி அவர்கள் வாய் திறக்கவில்லை. நாட்டான்களும், மூப்பன்களும் பக்கத்தில் இருந்ததால் அவர்கள் பேசத் தயங்கினார்கள். 9-8-'76 அன்று முதல் 23-8-'76 வரை மேற்கொள்ளப்பட்ட பாத யாத்திரையின்போது வேளாண்மைத் துறை, மக்கள் நல்வாழ்வுத்துறை, கூட்டுறவுத் துறை, காவல் துறை, வனத் துறை, வருவாய்த் துறை ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகள் கல்ராயன் மலைவாழ் பழங்குடி மக்களுக்குக் கொத்தடிமை முறை (ஒழிப்புச்) சட்டம், தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டம், 20 அம்சத் திட்டம் ஆகியவற்றின் பயன்களை எல்லாம் விளக்கியதுடன், இலவச மருத்துவச் சிகிச்சை அளித்தல், மண்ணெண்ணெய், சர்க்கரை, உப்பு, வெல்லம், கட்டுப்படுத்தப்பட்ட விலையுள்ள துணிகள், காய்கறி விதைகள் ஆகியவைகளை வழங்குதல் போன்ற பல்வேறு உதவிகளைச் செய்ததாலும், அப்பகுதியின் முன்னேற்றம் பற்றி விளக்கிக் கூறி அவர்களது நம்பிக்கையைப் பெற்றதாலும், மெல்ல மெல்ல அவர்கள், தங்களது துன்பங்களையும் துயரங்களையும் கூற ஆரம்பித்தார்கள். மின்சார ஜெனரேட்டர் உதவியால் அவர்களுக்குப் படக்காட்சி ஏற்பாடு செய்யப் பெற்றதும் குறிப்பிடத்தக்கதாகும். செய்தித்துறையைச் சேர்ந்த தகவல் படங்கள் காட்டப்பட்டன. இதற்குப் பெரும் கூட்டம் சேர்ந்ததால், அம்மக்களைக் கவர்வது அதிகாரிகளுக்கு எளிதாக இருந்தது. அவர்களுக்கு அளித்த இலவச மருத்துவ வசதி, பழங்குடி மக்களிடையே பிரபலம் ஆயிற்று. 14 நாட்களில் 1,766 பேர் மருத்துவ வசதி பெற்றூர்கள். ரூபாய் 3,635 மதிப்புள்ள மண்ணெண்ணெய், சர்க்கரை, உப்பு மலிவு விலைத் துணிகள் ஆகியவை பெற்றனர். பாத யாத்திரை சென்ற அதிகாரிகள் 67 கிராமங்களுக்குச் சென்று 7,000 பழங்குடி மக்களைச் சந்தித்தனர். மலைவாழ் மக்களை அதிகாரிகள் சந்தித்து, 'அவர்களுடைய கஷ்டங்களை அரசு தீர்த்திடும் என்றும், ஜாகீர்தார்களின் ஆட்கள் மற்றும் கடன் கொடுப்போர் ஆகியோரின் துன்புறுத்தலுக்கு இனிமேல் அவர்கள் ஆளாகத் தேவையில்லை என்றும் உறுதியளித்த போது, அம்மக்கள் தங்கள் கஷ்டங்கள் விலகுவதை உணர்ந்தார்கள்.

அவர்களுக்கு ஜாகீர்தார்கள் மீது அவ்வளவாக வெறுப்பு இல்லை. ஆனுல் நாட்டான், மூப்பன், கடனளிப்போர், காட்டு ஒப்பந்தக்காரர்கள் ஆகியோர் மீதுதான் அவர்கள் அதிக வெறுப்புக் கொண்டிருந்தார்கள். ஜாகீர்தார்களின் சார்பில் அவர்கள் இம்மலை வாழ் மக்களைக் கொடுமைப்படுத்தினூர்கள். ஆனுல் மலைவாழ் மக்களிடம் இருந்து பெறும் தொகையில் குறைந்த அளவே ஜாகீர்தார்களுக்குக் கிடைத்து வந்துள்ளது. மீதியை ஜாகீர்தாரர்களின் ஏஜெண்டுகளே எடுத்துக்கொண்டுள்ளனர். இவ்வகையில் ஜாகீர்தாரர்களும் ஏமாந்துள்ளனர்.

9-8-'76 அன்று தொடங்கிய பாத யாத்திரையின்போது 2 ஜாகீர்தாரர்களும், மூன்றுவது ஜாகீர்தாரரான குறும்பக் கவுண்டனின் 2 மகன்களும் கல்ராயன் மலையின் குறும்பக் கவுண்டன் ஜாகீரில் உள்ள பாச்சேரி என்ற இடத்தில் தென்னூர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்துத் தாங்கள் நீதிமன்றத்தில் தொடர்ந்துள்ள வழக்குகளை வாபஸ் வாங்கிக் கொள்வதாகக் கூறினூர்கள்.

## வழக்கு முடிந்தது! வாழ்வு மலர வழி ஏற்பட்டது!

இதற்கிடையில் 13-8-'76-ஆம் நாளன்று கடலூர், துணை நீதி மன்றத்தில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஜாகீர்தார்கள் மூவரும் கடலூர் துணை நீதி மன்றத்தில்

தங்கள் வழக்குகளை வாபஸ் வாங்கினார்கள்.

ஜாகீர்தாரர்களால் வழக்குகள் வாபஸ் வாங்கப்பட்ட செய்தி கேட்டு மலைவாழ் மக்கள் மகிழ்ச்சியுற்றனர். அரசாங்கத்தை எதிர்த்து வழக்காடுவதாகக் கூறி நாட்டான்களும் மூப்பன்களும் அம்மக்களிடம் பணம் பறித்து வந்தார்கள். வழக்கு நடத்துவதற்கான செலவுத் தொகைக்காக இனிமேல் ஜாகீர்தாரர்களுக்குத் தாங்கள் ஏதும் கொடுக்க வேண்டியதில்லை என்பதையும், அரசாங்கமே அவர்கள் சார்பில் தலையிட்டது என்பதையும், அறிந்து அவர்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

அம்மலைகளில் முதன்முறையாக 15-8-'76 சுதந்திர தினத்தன்று தேசியக்கொடி ஏற்றப்பட்டது. மலைவாழ் மக்கள் அன்றுதான் முதன்முறையாக தேசியக் கொடியைப் பார்த்தார்கள். தேசியக் கொடியின் முக்கியத்துவம் பற்றி அவர்களுக்கு விளக்கிக் கூறப்பட்டது.

ஏற்கெனவே குறிப்பிட்டவாறு இப்பகுதியில் சந்தன மரம், மாசிக்காய், யூகலிப்டஸ், மூங்கில் போன்ற காடுபடு பொருள்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. விலை மதிப்புள்ள மரங்கள், கடந்த ஆண்டுகளில், இடைத்தரகர்களாலும் ஒப்பந்தக்காரர்களாலும் ஏராளமாக வெட்டி எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. வழக்கு வாபஸ் பெறப்பட்டதும், காடுபடு பொருட்களின் போக்குவரத்தை நிறுத்துமாறு அதிகாரிகளுக்குக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன. அவற்றின் போக்குவரத்திற்கு அனுமதிச் சீட்டுகள் வழங்க வேண்டாம் என்றும், அப்பொருட்கள் எடுத்துச் செல்லப்படுவதைத் தடுக்குமாறும் வனத்துறைக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது. இந்த இடைத்தரகர்களுக்கு மூப்பன்கள், நாட்டான்கள், கவுண்டன்கள், கங்காணிகள் போன்ற பல பெயர்கள் உள்ளன. பழங்குடி மக்களைச் சுரண்டி வனவளத்தைக் கொள்ளையடிப்பதற்கு இவர்களே மூலகாரணம். இச்செயல்களை இவர்கள் நிறுத்த வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் இவர்களுக்குக் கடுமையாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

### அரசின் திட்டம்!

வருவாய்த்துறை, காவல் துறை, வேளாண்மைத் துறை, மருத்துவத் துறை, நெடுஞ்சாலைத் துறைகளைச் சேர்ந்த சிறப்புப் பணியாளர்களை நியமித்து 17-8-'76-ல் அரசு ஆணை ஒன்றைப் பிறப்பித்துள்ளது. நிர்வாகத்தின் பலன்களும் வளர்ச்சித் திட்டப் பலன்களும் இந்தப் பழங்குடி மக்களைச் சேரவும், 20 அம்சப் பொருளாதாரத் திட்டம், கொத்தடிமை முறை (ஒழிப்புச்) சட்டம் வேளாண்மைத் தொழிலாளர் தொடர்பான சட்டங்கள் இவற்றின் பலன்களை அவர்கள் அடையவும், அரசு, சிறப்புப் பணியாளர்கள் அடங்கிய ஒரு நிர்வாக அமைப்பை உருவாக்கியுள்ளது. இவ்வமைப்பு செயற் கேந்திரமாக விளங்கும்.



தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பத்மநாபன் அவர்கள் 9-8-1976 அன்று கல்ராயன் மலைவாழ் பழங்குடி மக்களில் பலருக்கு முதியோர் ஓய்வூதியம் வழங்கினார்.

துணை ஆட்சித் தலைவரின் (சிறப்பு) தலைமையில் உள்ள இந்த நிர்வாக அமைப்பிலே தொடக்கத்தில் வருவாய், காவல், வேளாண்மை, மருத்துவம், பொறியியல் ஆகிய துறைகளைச் சேர்ந்த பணியாளர்கள் இருப்பார்கள். தேவைக்கேற்ப நாளடைவில் இந்த அமைப்பில் பணியாளர்களின் எண்ணிக்கை உயர்த்தப்படும்.

1976-'77, 1977-'78-ஆம் ஆண்டுகளில் இப்பகுதியை மேம்படுத்த, பழங்குடி மக்கள் துணைத் திட்டத்தின் கீழ் 32 இலட்சம் ரூபாய் வேண்டுமெனக் கருதப்பட்டுள்ளது. நடப்பாண்டுக்காக பல்வேறு துறைகளிடமிருந்தும் செயற்குறிப்புகள் வந்துள்ளன. ஆணைகள் பிறப்பிக்கப்படுவதற்காகத் தற்போது அவை பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. பழங்குடி மக்கள் துணைத் திட்டத்தின்கீழ், சாலைகள், பள்ளிகள், பெண்களுக்கெனத் தையற்கூடங்கள், குழந்தைகளுக்கெனச் சிறுவர் பள்ளிகள், பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், செய்முறை விளக்கப் பாத்திகள், உழவர்களுக்கெனப் பயிற்சித் திட்டங்கள், உழவுக் கருவிகளையும் எரு முதலான இடுபொருள்களையும் இலவசமாக வழங்குதல், பழங்குடி மக்களுக்கு தேனீ வளர்க்கும் பெட்டிகள் வழங்குதல், மண்வளப் . பாதுகாப்புப் பணிகள், தடுப்பு அணைகள் கட்டுதல், கிராம மருந்தகங்களைத் தொடங்குதல், இம் மருந்தகங்களை நாளடைவில் ஆரம்பச் சுகாதார நிலையங்களாக மாற்றுதல், புறக்கடைக் கோழிப் பண்ணைகள், ஆடுகள் இவற்றை வழங்கிட பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. பயிர் செய்வதை இடத்திற்கு இடம் மாற்றும் பழக்கத்தைத் தடுத்து நிறுத்தவும், நிலைத்த சாகுபடி வசதிகள் உள்ள இடங்களில் குடும்பங்களைக் குடியமர்த்தவும், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### ஒளிமயமான எதிர்காலம் உருவாகியது!

இப்பணிகள் எல்லாம் இம்மலைப் பகுதியில் வாழும் பழங்குடி மக்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுக்கும். இப்பகுதியில் வளர்ச்சியும், வளமும் பெருக்கச் சிறப்புப் பணியாளர்களை நியமித்திட அரசு மேற் கொண்டுள்ள நடவடிக்கைகள் இப்பகுதியின் மேம்பாட்டிற்கான மிகப் பெரிய முன்னேற்றப் பணியாகும். இவ்வாறு கல்ராயன்மலையில் வாழும் பழங்குடி மக்களுக்கு இன்ப வாழ்வு கிடைத்திட எல்லாவிதத்திலும் தமிழ்நாடு அரசு முயன்று வருகிறது.

# உழவர் பெருமக்களுக்கு உதவும் செய்திகள்

### வெங்காயமும் கந்தகமும்:

மண்ணில் கந்தகம் கலந்திருப்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் கரிசல் மண்ணில் கந்தகம் அதிக அளவில் உள்ளது. மண்ணிலுள்ள 'பாஸ்பாரிக்' அமிலம், தாவரக் கரிமப் பொருள் ஆகியவையோடு கந்தகத்திற்கு ஈடுபாடு உள்ளது. வெங்காயம் கந்தகச் சத்தை அதிகமாக உட்கிரகிக்கிறது. எக்டருக்கு 20 கிலோ கந்தகம் இடுவதால் வெங்காயத்தின் மகசூல் அதிகரிக்கிறது எனத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

### . வேளாண்மை ஆலைக்கழிவுகளால் பயன் உண்டா?

வேளாண்மையிலும், தொழிற்சாலைகளிலும் பல கழிவுப் பொருள்கள் விரயமாகின்றன. குறிப்பாக நிலக்கடலைத் தோல், கரும்புச்சக்கை, 'மக்னசைட்' கழிவு, உருக்காலைக் கழிவுகள் ஆகியவை ஆகும். இவைகள் வேளாண்மைக்கு உபயோகப்படுமா என ஆராய்ந்ததில் கரும்புச் சக்கை விவசாயத்திற்குப் பயன்படும் எனக் கண்டுபிடித்துள்ளார்கள். கரும்புச் சக்கையைக் கரிசல் மண், வண்டல்மண், செம்மண் ஆகியவற்றிற்கு இடுவதால் பூமியில் நீர் தாங்கும் தன்மையும், நீர் கடத்தும் தன்மையும் அதிகரிக்கிறது.

### . யூரியாவைப் பூச்சி மருந்துகளுடன் கலக்கலாமா?

யூரியாவை இலை வழியாகப் பயிர்களுக்கு அளிப்பது உங்களுக்குத் தெரிந்ததே. பூச்சி, பூஞ்சாள மருந்துகளுடன் கலந்து தெளித்தால், செலவு குறையும். ஆதலால் எந்தப் பூச்சி மருந்துடன் யூரியாவைக் கலந்து தெளித்தால் தழைச்சத்துக் குறையாமல் பயிருக்குக் கிடைக்கும் என ஆராய்ந்ததில், 'எண்டோசல்பான்', 'கந்தகம்' 'காப்பர் ஆக்ஸி குளோரைடு' ஆகிய மருந்துகளுடன் யூரியாவைக் கலந்தால் இரசாயன மாற்றம் ஏதும் இல்லை. 'என்டிரின்' 'பி. எச். சி.', 'டிடிடீ', 'டாக்ஸாபீன்' மருந்துகளுடன் யூரியாவைக் கலந்தால் இரசாயன மாற்றம் ஏற்பட்டுப் பயிர்களுக்கு யூரியா மூலம் தழைச்சத்துக் கிடைப்பதில்லை எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

### 4. பருத்தி நூற்புழுவைக் கட்டுப்படுத்த வழிமுறை:

பருத்தியை நூற்புழுக்கள் தாக்குகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த நடத்திய ஆராய்ச்சியில் 'ஃபென்சல்ஃபோதியான்', 'கார்போஃயுரான்', 'போரேட்' குறுணைகள் அளிப்பதும், 'கார்ப்போஃயுரான்' (8 சதம் ஊக்கச் சத்து) கொண்டு விதைகளைக் கலப்பதும் நூற்புழுக்கள் தாக்குதலை வெகுவாகக் குறைக்கின்றன எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

### 5. பருத்திப் பயிருக்கு அசட்டோபாக்டர்:

பருத்தி விதைகளுடன் 'அசட்டோபாக்டர்' நுண்ணுயிர்க் கிருமிகள் கலந்து விதைப்பதால், இலாபமா எனத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தினரால் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு. தழைச்சத்தைப் பல்வேறு அளவுகளில் இட்டு 'அசட்டோபாக்டர்' உபயோகித்து நடத்திய சோதனையில், 'அசட்டோபாக்டர்' தழைச்சத்துடன் கூட்டாகச் செயல்படும்போது குறைந்த செலவில் அதிக இலாபம் அடையலாம் எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. தழைச்சத்தில் 75 சதத்தை நிலத்தில் இட்டு, விதையை அசட்டோபாக்டரில் நேர்த்தி செய்தால் எக்டருக்கு 1,336 கிலோ பருத்தி மகசூல் கிடைக்கிறது. இவ்வாறு, அசட்டோபாக்டர் கலந்து பருத்தி சாகுபடி செய்வதால் எக்டருக்கு 25 சதத் தழைச்சத்து மிச்சமாகிறது. குறைந்த தழைச்சத்து இட்டு, அதிக இலாபம் அடையலாம்.

### 6. மானாவாரிக்கேற்ற ராகி இரகம்:

தர்மபுரி மாவட்டத்தின் மானாவாரிப்பகுதிக்குப்-பொருத்தமான ராகி இனத்தைத் தேர்வு செய்ய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தினரால் இனத்தைத் தேர்வு செய்யத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தினரால் இம்மாவட்டத்தில் உள்ள காவேரிப்பட்டினம் ஆராய்ச்சி நிலையத்தில் .பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. 13 இரகங்களைக் கொண்டு மானாவாரியில் நடைபெற்ற வகைத் தேர்வில், ''சாரதா'' இரகம் மிக அதிகமான விளைச்சலாக எக்டருக்கு 1,065 கிலோ தருவது அறியப்பட்டது. இம்மகசூல், தரமான 'கோ. 10' ரகத்தைவிட 14 சதம் கூடுதல் விளைச்சல் ஆகும்.

சாரதா இரகத்தின் வயது 110 நாட்களாகும். இதற்குத் தேவையான விதை அளவு-எக்டருக்கு, வரிசையாக விதைப்பதானல் 12 கிலோவும், கைவிதைப்பிற்கு 15 கிலோவும் ஆகும். இதனுடன்



வகைகளை விதைக்கலாம். கை விதைப்பில் 8 அடிக்கு ஒரு வரிசையாகக் கலப்புப் பயிர் விதைக்கலாம். ராகியைத் தனிப்பயிராக விதைக்கும்போது, பயிருக்குப் பயிர் 15 செ. மீ. இடைவெளி விட்டு விதைப்பது அவசியம். 'சாரதா' ராகி இனத்தை மானாவாரியில், நடப்புப் பருவத்தில் உழவர்கள் பயிரிட்டுப் பலன் அடையுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

### 7. குறைந்த உரத்தில் நிறைந்த நிலக்கடலை மகசூல்!

ஆழியாறு வேளாண்மை ஆராய்ச்சிப் பண்ணையில், நிலக்கடலைக்குத் தேவையான உரங்களின் அளவுகளும், 'போராக்ஸ்' சுண்ணாம்புச் சத்துக்களின் பயனையும் கண்டறிய ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து உரங்களை அதிக அளவில் அளிப்பதினால் நிலக்கடலையின் மகசூலில் எந்த வகையிலும் வேறுபாடு இல்லை என்றும் 'போராக்ஸ்' மற்றும் சுண்ணாம்புச் சத்துக்களின் சேர்க்கையினால் மகசூலில் எவ்விதப் பயனும் இல்லை என்றும், கடந்த நான்கு ஆண்டு ஆராய்ச்சி முடிவுகளில் இருந்து அறியப்பட்டது.

எனவே, பரம்பிக்குளம் ஆழியாறு திட்டப்பகுதியில் நிலக்கடலைக்கு எக்டருக்கு 15:30:45 கிலோ என்ற விகிதத்தில் முறையே தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து உரங்களை உபயோகிப்பது போதுமானது.

### 8. குறைந்த செலவில் காகிதம் தயாரிக்கப் புதிய அடிப்படைப் பொருள்!

காகிதத் தயாரிப்பிற்கு உகந்த செல்லுலோஸ் எந்தச் செடிகளில் இருக்கின்றது என்பதை அறியத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தினரால் பல பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. காகிதத் தயாரிப்பிற்குப் பல செடி வகைகள், புல்வகைகள், தானியப்பயிர்களின் தட்டு வகைகள், மற்றும் சூரிய காந்தி புளிச்சை, பருத்தி மார்கள் ஆகியவற்றின் செல்லுலோசைப் பயன்படுத்துவது பற்றிய ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

கம்புநேப்பியர் புல், 'எச். பி. 21' என்ற ரகம் காகிதத் தயாரிப்பிற்கு ஏற்றதெனவும், யூக்கலிப்டஸ், மூங்கில் போன்றவையுடன் இதைக் காகிதத் தயாரிப்பிற்குப் பயன்படுத்தலாம் என்றும் அறியப்பட்டது.



### 9. பயறுகள் வண்டுகளால் தாக்காமல் இருக்க எளிய காப்பு முறை :

சாதாரணமாக வீட்டில் வைத்திருக்கும் உளுந்து, பாசிப்பயறு, மொச்சை போன்ற விதைகளைப் பலவிதப் பூச்சிகள் தாக்குகின்றன. முக்கியமாக .ஒருவகை வண்டு, அவைகளை மிகவும் சேதப்படுத்தி முடிவில் மாவுபோல் ஆக்கிவிடும். இவைகளை நாம் உண்பதற்காக உபயோகப்படுத்துவதால் பூச்சி கொல்லி மருந்தைக் கலக்கிவைக்க இயலாது. ஆகவே, வீட்டில் உபயோகப்படுத்தும் பயறு வகைகளை வண்டுகள் தாக்காமல் இருக்க, பழக்கத்தில் இருக்கும் சிலவகை எண்ணெய்களைக் கலக்கி வைத்து ஆய்வு நடத்தப்பட்டது. இதன் முடிவுகளின்படி பயறு வகைகளை வேப்பெண்ணெய், கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் ஆகியவைகளில் ஏதாவது ஒன்றைக் கலந்து வைத்திருந்தால், நீண்ட நாட்களுக்கு வண்டுகள் தாக்காமல் காக்க முடியும் எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. .ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் எண்ணெய் கலந்தால் போதுமானது. எண்ணெய் கலந்த விதைகள் பூச்சிகளுக்கு வழுக்குவதால், அவற்றின் மேல் முட்டைகள் இட முடியவில்லை. வண்டு அரித்துச் சேதம் விளைவிக்க முடியவில்லை. இந்த எளிய முறையில் பயறுகளைப் பூச்சிகளிடமிருந்து பாதுகாக்கலாம்.

### 10. பருத்தியில் மகசூலைப் பெருக்கப் புதியதோர் வழி !

பருத்தியில், குறைந்த செலவில், அதிக மகசூல் பெறுவதற்கான வழிமுறைகளைக் கண்டுபிடிக்கத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் பல்வகைப்பட்ட சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பருத்தி விதைகளை 'சக்சினிக்' அமிலத்தில் ( SUCCINIC ACID ) ஊற வைத்து விதைப்பதனால் பருத்தி மகசூலைப் பெருக்க முடியும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 0.1. சதம் (1 கிராம் 1 லிட்டர் தண்ணீர்) திறனுள்ள 'சக்சினிக்' அமிலக்கரைசலைத் தயார் செய்து அதில் பருத்தி விதைகளை 6 மணி நேரம் ஊறவைத்த பிறகு விதைகளை விதைக்க வேண்டும். இவ்வாறு ஊற வைக்கப்பட்டு விதைத்த நிலத்தில், எக்டருக்கு 1.541 கிலோ பருத்தி மகசூல் கிடைத்தது. இம்முறையைப் பின்பற்றாமல், நடப்பில் உள்ள முறைப்படி விதைத்ததில் எக்டருக்கு 1,321 கிலோ மட்டுமே கிடைத்தது. இந்த 'சக்சினிக்' அமிலத்தின் விலை மிகவும் குறைவாகும். 100 கிராம் 'சக்சினிக் (அமிலம் சுமார் ரூ. 3/- ஆகும். உழவர் பெருமக்கள் 'சக்சினிக்' அமிலத்தில் .பருத்தி விதைகளை ஊற வைப்பதன் மூலம் சுமார் 17 சதம் அதிகமான மகசூலை அடையலாம்.

நன்றி : தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக்கழகம்,
கோவை-3.






 பதிவு எண். M. 8676



வாழ்வு மலர
வளம் பெருக
20 அம்சத்திட்டம்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை



# அரசு — மிகவுயர்ந்த தரமானது

## போர்ட்லேண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், தீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட். குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை



யால், கடுமையான தரக்கட்டுப்பாடு களைக் கையாண்டு உற்பத்தி செய்யப் படுகிறது.

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

**அரசு** — வலிவும் வனப்பும் வாய்ந்தது



# தமிழரசு

மலர்: 7 | 16-9-1976 | இதழ்: 6


## இந்த இதழில்


பக்க எண்

அமரகவிக்கு ஆளுநர் சூட்டிய புகழ்மாலை 2
"என்றென்றைக்கும் போற்றவேண்டும்" —ராஜாஜி 3
பாட்டுக்கொரு புலவன் பாரதி! —கவிமணி 4
பாரதி நினைவு —நாமக்கல் கவிஞர் 5
அணையா விளக்கு —பாரதிதாசன் 5
தெய்வத் தமிழ் நாட்டினிலே! —கல்கி 6
உலக மகாகவி —வ.ரா. 6
நெஞ்சினிலே நீந்தும் நினைவு! —செளந்தரா கைலாசம் 7
தீர்க்க ஞானி —கண்ணதாசன் 8
பாரதியார் பெருமை —கல்கி 9
முத்தான முத்தல்லவோ! .. .. 11
பாரதியைத் தேடினேன் —பெ. தூரன் 14
பாரதி வாழ்க்கை வரலாறு .. .. 17
வருங்காலம் —(பாரதியார் எழுதிய கட்டுரை) 19
மகாகவியும் மகாத்மாவும் —சுத்தானந்த பாரதியார் 21
படமும் செய்தியும் .. .. .. 24
வரவே இல்லை —கி. வா. ஜகந்நாதன் 27
அமர கவி பாரதியார்—சகுந்தலா பாரதி 33
நான் கண்ட பாரதியார் —யதுகிரி அம்மாள் 37
பாரதி கூறிய ஒற்றுமையும் ஒருமைப்பாடும்! 41
உலக கவி —எஸ். டி. சுந்தரம் 43
பாரதியார் தத்துவ ஞானம் —ப. ஜீவானந்தம் 45
மாமனும் மருகனும் —வ. உ. சி. சுப்பிரமணியம் 47




## அடுத்த இதழில்

பாரதியார் மொழிபெயர்த்த தாகூர் சிறுகதையும், பாரதியாருடன் வாழ்ந்து, பாஞ்சாலி சபதத்தை அச்சுக் கோத்த அச்சகத் தொழிலாளி திரு வைத்தியநாத ஸ்வாமிப் பிள்ளை அவர்கள், பாரதியார் பற்றி அளித்த பேட்டிக் கட்டுரையும் 1—10—1976 தேதிய இதழில் இடம் பெறுகின்றன.

குறிப்பு: அட்டைப்படத்தில் காணப்படும் வீடு, பாரதியார் பிறந்துவளர்ந்த எட்டையபுரம் வீடாகும்.



எட்டையபுரத்தில் உள்ள மகாகவி பாரதியாரின் இல்லத்தையும், பாரதியார் நினைவு மண்டபத்தையும் தமிழ்நாடு ஆளுநர் திரு மோஹன்லால் சுகாதியா அவர்கள் 20—8—1976 அன்று, பார்வையிட்டார்.

# அமரகவிக்கு ஆளுநர் சூட்டிய புகழ்மாலை!

தேசிய ஒருமைப்பாடு என்ற தொடர் வழக்கில் வருமுன்பே, இக்கோட்பாடு சுப்ரமணிய பாரதியாரால் தெளிவாகவும், விளக்கமாகவும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

''வெள்ளிப் பனி மலையின் மீதுலாவுவோம்-அடி
மேலைக் கடல் முழுதும் கப்பல் விடுவோம்

''வங்கத்தில் ஓடி வரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்.

''முத்துக்குளிப்பதொரு தென்கடலிலே
மொய்த்து வணிகர் பலநாட்டினர் வந்தே
நத்தி நமக்கினிய பொருள் கொணர்ந்து
நம்மருள் வேண்டுவது மேற்கரையிலே

''காசிநகர்ப் புலவர் பேசும் உரைதான்
காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்

''வானையளப்போம் கடல் மீனையளப்போம்''

இவ்வாறெல்லாம் பாரதியார் அ...
கனவு கண்டார் இந்தியாவைப் பற்றி.

பாரதியார் கண்ட கனவை நனவாக்(கு)... வகையில், சுரண்டலை ஒழித்து, இந்தியர் அ... வரும் இந்நாட்டு மன்னர் என்பதற்கு வ... செய்யும் 'பாரத சமுதாயம்' என்ற இ... சியத்தை நோக்கி நடைபோட்ட நாம் இ... தீவிர முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம்.

(1976-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 15 ஆ... நாள் விடுதலை நாள் விழாவினையொட்டி தமி... நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாடியா அவர்கள் வானொலியில் ஆற்றிய உரையிலிருந்து



# "என்றென்றைக்கும் போற்ற வேண்டும்!"

—ராஜாஜி

இந்நாளில்பலர் பாரதியாரைப் பற்றித் தங்களுடைய சொந்த அனுபவங்களையும், ஞாபகங்களையும் சொல்லுகிறார்கள். அவர்கள் எல்லோரையும் விடப் பாரதியாரை எனக்கு அதிகமாய்த் தெரியும்; அதிக காலமாயும் தெரியும். இதற்குக் காரணம் என்னவென்றால், அவர்கள் எல்லோரையும் விட எனக்கு வயது அதிகம். அவருடைய மாமாவைத் தவிரச் சொல்கிறேன். வயது எனக்கு அதிகமானதினாலேயே சில விஷயங்களில் அனுபவமும் அதிகமாய்த்தானே இருக்க வேணும்? 1906-ம் வருஷத்திலேயே பாரதியாரை எனக்குத் தெரியும். அவரும் நானும் கல்கத்தா காங்கிரஸுக்கும் அடுத்த வருஷம் சூரத் காங்கிரஸுக்கும் போனோம். பாரதியார் தீவிரவாதி. நானும் அப்போது அப்படித்தான். அந்தக் காலத்தில் தீவிர வாதம் என்றால் சாதாரண விஷயம் அல்ல. சூரத் காங்கிரசில் நாற்காலிகள் வீசி எறியப்பட்டன. இந்த அமர்க்களமெல்லாம் நடந்து கொண்டிருந்த போது பாரதியார் தூரத்தில் போய் திரு. ஜி. ஏ. நடேசனுடன் உட்கார்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். அவர் கவிஞராகையால் அப்படிச் செய்தார். கவிகள் சாதாரண மனிதர்களைப் போல் இறங்கி விட்டால், அவர்கள் கவிகளாயிருக்க முடியாது.

பாரதியார் உண்மையான கவி. எத்தனையோ மணமுள்ள மலர்களைச் சிருஷ்டித்துக் கொடுத்திருக்கிறார். தேசத்துக்கு அவசியமான எல்லா விஷயங்களையும் பற்றிப் பாடியிருக்கிறார். அவர் தொடாத விஷயம் இல்லை. ஆனால் சமூக சீர்திருத்தத்துக்காவது அரசியல் கொள்கைகளுக்காவது கவிகளிடம் பிரமாணம் தேட வேண்டிய அவசியமில்லை. அப்படித் தேடினோமானால் சில சமயம் முரண்பட்டதுபோல் தோன்றும். கருத்துக்களைக் கண்டு குழப்பமடைவோம். அவ்வப்போது தேசத்தில் ஆவேசத்தை உண்டாக்கியிருந்த இயக்கங்களைக் குறித்து பாரதியார் பாடியிருக்கிறார். முக்கியமாக, நம் காலத்தில் பாரதியார் பிறந்து பாடியதனால், இந்தத் தமிழ் ஜாதியின் சக்தி அழிந்து விடவில்லை என்று நிச்சயமாகத் தெரிகிறது. அப்பேர்ப்பட்ட கவிஞன் ஞாபகத்தை நாம் என்றென்றைக்கும் போற்ற வேண்டும். அப்படிப் போற்றுவதினால் இன்னும் பல கவிகள் தமிழ் நாட்டில் வருங்காலத்தில் தோன்றக் கூடும்.

—பாரதியார் பெருமை என்னும் நூலிலிருந்து.....

# பாட்டுக்கொரு புலவன் பாரதி!



—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

பாட்டுக் கொரு புலவன் பாரதி, அடா! — அவன்
பாட்டைப் பண்ணோடொருவன் பாடினான், அடா!
கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனே, அடா!— அந்தக்
கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாய், அடா!

சொல்லுக்குச் சொல்லழகும் ஏறுமே, அடா!— கவி
துள்ளும் மறியைப்போலே துள்ளுமே, அடா!
கல்லும் கனிந்துகனி யாகுமே, அடா!— பசுங்
கன்றும்பால் அருந்திடாது கேட்குமே, அடா!

குயிலும் கிளியும்பாட்டில் கூவுமே, அடா!— மயில்
குதித்துக் குதித்துநடம் ஆடுமே, அடா!
வெயிலும் மழையுமதில் தோன்றுமே, அடா!— மலர்
விரிந்து விரிந்துமணம் வீசுமே, அடா!

அலைமேலே அலைவந்து மோதுமே, அடா!— அலை
அழகான முத்தையள்ளிக் கொட்டுமே, அடா!
மலைமேலே மலைவளர்ந் தோங்குமே, அடா!— அதை
வனங்கள் அடர்ந்தடர்ந்து சூழுமே, அடா!

விண்ணி லொளிருமீன்கள் மின்னுமே, அடா!— விண்ணில்
விளங்கும் மதிநிலவு வீசுமே, அடா!
கண்ணுக் கினியசோலை காணுமே, அடா!— அதில்
களித்திள மான்கள்விளை யாடுமே, அடா!

தேனும் தினையும்பாவில் உண்ணலாம், அடா!— மிகத்
தித்திக்கும் முக்கனியும் உண்ணலாம், அடா!
கானக் குழலிசையும் கேட்கலாம், அடா!— ஊடே
களிவண்டு பாடுவதும் கேட்கலாம், அடா!

நாட்டு மொழியுமவன் பாட்டினிசையில்— மிக்க
நல்ல கற்கண்டினிமை சொட்டுமே, அடா!
ஏட்டிலிம் மந்திரந்தான் கண்டவருண்டோ?— ஈதவ்
ஈசன் திருவருளென் றெண்ணுவாய்; அடா!

உள்ளந் தெளியுமொரு பாட்டிலே, அடா!— மிக்க
ஊக்கம் பிறக்குமொரு பாட்டிலே, அடா!— ஊற்றுய்க்
கள்ளின் வெறிகொளுமோர் பாட்டிலே, அடா!
கண்ணீர் சொரிந்திடுமோர் பாட்டிலே, அடா!

பாரி நிலையம் வெளியிட்டுள்ள 'மலரும் மாலையும்' என்னும் நூலிலிருந்து.........

முதகு!

# பாரதி நினைவு

—நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம் பிள்ளை.

சுப்ரமண்ய பாரதியை நினைத்திட் டாலும்
சுதந்திரத்தின் ஆவேசம் சுருக்கென் றேறும்;
இப்ரபஞ்சம் முழுதும்நமக் கினமாய் எண்ணும் ;
'இந்தியன்நான்' என்றிடும்நல் லிறுமாப் புண்டாம் ;
எப்பெரிய காரியமும் எளிதாய்த் தோன்றும்;
எல்லையற்ற உற்சாகம் எழுந்து பொங்கும் !
ஒப்பரிய 'தமிழன்' எனும் உவகை ஊறும்;
உள்ளமெல்லாம் துள்ளியுயெழும் ஊக்க முண்டாம்.

அச்சமெனும் பெரும்பேயை அடித்துப் போக்கும்;
அடிமைமன விலங்குகளை அறுத்துத் தள்ளும்;
துச்சமென வருதுயரம் எதையும் தாங்கிச்
சுதந்திரத்தை விட்டுவிடாத் துணிவு தோன்றும்;
கொச்சைமிகும் பிறநாட்டு மயக்க மெல்லாம்
கூண்டோடு விட்டொழிக்கத் தெளிவு கூட்டும்;
மெச்சிடுநம் தாய்நாட்டின் நாகரீகம்
மேன்மையெல்லாம் பாரதியார் பாட்டால் மேவும்!

தரித்திரத்தின் கொடுமையெல்லாம் சேர்ந்து வாட்டத்
தன்வீட்டில் உணவின்றித் தவித்த நாளும்
சிரித்தமுகம் மாறுமல் செம்மை காத்துத்
தேசத்தின் விடுதலையே சிறப்பா யெண்ணித்
தெருத்தெருவாய்த் தேசிய பஜனை பாடிச்
சென்னையிலும் உணர்ச்சிவரச் செய்த தீரன்
உருத்தெரியா திப்போதும் இங்கே நம்மை
ஊக்குவதும் பாரதியின் உரைகளேயாம்!

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி வெளியிட்டுள்ள 'நாமக்கல் கவிஞர் பாடல்கள்' என்னும் நூலிலிருந்து.....



# அணையா விளக்கு

—பாரதிதாசன்

பைந்த மிழ்த்தேர்ப் பாகன், அவனொரு
செந்தமிழ்த் தேனீ, சிந்துக்குத் தந்தை!
குவிக்கும் கவிதைக் குயில்! இந்நாட்டினைக்
கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு!
நீடு துயில்நீக்கப் பாடி வந்தநிலா!
காடு கமழும் கற்பூரச் சொற்கோ!
கற்பனை ஊற்றும் கதையின் புதையல்
திறம்பட வந்த மறவன்; புதிய
அறம்பாட வந்த அறிஞன்; நாட்டிற்
படரும் சாதிப் படைக்கு மருந்து
மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன்;
அயலார் எதிர்ப்புக் கணையா விளக்கவன்
என்னென்று சொல்வேன் என்னென்று சொல்வேன்!



(பாரிநிலையம் வெளியிட்டுள்ள பாரதிதாசன் கவிதைகள் 2-ம் தொகுதியிலுள்ள, 'புது நெறிகாட்டிய புலவன்' என்னும் கவிதையிலிருந்து)

முதகு

# தெய்வத்தமிழ் நாட்டினிலே...

—கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி



தெய்வத்தமிழ் நாட்டினிலே-வெண்ணிலாவே நாங்கள்
தீரமின்றிப் பேதையராய் வாழ்ந்திருந்தோம்—ஏதும்
செய்வதறி யாதிருந்த போதினிலே-ஒரு
சிங்கநாதம் கேட்டெழுந்தோம்-வெண்ணிலாவே.

இருளடைந்த நாடிதென்று எவரோ சொன்னார்-அந்த
இழிவும் ஒரு பெருமையென்று எண்ணி வாழ்ந்தோம்-நல்ல
அறிவொளியால் இருளகற்ற ஒருவர் வந்தார்-இதை
அமரர் நாடென்றறிந்தோம் வெண்ணிலாவே.

கங்கையெனப் பொங்கி வரும் தண்தமிழினில்-இன்பக்
கவிதைபல புனைந்தளித்தார் வெண்ணிலாவே-வெற்றிச்
சங்கமூதி முரசறைந்து எழுகஎன்றார்-இந்தத்
தரணியில் நமக்குநிகர் இல்லையென்றார்

கவியரசர் பாரதியின் கவிதை இன்பம்-உன்
கதிரொளியில் காண்பதென்ன வெண்ணிலாவே-இந்தப்
புவியில்நீயும் தமிழன்என்னப் பிறந்ததுண்டோ?-அவர்
புதுமைக்கவி அமுதருந்தி மகிழ்ந்ததுண்டோ?



# பாரதி, உலக மகா கவி!

—வ.ரா.

மனித வர்க்கத்துக்கு உய்வு, கலையும் கவிதையுந்தான். பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரிபூரண ஆனந்தம் கவிதைதான். தத்துவத்திலே தர்க்கம் நிறைந்திருக்கலாம். பௌதீக சாஸ்திரத்திலே அறிவு மிதந்து கிடக்கலாம். மதத்திலே பக்தி பூரித்து நிற்கலாம். காதலிலே கனிவும் கீதமும் குழைவும் மண்டிக் கிடக்கலாம். கலையிலே அழகும் ஆனந்தமும் விம்மி விழிக்கலாம். ஆனால் இவைகள் எல்லாவற்றையும் தனக்கு அங்கங்களாகக் கொண்டிருக்கும் கவிதையைக் கடவுள் என்று நான் போற்றுகின்றேன். ஒப்புயர்வில்லாத கவிதையைப் பாடியவர் சுப்பிரமணிய பாரதியார் என்று நான் உரக்கக் கூவுகின்றேன். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து உலகத்துக்குக் காட்சியளிக்கும் வளர்பிறை பாரதியார் என்று சொல்லுகிறேன். வானை நோக்கிக் கைகள் கூப்பித் தொழுது நிற்கும் பக்தர்களுக்கும் உயிரும் உற்சாகமும் அளித்து உரப்படுத்தும் சூரியன் பாரதியார் என்று வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

'அவர் தொடாதது ஒன்றும் இல்லை. தொட்டதை அழகு படுத்தாமல் விட்டதில்லை' என்று டாக்டர் ஜான்சன் கோல்ட்ஸ்மித் என்ற மேதாவி எழுத்தாளரைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். இதையே இன்னும் அதிகமான அழுத்தத்துடன் பாரதியாரைப் பற்றிச் சொல்ல முடியாதா? பாப்பா முதல் பாட்டிவரையில், காதலன் முதல் காதகன் வரையில், குரங்கு முதல் குயில் வரையில், பதிதன் முதல் பக்தன் வரையில், காளி முதல் கவி வரையில், கசடன் முதல் காந்தி வரையில், அன்பன் முதல் அரக்கன் வரையில், வம்பன் முதல் கம்பன் வரையில் பாரதியார் யாரை, எதைத் தொட்டு அழகு செய்யவில்லை?

பாரதியாரின் கவிதையிலே நகைச்சுவை வேண்டுமா? இருக்கிறது. சோகம் வேண்டுமா? உண்டு. அற்புதம் வேண்டுமா? அபரிமிதமாக உண்டு.

பாரதியாரை நினைத்தால் எனக்குப் பயமாயிருக்கிறது. ஏன்? நேற்றைக்குப் படித்த கவிதையை இன்றைக்குப் படித்தால் புதிது புதிதாக அழகும் பொருளும் சுவையும் கண்ணுக்குத் தென்படுகின்றன. நாம் எவ்வளவுக்கெவ்வளவு வளர்ந்து கொண்டு போகிறோமோ, அதற்குத் தகுந்தாற்போல, பாரதியாரின் கவிதை என்ற சங்கப் பலகை நீண்டுகொண்டே போய், நமக்குத் தங்குமிடம் கொடுக்கிறது. இது என்ன விசித்திரமான கவிதை!

மேற்சொன்ன மாதிரி, நான் எவ்வளவு காலத்துக்கு முன்பேயோ எழுதினேன். 1943-ஆம் வருஷம் பாரதியார் கொண்டாட்ட வைபவ வாரத்தில் ராஜாஜி சொன்னதாவது: ''மாகாண பாஷைகளில், அதாவது வங்காளி, தெலுங்கு, குஜராத்தி, மராத்தி போன்ற பாஷைகளில், சென்ற முந்நூறு வருஷ காலமாக, பாரதியாரைப் போன்ற கவி தோன்றவில்லை. பாரதியார் தமிழ்நாட்டில் திரு அவதாரம் செய்தது தமிழர்களுக்குக் கிடைத்த பாக்கியமாகும்.''

நிகரில்லாத தமிழ்ப் புலவர் திரு. வி. கல்யாண சுந்தர முதலியார், ''இது பாரதி சகாப்தம். தமிழவர்களின் உள்ளத்திலும் வாழ்க்கையிலும் பாரதி, உன்னதமான புரட்சியை உண்டாக்கிவிட்டார். பாரதியாரின் கவிதை, தாகூரின் கீதாஞ்சலியைக் காட்டிலும் உயர்ந்தது. பாரதி உலக மகாகவி'' என்று சொன்னார்.

# நெஞ்சினிலே நீந்தும் நிலவு

—திருமதி சௌந்தரா கைலாசம்





பாரதீயே! வெள்ளைப் பரங்கியரின் ஆட்சியினை
வேரறவே வீழ்த்தியது நின்கவிதை!—பாரினையே
என்கவிதை பாலிக்கும் என்றுருகிப் பாடினையே!
நின்கவிதைக் கேது நிகர்?

அறிவாலும் பொல்லா அறியாமை யாலும்
பிறப்ப தெளிமையெனும் பெற்றி!—அரசே
தெளிந்த அறிவுடையாய்! நீகவிதை சிந்த
எளிமையதில் ஆளும் இருந்து!

தான்பிழைக்கப் பாட்டெழுதும் தன்மை நினைக்கில்லை;
நான்செழிக்க என்னருமை நாடதுவும் தான்செழிக்கப்
பாடிப் பணிசெய்த பாவலனே! நின்சொல்லை
நாடப் பெருகும் நலம்!

பாரதீயே உன்னினிய பாடல் தெள்ளமுதில்
ஊறித் திளைத்தால் உருவாகும்—ஊறிக்
குவிகின்ற நல்லுணர்வைக் கோலமுறும் இன்பக்
கவியென்றே கொட்டும் கலை!

மூத்த அறிவுடையாய்! முத்துத் தமிழுடையாய்!
காத்து மகிழ்ந்திடநற் காவியங்கள் பாடுவதில்
வல்லானே! உன்னையெவர் வாவென் றழைத்தாரோ?
சொல்லாயோ யாரென்று? சொல்!

தாவிப் பறந்திருப்பாய்; சக்தி அழைத்திருப்பாள்!
நீவிட்டுச் சென்றாலும் நீங்கிடுமோ உன்நினைவு?
கொஞ்சுதமிழ் பாடும் குயிலே!நீ தேயா(து)எம்
நெஞ்சினிலே நீந்தும் நிலவு!



# தீர்க்க ஞானி

— கவிஞர் கண்ணதாசன்

இருண்டதோர் பார தத்தில்
இயற்கையில் எழுந்த வெய்யோன்!
மருண்டதோர் மனித ஜாதி
மருட்சிக்கு மருந்தாய் நின்ருேன்!
அருந்திறன் உள்வாய் தோன்றி
ஆக்கிய கவிதை ஊற்று!
வருஞ்சமு தாய முற்றும்
வகைபடச் சொன்ன மேலோன்!

இந்திய ஒருமைப் பாட்டை
எப்பொழு தோஉ ரைத்தான்!
சந்திர மண்ட லத்தைத்
தான்பார்க்க நினைத்தி ருந்தான்!
யந்திரத் தொழில்நுட் பங்கள்
அனைத்தையும் கனவு கண்டோன்
மந்திரக் கவிஞன் அம்மா!
மாகாளி தந்த சக்தி!

எத்தனை தீர்க்க ஞானம்!
எத்தனை புதிய சொற்கள்!
எத்தனை உணர்ச்சி வேகம்!
எத்தனை பக்தி மோகம்!
இத்தனை கருத்தைச் சொன்ன
இயற்கவி வாழ்ந்த நாளில்
எத்தனை பேரு ணர்ந்தார்?
இப்பொழு துணர்கின் ருரே!

## மகாமகோபாத்தியாய போற்றிய மாகவிஞர்

தமிழ்த்தாத்தா உ. வே. சாமிநாதய்யர் அவர்களுக்கு அரசாங்கம், 'மகாமகோபாத்தியாய' என்னும் விருதை வழங்கியது. அதன் காரணமாக உ. வே. சா. அவர்களுக்கு மாநிலக் கல்லூரி மாணவர்கள் பாராட்டு விழா நடத்தினுர்கள். அந்த விழாவில் பாரதியார் அவர்கள் கலந்து கொண்டார். உ. வே. சா. அவர்களைப் போற்றி மூன்று பாடல்களைப் பாடி அமர்ந்தார் பாரதியார். அதே விழாவில் க்லந்து கொண்ட பாரதியாரின் நண்பர் ஒருவர் பாரதியிடம் வந்து, 'நீங்கள் பாடிய பாடல்களில் சொற் குற்றம், பொருட் குற்றம் உள்ளன' என்று ரகசியமாகக் கூறினுர். அதனைக் கேட்ட பாரதியார் மனம் நொந்து, எவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் விழாக் கூட்டத்தை விட்டுச் சென்று விட்டார்.

விழா முடிவில் நன்றியுரை ஆற்றிய உ. வே. சா. அவர்கள் குறிப்பிட்டார்கள்.

''இன்று இந்த அவையில் என்னைப் புகழ்ந்து முதலில் சில கவிகள் பாடப்பட்டன; சொற்சுவையும் பொருட்சுவையும் உவமை நயமும் மிகுந்த அந்தக் கவிதைகள் எனக்கு மயக்கத்தைத் தந்தன. அந்தக் கவிதைகளை மீண்டுமொரு முறை கேட்க விழைகிறேன்.''

விழாவை நடத்திய நிருவாகிகள் கவிதை பாடிய பாரதியைத் தேடினுர்கள். கிடைக்கவில்லை. அவர் சென்றுவிட்ட செய்தியை உ. வே. சா. அவர்களிடம் தெரிவித்தார்கள். அவர் பெயர் பாரதியார் என்பதை அறிந்து உ. வே. சா. மகிழ்ந்தார். அன்று முதல் பாரதியாரிடம் அவர் அன்பு கொண்டார்.

மறுநாள், விழா நடத்தியவர்கள் பாரதியாரைச் சந்தித்து உ. வே. சா. வின் புகழுரைகளைக் கூறினுர்கள். அப்போதுதான் பாரதியார் உள்ளம் மகிழ்ந்தார். 'மகாமகோபாத்தியாய' விருது பெற்ற உ. வே. சா. அவர்களே தமது கவிதையைப் பாராட்டியிருக்கிருர் என்ருல், நண்பர் உரைத்தது தவறு என்பது பாரதியாருக்கு எளிதில் புரிந்தது!

# பாரதியார் பெருமை

— கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி

கவி ஒன்று கிடைக்குமாஞல், அதற்காகத் தனியே ஒரு விழாக் கொண்டாடலாம் என்று ரஸிக சிகாமணிகள் சொல்லுவார்கள்.

ஒரு கவிஞர் கிடைத்து விட்டால் அதற்காக எத்தனையோ விதமான எவ்வளவோ விழாக்கள் கொண்டாடலாம்.

ஒரு மகா கவி கிடைத்து விட்டாலோ. அந்த நாட்டின் மக்கள் என்ன விதமான கொண்டாட்டம் நடத்துவது என்று தெரியாமல் திண்டாட வேண்டியதாகும்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறை தான் ஒரு நாட்டில் ஒரு மகா கவி தோன்றக் கூடும் என்று இலக்கிய ஆராய்ச்சியாளரும் சரித்திரக்காரரும் திட்டமாய்க் கூறுகிருர்கள்.

குறைந்த பட்சம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறை தான் ஒரு நாட்டில் ஒரு மகா கவி தோன்றக் கூடும் என்று இலக்கிய ஆராய்ச்சியாளரும் சரித்திரக்காரரும் திட்டமாய்க் கூறுகிருர்கள்.

குறைந்த பட்சம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இடையருமல் தொடர்ந்து கலைகளும் இலக்கியமும் வளர்ந்துவந்த நாட்டிலேதான் மூன்று மகா கவிகள் வரிசைக் கிரமத்தில் தோன்றியிருக்க முடியும்.

தமிழ்நாடு அத்தகைய அதிர்ஷ்டம் வாய்ந்த நாடு. இந்த நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்ஞல் திருவள்ளுவர் என்னும் மகா கவி தோன்றினுர். சத்திய வேதம் என்று சொல்லத் தக்க தத்துவ ஒழுக்க நூலை அற்புத சக்தி வாய்ந்த கவிதையில் அமைத்துக் கொடுத்தார்.

வள்ளுவருக்கு ஆருயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு கவிச் சக்கரவர்த்தி கம்பர் அவதரித்தார். உலகத்தில் வேறு எந்த நாட்டு எந்தப் பாஷை காவியத்துக்கும் மேம்பட்டது என்ற சொல்லத் தக்க இராமாயண மகா காவியத்தைத் தமிழில் செய்து அளித்தார்.

கம்பருக்கு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு நம்முடைய காலத்தில், மகா கவி பாரதியா தோன்றினுர். எத்தனையோ நூற்ருண்டுகளி அடிமை யிருளில் கிடந்த நாட்டுக்கும், செத் வர்கள் போலிருந்த நாட்டு மக்களுக்கும் பு துயிர் தந்தார். தேச பக்தியையும் சுதந்தி தாகத்தையும் தமிழ் வெறியையும் தன்னம்பி கையுடன் கவிதை இன்பத்துடன் கலந் மக்களுக்கு ஊட்டினுர்.

பாரதியாரின் பாடல்கள் பலவற்றில் அ ஆச்சரியமான தீர்க்க தரிசன சக்தியை நா காண்கிருேம். அவருடைய தீர்க்க தரிச வாக்குகள் ஒவ்வொன்ருகப் பலித்துவருவதை கண்டு மகிழ்கிருேம்.

பாரதியார் தம் காலத்தில் கண்ட தமி மக்களைப் பற்றி அவ்வளவாக உற்சாக கொண்டு விடவில்லை. தமிழ் மக்களிடத்திலு இந்திய மகா ஜனங்களிடத்திலும் பற்ப குறைகளைக் கண்டு நைந்துருகி நெஞ்சுரு நின்ருர்.

''நெஞ்சு பொறுக்குதிலையே—இந்த
நிலை கெட்ட மனிதரை நினைந்துவிட்டால்''

என்று மனம் பதறிக் கதறினுர்.

''நெஞ்சில் உரமு மின்றி
நேர்மைத் திறமும் இன்றி
வஞ்சனை செய்வாரடி—கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடி!''

என்று ஆத்திரத்தைக் கொட்டினுர்.

ஆயினும் இத்தகைய நிலைமையைக்கண் விட்டு உற்சாகக் குறைவு அடைந்து வி



டாரே? அடியோடு நம்பிக்கை இழந்து விட்டாரோ?

அவருடைய காலத்து 'அறிவாளி'கள் சிலரைப் போல, ''இந்த தேசம் உருப்படவாவது? இந்தியாவுக்கு விடுதலையாவது?'' என்று சொல்லிக் கொண்டு இருந்து விட்டாரோ?'' இல்லவே இல்லை!

அந்த நிலைமையில் அப்படிப்பட்ட மக்களுக்கு மத்தியில் இருந்து கொண்டு, தீர்க்க திருஷ்டியுடன் வருங்காலத்தை நோக்கினார்.

''ஜய பேரிகை கொட்டடா!''

என்று முழங்கினார்.

''ஜய முண்டு பயமில்லை மனமே—இந்த
ஜன்மத்திலே விடுதலை யுண்டு நிலையுண்டு''

ன்று கையடித்துச் சத்தியம் கொடுப்பது பால் உறுதி கூறினார்.

காரிருளுக்கு மத்தியில் பேரொளி பாங்கி வரும் அறிகுறிகளைக் கண்டார். டிமைத் தனத்துக்கு மத்தியில் விடுதலையின் தயப் பிரகாசத்தைக் கண்டு வரவேற்றார்.

இந்தியாவைப் பீடித்திருந்த பீடைகளும் ந்திய மக்களிடம் குடிகொண்டிருந்த இழி ணங்களும் விரைவிலே அகன்று போய் விடும் ன்பதை உள்ளுணர்ச்சியினால் மகா கவி பாரதி ார் நிச்சமாய் அறிந்தார்.

''வலிமையற்ற தோளினாய் போ போ போ
மார்பிலே ஒடுங்கினாய் போ போ போ''

ற பாடலில், அச்சம், மடமை, பலவீனம் தலிய மக்களின் குறைபாடுகளை யெல்லாம் த்து விரட்டுவது போல் சபித்து விரட் ார்.

ாதி நூறு சொல்லுவாய் போ போ போ
ம மொன்றியற்றிலாய் போ போ போ
நூறு சொல்லுவாய்—கா சொன்று
டினால் வணங்குவாய் போ போ போ

று மூட நம்பிக்கையாளரையும் சமூகத் ராகிகளையும் அதட்டி அடித்தார். ன்னர், வருங்காலத்தில் வரப் போகும் மையான பாரத ஜாதியை ஞானக் கண் ண்டு பார்த்து, சக்தி வாய்ந்த சொற்களி அற்புதமான கவிதை செய்து வந ற்றார்.

ளைய பாரதத்தினாய் வா வா வா
ரிலா வலத்தினாய் வா வா வா
யிழந்த நாட்டிலே—நின்றேறும்
ய ஞாயி றொப்பவே வா வா வா
யிழந்த நாட்டிலே—முன்போல
சிறக்க வந்தனை வா வா வா
யு மாண்பு யாவையும்—பார்த்தன் போல்
யினால் விளக்குவாய் வா வா வா

இப்படிப்பட்ட தீர்க்க தரிசனத்துடன் ந்திர பாரதத்தை அகக் கண்ணினால் கண்டு வேற்புக் கூறிய மகாகவிக்கு எத்தனைவிழாக் தான் நடத்தக் கூடாது! தினந்தினம் கொண்டாட்டம் ஊரெங்கும், நாடெங்கும் ந்தி மகிழலாமே?

## மூர்மார்க்கேட்டில் அரங்கேறிய பாரதியார் பாட்டு!

அந்தக் காலத்தில் மூர்மார்க்கெட்டில் இப்போதுள்ளது போலக் கட்டிடங்கள் இல்லை. பெரும்பகுதியும் புழுதிபடிந்த பொட்டலாக இருக்கும். மழைக் காலங்களில் நீரும் சேறும் நிறைந்து கிடக்கும். கோடைக் காலங்களில் குப்பையும் கூளமும் குவிந்து இருக்கும். பாரதியாருடைய சுதந்திரப் பிரசங்கங்கள் அங்கேதான் நடக்கும். ஜனங்கள் பெருந்திரளாகக் கூடுவார்கள். சேறாக இருந்தாலும் புழுதியாக இருந்தாலும் பொருட்படுத்தாமல் உட்கார்ந்து பாட்டையும் பிரசங்கத்தையும் கேட்பார்கள். விடுதலை வேட்கை மிகுந்த அநேக புதுப்புதுப் பாடல்களை பாரதியார் இந்த மூர்மார்க்கெட் பிரசங்கங்களிலே தான் அரங்கேற்றினார்.

பாரதியார் சென்னையை விட்டுப் புதுச்சேரிக்குள் புகுந்துகொள்வதற்குச் சிறிது காலத்திற்கு முன்புதான், ஒருநாள் மூர்மார்க்கெட் பிரசங்கத்தில் ஏராளமான வாலிபர்களுடைய கூட்டத்துக்கு இடையில், ''என்று தணியுமிந்த சுதந்திர தாகம்'' என்ற பாட்டை, முதல் முதலாகப் பாடி வெகு ஆவேசத்துடன் பிரசங்கம் செய்தார்.

அந்நிய ஆட்சி ஒழிய வேண்டுமென்றும், இந்தியாவை இந்தியனே ஆளவேண்டும் என்றும் தெருத்தெருவாகப் பாடிக்கொண்டு, தினம் தினம் மூர்மார்க்கெட்டில் கூட்டம் கூட்டி, வெகு உருக்கமான பிரசங்கங்களைச் செய்து கொண்டிருந்த பாரதியாருடைய பேச்சு, தமிழ்நாடு முழுவதும் பரவ ஆரம்பித்தது. அவர் மூர்மார்க்கெட்டில் பாடிய ''என்று தணியுமிந்த சுதந்திர தாகம்'' என்ற பாட்டும் அன்று அவர் பேசிய பேச்சும் இளைஞர்களுக்கு மிகவும் சுதந்தர ஆவேசத்தை ஊட்டக்கூடியவை.

[நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்பிள்ளை அவர்களின் 'என்கதை' நூலிலிருந்து]

பாரதி வாழ்ந்திருந்த காலத்து மக்களின் இலட்சணத்தைப் பற்றி அவரே நன்றாகப் பாடியிருக்கிறார். தெளிவான வசன நடையிலும் ''மண்ணுலகம்'' என்னும் ஞானரதம் பகுதியில் எழுதியிருக்கிறார்.

ஆகவே, பாரதி வாழ்ந்திருந்த காலத்திலும் அதற்குப் பிற்பாடு சில காலம் வரையிலும் கூடத் தமிழ் மக்களில் பெரும்பாலோர் ''பாரதி யார்?'' என்றும், ''எந்தப் பாரதி?'' என்றும் கேட்டுக் கொண்டிருந்தார்கள். இப்போதெல்லாம் அப்படி யாரும் கேட்பதில்லை. ''நம்முடைய பாரதியார்'' என்று பெருமையுடன் மார் தட்டிக் கொண்டு சொல்கிறோம். ''கவியரசு பாரதியார்'' என்றும் ''மகாகவி பாரதியார்'' என்றும் போற்றிப் புகழ்கிறோம். பாருக்கெல்லாம் அவர் பெருமையை நாம் பறைசாற்றுகிறோம்.

# முத்தான முத்தல்லவோ!

'எழுத்து, முத்து முத்தாக இருக்கிறது' என்று சொல்வதன் மூலம் ஒருவரது கையெழுத்தை நாம் புகழ்ந்து வருகிறோம் அல்லவா? பாரதியாரைப் பொறுத்த அளவில் 'இது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை'.

அவரது எழுத்துக்கள், அவர் அவசரமாகவோ வேகமாகவோ எழுதும் போது கூட முத்துப் போலத்தான் இருக்கும். ஓர் எழுத்து அடுத்த எழுத்துடன் மோதுவதில்லை, ஒவ்வொரு எழுத்தும் தனித் தனியாக அழகாக இடம் பெற்றிருக்கும்! பாரதியார், எழுத்துக்களைச் சிதைக்காமல் மூளியாக்காமலும் எழுதுவார். ஒற்றெழுத்துக்களின் சிரங்களில் உள்ள புள்ளிகளைத் தெளிவாக எழுதுவார்.

பாரதியார், தம் கைப்பட எழுதிய, 'காணி நிலம்,' ' ஜயமுண்டு,' 'விடுதலை, விடுதலை, விடுதலை' என்னும் தலைப்புகள் கொண்ட மூன்று பாடல்களின் கையெழுத்துப் பிரதிகள் புகைப்படங்களாக்கப் பெற்று இங்கே வெளியிடப் பெற்றுள்ளன. இந்தப் பாடல்களின் தலைப்புகளுக்கு அருகில், ராகத்தையும் தாளத்தையும் பாரதியார் குறிப்பிட்டிருப்பதிலிருந்து, அவரது இசை ஆற்றலும் இனிதுற விளங்குகிறது!







## பாரதியார் ஒரு தீவிர சீர்திருத்த வாதி!

பழைய பழக்க வழக்கங்களில் பலவற்றை வேரோடு பெயர்த்து எறிந்துவிட வேண்டும் என்று பாரதி துடிப்பார். திருமதி செல்லம்மா இந்த விஷயத்தில் அடிக்கடி அபிப்பிராய பேதப்படுவார். வீட்டில் சமையலறையில் செல்லம்மா 'மடி' யாக ஆசாரத்துடன் சமையல் செய்து கொண்டிருப்பார். பாரதியார் வெளியிலிருந்து வந்து, கை கால் கழுவி, நேராக உள்ளே போய்ச் சமையல் பாத்திரங்களில் வைத்திருப்பதைத் தொட்டுவிடுவார். "பத்து, தொடவேண்டாம்!" என்று செல்லம்மா ஆட்சேபிப்பார். பாரதி அதைப் பொருட்படுத்தவே மாட்டார். இருவருக்கும் வாக்குவாதம் பலக்கும். முடிவில், இவரது பேச்சே உயர்ந்து நிற்கும்; செல்லம்மா பேசாமல் இருந்து விடுவார்.

யார் சாப்பிட அழைத்தாலும் சரி, பாரதியார் மறுமொழியில்லாமல் ஒப்பிடுவார். ஜாதி, மதம் ஒன்றையும் பார்க்கவே மாட்டார்; வாயில் பாடுவதைப் போலவே நடத்தையிலும் செய்து காட்டுவார். மனத்தில் நினைத்தால் போதும், செயலிலும் காட்டிவிடுவார். எவ்வளவு கஷ்டமானாலும் சளைக்க மாட்டார்; யார் என்ன சொன்னாலும் பொருட்படுத்த மாட்டார்.

—யதுகிரி அம்மாள்



## உலக கவி

—பாரதிதாசன்

பாரதியார் உலககவி!—அகத்தில் அன்பும்
பரந்துயர்ந்த அறிவினிலே ஒளியும் வாய்ந்தோர்!
ஒருருக் கொருநாட்டுக் குரிய தான
ஒட்டைச்சாண் நினைப்புடையர் அல்லர்; மற்றும்
வீரர்அவர்! மக்களிலே மேல்கீழ் என்று
விள்ளுவதைக் கிள்ளிவிட வேண்டும் என்போர்!
சீருயர்ந்த கவிஞரிடம் எதிர்பார்க் கின்ற
செம்மைநலம் எல்லாமும் அவர்பாற் கண்டோம்.

# பாரதியைத் தேடினேன்!

—பெ. தூரன்

நாற்பத்தெட்டு ஆண்டுகள் ஓடி மறைந்துவிட்டன. நினைத்தாலும் ஆச்சரியமாக இருக்கின்றது. 1928-ம் ஆண்டிலே நான் சென்னையில் உள்ள மாநிலக் கல்லூரியில் இண்டர்மீடியட் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். பாரதியாருடைய எழுத்திலே ஒரே ஆர்வம்; பைத்தியம் என்றே சொல்லி விடலாம். அப்படி அவருடைய எழுத்திலே ஆர்வம்.

அந்தக் காலத்திலே பாரதியார் எழுதிய எத்தனையோ கவிதைகள், கதைகள், கட்டுரைகள், அரசியல் குறிப்புகள் எல்லாம் நூல் வடிவத்திலே வராமல் 'சுதேசமித்திரன்' நாளிதழ்களிலே மறைந்து கிடந்தன. அவற்றை எல்லாம் தேடி எடுத்து வெளியிட வேண்டும் என்று எனக்கு ஒரே ஆசை. பாரதியார் எழுத்தும் மறைந்து போவதா? எத்தனையோ பழைய இலக்கியங்கள் மறைந்துவிட்டன. இன்று நம்மிடையே வாழ்ந்த கவிஞனின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட எழுத்தும் மறைய விடலாமா?

இந்த ஆசைக்குத் தூண்டுகோலாக ஒரு சங்கம் அமைந்திருந்தது. தேச பக்தியிலும், இலக்கிய வளர்ச்சியிலும் பெரிதும் நாட்டம் கொண்டிருந்த கல்லூரி மாணவர்கள் ஒன்று சேர்ந்தோம். வன மலர்ச்சங்கம் என்ற சங்கத்தைத் தொடங்கினோம். சென்னை, மதுரை, திருச்சி ஆகிய நகரங்களில் அன்றிருந்த கல்லூரிகளில் இந்தச் சங்கத்தின் உறுப்பினர்கள் பயின்று கொண்டிருந்தார்கள். திருவாளர்கள் சி. சுப்பிரமணியம், ஓ.வி. அளகேசன், ஏ. அளகிரிசாமி, கே. எஸ். பெரியசாமி, கே. எஸ். பழனிசாமி, டாக்டர் எல். கே. முத்துசாமி, ச. து. சு. யோகியார் முதலிய பலர் அந்தச் சங்கத்திலே முக்கிய இடம் பெற்றிருந்தனர்.

நாட்டு விடுதலையிலும், மொழியின் ஆக்கத்திலும் பித்துக்கொண்டவர்கள் என்ற குறிப்புத் தோன்றுமாறு 'பித்தன்' என்ற மாதப் பத்திரிகை ஒன்றைத் தொடங்கி நடத்தினோம். டாக்டர் எல். கே. முத்துசாமி அதன் ஆசிரியர். நான் அதன் வெளியீட்டாளன். உயர்திரு. திரு. வி. க. அவர்கள் தான் அச்சிடுவோர். சாது அச்சுக் கூடத்திலே எங்கள் மாசிகை அச்சிடப்பெற்றது. கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் புதுமுறையிலே பித்தனில் வெளியாயின. ச. து. சு. யோகியார் 'பேயன்' என்ற புனைபெயரில் எழுதினார். நான் 'தூரன்' என்ற புனைபெயரைச் சூட்டிக் கொண்டு எழுதலானேன்.

மறைந்துகிடந்த பாரதியாரின் இலக்கியப் படைப்புகளைப் 'பித்தன்' வாயிலாக வெளியிட வேண்டும் என்று ஆசை கொண்டேன்.

திரு சி. ஆர். சீனிவாசன் அவர்களை எனக்கு முன்பின் தெரியாது. ஒரு நாள் அவர்கள் முன்னால் போய் நின்றேன். ''மறைந்து கிடக்கும் பாரதியாருடைய கவிதை, கட்டுரைகளை எல்லாம் பிரதி செய்துகொள்ள விரும்புகின்றேன். அனுமதி அளிக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டேன். அவர் என்னிடத்திலே என்ன கண்டாரோ எனக்குத் தெரியாது. ''அனுமதி அளிக்கின்றேன். ஆனால் சுதேசமித்திரன் பழைய இதழ்களை அவைகள் வைக்கப்பட்டிருக்கும் அறையை விட்டுமட்டும் வெளியே எடுத்துச் செல்லக்கூடாது. அந்த அறையிலேயே இருந்து வேண்டியவற்றை எழுதிக் கொள்ளலாம்'' என்று அன்போடு கூறினார். திரு சி. ஆர். சீனிவாசன் அவர்களை நான் என்றும் மறக்க முடியாது. அவரை நினைக்கும்போதெல்லாம் ஒரு நன்றி உணர்ச்சியே என் உள்ளத்தில் இன்றும் பொங்கி எழுகின்றது.

1905-ஆம் ஆண்டு முதல் 1921 ஆம் ஆண்டு பாரதியார் மறையும் வரை சுதேசமித்திரன் நாள் இதழ்களிலும், வாரம் மும்முறை இதழ்களிலும் பாரதியார் எழுதியிருக்கின்றார். சில ஆண்டுகளில் அதிகமாகவும், சில ஆண்டுகளில் குறைவாகவும் இருந்தாலும் இந்தக் கால எல்லைக்குள்ளே அவருடைய படைப்புகள் வெளியாகிக் கொண்டே இருந்தன. தொடக்கத்தில் அவர் மிஸ்டர் சி. சுப்பிரமணி பாரதியாராக இருந்தார். பின்னால் 'காளிதாஸன்', 'சக்திதாஸன்' முதலான பல புனைபெயர்களிலே எழுதினார். சுதேசமித்திரன் இதழ்களை ஒவ்வொன்றாகத் துருவிப் பார்த்து பாரதியாரின் இலக்கியங்களை நகல் எடுக்கத் தொடங்கினேன். சுதேசமித்திரன் பழைய தொகுப்புகளில் சிலவற்றை முன்னால் அடுக்கிக்கொண்டேன். அவை மேஜையாக உதவின. தரையில் அமர்ந்து மாதக் கணக்கில் எழுதிக்கொண்டே இருந்தேன். திரு கே. எஸ். பெரியசாமியும், டாக்டர் எல். கே. முத்துசாமியும் பல நாட்கள் வந்து எனக்கு உதவி செய்தார்கள். பழுப்பு நிறம் ஏறி நைந்து கொண்டிருக்கும் பழைய நாள் இதழ்களைத் தொகுத்து வைத்திருக்கும் அறைக்கே அலாதியான ஒரு மணம் உண்டு. அந்த மணம் எங்களுக்கு இனிமையாகவே இருந்தது. தூய்மையான காற்று எளிதில் நுழைந்து வெளிவரமுடியாத அந்த அறையில் பலநாள் இருந்து பிரதி செய்தது என் உடலைப் பாதித்துவிட்டது என்பது வேறு விஷயம்.

'பித்தன்' இதழ்கள் ஆயிரத்திற்குமேல் செலவாயின என்றால் அந்தக் காலத்திலே அது ஓர் அதிசயம்தான். அவற்றிலே பாரதியார், வ. வே. சு. ஐயர் இருவரும் எழுதியவற்றில் மறைந்துகிடந்த கட்டுரைகள் முதலியன மாதந்தோறும் வெளியாயின. அங்கத்தினரின் கவிதை, கதை, கட்டுரைகளும் வெளியாயின.

இண்டர்மீடியட் படிப்பின் இறுதித் தேர்வு நெருங்கிக்கொண்டிருந்தது. கல்லூரிகள் பாடங்களையெல்லாம் முடித்துவிட்டுத் தேர்விற்குப் படிக்க விடுமுறை அளித்திருந்தன. மாணவர்கள் அனைவரும் பாடப் புத்தகங்களிலே மூழ்கியிருந்தனர். நான் பாரதியாருடைய எழுத்துக்களைத் தேடி நகல் எடுப்பதிலே மூழ்கியிருந்தேன்.

தேர்விற்குப் பத்து நாட்களே இருந்தன. அந்தச் சமயத்தில் ஒரு நாள் இரவு எனது நண்பன் கே. எஸ். பெரியசாமி என்னை விக்டோரியா மாணவர் விடுதியில் நிலாமுற்றத்திற்கு வரும்படி அழைத்தான். வெள்ளிக்கதிர்களை உலகத்தின்மீது மயக்கும் பால் நிலவு வானத்திலே மிதந்து கொண்டிருந்தது. நான் 'மலர்ந்தது நெடுநிலா' என்ற கம்பன் கவிதை வரியைச் சொல்லிக் கொண்டே நண்பனை நெருங்கினேன். நிலவின் வீக்கத்தை எண்ணி ஆறெலாம் கங்கையே என்ற நினைவோடு அவனை அணுகினேன்.

''ஏண்டா! தேர்வு எப்பொழுது வருகிறதென்று நினைவிருக்கிறதா? என்று வழக்கத்திற்கு மாறாக சற்றுக் கடுமையாகவே கேட்டான்.

''இன்னும் ஒரு பதினைந்து நாளில் பாரதி வேலை அநேகமாக முடிந்துவிடும்'' என்றேன் நான்.

ஆனால் நண்பன் தனக்கே உரிய அதிகாரத்தோடு என்னவோ சொல்லி என்னை அந்தப் பத்து நாட்களும் சுதேசமித்திரன் அலுவலகம் போகாமல் தடுத்துவிட்டதோடு, அதன் விளைவாக நான் முதல் வகுப்பிலே தேர்ச்சி பெறவும் செய்துவிட்டான். தேர்வில் அளகிரிசாமியும், நானும் தமிழில் ஒரே அம்சம் பெற்று, சென்னை மாநிலத்திலேயே முதலிடம் பெற்றோம்.

தேர்வு முடிந்ததும் பலரும் அவர்கள் சொந்த ஊரை நோக்கித் திரும்பிவிட்டார்கள். நான் பாரதி வேலையை முடித்துவிட்டுத்தான் ஊரை நாடிச் சென்றேன். அப்பொழுது தொடங்கிய இருமல் இரண்டு மூன்று ஆண்டுகள் என்னை விடவில்லை.

ஒவ்வொரு நாளும் சுதேசமித்திரன் இதழ்களிலே மறைந்து கிடந்த பாரதியாரைக் காணக் காண எங்களுக்கு உற்சாகம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லி முடியாது. உல்லாச சபை என்ற ஹாஸ்யக் கட்டுரையைப் பிரதி செய்து வந்தபொழுது அதை எதிர்ப்பட்டவர்களுக்கெல்லாம் படித்துக் காட்டிக் காட்டி இன்புற்றோம். தமிழ் என்ற கட்டுரை பாரதியாரின் கட்டுரைகளில் ஒரு மணி மகுடம். அதில் அவர் எழுதியுள்ளது உங்களுக்கு நினைவிருக்கிறதா? ஒரு பகுதியை இங்கு எடுத்துக்காட்டுகிறேன். ஸ்ரீயதுநாத சர்க்கார் என்ற வங்காள அறிஞர் தாய்மொழியிலே பாடங்களைக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்று 'மாடர்ன் ரெவின்யூ' என்ற பத்திரிகையில் எழுதியிருந்ததை மறுத்து, திருநெல்வேலி ஹிந்து கல்லூரி சரித்திர ஆசிரியர் ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதில் அவர் ஆங்கிலத்தில் கற்றுக்கொடுப்பதே தமக்கு எளிதாக இருக்கிறதென்றும், மாணவர்களுக்கும் அதுவே நன்கு புரிகிறதென்றும் வாதம் செய்திருக்கிறார். அதைப்பற்றி பாரதியார் கூறுவதாவது:

''சொந்த பாஷையை நேரே பேசத் தெரியாதவர்கள் சாஸ்திர பாடங்கள் நடத்தும் விநோதத்தை இந்தத் தேசத்திலே தான் பார்த்தோம். புதுமை! புதுமை!! புதுமை!!!'' மூன்று தடவை புதுமை. மூன்று தடவை ஆச்சரியக் குறிகள்!

## முதன் முதலில் !

1904-ல் பாரதியார் சென்னை வந்து சுதேசமித்திரன் அலுவலகத்திலே பணியாற்றிய சமயம். 'வங்க வாழ்த்துக் கவிகள்' என்ற அவருடைய பாடல் சுதேசமித்திரனில் 15-9-1905-ல் வெளியானது. சுதேசமித்திரனில் பாரதியார் எழுதிய முதற் கவிதை இதுவே எனக் கருதப்படுகிறது.

பாரதியாரின் கவிதை ஒன்று மதுரையிலிருந்து வெளியான 'விவேக பாநு' என்ற மாத இதழில் முன்பே வெளியாகியுள்ளது. 'தனிமை இரக்கம்' என்ற தலைப்புள்ள அக்கவிதை 1904 ஜூலை இதழில் வந்துள்ளது. இதுவே அச்சில் வந்துள்ள பாரதியாரின் முதற் கவிதை. இதை அவர் எட்டையபுரத்தில் இருந்தபோதே பத்திரிகைக்கு அனுப்பியுள்ளார்.

1908-ல் பாரதியார் 'ஸ்வதேச கீதங்கள்' என்ற நூலை வெளியிட்டார். பதினான்கு பாடல்கள் அடங்கிய இதுவே அவருடைய முதல் நூலென்று கொள்ளலாம். அந்நூலை அவர்தம் குருவாகிய நிவேதிதா தேவியாருக்கே சமர்ப்பணம் செய்திருக்கிறார். ''ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு விசுவ ரூபம் காட்டி ஆத்மநிலை விளக்கிய தொப்ப எனக்குப் பாரத தேவியின் ஸம்பூர்ண ரூபத்தைக் காட்டி ஸ்வதேச பக்தியுபதேசம் புரிந்தருளிய குருவின் சரண மலர்களில் இச்சிறு நூல் ஸமர்ப்பிக்கின்றேன்'' என்று அவர் எழுதியுள்ளார்.

''மேலும் இவர் தமக்குத் தாய்மொழி தெரியாதென்ற செய்தியை வங்கப் பத்திரிகைக்கு ஏன் எழுதப் போனார் என்பது எனக்கு அர்த்தமாகவில்லை. ஜப்பானியர், சீனர், நார்வேக்காரர், ஸ்விஸ் ஜாதியார், இத்தாலி தேசத்தார், ஹாலந்துக்காரர் முதலிய உலகத்து ஜாதியாரெல்லாம் நம்மை அறிவிலும், சாஸ்திரங்களிலும் பாஷைத் திறமையிலும் தாழ்வென்று நினைத்து வந்தார்கள். இப்போதுதான் ஹிந்து ஜாதியாராகிய நாம் காட்டு மனிதரில்லை, வாலில்லாத குரங்குகளில்லை. நமக்குப் பாஷைகள் இருக்கின்றன; நமக்குள்ளே சாஸ்திர விற்பன்னர்கள் இருக்கிறார்கள்; கவிகள் இருக்கிறார்கள் என்று நம்மவரிலே சிலர் வெளியுலகத்தார் தெரிந்து கொள்ளும்படி செய்து வருகிறார்கள். இதற்குள்ளே தமிழ் வகுப்பு மற்ற ஹிந்துஸ்தானத்து வகுப்புக்களைக் காட்டிலும் குறைவுபட்டதென்று நம்மிலே சிலர் முரசடிக்கத் தொடங்குவது எனக்கு நகைப்புண்டாக்குகிறது.

என்னுடைய சொந்த அபிப்பிராயத்தைக் கொஞ்சம் சொல்லிவிடுகிறேன்.

உலகத்திலுள்ள ஜாதியார்களிலே ஹிந்து ஜாதி அறிவுத் திறமையில் மேம்பட்டது. இந்த ஹிந்து ஜாதிக்குத் தமிழராகிய நாம் சிகரம்போல் விளங்குகிறோம். எனக்கு நாலைந்து பாஷைகளிலே பழக்கமுண்டு. இவற்றிலே தமிழைப்போல் வலிமையும், திறமையும், உள்ளத் தொடர்பும் உடைய பாஷை வேறொன்றுமேயில்லை.

இந்த நிமிஷம் தமிழ் ஜாதியில் அறிவு, கீர்த்தி வெளியுலகத்திலே பரவாமல் இருப்பதை நான் அறிவேன். போன நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவொளி சற்றே மங்கியிருந்ததையும் நானறிவேன். ஆனால் போன நிமிஷம் போய்த் தொலைந்தது. இந்த நிமிஷம் ஸத்யமில்லை. நாளை வரப்போவது ஸத்யம். மிகவும் விரைவிலே தமிழின் ஒளி உலக முழுவதிலும் பரவாவிட்டால் என் பெயரை மாற்றி அழையுங்கள். அதுவரையில் இங்கு பண்டிதர்களாக இருப்போர் தமக்குத் தமிழ்ச்சொல் நேரே வராவிட்டால் வாயை மூடிக்கொண்டு வெறுமே இருக்க வேண்டும். தமிழைப் பிறர் இழிவாகக் கருதும்படியான வார்த்தைகள் சொல்லாதிருக்க வேண்டும். இவ்வளவுதான் என்னுடைய வேண்டுகோள்.''

இந்தக் கட்டுரை கிடைத்த நாளன்று எங்கள் குதூகலம் அளவு கடந்து பெருகிவிட்டது. நண்பர்களெல்லாரும் சேர்ந்து ஒரு ஆனந்தக் கூத்தே ஆடிவிட்டோம்.

பாரதியைத் தேடியதில் அவருடைய இலக்கியமும், தமிழும் அடைந்த பயனைவிட நான்தான் பெரிதும் பயனடைந்தேன்.

''தம்பி—உள்ளமே உலகம்.

ஏறு! ஏறு! ஏறு! மேலே, மேலே மேலே! நிற்கும் நிலையிலிருந்து கீழே விழாதபடி கயிறுகள் கட்டி வைத்துக்கொண்டு பிழைக்க முயற்சி பண்ணும் பழங்காலத்து மூடர்களைக் கண்டு குடல் குலுங்கச் சிரி.

உனக்குச் சிறகுகள் தோன்றுக. பறந்து போ. பற! பற! மேலே, மேலே, மேலே'' என்று நான் தேடிய பாரதிதானே எனக்கு உணர்ச்சி ஊட்டினார்!

இவ்வாறு நான் தேடி அரிதாகச் சேர்ந்த பாரதியாரின் கவிதை, கதை, கட்டுரைகளைச் சுமார் எழுநூறு பக்கம் கொண்ட ஒரு நூலாக 'பாரதி தமிழ்' என்ற பெயரில் வெளியிட்டேன். நான் செய்த சேவையைப் பாராட்டித் தமிழ் எழுத்தாளர் சங்கம் எனக்கு ஒரு பொற்பதக்கம் அளித்துச் சிறப்பித்தது. நாற்பத்தெட்டு ஆண்டுகளுக்கு முன் நான் இந்தப் பணியை மேற்கொண்டிராவிடில் பாரதியாருடைய இலக்கியப் படைப்பில் மூன்றில் ஒரு பங்குக்குமேல் மறைந்தேபோயிருக்கும் என்பது பலருடைய கருத்தாகும்.

அன்று தமிழ் எழுத்தாளர்களின் சங்கத் தலைவராக விளங்கிய பேராசிரியர் கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள், நான் வெளியிட்ட பாரதி தமிழைத் தம் மேஜையின் மேலேயே பல நாள் வைத்துக் கொண்டு அவரை நாடி வருபவர்களிடத்திலெல்லாம் அதைப் புகழ்ந்து பேசிக் கொண்டிருந்ததை நான் கேள்வியுற்றுப் பெரிதும் பூரிப்படைந்தேன்.

பாரதியின் இலக்கிய முதிர்ச்சியை ஆராய்பவர்களுக்கு உதவியாக இருக்கும் வகையில் பல கவிதை, கட்டுரை, கதைகள் வெளியான தேதியை 'பாரதி தமிழில்' குறித்துள்ளேன். ஆனால் அந்த நூல் மீண்டும் அச்சேறுவதற்கு வகையில்லாமல் மறைந்துவிடும் நிலையில் உள்ளது.

# பாரதியின் சாதனை!

—பேராசிரியர் அ. சீனிவாசராகவன்

தமிழ் இலக்கிய வரலாற்றில் இக்காலத்தை 'பாரதி சகாப்தம்' என்று குறிப்பிடலாம். இலக்கியத் துறைகள் பலவற்றில், பாரதி புதிய பாதைகள் வகுத்தார். அவர் காலத்துக்கு முன், முடக்கு வாதத்தில் அடிபட்டதுபோல் நடக்க முடியாமல். திணறியது தமிழ் வசனம்.

'ஜகத் சித்திரம்', 'விடுதலை' போன்ற கவிதை நாடகத் துணுக்குகள், 'நவதந்திரக் கதை' என்ற நீதிக் கதைத் தொடர், 'ஞான ரதம்' என்ற வசன காவியம், 'வேத ரிஷிகளின் கதை', 'பகவத் கீதை', 'கற்பனையூர்' போன்ற அற்புதமான மொழி பெயர்ப்புக்கள் 'தராசு' என்ற தன்மயக் கட்டுரை, 'சந்திரிகை' என்ற நாவல்! பாரதி வழிகாட்டாத இலக்கியத் துறை ஏது? என்றாலும் அவருடைய சாதனையின் சிகரமாக விளங்குவது அவருடைய கவிதையே!

கம்பருடைய காலத்திற்குப் பிறகு, பல நூற்றாண்டுகளுக்கு கவிதையைப் பொறுத்த மட்டில் தமிழ் இலக்கிய உலகம் வறண்டு கிடந்தது. இந்தக் காலத்தில் பல செய்யுள் நூல்கள் இயற்றப்பட்டன. உண்மைதான். ஆனால் அவை பெரும்பாலும் குட்டி ஜமீந்தார்களை வானளவாய்ப் புகழ்ந்து தூபம் போட்ட புகைக் கால்கள்; காமக் களியைப் பச்சையாகப் பேசி பல் இளித்த தசைப் பேயின் நரகச் சிரிப்புக்கள் ; செங்கற் சூளையிலிருந்து வெளி வரும் கற்களைப் போல, ஒன்று போல் ஆயிரமாகக் குவிந்த உயிரற்ற பிரபந்தப்பிரதிகள்; சித்திரக் கவி என்று தமிழைப் பொருளற்ற கூட்டில் அடைத்த சித்திரவரைகள். ஒரு சில நூல்கள்—பட்டினத்தார், தாயுமானவர், இராமலிங்க அடிகள் இவர் தம் பாடல்களைப் போன்ற ஒரு சில நூல்கள் —தமிழ் சாகவில்லை என்பதற்குச் சாட்சியாக நின்றன. ஆனால் இந்த வகை நூல்களிற் பெரும் பாலானவை, வாழ்க்கையிலிருந்து பார்வையைத் திருப்பி, ஸங்கேத பதங்களும், வறட்டுத் தத்துவப் பணியும் சிருஷ்டித்த தெளிவற்ற இருள் வெளியிலே கவிதைப் பெண்ணை 'நில்' என்று நிறுத்தி விட்டு எங்கேயோ நீள நடந்தன.

இந்தச் சூழ்நிலையில் பாரதி பிறந்தார். தமிழ்க் கவிதையைப் போலிப் புலமைக் கோணங்கியிலிருந்தும், திருகலிலிருந்தும் விடுவித்தார். தத்துவ விசாரம் என்ற தகுதியிலாப் பெயரால் குருடர் அமைத்த இருட்கோட்டையிலிருந்து அதைச் சிறை மீட்டார். இம்மண்ணுலக வாழ்க்கையின் நட்ட நடுவில் கேணியருகில், தென்னை மரக் கீற்றின் பட்டொளியில், இதய ஒலியின் அரவணைப்பில் கவிதையை வாழ வைத்தார். மனித வாழ்வின் இன்ப துன்பங்கள் என்ற அனுபவமாகிய உணவை ஊட்டினார். வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவமாகி நிற்கும் மெய்ப்பொருளைத் தொடவும் முயன்றார். யாப்பருங்கல வாய்ப்பாட்டுக்குப் பதிலாக, அனுபவத்தைக் கவிதைக் கருவியாக்கினார். சொல், அணி அடுக்குகளுக்குப் பதிலாக, உள்ளத் தொனியை வாக்கின் தெளிவாக்கும் வனப்பைக் கொணர்ந்தார். சொன்னதைச் சொல்லும் கிளிப் பிள்ளைப் பேச்சிற்குப் பதிலாக உண்மைப் பாவலர்க்குத் தோன்றும் தன் மய தரிசனத்தைத் தனி முறையில் வகுக்கும் ஆற்றலைச் சமைத்தார். பொருளற்ற சொற் குவியல்களை வண்ணமும், ஒளியும் வீசும் கோலப் பாடல் மணிகளாகக் கடைந்தெடுத்தார். தமிழ் நாட்டிலே கவிதை தெளிந்த விழியோடு, ஆழ்ந்த உணர்வோடு ஆற்றலோடு புனர் ஜன்மம் எடுத்தது. இதுவே பாரதியின் சாதனை.

—பாரதியார் பெருமை என்னும் நூலிலிருந்து.....





# பாரதி வாழ்க்கை வரலாறு

அரிது அரிது மானிடராதல் அரிது. அதனினும், கூன் குருடு செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது, என்பதோடு மட்டும் ஔவை தனது பாடலை நிறுத்திவிட்டார்.

வளர்ந்துவரும் மனித வாழ்க்கையில் ஒவ்வொருவரும், எடுக்கவும் கொடுக்கவும் கூடிய சமுதாய அமைப்பை இப்பொழுது பெற்று வருகிறோம். எனவே தானமும், தவமும் கூட எந்த ஒரு விதத்திலாவது செய்து விட முடியும்.

இத்தனைக்கு மேல் ஒருவன் கவிஞனாகப் பிறக்கிறான் என்றால் அது எத்தனையோ நூற்றாண்டுக்கு ஒரு முறை நிகழும் நிகழ்ச்சி என்று தான் கூறமுடியும். கம்பனுக்குப் பின் தமிழ் மக்கள் உள்ளத்தில் நிலைத்து நின்று வரும் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் ஒருவரே !

தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்திற்கு எத்தனையோ தேசியத் தலைவர்களைப் பெற்றெடுத்த பெருமை உண்டு. வ.உ. சி., சுப்பிரமணிய சிவா, வாஞ்சிநாதன் போன்றவர்கள் அதே மாவட்டத்தில் பிறந்தவர்கள். எட்டையபுரத்தில் 1882-ஆம் ஆண்டு டிசம்பர் 11ந் தேதி சின்னச்சாமி அய்யருக்கும் லெட்சுமி அம்மாளுக்கும் பிறந்த குழந்தைதான் நமது சுப்பிரமணிய பாரதியார்.

அவர் இளமையிலேயே கவி பாடக் கூடிய திறமை பெற்றிருந்தார். பதினொரு வயது நிரம்பிய சுப்பையா என்று செல்லமாக அழைக்கப்பட்ட இவரை எட்டையபுரம் சமஸ்தானப் புலவர்கள் பற்பல சோதனைக்கு உட்படுத்தினர். அவைகளில் வெற்றி பெற்றதால் அந்தப் புலவர்கள் வியந்து அளித்த பட்டம் பாரதி.

அவர் 1894—1897 வரை திருநெல்வேலி இந்து கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் ஐந்தாம் படிவம் வரை படித்தார். படிக்கும்போதே தமிழ்ப் பண்டிதர்களுடன் ஏற்பட்ட சொற்போர் காரணமாக படிப்புக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது. பாரதியாரின் 15 வயதிலேயே அக்கால வழக்கப்படி திருமணம் நடந்தது. 7 வயது நிரம்பிய செல்லம்மா என்பவரைத் திருமணம் செய்து கொண்டார்.

1898—1902 வரை காசியில் தனது அத்தை குப்பம்மாள் அவர்களுடன் தங்கி இருந்தார். அப்போது அலகாபாத் சர்வகலா சாலையில் பிரவேசத் தேர்வு எழுதி வெற்றி பெற்றார். காசி இந் சர்வகலாசாலையில் ஹிந்தியு வடமொழியும் பயின்றார். அ போதுதான் நமது பாரதியாருக் தலைப்பாகை கட்டும் பழக்கமு மீசை வைத்துக் கொள்ளு பழக்கமும் ஏற்பட்டதாக அறி றோம். மீண்டும் எட்டையபுர வந்து 1902 முதல் இரண்டாண் காலத்திற்குஎட்டையபுரம் மன் ருக்குத் தோழனாக இருந்தா அப்போதுதான், மதுரையிலிருந் வெளிவந்து கொண்டிருந் 'விவேகபானு' என்ற பத்திரி யில் இவரது முதல் பாட 'தனிமை இரக்கம்' அச்சா வெளியிடப்பட்டது.

1904-ம் ஆண்டு மதுரையி உள்ள சேதுபதி உயர்நிலை பள்ளியில் தமிழ் ஆசிரியராக பணியாற்றினார்.

அதே ஆண்டு நவம்பர் சென்னையிலிருந்து வெளிவரு 'சுதேசமித்திரன்' பத்திரிகைக் உதவியாசிரியரானார்.

பின்பு 'சக்கர வர்த்தினி' என் பத்திரிகையின் ஆசிரியரா ஆனார்.

1905-ஆம் ஆண்டில் பார யார் அரசியலில் ஈடுபட்டு இ

நார். தீவிரமாக உழைக்க ஆரம் பித்தார்.

1906-ல் சென்னையிலிருந்து வெளிவந்த 'இந்தியா' என்ற வாரப் பத்திரிகை மூலம் தனது அரசியல் கருத்துக்களை இந் நாட்டு மக்களிடம் பரப்பினார். அப்போது திருமலாச்சாரியார், வ.உ.சி., சர்க்கரைச் செட்டியார் முதலியோரின் நட்புக் கிடைத் தது.

சூரத் காங்கிரசில் தீவிர வாதி களுக்கும் மிதவாதிகளுக்கும் ஏற் பட்ட கருத்து வேறுபாடு காரண மாக காங்கிரசில் 1907-ல் பிளவு ஏற்பட்டது. பாரதியார், திலகர் போன்ற தீவிரவாதிகளின் பக்கம் நின்று பணியாற்றினார். அப்போது திலகர், லாலா லஜபதிராய், அர விந்தர் முதலியோரைச் சந்தித் தார். கிருஷ்ணசாமி அய்யர் என்ற தேச பக்தர் பாரதியாரின் பாடல்களில் உள்ள வேகத்தின் தன்மையை உணர்ந்து 'சுதேச கீதங்கள்' என்ற தலைப்பில் அவ ரது பாடல்கள் பலவற்றை அச் சிட்டு இலவசமாக விநியோகித் தார்.

1908-ஆம் ஆண்டு, 'சுயராஜ் ய தினம்' சென்னையிலும் தூத் துக்குடியிலும் கொண்டாடப்பட் டது. அதில் வ. உ. சி., சுப்ர



பாரதியாரும் அவருடைய மனைவி செல்லம்மாளும்

மணிய சிவா போன்றவர்களுக்குச் சிறைத் தண்டனை கிடைத்தது. அந்த வழக்கில் பாரதியார் சாட் சியம் சொல்லியுள்ளார்.

அதே ஆண்டில், கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் வெளியிட்ட 'சுதேச கீதங்கள்' என்ற தலைப் பில் கவிதைத் தொகுப்பு ஒன்றை பாரதியார் வெளியிட்டார்.

இது வெளிவந்த பின், பிரிட் டிஷ் அரசாங்கம் பாரதியார் மீது ஒரு கண்ணோட்டம் விட்டது. 'இந்தியா' பத்திரிகையின் சட்ட ரீதியான ஆசிரியர் கைதுசெய்யப் பட்டு, பாரதியார் மீது வாரண்ட் போட்டது. பாரதியார் தலை மறைவானார். புதுச்சேரி சென் றார். அங்கும் போலீஸ் தொல்லை களுக்கு உட்பட்டார்.

அப்போது 'இந்தியா' பத்தி ரிகை 1910 வரை புதுச்சேரியி லிருந்து தனது தேசியத் தொண் டைத் துவக்கியது. எரிமலை வெடித்தது போன்ற எழுத்துக் களால் மக்களிடையே விடுதலை வேட்கையைப் பரப்பினார். இதனைக் கண்ட பிரிட்டிஷ் அரசு 'இந்தியா' பத்திரிகை வருவதைத் தடுத்தது. அத்துடன், பத்திரிகை, விற்பனைக் குறைவால் நின்று போயிற்று.

1911-ல் மணியாச்சியில் கலெக் டர் ஆஷ் துரை சுட்டுக் கொல்லப் பட்டபோது, புதுச்சேரியில் உள்ள தேசபக்தர்கள் மீது சந்தேகம் ஏற்பட்டு, அங்கு உள்ள தேச பக்தர்களுக்குத் தாங்கொணாத் துன்பத்தை ஆட்சியினர் கொடுத் தனர். மேலும் அவர்களை அங் கிருந்து வெளியேற்றவும் முயற்சி கள் நடைபெற்றன. பாரதியா ரின் சீடர்கள் ஏராளமாயினர்.

பாரதியார் 1912-ல் கீதையை மொழி பெயர்த்தார். மேலும் கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் போன்ற 'காவி யங்கள்' அவரால் எழுதப் பெற் றன. பாஞ்சாலி சபதம் வெளி யிடப்பெற்றதும் இந்த ஆண்டில் தான்.

அடுத்த ஆண்டில் 'ஞானபாநு' என்ற பத்திரிகைக்குச் செய்திகள் சேகரித்துக் கொண்டிருந்தார். 1914-ல், முதல் உலகப் போர் துவங்கியதும் அங்கு உள்ள தேச பக்தர்களுக்கு ஏராளமான தொல்லைகள் ஏற்பட்டன.

பரலி சு. நெல்லையப்பர் அவர் கள் 1917-ல் 'கண்ணன் பாட்டு' முதற் பதிப்பைச் சென்னையில் வெளியிட்டார்கள். அதைத் தொடர்ந்து, 1918-ல் 'சுதேச கீதங்கள்', 'நாட்டுப் பாடல்' முதலியன வெளியிடப்பட்டன.

புதுச்சேரி வாழ்க்கையில் ஏற் பட்ட சலிப்பு உணர்வால் பாரதி யார் 1918-ஆம் ஆண்டு நவம்பர் 20-ந் தேதி அங்கிருந்து வெளி யேறினார். அப்போது கடலூ ருக்கு அருகே கைதுசெய்யப்பட்டு, சில நாட்கள் சிறை இருந்த பின்னர், விடுதலை செய்யப்பட் டார். விடுதலையானவுடன் கடை யத்துக்குச் சென்றார்.

1918 முதல் 1920 வரை கடை யத்தில் வாழ்ந்து வந்த பாரதி யார் எட்டையபுர மன்னனுக்குச் சீட்டுக் கவிகள் மூலம் தன் நிலை மையைச் சொல்லியும், எவ்விதப் பயனும் ஏற்படாததால் சென் னைக்கு வந்தார். சென்னையில் ராஜாஜி அவர்கள் வீட்டில் மகாத்மா காந்தியைச் சந்தித் தார்.

1920-ல் மீண்டும் 'சுதேசமித்தி ர'னுக்கு உதவியாசிரியரானார். பாரதியாரின் எழுத்துக்கள் அப் போது நிறைய இடம் பெற்றன.

1921-ல் திருவல்லிக்கேணியில் கோயில் யானை ஒன்றால் தூக்கி எறி யப்பட்டு, அதிர்ச்சியுற்று, நோய் வாய்ப்பட்டு 1921 செப்டம்பர் 11-ம் தேதி நள்ளிரவுக்குப் பின் இவ்வுலக வாழ்விலிருந்து விடுதலை பெற்றார். உலக வாழ்விலிருந்து விடுதலை பெற்ற பாரதியார், உலக மக்களின் உள்ளங்களி டையே இன்னும் வாழ்ந்து வரு கிறார். வாழ்க மகாகவி பாரதியார்!

நன்றி: வானதி பதிப்பகம்.

## பாரதியாரும் பதினொன்றும்!

~✱~

மகாகவி பாரதியாருக் கும், 11-ஆம் எண்ணுக்கும் ஏதோ நெருங்கிய தொடர்பு இருந்திருக்க வேண்டும்.

பாரதியார் பிறந்தது 1882-ஆம் ஆண்டு டிசம்பர் 11-ஆம் நாள்.

அவர் 'பாரதி' என்னும் பட்டம் பெற்றது, தம் 11-வது வயதில்!

அவர் நம்மையெல்லாம் விட்டுப் பிரிந்தது 1921-ஆம் ஆண்டு செப்டம்பர் 11-ஆம் நாளில்!

# வருங்காலம்

சுப்பிரமணிய பாரதியார்

உலகம் எவ்வளவு தீவிரமாக மாறிக்கொண்டு வருகிறதென்பதை தமிழ் நாட்டார் ஆழ்ந்து கவ னிக்க வேண்டும். ஒவ்வொருவரும் சிற்சில விவ காரங்களில் மனத்தைப் பதியவைத்துக்கொண்டு வெளியுலகத்தின் மாறுதல்களிலே புத்தி செலுத்தா மல் அற்ப விருப்பங்களிலும், அற்பச் செய்கைகளி லும் நாளையெல்லாம் கழியவிட்டுக் கிணற்றுத்தவளை களைப் போல் வாழ்வதிலே பயனில்லை.

வர்த்தகஞ் செய்வோர் கோடிக்கணக்கான பணப் புழக்கம் ஏற்படும்படி பெரிய வர்த்தகங்கள் செய்ய வழி தேட வேண்டும். படிப்பவர் அபார மான சாஸ்திரங்களையும் பல தேசத்துக் கல்விகளை யும் கற்றுத்தேர வேண்டும். ராஜ்ய விவகாரங்களில் புத்தி செலுத்துவோர் உலக சரித்திரத்தை நன் ருகத் தெரிந்துகொண்டு, மற்ற ராஜ தந்திரிகளும், மந்திரிகளும் கண்டு வியக்கும்படியான பெரிய பெரிய யோசனைகள் செய்து நிறைவேற்றிப் புகழ் பெற வேண்டும். கைத்தொழில்களின் விஷயத்தி திலே நாம் இப்போது காட்டி வரும் சோர்வும் அசிரத்தையும் மிகவும் அருவருப்புக்கு இடந் தரு கின்றன.

திருஷ்டாந்தமாக, நேர்த்தியான சித்திரங் களும், வர்ணங்களும் சேர்த்துப் பட்டிலும் பஞ்சிலும் அழகான ஆடைகள் செய்யவல்ல தொழிலாளிகள் நமது நாட்டில் இருக்கிறார்கள். இவர்களுக்குப் படிப்பில்லை. வெளியுலக நிலை தெரியாது. கையிலே முதற் பணமுமில்லை. நம்முள்ளே கல்வியும் செல்வ மும் உடையோர் கூடி ஆராய்ச்சிகள் செய்து வெளி நாடுகளில் ஆவலுடன் வாங்கக் கூடிய மாதிரிகள் ஏவை என்பதைக் கண்டுபிடித்து அவற்றை நமது தொழிலாளிகளைக் கொண்டு செய்வித்தால் மிகுந்த லாபமுண்டாகும்.

இரும்புத் தொழில் உலகத்திலே வலிமையுஞ் செல்வமும் கொடுப்பது. எல்லாவிதமான கைத் தொழில்களும் தற்காலத்தில் இரும்பு யந்திரங் களாலே செய்யப்படுகின்றன. ஆதலால், நமது தேசத்துக் கொல்லருக்கு நாம் பலவிதங்களிலே அறிவுவிருத்தியும் ஜீவன ஸௌகர்யங்களும் ஏற் பாடு செய்து கொடுத்து இடத்துக்கிடம் இயன்ற வரை இரும்புத் தொழில்களை வளர்க்க வேண்டும்.

இனி, வர்ணப்படம், தையல்வேலை,....மைத் தொழில் முதலிய சித்திர வேலைகளில் நமது ஜனங் களின் அறிவு மிகவும் சிறந்தது. கொஞ்சம் சிரமப் பட்டால், இந்தத் தொழில்களை மறுபடி உயர்ந்த நிலைமைக்குக் கொண்டு வந்துவிடலாம். சிறித காலத்துக்கு முன்பு சீனத்திலிருந்தும் ஜப்பானி லிருந்தும் பல சித்திர வேலைகளைக் கொண்டுபோய் அமெரிக்காவில் காட்டியபோது, அங்கே அவற்றிற்கு மிகுந்த புகழ்ச்சியும் பிரியமும் ஏற்பட்டதாகத் தெரி கிறது.

வெளிநாட்டுக்குக் கப்பலேறிப் போங்கள், புறப்படுங்கள், புறப்படுங்கள். தொழிலாளிகளே, வியாபாரிகளே, வித்வான்களே, புத்திமான்களே, எப்படியேனும் யாத்திரைச் செலவுக்குப் பணம் தயார் செய்து கொண்டு அன்னிய தேசங்களைப் பார்த்து விட்டு வாருங்கள். நமது தொழில்களுக் கும், கலைகளுக்கும், யோசனைகளுக்கும் வெளி நாடு களில் ஏராளமான உதவி கிடைக்கும். சந்தேகப்பட வேண்டாம்.

(பாரதியார் எழுதிய கட்டுரை)

# அஞ்சலக வங்கியின் மாபெரும் பரிசுத் திட்டம்

ஆண்டுக்கு இருமுறை

குலுக்கல்கள் **ஜனவரியிலும் ஜூலையிலும்** நடைபெறும்

**ரூ. 20½ இலட்சத்திற்கு**
**11,116 பரிசுகள்**

ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட 11,116 பரிசுகள் உண்டு.

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. | 1,00,000 |
| 5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50,000 |
| 10 மூன்றும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 20,000 |
| 100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 5,000 |
| 1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 500 |
| 10,000 ஆறும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50 |

ஏப்ரீல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.

உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெருதவர்க்கும் அளிக்கப்படும்.

விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**இயக்குநர்.**
தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,
சென்னை-600 002.


# மகாகவியும் மகாத்மாவும்



—சுத்தானந்த பாரதியார்

புதுச்சேரி இன்று புதுயுகச் சேரியாக விளங்குகிறது. அன்று சேரி என்றுல், ஏதோ ஓர் இனம் ஒதுக்கமாக வாழும் இடம். இன்று ''சேரி'' என்றுல் உலகெல்லாம் சாதி மத நாடு நிறவேறுபாடில்லாமல் சேர்ந்து வாழும் இடம். புதுச்சேரியில் இன்று மேற்கும் கிழக்கும் கைகோத்து உலாவுகிறது. ஆரோவில்-என்ற உலக-நகர் எழுந்து கொண்டிருக்கிறது. இந்த அற்புதத்தைச் செய்தது ஸ்ரீ அரவிந்த சக்தி.

புதுச்சேரியில் முதன்முதல் புகுந்து புகலடைந்தவர் கவியரசர் சுப்பிரமணிய பாரதியாரே. பாரதியார், சென்னையில் இந்தியா பத்திரிகை ஆசிரியராயிருந்தார். அவர் படபடப்பும், துடிதுடிப்பும், பாசமும், பாய்ச்சலுமாயிருப்பார். பாரமெல்லாம் பாரத பராசக்தியிடம் வைத்தார் அவர். ''வேண்டுமடி எப்போதும் விடுதலை'' என்று பராசக்தியிடம் உரப்பாகக் கேட்பார். ''என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்' என்று ஏங்கித் தவிப்பார். அவர் உறக்கத்தில் கூட ''சுதேசம், சுதந்திரம்'' என்று நெட்டுயிர்ப்பார். பாரதியார் அருள்பெற்ற அமரகவி. அவர் உள்ளத்துடிப்பிற்கேற்ற ''இதழ்'' அமையவில்லை. சுதேசமித்திரனில் தலையங்கம் எழுத முடியவில்லை. வீறு பெற்ற அவரது பேனு, விடுதலை தேடிப் படபடத்தது.

விவேகானந்தருக்குச் சென்னையில் அணுக்கத் துணைவராயிருந்தவர் அளசிங்கப்பெருமாள். அவர் ஒரு ரசாயன ஆசிரியர். அவருடைய உறவினர்கள் மண்டபம் திருமலாச்சாரியாரும் ஸ்ரீநிவாசாச்சாரியரும் கூடி 'இந்தியா' பத்திரிகையை நடத்தி வந்தனர். பாரதியார் அதன் ஆசிரியராகி, வேட்டு நடையில் விடுதலைக் கனல் கக்கினுர். பாரதியார் எழுத்து, தமிழுக்குப் புதிய எழுச்சியைத் தந்தது. பிரிட்டிஷ் ஒற்றர் வரி வரியாகப் படித்து, கத்தை கத்தையாக மேலே எழுதிவிட்டனர். வங்கத்தில் 'வந்தே மாதரம்', பம்பாயில் 'கேசரி', சென்னையில் 'இந்தியா'-இம் மூன்று பத்திரிகைகளும் வீரசுதந்திரப் பேரிகை முழக்கின. 'இந்தியா'வை அதிகார வர்க்கம் ஒடுக்கி அடக்கச் சட்டம் போட்டது. பாரதியாரைக் கைது செய்ய 'வாரண்டு' பிறப்பித்தது.

''பாரதியாரோ, ''உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை, அச்சமில்லை அச்சமென்பதில்லையே'' என்று திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் மண்டபத்திலிருந்து குரலெடுத்துக் குதித்தார்.

டாக்டர் ' நஞ்சுண்ட ராவ் அவரை அழைத்து, ஆபத்தை விளக்கி, அன்றிரவே புதுச்சேரிக்கு வண்டியேற்றி விட்டார்.

புதுச்சேரியில் பாரதியார் பட்டபாடு, அந்தக் காலத்தில் பிரதாபசிங்கன் நாடு இழந்து, போரிழந்து, வறுமையுழன்று, அரவலி மலைக் கணவாயில் பட்ட துன்பங்களுக்கே இணையாகும். இரண்டு நாள் இடம் கொடுத்த குப்புசாமி, ''கிளம்பும்!'' ஒற்றர் தொல்லை வருகிறது'' என்று துரத்தினுர். பாரதியார் எப்படியோ தர்மராஜாகோவில் தெருவில் ஒரு வீடு பிடித்துக் குடியேறினுர். அந்த வீட்டைச் சுற்றி ஒற்றர். வெளியே சென்றுல் ஒற்றர்!

பாரதியார் தலை நிமிர்ந்தே நடந்தார். ''செல்வோம் சுதேச வீரர்-நம் கீர்த்தி பெருகிடு நாளே'' என்று பொருள்படும் பிரெஞ்சு தேசிய கீதத்தைப் பாடிக் கொண்டும், சீழ்க்கையடித்துக் கொண்டும், கடற்கரைப் பாலத்தில் நடை போட்டார். வீட்டில் உணவிராது, மனைவி மக்கள் கவலைப் படுவர், நோய் நொடி வரும். ஆனுல், பாரதியாரின் தேச பக்திக்கு என்றும் நோய் நொடி வந்ததில்லை. அவர் நாட்குறிப்புகளில் எழுதுகிருர்; ''கடன்காரன் வந்து நிற்கிருன். எத்தனை நாள் சாக்குச் சொல்வது! உடல் படுக்கிறது-என்னையே நம்பியிருக்கும் மனைவி, கவலைப் படுகிருள்-வீட்டுக்கு வந்தால், கவலை-கடற்கரை சென்றுல் விடுதலை! பராசக்தி! உன்னையே நம்பியுள்ளோம்; நீ வழி காட்டா விட்டால்...... ஹூம்ம்... ''தேடியுன்னைச் சரணடைந்தேன் தேச முத்துமாரியம்மா...தேச முத்துமாரி''...ஆனந்தக் களியாட்டம்! கவலை பறந்து போகும்.

ஸ்ரீ அரவிந்தர் உறவினுல் பாரதியார் வேதப் பொருளை ஆராய்ந்து, யோக வழியிற் சென்றுர். அவர் எழுத்தில் புதிய ஆவேசம் பிறந்தது. அரவிந்தரின் அமரக் கனவுகள் பாரதி வீணையில் கமகங்களுடன் மீட்டப்பட்டன. புதுவையில் மீண்டும் 'இந்தியா' எழுந்தது; சர்க்கார் அதையும் அடக்கி விட்டது. சென்னைக்கு 'இந்தியா' வரக்கூடாது என்று சட்டம் போட்டு ஆணியடித்து விட்டது. பாரதியார் 'கண்ணன் பாட்டும்', 'குயில்

பாட்டும்', 'பாஞ்சாலி சபதமும்' பாடி தமது கவியார்வத்தைக் காலம் உள்ளளவும் விளங்கச் செய்தார்.

1910-ல் வீர விளக்கு வ.வே. சு. ஐயரும் புதுவையில் புகலிடம் கொண்டிருந்தார். கவி, யோகி, வீரக் கலைஞர்-இம் மூவரும் புதுச்சேரிக்குப் புதுமையளித்து, அதைப் புனிதமான யாத்திரைத் தலமாக்கினர். திலகரும், அரவிந்தரும் விட்ட அரசியல் வானில் மகாத்மா காந்தி எழுந்து ஒளிச் சிட்டார்.

தென்னாப்பிரிக்காவில் கறுப்புச் சட்டத்துடன் போராடி ஒருவாறு வெற்றி பெற்ற காந்திக்கு, இந்தியாவில் 'ரௌலெட்' சட்டம் காத்திருந்தது. 1917-ல் இந்தச் சட்டம் உருவானது. உருவாக்கினவர்கள் ரௌலெட்டு, குமாரசாமி சாஸ்திரி, சந்திரமித்தர் ஆகிய மூவர்.

இந்தச் 'சதிச் சட்ட' அறிக்கையில் சாவர்கார், வ. வே. சு. ஐயர், அரவிந்தர், பரீந்திரர், திலகர், பாலாஜி முதலிய தேச பக்தர்களின் புரட்சி வரிசைகளை இராமாயணமாக எழுதித் தீர்த்தது பிரிட்டிஷ் அதிகார வர்க்கம். ஐந்து பேர் கூடிப் பேசக் கூடாது! 'தேசம்' என்றால், சிறைவாசம்! 'விடுதலை என்றால், விலங்கு'. எதிர்த்தால், எமலோகம். ஒற்றர் விழிகள் குற்றங் காணப் புலிப் பார்வையுடன் சுற்றுகின்றன.

பதிதபாவனாக எழுந்தார் காந்தி மகான். வல்லபாய் படேல் "அவசரம், முன்செல்வோம், துணிந்து எதிர்ப்போம்" என்றார். காந்தி தீவிரமாகச் சிந்தித்தார். "ஹர்த்தால்" என்ற மருந்தைக் கண்டு பிடித்தார். ஹர்த்தால் என்றால் வேலை நிறுத்தம். நமது இந்தியப் பண்பாட்டுடன் ஒட்டிய பாதனையே அது. ஸ்ரீராம நாம பஜனை செய்து, உபவாசமிருந்து, விரதம் செய்து, "தேசத்தைக் காக்கத் தெய்வத்தைத் தொழும் நாள் அதுவே.

மகாத்மா காந்தி அந்தச் சமயம் சென்னை, மதுரை முதலிய இடங்களில் அன்பர்களைப் பார்த்து விட்டுப் புதுச்சேரிக்கு வந்தார். அரவிந்தரைத் தரிசிக்க முயன்றார். முடியவில்லை. வீரக் கலைமணியான வ. வே. சு. ஐயரைப் பார்த்தார். காந்தியைக் கண்டதும் ஐயர் உள்ளம் உருகிவிட்டது பேச முடியவில்லை. நாக்கு தழுதழுத்தது.

ஐயர்: நமஸ்தே மகாத்மாஜி! தங்கள் தேச விடுதலைக்காகத் துடிக்கிறோம். கண்ணீர் வடிக்கிறோம். துப்பாக்கி பிடிக்கிறோம்.



வ. வே. சு. அய்யர்.

காந்தி: துப்பாக்கி பயன் படாது. அன்னியர் அதைக் கொண்டுதான் நம்மை அடக்கி வைத்திருக்கிறார்கள். நாம் அதை விடத் தீவிரமான ஆயுதத்தைக் கையாள வேண்டும். பிரிட்டிஷ் பீரங்கியை நமது கள்ளத் துப்பாக்கி எதிர்க்க முடியாது. அந்த நினைப்பே வேண்டாம்.

ஐயர்: துள்ளும் வீர உள்ளத்திற்கு வழியென்ன? நாம் ஏன் கரிபால்டி, நானாசாகேப் போன்று படை சேர்த்துப் போராடக் கூடாது?

காந்தி : கரிபால்டி தனது படைகளுக்கு முன்னும் பின்னும் ஒன்று சொன்னான். அதுவே "தியாகம்" நமக்கு அது போதும் சத்தியாக்கிரகமே சமயத்திற் கேற்ற ஆயுதம். பகைவனைப் பகையோம்; அவனைச் சுடோம்; இரத்தம் வடியோம்! நமது இரத்தத்தைக் கொடுப்போம்; நமது அச்சத்தைச் சுடுவோம். ராமநாம பேரி கொட்டி, ரண களத்தைத் தூண்டுவோம். ஆத்ம தீரத்தை விளக்குவோம். இப்போது 'சதிச் சட்டம்' வந்திருக்கிறது. அதை மறுத்து நாடு முழுதும் எழுந்து ஹர்த்தால் நடத்துவோம்.... ஐயரே, துப்பாக்கியைக் கடலில் எறிந்து விட்டு வாரும். அச்சமற்ற தியாகத்தை அணிந்து வாரும். வெற்றி நமதே

ஐயர்: மஹாத்மாஜி! அன்று கண்ணன், விஜயனுக்கு "பகைவரைக் கொல்" என்றான். இன்று தாங்கள் "அச்சத்தைக் கொல்லு; ஆத்ம சக்தியால் வெல்லு" என்கிறீர்கள். இதோ திரிகரண சுத்தியுடனே தங்களைப் பின்பற்றுகிறேன்....எனது நண்பர் கவி பாரதி இருக்கிறார். அவரையும் அழைக்கிறேன்.

ஐயர், சுபத்திராவைப் பாரதி வீட்டிற்கு அனுப்பினார். பாரதியார் இன்னும் வீட்டுக்கே வரவில்லை என்ற தகவல் வந்தது. ஐயர் வருத்தப்பட்டார். காந்தி விடைபெற்று, வண்டியேறி விட்டார். ஐயர் அவரை அனுப்பி விட்டுத் திரும்பி வந்ததும், பாரதியாரும் வந்து சேர்ந்தார்.

பாரதி : எங்கே காந்தி? எங்கே எம்மான்!

ஐயர் : அடடா! பாரதி, அவர் இப்போதுதான் வண்டியேறினார். வண்டி புறப்பட்டு விட்டதே. நீர் எங்கே சென்றீர்? சுபத்திராவை அனுப்பினேன். நீர் வீட்டில் இல்லையாமே!

பாரதி : அடடா! பிழை செய்தேன். கிருஷ்ணபிள்ளை தோட்டத்தில் இயற்கையின்பத்தில் சுற்றித் திரிந்தேன். நல்ல வாய்ப்பை நழுவ விட்டேன்...... ஹஹ்ஹா! எப்போது காண்பேனோ எம்மானை!

ஐயர், காந்திக்கும் தமக்கும் நடந்த பேச்சைச் சொன்னார். அப்போதே "வாழ்க நீ எம்மான் காந்தி" பாரதியின் மனத்தில் உருவாகி விட்டது. காந்தி வழியே சாந்தி!

பாரதியாருக்கு ஒரே இடத்தில் இருக்கப் பிடிக்காது. மனம் போன போக்கில் பாடிக்கொண்டு இங்கும் அங்கும் வட்டமிட்டுக் கொண்டிருப்பார். புதுச்சேரியில் எத்தனை நாள் அடைந்து கிடப்பது? "அச்சமில்லை...அச்சமில்லை நான் அமரன்...அமரன்" என்று ஒருநாள் கிளம்பினார். வீரநடை போட்டுக் கடலூருக்கு வந்துவிட்டார். ஒற்றர் அவரைப் பிடித்துச் சிறையிட்டனர். "காரணத்தைச் சொல், பிறகு கைது செய். நீயும் இந்திய மகன், நானும் இந்திய மகன். நமது நாட்டுக்கு விடுதலை வேண்டாமா? சொல்லடா....."

போலீசுக்கு மிகவும் மகிழ்ச்சி. நெடுநாள் முயன்றது கைகூடியது; தந்தி பறந்தது. சென்னை சர்க்கார் 34 நாள் பாரதியாரைக் காவலில் வைத்தது. 'சுதேசமித்திரன்' ஆசிரியர் அரங்கசாமி ஐயங்காரும், துரைசாமி ஐயரும் முயன்று, 'அரசியல் பேசுவதில்லை' என்ற உறுதிபெற்று, பாரதியாரை விடுவித்துச் சென்னைக்கு அழைத்துச் சென்றனர். பாரதியார் இரண்டு ஆண்டுகள் கடயம், எட்டையபுரம் முதலிய இடங்களில் சுற்றித்திரிந்து, சென்னைக்கு வந்து சுதேசமித்திரனில் அமர்ந்தார்.

1920-மார்ச்சு மாதம் மகாத்மா காந்தி சென்னைக்கு வந்தார். சென்னையில் காந்தி ஒரு மாணிக்க வாசகரைக் கண்டு பிடித்திருந்தார். அவர்தான் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்.

சென்னை வந்தபோது, காந்தி ராஜாஜி வீட்டிலேயே தங்கினார். ராஜாஜியுடன் சிந்தித்த வண்ணம் இருந்தார்.

அந்தக் காலத்தில் பாரதியார், பார்த்தசாரதி கோயில் மண்டபத்திலோ திலகர் கட்டத்திலோ கூட்டம் போட்டு சுதந்திர நாதம் செய்து வந்தார்.

காந்தி வந்திருக்கிறார் என்பதைப் பத்திரிகையில் பார்த்ததுமே, "கடற்கரையில் கூட்டம் போடுவோம்; நாம் பேசுவோம். காந்தி தலைமை வகிப்பார்" என்று தமது நண்பருக்குச் சொல்லிவிட்டு, நேராக ராஜாஜி வீட்டிற்கு வந்துவிட்டார். தொண்டர் அவரது வீராவேசப் புயலுக்கு வழிவிட வேண்டியிருந்தது. நேராக காந்தியிடம் போய், வெகுநாள் பழகிய நண்பன்போல அருகே மண்டியிட்டு அமர்ந்து "மிஸ்டர் காந்தி...." என்று தொடங்கினார். காந்தி, மூக்குக் கண்ணாடியில் ஊடுருவி ஆளைப் பார்த்தார்.

ராஜாஜி : இவரே தமிழ் நாட்டுக் கவி-பாரதி.

பாரதி : மிஸ்டர் காந்தி! இன்று கடற்கரையில் கூட்டம். தாங்கள் விஜயம் செய்து தலைமை தாங்கி, நடத்திக்கொடுக்க வேண்டும்.

காந்தி (மகாதேவ தேசாயிடம், நமது நிகழ்ச்சி நிரல் என்ன? மாலையில் வேறிடம் கூட்டம் உண்டா?

தேசாய் : பல நிகழ்ச்சிகள் உள்ளன. இன்று நேரமில்லையே!

காந்தி: கூட்டம் பற்றி மகிழ்ச்சி; இன்று வேறு அலுவல் உள்ளதே!

பாரதி : திருவுள்ளம் நடக்கட்டும் காந்திஜி-தங்கள் சத்திய இயக்கம் வாழ்க-வெற்றி கூறுகிறேன்.

பாரதியார் எழுந்தார். கிறிக்கிக் கட்டின் வால் அப்படியிப்படி அசைந்தது. காந்தியை ஒரு நிமிஷம் பார்த்தார். 'நமஸ்தே' என்றார். சிட்டாகப் பறந்து சென்றார். கோவில் மண்டபத்தில் அமர்ந்தார். அப்போது மாலை வழிபாட்டு மணி அடித்தது. சங்கு முழங்கியது. பாரதி வாணியும் சங்கு ஒலித்தது. அ... மான பாசுரம் வெளிவந்த...

ஊதுமினோ சங்கம்
ஒலிமினோ பேரிகைகள்
வேதனையோ இனியில்லை
விடுதலையோ திண்ணமே...

சங்கு பேரிகைக்கு மேல் ஸ்... ஷட்ஜமத்தில் வீறிட்டது பா... குரல். கூட்டம் கூடிவிட்... "பெருமக்களே; காந்தி வ... விட்டார். கண்டோம்; கொண்டோம்; இனிக் க... யில்லை; மகாத்மா காந்தி வா...

'எல்லோரும் வாழ்க' எ... மூன்றுதரம் வாழ்த்திய ... புறப்பட்டது காந்தி பஞ்ச... தூய பாசுரம்.

வாழ்கநீ எம்மான் காந்தி
வையத்து நாட்டில் எல்ல...
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டு
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மா! நீ வாழ்க வா...

ஹே, மகாத்மா! நீ புவிக்குள் முதன்மை பெற்றாய். இந்தி... உலகத் தலைமை வகிக்க ... காட்டினாய். அந்நியரு... அடிமை என்னும் வெய்ய பி... வருத்தும் நாடு உய்யச் செய்த... நாகபாசத்தை மாற்ற சத்தி... கிரக மூலிகை கொணர்ந்தா... கொலைப்போர் கொதிக்கும் அ... யலில் அறவழி புகுத்தின... மன்னுயிரைத் தன்னுயிரா... கருதுதல், உயிர்க் கூட்டத்... கடவுள் வடிவமென மதித்த... ஆத்ம பலத்தால் பகை... வெல்லுதல் ஆகிய வழியி... காட்டினை! ஒத்துழையா... என்ற சஞ்சீவியைத் தந்தா... அதன் பயன் நெருங்கி வருகிற...

நெருங்கிய பயன்சேர் ஒத்துழ...
யா...
நெறியினால் இந்தியா விற்கு...

வருங்கதி கண்டு பகைத்தொழ...
மற...
வையகம் வாழ்க நல் லறத்...

காந்தி சென்னையை விட்... பம்பாய் சேர்ந்ததும் அவருக்... எல்லைச் சிறை வந்தது. ஜாலிய... வாலா படுகொலை நடந்த... நாடு, வீறுகொண்டெழுந்த... விடுதலைக்கு வேகமான வழி துல... கியது. காந்தியின் உள்ளத்தை... கவி, தெள்ளத் தெளிய விளக்... னார்.

[நன்றி: ஆனந்த விகட...

## கேட்டதும் கொடுத்தவர் !

பாரதியாரை வ. உ. சிதம்பரனார் சந்தித்து உரையாடுவது வழக்கம். அப்போது பாரதியார் தமது கவிதைகளை வ. உ. சி. அவர்களுக்குச் சொல்லுவார். இதாலி நாட்டைச் சேர்ந்த தேச ஊழிய இளைஞர் சங்கத்தின் உறுப்பினர்கள் செய்து வந்த ஆங்கிலமொழியில் வெளியிடப்பட்டிருந்த சூளுரைப் பாடலை வ. உ. சிதம்பரனாரிடம் படித்துக் காட்டினார் பாரதியார். அதனைக் கேட்ட வ. உ. சி. சொக்கிப் போனார். அவர், அந்தப் பாடலைத் தமிழ்ப் பாட்டாகத் தருமாறு பாரதியாரிடம் வேண்டினார். உடனே, அதைத் தமிழ்க் கவிதையாக மொழி பெயர்த்தார். அதுதான் 'மாஜினியின் சபதம்' என்ற தலைப்பில் 'பேரருட் கடவுள் திருவடி யாணை' எனத் தொடங்கும் பாடல் ஆகும்.

## மழைமீது மோகம் !

பாரதியார் செயல்வீரர். மழையில் நனைந்து குளிப்பது நல்லது என்று சொல்லுவார்; சொல்லியது போல் செய்யவும் செய்வார்.

ஒருநாள் கடற்கரைக்கு பாரதி சென்றிருந்தபோது நல்ல மழை பெய்துவிட்டது. மழையில் நனைந்தபடியே இல்லம் திரும்பிக் கொண்டிருந்தார் அப்போது அவரது நண்பர்கள் இருவர், மழைக்குப் பயந்து ஒரு மரத்தடியில் நின்று கொண்டிருந்தனர். அதைப் பார்த்துவிட்ட பாரதியார், "என்னடா ஒதுங்கிப் பதுங்கி நிற்கிறீர்கள்? தூய-தெள்ளிய நீரை ஆண்டவன் கொட்டுகிறான். அதில் செல்லவா அச்சம்? வாருங்கள் போகலாம்" என்று சொல்லியவாறு நண்பனின் கரங்களைப் பற்றி இழுத்துச் சென்றார். பாரதியாரும் நண்பர்களும் சொட்டச் சொட்ட மழையில் நனைந்து சென்றார்கள்.



பாரதியார் புதுவையில் வசித்த முதல்வீடு



சென்னை திருவல்லிக்கேணியில் பாரதியார் வசித்த வீடு



மகாகவியின் மனதைக் கவர்ந்த மடு.

பாரதியாரும், குவளைக் கண்ணனும் அன்றாடம் காலையில் குளித்த தியாகராஜப் பிள்ளை மடு. இம்மடுவிற்குச் செல்லும் வழியில் பாடப்பட்டதே ''பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி'' என்னும் பாடல்.



குயில்பாட்டு உதயமான தோப்பு



பாரதியார் குடும்பம்

உட்கார்ந்திருப்பவர்கள் : புதல்வி சகுந்தலா ('பாப்பா'), மனைவி செல்லம்மாள்.

நிற்பவர்கள் : புதல்வி தங்கம்மா, நண்பர் ராமு, நண்பர் விஜயராகவன், பாரதியார்.

பாரதியாரின் சீடர்: வ.ரா.



பாரதியாரின் சீடர்: பாரதிதாசன்.



பாரதியாரால் பூணூல் அணிவிக்கப் பெற்ற அரிசனச் சீடர் கனகலிங்கம்





கலவை சங்கர செட்டியார்



பாரதியாருக்கு
உதவியளித்த
செல்வந்தர்
ஆறுமுகம் செட்டியார்.



ஏழ்மையிலும் உதவிய சுந்தரேச அய்யர்
தமக்கு அதிக வருவாய் இல்லாத போதும், தம் மனைவியின் நகைகளை அடகு வைத்துக்கூடப் பாரதியாருக்குப் பணம் உதவியவர்.



பாரதியாரிடமும் அவரது குடும்பத்தாரிடமும் மிகுந்த பாசம் கொண்டிருந்த பணிப்பெண் அம்மாக்கண்ணு.



பிரம்ம ராய அய்யர் என்று பாரதியாரால் அழைக்கப்பட்ட பேராசிரியர் சுப்பிரமணிய அய்யர்.

# வரவே இல்லை!

—கி. வா. ஜகந்நாதன்.

"நான் ஒரு ஸ்ரீவைஷ்ணவன் ; வைதிக ஆசாரங்களில் தவறாத குடும்பத்திலே பிறந்தவன். ஜாதியென்றும் மதமென்றும் பிரிவு செய்யும் கொடுமையிலே கொக்கரிக்கும் சமூகக் காற்றைச் சுவாசித்தவன். பாரதியாருக்கு ஜாதியில்லை. சமயமில்லை. வரம்பில்லை; வழியில்லை. அவர் வைத்தது சட்டம்; போனது வழி. குடும்பத்திலே அவர் ராஜா. அவர் உருட்டலும், மிரட்டலும் குடும்பத்தைக் கதிகலங்கச் செய்யும். அடுத்த நிமிஷத்தில் நாய்க் குட்டிபோல் பணிந்துவிடுவார். அவரோடு என் வாழ்க்கை இணைந்து நின்றது எனக்கே ஆச்சரியத்தை உண்டாக்குகிறது''.

இவ்வாறு அவர் சொன்னார். அவர் வேறு யாருமல்ல; குவளைக் கிருஷ்ணமாச்சாரியார் தாம்; ''குவளைக் கண்ணன்'' என்ற பெயரால் பாரதியார் தமிழ்ப் பாட்டிலே பதித்துவைத்த பெரியார் அவர்.

பெரியவரென்று சொல்லும்போது அவருடைய உருவப் பெருமை, உள்ளப் பெருமை எல்லாம் ஞாபகத்துக்கு வருகின்றன. வாழ்க்கையின் சாரமற்று யமனோடு போராடிக் கொண்டிருந்த கடைசிக் காலத்தில் அவர் பேசிய பேச்சு, பாரதியாரைப் பற்றியதுதான்.

''எனக்குத் தெரிந்தவரை சொல்லிவிடுகிறேன். நீங்கள் ஒரு காரியம் செய்யவேண்டும். தமிழ்நாட்டில் பாரதி விழா எல்லாரும் கொண்டாடுகிறார்கள். ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். பாரதியாரோடு பழகிய நான் அவர் வாழ்க்கையோடு இணைந்து வாழ்ந்தவன். நல்ல வஸ்து நெடுநாள் உலகத்தில் தங்குவதில்லை. அவர் போய்விட்டார். எனக்கு ஏதாவது பொருளுதவி செய்தால், பாரதியார் விழாவில் ஒரு சிறந்த கடமையை நிறைவேற்றினதாக இருக்கும். இதை நாலு பேரிடம் சொல்லிப் பத்திரிகைகளில் பிரசுரம் செய்ய வேண்டும்'' என்று அவர் சொன்னார். அந்த விருப்பத்தை நிறைவேற்ற முடியவில்லை. அதற்குள் அவர் பாரதியாரைத் தேடிக் கொண்டு போய்விட்டார்.

பாரதியாரைப் பற்றி யார் விசாரித்தா லும் அன்போடு அவர் பழைய ஞாபகங்களை சொல்லுவார்; சொல்லும்போது இன்னும் பாரதியார் அருகில் இருப்பதாகப் பாவித்து கொள்வார்போல் இருக்கிறது. இல்லாவிட் டால் அவருக்கு அந்தச் சாமாசாரங்களை விவரிக்கும் போதெல்லாம் அவ்வளவு உத் ஸாகம் இருக்க நியாயமே இல்லை.

அவர் தொண்டையிலே ஒருவிதமான கர கரப்பு. தொண்டைக்குள்ளே ஏதோ அடைத் துக்கொண்டது போல இருக்கும். அதனோடே அவர் பாரதியார் பாடல்களைப் பாடுவார் அவர் பாட்டிலே ராகம் இராது; இனிமை இராது; பாவம் இராது. ஆனால் ஒருவகையான ஜீவன் மாத்திரம் இருக்கும். பாரதியார் பாடிப் பாடிக் கேட்டு அதிலே ஊறி ஊறிப் பழகி, அன்போடு தாமும் பாடிப் பாடி இன்ப மடைந்தவர், அவர். காலம் பாரதியாரையும் அவர் பழக்கத்தையும் மறைத்துவிட்டது. 'குவளைக் கண்ண'னுக்கும் வயசாகி விட்டது அடிக்கடி பாடச் சந்தர்ப்பமும் இல்லை. ஆயி னும் அந்தப் பழைய அன்பு, அந்தப் பழைய இன்பம், பாரதியாரது பாடலைச் சொல்லும் போது அவருக்கு இருந்தனவென்பதை அவ ரிடம் பாடல்களைக் கேட்ட யாவரும் எளிதில் தெரிந்து கொண்டிருக்கலாம்.

புதுச்சேரியிலே பாரதியாரை ஊன்றவைத் ததற்கு மூலமாக இருந்தவர் குவளைக் கிருஷ்ண மாச்சாரியார். அவருக்கு எப்போதும் உற் தோழருமாக இருந்தார். கிருஷ்ணமாச்சா யாருக்கு இளமை முதலே சாமியார்களை கண்டால் அதிகப் பிரியமாம். பல சாமியார் கள் அவருக்குப் பழக்கம். அவர்களை ஒவ்வொ ருவராகப் பாரதியாருக்கும் பழக்கம் செய்து வைத்தாராம். கோவிந்தசாமி, குள்ளச்சாமி யாழ்ப்பாணத்துச்சாமி—இந்தச் சாமிகளெல் லாம் குவளைக் கண்ணனால் கிடைத்தவர்கள்.

''கிருஷ்ணா'' என்று அன்புடன் ஒருமை யிலே கூப்பிடுவாராம் பாரதியார்.

* * * *

கிருஷ்ணமாச்சாரியார் ஆங்கிலம் பிரெஞ்சு இரண்டிலும் அறிவு வாய்ந்தவர் 1922-ஆம் வருஷம் 'ராலி' கம்பெனியிலிருந்து உத்தியோகம் தருவதாகக் கடிதம் வந்ததாம் அதைக் கிருஷ்ணமாச்சாரியார் பாரதியாரிடம் கொண்டு போய்க் காட்டினார். அந்த மனுஷ்ய சிறிதேனும் தயா தாட்சண்யமின்றி அதை கிழித்துப் போட்டு விட்டாராம். திருவண்ணா மலையில் அந்தக் கம்பெனியார் சில வேலைகளை நடத்தி வந்தபடியால் அங்கே வரும்படி கிருஷ்ணமாச்சாரியாருக்கு உத்தரவு வந்திருந் தது.

பாரதியார் உத்தரவைக் கிழித்துப்போட டவுடன் கிருஷ்ணமாச்சாரியார், ''என்ன இப்படிச் செய்துவிட்டீர்களே?'' என்றார்.

''கிருஷ்ணா, நீ திருவண்ணாமலைக்குப் போய்விட்டால், எனக்கு இங்கே யார் துணை?'' என்று பாரதியார் கேட்டார்.

''வாஸ்தவம். நமக்கு இவர் துணை இவருக்கு நாம் துணை'' என்ற திருப்தியோடு அவர் இருந்துவிட்டார்.




''பாரதியார் என்னை முதலியார்கள் வீட்டிலெல்லாம் சாப்பிடச்சொல்வார். முதலில் நான் மறுத்தேன். எங்கள் வீட்டுக்குத் தெரிந்தால் தலைபோய்விடுமென்று சொன்னேன். நாளாக நாளாகப் பாரதியாருடைய பழக்கம், சிறிது நேரம் அவரைப் பிரிந்திருப்பதுகூடப் பெரிய துன்பமென்று தோற்றச் செய்விட்டது. அதனால் சில ராத்திரிகளில் மாதா கோவில் வீதியிலுள்ள லோகநாத முதலியார் வீட்டில் அவரோடு சாப்பிட்டிருக்கிறேன்.''

''உங்கள் வீட்டிற்கு இந்த விஷயம் தெரியாமலே இருந்ததா?'' என்று நான் கேட்டேன்.

''குறிப்பாகத் தெரியும். தெரிந்து என்னை என்ன செய்ய முடியும்? என்னை ஒரு 'தத்தாரி' என்று நினைத்துவிட்டார்கள். பாரதியாரையே அப்படி நினைத்தவர்கள் எவ்வளவு பேர்? அவருடைய தோழனுக்கு மாத்திரம் அந்தக் கௌரவம் வருவது கூடாதா?''

குவளைக் கிருஷ்ணமாச்சாரியாரைக் கடைசி முறையாகக் கண்டபோது அவர் மிகவும் மெலிவாக இருந்தார். ''நான் இன்னும் இரண்டு நாளில் ஆஸ்பத்திரி போகப் போகிறேன். பாரதியாரோடு போய்ச் சேருங் காலம் வந்துவிட்டதென்று தோன்றுகிறது. ஏதாவது பத்திரிகையில் வெளிவந்தால் ஆஸ்பத்திரிக்கு அனுப்புங்கள்'' என்று மேல்மூச்சு வாங்கிக்கொண்டு அவர் சொன்னார். எனக்கும் உடனிருந்த நண்பருக்கும் வயிற்றை என்னவோ செய்தது.

'' 'யோகசித்தி' பார்த்திருக்கிறீர்களா?''

''படித்திருக்கிறேன்''.

''ஒரு விஷயம் சொல்லுகிறேன்; கேளுங்கள்.''

''ஐயோ! உங்களுக்கு மேல்மூச்சு வாங்குகிறது. உங்கள் உடம்பு சௌக்கியமாகி வந்த பிறகு சாவகாசமாகக் கேட்டுக் கொள்ளுகிறேனே.''

''அவகாசம் எங்கே கிடைக்கப் போகிறது? இப்பொழுதே மெல்லச் சொல்கிறேன்'' என்று அவர் வற்புறுத்தினார்.

எங்களுக்குக் கேட்பதில் ஆசைதான்! ஆனால் அவர் இருந்த நிலையில் அவரைப் பேச அனுமதிப்பது பெரும்பாவமாகத் தோற்றியது. அவரோ சொல்லித்தான் தீருவாரென்று தெரிந்தது. பாரதியார் பேச்சை மூச்சிருக்கு மட்டும் பேச வேண்டும் என்று சங்கற்பம் செய்து கொண்டவரைப் போலக் காணப்பட்டார்.

''புதுச்சேரியிலே வீராசாமி பிள்ளை தோப்பு என்று ஒரு பெரிய தோப்பு இருக்கிறது; நாலு ஐந்து ஏக்கரா பூமி விஸ்தீரணமுள்ளது. அங்கே ஒரு குளமும் பங்களாவும் உண்டு. பாரதியார் அடிக்கடி அந்த இடத்திற்குப்போய் உல்லாஸமாக இருந்து வருவார். ஒருநாள் சில நண்பர்களுடன் சேர்ந்து அங்கே காலையில் போனார். நானும் போயிருந்தேன். அந்தக் குளத்திலே ஸ்நானம் செய்தோம். சாப்பாட்டையும் முதலியார் வீட்டிலிருந்து அங்கேவருவித்து விட்டார். எங்கள் எல்லோருக்கும் சேர்த்து வருவித்தார்.



குவளைக் கண்ணன்

முன்பின் பழக்கமில்லாத புதுவையில் நெருக்கடியான நிலையில் முதன்முதலாக பாரதியாரின் உதவிக்கு வந்தவரும், பிற்காலத்தில் திருவல்லிக்கேணியில் யானையின் காலடியில் கிடந்த பாரதியாரைக் காப்பாற்றியவருமான குவளையூர் கிருஷ்ணமாச்சாரியார். பாரதியார் பாடல்களில் மிகவும் பாராட்டப் பெற்றவர்.

''நான் முதலியார் வீட்டில் ராத்தி வேளையில் சாப்பிடுவது உண்டு. ஆனால் அ போது அவ்வளவு பேருக்கு நடுவில் அந் உணவைச் சாப்பிடுவதற்குச் சிறிது லஜ்ஜை யாக இருந்தது; 'கிருஷ்ணா, நீ சாப்பிடத்தா வேண்டும்' என்றார் பாரதியார்; 'வேளாள கொடுக்கிற அரிசி உதவும்; சோறு உதவாதா' என்று கேள்வி கேட்க ஆரம்பித்து விட்டார் எனக்கு அவரோடு வாய் கொடுக்கத் தைரிய இல்லை; பேசாமல் நானும் சாப்பிட்டேன்.''

நடு நடுவே அவர் பெருமூச்சு வாங்கி கொண்டே சொன்னார். அவர் சாப்பிட் கதையை முடித்தவுடன், ''போதும்; பிற பேசிக்கொள்ளலாம்; சிரமமாக இருக்குமே' என்றேன்.

''இந்த விஷயம் அவ்வளவு முக்கிய அல்ல; நான் சொல்ல வந்த சமாசாரமே வேறு'' என்றார் அவர்.

''கொஞ்சம் சிரம பரிகாரம் செய்து கொள்ளுங்களேன்''.

''அதற்காகத்தான் இதைக் கேட்க சொல்கிறேன். பாரதியார் அன்றைக்கு யோக சித்தியை பாடிக் காட்டினார். ஆஹா! எத்தக உத்ஸாகம்!''

எங்களைப் பார்த்துப் பேசிக்கொண் இருந்த குவளைக் கிருஷ்ணமாச்சாரியா

# குழந்தைக்குத் தேவை சத்தான உணவு பயிருக்குத் தேவை விஜய்

குழந்தையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவும் சத்துணவைப்போலவே பயிர்களும் நன்கு வளர்ந்து முழுப் பலனையும் தர தழை, மணி, சாம்பல் சத்துக்கள் அவசியம்.

ஆனால் நெற்பயிருக்கு தழைச்சத்தைத்தரும் யூரியாவை மட்டும் இட்டால போதுமானது எனக் கருதக்கூடும். அவ்வாறு யூரியாமட்டும் இட்டால் பயிர்கள் பூச்சிகளால தாக்கப்படும். வறட்சியைத் தாங்காது. மேலும் நாளடைவில் மண்ணின் தன்மைகெட்டு விளைச்சலும் குறையும்.

தழைச்சத்துடன் மணி, சாம்பல் சத்துக்களை இடுவதுதான் லாபகரமானது என ஆராய்ச்சிகள் நிருபித்துள்ளன:—

நெல் (ஏக்கருக்கு)

| உரம் | சாகுபடி செலவு ரூ. | விளைச்சல் (மூட்டை 75 கிலோ) | வருவாய் (1 மூட்டை 60 ரூ. விகிதம்) |
|---|---|---|---|
| 40 கிலோ தழைச்சத்து மட்டும் | 1040 | 18 | 1080 |
| 40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து | 1180 | 23 | 1380 |
| 40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து 20 கிலோ சாம்பல்சத்து | 1215 | 30 | 1800 |

இவ்வாறு மூன்று சத்துக்களையும் இடும் போது கூடுதல் செலவு ரூ. 175க்கு அதிக வருவாய் ரூ. 720 கிடைக்கிறது.

அதிக வருவாய் தரும் தழை, மணி, சாம்பல் சத்துக்களை சமச்சீர் அளவில் கொண்டது விஜய் 17-17-17. இத்துடன் விஜய் யூரியாவையும். உங்கள் நெற்பயிருக்கு உபயோகித்து அதிகப்பயன் பெறுங்கள்.

VIJAY
MADRAS FERTILIZERS

மேலும் விவரங்களுக்கு கீழ்கண்ட முகவரிக்கு எழுதுங்கள்:
ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், திருச்சி 620 017






MFL-1162


தலையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டார். ஒரு நிமிஷ நேரம் அப்படிஇருந்துவிட்டு மறுபடியும் எங்களை நோக்கும்போது கண்ணைத் துடைத்துக் கொண்டார். அவர் உணர்ச்சி வசப்பட்டபோது இப்படிச் செய்வதைப் பல முறை பார்த்திருக்கிறேன்.

துக்கம் தொண்டையை அடைத்தது; ஒரு மிடறு எச்சிலை விழுங்கிக் கொண்டார்.

விண்ணு மண்ணுந்தனி ஆளும்—எங்கள்
வீரை சக்திநின தருளே—என்றன்
கண்ணுங் கருத்துமெனக் கொண்டு—அன்பு
கசிந்து கசிந்துகசிந் துருகி

என்று பாட ஆரம்பித்துவிட்டார்.

''என்ன இது? பாட அல்லவா ஆரம்பித்து விட்டீர்கள்? உங்களுக்குச் சக்தி இல்லையே! வேண்டாம். நிறுத்துங்கள்.''

''பாரதியார் பாட்டைச் சொல்லும்போது உயிர் போனால் போகட்டுமே; அதைக் காட்டிலுமா வேறு ஆனந்தம் இருக்கப்போகிறது!''

அந்த வார்த்தைகளிலேதான் எத்தனை ஆர்வம்! பாரதிப் பித்துக்குளித் தனத்துக்குத்தான் எத்தனை வன்மை?

அவர் பதினைந்து நிமிஷம் யோகசித்தியிலிருந்து பல பாடல்களைச் சொல்லித்தான் நிறுத்தினார். அவர் எங்களுக்காகவா சொன்னார்? இல்லை, இல்லை, தமக்காகவே, தமது இன்பத்துக்காகவே, அந்தப் பழையகாட்சிகளை உள்ளத்திலே கண்டு அனுபவிப்பதற்காகவே அவர் பாடினார்.

''நான் ஏழை, அறிவில்லாதவன். அவர் எனக்கும் தமது செய்யுட்களிலே ஒரு ஸ்தானம் கொடுத்திருக்கிறார். 'கிருஷ்ணா, பொருட் செல்வம் அழிந்து விடுமடா; கவிச் செல்வம் தருகிறேன் உனக்கு' என்று சொல்லியிருக்கிறார். இந்த வார்த்தைகளைக் குவளைகிருஷ்ணமாச்சாரியாரோடு பழகிய யாவரும், ஒரு முறையல்ல, பல முறை கேட்டிருப்பார்கள்; இந்த வார்த்தைகளை அவர் சொல்லும்போது அவருக்கு இருந்த சந்தோஷத்துக்கு ஈடும் உண்டோ?

''சரி, போய்வாருங்கள்; உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று நான் சொல்லி அவரை ரிக்ஷாவில் ஏற்றினேன்.

''இந்தச் சரீரமே அநித்தியமென்றால் அதை ஒட்டிய அவஸ்தைகள் நித்தியம் ஆகுமோ? என்று பாரதியார் அடிக்கடி சொல்வார். நான் போய் வருகிறேன்.''

அவர் போவார்; வரமாட்டாரென்று எங்களுக்குப் பட்டது; அவர் உடம்பு, மலை போல இருந்த சரீரம், கரைந்து தளர்ந்து போனதிலிருந்து அப்படி நினைக்க வேண்டியிருந்தது. நாங்கள் நினைத்தபடியேதான் நடந்தது; அவர் ஆஸ்பத்திரிக்குப் போனார்; பிறகு வரவே இல்லை. பாரதியார் வந்தால் வருவார்.

(கலைமகள் காரியாலயம் வெளியிட்டுள்ள 'ஒரு சாண் வயிறு' என்னும் நூலிலிருந்து...)

## பாரதியின் வாழ்க்கையை மாற்றிய நிகழ்ச்சி!

1905-ம் வருஷம் காசியில் காங்கிரஸ் மகாசபை கூடிற்று. தெரிந்த பழைய ஊரான காசியை மீண்டும் பார்க்கலாம் என்றுதான் பாரதியார் போனாரோ என்னவோ, தெரியாது.

காசியிலிருந்து திரும்பும்போது கல்கத்தா அருகிலுள்ள டம்டம் என்ற இடத்துக்குச் சென்று, அங்கே ''விவேகானந்தரின் தர்மபுத்திரி'' நிவேதித்தா தேவியை தரிசித்தார். பாரதியின் வாழ்க்கையையே அடியோடு மாற்றிவிட்டது இந்தச் சந்திப்பு!

நிவேதித்தா தேவி ஆங்கில மாது. பூர்வத்தில் மார்கரட் இ. நோபிள் என்ற பெயர்கொண்ட அவர், ஸ்வாமி விவேகானந்தரின் வீர முழக்கம் கேட்டு, பழம் பெரும் புனித பூமியான பாரத நாட்டுக்குத் தொண்டு புரியவென இங்கே வந்த இளம் மாது. விவேகானந்தரின் ஆசி பெற்று சந்நியாஸ மார்க்கம் ஏற்று, ராமகிருஷ்ண மிஷனின் முதல் சந்நியாஸினியாகத் தொண்டு புரிந்தார், அவர். நிவேதித்தா தேவி பேச்சிலும் செயலிலும் அக்னி ஸ்வரூபமானவர். தேச பக்தியே தெய்வ பக்தியாய்க் கொண்டவர் அவர். முப்பது கோடி மக்களும் தெய்வங்களென வணங்கிய அவர், அயர்வறியாத் தொண்டர்.

இந்தப் புனிதவதியைப் பாரதியார் தரிசித்த போது, நிவேதித்தா தேவி, ''மகனே உன் மனத்தில் பிரிவுணர்ச்சியை நீக்கு. ஜாதி, மதம், குலம், கோத்திரம் என்ற அநாகரிகமான வித்தியாசங்களை விடு. அன்பை மட்டும் அகத்தில் கொள். பிற்காலத்தில் நீ ஒரு தீரனாக, சரித்திரப் பிரசித்தி பெற்ற தேவனாக வருவாய்'' என்றுரைத்தாராம்.

*(—சித்திரபாரதி என்னும் நூலிலிருந்து)*







# அமரகவி பாரதியார்

## திருமதி சகுந்தலா பாரதி

[பாரதியின் மகளார் அண்மையில் காலமாகிய திருமதி சகுந்தலா பாரதி அவர்கள் பாரதி யாரின் கவிதைகள் குறித்தும், அவரது கவிதை பிறந்த கதை குறித்தும் இரண்டாண்டுகளுக்கு முன்னர் அளித்த பேட்டிக் கட்டுரை]

சென்னை தியாகராய நகர் கிரிபித் சாலையி லுள்ள 5-ஆம் எண்ணுள்ள இல்லம்.

'பாரதி' என்ற எழுத்துக்கள் பொறிக்கப் பட்ட அந்த இல்லத்தினுள் நுழைகிறோம். முகம் மலர நம்மை வரவேற்பவர், அமரகவி பாரதியாரின் திருமகள் திருமதி சகுந்தலா பாரதி அவர்கள்.

வீட்டு முகப்பில் பாட்டுக்கொரு புலவன் பாரதியின் திருவுருவப் படமொன்று பெரிய அளவில் கம்பீரமாய்க் காட்சியளிக்கிறது. அமைதியான அந்த வீட்டைச் சுற்றிலும் உள்ள அழகான தோட்டம் நம்மைக் கவர்கின்றது.

'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்' என்பார்கள். திருமதி சகுந்தலா பாரதிக்கும் கவிபாடும் ஆர்வமும் ஆற்றலும் சிறு வயது முதற் கொண்டே இருந்து வரு கிறது. 'ரசிகா' என்ற புனை பெயரில் இவர் பல கவிதைகளை எழுதிப் பலரின் பாராட்டுக் களைப் பெற்றுள்ளார்.

பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் 'கவிஞர் பெருமன்றம்' என்ற அமைப்பைத் தொடங்கியிருந்தார். அந்த மன்றத்துக்குப் பெரும் புலவர்களெல்லாம் வருவார்கள். அவர்களுக்கெல்லாம் இவரை அறிமுகம் செய்து வைத்து, 'சகுந்தலா நன்றாகக் கவிதை பாடு வாள்' என்று சொல்லி மகிழ்வாராம்.

திருமதி சகுந்தலா பாரதி தமது ஐந் தாவது வயது அனுபவத்தைக் கூறுகிறார்.

''எனக்குச் சுமார் ஐந்து அல்லது ஆறு வயதிருக்கும்போது, 'நாமும் அப்பாவைப் போல் பாட்டுக் கட்ட வேண்டும்' என்று ஆசை தோன்றியது. அப்போது சரியாக எழுதப் படிக்கக் கூடத் தெரியாது. என்றாலும் ஓயாமல் கவிதைகளின் நடுவே பழகுவதால் பாட்டுக் கட்டுவது அத்தனை சுலபமாகத் தோன்றியது. உடனே, ஒரு பாடலை எழுதினேன். அதை என் தாயிடம் பாடிக் காண்பித்தேன்.

'மாணிக்க மேடையில் மான்விளையாடையில்
—சகியே
நாமிருவரும் செல்வோமே!

குயில்கள் மயில்கள் எல்லாம் குடியிருக்கும்
சோலையில்
மகிழ்ந்து நாமிருவரும் மலர் கொய்யப்
போவோம்.



ஆண்களில்லாக் காட்டில் பெண்கள் அரசாட
யில்—சகி
நாமிருவரும் செல்வோமே!''

''நான் பாடிய இந்தப் பாடலைக் கேள் பட்டதும் என் தந்தையார் அடைந்த மகி சிக்கு அளவே இல்லை. அவரது உற்ற நண் பாரதிதாசன் போன்றோரிடம் எல்ல சொல்லிப் பெருமைப்பட்டார்.''

ஒரு நாள் காலை.

பாரதியார் சகுந்தலாவிடம் 'பாப் நீயும் நானும் சேர்ந்து ஒரு பாட்டு எ

வாம்!' என்றாராம். தன் அருமை மகள் குந்தலாவை அவர் செல்லமாகப் 'பாப்பா' ன்றே அழைப்பாராம். சகுந்தலாவும் 'சரி' யன்று சொல்லவே இருவரும் பாட்டு எழுத ாடிக்குச் சென்றனர். பாட்டை எப்படி ழுதுவது?

முதலில் பாப்பா சொல்ல வேண்டியது. றகு அப்பா பாட்டு அமைக்க வேண்டியது. ப்படியே பாட்டு வளர்ந்தது. அந்தப் ாட்டுதான் 'காலைப் பொழுது' என்ற பாட ாய் மலர்ந்தது. "அது தவறுதலாகக் 'காதற் ாட்டுக்கள்' என்ற தலைப்புடன் வெளியிடப் ட்டிருக்கிறது'' என்கிறார் திருமதி சகுந்தலா.

இப்படிஎழுதியகையெழுத்துப்பிரதிகளில் ரதியார் மறக்காமல், 'சகுந்தலா பாப்பாவும் ப்ரமணிய பாரதியும் எழுதியது' என்று றிப்பிடுவாரென்றால் அவர் தம் மகள் மீது வத்துள்ள பேரன்பினை நன்கு அறியலாம்.

குழந்தைகள், பள்ளியில் எழுத்துக்களைக் ட்டி வார்த்தை சேர்க்கும் விளையாட்டு விளை டுவதை நாம் பார்த்திருக்கிறோம். அதைப் ால் பாரதியாரும், ஒரு நாள் தம் மகளையும், ற மாணவர்களையும் அழைத்து 'பாட்டுச் ர்க்கும்' விளையாட்டைக் கற்றுக் கொடுத் ராம்.

ஒருவர் ஒரு பதம் சொல்ல, அதை பாரதி ர் வரிசைக் கிரமமாகப் பொருள் தோன்றும் பாட்டிசைத்துத் தருவார். உதாரணமாக:

முதலாமவர் : சக்தியை
இரண்டாமவர் : கொண்டாடு
மூன்றாமவர் : தினந்தோறும்
பாரதியார் : சக்தியை நித்தம் கொண்டு.

முதலாமவர் : கவலையில்லாமல்
இரண்டாமவர் : சக்தியின்பாதங்களில்
மூன்றாமர் : முத்துமாலைகள்
நான்காமவர் : ரத்தின ஆரங்கள்
ஐந்தாமவர் : வைத்துப் பணிந்திடு.

இந்தப் பதங்களை வைத்துப் பாரதியார் டிய பாட்டு இதோ :

''சக்தியை நித்தம் கொண்டாடு
சஞ்சலம் நீக்கி—சக்தியை
முத்துமாலைகள் ரத்னஹாரங்கள்
சக்தி பதத்தில் அணிந்து பணிந்திடு —
சக்தியை'

குழந்தைகள் என்றால் பார்த்த பொருளைக் டு அடம் பிடிப்பர் : ஆனால் சிறுமி சகுந்த வா எந்த விளையாட்டுச் சாமான்களையும் டுத் தொந்தரவு பண்ணியதில்லை. அவர் ட பொருளெல்லாம் நல்ல நல்ல கதைகள், டுக்கள் தாம்!

பாரதியார் புதுச்சேரியில் இருந்தபோது அருமை மகளை அழைத்துக் கொண்டு கரைக்குப் போவது வழக்கம். அங்கே, கடலின் ஓரத்திலே சகுந்தலா அப்பாவிடம் பா! அப்பா! கிளிஞ்சல் கதை சொல்லேன். ா ஓடுகிறதே அந்த நண்டுக் கதை சொல் ர்!' என்று வற்புறுத்துவாராம்,

அப்போது கிளிஞ்சலைப் பற்றியோ, நண் பற்றியோ ஒரு கதை வந்து விடும் து கவிதை பிறந்துவிடும் பாரதியாருக்கு,

பாரதியாரின் சொந்த ஊர் எட்டைய புரம் என்று நமக்குத் தெரியும்.

எட்டையபுரம் மன்னருக்கும், சிறுவன் சுப்பையாவுக்கும் (பாரதிக்கும்) நெருங்கிய தொடர்பு இருந்தது. தமிழார்வமுள்ள மன்னர், சிறுவன் பாரதியிடம் தம் சிந்தையைப் பறிகொடுத்தார் என்றே கூறவேண்டும். அவ்வளவு ஏன், அருட்கவி பாரதியின் பாடல்கள் முதன் முதலில் விரும்பப்பட்ட இடமே அந்த எட்டையபுரம் மன்னரின் அரண்மனை தானே?

பாரதியாரின் தாத்தா திரு. இராமசாமி சிவன் கிராம முன்சீப்பாக இருந்தவர். அவரிடம் தேவாரம், திருவாசகம் எல்லாம் சிறுவன் பாரதி கற்றுக் கொண்டான். இதனால் சின்னஞ் சிறிய வயதிலேயே பாரதிக்குத் தமிழார்வம் வளர்ந்தது.

இவர் தமிழார்வம் மேலும் வளர்வதற்கு தூண்டுகோலாய் இருந்தது, எட்டையபுரம் அரண்மனையின் புலவர் அவை.

## மிஸ்டர் C. சுப்பிரமணிய பாரதி !

பாரதியார் முதலில் மிஸ்டர் C. சுப்பிரமணிய பாரதி என்று தம் பெயரை வெளியிட்டிருக்கிறார்: பின்னால் காளிதாஸன், சக்திதாஸன் என்ற புனைபெயர்களில் பல கட்டுரைகள் எழுதியிருக்கிறார். தம் உண்மைப் பெயரிலேயே எழுதும்போது ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதி என்று குறித்திருக்கிறார்.

இளம் பாரதிக்கு எட்டு அல்லது ஒன்பது வயதிருக்கும். பெரும் புலவர்களெல்லாம் அரண்மனையில் வந்து பல்வேறு விஷயங்களைக் குறித்து விவாதிப்பார்களாம். சில சமயங்களில் விவாதம் காரசாரமாகக் கூட முடிவதுண்டு. இந்தக் கூட்டங்களுக்கெல்லாம் தவறாமல் போவார் பாரதி.

ஒருசமயம் வழக்கம்போல் புலவர்கள் அவைக்கு வந்தனர். ஒரு புலவர் எழுந்து, 'அண்ணாமலை ரெட்டியார் காவடிச்சிந்து போல் யாராவது பாட முடியுமா?' என்று உரக்கக் கேட்டார். சிலர் 'முடியும்' என்றும், சிலர் 'முடியாது' என்றும் வாதிட்டனர். இதைக் கேட்டு அவையில் இருந்த பாரதியார் கேலியாகச் சிரித்தார். உடனே ஒரு புலவர் சினம் மிகுந்தவராய், 'பாட முடிந்தவர்கள் நேரே அவைக்கு வந்து பாடலாம்!' என்றாராம்.

மறுநாள் எட்டையபுரம் மன்னர், முந்தைய நாள் புலவர்கள் விவாதித்ததை அறிந்து எல்லாப் புலவர்களுக்கும் அழைப்பு விடுத்தார். அனைவரும் அவைக்கு வந்தனர். மன்னர் புலவர்களைப் பார்த்து, 'நம்ம சுப்பையா ஒரு பாடலை எழுதிக் கொண்டு வந்திருக்கிறான். நீங்கள் கேட்ட அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்து போல் இந்தப் பாடல் அமைந்திருக்கிறது' என்று சொல்லி அந்தப் பாடலைப் புலவர்கள் மத்தியில் அரங்கேற்றினார். அது மட்டுமா? சிறுவன் சுப்பையாவின் கவி ஆற்றலை உணர்ந்து 'பாரதி' (சரசுவதி) என்ற பட்டத்தையும் அளித்துச் சிறப்பித்தார். அப்போது பாரதிக்கு வயது எத்தனை தெரியுமா? பதினொன்று!

பாரதி பாடிய அந்தக் காவடிச் சிந்து இதுதான் :

'பச்சைத் திருமயில் வீரன்
அலங் காரன் கௌமாரன்—ஒளிர்
பன்னிரு திண்புயப் பாரன்—அடி
பணி சுப்பிர மணியர்க் கருள்
அணி மிக்குயிர் தமிழைத் தரு
பக்தர்க் கெளிய சிங் காரன்—எழில்
பண்ணு மஞ்சலத் தூரன்'

என்று கணீரென்று இனிமையாகப் பாடுகிறார் திருமதி சகுந்தலா பாரதி.

சிறுமி சகுந்தலாவுக்கு அப்போது ஐந்து வயது இருக்கும்.

பாரதியார் தம் வீட்டு மாடியில் தம் மகளை மடி மீது உட்கார வைத்துக் கொண்டு கதைகள் பல சொல்லிக் கொண்டிருந்தார். சகுந்தலாவின் தாய் மாடி மீது வந்த பிறகு தான், தாம் ஒரு பொருளை மறந்து வைத்து விட்டதை உணர்ந்தார். உடனே தந்தை மடி மீது உட்கார்ந்து கதை கேட்டுக் கொண்டு இருந்த சகுந்தலாவைப் பார்த்து, தாம் மறந்து வைத்து விட்ட அந்தப் பொருளை எடுத்து வரும்படிச் சொன்னாராம்.

சுவாரசியமாகக் கதை கேட்டுக் கொண்டிருந்த சிறுமி சகுந்தலாவுக்கு அம்மாவின் கட்டளை ஆத்திரத்தை உண்டாக்கியது. உடனே 'நான் எடுத்து வர மாட்டேன் போ!' என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டாராம்.

இதைக் கண்ட பாரதி உடனே 'தாய் சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா!' என்றாராம்.

சிறுமி சகுந்தலாவின் மனத்திலோ, அப்பாவுக்கு உள்ள பேரும் புகழும் அம்மாவுக்கு இல்லையே! அம்மா என்ன வெறும் சமையல் தானே செய்து போடுகிறாள்? என்ன இருந்தாலும் அம்மா மட்டம்தான் . . .'' என்ற தவறான எண்ணம் புகுந்து கொண்டிருந்தது!

அந்த எண்ணத்தைப் போக்க பாரதியார் பெரும்பாடுபட்டார். தாய் எத்தனை உயர்ந்தவள் என்பதைப் பிஞ்சு மனத்தில் பதியும் வண்ணம் உபநிடத்திலிருந்து குரங்கு, பூனைக் கதைகள் முதலானவற்றை இனிமையாக எடுத்துச் சொன்னார் பாரதி. தாய்நாடு, தாய்மொழி என்றெல்லாம் தாயை முன்வைத்தே சொல்கிறோம். எனவே, தாய்க்கு உள்ள உயர்ந்த இடத்தை உணர்த்துகின்ற வகையில் பல நீதிக் கதைகளைச் சொல்லிக் கொண்டிருக்கும்போது, உடனே சிறுமி சகுந்தலா, 'அப்படியானால் நான் எப்படியெல்லாம் நடந்துகொள்ள வேண்டும். அதைச் சொல்லுங்கள் அப்பா' என்று கேட்டாராம். அப்போது பிறந்தது தான் 'ஓடிவிளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா!' என்று தொடங்கும் 'பாப்பாப் பாட்டு' என்னும் புகழ்வாய்ந்த பாடல்! 64 வரிகளுள்ள இந்தப் பாட்டில்,

'சோம்பல் மிகக் கெடுதி பாப்பா—தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா'

என்ற வரிகள் வருவதைக் கவனிக்க வேண்டும்.

இன்னொரு இடத்தில்,

'பொய் சொல்லக் கூடாது பாப்பா—என்றும்
புறஞ்சொல்லலாகாது பாப்பா
தெய்வம் நமக்குத் துணை பாப்பா—ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா!'

என்ற அடிகள் இவர் மனத்தில் ஆழப் பதிந்திருக்கின்றன.

ஐந்து வயதில் நடந்த சம்பவம் ஒன்று இன்று அறுபதுக்கு மேற்பட்ட வயதிலுங்கூடப் பசுமையாக நினைவு இருக்கிறது இவருக்கு. அந்தச் சம்பவத்தை மிக அழகாகக் கூறுகிறார் திருமதி சகுந்தலா பாரதி.

## நோய்க்கு இடங்கொடேல் !

நோயென்றால் பாரதியாருக்குப் பயம் அதிகம். நோய்க் கிருமிகள் அணுகக்கூடாதென்று நிரம்பவும் எச்சரிக்கை எடுத்துக் கொள்ளுவார். வெளியிலிருந்து வீட்டிற்குள் நுழையுமுன்னே யாராயிருந்தாலும் காலை அலம்பிச் சுத்தம் செய்து கொண்டுதான் வரவேண்டுமென்று கடுமையான உத்தரவு செய்திருக்கிறார். ஹோட்டல்களிலிருந்து ஏதாவது வாங்கி உண்ணக் கூசுவாரம். "ஓயாமல் வியர்தி பயம் கொண்டு உளைகின்ற நெஞ்சமே! தூ! தூ! தூ! கோழை'' என்று அவர் தம்மைப் பற்றிச் 'சித்தக் கடலில்' எழுதியிருக்கிறார்.



''எனக்கு ஐந்து வயதாக இருக்கும்போது ஒரு சமயம் கடுஞ் சுர நோய் கண்டது. காய்ச்சலின் வேகத்தால் நாக்குழறிவிட்டது. என் தந்தையின் உண்மைச் சிநேகிதருள் ஒருவரும், என் வளர்ப்புத் தந்தையாக நான் கருதியருவமான திரு. பொன்னு. முருகேசம் பிள்ளை அவர்கள் என்னைப் பார்க்க வந்திருந்தார்.

'என் தந்தை ''பாப்பா! யார் வந்திருக்கிறூர்கள் பார்!'' என்றூர். முருகேசம் பிள்ளை என்று சொல்ல எண்ணிய எனக்கு சுரவேகத்தால் நாக்குழறிப் போயிற்று. ''முருகேழ பிள்ளை'' என்று சொன்னேனும். என் தந்தை சுவரில் மோதிக் கொண்டார், புலம்பினூர்.

'பாப்பா! கட்றகரை மேடையிலிருந்து சிங்கம் கர்ஜிப்பது போலப் பிரசங்கம் செய்யப் போகிறூய் என்று எண்ணியிருந்தேனே! என்ன, குற்றம் செய்ததனுல் குழந்தைக்கு இக் கதி நேர்ந்தது? தாய், தந்தையரின் செய்கைகள் மக்களைப் பாதிக்கின்றன. சரீர வாதனையைத் தான் அனுபவிப்பதைவிடத் தன்னில் இனியார் தம் மக்கள் அனுபவிப்பதைப் பார்ப்பது பதின் மடங்கு கொடியது! நான் என்ன குற்றம் செய்தேன்? என்னிடமுள்ள கெட்ட பழக்கம் நான் புகையிலை போட்டுக் கொள்வது ஒன்று தான். அதையும் இன்றுடன் விட்டேன்'' என்று சபதங் கூறினூர்.

'காய்ச்சல் டைஃபாயிட் சுரமாதலால் குணமாக மூன்று மாத காலமாயிற்று. கொஞ்சம் குணம் தெரிந்தவுடன் என் தந்தையார் என் தாய் செல்லம்மா பாரதிக்காக எழுதிய பாட்டுத்தான்—

பக்தியினூலே—இந்தப்

பாரினில் எய்திடும் மேன்மைகள் கேளடீ' என்ற பாட்டு.

'இந்தப் புவிக்கே—இங்கோர் ஈசனுண்டாயின்
அறிக்கையிட்டேனுன்றன்
கந்தமலர்த்தாள்—துணை காதல் மகவு
வளர்ந்திட வேண்டும் என் சிந்தை யறிந்தே
அருள் செய்திட வேண்டும்
என்றூல் அருளெய்திடும்! (பக்தியினூலே)

எட்டையபுரத்தில் பாரதி படித்துக் கொண்டிருக்கும்போது இவரோடு படித்த காந்திமதி நாதபிள்ளை என்ற மாணவர் சற்று ஆணவமுள்ளவர். அவர் தாம் தமிழ் படித்திருக்கிறூம் என்ற கர்வத்தில் பாரதியிடம், 'பாரதி சின்னப்பயல்' என்ற சொற்களைக் கடைசி அடியின் முடிவாக வைத்து ஒரு வெண்பாவைப் பாட முடியுமா'? என்று கேட்டார். அருட்கவியான பாரதிக்கு இது என்ன பிரமாதம்? அவர் ஆணவத்தை அடக்கும் வகையில்,

'காரதுபோல் நெஞ்சிருண்ட காந்திமதி நாதனைப்
பார்அதி சின்னப் பயல்!''

என்றூரே பார்க்கலாம்!

—பேட்டி : பி. வி. கிரி.
நன்றி : கல்கி.

## பாரதியாரும் விளக்கெண்ணெய்ச் செட்டியாரும்!

''வாரும் விளக்கெண்ணெய்ச் செட்டியாரே'' என்றூர் பாரதியார். எவ்வளவு வரவேற்பு அளித்தாலும், செட்டியாரின் உடம்பு பட்ட பாட்டை நான் எவ்வாறு வர்ணிப்பது? செட்டியார் யார் தெரியுமா? பாரதியார் குடியிருந்த வீட்டுக்கு உடையவர். அவருக்கு வாடகைப் பணம் பாக்கி என்றூலும், கேட்பதற்கு நடுக்கம்! விளக்கெண்ணெய்ச் செட்டியார் என்பது பாரதியார் கொடுத்த செல்லப் பெயர்!

''செட்டியாரே! என்ன அவசரம்! நல்ல பதவிக்காக, ஜன்மம் ஜன்மமாய்ப் பிறக்கலாம் என்ற ஹிந்து பரம்பரையிலே பிறந்து வளர்ந்த உமக்கு, என் வாடகைக்கு அவசரம்? இன்னும் பத்து வருஷத்துக்குள் சுயராஜ்யம் வரப்போகிறது. அந்த ராஜாங்க கஜானுவுக்கு ஒரு 'செக்' கொடுக்கிறேன், வாங்கிக்கொள்ளுமே!'' என்று சொல்லி விட்டு, வெண்கலத்தை இடைவிடாமல் தட்டியது போலக் கலகலவென்று சிரித்தார். தரித்திரத்தை நிந்தனை செய்யும் நகைப்பு!

செட்டியார் என்ன செய்கிறூர் என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். ''மகான்! உங்கள் உண்டியல் ஏன் செல்லாது? கூசாமல் கொடுங்கள். வாங்கிக் கொள்கிறேன்'' என்று செட்டியார் முணுமுணுத்தார். ''செட்டியாரே, உமக்கு நூறு வயது. போம். பணம் வந்தவுடன் ஒரு வினுடி கூடத் தாமதிக்காமல் அனுப்பி வைக்கிறேன்'' என்றூர். செட்டியார் வணக்கத்துடன் மறைந்தார்.

—வ. ரா.



# நான் கண்ட பாரதியார்!



—திருமதி யதுகிரி அம்மாள்



ஒரு வெள்ளிக்கிழமை சாயங்கால வேளையில் சுவாமிநாத தீட்சதரின் பெண் மீனுவும், நானும் (யதுகிரி அம்மாள்) ஈசுவரன் தர்மராஜா கோயில் தெருவில் இருக்கும் பாரதியாரின் வீட்டிற்குப் போனேம். எப்பொழுதும்போல் செல்லம்மாள், (பாரதியாரின் மனைவி) கலகலப்பாக இருக்கவில்லை. மாதக் கடைசி.

நாங்கள் எல்லோரும் சாதாரணமாகப் பேசிக் கொண்டிருந்தோம். மணி ஆறு ஆனதும் மீனு வீட்டிற்குப் போய்விட்டாள். பின்னர் பாரதியாரும் வெளியே போய் விட்டார். வீட்டில் இருந்தவர்கள் நானும் செல்லம்மாவுமே. இருவரும் சிறிது நேரம் பேசாமலே இருந்தோம். ஐந்து நிமிஷம் பொறுத்துப் பேச ஆரம்பித்தேன்.

நான்: செல்லம்மா, உடம்பு சரியாக இல்லையா? எப்படியோ இருக்கிறீரே?

செல்: உடம்புக்கு ஒன்றும் இல்லை. யதுகிரி, மனத்திலே புழு அரிப்பதைப் போல் அரிக்கிறது. யாரிடமாவது சொன்னுல்தான் இம்சைதிரும்போல் இருக்கிறது. நீ குழந்தை. உன்னிடம் சொல்லி என்ன பிரயோசனம்?

நான்: பரவாயில்லை. என்னவென்று சொல்லுமே! நான் பாரதியாரைக் கேட்கிறேன். 'பெண்கள் விடுதலையை வாயால் கொண்டாடுகிறீரே; காரியத்தில் இப்படிப் பண்ணலாமா?'' என்று கேட்டுவிடுகிறேன்.

### குருவிக்கு அரிசியைப் போட்டார்!

செல்லம்மா சொன்னூர்: ''ஐயோ, குழந்தை! உன் உள்ளம் ஒன்றும் அறியாதது. இப்போது மாதக் கடைசி.. போன மாசப் பாக்கியைப் பால்காரனுக்கு இன்னும் கொடுக்கவில்லை. அவன் நேற்று வந்து கேட்டான். வருகிற மாசம் கொடுப்பதாகச் சொன்னேன். அவன் முடியாது என்றுன். நான் ஏதோ சமாதானம் சொல்லி அனுப்பினேன்.

''இவர் பார், இன்றைக்குச் 'சுதேசமித்திரன்' பத்திரிகைக்கு அனுப்ப வேண்டிய கட்டுரையை அனுப்பவே இல்லை. அவன் எப்படிப் பணம் அனுப்புவான்? இன்று காலையிலே குளித்து, காப்பி குடித்து, வெற்றிலை பாக்கு எல்லாம் கிரமமாக ஆனபிறகு எவ்வளவோ சொல்லி மேஜை மேல் காகிதம், பேனு, இங்கி புட்டி எல்லாவற்றையும்கொண்டு போய் வைத்துவிட்டு, அரிசியைப் பொறுக்கி வைத்தேன். பிறகு மடிஉடுத்திக்கொள்ளப்போனேன். இவருக்கு எழுத முடியவில்லை. முறத்தில் இருந்த அரிசியில் ஒரு பங்கை எடுத்து முற்றத்தில் இறைத்துவிட்டு அதைத் தின்ன வரும் குருவிகளைக் கண்டு பாடிக் கொண்டிருந்தார்.

''அரிசியைக் களைந்து உலையில் போடுவதற்காக வெளியில் வந்து பார்க்கிறேன்; அரிசியில் கால் பங்கு இல்லை. எனக்கு அழுகை வந்துவிட்டது. இதைப் பார்த்த அவர், 'வா செல்லம்மா, இந்தக் குருவிகளைப் பார்! எவ்வளவு சந்தோஷமாக இருக்கின்றன! நாமும் அதைப் போல் 'ஏன் இருக்கக் கூடாது? நீயும் சதா தொந்தரவு செய்கிறூய்; நானும் எப்பொழுதும் எரிந்து விழுகிறேன். நமக்கு இந்தக் குருவிகள் ஒற்றுமை கற்றுக் கொடுக்கின்றன. நாம் அதைக் கவனியாமல் கண்ணை மூடிக் கொண்டிருக்கிறூம். நம்மைக் காட்டிலும் மூடர்கள் உண்டா?'' என்றூர்.

''எனக்குப் பொறுக்கவில்லை. 'என் கோபத்தை ஏன் கிளப்புகிறீர்கள்? குழந்தைகள் அண்ணி

யம்மா (பொன்னு முருகே
பிள்ளையின் மனைவி) வீட்டிலி
வருகிற வேளைக்குள் சமை
விடலாம் என்று அடுப்பை மூ
ுல் பொறுக்கின அரிசி
குருவிக்குப் போட்டு விட
களே! திரும்பப் பொறு
பத்து நிமிஷம் ஆகும். உங்
குப் பணம் வர இன்னும்
வளவு நாள் ஆகுமோ! நீங்க
இன்னும் கட்டுரை எழுதி
வில்லை, பால்காரன் மான
வாங்குகிறூன். வேலைக்
இரண்டு நாளாய் வரவே இ
நீங்கள் இதை யோசிக்க வே
டாமா? என்னைக் குருவி
போல் சந்தோஷமாக இரு
கிறீர்களே. கடவுளு
கண்ணே இல்லை. இந்தக்
தைகளைக் கொடுத்து வ
கிறூர்'' என்று சொ
கொண்டே போய் ஒருவிதம
சமையல் வேலையைச் செ
முடித்தேன்.

''வெளியே வந்தால்
சகுந்தலா பாப்பாவுக்கு '
விடுதலையாகி' என்று துவ
பாட்டைப் பாடிக் கா
கொண்டிருக்கிறூர். குழ
சந்தோஷத்தால் குதிக்கி
இவர் பாட்டு ஆனந்தத்
மெய்ம்மறந்திருக்கிறூர். (
களோ அரிசியைக் கொ
தின்ற வண்ணமாய் இரு
றன. தங்கம்மா பேசாமல்
கார்ந்திருக்கிறூள்.

ந்த வீட்டில் எல்லோரும் ாஷமாக இருக்கும்பொழுது ல் ஏன் நிம்மதி கெட ும்?'' என்று நானும் உட் துவிட்டேன்.

ூட்டம், பாட்டு எல்லாம் ப் பன்னிரண்டு மணி று. சகுந்தலா, 'அப்பா கிறது. வா,. சாப்பிடலாம்' து. அவரும் எழுந்து வந்து மல் சாப்பிட உட்கார்ந் என்னைப் பார்த்து, 'செல் ா, இன்னும் கோபம் போக லயா? இதோ பார், இந்த ப் பாட்டையே அனுப்பப் கிறேன். முதல் தேதி உன் ல் பணம் வந்துவிடும். படாதே' என்றார்.

அவர் நல்லவர். கள்ளம் இல்லை. கையில் இருந்தால் கம் இல்லை. ஆனால் அவர் ாகக் கட்டுரை அனுப்பாவிட் பத்திரிகைக்காரன் சும்மா ம் அனுப்புவானா? அதுதான் க்குப் பிடிக்கிறதில்லை.''

ன் ஒரு பதிலும் சொல்ல ல. என்னால் என்ன சொல்ல ும்? ஆனாலும் சமாதான ''இன்றைக்குத் தபாலில் போயிருக்கிறதே! பாட் ல் என்ன, கட்டுரையானால் ?'' என்றேன்.

நீயும் அவருக்குச் சரியான தான்! அவர் எதைச் செய் ும் சரி என்று சொல்வாய். ிடம் சொல்லியதால் ஞ்சம் இம்சை குறைந்தது. வ போதும்'' என்றார் அந்த மி.

* * * *

## ட்டிக்கு வேட்டியைக் ாடுத்தார்!

ுச்சேரியில் 'சுதேசி'களெல் ஞாயிற்றுக்கிழமை சமுத் ஸ்நானத்துக்குப் போவது கம். காலை ஏழு மணிக்குப் ல் பத்து மணிக்குத்திரும்பு ம். என் தகப்பனார், பாரதி ஐயர், திருமலாச்சாரியார் யோரைத் தவிர நாகசாமி ஒருவரும் எங்களுடன் ார். நாகசாமி, முதலில், ியை ஆசிரியராகக்கொண்டு தகப்பனார் நடத்திய 'இந்தி வாரப் பாத்திரிகையின் ாலயத்தில் இருந்தார். புதுவைக்கு வந்த பிறகு டன் அவர் வீட்டில் இருந்

ரியவர்களுடன் குழந்தை நாங்கள் நாலைந்து பேரு



மாகப் புறப்படுவோம். எங் களுக்கு ஒரு பர்லாங்கு தூரத்தில் 'உடுப்பு இல்லாத போலீஸ் காரர்கள் ஐந்துபேர் வருவார்கள். இப்படி ஒரு நாள் நாங்கள்போய்க் கொண்டிருக்கையில் கௌர்ள வீதியில் ஒரு பாம்பாட்டி நிலத் தில் ஒரு பாம்பை விட்டு வேடிக் கைக் காட்டிக்கொண்டிருந்தான். வெள்ளைக்காரன் ஒருவனது வீட்டு வேலைக்காரன் அவனுக்குக் காலணா போட்டுவிட்டுப் போகச் சொல்லிக் கொண்டிருந்தான். ''பாம்புக்குப் பால் வார்க்கக் காலணா ஆச்சு. எனக்கு ஒரு பிடி அரிசி போடு துரையே!'' என்று பாம்பாட்டி கத்தினான். இந்தச் சமயம் நாங்கள் அந்த இடத்தை நெருங்கினோம்.

எங்களைக் கண்டதும் பாம் பாட்டி மறுபடி குழலை ஊத ஆரம்பித்தான். பாம்பும் சந் தோஷமாக ஆடிற்று. நாங்கள் எல்லோரும் நிற்காமல் போவ தைக் கண்ட பாம்பாட்டி, ''ஐயா தர்மவான்களே! குளிர் தடுக்க முடியவில்லை. சாதம் கண்டு இரண்டு நாள் ஆயிற்று. கண் இருண்டு வருது. புண்ணியம் உண்டு!'' என்று கெஞ்சினான்.

எங்கள் தாய், ''சமுத்திரம் ராஜா, வெறுங்கையுடன் போய் அதில் குளிக்கக் கூடாது'' என்று எங்கள் ஒவ்வொருவர் கையிலும் ஒரு மஞ்சள் பொட்டணமும் காலணா காசும்கொடுத்திருந்தாள். என் அண்ணன் தன் காலணாவைப் பாம்பாட்டிக்குப் போட்டான். என் கையிலும் காசு இருப்பதைப் பார்த்த பாம்பாட்டி, ''அம்மா, அதையும் கொடேன். காலணா இட்லி வாங்கிச் சாப்பிடுகிறேன்'' என்றான். நான், ''இல்லை அதைச் சமுத்திரத்தில் போடும்படி எங்கள் அம்மா சொல்லியிருக் கிறாள்'' என்று சொல்லிவிட்டு முன்னால் நடந்தேன்.

எல்லாருக்கும் முன்னால் வந்து கொண்டிருந்த பாரதியாருக்கு என்ன தோன்றியதோ, மேல் வேஷ்டியை அரையில் உடுத்துக் கொண்டு அரை வேஷ்டியைப் பாம்பாட்டிக்குக் கொடுத்துவிட் டார்!

எல்லாரும் முன்போல் ஒன் றாகச் சேரும்பொருட்டு நாங்கள் ஒரு மூலையில் நின்றோம். பாரதி யாருடைய கொள்கை எங்களைத் திகைக்கச் செய்தது. முதல்நாள் வாங்கிய புதிய வேஷ்டியைத் தெருவில் போகும் பிச்சைக்கார னுக்குக் கொடுப்பது அவ்வளவு சரியென்று எனக்குத் தோன்ற வில்லை. அந்தப் பாம்பாட்டியோ அவரை மனமார, வாயார வாழ்த்திக்கொண்டு போனான். என் மேல் அவனுக்குக் கோபம்; காலணாவைக் காட்டிவிட்டுக் கொடுக்கவில்லை என்று.

* * * *

நான்: அது சரி. நீர் என்ன, புதிய வேஷ்டியைக் கொடுத்து விட்டீரே! செல்லம்மா பார்த் தால் என்ன சொல்லுவார்? மேலே இருந்த கிழிசலைக் கொடுத் தால் போதாதா?

பாரதி: எனக்கு நாலுபேர் கொடுப்பார்கள். அவனுக்கு யார் கொடுக்கிறார்கள்? நானே யோசிக்கவில்லை; உனக்கென்ன யோசனை?

## எல்லாம் எனக்கு அவள்தான்!

பாரதி: காலையில் எழுந்த வேளை நன்றாக இல்லை. இரண்டு பேருடன் சண்டை!

நான்: வேறு யாருடன் சண்டை போட்டீர்?

பாரதி: வேறு யார்? பெண் டாட்டிதான்.

நான்: நீர் பாட்டில் பெண் விடுதலையைக் கொண்டாடுகிறேன் என்று பெண்டாட்டியோடு சண்டை போட்டால் என்ன பிர யோசனம்?

செல்: சொல்லு யதுகிரி. இன்று இவர் பண்ணியது நியாயமா கேள்?

பாரதி: நீ சொல்லியது சரி. ஆனால் சில வேளைகளில் சொல்லக் கூடாது.

நான்: என்ன விஷயம் சொல் லுமே!

செல்: இவர் தலையில் துணி போட்டுக் கொண்டு போனால், எனக்குப் போக வழி இல்லையா?

நான்: உம்மைப்போலத்தானே செல்லம்மாவும்? ஏன் போகமுடி யாது? அங்கு விடுதலை இல்லையா?

பாரதி: நீ குழந்தை. உனக்குப் புரியாது. முரட்டு மாட்டை விட்டுத்தான் பிடிக்கவேணும். ஒரே அடியாக இழுத்தால் ஒடிப் போய் விடும். நான் ஒரு வேளை போனாலும் போவேன்; செல்லம் மாளால் போக முடியாது. விடுதலை இருந்தாலும் பொறுப்புப் பெரி யது.

நான்: நீர் புதிர் போட்டாற் போல் சொன்னால் எனக்கு எப் படித் தெரியும்? விவரமாகச் சொல்லுமே.

பாரதி: செல்லம்மா, நீயே சொல். உன் மனத்தின் பாரம் குறையும்.

செல்லம்மாள் நடந்ததைச் சொன்னார்.

நான்: குழந்தைகளைக் கண்டா டால் உமக்குத்தான் அபிமானம் செல்லம்மாவுக்கு இல்லையா?

பாரதி : இருவரும் ஒன்றே. ஆனால் அவள் போஷிப்பவள். நான் ஸம்பாதிப்பவன். இருவரி டையே அதிகாரக் கட்டளை அவ சியமில்லை.

நான்: சரி செல்லம்மா. உமக்கு இஷ்டம் வந்தபோது சமையல் செய்யலாமே!

பாரதி : அப்படியல்ல. வேலை செய்ய வேண்டியதைக் கிரமமாக வும் வகையாகவும் செய்யவேண் டும். ஆனால் மனிதனும் வகை யறிந்து போனால் நல்லது.

செல்: நான் வகை அறியாத வள்.

பாரதி: நீ கொடுத்த சூட்டின் மகிமை எவ்வளவு தூரம் சென் றது தெரியுமா? கதையை அச் சிடக் கொடுத்து விட்டு வந்தேன்.

செல்: கணவன்மேல் அவதூறு சொல்பவர்களைக் கண்டாலே எனக்கு மிகவும் கோபம் வரும். பிடிக்கவே பிடிக்காது. ஆனால் பொறுக்க முடியாமல் போனால் கதவுடனாவது சொல்லிக் கொள்ள லாம் போலாகிறது.

பாரதி: காலையில் தூண்டின தூண்டல் முடிந்து வேலையும் முடிந்தது. யதுகிரி, நீயும் வா, கடற்கரைக்குப் போகலாம்.

கடற்கரைக்கு எல்லாரும் புறப்பட்டோம். அப்பொழுது அவர் சொன்ன வார்த்தைகளைத் தமிழுலகம் முழுவதும் அறிய வேண்டும் என்பது என் ஆவல்.

பாரதியார், ''நீங்கள் வீட்டில் உடம்பை ஒடித்து வேலை செய் கிறீர்கள். உங்களை அலட்சியமாய் காண்பது பாவம். குழந்தைகளை வளர்க்கிறீர்கள். குழந்தை களுக்குக் காலத்தில் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யச் சொல்லுகிறீர்கள். இது முன் காலமல்ல. பொறுப்புத் தெரியா மல் இருந்தால் பொறுப்பை வற் புறுத்திக் காட்ட வேண்டும். நிர்ப்பந்தம் செய்யக்கூடாது. ஆனால் செல்லம்மா சொல்லியது சரி. என் கவிதையின் பைத்தியம் என்னை இழுத்துச் சென்றது. அந்தச் சூட்டில் இரண்டு பேச்சு நடந்தது. நம் வீட்டில் தங்கக் கிளிகள் போல் குழந்தைகள். ஆனால் நாம் கொடுத்து வைக்க வில்லை. அவைகளுக்குத் தங்கத் தால் கவசம் பண்ணிப் போட லாம். புலவர் வறுமை புராணப் பிரசித்தம். தமிழுக்குச் செல் வாக்கு இல்லை. தமிழ்க் குழந்தை லக்ஷ்மியை நானாவிதமாகக் கொண் டாடினால் கிருபை வரும். வீட் டின் தலைவி எல்லாவற்றையும் திருத்திக் கொண்டு போனால் தலைவன் கவலையில்லாமல் நோயில்லாமல் இருக்கலாம். தலைவியின் பேச்சைத் தட்டாம லும் இருக்கலாம். தலைவிக்கு முக்கியமாக வேண்டியது பணம். பணம் இருந்துவிட்டால் என் செல்லம்மா உலகத்தையே ஆண்டு விடுவாள். அது இல்லாத தால் என்னைக் கட்டுப்படுத்து கிறாள்; கேட்கிறாள்; சண்டை பிடிக்கிறாள். எனக்கு வருந்திச் சாதம் ஊட்டுகிறாள். இதை உலகம் அறிய வேண்டும். நம் கஷ்டம் விடிய வேணும். சென்று போன விஷயத்தை யோசிப்ப வன் மூடன். தினமும் நம் துணியை வெளுத்து உலர்த்து வதைப் போல் நம்முடைய அழுக்குகளை, தொல்லைகளைத் தினம் கழுவிவிட வேணும். புதி தாகச் சூரியன் வருவதைப்போல் புதிய புதிய விஷயங்களைப் பார்த்து மகிழவேணும். என் செல்லம்மா முக்கியப் பிராணன்! என் செல்வம்! எல்லாம் எனக்கு அவள்தான். அவள் பாக்கிய லக்ஷ்மி!'' என்றார்.

## பாரதியார் சொல்லிய புத்திமதி!

''யதுகிரி, நான் சில புத்தி மதிகள், சொல்லுகிறேன், மறக் காதே! பெண்களுக்கு மிக முக் கியமானது கற்பு. அது உயிரைக் காட்டிலும் முக்கியமானது கற்பு. அதை உயிரைக் காட்டிலும் ஜாக் கிரதையாகக் காப்பாற்றுவது முதற் கடமை. அதற்காகக் கூண்டுக்கிளிபோல் அடைபட்டுக் கிடக்க வேண்டாம். உலகத்தில் கணவன் ஒருவன் தவிர பாக்கிப் புருஷர்களெல்லாம் அண்ணன், தம்பிமார்கள். எல்லாருக்கும் பதுங்கி அஞ்ச வேண்டியதில்லை. முக்கியமாகக் கூச்சம், வெட்கம் இரண்டும் அநாவசியமான சரக்குகள். நீ பேஷாக எல்லாரு டனும் பேசலாம். கணவனிடம் முதல் முதல் வெட்கம். பழகப் பழக அதுவும் வேண்டியதில்லை. அச்சம், நாணம், பயிர்ப்பு என்று புத்தகப் பாடத்தை உருப்போட்டு நம் நாட்டுப் பெண்கள், புரு ஷர்கள் எல்லாரும் அடிமை வாழ் வில் முழுகி இருக்கிறார்கள். நீங்கள் தைரியமாக இருந்தால் தான் உங்கள் வயிற்றில் பிறக்கிற குழந்தைகள் தைரியமாக இருக் கும். கோழைத்தனம் இந்தியா வின் மேன்மையை நாசம் செய்து விட்டது. அதோடு காலமும் உதவி செய்தது.

''நீ புக்ககத்திற்குப்போனாலும் தைரியமாக இரு. பயப்படாதே. ஒட்டுக் கேட்காதே. பிறர் கடி தங்களை உடைத்துப் பார்க்காதே. மனத்தில் உள்ளதை நேரில் சொல்லிவிடு. மனத்தில் வைத்து உருகுவதைவிட வாயினால் சொல்லிவிடுவது நல்லது. உன் னால் முடிந்த அளவு அவர்கள் சொற்படி நட. உன்னால் முடியா விட்டால் விஷயத்தைச் சுத்த மாகச் சொல்லிவிடு. மறைக் காதே! அதில் நன்மை உண்டு. உன்னை விலை கொடுத்து அவர்கள் வாங்கவில்லை. அவர்கள் வீட்டை நன்றாக விளங்க வைத்து விருத்தி செய்யப் போகிறாய். அந்த வீட் டில் உனக்குப் பூரண உரிமை உண்டு. பணம் காசு விஷயங் களில் தலையிடாதே! அதைப் பெரியவர்களுக்கு விட்டுவிடு. வேலை செய்யப் பின் வாங்காதே! சக்தி மீறிச் செய்யாதே! செய் வதை உன் மனம் ஒப்பச் செய். படிப்பை விடாதே. உன் தாய் தகப்பனார் எவ்வளவோ கஷ்டப் பட்டு முக்கியமான, சாசுவத மான விஷயங்களைச் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். முடிந் தால் அபிவிருத்தி செய்; முடியா விட்டால் இருப்பதை மறக்காதே.

''நான் ஐயரைப் போல் துறவு போதிக்க மாட்டேன்; உலகத் தில் பிறந்து எல்லா சுகங்களையும் அநுபவித்து உலகத்திற்கு உப காரியாக வாழ வேணும். இரத்த வெள்ளம் பெருக்கி அதனால் சுக

மடையலாம் என்பது என் எண்ணத்திற்கு நேர் விரோதம்.

''நீ இரண்டு வீட்டிற்கும் விளக்கைப் போல் பிரகாசிக்க வேண்டும். இரண்டு குடும்ப வாழ்க்கை கலப்பது முதலில் கஷ்டமாக இருக்கும். பழகிய பின் வழக்கமாய்விடும். கேவலம் அடிமைத்தனத்திற்கு ஒத்துக் கொள்ளாதே. உனக்கு உரிமை உண்டு. புத்தி உண்டு. ஸ்வதந்தரம் உண்டு. தலை நிமிர்ந்து நட. உன் இருபுறமும் உள்ள இயற்கையைக் கண் குளிரப் பார். நேர்ப் பார்வையில் பார். கடைக் கண் பார்வையில் பார்க்கத் தகுந்தவன் கணவன் ஒருவனே. தந்தை, சகோதரர்கள், பிள்ளைகள் முதலியோரை நேராக நிமிர்ந்து பார். இவர்களைக் கடைக் கண்ணால் பார்க்காதே. நிமிர்ந்து உட்கார். பேசுவதை ஸ்பஷ்டமாகப் பேசு. தைரியமாகப் பேசு. இதில் கற்பு கெடுவதில்லை. மேலுக்கு வேஷம் அவசியம் இல்லை.''

### பாரதியார் பட்டபாடு!

செல்: யதுகிரி சின்னக் குழந்தையின் விளையாட்டைப் பார்த்து ரொம்ப நாள் ஆகிவிட்டது. அதனால் இது செய்வதெல்லாம் புதுமையாக இருக்கிறது அவருக்கு.

பாரதி: அது விளையாடினால் நமக்குச் சந்தோஷமாகிறது. நோயாய்ப்படுத்தால் சகிக்க முடிவதில்லை.

செல்: போன வருஷம் பட்ட பாட்டை நினைத்தால் பயமாக இருக்கிறது யதுகிரி. இவ்வளவு வீரம் பேசுகிறாரே, இவர்கூடப் புழுவாய்த் துடித்துவிட்டார். அம்பாள்தான் காப்பாற்றினாள். எந்த எந்த விதமாகப் பாடினாலும் மனத்தின் துடிப்பு நிற்கவில்லை.

பாரதி: இந்தச் செல்லம்மா இப்பொழுது சொல்கிறாள் யதுகிரி. அப்பொழுது நிற்கவே மாட்டாள். சதா முகத்தைத் தொங்கவிட்டபடி இருப்பாள். ''இந்தக் குழந்தையின் ஜுரம் எனக்கு வரட்டும் ஸ்வாமி!'' என்று புலம்புவாள். பாப்பாவோடு இவளைக் காப்பாற்றும் பொறுப்பும் எனக்கு விழுந்தது.

செல்: இவர் காத்தது ரொம்பத் தான்! பாப்பாவைத் தொட்டு விட்டுக் கையைக் கழுவாவிட்டால் உள்ளே போக விடமாட்டார். ஏதோ ஒரு மருந்தை ஒரு பாத்திரத்தில் வைத்து அதில் கையைக் கழுவு என்பார். எதைத் தொட்டாலும் அந்த மருந்தின் நாற்றம்! நான் மாட்டேன் என்றால் மல்லுக்கு நிற்பார். பாப்பாவோ, ''செல்லம்மா, செல்லம்மா என்று நிமிஷத்திற்கு நிமிஷம் அழைக்கும். போது போதும் என்று ஆகிவிடும் என் பாடு. எல்லாம் கனவுபோல் இருக்கிறது இப்பொழுது.

பாரதி: சரி. அதில் கைகழுவாவிட்டால் பூச்சிகள் எப்படிச் சாவது? டாக்டர் நூறு தடவை சொல்லியிருக்கும்போது செல்லம்மா குழந்தையைத் தொட்டு விட்டுக் கைகழுவ மாட்டேன் என்பாள். அந்த ஜுரம் விஷ ஜுரம்.

செல்: இரண்டாம் வாரம். ஜுரம் கண்மூடிக் கொண்டு காய்கிறது. இரவு எட்டு மணி இருக்கும். இவர் காய்ச்சல் குச்சியை வைத்தார். ஐந்து நிமிஷம் கழித்து எடுத்துப் பார்த்தால் அளவு மீறி இருந்தது. மறுபடி வைக்கலாம் என்று உதறினார். அது கை நழுவிக் கீழே விழுந்து சுக்கல் சுக்கலாக ஆகிவிட்டது. கை நடுக்கம்! மனத்தில் பயம்! என்ன செய்வது? வேலைக்காரியை டாக்டர் வீட்டிற்கு அனுப்பினேன். அவர் வந்து பார்த்து, ''இன்றிரவு கழிய வேண்டும். பயப்பட வேண்டாம்'' என்றார். பிறகு, ''உங்களிடம் தர்மாமீட்டர் கொடுப்பது தவறு'' என்று கூறி ஓர் இஞ்ஜக்ஷன் கொடுத்து விட்டுப் போனார். நினைவில்லாத ஜுரம். குழந்தை பேச முடியாமல் தவிக்கிறது. நான் கல் பொம்மை போல அதனிடம் உட்கார்ந்து கிடந்தேன் இவர் துயரம் சகிக்காமல் வாய்விட்டு அழலானார்; ''பாப்பா, நீ பெரிய சபைகளில் லெக்சர் கொடுக்கப் போகிறாய்; பெரிய பண்டிதையாகப் போகிறாய் என்று இருந்தேனே! உன் நாக்குப் புரள்வதில்லையே!'' என்று சுவரில் மோதிக் கொண்டார். நான் எழுந்து போய்ச் சமாதானம் செய்தேன். இரவெல்லாம் தூங்காமல், 'சக்தி, சக்தி' என்று கதறினார். காலையில் ஜுரம் சற்றுக் குறைந்தது. பணம் இல்லை. நோயின் கொடுமை வேறு. எப்படிச் சகிப்பது?

பாரதி: உண்மையில் அந்த இரண்டு மாதமும் தவியாய்த் தவித்தோம் யதுகிரி. முன்பு தங்கம்மாவுக்கு நிமோனியா கண்டிருப்போது இப்படி இல்லை; நஞ்சுண்ட ராவ் தம் குழந்தையைப் போல் பார்த்தார். ஸ்வர்ணம் இருந்தாள். எனக்கு இவ்வளவு தவிப்பு இல்லை.

### கடமையைச் செய்!

பாரதி: உன் குழந்தையை நினைத்துச் சதா அழாதே, யதுகிரி. பக்தியுடன் மன்றாடு. விடியற்காலையில் குளித்து சக்தி ஜபம் செய். உனக்கு நன்மையாகும். சின்ன வயதிலேயே கிழவிப்போல் புலம்பாதே. கீதை படித்ததன் பயன் என்ன? கை தப்பியதை மன்றாடிப் பெறுவதுதான் தீரத்தனம். புலம்புவது கையிலாகாதவர் வேலை. 'உனக்கு வந்தால் தெரியும்' என்று உனக்குச் சொல்ல உரிமை உண்டு. ஆனால் மறுகி மறுகிக் கரைவது நல்லதல்ல. மனத்னதத் திடப்படுத்த வேணும்.

செல்: நீங்கள் புருஷர்கள். பெற்ற வயிறு துடிக்கும்போது கீதையும் வேதாந்தமும் என்ன செய்யும்? அவள் என்ன சக்தியை மன்றாடி ஜபம் செய்தாலும் இறந்த குழந்தை கைக்கு வருமா? சங்கடம் போகுமா?

பாரதி: நம் கடமையை நாம் செய்தால் தெய்வம் எந்த வழியைக் காட்டுகிறதோ, அதே நம் வழியென்று நாம் திடப்படுத்திக் கொள்ள வேணும். மீறும் வரையில் கைச்சக்திக்கு மீறிச் செய்யலாம். மீறி விட்டால் அதோடு நாம் மடிவது முட்டாள் தனம். துக்கம் வந்தபோது அழுதுதான் குறைய வேணும். ஆனால், எப்போதும் அழுது அழுது முகத்தின் ஒளியைப் போக்கடித்துக் கொள்வது தப்பு. 'துக்கத்தில் தனக்கு மேலானவர்களைப் பார்த்துத் தேறு; பணத்தில் தனக்குக் கீழானவர்களைப் பார்த்துத் தேறு' என்பது பொன் எழுத்தில் பொறிக்க வேண்டிய நீதி மொழி. சிலர் சின்ன வயதில் பல கஷ்டத்தில், துக்கத்தில் உழலுகிறார்கள். சிலர் கிழ வயதில் பல கஷ்டங்களில் உழலுகிறார்கள். இனி யதுகிரிக்கு எடுத்ததெல்லாம் ஜயம் என்று வைத்துக் கொள். நினைத்து நினைத்து ஏங்காதே. வரும் நன்மைகளை எதிர்நோக்கி சக்தி ஜபம் செய் !

[ ஆதாரம்: திருமதி யதுகிரி அம்மாள் அவர்கள் எழுதிய 'பாரதி நினைவுகள்' என்ற நூல்.]

நன்றி: அமுத நிலையம், சென்னை.





## பாரதி கூறிய ஒற்றுமையும் ஒருமைப்பாடும்

'அரசியல் விடுதலை முழுமை அடைய வேண்டுமாயினும் சரி, பொதுவுடைமைப் புதிய சமுதாயம் காண வேண்டுமாயினும் சரி, அவிழ்த்துவிட்ட நெல்லிக்காய் மூட்டைபோல் சிதறி, 'நவக்கிரகங்கள்' போல் திசைக்கொன்றாகத் திரும்பி நிற்கும், வேண்டாத நிலைமை கூண்டோடு ஒழிய வேண்டும் என்று உறுதி கொண்டான் பாரதி.

இந் நாட்டின் சாபத் தீயே ஒற்றுமைக் குறைவுதான் என்பதை உணர்ந்த பாரதி,

''ஒற்றுமைக்குள் உய்யவே
ஒரு பெரும் செயல் செய்யத்'' துணிந்தான்.

''ஒற்றுமை வழி ஒன்றே வழி யென்ப
தேர்ந்திட்டோம்—நன்கு—தேர்ந்திட்
டோம்''

என்று பாருலகதிரப் பறைசாற்றி, வெள்ளை அதிகார வர்க்கமும், கொள்ளை ஏகாதிபத்தியங்களும் 'கிடுகிடுக்க' வைத்தான் :

''சொந்தச் சகோதரர்களை'' நோக்கி பாரதி,

''ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தால்பின் நமக்கெது வேண்டும்?''

என்று யாருக்கும் எளிதில் புரியும் விதத்தில் ஒற்றுமையின் அவசர அவசியத்தையும், எல்லையில்லாத வலுவையும் விளக்க ஆணித்தரமாக அழகாக ஒரு கேள்வியைக் கேட்கிறான்.

இந்தியாவில்—குறிப்பாகத் தமிழகத்தில்—ஒற்றுமை மெய்யாகவே உருவாக வேண்டுமானால், சாதி முறை ஆணிவேர், பக்க வேர், சல்லி வேரோடு ஒழிந்தாக வேண்டும் என்பதை மிக மிகத் தெளிவாகக் கண்டான் பாரதி. மொழி, இன அடிப்படைகளில் அமையும் நாடுகளின் ஒற்றுமையே, எதிர்காலத்தில் இந்திய ஒற்றுமையாக நிலைபெற முடியுமென்பதையும் கண்டான்.

## பாரதி படம் பிடித்துக் காட்டிய பாரத யூனியன்

பாரத நாட்டின் மணிக்கொடிக்கு வணக்கம் செலுத்த எல்லோரையும் அழைக்கிற பாடலில் கொடி வணக்கக் காட்சியைப் பாரதி சித்திரிப்பது கூர்ந்து கவனிக்கத் தக்கது.

செந்தமிழ் நாட்டுப் பொருநர், சேரன்றன் வீரர் (மலையாளிகள்), சிந்தை துணிந்த தெலுங்கர், ''தாயின் சேவடிக்கே பணி செய்திடு துளுவர்'', கன்னடர், போரிற் காலனும் அஞ்சக் கலக்கும் மராட்டர், இந்துஸ்தானத்து மல்லர், ''மறைவரும் கீர்த்திகொள் ரஜ்புத்ர வீரர்'', ''பஞ்சநதத்துப் பிறந்தோர்'' (பஞ்சாபியர்)—துஞ்சும் பொழுதினும் தாயின் தொண்டு நினைத்திடும் வங்கத்தினர் (வங்காளிகள்)—இத்தகைய தேசிய இனத்தார்களைத் திரட்டி, அணியணியாகக் கொடியின் கீழ் கொண்டு வந்து நிற்க வைக்கிறான்.

''நம்பற்குரியர் அவ்வீரர்—தங்கள்
நல்லுயிரீந்தும் கொடியினைக் காப்பார்''

என்று அவர்களை அறிமுகப்படுத்துகிறான்.

''சேர்ந்ததைக் காப்பது காணீர்—அவர்
சிந்தையின் வீரம் நிரந்தரம் வாழ்க''

என்று தேசிய இனங்களின் ஐக்கியத்தையும், அவர் சிந்தையின் வீரத்தையும் வாழ்த்துகிறான்.

இவ்வாறு ஏற்படும் புதிய 'பாரத தேசத்தின்' (இந்திய யூனியனின்) வெற்றிச் சாதனைகளைக் கற்பனைத் திறனோடு விளக்குகிறான். பரஸ்பர நல்லுறவால் தேசிய இனங்கள் நலன் பல தழுவுவதைப் பூரிப்புடன் படம் பிடித்துக் காட்டுகிறான்.

1. ''வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்''

2. ''சிந்து நதியின் மிசை நிலவினிலே
சேரநன் னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்துத்
தோணிகளோட்டி விளையாடி வருவோம்''

3. ''கங்கை நதிப்புரத்துக்கோதுமைப்பண்டம்
காவிரி வெற்றிலைக்குமாறுகொள்ளுவோம்''

4. ''சிங்க மராட்டியர் தம் கவிதை கொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்''

5. ''காசிநகர்ப் புலவர் பேசும் உரைதான்
காஞ்சியிற் கேட்பதற்கோர் கருவி செய்
வோம்''

6. ''ராசபுதானத்து வீரர்தமக்கு
நல்லியல் கன்னடத்துத் தங்கம் அளிப்

இப்படியிப்படிப் பலப்பல சாதனைகள், தேசிய இனங்களின் ஒற்றுமையில் ஏற்படும் லாபத்திற்கு பாரதி காட்டும் எடுத்துக்காட்டுகள்.

தமிழ்நாடு, பாரத நாடு, தேசிய இன ஒற்றுமை, இந்திய யூனியன் உணர்ச்சிகளை வளர்த்தான் பாரதி. தேசிய இன அடிப்படையில் மலரும் நாடுகளின்கூட்டாட்சியாக இந்திய யூனியன் அமையும் பொழுது வேற்றுமைப் பேய்கள் இருந்த இடம் தெரியாமல் மறையுமென்றும், அப்பொழுது

''பாரத தேசமென்று பெயர் சொல்வார்—மிடிப்
பயங்கொல்லுவார் துயர்ப்பகைவெல்லுவார்''

என்றும் எத்துணைத் தீர்க்க தரிசனத்தோடு பாரதி சொல்லுகிறான், ஆஹா!

நெருப்புக்கிரையாகி,சாம்பலான பாஞ்சாலத்தையும், டில்லியையும், நவகாளி, பீகார், எல்லைப் புறங்களையும் நினைத்தால், இன அடிப்படையில், ''ஒற்றுமை வழி ஒன்றே வழி'' என்ற பாரதி சொல், பெருமையிற் பெருமை அடைகிறதல்லவா?

('பாரதி வழி' என்னும் நூலிலிருந்து......)

[நன்றி: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை-2.]



# உலககவி பாரதியார்

கவிஞர் எஸ். டி. சுந்தரம்



பாரதியார் எத்தகைய பேராற்றல் என்பதனைப்
பாவேந்தர் தம்பாட்டில் பேசுகிறார் பெருமையுடன்
''பாரதியார் உலககவி அகத்தில் அன்பும்
பரந்துயர்ந்த அறிவினிலே ஒளியும் வாய்ந்தோர்!

ஓருருக்கு ஒருநாட்டுக்கு உரித்தான ஒட்டைச்சாண்
உளமுடையாரல்லார் மற்றும்
வீரர்அவர் மக்களிலே மேல்கீழ் என்று
விள்ளுவதைக் கிள்ளிவிட வேண்டும்என்பார்!

சீருயர்ந்த கவிஞர்பால் செறிந்துவாழும்
செல்வநலம் எல்லாம்நாம் அவர்பாற்கண்டோம்''-என்று
பூரித்துப் பூரித்துப் புதுவைநகர்க் கவியரசன்
புகழாரம் கேட்டபின்னும் புலம்பிடுவார் சிலபேர்கள்!

பேரறிவின் சிகரத்தின் பெருவிளக்கை
புதுச்சுடரைப் பார்க்கவே அஞ்சுவார்கள்
பாரெல்லாம் மதித்தாலும் பார்க்கமாட்டார்!
பயனற்ற கேள்விபல கேட்பார் நம்மை!

''பாவலனா? பாரதியா? பழம்புலமைப் பண்டிதனா?
யாரந்தப் பேராளன்? என்ன இனம்? யாதுகுலம்?
பாவம் அவன்செய்த பாவினங்கள் எத்தனையோ?
யாவும் நல்யாப்பில் யாம்புகழ யாத்தனனோ?

நாவுக்குச் சுவையாக நாற்கவியில் அலங்காரக்
கோவை யுலாபாடிக் கோவேந்தர் அவையினிலே,
தேவைக்குப் பண்பாடி தேவகவி ஆயினனோ?''
என்றே கடாவுகின்ற எம்மவர்க்குக் கூறிடுவோம்!

''கேளீரோ ஏட்டறிவின் மூட்டையீரே!
கூளப்பன் காதலுக்குக் கொடிபிடித்துப்
பாமுடிக்கும் படுக்கைகளைப் பாடமாட்டான்!
வாழப்பண் பாடவந்த வாழ்க்கைச் சிற்பி!

வீணடித்து நேரத்தைக் கொள்வோன் அல்லன்
வீணர்களும் உரம்பெறவே பாடவந்தான்!
வாழைமரம் போல்சரிந்த வாழ்வைநல்ல
வான்மகிழும் ஆலமரம்போல் வளர்த்தான்!

கண்ணீரால் சுதந்திரத்தின் பயிரைக் காத்தான்
காலமழை போல்வந்த கவிதைமன்னன்!
பன்னீரும் பனிநீரும் புனுகும் நாறும்
விலைமாதர் பெருமைகளை பஜனைபாடும்

மன்னர்களின் மகிழ்ச்சிக்கே பதங்கள்பாடும்
மலிவான புலவனல்ல எமது வேந்தன்!
பண்ணரசன் வருமுன்னர் பரதநாட்டின்
மண்ணிதனில் நிலைகொஞ்சம் எண்ணிப்பார்ப்போம்

அப்போதும் இம்மண்ணில் கலைகள் உண்டு
அணிசெய்யும் காவியங்கள் கோடியுண்டு!
தப்பின்றிப் பாடுகிற புலவருண்டு
தடையின்றிப் பேசுகின்ற திருடருண்டு!

ஒப்பில்லா மதவாதத் திமிருமுண்டு
உயிரான ஒன்றுமட்டும் ஆங்கே இல்லை!
செப்பரிய சுதந்திரமாம் சோதியில்லை
செயலற்ற பிண்டம்போல் விழித்தோம் அந்நாள்

சுப்ரமணிய பாரதியார் என்ற சோதி
செங்கதிர்போல் செந்தமிழ்வான் சிகரந்தோன்றி,
நற்புதுமை மின்சார ஒளிவெள்ளத்தை
நந்தமிழின் இனிமையிலே சேர்த்தான் ஆங்கே,

வில்லுதைத்துக் கணப்போதில் இலக்கைத்தாக்கும்
வானவெளி விசைகள்எனக் கவிகள் கொட்டிக்
கொல்லுவித்த கொடுமையெனும் அடிமைப்பேயின்
குற்றுயிரும் இற்றுவிழப் போர்தொடுத்தான்!

பாரதியை தமிழன்னைப் பிணிவிலங்கை
பார்த்தவனும் பதறினான், கலைமான்ஒன்று,
பேரதிர்ச்சி கொண்டோடிப் புலியைத் தாக்கும்
பெருவீரம் கொண்டதென உணர்ச்சிமானம்,

பாரதிரப் பெருக்கினன் பாய்ந்துவீரப்
பரணிப்போர்க் களங்கண்ட வீரர்கோமான்!
மார்தட்டி எம்மானம் காத்தவீரன்
மறைத்தமிழன் வழிவந்த மாண்கவிஞன்!

வானப்பன் காதமெல்லாம் வந்து மண்ணில்
ஞானப் பொன்னோடையெனப்பாய்ந்துகோடைக்
காலத்தில் கொடும்பாலை அடிமைநாட்டில்
ஆலத்தை அமுதாக்கும் அறிவைத் தந்தான்!

காரிருளை அச்சத்தை அடித்துக் கொன்றுன்
கனகமணிக் காந்தமழைக் கவிபொழிந்தான்!
கொடுமைகளின் நடுவினிலே குணமாய் வந்தான்!
குரங்குகளில் மத்தியிலே குன்ருய் நின்ருன்!

காடுபுகை மத்தியிலே கதிராய் வந்தான்
காளான்கள் குப்பையிலே கனற்பிழம்பு!
கோடுமலை நீடருவி ஊடே துள்ளி
ஓடிவரும் வெள்ளமதை எதிர்த்துச் சிந்து

பாடுகின்ற படகோட்டி பயந்துச் செத்த
பெட்டையரும் புதுவீரம் கொண்டுதுள்ள
சாடிவந்து பயம்என்ற பேயடித்து
தேடிவந்து நம்முதுகை நிமிர்த்தவீரன்!

நாட்டடிமை ஓட்டவந்த நாதன், பெண்மை
மீட்டடிமை மீட்கவந்த வீரன்; நாட்டை
பாட்டினிலே மீட்டியநல் வீணை
ஏட்டடிமைத் தளமீட்ட ஏந்தல், மற்றும்

வெண்டைக்காய் வில்லர்களை வீரர்என்று
விண்தமிழில் பொய்புகலும் வறுமையல்ல!
சுண்டைக்காய் வத்தல்களை சூரர்என்று
சுண்டலுக்குத் தமிழ்விற்கும் சுப்பன் அல்ல!

*சுப்ரமணிய பாரதியார் சொக்கத் தங்கம்!*
*சுடர்த்தமிழின் சோலைமலை; கலையின்சாரம்!*
*வெங்காயம் கத்தாழை விளக்கெண்ணெய் வேப்பங்காயில்*
*வளவளத்த கவியல்ல; வேங்கைப்பாய்ச்சல்!*

சுட்டெரிக்கும் சரவிழிகள் சுரக்கும்வீரம்
பட்டெரிக்கும் பகல்உமிழும் படைவாளேந்தும்
அட்டதிக்கும் இடியதிர முரசு கொட்டி
நட்டகொடி ஏற்றுவித்த நாதன் எம்கோ!

*சிங்கத் தமிழன் என்று சீறிவிட்டால் போதாது*
*சிக்காளிப் பயல்கூட சிங்கமெனப் பொய்சொல்வான்!*
*நாக்காளர் கூட்டத்தை நன்ருக்குப் பூச்சிகளை*
*நோக்கிவிடில் நம் கவிஞன் நாவடக்கிப் போவார்கள்!*

*அவனன்றோ வீரகவி, ஆசாரக் கவியல்ல!*
*சிவனே எனக்கெஞ்சும் செத்தகவி அவனல்ல*
*'மகனே எழுந்திருடா! பாவிகளை சங்கரிக்கும்*
*தவசங்கரா'என்று சத்திதரும் செங்கவிஞன்!*

*காலையிலே ஒருகவிதை;கடும்பகலில் மறுகவிதை*
*மாலை மயக்கத்தில் மாயக் கிழவிகளின்*
*சேலைக்கு ஒருகவிதை;சண்டைக்கு ஒருகவிதை;*
*வாலைச் சிறுசுகளை வம்புசெய்யும் மனுசருக்கு!*

*கோலக்கவி எழுதிக் கோதானம் பெற்றுவரும்*
*தூலக்கவிஞனல்ல தூயஒளிகண்டகவி!*
*இரங்கற்பா கூட்டத்தில் இனிப்பாகப் பாடுதற்கு*
*இருநூறு வெண்காசு இன்றே அனுப்பிடணும்!*

*சிரங்கப்பன் பெண்ணுக்குச் சீக்கிரமாய்க் கவிபாட,*
*அரங்கப்பன் ஐநூறு அச்சாரம் தரவேணும்!*
*உறங்கப்பண்பாடுதற்கு ஓராயிரம் வேணும்!*
*இப்படியெல்லாம் இங்கு, இந்த கவிச்சந்தையிலே!*

தரம்கெட்ட மந்தையெலாம் தடுமாறும் காலத்தில்
அறங்காத்து மறங்காத்து அதிநாணயங்காத்து
புறங்காத்து அகங்காத்துப் பொல்லாத வறுமையிலும்
தரங்காத்த ஞானகுரு தனிமனிதமாமேதை!

*தித்திக்கும் கவிதைகளைக் குயில்கள்பாடும்*
*தத்திவரும் கிளிக்கூட்டம் தமிழ்தான்பேசும்!*
*சித்திரமாம் செந்தமிழை குழந்தைகாணும்!*
*யுத்தஜெய பேரிகையை வீரர்கேட்பார்!*

*வெத்துமர விறகைப்போல் எரிந்தநம்மை*
*வித்தைமிகு வீணைகளாய் மீட்டிவிட்டான்!*
*பாஞ்சாலி சபதத்தைக் கேட்டுவிட்டால்*
*பேடிமகன் கூடபல பீமனுவான்!*

*மாஜினியின் ஆணையது மனம்புகுந்தால்*
*மாருத துரோகிகளும் மனிதராவார்*
*பாப்பாவின் பாட்டினிமை கேட்டுவிட்டால்*
*பெற்றறியா மலடிகளும் அன்னையாவாள்!*

*பாரதப்போர் முடித்திட்ட வீரக்கண்ணன்*
*பாரதியார் வீட்டினிலோர் வேலைக்காரன்!*
*பாகுதமிழ்க் குயில்பாட்டின் பெருமைகூற*
*பாரதிதாசன் மீண்டும் பிறக்க வேண்டும்!*

*வாழ்களம் உலககவி உதயஜோதி!*
*வாழ்க நற்புதுவுலகம் வாழ்கவாழ்க!*

# பாரதியின் தத்துவ ஞானம்

—ப. ஜீவானந்தம்

"உணவு, உடை, உறைவிடம், கல்வி, தொழில், உண்மை, அழகு, இன்பம்—இவை மனித வாழ்வின் முதல் பெருந் தேவைகள். மற்றவை எல்லாம் இரண்டாந்தரமான தேவைகள் அல்லது தேவையற்றவைகள்."

வேறு எது இருப்பினும் இல்லாவிடினும் மனிதன் வாழ முடியும். ஆனால் மேலே கூறிய எட்டுப் பொருள்களும் இல்லாவிட்டால், மனிதன் மனிதனுக வாழ முடியாது.

நேற்றும், இன்றும், நாளையும் வாழ்க்கைப் பெரும் தத்துவ ஞானம் (The Great Philosophy of Life) இதுவே!

பாரதி இலக்கியம் முழுவதையும் கூர்ந்து ஆராய்ந்து பார்த்தால் இந்தத் தத்துவஞானம் பலபடி ஊடுருவிக் கிடப்பதைக் காணலாம்.

இசைக் கருவிகளில் வீணை, ஈடு இணையற்ற தல்லவா? ஆயிரம் நரம்புகளைக் கொண்ட யாழ் செய்து நுண்ணிய இசையின்பத்தைச் சுவைத்தவன் தமிழன் என்று சொல்லுகிருர்கள். இந்த வழி வழியில் வந்தவன் பாரதி.

வாழ்விலேயே சிறந்த மனித வாழ்வை எண்ணுகிருன். அதனைப் பொருத்தமாக உவமிக்க "நல்லதோர் வீணை" நினைவுக்கு வருகிறது அவனுக்கு. வீணை, அதிலும் "நல்லதோர் வீணை", சிந்திக்க வேண்டும். மனித வாழ்வு, அதிலும் பெறற்கரிய மனித வாழ்வு, சிந்திக்க வேண்டும்.

வீணை எதற்கு? ஒரு பயனுமின்றிக் குப்பை மேட்டில் தூக்கி எறிவதற்கா? அல்ல! பின் எதற்கு? வாசித்து உலகத்தை எல்லாம் இன்பக் கடல் ஆட்டுதற்கு; தானும் இன்பக் கடலாடுதற்கு. மனித வாழ்வு எதற்கு? வெந்ததைத் தின்று விதி வந்தால் சாவதற்கா? அல்ல. பின் எதற்கு? உலகத்தைப் பயனுள்ள வாழ்வு வாழச் செய்து, உலகம் முழுவதும் இன்பம் அடைவதில் தன்னுடைய இன்பத்தைக் காண்பதற்கு.

பாரதிக்கு முன்பிருந்த தமிழ்ச் சான்ருேர்கள் மட்டுமல்ல, உலகச் சான்ருேர்கள் எல்லாருடைய கண்ணேட்டத்தின் அடிச்சரடும் இதுதான். பாரதியின் வாழ்க்கைப் பார்வை அவர்களுடைய சீரிய கண்ணேட்டங்களை எல்லாம் காலத்திற்கு ஏற்ற மெருகு கொடுத்துப் பிரதி நிதிப்படுத்துகின்றன.

இந்தப் பார்வையை பாரதி, சக்தியினிடம் வரங் கேட்கும் ஒரு பாடலில் மிக அழகாகக் காட்டுகிருன்!

"நல்லதோர் வீணை செய்தே—அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?
சொல்லடி சிவசக்தி!—எனைச்
சுடர்மிகும் அறிவுடன்படைத்துவிட்டாய்
வல்லமை தாராயோ?—இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே?
சொல்லடி சிவசக்தி—நிலச்
சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ?"

சோற்றுக்குச் செலவும், பூமிக்கு பாரமுமாக எனக்கு வாழ்வு வேண்டாம். மனித வர்க்கத்தின் விடுதலைக்கும், நல்வாழ்வுக்கும் பெரும்பணி புரிவதற்காகவே எனக்கு வாழ்வு வேண்டும்.

பாரதியின் வாழ்க்கைப் பெருநோக்கைப் பார்த்தீர்களா?

## பாரதி கேட்ட வரம்

செயலுக்கு ஏற்ற உணர்வை மக்களிடம் தூண்ட, தனக்கு ஒப்பற்ற பாடல் திறமை அருள வேண்டும் எனக் கேட்கிருன்.

மேலும் கேட்கிருன் :

"கல்லை வயிரமணி யாக்கல்—செம்பைக்
கட்டித் தங்கமெனச் செய்தல்—வெறும்
புல்லை நெல்லெனப் புரிதல்—பன்றிப்
போத்தைச் சிங்கவே ருக்கல்—மண்ணை
வெல்லத் தினிப்புவரச் செய்தல்—என
விந்தை தோன்றிட இந்நாட்டை—நான்
தொல்லை தீர்த்துயர்வு கல்வி—வெற்றி
சூழும் வீரம் அறிவாண்மை

கூடுந் திரவியத்தின் குவைகள்—திறல்
கொள்ளுங் கோடிவகைத் தொழில்கள்—
இவை
நாடும் படிக்குவினை செய்து—இந்த
நாட்டோர் கீர்த்தியெங்கும் ஓங்கக்—கலி
சாடுந்திறன் எனக்குத் தருவாய்:"

எத்தகைய திறனெல்லாம் கேட்கிருன்? என்ன செய்யக் கேட்கிருன்? யாருக்காகக் கேட்கிருன்? என்ற கேள்விகளைக் கிளப்பி பாரதி வரம் கேட்பதைத் துருவினுல்தான், அவனுடைய கண்ணேட்டத்தை நாம் கண்டு கொள்ள முடியும்.

''நாட்டோர் கீர்த்தியெங்கும் ஓங்கக்—கலி
 சாடும் திறன்''
வேண்டுமென்று கேட்கிறான். சுவைத்துச் சுவைத்துப் பாருங்கள். அவனுடைய பெரிய பார்வை நமக்கு விளங்கும்.

இன்னும் மேலே போய், பாரதி, சக்தியிடம் வரங் கேட்கிறான் :

''. . . . . . . . . . . . . . . . . . . .இனி
 வையத் தலைமைஎனக் கருள்வாய்''
என்று கேட்கிறான்.

விண்ணகத்தை மண்ணில் கொண்டு வர வேண்டும். எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும்—அதுதானே பாரதியின் பெரும் பார்வை!

**பாரதியின் கிருதயுகம்**

பாரதியின் வாழ்க்கைப் பார்வையில் ஒரு புரட்சி நிகழ்ச்சி ஒரு ''யுகப் புரட்சி''யைக் காட்டுகிறது. ''கலி'' இடிபட்ட சுவர்போல விழுகிறான். ''கிருத யுகம்'' எழுகிறது.

அவனுடைய ''பொதுவுடைமைப் பார்வை''யில், ''உலகத்துக்கொரு புதுமை'' நடக்கிறது. ''எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் ஓர் விலை, எல்லோரும் ஓர் நிறை'' என்ற சூழ்நிலை உருவாகிறது. அங்கு ''எல்லோரும் மக்கள், எல்லோரும் மன்னர்''களாக வாழ்கிறார்கள்.

**பாரதியின் தத்துவஞானம்**

''நான் ஜாதி பேதத்திற்கு நண்பன் அல்லேன். இந்தியர்கள் எல்லோரும் இந்துக்கள், எல்லோரும் ஒரே ஜாதி என்ற சாதாரண இங்கிலீஷ் படிப்பாளிகள் கொள்கையை நான் அனுசரிக்கவில்லை. உலகத்து மனிதர்கள் எல்லோரும் ஒரே ஜாதி. ''வஸுதைவ குடும்பம்'' என்ற பர்த்ருஹரியின் கொள்கையைத் தழுவியுள்ளேன். மனித ஜாதியும் மற்ற ஜந்து சமூகங்களும் ஒரே குடும்பம் என்ற டார்வின் என்ற ஆங்கில விஞ்ஞானியின் கருத்தைப் பின்பற்றுகிறேன். எல்லா உயிர்களும் கடவுளுடைய அம்சம் என்ற பகவத் கீதையின் பரமோபதேசத்தைக் கடைப்பிடித்து நிற்கிறேன்''.

பாரதி 1921 மார்ச் 15-ஆம் தேதி எழுதிய ஒரு கட்டுரையின் ஒரு பகுதி இது. மறைவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னால் வெளியிட்ட கருத்து இது. எனவே மேற்படிக் கருத்துக்கள், பாரதியின் தத்துவ முதிர்ச்சியில் விளைந்த கருத்துக்கள் என்பது உறுதி.

**உலகத்து மக்களெல்லாம் ஒரே ஜாதி**

பாரதியின் கருத்து பழைய உண்மையும் புதிய உண்மையும் இரண்டறக் கலந்து இருபதாம் நூற்றாண்டின் மெருகும் ஏறி, தமிழகத்தில் வெடித்துக் கிளம்பிய கருத்து. பகவத் கீதை—பர்த்ருஹரி—டார்வின்—பாரதி பல்வேறு காலத்து உரமும் நீரும் ஊட்டி வளர்த்துள்ள கொள்கை—உலகத்து மக்களெல்லாம் ஒரே ஜாதி; உலகத்து உயிர்களெல்லாம் ஒரே குடும்பம்; உலகத்து உயிர்களெல்லாம் கடவுளின் அம்சம் என்ற கொள்கை.

பின்னும் ஐந்து மாதங்களுக்கு அப்பால் இந்தத் தத்துவத்தை மேலும் வளர்த்து வேறொரு விதமாக வெளியிடுகிறான். அது இது :

''எல்லாப் பொருள்களையும் ஒரே பொருளாகக் காண்பவனுக்கு மருட்சி இல்லை; துயரமில்லை. எல்லாம் ஒரே பொருள் என்று கண்டவன் எதனிடத்தும் கூச்சமோ, வெறுப்போ, அச்சமோ கொள்ள மாட்டான். அவன் எல்லாப் பொருள்களிடத்தும் அன்பும், ஆதரவும், மகிழ்ச்சியும், பக்தியும் செலுத்துவான். எந்தப் பொருளிலிருந்தும் மன நிறைவு பெறுகிறவன், எப்பொழுதும் நிறைவோடிருப்பான், இங்ஙனம் மாறாத இன்ப நிலையே முக்தி நிலை என்றும் அமர பதம் என்றும் கூறப்படுகிறது. இதனை மனிதன் பயிற்சியாலும் நம்பிக்கையாலும் இந்த உலகத்திலேயே எய்திவிட முடியும். இதுதான் வேத ரகசியம்.''

இந்தக் கருத்தை 1921 ஆகஸ்டு 25-ஆம் தேதி எழுதிய ''ஸ்ரீ ரவீந்திர திக்விஜயம்'' என்ற கட்டுரையில் ''காளிதாசன்'' என்ற புனை பெயரில் பாரதி குறிப்பிடுகிறான். இதை ரவீந்திரர் இந்தியாவின் பிரதிநிதியாக உலகத்திற்கு அருளிய உபதேசம் என்று குறிப்பிடுகிறான். இதுதான் பாரத நாட்டுக்குப் பூலோக குரு என்ற பெருமையை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறதென்று குறிப்பிடுகிறான்,

''வியனுல கனைத்தையும் அமுதென நுகரும்
 தேவ வாழ்வை''
இங்கு தத்துவக் கனியாகப் பழுக்க வைத்து அருளுகிறான்.

இந்தத் தத்துவத்தை பாரதி நடைமுறைக் கொள்கையாக்க விரும்புகிறான். அதன் பொருட்டு உலக முழுவதிலும் ஒரு கண்ணோட்டம் செலுத்துகிறான். அதே ஓட்டத்தில் ஒரு வட்டத்தைத் தமிழகத்திலும் செலுத்துகிறான். சில முடிவுகளுக்கு வருகிறான்.

1. எல்லா மக்களும் ஏற்றத் தாழ்வு பாராட்டாமல், சரிநிகர் சமானமாக வாழ வேண்டும்.

2. எல்லா மக்களும் உலக இன்பம் முழுவதையும் சம உரிமையோடும் சமவாய்ப்போடும் அனுபவிக்க வேண்டும். நமது பழம் பெரும் பண்பாட்டையும், மனித வர்க்கத்தின் புத்தம் புது இலட்சியங்களையும் இரண்டறக் கலந்து, மேற்கூறிய முடிவுகளுக்கு வருகிறான்.

முடிவுகளை நடைமுறையாக்குவது எப்படி? நோயின் அளவுக்குத் தக்கபடியும் ஆளின் அளவுக்குத் தக்கபடியும் மருந்து கொடுக்க வேண்டுமென்று உணர்கிறான்.

யதார்த்தச் சூழ்நிலையை உள் நுழைந்து கணக்கில் எடுக்கிறான். மக்கள், ஜாதிமத வாழ்விலும், தத்துவஞானக் கோட்பாடுகளிலும் அழுந்திக் கிடப்பதைப் பார்க்கிறான். புதிய வாழ்வு மலர வேண்டுமானால், ஜனயுகம் தோன்ற வேண்டுமானால், புதுமை வாய்ந்த ஒரு சமய-தத்துவ ஞானக் கண்ணோட்டத்தை உருவாக்கி, பொது மக்களுக்குக் கொடுக்க வேண்டியது மிக மிகத் தேவை என்று அவனுக்குப்படுகிறது.

[நன்றி: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை-2.]

# மாமனும் மருகனும்



கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.யும், கவிதை பாடிய புலவன் சுப்பிரமணிய பாரதியும் மாமன் மருகன் உறவோடு தோளோடு தோள் நின்று நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டவர்கள்,

**வ.உ.சி.யின் வீரச் செயல்:**

வ.உ.சி.யின் வீரச் செயல்கள் குறித்துக் கவி பாரதியார் பல பாடல்கள் பாடியுள்ளார்:

(வெள்ளைக்கார விஞ்ச் துரை கூற்று) :

நாட்டி லெங்கும் சுதந்திர வாஞ்சையை
 நாட்டினாய்:-கனல்-மூட்டினாய்;
வாட்டி யுன்னை மடக்கிச் சிறைக்குள்ளே
 மாட்டு வேன்:-வலி-காட்டுவேன்.
(நாட்டி)

கூட்டம் கூடிவந்தே மாதரமென்று
 கோஷித் தாய்;-எமைத்-தூஷித்தாய்;
ஓட்டம் நாங்க ளெடுக்க வென்றே கப்பல்
 ஓட்டி னாய்;-பொருள்-ஈட்டினாய்
(நாட்டி)

கோழைப் பட்ட ஜனங்களுக் குண்மைகள்
 கூறி னாய்;-சட்டம்-மீறினாய்;
ஏழைப்பட் டிங்கு இறத்தல் இழிவென்றே
 ஏசி னாய்;-வீரம்-பேசினாய்.
(நாட்டி)

அடிமைப் பேடிகள் தம்மை மனிதர்கள்
 ஆக்கி னாய்;-புன்மை-போக்கினாய்;
மிடிமை போதும் நமக்கென் றிருந்தோரை
 மீட்டி னாய்;-ஆசை-காட்டினாய்.
(நாட்டி)

தொண்டொன் றேதொழிலாக் கொண்டிருந்
 தோரைத்
 தூண்டி னாய்;-புகழ்-வேண்டினாய்;
கண்கண்ட தொழில் கற்க மார்க்கங்கள்
 காட்டி னாய்;-சோர்வை-ஓட்டினாய்.
(நாட்டி)

எங்கும் இந்த சுயராஜ்ய விருப்பத்தை
 ஏவி னாய்;-விதை-தூவினாய்;
சிங்கம் செய்யும் தொழிலைச் சிறுமுயல்
 செய்ய வோ?-நீங்கள் உய்யவோ?
(நாட்டி)

சுட்டு வீழ்த்தியே புத்தி வருத்திச்
 சொல்லுவேன்;-குத்திக் கொல்லுவேன்
தட்டிப் பேசுவோ ருண்டோ? சிறைக்குள்ளே
 தள்ளுவேன்;-பழி-கொள்ளுவேன்.
(நாட்டி)

**(தேசபக்தர் சிதம்பரம் பிள்ளை மறுமொ**

சொந்த நாட்டிற் பரர்க்கடிமை செய்
 துஞ்சிடோம்-இனி-அஞ்சிடோம்;
எந்த நாட்டிலும் இந்த அநீதிகள்
 ஏற்குமோ?-தெய்வம்-பார்க்குமே

வந்தே மாதரம் என்றுயிர் போம்வரை
 வாழ்த்து வோம்;-முடி-தாழ்த்து
எந்த மாருயி ரன்னையைப் போற்றுத
 ஈன மோ?-அவ-மானமோ?

பொழுதெல்லாம் எங்கள் செல்வங் கொ

 போகவோ?-நாங்கள்-சாகவோ?
அழுதுகொண்டிருப் போமோ? ஆண்
 அல்லமோ?-உயிர்- வெல்லமோ?

நாங்கள் முப்பது கோடி மக்களும்
 நாய்க ளோ?-பன்றிச்-சேய்களோ
நீங்கள் மட்டும் மனிதர்களோ? இது
 நீத மோ-பிடி-வாதமோ?

பார தத்திடை அன்பு செலுத்துதல்
 பாப மோ?-மனஸ்-தாபமோ?
கூறும் எங்கள் மிடிமையைத் தீர்ப்பது
 குற்ற மோ?-இதில்-செற்றமோ!

ஒற்றுமை வழி யொன்றே வழியென்
 ஓர்ந்திட் டோம்;-நன்கு-தேர்ந்
மற்று நீங்கள் செய்யுங்கொடு மைக்
 மலைவு றோம்;-சித்தம்-கலைவுறோ

சதையைத் துண்டுதுண் டாக்கினும்
 

 சாயுமோ?-ஜீவன்-ஓயுமோ?
இதயத் துள்ளே இலங்கு மஹாபக்தி
 ஏகுமோ?-நெஞ்சம்-வேகுமோ?

அடக்குமுறை காரணமாக 'வெள்ளைக்கார விஞ்ச் துரை கூற்று' பக்தர் சிதம்பரம் பிள்ளை மறுமொழி' தலைப்புகளில் வெளியான இரு க அடிமைப் பட்டுக் கிடந்த விடுதலை வேள்வியில் குதிக்குமாறு ஒ என்றால் அது உண்மை; வெறும் இல்லை.

இளைஞர்களிடத்தே தேசபக்தி கொழுந்து விட்டெரிய அந்நாளில் கவிதைகளும் தூண்டின என்று மன பெரும் தேசபக்தர் திரு. மாசிலாமணி அவர்கள் மேடை தோறும் முழங்கு

''நாலோர்கள் செக்கடியில் நோ காணகிலையோ?'' என்ற பாடல் கே மனமும் கரையும்.



ந்திப்பு :

தன் முதலாக வ. உ. சி. அவர்கள் பாரதி அவர்களை 'இந்தியா' பத்திரிகை கத்தில்தான் சந்தித்தார். முன்பே பாரின் நாட்டுப் பணிகள் பற்றி நன்கு ருந்த பாரதியார் அவர்கள், முதல் சந் பயே ஆரத் தழுவி வரவேற்றதாக அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்.

ங்கள் :

த் காங்கிரசில் லோகமான்ய பால ர திலகர் அவர்களுக்கு இருகரங்களாக யவர்கள் தமிழ்நாட்டிலிருந்து சென்ற யும், பாரதியும் தாம் என்று அறிந்து ருமை கொள்ளலாம்.

த் காங்கிரசில் குழப்பமேற்பட்டு மீது சில குண்டர்கள் நாற்காலிகளைத் எறிந்தபோது ஒருபுறம் வ.உ.சி.யும், பாரதியும் அரணாக நின்று அவரைக் ற்றினார்கள்.

நாடு குழப்பத்தில் முடியவே, தமிழகப் கள் எல்லாம் அரவிந்தர் மாளிகையில் ந்தபோது, விடுதலைப் போராட்டத் குரல் கொடுக்கத் தீவிரவாதிகளுக்கு ள் ஏடு வேண்டுமென்று பாரதியார் கூறினாராம். ஆனால் வ.உ.சி.யோ மட்டும் போதாது. பலமொழிகளில் கு ஏடுகள் நடத்தினால்தான் வெள்ளை விரட்டுவதற்கு மக்கள் விழிப்படை என்று கூறியிருக்கிறார்.

ின் வேண்டுகோள் :

ச பக்தர்களுக்கு உதவி செய்வதற் வ.உ.சி.யின் வேண்டுகோளின் பேரில் பாரதியார் புதுவையில் குடியேறி ் போராட்டத்திற்குப் பெரும் ாற்றினார். இல்லாவிடில் பாரதியா இலக்கியப் படைப்புகள் நமக்குக் இருக்க மாட்டா.

இழந்த கரியின் காலில் மாமா ார்) மிதியுண்டு சின்னாளில் மறைந்த கேட்டு மருகர் (வ.உ.சி.) அடைந்த மலயெனப் பெரிது.

வ. உ. சி. சுப்பிரமணியம் அவர்களைப் ண்டு எழுதியவர்: பி. வி. கிரி.

## வற்றல் குழம்புப் பிரியர்

ஒருமுறை சொந்த அலுவலின் காரணமாக, மதுரைக்குச் சென்ற பாரதியார் ஓர் உணவு விடுதிக்குச் சென்றார். இலையின் முன் அமர்ந்து பதார்த்த வகைகளைப் பற்றி உரிமையாளரிடம் கேட்டார். ''பூசணிக்காய் கறி, பூசணிக்காய் சாம்பார்' என்று உரிமையாளர் சொல்லவே, பாரதியார் முகவாட்டத்துடன் இலையைவிட்டு எழுந்துவிட்டார். வெளியே புறப்பட முனைந்தார். அவரைப் போக விடாமல் தடுத்த முதலாளி, ''தங்களுக்கு என்ன கறி, என்ன சாம்பார் பிடிக்குமென்று சொல்லுங்கள். பத்தே நிமிடத்தில் தயார் செய்கிறேன்! நம்ம கடையில் நுழைஞ்சவர் சாப்பிடாமல் எழுந்து போறதாவது!'' என்று சொல்லிப் பாரதியை அமர்த்தினார்.

''எனக்கு மணத்தக்காளி வற்றல் குழம்பு தயாரித்துக் கொடுங்கள்'' என்று கேட்ட பாரதியார், தாம் யாரென்பதையும் உரிமையாளருக்குத் தெரிவித்தார்.

வந்திருப்பவர் பாரதியார் என்பதையறிந்தவுடன், உரிமையாளர் தலை கால் புரியாத அளவுக்கு மனமகிழ்ச்சியடைந்தார். தாமே வற்றல் குழம்பு தயாரித்தார்; பாரதியாருக்குப் படைத்தார். அத்துடன் 'செந்தமிழ் நாடென்னும் போதினிலே' என்னும் பாட்டைப் பாடுமாறும் கேட்டார். பாரதி பாடினார். பின்னர் உரிமையாளரிடம் பாரதியார் ஒரு வேண்டுகோள் விடுத்தார்.





''இன்று வெள்ளிக்கிழமை; இனி ஒவ்வொரு வெள்ளியன்றும் எனது நினைவாக சாப்பாட்டில் மணத்தக்காளி வற்றல் குழம்பு போட வேண்டும்'' என்று வேண்டினார் பாரதியார். உரிமையாளரும் அதற்குச் சம்மதித்து, கடைசி வரை வெள்ளிக்கிழமை தோறும் வற்றல் குழம்பு போட்டுவந்தார்.

உணவு உண்ண வருபவர் எல்லாருக்கும் வற்றல் குழம்பு கிடைக்க வேண்டும் என்று எண்ணிய பாரதி, ''யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையம்'' என்ற கொள்கையுடையவர் என்பதில் ஐயமில்லை.




பதிவு எண். M. 8676



| | பெரியவர் கூலி | சிறியவர் கூலி |
|---|---|---|
| ஏர் உழ ([illegible]) | 9.00 | — |
| ஏர் உழ ([illegible]) | 5.00 | — |
| விதை விதைக்கல், நாற்றுப் பறிக்க ... | 5.00 | 3.00 |
| நாற்று நட, களை எடுக்க ... | 3.50 | 2.10 |
| அறுவடை செய்ய ... | 5.00 | 3.00 |
| பால் கறக்க, கோழி வளர்க்க, வாப்பு கழிக்க, எரு சுமக்க, தேனீ வளர்க்க, பயிற்சி பெற்ற பிற பணிகளுக்கு | 5.00 | 3.00 |
| கால்நடை வளர்க்க | 3.50 | 2.10 |
| பயிற்சி பெறாத பிற பணிகளுக்கு | 3.50 | — |

வேலை நேரம் : உழவு 5 மணி நேரம்
பிற பணிகள் 7 மணி நேரம்

நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தைக் குறைத்துக் கொடுப்பது குற்றமாகும்! இக்குற்றத்திற்கு 6 மாதம் வரை சிறைத்தண்டனை அல்லது 500 ரூபாய் வரை அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும்!

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு, செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.






# தமிழரசு

1-10-1976. 50 காசு





**இந்தியப் பொருளாதார நிலை கணிசமான அளவு உயர்ந்துள்ளது.**

அரசின் பணி இது !

நாட்டிற்கு உங்கள் பங்கு என்ன ?

**வளமான வாழ்வு பெற அளவான குடும்பம் அவசியம் அல்லவா !**

இரண்டே பெறுக !        இனிதே வாழ்க !!

குடும்பநலத்துறை,
தமிழ்நாடு அரசு.


# தமிழரசு

மலர்: 7]    1–10–1976    [இதழ்: 7


3 OCT 1976

## இந்த இதழில்......


| | பக்கம். |
|---|---|
| அரசு கொண்டாடிய பாரதியார் நினைவு நாள் விழா | 2 |
| எதிர்காலம் ஒளிமயம் ஆகும் (பிரதமர் உரை) | 3 |
| பாஞ்சாலி சபதம் நூலை அச்சுக்கோத்தவர் பேட்டி | 5 |
| சுதேச உணர்வே நம்மை வாழவைக்கும் (மகாத்மா காந்தி) | 9 |
| கிராமக் கைத்தொழிலின் மறுமலர்ச்சி (மகாத்மா காந்தி) | 12 |
| அரிசன ஆதிவாசிகளின் முன்னேற்றத்திற்கு அரசு செய்திடும் சீரிய பணிகள் | 13 |
| இருபதின் பெருமையை உணர்த்தும் நகரச் சீரமைப்புத் திட்டம் | 29 |
| கிராம சேவகர்களுக்கு மகாத்மா கூறிய அறிவுரை | 33 |
| தலைசிறந்த கிராமம் | 35 |
| தமிழ்நாட்டில் கதர் கிராமத்தொழில் வளர்ச்சி | 37 |
| கிராம மக்களுக்கு வாழ்வளிக்கவல்லது ராட்டையே | 39 |
| கிராம ஊழியர்களின் கடமை (மகாத்மா காந்தி) | 40 |
| பத்திராதிபர் (பாரதியார் மொழி பெயர்த்த தாகூர் சிறுகதை) | 41 |
| காந்தியடிகள் கண்ட கனவு நனவாகிறது | 45 |
| தமிழ்நாட்டில் கிராமக் குடிசை வசதித் திட்டங்கள் | 47 |


மற்றும் பிரதமரின் தமிழகச் சுற்றுப் பயணம், காந்திஜி, பாரதியார் நினைவுநாள் விழா புகைப்படங்கள் இடம் பெற்றுள்ளன.



## அரசு கொண்டாடிய பாரதி நினைவு நாள் விழா

பாட்டால் உணர்ச்சி ஊட்டிய பாவலர்–பண்டிதரும் பாமரரும் போற்றும் வகையில் கவிதைக் கனிகளை வழங்கிய புலவர்—சுதந்தரத்தின் பெருமையையும் ஒருமைப் பாட்டின் உயர்வையும் பாமாலைகளால் எடுத்துக் கூறிய கவிஞர் பாரதியாரின் நினைவு நாளைத் தமிழக அரசு மிகச் சிறப்பாகக் கொண்டாடியது.

அரசு, நிருவாகங்களில் மட்டும்தான் ஈடுபடும் என்பது அந்நியர் ஆட்சிக் காலத்தில் இருந்த வழக்கம். சுதந்தரம் பெற்ற பின்னரும்கூட நிருவாகத் துறைப் பணிகளிலேயே கவனம் செலுத்துவது தான் அரசு முறை என்ற நிலை இருந்து வந்தது. சமுதாய விழாக்களில் அரசின் கவனம் திரும்பாத சூழ்நிலையே நிலவி வந்தது. அந்த நிலை இந்த ஆண்டு மாறி விட்டது. தமிழக அரசு, சமுதாய விழாவில் கவனம் செலுத்தி, புதிய வரலாற்றைப் படைத்து விட்டது.

மக்கள் கவிஞர் என்று புகழ் மாலை சூட்டப் பெற்றவரும் பொது மக்களால் மிகவும் பாராட்டிப் போற்றப் பெற்றவருமான மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் நினைவு நாளை இந்த ஆண்டு தமிழக அரசே சிறப்பாகக் கொண்டாடியதன் மூலம் சமுதாயத்துக்கு அரசு செய்ய வேண்டிய கடமையைச் செய்திருக்கிறது; இதுபோன்ற சுதந்தர உணர்ச்சி மிக்க புலவர்களுக்கு—ஒருமைப்பாட்டை வலியுறுத்திய கவிஞர்களுக்கு–விழா எடுக்கப்பட வேண்டும் என்ற உண்மையைப் பிற மாநிலங்களுக்கு எடுத்துரைக்கும் வகையில்—வழிகாட்டும் வகையில் தமிழ்நாடு அரசின் விழா அமைந்திருந்தது.

செப்டம்பர் 13–ஆம் நாளிலிருந்து 17-ஆம் நாள் வரை சென்னை வள்ளுவர் கோட்டத்தில் கருத்தரங்கம், கவியரங்கம், நாடகம், இசை நிகழ்ச்சி போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்திப் பாரதியாருக்குச் சிறப்புச் செய்தது தமிழ்நாடு அரசு. பாரதியாரின் உருவப்படங்கள், கையெழுத்துப் பிரதிகள் போன்றவற்றைச் சேகரித்து ஒரு கண்காட்சியும் அமைத்தது குறிப்பிடத்தக்கதாக இருந்தது. இலட்சக்கணக்கான மக்கள் பாரதியாரின் நினைவு நாள் விழாவில் கலந்து கொண்டு, மகாகவிக்கு அஞ்சலி செலுத்திய நிகழ்ச்சிகள் நெஞ்சிருக்கும் வரை நினைவில் இருப்பது உறுதி.



# "எதிர்காலம் ஒளிமயம் ஆகும்!"

## பிரதமர் உரை

சகோதர, சகோதரிகளே!

தமிழ்நாட்டுக்கு வருவதென்றாலே எனக்கு எப்பொழுதும் மகிழ்ச்சிதான். ஆனால் இந்தத் தடவை நான் அவ்வளவு மகிழ்ச்சி அடையவில்லை. உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால், வான் மழை பொய்த்துப் போய்விட்டதினால் இந்தப் பகுதி வாழ் மக்களாகிய நீங்கள் படும் அவதியையும், சிரமங்களையும் காண நான் மிகுந்த வேதனைப்படுகிறேன். இத்தனை ஆண்டுகளாக, நாங்கள்—அதாவது காங்கிரசானது—நாட்டிலே பலமான ஓர் அடித்தளம் உருவாக்கக் கடுமையாகப் பாடுபட்டு வந்துள்ளது. வறுமையை ஒழிக்க வேண்டுமென்று நாம் சொல்லும்பொழுது, நமக்கு மட்டுமல்ல, வேறு யாருக்கும் வறுமையை ஒழிக்கின்ற அளவுக்கு வலிவு இல்லை என்பது நமக்குத் தெரிந்தே உள்ளது. தூக்கி எறிந்து விடுவதற்கு வறுமை, ஒரு பழைய புடவையோ கிழிந்த சட்டையோ அல்ல; வறுமை என்றால் என்ன? உண்ண உணவு இல்லாமை, உடுக்கின்ற உடை பற்றாக்குறை, தங்க இடமின்றித் தவித்தல், வேலையில்லாத் திண்டாட்டம்—இவை போன்ற இல்லாமைகளின் மொத்த உருவம்தான் வறுமை என்பது. ஆகவே, மக்களுக்கு உதவி புரிய வேண்டுமென்றால், இந்தப் பற்றாக்குறைகள் அகற்றப்பட வேண்டும்.

உணவு உற்பத்தியாகட்டும், தானியங்களின் உற்பத்தியாகட்டும், மற்ற உணவு வகைகளின் உற்பத்தியாகட்டும், தொழில் உற்பத்தியாகட்டும்—எல்லாவிதமான உற்பத்திகளையும் நாம் பெருக்கியாக வேண்டும். மக்களில் எல்லாப் பிரிவினரும் தங்களுடைய பங்கினைப் பெறுகின்ற வகையில்—இப்படி உற்பத்தியாகின்ற பொருள்கள் சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். உற்பத்திப் பெருக்கம் என்பது நாட்டில் நிலவுகின்ற சில நிலைகளை ஒட்டியே அமையும். அதாவது உற்பத்தி பணத்தை விழுங்குவதாக அல்லாமல், இலகுவாக இருக்க வேண்டும். வன்முறையோ—வன்முறைக் கிளர்ச்சிகளோ இருக்கக் கூடாது. சில சமயங்களில் வன்முறைக் கிளர்ச்சிகளும், தேவையற்ற தவறான பிரச்சாரங்களும், தவறான கோஷங்களும் கூட உற்பத்திப் பெருக்கத்தினைப் பாதித்து நிறுத்தி விடுகின்றன.

### ஆபத்தைச் சமாளிக்க பலமான அடித்தளம்.

முன்பு, தமிழ்நாட்டில் காங்கிரஸ் ஆட்சி இருந்தபொழுது நிர்வாகத் திறமைக்குத் தமிழ்நாடு மிகவும் பெயர் பெற்றிருந்தது. எல்லாத் துறைகளிலும் தமிழ்நாடு முன்னேற்றம் பெற்றிருந்தது. துரதிருஷ்டவசமாக, நாம் தேர்தலில் தோற்று வேறு ஒரு கட்சி ஆட்சிக்கு வந்தது. ஆட்சிக்கு வந்தவர்களின் நோக்கும், சிந்தனையும் நாட்டின் வளர்ச்சியிலும், உற்பத்தியிலும் இல்லை. அவர்கள் மக்களின் சில பிரிவினர்களுக்கு உதவி புரிந்தார்கள். அது நல்ல பணி. ஆனால் அது அடிப்படையான பணி அல்ல.

ஆகவேதான், தமிழ்நாட்டுக்கு ஓர் ஆபத்
ஏற்படும்பொழுது, ஒரு நெருக்கடி வரு
பொழுது அதைச் சமாளிக்கின்ற நிலையி
மக்கள் தயாராக இல்லை. அதைச் சம
ளிக்கப் போதிய மனத் திண்மையும் மக்
ளுக்கு இல்லாமல் போய்விட்டது. ஓ
வீட்டின் அடித்தளம் உறுதியாக இல்லையெ
ன்றால்—அந்த வீட்டை எப்படி எப்படியெ
லாம் அலங்காரம் செய்துள்ளோம் என்
தெல்லாம் மிகமிகச் சாதாரணமான அளவுக்
—கவைக்குதவாத விஷயமாகிவிடும். ஏெ
னில் அஸ்திவாரம் பலமில்லையென்றால்
புயல் அடிக்கும்பொழுது, வீடே பறந்
போய்விடும். ஆகவே, அஸ்திவாரத்தை
பலப்படுத்தாமல், மக்களைச் சுய சார்புடை
வர்களாகவும், பொறுப்புள்ளவர்களாகவு
ஆக்காமல், அடிப்படை ஆக்கப் பணிக
லிருந்து மக்களுடைய கவனத்தைத் திசை
திருப்ப எல்லாவிதமான கோஷங்களும் தமி
நாட்டில் எழுப்பப்பட்டன.

### மூன்று கோஷங்கள் முன்னேற்றத்திற்குத் தடைக் கற்கள்

முதல் கோஷம், மொழி பற்றியது. எந்
மக்கள் மீதும் எந்த மொழியையும் திணிக்
நாம் விரும்பவில்லை என மக்களுக்கு நா
உறுதி அளித்தது மட்டுமல்லாமல், நம்மு
டைய கொள்கையாலும், செயல்களாலு
அதைத் தெளிவுற நிரூபித்துள்ளோம். எல்ல
வகைகளிலும் இயன்ற அளவுக்குப் பிரதே
மொழிகளுக்கு ஊக்கம் அளிக்க நாம் விருப்
கிறோம் என்பதை நிரூபித்துள்ளோ
ஆகவே ஹிந்தி எதிர்ப்புக் கோஷத்துக்கு எந்
வித ஆதாரமும் கிடையாது.

இரண்டாவது கோஷம் மாநில சுயாட
பற்றியது. மாநில சுயாட்சி என்றால் என்ன
தன்னுடைய அதிகாரங்களை வைத்து
கொண்டு ஒவ்வொரு மாநிலமும் தனக்கு
பிடித்தமானதைச் செய்யவும், தனக்
எந்தக் கொள்கை பிடிக்கிறதோ அதை
கடைப்பிடிக்கவும் அனுமதிக்கப்பட வேண்
டும் என்பதுதான் அதன் பொருள். இந்
கோஷத்தினால் தான் தமிழ்நாடு இன்று அவ
யுறுகிறது. ஏனெனில், தண்ணீர், விவசாய
நீர்ப்பாசனம் இவை மத்திய அரசின் ஆளுகை
யின்கீழ் உள்ள விஷயங்கள் அல்ல. இவை
மாநில அரசின்கீழ் வருபவை. மற்ற மாநில
களிடமிருந்து இன்று உங்களுக்குத் தண்ணீ
வேண்டியுள்ளது. நீங்கள் அதை எப்படி
பெறமுடியும்? உங்களுக்குத் தேவையா
தண்ணீரைத் தருமாறு அந்த மாநிலங்களு
நாங்கள் எப்படி எடுத்துச் சொல்ல முடியு
இந்த மாதிரியான மாநில சுயாட்சி இரு
வேண்டுமெனில், பிறகு, தமிழ்நாடு மட்
மல்ல இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மாநி
மும் சிரமம் வரும்பொழுது அவதியுற வேண்

துதான். ஆனால் இந்த விஷயம் குறித்துச் பகாலமாகத் தமிழ்நாடு மிகவும் வலி றுத்திக் கூறியுள்ளதினால், அப்படிச் செய்வது யானது என நாங்கள் நினைக்கவில்லை. தற்குமாறாக, எப்படி இந்தப் பிரச்சினையைத் ர்க்கலாம் என்பது குறித்து தமிழ்நாடு, கர் டகம், கேரளம் ஆகிய மூன்று மாநிலங் ரும் கலந்து பேச நம்மாலான முயற்சிகளைச் ய்து கொண்டு வருகிறோம். கர்நாடகத்தி ம் கொஞ்சம் தண்ணீர் இருக்கிறது. அதிக க இல்லை. ஆனால், கொஞ்சம் தண்ணீரை து கொடுக்கலாம். ஆனால், கர்நாடகத்தில் ன்சாரப் பற்றாக்குறை உள்ளது. கேரளம், ர்நாடகத்துக்கு மின்சாரம் தர முடியும். னால் அந்த மின்சாரம் தமிழ் நாட்டின் மூல ாகத் தான் செல்ல முடியும். ஆகவே, கர்நா கத்துக்கு அந்த மின்சாரம் செல்லத் தமிழ் ாடு அனுமதித்தாலொழிய தண்ணீர் கொடுக்க ர்நாடகம் விரும்பவில்லை. இந்த மூன்று மாநி ங்களும் வெகு விரைவில் ஒரு தீர்வு காண டியும் என நான் நம்புகிறேன். தானும் ரமத்தில் இருப்பதையும், அவசரக் காலத் ல் தமிழ் நாடு தனக்கு உதவுமா என்பதைக் கரளம் தெரிந்து கொள்ள விரும்பும்.

தமிழ்நாட்டில் கிளப்பப்பட்ட மூன்றாவது பாயகரமான கோஷம்—பிரிவினைக்கோஷம். து அரசியல் சட்டத்துக்கு விரோதமானது ன்பது மட்டுமின்றி, இந்தியா முழுவதிற்கும் பரும் பாதகத்தை விளைவிக்கக்கூடிய அபாய ரமான கோஷமாகும். ஏனெனில், இந்த ாட்டின் அடிப்படையையே அது சென்று ாக்குகிறது. நாட்டின் ஒற்றுமைக்கும் ஒரு மப்பாட்டுக்கும் ஊறு செய்கிறது. இதனால், ன்ன நேர்ந்தாலும் சரி நாட்டில் பிரிவினை ண்ணங்களைப் பரப்புவதை அனுமதிக்க முடி ாது. சகித்துக் கொண்டிருக்க முடியாது. த்துணை அதிகாரம் உண்டோ, அத்துணையும் காண்டு அதைத் தடுத்து நிறுத்துவோம், என் தைத் திட்டவட்டமாகக் கூறிக்கொள்ள ரும்புகிறேன்.

இங்குள்ள உங்களில் பெரும்பாலானவர் ள் இந்த வறட்சி நிவாரணப் பணியில் ஈடு ட்டுள்ளீர்கள். சற்று முன்பு அந்தப் பணி ளை நான் பார்வையிட்டேன். வேலைவாய்ப்பு ல பேருக்குக் கிட்டியுள்ளது குறித்து எனக்கு கிழ்ச்சி. இருந்தாலும் மேலும் வேலைவாய்ப் கள் அளிக்கப்பட வேண்டுமென்றும், மேலும் து போன்ற வேலைத் திட்டங்கள் செயல் டுத்தப்பட வேண்டும் என்பதையும் நான் ணர்கிறேன். ஆண்களைவிடப் பெண் வேலை ாட்களுக்குக் குறைந்த ஊதியம் அளிக்கப்படு கிறது என்று எண்ணிப் பார்க்க நான் வருந்து கிறேன். வறட்சிப் பணிகளைப் பொறுத்த வரையிலாவது, இந்த ஊதியமாவது ஆண் களுக்கும், பெண்களுக்கும் சமமாக இருக்கும் படி பார்த்துக் கொள்ளவேண்டுமென ஆளு நரையும், அவருடைய ஆலோசகர்களையும், அவருடைய அலுவலர்களையும் கேட்டுக்கொள் கிறேன்.

வறட்சி நீங்கிட வான்மழை வேண்டும்.

என்னுடைய தமிழ்நாட்டு விஜயம் குறித்துத் தகவல் தெரிவிக்கப்பட்ட பொழுது இங்கே சிறிதளவு மழை பெய்தது. மறுபடியும் நான் இந்தப்பகுதிக்கு வந்து கொண்டிருந்தபொழுது வழியில் சிறுசிறு மழை பெய்து கொண்டிருந் தது. ஆகாயத்தில் மேகம் சூல் பிடித்து மழைக் கான அறிகுறிகள் தென்படுகின்றன. இந்தப் பகுதிக்கும் அந்த மழை பெய்ய வேண்டும், தமிழ் நாட்டில் உள்ள எல்லா வறட்சிப் பகுதி களிலும், மரங்களைக் காய்ந்து போகாமல் காப்பாற்றவும்—வாடிடும் மக்களுக்கு வரப் பிரசாதமாகவும்—இந்த மழையானது பெய்ய வேண்டும் என நான் மனப்பூர்வமாக நம்பு கிறேன். வேண்டிக்கொள்கிறேன்.

மத்திய அரசும், மாநில அரசும் உங்களுக்கு உதவி புரிய முயற்சிகள் மேற்கொண்டுள்ளன. மேலும் என்னென்ன செய்ய வேண்டுமோ அவற்றைச் செய்ய எங்களாலான முயற்சிகள் அத்தனையும் செய்வோம். நீங்கள் எனக்கு அளித்த இந்த வரவேற்புக்கு என் நன்றி. நல்ல எதிர்காலம் உங்களுக்கு அமையவேண்டு மென்று என் நல்லாசிகளையும் கூறிக்கொள் கிறேன். இப்பொழுது நீங்கள் அனுபவிக்கிற இன்னல்கள் — இடர்ப்பாடுகள்—சூழ்ந்துள்ள இருள்—இவை அத்தனையும் விலகி— தமிழ் நாட்டுக்கு நல்ல ஒளிமயமான எதிர்காலம் நிச்சயம் உண்டு என்பதிலும், மிகுந்த மனத் திண்மையுடனும், மனங்கலங்காமலும், சிர மங்களைச் சமாளிக்கின்ற தமிழகத்து மக்கள், தங்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் அனைத் தையும் களைந்தெறிந்து விட்டு ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி முன்னேற்றப் பாதை யில் ஏறுநடை போடுவர் என்பதிலும் எனக்கு எள்ளளவும் சந்தேகம் கிடையாது.

வணக்கம்.

(கோவில்பட்டி அருகில் புது அப்பனேரியில் 14—9—1976-ல் நமது பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் ஆற்றிய உரை)

---

நமது பெண்களை நாம் நமது அன்னையாக, சகோதரியாக, மகளாக மதிப்பதற்குக் கற்றுக் கொள்ளா விட்டால் புத்துயிர் பெற்ற இந்தியாவை உருவாக்க முடியாது.

* * *

நாகரிகம் என்பது வாழ்க்கையின் தேவைகளை அதிகரித்துக் கொண்டே போவது அல்ல. தாமாக தேவைகளைக் குறைத்து, உழைத்து வாழ்வதே உயரிய நாகரிகமாகும்.

—மகாத்மா காந்தி

---

# "பாஞ்சாலி சபதம்" நூலை அச்சுக் கோத்தவர் அளித்த பேட்டி

—ரா. அ. பத்மநாபன்.

பாரதியாரின் ''பாஞ்சாலி சபதம்'' நாம் அறிவோம். பாரதியார் காலத்திலேயே, அவரிடம் கையெழுத்துப் பிரதி பெற்று ''பாஞ்சாலி சபத''த்தை அச்சுக் கோத்த ஓர் அச்சகத் தொழிலாளி, முதியவராக இன்றும் நம்மிடையே இருக்கிறார் என்பது அரிய செய்திதானே! அத்தகைய முதியவர் ஒருவர் விழுப்புரம் நகரில் வாழ்கிறார். இந்த ஆண்டு பாரதி விழா சமயத்தில் அவரை பேட்டி காண்பது பொருத்தமென நினைக்கிறேன்.

இந்த முதியவருக்கு இப்போது 83 வயது ஆகிறது. ஆனால் திடமாக இருக்கிறார். இவரது பெயர் திரு. முருக. வைத்தியநாத ஸ்வாமிப் பிள்ளை. இவர் இப்போது, விழுப்புரத்தில் உள்ள ஸரஸ்வதி அச்சகம் என்ற சிறிய அச்சுக்கூடத்தில், அதை நிர்வகித்து வரும் தமது குமாரர் திரு. வி. ராஜசேகரனுடன் வாழ்ந்து வருகிறார்.

முதிய வயது என்றாலும் திரு. வைத்தியநாத ஸ்வாமிப் பிள்ளை, பாலியத்தில் செய்த தேகப்பயிற்சிகள் காரணமாக, முறுக்கேறிய உடல் வளம் கொண்டவராக விளங்குகிறார். வயதுக்கேற்ற தள்ளாமை இல்லை, அசதியோ நினைவு மயக்கங்களோ இல்லை. நல்ல ஞாபக சக்தி இருக்கிறது; கூர்ந்த கண் பார்வை இருக்கிறது. மெலிந்த உடல்; ஆறடி உயரம் இருக்கும். வலுவான நடை, பாரதியாரை நினைவூட்டும் முறுக்கிய மீசை. நரை விழுந்ததென்றாலும் கூர்மையாக வீரத்துடன் விளங்குவது. தலையில் பாதி வழுக்கை; நரை மயிர் பிடரியில் விரியக் காட்சிதருகிறது. வெட்டுக் கத்தரித்தது போன்ற பேச்சு; பளிச்சென்ற தெளிவான பதில்கள்.

திரு. முருக. வைத்தியநாத ஸ்வாமிப் பிள்ளையைப் பேட்டி காண்பதில் அவருடைய குமாரர் திரு. ராஜசேகரன் உதவி நின்றார். இவருக்கும் வஸ்தாது உடல்; கறுத்த கூர்மையான மீசை. தந்தை வைத்தியநாத ஸ்வாமிப் பிள்ளை, பாரதியார் பற்றித் தாம் அறிந்ததை யெல்லாம் இவரிடம் வெகு நாள் முன்பே சொல்லியிருக்கிறார். இவர் நல்ல நடையில் பேசும், எழுதும் திறமை பெற்றவர்.

திரு. முருக. வைத்தியநாத ஸ்வாமிப் பிள்ளை தமது இளவயது முதல், அச்சுத் தொழிலில் இருந்துள்ளார். அந்தக் காலத்தில், அதாவது சுமார் எழுபதாண்டுகளுக்கு முன், இளம் பாலகனாகப் புதுவையில் இவர் அச்சுத் தொழிலில் சேர்ந்தார். அக்காலத்தில் புதுவையில் உடற்பயிற்சி மோகம் அதிகம். உடற்பயிற்சிக் ''கொட்டடிகள்'' பல இருந்தன; அவைகளை நடத்திய ''வாத்தியார்''களுக்குப் பெரு மதிப்பு இருந்தது. தேகப் பயிற்சி, கர்லாக்கட்டை சுழற்றுவது, சிலம்பம், வாள் சுற்றுதல், 'பாக்ஸிங்' என்ற மேனாட்டுக் குத்துச் சண்டை, 'குஸ்தி' என்ற நம் நாட்டு மல் யுத்தம் முதலிய பலவும் இவர்களால் போதிக்கப்பட்டு வந்தன. பாரதியாருக்கு பிரிட்டிஷ் வேவு காரர்களாலும் அவர்களது உடந்தையாளர்களாலும் ஆபத்து நேராமல் காத்த ''மெய்க்காவலர் படை'' (''காபந்து ஆட்கள்'') இத்தகைய ''கொட்டடி' இளைஞர்களைக் கொண்டதாக இருந்தது. கொட்டடி வேணு நாய்க்கர் (அம்மாக்கண்ணு என்ற பாரதி-பக்தையின் புதல்வர்), அவரது தம்பி தெய்வசிகாமணி (இன்றும் ஜீவிதராகப் புதுவையில் இருக்கிறார்), முருக. வைத்தியநாத ஸ்வாமி முதலியோர் பாரதி



ாரின் மெய்த்தொண்டர்களில் றிப்பிடத்தக்க சிலராகும்.

புதுவை நகரில் அக்காலத்தில் வித்தியாபிவர்த்தனி'' அச்சுக் டம்'' என்றொரு புகழ் பெற்ற ச்சகம் இருந்தது. இதை வாத்தியார் அச்சுக்கூடம்'' ன்று பாமர வழக்கில் கூறுவர். ரணம், இதன் முதல்வர் வித்து ான் கிருஷ்ணசாமிப்பிள்ளை யர் பெற்ற தமிழாசிரியர், வாத்தியார்''. இந்த அச்சகம் ல்களை அச்சடிப்பதில் பெயர் டுத்தது; இதில் பாரதியாரது ல்களும், வ.வே.சு. ஐயரும் ண்டபம் ஸ்ரீநிவாஸாச்சாரியா ம் சேர்ந்து நடத்திய ''கம்ப லய'' நூல்களும் அச்சாயின. ந்த அச்சுக்கூடம்தான் பாரதி ரது ''பாஞ்சாலி சபதம்'' லின் முதல் பாகத்தை பாரதி ருக்கு அவரது செலவில் அச்ச ந்துக் கொடுத்தது. இந்தப் ழ் பெற்ற அச்சகத்தில்தான் ரு. வைத்தியநாதஸ்வாமி இளம் லகராக அச்சுத் தொழிலாள க வேலை பார்த்தார்.

திரு. வைத்தியநாத ஸ்வாமிப் ள்ளை சொல்கிறார் : ''அந்தக் லத்தில், ஒரு நாள் பாரதியார் த்தியாபிவர்த்தனி அச்சகத் க்கு வந்தார். கையில் ஏதோ யெழுத்துப் பிரதி இருந்தது. தைத் தம் சொந்தச் செலவில் சிட்டுத் தருமாறு சொன்னார், துதான் ''பாஞ்சாலி சபதம்'' தல் பாகம். பாரதியாரின் ல் ஒன்றை அவர் காலத்தி யே அச்சுக் கோத்துக் ாடுத்த கை இது!'' இவ்வாறு ால்லுகையில் திரு. வைத்திய தஸ்வாமிப் பிள்ளையின் குரலில் ருமிதம் தொனிக்கிறது.

பாரதியாரின் ''பாஞ்சாலி தம்'' முதல் பாகம் எழுதப் டு அச்சாகி வெளிவந்த ஆண்டு 12. இன்றைக்கு 64 ஆண்டு க்கு முன், அவ்வமயம், திரு. த்தியநாதஸ்வாமிப்பிள்ளைக்கு து 19. பாரதியாரிடம் அந்தச் யம் பணம் இருந்ததென்றும், னர் ஏற்பட்ட பணமுடை போது அவ்வளவு இருக்க லை என்றும் அவர் கூறுகிறார். ல், தனக்கென வைத்துக் ாள்ளத் தெரியாத கவிஞருக்கு வளவு வந்துதான் என்ன ன்? கையில் தொகை ஏதோ டத்ததும், தமது காவியங் ல் சிறந்ததென அவர் கருதிய நாட்டு நிலைமைக்கு உடனடி த் தேவையான நூலென ர் கருதியதுமான ''பாஞ்சாலி ''த்தை அச்சிடுவதில் கையின் பெரும் பகுதியை ர் செலவழித்ததில் வியப்பு

## எட்டு ஒன்பது வயதிலேயே கவிதை பாடியவர்!

*''பாரதியார் தமது ஏழாவது பிராய முதலே அருமையான தமிழ்க் கவிகளை விளையாட்டாக விரைந்து கவனஞ்செய்வதைக் கண்ட வித்வான்கள் நமது கவியின் தந்தையாரைப் புகழ்ந்திருப்பதை நான் நேரில் அறிவேன். எட்டு ஒன்பது ஆண்டுகளில் ஸர்வ சாதாரணமாய், கொடுத்த ஸமஸ்யைகளை வைத்து அற்புதமான கவிகளைப் பூர்த்தி செய்து பெரிய புலவர் கூட்டங்களைப் பிரமிக்கச் செய்த பல காலங்களிலும் நான் கூட இருந்திருக்கிறேன்.''*

**—நாவலர் சோமசுந்தர பாரதியார்.**

இல்லை. பாஞ்சாலியை அடிமைப் பட்ட பாரத தேவி போலும், பாண்டவர்கள் பாரத மக்கள் போலும் உள்ளர்த்தம் தொனிக்க அக்காவியம் அமைத்துள்ளார் கவி; மேலும், 'தர்மம் இறுதியில் வெல்லும்' என்பதையும் வற்புறுத்துகிறார். அத்துடன், நாட்டு மாந்தரை ஆட்டு மந்தையென அரசர் எண்ணிவிட்டார் என்றும், கோயிற் பூசை செய்வோர் சிலையைக் கொண்டு விற்ற கதையாயும் வாயில் காத்து நிற்போன் வீட்டை வைத்திழந்த கதையாயும் தர்மன் நாட்டை வைத்து இழந்தான், சிறியர் செய்கை செய்தான் என்றும் கூறும் சுடு சொற்கள் ராஜநிந்தியை வலியுறுத்துபவையாக இக் காவியத்தில் உள்ளன. இதை உடனே அச்சிட வேண்டுமென, தமது கைக்கு வந்த பணத்தில் இதற்குக் கவி முதலிடம் கொடுத்திருந்தாலும் வியப்பில்லை.

பாரதியார் புதுவையில் குடித்தனம் வைத்த முதலில், பொன்னு. முருகேசம் பிள்ளையின் உறவினர் கொத்தவால் இராஜமாணிக்கம் பிள்ளைக்குச் சொந்தமானதொரு வீட்டில் வாடகையின்றிக் குடியிருந்தார் என்று திரு. வைத்தியநாதஸ்வாமிப் பிள்ளை தெரிவித்தார்.

இது ஈசுவரன் தர்ம ராஜா கோயில் வீதியில், கோயிலுக்கு நேர் தெற்கே இருந்தது. பக்கத்து வீட்டில் கல்வே காலேஜ் புரொபஸராக இருந்த ''வாத்தியார்'' என். சுப்பிரமணிய ஐயர் இருந்தாரென்றும், அவருடன் பாரதியார் அடிக்கடி சல்லாபித்து மகிழ்வாரென்றும் திரு. பிள்ளை சொன்னார். (பாரதியார் இவரைத் தமது கட்டுரைகளில் ''பிரம்மராய ஐயர்'' என்று குறிப்பிடுகிறார் சிறிது காலத்துக்குப் பிறகு, அதே வீதியில் இன்னும் கிழக்கே, தெற்குப் பார்த்த ஒரு வீட்டுக்கு பாரதியார் குடியேறினார். (இது இப்போது புதுவை அரசால் ஏற்கப்பட்டுப் பொது மக்களுக்குத் திறந்து விடப்பட்டு உள்ளது. இங்கே ஒரு படிப்பகமும் நூலகமும் நடக்கின்றன; பாரதி படங்களும் அவரது புதுவை நண்பர்கள் படங்களும் ''இந்தியா'' பத்திரிகை இதழ் ஒன்றும் ஓர் அறையில் காட்சியாக வைக்கப்பட்டுள்ளன. 'தராசு'க் கடை கூடிய நீளமான பெஞ்சு ஒன்றும் இங்கு வைத்துக் காப்பாற்றப்படுகிறது. பாரதி ஐயர், மாடசாமி ஆகியோரின் நண்பரான ஆறுமுகம் செட்டியார் வீட்டு வாசலில் இருந்த பழைய பெஞ்சு இது. இதில் பாரதி உட்பட நண்பர்கள் தினமும் கூடிப் பேசியதே தராசுக் கடை. 'தராசு' நூல் இதை விவரிக்கிறது.)

இந்த வீட்டிற்குப் பிறகு, இதற்கு நேர் எதிரே ஒரு பெரிய மாடி வீட்டில் பாரதி குடியேறினார். குடியேறிய தினம், பெரிய புயல் அடித்தது. நள வருஷம் கார்த்திகை மாதம் 8-ஆம் தேதி. இப் புயலில், முதல் நாள் இருந்த வீட்டின் பின் பகுதி இடிந்து விழுந்தது. இதை பாரதியார், ''புயற் காற்று'' என்ற பாடலில் புருஷன்-மனைவி பேச்சாக வெளியிட்டுள்ளார். புதிதாகக் குடியேறிய பெரிய வீட்டில், குள்ளச் சாமி என்ற யோகி சில அதிசயங்களை நிகழ்த்திக் காட்டினார். இதை பாரதியாரே ''அம்மா'' என்ற கட்டுரையில் விவரித்துள்ளார்.

பாரதியார் குடியிருந்த, புயலில் விழுந்த வீடு புதுவை முத்தியாலுப்பேட்டை நெசவு, ஜவுளி வியாபாரி ''வெல்லச்சு'' (பாரதியார் வைத்த செல்லப் பெயர்) கிருஷ்ணசாமிச் செட்டியாருடையது. இந்த வீட்டுச் சாவியை திரு. வைத்தியநாத ஸ்வாமிப் பிள்ளைதான் திண்டிவனத்துக்குப் போய், அப்போது அங்கிருந்த வீட்டுக்காரரிடமிருந்து வாங்கி வந்து பாரதியாரிடம் கொடுத்தாராம். இந்த வீட்டு மாடியில் பாரதியார் தினமும் பகலில் சூரிய வணக்கம் செய்வார். இங்கிருந்த காலத்தில்தான் அவருக்கு உடற்பயிற்சியிலும் வாள் சுற்றுதலிலும் ஆர்வம் ஏற்பட்டதென திரு. வைத்தியநாத ஸ்வாமிப் பிள்ளை சொல்கிறார். பாரதியார் இங்கு இருந்த சமயம்தான் ராஜாஜியும் வ.உ.சி.யும், வெவ்வேறு சமயங்களில், அவரைக் காணப் புதுவை வந்தனராம். தொழிலாளர் இயக்க ஊழியராயிருந்த திரு. வி. வி. கிரி அவர்களும் (நமது முன்னாள் ஜனாதிபதி) அந்தக் காலத்தில் புதுவை வந்துள்ளாராம். இராஜகோபாலாச்சாரியாருக்குத் திருவேங்கடம் என்ற கார் டிரைவரைத் தாம் அமர்த்திக் கொடுத்ததாகவும், திருவேங்கடம் ஆயுளளவும் அவரிடம் இருந்ததாகவும் திரு. வைத்தியநாத ஸ்வாமிப் பிள்ளை தெரிவிக்கிறார். திரு. வி. வி. கிரியோ, திரு. பிள்ளையை ''இணை பிரியாத நண்பராக'' பாவித்தார்; காரணம், திரு. கிரிக்கு உடற்பயிற்சியில் ஆர்வம் அதிகம் இருந்ததேயாகும். திரு. கிரி அவர்கள் திரு. பிள்ளையிடம் ''பாக்ஸிங்'' கற்றுக் கொண்டாராம். திரு. கிரி அவர்கள் சிறந்த ஓவியர் என்றும் திரு. பிள்ளை கூறுகிறார்.

திரு. வைத்தியநாத ஸ்வாமி பிள்ளைக்கு மாமன் ஒருவர் இருந்தார். முத்துக்குமாரசாமி பிள்ளை என்ற அவர் முதலில் பிரபல (Massey & Co.) மாசி கம்பெனியின் புதுவைக் கிளையி இருந்தார்; பிறகு சென்னைக் மாற்றலாகிப் போனார். ''என்னை விட என் மாமா பாரதியாை நெருங்கி அறிந்து பழகியவா அவர் பலசமயம் பாரதியாருக்கு பண உதவி செய்துள்ளார்'' என். திரு. பிள்ளை சொன்னார்.

பாரதியாருக்கு உதவி செய் தென்பது எளிதல்ல. அவ மிகுந்த தன்மானமுள்ளவா தமது வறுமையை வெளிக்கா டிக் கொள்ளவே விரும்பாதவா நெருங்கிய நண்பர்கள் மட்டுமே தேவை அறிந்து அவருக்கு இங்கி மாக உதவி செய்ய முடியுப இதைக் காட்டும் ஒரு சம்பவ தையும் திரு. வைத்தியநா ஸ்வாமிப்பிள்ளை தெரிவித்தார் :

''ஒரு நாள் இரவு பாரதியா பக்கத்து வீட்டு நண்பர் புரொ ஸர் சுப்பிரமணிய ஐயருட இரவு நெடு நேரமாகியும் அள ளாவிக் கொண்டிருந்து விட்டா ஐயரோ உணவு உண்டாயிற்று பாரதியார் உணவு கொள் வில்லை. பேச்சுச் சுவாரசியத்தி இருந்து விட்டார். பாரதியா வீடு திரும்பிய போதுதா அன்றிரவு வீட்டில் உணவு சமை கப்போதிய பண்டங்கள் இருக் வில்லை என்பதை உணர்ந்தா அன்றிரவு அவர் சாப்பிட இல்லை. வெறும் வயிற்றுட படுக்கச் சென்றார். ஆனால், அ பொழுதுகூட அவருடைய வீரமு கம்பீரமும் முகவசீகரமும் சற்று குறைந்ததாகத் தெரியவில்லை வறுமையுடன் போராடிய கால திலேகூட அவர் தாமாக யாரி மும் சென்று உதவி கேட் தில்லை.''

பாரதியார் வீட்டில் இக்கால தில் மனைவி செல்லம்மாவுட மூத்த புதல்வி சுமார் எட் வயதுச் சிறுமி, தங்கம்மாவு இருந்தனராம். அவர்களு வறுமையைப் பங்கிட்டுக் கொண் டனராம்.

இளமையில் பாரதியாரி ''காபந்து ஆட்க''ளில் ஒருவரா விளங்கிய, திரு. வைத்தியநா சாமிப் பிள்ளை பாரதியாரின் சுப வங்களை விரிவாக எடுத்துரை தார். அவர் சொன்னார் ''பாரதியாரின் காபந்து ஆட் ளில் நான் ஒருவன். ஏதாவது

## பாரதியாருக்கும், தமிழாசிரியருக்கும் ஏற்பட்ட வாக்குவாதம்!

*பாரதி எட்டயபுரத்தில் ஆங்கிலோ—வெர்னகுலர் ஸ்கூலில் படித்துவிட்டு. திருநெல்வேலி ஹிந்து காலேஜுக்கு அனுப்பப்பட்டார். அங்கே மூன்று வருஷங்கள் ஐந்தாம் படிவம் வரை படித்தார். ஹிந்து காலேஜ் தமிழ்ப்பண்டிதர் சிவராம பிள்ளைக்கும், பாரதிக்கும் நடந்த வாக்குவாதங்கள் பல. வகுப்பில் காலரியில் உயரமான இடத்தில் உட்கார்ந்திருந்த பாரதியிடம் ஒருசமயம் பண்டிதர், ''மேகம்போல் கவி பொழிவதாகப் புகழப் படுகிறீர். உயரேயும் இருக்கிறீர்! கேள்விக்குக் காளமேகம் போல் பதில் பொழியாமல் இருப்பதேன்?'' என்று கிண்டலாகக் கேட்டார். உடனே பாரதி, ''பண்டிதரவர்களுக்கு மேகத்தின் ஸாமான்ய குணம் கூடத் தெரியவில்லையே! காளமேகம் தனக்குத் தோன்றியபொழுது பொழிவதன்றிப் பண்டிதர் உத்தரவுக்குப் பயந்து பெய்வதில்லையே!'' என்றார்.*

**—(சித்திர பாரதி என்னும் நூலிலிருந்து)**

பாவேன். கடற்கரைக்குச் சல்வோம். வீட்டுக்குப் போ வாம், அரவிந்தரைப் பார்க்கப் பாவோம். லண்டன் பார்-அட்-லாவை விட (பாரிஸ்டர் வ.வே. . ஐயரை விட) பாரதியாரே அரவிந்தரை அடிக்கடி பார்த்து ருவார். நாகசாமி, நீலகண்ட ரம்மச்சாரி, மாடசாமி முதலி யார் பாரதியாரை அடிக்கடி ண்டு பேசுவார்கள். நாகசாமி, ஆரியன் ஸ்டோர்ஸ்' என்ற வுளிக் கடை வைத்து, தேச க்தர்களுக்குப் பணம் உதவுவார், ரவிந்தர் ஒல்லியாக மெலிந்து ருப்பார். பாரதி அவருடன் பசுவார். நாங்கள் பார்த்திருப் பாம். ஞாயிறு தோறும் கடற் ரையில் சுதேசிகள் கூடுவர், ட்டம் நடக்கும். அங்கேயும், மது இல்லத்திலும் பாரதியார் மது 'ஆடுவோமே, பள்ளுப் ாடுவோமே!' போன்ற பாடல் ளை உணர்ச்சியுடன் பாட நான் கட்டிருக்கிறேன்.

''பாரதியாருடன் நானு தாப்பு, துரவுகளுக்குப் போ வன். அவருடன் பழகப் பழக, வர் போலவே நடை உடை வனைகளை அனுசரிக்க ஆரம்பித் தன். அவர் போலவே மேல் ண்டு அணியலானேன். அவர் பாலவே எனக்கும் சி.ஐ.டி. பாலீஸ் வேவுகாரர்கள்) போட் ார்கள். நாராயணசாமிப்பிள்ளை ன்ற ஒரு சி.ஐ.டி. ஒரு சமயம் ட்ட விரோதமாக மிக நெருக் த்தில் தொடர்ந்து வந்தார். துனால் நான் அவரை நையப் டைத்துவிட்டேன். ஆரம்ப ட்களில், பாரதியார் கூட, ஐ.டி. தொல்லை தாங்காமல், ட்டுக்குள் தெரு வழியே ழைந்து, கொல்லைத் தோட்டம் யாக வெளியேறிவிடுவதுண்டு. ந்தக் காலத்தில் தேசகாரியத்தி டுபட்ட எல்லாருக்கும் 'சுதேசி ர்'' என்று பெயர்.

''கடற்கரைக்கோ தோப்புத் ரவுக்கோ அழைத்துக் கொண்டு ன்றால், பாரதியார் எங்களை காரச் சொல்வார், தாம் கார மாட்டார். அவருக்கு கார இருப்புக் கொள்ளாது. ங்களை உட்காரச் சொல்லிவிட்டு வார், ஆடுவார், பாடுவார். துவையில் இருந்த இரும்புக் ற்பாலத்தில் மாலைவேளைகளில் லாவச் சென்றாலும் இதே ததான். அங்கிருந்த பெஞ்சு ில் எங்களை உட்காரச் சொல்லி ட்டு, அவர் நடைபோடுவார், ண்பர்களைக் கண்டு பேசுவார், டுவார்.''

பாரதியார் யார்க்கும் இனியர்; ரும் அவருடன் சரளமாகப் பழக முடியும், அவரும் எல்லாரு டனும் தாராளமாகப் பழகுவார்' என்று திரு. வைத்தியநாதசாமிப் பிள்ளை சொன்னார். அவர் கூறிய தாவது : ''பாரதியாரிடம் சரள மாகப் பேசுவேன்; ஆனால், லண் டன் பார்-அட்-லாவிடம் (பாரிஸ் டர் வ.வே.சு. ஐயரிடம்) மட்டும் ஜாக்கிரதையுடன் மட்டு மரியா தை குறையாமல் பழகுவேன். பாரதியார் என்னை 'ஓம் சக்தி சக்தி யென்று சொல்லு' ('சக் திக்கு ஆத்ம சமர்ப்பணம்') என்ற பாடலைப் பாடச் சொல்லுவார். பாரதியார் வீட்டுக்குப் போனா லும் பேதமின்றி தாராளமாக அவர் பழகுவார். வீட்டில் அவர் பாட்டு எழுதும்போது பார்த்தி ருக்கிறேன். தனித் தாள்களில் வெகு வேகமாக எழுதுவார். தாள்களை அடுக்கி வைப்பார். பாடல் எழுதிய தாள்களை நண் பர்களுக்குக் கொடுப்பார். பாரதி யாரது கையெழுத்தில் ஒரு பாடல் முன்பு என்னிடம் இருந் தது. அவர் சென்னைக்குப் போன பிறகு கடிதம் எழுதினார்; அதுவும் இருந்தது. நான் புதுவையிலிருந்து விழுப்புரம் குடிபெயர்ந்த சமயம் அவை எங்கோ போய்விட்டன. அவை இருந்தால் இன்று மதிப் பற்ற பொக்கிஷங்களாக இருக் கும். நல்ல வேளையாக, புதுவை யில் எங்கள் வீட்டில் பழைய 'இந்தியா' தொகுதி ஒன்று இருக் கிறது. தேடி எடுக்கவேண்டும்.

1915 முதல் 1919 வரை திரு. வைத்தியநாதஸ்வாமிப் பிள்ளை புதுவையின் மற்றொரு பிரசித்தி பெற்ற பழைய அச்சகமான 'ஸைகோன் சின்னையா பிரஸ்'ஸில் வேலை பார்த்தார். இந்த அச்சக முதல்வர் ''சூரியோதயம்'' என்ற தேசிய தமிழ் வாரப் பத்திரிகை யை நடத்தினார். நீலகண்ட பிரம்மச்சாரியைப் பொறுப்பாசி ரியராகக் கொண்ட இந்தப் பத்தி ரிகைக்கும் பாரதியார் விஷய தானம் செய்துள்ளார். இதுவும் 1910-இல் பாரதியின் ''இந்தியா'' போலவே பிரிட்டிஷாரின் தடைக்கு உள்ளாயிற்று. 'சூரி யோதயத்தில்'' நீலகண்ட பிரம் மச்சாரியிடம்தான் முதன் முத லாகப் பத்திரிகைத் தொழில் கற்றார், திரு. பரலி சு. நெல்லை யப்பர். அவரை சென்னை யிலிருந்து புதுவை அழைத்து வந்தார் நீலகண்ட பிரம்மச்சாரி. (86 வயதாகும் இவர் தற்சமயம் ஸ்ரீ ஸத்குரு ஓம்கார் என்ற பெயரில் கர்நாடக மாநிலத்தில் நந்தி என்ற ஊர் அருகே தமது மலையடிவார ஆசிரமத்தில் தனியே இருந்து வருகிறார், இவரது ஆசிர மத்திலிருந்தே நமது தென் பெண்ணை ஆறு கிளம்புகிறது.

''லண்டன் பார்-அட்-லா'' (வ.வே.சு. ஐயர்) பற்றியும் சில சுவையான தகவல்களைத் திரு. வைத்தியநாத ஸ்வாமிப் பிள்ளை கூறினார். ஐயர் நன்றாக நீந்துவா ராம்; புதுவைக் கடலில் வெகு தூரம் உள்ளே போவாராம். கம்பனிடம் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர், கம்பனுடைய திரு உருவச் சிலை இருக்கிறதெனக் கேள்விப்பட்டு, ஒரு முறை ''மது ரைக்கோ எங்கோ'' மாறுவேடத் தில் சென்று வந்தாராம். ''கொண்டையுடன் உள்ள கம்பர் படம் கொண்டுவந்தார். அது அவர் புதுவையில் வெளியிட்ட ஒரு நூலில் அச்சிடப்பட்டது'', என்று சொல்கிறார் திரு. வைத்தி யநாதஸ்வாமிப் பிள்ளை. புதுவை யில் தமது 'கம்ப நிலைய'த்தின் மூலம் ஐயர் வெளியிட்ட ''கம்ப ராமாயணம்-பால காண்டம்'' பதிப்பில் இப்படம் இருக்கலாம் என ஊகிக்கப்படுகிறது.

பாரதி, வ.வே.சு. ஐயர், அர விந்தர், வ.உ.சி., ராஜாஜி, கிரி முதலிய பெருமக்களிடம் அந்தக் காலத்தில் பழகிய வாய்ப்புப் பெற்ற திரு. வைத்தியநாதஸ்வா மிப்பிள்ளையின் அடக்கமான சுபா வம், அவரது அனுபவங்களை நாம் முன்னரே அறிந்து கொள்ள முடி யாமற் செய்துவிட்டது. அவர் மூலம் மேலும் பல அரிய தகவல் களை அறியும் வாய்ப்பு இப்போது ஏற்பட்டுள்ளது அதிர்ஷ்டமே! பாரதியார் மறைந்தே ஐம்பத் தைந்து ஆண்டுகள் ஆகிவிட்டன என்றாலும், அவரை நேரடியாக அறிந்தோரது அனுபவ நினைவு கள் இன்றும் நமக்குக் கிடைப்பது வியப்புதான். பாரதியார் விஷ யத்தில் புதிய தகவல்களைத் தேடு வதில் நாம் இப்போதும் தளர லாகாது என்ற படிப்பினையையே இது நமக்குப் புகட்டுகிறது.




# சுதேச உணர்வே நம்மை வாழவைக்கும்

சுதேசி என்பது நம்முள் இருக் கும் ஓர் உணர்ச்சி. தூரமாக இருப்பதை விலக்கிவிட்டு நம்மை ஒட்டிச் சுற்றிலுமிருப்பவைகளை உபயோகித்துக் கொள்ளுபவர் களாகவும், அவற்றிற்குச் சேவை செய்பவர்களாகவும் நம்மை அந்த உணர்ச்சி கட்டுப்படுத்து கிறது. ஆகவே, சமயத்தைப் பொறுத்தவரையில், எனது இந்த விளக்கத்தின் தேவைக்குப் பொருத்தமாக இருப்பதை முன் னிட்டு, என்னுடைய பாரம்பரிய சமயத்தோடுதான் என்னை நான் கட்டுப்படுத்திக் கொள்ள வேண் டும். எனக்கு அடுத்துச் சமீப மாகவுள்ள சமயத்தின் பயன் என்பது இதுதான். அச்சமயத் தில் குறைபாடுகளை நான் கண் டால், அதன் குறைபாடுகளை நீக்குவதன் மூலம் நான் அதற்குச் சேவை செய்ய வேண்டும். ராஜீ யத் துறையிலும் எனக்கு அருகா மையிலுள்ள தான ஸ்தாபனங் களை நான் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அவற்றில் நன்றாகத் தெரிந்ததாகவுள்ள குறைபாடு களைப் போக்குவதன் மூலம் அவற்றிற்கு நான் சேவையும் செய்ய வேண்டும். பொருளா தாரத் துறையிலும் என்னைச் சுற்றி அக்கம் பக்கத்தில் இருப்ப வர்கள் தயாரிக்கும் பொருள்களை மாத்திரமே நான் உபயோகிக்க வேண்டும். அந்தக் கைத்தொழில் களில் ஏதாவது குறைபாடுகளி ருந்தால் சீர்திருத்தி, அவற்றைத் திறமையானவைகளாகவும், பூரணமானவையாகவும் ஆக்கு வதற்கு நான் சேவையும் செய்ய வேண்டும். இத்தகைய சுதேசி யத்தை நடைமுறையில் கொண்டு வருவதானால் அது நம் வாழ் நாளில் நிறைவேறப் போவ தில்லை, ஓர் ஆயிரம் ஆண்டும் ஆகிவிடக்கூடும் என்று சொல்லப் படுகிறது. இவ்வாறு அது பல தலைமுறைக்கு முழுவதும் நிறை வேறாது என்று இருந்தாலும்கூட சுதேசியத்தை நாம் கைவிட்டு விட முடியாது.

சுதேசி உணர்ச்சியின் வயப்பட் டிருக்கும் நிலையில் இந்நாட்டின் புராதனமான ஸ்தாபனங்களும், கிராமப் பஞ்சாயத்துக்களும் என்னைத் தம்வசப்படுத்திக்கொள் ளுவதைக் காண்கிறேன். உண்மை யாகவே இந்தியா குடியாட்சி நாடு, அதனால்தான் இந்தியா தனக்கு ஏற்பட்ட எத்தனையோ அதிர்ச்சிகளையெல்லாம் சமா ளித்து நின்றிருக்கிறது. மன்னர் களும் பிரதானிகளும் இந்தியா வில் பிறந்தவர்களாயினும் சரி, அந்நியராயினும் சரி, நிலத்தீர் வையை வசூல் செய்துகொண்ட தைத் தவிர, பொதுவாகப் பொதுமக்களிடம் எந்தவிதமான

## மகாத்மா காந்தி

சம்பந்தமும் அவர்கள் வைத்துக் கொள்ளவில்லை. பொதுமக்களும் அவர்களுக்குஉரியதைக்கொடுத்து விட்டு மற்றவைகளிலெல்லாம் தங்களுக்கு விருப்பமான வழி களில் நடந்துவந்தார்கள். இம் மக்களிடமிருந்த விசாலமான சாதி முறை, சமூகத்தின் மதத் தேவைகளுக்கு உதவியாக இருந்து வந்ததோடு, அதன் ராஜீயத் தேவைகளுக்கும் உதவியாக இருந்து வந்தது. கிராமவாசிகள் தங்களுடைய உள் விவகாரங்களை யெல்லாம் சாதி முறையைக் கொண்டே தீர்த்துக் கொண் டார்கள். ஆளும் அதிகாரத்தின் அதிகாரங்களின் அடக்கு முறை களையும் இந்தச் சாதி முறையைக் கொண்டே சமாளித்துக் கொண் டார்கள். இச்சாதி முறை யிலிருந்து தனது அற்புதமான நிர்வாகத் திறமையைப் பெ வல்லதாக இந்திய சமுதாய இருந்தது என்பதை மறுப்ப சாத்தியமல்ல. ஒழுங்காக நி வகித்துக் கொள்ளும் ஆற்ற நமக்குக் கிடையாது என் சொல்லிக் கொள்வது இக்கா வழக்கமாகிவிட்டது. புதுச் ச பிரதாயங்களில் வளர்ந்துவிட் வர்கள் விஷயத்தில் ஓரளவுக் இது உண்மையே.

சுதேசி உணர்ச்சியிலிருந் மோசமான வகையில் நாம் முற் லும் மாறி விட்டதனால் பயங் மான சங்கடத்தில் துன்பப்பட் வருகிறோம். படித்தவர்களாகி நாம், அந்நிய மொழியின் மூல நமது கல்வியைப் பெற்று கிறோம். இதனால், நாம் பொ மக்களிடம் எந்தவிதத்திலு பிரதிபலிக்கவில்லை. பொது களின் பிரதிநிதிகளாக இரு நாம் விரும்பினாலும் அது மால் முடிவதில்லை. ஆங்கில அ காரிகளை இம்மக்கள் எவ்வா எண்ணுகிறார்களோ அதேமா தான் நம்மையும் எண்ணு றார்கள்

அவர்களுடைய உள்ளங் இந்த இருபாலருக்கும் ெ வதும் இல்லை. அவர்களுடை அபிலாஷைகள் வேறு; நம் லாஷைகள் வேறு. எனவே, தரப்பாருக்குமிடையே பி இருந்து வருகிறது. உண்மை நாம் இப்பொழுது காண்ட அவர்களுக்கும் அவர்களுடை பிரதிநிதிகள் என்னும் நமக் எந்தவிதமான தொடர்பும் லாமல் இருப்பதையேய அவர்கள் தங்களை ஒழுங்குப திக் கொள்ளத் தவறி டார்கள் என்பதை அ சென்ற ஐம்பது ஆண்டுகள் நாம் நமது தாய்மொழிகள்

லமே கல்வி பெற்று வந்திருப் பாமானால், நம் வீட்டுப் பெரிய ர்களும் நம் வேலைக்காரர்களும் ண்டை வீட்டுக்காரர்களும், ம் பெற்ற அறிவில் பங்கு காண்டிருப்பார்கள். போஸோ, யோ கண்டு பிடித்திருப்பவை வும்இராமாயணத்தையும்மகா ரதத்தையும் போலவே குடும் ப் பொக்கிஷங்களாக இருந்து நம். இப்போது இருக்கும் லைமையில் சாதாரணப் பொது க்களைப் பொறுத்தவரையில், ம் விஞ்ஞானிகள் கண்டுபிடித்தி க்கும் உண்மைகளும், வெளி ட்டினர் கண்டுபிடித்தவையும் ரே மாதிரிதான் ஆகின்றன. ல்வித் துறைகள் யாவும் தாய் மாழியின் மூலமே போதிக்கப் ட்டு வந்திருக்குமானால், இம் கள் அற்புதமான வகையில் றிவுச் செல்வத்தை அடைந்தி ப்பார்கள் என்று துணிந்து கூறு ன். கிராம சுகாதாரம் பான்ற பிரச்சினைகள் வெகு லத்திற்கு முன்பே தீர்ந்தி கும். கிராமப் பஞ்சாயத் கள், விசேஷ முறையில் இன்று பனுள்ள சக்திகளாக இருந்து ரும். இந்தியா தனக்குத் வையான முறையில் சுயாட் ய அநேகமாக அனுபவித்துக் ாண்டுமிருக்கும். இந்நாட்டின் ிதமான மண்ணில், திட்ட டுச் செய்யப்பட்டு வரும் கொலைகளின் மானங்கெட்ட ட்சியைக் காண வேண்டியும் ர்ந்திருக்காது. இவற்றையெல் ம் சீர்படுத்திக் கொள்ள இன் ம் காலம் கடந்து விடவில்லை.

பொருளாதார கைத்தொழில் ழ்வில் சுதேசியத் தத்துவத்தி நந்து நாசகரமான வகையில் றிவிட்டதுதான் பொதுமக்க டையே ஆழ்ந்துவிட்ட வறு மக்குக் காரணம். வெளிநாடு ிலிருந்து இந்தியாவுக்கு வர்த் ப் பொருள் எதுவும் வராம ருக்குமானால், இந்தியா இன்று லும் தேனும் பெருக்கெடுத்து ம் நாடாக இருக்கும். ஆனால், ப்பொழுது அப்படி இல்லை. ம் பேராசை கொண்டிருந் ாம். அதேமாதிரி இங்கிலாந் ம் பேராசை கொண்டது. ந்தியாவுக்கும் இங்கிலாந்துக் ம் தொடர்பு, நிச்சயமாக ஒரு றையே அடிப்படையாகக் ாண்டது. ஆனால், இந்தியா ம் இங்கிலாந்து இருந்துகொண் ருப்பது தவறின் காரணமாக லை. இந்தியாவை, அதன் மக் ின் நன்மைக்காகத் தான் மகர்த்தாவாக வைத்திருப்ப கக் கூறி வருவதே பிரிட்ட ன் பகிரங்கமான கொள்கை. து உண்மையானால், லங்கா ஷயர் ஒதுங்கி இருந்துவிட வேண்டும். மேலும், சுதேசித் தத்துவம் நியாயமான தத்துவமாக இருந்தால், லங்காஷயர் எந்த வித நஷ்டமுமின்றி ஒதுங்கி இருந்துவிட முடியும். அதன் மூலம் இப்போதைக்கு ஏற்படும் அதிர்ச்சியையும்அது சமாளித்துக் கொண்டு விடலாம். நான் சுதேசியத்தை எண்ணும்போது, வஞ்சந் தீர்த்துக் கொள்ளுவதற்காக மேற்கொள்ளப்படும் பகிஷ்கார இயக்கமாக இதை நான் நினைக்கவில்லை. எல்லோரும் அனுசரித்தாக வேண்டிய மத தருமமாகவே நான் இதைக் கருதுகிறேன். நான் பொருளாதார நிபுணன் அல்ல. ஆனால், தனக்குத் தேவையானவைகளையெல்லாம் தானே எளிதில் உற்பத்தி செய்து கொண்டு தனக்குத் தானே வாழக் கூடிய நாடாக இங்கிலாந்து இருக்க முடியும் என்று கூறும் பொருளாதார நூல்கள் சிலவற்றை நான் படித்திருக்கிறேன். இது முற்றிலும் பைத்தியக்காரத்தனமான யோசனையாக இருக்கலாம். உலகத்தில் வெளிநாடுகளிலிருந்து அதிகமாக இறக்குமதி செய்யும் நாடு இங்கிலாந்து என்பதே, அது உண்மையாக இருக்க முடியாது என்பதற்குச் சிறந்த அத்தாட்சியாகவும் இருக்கக் கூடும். என்றாலும், லங்காஷயருக்காகவோ, வேறு எந்தநாட்டிற்காகவோ வாழும் நாடாக இந்தியா இருக்க முடியாது. ஏனெனில், தனக்குத் தானே வாழ இந்தியாவினால் முடியும்.

இந்தியாவின் தேவைக்கு வேண்டியவைகளையெல்லாம் தன்னுடைய எல்லைக்குள்ளேயே உற்பத்தி செய்து கொண்டால் தான் அப்படி உற்பத்தி செய்து கொள்ள உதவி செய்தால் மாத்திரமே, இந்தியா தனக்குத் தானே வாழ இந்தியாவினால் முடியும். சகோதர நாசத்தையும் பொறாமையையும் மற்றும் பல தீமைகளையும் உண்டாக்குவதாயிருக்கும் பைத்தியக்காரத்தனமான - நாசகரமான போட்டிவெறியில் இந்தியா நுழையவேண்டியதில்லை; நுழையவும் கூடாது. ஆனால், இந்நாட்டின் பெரும் இலட்சாதிபதிகள் இந்த உலகப் போட்டியில் பிரவேசிப்பதை யார் தடுக்க முடியும்? சட்டத்தினால் நிச்சயமாக இதைச் செய்துவிட முடியாது என்றாலும், பொதுஜன அபிப்பிராயச் சக்தியும், சரியான கல்வியுமே விரும்பத்தக்க வழியில் பெருமளவு இதைச் செய்ய இயலும். கைத்தறி நெசவுத் தொழில் சாகும் நிலையில் இப்பொழுது இருக்கிறது. சென்ற ஆண்டு பல இடங்களுக்கு நான் சென்றபோது, முடிந்த வரையில் எத்தனை நெசவாளர்களைப் பார்க்க முடியுமோ அத்தனை பேரையும் பார்க்க விசேஷ சிரத்தை எடுத்துக் கொண்டேன். ஒரு சமயம் சுபிட்சமாகவும், கௌரவமானதாகவும் இருந்த தொழிலை அவர்கள் எவ்விதம் இழந்து விட்டார்கள், அவர்கள் குடும்பங்கள் அத்தொழிலிலிருந்து எவ்வாறு விலகிவிட்டன என்பதைக் காண மனம் வேதனைப் பட்டது.

சுதேசியத் தத்துவத்தை நாம் பின்பற்றுவதாக இருந்தால், நமக்குத் தேவைப்படுகிறவைகளைச் செய்து கொடுக்கக் கூடியவர்கள் நம் அக்கம் பக்கத்தில் யார் இருக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டியது உங்கள் கடமையாகவும், என் கடமையாகவும் இருக்க வேண்டும். நமக்குத் தேவைப்படும் சாமான்களை எப்படிச் செய்வதென்பது அவர்களுக்குத் தெரியாமலிருந்தால், நல்ல பிழைப்புக்கான தொழில் அந்த அக்கம் பக்கத்தாருக்குத் தெரியாமலிருந்தால், அதை அவர்களுக்கு நாம் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அப்பொழுது இந்தியாவின் ஒவ்வொரு கிராமமும் தனக்கு வேண்டியதைத் தானே தயாரித்துக் கொள்ளுவதாகவும் சுய தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும் பகுதியாகவும் இருக்கும். உள்ளூரில் தயாராகாத அவசியமான சரக்குகளை மற்றக் கிராமங்களில் நம் பண்டங்களுக்குப் பதிலாக வாங்கிக் கொள்ளுவார்கள்.

பகவத்கீதையில் ஒரு சுலோகம் உண்டு. 'பணக்காரர்களையே சாதாரண மக்கள் பின்பற்றுகிறார்கள்' என்பதுதான் அந்தச் சுலோகத்திற்குச் சாதாரணமான பொருள். சமூகத்தில் அறிவு படைத்தவர்களாக இருப்பவர்கள், கொஞ்சக் காலத்திற்கு எவ்வளவுதான் அசௌகரியங்களை உண்டாக்குவதாக இருந்தாலும் பொருட்படுத்தாது சுதேசி விரதத்தை மேற்கொள்ளுவார்களேயானால், இத்தீமையைப் போக்கிவிடுவது மிகவும் எளிது. வாழ்க்கையின் எந்தக் காரியமாக இருந்தாலும், அதில் சட்டம் தலையிடுவது என்பதை நான் வெறுக்கிறேன். அதிகம் சொன்னால், அதைக் குறைந்த தீமை என்று சொல்லலாம். என்றாலும், வெளிநாட்டுச் சரக்குகள் மீது பாதுகாப்புத் தீர்வையைக் கடுமையாக விதிப்பதை நான் சகிப்பது மாத்திரமல்ல, வரவேற்பேன்; அப்படி விதிக்க வேண்டும் என்றும் கோருவேன். நேட்டால், ஒரு பிரிட்டிஷ் குடியேற்ற நாடு. என்றாலும், மற்றோர் பிரிட்டிஷ் குடியேற்ற நாடான மொரீஷியஸிலிருந்து வந்த சர்க்கரைக்கு நேட்டால் தடை வரி விதித்துத் தன் சர்க்கரைக்குப் பாதுகாப்பு அளித்தது. ஆனால், இங்கிலாந்தோ, தடையில்லாத வர்த்தகத்தைத் திணித்து இந்தியாவுக்கு விரோதமான பாதகத்தைச் செய்திருக்கிறது. இது இங்கிலாந்துக்கு உணவாக இருக்கலாம். ஆனால், இந்த நாட்டுக்கோ அது விஷமாகவே ஆயிற்று.

பொருளாதார வாழ்க்கையில் எப்படியும் இந்தியா சுதேசியத்தை மேற்கொள்ளவே முடியாது என்று எப்பொழுதும் வற்புறுத்திக் கூறப்படுகிறது. இந்த ஆட்சேபத்தைக் கூறி வருகிறவர்கள், சுதேசியத்தை வாழ்க்கையின் விதியாகவே கவனிப்பதில்லை. இது வெறும் தேசாபிமான முயற்சியே என்றும், இதை அனுசரிப்பதால் தங்கள் சொந்தச் சௌகரியங்களைத் துறக்கவேண்டியிருந்தால் இம்முயற்சியைச் செய்ய வேண்டியதே இல்லை என்றும் அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால், இங்கு விளக்கப்பட்டிருக்கும் வகையில் சுதேசியம் என்பது ஒரு சமயக்கட்டு திட்டம்; தனிப்பட்டவர்களுக்கு அதனால் உடல் சம்பந்தமான அசௌகரியம் என்ன நேர்ந்தாலும், கொஞ்சமும் பொருட்படுத்தாது அதை அனுசரித்தாக வேண்டும். குண்டூசியோ, ஊசியோ இந்தியாவில் செய்யப்படவில்லை என்பதனால், சுதேசி விரதம் கொண்டவர், அவற்றை உபயோகிக்காமல் இருக்க நேருவதைக் குறித்துப் பயந்துவிட வேண்டியதில்லை. நமக்கு மிக அவசியமானவை என்று இன்று நாம் நினைக்கும் நூற்றுக்கணக்கான பொருள்கள் இல்லாமலேயே வாழச் சுதேசியவாதி கற்றுக் கொண்டுவிடுவார். மேலும், சாத்தியமில்லாதது என்று சொல்லிக் கொண்டு சுதேசி என்பதையே அடியோடு மறந்துவிடுகிறவர்கள், நிதானமான முயற்சியினால்அடையவேண்டிய இலட்சியமே சுதேசியம் என்பதை மறந்துவிடுகின்றனர். இந்நாட்டில் கிடைக்காத சாமான்களில் மாத்திரம் தற்காலிகமாகப் பிற நாட்டுப் பொருள்களை உபயோகிப்பது என்று நம்மை அனுமதித்துக் கொண்டு, குறிப்பிட்ட சாமான்களைச் சுதேசிப் பொருள்களாகவே உபயோகிப்பது என்று நாம் இருந்தாலும், சுதேசி இலட்சியத்தை நோக்கிப் போய்க்கொண்டிருப்பவர்களேயாவோம்.

சுதேசிக்கு எதிராக இன்னுமொரு ஆட்சேபமும் கிளப்பப்படுகிறது. இதையும் நாம் கவனிக்க வேண்டும். சுதேசியம் மிகவும் மோசமான சுயநலத் தத்துவம், நாகரிக மக்களின் தருமக் கோட்பாட்டிற்கு இது விரோதமானது என்று இந்த ஆட்சேபக்காரர்கள் கருதுகிறார்கள். சுதேசியத்தை மேற்கொள்ளுவது காட்டு மிராண்டித்தனத்திற்குத் திரும்புவதுதான் என்றும் இவர்கள் நினைக்கிறார்கள். இவர்கள் கூறுவதைக் குறித்து விவரமான பரிசிலனையில் நான் இறங்குவதற்கில்லை. ஆனால், அடக்கத்திற்கும், அன்புக்கும், தருமத்திற்கும் மிகவும் பொருத்தமான தத்துவம் சுதேசி ஒன்றே என்று வற்புறுத்திக் கூறுவேன். என் சொந்தக் குடும்பத்தைக் காப்பாற்றவே என்னால் முடியாமலிருக்கும்போது, இந்தியா முழுவதையும் காப்பாற்றக் கிளம்ப நினைப்பது அகம்பாவமே யாகும். என் முயற்சியையெல்லாம் குடும்பத்தினிடமே செலுத்தி, அதன் மூலம் நாடு முழுமைக்கும் விரும்புவீர்களாயின் மனிதவர்க்கம் முழுமைக்கும் சேவை செய்வதாக எண்ணுவதுதான் நல்லது. இதுதான் அடக்கம்; இதுதான் அன்பு. நம் செயலின் தன்மையை நம் நோக்கமே நிர்ணயிக்கும். மற்றவர்களுக்கு நான் துன்பங்கள் இழைப்பதைப் பொருட்படுத்தாமலேயே நான் என் குடும்பத்திற்குச் சேவை செய்து வரலாம். உதாரணமாக மக்களை வருத்திப் பணம் பறிக்கக் கூடியதாகவுள்ள ஓர் உத்தியோகத்தை நான் ஏற்றுக் கொள்ளலாம். இதன்மூலம் பணக்காரனாகிறேன்.

## ஆட்டோகிராப் விளைத்த அற்புதம்

ஒரு முறை காந்திஜி சிறையிலிருந்தபோது ஓர் ஆங்கிலோ–இந்திய அதிகாரி அவரிடம் வந்து 'ஆட்டோகிராப்' கேட்டார்.

காந்திஜி ஆட்டோகிராப்பில் வெறும் கையெழுத்திடாமல், கருத்துரையையும் எழுதினார். அந்தக் கருத்துரை இதுதான் :

அன்பாயிருக்கக் காசு, பணம் செலவில்லை **(It does not cost to be kind)**

இந்த வாக்கியத்தைப் படித்ததிலிருந்து, அந்த ஆங்கிலோ-இந்திய அதிகாரியின் முரட்டுச் சுபாவம் மாறி விட்டது.

பிறகு என் குடும்பத்தின் நியாயமில்லாத தேவைகளையெல்லா நிறைவேற்றிவைக்கிறேன். இ வாறு நான் செய்வது என் குடு பத்திற்கோ, நாட்டிற்கோ சேவை செய்ததாகாது.

நான் இதற்கு மாறாக வேறொ றும் செய்யலாம். உழைத்து எ ஜீவனத்தை நடத்திக் கொண் என்னை நம்பியிருப்பவர்களி ஜீவனத்திற்கு வேண்டியதை செய்வதற்காகவே கடவு எனக்குக் கைகளையும் கால்க யும் கொடுத்திருக்கிறார் எ பதை நான் உணர்ந்துவிடலா அப்பொழுது நான் என் வாழ் கையையும், என் பேச்சைக் கே கும் படி நான் செய்யக்கூடியவ களின் வாழ்க்கையையும் உடனே எளிமையானதாக்கி விடுவே இவ்வாறு செய்வதால், பிற யாருக்கும் கெடுதலை உண்டா காமல் என் குடும்பத்திற்கு சேவை செய்தவனாவேன். இந் வாழ்க்கை முறையை எல்லோரு அனுசரிக்கிறார்கள் என்று வை துக் கொள்வோம். அப்பொழு நாடு இலட்சியநிலையை அடைந் விடும். எல்லோரும் ஏககால தில் அந்த நிலையை அடைந்துவி மாட்டார்கள். ஆனால், நம்மி யார் அதன் உண்மை உணர்ந்து அதை நடைமுறையி கொண்டு வருகிறோமோ அவர்க அத்தகைய இன்பகரமான நா வரும் என்று எதிர்பார்ப்பதோ அது வருவதையும், துரித படுத்தலாம். இத்தகைய வாழ் கைத் திட்டத்தில் மற்ற எல் நாடுகளையும் விலக்கிவிட்டு இந் யாவுக்கே சேவை செய்வதாக தோன்றுவதில் மற்ற எந் நாட்டிற்கும் நான் கெடுதி செய் வில்லை.

என் தேச பக்தி, மற்ற நா களை ஒதுக்குவது, அந்நாடுகளை சேர்ப்பது ஆகிய இரண்டு கொண்டது. முழு அடக்க துடன் என்னுடைய கவன முழுவதையும் நான் பிறந் நாட்டிடம் செலுத்துகிறே என்ற வகையில் அது பிறநா களை ஒதுக்குவதாகிறது. ஆன என்னுடைய சேவை, போட் அல்லது விரோதத்தன்மையுடை யது அல்ல என்ற வகையில், மற் நாடுகளையும் சேர்த்துக் கொள் வதாகிறது. 'உன் அண்டை வீட்டுக்காரன் சொத்துக்கு கேடு நேராதவாறு உன் சொ தச் சொத்தைஉபயோகப்படுத் என்பது, ஒரு சட்ட விதி என்ப மாத்திரமல்ல. ஆனால், அ வாழ்க்கையின் உயரிய தத்துவ அகிம்சை அல்லது அன்பைச் யானபடி அனுசரிப்பத அதுவே மார்க்கம்.

(ஆதாரம் : Village Swar

# கிராமக் கைத் தொழிலின் மறுமலர்ச்சி

— மகாத்மா காந்தி —

நாம் கிராமத்தாருக்கு ப்பெரிய கொடுமை இழைத்த றம் புரிந்திருக்கிறோம். இக் றத்திற்கு நாம் செய்யக் ய ஒரேயொரு பரிகாரம், வர்களுடைய அழிந்து போன த்தொழில்களையும், கலை ாயும் மீண்டும் உயிர்ப்பிக்கச் ய்து, இவ்வகையில் உண் க்கப்படும் பண்டங்கள் உட க்குடன் விற்பனையாவதற்கு பாடு செய்தலே. கடவுளை அதிகப் பொறுமையும் ப்பும் உள்ளவர்கள் இருக்க டியாது. ஆனால் அவர் ாறுமைக்கும் ஓர் எல்லை, அளவு ந்க்கவே செய்கிறது. நாம் ாமங்களிடம் நமக்குள்ள மையை மறந்து வாழ்ந்தால் ு கடவுளுக்கே பொறுக்கா போய்விடவும், அது நம் ழிவில் போய் முடியும்.

கிராமங்களுக்கு நாம் லுத்த வேண்டிய கடமை ப்படியொன்றும் சிரமமான ல, சொன்னால் நம்பமுடி த அளவு சுலபமானதே. தற்கு நாம் முதலில் கிராம னப்பான்மை பெற வேண் ம்; நம் சொந்தத் தேவை ாயும் நம் குடும்பங்களுக்கு வண்டியவைகளையும் கிராமங் ரிலிருந்தே பெறப் பார்க்க வண்டும். இதற்குச் செல ம் அதிகமாகாது. நாம் செய்ய வண்டியது, அருகாமையி ள்ள கிராமங்களுக்குச் சென்று அங்கே உண்டாக்கப் டும் பண்டங்களை, நகரங் ரில் உள்ள நாங்கள் உடனுக் ன் வாங்கிக் கொள்கிறோ மன்று உறுதி கூறுதலே. இதை ல்லா ஆடவரும் பெண்களும் அவர்கள் எந்தச் சாதி, சம ம் அல்லது கட்சியைச் சேர்ந் வராயினும் — சுலபமாய்ச் ய்யலாம். இது நம் நாட் ன் உண்மைப் பொருளாதாரத் டன் முற்றிலும் பொருந்து ு.

நாம் நம் வீடுகளில் தினமும் உபயோகிக்கும் எல்லாப் பொருள்களையும் ஏற் கெனவே கிராம மக்கள் செய்து தந்திருக்கிறார்கள்; இப்பொழு தும் அவர்களால் இவற்றைச் செய்து தரமுடியும். நாம் நம் மனதைப் பக்குவப்படுத்திக் கொண்டு அதை இத்திசையில் திருப்பி மட்டும் விட்டால் கிராம மக்கள் கையில் கோடிக் கணக்கான ரூபாய் போய்ச்சேர உடனே வழி பிறக்கும்.

நகரவாசிக்கு கிராமங்களெல் லாம் இப்பொழுது தீண்டாதார் குப்பங்களாக ஆகிவிட்டன. அவருக்கு கிராமங்களே தெரிவ தில்லை. அங்கே போய்த் தங் கவே பிடிப்பதில்லை. ஏதோ காரணத்தினால் கிராமத்தில் போய் இருக்க நேர்ந்துவிட் டால், அங்கும் நகரத்தில் போலவே எல்லாவற்றையும் செய்துகொள்ள விரும்புகிறார். 30 கோடி மக்களுக்கு இட மளிக்கக்கூடிய அவ்வளவு நக ரங்களை நம்மால் உண்டாக்க முடியுமென்றால் இதை அனு மதிக்கலாம். ஆனால் நிர்ப்பந்த மான வேலையின்மையின் நேர் விளைவாக, அழிந்து போன கிரா மக் கைத்தொழில்களை உயிர்ப் பித்து நடத்துவதையும், மேன் மேலும் பெருகிக் கொண்டிருக் கும் கிராமங்களின் ஏழைமை யைத்தடுத்து நிறுத்துவதையும் விட இது அதிக சிரமமானது.

கிராமங்கள் சுரண்டப்படுதல் நின்றால்தான் அவற்றிற்குப் புத்துயிரளிக்க முடியும். பேரள வில் இயந்திரத் தொழில் களை விருத்தி செய்கையில் மும்முரமாகவோ சாவதான மாகவோ கிராமத்தாரைச் சுரண்டவே வேண்டியிருக்கும். ஏனெனில் அப்பொழுது போட் டியும், உற்பத்தியாகும் பொருள்களை விற்பதும் பெரிய பிரச்சினைகளாகிவிடும். ஆகை யால் ஒவ்வொரு கிராமமும் தன் தேவைக்கு வேண்டிய பொருள்களை மட்டும் உற்பத்தி செய்து சுய தேவைப் பூர்த்தி பெறுமாறு பார்த்துக் கொள்வ திலேயே நாம் கவனம் செலுத்த வேண்டும். கிராமக் கைத்தொழில்களின் இந்த அம்சத்தை மட்டும் நாம் பழு துறாது பார்த்துக் கொண்டால், அவர்களே தயாரித்துக் கொள் ளக்கூடியதும், சிரமமின்றி வெளியேயிருந்து வாங்கிக் கொள் ளக் கூடியதுமான இயந்திர சாதனங்களை உபயோகிப்பதில் நமக்கு ஆட்சேபமில்லை. பிற ரைச் சுரண்டுவதற்கு இவற் றைப் பயன்படுத்தக் கூடா தென்பதே இதில் நாம் கவ னிக்க வேண்டிய விஷயம்.

(ஆதாரம்: Village Swaraj)

## கீதையின் பயன்

ஐயப்பாடுகள் என் உள்ளத் தைச் சூழும் போது, ஏமாற் றங்கள் என்னை நெருங்கி வந்த போது, கண்ணுக்கெட்டியமட்டும் நம்பிக்கை ஒளி துளியும் தென் படாதபோது, நான் பகவத் கீதையைத்தான் கையில் எடுப்பேன்; அதில் ஏதாவதொரு சுலோகம் என் மனத்துக்கு ஆறுதல் அளிக்கும். தாங்க முடியாத துயரத்துக்கு நடுவி லேயும், உடனே நான் புன் சிரிப்புப் பூப்பேன். என் வாழ்க் கையில் புறத் துன்பங்கள் எத்தனையோ நேர்ந்திருக் கின்றன. வெளிக்குத் தெரியும் விதமோ தெரியாதபடியோ என்னை அவை பாதிக்காத தற்குக் காரணம் பகவத் கீதையின் உபதேசமே.

—மகாத்மா காந்தி

(1925 ஆகஸ்டு 6–ஆம் தேதி 'யங் இந்தியா' பத்திரிகையில் எழுதியது.)

தமிழ்நாட்டின் அரிசன மக்கள்தொகை 75 லட்சம் ஆகும். இது மொத்த மக்கள் தொகையில் 18 விழுக்காடு ஆகும். 1919-ம் ஆண்டிலேயே, இம்மக்களின் பிரச் சினைகளைத் தீர்க்கும் வழிவகைகளை சென்னை மாநிலம் மேற்கொண்டது எனினும், அதிகப் படியான முன்னேற்றம் காணப்படவில்லை. தொழிலாளர்கள் துறையின் வரம்புக்கு உட் பட்டிருந்த அரிசனப் பள்ளிகளை நிர்வகிப்பது, சில கல்விச் சலுகைகள் அளிப்பது ஆகிய வற்றில் மட்டுமே நாட்டம் செலுத்தப்பட்டு வந்தது. நம் நாடு விடுதலை அடைந்த பின்பு தான் கல்வித்துறையில் முன்னேற்றம் பெறுவ தோடு, பொருளாதாரத்திலும் மற்றும் சமு தாயத்திலும் மேம்பாடு அடைவதற்கான ஆக்கபூர்வமான வளர்ச்சிப் பணிகளுக்கு அடிகோலப்பட்டது. திரு. கூர்மையா அவர் களின் தலைமையில் அமைக்கப்பட்ட குழு அரிசன மக்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து, அவர்களின் நல்வாழ்வுக்காக, ரூ. 1 கோடி மதிப்பீட்டில் திட்டங்களையும், பரிந்துரை களையும் சமர்ப்பித்தது. அவருடைய பரிந்துரையின் அடிப்படையில்தான் 1949-ம் ஆண்டு அரிசனங்களின் நலனுக்கென ஒரு துறை துவக்கப்பட்டது.

(ஆ) இந்து அரிசனங்களுக்கும், மதம் மாறியவர்களுக்கும், ஆதிவாசிகளுக் மதபேதமின்றியும் மத்திய அரசு உத தொகை கல்லூரிப் படிப்பிற்காக வழ படுகிறது. இதற்கான வருமான வரம்பு ஆண்டுக்கு ரூ. 9,000 ஆகும். கல்லு படிப்பிற்கான உதவித் தொகை வழங்குவ கான செலவின் ஒரு பகுதியை மத் அரசு ஏற்றுக்கொள்கிறது. அரிசன, வாசி மாணவர்கள் ஆரம்பத்தில் கல் களில், தனிக்கட்டணம், வைப்புத் தொ விடுதிக் கட்டணம் போன்றவைகளைச் செ தாமல் சேருவதற்கு உரிய தகுதிச் சா வழங்கப்படுகின்றது. தேவைப்ப சென்னையில் உள்ள மாணவர்களுக்கு ரூ. விதமும், மற்ற இடங்களில் உள்ளவர்கள ரூ. 150 வீதமும் முன்பணமாக கொடு பட்டு, பின்பு உதவித் தொகையில் பிடி கொள்ளப்படுகிறது. பள்ளி நிலையிே படிப்பைத் தொடராது தங்கி விடுவ தவிர்க்க பெண்களுக்கு உதவித் தொ 50 சத விகிதம் அதிகமாக அளிக்கப்படுகி கல்வி உதவித் தொகை அளிப்பதில் த தன்மை என்னவெனின் உதவித் தெ கோரி விண்ணப்பிக்கும் மாணவர்களில்

# அரிசன, ஆதிவாசிகளின் முன்னேற்றத்திற்கு அரசு செய்திடும் சீரிய பணிகள்

—ஏ. பி. முத்துசாமி,

அரிசன ஆதிவாசிகள் நல இயக்குநர்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் கண்டுள்ளபடி, சமூக நீதியின் அடிப்படையில், அரிசன, ஆதிவாசி மக்களும் முன்னேற்றம் அடைந்த சமுதாயத்தினருக்கு இணையாகத் தங்களுக்குரிய இடத்தைப் பெறுவதற்காகப் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. அப்படிப்பட்ட திட்டங்கள் கல்வி, பொரு ளாதார மேம்பாடு, வீட்டு வசதி போன்ற மூன்று பிரிவுகளுக்குள் பொதுவாக அடங்கும்.

### கல்வி

இத்துறையின் மொத்த மதிப்பீட்டில், ஏறத்தாழ மூன்றில் இரண்டு பங்கு அரிசன ஆதிவாசிகளின் கல்விக்காகவே செலவிடப் படுகிறது.

### உதவித் தொகை

(அ) ஆரம்பப் படிப்பிலிருந்து கல்லூரிப் படிப்பு முடிய அரிசன, ஆதிவாசிகளுக்கு, (கிருத்துவ மதத்திற்கு மாறியவர்கள் உட்பட) மாநில அரசு உதவித் தொகை வழங்கப்படு கிறது. இதற்கான ஆண்டு வருமான வரம்பு ரூ. 3,000 ஆகும்.

யுள்ள அனைவருக்கும் எவ்வித எண்ணி வரம்புமின்றி உதவித்தொகை வழங்க கிறது. நிதி ஒதுக்கீடு அளவு இவ்வளவு என்ற காரணத்தால் எவருக்கும் உ தொகை மறுக்கப்படுவதுமில்லை. விண் பங்கள் பெறவும், அனுமதிக்கப்பட்ட உ தொகையை உடன் பட்டுவாடா செய் குறிப்பிட்ட கால வரம்பிற்குட்பட்ட தி திட்டம் அமல் செய்யப்பட்டு வருகிறது.

### காந்தி நினைவுத் தொகை

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மாவ திலும் புகுமுக வகுப்பில் அதிகப்படி மதிப்பெண்கள் பெற்று தேர்வுற்ற அரிசன வகுப்பைச் சேர்ந்த ஒரு மாண ஒரு மாணவியும் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆண்டுக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 1,500 வீத பின்பு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,000 வீ அளிக்கப்படுகிறது. இது ஒருவருக் ஆண்டுகளுக்கு வழங்கப்படும். இத்தொ அளிப்பதற்கான தகுதியை நிர்ணயிக்க, மான வரம்பு இல்லை. அரிசன ஆதிவா நலத்துறையிலிருந்து வழங்கப்படும் உதவித் தொகையுடன் இத்தொகை பெறலாம்.

### தி அடிப்படையின் பேரில் உதவித் தொகை

)வ்வாண்டு (1976–77) முதல் ஆதிவாசி க்கும், மதம் மாறிய கிருத்துவர்களுக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. காந்தி வுத் தொகை அளிப்பதற்கான விதிகள் ற்கும் பொருந்தும்.

### கடன் உதவித் தொகைத் திட்டம்

ரசு அளிக்கும் கல்வி உதவித்தொகையைக் ண்டு கல்லூரிப் படிப்பிற்கான செலவு வதையும் ஏற்க முடியாத நிலையில் உள்ள சன, ஆதிவாசி மாணவர்களுக்கும் இத் டத்தின்கீழ் வட்டியில்லாக் கடன் அளிக் டுகிறது. படிக்கும் பிரிவுக்குத் தக்க ரூ. 900 முதல் ரூ. 1,750 வரை றுதவி அளிக்கப்படுகிறது. இத்துறை ருந்து பெறும் கல்வி உதவித் தொகை ன் கடன் உதவித் தொகையையும் பெற் கொள்ளலாம். இத்தொகையைப் பின்னர் மான மாதத் தவணையில் திரும்பச் லுத்தலாம்.

ட்டயக் கணக்காயர் துறையின் rtered Accountant) பயிற்சி பெறுவோர் க்கும் உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

கத்தொழில் பயிற்சிப் பள்ளியில் படிக் அரிசன, ஆதிவாசி மாணவர்களுக்கு துறையின் நிதியிலிருந்து வேலை வாய்ப்புத் ற மூலமாக பயிற்சி உதவிப் பணம் அளிக் டுகிறது. இதற்காக ஒவ்வொரு ஆண்டும் ர் ரூ. 10 லட்சம் ஒதுக்கப்படுகிறது. சொன்ன பல்வேறு உதவித் தொகை ங்களுக்காக 1975–76ம் ஆண்டில், 234·24 லட்சம் செலவிடப்பட்டது.

நடப்பு ஆண்டுக்கு ரூ. 239·57 லட்சம் ஒதுக் கப்பட்டுள்ளது.

### பள்ளிகள்

அரிசன, ஆதிவாசிகள் தேவையைப் பூர்த்தி செய்ய 22 உயர்நிலைப் பள்ளிகள் உட்பட 1,018 பள்ளிகள் இத்துறையால் நடத்தப் படுகின்றன. இவைகளில் 1,45,000 மாணவ மாணவியர்கள் பயில்கின்றனர். இவைகளில் ஆதிவாசிகளுக்கான 75 உண்டி உறைவிடப் பள்ளிகள் அடங்கும். உண்டி உறைவிடப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவ மாணவியர் களுக்குப் புத்தகம், உணவு, உடை முதலான வைகள் இலவசமாக அரசு செலவில் அளிக்கப் படுகின்றன. அரிசன நலப்பள்ளிகளில் 1 முதல் 5 வகுப்பு வரை பயிலும் மாணவர் களுக்கு ஒரு ஜோடிசீருடை வழங்கப்படுகிறது. 11-ம் வகுப்பு வரை அரிசன நலப்பள்ளிகளில் பயிலும் எல்லா மாணவியர்களுக்கும் இரண்டு ஜோடி சீருடைகள் வழங்கப்படுகின்றன. மேற்படி பள்ளிகளில் படிக்கும் மாணவ மாண வியருக்கு மதிய உணவும் அளிக்கப்படுகின்றது. சாதி பேதமின்றி பாட புத்தகங்கள், நோட்டு கள், கரும்பலகைகள் முதலியன இலவசமாக வழங்கப்படுகின்றன. இவ்வாண்டு ஜூன் 1976–ல் - பள்ளிகள் திறக்கப்பட்ட உடனேயே இவைகள் அனைத்தும் மாணவ மாணவியர்களுக்கு அளித்தது குறிப்பிடத் தக்க அம்சமாகும்.

### விடுதிகள்

அரிசன ஆதிவாசி மாணவர்களின் நலனுக் காகவே இத்துறை அதிகப்படியான எண் ணிக்கையில் விடுதிகளை நடத்துகிறது. அவை களைப்பற்றிய விவரங்கள் கீழே அளிக்கப் பட்டுள்ளன.

| | மாணவர்களுக்கு விடுதிகள் எண்ணிக்கை. | தங்குபவர்களின் எண்ணிக்கை | மாணவியர்களுக்கு விடுதிகளின் எண்ணிக்கை | மாணவியர்களுக்கு தங்குபவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| ல்லூரியில் படிப் பவர்களுக்கு | 30 | 2,367 | 6 | 280 |
| யர்நிலைப்பள்ளி யில் படிப் பவர்களுக்கு | 384 | 24,304 | 161 | 9,277 |
| கத்தொழில் சம்பந்தமான பள்ளிகளில் படிப்பவர் களுக்கு | 7 | 503 | — | — |
| மொத்தம்.. | 421 | 27,174 | 167 | 9,557 |

டப்பு ஆண்டில் 15 புதிய விடுதிகள் திறக் ட இருக்கின்றன.

வ்வொரு ஆண்டும் பள்ளிகளில் படித்துக் ண்டு அரிசன நல விடுதிகளில் தங்கும் ரவர்களுக்கு இரண்டு செட்டு உடைகள் கப்படுகின்றன. விடுதியில் தங்கியுள்ள ளுக்கு கற்பிப்பதற்கு பகுதி நேர ஆசிரி ள் அமர்த்தப்படுகிறார்கள்.

அரிசன ஆதிவாசிகளுக்காக, தனியாரால் நடத்தப்படும் விடுதிகளுக்கு உண்டிச் செல வுக்கான மானியம் மொத்தத் தொகையாக அளிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் தனியா ரால் நடத்தப்படும் 47 விடுதிகளுக்கு மானியம் வழங்கப்படுகின்றது. கடந்த ஆண்டு விடுதி களை நிர்வகிப்பதற்காக, ரூ. 208.41 இலட்சம் செலவழிக்கப்பட்டது. நடப்பு ஆண்டில் இதற் கான ஒதுக்கீடு ரூ. 249.77 இலட்சம் ஆகும்.

### நேரம் தவறுத காந்தி

1927-ம் ஆண்டு, அகமதா பாத்தில் உள்ள குஜராத் வித்யா பீடத்தில் உரை நிகழ்த்துவதற்காகக் காந்திஜி சென்றிருந்தார். நிகழ்ச்சி முடிவுற்றது அதன்பின் சபர்மதி ஆசிரமத்திற்குச் சென்று, அந்த மாலைப் பிரார்த்தனையில் கலந்து கொள்ள வேண்டியிருந் தது. காந்திஜியை அகமதா பாத்துக்கு அழைத்து வந்த கார் வேறு எங்கேயோ போயிருந்தது. அது வரு வதற்கு நேரம் ஆகும் போல் தெரிந்தது. குறித்த நேரத்தைக் கோட்டை விடக் கூடாது என்பதில் மிகுந்த அக்கறை கொண்ட காந்திஜி சபர்மதி ஆசிரமத்துப் பிரார்த்தனைக் கூட்டத்தைத் தவறவிட விரும்பவில்லை.

எனவே. குஜராத் வித்யா பீடத்திலிருந்த நண்பர் ஒருவரின் சைக்கிளை இரவல் கேட்டு வாங்கிக் கொண்டார். சைக்கிள் விடுவதில் சரியான பழக்கம் இல்லாவிட்டாலும் முயன்று ஒன்றரை மைல் தூரத்திலிருந்த ஆசிரமத் தைக் குறித்த நேரத்தில் சென்று அடைந்தார்; பிரார்த்தனைக் கூட்டத்திலும் குறித்த நேரத்தில் கலந்து கொண்டார்.

விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்களுக்கு வசதியான இடம் அளிக்க வேண்டி விடுதிக் கட்டடங்கள் அரசால் கட்டப்படுகின்றன. அரிசன மாணவர்களுக்கு 100 விடுதிகளும், பின்தங்கியவர்களுக்கு 50 விடுதிகளும் கட்டு வதற்கான தனித் திட்டமொன்று மேற் கொள்ளப்பட்டு தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாண்டுக்குள் 41 விடுதிகள் கட்டி முடிக்க உத்தேசிக்கப்பட்டுள் ளது.

## பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்கள்

### வேளாண்மை

உழவுத் தொழிலை மேற்கொண்டுள்ள அரிச சன ஆதிவாசிகளுக்கு உதவி செய்யும் பொருட்டு உழவு மாடு மற்றும் விதைகள், கருவிகள் முதலியன வாங்குவதற்கு ரூ. 600 மானியமாக அளிக்கப்படுகிறது. நீர்ப்பாச னக்கிணறு வெட்ட ரூ. 2,500 மானியமாக அளிக்கப்படுகிறது.

விவசாயம் செய்வதற்கு ஏற்ற அரசுக்குச் சொந்தமான தரிசு நிலங்களை ஒப்படை செய்வதில் போர் வீரர்களுக்கு அடுத்து இரண்டாவது முன்னுரிமை அரிசன ஆதி வாசிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது. நில உச்ச வரம்புச் சட்டத்திற்குட்பட்டு அதிகப் படியானதாகக் கருதப்பட்ட நிலத்தில்,24,524 ஏக்கர் நிலப்பரப்பு நிலமற்ற அரிசனங் களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில், கல்ராயன் மலை, கொல்லி மலைப் பகுதிகளில் உள்ள ஆதிவாசி கள் தங்கள் நிலங்களில் தோட்டக் கலையை அபிவிருத்தி செய்ய விதைகளும், நாற்று களும் மலிவு விலையில் (Subsidised rate) அளிக்கப்படுகின்றன. சேலம் மாவட்டத்தில் ஏர்க்காடு கொல்லி மலைப் பகுதிகளில் ஆதி வாசிகளின் நலனுக்காக துணைத் திட்டப் பகுதிகளில் ரூ. 4.40 இலட்சம் செலவில் தடுப்பு அணைகள், அணைக்கட்டுகள் போன்ற 9 சிறு நீர்ப்பாசன வேலைத் திட்டங்கள் முன் நடவடிக்கையாக இந்த ஆண்டு நிறைவேற் றப்பட இருக்கின்றன.

தொழில் நடத்துவதற்காக, ரூ. 125 ரூ. 15,000 வரை அரிசன ஆதிவாசி வட்டியில்லாக் கடனுக அளிக்கப்படு 1975–76-ம் ஆண்டு முடிய 9,849 களுக்கு வட்டியில்லாக் கடனுக ரூ. இலட்சம் கொடுக்கப்பட்டது. இத்தி கிருத்துவ மதம் மாறிய அரிசனங்க நீட்டிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆ இதற்காக ரூ. 11.25 லட்சம் ஒதுக் டுள்ளது.

அரிசனங்களுக்குத் தொழில் செய்ய னுதவி அளிப்பதோடு " இன்டேன் ", எண்ணெய் " " லாரி போக்குவர போன்ற தொழில்கள் செய்ய தேசியம கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன் கட்டுத் தொகையாக (Margin தகுதியுள்ள அரிசன நபர்களுக்கு தனி உதவியாக அளிக்கப்படுகிறது.

### கூட்டுறவு

அரிசனங்களின் பொருளாதார மேம்பாடு அடைய பால் வழங்கு கூட் சங்கங்கள் நிறுவப்படுகின்றன.

பால் வழங்கும் கூட்டுறவுச் சங்க கோழிப் பண்ணைகள் முதலான கூட் சங்கங்களை நிறுவ அரசு மானியம கடனுகவும் அளிக்கும் உதவித் தொகை நில்லாமல், தேசிய மயமாக்கப்பட்ட கள் மூலம் கடன் பெறவும் ஏற்ப செய்யப்படுகின்றன. மதுரை, இரா புரம் மாவட்டங்களில் 36 கூட சங்கங்களைச் சேர்ந்த 1,200 உறு களின் நலனுக்காக, ரூ. 36 லட்சம் வழங்க இந்தியன் வங்கி சம்மதித்து இத்திட்டத்தின்கீழ் 587 உறுப்பினர் ரூ. 5.79 இலட்சம் கடனுகக் கொ பட்டது. மதுரை மாவட்டத்தில் ஒன்றுக்கு ரூ. 1,000 வீதம் 15 கூட் சங்கங்களைச் சேர்ந்த 1,500 உறு களுக்கு ரூ. 15 இலட்சமும், வடா மாவட்டத்தில் நபர் ஒன்றுக்கு ரூ. வீதம் 12 கூட்டுறவுச் சங்கங்களைச் 1,200 உறுப்பினர்களுக்கு ரூ. 12 இல கடனுக வழங்க இந்தியன் வங்கி ச துள்ளது.

ங்கல் சூளை, தோல் பதனிடுதல், சுண்
பு சூளை, பனை ஓலைத்தொழில் முதலிய
ழில்களில் ஈடுபடுவோர், உப்பளங்களில்
செய்வோர் முதலானவர்களின் நலனுக்
கைத்தொழிற் கூட்டுறவுச் சங்கங்
, பாய்முடைதல், கூடை முடைதல்,
ல் பொம்மை செய்தல் போன்றவை
பயிற்சி அளிக்க, பயிற்சி மற்றும்
த்திக் கூடங்களும் நடத்தப்படுகின்றன.
கள் அரிசன ஆதிவாசிகள் நலத்துறை
நிதியிலிருந்து தொழில் வணிகத்துறை,
நலத்துறை மற்றும் கதர் கிராமக் கைத்
ழில் வாரியம் இவைகளால் பராமரிக்கப்
ன்றன. கடந்த ஆண்டு இத்திட்டங்
செயல்படுத்த ரூ. 3·53 இலட்சங்கள்
விடப்பட்டன. நடப்பு ஆண்டுக்கு
10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கம்பி அமைத்தல் (Electric wiring)
கள் அமைத்தல், (Plumbing)
ன் மூலம் ஒருங்கிணைத்தல்
elding), தச்சு வேலை, இரும்பு வேலை,
ல் போன்ற தொழில்களில் அனுபவமும்
சியும் உள்ள அரிசன ஆதிவாசிகளுக்கு,
லை வாய்ப்பு ஏற்படுத்திக்கொண்டு
ளாதார முன்னேற்றம் பெற தொழிற்
கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.
-76ம் ஆண்டு இதற்காக ரூ. 2·50
சம் செலவிடப்பட்டது. நடப்பு
டில் இதற்கான ஒதுக்கீடு ரூ. 3·63
சமாகும்.

### வேலைவாய்ப்புக்கான அம்சங்கள்

சன ஆதிவாசிகளுக்காக, அரசு அலுவ
ளிலும், அரசு நிறுவனங்களிலும்
ாட்சிக் கழகங்களிலும் ஆரம்ப நிலையில்
அநேக பதவிகளில் 18 சதவீதம்
ப்பட்டுள்ளது. தற்போது இவ்
ய ஒட்டி வராமல் இருக்கும் பதவி
தம் உத்தியோக உயர்வினால் நிரப்பப்
பதவிகளுக்கும் ஒதுக்கீட்டிற்கான
ள விஸ்தரிப்பது குறித்து அரசு பரி
யில் இருந்து வருகிறது.

சன ஆதிவாசிகளின் வேலை வாய்ப்
ன சாத்தியக் கூறுகளை உயர்த்த ஒவ்
ஆண்டும் தமிழ்நாடு பணியாளர் தேர்
ழுவால் நடத்தப்படும் 4 ம் நிலைத்தேர்வு
ம் மாணவர்களுக்கெனத் தனியாகப்
அளிக்கப்படுகிறது. தட்டெழுத்து,
கழுத்து கற்றுத்தரவும், தனியான
ம் ஒன்று, அமல்படுத்தப்படுகிறது. இத்
திட்டத்தால் தட்டெழுத்துப் பயிலும் 900 மாணவர்களும், சுருக்கெழுத்துப் பயிலும் 450 மாணவர்களும் பயன் பெறுவர்.

இந்திய அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழுவால் நடத்தப்படும் இந்திய ஆட்சிப்பணி, இந்திய காவல் பணி போன்ற தேர்வுகள் எழுத இருக்கும் அரிசன ஆதிவாசி மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக மத்திய அரசின் முழு உதவி பெற்ற முன்னோடி பயிற்சி நிலையம் ஒன்று நடைபெற்று வருகிறது. இந்நிலையத்தில் இந்தியா முழுவதிலிருந்தும் வரும் அரிசன ஆதிவாசிகள் சேர்த்துக் கொள்ளப்படுவர். ஒவ்வொரு ஆண்டிலும் 60 நபர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கு அனுமதி உள்ளது. 1975-76ல் தேர்வு எழுதிய 28 மாணவர்களில் 6 நபர்கள்இந்திய ஆட்சிப்பணி மற்றும் இதரப் பணிகளுக்கான இறுதித் தேர்வுகளில் வெற்றி பெற்றுள்ளனர். அரிசன ஆதிவாசிகளின் நலனுக்காக இந்திய ஆட்சிப் பணி போன்ற பணிகள் நீங்கலாக மற்றப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் மற்றும் ஆயுள் ஈட்டுறுதி இணையம் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் முடிவான துறைகளுக்கான போட்டித் தேர்வுகளிலும் கலந்து கொள்ளும் பட்டதாரிகளுக்குப் பயிற்சி அளிக்க தனியாக ஒரு நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

## சுகாதாரம், வீட்டு வசதி மற்றும் இதர திட்டங்கள்

### வீட்டு மனைகள்

எங்கெல்லாம் அரசு (புறம்போக்கு) நிலங்கள் உள்ளனவோ அங்கெல்லாம் வீட்டு மனைகள் இல்லாத அரிசன ஆதிவாசிகளுக்கு வீட்டு மனைகள் வழங்கப்படுகின்றன. அரசு (புறம்போக்கு) நிலங்கள் இல்லாத இடங்களில் தகுதியுள்ள தனியார் நிலங்களை அரசு செலவில் ஆர்ஜிதம் செய்து ஒப்புதல் பெற்ற,வரை படத்தின்படி வீட்டு மனைகளாக வழங்கப்படுகிறது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்படும் மனையின் பரப்பளவு 3 முதல் 5 செண்டுகள் ஆகும். 1949ம் ஆண்டிலிருந்து, 30—6—76 முடிய ரூ. 472·06 இலட்சம் செலவில் 15,931·90 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, 2,47,269 மனைப்பட்டாக்கள் ஏழை அரிசன ஆதிவாசிகளுக்கு வழங்கப்பட்டன.

### மீனாட்சி கோவிலில் மகாத்மா

1946-ஆம் ஆண்டு
ாந்திஜி தமிழகத்தில்
ற்றுப் பயணத்தை மேற்
காண்டிருந்தார். மது
ரக்குச் சென்றிருந்தார்.
ங்கே புகழ்பெற்றுத்
கழும் மீனாட்சியம்மன்
லயத்திற்குச் சென்றார்.
ஜை முறைகளைக் கவன
மாகப் பார்த்தபடி வந்த காந்திஜி, இடையிடையே தமக்கு எழுந்த சந்தேகங்களையும் கேட்டுத் தெளிவு செய்து கொண்டார் கோவிலில் உள்ள வாகனுதிகளை யும் பார்வையிட்டார்; கோவிலை விட்டுப் புறப்படும் போது, கோவில் தர்மகர்த்தா, பார்வையாளர் பதிவுப் புத்தகத்தை காந்திஜியிடம் நீட்டினர். அதனை வாங்கிய மகாத்மா, "எனது வாழ்க்கையில் நான் முக்கியமாகக் கருதிய ஒரு காரியம் இன்றுதான் கைகூடியது" என்று எழுதிக் கையொப்பமும் இட்டார்.

1975-76ல் நிலங்களை ஆர்ஜிதம் செய்ய ரூ. 26·20 இலட்சம் செலவிடப்பட்டது. நடப்பு ஆண்டிற்கு ரூ. 52·02 இலட்சம் (முந்தைய ஆண்டைப்போல் இரு மடங்கு) ஒதுக்கப்பட்டுள்ளது. அரிசன காலனிகள், தனித்து இருப்பதை தடுக்க, கூடிய வரையில் சாதி இந்துக்கள் வசிக்கும் இடத்தை ஒட்டியே நிலங்கள் கையகப்படுத்தப்படுகின்றன. மேலும், தமிழ்நாடு குடியிருப்பு சட்டத்தின் கீழ் இதுவரை 1,02,419 அரிசனங்களுக்கு வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள் டுள்ளன.

### வீட்டுவசதி

1974–75ம் ஆண்டு வரை, அரிசன ஆதிவாசிகளுக்கு, கடன் மற்றும் மானிய உதவி அளித்து வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. இவ்வீடுகளுக்கான செலவு, தரத்திற்கு ஏற்ப ரூ. 750ல் இருந்து ரூ. 1,600 வரை ஆகும். மலைப்பகுதிகளில் ஒரு வீட்டிற்கான செலவு ரூ. 2,000 ஆகும்.

1974–75ம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வாரியம் ரூ. 4,000க்கும், மலைப்பகுதிகளில் ரூ. 6,000க்கும் ஆக வீடுகளைக் கட்டி கொடுக்கின்றது. வீட்டுவசதி வாரியத்தால் அவ்வீடுகள் அரிசன மக்களுக்கு இலவசமாக ஒப்படைக்கப்படுகின்றன. 1975–76 வரை 51,618 வீடுகள் (அரிசன வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட 30,058 வீடுகள் உட்பட) கட்டி முடிக்கப்பட்டன.

### குடிநீர்க்கிணறு

தமிழ்நாட்டிலுள்ள 25,000 அரிசனக் குடியிருப்புகளில் 23,311 குடியிருப்புகளுக்கு குடிநீர்க்கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. குடிநீர்க் கிணறுகளுக்காகவும் தரை நிலை நீர் தேக்கத் தொட்டிகளுக்காகவும் சராசரி ரூ. 20 லட்சம் ஒவ்வொரு ஆண்டும் செலவிடப்படுகிறது.

### சுகாதார வசதிகள்

ஒவ்வொரு ஆண்டும் அரிசனக் குடியிருப்புகளுக்கும் இடுகாட்டிற்கும் பாதை அமைத்தல், இணைப்புப் பாதைகள், சிறு பாலங்கள் அமைத்தல், குடிநீர்க் கிணறுகளை செப்பனிடுதல் மற்றும் சுகாதார வசதிகள் செய்தல் போன்ற அடிப்படை வசதிகளை அமைத்துக் கொடுக்க ஒவ்வொரு ஆண்டும் நிதி ஒதுக்கப்படுகிறது. அரிசனங்களுக்கே பயன்படக் கூடிய வேலைகளுக்கு (குடிநீர் வசதியும் இணைப்புப் பாதைகளும்) அரிசன ஆதிவாசிகள் நலத்துறை நிதியிலிருந்து ஊராட்சி ஒன்றியங்களுக்கு உதவித்தொகை அளிக்கப்படுகிறது. 1976–77க்கான நிதி ஒதுக்கீடு ரூ. 21 லட்சம் ஆகும். 1976–77-ம் ஆண்டுக்கு அரசினரால் அரிசன குடியிருப்புகளுக்கு பயனளிக்கும் பாதைகள் போடவும், இடுகாட்டிற்குச் செல்லும் பாதைகள் அமைக்கவும் தனியாக ரூ. 30 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 6,784 காலனிகள் இதனால் பய

### அரிசனக் குடியிருப்புகளுக்கு மின் வசதி :

மொத்தமுள்ள 25,000 அரிசனக் கு
யிருப்புகளில் 23,562 குடியிருப்புகளுக்
மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. மீதமுள்
1,438 குடியிருப்புகளுக்கும் விரைவில் மி
வசதி செய்து தரப்படும். அரிசனக் கு
யிருப்புகளுக்கு மின் வசதி செய்து கொடுப்

## உறவுமில்லை

காந்திஜி-சொத்துக்களில் ஆசை இல்லாதவ
தனது பூர்வீக வீட்டின் மீது அவருக்கிருந்
உரிமையையும் துறந்துவிட்டார். சொந்தக்கா
களை அழைத்து, அது சம்பந்தமான தஸ்
வேஜுக்கள் எழுதிக் கையெழுத்திட்டார் ; தன
நான்கு பிள்ளைகளையும் கையெழுத்திடச்செ
தார். தன்னை, சொத்தில்லாதவராக ஆக்கி
கொண்டார்.

சொந்தக் காரியங்களுக்காக காந்திஜி எ
ரிடத்திலும் எப்போதும் உதவி கேட்பதில்
இருந்தாலும்கூட, தனக்கென எந்தச் சொத்த
வைத்துக் கொள்ளவில்லையாதலால், தன
ஒரே சகோதரிக்கு மாதம் 10 ரூபாய் அனுப்ப
படி, தமது பழைய நண்பரான டாக்
பிராண ஜீவன் மேதாவிடம் காந்திஜி சொல்
யிருந்தார். அவரும் கொடுத்து வந்தார்.

சிறிது காலம் சென்றது. அந்தச் சகோதரியி
மகள் விதவையாகிவிட்டாள். தன் தாயாரி
வீட்டிற்கு வந்துவிட்டாள். உடனே காந்தி
யின் சகோதரி, இப்பொழுது செலவு அதிகம
விட்டது. அதனால் அக்கம் பக்கத்தி
உள்ளவர்களுக்கு கூலிக்கு தானியம் அரைத்
கொடுக்கும் வேலை செய்ய வேண்டியி
கிறது' என்று காந்திஜிக்கு கடிதம் எழுதின

'மேலும் பணம் அனுப்பு' என்பதற்
பதிலாக தனது சகோதரி இவ்வாறு கடித
எழுதியிருக்கிறாள் என்பதைப் புரிந்து கொ
டார் காந்திஜி.

"மாவு அரைப்பதென்பது மிகவும் நல்ல
அதனால் இரண்டு பேருடைய உடம்பும் ஆரோ
கியமாய் இருக்கும் ; ஆசிரமத்தில் நாங்கள
மாவு அரைக்கிறோம். உங்களுக்கு இ
மான பொழுது நீங்கள் ஆசிரமத்தில் வ
உங்களாலான வேலைகளைச் செய்து கொண்டி
உங்களுக்கு முழு உரிமையுண்டு ; நாங்கள் எ
யிருக்கிறோமோ அப்படியே நீங்களுமிருக்கல
என்றால் உங்கள் வீட்டிற்குப் பணம் அனுப்ப
முடியாது. அனுப்பும்படி நண்பர்களி
சொல்லவும் முடியாது'' என்று தாட்சு
மின்றித் தனது சகோதரிக்கு மறுமொ
எழுதிவிட்டார் காந்திஜி.

தற்கான மூலதனத்தை (Capital Subsi
வழங்குவதுடன் தெரு விளக்குகள் எரிவத
ஏற்படும் மின் கட்டணத்தையும் அரிசன
வாசிகள் நலத்துறை நிதியிலிருந்து வழங்
படுகிறது. 1957–58ல் இருந்து 1975-
முடிய மின் வசதி அமைப்பதற்கான
தனம் (Capital Subsidy) ரூ. 217·63 இல




127·54 இலட்சமும் மின் வாரியத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது. 1975–76-க்கும் மட்டும் மேற்படி செலவினங்களுக்காக ரூ. 82·11 இலட்சம் கொடுக்கப்பட்டுள்ளது. 1976–77ல் மூலதனத்திற்காக (Capital Subsidy) ரூ. 56 இலட்சமும் மின் விளக்கிற்காக ரூ. 27 இலட்சமும் கொடுக்கப்படும்.

சமுதாயக் கூடங்களும் சமுதாய நலமன்றங்களும்

முக்கிய அலுவலர்கள், திருமணங்கள், கூட்டங்கள் போன்றவைகள் நடத்தவும், அரிசனங்களும், சாதி இந்துக்களும் கலந்து உறவாடவும், சமுதாயக்கூடங்கள் கட்ட 100 இடங்கள் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளன. தற்போது ஒரு சமுதாயக் கூடத்திற்கான செலவு ரூ. 15,000 ஆகும். 1976–77ம் ஆண்டில்ரூ. 1·50இலட்சம் செலவில்சமுதாயக் கூடங்கள் கட்ட 10 இடங்கள் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

கலப்புத் திருமணம் :

தீண்டாமையை ஒழிக்கும் வகையிலும் பொது நோக்குடைய சாதி வேறுபாடற்ற சமுதாயம் ஏற்படுத்தவும் கலப்புத் திருமணங்கள் ஆதரிக்கப்படுகின்றன. கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகளுக்கு 1½ சவரன் எடையுள்ள 14 காரட் தங்கப் பதக்கம் அளிக்கப்படுகிறது. வீட்டுச் சாமான்கள் வாங்க, பணமாக ரூ. 200ம் வழங்கப்படுகிறது. இதுவரை கலப்புத் திருமணம் செய்து கொண்ட 417 ஜோடி மணமக்களுக்கு தங்கப்பதக்கம் அளிக்கப்பட்டது. 1976–77க்கு ரூ. 2 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தீண்டாமையை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் :

தமிழ்நாட்டில் தீண்டாமை (குற்றங்கள்) சட்டம் 1955 அமலில் உள்ளது. கோவை, மதுரை, தென் ஆர்க்காடு, தஞ்சை, திருச்சி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் ஏற்கனவேயுள்ள நிரந்தர காவற்படையுடன் ஒரு ஆய்வாளர், ஒருதுணை ஆய்வாளர், 2 தலைமைக் காவலர், 2 காவலர்கள் கொண்ட நடமாடும் படைக்குழு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனியாக அமைக்கப்பட்டுள்ளது. இதர மாவட்டங்களில் நிரந்தரமாக உள்ள காவல் துறை இவைகளைக் கவனித்து வருகிறது. தீண்டாமை (குற்றங்கள்) சட்டம் 1955ஐ மீறியவர்களைக் கண்டுபிடித்துக்குற்றவாளிகளை பதிவு செய்வது நடமாடும் படையினரின் வேலையாகும். மேற்படி தனிக் காவல் படைக் குழுக்கள் 1972 முதல் இயங்கி வருகின்றன. நடமாடும் காவல் படைகள் ஆ[...]பிப்பதற்கு முன்பு நிரந்தர காவல் படையின[ர்] இச்சட்டத்தை 1955ம் ஆண்டு முதல் கூடு[த]ல் பணியாக செய்து வந்தனர். நடமாடும் படைக் குழுக்கள் (தனியாக) இல்லா[த] மாவட்டங்களில் இந்தப்பணிகளை நிரந்தர காவற்படையினரே தொடர்ந்து நடத்[தி] வருகின்றனர். 31—3—76 முடிய ந[ட]மாடும் படைக்குழுவினரால் கண்டுபிடிக்[க]ப்பட்ட குற்றங்களும் அவைகளின் முடிவுகளு[ம்] கீழே அளிக்கப்படுகின்றன.

| வரிசை எண்ணும் குற்றங்களின் விவரமும். | நடமாடு படை ஆரம்பத்தில் இருந்[து] காலாண்[டு] முடிய. |
|---|---|
| 1 தெரிவிக்கப்பட்ட குற்றங்கள். | 4,74 |
| 2 குற்றப்பத்திரிகை தொடரப்பட்டவை. | 4,68 |
| 3 தண்டனைக்குள்ளானவை .. | 3,05 |
| 4 விடுதலை பெற்றவை .. | 71 |
| 5 இசைந்து தீர்க்கப்பட்டவை. | 55 |
| 6 நீதி மன்றத்தில் எஞ்சியிருந்தவை. | 36 |
| 7 கைவிடப்பட்டவை. .. | 5 |
| 8 ஆய்வில் உள்ளவை. .. | |

தீண்டாமை ஒழிப்பை தீவிரமாகப் பிரசாரம் செய்ய ரூ. 26,29,000 செலவில் சி[ல] திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன. ஆதிவாசிகளுக்கான சிறப்புத் துணைத்திட்ட[ம்] ஆதிவாசிகளின் நலனுக்காக திரு வீ[...] கார்த்திகேயன் அவர்கள் தலைமையில் ஏ[ற்]படுத்தப்பட்ட தனிக்குழுவின் பரிந்துரை[க]ளின் மேல் பகுதி தன் உரிமை அதிகார[ம்] கொண்ட ஆணையம் (மலைவாழ் மக்களின் மு[ன்]னேற்றத்திற்கான ஆணையம்) துவக்கப்ப[ட்]டுள்ளது. துணைத் திட்டத்தால் மலைவா[ழ்] மக்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டு[த்] திட்டங்களைத் தீட்ட ஒரு ஆய்வுக்குழு இயங்[கி] வருகிறது. துணைத்திட்டத்தின் கீழ் மு[த]பாகவே நடவடிக்கை எடுக்க ரூ. 10 இலட்ச[ம்] நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. துணைத் திட்ட[த்]தின்கீழ், மத்திய அரசு மலைவாழ் மக்களி[ன்] நலனுக்காக கணிசமான தொகையை ஒது[க்]கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## காந்திஜி மேற் கொண்ட விரதம்

கோபால கிருஷ்ண கோகலே அவர்களை தமது 'அரசியல் குரு' என்று காந்திஜியே குறிப்பிட்டுள்ளார்கள். 1914-ஆம் வருடம் பிப்ரவரி மாதம் கோகலே காலமானார். அவரது இறுதிச் சடங்கு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்கு காந்திஜி சென்றார். அவரது மரணச் செய்தியைக் கேள்வியுற்றவுடனேயே ஓர் ஆண்டிற்குச் செருப்பு அணிவதில்லை என்ற விரதத்தைக் காந்திஜி மேற்கொண்டார். இந்த விரதத்தின் காரணமாக காந்திஜிக்கு மிகவும் சிரமங்கள் நேர்ந்தன. என்றாலும் அவற்றைப் பொருட்படுத்தாமல் விரதத்தை உறுதியுடன் நிறைவேற்றினார் !

`பார்க்கும் மரங்களெல்லாம்
நந்தலாலா ! — நின்றன்
பச்சை நிறந்தோன்றுதையே,
நந்தலாலா
— மகாகவி பாரதியார்.

★★ வான் பொழியவும்
வறட்சி ஒழியவும்
மரம் நடுவீர் !!

★★★ `மா'வும், மருதும்,
ஆலும், அரசும்,
வேலும், வேம்பும்,
புங்கன், பூவரசும்
இன்றே நடுவீர் !
— நலம் பல பெறுவீர் !

வெளியிடுவோர்:—
இயக்குநர், வேளாண்மைத் துறை - தமிழ்நாடு.



# படத் தொகுப்பு



ஜோகன்னஸ்பர்க்கில்
பாரிஸ்ட்டராக காந்திஜி (1907).



தென்னாப்பிரிக்காவிே
சத்தியாக்கிரகியாக காந்திஜ
(1914).

மகாத்மா காந்தியடிகள் அன்னை கஸ்தூரிபா அவர்களுடன் 1915-ஆம் ஆண்டில் முதல் முதலாக சென்னைக்கு வருகை தந்தார். திரு. மகமத் யாகூப் ஹசன் அவர்களும், திரு. ஜி. ஏ. நடேசன் அவர்களும் உடனுள்ளனர்.



பொன்மலை ரயில்ே
ஸ்டேஷனில், ரயில்வே தொ
லாளர்களிடையே காந்தி
உரையாற்றினார். (1934).





ரு. ஸ்ரீனிவாச அய்யங்கார், திரு. சத்தியமூர்த்தி ஆகியோருடன் காந்திஜி (1924).



சேவாக் கிராமத்தில் காந்திஜியும், கஸ்தூரிபாவும்.



சிறையில் காந்திஜி. இலட்சியவாதிகளுக்குச் சிறைக் கூடமும் சிந்தனைக்கூடமே என்பதை இப்படம் சொல்லாமல் சொல்கிறது.

'அம்பத்தூருக்கு 1946-ல்
ருகை தந்த அண்ணல் காந்தி
டிகளை, திரு. காமராஜ், திரு.
காபால்சாமி அய்யங்கார்,
ரு. ராஜாஜி ஆகியோர் வர
வற்று அழைத்துச் சென்றனர்.





வறட்சியின் கொடுமையால் தென்னை மரங்களெல்லாம் தலைகருகி, இறந்து காணப்படுகின்றன. வரலாறு காணாத வகையில் தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களில் நிலவிவரும் வறட்சிக்கு, மேலே காணப்படும் காட்சி ஒரு சான்றாக விளங்குகிறது. இத்தகைய வறட்சியை வெல்வதற்காக, இந்திய அரசின் நிதி உதவியுடன், தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் வறட்சி நிவாரணப் பணிகளைக் காணவும், மக்களுக்கு ஆறுதல் கூறவும், பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் 14—9—1976, 15—9—1976 ஆகிய இருநாட்களில் தமிழ்நாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்.



ஏழை எளியவர்களின் வாழ்வை வளப்படுத்துவதையே இலட்சியமாகக் கொண்ட நமது பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள், தலையில் கட்டுடன் உள்ள ஏழைச் சிறுவனிடம் அன்பு மழை பொழியும் அரிய காட்சி (நாகர்கோவில்).



பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் 14—9—76 அன்று நாகர்கோவில் ஊர்வலமாக வந்தபோது தெருவின் இருபுறமும் மக்கள் திரண்டிருந்து வரவேற்றனர்.





பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் 14—9—76 அன்று கோவில்பட்டிக்கு அருகில் உள்ள புதுஅப்பனேரியில் நடைபெற்ற வறட்சி நிவாரணப் பணிகளைப் பார்வையிட்டார்,





பாரதப் பிரதமர் அவர்கள் வறட்சி நிவாரணப் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.



அலைகடலெனத் திரண்டிருந்த மக்களிடையே 14—9—76 அன்று பாளையங்கோட்டையில் பாரதப் பிரதமர் அவர்கள் உரையாற்றினார்.



பாரதப் பிரதமர் அவர்களை வரவேற்க தமிழகத்தின் தாய்க்குலமே மதுரையில் திரண்டு. பேரணி நடத்தியது.



மதுரையில் தாய்க்குலம் நடத்திய பேரணியில் கலந்து கொண்ட பிரதமர் அவர்களுக்குத் தாய்க்குலத்தின் சார்பில் திருமதி பொன்னம்மாள் அவர்கள் பொன்னாடை போர்த்தினார்.





மக்கள் கூட்டமோ ! மாகடலோ ! கோவை வ.உ.சி. பூங்காவில் 15—9—76 அன்று பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் உரையைக் கேட்கக் கூடியிருந்த கூட்டத்தில் ஒரு பகுதி.

பாரதப் பிரதமர் அவர் ...ளின் உரையைக் கேட்க .....

கொளுத்தும் வெய்யிலையும் பொருட்படுத்தாமல் பல்லாயிரக் கணக்கான மக்கள் வெகண்கை யில் திரண்டிருந்த காட்சி.





கொத்தடிமையிலிரு... விடுபட்ட தொழிலாளர்க... பாரதப் பிரதமர் அவர்... 15—9—76 அன்று கோ... யில் சந்தித்து அவர்களின் ந... விசாரித்தார்.







வள்ளுவர் கோட்டத்தில்



பாரதி விழா காட்சிகள்!



# இருபதின் பெருமையை உணர்ந்து ஊரகச் சீரமைப்புத் திட்டம்!

தங்களைக் காத்துக் கொள்ளும் சக்தி நகரங்களுக்கு இருக்கிறது. கிராமங்களுக்குத்தான் நாம் உதவி செய்ய வேண்டும்.''

'' குரோதங்கள், மூட நம்பிக்கைகள், குறுகிய மனப்பான்மை ஆகியவற்றைக் கிராமங்கள் கைவிடுமாறு செய்ய வேண்டும்.''

'' கிராமங்களில் நாம் தங்கி அவற்றின் சுக துக்கங்களைப் பகிர்ந்து கொண்டு, கல்வியையும் அறிவுத் தகவல்களையும் பரப்புவதுதான் இதற்கான வழி''.

என்று அண்ணல்காந்தியடிகள் கனவு கண்டார். அந்தக் கனவு இன்று நனவாகிக் கொண்டிருக்கிறது.

**ஊரகச் சீரமைப்புத் திட்டம் உருவாகியது.**

1976-ம் ஆண்டு பிப்ரவரி 15-ஆம் நாள், சோமங்கலம் முதலிய பத்துக் கிராமங்களின் மறுமலர்ச்சி நாளாகும்.

பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள், சோமங்கலம் கிராமத்தில் ஊரகச் சீரமைப்புத் திட்டத்தைத் தொடங்கி வைத்த நன்னாள் அது.

அந்நாள் முதல் இந்நாள் வரை அந்தக் கிராமங்கள் பலவகையிலும் வளர்ச்சி பெற்று வருகின்றன.

சோமங்கலம்.

இதன் பெயரை இன்று உச்சரிக்காதவர்கள் இல்லை. இதன் புகழ் தமிழகம் மட்டுமின்றி, பிற மாநிலங்களிலும் பேசப்படுகின்றது.

குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சோமங்கலமும் அதனைச் சேர்ந்த ஒன்பது கிராமங்களும் (1. அமரம்பேடு, 2. பூந்தண்டலம், 3. நல்லூர், 4. புதுச்சேரி, 5. நடுவீரப்பட்டு, 6. எருமையூர், 7. வரதராஜபுரம், 8. சிறுகளத்தூர், 9. நந்தம்பாக்கம்) இன்று புதுப்பொலிவும், வலிவும் பெற்று வருவதைப் பார்க்கிறோம்.

**வளர்பிறை போல் வளரும் திட்டம் :**

குன்றத்தூர் என்றதும் நம் நினைவுக்கு வருபவர் ' பெரிய புராணம் ' பாடிய சேக்கிழார் பெருமான். ' உலகெலாம் ' என்று தொடங்கும் அந்தப் பெரியபுராணத்தின் ஆசிரியர் பிறந்த ஊர் குன்றத்தூர். இத்தகு சிறப்பு வாய்ந்த குன்றத்தூருக்கு அடுத்து ஊரகச் சீரமைப்புத் திட்டம் தொடங்கப் பெற்றுள்ளது. அத்திட்டம் வளர்பிறையாய் வளர்ந்து வளம் பல சேர்த்து வருகின்றது.

ஊரகச் சீரமைப்புத் திட்டத்தை நிறைவேற்ற இந்தக் கிராமங்களைத் தேர்ந்தெடுத்ததேன்?

தமிழ்நாட்டின் மிகப் பெரிய ஏரிகளில் ஒன்று செம்பரம்பாக்கம் ஏரி. இதனை அடுத்துள்ள சோமங்கலமும், அதனையொட்டிய ஒன்பது கிராமங்களும் அதன் பாசன வசதியைப் பெறும் ஆயக்கட்டுப் பகுதியில் அவை இல்லாமல், ஏரிக்கு மேல் பக்கம் அமைந்திருக்கின்றன. இப்படிப் பாசன வசதி இல்லாத, பல வகையிலும் பின் தங்கிய பகுதி அது எனத் தெரிந்தேதான் சோமங்கலம் இந்தப் புதிய திட்டத்தை முதன் முதலில் செயல்படுத்துவதற்குரிய பகுதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

**பொருளாதாரம் வளர :**

சோமங்கலம் முதலான கிராமங்களில் வாழும் குடும்பங்களைப் பற்றிய எல்லா விவரங்களும் சேகரிக்கப்பட்டு, அவர்களின் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள் ஆராய்ந்து வ[illegible] பட்டன.

குறைந்தது ஒவ்வொரு [illegible]பத்திற்கும் மாதமொன்றி[illegible] சுமார் ரூ. 400 வரும[illegible] கிடைப்பதற்கேற்ற வகை[illegible] பல்வேறு திட்டங்கள் உ[illegible]கப்பட்டுள்ளன. விவச[illegible] கால்நடை வளர்ச்சி, மக[illegible] குழந்தைகள் நலம், கி[illegible] கைத்தொழில் வளர்ச்சி, [illegible] வளர்ப்பு, ஆடு, மாடு, பன்[illegible] பராமரிப்பு முதலியவ[illegible] தனிக் கவனம் செலு[illegible] பட்டுள்ளது.

**குடும்பத் திட்டம்—**

' இதற்குக் குடும்பத் தி[illegible] (House hold Plan [illegible] பெருமளவில் கைகொடு[illegible] இதன் அடிப்படையில் ஒவ்[illegible] குடும்பத்திற்கும் ஒரு அடைய[illegible] கார்டு வழங்கப்பட்டது. [illegible] கார்டில் ''ஊரகச் சீரமை[illegible] திட்டம் சோமங்கலம்—கு[illegible] திட்டம்'' என்று குறிக்[illegible]டுள்ளது. இதுவரை 2,002 [illegible]பங்களுக்கு இந்தக் கார்டு[illegible] கப்பட்டு, குடும்ப முன்னே[illegible]துக்கான தகவல்கள் சேக[illegible] பட்டுள்ளன. இம்மாதிரி [illegible]வொரு குடும்பத்திற்கும் வழங்கி தகவல் சேக[illegible] இந்தியாவிலேயே இதுதான் [illegible] தடவை என்பதை இங்கே [illegible]பிட வேண்டும்.

இந்தத் தகவலின்படி [illegible] குடும்பங்கள் மாதம் ரூ.100 குறைவான வருமானமுள்[illegible]யாக இருக்கின்றன. 1,025 [illegible]பங்கள் ரூ. 101-லிருந்[illegible] 200 வரையும், 477 குடும்[illegible] ரூ. 201-லிருந்து ரூ. 300 [illegible]யும், 119 குடும்பங்கள் ரூ. [illegible]லிருந்து ரூ. 400 வரையு[illegible]மான முள்ளவையாக இ[illegible]றன. குறைந்த வருமான குடும்பங்களின் வாழ்க்கைத்[illegible]தை உயர்த்துவதற்கும், [illegible]ளாதாரத்தில் மேம்பாடு[illegible]வதற்கும் தக்க நடவடிக்[illegible]

தமாக மேற்கொள்ளப்பட்டு கின்றன. ஆடு மாடுகள் ர்த்தல். கோழிப்பண்ணை, பண்ணை வைத்து நடத்து முதலான வகைகளில் இங் ள மக்களுக்கு உதவிகள் உட யாகச் செய்யப்பட்டு வருகின் .

க்கிராம மக்களின் முக்கியத் ழில் வேளாண்மை. வேளா மை தவிர 110 குடும்பங்கள் வுத் தொழிலிலும், 145 ம்பங்கள் முடிதிருத்துதல், வெளுத்தல் போன்ற ழிலிலும், 137 குடும்பங் தச்சு, கருமார் வேலையி ஈடுபட்டுள்ளன.

## இருபதம்சம் கை கொடுத்தது

தோ ஒரு பால் வண்டி கிறது. என்ன என்று ரிப்போமா ?

ங்கி மூலம் கறவை மாடுகள் கி பால் பண்ணை நடத்து ஒருவர். அதன் மூலம் ளொன்றுக்குக் காலை 60 லிட்ட மாலை 45 லிட்டரும் பால் க்கின்றதாம். அதை இந் சிறிய மூன்று சக்கர வண்டி ஏற்றி சென்னைக்குக் ண்டு வந்து விற்கப்படுகிற . இந்த அலுவல் நாள் றும் ஒழுங்காக நடக்கிறது.

ங்கி மூலம் ஆடுகள் வாங்கிய, வளர்ப்போர் சங்கத் தலைவர் டெல்லியைப் பேட்டி காண மா ?

ஸ்டேட் பாங்க் மூலமாக கு 24 ஆடுகள் வழங்கப் ருக்கின்றன. மூன்று மாதங் க இதனை நான் பராமரித்து றேன். எங்கள் குடும்பத் 6 பேர் இருக்கிறோம். கால் நிலம் இருக்கிறது. இதன் மாதம் ரூ. 200-தான் வரு ம் கிடைக்கிறது. குறைந் ரூ. 400-மாத வருமானம் தால்தான் வறுமை இல் ல் வாழ்க்கையை நடத்த ம். இதற்கு இருபதம்சத் ம் எனக்குக் கைகொடுத் கிறது. இப்போதுள்ள ஆடு குட்டி போடுவதன் மூலம் ம் 3 ஆண்டுகளில் 50 ஆடு க் கிடைக்கும். அப்போது கு மாத வருமானம் ரூ. 400 க்கும் ''.

## ழ்வு வாழ்ந்திட....

ரமங்கலம் முதலான கிரா ரில் சுகாதார வசதிகள் ?

முன்பெல்லாம் சிகிச்சைக்காக குன்றத்தூர், தாம்பரம் ஆகிய இடங்களை நோக்கிப் போக வேண்டியிருந்தது. அதற்கு எவ்வளவோ சிரமம் இருந்தது. குறிப்பாக மகப்பேற்றுக்காகத் தாய்மார்கள் பெருந்தொல்லைக்கு ஆளானார்கள். ஆனால், இன்று அத்தகைய இருண்ட சூழ்நிலைகள் எல்லாம் விலகி ஒளிமயமாய்க் காட்சியளிக்கின்றன. இன்று கிராமங்களிலேயே மருத்துவ வசதிகள் உள்ளன. இதற்கென முழு நேர மருத்துவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் கிராமந்தோறும் சென்று நோயாளிகளை நேரில் சந்தித்துப் பரிசோதனைகள் செய்கிறார். சிகிச்சைக்கான மருத்துவ மனை (Health Centre Somangalam) சோமங்கலத்தில் உள்ளது. அங்கு வந்து சிகிச்சை பெற்றுக் கொள்ள வசதி செய்யப்பட்டிருக்கிறது. இதற்கான அடையாளச் சீட்டுகள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்பட்டு உள்ளன. இதில் '' சோமங்கலம் கிராம முன்னேற்றத் திட்டம்—சுகாதாரப் பிரிவு—அடையாளச் சீட்டு '' என்று குறிக்கப்பட்டுள்ளது. ' மகப்பேறு பற்றிய குறிப்பேடு ' க்கும் தனி அட்டை வழங்கப் பெற்றுள்ளது. இதில் மகப்பேறு வசதி அளிக்கும் நிலையம், மகப்பேற்றிற்கு வீடு தகுதியானதா, இல்லையா ; போன்ற விவரங்களும், மகப்பேற்றுக்குப் பின் தாய்—சேய் நலம் பற்றியும் குறிக்கப்படுகின்றன.

காலையில் சிகிச்சையும், மாலையில் நோயாளிகளைச் சந்திக்க கிராமந்தோறும் செல்வதும் இங்குள்ள மருத்துவரின் அன்றாடப் பணியாகும்.

மருத்துவம் அனைத்தும் இலவசமாகவே வழங்கப்படுகிறது. சுமார் 11,000 மக்கள் தொகை கொண்ட இந்தக் கிராம மக்களின் ஒவ்வொரு குடும்பத்துக்கும் ' மருத்துவ அடையாளச் சீட்டு ' வழங்கப்பட்டுள்ளது. சுமார் 6,000 மக்கள் இதுவரை மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டுள்ளனர். பொதுவான நோய்கள் தவிர தொழுநோய், யானைக்கால் வியாதி போன்றவற்றிற்கும் சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இதுவரை 2.050 பேர்களுக்குக் குடும்பநல அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. இதற்குத் தனியாக மருத்துவர் வரவழைக்கப்படுகிறார். இங்குள்ள மக்களுக்கு உயிர்ச்சத்துக்கள் அடங்கிய மாத்திரைகளும் (Multi Vitamins) வழங்கப்படுகின்றன. சுருங்கச் சொன்னால் மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்குத் தேவையான அனைத்து வசதிகளும் அங்கேயே அளிக்கப்படுகின்றன.

## மாதம் ரூ. 400 வருமானம் கிடைக்கிறது

சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் சார்பில் 3 கறவை மாடுகள் பெற்ற திரு. வி. சீனிவாசன் (வயது 48) கூறுவதைக் கேட்போமா ?

'' எங்கள் குடும்பத்தில் நாங்கள் 6 பேர் இருக்கிறோம். நான் சோமங்கலத்திலுள்ள ஒரு அஞ்சல் அலுவலகத்தில் பகுதி நேர '' போஸ்ட் மாஸ்டராக '' வேலை செய்கிறேன். மாதம் ரூ. 100 கிடைக்கிறது. கொஞ்சம் நிலம் உள்ளது. எனக்கு விவசாயம்தான் முக்கியத் தொழில். இதில் எங்கள் குடும்பத்துக்குத் தேவையான வருமானம் கிடைக்கவில்லை. எப்படியோ குடும்பத்தை இத்தனை நாளும் நடத்தி வந்தேன். இப்போது எனக்கு 3 கறவை எருமைகள் கிடைத்திருக்கின்றன. அந்த மாடுகள் தங்குவதற்கு ' டான்சி ' நிறுவனம் ஒரு ' ஷெட் ' அமைத்துக் கொடுத்திருக்கிறது. இப்போது எனக்கு மாதம் ரூ. 400 வருமானம் கிடைக்கிறது. என் குடும்பமும் கஷ்டமில்லாமல் இருக்கிறது. ''

## மகாத்மா தமிழ் கற்றுக் கொடுத்தார்

டால்ஸ்டாய் பண்ணையிலுள்ள குழந்தைகளுக்குக் கல்வி போதிக்கும் பொறுப்பைக் காந்திஜி ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. தமிழர், தெலுங்கர் குஜராத்தியர், இந்துஸ்தானியர் என்று பல சாதிக் குழந்தைகள் அங்கு இருந்தார்கள். தாய்ப் பாஷையைத் தவிர ஏறக்குறைய எல்லோருக்கும் புரியக்கூடிய அளவுக்கு ஆங்கிலம் தெரியும். அந்த நாட்டிலுள்ள தமிழர்களுடன் நெருங்கிப் பழகியதால் காந்திஜிக்குத் தமிழ்ப் பாஷையில் ஓரளவு பாண்டித்தியம் ஏற்பட்டது.

## அறிவொளி பரவிட....

அறியாமை என்னும் இருள் அகன்றிடவும் எங்கும் அறிவொளி பரவிடவும் இன்று கிராமங்கள் தோறும் பள்ளிகள் உள்ளன. இன்று சோமங்கலம் முதலான பத்துக் கிராமங்களில் உயர் நிலைப் பள்ளி—1, துவக்கப்பள்ளிகள்—11, நர்சரி பள்ளி—10 ஆகியவை உள்ளன.

இவையன்றி எல்லா ஊராட்சிகளிலும் வானொலிப் பெட்டிகள் உள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாக, இன்று எல்லாக் கிராமங்களிலும் கிராமம் ஒன்றுக்கு ஒரு தொலைக்காட்சிப் பெட்டி வீதம் பத்துத் தொலைக் காட்சிப் பெட்டிகள் உள்ளன.

## தரமான பொருள் வழங்கிட....

ஏழை எளிய மக்களுக்குத் தரமான பொருள்களை வழங்கிடவும் இங்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. சோமங்கலம் கிராமத்தில் ' கூட்டுறவுச் சில்லறை விற்பனை நிலையம் ' ஒன்று அண்மையில் திறக்கப்பட்டுள்ளது. இந்த நிலையத்தில் தரமான உணவுப் பொருள்கள், எண்ணெய் வகைகள், சோப்புகள், மலிவு விலையில் துணிகள் முதலானவை கிடைக்கின்றன. அன்றாடம் நெடுந்தூரம் சென்று எண்ணெய் சோப்பு முதலானவை வாங்கி வந்த மக்களுக்கு இப்போது அருகாமையிலேயே அத்தனையும் கிடைக்க வழி ஏற்பட்டிருக்கிறது. இதே போன்ற அங்காடிகள் மற்ற கிராமங்களிலும் விரைவில் திறக்கப்படவிருக்கிறது.

## வங்கிகளின் பெரும் பங்கு

நம் நாட்டில் 70 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டுக் கிராமப் புறங்களில் வாழ்ந்து வருகிறார்கள். ' சுழன்றும் ஏர்ப்பின்னது உலகு, என்று வள்ளுவரால் சிறப்பித்துக் கூறப்படும் உழவுத் தொழிலைச் செய்கின்ற அந்த ஏழை எளிய மக்கள், உற்பத்தித் திறன் குறைந்த விவசாய முறைகளாலும், கால்நடைகளாலும் ஆண்டு ஒன்றிற்கு ஏறக்குறைய ரூ. 700 என்ற அளவிலேதான் வருமானம் பெற்று வருகிறார்கள்.

ஆகவே, குறைந்த வருமானமுள்ள இவர்களது வாழ்க்கை நிலை உயர்ந்திட—சமுதாயத்தின் அடித்தளத்திலிருக்கின்ற இவர்



## மகாத்மாவுக்கு தமிழ் கற்க ஆசை

சென்னையில் நடந்த பாரதிய சாகித்திய சம்மேளனத்துக்குக் காந்திஜி தலைமை வகித்தார். மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் தாம் வரவேற்புக் குழுத் தலைவர். ஐயரவர்கள், தமிழில் எழுதிய வரவேற்புரையை இந்தியில் மொழிபெயர்த்துக் காந்திஜியிடம் அளித்ததுடன் மகாநாட்டிலும் விநியோகித்தார்கள். மகாநாடு துவங்குவதற்கு முன்பு ஐயரவர்கள் காந்திஜியைச் சந்திக்கச் சென்றார். ராஜாஜி, அவர்களைப் பரஸ்பரம் அறிமுகம் செய்து வைத்தார். காந்திஜி புன்சிரிப்புடன், 'உட்காருங்கள் ஐயா' என்று அழுத்திக் கூறி வரவேற்றார். ஐயரவர்களுடைய அடக்கமும் பேச்சும் காந்திஜியைப் பெரும் வசீகரித்து விட்டன.

வரவேற்புரையில் ஐயரவர்கள், ''காந்திஜியின் சமகாலத்தவர்களாக வாழ்வது பாக்கியம் என்று கருதுகிறேன். அவருக்கு அடுத்தபடியாக இருந்து ஒரு விழாவை நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொள்வது மிகவும் பெரிய பாக்கியம் என்று மகிழ்ச்சியுறுகிறேன்'' என்று குறிப்பிட்டார்கள்.

காந்திஜியோ, ''அர்த்த புஷ்டியும் இலக்கியச் சுவையும் நிரம்பிய ஐயரவர்களின் வரவேற்புரை என்னைப் பெரிதும் வயப்படுத்திவிட்டது. தமிழர்களுடன் பல வருஷகாலம் நான் நெருங்கிப் பழகியிருக்கிறேன். இப்போது ஐயரவர்களுடன் அறிமுகம் ஏற்பட்ட பிறகு, அவருடைய அருகில் அமர்ந்து, அவரிடமே தமிழ்ப்பாடம் கற்கவேண்டும் என்ற ஆசை தோன்றுகிறது. இந்த ஆசைக்கு இடையூறாக வயதும், வேலையும் இல்லை ; ஆனால் எங்கள் இருவருக்குமே போதுமான அவகாசம் இல்லையே என்றுதான் வருந்துகிறேன்'' என்று தம்முடைய தலைமை உரையில் குறிப்பிட்டார்.

து வாழ்க்கைத்தரம் உயர்ந் இலாபகரமான துணைத் ாழில்கள் தேவைப்படு றன.

பால்பண்ணை, கோழிப்பண்ணை வத்து நடத்துதல், ஆடுகள் ர்த்தல், பன்றிகள் பரா ப்பு முதலான தொழில் ல் ஈடுபட அவர்களுக்கு ட்டுடைமையாக்கப்பட்ட வங் ள் தேவையான உதவிகள் ங்கிட முன் வந்துள்ளன.

**துக் கிராமங்கள் பெற்ற பெரும் பயன்**

சோமங்கலம் முதலான கிரா ங்களில் வங்கிகள் ஆற்றி ம் அரும் பணிகளை விளக் கிறார் திட்ட இணைப்பாளர் . என். தில்லைநாயகம் ர்கள் :

" சோமங்கலம் ஊரகச் சீர மைப்புத் திட்டத்தில் கீழ்க் ணும் ஐந்து வங்கிகள் பங்கு ாண்டு, விவசாயப் பெரு களுக்குத் தேவையான கட தவிகளை வழங்கி வருகின்றன. வை :—

1. ஸ்டேட் வங்கி
2. இந்தியன் வங்கி
3. இந்தியன் ஓவர்சீஸ் வங்கி.
4. யூனியன் வங்கி
5. யூகோ வங்கி

" இவை ஒவ்வொன்றும் 76-ஆம் ஆண்டு பிப்ரவரி 15- ம் நாளிலிருந்து இதுவரை ல்பண்ணை, கோழிப்பண்ணை, டுகள், கறவை மாடுகள், டைவண்டிகள் முதலான றுக்காகப் பெருமளவில் ன் உதவி அளித்துள்ளன.

" ஸ்டேட் வங்கி நான்கு ாமங்களை (1. சோமங்கலம், புதுச்சேரி, 3. நடு வீரப் டு, 4. வரதராஜபுரம்) ஏற் கொண்டு இதுவரை ரூ. 6,000 கொடுத்துள்ளது.

" இந்தியன் வங்கி இரண்டு ாமங்களை (1. அமரம்பேடு, சிறுகளத்தூர்) ஏற்றுக் ...இதுவரை ரூ.1,90,300



## கைராட்டை பிறந்த விதம்

காந்தியடிகள் சிறை வாசத்தின் போது நூல் களைப் படிப்பது வழக்கம். ஒரு முறை சிறையில் இருந்த போது கத்தேயின் ஃபாஸ்ட் என்னும் நூலை அவர் படிக்க நேர்ந்தது.

அந்நூலில் வரும் கதா நாயகி, கணவனை இழந்து சோகத்தின் உருவமாகக் காட்சி தருகிறாள். அவ ளது மனம் அமைதியை இழந்து விடுகிறது. ஏராள மான நூல்கள் அவளிடம் இருக்கின்றன ; அவற்றில் ஒன்றைக்கூட அவள் படிக்க விரும்பவில்லை. வாசிப்ப தற்கு அநேக இசைக் கருவிகள் தன்னிடமிருந்தும் இசைத் திறமை பெற்ற அவள், அவற்றை வாசித்து மன அமைதி பெற முயல வில்லை. ஆனால் சர்க்கா வில் நூற்பதன் மூலம் மன அமைதி பெறுகிறாள்- உளச் சாந்தி அடைகிறாள்.

அவள் பயன்படுத்திய ராட்டையை ஏழைகளின் வாழ்வு மேம்படுவதற்காகப் பயன்படுத்தினார் காந்திஜி.

" இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மூன்று கிராமங்களை (1. கல் லாடிப் பேட்டை, 2. நந்தம் பாக்கம். 3, பூந்தண்டலம்) ஏற்றுக்கொண்டு இதுவரை ரூ. 1,39,500 கொடுத்துள்ளது.

" யூனியன் வங்கி, நல்லூர் என்கிற ஒரு கிராமத்தை ஏற் றுக்கொண்டு இதுவரை ரூ. 60,500 வழங்கியுள்ளது.

" யூகோ வங்கி, எருமையூர் என்கிற ஒரு கிராமத்தை ஏற் றுக்கொண்டு இதுவரை ரூ

**நிம்மதி பிறந்தது**

ஸ்டேட் வங்கியின் சார்பில் கடன் உதவி பெற்றவர் திருமதி முனியம்மாள். இவர் மிகவும் வறுமை நிலையில் இருப் பவர். கணவனை இழந்தவர். அவர் கூறுகிறார் :

" எங்கள் குடும்பத்திலே நானும், என் தம்பியும் இருக் கிறோம். மிகவும் கஷ்ட ஜீவனம் தான். விவசாயக் கூலி வேலை செய்கிறோம். மாதத்திலே 10 அல்லது 15 நாள்தான் வேலை இருக்கும். இப்ப நம்ம பிரத மரோட இருபதம்சத் திட்டத் தாலே எனக்கு பாங்க் மூலமா கடன் உதவி கிடைத்திருக் கிறது. இனிமேல் கொஞ்சம் நிம்மதியாக வாழ்க்கையை நடத்துவோம்."

**வழிகாட்டுங்கள்**

ஒரு காலத்தில் இருளில் ஆழ்ந்திருந்த இந்தக் கிராமங் கள் இன்று மின் வசதி பெற்று ஒளிமயமாய்க் காட்சியளிக்கின் றன.

' பாரத சமுதாயம் வாழ்க வே " என்றார் அமரகவி பாரதியார். அந்த ஒரு வரியில் கிராமங்களின் நல்வாழ்வும் அல் லவா அடங்கியிருக்கிறது ? எனவே, கிராம வளர்ச்சியில், அதன் நல்வாழ்வில் நம் எல் லார்க்கும் பங்குண்டு என்பதை எடுத்துக்காட்டும் வகையில் கல்லூரி மாணவ, மாணவியர், பொதுநலத் தொண்டர்கள் முதலானோர் இங்கே சமூகத் தொண்டில் ஈடுபடுவதை நாம் பெருமையோடு குறிப்பிட வேண் டும்.

" நாட்டு விடுதலைக்கான தியாகத்திலும், அண்மைக்காலத் தில் குடும்ப நலத் திட்டம் போன்ற துறைகளிலும் தனிச் சிறப்பும் முன்னேற்றமும் பெற் றுள்ள தமிழ்நாட்டு மக்கள், இப்புதிய கிராம நலத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிப் பயன் கண்டு பாரத நாட்டின் மற்ற மா நிலங்களுக்கும் வழிகாட்டுவார் கள் " என்று பிரதமர் இந்திரா காந்தி அவர்களின் நல் வாழ்த்துக்களோடு தொடங்கப் பெற்ற இந்த ஊரகச் சீர மைப்புத் திட்டம், ஊருக் கெல்லாம் இணையிலா இருப் பதின் பெருமையை உணர்த்து கின்ற ஓர் உன்னதமான திட்டம் என்றால் அது உண்மை வெறும் புகழ்ச்சியில்லை !



# கிராம சேவகர்களுக்கு மகாத்மா கூறிய அறிவுரை

சம்பூர்ண கிராம சேவ கருக்கு கிராமத்திலுள்ள ஒவ் வொருவரையும் தெரிந்திருக்க வேண்டும்; அவர்களுக்கு அவர் தம்மாலான உதவி செய்துவர வேண்டும். இதற்கு அவர் ஒரு வரை தனித்து எல்லாவற்றை யும் செய்துவிட முடியும் என்று அர்த்தமல்ல. அவர், கிராமத் தினர்களுக்கு மேம்பாட்டிற்கான வழியைக் காட்டுவார். தேவை யான பொருள்களைத் தருவித்துத் தந்து, அவர்கள் கோரும் உத வியை அளிப்பார். இதோடு தமக்கு உதவுவதற்கு கிராமத்தி லிருந்தே ஆட்களைத் தேர்ந்து பயிற்றித் தயாரித்துக் கொள் வார். கிராமத்தார் அவர் உதவியை நாடி அவர் யோசனைப் படி நடந்து கொள்ளும் வகை யில் அவர்கள் உள்ளத்தைக் கவர்ந்து விடுவார்.

நான் நாட்டுச் செக்கு ஒன்று டன் ஒரு கிராமத்தில் போய் இருப்பதாய் வைத்துக் கொள் ளுங்கள். அங்கே நான் மாதத் திற்கு பதினைந்து, இருபது ரூபாய் சம்பாதித்து என் பாட்டைப் பார்த்துக் கொள்ளும் வெறும் வாணியனாக அல்ல, வாணிய மகாத்மாவாக இருப்பேன் ; நான் ' மகாத்மா ' வென்ற அடைமொழியைச் சேர்த்தது வேடிக்கையாக ; என் கருத்து நான் வாணியத் தொழிலை கிராம மக்கள் பின்பற்றுமாறு முன் மாதிரியான முறையில் செய்து வருவேன் என்பது.

எண்ணெய் ஆட்டும் தொழில் நடத்தும் எனக்கு கீதையும், குர்ஆனும் தெரிந்திருக்கும். என் னால் அவர்கள் குழந்தைகளுக்குக் கல்வியளிக்கவும் இயலும்; நான் கல்வியளியாமைக்கு நேர மின்மையேயன்றி வேறு காரண மிராது. அப்போது கிராமத் தார் என்னை அணுகி, 'எங்கள் குழந்தைகளின் கல்விக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமே' என்றால், 'ஓர் ஆசிரியரை அமர்த்தித் தரு கிறேன் ; ஆனால் அவருக்காகும் செலவை நீங்கள் ஏற்க வேண்டு டுமே' என்பேன். அவர்கள் மகிழ்ச்சியுடன் இதற்குச் சம்மதிப் பார்கள்.

நான் அவர்களுக்கு நூல் நூற்கக் கற்றுக் கொடுப்பேன். அவர்கள், 'நாங்கள் நூற்றுள்ள நூலை நெய்து தர நெசவாளர் வேண்டுமே' என்னும்பொழுது ஆசிரியருக்கு ஏற்பாடு செய்து தந்ததைப் போலவே, ஒரு நெசவாளருக்கும் ஏற்பாடு செய்து தருவேன், அந்த நெச வாளர் அவர்களுக்கு தம் துணி களை நெய்து கொள்ளக் கற்றுக் கொடுத்து வருவார்.

நான் அவர்களுக்கு ஆரோக்கிய விதிகளையும் சுகாதாரத்தின் அவ சியத்தையும் உயர்த்துவேன். அவர்கள், 'கிராமத்திற்கு தோட்டி வேண்டுமே' யென்று சொன்னால் நான், 'நானே உங்கள் தோட்டி ; உங்களையும் இத் தொழிலில் பயிற்றுகிறேன்' என்று சொல்வேன். 'சம்பூர்ண கிராம சேவை' யென்று நான் எண்ணிக் கொண்டிருப்பது இதுவே.

(ஹரிஜன், 17—3—1946
தேதிய இதழிலிருந்து.)

## கலவை உரத்தின் பயன்

ஆடுமாடுகளின் சாணமும் மனிதரின் மலஜலமும் குப்பை கூளம் முதலிய கழிவுகளுடன் கலந்து பக்குவப்படுத்தப்பட்டால் அவை மிகவும் உயர்ந்த உரமாக மாறும்; இதற்கு மதிப்பு அதிகம். இவ்வுரம் இடப்பட்ட நிலம் நன்கு விளையும். இந்த உரம் தயாரித்தலே ஒரு காலத்தில் கிராமங்களில் ஒரு தொழிலாக இருந்திருக்கிறது. ஆனால் பிற கிராமக் கைத்தொழில்களைப் போலவே இதிலும் இந்தியாவின் கோடானுகோடி மக்கள் ஏகோபித்துழைத்துப் பாடு பட்டாலல்லது உருவான பயன் விளைதலோ, இந்தியாவின் மேம்பாடோ சாத்தியமல்ல!

[ஆதாரம் : 'தில்லி டயரி' (ஆங்கிலம்), பக்கம் 270–271.]

இந்தியப் பொதுமக்கள் மட்டும் ஒத்துழைத்தால் இதனால் நாட்டின் உணவுப் பற்றுக்குறையைத் தீர்க்க முடிவதோடு, உபரியாக உணவு தானியங்கள் உற்பத்தி செய்து கொள்ளவும் முடியும். இந்த இயற்கை உரத்தினால் நிலம் மேன்மேலும் வளமுறு மேயன்றி, அதன் செழிப்பு ஒருநாளும் குன்றாது. நாள்தோறும் பாழாகும் மலஜலமும், கால்நடைச் சாணமும், சிறுநீரும் அவ்வப்போது கவனித்து உரமாக்கப்பட்டு நிலத்தில் சேர்க்கப்படுவதால் கோடிக் கணக்கான ரூபாய் மிச்சமாவதோடு நாட்டின் உணவு தானியங்கள், பருப்பு வகைகள் ஆகியவற்றின் விளைவும் பல மடங்கு பெருகும். மேலும், கழிவுகளை இவ்வாறு திறமையாகப் பயன்படுத்துவதனால் நம் வீடுகளின் சுற்றுப்புறங்கள் துப்புரவாயிருக்கும். துப்புரவும் தூய்மையும் தெய்வ பக்திக்கு உதவுவது நிற்க, நம் ஆரோக்கியமும் அதனால் பாதுகாக்கப் பெறும்.

—மகாத்மா காந்தி

(ஆதாரம் : ஹரிஜன், 28–12–1947 தேதிய இதழ்)

## TNPSC Advt. No 31

(குரூப—1 பணிகள், 1976 தேர்வு—
முதுநிலைப்பட்ட தரம்).

குரூப் 1 பணிகள் தொகுதியில் அடங்கிய பின்கண்ட பதவிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

(1) டிப்டி கலெக்டர்கள்—6 (ஷெ.வ. மற்றும் ஷெ.ப.—1 பி.வ.—2 மற்றும் ப.போ.—3).

சம்பளம் : மாதத்திற்கு ரூபாய் 575 5—600—40—1,000.

வயது : ஷெட்யூல்டு வகுப்பு, ஷெட்யூல்டு பழங்குடி மற்றும் பிற்பட்ட வகுப்பினருக்கு—31 ஆண்டிற்குக் கீழ்.

மற்றவர்களுக்கு—26 ஆண்டிற்குக் கீழ்.

கல்வித் தகுதி : பி.ஏ., அல்லது பி.எஸ்.சி., அல்லது பி.காம்., அல்லது பி.ஓ.எல் அல்லது பி.பி.ஏ. பட்டம்.

(2) ஜாயிண்ட் கமர்சியல் டாக்ஸ் அலுவலர்கள்—5(ஷெ.வ. மற்றும் ஷெ.ப.—1, பி.வ.—1 மற்றும் ப.போ.—3).

சம்பளம் : மாதத்திற்கு ரூபாய் 550—5—600—35—950.

வயது : ஷெட்யூல்டு வகுப்பினர், ஷெட்யூல்டு பழங்குடி மற்றும் பிற்பட்ட வகுப்பினர்களுக்கு—31 ஆண்டிற்குக் கீழ்.

மற்றவர்களுக்கு—26 ஆண்டிற்குக் கீழ்.

சட்ட பட்டதாரிகளுக்கு—27 ஆண்டிற்குக் கீழ்.

கல்வித் தகுதி : பி.ஏ., அல்லது பி.எஸ்.சி., அல்லது பி.காம்., அல்லது பி.ஓ.எல். அல்லது பி.பி.ஏ.

(3) கூட்டுறவுச் சங்க துணைப்பதிவாளர்கள்—3 (ஷெ.வ. மற்றும் ஷெ.ப—1, பி.வ.—1 மற்றும் ப.போ.—1).

சம்பளம் : மாதத்திற்கு ரூபாய் 550—5—600—35—950.

வயது—

(1) விண்ணப்பதாரர்களுக்கான தகவலில் குறிக்கப்பட்டுள்ள கூட்டுறவு நிறுவனங்களில் மேலாளர், செயலாளர், அல்லது நிர்வாக அலுவலர் பதவியில் உள்ளவர்களுக்கு—28 ஆண்டிற்குக் கீழ்.

(2) மற்றவர்களுக்கு—26 ஆண்டிற்குக் கீழ்.

(3) ஷெட்யூல்டு வகுப்பு, ஷெட்யூல்டு பழங்குடி மற்றும் பிற்பட்ட வகுப்பினர்களுக்கு வயது வரம்பு கிடையாது.

(4) டிப்டி சூப்பிரின்டென்டெண்ட் ஆப் பாலீஸ் (வகுப்பு 1)—3 (பி.வ.1, மற்றும் ப.போ.—2).

சம்பளம் : மாதத்திற்கு ரூபாய் 575—5—600—40—1,000.

வயது :—

(1) ஷெட்யூல்டு வகுப்பு, ஷெட்யூல்டு பழங்குடி மற்றும் பிற்பட்ட வகுப்பினர்களுக்கு—21 ஆண்டிற்கு மேல் 31 ஆண்டிற்குக் கீழ்.

(2) மற்றவர்களுக்கு—21 ஆண்டிற்கு மேல் 26 ஆண்டிற்குக் கீழ்.

கல்வித் தகுதி : பி.ஏ., அல்லது பி.எஸ்.சி., அல்லது பி.காம்., அல்லது பி.ஓ.எல்., அல்லது பி.பி.ஏ. பட்டம்.

உடல் தகுதி : உயரம்—165 சென்டி மீட்டர், விரிந்த நிலையில் மார்பளவு—86 சென்டி மீட்டர், விரிவு—5 சென்டி மீட்டர்.

<u>முடிவு தேதி—26—10—1976.</u>

விவரங்கள் மற்றும் விண்ணப்பப் படிவங்கள் பெற சுய விலாசமிட்ட, 70 காசுகள் அஞ்சல் தலை ஒட்டிய, 23 சென்டி மீட்டர் நீளமுள்ள, உறை ஒன்றை இணைத்து, பதவியின் பெயரைக் குறித்து, செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழு, அரசினர் தோட்டம், சென்னை-600002 அவர்களுக்கு எழுதிக் கேட்கவும். எல்லாப் பதவிகளுக்கும் ஒரே ஒரு விண்ணப்பத்தையே பயன்படுத்த வேண்டும்.

<u>வயது வரம்பு—1—7—1976-ல் உள்ள படி.</u>

சுருக்கம் : ஷெ.வ.—ஷெட்யூல்டு வகுப்பு.
ஷெ.ப.—ஷெட்யூல்டு பழங்குடி.
பி.வ.—பிற்பட்ட வகுப்பு.
ப.போ.—பகிரங்க போட்டி.

குறிப்பு.—(1) ஷெட்யூல்டு வகுப்பு, ஷெட்யூல்டு பழங்குடி மற்றும் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள், பகிரங்கப் போட்டியின் கீழ் உள்ள காலி இடங்களிலும் தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவதற்கேற்ற தகுதியுடையவர்களாவர்.

(2) வேளாண்மை போன்ற தொழிற் பாடங்களில் பட்டம் பெற்றுள்ளவர்கள் இந் நேரடித் தேர்வில் கலந்து கொள்வதற்குத் தகுதியற்றவர்களாகும்.

குடி பெயர்ந்தவர்கள் போன்றவர்களுக்கு வயது அல்லது கல்வித் தகுதியைப் பொறுத்த வரையில் அளிக்கப்பட்டுள்ள சலுகைகள் பற்றிய விவரங்கள், விண்ணப்பதாரர்களுக்கான தகவல்கள் மற்றும் விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரை ஆகியவற்றில் கொடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பு : குரூப் 1 பணிகளுக்கான எழுத்துத் தேர்வு 1976, டிசம்பர் மாதம் கடைசி வாரத்தில் துவங்கும்.

செயலாளர்,
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு
ஆணைக் குழு.

டி.ஐ.பி.ஆர். 44685

# தலை சிறந்த கிராமம்!



தலை சிறந்த இந்தியக் கிராமம் எதுவும் சிறந்த சுகாதார வசதிகள் செய்து கொள்ளக்கூடிய முறையில் அமைக்கப் பெற்றிருக்கும். அதன் வீடுகளெல்லாம் ஐந்து மைல் சுற்றிறுவட்டாரத்திற்குள் கிடைக்கக்கூடிய கட்டுமான சாமான்களைக் கொண்டு போதிய வெளிச்சமும், நல்ல காற்றோட்டமும் இருக்குமாறு கட்டப்பட்டிருக்கும். ஒவ்வொரு வீட்டிற்கும் புழைக்கடையிலோ முன் வாயிலிலோ காய்கறி பயிர் செய்து கொள்வதற்கும், ஆடு மாடுகள் கட்டுவதற்கும் தேவையான இடம் இருக்கும். கிராமத் தெருக்களும், சந்துகளும், கூடிய வரை புழுதி இல்லாதிருக்கும். கிராமத்தில் எல்லாரும் பயன்படுத்தக்கூடியவையாய் போதிய அளவு கிணறுகள் இருக்கும். கிராம மக்களின் வழிபாட்டிற்குக் கோயில்களும், பொதுக் கூட்டங்களுக்கு பொது மைதானமும், கால்நடைகள் மேய்வதற்கு மேய்ச்சல் நிலமும், ஒரு கூட்டுறவுப் பால் பண்ணையும், முக்கியமாய்க் கைத்தொழில் பயிற்சி அளிக்கும் ஆரம்ப மத்தியதரப் பள்ளிகளும், வழக்குகளைத் தீர்ப்பதற்கு பஞ்சாயத்தும் இருக்கும். அது தன் தேவைக்கான உணவு தானியங்களும், காய்கறி பழங்களும், கதரும் தானே உற்பத்தி செய்து கொள்ளும்.

முன் மாதிரியானதென்று நான் கருதும் கிராமத்தின் உத்தேச விவரம் இது. இப்பொழுதைக்கு அதிலுள்ள வீடுகளெல்லாம் சிறு சீர்திருத்தங்கள்—மாற்றங்களுடன் இப்பொழுதுள்ளபடியே தானிருந்து வரும்.

ஆனால் நான் இப்பொழுது காண விரும்பியது கிராமத்தாரிடையே ஒற்றுமையும் ஒத்துழைப்புமிருந்து, அவர்கள் கிராம நலனுக்காக முன்வந்து உழைத்தால் என்னென்ன செய்து கொள்ளலாமென்பதையே. திறமையுள்ள தலைமை அல்லது வழிகாட்டுவோர் இருந்தால், ஒவ்வொருவருக்கும் கிடைக்கக்கூடிய வருமானமிருக்கட்டும், கிராமத்தின் பொது வருமானத்தை இரு மடங்காக்கிவிடலாம் என்பதில் எனக்குச் சந்தேகமே இல்லை. வியாபாரம் செய்து இலாபம் சம்பாதிப்பதற்கு இல்லாவிட்டாலும், கிராமத்தின் நன்மைக்கு உதவக்கூடியவையாக அங்கே வற்றாத வசதிகள் உள்ளன. இவ்வாறிருந்தும் கிராம மக்களுக்கு தம் நிலையை உயர்த்திக் கொள்வதில் சிறிதும் ஆசையில்லாதிருப்பது தான் மிகவும் விசனிக்கத் தக்கதாயிருக்கிறது.

கிராம ஊழியர்கள் முதலில் கவனித்துச் செய்ய வேண்டியது கிராமச் சுகாதார ஏற்பாடே. கிராமத்தின் பிரச்சினைகளுள் இதைப்போல் அசட்டை செய்யப்பட்டதும், ஊழியர்களைத் திணற வைப்பதும் வேறில்லை. இதனால் மக்களின் உடல் நலம் கெடுகிறது, நோய்கள் தோன்றுகின்றன. எடுத்த எடுப்பிலேயே ஊழியர் தாமே தோட்டியாகி, கிராமத்தார் கண்ட இடங்களில் கழிக்கும் மல ஜலத்தைக் கூட்டிச் சேர்த்து முறைப்படி உரமாக்கவும், கிராமத் தெருக்கள், சந்துகள்-சாலைகளைக் கூட்டித் துப்புரவாக்கவும் வேண்டும்; ஒவ்வொரு நாளும் எங்கே, எப்படி மலஜலம் கழிக்க வேண்டுமென்று அறிவிப்பதோடு, சுகாதாரத்தினால் விளையும் நன்மைகளையும் அதைக் கவனியாமையால் வரும் கேடுகளையும் எடுத்துச் சொல்ல வேண்டும். தாம் சொல்லுவதை மக்கள் கேட்டாலும் சரி, கேளாவிட்டாலும் சரி, அவர் தம் வேலைகளை விடாது செய்து கொண்டு போக வேண்டியதே.

—மகாத்மா காந்தி

(ஹரிஜன், 9—1—1937 தேதிய இதழிலிருந்து)

## டாக்டரிடமே பீஸ் வாங்கியவர்!

1933-ஆம் ஆண்டு.

காந்திஜி, சுற்றுப்பயணத்தின் போது மிகவும் களைப்பாகக் காணப்பட்டார். அப்போது அவர் லாகூரில் தங்கியிருந்தார். காந்திஜியின் உடல் நிலையை உணர்ந்து கொண்ட ஒரு புகழ் பெற்ற டாக்டர், காந்திஜியிடம் வந்து, 'மகாத்மாஜி! நான் உங்களை வைத்தியப் பரிசோதனை செய்து பார்க்க விரும்புகிறேன்!' என்றார்.

"சரி; செய்யுங்கள்; எனக்கு உடம்பு அப்படியொன்றும் மோசமாக இல்லை"—காந்திஜி பதில் கூறினார்.

"பரிசோதித்துப் பார்க்காத வரையிலும் எங்களுக்குச் சமாதானமாயிராது"— டாக்டர் சொன்னார்.

"சமாதானத்திற்கென்றால் சரி; ஆனால் எனக்கு பீஸ் கொடுக்காமல் யாரையும் நான் பரிசோதிக்க விடுவதில்லை. என்னைப் பார்க்க வந்தவர்கள் எத்தனையோ பேர் காத்துக்கொண்டிருக்கும்போது உங்களுக்காக எதற்காக நேரத்தை வீணகச் செலவிடுவது?"— காந்திஜி கேட்டார்.

டாக்டர் அசந்து போய் விட்டார். 'நோயாளி, டாக்டருக்கு பீஸ் கொடுப்பது போக, மகாத்மா என்னும் நோயாளி, டாக்டரிடமே பீஸ் கேட்கிறாரே' என்று வியந்த டாக்டர், காந்திஜியின் விருப்பத்திற்குச் சம்மதம் தெரிவித்து, தன் பையில் அப்போதிருந்த 16 ரூபாயை எடுத்து காந்திஜியின் முன்னே வைத்து,

"ஒரு நோயாளியைப் பார்க்கப் போயிருந்தேன்; அவர் எனக்கு கொடுத்த பீஸை உங்கள் முன் வைத்து விட்டேன்" என்றார்.

காந்திஜி அந்தப் பணத்தை மிகுந்த திருப்தியுடன் எடுத்துக் கொண்டார். அரிஜன நிதியில் சேர்த்துவிட்டார்.

## அறிவிப்பு

### அனைத்திந்தியப் பணியாளர் தொகுதிக்கான முன்தேர்வுப் பயிற்சி நிலையம், சென்னை-35.

அரிசன, ஆதிவாசி, விமுக்த பரம்பரை, நாடோடி, பாதியளவுக்கு நாடோடி ஆகிய இனங்களைச் சேர்ந்தவர்களிடமிருந்தும், மற்றும் அரிசன, ஆதிவாசி இனத்தைச் சேராத ஆனால் தங்களுடைய பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் கூட்டுபவர்களாகவோ, துப்புரவுப் பணியாற்று கிறவர்களாகவோ உள்ள அங்கத்தினர்களிடமிருந்தும், ஐ.ஏ. எஸ்., ஐ.பி.எஸ்.' முதலிய தேர்வு களுக்குப் பயிற்சியளிக்கும் மேற்கூறிய நிலையத்தில் சேருவதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படு கின்றன. உணவு, உறைவிடம், கற்பித்தல் ஆகியவற்றிற்கான செலவு அரசினரால் ஏற்றுக்கொள்ளப் படும். பெண்களுக்குரிய விடுதி வசதி சேப்பாக்கம், சென்னை-5ல் உள்ள மாநிலக்கல்லூரி மகளிர் விடுதியில் கிடைக்கும். விண்ணப்பங்கள் பெறுவதற்கான கடைசி நாள் 25—10—1976.

2. இப் பயிற்சி பெறுவதற்கு (1) பட்டப் படிப்பில் இரண்டாம் வகுப்பு அல்லது கலை, அறிவியலில் பட்ட மேற்படிப்புப் பட்டம் பெற்றுள்ளவர்களும், பி.எல். பட்டம் பெற்றுள்ளவர்களும்,

(2) 1977-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 1-ஆம் நாளில் 21 வயது நிரம்பியவர்களும் அதே நாளில் 31 வயது நிரம்பாதவர்களும்,

(3) அரிசன, ஆதிவாசி, விமுக்த பரம்பரை நாடோடி, பாதியளவுக்கு நாடோடி ஆகிய இனத்தைச் சார்ந்தவர்களும் சேரலாம்.

3. (அ) விமுக்த பரம்பரை, நாடோடி, பாதியளவு நாடோடி ஆகியவற்றைச் சேர்ந்த மனுதார ரிலிருந்து, இருவரே இப் பயிற்சிக் காலத்திற்குச் சேர்த்துக்கொள்ளப்படுவர்· அவர்களுக்கு உச்சவரம்பு வயது 26 ஆகும்.

(ஆ) அரிசன, ஆதிவாசி இனத்தைச் சாராத ஆனால் தங்களுடைய பெற்றோர் மற்றும் பாது காவலர் கூட்டுபவராகவோ, துப்புரவுப் பணியாளராகவோ உள்ள மனுதாரரிலிருந்து ஒரே ஒருவரே இப் பயிற்சிக் காலத்திற்குச் சேர்த்துக்கொள்ளப்படுவார். அவர்களுக்கு உச்சவரம்பு வயது 26 ஆகும்.

4. இப் பயிற்சியில் சேருவதற்கு இதற்கென உள்ள குறிப்பிட்ட படிவத்தில் மனுச்செய்ய வேண்டும். மனு படிவங்களைப் பெற சுய விலாசமிட்ட, 35 காசு அஞ்சல் தலை ஒட்டிய உறை ஒன்றை இணைத்து, ''முதல்வர் முன்தேர்வுப் பயிற்சி நிலையம், 22, மவுண்ட் ரோடு, மேற்கு சி.ஐ.டி. நகர், சென்னை-600035'' அவர்களுக்கு எழுதிக் கேட்கவும். விண்ணப்பப் படிவம் மற்றும் விவரங் களைக்கேட்டு எழுதும்போது,

(1) அரிசன, ஆதிவாசி இனத்தைச் சேர்ந்தவரா அல்லது விமுக்த பரம்பரையைச் சேர்ந்தவரா அல்லது நாடோடி வகுப்பைச் சார்ந்தவரா அல்லது பாதியளவு நாடோடி வகுப்பைச் சார்ந்தவரா என்பதையும்,

(2) தேர்ச்சி பெற்றுள்ள பட்டமும், தேர்வில் பெற்றுள்ள வகுப்பு என்ன என்பதையும்.

(3) பிறந்த தேதியையும், 1—8—1977-ல் வயது என்ன என்பதையும் குறிப்பிட்டு எழுதவேண்டும்,

முதல்வர்,
முன்தேர்வுப் பயிற்சி நிலையம், சென்னை-35.

டி.ஐ.பி.ஆர்/42583/7·6-1-

---

ESTD: 21-3-52. தபால்மூலம் GOVT REGD: 3072.

## இலவசக்கல்விபோதனை

' F குரூப்' வகுப்புகள் ஆரம்பம் :: நாள்: 13-10-1976

உத்திரவாதத்துடன் 1976—77ம்வருட கீழ்க்கண்ட தேர்வுகளுக்கு மாதம் இருமுறை தபால் மூலம் பாடங்கள் அனுப்பி பயிற்சி அளிக்கப்படும்.

1. S.V.&Agra.,B.A.,B.Com., (P.U.C.,இண்டர் தேறியவர்கள் தகுதியுடையவர்கள்). 2. M.A.,M.Com., A.M.I.B.M.,M,B.A., (பட்டதாரிகள் அருகதையுடையவர்கள்). 3, M.I.B.M.,D.I.B.M.,D.I.B.A.,G.C.A.,போபால் I.A.,&I.Com.,(S.S.L.C.,S.S.C..மெட்ரிக், H.S.A., தேறியவர்களும், P.U.C.,தவறியவர்களும் தகுதியுடையவர்கள்), 4. சென்னை-மதுரை: மெட்ரிகுலேஷன் & P.U.C., 5. தமிழ் வித்துவான்—புலவர் தேர்வுகள். 6. தமிழ் B.Litt., (ஆசிரியர்கள் தகுதியுடையவர்கள்) 7. விவசாயம். 8. போஸ்ட்மேன்—போஸ்டல் கிளார்க். 9. கைத்தறி நெசவு. 10. Accountancy. 11. கிராம மணியம்—கர்ணம். 12. சர்வீஸ் கமிஷன் (76 அக்டோபர்) தமிழ் & ஆங்கிலம் 13. S.S.L.C., (8-ம் வகுப்பு படித்தவர்கள் தகுதியுடையவர்கள்). 14. ஹோமியோபதி (தமிழ்-ஆங்கிலம்) 15. பேசிக் ஆங்கிலம். 16. பிரிமெட்ரிக். 17. Com.,இண்டர்D.Com., B.Com.,B.Com.(Hons),M.Com., (S.S.L.C. P.U.C. தேறியவர்களும், தவறியவர்களும் தகுதியுடையவர்கள்)

**முழு விவரங்களுக்கு 25 பைசா தபால் தலையுடன் விண்ணப்பிக்கவும்.**

'தமிழகத்தின் தனிப்பெரும் தபால் கல்வி ஸ்தாபனம்.'

Afflliated by I.A, Eductions and Com. University—New Delhi.

### ஸ்ரீ முருகன் டுடோரியல் இன்ஸ்டிட்டியூட்

ரிஷிவந்தியம், Pin 606205 தென்னார்க்காடு மாவட்டம், தமிழ்நாடு.

Dr. R. P. Kandasamy, H.P., B.Com., (Hons), Principal. : Dr. K. Jayakumar, M.A., Gl. Manager.


# தமிழ்நாட்டில் கதர் கிராமத்தொழில் வளர்ச்சி


**A. K. வெங்கட சுப்பிரமணியன் ஐ.ஏ.எஸ்.,**

தலைமை நிருவாக அதிகாரி, தமிழ்நாடு கதர் கிராமக் கைத்தொழில் வாரியம்.


மகாத்மா காந்தியடிகள் தேசிய நிர்மாணத் திட்டத்தில் கதர், கிராமக் கைத்தொழில் களுக்கு மிக முக்கியத்துவம் கொடுத்திருந் தார். இத் தொழில்கள் செம்மையாகச் செயல்பட்டு கிராம மக்களுக்கு உதவி புரி வதற்காக 1956-ம் ஆண்டில் கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு ஏற்படுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து ஒவ்வொரு மாநிலத்தி லும் கதர் கிராமக் கைத்தொழில் வாரியங்கள் உருவாயின.

அகில இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான், முதன் முதலாக 1946-ம் ஆண்டில் கதர்த் திட்டம் அரசாங்க சார்பில் மேற் கொள்ளப் பட்டது. காந்தியடிகள் இந்த முயற்சியை வெகுவாகப் பாராட்டினார். துவக்க காலத்தில் சுமார் 1,800 நூற்பாளர் களையும் 500 நெசவாளர்களையும் கொண்டு தான் இத் திட்டம் செயல் பட ஆரம்பித்தது. 1960-ம் ஆண்டில் ஒரு தனியான சட்டம் இயற்றப்பட்டுத் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தொடங்கப் பெற்றது.

வேளாண்மைக்குத் துணையாகப் பல கிராமத் தொழில்களை மேற்கொள்வது, பரம்பரைத் தொழில்களை ஊக்குவித்து கிராமக் கைவினைஞர்களை உற்சாகப்படுத் துவது, கழிவுப் பொருட்களிலிருந்து பல வகைப்பயனுள்ளபொருட்களை உருவாக்குவது, குறைந்த முதலீடுகளில் நிறைந்த வருவாய் ஈட்டுமாறு அதிகம் பேருக்கு வேலை வாய்ப்பு நல்குவது ஆகியவைகளே இவ்வாரியத்தின் அடிப்படைக் கொள்கைகளாகும்.

தமிழ்நாட்டில் மட்டும் கதர் கிராமக் தொழில்கள் சுமார் மூன்று இலட்சம் பேர் களுக்கு வேலை வாய்ப்புத் தருகிறது. இவர்கள் பெறும் ஊதியம் ஆண்டுக்குச் சுமார் ஏழு கோடி ரூபாய்களாகும். கதர் மட்டும் சுமார் ரூபாய் 6 கோடியும், கிராமத் தொழில்கள் மூலம் சுமார் ரூபாய் 15 கோடி மதிப்புள்ள பொருள்களும் தமிழ்நாட் டில் சென்ற ஆண்டு உற்பத்தி செய்யப் பட்டது.

கதர் வாரியம் மட்டும் கதர் உற்பத்தியைச் சென்ற ஆண்டினைவிட இந்த ஆண்டில் 50 சதவிகிதம் அதிகம் செய்து உள்ளது. கடந்த 1974-75-ம் ஆண்டில் ரூபாய் 156. இலட்சம் மதிப்புள்ள நூலும், ரூ. 187. இலட்சம்மதிப்புள்ள கதர்த்துணியும் உற்பத் செய்துள்ளது. 1975-76-ம் ஆண் முறையே ரூ. 207.68 இலட்சம் வீதம் நூலு ரூ. 306.37 இலட்சம் கதரும் உற்ப செய்யப்பட்டன. கதர் விற்பனையும் 197 75-ம் ஆண்டு 355.04 இலட்சம் ரூபாயா பெருகியுள்ளது.

கதர்த் துணியின் உற்பத்தியையும், விற்ப னையும் பெருக்க வாரியம் பல முயற்சிக மேற்கொண்டுள்ளது. குறைந்தபட்ச ப விசையின் மூலம் பஞ்சை நன்றாகச் சுத் படுத்தி, நூலை ஒரே சீராகவும் பலமுள்ளத வும் செய்ய முயற்சி செய்யப்படுகிறது. அ மாதிரி ''நேபாலி'' நெசவுக் கருவிகள மூலம் துணி உற்பத்தித் திறனைப் பெரு வும் முயற்சி செய்யப்பட்டுள்ளது. வண் வண்ணத் துணிகளை அச்சடித்துக் கதர்த் து பார்வைக்குக் கவர்ச்சிகரமாக ஆக் படுகிறது.

## கிராமத் தொழில்கள்

கிராமத் தொழில்களும் கணிசமா அளவு ஊக்குவிக்கப் பட்டுள்ளன. 19 76-ம் ஆண்டில் தொழில் வாரியாக பட்ட கிராமக் கைவினைஞர்களின் எ ணிக்கை, அவர்கள் பெற்ற ஊதி பின்வருமாறு :—

| | ஈடுபட்டோர் எண்ணிக்கை. | ஊதிய (இலட்ச ரூபாய் |
|---|---|---|
| 1. பனை ஓலை தும்பு, வெல்லம் ஆகிய பனைத் தொழில்களில். | 2.15 (இலட்சம் பேர்), | 500 |
| 2. எண்ணெய் பிண்ணாக்கு. | 598 | |
| 3. உண்ணு எண் ணெய், சோப்பு. | 244 | |

| | | |
|---|---|---|
| வெல்லம் பழுப்புச் சர்க்கரை, | 406 | 1.45 |
| . தேன், தேனீ வளர்ப்பு (சுய சம்பாத்தியம். | 32,383 | 78.03 |
| . தச்சு, கொல் லுத் தொழில். | 644 | 5.37 |
| . கைக்குத்தல் அரிசி. | 757 | .3.05 |
| '. மட்பாண்டம், செங்கல். | 3,861 | 17.37 |
| தோல் தொழில். | 458 | 4.03 |
| கைக்காகிதம். | 296 | 1.96 |
| நார்த்தொழில். | 262 | 0.19 |
| தீப்பெட்டி | 703 | 1.10 |
| பழப்பக்குவம் செய்தல். | 50 | 0.04 |
| . சுண்ணும்புத் தொழில். | 80 | 0.29 |
| . பிரம்பு, மூங் கில் தொழில். | 211 | 1.27 |

மொத்தமாக 1975-76-ல் 2,55,953 ராமக் கைவினைஞர்களுக்கு 554·56 இலட்ச பாய் ஊதியமாகத் தரப்பட்டுள்ளது. வர்களால் உற்பத்தி செய்யப்பட்ட பாருட்கள் 10,518·45 இலட்சம் ரூபாய் றுமானம் ஆகும். 1974-75-ம் ஆண்டில் தொழில் வாய்ப்புப் பெற்ற கைவினைஞர் களின் எண்ணிக்கை 2,20,313 பேர் ஆகும். வர்கள் பெற்ற ஊதியம் 409·05 இலட்சம் பாய். இவர்களால் வருவாய் 1,135·25 லட்சம் ரூபாய். மேற்கண்ட புள்ளி விவரத் திருந்து இத்தொழில் பெருமளவில் பர்ந்துள்ளதைக் காணலாம்.

இவற்றைத் தவிர, கதர் கிராமத் தொழில் வாரியத்தின் சார்பாக, பல்வேறு ிய திட்டங்களும் அமல் செய்யப்பட்டு ருகின்றன.

(i) ஐந்து லட்சம் வேலை வாய்ப்புத் திட் த்தின்படி (Half a million Job Programme) 15 ண்ணெய் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் மைக்கப் பெற்றுள்ளன.

(ii) வேலை ஊக்குவிக்கும் திட்டம் லும் இத்திட்டத்தின் பிரகாரம், தொழில் றையில் பின் தங்கிய மாவட்டங்களில் சு நிதி உதவியுடன், தேசிய மயமாக்கப் ட்ட வங்கிகளின் மூலமாகக் கடன் ஏற் டு செய்து 72 கிராமீய நூற்பு நிலை யகள், 200 மின் விசைச் செக்குகள், பனந் தும்பு அலகுகள் நிறுவப்பட்டு 3,100 ர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க வழிவகுக்கப்பட்டுள்ளது.

(iii) உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் 500 பேருக்குக் கதர் கிராமத் தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

(iv) கைம்பெண்டிர் மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் 500 விதவையர்களுக்கு நூற்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

(v) தொழுநோய்ப் பிச்சைக்காரர் விடுதியிலும் கதர் கிராமத் தொழில்களை வாரியம் ஏற்படுத்தி வருகிறது.

(vi) நீலகிரி மலைப் பிரதேசத்தில் ஆதிவாசிகள் மேம்பாட்டுக்கான திட்டத்தின் கீழ், தேனீ வளர்ப்பு, யூகலிப்ட்ஸ் ஆயில் வடித்தெடுத்தல் ஆகிய தொழில்களுக்கு உதவி வழங்கப்படுகிறது.

(vii) மலை வாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கொல்லிமலை, ஏர்க்காடு, ஆரணூத்து, ஜவ்வாது, சித்தேரி, பச்சை மலை ஆகிய ஏழு மலைப் பிரதேசங்களில் 620 மலைவாசிக் குடும்பங்களுக்குத் தேன் கூடுகள் 6,200 வழங்கப்பட்டு, ஆண்டொன்றுக்கு ரூபாய் 4,000 வருமானம் கிடைக்க வழி வகை செய்யப்படும்.

1976-ம் ஆண்டுக் கணக்குப்படி தமிழ் நாட்டின் மக்கள் தொகை 450 இலட்சம். இவர்களில் வேலை செய்யக் கூடிய வயது வந்தவர்களின் எண்ணிக்கை 260 இலட்சம். தொழிற்சாலைகளிலும், விவசாயத்திலும் வேலை வாய்ப்பு சுமார் 160 இலட்சம் பேர்களுக்குத் தான். ஆக 100 இலட்சம் அல்லது ஒரு கோடிப் பேர்களுக்கு ஒவ்வொரு வருடத்திலும் வேலை வாய்ப்புக் கொடுத்தாக வேண்டும். தமிழ்நாட்டிலுள்ள 6,000 மிகப் பெரிய தொழிற்சாலைகளில் மொத்தம் எல்லா வகையிலும் 10 இலட்சம் பேர்கள் தான் வேலை செய்கிறார்கள். இங்குதான் கதர் கிராமத் தொழில் இவர்களுக்கு உயிர் நாடியாகத் திகழ்கின்றது. இத் தொழிலின் மூலம் இவர்களுக்கு வேலை வாய்ப்பைத் தந்து வாழ்க்கையில் ஓர் அளவு நிம்மதியைத் தருகிறது.

இந்தக் காலத்தில் பொருளாதாரத்தில் கதருக்கு இடம் எங்கே இருக்கிறது என்று ஐயப் படுகிறவர்களுக்கு காந்திஜியின் விஞ்ஞானத்தால் மறுமொழியினைக்கூற வேண்டும்.

'' வேலை செய்வதற்கு வேண்டிய உடல் வலுப் பெற்றிருக்கும் பதினறு வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் அவர்களுடைய வயல்களிலோ, குடிசைகளிலோ அல்லது இந்தியாவில் ஒவ்வொரு கிராமத்திலும் தொழிற்சாலைகளை அமைத்தோ, வேலையும் போதுமான ஊதியமும் கொடுப்பதற்கு இதை விடச் சிறந்த மாற்றுத் திட்டம் ஏற்படும் வகையில் அல்லது எல்லா கிராம மக்களுக்கும் அவர்கள் உரிமையுடைய உயரிய வாழ்க்கைக்கு இன்றியமையாத தேவைகள் நிறைவேறும் வகையில் எல்லா கிராமங்களையும் நகரங்களாக மாற்றியமைக்கும் வகையிலும் கோடிக்கணக்கான கிராம மக்களுக்கு கதர் ஒன்றுதான், உண்மையான பொருளாதாரத் திட்டமாக இருக்க முடியும்.''

நன்றி : சென்னை வானொலி நிலையம்.

# கிராம மக்களுக்கு வாழ்வளிக்க வல்லது ராட்டையே!



ராட்டை, கிராமங்கள் புத்துயிர் பெறுவதற்குள்ள சாதனமென்பது என் கருத்து. ராட்டை என்று தொலைந்ததோ அன்றே நம் மக்கள் பெயரளவிலேனும் இருந்து வந்த தம் சுதந்தரத்தைப் பறிகொடுத்து விட்டார்கள். ராட்டை கிராமத்தாரின் விவசாயத் தொழிலுக்குப் பக்க பலமாயிருந்து அதற்குப் பெருமையளித்து வந்தது; கணவனை இழந்து தவித்த பெண்ணுக்கு நண்பனுய், ஆதரவாய் இருந்தது; கிராமத்தாரின் சோம்பலைப் போக்க உதவிற்று. எப்படியெனில், ராட்டையென் கையில் வெறும் நூல் நூற்பதோடு நில்லாது அதற்கு முன்பும் பின்பும் பருத்தி அரைத்தல், பஞ்சு வெட்டிப் பட்டை போடுதல், பாவு தோய்தல், தறியில் பூட்டி நெய்தல், சாயமிடுதல் ஆகியவையும் நடந்து வந்தன.

இவையெல்லாம் நடக்கையில் கிராமத் தச்சனுக்கும் கிராமக் கொல்லனுக்கும் நல்ல வேலை இருந்தது. ராட்டை நம் ஏழு இலட்சம் கிராமங்களுக்கும் உடை என்ற ஒரு முக்கியமான தேவையின் விஷயத்தில் பிறர் கை பாராது வாழ உதவிற்று. ராட்டை சுற்றுதல் நின்றதுமே கிராமத்தில் நடந்து வந்த எண்ணெய் ஆட்டுதல் போன்ற தொழில்களும் நின்று போயின. இவை போனது போனதுதான், வேறு தொழில்களும் தோன்றவில்லை. இவ்வாறு கிராமங்களின் பல்வேறு தொழில்களும், கிராமத்தாரின் தொழில் திறனும், அவர்களுக்குக் கிடைத்து வந்த நாலு காசும் பறிபோயின.

எனவே கிராம மக்கள் மீண்டும் தம் பழைய நிலையை எய்த வேண்டுமென்றால் அதற்கு இயல்பாக உதவக்கூடியது ராட்டைத் தொழிலும் அதோடு இணைந்த பிற தொழில்களுமேயாகும்.

இவ்வாறு ராட்டையை மீண்டும் கிராமங்களில் புகுத்துவது என்பது, சிறந்த அறிவும் நாட்டுப் பற்றுமுள்ள சுயநலமற்ற ஊழியர்களின் பெரும்படையொன்று கருமமே கண்ணாய் ராட்டைத் தத்துவத்தை கிராமங்களெங்கும் பரப்பி ஒளி இழந்த கிராம மக்களின் கண்களில் மீண்டும் ஒளி தோன்றுமாறு செய்தாலல்லது சாத்தியமல்ல. இது நடந்தால் இது பிரமாண்டமானதொரு சிறந்த கூட்டுறவு முயற்சியாயும், முதியோர் கல்வித் திட்டமாயும் இருக்கும். சந்தடியின்றிச் சுற்றும் ராட்டை, மக்களுக்கு உறுதியான பிழைப்பு அளிப்பதே போன்று இதுவும் அமைதியான முறையில் மக்கள் வாழ்க்கையை உருந் தெரியாமல் மாற்றிவிடும்.

எனது இருபது ஆண்டு ராட்டை அனுபவத்திலிருந்து என் இந்த வாதம் மிகவும் சரியானது என்பதை உணருகிறேன். ராட்டை ஏழை முஸ்லீம்களுக்கும், இந்துக்களுக்கும் அநேகமாய் ஒரே வகையி உதவியிருக்கிறது. சிறிது ஆடம்பரமின்றி இலட்ச கணக்கான இந்தக் கிராம தொழிலாளர் கைக்கு சுமா ஐந்து கோடி ரூபாய் போய் சேருமாறு செய்திருக்கிறது.

இதனுலேயே சமய வே பாடின்றிப் பொதுமக்கள் அ வருக்குமே சுயராஜ்ஜிய கிடைக்க ராட்டை உத மென்று நான் சிறிதும் தய காது சொல்லுகிறேன் ராட்டை கிராமங்களுக்கு அ களுக்கு உரிய பழைய அ தஸ்தை மீண்டும் அளித்த உயர்வு தாழ்வு என்ற வேற் மைகளை அகற்றும்.

இப்பொழுது பெரும்பாலா கிராமங்கள் தம் தேவைக்கா உணவு தானியங்களைத் தா உற்பத்தி செய்து கொள் தைப் போல, அவற்றைத் த உடைத் தேவைக்கு வேண்டி நூலையும் நூற்று நெய் கொள்ளச் செய்தல் நம் இல சியம் என்பதில் ஐயமில்லை தன் தேவைக்கு வேண்டி உணவு தானியங்கள் முழுவ யும் ஒவ்வொரு கிராமமும் வி விப்பதைவிட, தன் தேவைக் வேண்டிய நூலை நூற்றனு நெய்து கொள்ளலும் சுலப ஒவ்வொரு கிராமமும் தனக் வேண்டிய பருத்தியை சேமித்து வைத்துக் கொண் அதை சிரமமின்றி நூற் நெய்நு கொள்ளலாம்.

## ஓர் மறுமலர்ச்சியின் உருவகம்!

'அவர் ஒரு தூயவர், நமது மார்க்கத்தின் மாசு துடைத்திட வந்த மகான்' என்பாரும;

'அவர் ஒரு விடுதலை வீரர், நமது நாட்டு அடிமைத்தளைகளை உடைத் தெறிந்த அஞ்சா நெஞ்சினர்' என்பாரும்;

'அவர் ஒரு வேதாந்தி, பழைய தத்துவம் பலவற்றுக்குப் புதிய விளக்கமளித்தவர்' எனபாரும்;

'அவர் ஒரு சமதர்மவாதி, ஏழை பங்காளர், ஏழைகள் புதுவாழ்வு பெற வழிவகுத்தவர்' என்பாரும்;

'அவர் கிராம ராஜ்யம் அமைந்திட முனைந்தவர்' என்பாரும்

இதுபோல அவரிடம் அவரவர் கண்டவற்றினைக் கொண்டு அளவிட்டு வியந்து பாராட்டுவார்கள்.

இவர்களில் எவருடைய பார்வையில் முழுமையான காந்தியடிகள் தெரிகிறார் என்பது காலமெல்லாம் ஆராய்ந்தறிந்து கொள்ள வேண்டிய ஒரு பிரச்சினையாகும், காரணம்—

காந்தியடிகள், ஒரு தனி மனிதர் என்ற முறையிலே கவனிக்க வேண்டியவர் அல்லர்;

அவர் காலத்தின் சின்னம்!

ஓர் எழுச்சியின் அடையாளம்!

ஓர் மறுமலர்ச்சியின் உருவகம்!

# கிராம ஊழியர்களின் கடமை

—மகாத்மா காந்தி

கிராமப்புனரமைப்பில் கிராம ச் சுகாதாரம் இடம் பெருவிட் ால் நம் கிராமங்கள் இப் பாழுதுபோல் குப்பை மேடு ாகத்தான் இருந்து வரும். ராமச் சுகாதாரம் கிராம ாழ்க்கையின் முக்கியமான குதியாகும். அது எவ்வளவு க்கியமானதோ அவ்வளவு அது டத்துதலும் சிரமம் தான். கயுகமாக இருந்துவரும் அசுத் த்தைப் போக்குவதற்கு பிரம் ரண்டமான முயற்சி தேவை. னவே கிராம சுகாதாரம் பற்றி குரியாதஊழியரால்-கிராமத்தில் வற்றிகரமாகத் தோட்டி வேலை சய்யமுடியாதவரால் கிராம ழியம் செய்ய முடியாது. புதிய ல்வி அல்லது ஆதாரக் கல்வியின்றி, இந்தியக் கிராமங்களின் காடானு கோடிக் குழந்தை ளுக்குக் கல்வியளித்தல் சாத் யமல்லவென்பது இப்பொழுது பாதுவாக எல்லோராலும் ப்புக் கொள்ளப்படுகிறது. னவே கிராம ஊழியர் அதில் தர்ச்சி பெறவும், தாமே ஓர் தாரக் கல்வி ஆசிரியர் ஆக ம் வேண்டும்.

ஆதாரக்கல்வி நடந்து வரு ாஞல் அதன் வழியிலேயே முதி பார் கல்வியும் தானே நடக்கத் வரூது. இந்தப் புதிய கல்வி வரோடி நிலேத்துள்ளவிடங் ளில் அதைப் பெறும் குழந்தை ளே தம் பெற்ருேருக்குக் கல்வி ளிக்கத் தொடங்கி விடுகிருர் ள். அது எவ்வாருயினும். ராமஊழியர், முதியோர்கல்விப் பாறுப்பையும் ஏற்க வேண்டி தே.

பெண் ஆடவனின் அர்த்தாங் னி, ஆடவனுக்குச் சரி சமம் ன்று சொல்லப் பட்டிருக் ருள். ஆடவனுக்கு சட்டப் டியுள்ள எல்லா உரிமை ளும் பெண்ணுக்கும் இல்லா ருக்கும் வரை ஆண்பிள்ளே றந்ததை ஆனந்தமாகக் கொண் ாடுவதைப் போலவே பெண் ழந்தை பிறந்ததையும் கொண் ாடி வரவேற்காதவரை-இந்தி ாவுக்குப் பட்சவாத நோய் வந் ருப்பதாகவே கொள்ளப்படும்.

பெண்டிரை அடக்கி வைத்தல் அஹிம்சையை மறுப்பதாகும். ஆகையால் கிராம ஊழியர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பெண்ணேயும் தம் தாயாகவோ, சகோதரியாகவோ அல்லதுமகளாகவோ கருதி அவர்களுடன் மரியாதையாகப் பழகவேண்டும். இம்மாதிரியான ஊழியருக்கே கிராம மக்களிடையே மதிப்பிருக்கும்.

நம் மக்களின் ஆரோக்கியத்தை நாம் இனி அசட்டை செய்தல் கூடாது. ஒவ்வொரு கிராம ஊழியருக்கும் பொதுவான ஆரோக்கிய விதிகள் தெரிந்திருக்க வேண்டும்.

நமக்கு ஆங்கிலத்தினிடம் உள்ள மோகம் நம் தாய் மொழிகளிடம் பற்றில்லாது செய்து விட்டது. இந்தப் பாவத்திற்குக் கழுவாயாகவேனும் கிராம ஊழியர் ஒவ்வொருவரும் கிராம மக்களுக்குத் தம் மொழியில் பற்றுண்டாகுமாறு செய்ய வேண்டும். கிராம ஊழியர் நாட்டின் எல்லா மொழிகளுக்கும் ஒரே வகை மதிப்பளித்து, தாம் தொண்டு புரியும் பகுதியின் மொழியைப் பயின்று, தம்மைச் சூழவுள்ள கிராம மக்களுக்கு அவர்கள் மொழியிடம் பற்றுண்டாக்க வேண்டும்.

இவ்வேலேத்திட்டம் முழுதும் பொருளாதார சமத்துவம் என்ற உறுதியான அஸ்திவாரத்தின் மீது அமைந்து நடக்காவிட்டால் இது மணலால் எழுப்பிய மாளிகை போன்றே இருக்கும். பொருளாதார சமத்துவம் என்ருல் ஒவ்வொருவரிடமும் ஒரேயளவு பணங்காசும், வீடு வாசலும், நிலபுலங்களும் இருக்க வேண்டுமென்பதல்ல. ஆஞல் ஒவ்வொருவருக்கும் இருக்க நல்ல வீடும், உண்ண போதிய அளவு சத்துள்ள உணவும், உடுத்த தேவையான கதராடையும் கிடைக்க வேண்டும். இவற்ருேடு கூட, இப்பொழுதுள்ள கொடிய ஏற்றத் தாழ்வுகளேத் தூய அஹிம்சை முறையிஞலேயே அகற்ற வேண்டும்.

ஹரிஜன், 18–8–1940
தேதிய இதழிலிருந்து,

கதரல்லாத மற்றக் கிராமக் கைத்தொழில்களின் தன்மை வேறு. கதரின் தன்மை வேறு. மக்கள் இவற்றைத் தாமே தொடங்கி நடத்துதல் என்பதற்கு அதிக இடமில்லே. இந்தத் தொழில்கள் ஒவ்வொன்றும் ஒரு சிலருக்குத்தான் வேலேயளிக்கும். இவை கதர்த் தொழிலுக்கு உதவக்கூடியவை ; கதரின்றி இவைகளிஞல் தனியே நிலேக்க முடியாது. இவையில்லாதபோது கதரின் பெருமையும் குன்றும்.

கைக் குத்தல், கை அரைவை, சோப்புச் செய்தல், காகிதம் செய்தல், தீக்குச்சி செய்தல், தோல் பதனிடுதல், எண்ணெய் ஆட்டுதல் முதலிய முக்கியமான கிராமக் கைத் தொழில்கள் நடைபெருத பொழுது கிராமப் பொருளாதாரம் வளமுறுவதற்கில்லே. காங்கிரஸ்காரர்கள் — கிராமவாசிகளாக இருந்தாலும் கிராமத்தில் போய் குடியேறிஞலும் —இவற்றில் கவனம் செலுத்தி இவற்றைப் புதுப்பித்துப் புத்துயிர் அளிக்கலாம்.

## கிராமக் கைத்தொழில்கள்

இவை கிடைக்கும் இடங்களிலும் கிடைக்கும் காலங்களிலும் எல்லோரும் இவற்றையே உபயோகிப்பதென்ற உறுதி பூண வேண்டும். கிராக்கிமட்டுமிருந்தால் நம் தேவைப் பொருள்களுள் பெரும்பாலானவற்றை நாம் கிராமங்களிலேயே உண்டாக்கிக் கொள்ளலாமென்பதில் ஐயமில்லே. நமக்கு கிராம மனப்பான்மை ஏற்பட்டுவிட்டால், நாம் மேல் நாட்டுப் பொருள்களேப் பார்த்துக் காப்பி யடித்து இங்கே செய்தவைகளேயோ, இயந்திரங்களில் தயாரானவைகளேயோ ஏறிட்டும் பார்க்க மாட்டோம் ; ஏழைமைக்கும் பட்டினிக்கும் சோம்பலுக்கும் இடமே அளியாத, நாம் கனவு காணும் புதிய இந்தியாவுக்குப் பொருத்தமான தேசீய மணம் கமழும் உண்மையான விருப்பு வெறுப்புகளே வளர்த்துக் கொள்வோம்.

(ஆதாரம்: Village Swaraj)



# பத்திராதிபர்

பாரதியார் மொழிபெயர்த்த
தாகூர் சிறுகதை

(தாகூரின் சிறுகதைகள் கல்கத்தா 'மாடர்ன் ரிவ்யூ' பத்திரிகையில் வெளி வந்தன. பாரதியார் புதுச்சேரியில் இருந்த காலத்தில் (1908-1918) எட்டுக் கதைகளே மொழி பெயர்த்தார். அவருடைய உயிர்த்தோழர் மண்டயம் திரு. சீனிவாசாச்சாரியார் அவர்கள் முதல் பதிப்பாகப் புத்தக வடிவில் இக் கதைகளே வெளியிட்டார். பிறகு திரு ரா. அ. பத்மநாபன் அவர்களின் உதவியால் அமுத நிலேயத்தார் 'பாரதியார் மொழி பெயர்த்த தாகூர் சிறு கதைகள்' என்னும் தலேப்பில் ஒரு நூலே (1958) வெளியிட்டனர். இத்தொகுப்பிலுள்ள ஒரு சிறுகதையே 'பத்திராதிபர்'.)

*  *  *  *

என் மனேவி உயிரோடிருக்கும் வரை என் குழந்தையாகிய 'ப்ரபா' வை நான் அதிகம் கவனிப்பதில்லே. ப்ரபாவைக் காட்டிலும் அதன் தாய் விஷயத்திலே என் சிந்தை அதிகமாகச் சலித்துக் கொண்டிருந்தது.

அக்காலத்தில் குழந்தையை எப்போதேனும் கொஞ்சம் இலேசாகக் கொஞ்சுவேன். அதன் கொச்சை மொழிகளேக் கேட்பேன். அது சிரிப்பதையும் ஆடுவதையும் பார்ப்பேன். என் மனதுக்கு ரம்யப்படும்வரை கொஞ்சுவேன். சற்றே விரஸப்பட ஆரம்பித்தால் உடனே குழந்தையைத் தாய் வசம் கொடுத்து விடுவேன்.

கடைசியாக, என் மனேவி அகால மரணமடைந்த பின் குழந்தை தாயின் கைகளினின்றும் எனது தோள்களுக்கு வந்தது. அதை நான் இருதயத்தில் வைத்து போஷிக்கலானேன்.

தாயில்லாக் குழந்தையை இரட்டிப்பு கவனத்துடன் வளர்ப்பது கடமையென்று நான் சிந்தனே செய்தது அதிகமா, பெண்டாட்டியிழந்த அப்பனே அதிக ஜாக்ரதையுடன் காப்பாற்றுதல் தன் கடமையென்று அந்தக் குழந்தை பட்ட கவலே அதிகமா என்பதைக் கூறுதல் எளிதன்று. ஆஞல் அது விட்டனள் என்பது மாத்திரம் திண்ணம். இந்தச் சிறு குழந்தை தனது பிதாவுக்குத் தன்னேத் தனிக்காப்பாளியாக நியமித்துக் கொண்டாளென்பது தெளிவுறப் புலப்பட்டது.

நான் மனத்தில் நகைத்துக் கொண்டு, அவள் பொறுப்பில் என்னே முழுதுமே ஒப்படைத்து விட்டேன். நான் எவ்வளவு தொழிலின்றி, உதவியின்றிப் போனேனே, அவ்வளவு அவளுக்கு ஸந்தோஷம் அதிகமாயிற்று. எப்போதேனும் என் துணியை அல்லது குடையை எடுத்துவர நான் போஞல், அவள் முகத்தில் கோபம் தோன்றலாயிற்று. அவளுடைய அதிகாரத்தை நான் அபஹரிப்பதாக நினேக்கலாஞள்.

அவள் இதுவரை வைத்திருந்த பொம்மைகளில் அப்பனேப் போல் நல்ல பொம்மை பார்த்ததில்லே. எனவே இதை ஊட்டி, உடுத்துப் பாயில் படுக்க வைப்பதில் அவளுக்கு அளவிறந்த திருப்தி! அவளுக்குக் கணக்கும், முதல் வாசகப் புஸ்தகமும் கற்பிக்கும் ஸமயங்களிலேதான் பிதாவின் அதிகாரத்தைச் செலுத்த எனக்குச் சற்றே இடம் வாய்த்தது.

இவளுக்குத் தகுந்த வரன் கண்டுபிடித்துச் சரியான சீதனம் கொடுக்கப் பணத்துக்கென்ன செய்வோமென்ற யோசனே என்னே இடைக்கிடையே வந்து தொல்லேப்படுத்தும். அவளுக்கோ நான் சரியானபடி கல்வி கற்பித்திருந்தேன். அப்படி இருக்க அவளே ஒரு மூடனுக்கு வாழ்க்கைப்படுத்த நேரிட்டால் என்ன செய்வது?

பணம் ஸம்பாதிக்க வேண்டுமென்று தீர்மானம் செய்து கொண்டேன். எனக்கு வயது அதிகமாய் விட்டபடியால் ஸர்க்கார் உத்தியோகத்தை எதிர்பார்க்க இடமில்லே. வேறு வியாபார ஸ்தலங்களில் உத்தியோகம் பெறுவதற்கும் தக்க சிபாரிசு கிடையாது. நெடுந்தூரம் யோசனே செய்து பார்த்துக் கடைசியாகப் புஸ்தகங்கள் எழுதலாமென்று முடிவுக்கு வந்தேன். ... ணெய் வைக்க முடியாது; ... ணீர் வைக்க முடியாது. அதன் தாரணை சக்தி தீர்ந்து போய்விட்டது. அந்த நிலேயில் அதில் ... ஞல் செலவின்றி ஸங்கீத ... ரங்கள் உண்டாக்கலாம்.

பயனுள்ள பதார்த்தமில்லை ... மனிதனே அலங்காரப் பதார் ... மாக்கலாம். மற்ற துறைகளில் பொருள் செய்யத் தெரியாத ... இலக்கியம் செய்யலாம். இ... யோசனேயால் மனந்தேறி, ந... ஒரு ஹாஸ்ய நாடகம் எழுதினே... அது நன்றாக இருக்கிறதெ... ஜனங்கள் சொன்ஞர்கள். அ... ஒரு நாடகசாலேயில் ஆட... செய்தனர்.

கொஞ்சம் கீர்த்தியின் ... கண்டவுடனே, அதை ... மேலும் தொடராது விட என... மனம் வரவில்லே. தீர்மானத்... வேகத்தால், மரண வேதனை... பட்டுக்கொண்டு ஹாஸ்ய ந... கங்களே நாளுக்கு நாள் ... மேலும் எழுதிக் கொட்டலானேன்.

ப்ரபா புன்னகை செ... கொண்டு, என்னிடம் மெதுவ... "அப்பா, உனக்குக் குள... நோயாய்விட்டது" எ... சொல்ல வருவாள்.

நான் அவள் மேல் சீறி விழு... "ஒழிப்போ, ஒழிப்போ! ந... எத்தனே முயற்சியிலிருக்கிறே... தெரியவில்லேயா? என்னே ஹிம்... பண்ணுதே" என்பேன்.

அந்த அநாதைக் குழ... சத்தங்காட்டாமல் போய்வி... திடீரென்று தன் ஒளி அ... பெற்ற விளக்கின் முகம்போ... அவள் முகம் சோபையி... போகும். வீட்டு வேலேக்... களேக் கண்டால் துரத்துவே... வேலேக்காரரை அடிப்பேன். ... வீட்டு வாயிலில் பிச்சைக்கா... வந்து பாடிஞல், நான் த... எடுத்துக் கொண்டு போய் ... வேன். என்னுடைய அறை, ... பக்கத்திலே இருந்தது. ... போகும் வந்து அங்கே ... கொண்டு பாடிக விசாரிப்பா...

ான் அல்லோல கல்லோலமாக
ஸ்ய நாடகம் எழுதுகிறே
ன்பதை யாருமே பொருட்
க்கவில்லை!

னுல் இதிலெல்லாம் உற்
மும், கீர்த்தியும் கிடைத்த
வுக்குப்பணம் கிடைக்கவில்லை.
த நான் அதிக கஷ்டமாகப்
பிக்கவில்லை. இருந்தாலும்
பிள்ளை மாரெல்லாரும்
ஸ்ய நாடகங்கள் எழுதாத
ாக்களையுடைய மற்றைப்
ண்களை நோக்கிச் சென்று
ண்டிருந்தனர்.

ந்த ஸமயத்தில் எனக்கோர்
ர்ஷ்டம் வாய்த்தது. ஜாஹிர்
ம் என்ற க்ராமத்து ஜமீந்
ஒரு வர்த்தமான பத்திரிகை
ம்பித்தார். என்னை அதற்குப்
திராதிபராகும்படி வேண்
கொண்டார். நான் உடன்
டேன்.

டுத்தவுடனே சில நாள்,
மிகவும் ஆவேசத்துடனும்
துடனும் எழுதினேன்.
ுல் நான் தெரு வழியே
கும்போது ஜனங்கள் என்னை
ால் சுட்டிக் காட்டத் தலைப்
டனர். என் தலையைச் சூழ
்தரமான ஒளியின் மண்ட
வீசுவதாகப் பாவனை செய்ய
னன்.

ாஹிர் க்ராமத்துக்கு சமீபத்
ஆஹிர் க்ராம் என்ற மற்
கிராமம். இந்த இரண்டூர்
தார்களுக் கிடையே ஓயா
போட்டிப்பும் சண்டையும்;
கடி அவர்களுக்குள்ளே பர
பரம் தடியடி ப்ரயோகங்கள்
து வந்தன. பின்பு நியா
பதி இருவரையும் ஜாமீனில்
ப்படுத்தினது காரணமாக
பக்கத்துத் தடிக்காரர் ஸ்தா
த நான் வஹிக்கும்படி
ற்று. அந்த கவுரவத்துக்கு
ி வராதபடியே நான் வேலை
ததாக அனைவரும் கூறினர்.

ன் லிகிதங்களுடைய வேகத்
ம் ஜ்வாலையையும் கண்டு
ர் க்ராம் தலைகவிழ்ந்துவிட்
அந்த ஜமீந்தாருடைய
ங்காலத்து வமிசத்தையும்
தையும் எனது எழுத்து மை
களங்கப்படுத்தினேன்.

ந்த நாட்களில் எனக்கு
ைப் பற்றி மிகுந்த திருப்தி
டலாயிற்று. என் உடம்பு
கொஞ்சம் புஷ்டியாயிற்று.
றி கொண்ட மேதாவிக்
க வேண்டிய பளபளப்பு என்
தில் வீசலாயிற்று. ஆஹிர்
த்தின் பூர்வ சரித்திரத்தை
மர்மத்திலே தைக்கும்படி
நான் வசை எழுத, அதைப்
படித்து ஜாஹிர் கிராமத்தார் அத்
தனை பேரும் வெள்ளரிப்பழம்
வெடிப்பது போலே விலா வெடிக்
கும்படி சிரிப்பதைக் கண்டு எனது
ஆச்சரியமான வசைத்திறமையை
எண்ணி நானே மனம் பூரிப்ப
துண்டு. மிகவும் ஸௌக்யமாக
இருந்தேன்.

இறுதியில், ஆஹிர் க்ராமத்தா
ரும் ஒரு பத்திரிகை தொடங்கி
விட்டார்கள். அந்தப் பத்திரிகை
இலக்கிய நாகரிகத்தின் லவலேச
மும் இல்லாமல், வெறுமே பச்சை
பச்சையாக எழுதிற்று. அதன்
பாஷை கலப்பில்லாத, நாட்டுப்
புறம். ஒவ்வோரெழுத்தும் முகத்
தின் முன்னே வந்து அலறுவது
போலிருக்கும். இரண்டு கிரா
மத்து ஜனங்களும் அதன் அர்த்
தத்தை வெகு சுலபமாகக் கண்ட
னர்.

நானோ மரியாதையை எண்ணி,
வசனத்தை இஷ்டப்படி விட
ஸாத்யமில்லாது போனேன்.
எனது வசைகள் ஆழ்ந்த மறை
பொருளாக இருக்கும். ஆதலால்
சத்துரு, மித்திரர்களின் புத்தியில்
நன்கு விளங்காமலும் போவ
துண்டு.

எனவே, இந்த வசவு யுத்தத்
தில் நான் நிச்சயமான வெற்றி
யடைந்த ஸமயங்களில்கூலி,
என் ஜயம் படிப்பவர்களுக்குப்
புலப்பட ஹேதுவில்லை. கடைசி
யாக, நிராசை கொண்டு, நான்
''இலக்கியத்தில் நாகரிக நெறி''
என்பதாக ஒரு உபந்யாஸம்
எழுதினேன். அது பெரும் பிழை
யாக முடிந்தது. ஏனென்றால்,
மெய்யாகவே ஹாஸ்யமான விஷ
யங்களைக் காட்டிலும் கம்பீர
உபந்யாஸங்களை சில சமயங்
களில் அதிக நகைப்புக்கிடம் தரு
கின்றன. எனவே பிற மனிதரின்
யோக்யதையை விருத்தி செய்யக்
கருதி, நான் செய்த யத்தனம்
நான் விரும்பியதற்கு நேர் மாறான
பயனை விளைத்தது.

என்னுடைய யஜமான் என்னை
முன்போலக் கணிப்பதில்லை.
எனக்கு வழக்கமாக நடந்து வந்த
கவுரவம் சுருங்கலாயிற்று;
குறைந்த ஸத்துடையதாயிற்று.

வீதியில் பிறர் தமது வேலையை
விட்டு என்னிடம் வந்து ஒரு
வார்த்தை கேட்டுப்போகும் பெரு
மையை நாடுவது நின்றுபோயிற்று.
என்னிடம் பிறர் சிறு பிள்ளைத்
தனமான விளையாட்டு வைத்துக்
கொள்ளும் ஸ்திதிக்கு வந்துவிட்
டது.

நகைப்புடன் எனது பிடரியைப்
தட்டிக் கொடுப்பதும், எனக்கு
வேடிக்கைப் பெயர்கள் சூட்டு
வதுமாயினர்.

இதனிடையே எனது நண்
பர்கள் முன்பு எனக்குக் கீர்த்தி
விளைவித்த ஹாஸ்ய நாடகங்களை
மறந்தே போயினர். எரிந்து,
கடைசிவரை கருகிப்போன தீக்
குச்சி போலாய்விட்டேன்.

என் மனம் மிகவும் சோர்ந்து
போய்விட்டது. கூடியவரை மண்
டையை உடைத்துப் பார்த்தா
லும் ஒரு வரிகூட எழுத முடிய
வில்லை. எனக்கு உயிர் வாழ்க்கை
யிலேயேவிரஸம் உண்டாய்விட்
டது.

ப்ரபா என்னைக் கண்டு பயப்
படலானாள். கூப்பிட்டாலொழிய
அருகே வரத்துணியாள். ஹாஸ்
யங்களெழுதும் புலமை சான்ற
தொரு தந்தையைவிட ஒரு
ஸாதாரணப் பொம்மை நல்ல
துணை என்று தெரிந்து கொண்
டாள்.

ஒருநாள் அந்த ஆஹிர் க்ராம்
பத்திரிகை என் யஜமானை விட்டு
என்னையே தாக்கி யிருந்தது கண்
டேன். என்னைக் குறித்துச் சில
இழிவான அபவாதங்கள் எழுதப்
பட்டிருந்தன. எனது நண்பரும்
பரிசயக்காரரும் ஒவ்வொருவராக
வந்து, என்னிடம் அதிலுள்ள கார
மான பகுதிகளை வாசித்துக்காட்
டிக் குலுங்க நகைத்துப் போயி
னர். விஷயத்தை ஏற்றுக்கொள்ள
இடமில்லா விட்டாலும் எதிரி
எழுதுகிற மாதிரி, மிகவும் திற
மென்பதை மறுக்க இடமில்லை
யென்று சிலர் கூறினர். ஒரே
பகலில், சுமார் இருபது பேர்
வந்து அதே கதையை மீட்டும்
மீட்டும் சொன்னார்கள். சந்த
மாறுதலாகச் சில பேதங்கள்
லேசாக வரும். அவ்வளவுதான்.

என் வீட்டுக்கெதிரே சிறு
தோட்டம் உண்டு. புண்பட்ட
மனத்துடன் நான் மாலையில்
அங்கே உலாவிக் கொண்டிருந்
தேன். பக்ஷிகள் கூடுகளுக்கு
மீண்டு வந்த அந்த க்ஷணத்தி
லேயே ஸாயங்கால சாந்தியில் லய
மடைந்தன. அதைக் கண்டு நான்
பக்ஷி ஜாதியில் பத்திராதிபர்களும்
இலக்கிய நாகரிகத்தைப் பற்றின
விவாதங்களுமில்லை யென்று
தெரிந்து கொண்டேன்.

எப்படி மாறுத்தரம் எழுது
வோமென்ற ஒரே கவலையில்
மூழ்கிக் கிடந்தேன். மரியாதை
யில் இருக்கிற கஷ்டம் யாதெனில்
அது ஸகல வித ஜனங்களுக்கும்
அர்த்தமாவதில்லை. எதிரி தாக்
கியமாதிரி பாஷையிலேயே உத்
தரமெழுத வேண்டுமென்று தீர்
மானம் செய்து கொண்டேன்.
தோல்வியை ஒத்துக் கொண்ட
தாக ஏற்படவே கூடாதென்று
நிச்சயித்தேன்.

இங்ஙனம் நான் முடிவு செய்த
போது, மாலையிருளை ஊடுருவி
நன்கு பழகிய மெல்லிய குர
லொன்று வந்தது. அடுத்த க்ஷணத்
திலே சூடான மெல்லிய கர
மொன்று என் உள்ளங்கையைத்
தீண்டிற்று. நான் மனம் சிதறிப்
போயிருந்தபடியால் அந்தக் குர
லும், ஸ்பர்சமும் பழமையாக
இருந்தும் உணராதிருந்துவிட்
டேன்.

அவை நீங்கிச் சென்ற பின்
மறு கணத்தில் அந்தக் குரல் என்
செவியில் தொனிக்கலாயிற்று.
ஸ்பர்சத்தின் நினைவு வந்தது. என்
குழந்தை மெதுவாகப் பக்கத்தில்
வந்து ''அப்பா'' என்று என்
காதில் சொல்ல, அதற்கு நான்
உத்தரம் கொடாதபடியால்,
அவள் என் வலக்கையை உயர்த்
தித் தன் நெற்றியிலே ஒற்றிக்
கொண்டு மறுபடி மவுனமாக
வீட்டுக்குள்ளே போய்விட்டா
ளென்பது தெரியலாயிற்று.

ப்ரபா நெடுங்காலமாக என்னை
அப்படி அழைத்ததில்லை. அத்தனை
நிர்ப்பயமாக வந்து கொஞ்சுவ
தும் கிடையாது. ஆதலால் அன்று
அவள் தீண்டிய அன்பின் ஸ்பர்
சத்திலே என் ஹிருதயம் அவளை
தாஹமுறலாயிற்று. சிறிது
நேரத்துக்கப்பால் வீட்டுக்குள்
புகுந்தேன். ப்ரபா ஒரு படுக்கை
யின் மீது படுத்திருந்தாள். அவ
ளுடைய கண்கள் பாதி குவிந்தி
ருந்தன. அவள் கஷ்டப்படுவது
போலிருந்தது. நாளிறுதியில்
மண் மீது விழுந்து விட்டதொரு
மலர்போலே கிடந்தாள்.



நெற்றியைத் தொட்டுப் பார்த்
தேன். ஜ்வரம் அடித்தது; மூச்சு
சூடாக வந்தது; நாடி சரியில்லை.
பத்திரிகைக்குக் காரமான உத்த
ரம் கொடுக்க வேண்டுமென்று
யோசனை செய்துகொண்டிருந்த
தந்தையிடம் அவள், ஜ்வரத்தின்
ஆரம்பச் சின்னங்கள் தோன்றிய
உடனே நெஞ்சில் தாஹத்துடன்
ஓடிவந்து பிதாவின் அன்பையும்
கொஞ்சுதலையும் வேண்டினு
ளென்பதை அறிந்து கொண்
டேன்.

அவளுடைய பக்கத்தில் உட்
கார்ந்தேன். ஒரு சொல்லுரை
யாமல் குழந்தை என் கையைத்
தனது ஜ்வரச் சூடுகொண்ட
அகங்கைகளினிடையே பற்றி
நெற்றியில் வைத்துக் கொண்டு
சலனமின்றிக் கிடந்தாள். ஜாஹிர்
க்ராம் பத்திரிகையில் என் கையி
லிருந்த பிரதிகளையெல்லாம்
எரித்தேன். தூஷணைக்கு மாறுத்
தரம் எழுதவில்லை. இதில்
தோல்வி அங்கீகாரம் செய்து
கொண்டபோது எனக்குண்டான
மகிழ்ச்சி அதற்கு முன் எப்போ
தும் கண்டதில்லை.

முன்பு தாயிறந்தபோது குழந்
தையை ஹிருதயத்தாலே தழுவி
னேன். இப்போது மாற்றாந்தாய்
ஸ்தானத்தில் வந்திருந்த பத்திரி
கைக்குத் தஹனம் நடத்திவிட்டு,
மறுபடி ஒருமுறை எனது குழந்
தையை நெஞ்சிலே குடியேற்றி
னேன்.

## பாரதியின் சமத்துவ மனப்பான்மை

ஒருநாள் பாரதியார் வீட்டில் சிறு
கூட்டம். நடுவில் தீ வளர்த்து, தீயைச்
சுற்றி வேத மந்திரங்களை ஜபித்துக்
கொண்டிருந்தனர். தீயைச் சுற்றி
வ. வே. சு. அய்யர், மண்டயம் ஸ்ரீநிவா
ஸாச்சாரி, பிரம்மராய அய்யர், குவளைக்
கண்ணன், நாகசாமி அய்யர், கோவிந்த
ராஜுலு நாயுடு என்ற நண்பர் முதலி
யோர் வீற்றிருந்தனர். ஒரு பலகையில்
பாரதி அமர்ந்திருந்தார்; மற்றொரு பலகை
யில் கனகலிங்கத்துக்கு பிரம்மோபதேசம்
செய்து, பூணூல் அணிவித்தார் பாரதி.
''நீ இன்று முதல் பிராமணன். யார்
உனக்குப் பூணூல் போட்டுவித்தது என்
ருல், அதட்டியே 'பாரதி' என்று சொல்''
என்றும் உபதேசித்தார்.

மூன்று பிரிவினருக்குப் பூணூல்
இருப்பதால், மற்ற இரு பிரிவுகளுக்கும்
பூணூல் போட்டுச் சமத்துவம் உண்டாக்
கலாம் என்று அக்காலத்தில் ஒரு
நம்பிக்கை நிலவியது. பாரதி இதை
யொட்டியே கனகலிங்கத்தைப் பிரா
மணன் ஆக்கியிருக்க வேண்டும்.

கனகலிங்கம் ''என் குருநாதர் பாரதி''
என்ற சிறந்த நூலை எழுதியிருக்கிறார்.

—ரா. அ. பத்மநாபன்

(—'சித்திரபாரதி' என்னும் நூலிலிருந்து

# அஞ்சலக வங்கியின் மாபெரும் பரிசுத் திட்டம்

ஆண்டுக்கு இருமுறை

குலுக்கல்கள் ஜனவரியிலும் ஜூலையிலும் நடைபெறும்

ரூ. 20½ இலட்சத்திற்கு
11,116 பரிசுகள்

ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட 11,116 பரிசுகள் உண்டு.

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. | 1,00,000 |
| 5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50,000 |
| 10 மூன்றாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 20,000 |
| 100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 5,000 |
| 1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 500 |
| 10,000 ஆறாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50 |

ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.

உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெறாதவர்க்கும் அளிக்கப்படும்.

விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

இயக்குநர்,
தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,
சென்னை-600 002.




# காந்தியடிகள் கண்ட கனவு நனவாகிறது!

"இந்திய நாட்டின் உயிர்நாடி கிராமங்களிலே உள்ளது" என்று அண்ணல் காந்தியடிகள் குறிப்பிட்டார்.

"கிராம ராஜ்யம் அமைய வேண்டும்" என்று வற்புறுத்தினர்.

"சமுதாயத்தின் அடித்தளத்திலே உள்ளவர்களும் மேம்பாடு பெற வழி பிறக்க வேண்டும்!" என்பது காந்தியடிகள் கண்ட கனவாகும்.

"ஏழ்மையும், வறுமையும் ஒழிந்து, சமுதாயம் முழுவதும் முன்னேற வேண்டும்" என்று அண்ணல் கூறினர்.

அண்ணல் காந்தியடிகள் கூறிய கிராம வளர்ச்சித் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டே, இந்திய அரசு சமுதாய வளர்ச்சித் திட்டத்தை (Community Development Programme) 1952-ஆம் ஆண்டு அக்டோபர் 2-ஆம் நாள்—அண்ணல் பிறந்த நாளில் — நாடெங்கும் துவக்கியது.

கிராமப் புறங்களில் வாழும் நலிவுற்ற மக்களின் நிலையை உயர்த்த வேண்டும், அவர்களிடையே தன்னம்பிக்கையை வளரச்செய்து, அவர்கள் முன்னேற வழிகளமைத்துத் தர வேண்டும் என்பவையே சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் நோக்கங்களாகும். மக்களின் முயற்சிகளை அரசின் அதிகாரத்துடன் இணைத்துச்செயலாற்றி, மக்களின் பொருளாதார, சமூக, பண்பாட்டினை மேம்படச் செய்து, அவர்களை நாட்டின் வாழ்வுடன் இணைந்து, நாட்டின் முன்னேற்றத்திற்கு முழுமனதுடன் இணைந்து செயல்படச் செய்வதே சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் செயல்முறையாகும். முன்னேற வேண்டுமென்ற முனைப்புச் சக்தியானது, மக்களிடமிருந்தே எழ வேண்டும் என்றும், கிராமப் புறங்களில் செயலற்றுத் தேங்கி நின்ற மனித ஆற்றலை ஒன்று திரட்டி, நிலையான பணிகளைச் செய்ய வேண்டுமென்ற நோக்குடனேயே சமுதாய வளர்ச்சித் திட்டம் துவக்கப் பெற்றதால், மக்களின் ஒத்துழைப்பும், திட்டங்களில் பங்கேற்றுச் செயலாற்றுவதுமே சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் முக்கிய அங்கமாகும்.

இந்திய அரசின் வழிகாட்டுதலுக்கு ஏற்ப சமுதாய வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு தமிழ்நாட்டில் சமுதாய வளர்ச்சி வட்டாரங்கள் (Community Development Blocks) ஏற்படுத்தப்பட்டன. வட்டார வளர்ச்சி அலுவலகங்களின் மூலமாக, கிராமப்புற முன்னேற்றத்திற்கு வித்திடப்பட்டன. அவ்வித்துக்கள் முளைத்து, வளர்ந்து, பயிராகி, விளைந்து, பெரும் பயன் தர அனைத்து வகையிலும் அரசு உதவி செய்தது.

நிதி நிலைத் திட்டங்களின் மூலம் மானியங்களாகவும், வட்டார வளர்ச்சி அலுவலர் தலைமையில் வளர்ச்சிப் பணியாளர்களும் வட்டாரங்களுக்கு (பல ஊர்கள் சேர்ந்த ஓர் அமைப்பு) அரசால் உதவிகளாக அளிக்கப்பட்டன. ஓர் வட்டாரத்திற்குள்ளேயே நிறைவேற்றப்பட வேண்டிய வளர்ச்சிப் பணிகள் அனைத்தையும் ஒருங்கிணைக்க வேண்டியது, வட்டார வளர்ச்சி அலுவலரின் பொறுப்பு ஆகும். இந்த ஒருங்கிணைந்த திட்டம், ஐந்தாண்டுகள் கொண்டதாகப் பிரிக்கப்பட்டு, வேளாண்மை வளர்ச்சிக்கு முதலிடம் அளிக்கப்பட்டது. இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டவாறு, எவ்வித மாற்றமுமின்றி, தொடக்கக் கட்டத்தில் வட்டாரங்கள் படிப்படியாக ஏற்படுத்தப்பட்டன. வட்டாரத்தின் செயல் முறை இரண்டு கட்டத்தில் அமைந்தது; இந்த இரண்டு கட்டங்களும் ஐந்தாண்டுக் காலத்திற்கு விரிவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது. முதல் கட்டமான தீவிர நிலையில் ஒரு வட்டாரம் ரூ. 12 இலட்சத்தையும், தீவிர நிலையைக் கடந்த இரண்டாவது கட்டத்தில் ரூ. 5 இலட்சத்தையும் அவ்வட்டாரம் மைய அரசின் உதவி பெற்றது. பத்தாண்டுகள் கழித்து, அவ்வட்டாரம் இரண்டாம் நிலையைக் கடந்த பின்னர் மைய அரசின் எவ்வித கூடுதல் உதவியுமின்றி, செயலாற்ற வேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டது. 1974—75 தொடக்கம், தமிழ்நாட்டிலுள்ள எல்லா 374 வட்டாரங்களும், இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரங்களாக இருந்தன.

### ஊராட்சி ஒன்றியங்களின் துவக்கம்

1958-ஆம் ஆண்டுத் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் செயலுக்கு வந்தவுடன் சமுதாய

வளர்ச்சித் திட்டம் ஒரு புதிய கட்டத்தை அடைந்தது. தமிழ்நாடெங்கும் (கல்ராயன் மலைப் பகுதியைத் தவிர) மொத்தம் 374 வட்டாரங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1960 ஆம் ஆண்டு அக்டோபர் 2-ஆம் நாள் (காந்தி ஜெயந்தி நாள்) 75 வட்டாரங்களும், 14—4—1961 அன்று (தமிழ்ப் புத்தாண்டு நாள்) 179 வட்டாரங்களும், 2—10—1961 அன்று (காந்தி ஜெயந்தி நாள்) 120 வட்டாரங்களும் ஊராட்சி ஒன்றியங்களாக மாற்றப்பட்டன.

வட்டார நிலையில் வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றும் பொறுப்பு அனைத்தும் ஊராட்சி ஒன்றியங்களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந் நிலையில்தான் ஒரு முக்கியமான மாற்றம் செயலுக்குக் கொணரப்பட்டது. ஊராட்சி வளர்ச்சித் திட்டத்தை மையமாகக் கொண்ட பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளில் கிடைக்கும் நிதிகளனைத்தும் திரட்டப்பட்டு, "ஊராட்சி வளர்ச்சித் திட்ட வாரியான நிதி நிலைத் திட்டம்'' கொணரப்பட்டு, ஊராட்சி ஒன்றியங்கள் பயன் படுத்திக் கொள்ள வசதி செய்யப்பட்டது. வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைந்த முறையில் நிறைவேற்றுவதற்கு இம்முறை ஒரு பொருளாதாரக் கட்டுக்கோப்பைத் தந்ததுடன், கிராமப்புற மக்களின் உற்சாகம் பெருகி, பல்வேறு திட்ட வேலைகளுக்கு நன்கொடை (வரிகளை ஏற்றுக் கொள்வதுடன், நன்கொடையையும் சேர்த்து) அளிக்கும் மனப்பாங்கும் ஊர் மக்களிடையே பெருக நன்கு உதவியுள்ளது. ஊராட்சி ஒன்றியங்களின் வளர்ச்சிக்கு, வருவாய்கள், மானியங்கள் (சட்ட பூர்வமாகவும், சட்ட பூர்வமின்றியும்) வாயிலாக அரசிடமிருந்து கிடைக்கக் கூடிய உறுதி நிதி ஆதாரங்களை, ஊராட்சி வளர்ச்சித் திட்டவாரியான நிதி நிலைத் திட்டம் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. அதோடன்றி, உள்ளூர் மக்களின் நன்கொடைத் தொகை பெருகப் பெருக, ஊராட்சி ஒன்றியத்தின் வளர்ச்சி நிதியும் அதிகரித்தது.



சமுதாய வளர்ச்சி—ஊராட்சி வளர்ச்சியில் 12,627 ஊராட்சிகள், 597 பேரூராட்சிகள் மற்றும் 374 ஊராட்சி ஒன்றியங்களுக்கு 1976—77-இல் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ரூபாய் 116.25 கோடியாகும். இதிலிருந்து தமிழ் நாட்டில், ஊராட்சி வளர்ச்சித் திட்டங்களுக்குரிய நிதி நிர்வாகம் எவ்வளவு பெரிய அளவில் செயல்படுத்தப்படுகிறதென்பது தெளிவாகும்.

தமிழ்நாட்டில் பொருளாதார, சமுதாய வளர்ச்சிக்கு வேண்டிய முழுமையான திட்டங்களை மேற்கொள்வதில், கிராமத் திட்டங்களை விரைவாக, ஒருங்கிணைந்த முறையில் நிறைவேற்றுவது, ஒரு சிறப்பான முதன்மையிடத்தைப் பெறுகிறது. உணவை வழங்கி, சத்துணவை அளித்து, தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருள்களைத் தந்துதவும் வேளாண்மைக்கு முதலிடம் அளிப்பது மட்டும் இதற்கு ஒரு காரணமல்ல. மாநிலத்திலுள்ள 70 சத வீத மக்கள் கிராமப் புறங்களில் வாழ்வதனால், அப்பகுதி மக்களுக்கு, அதிலும் சிறப்பாகப் பெருமளவில் அங்கு வசிக்கும் ஏழை எளிய, நலிந்த மக்களுக்கு வளர்ச்சியினால் உண்டாகும் நன்மைகள் பரவலாக விரைவில் சென்று அடையவேண்டுமென்பதே இதன் உள் நோக்கமாகும்.

அண்ணல் காந்தி அடிகள் கண்ட கனவை நனவாக்கவும், அவர் கூறியவைகளை நிறைவேற்றவும் தமிழ்நாடு அரசு, சமுதாய மேம்பாட்டுப் பணிகளை 1952 முதலே தீவிரமாக நிறைவேற்றி வருகின்றன. குறிப்பாக 1960-ஆம் ஆண்டில் ஊராட்சி ஒன்றியங்கள் துவக்கப்பட்ட பின் கிராமங்களில் பல சாதனைகள் செய்யப்பட்டுள்ளன என்பதைப் பின் கண்ட புள்ளி விவரங்களில் இருந்து அறியலாம்.

**ஊராட்சி ஒன்றியங்களால் செய்யப்பட்ட ஒப்பறிய சாதனைகள்**

| | |
|---|---|
| அமைக்கப்பட்ட இணைப்புச் சாலைகளின் நீளம் (கி.மீ.) | — 36,720. |
| மேல்நிலை நீர்த் தொட்டிகள் (எண்ணிக்கை) | —6,630. |
| தோண்டப்பட்ட குடிநீர்க் கிணறுகள் (எண்ணிக்கை) | —78,060. |
| ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்திலுள்ள துவக்கப் பள்ளிகள் (எண்ணிக்கை) | —19,646 |
| ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்திலுள்ள உயர் துவக்கப்பள்ளிகள் (எண்ணிக்கை) | —3,166. |
| சொந்தக் கட்டடங்கள் உள்ள பள்ளிகள் (எண்ணிக்கை) | —17,890. |
| துவக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் (எண்ணிக்கை) | —382. |
| அமைக்கப்பட்ட தாய்சேய் நல விடுதிகள் (எண்ணிக்கை) | —2,813. |

மேற்கூறிய புள்ளி விவரங்களில் இருந்து தமிழ்நாட்டின் கிராமங்கள், திட்டத்தின் மூலம் மறுமலர்ச்சி பெற்று வருகின்றன என்பதும் அண்ணல் காந்தியடிகள் கண்ட கனவு தமிழ்நாட்டில் நனவாகி வருகிறது . என்பதும் தெளிவாகிறது.

# தமிழ்நாட்டில் கிராமக் குடிநீர் வசதித் திட்டங்கள்

"கிராமங்களில் ஒரே குளத்தின் நீர் வரைமுறையின்றி குளிக்கவும், துணி துவைக்கவும், குடி தண்ணீருக்கும், சமைக்கவும் பயன்படுத்தப்படுகிறது. பல கிராமங்களில் மாடுகளையும் இவற்றிலேயே குளிப்பாட்டுகிறார்கள். இந் நீர்நிலைகளில் எருமைகள் விழுந்து புரண்டு கொண்டிருப்பது நாம் அங்கே சாதாரணமாகக் காணக் கூடிய காட்சியாகும். இம்மாதிரி அக்கிரமம் செய்தும் கிராமங்கள் கொள்ளை நோய்களுக்கு இரையாகி, இன்னும் அழிந்து போகாதிருப்பது ஆச்சரியமே! கிராமத்தாரை வதைத்து வரும் பெரும்பாலான நோய்களுக்கு கிராமங்களில் சுத்தமான குடி தண்ணீருக்கு வசதி செய்வதில் போதிய கவனம் செலுத்தப்படாமையே முக்கிய காரணமென்பது வைத்தியர்களின் ஏகோபித்த அபிப்பிராயம்'' என்று அண்ணல் காந்தியடிகள் குறிப்பிட்டுள்ளார்.

ஆரம்ப காலம் முதலே, அண்ணலின் கொள்கைகளைச் செயல்படுத்துவதில் முன்னோடியாக விளங்கிவரும் தமிழ்நாடு அரசு கிராமக் குடிநீர் வசதித் திட்டங்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வந்துள்ளது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்தே, கிராமங்களுக்குக் குடிநீர் அளிக்க வேண்டியதின் அவசியம் தமிழ்நாடு அரசின் கவனத்தைப் பெற்று வந்துள்ளது.

கிராமப்புற குடிநீர் வழங்கும் திட்டங்களுக்கு முதலிடம் அளித்துச் செயலாற்றியுள்ள போதிலும் கூட, தமிழ்நாட்டில் குடிநீர் பிரச்சினையை முழு அளவில் தீர்க்க முடியவில்லை.

தமிழ்நாட்டில் உள்ள 4.11 கோடி மக்களில் 2.56 கோடி மக்கள் 58,595 கிராமங்களிலும், குக்கிராமங்களிலும் வசிக்கின்றனர். 1972-ஆம் ஆண்டுக் கணக்கின்படி இக்கிராமங்களில் 4,916 கிராமங்களில் நிலையான குடிநீர் ஆதாரங்கள் இல்லாமலும், 2,230 கிராமங்களில் உவர் நீர் அல்லது நீர் சம்பந்தப்பட்ட நோய்களைப் பரப்பும் அசுத்த நீர் கொண்டதாகவும், 11,816 கிராமங்களில் போதிய குடிநீர் வசதி இல்லாமலும் இருந்துள்ளன.

எனவே, இந்நிலைமையை மாற்றி எல்லாக் கிராமங்களுக்கும் விரைவில் நல்ல குடிநீர் வழங்க வேண்டும் என்ற இலட்சியத்துடன் 5-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கிராமப்புறக் குடிநீர்த் திட்டங்களுக்கு ரூபாய் 1,550 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு கிராமப்புறக் குடிநீர்த் திட்டங்களுக்காக நடப்பு ஆண்டிற்கு ரூபாய் 190 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும் வறட்சித் துயர் துடைப்புப் பணிகளின் கீழ், கிராமப்புற குடிநீர் திட்டங்களுக்கு முதலிடம் அளிக்கப்பட்டு கோடிக்கணக்கான ரூபாய் செலவிடப்பட்டு வருகிறது.

**7 கோடி ரூபாயில் குழாய்க் கிணறுகள் :**

சென்ற சில ஆண்டுக் காலங்களில் குடி தண்ணீர் வசதி அளிப்பதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தும், தற்போது மாநிலத்தில் அநேகமாக எல்லா மாவட்டங்களிலும் வறட்சி நிலை நிலவி வருவதன் காரணமாக ஆழமான குழாய்க் கிணறுகள்—என்றுமில்லாத அளவிற்கு பெருமளவில்—ஆயிரக் கணக்கான கிராமங்களில் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. 1—4—197[illegible] முதல் 30—9—1976 வரை 120 அடி முதல் 300 அடி ஆழம் வரை செல்லும் 6,70[illegible] குழாய்க் கிணறுகள் மாநில முழுவதும் அமைப்பதென முடிவு செய்யப்பட்டு ஒவ்வொரு குழாய்க் கிணறும் அமைக்க சுமார் ரூபாய் 10,000 செலவிடப்படுகிறது. இக் குழாய்க் கிணறுகளில் கைப்பம்புகள் பெரும்பாலும் பொருத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் கோவை மாவட்டத்தில், இக்கிணறுகளின் ஆழம் 250 அடி முதல் 300 அடி வரை செல்லுவதால் மின் விசைப் பம்புகள் பொருத்தப்பட்டுள்ளன. இதற்கான மொத்தச் செலவு சுமார் 7 கோடி ரூபாய் ஆகும்.

**ஐந்தாண்டுகளில் செய்யப்பட்ட சாதனையை ஆறே மாதத்தில் செய்து முடித்துள்ளது !**

சென்ற ஐந்தாண்டுகளில் குடிநீர் வசதி அளிக்கப்பட்ட கிராமங்களின் அளவிற்கு



கடந்த ஆறு மாதங்களில் குழாய்க் கிணறுகள் அமைத்ததன் மூலம் குடிநீர் வசதி செய்யப்பட்டிருக்கின்றது.

8—9—1976 முடிய 5,600 கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணி தேவைப்பட்டால் 1976 செப்டம்பர் மாதத்திற்கு அப்பாலும் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

தமிழ்நாட்டில் தற்போது ஆயிரக்கணக்கான குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ள காரணத்தால் அவற்றை அவ்வப்போது பழுது பார்க்கவும், பராமரிக்கவும் ஒரு நிறுவனத்தை அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஆகவே அரசாங்கம் முதன் முறையாக ஆண்டொன்றுக்கு ரூபாய் 30 இலட்சம் செலவில் இதற்கென ஒரு பராமரிப்பு நிறுவனத்தை அமைத்துள்ளது. இத்திட்டத்தின்படி நூற்றுக்கு மேற்பட்ட குழாய்க் கிணறுகள் உள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு ஃபிட்டர், (Fitter) நியமிக்கப்படுவார். ஆயிரம் பம்பு செட்டுகள் உள்ள பகுதிகளை மேற்பார்வையிட ஒரு இளநிலைப் பொறியாளரைக் கொண்ட நடமாடும் பராமரிப்புக் குழு ஒன்று அமைக்கப்படும். அவர்கள் வசதிக்கு ஒரு ஜீப் வண்டி கொடுக்கப்படும்.

**ஒருங்கிணைந்த கிராமக் குடிநீர்த் திட்டம்!**

குழாய்க் கிணறுகள் அமைக்கும் இப்பெரும் திட்டம் துவக்கப்பட்டிருந்தும், தமிழ்நாட்டின் பல பகுதிகளில், குறிப்பாக, கடற்கரைப் பகுதிகளில் நிலத்தடி நீர் உவர்ப்பாக



இருப்பதால், இவற்றின் பயனை முழுவதும் அடைய முடியாமல், இருக்கின்றது. இப்பிரச்சினைக்கு ஒரே தீர்வு, இத்தகைய கிராமங்களுக்குச் சில கிலோ மீட்டர்களுக்கு அப்பால் அமைந்துள்ள குடிப்பதற்கு ஏற்ற நீர் ஆதாரம் கொண்ட இடத்தில் குழாய்க் கிணறுகளை அமைத்து, மின்விசைப் பம்பு பொருத்தி, நில மட்ட நீர்த் தொட்டிகளில் நீரைச் சேகரித்துக் குடிநீர் வழங்க வேண்டும். அல்லது ஒரு பொது நீர் நிலையிலிருந்து ஒருங்கமைந்த இத்தகைய கிராமங்களுக்குக் குடிநீர் வசதியளிக்க வேண்டும். இவ்வாண்டுதான் இத்தகைய திட்டத்தை முதன் முதலாகச் செயல்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத்தில் ரூபாய் 37.35 இலட்சம் செலவில் 46 கிராமங்களுக்கு இத்தகைய குடிநீர் அளிக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்திருக்கின்றது. இராமேஸ்வரத்தைச் சுற்றியுள்ள ஆறு கிராமங்களுக்கும் ரூபாய் 1.9 இலட்சம் செலவில் வேலைகளைத் துவக்க அரசு அனுமதித்திருக்கின்றது. இராமேஸ்வரம் திட்டம் ஆறு வார காலத்தில் மிக விரைவாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது. ஒட்டப்பிடாரம் திட்டம் அக்டோபர் மாதம் 15-ஆம் தேதிக்கு முன்பே முடிவடையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தினால் பெற்ற அனுபவத்தின் காரணமாகவும், இந்திய அரசு அளித்த உதவியின் காரணமாகவும் இத்தகைய ஒருங்கமைந்த திட்டங்கள் இராமநாதபுர மாவட்டத்திலுள்ள திருவாடானை, மற்றும் தேவகோட்டை ஒன்றியங்களில் நூறு கிராமங்களுக்குப் பயன்படும் வகையில் ஒரு கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். தூத்துக்குடி ஒன்றியத்தில் 26 கிராமங்களுக்கு ரூபாய் 38 இலட்சம் செலவிலும், விளாத்தி குளத்தில் 36 கிராமங்களுக்கு ரூபாய் 40 இலட்சம் செலவிலும் இத்தகைய திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டங்களைப் பராமரிக்கும் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

**3 ஆண்டுக் காலத்திற்குள் எல்லா கிராமங்களுக்கும் நல்ல குடிநீர் கிடைக்கும்!**

நல்ல குடி தண்ணீர்த் திட்டங்களைப் பெறுவதற்கு ஆயிரக்கணக்கான கோரிக்கைகள் இவ்வாண்டு வந்ததன் காரணமாக இம்மாநிலத்தில் குடிநீர் கிடைக்கும் நிலைமை பற்றி மறு ஆய்வு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டு உள்ளது. ஊராட்சி ஒன்றிய ஊழியர்களின் உதவியுடன் இந்த ஆய்வு தற்போது மேற்கொள்ளப்பட்டு, 1977 ஜனவரி மாதத்திற்கு முன் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆய்வு முடிவு கிடைத்ததும், தண்ணீர்ப் பற்றுக்குறை உள்ள பகுதிகளுக்கும், வறட்சிப் பகுதிகளுக்கும் மூன்றாண்டுக் காலத்திற்குள் குடிநீர் கிடைக்கும்படி ஒரு ஒருங்கிணைந்த திட்டம் நிறைவேற்றப்படும்.

எனவே, அண்ணல் காந்தியடிகள் கூறிய வழியில் கிராமங்களுக்குக் குடிநீர் வசதி அளிப்பதில் தமிழ் நாடு அரசு முன்னோடியாக விளங்குகிறது என்பதில் ஐயமில்லை.

# ஏழை எளியவர்களின் கடன் சுமை தீர்ந்தது!




**1976-ஆம் ஆண்டின் தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டத்தின்படி, ஆண்டு குடும்ப வருமானம் ரூபாய் 2,400-க்கு மேற்படாத கிராம மக்கள் பட்ட கடன்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.**


வெளியீடு : செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

# விவசாயத் தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஊதியம்!

| | பெரியவர் கூலி ரூ. பை. | சிறியவர் கூலி ரூ. பை. |
|---|---|---|
| ஏர் உழ (சொந்த எருது, கலப்பையுடன்) | 9.00 | — |
| ஏர் உழ (பண்ணையாரின் எருது, கலப்பையுடன்) | 5.00 | — |
| விதை விதைத்தல், நாற்றுப் பறிக்க .. | 5.00 | 3.00 |
| நாற்று நட, களை எடுக்க .. | 3.50 | 2.10 |
| அறுவடை செய்ய .. | 5.00 | 3.00 |
| பால் கறக்க, கோழி வளர்க்க, வரப்பு கழிக்க, எரு சுமக்க, தேனீ வளர்க்க, பயிற்சி பெற்ற பிற பணிகளுக்கு | 5.00 | 3.00 |
| கால்நடை வளர்க்க | 3.50 | 2.10 |
| பயிற்சி பெறாத பிற பணிகளுக்கு | 3.50 | — |

வேலை நேரம் : உழவு 5 மணி நேரம். பிற பணிகள் 7 மணி நேரம்.

நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தைக் குறைத்துக் கொடுப்பது குற்றமாகும்! இக்குற்றத்திற்கு 6 மாதம் வரை சிறைத்தண்டனை அல்லது 500 ரூபாய் வரை அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும்!

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.


ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.



# அரசு-மிகவுயர்ந்த தரமான

## போர்ட்லேண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனுல் கட்டப்படும் எதையும் திண்மையும், தீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புகள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

### தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்

ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

## அரசு -வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16



# தமிழரசு

16—10—1976

மலர் : 7 இதழ் : 8


## இந்த இதழில்.....


| | பக்க எண் |
|---|---|
| காடுகளையும், விலங்குகளையும் காத்திடுவோம்! .. .. | 2 |
| வருங்காலத் தலைமுறையினருக்காக வனவிலங்குகளைக் காப்போம்! .. | 3 |
| வன விலங்குகளைப் பாதுகாக்க உறுதி கொள்வோம்! .. .. | 4 |
| இன்றையத் தமிழ்நாடு .. .. | 5 |
| களக்காடு வனவிலங்குச் சரணாலயம் | 9 |
| தமிழ்நாட்டின் வனவிலங்குகளைக் காணவாரீர்! .. .. .. | 13 |
| தமிழ்நாட்டின் குடும்ப நலத்திட்ட இலக்கு .. .. .. .. | 17 |
| குடும்ப நலத் திட்டத்தை ஊக்குவிக்க அரசு அளிக்கும் புதிய சலுகைகளும், சலுகை மறுப்புகளும் .. | 18 |
| சாதனைப் புகழை நிலை பெறச் செய்வீர்! .. .. .. | 19 |
| நல்வாழ்வு-குடும்ப நலத்துறையின் நற்பணிகள் .. .. .. | 20 |
| படமும் செய்தியும் .. .. | 24 |
| தேசிய மக்கள் தொகைக் கொள்கை | 29 |
| வன விலங்கு (பாதுகாப்பு) சட்டம்—1972 .. .. .. | 31 |
| பிளாஸ்டிக் பொருள்களை உருவாக்க பயிற்சி தரும் நிலையம் .. .. | 37 |
| குடும்ப நலத் திட்டத்திற்கு மதம் தடையாக இல்லை! .. .. | 40 |
| தமிழ்நாட்டில் குடும்பநல முனைப்பு இயக்கம் .. .. | 41 |
| வன உயிரினங்களைப் பாதுகாத்து நாட்டின் வளம் பெருக்குவோம்! | 45 |
| மறக்க முடியாத நினைவுகள்! .. | 47 |



*கட்டுரையாளர்களின் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளி அல்ல.*




## நமது தேசிய விலங்கு

இந்தியாவின் தேசிய விலங்கு எது? புலிதான்!

இந்திய வன விலங்கு வாரியம் புலியை இந்தியாவின் தேசிய விலங்காக அறிவித்திருக்கிறது.

கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக இந்தியக் காடுகளில் உள்ள விலங்குகளில் புலி எல்லாருடைய கவனத்தையும் ஈர்த்து வந்துள்ளது. மறைந்து வரும் இந்த அரிய வனவிலங்கை அழிவிலிருந்து காப்பாற்றிப் பராமரிப்பதற்காகவே இதனை தேசிய விலங்காகத் தெரிந்தெடுத்து கௌரவித்திருக்கிறார்கள்.

புலி, அறிவியல், பொ ளாதாரம், கலாசாரம், உயி வாழ்க்கைச் சூழ்நிலை போன் பல துறைகளிலும் முக்கியத் வம் பெற்றிருப்பதும், க கவர் வனப்புடன் திகழ்வது அதை இந்தப் பீடத்துக் உயர்த்தியிருக்கிறது.

இந்த நூற்றாண்டின் து கத்தில் சுமார் 50,0C புலிகள் இருந்தன. ஆ இன்று இந்த இனமே அழி போய்விடுமோ என்ற நி ஏற்பட்டிருக்கிறது. பு வேட்டையைத் தடை செ யும் சட்டம் இந்தியாவில் போது அமலில் உள்ளது.

# காடுகளையும், விலங்குகளையும் காத்திடுவோம்!



"மக்கள் பெருக்கம் அதிகரிக்கும் போது விவசாயத்துக்கு மேலும் மேலும் நிலங்கள் தேவைப்படுகின்றன. அதன் விளைவாக மரங்கள் அழிக்கப்படுகின்றன. மரங்கள் அழிக்கப்படுவது காலமாறு பாடுகளைக் கொண்டு வருகிறது. நிலம் வறண்டு, சில ஆண்டுகளில் கனிசமான கெடுதல்கள் ஏற்படுகின்றன. நம் நாட்டில் நிறைய வெள்ளப் பெருக்குகள் ஏற்படுகின்றன. இதற்குக் காரணம் இதுதான். மரங்கள் அழிக்கப்படுவதால், ஆறுகள் நிறைய மண்ணை அரித்துச் செல்கின்றன. அவை கரையோரங்களில் படிகின்றன. அதன் விளைவாகத் தண்ணீர் எங்கும் பரவுகிறது. எனவே, காடுகளைப் பாது காக்க நாம் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

"சுகாதாரத்துக்கும் நாம் போதிய கவனம் செலுத்த வேண்டும். சுகாதாரக் கேடான சூழ்நிலைகளின் காரணமாகவே நோய்கள் தோன்றிப் பரவுகின்றன. ஆகவே, நம் சொந்த சுகாதாரத்தில் மட்டுமின்றி, வீடு, சுற்றுப்புறம் மற்றும் நாடு முழுதுமே சுத்தமாக இருப்பதில் கவனம் செலுத்த வேண்டும். சமீபத்திய கண்டுபிடிப்புகளின்படி, மிருகங்களைக் கொல்வது கூடக் கெடுதல்களைக் கொண்டு வருகிறது. காரணம், இயற்கைச் சமநிலையை அது பாதித்து விடுகிறது. இயற்கையில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு குறிப்பிட்ட பணி உண்டு. நாம் ஒதுக்கித் தள்ளும் குப்பையும், கூளமும் கூடப் பயனுள்ள உரமாகிறது. எதுமே வீணாகாத வகையில் உலகம் உருவாக்கப்பட்டுள்ளது. பாகுபாடின்றி மிருகங்களைக் கொல்வதைத் தடுக்க நாம் உறுதி பூண வேண்டும்.

—இந்திரா காந்தி



# வருங்காலத் தலைமுறையினருக்காக வன விலங்குகளைக் காப்போம் !

## ஆளுநர் வேண்டுகோள்



"வன விலங்குகளையும், அவை வசிக்கும் காடுகளையும் வருங்காலத் தலைமுறையினருக்காகப் பாதுகாக்க வேண்டும். பொருளாதார சமூகத் தேவைகளையொட்டி மனிதன் உணவுக்காகவும், இயற்கை வசதிகளுக்காகவும் வனங்களை ஆக்கிரமித்தான். இதனால் வனச்செல்வமும், பல அரிய விலங்கினங்களும் சேதமடையாமல் தடுப்பதற்காக விடுக்கப்பட்ட எச்சரிக்கைகளை மனிதன் பொருட்படுத்தவில்லை. நம் கண் முன்பே அழகு வாய்ந்த பூமியிலிருந்து அரிய விலங்கினங்கள் மறைந்துபோவதைக் காண்கிறோம்.

"உண்மை நிலையை அறிந்து நமது கடமையை நாம் இன்னும் செய்யவில்லை. வன விலங்குகளைப் பாதுகாப்பதன் அவசியத்தை நாம் நினைவு படுத்திக் கொள்ளவே ஆண்டுதோறும் வன விலங்கு வாரத்தைக் கொண்டாடுகிறோம். இவ்வாண்டு தமிழ் நாட்டில் நாம் இத்துறையில் தனி முயற்சி மேற்கொண்டுள்ளோம். அபூர்வ 'சிங்க வால் குரங்குகளை'ப் பாதுகாக்க நெல்லை மாவட்டம் களக்காடு 'ரிசர்வ்' காட்டில் சரணாலயம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளோம். சென்னை கிண்டி பூங்கா, நாட்டிலேயே கடலோரக்காடுகளில் ஒரு பகுதியாகும். இங்கு வன விலங்குகளைப பாதுகாக்க, இப்பூங்காவை தேசிய பூங்காவாக அறிவிக்கவும் நாங்கள் முடிவு செய்துள்ளோம். இப்பூங்காவில் கரும் மான், புள்ளி மான்கள் உட்பட பல்வேறு ரக தாவரங்களும் வன விலங்குகளும் உள்ளன. நமது வனப் பகுதிகளையும் சரணாலயங்களையும் தீவிரமாகக் கண்காணித்து வருகிறோம்.

வன விலங்குகளைப் பாதுகாப்பதில் மேலும் கவனம் செலுத்துமாறு தமிழக மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன். குறிப்பாக இளைஞர்களுக்கு இந்த வேண்டுகோள் பொருந்தும், மிருகங்கள் மாத்திரமின்றி தேனீக்கள், வண்ணாத்திப் பூச்சிகள், பறவைகள், மீன், மற்றும் எல்லா விதமான உயிரினங்களிடமும் அவர்கள் அன்புகாட்ட வேண்டும். வன விலங்குகள் பற்றிய அறிவு வளர்ந்தால்தான், வன விலங்குகளிடம் அன்பு வளரும். இதில் ஆசிரியர்களுக்கு விசேஷ பொறுப்பு உண்டு. தங்களிடம் கல்வி பயிலும் மாணவர்களுக்கு வன விலங்குகள், அவற்றின் வாழ்க்கை முறை, வாழும் இடங்கள் பற்றிய அறிவைப் புகட்ட வேண்டும்.

வன விலங்குகளுக்கான இந்திய போர்டு எடுத்துக்கொண்டுள்ள உறுதி மொழியைத் தமிழக மக்கள் நிறைவேற்ற வேண்டும்.







## வன விலங்குகளைப் பாதுகாக்க உறுதி கொள்வோம்!

வனவிலங்கு வாரத்தைக் கொண்டாடுவது, வன விலங்குச் செல்வங்களைப் பாதுகாத்து வருங்காலத் தலைமுறையினருக்கு அவற்றை விட்டுச் செல்ல வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்துவதற்காகவேயாகும். நாம் வன விலங்குகளின் பாதுகாவலர்கள், அவற்றை நம் விருப்பப்படி எல்லாம் அழிக்கக்கூடாது என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். தமிழ்நாட்டில் வன விலங்கு வாரம் கொண்டாடப்படுவது, வன விலங்குகளை பாதுகாக்க வேண்டியதின் அவசியத்தை மக்கள் உணரும்படிச் செய்துள்ளது மகிழ்ச்சிக்குரியதாகும். ஜனாதிபதி ஆட்சிக்குப் பிறகு சிங்கவால் குரங்குகளுக்காக சரணாலயம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளதுடன், சாத்தனூர் அணையில் முதலைப் பண்ணை ஒன்றையும் அமைக்க இருக்கிறோம். நாம் இன்னமும் ஆற்ற வேண்டிய பணிகள் பல உள்ளன. எனவே, இந்தச் சந்தர்ப்பத்தில் வன விலங்குப் பாதுகாப்பின் அவசியத்தை மாநில முழுவதும் விளக்கிப் பிரச்சாரம் செய்ய உறுதி கொள்வோமாக.

—பி. கே. தவே,
ஆளுநர் ஆலோசகர்

இயற்கை தனது சட்ட திட்டப்படி இயங்குகிறது! அதை மதித்துப் பராமரிக்க வேண்டிய கடமை நமக்குள்ளது. ஈவு இரக்கமின்றி அழிக்கப்பட்டது காரணமாக பல விலங்கு, பறவை இனங்கள் அரிதாகிவிட்டன. இந்த வன விலங்குகளை அழிப்பதற்கு கூறப்படும் தார்மீக, விஞ்ஞான, பொருளாதார காரணங்கள் சரியானவை அல்ல.

வனத்துறையினர் இந்த ஆண்டு வன விலங்கு வாரவிழாவை சிறப்பாகக் கொண்டாடுவது பற்றி மகிழ்ச்சி அடைகிறேன். வன விலங்குகளைப் பாதுகாக்க நாம் மீண்டும் உறுதி கொள்வோமாக.

—வி. கார்த்திகேயன்,
தலைமைச் செயலாளர்,
தமிழ்நாடு அரசு.



# இன்றைய தமிழ்நாடு

—K. R. நாயர்,
முன்னாள் தலைமைச் செய்தியாளர்,
பி.டி.ஐ., சென்னை.

தனது முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ள பிரச்சினைகளைக் கொண்டுள்ள ஒரு நாட்டுக்கு, உள்நாட்டுக் கலகம் என்னும் அபாயத்தைச் சந்திக்க நேரும் போது அதைச் சமாளிக்க அந்நாட்டிற்கு ஒரே ஒரு வழிதான் உள்ளது. அதாவது, சட்டபூர்வமாக ஏற்படுத்தப்பட்டுள்ள அந்நாட்டின் அரசுக்குத் தனது வல்லமை முழுவதையும் பயன்படுத்தி உள்நாட்டுக் கலகத்தை அடக்குவதைத் தவிர வேறு வழி இல்லை.

ஓராண்டுக் காலத்திற்கு முன்பு நாட்டில் நிலவிய நிலைமை மிகவும் அபாயகரமானதாக இருந்தது. அரசிலா நிலை, அழிவு ஆகியவற்றின் பாதையில் நாடு செல்லுவதை, எந்த அரசும் பார்த்துக் கொண்டு, சோம்பலுடன் உட்கார்ந்து கொண்டிருக்காது! இந்நிலை ஏற்படுவதற்குக் கருவியாக இருந்தவர்கள், நமது மக்களைத் தவறான பாதையில் அழைத்துச் செல்ல நமது அரசியல் அமைப்பு அளித்துள்ள சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தி ஒரு குழப்பமான நிலையை நாட்டில் ஏற்படுத்தினர். அந்நிலையில்தான் தங்களுடைய உச்ச வலதுசாரி பிற்போக்குக் கொள்கைகள் நிலைத்து நிற்கவும், தழைத்தோங்கவும் முடியும் என்று எண்ணினர். பிற்போக்குக் கொள்கையுடையவர்களால் விடுக்கப்பட்ட சவாலுக்கு, நெருக்கடி நிலை அறிவிப்பே தர்க்க ரீதியான பதிலாக அமைந்தது.

நெருக்கடி நிலை திடீரென்று வந்துவிடவில்லை. அது, தக்க நேரத்தில் நாட்டை முழு அழிவிலிருந்து தடுத்தது.

தமிழ்நாட்டில் நிலவிய நிலைமையோ, இருமடங்கு அபாயகரமானது. நாட்டின் வேறு சில இடங்களில் தங்களது தேர்தலில் தோல்வியுற்றதன் மூலம் குழப்பத்திற்கு உள்ளான சில அரசியல் கட்சிகள், பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் தலைமையிலான அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்து கொண்டிருந்தபோது, தமிழ்நாடு அரசு தனது பரிவு எங்கே நிலைத்துள்ளது என்பதை ஒளிவுமறைவின்றி காட்டிக் கொண்டிருந்தது. தி.மு.க. அமைச்சர்களும், தி. மு. கழகத்தின் முக்கிய செயலாளர்களும், நெருக்கடி நிலையைப் பற்றியும், பிரதமரின் 20 அம்சப் பொருளாதாரத் திட்டம் பற்றியும் கீழ்த்தரமாக அடிக்கடி பேசி வந்தனர். மத்திய அரசு தலையிட்டு, இக்குறும்புத் தனத்தை நிறுத்தியிருக்க முடியும். ஆனால், மத்திய அரசு, ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசுக்கு எதிராகச் செயல்பட விரும்பாமல், தி. மு. க. அரசைத் தொடர்ந்து ஆட்சியில் இருக்க அனுமதித்தது. இதனால், நெருக்கடி நிலை, 20 அம்சத் திட்டம் ஆகியவற்றின் பயன்களை அனுபவிப்பதற்கு முன்பாக 7 மாத காலம், ஆளத் தகுதியற்றவர்களின் ஆட்சியில் தமிழக மக்கள் அடங்கிக் கிடக்க நேர்ந்தது.

இக்கட்டுரையின் ஆசிரியரால் பேட்டி காணப்பட்ட சென்னை நகரத்தின் மக்களும், சென்னையைச் சுற்றியுள்ள கிராமப்புற மக்களும் நெருக்கடி நிலையால் ஏற்பட்ட நன்மைகளில், நெருக்கடி நிலை ஏற்பட்டபின் நிலவி வரும் முழு அமைதியே தலையாயது என்று புகழ்ந்து கூறியுள்ளனர். நெருக்கடி நிலை அறிவிக்கப்படுவதற்கு முன்பு, ஆளுங்கட்சியினரின் பாதுகாப்புப் பெற்றிருந்த ரவுடிகள் சுதந்திரமாக நடமாடினர். தி. மு. கழகத்தின் தலைவர்கள், தங்களுடைய சொந்த விருப்பு வெறுப்புக்கேற்ப அலுவலர்களுக்கு-காவலர் உட்பட-ஆணையிட்டு வந்தனர். அவர்களுடைய அட்டூழியம் தற்பொழுது அறவே ஒழிந்துவிட்டது. குழப்பம் விளைவிக்க வேண்டும் என்ற நோக்குடன், மக்கள் உணர்ச்சிகளைக் கிளறி விடும் சொற்பொழிவாளர்கள் கலந்து கொள்ளும் பொதுக்கூட்டங்கள், கெட்ட கனவைப் போல் மறைந்து விட்டன.

இந்தக் கட்டுரையின் ஆசிரியர் கிராமப்புறத்தில் சந்தித்த ஒரு விறகுக் கடை வியாபாரியும், ஒரு விவசாயியும் தவறானவைகளையே செய்து கொண்டிருந்தவர்களின் வாழ்க்கையைக் கட்டுப்படுத்தவும், தி. மு. க. ஆட்சியில் தழைத் தோங்கிய ரவுடித் தனத்தை அறவே ஒழிக்கவும் பிறப்பிக்கப்பட்ட மிசாடத்தை வரவேற்றனர்.

### விலைவாசி

ஏறுமுகமாகவிருந்த இன்றியமையாப் பொருள்களின் விலைவாசி இறங்குமுகமாக மாறியதும், அவ்விலைவாசி நியாயமான நிலையில் நிலவியதும், நெருக்கடி நிலையினால் ஏற்பட்ட இரண்டாவது மற்றும் சம முக்கியத்துவம் வாய்ந்த, நன்மையாகும். அரசாங்கப் புள்ளிவிவரங்கள் இதைத் தெளிவுபடுத்துகின்றன. அரிசி கொள்முதல் 8.5 இலட்சம் டன்கள் அளவை எட்டியது; விலைவாசி, 30 முதல் 40 சத அளவுக்குக் குறைந்தது. தாவர எண்ணெய் மற்றும் உளுத்தம் பருப்பு ஆகியவற்றின் விலையும், அவை கிடைப்பதும் நல்ல கட்டுப்பாட்டில் உள்ளது. உணவு தானியங்களில் பற்றாக்குறையே இல்லை. வியாபாரிகள் தாங்களே மனமுவந்து விலைவாசியைக் குறைத்துள்ளனர்.

### புதிய ஒழுக்கம்

தொழிற்சாலைகளைப் பொறுத்த வரையில் நெருக்கடி நிலை சிறந்த விளைவினை ஏற்படுத்தியுள்ளது. தொழிற்சாலைகளில் உற்பத்தி பெருகியுள்ளது. தொழிலாளர்-நிருவாகத்தினருக்கிடையே இருக்க வேண்டிய உறவை முன்பு அச்சுறுத்தி வந்த வேலைநிறுத்தங்களும், கதவடைப்புகளும், 'கேரோ'க்களும், மிரட்டல்களும் தற்பொழுது இல்லை. 'எப். ஐ. சி. ஐ.'யின் தலைவரான திரு எம். வி. அருணாசலத்தின் கருத்துப்படி, நெருக்கடி நிலை நல்ல நம்பிக்கையை உருவாக்கியுள்ளதுடன் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரத்தன்மை, முன்னேற்றப் பாதையில் திட்டமிடவும், தொழில் வளர்ச்சிக்குத் தேவையான நிதி ஒதுக்கிடவும் உதவியுள்ளது. அவருடைய கருத்துப்படி, பணவீக்கத்துக்கு எதிராக வெற்றிகரமாகப் போராடியதே, நெருக்கடி நிலையால் ஏற்பட்ட மிக முக்கியமான பொருளாதார இலாபமாகும். நெருக்கடி நிலை மட்டும் இல்லாதிருக்குமானால், வளர்ச்சி விகிதத்தில் அபாயகரமான வீழ்ச்சி ஏற்பட்டிருக்கும்.

கடந்த ஓராண்டுக் காலத்தில் தமிழ்நாட்டில் உள்ள இந்திய அரசின் வலியுறுத்தி நடைமுறைப்படுத்தும் ஏஜன்சிகள் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கி, பல்வேறு பொருளாதாரக் குற்றங்களைக் கண்டு பிடித்துள்ளன. வருமான

வரித் துறையின் செயல் திட்டங்களில் சிறப்பான ஒன்று, வருமானம் பற்றிய சுய அறிவிப்புத் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் அறிவிக்கப்படாத வருமானம் மற்றும் செல்வம் பற்றிய 12,307 அறிவிப்புகள் வெளிவந்தன. இவ்வாறு தெரிவிக்கப்பட்ட வருமானத்தின் மொத்த மதிப்பு ரூபாய் 163 கோடியாகும். அதிலிருந்து கிடைத்த வருமானவரி ரூபாய் 19 கோடியாகும். இவ்வகையில் இந்த ஆண்டில் கூடுதல் வரியாக ஏறத்தாழ 50 கோடி ரூபாய் கிடைக்கும்.

கள்ள மார்க்கெட்காரர்கள், பதுக்கலில் ஈடுபட்டுள்ளவர்கள், சமுதாயத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் ஆகியவர்களிடம் வருமானவரி வேட்டையைத் தொடர்ந்து நடத்தி அவர்களைக் கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருந்ததின் காரணமாகவே, நாடெங்கிலும் வருமானம் பற்றிய சுய அறிவிப்புகள் நிகழ்ந்தது போலவே, தமிழ்நாட்டிலும் நடைபெற்றுள்ளன என்று வருமானவரித் துறையைச் சார்ந்த ஒரு அலுவலர் இக்கட்டுரை ஆசிரியரிடம் கூறியுள்ளார். சுய அறிவிப்புத் திட்டத்தின்கீழ் தங்களுடைய உண்மையான வருமானம், மற்றும் செல்வம் பற்றித் தெரிவிக்க முன்வராதவர்களைப் பற்றிய உளவுகளைச் சேகரித்துக் கொண்டு, வருமானவரி வேட்டையாடுவதில் வருமானவரித் துறை கவனம் செலுத்தி வருகிறது. ஆடம்பர பங்களாக்களின் சொந்தக்காரர்கள், அப் பங்களாக்களைக் கட்டுவதற்குச் செலவிட்ட தொகையை முழுமையாகத் தெரிவிக்கவில்லையெனில், அந்த ஆடம்பர பங்களாக்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டன என்றும் அவ்வலுவலர் கூறினார். சுய அறிவிப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்ட காலத்தில், இந்த ஆய்வு நிறுத்தி வைக்கப்பட்டது.

வருமான வரித்துறையினரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் காரணமாக, புதிதாக வருமான வரிச் செலுத்துபவர்கள் தோன்றியுள்ளார்கள் என்றும், வருமான வரிச் சட்டத்தை மீறுவதால் ஏற்படும் பல தீமைகள் ஏற்படக்கூடும் என்ற பயத்தின் காரணமாகப் பலர், தங்களுடைய வருமானம் பற்றிய விவரங்களைத் தாமாகவே தெரிவிக்க முன்வந்துள்ளனர் என்றும் அவ்வலுவலர் மேலும் கூறினார்.

வருமானவரி விதிப்பு பற்றிய அதிகாரம் பெற்றவர்களுடன்கூட சுங்கம், மத்தியத் தீர்வை, வலியுறுத்தி நடைமுறைப்படுத்தும் இயக்ககம், மத்தியப் புலனாய்வுத் துறை மற்றும் மாநில இலஞ்ச ஒழிப்புப் பிரிவு ஆகியவைகளும் சுறுசுறுப்பாக இயங்கின. அவர்களின் ஒருங்கிணைந்த செயற்பாடுகளினால் ஏற்பட்ட முக்கிய விளைவு கள்ளத்தனமாகவும் வஞ்சகமாகவும் கிடைத்த வருவாய்க்குப் பதிலாக அங்கீகரிக்கப்பட்ட துறைகளின் மூலமாகப் பெருமளவுக்கு அந்நிய நாட்டுப் பணம் நம் நாட்டிற்குக் கிடைத்ததாகும்.

அயல்நாட்டுப் பொருள்களைக் கடத்தி வந்தவர்களுக்கு எதிராக சுங்கத்துறையினர் மேற்கொண்ட தீவிர நடவடிக்கைகளின் காரணமாக, அத்தகைய பொருள்கள், விற்பனைக் கூடங்களில் கிடைப்பது குறைந்து விட்டன. நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்ட பிறகு 11 மாத காலத்தில் 4,985 கடைகளும், ஸ்டால்களும், கிடங்குகளும், வீடுகளும் சோதனையிடப்பட்டு ரூபாய் 8.61 இலட்சம் மதிப்புள்ள பொருள்கள் கைப்பற்றப்பட்டன. நெருக்கடி நிலை அறிவிக்கப்படுவதற்கு முன்பாக அதே காலத்தில் 1,827 சோதனைகள் செய்யப்பட்டு, ரூபாய் 12.47 இலட்சம் மதிப்புள்ள பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று சுங்கத்துறை அலுவலர் ஒருவர் சென்னையில் குறிப்பிட்டுள்ளார். நெருக்கடி நிலைமை அறிவிக்கப்படுவதற்கு முன்பு 127 கப்பல்களே சோதனையிடப்பட்டிருக்க, நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்ட பிறகு 294 கப்பல்கள் சோதனையிடப்பட்டுள்ளன. அக்கப்பல்களிலிருந்து கைப்பற்றப் பெற்ற பொருள்களின் மதிப்பு ரூபாய் 8.45 இலட்சத்திலிருந்து ரூபாய் 7.95 இலட்சமாகக் குறைந்துள்ளது. கள்ளக் கடத்தலை ஒடுக்கத் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தாலும், கைப்பற்றப் பெற்ற பொருள்களின் மதிப்பு குறைந்துள்ளன என்று அவர் சுட்டிக் காட்டினார். இது, கடத்தல் பொருள்கள் நம் நாட்டிற்கு வருவது பெருமளவில் குறைந்துள்ளது என்பதைக் காட்டுகின்றது.

அந்நியச் செலாவணியைத் தவறாகப் பயன்படுத்துவோர் (சொத்துக்களைப் பறிமுதல் செய்தல்) சட்டத்தின்கீழ், நோட்டீஸ் அனுப்புவதற்காக 24 பேர்களின் சொத்து மதிப்பு விவரங்கள், இதுபற்றி முடிவெடுக்கும் அதிகாரம் பெற்றவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

தென் ரயில்வேயைப் பொறுத்தவரையில், நீண்ட தூரம் செல்லும் ரயில்களின் காலத்தவறாமையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், நெருக்கடி நிலைமையால் ஏற்பட்டுள்ள நேரடிப் பயனாகும். 1974-75 ஆம் ஆண்டில் 84.1 சதமாக இருந்த காலந்தவறாமை, 1975-76-ஆம் ஆண்டில் 91.4 சதமாக உயர்ந்துள்ளது. டிக்கட் இல்லாமல் பயணம் செய்வோர்களைத் தடுக்கவும், தண்டிக்கவும் தொடர்ந்து முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

முன்பே குறிப்பிட்டுள்ளது போல், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமலுக்கு வந்த பிறகுதான் நெருக்கடி நிலையின் பயன்கள் முழு அளவில் உணரப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் கல்வி நிறுவனங்களில் அடிக்கடி அமைதியின்மையை ஏற்படுத்தி வந்த மாணவர் ஒழுங்கீனம், நெருக்கடி நிலைமை ஏற்பட்டவுடன் மறைய ஆரம்பித்தன. வேலைநிறுத்தங்கள், 'ரேக்கிங் (Ragging) போன்ற கொடிய விளையாட்டுக்கள் ஆகியவைகளை எல்லாம் மறந்து, மாணவர்கள் ஒழுக்கத்துடன் நடந்து கொள்கின்றனர்.

20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தைச் செயல்படுத்துவது காலங்கடந்த நிலையிலேயே தமிழ்நாட்டில் துவக்கப்பட்டது. ஏனென்றால், தி. மு. க. அரசு, ஆட்சிப் பொறுப்பில் இருந்து அகற்றப்படும் வரை 20 அம்சத் திட்டத்தில் புதிதாக ஒன்றும் இல்லை என்றும், உண்மையில் அவர்கள் செய்து முடித்த திட்டமே 20 அம்சத் திட்டம் என்றும் சாதித்து வந்தனர். இந்தச் சூழ்நிலையில், மாநில நிருவாக அமைப்பில் நிலவிய நிலைமையை-பிப்ரவரி 1-ஆம் நாள் பொறுப்பை ஏற்றுக் கொண்ட போது ஆளுநர் ஆலோசகர்கள் கண்ட நிலைமையை-ஆராய்வது அவசியமாகும்.

தி. மு. க. ஆட்சி, நிருவாகத்தை முறையற்றதாகவும், ஒழுங்கற்றதாகவும் ஆக்கியிருந்ததை ஆலோசகர்கள் கண்டனர். இலஞ்சம் கீழ்மட்டத்திலிருந்தே- அதாவது கிராம அதிகாரிகள், முறைகாவல் பணிக்காகச் செல்லும் காவலர் ஆகியோர் நிலையிலிருந்தே காணப்பட்டது. முடிவு எடுக்கும் உயர்மட்ட நிலையில், அதிகாரிகள் கீழ்ப்படிவோராக ஆகினர். உயர் பதவியில் அமர்த்தப்பட்டிருந்த அலுவலர்கள்கூட சட்டப்புறம்பான செயல்களுக்கு வழிகோலும் இலஞ்சம், உறவினர்களுக்குக் காட்டும் தனி ஆதரவு, சாதகமாக நடத்தல் போன்ற செயல்களில் இணைந்து காணப்பட்டனர். சிபாரிசு செய்யக் கூடாதென்றும் ஆனால் உண்மை நிலவரத்தை மட்டுமே தெரிவிக்க வேண்டும் என்றும் அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். அலுவலர்கள், மாற்று யோசனைகளைத் தெரிவித்து, அவற்றில் எது உகந்தது என்பதைத்தான் கேட்கலாம். இது கேலிக்குரிய நிலையாகும். இதனால் எப்பொழுதும் திறமையில் சிறந்து விளங்கிய அலுவலர்களும், இந்திய அரசு நிலையில் தலைசிறந்து விளங்கிய அலுவலர்களும்கூட தங்களுடைய ஆர்வத்தை இழந்து மந்தமாயினர்.

தி. மு. க. அரசு, மாநில நிதி ஆதாரங்களை மோசமான நிலைக்குத் தள்ளியது. ஆதாரங்களைப் பெருக்க, திட்டக்குழுவிற்கு அளித்த உறுதிமொழிகள் காப்பாற்றப்படவில்லை. அது, நிதி நிறுவனங்களில் இருந்து உதவி பெறலாம் என்ற நம்பிக்கையுடன், குறைந்தபட்சப் பங்குத் தொகையுடன், கார்ப்பரேஷன் அல்லது வாரியத்தைத் தோற்றுவித்தது. அத்தகையவை 48 இருந்தன. ஆனால் அவைகள் தங்களுடைய திட்டங்களைச் செயல்படுத்துவதில், பெயருக்கேற்பச் செயல்படவில்லை.

எதுவும், நெருக்கடி நிலை உணர்வுடன் செய்யப்படவில்லை. பொதுமக்களிடையே புகழ்பெற வேண்டுமென்ற நோக்கத்துடன் தி. மு. க. ஆட்சி, பல திட்டங்களைத் துவக்கியது. ஆனால் அவைகளுக்குரிய மூலதன வசதிகளையோ அல்லது அவைகளை நிறைவேற்றுவதற்குரிய நிறுவனம், விருப்பம், உறுதி ஆகியவைகளையோ பெற்றிருக்கவில்லை.

மதுவிலக்கை மீண்டும் கொண்டு வரவும், குதிரைப் பந்தயத்தை ஒழிக்கவும் தி. மு. க. ஆட்சி எடுத்த முடிவு வெறும் கொள்கை முழக்கமே என்பதையும் ஆலோசகர்கள் அறிந்தனர். மதுவிலக்கு மீண்டும் புகுத்தப்பட்டபொழுது குடிப்பதற்குத் தகுதியற்ற தன்மையுடைய ஸ்பிரிட் உற்பத்தி செய்வதற்கான உரிமம் (Denatured Spirit) இலவசமாக வழங்கப்பட்டது. அந்த ஸ்பிரிட் உண்மையிலேயே குடிப்பதற்குத் தகுதியுடையதாகும். அது கள்ளச்சாராய வணிகர்களுக்கு உதவியது. தீர்வை வரியும் ஏமாற்றப்பட்டது. குதிரைப் பந்தய ஒழிப்பிற்குப் பின்னால் உள்நோக்கம் உள்ளது. ஆகவே, இவ்விரு வகையிலும் அரசு மேற்கொண்ட முடிவு, வெளித்தோற்றத்திற்கு முன்னேற்றமானவையாகத் தோன்றினாலும், கோட்பாடில்லாததாகும்.

அரசின் ஆதாரங்களிலிருந்து 20 அம்சத் திட்டத்தைப் பொறுத்த வரையில் வெளிவேஷமே போடப்பட்டு வந்துள்ளது. இத்திட்டத்தில் சில அம்சங்கள், இத்திட்டம் அறிவிக்கப்பட்ட பிறகுதான் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும், மாநில அரசு வேண்டுமென்றே அவற்றைப் பற்றிய குறிப்பைத் தவிர்த்ததுடன் அவைகளைப் பிரபலப்படுத்துவதில் மத்திய அரசின் தலைமையை ஏற்க மறுத்தது.

கோயம்புத்தூர் மாநாட்டில் கட்சி நிறைவேற்றிய தீர்மானங்கள், அதனுடைய பிரிந்து போகும் மனப்பான்மையை வற்புறுத்திய பிறகே, மத்திய அரசு இதுபற்றி முடிவு எடுக்க வேண்டி வந்தது.

நிருவாகத்தை மேம்படுத்துவதில் தற்பொழுது ஆலோசகர்கள் சுறுசுறுப்பாக ஈடுபட்டுள்ளனர். 20-அம்சத் திட்டத்தை முழுமூச்சுடன் நிறைவேற்ற நிருவாக இயந்திரங்கள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

## குழந்தைகளுக்கு வேண்டுகோள்

பெரும்பாலான மற்ற இந்தியர்களைப் போலவே நானும் முதலில் பறவைகளை அவ்வளவாக லட்சியம் செய்யவில்லை. பின்னர் திரு. ஸலீம் அலியின் ரசமான புத்தகத்தை டேராடூன் சிறையிலிருந்து என் தந்தையார் அனுப்பிய போதுதான், முற்றிலும் புதிய உலகம் ஒன்று இருப்பது என் கண்ணுக்குப் புலனாயிற்று. எவ்வளவு அரிய விஷயங்களை அறியத் தவறி விட்டோம் என்பதை அப்போதுதான் உணர்ந்தேன்.

பயனுள்ள காரியங்களுள் ஒன்று பறவை ஆராய்ச்சி. அதில் நம் உள்ளம் லயித்து விடுகிறது. பல்வேறு பட்சி வகைகளையும், அவை கூடுகட்டி வாழும் முறைகளையும், அவற்றின் குரல் வகைகளையும் முதலில் தெரிந்து கொள்கிறோம். பிறகு அவை எல்லாம் சின்னஞ் சிறு தனி நபர்கள் என்பதையும், ஒவ்வொரு பட்சிக்கும் சொந்தமான குண விசேஷங்கள் உண்டு என்பதையும் படிப்படியாக உணர்கிறோம்.

ஆரம்ப கட்டத்தில் பறவைகளை முன் மாதிரியாகக் கொண்டே மனிதர்கள் பறப்பதற்கு முயற்சிகள் செய்தனர். இவ்விஷயத்தில் அவற்றுக்கு நவீன நாகரிகம் கடன்பட்டிருக்கிறது.

இன்னமும், நமது நகரங்களில் கூட, பறவைகள் காணப்படுகின்றன. அவற்றுடன் கூடி வாழ நமக்குக் கொடுத்து வைத்திருக்கிறது. மற்ற நாடுகளில் ஏதாவது பறவையைப் பார்க்க வேண்டுமானால் கிராமங்களுக்குத்தான் போகவேண்டும். பறவைகளை இனங் கண்டு அவற்றுடன் நட்புக் கொள்ள நம் குழந்தைகள் தெரிந்து கொள்ளவேண்டும்.

—இந்திரா காந்தி

இவ்வகையில் முன்பே நடைபெற்றுள்ள பணிகளையும், இனி நடைபெறவிருக்கும் பணிகளையும் பற்றி அரசு ஆதாரங்கள் அளித்துள்ள விவரம் வருமாறு:

தமிழ்நாட்டில் 3,600 கிராமங்களில் வறட்சி நிலவுவதால், நீர்ப்பாசனத் திட்டங்களை விரைவாக நிறைவேற்ற வேண்டியது புதிய வேகம் பெற்றுள்ளது. இந்த ஆண்டில் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்குரிய மொத்த ஒதுக்கீடு ரூபாய் 350 இலட்சத்திலிருந்து ரூபாய் 500 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. 5 நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக எடுத்துக் கொள்ளப்படும். அவைகளில் 3, வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும்-மதுரை மாவட்டத்தில் ஒன்றும், திருநெல்வேலி மாவட்டத்தில் இரண்டுமாக-வறட்சியால் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வரும் தருமபுரி மாவட்டத்தில் 2-மாக நிறைவேற்றப்படும். இத்திட்டங்கள் 20,000 ஏக்கர்களுக்குப் பாசனமளிக்கும். இத்திட்டங்களுக்கு ரூபாய் 950 இலட்சம் செலவாகும்.

வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் குடிநீர் வசதி அளிக்கும் திட்டம் விரைவாக நடந்து வருகிறது. கடந்த பிப்ரவரி, மார்ச்சு மாதங்களில் 500 ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்டப் பெற்றன. இத் திட்டத்தின்கீழ் ஜூலை வரை மேலும் 2,400 குழாய்க் கிணறுகள் தோண்டப் பெற்றன. செப்டம்பர் முடிவதற்குள் மேலும் 3,300 குழாய்க் கிணறுகள் தோண்டப் பெறும். இத் திட்டத்திற்காக முன்பே ரூபாய் 290 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. செப்டம்பர் மாதத்திற்குள் இவ்வகையில் செலவிடுவதற்காக மேலும் ரூபாய் 300 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

செங்கற்பட்டு மாவட்டம் சோமங்கலத்தில் ஊரகச் சீரமைப்புத் திட்டப் பணிகள், முன்னோடி அடிப்படையில், முன்னேறி வருகின்றன.

கடந்த பிப்ரவரிக்கும் ஏப்ரலுக்கும் இடைப்பட்ட காலத்தில் 1092 ஏக்கர் நிலம் உபரியாக அறிவிக்கப்பட்டது. 3,757 ஏக்கர் நிலத்தை உடைமையாக அரசு ஏற்றுக் கொண்டது; 4,293 ஏக்கர் நிலம், ஒப்படை செய்யப்பட்டது. இதனால் மொத்தம் 6,149 பேர்கள் பயனடைந்துள்ளனர். 1976 ஏப்ரல் இறுதியில் 19,304 ஏக்கர் நிலம் நிலப்பட்டா வழங்குவதற்காகக் கிடைத்தது. நிலப்பட்டா வழங்கும் பணியை; விரைவு படுத்துவதற்காக, வருவாய் வாரியம் ஒரு முனைப்பு இயக்கத்தைத் துவக்கியுள்ளது.

பிப்ரவரி முதல் மே மாதம் வரையான காலத்தில் 32,763 வீட்டுமனைகள் ஒப்படை செய்யப்பட்டுள்ளன. இக்காலத்திற்கு முந்திய 3 மாதத்தில் 11,840 வீட்டுமனைகள் மட்டுமே ஒப்படை செய்யப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும். கடந்த ஆண்டில், அரிசன மக்களுக்கு வீட்டுமனை வாங்குவதற்காக ரூ. 25 இலட்சம் ஒதுக்கப்பட்டிருந்ததற்கு மாருக, இந்த ஆண்டிற்கு (1976-77) ரூபாய் 50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இம்மாநிலத்தில் 2,400 பேர்கள் கொத்தடிமையிலிருந்து விடுபட்டுள்ளனர். அவர்களில் 579 குடும்பங்களுக்கு நிலமும், உழவு மாடு, கலப்பைகள் முதலியன வாங்க நிதி உதவியும் அளிக்கப்பட்டுள்ளன.

கூட்டுறவு நிறுவனங்களால் அளிக்கப்பட்டு வந்த கிராமப்புறக் கடன்வசதிகள் அதிகப்படுத்தப்பட்டுள்ளன. நகைக்கடன் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 350 இலட்சத்திலிருந்து ரூபாய் 1500 இலட்சத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

சிறுவிவசாயிகள், கைவினைஞர்கள் மற்றும் விவசாயிகளல்லாதோர் ஆகியோர்களிடமிருந்து 1977 ஜனவரி வரை கடன் வசூலிப்பதை நிறுத்தி வைப்பதற்காக கொண்டு வரப்பட்ட தடைச் சட்டம் அவர்களின் பெரும் துயரைத் தீர்த்துள்ளது.

அரிசன, பிற்பட்ட வகுப்பு மாணவர் விடுதிகளில் தங்கி, நுகர்பொருள்துறை மூலம் குறைந்த விலையில் உணவு தானியங்களையும், இதர நுகர்பொருள்களையும் பெறும் திட்டத்தினுல் பயன்பெறும் மாணவர்களின் எண்ணிக்கை, 36,523-லிருந்து 37,522-க்கு உயர்ந்துள்ளது. கல்லூரிகளுடன் இணைந்துள்ள 246 விடுதிகளில், 204 விடுதிகள் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களால் பயனடைகின்றன. மீதியுள்ள விடுதிகளும் விரைவில் இவ்வகையில் பயனடையும்.

பாடப்புத்தகங்கள் மற்றும் எழுதுபொருள்களை மலிவு விலையில் வழங்கும் திட்டத்தின் முக்கியத்துவத்தை மனத்திற்கொண்டு, தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு பாடநூல் நிறுவனம், 1 முதல் 11 வரையான வகுப்புகளுக்குரிய பாடப் புத்தகங்களை வெளியிடுகிறது. அடக்கவிலையைப் போல் 3 மடங்கு விலையில் தனி வெளியீட்டாளர்களால் விற்கப்படும் போது, தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் பாடநூல்களை, அடக்கவிலையைப் போல் 1.5 மடங்கு விலையில் விற்கின்றன. குடியரசுத் தலைவர் ஆட்சிக்குப் பிறகே குறைந்த விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

நிலச் சீர்திருத்தத்தைப் பொறுத்தவரையில், குடியரசுத் தலைவர் ஆட்சி அமலுக்கு வந்ததிலிருந்து பாராட்டிற்குரியபணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அவைகளில் முக்கியமானவை:

(1) பயிரிடும் சாகுபடியாளர்களை பாதுகாப்பதற்காக ஒரு அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அச்சட்டம் சொந்த சாகுபடி செய்வதற்கென்று கூறி, பயிரிடும் சாகுபடியாளரிடமிருந்து நிலத்தைத் திரும்பப் பெறுவதில் நிலச்சுவான்தாரருக்குள்ள உரிமையை ரத்து செய்து விட்டது.

(2) கிராமப்புறக் கைவினைஞர்களுக்கும் குடியிருப்பு அனுபோக உரிமை வழங்குவதற்குரிய சட்டத்தை உருவாக்கத் திட்டமிடப்பட்டு வருகிறது.

(3) நில டிரிபியூனல்களில் முடிவு பெருமல் உள்ள நிலச் சீர்திருத்த வழக்குகளை விரைவில் விசாரித்து முடிவு எடுக்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நீதிமன்றங்களின் தடை ஆணைகளால் 15,000 ஏக்கர் நிலம் பற்றி முடிவு செய்ய முடியாத நிலையிலுள்ளது.

நெருக்கடி நிலையின் காரணமாக அரசு ஊழியர்களிடம் நல்ல உணர்வு எழுந்துள்ளது. அவர்கள் உண்மையிலேயே பொதுமக்களின் ஊழியர்களே என்பதையும், அவர்களுடைய முழுத்திறமையையும் பயன்படுத்தி பொதுமக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்பதையும் நெருக்கடி நிலை உணரச் செய்துள்ளது. அலுவலகத்திற்குத் தவருது வரும் ஊழியர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தகுந்த வகையில் முன்னேறியுள்ளது. எல்லா அரசு அலுவலகங்களிலும், காலந்தவருமையே ஊழியர்களின் கண்ணேட்டமாக உள்ளது.

இருபது அம்சத் திட்டம், மனிதாபிமான நடவடிக்கையின் எல்லா அங்கங்களையும் தொட்டுள்ளது. எனவே தமிழக மக்கள் அனைவராலும் வறுமையை வென்றிட உதவும் ஒரு சக்தி வாய்ந்த கருவியாக இருபது அம்சத் திட்டம் வரவேற்கப்பட்டுள்ளது.

[நன்றி : 'யோஜனு' 1-9-1976 தேதிய இதழ்].



# களக்காடு வனவிலங்குச் சரணலயம்


பி. கந்தசாமி, ஐ.ஏ.எஸ்.,
செயலாளர்,
வனத்துறை மற்றும்
மீன்வளத்துறை,
தமிழ்நாடு அரசு.


**1972**-ஆம் ஆண்டு வனவிலங்குப் (பாதுகாப்பு) சட்டம் தமிழ்நாட்டில் 1974 ஜனவரியில் அமலுக்கு வந்தது. இச்சட்டத்தின் 18-வது பிரிவின்கீழ் அறிவிக்கப்பட்ட முதல் சரணலயம் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள களக்காடு வனவிலங்கு சரணலயமாகும். 1976 மார்ச் 6-ஆம் தேதி வனங்கள் மற்றும் மீன் வளத்துறை அரசு ஆணை எம். எஸ். எண். 183-ன் கீழ் இது அரசிதழ் மூலம் அறிவிக்கப்பட்டது. களக்காடு 'ரிசர்வ்' காடுகள் முழுவதும் சரணலயம் ஆகியது. சிம்மவால்களைக் கொண்ட கருங்குரங்குகளைப் பாதுகாப்பதே இதன் முக்கிய நோக்கம்.

சாலைகளும், கிராமங்களும் இல்லாமல் மனித சஞ்சாரமும் இல்லாமல் வன விலங்குச் செல்வங்கள் நிறைந்த காடுகள் இந்தியாவில் மிகச் சிலவே எஞ்சியுள்ளன. இந்த மாதிரி அரிய இடங்களில் களக்காடு 'ரிசர்வ்' காடுகளும் அவற்றின் பக்கத்திலுள்ள வீரப்புலி 'ரிசர்வ்' காடுகளும் அடங்கும். சிங்கம்பட்டி காடு ஏற்கெனவே புலிகளுக்கான வனவிலங்கு சரணலயமாக அறிவிக்கப்பட்டு[illegible]ளது. மேற்குத் தொடர்ச்சி ம[illegible]யின் கிழக்கு உச்சிச் சரிவில் க[illegible] காடு வனம் அமைந்துள்ள[illegible] இந்த இடத்தில்தான் திருநெ[illegible] வேலி, கன்னியாகுமரி மாவட்ட[illegible]கள் சந்திக்கின்றன. அடிமலை[illegible] பகுதி பாறுங் கற்கள் நிறைந்த[illegible] கூர்மையான தாள்களைக்கொண்[illegible] புற்கள், முட் புதர்கள் காணப்[illegible]கின்றன. இப்பகுதியில் கர[illegible] சிறுத்தை, கடமான்கள், மலை[illegible] பாம்பு முதலியவை வசிக்கின்ற[illegible] பெரிய பாறைகளுக்கு மத்திய[illegible] வற்ருத நீரோடைகள் [illegible]

காண்டிருக்கின்றன. நீர் வீழ்ச் களிலிருந்து தண்ணீர் பாய் ன்றது. நீரோடைகளின் இரு றமும் மாமரங்கள், நாவல் ரங்கள் அடர்ந்து காணப்படு ன்றன.

ஒருவர் அறுநூறு மீட்டர் உய த்திற்கு மேலே சென்று பார்த் ால் எல்லாம் மாறிவிட்டதைப் பான்று காட்சி அளிக்கும். பள் த்தாக்கில் ஓடிக் கொண்டிருக் ம்நீரோடைகளைச் சுற்றிமட்டும் ச்சைப் பசேல் என்ற வனங்கள் ாணப்படுவதில்லை. குன்றுப் குதிகள் எங்கும் வெட்பப் பிர தச மரஞ் செடிகள் நிறைந்து ள்ளன. நாம் மேலே இருண்ட ாலைக்குச் செல்லச் செல்ல மிக டர்த்தியான காடுகள் பரவிக் டப்பதைக் காண முடிகிறது. 00 மீட்டர் உயரத்தில், அழ



ன நீரோடை, பச்சைப் பசே லன்ற சோலைகள் அருகே செங் ல்தேரி ஓர் ஒய்வு இல்லமாகத் கழ்கிறது.

தற்போதுள்ள எல்லாச் சோலை ளங்களும், நெருங்க முடியாத டுகளும் வனுந்திரப் பிரதேசத் ன் கீழ் வரலாம். இந்தப் பகுதி ர தொடர்ச்சியாக இல்லை. ங்காங்கே தனித்த பகுதிகளாகச் றிக் கிடக்கின்றன. இவைகளை ப்படியே பாதுகாக்க வேண்டும். ந்சோலைகளாகக் காட்சி தரும் ந்தப் பகுதி அதன் தொன் மக்கு ஒரு சான்று என்பதில் தேகமில்லை. நீண்ட நெடுங் லத்துக்கு முன்னரே பல வகைச் டிகள் மற்றும் விலங்குகளின் ைம வளர்ச்சிப் பகுதியாக

இது காட்சி தருகிறது. தொடர்பே இல்லாத இனங்களின் தோற்ற ஒற்றுமை மற்றும் பல்வேறு உடற்கூறு கொண்ட இனங்களு டன் ஒட்டுறவு கொண்டது போன்ற உயிரின வகைகள் இங்குக் காணப்படுகின்றன. சிம்மவால் கருங்குரங்கு நீலகிரிக் குரங்கு ஆகியவை நிறத்தைப் பொறுத்த வரை ஒரு வகையில் மலபார் ராட்சத அணில்களின் தோற்ற ஒற்றுமையைக் கொண்டிருக்கின் றன.

சிம்மவால் கருங்குரங்கு மன மனப்பான முதுகும், வெள்ளை நிறப் பிடரியும் கொண்டது. தென்னிந்தியாவில் வெட்பப் பிர தேசங்களிலுள்ள ஈரம் நிறைந்த பச்சைப் பசேல் காடுகளில் பண் டைக்காலம் இது சாதாரணமாகக் காணப்பட்டது. ஆனால் அண் மைக்காலத்தில் இது மிகவும் அரிதாகிப் போய்விட்டது. இதற்குக் காரணம் இதன் இறைச்சி தாது புஷ்டி மருந்துகள் தயாரிப்பதற்குச் சிறந்த ஒன்று என்ற கருத்தில் இது வேட்டை யாடப்பட்டது. இதன் கறுப்பு நிற மளமளப்பான மயிருக்கு நல்ல கிராக்கி இருப்பதாலும் இது கொல்லப்பட்டது.

இந்த அரிய விலங்கினத்தைப் பாதுகாக்கும் வகையில் களக்காடு 'ரிசர்வ்' காடுகளில் ஒரு சரணா லயம் அமைப்பதில் மத்திய அரசும் தமிழ்நாடு அரசும் தீவிர அக்கறை எடுத்துக் கொண்டன.

வெப்பப் பிரதேசங்களிலுள்ள ஈரமான பகுதிகளில் எப்போதும் பச்சைப் பசேல் என்றிருக்கும் அடர்ந்த காடுகளில் இந்த சிம்ம வால் கருங்குரங்குகள் வாழுகின் றன. இத்தகைய காடுகள் 650 மீட்டர் முதல் 1,100 மீட்டர் வரை உயரமுள்ள பகுதிகளில் காணப்படுகின்றன. இந்தக் காடு கள் தீபகற்ப இந்தியாவில் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் கர்நாடகத்தின் வடக்கு கனரா முதல் தமிழ்நாட்டின் கன்னியாகுமரி வரை மட்டுமே உள்ளன.

சிம்மவால் கருங்குரங்கு இருண்ட நிறமும், வெட்கப்படும் தன்மையும் கொண்டது. எனவே வெளியே அதிகமாக வராது. அப்படியே வந்தாலும் சாதாரண மாகப் பார்த்தால் கண்ணுக்குத் தென்படாது. எனவே இதைப் பார்ப்பதோ அல்லது இதைப் பார்த்ததாகக் கூறப்படுவதோ மிகவும் அரிது.

தமிழ்நாடு, கேரளம் ஆகிய மா நிலங்களில் தயாரிக்கப்படும் பிர பலமான கருங்குரங்கு இரசாய னம் இதன் இறைச்சியிலிருந்து தான் செய்யப்படுகின்றன. இந்த நோக்கத்திற்காக ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான குரங்குகள் ஆதிவாசி மக்களால் கொல்லப் படுகின்றன.

கியோட்டோ பல்கலைக் கழகத் தின் மானிடவியல் ஆய்வுக் கூடத்தைச் சேர்ந்த ஜப்பானிய நிபுணர் திரு. இகுமாரு சுகியாமா 1961-ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் 1963-ஆம் ஆண்டு பிப்ர வரி வரையான காலத்தின் முன்

ஒரு ஆய்வு ஒன்றை நடத்தினார். சிம்மவால் கருங்குரங்குகள் 1963-ல் சுமார் 1,600 தான் வாழ்கின்றன என்று அந்த ஆய் வின் மூலம் கணக்கிடப்படுகிறது. எனவே சிம்ம வால் கருங்குரங்கு விலங்கினம் அழிந்து போய்விடக் கூடிய சாத்தியக் கூறு உள்ளது. களக்காடு, பாபநாசம், வீரப் புலி 'ரிசர்வ்' காட்டுப் பகுதிகளில் இத்தகைய குரங்குகளின் எண் ணிக்கை தற்போது சுமார் 400 மட்டுமே. மலைச் சாரல் பகுதியின் சிறப்பான கூறுகளும், காடுகளின் தன்மைகளும் இந்த வகை வன விலங்குகள் வாழ்வதற்கு மிகவும் ஏற்றவைகளாகும். எனவே தற் போது பாதுகாப்பு அளிக்கப்பட் டுள்ளதால் இதன் எண்ணிக்கை வேகமாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வனப் பகுதியில் வாழும் மற்ற மிருகங்கள் பல வகையா னவை. மாமிசத்தைத் தின்று வாழும் புலி, வேங்கை, கருஞ் சிறுத்தை, குள்ள நரி மற்றும் காட்டு நாய்கள் இங்கே வாழ் கின்றன. இலை, தழைகளைத் தின்று வாழும் யானைகள், கடமான்கள், 'சீத்தல்' மான், எலி மான், குரைக்கும் மான், மற்றும் 'நீல கிரி' மான் வகைகளும் வசிக்கின் கின்றன. இவை தவிர மலைப் பாம்பு, ராஜ நாகங்கள், மற்றும் உடும்பு வகைகள் முதலிய ஊர் வனவைகளும் வாழ்கின்றன. வகை வகையான பல்வேறு இனப் பறவைகளும் இங்கே ஏராளமாக வாசம் செய்கின்றன.

எல்லா இன விலங்குகளுக்கும் தேவையான உணவு மற்றும் தண்ணீர் இங்கு பெருமளவு உள் ளது. ஆனால் இந்தப் பகுதிகளில் ஊடுருவி ஆக்கிரமிப்புச் செய்வ தும் ஆடுமாடுகளை மேய்ப்பதும் விலங்கினங்கள் பெருக்கத்துக்குத் தடையாகக் காணப்படும் அம்ச மாகும்.

சிம்மவால் கருங்குரங்குகள் வழக்கமாக 12 முதல் 20 பிரா ணிகள் கொண்ட கூட்டமாகத் தான் எங்கும் செல்கின்றன. சில வேளைகளில் ஆண் குரங்கு களையோ அல்லது காதல் ஜோடி களையோ தனியாகக் காண முடி யும். தற்போது களக்காடு ரிசர்வ் காட்டுப் பகுதியில் சிம்மவால் இனத்தைச் சேர்ந்த 100 குரங் குகள் வசிக்கலாம். இது வரை எந்தத் திட்டவட்டமான கணக் கெடுப்பும் நடத்தப்படவில்லை. இங்குள்ள குரங்குகளில் இரண்டு அல்லது மூன்று பிரிவுகள் இருக்க லாம். அவை நிச்சயமாக ஒன்றுக் கொன்று விரோத உணர்வு கொண்டதாக இருக்கும். ஒரு ஆணுக்கு 3 பெண் குரங்குகள் என்ற வகையில் ஆண்-பெண் இனங்களின் விகிதம் காணப்படு கிறது. இனப் பெருக்கம் மற்றும் மொத்த எண்ணிக்கை வளர்ச்சி ஆகியவை பற்றி இனிமேல்தான் ஆய்வு நடத்தப்பட வேண்டும். இந்த விலங்கினங்களின் ஆயுட் காலம் மற்றும் இறப்பு விகித ஆகிய விவரங்கள் தெரியவில்லை.

இந்த விலங்குகள் பயிர்களை அழிப்பதில்லை. இருப்பினு அவை வேட்டையாடப்படுகி றன. கேரளாவைச் சேர்ந் ஆதிவாசி மக்கள் இந்த விலங் களை அவற்றின் இறைச்சிக்கா வேட்டையாடுகின்றனர். அண் மைக்காலத்தில் வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம் இந்த வில கினத்துக்குத் தகுந்த பாதுகாப் அளித்து வருகிறது. இந்த விலங் களை அரசாங்கம் அறிவித்துள் நிலத்துக்கு வெளியே அல்ல உள்ளே எங்கு கண்டாலும் வே டையாடக் கூடாது. ஏனெனி இவை வன விலங்குப் பாதுகாப்பு சட்டத்தின் முதல் பட்டியலி காணப்படும் விலங்கினங்களை சேர்ந்தவை.



**நிர்வாகத்தின் நோக்கம் :**

1. சரணாலயத்தில் காண படும் சிம்மவால் குரங்கு இன த்தைச் சேர்ந்த விலங்குகளைப் பா காத்து அவற்றை அபிவிருத் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள

2. தேயிலைச் சாகுபடி, தோ ட்டப்பயிர் சாகுபடிகளுக்காக காட்டு மரங்களை வெட்டுவ காடுகளை அழித்துத் திருத்துவ ஆகியவற்றின் மூலம் இத்தகை வனவிலங்குகளின் இருப்பிட களை அழித்தொழிப்பது இ மேல் தடுக்கப்படும்.

3. விளையாட்டு அல்ல மருந்து அல்லது ஆராய்ச் முதலிய எந்த நோக்கத்துக்கா இருந்தாலும் இந்த வகை மிருக களை வேட்டையாடுவதைத் தன செய்து, அவற்றுக்கு பாதுகாப் அளிக்கப்படும்.

4. இந்த வகை விலங்கினத்தி வாழ்க்கை வரலாறு, உடற்கூ உணவுப் பழக்கங்கள் மற்ற இனப் பெருக்கத் தன்மைக குறித்து ஆய்வு நடத்தப்படும்.

இவ்வாறு அழிந்து போ கூடிய அபாயம் உள்ள விலங் னங்களின் ஒன்று இனிமேல் பா காக்கப்படும். இதற்காக எடுக் படும் நடவடிக்கைகள் மூல களக்காடு மலையுச்சிச் சரிவுகள் உள்ள இந்த அரிய சரணால தின் மூலம் அவ்விலங்குக மறைந்துவிடாமல் காப்பாற் படும். இதனால் திருநெல்வே மாவட்டத்திலுள்ள மணிமு தாறு, தாமிரபரணி ஆறுகளி பள்ளத்தாக்குகளும் மற்றும் வடி பரப்பும் காக்கப்படும்.

# அஞ்சலக வங்கியின்
# மாபெரும் பரிசுத் திட்டம்

**ஆண்டுக்கு இருமுறை**

**குலுக்கல்கள் ஜனவரியிலும் ஜூலையிலும் நடைபெறும்**

**ரூ. 20½ இலட்சத்திற்கு**
**11,116 பரிசுகள்**

*ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட 11,116 பரிசுகள் உண்டு.*

| | | | |
|---|---|---|---|
| | முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. 1,00,000 |
| 5 | இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. 50,000 |
| 10 | மூன்றும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. 20,000 |
| 100 | நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. 5,000 |
| 1,000 | ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. 500 |
| 10,000 | ஆறும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. 50 |

*ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.*

*உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெறாதவர்க்கும் அளிக்கப்படும்.*

*விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.*

**இயக்குநர்.**
**தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,**
**சென்னை-600 002.**




# தமிழ்நாட்டின் வனவிலங்குகளைக் காண வாரீர்!

**டி. ஜெய தேவ்,**
**ஐ. எப். எஸ்.,**
**வனத்துறைத் தலைமை அலுவலர்,**
**தமிழ்நாடு.**

"அமைதி தவழும் தமிழ்நாட்டுக்கு வருக'' என்று சுற்றுலா வளர்ச்சிக்கான சுவரொட்டிகள் மக்களை அழைக்கின்றன. தமிழ் மக்களின் அன்பார்ந்த உணர்வு, தமிழ் நாட்டின் அமைதியான சூழ்நிலை ஆகியவற்றுடன் தமிழ்நாட்டில் சுற்றுலா வருவோருக்கு மிகவும் அமைதி நிறைந்த இடங்களாக, வனப்பு மிகுந்த வன விலங்குகள் வாழும் பகுதிகள் விளங்குகின்றன. இந்தியாவின் ஒவ்வொரு வட்டாரமும் தனக்கே உரிய சிறப்புடன் உள்ளது. தமிழ் நாட்டிலுள்ள வன விலங்கு வாழும் இடங்கள் தமக்கெனத் தனிச் சிறப்புகளுடன் விளங்குகின்றன.

எந்த வகையான சுற்றுலாவையும் அபிவிருத்தி செய்வதற்கு, சுற்றுலாப் பயணிகளை குறிப்பிட்ட இடங்களுக்குச் சுற்றுலா செல்லுமாறு கோரி பெருமளவில் விளம்பரம் செய்யப்படுவதுடன் அப்பகுதிகளும் உள்ளீடான சிறப்புத் தகுதியைப் பெற்றிருக்க வேண்டும். அதாவது அப்பகுதிகள் அழகு கொஞ்சும் இடங்களையும் கலாச்சாரச் சிறப்புள்ளதாகவும், நில நூல் அமைப்புள்ளதாகவும், சுகமான சூழ்நிலை உள்ளதாகவும், செடி கொடிகள், பறவை விலங்கினங்களின் சிறப்புப் பெற்றதாகவும் விளங்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடம் சுற்றுலாப் பயணிகளை ஒரு முறை கவர்ந்து விட்டால்—அவர்கள் அந்த இடத்தின் உள்ளீடான சிறப்பை உணர்ந்து விட்டால் அதன் தொடர்ச்சியாக அவ்விடத்திற்குச் சுற்றுலா வருவோர் எண்ணிக்கை பெருமளவில் வளர்ச்சியடையும். அதற்கு அப்பகுதியில் பயணிகளுக்கான வசதிகள் தொடர்ந்து கிடைக்கச் செய்ய வேண்டும்.

தமிழ்நாட்டில் பல்வேறு வன விலங்குகளையும் கண்டு களிப்பதற்குச் சுற்றுலா வருவோர்க்கு ஓரளவு வசதிகளை தமிழ்நாடு வனத்துறை செய்து கொடுத்துள்ளது. நீர்ப் பறவைகளின் வாழ்க்கையை ஆராயும் சுற்றுலாக்காரர்களுக்கு வேடந்தாங்கலில் நீர்ப் பறவைகள் சரணாலயம் உள்ளது. சென்னை விமான நிலையத்திலிருந்து 80 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இந்த இடத்தில் வேடந்தாங்கல் இல்லம் என வன ஓய்வு விடுதி ஒன்று உள்ளது. இது சரணாலயத்திற்கு மிக அருகி
லேயே கட்டப்பட்டுள்ளது
பரந்து விரிந்து கிடக்கும் ஏரியி
உள்ள மரங்களில் கூடு கட்
வாழும் பறவைகளைக் கண்
மகிழ்ந்த பின் இந்த இல்லத்தி
தங்கி சுற்றுலாக்காரர்கள் களை
பாறலாம். நகரத்துச் சந்தடிக
லிருந்து விலகியுள்ள இந்த இட
தில் அதிகாலையிலும், அந்
சாயும்போதும் பறவைகள் அ
அலையாகப் பறந்து செல்வதையு
வருவதையும் கண்டு களிக்கலா

ரம்யமான சூழ்நிலையை ரசி
பதில் ஆர்வம் உள்ளவர்களுக்கு
தென்னிந்தியக் காடுகளி
அடர்ந்த பகுதிகளில் உள்
விலங்குகளைக் காண விரும்
வோர்க்கும் முதுமலை வனவிலங்
சரணாலயம் உள்ளது. நீலகி
மாவட்டத்திலுள்ள இந்த மு
மலை சரணாலயத்தில் யானைச் சவா
யும், ஜீப் வசதியும், முகாமிடு
ஏற்பாடுகளும் உள்ளன. 4 வ
ஓய்வு விடுதிகள், 2 மர வீடுக
கூடாரங்கள், தங்கும் வசதிக
போன்றவை உள்ளன.

சென்னை நகரின் மையப் பகு
யில் மனங்கவரும் ஒரு மா
பூங்கா உள்ளது. 1972-ஆ
வருட வன விலங்கு (பாதுகாப்
சட்டத்தின் கீழ் இதை ஒ
தேசியப் பூங்காவாக்கும் உத்தே
மும் உள்ளது. கருநிற மான்களு

புள்ளி மான்களும் இப்பூங்காவின் தனிச் சிறப்புகளாகும். அதற்குள் உள்ள குழந்தைகள் பகுதியும், சென்னை பாம்புப் பண்ணையும் சுற்றுலாப் பயணிகளை மேலும் கவர்வன ஆகும்.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள முண்டந்துறை புலிகள் சரணாலயமும், கிழக்குக் கடற்கரையில் தஞ்சை மாவட்டத்தில் கோடிக் கரையில் கருதிற மான், புள்ளி மான், நீர்ப் பறவைகள் ஆகியவற்றிற்காக உள்ள சரணாலயமும் முக்கியமானவைகளாகும்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் சமீபத்தில் அமைக்கப்பட்ட, ஆனைமலை வன விலங்கு சரணாலயம் அப்பகுதிக் காடுகளை உள்ளடக்கியுள்ளது. இந்த சரணாலயம் 958 கிலோ மீட்டர் பரப்புள்ளது. காட்டு மாடுகள், சிறுத்தைகள், காட்டுப் பன்றிகள், மான்கள், கருங்குரங்குகள் முதலிய பல்வேறு வகை விலங்குகளை இங்கு கண்டு களிக்கலாம்.

தமிழ்நாட்டில் சமீபத்தில் ஏற்படுத்திய சரணாலயங்களில் களக்காடு வன விலங்கு சரணாலயமும் ஒன்றாகும். இது திருநெல்வேலி ரயில் நிலையத்திலிருந்து 55 கிலோ மீட்டர் தூரத்திலுள்ளது. சிங்கவால் குரங்கு எனப்படும் ஒரு வகைக் குரங்கு







இனத்தின் பாதுகாப்புக்காகவே இந்தச் சரணாலயம் அமைக்கப்பட்டது. இந்த இனக் குரங்குகள் அழிந்து வருவதைத் தடுக்க இம்முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

வன விலங்குகளைக் காணும் சுற்றுலாவால் தமிழ்நாட்டுக்குப் பெருமளவில் வருமானம்கிடைக்க வாய்ப்புள்ளது. நாட்டுக்கு அன்னியச் செலாவணியும் கிடைக்கும். சுற்றுலா வளர்ச்சியால் பொருளாதாரம் பொதுவாக சீரடையும். வன விலங்குச் சுற்றுலா அபிவிருத்தி மூலம் வறுமையின் எல்லையிலே வாடும் பகுதிகளில் மக்களின் பொருளாதார வளம் பெருக வழி வகை ஏற்படும். வன விலங்குச் சரணாலயங்கள் தூர நாடுகளிலிருந்து சுற்றுலாக்காரர்களைத் தமிழ்நாட்டுக்கு ஈர்த்துள்ளது. சரணாலயத்தைச் சுற்றிலும் வாழும் மக்கள் வசதிகளைப் பெற இது உதவியுள்ளது. தமிழ்நாட்டில் வன விலங்குச் சுற்றுலா வளர்ந்து வரும் நிலையில் உள்ளது. தமிழகத்தில் செடி கொடிகள், பறவை வன விலங்குகளைக் காண வருமாறு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் தனி முயற்சிகள் தேவை. அரசின் சுற்றுலா, வனத்துறைப் பிரிவுகளின் இடைவிடா முயற்சியின் அடிப்படையில் சுற்றுலாக்காரர்களுக்கான வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டும். வன விலங்குகளைப் பாதுகாப்பதன் அவசியத்தை மக்கள் இப்போது அதிக அளவில் உணர்ந்துள்ளனர். வன விலங்குகளுக்கு ஏற்படக்கூடிய அபாயங்களை மக்களுக்கு உணர்த்தும் வகையில் வனவிலங்கு வாழும் பகுதிகளுக்கு அவர்கள் சுற்றுலா செல்ல ஊக்கம் அளிக்க வேண்டும். இதன் மூலம் வன விலங்குகளுக்கு ஏற்பட்டுள்ள அபாயங்களை அவர்கள் தெரிந்து கொள்ள முடியும். அதே சமயத்தில் அழகு தவழும் பகுதிகளில், அமைதியான சூழ்நிலையில் உண்மையான பொழுதுபோக்கு வசதியையும் மக்கள் பெற வாய்ப்பு ஏற்படும்.

## வன விலங்குகளைப் பாதுகாக்க நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய உறுதிமொழி

இயற்கைச் சக்தியை அடிப்படையாகக் கொண்டே மனித சமுதாயம் இயங்குகிறது. எனவே இயற்கைச் சூழ்நிலையைப் பாதுகாக்க வேண்டியதன் அடிப்படை முக்கியத்துவத்தை உணர்ந்து, மறைந்து வரும் வன விலங்குகளைக் காக்கவும், குறைந்து வரும் வனப்பகுதிகளைப் பேணவும் முழுமனதுடன் உறுதி ஏற்கிறேன்.

# இணைபிரியாதவை, இணையற்றவை!
# தீபாவளியும், கோ-ஆப்டெக்ஸ் துணிவகைகளும்!



தீபாவளிப் பண்டிகை விழாவுடன்
இணைந்ததே கோ-ஆப்டெக்ஸ்.
இந்தத் தீபாவளிக்கு உங்கள்
குடும்பத்தினர் அனைவருக்கும்
உகந்த ஏராளமான துணிவகைகள்
கோ-ஆப்டெக்ஸில்!
இப்பொழுதே சென்றிடுவீர்,
இனிதே வாங்கிடுவீர்!

கோ-ஆப்டெக்ஸில் எத்தனை
எத்தனையோ எழில் வண்ணத்
துணிகள்!

காஞ்சிபுரம், ஆரணி மற்றும்
கும்பகோணம் அசல் பட்டுச்
சேலைகள், உறையூர்,
கோயமுத்தூர், சேலம், மதுரை
கைத்தறி நூல் சேலைகள்,
சுங்கடி பிரிண்டுகள்
மற்றும் சின்னாளப்பட்டி சேலைகள்,
வேட்டிகள், துவாலைகள்,
லுங்கிகள், அலங்காரத்துணிகள்,
சட்டைத் துணிகள்,
உடுப்புகளுக்கான துணி
வகைகள்.

நீங்களும் — கோ-ஆப்டெக்ஸும் •
உங்கள் குடும்பமும் —
வண்ணத்துப் பூச்சியும் •
தரமேன்மையும் — நியாய
விலைகளும் (கோ-ஆப்டெக்ஸில்) •
பண்டைச் சிறப்பும் —
நவீன நளினமும் •
கோ-ஆப்டெக்ஸும் —
தீபாவளியும்
இணைபிரியாதவையன்றோ!

தீபாவளி
சிறப்புத் தள்ளுபடி
பருத்தி 10%
பட்டு 15%

22-9-76 முதல்
23-10-76 வரை



தீபாவளி வரையில்
ஞாயிற்றுக் கிழமைகளிலும்
விடுமுறை நாட்களிலும்
விற்பனை உண்டு.




நாட்டினுடைய நலத்தையும் வளத்தையும் பெருக்க நாம்கையாளும் உத்திகளிலெல்லாம் இன்றியமையாதது குடும்ப நலத்திட்டமேயாகும். நிறைவான நல்வாழ்வு அனைவருக்கும் கிட்டவேண்டுமென்பதுதான் குடும்ப நலத்திட்டத்தின் நோக்கம். குழந்தைகள் வேண்டவே வேண்டாம் என்பதற்காகக் குடும்ப நலத்திட்டத்தை நாம் வற்புறுத்தவில்லை. ஆனால் பிறந்துவிட்ட ஒவ்வொரு குழந்தையும் சிறந்த வாழ்வு பெறுவதற்கான வாய்ப்புக்கள் அனைத்தையும் பெற வேண்டுமென்பதற்காகத்தான் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நாம் இன்று பெற்றுள்ள வாய்ப்பு வசதிகள், வாழ்க்கை வளம் இவற்றைவிடச் சிறந்த, வளமான வாழ்வை நமது குழந்தைகள் பெற வேண்டுமென்பதே நமது விருப்பமாகும். இதுதான் ஒவ்வொரு தாய் தந்தையரின் குறிக்கோளும், திட்டமிட்ட வளர்ச்சிக்குரிய இலக்கும் ஆகும்!

—பிரதமர் இந்திரா காந்தி

# தமிழ்நாட்டின் குடும்பநலத் திட்ட இலக்கு!

தமிழ் நாட்டிற்கான 1976-77-ஆம் ஆண்(
குடும்ப நல இலக்கு, 1975-76-ஆம் ஆண்டு
குரிய இலக்கு போல் இரு மடங்கு ஆக்கப்ப
டுள்ளது. அந்த அடிப்படையில் தமிழ் நா(
இந்த ஆண்டு 6 இலட்சம் அறுவைச் சிகிச்சைக
செய்து முடிக்க வேண்டுமென்றும், 40,00
தாய்மார்களுக்குக் கருத்தடை வளைய
பொருத்த வேண்டுமென்றும் இலக்கு நிர்ண
யிக்கப்பட்டுள்ளது. அது பற்றிய மாவட்
வாரியான விவரம் பின்வருமாறு :

1976—77-ஆம் ஆண்டிற்கான இலக்கு

| மாவட்டம் | நடப்பு ஆண்டில் நடத்தி முடிக்க வேண்டிய அறுவைச் சிகிச்சைகள் | நடப்பு ஆண்டில் கருத்தடை வளையம் பொருத்தப் படவேண்டிய தாய்மார்க |
|---|---|---|
| செங்கல்பட்டு (வடக்கு) | 22,500 | 1,490 |
| செங்கல்பட்டு (தெற்கு) | 19,840 | 1,330 |
| கோயமுத்தூர் | 57,700 | 4,095 |
| தர்மபுரி | 20,420 | 1,765 |
| கன்னியாகுமரி | 17,800 | 1,370 |
| மதுரை | 57,360 | 3,715 |
| நீலகிரி | 7,190 | 740 |
| வடஆர்க்காடு | 54,710 | 3,560 |
| இராமநாதபுரம் | 31,660 | 2,785 |
| சேலம் | 43,580 | 2,900 |
| தென் ஆர்க்காடு | 52,680 | 3,440 |
| தஞ்சாவூர் | 55,920 | 3,630 |
| திருச்சிராப்பள்ளி | 56,050 | 3,640 |
| திருநெல்வேலி | 26,620 | 3,080 |
| சென்னை நகரம் | 75,970 | 2,460 |

# குடும்பநல திட்டத்தை ஊக்குவிக்க அரசு அளிக்கும் புதிய சலுகைகளும், சலுகை மறுப்புகளும்

தமிழ்நாடு அரசு குடும்ப நலத் திட்டத்தினை ஏற்போருக்கு ஊக்குவிப்புச் சலுகையும், ...ற்காதோர்க்கு சலுகை மறுப்பினையும் ...காண்ட மற்றொரு பல்நோக்கு உத்தியினை ...ற்றுக்கொள்ள முடிவெடுத்துள்ளது, அவ்...ாறு முடிவெடுக்கப்பட்டுள்ள ஊக்குவிப்புச் ...லுகையும், சலுகை மறுப்பும் பின் வருமாறு:

### அரசு ஊழியர்களுக்கு

1. இரண்டு அல்லது அதற்குக் குறை...ன குழந்தைகள் உள்ள ஊழியர்களுக்கும், ...ழியரோ அன்றி அவர் தம் கணவர் அல்லது ...னைவி அறுவைச் சிகிச்சை செய்திருந்தாலும், ...வர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தால் விடு...துக்கீடு செய்வதிலும், வீட்டு மனை வழங்குவ...லும், கார், ஸ்கூட்டர் போன்றவைகள் ...ாங்குவதிலும், வீடு கட்டுவதற்கான அரசின் ...டன் பெறுவதிலும் முன்னுரிமை வழங்கப்...பெறும். இரண்டு குழந்தைகள் அன்றி ...தற்குக் குறைவாக குழந்தை உள்ள அரசு ...ழியர் இத்தகைய சலுகையைப் பயன்...டுத்திக் கொண்ட பிறகு, மூன்றாவது குழந்தை ...பெற்றெடுத்தால், அவர் வாங்கிய, கடன் ...ல்லது முன் பணத் தொகைக்கு தண்டனைக்...ரிய அதிகப்படியான தொகை வசூலிக்கப்...டும்.

2. அரசுத் துறை பெண் ஊழியர்களுக்கு ...ம்பளத்துடன் கூடிய பேறு கால விடுமுறை, ...தல் மூன்று குழந்தைகளுடன் கட்டுப்படுத்...ப்படும்.

3. தமிழ்நாடு மருத்துவ வசதிகள் அளிப்...து பற்றிய விதிகளின்படி, (Tamil Nadu Medi-... Attendance Rules) பெண் ஊழியர்களுக்கோ ...ன்றி ஊழியர்களின் மனைவியர்க்கோ உரித்...ான பேறுகாலச் சலுகைகள், முதல் மூன்று ...ழந்தைகளுடன் கட்டுப்படுத்தப்படும்.

4. தமிழ்நாடு மருத்துவ வசதிகள் ...ளிப்பது பற்றிய விதிகளில் (Tamil Nadu ...dical Attendance Rules) வரையறுக்கப்பட்...ான, நோயினின்றும் பாதுகாப்புப் பெறும் ...லவச மருத்துவ வசதி, முதல் மூன்று குழந்...தைகளுடன் கட்டுப்படுத்தப்படும். இருப்...பினும், இந்த ஆணை பிறப்பிக்கப்படும் தேதி...ல் எவருக்கேனும் மூன்று குழந்தைகளுக்கு ...ல் இருந்தால், அவருக்கு இது பொருந்...து. அவர்களுடைய நிலையில் இச்சலுகை, ...க்கக்கூடிய எல்லாக் குழந்தைகளுக்கு மட்...டுந்தான் பொருந்தும். இந்த ஆணை பிறப்பிக்...கப்படும் தேதியில், மூன்று குழந்தைகளோ ...ன்றி, அதற்குக் குறைவாகவோவுள்ள அரசு ...ழியர்களுக்கு, இச்சலுகை, முதல் மூன்று ...ழந்தைகளுடன் மட்டும் வரையறுக்கப்படும்.

5. இரண்டு குழந்தைகளோ அன்றி ...தற்குக் குறைவாகவோ உள்ள அரசு ஊழி...யர்களுக்கு, இடமாற்றப் பயணச் செலவுப்படி, ...தல் இரண்டு குழந்தைகளுக்கு அளிக்கப்...படும். மற்ற அரசு ஊழியர்களுக்கு, இருக்...கக்கூடிய எல்லாக் குழந்தைகளுக்கும் உண்டு. ...ல் இச்சட்டம் வெளியிடப்பட்ட ஓராண்...டுக்குப் பிறகு இடமாற்றப் பயணச் செலவுப் ...ஓராண்டிற்குப் பிறகு பிறந்த குழந்தைக் ...கிடைக்காது.

6. புதிதாக அரசுப் பணியில் சேருபவர் ...டமிருந்து, இரண்டு குழந்தைகளுடன் தம் குடும்பத்தைக் கட்டுப்படுத்திக் கொள்வதாய், உத்தரவாதம் பெற்றுக் கொள்ளப்படும். ஆனால் இரண்டு குழந்தைகளும் ஆணாகவோ அன்றிப் பெண்ணாகவோ உள்ள ஊழியர்களி...டம் உத்தரவாதம் பெறப்பட மாட்டாது. அவர்கள் மற்றுமொரு குழந்தை பெற்றுக் கொள்ளலாம். அவர்கள் ஆண்டுதோறும் தம் தலைமை அலுவலகத்திற்கு அறிக்கை தரும்படி எதிர்பார்க்கப்படுகின்றார்கள்.

### பொதுமக்களுக்கு

1. நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் நிலப்பங்கீடு செய்வதிலும் சாகுபடிக்காக அரசின் தரிசு நிலங்களை ஒதுக்கீடு செய்வதிலும், மூன்று அல்லது அதற்குக் குறைவாகக் குழந்தைகள் உள்ளவர்களுக்கும் மற்றும் கணவன் அல்லது மனைவி அறுவைச் சிகிச்சை ஏற்றுக் கொண்டிருந்தாலும் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பெறும்.

2. குடிசை மாற்று வாரியத்தின் கீழ் கட்டப் பெற்றுள்ள குடியிருப்புக்களின் அடித்தளப் பகுதி மூன்று அல்லது அதற்குக் குறைவாக குழந்தைகள் உள்ளவர்களுக்கும் கணவன் அல்லது மனைவி அறுவைச் சிகிச்சை செய்து கொண்டிருந்தாலும், அவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்பெறும். இந்தச் சலுகை வசதியினைப் பயன்படுத்திக் கொண்ட நபர், நான்காவது குழந்தையினைப் பெற்றால், உடன் அச்சலுகை திரும்பப் பெறப்படும். எனினும், இந்த அரசு ஆணை பிறப்பிக்கப் பெறும் தேதியில், குழந்தையின் கரு 20 வாரங்களுக்கு மேற்படின், அப்படிப்பட்ட நிலைமைகளை அரசு அனுதாபத்துடன் கவனிக்கும்.

3. பேறு காலத்திலோ அன்றி பேறு காலத்திற்குப் பிறகோ அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள ஒப்புக் கொள்ளாத, மகப்பேறு விடுதிகளில் பிரசவிக்கும் எல்லாத் தாய்மார்களிடமிருந்தும் அவர்களின் நான்காவது அல்லது அடுத்தடுத்த பிரசவங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள மகப்பேறு செலவினங்கள் அதிகமாக வசூலிக்கப்படும்.

### ஆசிரியர்களுக்கு

ஆசிரியர்களை இத்திட்டத்தில் ஈடுபடுத்துவதென அரசு முடிவெடுத்துள்ளது. நடப்பு நிதி ஆண்டில் ஒவ்வொரு ஆசிரியரும் குறைந்தது இரண்டு நபர்களையாவது அறுவைச் சிகிச்சைக்குக் கொண்டு வர வேண்டும். விதிக்கப்பட்ட இலக்கினைப் பூர்த்தி செய்தவர்களின் நன்னடத்தைப் பட்டியலில் பாராட்டுக் குறியீடு இடப்படும். ஒப்பற்ற முறையில் திட்டத்திற்கு உதவியவர்களுக்குத் தகுதிச் சான்றிதழும் பணிக்காலக் குறிப்பும், பொருத்தமான ரொக்கப் பரிசும், உரிய காலத்திற்கு முன் ஊதிய உயர்வும், மிக திக அளவில் இலக்கினை அடைந்தவர்க்கு மாநில அளவில் பரிசும் போன்ற ஊக்குவிப்புச் சலுகைகள் வழங்கப்பெறும். ஊக்குவிப்புச் சலுகை அளித்து விதிக்கப்பட்ட இலக்கினை எய்தும் வகையில், ஆசிரியர் ஊக்குவிக்கப்படுவார்களேயன்றி, இலக்கினைப் பூர்த்திசெய்யாத ஆசிரியர்களுக்குத் தண்டனையாக சலுகைக் குறைப்பு ஏதும் செய்யப்பட மாட்டாது.

# சாதனைப்புகழை நிலைபெறச்செய்வீர்!

—பி. முராரி, ஐ. ஏ. எஸ்.,
செயலாளர்,
நல்வாழ்வு—குடும்ப நலத் துறை
தமிழ்நாடு.

குடும்ப நலத் திட்டச் செயலாக்கத்தில் தமிழ்நாடு செம்மையாக செயல்படும் மாநிலமாகும். தமிழ்நாடு இந்திய அரசு வகுத்தளுத்தபடி குடும்ப நலத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தி வரும் மாநிலங்களுள் ஒன்று என்ற புகழைத் தக்க வைத்துக் கொண்டுள்ள மாநிலமாகும்! கடந்த ஐந்தாண்டுகளில் தொடர்ந்து 140 அல்லது 136 விழுக்காடு எனச் சாதனைகளை ஏற்படுத்தி, குடும்ப நலச் சிகிச்சைத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தி வரும் மாநிலமாகும். தமிழ் நாட்டின் சிறந்த சாதனைகளைப் பாராட்டி இந்திய அரசு தேசிய விருதுகளையும், பரிசுகளையும் வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்!

இவ்வாண்டு தமிழ்நாடு 5 இலட்சம் பேர்களை நிரந்தரமாகக் குடும்ப நலச் சிகிச்சை ஏற்கச் செய்ய வேண்டுமென இந்திய அரசு இலக்குத் தந்துள்ளது. தமிழ்நாடு அரசு 6 இலட்சம் பேர்களை இச்சிகிச்சை ஏற்கச்செய்ய ஆவன செய்து வருகிறது. இந்திய அரசு தந்துள்ள 5 இலட்சம் குடும்ப நலச் சிகிச்சைகள் என்ற இலக்கு, கடந்த ஆண்டு தமிழகத்திற்குத் தரப்பட்ட இலக்கைக் காட்டிலும் இரு மடங்கு ஆகும். பரப்பிலும், மக்கள் தொகையிலும் தமிழ் நாட்டை விடப் பெரியவை எனக் கருதத் தக்க மாநிலங்களுக்குத் தரப்பட்டிருக்கும் நடப்பு ஆண்டு இலக்கைக் காட்டிலும், தமிழகத்திற்குத் தரப்பட்டுள்ள இலக்கு அதிகமானது என்பது குறிப்பிடத் தக்கதாகும்!

நல்வாழ்வு குடும்ப நலத்துறையினரின் நெருங்கிய ஒத்துழைப்புடன், உள்ளாட்சித் துறையினர், கல்வித் துறையினர் ஆகியோரும், மற்ற அனைத்துத் துறையினரும் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கீழ் ஒருங்கிணைந்து செயல்பட்டு இலக்கு மீறிய சாதனையை ஏற்படுத்த முனைந்து செயல்பட்டு வருகின்றனர்.

இந்திய அரசு அண்மையில் வெளியிட்ட தேசிய மக்கள் தொகைக்கொள்கைப்படி, குடும்ப நலச் சிகிச்சை செய்துகொள்வோருக்கான ஈட்டுத் தொகை உயர்த்தி வழங்கப்படுகிறது. சமுதாயம் முழுவதையும் இதில் ஈடுபடுத்த வேண்டுமென்ற நல்ல நோக்கில் அரசு ஊக்குவிப்புச் சலுகைகளையும், சலுகை மறுப்பையும் அறிவித்துள்ளது.

சாதி, சமய, இன வேறுபாடு இன்றி குடும்ப நலத் திட்டம் பலராலும் ஏற்கப்படுகிறது. தமிழ் நாட்டில் இது வரை (6-10-76 வரை 2,34,515 குடும்ப நலச் சிகிச்சைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இதில் 83,86... பேர் தாய்மார்களாவர். தாய்மார்கள் குடும்ப நலத் திட்டத்திற்குப் பெருத்த ஆதரவு காட்டி வருகிறார்கள் என்பதை இது விளங்குகிறது. கடந்த மாதம் குடும்ப நல இரு வார விழா சிறும் சிறப்புமாக எடுக்கப்பட்டது. இந்த இரு வார விழா குடும்ப நலத் திட்ட இலக்கை எட்டப் பெரிதும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது எனலாம். செப்டம்பர் மாதத்தில் செய்யப்பட்ட தீவிரப் பிரச்சாரப் பணியின் காரணமாக 1,03,09... பேர்கள் குடும்ப நலச் சிகிச்சை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். சமுதாயம் இத்திட்டத்தின் அவசியத்தைப் பெரிதும் உணர்ந்து வருகிறது. நாட்டில் பக்குவமான சூழ்நிலை இருக்கிறது. இச்சூழ்நிலையைப்பயன்படுத்திக்கொண்டு இலக்கு மீறிய சாதனையை ஏற்படுத்த அனைவரும் ஒத்துழைப்பு நல்கி வெற்றி ஈட்ட வேண்டும். அதன் வழி தமிழ்நாடு த... சாதனைப் புகழை நிலை பெறச் செய்ய வேண்டும். அதற்கு அனைவரும் தங்கள் ஒத்துழைப்பை நல்க வேண்டுகிறேன்.

**குடும்ப நலம் ஏற்பீர்!**

**குழந்தை நலம் காப்பீர்!!**

## பொறுப்புள்ள குடிமகனின் கடமை!

நம் நாடு விடுதலை அடைந்ததற்குப் பின்னால் 25 கோடி மக்கள் சேர்ந்துள்ளனர். இது நம் நாட்டைவிட 6 மடங்கு நிலப்பரப்புடைய சோவியத் ரஷ்யா நாட்டின் மொத்த மக்கள் தொகைக்குச் சமமாகும். ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவில் அதிகரிக்கும் மக்கள் தொகை, நம் நாட்டைவிட 2½ பங்கு பெரியதான ஆஸ்திரேலியாவின் மக்கள் தொகைக்குச் சமமாகும். தற்போது உள்ள மக்கள் பெருக்க விகிதம் தடுக்கப்படாமல் தொடர்ந்தால், இந்த நூற்றாண்டின் முடிவில் சுமார் 100 கோடியினை எட்டிவிடும்! இதை எண்ணும் போதே தலை சுற்றுகின்றது! மக்களுடைய பொது நலத்திற்காக, அரசு எவ்வளவு தான் வசதி செய்து கொடுத்தாலும் கூட அது அவர்களின் அடிப்படைத் தேவையினைக் கூட பூர்த்தி செய்ய இயலாது. எனவே, சிறுகுடும்ப நெறியினை, தன் சொந்த நலத்திற்காகவும், நாட்டு நலத்திற்காகவும் ஒவ்வொரு பொறுப்புள்ள குடிமகனும் ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

# நல்வாழ்வு— குடும்ப நலத் துறையின் நற்பணிகள்



டாக்டர் சி.ஏ.கே. சண்முகம்,
இயக்குநர் (பொறுப்பு),
நல்வாழ்வு, குடும்ப நலத்துறை.

ல்வாழ்வு பற்றிக் கருத்து ரிவித்த அண்ணல் காந்தியடிகள் "It is health which is real wealth t pieces of silver and gold" ன்றார். ஆம், நல்வாழ்வு என் து தான் ஒருவனது உண்மை ான சொத்தாகும். வெள்ளியா ம் தங்கத்தாலும் ஆன ஆபர ங்களைவிடச் சிறந்த சொத்து து! அவ்வளவு அற்புதமான ன்று எனத் தேசத் தந்தையால் ாராட்டப்பட்டது சுகாதாரம்! காதாரம் அனைத்திற்கும் டிப்படையானதாகும்!

நாடு இன்று முன்னேறிச் சென்றுகொண்டிருக்கிறது. நமது ன் பிரதமர் திருமதி ந்திரா காந்தி அவர்கள் தந் ள 20 அம்சப் பொருளாதார ம்பாட்டுத் திட்டத்தால் நல்ல ய பலன்கள் உருவாகியுள்ளன. ட்டுப்பாடும், ஒழுங்கும் ஓங்கும் கையில் பல்வேறு நடவடிக்கை ள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ன வீக்கம் கட்டுப்படுத்தப்பட் ள்ளது. கள்ளக் கடத்தல், ள்ளள வாணிபம், கருப்புச் ந்தை போன்றவை ஒழிக்கப்பட் ள்ளன. சமுதாயம் முழுவதும் மை உணர்வுடன், புரட்சிக் பாரதியின் 'காலம் கழிவேல்' ற புதிய ஆத்தி சூடி ர்த்து செயல்பட்டு வரு து. உழைப்பு, உழைப்பு ன்பதே நாட்டில் மூச்சாக ந்து வருகிறது. அப்படிப் ட உழைப்பை நல்கிட நாட்டி ள்ளோர் அனைவரும் உடல் நலம், உள்ள நலம் பெற்றவராய் இருந்திடல் வேண்டும். அதுதான் தலையாய சொத்து. மக்கள் அந்த நலனைப் பெற்று, பொருளாதார மேம்பாட்டை உருவாக்கிடத் தக்க துணையாய் இருந்து உதவி வருவது தமிழ்நாடு அரசின் நல்வாழ்வு குடும்ப நலத் துறையாகும்.

நல்வாழ்வை ஏற்படுத்த இத்துறை மும்முனைகளில் செயல்பட்டு வருகிறது. ஒன்று நோயே ஏற்படாமல் தவிர்ப்பது (Preventive Aspect). மற்றொன்று ஏற்பட்டுவிடும் நோயைக் குணப்படுத்துவது (Curative Aspect). சிறப்பாக சமுதாயத்தைச் சிறு குடும்ப நெறி ஏற்கச் செய்வது என்பது பிறிதொன்றாகும். இவ்வழிகளின் வாயிலாக பெரும்பாலும் கிராமங்களில் வசிக்கும் 80 சதவிகித மக்களுக்கு கிராமங்களிலேயே இருந்து பணியாற்றும் நல்வாழ்வு குடும்ப நலத் துறை ஊழியர்கள் வாயிலாக இப்பணிகள் கிட்டி வருகின்றன. கிளை நிலையங்கள் (Sub Centres), ஆரம்பச் சுகாதார நிலையங்கள் (Primary Health Centres), மருந்தகங்கள் (Dispensaries) வட்ட மருத்துவ மனைகள், மாவட்டத் தலைமை மருத்துவ மனைகள் ஆகியவை படிப்படியான அமைப்புக்களாக இருந்து பணியாற்றி வருகின்றன. 80 ஆயிரம் முதல் ஒரு இலட்சம் மக்களுக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் எனத் தமிழ் நாட்டின் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. சில ஒன்றியங்களில் இரண்டு செயல்பட்டு வருகின்றன. இப்படி மொத்தம் 381 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. 1,880 கிளை நிலையங்கள் (Sub Centres) இவற்றின் துணை அமைப்புக்களாக இருந்து பணியாற்றி வருகின்றன.

பல முனை நல்வாழ்வுப் பணியாளர் திட்டம் (Multi purpose Health Worker's Programme) என்ற ஒரு புதிய திட்டத்தைச் செயல்படுத்த இருக்கிறது அரசு. நல்வாழ்வு-குடும்ப நலப் பணிகள் அனைத்தையும் ஒவ்வொரு நல்வாழ்வு ஊழியரும் இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்துவர்.

இதற்கான பயிற்சி, மருத்துவர்களுக்கும், மற்ற ஊழியர்களுக்கும் அளிக்கப்பட்டு வருகிறது. மருத்துவர்களால் மட்டும் ஆற்றப்பட்டு வந்த சிகிச்சையளிக்கும் பணி (Curative Services) இத்திட்டத்தின் கீழ் நல்வாழ்வுப் பணியாளர்களாலும் செயல்படுத்தப்படும். இதோடு கூட சமுதாயப் பணியாளர் திட்டம் (Community level workers programme) என்ற ஒன்றையும் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சிறிய அளவில் தோன்றும் வியாதியினைக் குணப்படுத்த ஆசிரியர்கள், கிராம சேவக்குகள், கல்வி கற்ற பெண்கள் பயிற்றுவிக்கப்படுவர். இந்தத் திட்டத்தின் வாயிலாக ஐந்து ஆயிரம் மக்களுக்கு ஒரு நல்வாழ்வு ஊழியர் என்ற நிலை பிறக்கும். நல் வாழ்வுப் பணிகளால் மக்களுக்கு அதிக அளவு நன்மை கிட்டும். இத் திட்டம் செயல்படும்போது தமிழ்நாட்டில் மட்டும் 60 ஆயிரம் ஊழியர்கள் பணியாற்றுவர். இவர்கள் பல முனை நல்வாழ்வுப் பணியாளர்களின் மேற்பார்வையிலும் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்களது கண்காணிப்போடும் இயங்குவர். இதையொத்த (Bare foot Doctors) திட்டம் சீனாவில் வெற்றியடைந்துள்ளது.



தமிழ்நாட்டில் 14 மாவட்டத் தலைமை மருத்துவ மனைகள் இயங்கி வருகின்றன. மாவட்ட அளவில் முழுமையான மருத்துவ வசதி மக்களுக்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டுமென்பது மாநிலத் திட்டக் குழு அளித்துள்ள பரிந்துரைகளில் ஒன்றாகும். இதற்கு, ஏற்கனவே இயங்கி வரும் மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளை 400 முதல் 650 படுக்கை வசதி கொண்டவைகளாக உயர்த்த வேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இப்போது 50 படுக்கைகள் முதல் 544 படுக்கைகள் வரை பெற்று மாவட்டத் தலைமை மருத்துவ மனைகள் பணியாற்றி வருகின்றன.

கிராமப் புறப் பகுதிகளில் அருமையாக இருந்து வரும் மருத்துவ வசதிகளைப் பெருக்க வேண்டும்—விரிவு படுத்த வேண்டும். அதற்காக வட்ட மருத்துவ மனைகளின் நிலை 90 படுக்கைகள் கொண்டவையாக உயர்த்தப்பட வேண்டும் என மாநிலத் திட்டக் குழு பரிந்துரைத்துள்ளது. தமிழ் நாட்டில் இப்போது 105 வட்ட மருத்துவ மனைகள் உள்ளன. ஐந்தாவது திட்டக் காலத்தில், 90 படுக்கை வசதி கொண்டவையாக இவற்றைப் படிப்படியாக மாற்ற வேண்டுமென்பது திட்டம்.

இவை தவிர தமிழகம் முழுவதிலும் 15 நடமாடும் மருத்துவ நிலையங்கள் (Mobile Medical Units) செங்கல்பட்டு, வட ஆர்க்காடு, கோவை, தர்மபுரி, மதுரை, நீலகிரி, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன.

நாட்டிலுள்ள மலைப் பகுதிகளை வளர்ச்சியடையச் செய்ய வேண்டுமெனக் கருதி, இந்திய அரசு திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்ட மருத்துவ வளர்ச்சிக்கு உதவ, மத்திய அரசு முன் வந்துள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நீலகிரி மாவட்ட மருத்துவ வளர்ச்சிக்கென 35 இலட்சம் ரூபாய் ஒதுக்கலாம் என இந்திய அரசு எண்ணியுள்ளது.

பொதுவான மருத்துவ மனை வசதிகளோடு கூட, புற்றுநோய்ச் சிகிச்சை, தொழு நோய் ஒழிப் காசநோய்த் தடுப்பு, கண் சிகிச் முகாம், குடும்ப நலத் திட் பணி ஆகியவையும் சிறப்பா செயல்படுத்தப்பட் வருகின்றன..

புற்று நோய் மருத்துவத்தி என காஞ்சிபுரத்தில் அறிஞ அண்ணா நினைவுப் புற்று நோ நிலையம் செயல்பட்டு வருகிற உலக நல்வாழ்வு நிறுவனத்தி துணையோடு தமிழ்நாடு அர இந்நிலையத்தின் வாயிலாக புற் நோய்த் தடுப்புத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இ நிலையம் இயங்க மத்திய, மா அரசுகளின் நிதி உதவியோ நார்வே, அமெரிக்க உதவிகளு உலக நல்வாழ்வு நிறுவனத்தி வாயிலாகக் கிட்டி வருகின்றன

தொழு நோய் பெரு வியா என அழைக்கப்படும் பிணியாகு அண்மையிலேயே வருகின்ற நோ களிலெல்லாம் தொல்லை மிக தரும் நோய் இதுவாதலால் பெ வியாதி என்றனர் போலும். தொழு நோயைத் துவக்கத் லேயே கண்டறிந்து, தடுப்பு ந வடிக்கைகளை மேற்கொள்ள செய்வதின் மூலம் மக்களுக்கு சிறப்பான சிகிச்சை கிடை அரசு ஆவன செய்துள்ளது.

இன்றைய மிகப் பெரிய சு தாரப் பிரச்சினை காச நோயாகு இதை எலும்புருக்கி நோ என்றும் சொல்வார்கள்.

இந்நோயிலிருந்து மக்களுக்கு பாதுகாப்பு அளிக்க இந்திய அ தேசியக் காச நோய்த் தடு இயக்கத்தை நடத்தி வருகிற அதன் அடிப்படையில் தமி அரசு எல்லா மாவட்டங்களிலு காச நோய்த் தடுப்பு இயக்கத் முறையாக நடத்தி வருகிறது.

எல்லா அரசு மருத்துவ ம களிலும் காச நோய்க்கா இலவச மருத்துவ வசதிக்கு பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மருத்துவச் சிகிச்சைக்கா மருந்துகள் தரமானவையா கலப்படமற்றவையாகக் கிடை நல் வாழ்வு குடும்ப நலத் து யின் ஒரு பகுதியாக இயங் மருந்துக் கட்டுப்பாடு பிரிவு உ கண்காணிப்புச் செலுத்திப் ப யாற்றி வருகிறது. மருந்துக் க டுப்பாட்டுப் பிரிவுக்கென ஆய் கூடம் ஒன்று சென்னையிலுள் இயக்குநர் அலுவலகத்தில் கட்ட பட்டுவருகிறது.

தொழிலாளர் காப்புறு திட்ட மருத்துவ மனைகளும் ம



...தகங்களும் இத்துறையின் கீழ் செயல்பட்டு வருகின்றன. நாட்டில் உற்பத்தி பெருக வேண்டுமானால் தொழிலாளர் சமுதாயம் உடல் நலம், உள்ள நலம் பெற்று இலங்க வேண்டும். அதற்கான நல்வாழ்வுப் பணிகள் அத்தனையையும் இம் மருத்துவ மனைகள் ஆற்றி வருகின்றன.

மேல் நாட்டு மருத்துவ முறையோடு கூட, நமது நாட்டுச் சித்த மருத்துவம், யுனானி, ஆயுர்வேதம் போன்ற மருத்துவக் கலைகளும் ஹோமியோபதி மருத்துவமும் ஓங்க அரசு உரிய கவனம் செலுத்தி, ஆவன செய்து வருகிறது.

இவ்வளவு சிறந்த முறையில் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள், மருத்துவ வசதிகள் பெருக்கப்பட்டு தமிழகம் வளர்ந்து வருவதால் கொள்ளை நோய்கள் தடுக்கப்பட்டுள்ளன. இறப்பு விகிதம் குறைக்கப்பட்டுள்ளது. 1940ஆம் ஆண்டில் 23 ஆக இருந்த சராசரி வயது இப்போது 52 ஆக உயர்ந்துள்ளது. அந்த அளவுக்குச் சராசரி வாழ் நாள்—ஆயுட் காலம் கூடியிருக்கிறது. இறப்பு விகிதத்தைக் குறைத்த வேகத்தில், பிறப்பு விகிதத்தைக் குறைக்க இயலவில்லை. எனவே மக்கள் தொகைப் பெருக்கம் ஏற்பட்டுள்ளது. நாட்டில் ஏற்பட்டு வரும் மக்கள் தொகைப் பெருக்கப் பிரச்சினை, வளர்ச்சித் திட்டங்களால் ஏற்படும் பலன்களையெல்லாம் விழுங்கி வருகிறது எனலாம். நாட்டில் பொருளாதார வளர்ச்சியும் ஏற்படுத்தப்பட வேண்டும். அதே நேரத்தில் மக்கள் தொகைப் பெருக்கமும் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்ற தொலை நோக்கில் இந்தியா 1952-ஆம் ஆண்டு முதலே குடும்ப நலத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இந்திய அரசிடமிருந்து இத்திட்டச் செயலாக்கத்திற்கென 100 சதவிகித நிதி உதவி பெற்று மாநிலங்கள் சிறு குடும்ப நெறியைப் பரப்பி வருகின்றன. தமிழ்நாடு இத்திட்டத்தைத் துவக்கம் முதல் தொடர்ந்து சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. அதற்காகத் தமிழ்நாட்டிற்கு தேசிய விருதுகளும், பரிசுகளும் கிடைத்துள்ளன. 1,000க்கு 35 என்றிருந்ததாக மதிப்பிடப்பட்டுள்ள பிறப்பு விகிதத்தை ஐந்தாவது ஐந்தாண்டுத்திட்ட இறுதிக்குள் 1,000க்கு 30 ஆகக் குறைக்க வேண்டும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் 1,000க்கு 25 ஆகக் குறைக்க வேண்டும் என்பதே நோக்கம்.

தாய்-சேய் நலப் பணிகள் இத்திட்டத்தின் கீழ் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்படுகின்றன. முத்தடுப்பு ஊசி, வைட்டமின் ஏ மருந்து குழந்தைகளுக்கு அளிக்கப்படுகின்றன. கருவுற்ற தாய்மார்களுக்கு இரத்த சோகை ஏற்படாமலிருக்க இரும்புச் சத்து மாத்திரைகள் தரப்படுகின்றன. குழந்தைகளுக்குச் சத்துணவும் வழங்கப்படுகிறது. பிறந்த குழந்தைகளைக் காக்க இப்பணிகள் உதவுகின்றன.

நடப்பு 76-77-ஆம் ஆண்டு குடும்ப நலத் திட்டச் செயலாக்கத்தில் குறிப்பிடத் தக்க ஆண்டு என்று சொல்லலாம். இவ்வாண்டு ஏப்ரல் திங்களில் தான் தேசிய மக்கள் தொகைக் கொள்கை அறிவிக்கப்பட்டது. குடும்ப நலச் சிகிச்சை செய்து கொள்வோருக்கு ஈட்டுத் தொகை உயர்வு, திருமண வயதை உயர்த்துதல், பெண்கள் முன்னேற்றத்திற்கு உரியன செய்வது, குடும்ப நலத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தும் மாநிலங்களுக்கு 8 சதவிகிதத் தொகை வழங்குதல் ஆகியவை அக்கொள்கையின் முக்கியப் பகுதிகளாகும்.

தேசிய மக்கள் தொகைக் கொள்கையை அறிவித்த இந்திய அரசு, மாநிலங்களுக்கான இலக்கையும் அறிவித்துள்ளது. சிறப்பாகத் தமிழ்நாடு நடப்பு ஆண்டில், அதாவது 76-77-ல் 5 இலட்சம் பேர்களுக்குக் குடும்ப நலச் சிகிச்சை செய்து முடிக்க வேண்டுமென்று இலக்குத் தந்துள்ளது. சென்ற ஆண்டு இலக்கைப் போல் இது இரண்டு மடங்காகும்.

இந்திய அரசு தமிழ்நாட்டிற்குத் தந்துள்ள இலக்கையும் தாண்டி சாதனை ஏற்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர்களது தலைமையில், நல்வாழ்வு குடும்ப நலத் துறையின் அனைத்துப் பிரிவினரும், அரசுத் துறைகளைச் சார்ந்த அனைவரும் முனைந்து செயல்பட்டு வருகின்றனர். குறிப்பாகத் தொழிலாளர்கள் இடையே இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. தொழில் நிருவாகங்கள் பலவும் தங்கள் தொழிலாளர்கள் குடும்ப நலச் சிகிச்சை ஏற்றால், அரசு அளிக்கும் ஈட்டுத் தொகையோடு கூட ஊக்கத் தொகை அளித்து ஊக்குவித்து வருகின்றன. சிறப்பாகத் தமிழ்நாடு அரசு குடும்ப நல ஊக்குவிப்புச் சலுகைகளையும் சலுகை மறுப்பையும் இப்போது அறிவித்துள்ளது.

கடந்த செப்டம்பர் மாதம் தமிழ்நாடு முழுவதும் எடுக்கப்பட்ட குடும்ப நல இரு வார விழா, திட்டச் செயலாக்கத்திற்குப் பெரிதும் பயன்படுத்தப்பட்டது. பொதுக் கூட்டங்கள், கவியரங்குகள், பட்டி மன்றங்கள், நாடகங்கள், இசை நிகழ்ச்சி



கள், அளவான குடும்பத்தின் அவசியத்தை உணர்த்தும் கருத்துக்களை மக்களிடையே பரவ உறுதுணையாக அமைந்தன. திட்ட இலக்கை எட்ட இந்த இரு வார விழா பெரிய துணையாக இருந்தது.

கருச் சிதைவு சட்டப்படி குற்றமல்ல. கருச் சிதைவு மருத்துவ மனைகளில் இலவசமாகச் செய்யப்படுகிறது. கருத் தரித்த 12 வாரங்களுக்குள் கருச் சிதைவு செய்து கொள்வது நலம். கருச் சிதைவு செய்து கொள்வோர் குடும்ப நலச் சிகிச்சை செய்து கொள்ள வேண்டுமென்பதில்லை.

தமிழ்நாடு, நடப்பு ஆண்டில் 5 இலட்சம் குடும்ப நலச் சிகிச்சைகள் செய்து முடிக்க வேண்டுமென இந்திய அரசு இலக்குத் தந்துள்ளது. செப்டம்பர், இறுதியில் நடந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில், அரசுத் தலைமைச் செயலாளர் அறிவித்தது போல் தமிழ்நாட்டில் இது வரை ஏறத்தாழ இரண்டு இலட்சம் குடும்ப நலச் சிகிச்சைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இன்னும் செய்ய வேண்டியது மூன்று இலட்சம். அனைவரும் முயன்று முனைப்போடு செயல்பட்டால் வெற்றி கிட்டும்.

இறுதியாக ஒன்று. இத்திட்ட வெற்றிக்கு மருத்துவர்களின் துணை இன்றியமையாததாகும். அதை வலியுறுத்த நினைத்த நமது பிரதமர் திருமதி. இந்திரா காந்தி அவர்கள் "வறுமையை ஒழிக்கும் நமது போராட்டத்தில் நமக்குக் கைகொடுத்து உதவிடும் நண்பர்களாக இருப்பவர்கள் விஞ்ஞானிகளும் மருத்துவர்களுமேயாவர். மருத்துவர்களின் பணி இன்று பெருமளவு தேவைப்படுகிறது. மக்களின் மரணத்தைத் தள்ளிப் போடுவதற்கு மட்டுமல்லாது பிறப்பைத் தவிர்ப்பதற்கும் இவர்கள் பணி தேவைப்படுகிறது" என்று கூறியுள்ளார். எனவே சமுதாயத்தின் அனைத்துப் பகுதியினரின் ஒத்துழைப்பாலும் பக்குவமாகப் பயன்படுத்திக் கொண்டு மருத்துவர்களும் மற்ற அனைவரும் குடும்ப நலத் திட்டச் செயலாக்கத்தில் வெற்றி ஈட்டித் தர வேண்டும்.

'வளரும் தமிழகம்' என்ற தலைப்பில் சென்னை வானொலி நிலையத்தில் 3-10-1976ஆம் நாள் ஆற்றிய உரை

## மாற்று அறுவைச் சிகிச்சை மகிழ்விற்கு வித்திட்டது

சேலத்திலிருந்து 40 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள நடுப்பட்டி என்ற கிராமத்தில் திருமதி பாயம்மாள் வாழ்ந்து வருகிறார். அவ்வூர் விவசாயியின் மனைவியான அவர், சில வருடங்களுக்கு முன் தன்னுடைய நான்காவது குழந்தை பிறந்த பிறகு அறுவைச் சிகிச்சையினை ஏற்றுக் கொண்டார். பின்னர் அவரின் ஒரே மகன் திடீரென்று இறந்து விட்டான். அதன் பின் பாயம்மாவும் கிராமத்தில் உள்ள மற்றவரும், குடும்ப நலத்திட்டத்தினைக் குறை கூறித் தூற்ற ஆரம்பித்தனர். அரசினர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் களப் பணியாளராகப் பணியாற்றும் திரு. நல்லவேதி இதனைக் கேள்வியுற்றதும், அத்தம்பதியர்க்கு ஆறுதல் கூறினார். அத்துடன், மாற்று அறுவைச் சிகிச்சை (Recanalisation) செய்து கொள்வதன் மூலம், மறுபடியும் குழந்தை பெறும் வாய்ப்பு உள்ளது என்றும் உறுதி கூறினார். ஆரம்பத்தில் பாயம்மாவிற்கு நம்பிக்கை ஏற்படவில்லை. ஆனால், குடும்பநல ஊழியர்களின் விடாமுயற்சியினாலும், அவர்கள் அளித்த உறுதியினாலும், மாற்று அறுவைச் சிகிச்சை மேற்கொள்ள பாயம்மா ஒப்புக் கொண்டார். மாவட்ட மருத்துவ அலுவலர் இம்மாற்று அறுவைச் சிகிச்சையினை வெற்றிகரமாகச் செய்தார். சில மாதங்களுக்குப் பின் பாயம்மா கருவுற்றார். இச்செய்தியினைக் கேட்டு மகிழ்வுற்ற குடும்பநல ஊழியர்கள், பாயம்மாவிற்கு சுகப் பிரசவம் நிகழ, சிறந்த மருத்துவ கவனிப்புக் கிடைக்கும்படி செய்தனர். அனைவர் மனமும் மகிழத்தக்க விதத்தில், பாயம்மாவிற்கு ஆண் குழந்தை பிறந்தது.

இந்நிகழ்ச்சி, மாவட்டம் முழுவதும் பரவி, மக்களிடையே குடும்பநலத் திட்டத்தின்பால் நம்பிக்கையை வளர்த்தது; மக்கள் கொண்ட தவறான கருத்தினையும் போக்கியது. தற்போது சேலம் மாவட்டத்தில், பெண்கள் பெருவாரியாக அறுவைச் சிகிச்சையினை மேற்கொள்ள முன் வந்துகொண்டிருப்பதில் எவ்வித வியப்பும் இல்லை அல்லவா?



...ழ்நாடு ஆளுநர் திரு. மோஹன் ...ல் சுகாதியா அவர்கள் தலைமை ...ல் மத்திய அரசின் உள்துறை ...மைச்சர் திரு. கே. பிரம்மானந்த ...ட்டி அவர்கள் மாவட்ட ஆட்சித் ...லைவர்கள் மற்றும் காவல்துறை ...லுவலர்களின் மாநாட்டை ...சன்னை, இராஜாஜி அரங்கில் ...9.1976 அன்று துவக்கி வைத்து ...ரையாற்றினார்.

# படமும் செய்தியும்

அமரகவி பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றை விளக்கிடும் "ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே!" என்ற ஒலி—ஒளிக் காட்சியை (**Sound and Light Show**), சென்னை இராஜாஜி அரங்கின் முன்புறத்தில் 28.9.1976 அன்று மத்திய அரசின் செய்தி ஒலி பரப்புத் துறை அமைச்சர் திரு. வி. சி. சுக்லா அவர்கள் தலைமையில், தமிழ் நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள் துவக்கி வைத்தார். அக்காட்சியைத் தமிழ்நாடு ஆளுநர் அவர்களும், மத்திய செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சர் அவர்களும் ஆர்வத்தோடு காணுவதைப் படம் விளக்குகிறது.







இந்தியக் குடியரசின் துணைத் தலைவர் திரு. பி. டி. ஜட்டி அவர்கள், காந்தி ஜெயந்தி விழாவைத் துவக்கி வைப்பதற்காக 2.10.1976 அன்று சென்னைக்கு வருகை தந்தார். அவரை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் தமிழ்நாடு ஆளுநர் அவர்களும், அவரது துணைவியாரும், உயர் அலுவலர்களும் வரவேற்றனர்.

காந்தி ஜெயந்தி விழாவை முன்னிட்டு, கிண்டியில் உள்ள காந்தி மண்டபத்தில் அமைக்கப்பட்டிருந்த பொருட்காட்சியை இந்தியக் குடியரசின் துணைத் தலைவர் திரு. பி. டி. ஜட்டி அவர்கள் திறந்து வைத்தார்.







பிஜி அ...ங்கத்தின் செய்தி அமைச்சர் ... ஜோன் பி. நய்சா... அவர்கள் ...1.9.1976 ... சென்னைக்... ...ந்தார். அவரைக் கௌ...விக்கத் தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு. பி. கே. தவே அவர்கள் ஒரு விருந்து நடத்தினார். திரு. நய்சாரா அவர்களுக்கு, திருமதி. தவே அவர்கள் கலையழகு மிக்க தஞ்சாவூர்த் தட்டு ஒன்றையும், தமிழ்நாடு பற்றிய நூல்களையும் பரிசாக வழங்கினார்.



தானே முன்வந்து ரத்ததானம் செய்யும் முகாமைத் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகத்தில் 4.10.1976 அன்று, தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள் துவக்கி வைத்தார். அம்முகாமில் தமிழ்நாடு அரசின் நல்வாழ்வுத் துறை செயலாளர் திரு. பி. முராரி அவர்கள் முதலாவதாக ரத்ததானம் செய்தார்.



தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 5.10.1976 அன்று, திருச்சியில் உள்ள மண்டலப் பொறியியல் கல்லூரியில் மாணவர் சங்கத்தைத் துவக்கி வைத்ததுடன், மண்டலப் பொறியியல் கல்லூரியில் ஒரு தென்னங் கன்றை நட்டுத் தண்ணீர் ஊற்றினர்.



தமிழ்நாடு ஆளுநர் அவர்கள்; தஞ்சை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்தபோது, ஒரத்தநாட்டில் நடைபெற்று வரும் வறட்சி நிவாரணப் பணிகளைப் பார்வையிட்டார். குழாய்க்கிணறு அமைப்பதற்காக விசைத்துளைக் கருவி செயல்படுவதை ஆளுநர் அவர்கள் பார்வையிட்டார்.



தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கல்லணையைப் பார்வையிட்டார். உடனிருப்பவர் தமிழ்நாடு பொதுப் பணித்துறையின் தலைமைப் பொறியாளர் (நீர்ப்பாசனம்).






தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள் 4-10-1976 அன்று, சென்னை கலைவாணர் அரங்கில் வனவிலங்கு வாரவிழாவைத் துவக்கி வைத்து உரையாற்றினர்.

இந்திய அரசின் திட்டக்குழு உறுப்பினர் டாக்டர் பி. சிவராமன் அவர்கள், கிண்டியிலுள்ள வேளாண் இல்லத்தில், 'மக்கரோணி' தொழிற் சாலையை 9-10-1976 அன்று துவக்கி வைத்தார்.





காவிரியாற்றின் கழிமுகம் பகுதியில் சர்வுபடி செய்யப்பட்டிருந்த பகுதிகளைத் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் பார்வையிட்டார். வேளாண்மைத்துறை இயக்குநரும், தஞ்சை மாவட்ட ஆட்சித்தலைவரும் உடனிருந்தனர்.






தஞ்சாவூரில் 5.10.1976 அன்று நடைபெற்ற ஒரு விழாவில், தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் சிறு விவசாயிகளுக்கு விசைத் தெளிப்பான்களை வழங்கினார்.




"ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சிக்குச் சமுதாய—பொருளாதாரத் திட்டமிடுதல்" என்ற கருத்தரங்கு தமிழ்நாடு திட்டக்குழுவினால் 8.10.1976 அன்று சென்னை இராஜாஜி அரங்கில் நடத்தப்பெற்றது. அக்கருத்தரங்கை, தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில், இந்திய அரசின் திட்டக்குழு உறுப்பினர் டாக்டர் பி. சிவராமன் அவர்கள் துவக்கி வைத்து, உரையாற்றினார். ஆளுநரின் ஆலோசகர் திரு பி. கே. தவே அவர்களும் அக்கருத்தரங்கில் கலந்து கொண்டார்.



ஆளுநர் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள், சென்னை சூளைமேட்டில் உள்ள மாநகராட்சி உயர்நிலைப்பள்ளியில் 11-10-1976 அன்று மாற்று முறைக் கல்வி (*Non-formal education*) நிலையத்தைத் துவக்கி வைத்தார். அவ்விழாவில் முன்னாள் தமிழக முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றினார்.



# தேசிய மக்கள் தொகைக் கொள்கை

வெ. நாமதேவன் பி.ஏ.,
துணை இயக்குநர் (குடும்பநல விளம்பரம்),
மக்கள் நல்வாழ்வு - குடும்ப நலத்துறை.

மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப் படுத்துவதற்காக உலக நாடுகள் எல்லாம் குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்தத் தயங்கிக் கொண்டிருந்த நேரத்தில் மிகுந்த தொலை நோக்கோடு 1952-ஆம் ஆண்டே தேசியத் திட்டமாக அறிவித்துக் குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்தத் துவங்கிய நாடு இந்தியா! உலக நிலப் பரப்பில் 2.4 சதவிகித அளவே நிலப்பரப்புடைய இந்தியா, உலக மக்கள் தொகையில் 15 சதவிகித அளவு மக்கள் தொகையை உடையதாக இருக்கிறது. இப்போது நமது நாட்டின் மக்கள் தொகை 61 கோடியையும் தாண்டி விட்டதாகக் கூறப்படுகிறது. இந்தியாவில் மாதந் தோறும் 10 இலட்சம் மக்கள் கூடுதலாகி வருகிறார்கள் என்று கணிக்கப்பட்டிருக்கிறது. நாடு விடுதலை அடைந்த பிறகு 25 கோடி மக்கள் கூடுதலாகியிருக்கிறார்கள். இது இந்தியாவைப் போல் ஆறு மடங்கு அதிகமான நிலப் பரப்புடைய சோவியத் ரஷ்யாவின் மக்கள் தொகைக்கு ஒப்பானதாகும்! இவ்வளவு வேகமான வகையில் பெருகி வரும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த இந்திய அரசு 100 சதவிகித அளவு நிதி உதவியை மாநிலங்களுக்கு வழங்கி இத்திட்டத்தை செயல் படுத்தி வருகிறது. இந்திய அரசின் வழிப் படுத்தலுக்கு இணங்க தமிழ்நாடு, தனக்கே யுரிய முறையில் இத்திட்டத்தை முறையாகச் சிறப்பாகச் செயல் படுத்தி வருகிறது.

இத்திட்டத்தை அனைத்து மாநிலங்களிலும் சீராக, முனைப்போடு செயல்படுத்துவதற்கென இந்திய அரசு தேசிய மக்கள் தொகைக் கொள்கையை அறிவித்துள்ளது. இப்படிப்பட்ட தேசிய மக்கள் தொகைக் கொள்கையை உலக நாடுகளிலேயே முதன் முதலாக அறிவித்துள்ள நாடு இந்தியா எனவே!

## பிறப்பு விகிதம் குறைக்கப்படும்!

இக் கொள்கையினைப் பற்றி அறிவிப்பதற்கு முன்; குடும்ப நலத் திட்டம் குறித்த பொது மக்களின் கருத்துக்கள், பிரச்சினையின்பால் உள்ள உண்மைகள் ஆகியவை பற்றி யெல்லாம் முழுமையாகவும், மிகுந்த கவனத்துடனும் அரசு ஆய்ந்து முடிவெடுத்தது என்பது குறிப்பிடத்தக்கது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் துவக்கத்தில் 1,000-க்கு 35 ஆக இருந்த பிறப்பு விகிதத்தை ஆறாவது திட்ட கால முடிவில் 25 ஆகக் குறைக்க வேண்டுமென்பதற்கு இக்கொள்கை துணை செய்யும் என கருதப்படுகிறது. 1984-ஆம் ஆண்டு வாக்கில், நமது நாட்டு மக்கள் தொகை வளர்ச்சி 1.4 சதவிகிதமாகக் குறைக்கப் படும் என நம்பப்படுகிறது.

## திருமண வயது உயர்த்தப்படும்!

தேசிய மக்கள் தொகைக் கொள்கை ஆண், மற்றும் பெண்களுக்கான திருமண வயதை முறையே 21 ஆகவும், 18 ஆகவும் உயர்த்த முடிவு செய்து அதற்கான சட்டங்கள் நிறைவேற்றப்படும் என அறிவித்துள்ளது. இப்படித் திருமண வயதை உயர்த்துவது மக்கள் தொகைப் பெருக்கத்தைக் குறைக்க உதவுவதோடு, மக்கள் பொறுப்புள்ள பெற்றோர்களாக வாழவும் வழி வகுக்கும். தாய்—சேய் நலம் காக்கவும் இது பெருந் துணையாக அமையும். பெண்கள் சிறு வயதிலேயே திருமணம் செய்து, கருத்தரிப்பதால் தாய்மார்களும், குழந்தைகளும் இறக்கும் நிலை அதிகமாக இருக்கிறது என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும். தேசிய மக்கள் தொகைக் கொள்கை திருமண வயதை உயர்த்த வழி செய்திருப்பதால் இப்படிப்பட்ட நிலைகளெல்லாம் தவிர்க்கப்படும் என நம்பலாம்.

## மக்கள் தொகை குறைந்தாலும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறையாது!

அடுத்து மாநிலங்கள் ஆர்வக் குன்றாது இத்திட்டத்தைச் செயல்

படுத்தும் வகையில் ஒரு திட்டத்தையும் இக் கொள்கை அறிவித்துள்ளது. குடும்ப நலத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தி, பிறப்பு விகிதத்தைக் குறைத்த மாநிலங்கள், நாடாளுமன்றத்தில், சட்ட மன்றத்தில் தங்கள் மாநிலத்திற்குரிய பிரதிநிதிகளின் எண்ணிக்கையை இழக்க நேரிடும் என்றும், சிறப்பாகச் செயல்படுத்தாத மாநிலங்களுக்குரிய பிரதிநிதிகளின் எண்ணிக்கை கூடிவிடுமோ என்றும், ஒரு ஐயம் இருந்தது. அதைப் போக்க தேசிய மக்கள் தொகைக் கொள்கை வழி கண்டுள்ளது. அதன்படி 2001-ஆம் ஆண்டு, வரை, 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கு அடிப்படையிலேயே நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை நிலை நிறுத்தப்படும். 1981 அல்லது 1991-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கு அடிப்படையில் இம்மன்றங்களின் எண்ணிக்கை குறைக்கப்படவோ, கூட்டப்படவோ மாட்டாது என்பது அதன் பொருளாகும். இதற்குரிய அரசியல் சட்டத் திருத்தங்கள் நடப்பு ஆண்டில் கொண்டு வரப்படும். குடும்பநலத் திட்டத்தில் சிறப்பாகச் செயல்படும் மாநிலங்கள் இன்னும் முனைப்போடு செயல்பட இது வகை செய்துள்ளது எனலாம்.

**ஈட்டுத்தொகை உயர்த்தப்படும் !**

மேலும் குடும்ப நலச் சிகிச்சை செய்து கொள்வோருக்கு வழங்கப்படும் ஈட்டுத் தொகை உயர்த்தி வழங்கப்படும் என இக் கொள்கை அறிவித்துள்ளது. அந்த அடிப்படையில், இரண்டும் அதற்குக் குறைவாகவும் குழந்தைகள் உடையோர் குடும்ப நலச் சிகிச்சை செய்து கொண்டால் ஈட்டுத் தொகை ரூ. 100, மூன்று குழந்தைகள் உடையோர் செய்து கொண்டால் ஈட்டுத் தொகை ரூ. 80, நான்கும் அதற்கு மேற்பட்ட குழந்தைகள் இருப்பவர் செய்து கொண்டால் ஈட்டுத் தொகை ரூ. 60 எனவும் வழங்கப்படும் என்று தமிழ் நாடு அரசு அறிவித்துள்ளது.

**மாநிலங்கள் ஊக்குவிக்கப்படும் !**

சிறப்பாக, மாநிலங்களுக்குரிய மத்திய நிதி உதவி முதலானவையும், 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கு அடிப்படையிலேயே 2001-ஆம் ஆண்டு வரை அளிக்கப்படும் எனத் தேசிய மக்கள் தொகை கூறுகிறது. அத்தோடு, மாநிலத் திட்டங்களுக்கென்று மத்திய அரசு நிதி உதவி அளிக்கும்போது, குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கென்றே 8 சதவிகிதத் தொகை வழங்கப்படும் என அக் கொள்கை தெரிவிப்பது மாநிலங்கள் இத்திட்டச் செயலாக்கத்தில் ஊக்கம் பெற உறு துணையாக அமைகிறது எனலாம்.

**பெண்களின் கல்வி அறிவைப் பெருக்கப்படும் !**

கல்வி யறிவின்மைக்கும் கருத்தரித்தலுக்கும் கருத்தொருமிப்பு அதிகமாகையால் பெண் கல்வி மிக மிக அவசியமாகிறது. பொதுவாகப் பெண் கல்வி மிகுந்துள்ள பகுதிகளில் கருத்தரிப்போர் தொகை தானாகவே குறைந்து விடுகிறது. எனவே பெண் கல்வியை ஓங்கச் செய்ய, குறிப்பாக நடுத்தரக் கல்விக்கு மேல் பெண்களின் கல்வி அறிவைப் பெருக்குவதற்கு உரியவை அனைத்தும் செய்யப்படும் எனத் தேசிய மக்கள் தொகைக் கொள்கை கூறுகிறது. தாய்—சேய் நலம் ஓங்க இம் முயற்சி பெரிதும் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மக்கள் தொகையில் கல்வியை பள்ளிகளில் அறிமுகப்படுத்துவதற்கான முயற்சிகளில் மத்திய நல்வாழ்வு-குடும்ப நலத்துறை அமைச்சகம் கல்வியமைச்சகத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என இக்கொள்கை அறிவிப்பின் வாயிலாக அறிகிறோம்.

**சிறுகுடும்ப நெறியைப் பரப்புவோருக்கு ஊக்கத்தொகை அளிக்கப்படும் !**

அரசின் அத்துணை துறைகளும் தங்கள் திட்டப் பணிகளோடு கூட குடும்ப நலத் திட்டத்தையும் இணைத்துப் பணியாற்ற வேண்டுமென இக் கொள்கை வலியுறுத்துகிறது. குடும்ப நலச் சிகிச்சை ஏற்போருக்கு ஈட்டுத் தொகை வழங்குவதுபோல், இத்திட்டச் செயலாக்கத்திற்குச் சிறப்பாகப் பணியாற்றும் பல்வேறு பிரிவினருக்கும் 'குழுவாரி ஊக்கத் தொகை' வழங்க வேண்டுமென அரசு கருதுவதாக இக் கொள்கை அறிவிக்கிறது. இதனால் மருத்துவர்கள், மாவட்ட, ஊராட்சி, ஒன்றி அமைப்புக்கள், பல்வேறு நிலைகளில் இருக்கும் ஆசிரியர்கள், கூட்டுறவு அமைப்புக்கள், தொழிலாளர்கள் ஆகியோரும் பிறரும் 'சிறு குடும்ப நெறியை' மக்கள் ஏற்கச் செய்யும் பணியில் முனைப்போடு ஈடுபடுவார்கள் என எதிர் நோக்கலாம்.

இந்திய அரசு அறிவித்துள்ள தேசிய மக்கள் தொகைக் கொள்கை காரணமாக குடும்ப நலத் திட்டம் மக்களிடையே அன்றுட வாழ்வு முறையாக உருப்பெற்று, சமுதாயத் திட்டமாக மலர்ந்து வருகிறது என்பது உண்மை!

அளவான குடும்பம் !

வளமான வாழ்வு ! !

## குடும்ப நலம் காப்போம்!

"......நமக்குள்ள பிரச்சினைகளில் மக்கள் பெருக்கம் ஒன்று. எனவே நகரத்தில் இருப்பவர்களும் சரி, கிராமப்புறங்களில் வசிப்போரும் சரி, ஒவ்வொருவரும் இந்தத் திட்டத்தில் தம் முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டும். இதன் குறிக்கோள் மக்கள் தொகையைக் குறைப்பது மட்டுமல்ல; குடும்ப நலமும் இதில் இணைந்துள்ளது. பெற்றோர்கள் தங்கள் வசதிகளைக் கொண்டு பிள்ளைகளுக்குச் சரியான கல்வி புகட்ட வேண்டும். அவர்களுடைய உணவு, உடை, மற்றும் இதரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

—இந்திரா காந்தி



# வனவிலங்கு [பாது காப்பு] சட்டம்---1972



—எஸ். ஏ. ரஹ்மதுல்லா, ஐ.எப்.எஸ்.,
தலைமை வனவிலங்குக் காப்பாளர்,
தமிழ்நாடு.

விலங்குகள், பறவைகள், பாம்பு இனங்கள், நீர் நிலைகள் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கான விரிவான வனவிலங்குப் பாதுகாப்பு மத்திய சட்டம் 1974 ஜனவரி 1-ஆம் தேதி தமிழ்நாட்டில் அமலுக்கு வந்தது. இச்சட்டத்தின் கீழ் உள்ள விதிகள் 1976 ஜனவரியில் அறிவிக்கப்பட்டன.

1882-ஆம் ஆண்டின் சென்னை காடுகள் சட்டத்தின் 21 (ஹெச்) பிரிவின்கீழ் ரிசர்வ்டு காடுகளில் வேட்டையாடுவது முறைப்படுத்தப்பட்டது. அச்சட்டத்தின் விதிகள் வேட்டை விளையாட்டுக்கான விலங்குகள், பறவைகள், ஆகியவற்றின் அளவுகள், இனம், வேட்டை நடத்தப்படுவதற்கான பருவம், பயன்படுத்துவதற்குரிய துப்பாக்கிகள் ஆகியவற்றைக் குறிப்பிட்டதுடன், பரண் கட்டி வேட்டையாடுவதும், காடு, ஏரி, குளம், ஓடை ஆகியவைகளில் வேட்டையாடுவதும், பொறி வைத்தோ, விஷம், வெடி மருந்துகள் மூலமோ வேட்டையாடுவதும் கூடாது என்றும் விதித்துள்ளது. 'ரிசர்வ்டு' நிலங்களில் இதே போன்ற வேட்டை விளையாட்டுக்காகவும், வனத்துறை சட்டத்தின் கீழ், விதிமுறைகள் சட்டத்தின் கீழ், விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்த விதிமுறைகளை வருவாய்த் துறை அமல்படுத்துகிறது. 'ரிசர்வ்' காடுகள், 'ரிசர்வ்' நிலப் பகுதிகள் ஆகிய இடங்கள் தவிர வேறு பகுதிகளில் யானைகள் போன்ற விலங்குகளை வேட்டையாடுவது தொடர்பாக சிறப்புச் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. வேட்டை விளையாட்டுக்கள் பெருமளவில் இருந்து அந்த நிலைமையில் பல பறவைகள், விலங்குகள் விரைவில் அழிந்து அவற்றின் இனமே அரிதாகிவிடும் என்ற சூழ்நிலையில் மேற்படி சட்டங்கள் இயற்றப்பட்டன.

ஒரு குறிப்பிட்ட பகுதியில் —விலங்கினங்கள் பெருமளவில் இருந்த ஒரு பகுதியில் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த விலங்குகளின் எண்ணிக்கையுடன் அப்பகுதியில் இன்றுள்ள விலங்குகளின் எண்ணிக்கையை ஒப்பிட்டுப் பார்த்தால் அது குறைந்து வந்திருப்பது தெளிவாகும். எனவே தான், இயற்கைப் பாதுகாவலர்கள் இந்நிலைமை குறித்து அபாயக் குரல் எழுப்பினர். இதையடுத்து 1955-ல் இந்திய வன விலங்கு வாரியம் ஏற்படுத்தப்பட்டது. அந்த வாரியத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் பல்வேறு விலங்கினங்களும் பறவைகளும் 3 வகைகளாகப் பிரிக்கப்பட்டன.

**அவையாவன**

1. அபாயத்துக்கு ஆளாகியுள்ளவை.

2. பாதுகாப்புத் தேவைப்படும் சிறப்புத் தரத்தைச் சேர்ந்தவை.

3. பெரிய மிருகங்கள், சிறிய மிருகங்கள், சிறு சிறு பிராணிகள்.

புதிய சட்டத்தின் கீழ் அபாயத்துக்கு ஆளாகியுள்ளதாக வரையறுக்கப்பட்ட விலங்கினங்களும், பறவைகளும் முற்றிலுமாகப் பாதுகாக்கப்பட்டுள்ளன. மற்றவை அவற்றின் தரத்திற்கேற்ப, பாதுகாக்கப்படுகின்றன. இச்சட்டத்தின்படி பொறி வைத்து விலங்குகளைப் பிடிப்பது, உயிருடன் பிடிப்பதற்காகச் சுடுவது, அல்லது கொல்வதற்காகச் சுடுவது, உணவு விடுதிகளில் அவற்றின் இறைச்சி பயன்படுத்தப்படுவது, விலங்குகள் வைத்து வியாபாரம் செய்வது, அவற்றை வேறிடங்களுக்கு அனுப்புவது, ஏற்றுமதி செய்வது ஆகியவற்றை தலைமை வனவிலங்குக் காப்பாளர் மற்றும் வனத் துறையில் உள்ள அதிகாரம் பெற்ற அலுவலர்கள் கண்காணித்து வருகின்றனர்.

இச்சட்டத்தின் 3-வது அத்தியாயம் விசேஷ அனுமதியின்றி வன விலங்குகளை வேட்டையாடுவதைத் தடை செய்கிறது. அனுமதியுடன் குறிப்பிட்ட நோக்கத்துக்காக வேட்டை நடைபெற்றால் கைப்பற்றப்பட்ட அல்லது கொல்லப்பட்ட விலங்குகள் பற்றிய விவரப் பட்டியலை வைத்திருக்க வேண்டுமென்றும் அச்சட்டம் விதிக்கிறது. பெண் விலங்குகளுக்கும், குட்டிகளுக்கும் முழுப் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் 17-வது பிரிவின்படி :

1. எவரும் வனவிலங்குகளைத் தரையிலோ, நீரிலோ அல்லது வானவெளியிலோ, மோட்டார், படகு, விமானம், மூலம் வேட்டையாடக் கூடாது.

2. விமானம், மோட்டார், விசைப் படகைப் பயன்படுத்தி, அவற்றை வன விலங்கு மீது ஏற்றி நசுக்கிக் கொல்லக் கூடாது.

3. இரசாயனங்கள், வெடிமருந்துகள், வலைகள், விஷம், விஷ ஆயுதங்கள், பொறி ஆகியவற்றின் மூலம் வன விலங்குகளை வேட்டையாடக் கூடாது. வன விலங்குகளைப் பிடிக்க உரிமம் பெற்றோருக்கு இது பொருந்தாது.

4. வேட்டையாடுவதற்காகச் செயற்கை விளக்குகளைப் பயன்படுத்தக்கூடாது. பிற மிருகங்களைத் தின்னும் மிருகங்களை வேட்டையாட உரிமம் பெற்றிருந்தால் இது பொருந்தாது.

5. இரவில் வன விலங்குகளை வேட்டையாடக் கூடாது.

6. நீர் நிலைகள், ஓடைகள் ஆகியவற்றில் நீர் அருந்தும் விலங்குகளையும் நீர் நிலைகளை நோக்கிச் செல்லும் விலங்குகளையும் வேட்டையாடக் கூடாது. இது நீர் நிலைகளில் வசிக்கும் பறவை இனங்களுக்குப் பொருந்தாது என்று விதிக்கப்பட்டுள்ளது. மேற்படி விதிகள் சாதாரண காக்கைகள், குள்ள நரி போன்ற சிறு பிராணிகளுக்குப் பொருந்தாது.

இச்சட்டத்தின் கீழ் சரணாலயங்கள், தேசியப் பூங்காக்கள், வேட்டையாடுவதற்கான 'ரிசர்வ்' பகுதிகள், தடை விதிக்கப்பட்ட பகுதிகள் ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன. சரணாலயங்கள், தேசியப் பூங்காக்கள், ஆகியவை பற்றிய விதிகள் அவற்றினுள் பிறர் செல்வதற்குக் கட்டுப்பாடுகளை விதிக்கிறது. அவற்றுக்கு அருகில் வசிப்பவர்கள் தீ வைத்து, ஆயுதம் எடுத்துச் செல்வது, புல் அறுப்பு ஆகியவை குறித்துப்

பொறுப்புணர்ச்சியுடன் பாது காவலர்களாக இருக்க வேண்டும்.

சட்டத்தின் 5-வது பிரிவு, வன விலங்குகள் வியாபாரம் செய்யப்படுவதை தடை செய்கிறது. இதன் 39-வது பிரிவின்படி எல்லா வன விலங்குகளும், அவற்றின் மாமிசம், தோல் போன்றவைகளும் அரசாங்கத்தின் சொத்தாகும். எனவே, தலைமை வன விலங்குக் காப்பாளரிடமிருந்து உரிமைச் சான்றிதழ் இல்லாமல் வன விலங்குகளை உயிருடனோ, இறந்ததாகவோ வைத்திருப்பது குற்றமாகும்.

இச்சட்டத்தின் 43-வது பிரிவின் கீழ் வன விலங்குகளை வேறிடத்துக்கு அனுப்புவது, ஏற்றுமதி செய்வது ஆகியவற்றுக்குக் கடும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. இவற்றை விற்பது, வேறிடங்களுக்கு அனுப்புவது ஆகியவை அனுமதி பெற்று நடத்தப்பட வேண்டும். இது சம்பந்தமான கணக்குகள் தலைமை வன விலங்குக் காப்பாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

44-வது பிரிவின்படி உரிமம் பெற்றிருந்தாலன்றி.

1. வனவிலங்கு பொருட்கள் தொடர்பான வியாபாரத்தில் எவரும் ஈடுபடக் கூடாது.

2. அத்தகைய விலங்குகளின் மாமிசத்தை உணவு விடுதிகளில் சமைப்பதோ பரிமாறுவதோ கூடாது.

**குற்றங்களைக் கண்டுபிடிப்பதும் தடுப்பதும்**

இச்சட்டத்தின் 50-வது பிரிவு சில அதிகாரிகளுக்கு, சட்டத்தை மீறுவோரின் வீடுகளில் அல்லது வாகனங்களில் நுழைந்து சோதனை நடத்திப் பொருட்களைப் பறிமுதல் செய்யவும், சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்யவும் வகை செய்கிறது. 51-வது பிரிவின்படியான தண்டனை கடுமையானது. குற்றமிழைப்போருக்கு 6 ஆண்டு வரை சிறை தண்டனையும், ரூ. 2 ஆயிரம் வரை அபராதமும் விதிக்கப்படும். வன விலங்குகள் தொடர்பான சில குற்றங்கள் தண்டனையை குறைக்க முடியாத குற்றங்களாகும்.

சட்டத்தை அமல்படுத்துவதில் மக்கள் தரும் ஒத்துழைப்பு நமது காடுகளையும், வன விலங்குகளையும் காப்பதுடன் வன விலங்குகள், பறவை இனங்களின் தொகை அதிகரிக்கவும் உதவும். தேசியச் சொத்தான வன விலங்குகள் மூலம் அவ்வப்போது குறிப்பிடத் தக்க அளவு அந்நியச் செலாவணி கிடைப்பதுடன், சுற்றுலா, பெருகவும் உதவும்.



## உங்களுக்குத் தெரியுமா?

**1. குயில் ஒரு சோம்பேறி!**

"குக்கூ" "குக்கூ" என்று இனிமையாகக் கூவுவது ஆண் குயில்தான்! இக் குரலுக்கு நேர்மாறானது இதன் குணம். மிகவும் சோம்பேறி. தனது கூட்டினைத் தானே கட்டுவதில்லை. தன் குஞ்சுகளைத் தானே வளர்ப்பதுமில்லை. காக்கையின் கூட்டில் முட்டையிடுகிறது. இரு பறவைகளின் முட்டைகளும் ஒரே மாதிரி இருப்பதாலும், ஒரே காலத்தில் (ஏப்ரல்—ஆகஸ்ட்) முட்டையிடுவதாலும், காக்கைகள் குயில் முட்டைகளையும் சேர்த்து அடை காக்கும். ஆண் குயில் காக்கைக் கூட்டைக் கண்டு பிடிக்கும். அங்கு உட்கார்ந்து கூச்சலிடும். சப்தம் தாளாமல், காக்கை குயில் மீது பாயும். ஆனால் குயில் வெகு தூரத்திற்குப் பறந்து காக்கைகளை அலைக்கழிக்கும். இதற்குள் பெண் குயில் காக்கைக் கூட்டினுள் புகுந்து முட்டையிடும். முட்டையிட்ட பிறகு பெண் குயில் இதன் அடையாளமாக ஒரு குரல் கொடுக்கும். இதனை அறிந்த ஆண் குயில் வேகத்தை அதிகரித்து பறந்து விடும். இச்சத்தத்தை அறியாத காக்கை குயில் முட்டையை அடை காத்து உரிய காலத்தில் குஞ்சு பொறித்து அவற்றை வளர்க்கும். இறக்கை முளைத்தவுடன் குயில் குஞ்சுகள் பறந்து விடும்!

**2. மூன்று முறை பறந்த கவுதாரியைப் பிடிப்பது எளிது!**

சாம்பல் நிறக் கவுதாரி, கறுப்பு நிறக் கவுதாரி என்ற இரு வகைகள். முன்னதுதான் சண்டையிடும். முட்டையிலிருந்து வெளி வந்தவுடன், இவை ஓடிச் சாட ஆரம்பித்துவிடும். கவுதாரி நீண்ட நேரம் பறப்பதில்லை. சிறிது நேரம் பறந்ததும் ஓய்வெடுக்கும். மறுபடியும் சிறிது நேரம் பறக்கும். இறக்கைகளை விட கால்களையே அது அதிகம் பயன்படுத்துகிறது. வேகமாக ஓட வல்லது. பறந்தால் களைத்து விடும். மும்முறை பறந்த கௌதாரியைப் பிடிப்பது எளிது என்றும் கூறுவார்கள்.

# மலைச்சாதி மாணவர்களுக்குத் தொழிற் பயிற்சி!



இன்றுள்ள சூழ்நிலையில் தொழிற்கல்வி ஒவ்வொரு மாணவருக்கும் தேவைப்படுகிறது. பள்ளிக் கல்வியுடன் தொழிற் கல்வியைக் கட்டாயமாக்கலாமா என்று அரசு ஆய்வு செய்து வருகிறது. எனவே, தொழிற்கல்வி ஒரு நாட்டின் கல்வித் துறையில் தனி இடம் பெறுகிறது.

தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பல்வேறு வகைகளில் செய்து வரும் உதவிகளை, மலைச்சாதி மக்களுக்கும் அரசு தொடருகிறது. மலைச்சாதி மாணவர்கள் கல்வி பெறப் பல்வேறு சலுகைகளை அளித்துவருவதுடன், அவர்களுக்குத் தொழிற் கல்வியையும் வழங்குவதற்குத் தமிழ்நாடு அரசு முனைந்து பணியாற்றுகிறது.

மலைச்சாதிப் பையன்களையும் பெண்களையும் தொழிற் பயிற்சி நிறுவனங்களில் சேர்ப்பதற்கு, இந்த ஆண்டு, தமிழ்நாடு அரசு சிறப்பு முனைப்புத் திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளது. அதன் பொருட்டு, கடந்த ஜூலை திங்கள் 6-ஆம் நாளன்று, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர், நீலகிரி மாவட்டத்தில் கூனூருக்குச் சென்று, மலைச் சாதி ஆண்களையும் பெண்களையும் பேட்டிகண்டு, ஏறக்குறைய 56 பேர்களை, பல்வேறு தொழிற் பயிற்சி நிறுவனங்களில் சேர்ப்பதற்குத் தேர்ந்தெடுத்தார். கோத்தகிரியில் புகழ் பெற்று வரும், மலைச்சாதி மக்களுக்குக் கடந்த 30 ஆண்டுகளாகத் தொண்டு செய்தமைக்காகப் பத்மஸ்ரீ விருது பெற்றவரும், தடுப்பு முறையிலும் சமூக முறையிலும் மருந்து கண்டு பிடித்தமைக்காக பி. சி. ராய் பதக்கம் பெற்றவருமான டாக்டர் நரசிம்மன், இந்த பேட்டியின்போது உறுதுணை புரிந்தார். மற்றொரு சமூகநல ஊழியரும் இந்தப் பேட்டிக்கு ஒத்தாசை செய்தார். அவர், திரு இராசாமி அடிகளார் ஆவார்! சிறந்த கல்வியாளராகத் திகழும் இவர் அரிசன மலைச்சாதி மக்களுக்கு நீலகிரியில் இலவசப் பள்ளியையும், பள்ளி விடுதியையும் நடத்தி வருபவர்.

இந்தப் பேட்டிக்குச் சில நாட்களுக்கு முன்னதாக, நீலகிரி மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தைச் சேர்ந்த சமூக நலத் துறை ஊழியர்கள், நீலகிரியிலுள்ள மலைச்சாதிப் பையன்களையும் பெண்களையும் சந்தித்துத் தொழிற் பயிற்சி போன்ற கல்வி முறைக்கு மனுச் செய்யும்படி கேட்டுக் கொண்டனர்.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்ககத்தைச் சார்ந்த ஊழியர்கள் மலைப் பகுதியிலுள்ள கிராமங்களுக்குச் சென்று, அங்குள்ள இளம் வயதினருக்குத் தொழிற் பயிற்சி சம்பந்தப்பட்ட தகவல்களைத் தெரிவித்தனர். தமிழ்நாட்டில் 30 இடங்களில் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் உள்ளன என்றும், அவற்றில் பல்வேறு தொழிற் பயிற்சிகள் பொருத்துதல், எலக்டிரீசியன், வயர்மென், ரேடியோ மெகானிக், மோட்டார் மெகானிக், ரெபிரிஜிரேட்டர் மெகானிக், தச்சுத் தொழில், கருமார்த் தொழில், டிராக்டர் மெகானிக், வெல்டிங் போன்ற பல்வேறு வகைப் பொறியியல் தொழில் கல்வி கற்றுத் தரப்படுகின்றது என்ற விவரத்தை இளம் மலைசாதியினருக்குத் தெரிவித்தனர். துணி வெட்டுதல், துணி தைத்தல், நூல் வேலைப்பாடு செய்தல், பின்னுதல், தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சி, அலுவலக நடைமுறைப் பயிற்சி, ரேடியோ மெக்கானிசம், இயந்திர மெக்கானிசம் ஆகிய தொழிற்படிப்புகள் சென்னையில் உள்ள பெண்கள் தொழிற்பயிற்சி நிலையத்தில் கற்றுத் தரப்படுகின்றன என்ற விவரத்தை மலைச்சாதிப் பெண்களுக்குத் தெரிவித்தனர்.

இந்த பேட்டி வெற்றிகரமாக நடைபெற்றது என்றுதான் குறிப்பிட வேண்டும். ஏனென்றால் கடந்த ஜூலை 6-ஆம் நாளன்று கூனூரில் நடந்த இந்த பேட்டியின்போது 48 பையன்களும் 8 பெண்களும் வருகை தந்தார்கள்! இவர்கள் எல்லாம், அங்குள்ள தோடர், கோதர், இருளர், குறும்பர், கட்டுநாயக்கர், மற்றும் பனியர் வகுப்பைச் சேர்ந்த

வர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். முடிவில், பல்வேறு பயிற்சிகளில் கல்வி பெறுவதற்கு 33 பையன்களும், 6 பெண்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 33 பையன்களில் இருவர் கோயம்புத்தூரில் உள்ள தொழிற் பயிற்சி நிறுவனத்திலும், மீதி 31 பேர் கூனூரில் உள்ள தொழிற்பயிற்சி நிறுவனத்திலும் சேருவதற்கு விரும்பினர். அவர்களது விருப்பம் நிறைவேற்றி வைக்கப்பட்டது. மலைச்சாதிப் பெண்கள் சென்னையிலுள்ள தொழிற்பயிற்சி நிலையத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இந்தப் பையன்களும் பெண்களும் ஆகஸ்ட் முதல் தேதியிலிருந்து பல்வேறு வகைப் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். தாங்கள் ஏற்றுக் கொண்டுள்ள பயிற்சியைப் பொறுத்து, ஓராண்டுக்கு அல்லது ஈராண்டுக்கு உதவித் தொகையையும், பயிற்சி முடித்த பின்னர் தொழில் முறை சர்டிபிகேட்டையும் அவர்கள் பெறுவார்கள். இந்த சர்டிபிகேட்டுகள், நகர்ப்புறத் தொழில் துறையில் அவர்களைத் தேர்ச்சி பெற்றவர்களாக ஆக்குகின்றன; சுயவேலையை உருவாக்கிக் கொள்ள அவர்களுக்கு வழிவகை புரிகின்றன. இந்த மலைச்சாதிப் பையன்களையும், பெண்களையும் தேர்ந்தெடுத்தபோது, அவர்களில் சிலர், நீலகிரிப் பள்ளிகளிலே ஏற்கெனவே பள்ளி இறுதித் தேர்வில் வெற்றி பெற்றவர்கள் என்பது தெரியவந்தது. ஒரு சிலர் விஷயத்தில்தான் குறைந்தபட்சக் கல்வியான எஸ். எஸ். எல். சி. யை விட ஒரு வகுப்புக் குறைவாகப் படித்திருந்தால் போதும் என்று விதிவிலக்கு அளிக்கப்பட்டது. தொழிற்பயிற்சி நிறுவனத்தில் அளிக்கப்படும் சிறப்புப் பயிற்சிகளின் மூலம் இந்தத் தகுதிக் குறைவு, சமாளிக்கப்படுகிறது.



தொழிற் பயிற்சியில் சேரவிரும்பிய மலைச்சாதி மாணவர்களையும், மாணவிகளையும் பேட்டி காணும் காட்சி.

இந்தப் பேட்டிக்கு வந்திருந்த பையன்களில் சிலர் நவீன பாணியில் ஆடை அணிந்திருந்தனர். ஆனால், ஆண், பெண் உட்பட இந்த 56 பேர்களில் ஒருவர்கூட சென்னை நகரத்தைப் பார்த்ததில்லை! இவர்களில் ஒரே ஒரு பையன் மட்டும் கோயம்புத்தூரைப் பார்த்திருக்கிறான். ஒரே ஒரு பெண் மட்டும் பெங்களூரையோ, மைசூரையோ பார்த்திருக்கிறாள். அனைவரும், தங்களது சொந்த மலைப்பகுதி மொழியுடன் தமிழ் மொழியை மிகச் சரளமாகப் பேசினர். இந்தப் பெண்களும் ஆண்களும் தங்கள் பயிற்சியைத் தொடங்குவதற்கு மிகவும் ஆர்வத்துடன் காணப்பட்டார்கள். பயிற்சியில் சேர விரும்பிய கெட்டிக்காரனான ஒரு பையன் மட்டும், தனது தந்தை பயிற்சிக்கு அனுப்பச் சம்மதிக்கவில்லை என்று தெரிவித்தான். அதனால், பேட்டிகாணச் சென்றிருந்த குழுவின் உறுப்பினர் அனைவரும் பேட்டி முடிந்தபின் மலைப்பகுதி கிராமத்திற்குச் சென்று, அந்தப் பையனின் தகப்பனாரைச் சந்தித்துப் பேசி, மகனைத் தொழிற் கல்வி நிலையத்துக்கு அனுப்புவதற்கு ஒப்புக்கொள்ள வைத்தனர். தேர்ந்தெடுக்கப் பெற்ற பையன்களில் மூவர், கொத்தடிமைகளாக இருந்திருக்க வேண்டும் அல்லது அவர்களுடைய தந்தையார்களாலோ நெருங்கிய உறவினர்களாலோ சில காலத்திற்கு முன்பு அவர்கள் கொத்தடிமைகளாக ஆக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது புரிந்தது.

தொழிற் பயிற்சி நிறுவனங்களில் மலைச்சாதி இளைஞர்களும் இளம்பெண்களும் சேர்த்துக் கொள்ளப்படுவது இதுதான் முதல் முறையாகும். இம்முறை இனிமேல் தொடரும் எனத் தெரிகிறது.

தென் ஆர்க்காடு, வடஆர்க்காடு மற்றும், சேலம் மாவட்டங்களில் உள்ள மலைச்சாதிப் பையன்களையும் பெண்களையும் தொழிற் பயிற்சியில் சேர்ப்பதற்கு, வேலை வாய்ப்பு மற்றும் தொழிற் பயிற்சித்துறை இயக்குநர் தக்க முயற்சிகளை எடுத்துக் கொண்டு வருகிறார். இதன் தொடர்பாக அவர் மேற்சொன்ன மாவட்டங்களுக்கும் விரைவில் செல்ல இருக்கிறார்.

**மொத்தத்தில், மலைச்சாதியினர் இனி நல்வாழ்வு பெறுவது உறுதி.**

—எஸ். சண்முகசுந்தரம்



வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் திரு டி. கே. ஒசா, டாக்டர் நரசிம்மன், திரு இராமசாமி அடிகளார் ஆகியோருடன் தொழிற் பயிற்சியில் சேர விரும்பிய மலைச்சாதிப் பெண்களும், அவர்களுடைய உறவினரும்.



# வறட்சியால் வாடிடும் மக்களுக்கு வாழ்வளிக்கும் மண்வளப் பாதுகாப்புத் திட்டம்!

—ச. கா. பத்மநாபன்,
கோட்ட வேளாண்மைப் பொறியாளர் (இயந்திரம்),
கோயம்புத்தூர்.

மண்வளப் பாதுகாப்புத் திட்டம், வறட்சியால் வேலையின்றி பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குப் பெரிதும் உதவுகிறது. கோவை மாவட்டத்தில் முக்கியமாக தாராபுரம் வட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள கிராம மக்களுக்கு, இத்திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டு வருகிறது.

**இத்திட்டத்தின் குறிக்கோள்கள்**

1. விவசாய விளை நிலங்களில், நீர் வளம் மற்றும் நில வளம் குன்றாத நிலங்களில், நிரந்தரமாகப் பயனுள்ளவையாக இருக்க, நிலத்திற்கேற்பத் தகுந்த வேளாண்மை முறைகளைக் கைக்கொள்வதே மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

2. மக்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுத்து உதவுதல்.

இத்திட்டத்தின் கீழ் சம உயர வரப்புகள் (contour bunds) நிலச் சரிவுக்கு குறுக்கே போடப்படுகிறது. சம உயர வரப்பின் குறுக்கு வெட்டுப் பரப்பளவு 0.56 சதுர மீட்டர். அதாவது வரப்பு 'டிரஃப்பீசியம்' வடிவில் உள்ளது. வரப்பின் மேல் அகலம் 0.5 மீட்டரும், கீழ் அகலம் 2.00 மீட்டரும், உயரம் 0.45 மீட்டரும் ஆகும். இந்த வரப்புகள் அமைக்க நிறைய ஆட்கள் தேவைப்படுகிறார்கள்.

இதே மாதிரிக் கசிவுக் குட்டைகள் (Percolation Ponds) கட்டுவதால், குட்டைக்குக் கீழுள்ள பகுதி கிணறுகளுக்கு ஊற்று ஏற்படுவதால், நிறைய மக்களுக்கு வேலை வாய்ப்பும் கொடுக்கப்படுகிறது.

எனவே, தமிழ்நாடு அரசு வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்க, கோவை மாவட்டத்தில் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தைத் தீவிரமாகச் செயலாக்கி வருகிறது.

**சாதனை**

தாராபுரம் உட்கோட்டத்திற்கு 2,400 எக்டேர் நிலப்பரப்பில் சம உயர வரப்புப் போட ரூபாய் 5.4 இலட்சமும், 15 கசிவுக் குட்டைகள் கட்ட ரூபாய் 3.75 இலட்சமும் ஒதுக்கப்பட்டு உள்ளது. தாராபுரம் வட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள 25 கிராமங்களில் கடந்த மே மாதம் ஆரம்பித்து குறுகியகாலத்திற்குள் சுமார் 2,000 எக்டேர் நிலப் பரப்பிற்கு சுமார் ரூபாய் 2.75 இலட்சம் செலவில் சம உயர வரப்புகள் போடப்பட்டு உள்ளன. இது தவிர 15 கசிவுக் குட்டைகளை அமைக்கும் வேலைகளில், நிழலி, புத்தூர், மருதூர், மூலனூர், கெத்தல்ரேவ் ஆகிய கிராமங்களில் அமைக்கப்படும் 5 கசிவுக் குட்டைகளின் வேலை முடிவடையும் நிலையில் உள்ளது. மற்ற 10 குட்டைகளில் வேலை மும்முரமாக நடைபெற்று வருகிறது.

நாள் ஒன்றுக்குச் சராசரி 2,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பின்



கண்டவாறு பல திறத்தினர் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

1. சாதாரணமாக வேலை செய்யும் மக்கள்.

2. மழையின்மை காரணமாகவும், வறட்சியின் காரணமாகவும் பாதிக்கப்பட்ட சிறு விவசாயிகள்.

3. காலையில் தயிர், மோர், விற்று விட்டு மீதியுள்ள நேரங்களில் வேலை செய்யும் மகளிர்.

4. படித்தவர்கள்.

**அரசு தரும் மானியம்**

இந்த மண்வளப் பாதுகாப்புத் திட்ட வேலைகளுக்காக ஆகும் செலவுகளை முதலில் அரசு ஏற்றுக் கொள்கிறது. வேலை முடிந்தபின் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு அரசினரால் பராமரிக்கப்படுகிறது. பிறகு செலவிடப்படும் மொத்தத் தொகையில் வறட்சி நிவாரணத்தை முன்னிட்டு 50 சதவிகிதத்தை அரசு ஏற்றுக் கொண்டு, பட்டாதாரர்களுக்கு மானியமாக வழங்குகிறது. (சாதாரணமாக 25 சதவிகிதம் கொடுக்கப்படுவதை வறட்சி காரணமாக 50 சதவிகிதம் அரசு ஏற்றுக் கொள்வது குறிப்பிடத் தக்கது). மீதமுள்ள 50 சதவிகிதத்தை பயனடைந்த பட்டாதாரர்களிடமிருந்து அரசினரால் அவ்வப்போது விதிக்கப்படும் வட்டியுடன் வேலை முடிந்த இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பத்து ஆண்டுத் தவணைகளில் வசூலிக்கப்படுகிறது. எனவே, மண்வளப் பாதுகாப்புத் திட்டம், விளையும் பயிர்களில் அதிக மகசூல் கொடுத்தும், வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுத்தும் உதவுவதால் மக்கள் இத்திட்டத்தின் அவசியத்தை உணர்ந்து பயனடைகிறார்கள்.

## ஜனநாயகம்

ஜனநாயகத்திற்குக் கடமைப்பட்டிருக்கிறோம். எல்லா மக்களுக்கும், ஜனநாயகம் அர்த்தம் உள்ளதாக இருக்க அதை நாம் மாற்ற விரும்புகிறோம். ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை வாக்குப்பதிவு செய்வது மட்டுமே ஜனநாயகமாகி விடாது. சாதாரண மனிதன் தனது பகுதி அபிவிருத்தி சம்பந்தமாக எழுப்பப்படும் விஷயங்கள் வெளிப்படவேண்டும் என நாம் கருதுகிறோம். இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கவே முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. நமது நாடாளுமன்ற முறைதான் இந்தியாவுக்குச் சரியானது என நாம் கருதுகிறோம். அதில் சில திருத்தங்கள் தேவைப்படலாம். ஆனால் மொத்தத்தில் அதுதான் சரியானது.

சித்தாந்த ரீதியில் ஒருவரிடம் அதிக அளவுக்கு அதிகாரம் மட்டும் இருந்தால் போதாது. அவற்றை நடைமுறையில் கலபமாகப் பயன்படுத்திவிட முடியாது. அவற்றைப் பயன்படுத்த முதலமைச்சர்களின் உதவி தேவைப்படுகின்றது. மாநில முதலமைச்சர்கள் தங்கள் மாநிலங்களைக் கட்டுப்படுத்தாவிட்டால் அவர்களால் முதலமைச்சர் பதவியில் நீடிக்க முடியாது. மக்களின் ஆதரவு கிடைக்காவிட்டால் எனது கட்சிக்கு நான் தேவைப்பட மாட்டேன். கட்சிக்கு நான் தேவையில்லாவிட்டால், நான் கட்சியில் இருக்கமுடியாது. ஆகையால் ஒவ்வொரு செயலும் மற்றொரு செயலைச் சார்ந்து இருக்கின்றது. ஆகையால் இந்தியா, ஜனநாயக முறையில்தான் வளமடைந்து சிறக்க முடியும்!

—இந்திரா காந்தி..




# பிளாஸ்டிக் பொருள்களை உருவாக்கப் பயிற்சி தரும் நிலையம்!

—எஸ். பாலசுந்தர்,
இயக்குநர்,
சிப்பெட்.

உலகத்தில் சராசரியாக ஒரு மனிதன் பத்து கிலோகிராம் 'பிளாஸ்டிக்' பொருள்களை உபயோகிக்கிறான். ஆனால் ஜெர்மனி, அமெரிக்கா, ஜப்பான் போன்ற முற்போக்கு நாடுகளில் ஒரு நபரால் ஆண்டுக்கு ஐம்பது கிலோ கிராம் 'பிளாஸ்டிக்' உபயோகிக்கப்படுகிறது. இந்தியாவிலோ, 0.2 கிலோ மட்டும்தான் தற்பொழுது உபயோகிக்கப்படுகிறது. வருங்காலத்தில் இது படிப்படியாய் அதிகரிப்பது உறுதி.

**தேவை வளர்கிறது**

பிளாஸ்டிக்கை ஏதேனும் ஒரு பொருளுக்குப் பதிலாகத்தான் பயன்படுத்துவது என்ற காலம் மாறிப் போய் விட்டது. அதனுடைய தனிப்பட்ட சிறப்பான குணாதிசயங்களினால் தொழில் துறையில் அதிகமாக உபயோகிக்கப்படும் பல பொருட்களுக்கும் தொழில்களுக்கும். 'பிளாஸ்டிக் தற்பொழுது இன்றியமையாததாகிவிட்டது. வரை படம் தீட்டி, தொழில் திட்டம் கொடுப்பவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம்! புரட்சியான, புதுமையான கருத்துகளுக்குப் பிளாஸ்டிக் உருவகம் தர முடிவதுதான் இதன் காரணம். பிளாஸ்டிக் அதிக இலகுவானது; அமிலங்கள் இதை அரிக்க முடியாது; எஃகுப் பொருட்களைப் போல் துருப் பிடிக்காது; எந்த வடிவத்திலும் தேவையான வர்ணங்களில் தயாரிக்கலாம்.

**பயிற்சி நிலையம்**

நமது நாட்டின் வளர்ந்து வரும் பிளாஸ்டிக் பொருள்களின் தேவையை ஈடு செய்ய, பிளாஸ்டிக் பொறியியல் மற்றும் தொழிற் கருவிகளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான பயிற்சி அளிப்பது மிகவும் இன்றியமையாததாகும். எனவேதான், ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டப்படி (UNDP), 1968-69-ல் உலகத் தொழிற் சங்கத்தின் ( ILO ) உதவியால், மத்திய அரசாங்கத்தின் பெட்ரோலியத் துறையின் சார்பில், புகழ்பெற்ற கிண்டி தொழிற் பேட்டையில் 'சிப்பெட்' எனப் படும், பிளாஸ்டிக் பொறியியல் மற்றும் தொழிற்கருவிகள் பற்றிய



'சிப்பெட்' பயிற்சி நிலையத்தில் நவீன இயந்திரங்களைக் கொண்டு பிளாஸ்டிக் தொழிலில் நல்ல பயிற்சி அளிக்கப்படுகிறது.

பயிற்சி தரும் மத்திய நிறுவனம் (Central Institute of Plastic Engineering and Tools) அமைக்கப்பட்டது. பிளாஸ்டிக் தொழிற்சாலைகளுக்குத் தேவையான அச்சுகளை வரைந்து உருவாக்குவதும், அச்சுகளைத் தொழிற் பட்டறையில் தயாரிப்பதற்குப் பயிற்சி அளிப்பதும் இதன் முக்கிய நோக்கமாகும். இதைத் தவிர, குறுகிய காலத்தில் அச்சுகளுக்கு மெருகு ஏற்றுதல், மற்றும் பிளாஸ்டிக் பொருள்கள் தயாரிப்புக் கலைகள் போன்ற பல நுட்பமான வேலைகளுக்கு இந்நிறுவனத்தில் பிரத்தியேகமான பயிற்சி தரப்படுகிறது. தென் கிழக்கு ஆசியாவில் ஜப்பானைத் தவிர, இவ்விதமான பயிற்சி தரப்படும் நிறுவனம் இது ஒன்றே ஒன்றுதான்!

எழில் கொஞ்சும் சூழ்நிலையில் இதன் கட்டடம், தமிழக அரசு அளித்த 8 ஏக்கர் நிலப்பரப்பில், கம்பீரமாக அமைந்துள்ளது. அனுபவம் முதிர்ந்த தொழில் நுட்ப அலுவலர் ஒருவரைத் தமிழக அரசு இந்த நிறுவனத்தின் இயக்குநராகத் தந்துள்ளது.

இந் நிறுவனம், பதிவு பெற்ற தனித்து இயங்கும் நிறுவனமாகும். இதன் ஆட்சிக் குழுவிலே தலைவரைத் தவிர மத்திய அரசின் சார்பில் ஆறு உறுப்பினர்கள் உள்ளனர். தமிழக அரசின் தொழிற் துறைச் செயலாளரும், தேசிய பிளாஸ்டிக் - ரப்பர் நிறுவனத்தின் தலைவரும், பிளாஸ்டிக் தொழிலில் ஈடுபட்டுள்ள ஐந்து முக்கியமான பிரதிநிதிகளும் இந்த நிறுவனத்தின் இயக்குநரும், ஆட்சிக் குழுவின் மற்ற உறுப்பினர்களும் ஆவர்.

1968-ஆம் ஆண்டு முதல் 1973-ஆம் ஆண்டு வரையிலான ஐந்து ஆண்டுக் காலம், இந்த நிறுவனத்தின் 'பிராஜக்ட் காலம்' என்று குறிப்பிடலாம். ஐக்கிய நாடுகளின் உதவியில், நான்கு வெளிநாட்டு நிபுணர்கள், முதன் நான்கு ஆண்டுகளுக்கு இங்குப் பணி புரிந்து, இந்நிறுவனத்திலுள்ள பொறியாளர்களுக்குப் பயிற்சி கொடுத்தார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட பொறியாளர்களுக்கு வெளிநாட்டுத் தொழிற்சாலைகளிலும் ஓராண்டுக் காலம் பயிற்சி அளிக்கப்பட்டது.

### பிளாஸ்டிக் தொழிலின் வளர்ச்சி

கடந்த 30 ஆண்டுகளாக இந்தியாவில் பிளாஸ்டிக் தொழில் மேலும் மேலும் வளர்ந்து கொண்டு வருகிறது. 1974-ஆம் ஆண்டில் மட்டும் ஒரு இலட்சத்து முப்பதாயிரம் டன்கள் பிளாஸ்டிக் மூலப் பொருள்கள் தயாரிக்கப்பட்டன. 1977-78-ல், இது, இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் டன்களை எட்டி விடும்!

### இலவசப் பயிற்சி

அச்சுகள் (Moulds) வரைபடத் திட்டப் பயிற்சியும், அச்சுகள் தயாரிப்புப் பயிற்சியும் இலவசமாக இந்நிறுவனத்தில் கொடுக்கப்படுகிறது. இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்து வந்து படிப்பவர்களுக்கு இந்நிறுவன விடுதியில் இட வசதி இலவசமாகவும், உணவுச் செலவை அவர்களே பகிர்ந்து கொள்ளவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

பயிற்சியைத் தவிர சிறு தொழில் நிறுவனங்களுக்கும், பொதுமக்களுக்கும் ''சிப்பெட்'' இலவசமாக தொழில்நுட்ப ஆலோசனை வழங்குகிறது. தொழிற்சாலைகளின் விருப்பத்திற்கேற்ப, இந்தியாவின் முக்கியமான நகரங்களில் திட்டமிட்டுக் குறுகிய கால, உபயோகமான பயிற்சி முகாம்களை ''சிப்பெட்'' நடத்துகிறது. கடந்த ஆறு ஆண்டுகளில், கீழ்க்குறிக்கப்பட்ட நபர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது :

| ஆண்டு | பயிற்சி பெற்றோர் |
|---|---|
| 1968-73 | 406 பேர்கள் |
| 1973-74 | 416 பேர்கள் |
| 1974-75 | 504 பேர்கள் |
| 1975-76 | 511 பேர்கள் |

### தொழில்நுட்ப ஆலோசனைகள் பெற்றோர்

| ஆண்டு | | ஆலோசனை பெற்றோர் |
|---|---|---|
| 1974-75 | ... | 160 பேர்கள் |
| 1975-76 | ... | 217 பேர்கள் |

### முக்கிய உதவிகள்

இந்த நிறுவனம் கீழ்க்குறிக்கப்பட்ட நிறுவனங்களின் மாணவர்களுக்குச் செயல்முறைப் பயிற்சி கொடுத்து உதவுகிறது :



### செயல்முறைப் பயிற்சி

(அ) கான்பூரிலுள்ள 'ஹார்கோர்ட் பட்லர் டெக்னலஜிகல் இன்ஸ்டிடியூடி'லிருந்து வரும் 'பிளாஸ்டிக் டெக்னலஜி' பட்டதாரிகள்.

(ஆ) பம்பாய்ப் பல்கலைக் கழகத்திலிருந்து வரும் பிளாஸ்டிக் பொறியியல் பட்டதாரிகள்.

(இ) கிண்டி, பொறியியல் கல்லூரியிலிருந்து வரும் ''பொறியியல் பொருட்கள் உற்பத்தி'' வகுப்பு மாணவர்கள்.

(ஈ) இணைப்புப் பெட்டி இரயில் தொழிற்சாலையின் தொழிலாளர்கள்.

### பொருள் தயாரிக்கும் அச்சு உற்பத்தி வேலைகள்

கீழ்க்கண்ட நிறுவனங்களுக்குத் தேவையான அதி நுட்பமான அச்சுகள் தயாரிக்கப்படுகின்றன.

(அ) தென்னிந்திய இரயில் தொழிற்சாலை.

(ஆ) இந்தியத் தொலைபேசித் தொழிற்சாலை.

(இ) எலெக்ட்ரானிக்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா.

உலகச் சுகாதார நிறுவனத்தின் கீழ், 'ரிச்சர்ட்சன் அண்ட் க்ருடாஸ்' கம்பெனியின் தயாரிப்புக்காக சில அச்சுகள் மற்றும் சில முக்கியமான ஸ்தாபனங்களுக்கு பிளாஸ்டிக் பொருள்கள் உருவாக்கப்படுகின்றன.

### நிறுவனத்தின் இலவசக்காட்சி

இவ்வாண்டு ஜுலைத் திங்கள் 22-ஆம் நாள் நடைபெற்ற இலவசக் காட்சியில், சுமார் 2,000 கல்லூரி மாணவர்களும், உயர்நிலைப்பள்ளி மாணவர்களும் இந்நிறுவனத்தின் பயிற்சி முறைகளையும், பிளாஸ்டிக் தயாரிப்பு முறைகளையும் கண்டு களித்தனர். 1977-ஆம் ஆண்டு முதல் வெளிநாட்டு மாணவர்களும் இங்கு பயிற்சி பெற வசதிகள் செய்யப்படுகின்றன. ஐக்கிய நாடுகளின் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் உதவியால் அடுத்த ஆண்டில் பிளாஸ்டிக் பொருட்களைப் பரிசோதிக்கும் நிலையமொன்று இந்த நிறுவனத்தில் அமைக்கப்படவிருக்கிறது.

இந்தியாவில் இத்துறையில் பிரசித்தி பெற்ற ஒரே நிறுவனம் தமிழ்நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது தமிழர்களின் பாக்கியம் எனக் கூறலாம். இந்திய நாட்டின் தொழிலதிபர்கள் அனைவரும் இங்கு தரும் பயிற்சி வசதிகளைப் பயன்படுத்திக்கொண்டு அவர்கள் தொழில்களை வெற்றிகரமாக நடத்துவார்கள் என்று நம்புகிறோம்.

சிப்பெட் குளத்திலே வாத்துகள் நீந்தி விளையாடுகின்றன.



## குடும்பநலத் திட்டத்திற்கு மதம் தடையாக இல்லை!



### திருமதி ஹவாமா

வாலாஜாபேட்டை மருத்துவ மனையில் குடும்பநல நிரந்தர சிகிச்சை செய்து கொண்ட திருமதி ஹவாமா இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்தவர். தன் வீட்டுக்காரருக்கு தேங்காய் வியாபாரம் என்றும், கிடைக்கின்ற வருவாய்க்குள் நல்லபடியாகக் குடும்பம் நடத்த குடும்ப நலத்திட்டம் அவசியம் என உணர்ந்து, தானே நிரந்தரக் கருத்தடை செய்து கொண்டதாகக் கூறினார். மதம் இதற்குத் தடையாக இல்லை என்றும் தானும் தன் கணவனும் கலந்து பேசி, மனம் ஒப்பி இச்சிகிச்சை செய்து கொண்டதாகவும் அவர் தெரிவித்தார்.

### திருமதி சரோஜா

வாலாஜாபேட்டை மருத்துவ மனையில் ஆண்குழந்தை பெற்றெடுத்துள்ள இவர் கிறித்துவ மார்க்கத்தைச் சேர்ந்தவர் (பந்தகோஸ்த் பிரிவு). தனக்குப் பிறந்திருப்பது இரண்டாவது பிள்ளை என்றும், ஏழ்மையான நிலையிலுள்ள தங்களுக்கு இரண்டே குழந்தைகள் போதுமென்று கருதியே, தான் குடும்பநல நிரந்தரச் சிகிச்சை செய்து கொண்டதாகவும், மதம் இத்திட்டத்திற்கு எதிராக இல்லையென்றும் அவர் தெரிவித்தார்.



# தமிழ்நாட்டில் குடும்ப நல முனைப்பு இயக்கம்

எஸ். முத்துராமலிங்கம்

இந்திய அரசு அளித்திடும் முழு நிதி உதவியோடு தமிழ்நாட்டில் குடும்ப நலத் திட்டம் சிறப்பாகச் செயல் படுத்தப்பட்டு வருகிறது. செங்கல்பட்டு மாவட்டம் சோமங்கலத்தில் ஊரக வளர்ச்சித் திட்டத்தைத் துவக்கி வைத்த நமது பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள், 'குடும்ப நலத் திட்டத்தைச் செயல் படுத்துவதில் தமிழ்நாடு சிறந்த பணியாற்றியுள்ளது. என்றாலும் இன்னும் செய்ய வேண்டிய பணிகள் ஏராளமாக உள்ளன' என்று குறிப்பிட்டார். இருபது அம்சப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தை அறிவித்துச் செயல் படுத்துகின்ற நமது பிரதமர் அவர்கள், அத்தனைக்கும் அடிப்படையானது குடும்பநலத் திட்டம் என மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகிறார். சிறப்பாக ''நாட்டினுடைய மொத்தவளர்ச்சிக்குத் தடையாக எந்தக் குழுவும் (அரசியல் மற்றும் எவ்வகையைச் சார்ந்தவையாயினும்) இயங்க அனுமதிக்க முடியாது'' (No Community no group, political or otherwise can be allowed to stand in the way of the entire nation's progress) என்று திட்ட வட்டமாகக் கருத்து அறிவித்துள்ளார். அந்த வகையில், குடும்ப நலத் திட்டம் சாதி, சமய, இன வேறுபாடுகள் ஏதுமின்றி மக்கள் அனைவராலும் ஏற்கக் கூடிய சூழ்நிலையில் உருவாகி வருகிறது.

நமது பிரதமர் அவர்களும், இந்திய நல்வாழ்வு-குடும்பநலத் துறை அமைச்சர் அவர்களும், மற்ற மற்ற மத்திய அமைச்சர்களும் சிறப்பாகக் குடியரசுத் தலைவர் அவர்களும், நமது ஆளுநர் அவர்களும் தொடர்ந்து இத்திட்டத்தை வலியுறுத்தி வருவதாலும், இளைஞர்களும், மற்ற தன்னியக்க ஸ்தாபனங்களும், ஏனைய சமுதாயப் பெரியவர்களும், இடைவிடாது சிறு குடும்ப நெறியினைப் பரப்பி வருவதாலும் இத்திட்டம் மக்கள் திட்டமாக மலர்ந்து வருகிறது.

**இலக்கு :**

தமிழ்நாடு இந்த ஆண்டு 5 இலட்சம் பேர்களைக் குடும்பநல நிரந்தரச் சிகிச்சையை ஏற்கச் செய்யவேண்டுமென இந்திய அரசு இலக்குத் தந்துள்ளது. அந்த இலக்கையும் தாண்டி 6 இலட்சம் பேர்களைக் குடும்ப நல நிரந்தரச் சிகிச்சை ஏற்கச் செய்யத் திட்டமிட்டுப் பணியாற்றி வருகிறது நம் மாநில அரசு.

இந்திய அரசு நம் மாநிலத்திற்கு இவ்வாண்டு தந்துள்ள இலக்கு, சென்ற ஆண்டு இலக்கைவிட இரு மடங்காகும்! இந்தியாவிலேயே பரப்பாலும் மக்கள் தொகையாலும் மிகப் பெரிய மாநிலம் எனப்படுபவைகளுக்குத் தரப்பட்டுள்ள இலக்கைக் காட்டிலும் நம் மாநிலத்திற்குத் தரப்பட்டுள்ள இலக்கு அதிகமானது ஆகும்!

**முனைப்பு இயக்கம் :**

நம் மத்திய அரசு தந்துள்ள இலக்கை எட்டுவதற்காக 'குடும்ப நல முனைப்பு' இயக்கங்களை நடத்த அரசு முடிவு செய்துள்ளது. அந்த முடிவுக்கு ஏற்ப மாவட்டங்களில் முனைப்பு இயக்கங்களும் நடந்தேறி வருகின்றன.

நல்வாழ்வு-குடும்ப நலத் துறையுடன், அனைத்துத் துறைகளும் இணைந்து செயல்பட்டு அந்தந்த மாவட்டங்களுக்கு தரப்பட்டுள்ள இலக்கையும் தாண்டி வெற்றிகள் குவிக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையில் அனைத்துத் துறையினரும் அரும்பணியாற்றி வருகின்றனர். ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவை முனைப்பு இயக்கங்களை நடத்திட முறையே ரூ. 500, ரூ. 5,000க்கு மேல் போகாமல், நிதி வழங்கிட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அரசு அனுமதித்துள்ளது.

இலக்கு மீறிய சாதனையை இவ்வாண்டு ஏற்படுத்தவேண்டுமென்பதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. இத்திட்டச் செயலாக்கத்தில் அரிமா சங்கங்கள், ரோட்






டரி சங்கங்கள், ரவுண்ட் டேபிள்ஸ், மாதர் சங்கங்கள், இளைஞர் சங்கங்கள், தேசிய மாணவர் சங்கங்கள், இன்னும் வெவ்வேறு வகையில் சமுதாயத்தில் செல்வாக்குப் பெற்ற தன்னியக்க ஸ்தாபனங்கள் ஆகிய அனைவரது ஒத்துழைப்பையும் முழுமையாக ஒருங்கிணைத்துச் செயல்படுத்தி வருகிறது அரசு!

**தொழிலாளர் ஈடுபாடு :**

குறிப்பாகத் தொழிலாளர் சமுதாயத்தை முழுமையாக இத்திட்டத்தை ஏற்கச் செய்ய வேண்டும் என்பதில் அரசு தனி அக்கறை காட்டி வருகிறது. இதன் பொருட்டு, ஆளுநர் அவர்களின் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் தொழில் அதிபர்கள் கூட்டமொன்றை நடத்தி, அவரவர் தங்கள் தங்கள் தொழிலாளர்களை குடும்ப நலம் ஏற்கச் செய்வதோடு வேறு வகைகளிலும் இத்திட்டம் வெற்றி பெற உதவ வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். தொழிலாளர்களை நிரந்தரக் கருத்தடை ஏற்கச் செய்ய வேண்டும் என்பதற்காக, அந்தந்த நிருவாகத்தினரும் அரசு வழங்கும் ஈட்டுத் தொகையோடு கூட, தங்கள் நிதியிலிருந்து ஊக்கத் தொகை வழங்கி தொழிலாளர்களுக்கு ஆர்வமூட்டி வருகின்றனர். இது நல்ல விளைவை ஏற்படுத்தி வருகிறது.

நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கார்ப்பொரேஷன் நிருவாகம், திருச்சி பாய்லர் தொழிற்சாலை, திருச்சி இராணுவத் தொழிற்சாலை, திருநெல்வேலி இந்தியா சிமெண்ட்ஸ், இராஜபாளையம் மெட்ராஸ் சிமெண்ட்ஸ், டி.வி. எஸ்., சென்னை பின்னிக் கம்பெனி, சென்னை கப்பற்கூடத் தொழிலாளர் நிறுவனமும், சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகமும், பிறவும் குடும்ப நல முகாம்களை நடத்தி, தொழிலாளர்களை நிரந்தரக் கருத்தடை ஏற்கச் செய்து வருகின்றன.

**இந்தியன் வங்கி :**

வங்கிகளின் வரலாற்றிலேயே முதன் முதலாக தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளுள் ஒன்றுன 'இந்தியன் வங்கி' (Indian Bank) சென்னையில் பொது மக்களுக்கென குடும்ப நல முகாம் நடத்தி முடித்திருக்கிறது. இந்தியன் வங்கியின் அண்ணநகர்க் கிளை, வைணவக் கல்லூரி மாணவர்கள் இந்தியக் குடும்ப நலச் சங்கத்தின் சென்னைக் கிளையினர் ஆகியோரது ஒத்துழைப்புடன் பொதுமக்களுக்கென இம்முகாமை ஏற்பாடு செய்து நடத்தியது. தமிழ்நாடு அரசு நல்வாழ்வு-குடும்ப நலத் துறைச் செயலாளர் திரு. பி. முராரி அவர்கள் துவக்கி வைத்த இம்முகாமில் பத்தே நாட்களில் 101 தந்தைமார்கள் நிரந்தரக் கருத்தடை ஏற்றனர். இவர்களுக்கு அரசு வழங்கிய ஈட்டுத் தொகையோடு கூட, ரூ. 40 பெறுமான பொருட்களை 'இந்தியன் வங்கி' தன் நிதியிலிருந்து வாங்கி அளித்தது. சென்னையிலும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள இந்த வங்கியின் கிளைகள் அந்தந்தப் பகுதிகளிலே இப்படிப்பட்ட முகாம்களைத் தொடர்ந்து நடத்தினால் வெற்றிகள் கிட்டுவது நிச்சயம்.

மேலும் 'இந்திய வங்கியினர்' தேசிய மருத்துவர்கள் அமைப்புடன் (National Doctor's Forum) இணைந்து "டாக்டரைச் சந்தியுங்கள்" என்ற முகாமினை நடத்தி, நாட்டுப்புற மக்கள் மருத்துவ வசதி பெற இணைப்புப் பாலமாக இருந்து வருகின்றனர். சென்னையில் கடந்த 3-10-'76 ஆம் நாள் நடந்த விழா ஒன்றில் இந்தியத் தொழில் அமைச்சர் திரு டி. ஏ. பாய் அவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. யஷ்பால் கபூர் அவர்களும் குடும்பநலத் திட்டம் ஓங்க இந்தியன் வங்கி எடுத்து வரும் முயற்சிகளுக்காகப் பாராட்டுரை வழங்கி, மற்ற வங்கிகளும் இப்பணியில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர். 20 அம்சப் பொருளாதார மேம்பாட்டுத்திட்டம் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்பட வங்கிகள் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருப்பதுபோல், குடும்ப நலத் திட்டம் வெற்றி பெற இந்தியன் வங்கியை முன் மாதிரியாகக் கொண்டு அனைத்து வங்கிகளும் செயல்பட முனைந்தால் நல்ல பலன் விளையும் என்பது உறுதி.

**இரு வார விழா :**

கடந்த செப்டம்பர் மாதம் இந்தியா முழுவதும் எடுக்கப்பட்ட 'குடும்ப நல இரு வார விழா' நிகழ்ச்சிகள் திட்டச் செயலாக்கத்திற்கு உறுதுணையாக இருந்தன எனலாம். தமிழ்நாட்டில் இரு வார விழா நிகழ்ச்சிகள் மிகச் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டன. சென்னையில் மேதகு ஆளுநர் மோகன்லால் சுகாதியா அவர்கள் கலந்து கொண்ட கூட்டம்—இசை நிகழ்ச்சி, கவியரசு கண்ணதாசன் அவர்கள் தலைமையில் கவியரங்கம், மேலவைத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் நடுவராக இருக்கப் பட்டி மன்றம், திரு. கருப்பையா மூப்பனார், திரு. ஜெகவீர பாண்டியன், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஆகியோரும் பிறரும் கலந்து கொண்ட 'இளைஞர் நாள்' நிகழ்ச்சிகள், மத்திய சமூக நல போர்டு தலைவர் திருமதி சரோஜினி வரதப்பன் அவர்கள் கலந்துகொண்ட 'மகளிர் நாள்' நிகழ்ச்சிகள், திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களது குடும்ப நலக் கதா காலட்சேபம் ஆகிய நிகழ்ச்சிகள் அனைத்தும் மக்களிடையே 'சிறு குடும்ப நெறி'யைப் பரப்பப் பெரிதும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டன. புகழ்மிக்க திரைப்பட நடிகர் நடிகைகள் கலந்து கொண்ட கூட்டங்கள், நடித்த நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள், சிறப்புப் பெற்ற திரைப்பட பின்னணிப் பாடகர்கள் கலந்து கொண்ட இசை நிகழ்ச்சிகள் ஆகியவை இரு வார விழா நிகழ்ச்சிகளுக்கு மெருகூட்டின. பல்லாயிரக்கணக்கான மக்கள் இவ்விழாக்களில் கலந்து கொண்டு பயன் அடைந்தனர். சென்னையில் மட்டுமின்றி மாவட்டங்களிலும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடந்தேறின. இவை அனைத்தும் மாநிலத்தில் நடந்து வரும் முனைப்பு இயக்கங்கள், சிறு முகாம்கள் ஆகியவற்றின் வெற்றிக்கும், பொதுவாகக் குடும்ப நலத்திட்டச் செயலாக்கத்திற்கும் பெரிதும் உதவின.

**செய்தியாளர் பயணம் :**

இவற்றோடு பத்திரிகைகள், வானொலி, டெலிவிஷன் ஆகியவை இத்திட்டத்தை மக்களிடையே பரப்பிட நல்ல ஒத்துழைப்பை நல்கி வருகின்றன. சிறப்பாக, முனைப்பியக்கம் நடைபெறும் வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு கடந்த 24—9—'76 ஆம் நாள் சென்னையிலிருந்து செய்தியாளர் குழு ஒன்று சென்று கண்டு வர ஏற்பாடு செய்தது அரசு! இக் குழு துலுக்கப்பாளையம் என்ற கிராமத்திற்கு முதலில் சென்று, குடும்ப நல நிரந்தரச் சிகிச்சை செய்து கொண்ட இஸ்லாமியத் தந்தைமார்களைச் சந்தித்து உரையாடியது. பின் காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பாணவரம் ஆரம்ப சுகாதார நிலையம், வாலாஜாப் பேட்டை அரசு மருத்துவ மனை, வேலூரிலுள்ள அரசினர் தலைமை மருத்துவமனையான பென்ட்லண்டு மருத்துவமனை ஆகியவற்றிற்குச் சென்று நிரந்தரக் கருத்தடை ஏற்ற தந்தைமார்களையும் தாய்மார்களையும், மருத்துவர்களையும் சந்தித்து முனைப்பு இயக்கம், குடும்பநலம் பற்றிக் கேட்டறிந்தது. இறுதியாக மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்து உரையாடிய பின் அக்குழுவினர் சென்னை திரும்பினர். செய்தியாளர் குழு சென்று வந்த தன் பயனாக முனைப்பு இயக்கம், குடும்ப நலம் பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் விரிவாக வெளி வந்தது. மக்கள் அறிந்து கொள்ளும் நிலை ஏற்பட்டது.

**குறிப்பிடத்தக்க சாதனைகள் :**

மாவட்டங்களில் இராமநாதபுரம் மாவட்டம் திருப்புத்தூரில் உள்ள கிறித்துவ மிஷன் ஆஸ்பத்திரியில் பத்தே நாட்கள் குடும்ப நல சிறு முகாம் (Mini Camp) ஒன்றை நடத்தி 2,048 பேர்களையும், இராஜபாளையத்தில் ஒன்பது நாட்கள் முகாம் நடத்தி 2,327 பேர்களையும் நிரந்தரக் கருத்தடை ஏற்கச் செய்துள்ளனர். 22-9-'76 ஆம் நாள் மட்டும் மேற்சொன்ன திருப்புத்தூர் மருத்துவ மனையில் 350 குடும்ப நல நிரந்தரச் சிகிச்சைகள் செய்து முடிக்கப்பட்டன என்பது, அம்மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் குறிப்பிடத் தக்க சாதனையாகும்.

திருச்சி மாவட்டத்தில் ஒரு புதுமை. மாவட்டத்திலுள்ள மில் சொந்தக்காரர்கள் சங்கம், வணிகர்கள் சங்கம் போன்ற பல்வேறு வகையான சங்கங்கள் — 50க்கும் மேலானவை தம் தம் பகுதிகளில் குடும்ப நல விளம்பரப் பொறுப்பை ஏற்று நடத்துகின்றன. தனிக் கூடாரம் அமைத்து ஒலிபெருக்கி வாயிலாக குடும்ப நலச் செய்திகள் விளம்பரப் படுத்தப்படுகின்றன. அதோடு அப்பகுதிகளில் வாழும் தகுதி வாய்ந்த தம்பதிகளைச் சந்தித்து, விளக்கம் அளித்து, குடும்ப நல நிரந்தரச் சிகிச்சைக்குக் குறிப்பிட்ட மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கின்றன. நிரந்தரக் கருத்தடை ஏற்கும் ஒவ்வொருவருக்கும் அரசு வழங்கும் ஈட்டுத் தொகையோடு கூட, ரூ. 25 பெறுமான பொருட்களை அச்சங்கங்கள் தங்கள் நிதியிலிருந்து வழங்கி ஊக்கப்படுத்தி வருகின்றன.

புதுக்கோட்டை மாவட்டத்திலும் முனைப்பு இயக்கம் நடந்து வருகிறது. இங்கு, மழையூர் ஆரம்ப சுகாதார நிலையம் 761 பேர்களுக்குக் குடும்ப நல நிரந்தரச் சிகிச்சை செய்துள்ளது. இதில் 731 சிகிச்சைகள் இரு வார விழா நடந்த செப்டம்பர் மாதத்தில் நடந்தேறின என்பது குறிப்பிடத் தக்கதாகும். மேலும் இம்மாவட்டத்திலுள்ள கோட்டைக்காடு என்ற ஊர் ரோமன் கத்தோலிக்கக் கிறித்துவர்கள் வாழும் ஊர். இவ்வூரைச் சார்ந்த 25 தந்தைமார்கள்—ரோமன் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தோர் நிரந்தரக் கருத்தடை ஏற்றுள்ளனர்.

தர்மபுரி மாவட்டம் இவ்வாண்டுக்கான இலக்கையும் தாண்டிச் சென்று கொண்டிருக்கிறது என்ற வானொலி தந்த மாநிலச் செய்தி மகிழ்ச்சியூட்டுவதாகும். மேலும் மதுரை, திருநெல்வேலி, நீலகிரி மாவட்டங்களில் முனைப்பு இயக்கங்கள் நடந்து வருகின்றன. சேலம் மாவட்டம் சிறு முகாம் நடத்தி முடித்துள்ளது. மற்ற மாவட்டங்களும் குடும்ப நலத் திட்டத்தைத் தலையாய பொறுப்பாக ஏற்றுச் செயல்படுத்தி வருகின்றன.

மாநிலம் முழுவதிலும் நடந்தேறி வரும் குடும்ப நல முனைப்புப் பணிகளுக்கு உறுதுணையாக குடும்ப நல இரு வார விழா அக்டோபர் 17-ஆம் நாள் முடிய நீடிக்கப்பட்டது.

இப்படிப்பட்ட பல்வேறு வகைப் பணிகளால் குடும்ப நலத் திட்டம் கணக்கமின்றி வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு, இலக்கு மீறிய சாதனை ஏற்படுத்தப்படும். அதன் வழி இந்திய மாநிலங்களுள் சிறந்த மாநிலம் என்ற பெயரைத் தமிழ்நாடு பெறும் என எதிர் நோக்கலாம்.



# குழந்தைக்குத் தேவை சத்தான உணவு பயிருக்குத் தேவை விஜய்

குழந்தையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவும் சத்துணவைப்போலவே பயிர்களும் நன்கு வளர்ந்து முழுப் பலனையும் தர தழை, மணி, சாம்பல் சத்துக்கள் அவசியம்.

ஆனால் நெற்பயிருக்கு தழைச்சத்தைத்தரும் யூரியாவை மட்டும் இட்டால போதுமானது எனக் கருதக்கூடும். அவ்வாறு யூரியாமட்டும் இட்டால் பயிர்கள் பூச்சிகளால தாக்கப்படும். வறட்சியைத் தாங்காது. மேலும் நாளடைவில் மண்ணின் தன்மைகெட்டு விளைச்சலும் குறையும்.

தழைச்சத்துடன் மணி, சாம்பல் சத்துக்களை இடுவதுதான் லாபகரமானது என ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன:—

நெல் (ஏக்கருக்கு)

| உரம் | சாகுபடி செலவு ரூ. | விளைச்சல் (மூட்டை 75 கிலோ) | வருவாய் (1 மூட்டை 60 ரூ. விகிதம்) |
|---|---|---|---|
| 40 கிலோ தழைச்சத்து மட்டும் | 1040 | 18. | 1080 |
| 40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து | 1180 | 23 | 1380 |
| 40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து 20 கிலோ சாம்பல்சத்து | 1215 | 30 | 1800 |

இவ்வாறு மூன்று சத்துக்களையும் இடும் போது கூடுதல் செலவு ரூ. 175க்கு அதிக வருவாய் ரூ. 720 கிடைக்கிறது.

அதிக வருவாய் தரும் தழை, மணி, சாம்பல் சத்துக்களை சமச்சீர் அளவில் கொண்டது விஜய் 17-17-17. இத்துடன் விஜய் யூரியாவையும்.உங்கள் நெற்பயிருக்கு உபயோகித்து அதிகப்பயன் பெறுங்கள்.

VIJAY

மேலும் விவரங்களுக்கு கீழ்கண்ட முகவரிக்கு எழுதுங்கள்:
ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், திருச்சி 620 017






MFL-1162




# வன உயிரினங்களைப் பாதுகாத்து நாட்டின் வளம் பெருக்குவோம்!


சா. விசுவநாதன்,
உதவி வனப் பாதுகாவலர்
(வன விலங்குப் பிரிவு)


'Wild Life' என்ற ஆங்கிலச் சொல்லிற்கு வன விலங்கு என்ற தமிழ்ச் சொல்லைத்தான் நாம் பயன்படுத்துகிறோம். ஆனால் இச் சொல்லிற்கு ''வன உயிரினம்'' என்று கூறினால் சாலச் சிறந்ததாயிருக்கும். ''Wild Life'' என்ற சொல் வனத்திலுள்ள தேனீக்கள், வண்ணத்திப் பூச்சிகள் போன்றவற்றிலிருந்து பெரிய பறவைகளையும், மீன், திமிங்கலம் போன்ற நீர்வாழ் பிராணிகளையும், ஆமை, முதலை போன்ற நீர்-நில வாழ் பிராணிகளையும், எலி முதல் காண்டாமிருகம் வரையுள்ள பெரிய விலங்குகளையும், காட்டில் இயற்கையாக உள்ள தாவர இனங்களையும் தன்னுள்ளே கொண்டுள்ளது. இவற்றிற்கு தொன்று தொட்டு, நமது இதிகாச புராணங்களிலும், சரித்திர சாஸ்திரங்களிலும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. அசோகர் காலத்திலேயே வன விலங்குகட்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டு உள்ளது. சில வகைக் காடுகளைப் பாதுகாப்பதற்காக 'அபயாரண்யம்' என்ற வகைக் காடுகள் ஏற்படுத்தப்பட்டன. வேட்டையாடுதலில் அதிக நாட்டம் கொண்ட மொகலாயர்கள் காலத்திலும் வன விலங்குகளைப் பாதுகாப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சியின் முற்பகுதியில் கூட இத்தகைய பாதுகாப்புகள் தொடர்ந்தன. இக்காலத்தில்தான் இயற்கைச் செல்வத்தின் மீது ஆராய்ச்சியாளர்கள் அக்கறை கொண்டனர். பல்வேறு புள்ளினங்கள் பற்றியும், விலங்கினங்கள் பற்றியும் அவற்றின் இருப்பிடம், பழக்க வழக்கங்கள் ஆகியவை பற்றியும் இயற்கை வல்லுனர்கள் ஆராய்ந்தார்கள். இவை ஒரு புறம் நடக்க, மற்றொரு புறம் நடந்தது என்ன?

## வேட்டையினால் விளைந்த விபரீதம்!

நாகரிகம் வளர்ந்தது! மக்கள் தொகை வளர்ந்தது! தொழில்கள் பெருகின. பல காடுகளில் செல்லும் சிற்றாறுகளிலும் அணைகள் கட்டப்பட்டன. மனிதர்கள் காடுகளை அழித்தனர். விவசாயம் செய்தனர். வளரும் தேவைக்கேற்ப பெரிய மரங்கள் வெட்டப்பட்டன. வன விலங்குகளின் இருப்பிடம் அழிய ஆரம்பித்தவுடன், தங்க இடமின்றி இவையும் மறைய ஆரம்பித்தன. இது மட்டுமா? ஆதி மனிதர்கள், கற்களால் அடித்து வேட்டையாடிய காலம் போனது. வில்லம்பு கொண்டும் ஈட்டி கொண்டும் வேட்டையாடினர். இவ்வாறு செய்தது அவர்களது வீரத்தைக் காட்டின. சில சமயங்களில் அடிபட்ட மிருகங்களுடன் வேட்டைக்காரன் கட்டிப் புரண்டும் சண்டையிட்டுள்ளான். ஆனால் காலம் வளர வளர, நாகரிகம் பெருகப் பெருக, வசதிகள் வளர வளர இம்முறையும் வளர்ந்தது. வாகனங்கள், அதிக சக்தியுள்ள துப்பாக்கிகள் (தொலை நோக்குக் கருவி கொண்டவை), பிரகாசமான விளக்கு (Search Light) போன்றவைகளுடன், ஜீப்பில் உட்கார்ந்தவாறே மிருகங்களை பிரகாசமான விளக்கின் மூலம் ஒரு நிலைப்படுத்திச் சுட்டுக்கொன்றான். வசதி அதிகமானவுடன் வேட்டையாடுதல் மிக எளிதாய் விட்டது. எனவே, பெருமையடைய வேண்டும் என்ற நோக்கிலேயே பலர் வேட்டையாடினர். சர்குஜா மன்னர் தனது காலத்தில் 1,100 புலிகளைக் கொன்றதாகத் தெரிகிறது. இதைத் தவிரவும் சிறிய மிருகங்களை அழித்ததால், பெரிய விலங்குகள் சரியான உணவின்றியும் அழிந்தன. மன்னர்களும் மற்றும் பலரும் பெருமைக்காக வேட்டையாடிய போது மற்றவர்கள் விலங்குப் பொருள்களான தோல், கொம்பு, பல் முதலியவற்றை விற்பதற்காக வேட்டையாடினர்.

திரு. எஃப். பி. சைமன் என்பவர் தனது 21 வருட வாழ்க்கை

யில், 600 புலிகளைக் கொன்றுள்ளார். அஸ்ஸாமில் ஒரு ராணுவப் பொறியாளர் அநேகமாக ஒவ்வொரு நாளும் ஒரு எருமையையோ, ஒரு காண்டா மிருகத்தையோ சுட்டுள்ளார். ஒரு ரயில்வே அதிகாரி 1850-லிருந்து 1854-க்குள் 100 புலிகளைக் கொன்றுள்ளாராம். இப்பெருமையால் தற்போது புலி ஒரு அபூர்வ விலங்காகி விட்டது.

கிர் காட்டில் ஒருவர் 50 சிங்கங்களை வேட்டையாடி உள்ளார். 10 நாட்களுக்குள் 14 சிங்கங்கள் வேட்டையாடப் பட்டுள்ளன. அதனால் தற்போது இந்தியாவிலேயே கிர் காட்டில்தான், சுமார் 180 சிங்கங்கள் உள்ளன.

இது தவிர 2-வது உலகப் போரின்போது இராணுவப் பிரிவுகள் காட்டிற்குள்ளேயே முகாம் செய்திருந்தனர். இராணுவ முகாம்! கையில் துப்பாக்கி! சுற்றிலும் மிருகங்கள்! கேட்கவும் வேண்டுமா! பல மிருகங்கள் கலபமாக விரைவில் அழிந்தன. இதன் பின்னர் உணவு உற்பத்திக்காகக் காடுகள் அழிக்கப்பட்டன. காடுகளைச் சுற்றியுள்ளவர்களுக்கு பயிர்ப் பாதுகாப்புக்காக, துப்பாக்கி உரிமங்கள் வழங்கப்பட்டன. ஏற்கனவேயே காடுகள் அழிந்ததால் போதிய உணவின்றி விலங்குகள் ஆங்காங்கு பயிரை அழிக்கின்றன என்ற காரணத்தை கொண்டு, இந்த உரிமங்களுடன் வேட்டை பெருகிற்று. விலங்குகள் அழிந்தன! இவ்வாறு வன விலங்குகள் கடந்த 150 அல்லது 200 ஆண்டுகளுக்குள் வெகுவாகக் குறைந்து, சிறுத்தை போன்ற சில இனங்கள் அழிந்தே போயிற்று. சில வகைக் குரங்கினங்கள் (Lion tailed Macaque), புலி, சிங்கம், ஓநாய், காண்டா மிருகங்கள், முறுக்கு மான் போன்றமிருகங்கள் அதிசயமாய்ப் போய்விட்டன.

**வனவிலங்குகளைப் பாதுகாக்கப் படிப்படியாய் சட்டங்கள் இயற்றப் பட்டன !**

இவற்றைப் பாதுகாப்பதற்காக முதன் முதலில் 1878-ல் இந்திய வனச் சட்டத்தில் வகை செய்தனர். 1879-ஆம்வருடத்தில் யானைகளைப் பாதுகாக்கத் தனிச் சட்டம் உருவாயிற்று. 1882-ஆம் வருடத்திய சென்னை வனச் சட்டத்தில் உரிமமின்றி வேட்டையாடுதலைத் தடுக்கவும், நீல்கை மான், மலபார் அணில், கஸ்தூரி மான், முறுக்கு மான், மயில் போன்றவற்றை வேட்டையாடத் தடை செய்யப்பட்டது. 1887-ல் பறவைகள் பாதுகாப்புச் சட்டம் வந்தது. 1912-ல் இது சில வகை விலங்குகள் மற்றும் பறவைகள் பாதுகாப்புச் சட்டமாக மாறியது. இதில்தான் சில வகை மிருகங்கள் மற்றும் பறவைகள் சில காலங்களில் வேட்டையாடப்படக் கூடாது என்று வலியுறுத்தப்பட்டது. இதன் பின்னர் சில வகை மிருகங்களைக் காட்டில் விட்டு வளர்க்கப்பட்டது. 1927-ல் வன விலங்குகள் மற்றும் அவற்றின் பொருள்களின் போக்குவரத்து கட்டுப்படுத்தப்பட்டது. 1935-ல் மத்திய மாநில அரசு, மற்றும் வனத் துறை, மண்ணூல் துறை அலுவலர்கள், இயற்கை வல்லுநர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்ட அகில இந்திய வன விலங்குப் பாதுகாப்புக் கூட்டம் நடைபெற்றது. இதன் பின்னர் வன விலங்குகளின் பாதுகாப்பில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டது. 1952-ல் இந்திய வன விலங்கு வாரியம் ஏற்படுத்தப்பட்டது. இதில் பல வல்லுநர்கள் அங்கத்தினராயினர். இக்குழு, வேட்டையாடுதலைத் தவிர்த்தலால் மட்டும் வன விலங்குகள் அழித்தலைத் தடை செய்ய முடியாது என்று தீர்மானித்தது.

ஆங்காங்கே தேசியப் பூங்காவும், புகலிடங்களும் ஏற்படுத்தத் தீர்மானித்தனர். தேசியப் பூங்கா அல்லது புகலிடங்களில் வேட்டையாடுதல் தடை செய்யப்படுவதுடன், அவற்றில் விலங்குகட்கான உணவு, நீர், உப்பு நக்கி, முதலியவைகளும் ஏற்படுத்தப்பட்டன. சுற்றுலாவினர் வந்து தங்குவதற்கான வசதிகளும், சென்று பார்ப்பதற்கு வாகன வசதிகளும் செய்யப்பட்டன.

**உரிமம் இன்றி வேட்டையாடக் கூடாது !**

பலவித ஆராய்ச்சியாளர்களின் கருத்துக்கள் கோரப்பட்டன. கூடிய வரையில் அவை செயல்படுத்தப்பட்டன. வேட்டையாடச் சட்டங்களில் கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டன. எல்லாவற்றிற்கும் மேலாக வன விலங்குப் பாதுகாப்புச் சட்டம் 1972-ல் வன விலங்குகள் எந்த இடத்திலும் உரிமம் இன்றி வேட்டையாடுதலைத் தடுக்கிறது. மிருகங்களைப் பல வகைகளாகப் பிரித்து ஒவ்வொரு வகைக்கும் பல கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டது. முதல் வகை மிருகங்களின் தோல், கொம்பு போன்ற பொருள்களை வைத்திருப்போர் கூட இதற்கான அனுமதியைப் பெற வேண்டும்.



எறும்புத் தின்னி

**நமது கடமை**

வெவ்வேறு வகையான தட்ப வெப்பச் சூழ்நிலை உள்ள நமது நாட்டில் இயற்கைச் செல்வங்கள் பரந்துள்ளன. காடுகளும், விலங்குகளும் ஒன்றிற்கொன்று அதிக சம்பந்தமுள்ளவை. வன விலங்குகளைப் பாதுகாப்பது வனங்களைப் பாதுகாப்பதற் கொப்பாகும். மிருகங்களைப் பாதுகாப்பதால் நாட்டின் இயற்கைச் செல்வம் பெருகும். புகலிடங்களையும், தேசியப் பூங்காக்களையும் பேணுதலால் சுற்றுலா அதிகரிக்கும். பறவைகளால் விதைகள் பரப்பப்பட்டு அதிக மரம் வளர்கிறது. வண்டுகள் மகரந்தச் சேர்க்கையைத் தூண்டுகிறது. விலங்கு பொருட்கள் அதிக மதிப்புள்ளது. மிருகங்களையும் விற்கும் போது அதிகத் தொகை கிடைக்கிறது. சுற்றுலாவினுல் நாட்டின் பொருளாதாரம் அதிகரிக்கிறது. வேட்டை உரிமம் மூலமும், உரிமத் தொகை மற்றும் வேட்டை விளையாட்டுக்கு உரிமம் பெற்றவர்கள் செலவழிக்கும் தொகை மூலமும் பல்வேறு தொழில் வளர வாய்ப்பளிக்கிறது. எனவே வன விலங்குகளை நன்முறையில் பாதுகாத்து, நாட்டின் முன்னேற்றத்திற்கு நாம் உதவ வேண்டும்.



# மறக்க முடியாத நினைவுகள்....

**சி. யோகீஸ்வர மூர்த்தி**

சென்னையில் வன விலங்கு வாரத்தின் தொடக்க விழா தமிழ் நாடு அரசு தலைமைச் செயலாளர் திரு. வி. கார்த்திகேயன் அவர்கள் தலைமை தாங்க நமது மேதகு ஆளுநர் திரு. மோகன்லால் சுகாதியா அவர்கள் துவக்கி வைக்க 4.10.76 அன்று நடைபெற்றது. விழா முடிவின்போது என்னுடைய படமான "புகைப்படக் கருவியின் மூலம் வனவிலங்குகள்" (Through the eyes of a wild life Photographer) என்ற திரைப்படம் காட்டப் பட்டது.

இந்தத் திரைப்படம் எடுக்கும் போது நிகழ்ந்த மறக்க முடியாத சம்பவம் ஒன்றைக் கூறுகின்றேன். இந்தப் படத்தின் முக்கியமான காட்சி பல யானைகள் கூட்டமாக விளையாடிக் கொண்டிருப்பது. இந்தக் காட்சியை எடுப்பதற்காக நானும், எனது மனைவியும், மகனும் தேக்கடி சென்றிருந்தோம். நான் சென்றிருந்த சமயம் நல்ல மழை பெய்து கொண்டிருந்தது. இருந்தாலும் எனக்கு ஒரு நம்பிக்கை. மழை நின்றவுடன் படம் எடுக்கலாம் என்று. ஆனல் அன்று மழை தொடர்ந்து பெய்து கொண்டிருந்ததால் மழையுடனேயே அந்தக் காட்சியை எடுக்க நானும் என்னுடைய மனைவியும் மகனும் மற்றும் கேரள வனத் துறை அதிகாரி திரு. ஜோசப் அவர்களும் தாக்கர் என்ற மற்றொருவரும் விசைப்படகில் புறப்பட்டோம்.

திடீரென்று ஒரு யானை கரையில் தென்பட்டது. அதைக் கண்டதும் படகைக் கரையில் நிறுத்தி என்னுடைய மனைவியையும் மகனையும் படகிலேயே இருக்க வைத்து விட்டு நானும் திரு. ஜோசப் அவர்களும், தாக்கரும் யானை சென்ற வழியே எனது புகைப்படக் கருவியை எடுத்துக் கொண்டு பின் தொடர்ந்தோம்.

சிறிது தூரம் சென்றவுடன் இரண்டு மலைகளுக்கு இடையேயுள்ள அடர்ந்த புதர்கள் நிறைந்த பள்ளத்தாக்கில் நூற்றுக்கணக்கான யானைகள் தங்கள் குட்டிகளுடன் விளையாடிக் கொண்டு இருந்தன. இந்தக் கண்கொள்ளாக்காட்சியை நெடுந்தொலைவில் நின்று பார்த்தோம். பள்ளத்தாக்கில் நேரிடையாகச் சென்றல் எங்களைக் கண்டவுடன் அந்த யானைகள் ஓடிவிடும் என்று கருதி பக்கத்தில் உள்ள மலையில் ஏறி பின் அங்கிருந்து கீழே இறங்கிப் புதர்கள் நிறைந்த இடத்தில் இருந்து அந்தக் காட்சியை எடுக்க வேண்டும் என்பது எங்களுடைய எண்ணம். உடனே நாங்கள் அந்த இடத்தை விட்டுபுறப்பட்டு இடது புறம் இருக்கும் மலையின் உச்சியை அடைந்தோம். காற்று வலப்புறம் இருந்து அடித்துக் கொண்டிருந்ததால் மனித வாடையை யானைகள் நுகர முடியாது.

மலை உச்சியில் இருந்து பார்க்கும்போது யானைகள் கூட்ட



மாகப் பாதாளத்தில் இருந்தது தெரிந்தது. மழை பெய்த சமய மாகையால் மலைச்சரிவு வழுக்கி விடும் என்று கூறி என்னைத் தடுத்தார் நண்பர் ஜோசப் அவர்கள். ஆனால் நான் எடுத்த காரியத்தை முடிக்காமல் விடக் கூடாது என்று கருதி நான் மட்டும் கீழே இறங்கி சென்றேன். மெதுவாக கீழே இறங்கி மூங்கில் புதரை அடைந்தேன். எனக்கும் யானைக் கூட்டத்திற்கும் இடையேயுள்ள தூரம் சுமார் 15 அடிகள்தாம் இருக்கும். அழகான இளங் குட்டிகள் தமது தாயிடம் பால் குடித்துக் கொண்டிருந்தன. தாய் யானை தனது குட்டிகளோடு விளையாடிக் கொண்டிருந்தது. அந்த நேரத்தில் ஆண்டவன் கிருபையால் மழையும் நின்று வெய்யில் அடிக்க ஆரம்பித்தது. உடனே அந்தக் காட்சிகளை என்னிடம் இருந்த 200 அடி ஃபிலிம்மை வைத்துத் திரைப்படமாக எடுத்தேன். கையிலுள்ள ஃபிலிம் எல்லாம் தீர்ந்து விட்டது. ஆனால் அந்த இனிய காட்சியை விட்டுச் செல்ல மனம் இல்லாததனால் அதை ரசித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு சிறிய யானைக் குட்டி புதரிலிருக்கும் என்னைக் கண்டு எனது அருகில் வந்து விட்டது. இதைப் பார்த்த அந்தக் குட்டியின் தாய் நான் அந்தக் குட்டிக்கு ஏதேனும் தீங்கு செய்து விடுவேன் என்று கருதி கோபத்தால் துதிக்கையை சுருட்டிக் கொண்டு சத்தம் போட்டு ஓடி வந்தது. அதைக் கண்டதும் புகைப்படக் கருவியோடு பாய்ந்து மேலே ஓடினேன். அப்போது அந்த யானை நான் முதலில் படம் எடுத்த மூங்கில் புதரை அழித்து விட்டு என்னைத் துரத்தியது. சிறிது தூரம் சென்றவுடன் பாறை வழுக்கிச் சேற்றில் விழுந்தேன். அப்பொழுதுதான் மரணத் தருவாயில் இருக்கும் நிலைமையை என்னால் அறிய முடிந்தது. அப்பொழுது என்னைத் துரத்தி வந்த யானை சுமார் 10 அடி தூரம் தள்ளி நின்று முன் மாதிரியே துதிக்கையைச் சுருட்டிக் கொண்டு காதை விறைப்பாக வைத்துக் கொண்டு சத்தம் போட்டு தன் காலால் அங்கிருக்கும் சேற்றை என் மேல் எறிந்துவிட்டு திரும்பித் தன் குட்டியை நோக்கி ஓடி விட்டது. அந்த நேரத்தில் பலவீனமாய் இருந்த என்னைக் கண்ட யானை என்னைக் கொல்லாமல் பெருந் தன்மையுடன் விட்டுச் சென்றது.

நான் கீழே விழுந்து கிடப்பதையும் யானை என் அருகில் இருப்பதையும் மேலேயிருந்து பார்த்த இருவரும் நான் யானையால் கொல்லப்பட்டு விட்டேன் என்று கருதி வனத்துறை அதிகாரி ஜோசப் அவர்கள் தாக்கரிடம் அலுவலகத்தில் இருந்து ஸ்ட்ரெச்சர்களையும் நான்கு ஆட்களையும் அழைத்து வரச் சொல்லி அனுப்பினார். பின்னால் அவர் என் மனைவி, மகன் இருக்கும் இடத்திற்குச் சென்று நீங்கள் இந்தப் படகில் சென்று ஓய்வு விடுதியில் இருங்கள். உங்கள் கணவர் இப்பொழுது வந்து விடுவார் என்று கூறினார். ஆனால் என் மனைவி அதை மறுத்து, 'என் கணவர் கூடவே செல்கிறேன்' என்று கூறினாள். அப்பொழுது தான் ஜோசப் அவர்கள் என் மகனைத் தனியே அழைத்துச் சென்று, 'உன் தந்தைக்குச் சிறு விபத்து ஒன்று ஏற்பட்டுவிட்டது' என்று கூறினார். இதைக் கேட்டதும் எனது மகன் கதறி அழுது கொண்டே என் மனைவியிடம் கூறினான். இதைக் கேட்டதும் என் மனைவியும் அழ ஆரம்பித்தாள். அந்த நேரத்தில் உடம்பெல்லாம் சேற்றுடனும் புகைப் படக் கருவியுடனும் மலை உச்சிக்கு வந்து சேர்ந்தேன். இதைப் பார்த்ததும் ஜோசப் அவர்கள் கட்டித் தழுவிக் கொண்டார். அப்போது அவர் ''நீங்கள் யானையால் கொல்லப்பட்டு விட்டீர்கள் என்று நினைத்தேன்'' என்று கூறினார். அதற்கு நான், ''நான் மனிதர்களால் கொல்லப்படுவேனேயன்றி வன விலங்குகளால் கொல்லப்பட மாட்டேன்'' என்று கூறினேன்.

இதுவே என் வாழ்க்கையில் கண்ட அதிர்ச்சியூட்டும் சம்பவம் ஆகும். ஆனால் அதே நேரத்தில் வன விலங்குகளின் பெருந்தன்மையைக் கண்கூடாகக் காண முடிந்தது.

## உங்களுக்குத் தெரியுமா?

**மலைப்பாம்பின் முட்டைகள் வாத்து முட்டையை விடப் பெரியவை!**

பாம்பு வகைகளிலேயே மிகவும் நீளமானது மலைப்பாம்பு. 17 அடி முதல் 20 அடி வரை நீளமிருக்கும். அடர்த்தியான காடுகளில் பாறை பகுதிகளிலும் ஆற்றின் ஓரங்களிலும் இவை வாழ்கின்றன. இந்தியா, இலங்கை, பர்மா, மலேயா, சயாம், ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இவை காணப்படும். இது இரவில்தான் நடமாடும். ஒரே நேரத்தில் 100 முட்டைகள் கூட இடும். முட்டைகள் வாத்து முட்டைகளைவிட பெரியவை. 2 மாதத்திற்குமேல் அடை காக்கும். முட்டையிலிருந்து வெளி வரும் குஞ்சு சுமார் 2 அடி நீளம் இருக்கும். இது சோம்பலாகவும், நிதானமாகவும் இருக்கும். மனிதர்கள் சூழ்ந்து கொண்டால் கூட பரபரப்பு அடையாது. முதுமலையில் ஒரு மலைப்பாம்பு ஒரு புள்ளிமானை விழுங்கியுள்ளது. மற்றொரு பாம்பு ஒரு காட்டெருமைக் கன்றை விழுங்கியுள்ளது. இறகுகள், ரோமம் ஆகியவற்றுடன் இவை விழுங்கிவிடும். இதன் தாடைகள் நன்றாக அகன்று விரியக் கூடியவை. இதன் பற்கள் தொண்டையை நோக்கி வளைந்துள்ளன. எனவே, இரையாகப்பிடிக்கப்பட்ட பிராணி துள்ளத் துள்ள, பற்களில் அது நன்றாக மாட்டிக் கொள்ளும். உடல் தோல் வேண்டுமான அளவு விரியும் தன்மை யுள்ளது. விலா எலும்புகள் மிகத் தளக்கமாக உள்ளன. பிடித்த இரையை வளைத்துச் சுற்றி அதைக்கொன்று உண்ணத் தொடங்கும். வயிறு நிறையத் தின்ற பின் ஒரே இடத்தில் அசைவற்று நீண்ட நாள் சுருண்டு படுத்துக்கிடக்கும். கிண்டியில் ஒரு மலைப்பாம்பு ஒரு கோழியையும் மற்றொரு மலைப் பாம்பையும் ஒரே நேரத்தில் விழுங்கியுள்ளது.

தொகுப்பு: சா. விசுவநாதன்.





வளமான வாழ்வு பெற அளவான குடும்பம் அவசியம் அல்லவா!

இரண்டே பெறுக! இனிதே வாழ்க!!

குடும்பநலத்துறை,
தமிழ்நாடு அரசு.




| | பெரியவர் கூலி ரூ.பை. | சிறியவர் கூலி ரூ.பை. |
|---|---|---|
| ஏர் உழ (சொந்த எருது, கலப்பையுடன்) | 9.00 | — |
| ஏர் உழ (பண்ணையாரின் எருது, கலப்பையுடன்) | 5.00 | — |
| விதை விதைத்தல், நாற்றுப் பறிக்க .... | 5.00 | 3.00 |
| நாற்று நட, களை எடுக்க .... | 3.50 | 2.10 |
| அறுவடை செய்ய .... | 5.00 | 3.00 |
| பால் கறக்க, கோழி வளர்க்க, வரப்பு கழிக்க, எரு சுமக்க, தேனீ வளர்க்க, பயிற்சி பெற்ற பிற பணிகளுக்கு | 5.00 | 3.00 |
| கால்நடை வளர்க்க | 3.50 | 2.10 |
| பயிற்சி பெறாத பிற பணிகளுக்கு | 3.50 | |

வேலை நேரம் : உழவு—5 மணி நேரம். பிற பணிகள்—7 மணி நேரம்.

நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தைக் குறைத்துக் கொடுப்பது குற்றமாகும்! இக்குற்றத்திற்கு 6 மாதம் வரை சிறைத்தண்டனை அல்லது 500 ரூபாய் வரை அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும்!

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.






வளமான வாழ்வு பெற அளவான குடும்பம் அவசியம் அல்லவா!

இரண்டே பெறுக! இனிதே வாழ்க!!

குடும்பநலத்துறை,
தமிழ்நாடு அரசு.

# தமிழரசு

1—11—1976

மலர் : 7 இதழ் : 9

## இந்த இதழில்....

| | பக்க எண் |
|---|---|
| தமிழ்நாட்டில் தொழிலாளர் நல மேம்பாடு ... | 2 |
| தொழிலாள சகோதர சகோதரிகளின் நல்வாழ்வை மேம்படுத்துவோம்! ... | 5 |
| தமிழ்நாட்டில் நகர்ப்புற அபிவிருத்தித் திட்டங்கள் ... | 7 |
| சாகுபடிச் செலவைக் குறைத்திட அசட்டோபாக்டர் பயன்படுத்துவீர்! | 8 |
| பிற்பட்டோர் நலங்காக்க அரசு ஆற்றிடும் பணிகள் ... | 9 |
| குடும்பநலம் குறித்துக் காந்தியடிகள் | 15 |
| தமிழ்நாட்டில் குடும்பநலத் திட்டம் | 17 |
| தரமான பால் தருவதே தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் இலட்சியம்! | 19 |
| கறவை மாடுகளைப் பராமரிப்பீர்! | 23 |
| படமும் செய்தியும் ... | 24 |
| பசுவின் பராமரிப்பில் கவனிக்க வேண்டியவை! ... | 28 |
| தரமான பாலுக்குத் தகுந்த விலை! | 31 |
| கேளுங்கள் கொடுக்கப்படும்! ... | 33 |
| தமிழ்நாட்டில் உள்ள வனவிலங்குச் சரணாலயங்கள் ... | 38 |
| வேடந்தாங்கலில் வெளிநாட்டுப் பறவைகள்! ... | 38 |
| நமது நாட்டின் தேசியப் பறவை | 39 |
| உடும்புப் பிடி ... | 40 |
| எழுத்தறிவின்மைக்கு எதிரான போர்! ... | 41 |
| குறைந்த செலவில் வீடுகள் ... | 44 |
| பகத் சிங் ... | 47 |
| காசு போட்டால் பால் கிடைக்கும். | 48 |

கட்டுரையாளர்களின் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளி அல்ல.

## பசும் பாலில் உள்ள சத்துக்கள்

அரை லிட்டர் பசும் பாலில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சத்துப்பொருட்களும், வைட்டமின்களும் இருக்கின்றன.

| சத்துப் பொருட்கள் | அளவு | பயன். |
|---|---|---|
| கொழுப்புச் சத்து | 22.5 கிராம். | சக்திக்கு மூலாதாரம் |
| புரோட்டீன். | 17.0 கிராம். | உடல் வளர்ச்சிக்குத் தேவையான 'அமைனோ' அமிலத்தை உண்டுபண்ணுகிறது. |
| லக்டோஸ் | 24.0 கிராம். | மூளை வளர்ச்சிக்கு உதவுகிறது. |
| தாது உப்புக்கள் | 4.0 கிராம். | வளர்ச்சிக்கும் பராமரிப்புக்கும் உதவுகிறது. |
| வைட்டமின் 'ஏ' | 0.06 கிராம். | இரவில் கண் தெரியாமை நோயைத் தடுக்கிறது. |
| கரோட்டீன் | 0.08 மில்லி கிராம். | வளர்ச்சியை ஊக்குவிக்கிறது. |
| வைட்டமின் 'பி-1' | 0.20 மில்லி கிராம். | நரம்பில் ஏற்படும் கோளாறுகளைத் தடுக்கிறது. |
| வைட்டமின் 'பி-2' | 0.90 மில்லி கிராம். | வளர்ச்சிக்குத் தேவையான ஒரு சத்துப் பொருள். |
| வைட்டமின் 'பி'. | 2.4 மில்லி கிராம். | இரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்களின் வளர்ச்சிக்கும் முதிர்ச்சிக்கும் அவசியம். இது இல்லாவிட்டால் 'அனிமியா' ஏற்படும். |
| வைட்டமின் 'சி'. | 10.0 மில்லி கிராம். | இதன் குறைவு 'ஸ்கர்வி' என்ற நோயை ஏற்படுத்தும். |
| வைட்டமின் 'டி'. | மிகக் குறைந்த அளவு | இது இல்லாவிட்டால் எலும்பும், பற்களும் வலுவாக இருக்காது 'ரிக்கட்ஸ்' |
| வைட்டமின் 'ஈ'. | 0.15 மில்லி கிராம். | மலட்டுத் தன்மையைத் தடுக்கும். |

பாலைக் காய்ச்சுவதால் பாலிலுள்ள உணவுச் சத்துப் பொருட்கள் (வைட்டமின் 'சி'யைத் தவிர) அழிவதில்லை.



# தமிழ்நாட்டில் தொழிலாளர் நல மேம்பாடு

## ஆளுநர் உரை



தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்திற்காகக் கட்டப்படவிருக்கும் பலமாடிக் கட்டடத்தின் மாதிரி.

"குடியரசுத் தலைவரின் ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்ட பின் வேலை நிறுத்தங்களும் கதவடைப்புகளும் தமிழ்நாட்டில் குறைந்து வருவது தமிழ்நாட்டிற்கு ஒரு தனிச் சிறப்பாகும்.

"1975 பிப்ரவரி முதல் ஜூலை வரை 35,229 தொழிலாளர்களைப் பாதிக்கக்கூடியதாக இருந்த 103 வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள், 1976-ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் ஜூலை வரை 21,323 தொழிலாளர்களை மட்டும் பாதிக்கக் கூடிய 84 வேலை நிறுத்தம் மற்றும் கதவடைப்புகளாகக் குறைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது. தொழில் நிறுவனங்கள் கதவடைப்பு செய்வதற்கோ ஆட் குறைப்பு செய்வதற்கோ அல்லது நிரந்தரமாக மூடுவதற்கோ அரசின் அனுமதி பெற வேண்டும் என்ற முறையில் விதிகள் அமைக்கப்பட்டுள்ளன. தொழில் உறவில் சுமுகமான நிலைமை உருவாக்க வழி வகுக்கும் வண்ணம் இம்மாநில அரசு பல்வேறு அமைப்புகளை ஏற்படுத்தி உள்ளது. மார்ச்சு மாதத்தில் அமைக்கப்பட்ட மாநில உயர் மட்டக் குழுவினால் சில அரிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

"தனியார் நிறுவனங்களில் ஏற்படும் தொழில் உறவுகளில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு இது உதவும். இத்தீர்மானங்களைச் செயலாக்கும் வகையில் ஒரு நிலையான சிறிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவால் சிபாரிசு செய்யப்பட்டுள்ள விஷயங்களைப் பரிசீலிக்கவும் நிர்வாகத்தில் தொழிலாளர்கள் பங்கு பெறும் திட்டங்களையும் இக்குழு கவனிக்கும். இக்குழு சில முக்கிய முடிவுகளை எடுத்துள்ளது. தொழிலாளர் மற்றும் நிர்வாகத்தினரின் பிரதிநிதிகள் அடங்கிய இந்நிரந்தரக் குழு, தொழில் உறவுகள் சம்பந்தமான தெளிவான வழி வகைகளைச் சுட்டிக் காட்டும் தீர்மானங்களை அங்கீகரித்துள்ளது. இந்த முக்கியமான வளர்ச்சியை நீங்கள் பாராட்டுவீர்கள். இவ்வளர்ச்சி, தொழிலாளர் மற்றும் நிர்வாகத்தினர்களுக்கிடையே நல்லுறவையும் சுமுகமான சூழ்நிலையையும் நிரந்தரமாக உருவாக்கியுள்ளது. 'போனஸ்' பிரச்சினைகளை ஆராயும் பொருட்டு இரு தரப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

"இம் மாநிலத்தில் குடியரசுத் தலைவரின் ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்ட பின்பு தொழிலாளர்களும் முதலாளிகளும் சாதகமான வகையில் ஒத்துழைப்புத் தந்துள்ளார்கள் என்பது எல்லோராலும் ஒப்புக் கொள்ளக் கூடியது. வேலை நாட்கள் இழப்பு குறிப்பிடத் தக்க அளவில் குறைந்துள்ளது. கடந்த 1975 பிப்ரவரி முதல் ஜூலை வரை 6,34,344 வேலை நாட்கள் வீணாகிவிட்டன. ஆனால் 1976 பிப்ரவரி முதல் ஜூலை வரை வீணாகிய வேலை நாட்கள் 2,93,000 என்னும் அளவுக்குக் குறைந்துள்ளது. இப்போது தொழிலாளி முதலாளிகளுக்கிடையே ஒத்துழைப்பு மற்றும் சுமுகமான சூழ்நிலை உறுதி அடைந்து வருகிறது.

"விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி கிடைக்கும் வண்ணம் சட்ட விதிகளை மாற்றி அமைத்தது பிரமதரின் 20 அம்சப் பொருளாதாரத் திட்டங்களில் குறிப்பிடத்தக்க அம்சம். விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள, தேர்ச்சி பெறாத வயது வந்த தொழிலாளர்களுக்கு தினம் ரூ. 5/-ம் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களுக்கு தினம் ரூ. 5/-க்கு மேலும் என்ற வகையில் விவசாயக் கூலியை 2—3—1976 முதல், மாநில அரசு உயர்த்தியுள்ளது. விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்த விகிதக் கூலி கொடுப்பதைக் கண்காணிக்கக் கிராமப் புறங்களில் அரசுப் பணியாளர்களை நியமித்துள்ளோம். இதர பின்தங்கிய துறைகளுக்கும் குறைந்த விகிதக் கூலி நிர்ணயம் செய்வது சம்பந்தமான திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

"சீரான தொழில் உறவுகளுக்கும் வேகமான தொழில் முன்னேற்றத்திற்கும் தொழிலாளர் நிர்வாகத்தில் பங்கு கொள்வது என்பது கண்டிப்பாக்கப்பட வேண்டும். இந்த எண்ணத்தை பிரதிபலிக்கக் கூடிய 20 அம்சத் திட்டங்களில் ஒன்றான 15-வது அம்சம் இம் மாநிலத்தில் வெகு வேகமான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

"தொழிற்சாலை நிர்வாகத்தில் தொழிலாளர்கள் பங்கு பெற வேண்டும் என்கிற திட்டத்தை இந்திய அரசு உருவாக்கியுள்ளது. இத்திட்டப்படி ஷாப் அண்டு கவுன்சில்களும், பிளாண்ட் கவுன்சில்களும் நிறுவப்பட வேண்டும். இத்திட்டம் தமிழ்நாட்டில் 500-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணி புரியும் உற்பத்தித் தொழிற்சாலைகள் மற்றும் சுரங்கத் தொழிற்சாலைகளில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இது வரை, 500க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் 224 நிறுவனங்களில் 196ல் இத்திட்டம் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது. 21 நிறுவனங்களில் இத்திட்டம் முழுமையாக செயல்படுத்தப்பட்டு உள்ளது. 21 நிறுவனங்கள் இத்திட்டத்தை ஓரளவுக்கு அமல்படுத்தியுள்ளன. இம்மாநிலத்திலும், அண்டையிலுள்ள ஆந்திர மாநிலத்திலும் இத்திட்டம் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து மத்திய தொழில் மந்திரி அவர்கள் பாராட்டுதல் தெரிவித்துள்ளார்.

உற்பத்தியும், உற்பத்தித் திறனும் குறிப்பிடத் தக்க வகையில் முன்னேற்றம் அடைந்துள்ளதாக 12—8—'76 அன்று மத்திய தொழில் மந்திரி பாராளுமன்றத்தில் திருப்தி தெரிவித்தார்.

''இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள குழந்தைகளிடம் வேலை வாங்கும் பிரச்சினை குறித்த அறிக்கை, அரசு ஆலோசனைக்கு வந்துள்ளது. மலைத் தோட்டத் தொழிலாளர் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 93 சதவிகிதத் தொழிலாளர்கட்கும், அவர்கள் குடும்பங்களுக்கும், வீட்டு வசதி செய்யப்பட்டுள்ளது. மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி வழங்கும் முறையில் மற்ற எந்த மாநிலமும் இவ்வளவு குறிப்பிடத் தக்க முன்னேற்றம் காணவில்லை. மலைத் தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புகளுக்கு மின் வசதி வழங்குவதில் திருப்திகரமான முன்னேற்றம் இல்லையாதலால், மலைத்தோட்டங்கள் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மூதளவில் அமைப்பு உருவாக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

''தற்காலத் தேவை, குடும்பநலத் திட்டம். தொழிலாளர் மத்தியில் ஊக்குவிக்கப் பட வேண்டிய இத் திட்டத்திற்கு நாம் மிக முக்கியத்துவம் தருகிறோம். இதில் வேலையளிப்பவர்களின் ஒத்துழைப்பையும் நாடுகிறோம். தொழிலாளர் மாநில காப்புறுதித் திட்டத்தின் கீழ் சாதாரணமாக வழங்கப்படும் 56 நாள் நலிவு கால ஊதியத்தைத் தவிர, பெண்கள் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டால் 14 நாட்களுக்கும், ஆண்கள் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டால் 7 நாட்களுக்கும் நலிவு கால ஊதியம் அளிக்கத் தற்போது வகை செய்யப்பட்டுள்ளது. நலிவுற்ற மக்களுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்புக் கிடைப்பதற்காகப் பயிற்சி அளிக்கும் திட்டத்தின் கீழ் நாம் குறியளவைத் தாண்டிவிட்டோம்.

''தொழிலாளர்களின் பிரத்தியேக நலனுக்காக 36 படுக்கைகள் கொண்ட ஒரு வார்டை தாம்பரம் காச நோய் மருத்துவமனையில் ரூபாய் 3.64 இலட்சத்தில் கட்டுவதற்குத் தமிழக அரசு, சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. தொழிலாளர் அதிகமாக வாழும் இடங்களில் நான்கு நூலகங்கள் திறக்கத் தொழிலாளர் நல வாரியம் எடுத்த முடிவை நான் வரவேற்கிறேன். சென்னையில் 2 நூலகங்களும், மதுரையில் ஒன்றும், கோவையில் ஒன்றும் திறக்க முடிவெடுத்து, சென்னையிலும், மதுரையிலும் திறக்கப்பட்டுவிட்டன.

''குற்றாலம், மாமல்லபுரம், உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏர்க்காடு ஆகிய இடங்களில் தொழிலாளர்களுக்காக விடுமுறைக் கால ஓய்வு விடுதிகள் கட்டத் தொழிலாளர் நல வாரியம் முடிவெடுத்துச் செயல்பட்டு வருகிறது. சென்னையில் நவீன வசதிகளோடு கூடிய ஒரு விளையாட்டு அரங்கம் கட்ட முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இவ்விளையாட்டரங்கில் பம்பா திரையரங்கம், உட்புறம் மற்றும் திறந்த வெளி விளையாட்டுக் கூடங்கள், நீச்சல் குளம் போன்ற வசதிகள் செய்யப்படும். தொழிலாளர் சமுதாயம் இவைகளை வரவேற்கும் என உறுதியாக நம்புகிறேன்.

''தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் அதனுடைய அலுவலகம் தனியார் கட்டடத்தில் இருப்பதால் பெருந்தொகை வாடகையாக அளிக்க வேண்டியுள்ளதைத் தவிர்ப்பதற்காகவும், தனது நிதியில் பெரும்பகுதியை ஒரு விலை மதிக்கத் தக்க சொத்திற்காகப் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடனும், சென்னையில் மத்தியப் பகுதியில் ஒரு பல மாடிக் கட்டடம் கட்ட முடிவெடுத்ததற்காக நான் மகிழ்ச்சியடைகின்றேன். இக்கட்டடம் கட்டுவதற்கான 6.33 மனை வரப்புள்ள நிலத்தை அரசு இலவசமாக வாரியத்திற்கு வழங்கியுள்ளது. ரூபாய் 35 இலட்சத்தில் இக்கட்டடம் கட்ட அனுப்பிய வரைபடத்திற்கும், மதிப்பீட்டிற்கும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. கட்டடம் வெகு விரைவில் எழுப்பப்படும். வாரியம் ஒரு மாடியை மட்டும் தன் அலுவலகத்திற்குப் பயன்படுத்தும். மீதி வாடகைக்கு விடப்படும். இக்கட்டடத்திலிருந்து கிடைக்கும் வருமானம் பல தொழிலாளர் நலத் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும். இவ்விடத்தில் ஒரு அழகான கம்பீரமான ஒரு கட்டடம் எழுப்பப்படுவதை நாம் ஆவலுடன் எதிர்பார்ப்போம். இப்போது நான் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் இப் புதிய பல மாடிக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டுவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். வணக்கம், ஜெய் ஹிந்த்.

**தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்திற்கான பலமாடிக் கட்டடத்திற்கு 12—10—'76 அன்று அடிக்கல் நாட்டி மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள் நிகழ்த்திய உரை.**





# தொழிலாள சகோதர சகோதரிகளின் நல்வாழ்வை மேம்படுத்துவோம்

— ஆர். வி. சுப்பிரமணியன்

ஆளுநர் ஆலோசகர்.

''இந்நாள் தொழிலாளர் நல வாரியத்திற்குப் பெருமை தரக் கூடிய நாள். ஏனெனில் இந் நாளில் தொழிலாளர் நல வாரியத்திற்கான பல மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல்லை நமது மதிப்பிற்குரிய ஆளுநர் அவர்கள் நாட்டுவதைக் காண நாம் அனைவரும் குழுமியுள்ளோம். தொழிலாளர் நல வாரியத்திற்காக ஒரு பல மாடிக் கட்டடம் கட்ட வேண்டும் என்ற இத் திட்டம் நீண்ட காலமாக எதிர்பார்த்து வந்த திட்டம் என்று தொழில் துறைச் செயலாளர் குறிப்பிட்டார். எனவே, தொழிலாளர் நல வாரியத்திற்கென நிலையான ஒரு பல மாடிக் கட்டடத்திற்கு நமது மேதகு ஆளுநர் அவர்களால், சென்னை நகரின் முக்கியப் பகுதியில் அடிக்கல் நாட்டப்படுவதால் நாம் இன்று மகிழ்ச்சியாக உள்ளோம். தொழிலாளர் நல வாரியத்திற்கென ஒரு கட்டடம் அமைப்பதன் மூலம், தொழிலாளர்களின் தேவையை உணர்ந்துள்ளதால், நான் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகின்றேன். தொழிலாளர் நல வாரியத்திற்கான அலுவலகம் மிகவும் இன்றியமையாததாகும். தொழிலாளர் நல வாரியம் எவ்வித இன்னல்களுக்கும் ஆளாகாமல் தங்கு தடையின்றித் திறமையுடன் இயங்க வேண்டும். தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) கூறியது போல், தொழிலாளர் நல வாரிய அலுவலகம் ஒரு பகுதியில் இயங்கி, மற்ற பகுதிகளை வாடகைக்கு விடுவதன் மூலம், தொழிலாளர் நல வாரியத்திற்கு ஓரளவு வருவாய் ஈட்ட முடியும்.

''கடந்த 8, 9 திங்கள்களாக, தொழிலாளர் உறவு குறிப்பிடத் தக்க வகையில் அதற்கு முந்திய காலங்களில் இருந்ததை விட, நன்றாகவே உள்ளது. வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள், மூடுதல் மிகவும் குறைவாக இருந்து வருகின்றன. இதை நான் தொழிலாளர் உறவில் பெரிய சாதனை செய்து விட்டோம் என்பதற்காகக் கூறவில்லை. தொழிலாளர் உறவு திருப்திகரமாக இருப்பதற்கு இன்னும் நாம் செய்ய வேண்டிய காரியம் ஏராளமாக உள்ளது என்பதற்காகவே கூறுகின்றேன். இருப்பினும் நாம் உற்பத்தியில் நல்ல முன்னேற்றம் காண முடிந்துள்ளது. நிர்வாகமும், தொழிலாளர்களும் அவர்களுக்குள் மிக்க சந்தோஷமான முறையில் உறவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று விரும்புகின்றோம். அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் நிர்வாகமும், தொழிலாளர்களும் அவர்களுக்கிடையே உள்ள பிரச்சினைகளை அவர்களே கூடிப் பேசி ஒருவரு(க்) கொருவர் விட்டுக் கொடுத்து திருப்திகரமான முறையில் தீர்(வு) காண எல்லா விதமான நடவடி(க்)கைகளையும் மேற்கொண்டு, ஆத(ர)ரவு அளித்து வருகிறது.

''இம்மாநிலத்தில் குடியரசுத் தலைவரின் ஆட்சி அமல்படுத்தப் பட்டபின் அரசு ஒரு மாநில உயர் மட்டக் குழு அமைத்துள்ளது. அதில் அரசாங்கத்தைத் தவிர தொழிலாளர், நிர்வாகத்தினரின் பிரதிநிதிகள் ஆகியோர் பங்கு பெற்றுள்ளனர். இக் குழு, தொழிலாளர் உறவு உட்பட பல்வேறு விஷயங்கள் குறித்து விவாதித்து, திருப்திகரமான பலனை அடைவதற்கு மிகவும் உபயோகமானதாக இருக்கின்றது. நிர்வாகத்தில் தொழிலாளர்கள் பங்கு கொள்ள எல்லா விதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு விட்டன.



''தொழில் உறவைச் சீர்குலைக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அரசாங்கம் ஒரு நிலையான குழுவை அமைத்துள்ளது. உற்பத்தியைப் பெருக்குவதில் தொழிலாளர்கள் பங்கு முக்கியமானது. ஏனெனில், தேசிய, பொருளாதார வளர்ச்சிக்கு, உற்பத்தி முக்கியமானது. உற்பத்தியில் முன்னேற்றம் காண நம்மால் இயன்றவரை செய்துள்ளோம், செய்கின்றோம். ஆதலின், அரசு, தொழிலாளர்களுக்கான திட்டங்கள் அனைத்தையும் கூர்ந்து பார்த்து நிறைவேற்றி வருகிறது. சமூகத்தில் தொழிலாளர்களுக்கும் முக்கியத்துவம் அளித்து, அவர்களுக்கு—ஒரு வளரும் நாட்டில் ஒரு சாதாரணக் குடிமகன் எதிர்பார்க்கின்ற — தேவையான வசதிகளைச் செய்து தருகின்றோம். இதைக் கருத்தில் கொண்டு, பல தொழிலாளர் நல நடவடிக்கைகள் நிறைவேற்றப் படுகின்றன. சில நல நடவடிக்கைகளை அடைய தொழிலாளர்களே பங்கு ஏற்றுள்ளது பெருமைப்படத் தக்கது. நம் தொழிலாளர் சுய மரியாதையை விரும்பும் இனத்தவர். மிக்க பொறுப்பு மிக்கவர்கள்.

''சிறுவர்களிடம் வேலை வாங்குவது சம்பந்தமாக, பல தொழிற்சாலைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு முது நிலை அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டார். அவர் பல தொழிற்சாலைகளை ஆராய்ந்து தன் அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்து விட்டார். அது அரசின் பரிசிலனையில் உள்ளது.

''தொழில் பழகுநர் திட்டத்தின் கீழ், தமிழ் நாட்டிற்கு அளிக்கப்பட்டிருந்த, இலக்கினைத் தமிழ்நாடு மிஞ்சிவிட்டது. முதன் முறையாக, மலைச்சாதி வகுப்பைச் சார்ந்த 129 ஆண்களும், பெண்களும் தொழிற் பயிற்சி நிறுவனங்களில் சேர்த்துக் கொள்ளப்பட ஆவன செய்யப் பட்டுள்ளது. காச நோயால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்காக தாம்பரம் காச நோய் மருத்துவ மனையில் 24 படுக்கைகள் கொண்ட பகுதி கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்சமயம் இயங்கி வருகின்ற 10 தொழிலாளர்கள் நல நிலையத்தில் பாலர் பயிற்சி வகுப்புகள் நடந்து வருகின்றன. குழந்தைகளுக்குப் பாலும், மதிய உணவும் அளிக்கப் படுகின்றன. தொழிலாளர்களின் துணைவிகள் தையல் வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். பயிற்சியாளர் ஒவ்வொருவருக்கும் உதவித் தொகையாக மாதம் ரூ. 30/ அளிக்கப்படுகிறது.

''தொழிலாளர்களுக்காக அமைக்கப்படும் விடுமுறை இல்லங்களைப் பற்றிக் குறிப்பிட விரும்புகின்றேன். மாமல்லபுரத்தில் அத்தகைய இல்லம் ஒன்றை அமைக்க விரைவில் அடிக்கல் நாட்டப்படும். குற்றாலம், கோடைக்கானல், ஊட்டி, மற்றும் ஏற்காடு ஆகிய சுற்றுலா மையங்களில் விடுமுறை இல்லங்கள் விரைவில் அமைக்கப்பட இருக்கின்றன. இவ்வில்லங்கள் தொழிலாளர்களுக்குப் பெருமளவில் உதவிடும் என்று கருதுகின்றேன். தொழிலாளர் நல வாரியம் திறமையாக வேலை செய்து, நமது தொழிலாள சகோதர, சகோதரிகளின் நல்வாழ்வை மேம்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, மேதகு ஆளுநர் அவர்களை நமக்கு அறிவுரைகள் வழங்கும்படியும், அடிக்கல் நாட்டும் படியும் வேண்டுகிறேன்.''

—தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்திற்கான பல மாடிக் கட்டடத்திற்கு 12—10—'76ல் அடிக்கல் நாட்டிய விழாவிற்குத் தலைமை தாங்கிய ஆளுநர் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் ஆற்றிய உரையின் தொகுப்பு.

## மருத்துவ இலக்கியத்தில் ஒரு புதிய அத்தியாயம் !



இந்தியாவில் உள்ள மருந்துச்செடிகள் பற்றிய நூல் ஒன்றை இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபை வெளியிட்டுள்ளது. மொத்தம் 350 மூலிகைச் செடிகள் பற்றிய விவரம் இப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்புத்தகத்தின் முதல் தொகுதியை மத்திய சுகாதார, குடும்பநலத் திட்ட அமைச்சர் டாக்டர் கரண் சிங் அவர்கள் வெளியிட்டார்.

இப்புத்தகம், இருபதாண்டுகளுக்கு முன்னால் சர். ஆர். என். சோப்ரா, டாக்டர் கே. எம். நட்கர்னி ஆகியோரும், கடந்த சில ஆண்டுகளில் பல்வேறு கருத்தரங்குகளிலும், கூட்டங்களிலும் தங்களின் ஆராய்ச்சி முடிவுகளை கட்டுரைகளாகவும், ஆய்வுகளாகவும் வெளியிட்டுள்ள இதர விஞ்ஞானிகளும் மேற்கொண்ட முன்னோடி முயற்சிகளின் பயனாகும்.

மருத்துவ இலக்கிய வரலாற்றில் திருப்புமையமான இப்புத்தகம், உயர் கல்விக்காக தெரிந்தெடுக்கப்பட்ட மருந்துச் செடிகளில் ஆராய்ச்சி செய்பவர்களுக்குப் பெரும் பயனளிப்பதாக இருப்பதோடு கூட, 'தாவர மறுமலர்ச்சி' என்று சரியாக அழைக்கப்படுவதற்கான நீண்டகாலத் தேவையையும் நிறைவு செய்கிறது.





## தமிழ்நாட்டில் நகர்ப்புற அபிவிருத்தித் திட்டங்கள்

தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டதிலிருந்து நகர்ப்புற அபிவிருத்தித் திட்டங்களின் நிறைவேற்றம் துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

குடிசை மாற்றுத் திட்டங்களுக்காக நடப்பு ஆண்டு பட்ஜெட்டில் 3 கோடியே 60 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சென்னை நகரின் குறுக்காக ஓடும் பக்கிங்ஹாம் கால்வாயின் இருகரைகளிலுமுள்ள குடிசைகளை அகற்றுவது பற்றியும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது. நடப்பு ஆண்டில் 3,600 குடியிருப்பு வீடுகள் கட்டுவதற்கான திட்டம் ஒன்றும் மாநில அரசாங்கத்தின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

நடப்பு நிதியாண்டில் நகர்ப்புற குடிநீர் விநியோகத் திட்டங்களுக்காக சுமார் 9 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவிடுவதற்கு தமிழ்நாடு உத்தேசித்துள்ளது. சென்ற ஆண்டில் இத்திட்டங்களுக்கு 6 கோடியே 50 இலட்சம் ரூபாய் மட்டுமே நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்கள் முடிக்கப்பட்டதும் இம்மாநிலத்தில், நகராண்மைக் கழகங்கள் உட்பட சுமார் 65 சிறிய நகரங்களுக்கு, பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோக வசதி கிடைக்கும். இந்த வேகத்தில், அடுத்த இரண்டு, மூன்று ஆண்டுகளில் இம்மாநிலத்தில் உள்ள நகராண்மைக் கழகங்கள் அனைத்துக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோக வசதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை நகரில் ஏராளமான கழிவுநீர்க் கால்வாய் அமைப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மற்றும் ஏழு சிறிய நகரங்களும் இத்தகைய திட்டங்களைக் கொண்டிருக்கின்றன. தண்ணீரைச் சுத்தப்படுத்தி, சிக்கனத்தைக் கொண்டு வருவதற்கும் முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. கழிவு நீரை விஞ்ஞான முறையில் அகற்றுவதை உறுதி செய்வதற்கான உத்தேசங்களும் பரிசீலிக்கப்படுகின்றன. குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீர்க் கால்வாய்த் திட்டங்களை வருவாய் தரும் வகையில் நிறைவேற்றுவது பற்றியும் மாநில அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

வீட்டு வசதியைப் பொறுத்தவரையில், மாநில வீட்டுவசதி வாரியம் மேற்கொண்டுள்ள கட்டுமானப்பணி வேலைகளில் சுமார் 75 சதவிகித அளவு, பொருளாதார ரீதியில் பலவீனப் பிரிவினர்களுக்காகவும், குறைவான வருமானப் பிரிவினர்களுக்காகவும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். வீட்டுவசதி வாரியத்தின் பணிகளும் விரிவாக்கப்பட்டு வருகின்றன.

கிராமப்புற குடிநீர் விநியோக வசதியைப் பொறுத்தவரையில், நடப்பு ஆண்டில் சுமார் 7,000 கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்வதற்கு மாநில அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் 5,000 முதல் 6,000 கிராமங்களுக்கு மட்டுமே குடிநீர் வசதி ஏற்படுத்தப்பட்டது. இந்நோக்கத்துக்காக 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வீட்டுமனைகள் வழங்கும் திட்டமும் துரிதப்படுத்தப்பட்டுள்ளது. குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டதிலிருந்து மாதம் ஒன்றுக்கு 12,000 வீட்டுமனைகள் வழங்கப்படுகின்றன. அதற்கு முன்னால் மாதம் ஒன்றுக்கு 3,000 வீட்டுமனைகளே வழங்கப்பட்டன.

## சாகுபடிச் செலவைக் குறைத்திட அசட்டோபாக்டர் பயன்படுத்துவீர்!

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில், நெற் பயிரில் நடத்தப்பட்ட சோதனைகளிலிருந்து அசட்டோபாக்டர் உபயோகிப்பதன் மூலம் சுமார் 20 சதம் தழைச் சத்து உரத்தைச் சிக்கனப்படுத்த முடியும் என்று அறியப்பட்டது. இந்த அசட்டோபாக்டர் பாக்கெட்டுகள் கோயமுத்தூரில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் கிடைக்கின்றன. ஒரு பாக்கெட்டின் விலை இரண்டு ரூபாய் ஆகும். நெற்பயிரில் இதை எப்படி உபயோகிப்பது என்பது பற்றி இங்குக் காண்போம் :



### நெற்பயிருக்கு அசட்டோபாக்டர் :

1. **விதைகளோடு கலத்தல் :** ஒரு பாக்கெட் அசட்டோபாக்டரை தேவையான அளவு குளிர்ந்த நீரில் கலந்து கொள்ளவேண்டும். இதில், ஒரு ஏக்கர் நிலத்திற்குத் தேவையான விதையை விதைப்பதற்கு முன்பு ஒரு இரவு முழுவதும் ஊற வைக்க வேண்டும். விதைகளை எடுத்து விதைத்த பின்பு, மீதியிருக்கும் அசட்டோபாக்டர்—நீர் கலவையை நாற்றங்காலிலேயே ஊற்றி விடலாம்.

2. **நாற்றுகளோடு கலத்தல் :** இரண்டு பாக்கெட் அசட்டோபாக்டரை சுமார் 15 லிட்டர் நீரில் கலந்து கொள்ளவேண்டும். இக்கலவையில், ஒரு ஏக்கர் நிலத்திற்குத் தேவையான நாற்றுக்களின் வேர்ப் பாகம் மட்டும் அமிழ்ந்திருக்குமாறு 10 முதல் 15 நிமிடங்கள் வைத்திருந்த பிறகு நாற்று நட வேண்டும்.

3. **நிலத்தில் இடுதல் :** ஐந்து பாக்கெட் அசட்டோபாக்டரை நன்கு மக்கிய தொழு உரம் 10 கிலோவுடன் நன்கு கலந்து கொள்ள வேண்டும். இதை மேலும் 10 கிலோ மண்ணுடன் கலந்து நாற்று நடப்போகும் வயலில் ஒரு ஏக்கர் நிலத்தில் தூவி விடவேண்டும்.

### பருத்தியில் அசட்டோபாக்டர் :

பருத்தியில் அசட்டோபாக்டர் பயன்படுத்தும்போது, 75 சதம் தழைச் சத்து இட்டால் போதுமானது என்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் இருந்து அறியப்பட்டுள்ளது. பருத்தியில் இதை எப்படி உபயோகிப்பது என்பதைப் பற்றி இங்கு கொடுக்கப்பட்டுள்ளது.

1. **விதைகளோடு கலத்தல் :** 125 கிராம் அளவுள்ள வெல்லத்தை அரை லிட்டர் அளவு நீரில் நன்கு கரைத்த பின்பு அதை 30 நிமிடங்கள் கொதிக்க வைக்க வேண்டும். இதை நன்கு ஆற வைத்த பிறகு, ஒரு பாக்கெட் அசட்டோபாக்டரை நன்கு கலக்க



வேண்டும். இக்கலவையில் ஒரு ஏக்கர் நிலத்திற்குத் தேவையான பருத்தி விதைகளைப் போட்டு, ஒவ்வொரு விதையின் மேலும் இக்கலவை நன்கு படியும் வண்ணம் நன்கு கலக்க வேண்டும். பிறகு இவ்விதைகளை ஒரு பேப்பரின் மேல் பரவலாகக் கொட்டி நிழலில் உலர்த்த வேண்டும். (எக்காரணத்தைக் கொண்டும் வெயிலில் உலர்த்தக் கூடாது). இவ்வாறு கலக்கப்பட்ட விதைகளை 24 மணி நேரத்திற்குள் விதைத்துவிட வேண்டும்.

2. **நிலத்தில் இடுதல் :** ஐந்து பாக்கெட் அசட்டோபாக்டரை 10 கிலோ நன்கு மக்கிய தொழு உரத்துடன் கலந்து கொள்ளவேண்டும் இதை மேலும் 10 கிலோ மண்ணுடன் கலந்து, பருத்தி விதைகளை விதைப்பதற்கு முன்னதாக ஒரு ஏக்கர் நிலத்தில் தூவி விடவேண்டும்.

நன்றி : தகவல் தொடர்பு நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை—3.

# பிற்பட்டோர் நலங்காக்க அரசு ஆற்றிடும் அரும்பணிகள்

**ஜி. திருமால், ஐ.ஏ.எஸ்.,**
செயலாளர்,
சமூக நலத்துறை, தமிழ்நாடு அரசு.

பன்னெடுங்காலமாகச் சமுதாயத்தில் ஒரு கணிசமான பிரிவினர் வாழ்க்கையில் இதர பிரிவினருடன் இணைந்து முன்னேற முடியாதவர்களாக இருந்து விட்டனர். இந்தத் தேக்கம், சமுதாய அமைப்பினாலும், அவர்கள் பரம்பரையாகச் செய்து வந்த தொழில்களினாலும் ஏற்பட்டதென்று கூறலாம். அதன் பயனாகப் பின்தங்கிய மக்கள், விவசாயம் முதலான இன்றியமையாத தொழில்களில் ஈடுபட்டு சலியா உழைப்பினை மேற்கொண்டிருந்தும்கூட, அவர்கள் கல்வியிலும் பொருளாதாரத்திலும் முன்னேறவில்லை.

இந்நூற்றாண்டின் முற்பகுதியில் பின்தங்கிய மக்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் வேலை வாய்ப்புக்கள் ஓரளவுக்கு ஏற்படுத்தித் தரப்பட்டன. இது மக்களிடையே பெரிய விழிப்புணர்ச்சியையும், தன்னம்பிக்கையையும் தோற்றுவித்தது. இச்சலுகைகளின் பயனாக இவர்களிடையே கல்வி, அதிலும் உயர் கல்வி கற்க வேண்டும் என்ற ஆர்வம் தோன்றி வளரலாயிற்று. இது இம்மக்களிடையே ஏற்பட்ட ஒரு வரவேற்கத் தக்க மாறுதல் ஆகும்.

இம்மாறுதல் தொடர்ந்து வளர்ந்து, பல துறைகளிலும் முன்னேறவேண்டும் என்ற ஆர்வத்தை இவர்களது மனங்களில் வளர்த்தது. பின்னர், சுதந்திர இந்தியாவில் ஏற்பட்ட அரசியல் மாறுதல்களும், விழிப்புணர்ச்சியும் இம்மக்களை அரசியலிலும் பெருவாரியாக ஈடுபட வைத்தது. இதனால் இவர்கள் அரசியலில் ஊடுருவி தங்கள் உரிமைகளைக் கோரிப் பெறவும், அதைப் பாதுகாக்கவும் முடிந்தது. பிற்பட்ட இனத்தில் பலர் அரசியல் தலைவர்களாகவும், சிலர் அரசில் பொறுப்புள்ள பதவி வகிப்பவர்களாகவும், இருப்பதை இப்போது பார்க்கிறோம். கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் வேலைகளிலும் இதர தொழில் வணிகத் துறைகளிலும் இப்போது பிற்பட்ட மக்கள் அங்கம் வகிப்பது இவர்களது படிப்படியான முன்னேற்றத்தை எடுத்துச் காட்டுகிறது. ஆயினும் இம்மக்களின் மொத்தத் தொகையை நோக்கும்போது இவர்களின் வளர்ச்சி, குறிப்பாக பொருளாதாரத்திலும் கல்வியிலும் சிறப்புடையாதாக இன்னும் அமையவில்லை.

நமது மாநிலத்தில் மொத்த மக்கள் தொகையில் ஏறத்தாழ 53 சதவீதம் மக்கள் பிற்பட்டவர்கள். இவர்களில் பெரும்பாலோர் கிராமப் புறங்களில் விவசாயம், கூலி வேலை மற்றும் சிறு கைத்தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்கள் இவர்களை எண்ணிப்பார்க்கையில் தற்போது இம்மக்கள் பெற்றுள்ள வளர்ச்சி மிகக் குறைவானது என்பதும், இன்னும் இவர்கள் முன்னேற்றத்திற்குச் செய்ய வேண்டுவன மிக அதிகம் என்பதும் புலனாகும்.

### பிற்பட்டோருக்கான சலுகைகள் வளர்ந்தன !

இந்நூற்றாண்டுத் தொடக்கத்தில் பிற்பட்ட மக்களுக்கு வருவாயின் அடிப்படையில், அரைச்சம்பளச் சலுகை மட்டுமே அளிக்கப்பட்டு வந்ததே தவிர படிப்புதவித் தொகை ஏதும் வழங்கப்படவில்லை. இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர், முதன் முதலாக 1948-49-ஆம் ஆண்டு சென்னை ராஜதானியில் படிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டம் ரூ. 1.00 இலட்சம் செலவில் அமல் நடத்தப்பட்டது. இதனால் அன்றிருந்த சென்னை ராஜதானியில் 609 மாணவர்கள் பயன் பெற்றனர். 1949-50-ஆம் ஆண்டில் இவ்வுதவி ரூ. 5.00 இலட்சங்களாக உயர்த்தப்பட்டு 2,908 மாணவர்வர்கள் பயன்பெற வகை செய்யப்பட்டது. இத்திட்டம் சிறிது, சிறிதாக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு 1954-55-ல் 4,196 மாணவர்கள் பயன் பெற ரூ. 8.80 இலட்சம் செலவிடப்பட்டது. 1960-61-ல் பயன் பெற்றோர் எண்ணிக்கை 19,856 ஆகவும், செலவு ரூ. 40.89 இலட்சங்கள் ஆகவும் உயர்ந்தன. 1970-71-இல் 1,34,249 மாணவர்களின் நலனுக்காக ரூ. 201.20 இலட்சங்கள் செலவிடப்பட்டது. 1975-76-ல் ரூ. 313.00 இலட்சங்கள் செலவில் 1,67,101 மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டது.

படிப்புதவித்தொகை தவிர 1950-51-ஆம் ஆண்டு முதற்கொண்டே தனியார் விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்பட்ட மாணவர்களுக்கு உணவு மானியம் ஆண்டு—ஒன்றுக்கு ரூ. 150 வீதம் வழங்கப்பட்டு வருகிறது.



1957-ஆம் ஆண்டு மிகப் பிற்பட்ட 57 சாதிகள் கொண்ட பட்டியல் தயாரிக்கப்பட்டது. இவர்கள் தீண்டத் தக்கவர்களாகக் கருதப்படினும் இவர்களது நிலை அரிசனங்களைப் போன்றதே.

எனவே பிற்பட்ட மக்களது முன்னேற்றத்தை விரைவுபடுத்த தனித்துறை ஒன்று நிறுவப்பட்டது. இத்துறை பிற்பட்ட மக்களின் கல்வி மேம்பாட்டை முக்கிய குறிக்கோளாகக்கொண்டு ஏராளமான மக்களுக்கு உபகாரச் சம்பளம் மற்றும் இதர கல்விச் சலுகைகளை வழங்கி வருகிறது. ஆண்டுதோறும் இதற்காகவே ஏறத்தாழ ரூ. 400 இலட்சங்கள் செலவிடப்படுகிறது. வீட்டு வசதி, தொழில் மேம்பாடு, பொருளாதார அபிவிருத்தி போன்ற துறைகளிலும் பிற்பட்ட மக்களுக்கெனத் தனித் திட்டங்கள் தேவைப்படினும், நமது மாநில அரசு எந்தத் துறைகளில் வளர்ச்சித் திட்டங்களை வகுத்தாலும் அவை சமுதாயத்தின் பிற்பகுதியில் இருக்கும் ஏழை எளிய மக்களின் முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும் முறையில்தான் வகுக்கப்படுகின்றன. ஆகவே இதர துறைகளின் வளர்ச்சித் திட்டங்களும் பிற்பட்ட மக்களுக்குச் சாதகமானவையாகவே இருப்பதாகக் கொள்ளலாம்.

## பிற்பட்டோர் நலம் காக்க 1976-77—ல் அரசு மேற்கொண்டுள்ள திட்டங்கள்

### படிப்பு உதவித்தொகை வழங்கல்

முந்திய ஆண்டு தேர்வில் 40 சதவீத மதிப்பெண்கள் பெற்று தேறி, பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 2,500-க்குள் உள்ள 9-ஆம் வகுப்பும் அதற்கு மேலும் படிக்கும் பிற்பட்ட வகுப்பு மாணவ, மாணவியர்க்குப் படிப்பு உதவித்தொகை எல்லா வகைப் படிப்பிற்கும் வழங்கப்படுகிறது. 9 முதல் 11-ஆம் வகுப்பு வரையில் உள்ள இவ்வகுப்பு மாணவ, மாணவியருக்கு உண்டி, உறையுள் அற்ற படிப்பு உதவித்தொகை வழங்கப்படுகிறது. அவை சிறப்புக்கட்டணம், புத்தகங்கள் வாங்குவதற்கும் ஆகும். சென்ற 1975-76-ல் 1,67,101 மாணவ, மாணவியர் ரூ. 313 இலட்சம் செலவில் பயன் பெற்றனர். 1976-77;இல் 1,79,000 மாணவ, மாணவியர் பயன் பெற ரூபாய் 336.32 இலட்சம் ஒதுக்கீடு செய்'' ப்பட்டுள்ளது. பள்ளிப் படிப்பிற்கான உதவிகளைப் பெற, சென்னை நகரில், சென்னை பிற்பட்டோர் நல அலுவலராலும், அதற்கு மேற்பட்ட பட்டப் படிப்புகளுக்கும் ஏனையவற்றிற்கும் பிற்பட்டோர் நலத்துறை இயக்குநராலும் வழங்கப்படுகின்றன. மாவட்டங்களில் மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலராலும், மதுரை கள்ளர் சீரமைப்பு, தனித்துணை ஆட்சியாளராலும் வழங்கப்படுகின்றன.

### படிப்பதற்குக் கடனுதவி

மருத்துவம், பொறியியல், கால்நடை மருத்துவம் மற்றும் தொழில் நுட்பம்போன்ற தொழிற்கல்வி கற்கின்ற—ஆண்டு வருமானம் ரூ. 2501-6000-க்குள் உள்ள-பிற்பட்ட குற்றப்பரம்பரைச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவர்கள் கல்லூரி விடுதிகளில் தங்கிப் படித்தால், ஆண்டு ஒன்றுக்கு ரூ. 500 கடனாக வழங்கப்படுகிறது. இதற்கென 1976-




77-ஆம் ஆண்டிற்கு ரூ. 2,00,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வுதவி, பிற்பட்டோர் நலத்துறை இயக்குநரால் வழங்கப்படுகிறது.

### சம்பளச் சலுகை

அரைச் சம்பளச் சலுகை தமிழகக் கல்வித்துறை விதிகளின்படி வழங்கப்படுகிறது. 1948 49-ஆம் ஆண்டு முன்னமேயே இச்சலுகை இருந்து வருகிறது.

மிகப் பிற்பட்ட வகுப்பினருக்கு முழுச் சம்பளச் சலுகை வழங்கப்படுகிறது. இச்சலுகையைப் பெறப் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 1500-க்குள் இருக்க வேண்டும். 1976-77-ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு ஏற்படும் இழப்பை ஈடு செய்ய ரூ. 3 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதர பல்கலைக் கழகங்களுக்கு இத்துறையால் ஈட்டுத் தொகை ஏதும் வழங்கப்படுவதில்லை.

படிப்பு உதவித்தொகை என்பது அரைக் கட்டணத்தையும் உள்ளடக்கியதாகும். ஆண்டு வருமானம் ரூ. 1501 முதல் 2500 வரை உள்ள பிற்பட்ட மாணவ, மாணவியருக்கு அரைச்சம்பளத்துடன் படிப்பு உதவித்தொகை வழங்கப்படுகிறது. சிறப்புக் கட்டணங்கள் கட்டவும், புத்தகங்கள் வாங்குவதற்கும் குறிப்பிட்ட தொகைகளே வழங்கப்படுகின்றன. அங்கீகரிக்கப்பட்ட விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவ, மாணவியருக்கு கீழ்கண்ட வீதத்தில் உண்டி, உறையுள்தொகை வழங்கப்படுகிறது.

| படிப்பு இனங்கள் | மாதம் ஒன்றுக்கு — சென்னை நகரில் பி.வ | சென்னை நகரில் கு.ப.வ | ஏனைய இடங்களில் பி.வ | ஏனைய இடங்களில் கு.ப.வ |
|---|---|---|---|---|
| | ரூ | ரூ | ரூ | ரூ |
| கலை, விஞ்ஞானம், சட்டம் | 60 | 70 | 50 | 55 |
| மருத்துவம், பொறியியல், விவசாயம், கால்நடை மருத்துவம், ஏனைய தொழில் கல்விகள் | 60 | 75 | 55 | 70 |
| தொழில், டிப்ளமோ | 50 | 60 | 45 | 50 |

குறிப்பு : பி.வ—பின்தங்கிய வகுப்பினர்
கு.ப.வ—குற்றப்பரம்பரைச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர்.

மிகப் பிற்பட்ட இனத்தைச் சார்ந்த மருத்துவர், வண்ணார், பர்வதராஜகுலம், பட்டணவர், செம்படவர் ஆகிய வகுப்பு மாணவ மாணவியருக்கு உண்டி, உறையுள் தொகை குற்றப்பரம்பரை வகுப்பினருக்கு அளிக்கப்படும் வீதத்தில் அளிக்கப்படும்.

### உணவு மானியம்

அங்கீகரிக்கப்பட்ட தனியார் நடத்தும் இல்லங்களில் தங்கிப்படிக்கும் மாணவ, மாணவியருக்கு ஆண்டிற்கு ரூ. 250 வீதம் உணவு மானியம் வழங்கப்படுகிறது. 1975-76-ல், 2,512 மானியங்கள் வழங்கப்பட்டன. 76.77-லும் 2,512 மானியங்கள் அளிக்கப்படுகின்றன. இதற்கு ரூ. 6.28 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### அரசு மாணவரில்லங்கள்

புதிதாக மாணவரில்லங்கள் ஒவ்வொரு ஆண்டும் திறக்கப்படுகின்றன. இவ்வில்லங்களில் மாணவர்களை சேர்க்கும் வீதம் கீழ்க் கண்டவாறு கடைப்பிடிக்கப்படுகிறது.

| | பின்தங்கிய வகுப்பு மாணவர் இல்லங்கள் | குற்றப்பரம்பரை சட்டத்திலிருந்து நீக்கப்பட்ட மாணவர் இல்லங்கள் |
|---|---|---|
| பிற்பட்டோர் | 65 சதம் | 10 சதம் |
| தாழ்த்தப்பட்டோர் | 25 சதம் | 25 சதம் |
| குற்றப்பரம்பரையை சார்ந்தவர்கள் | ... | 60 சதம் |
| ஏனைய வகுப்பினர் | 10 சதம் | 5 சதம் |

தேவைக்குத் தகுந்தாற்போல் இல்லங்கள் திறக்கப்படுகின்றன. தற்போது 197 இல்லங்களில் 12,320 பேர் தங்கிப் பயன் பெறுகின்றனர். இவ்வாண்டில் மேலும் 800 பேர் பயனடைய, புதிதாக 16 இல்லங்கள் திறக்கப்பட உள்ளன. இவைகள் அனைத்தையும் பராமரிக்க ரூ. 64,32 இலட்சம் 1976-77-ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி 213 உணவு விடுதிகளில் 159 உணவு இல்லங்கள் பள்ளி மாணவ, மாணவிகளுக்காக நடத்தப்படுகின்றன. இப்பள்ளி மாணவ மாணவிகளுக்கு இலவசமாக ஆண்டிற்கு இருமுறை சீருடைகள் வழங்கப்படுகின்றன. 1976-77-ல் இத்திட்டத்தின்கீழ் 8,993 மாணவ மாணவிகள் பயனடைவர். அதற்கென ரூ. 2.59 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### தொழில்

இலவசமாகத் தொழில் கருவிகள் சலவையாளர்களுக்கும் மருத்துவர்களுக்கும் ஒவ்வொரு ஆண்டும்வழங்கப்படுகின்றன. சலவைத் தொழில் கருவிகள் வாங்க ரூ. 240ம் மருத்துவர் கருவிகள் வாங்க ரூ. 75-ம் செலவிடப்படுகிறது. 1976-77-ல் சுமார் 1,300 பேர் பயனடைவதற்கு ரூ. 2.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிரம்பு, தும்புப்பயிற்சி நிலையங்கள் இரண்டு, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பாகோடியிலும், குழித்துறையிலும் நடைபெறுகின்றன. இவற்றில் பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கை 40. பயிற்சியாளர் ஒவ்வொருவரும் ரூ. 30 வீதம் ஒவ்வொரு மாதமும் உதவிப் பணம் பெறுகின்றனர். இவ்விரு நிலையங்களைப் பராமரிக்க 1976-77-ல் ரூ. 40,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### சலவைத் துறைகள்

சலவைத்துறை கட்ட முன்வரும் நகராட்சிகளுக்கும் நகர பஞ்சாயத்துகளுக்கும் பாதி கடன், பாதி மானியமாக உதவி வழங்கப்படுகிறது. இதன்படி 7 நகராட்சிகளுக்கும், 32 நகர பஞ்சாயத்துகளுக்கும் உதவி வழங்கப்பட்டுள்ளது. 1976-77-ல் மானியமாக ரூ. 50,000-ம், கடனாக ரூ. 60,000-ம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### அரசுப் பணிகளிலும் கல்லூரிகளிலும் இடம் ஒதுக்கீடு.

மொத்தம் உள்ள இடங்களில் 31 சத இடங்கள் கல்வி நிலையங்களிலும், அரசுப்பணிகளிலும் பிற்பட்டோருக்காக ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இது அரசியல் சட்டம் 15 (4), 16 (4)-ன்படி செய்யப்படுகிறது. மிகப் பிற்பட்ட வகுப்பினரும் பிற்பட்டோராக இவ்வொதுக்கீடுகளுக்குக் கருதப்படுவர். குற்றப் பரம்பரைச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்ட வகுப்பைச் சார்ந்த சில வகுப்பினருக்கும் இவ்வொதுக்கீடு பொருந்தும்.

### சிறப்புப் பயிற்சி நிலையம்

இ.ஆ.ப., இ.கா.ப. போன்ற பணிகளுக்கு தேர்ந்தெடுக்க, மத்திய அரசுப் பணி தேர்வாணைக்குழு மூலம் நடத்தும் தேர்வுகளில் தேர்ச்சி பெற 50 பிற்பட்ட மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் நிலையம் ஒன்று சென்னையில் துவக்கப்பட்டுள்ளது. இதுவரை 2 பேர் இ.ஆ.ப.க்கும், 2 பேர் இ.கா.ப-க்கும் 5 பேர் மற்றைய மத்திய அரசுப் பணிகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். ஆண்டு வருமானம் ரூ. 2,500-க்குள் உள்ள பயிற்சியாளருக்கு இலவச உண்டி,உறையுள் அளிக்கப்படுகிறது. மத்திய அரசு நடத்தும் ஆணை பெற்ற படை அலுவலர் ( Commissioned Rank ) பதவிகளுக்கான தேர்வுகளுக்கும் இந் நிலையத்தில் பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. 1976-77-ல் இப்பயிற்சி நிலையத்தை நடத்துவதற்கு ரூ. 2.32 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.






### மத்திய அரசின் படிப்பு உதவிகள்

மத்திய அரசின் கல்வித்துறையினரால் குற்றப்பரம்பரைச் சட்டத்திலிருந்து நீக்கப் பட்டிருப்போருக்கும் ஏனைய பொருளாதார பிற்பட்டோருக்கும் வழங்கப்பட்டு வந்த படிப்பு உதவிகள் 1959-60 முதல் மாநில அரசால் வழங்கப்பட்டு வந்தது. இதற்கென வருடா வருடம் ரூ. 14.84 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது முதலில் ஆண்டு வருமானம் ரூ. 6,000-க்குள் உள்ள பிற்பட்டோருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பின் 1964-65 முதல் ஆண்டு வருமானம் 2,400-க்குள் உள்ள பொருளாதாரத்தில் பிற்பட்டோருக்கென மாற்றப்பட்டது. 1969-70 முதல், மத்திய அரசு அளித்து வந்த மானியத்தை நிறுத்திவிட்டபடியால் 1971-72 முதல் மாநில படிப்பு உதவி விதிகளின்படி ஏற்கனவே 1970-71 வரை இத்திட்டத்தின் கீழ் உதவிபெற்றுப்படிப்பு முடிக்காமல் உள்ளவர்களுக்கு மட்டும் உதவி வழங்கப்பட்டு வருகிறது. 1976-77-க்கென ரூ. 25,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### குற்றப்பரம்பரைச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்டோர் நலன்

நாடு விடுதலை பெறுமுன், தாழ்த்தப்பட்ட, மலை வாசிகள், பிற்பட்ட வகுப்புகளைச் சார்ந்த சில மக்களை அக்காலத்திய குற்றப் படம்பரைச் சட்டத்தின் கீழ், கொடுமைப் படுத்தி வந்தது அன்றைய அந்நிய அரசு. இதற்கான காரணம் அம்மக்கள் அன்றைய ஆட்சியர் விரும்பாத சில குற்றங்களைச் செய்ததே. நாடு விடுதலை அடைந்த பின் அவர்கள் அக்குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டனர். இவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் மதுரை மாவட்ட பிறமலைக்கள்ளர், இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்ட மறவர் ஆகியோராவர். மதுரை மாவட்டத்தில் பிறமலைக் கள்ளர்களை நல்வழிப்படுத்த, கள்ளர் சீரமைப்பு அமைக்கப்பட்டது. அம்மக்கள் பெருவாரியாக உள்ள மதுரை, நெல்லை, முகவை, கோவை, தர்மபுரி சேலம், வடார்க்காடு, தென்னார்க்காடு மாவட்டங்களில் 275 பள்ளிகள் திறந்து நடத்தப்பட்டு வருகின்றன.

குற்றப் பரம்பரைப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட மக்களின் நலன்கருதிப் பின்கண்ட பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

### இலவசப் புத்தகங்களும், கரும்பலகைகளும் வழங்குதல்

குற்றப்பரம்பரைச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்டோருக்கென உள்ள பள்ளிகளில் படிக்கும் எல்லா மாணவர்களுக்கும் இலவசமாக புத்தகங்களும், கரும்பலகைகளும் வழங்கப்படுகின்றன. இதற்கென 1976-77-ஆம் ஆண்டிற்கு 30,310 மாணவ, மாணவியர் பயன் பெற ரூ. 1.46 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### உணவு மானியம்

தனியார் நடத்தும் அங்கீகரிக்கப்பட்ட மாணவரில்லங்களில் தங்கிச் கல்வி கற்கும் மாணவ மாணவியருக்கு உணவு மானியம் வருடம் ஒன்றுக்கு ரூ. 250 வழங்கப்படுகிறது. 1976-77-ல், 104 மானியங்கள் வழங்க ரூ. 26,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### படிப்பு உதவித்தொகைகள்

முதல் வகுப்பு முதல், கல்லூரிப் படிப்பு வரை ஆண்டு வருமானம் ரூ. 25,00/-க்குள் உள்ள குற்றப் பரம்பரைப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவ மாணவியருக்கு படிப்பு உதவிகள் வழங்கப்படுகின்றன. 1 முதல் 5 வகுப்பு வரை உண்டி, உறையுள் அற்ற உதவியும், 6-ஆம் வகுப்புக்கு மேல் உண்டி உறையுள் படிப்பு உதவி அல்லது அவை அற்ற உதவியும் அளிக்கப்படுகிறது. 1975-76-ல் ரூ. 31 இலட்சம் செலவில் 65,844 மாணவ மாணவியர் இதன் மூலம் பயன் பெற்றனர். 1976-77-ல் ரூ. 35.69 இலட்சத்தில் 76,000 மாணவ மாணவியர் பயன் பெறுவர்.

### மதிய உணவு

மதிய உணவு, குற்றப் பரம்பரைச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்டோருக்கான பள்ளிகளில் எல்லாம் வழங்கப்படுகிறது. நெல்லை, இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள ஒரு சில தனியார் பள்ளிகளிலும் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மாணவருக்கும் வழங்கும் மதிய உணவின் மதிப்பு 15 பைசாவாகும். 1976-77 இல் இதற்கென ரூ. 10.90 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்துடன் 'கேர்' நிறுவனம் அளிக்கும் உதவிகளையும் ஆண்டுக்கு 100 நாட்களுக்கு உபயோகப்படுத்தப்படுகிறது.

### சீருடைகள்

இம்மக்களுக்கென உள்ள அரசுப் பள்ளிகளிலும், மாணவரில்லங்களிலும் இலவசமாக ஆண்டுக்கு இருமுறை சீருடைகள் வழங்கப்படுகின்றன. 1976-77-ல் 30,000 மாணவ மாணவியர் பயன்பெற ரூ. 7.74 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### மாணவர் இல்லங்கள்

இவ்வகுப்பைச் சார்ந்த மாணவ மாணவியரின் கல்வி முன்னேற்றத்திற்கு மாணவரில்லங்கள் மிகத் தேவையெனக் கருதப்பட்டு மிகவும் பின்தங்கிய பகுதிகளில் 53 மாணவ இல்லங்கள் திறக்கப்பட்டு 5,069 பேர் பயனடைந்து வருகின்றனர். இவைகளை 1976-77-இல் பராமரிக்க ரூ. 19.70 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### தாழ்த்தப்பட்டோர்—மாணவரில்லங்களில் சேர்க்கும் விதம்

தாழ்த்தப்பட்ட மக்களுக்கென நடத்தப்படும் மாணவரில்லங்களில் இவ்வகுப்பு மாணவர்கள், பிற்பட்டோருக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட வீதத்தில் சேர்க்கப்படுகின்றனர்.

### பொருளாதார முன்னேற்றம்

**விவசாயம்:** நல்ல முறையில் விவசாயம் செய்வதற்காகப் புதுக்கிணறுகள் தோண்டவோ அல்லது பழைய கிணறுகளை ஆழப்படுத்தவோ, கிணறு ஒன்றுக்கு ரூ. 2,500 வழங்கப்படுகிறது. 1976-77-ல் 40 பேர் பயனடைய ரூ. 1 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கைத்தொழில்:—** விவசாயத்திற்கான உதவி தவிர, இம்மக்களைக் கைத்தொழிலிலும் ஊக்குவிக்க, கூட்டுறவுச் சங்கங்களும், தொழிற் பயிற்சிக் கூடங்களும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலிருந்தே திறக்கப்பட்டு நடைபெறுகின்றன. அவைகளில் இன்றும் தொடர்ந்து பயிற்சி அளிக்கும் நிலையங்களாக உள்ளவை:

1. மதுரை மாவட்டம், செக்கானூரணியில் உள்ள பொதுப் பொறியியல் பட்டறை.
2. இராமநாதபுர மாவட்டம், முதுகுளத்தூரில் உள்ள பொதுப் பொறியியல் பட்டறை.
3. திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூரில் உள்ள பொதுப் பொறியியல் பட்டறை.
4. திருநெல்வேலி, பெருங்குளத்தில் உள்ள தையல் ரெடிமேட் உடை தயாரிக்கும் நிலையம்.
5. தென்னார்க்காடு மாவட்டம் அஜிஸ் நகரில் உள்ள கைத்தறி நிலையம்.
6. தென்னார்க்காடு மாவட்டம் அஜிஸ் நகரில் உள்ள தச்சுப்பட்டறை.
7. தர்மபுரி மாவட்டம் சாமியாபுரத்தில் உள்ள மூங்கில் பயிற்சி நிலையம்.
8. மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் உள்ள தையல் பூ வேலை பயிற்சி நிலையம்.

மேற்கண்ட பயிற்சி நிலையங்களை நடத்த 1976-77-ல் ரூ. 2.92 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### வீடுகள் கட்டுதல்

வீடு ஒன்று ரூ. 1,200 வீதம் (ரூ. 900 மானியம், ரூ. 300 கடன், குற்றப் பரம்பரைப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டோருக்காக வீடுகள் கட்டப்படுகின்றன. இத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது. இது தற்போது ரூ. 2,700 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 40 வீடுகள் கட்ட 1976-77-ல் ரூ. 1 இலட்சம் மானியமும் ரூ. 0.50 இலட்சம் கடனுகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### குடியிருப்புகள்

இம்மக்களைச் சார்ந்த சில பிரிவுகளுக்கு கீழே கண்ட இடங்களில் குடியிருப்புகள் உள்ளன.

(1) சென்னை நகரில் உள்ள பிரிஸ்லி நகர்.

(2) தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள அஜிஸ்நகர்.

(3) செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள பம்மல் செட்டில்மெண்டு.

**பிரிஸ்லி நகர்:** சென்னை, பெரம்பூரில் 'பி. அண்ட் சி' மில்லுக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் 1,500 பேர் உள்ளனர். இவர்களுக்கு 109 வீடுகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. இங்கு சென்னை மாநகராட்சி, பள்ளி ஒன்றை நடத்துகிறது. இங்கு நூலகம் ஒன்றும் உள்ளது. அதற்கு வருடாவருடம் ரூ. 200 இத்துறையால் வழங்கப்படுகிறது.

**அஜிஸ்நகர் செட்டில்மெண்டு:—** 1911-ல் தென்னார்க்காடு மாவட்ட ஆட்சியாளராக இருந்த திரு. அஜீஸ்சதீன் சாயபு அவர்கள் நெய்வேலிக்கருகாமையில் உள்ள ஊமங்கலத்தில், குற்றங்கள் புரிந்ததாக வேப்பூரைச் சார்ந்த ஆதி திராவிட மக்களைக் கொணர்ந்து குடியமர்த்தினர். இது வட்டாட்சியர் அளவில் உள்ள மேலாளர் ஒருவரால் பராமரிக்கப்படுகிறது.

இங்கு 400 குடும்பங்கள் உள்ளன. மக்கட்தொகை, 2351 அரசினரால் கட்டப்பட்ட 344 வீடுகளில் வசிக்கின்றனர். அரசு மருத்துவமனை ஒன்றும் உள்ளது.

இங்கு இத்துறையால் ஒரு உயர்நிலைப்பள்ளியும், ஒரு துவக்கப்பள்ளியும் நடத்தப் பெறுகின்றன. இங்குள்ள மக்களின் முக்கியத் தொழில் விவசாயம். இவை தவிர 152 பேர் நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தில் வேலை பார்க்கின்றனர். ஒரு கைத்தறிப் பட்டறையும் ஒரு தச்சுப்பட்டறையும் இங்கு உள்ளன.

இவைகள் யாவற்றையும் பராமரிக்க 1976-77-ல் ரூ. 2,50,800 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்து.

**பம்மல் செட்டில்மெண்டு:—** 1917-ல் தென்னார்க்காடு மாவட்டத்தைச் சார்ந்த குற்றப்பரம்பரையினர் சிலர், பம்மலில் கொண்டு வந்து குடியமர்த்தப்பட்டனர். அவர்கள் தற்பொழுது 140 குடும்பங்களாக உள்ளனர். 140 குடும்பங்களில் 40 குடும்பத்தினர் விவசாயத்திலும் ஏனையோர் சுற்றுப்புறத்திலுள்ள தொழிற்சாலைகளிலும் வேலை பார்க்கின்றனர்.

## நரிக்குறவர்களின் நலம்

நாடோடி மக்களாக வாழ்ந்த நரிக்குறவர்களை ஓரிடத்தில் தங்க வைத்து, வாழ்வளிப்பதற்காக அவர்களுக்கு வீட்டுமனைகளும், வீடுகளும், விவசாயத்திற்கான நிலங்களும் அளிக்கப்படுகின்றன. சென்ற 1975-76-ல் இவர்கள் தங்கள் தொழிலான மணிமாலை செய்தல், ஊசி செய்தல் முதலியவற்றிற்கு ரூ. 54,000 வட்டியில்லாக் கடனாக வழங்கப்பட்டது. 1976-77-ல் இதற்கென ரூ. 72,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இம்மக்கள் மேம்பாடடைய ஏனைய பொருளாதார, கைத்தொழில் வசதிகளும் அளிக்கப்படும்.

இத்துறையால் நடத்தப்படும் திட்டங்கள் தவிர, இந்திய மக்களின் நல்வாழ்வுச் சாசனமான பிரதமரின் 20 அம்சத் திட்டத்தின் மூலம் பிற்பட்ட வகுப்பினர் பெரும் பயன் அடைய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

பிரதமரின் 20 அம்சத் திட்டம், பொது மக்களுக்கென்றாலும் மக்கள் தொகையில் 53 சதம் உள்ள பிற்பட்ட மக்களுக்கே பெரிதும் முன்னேற்றமடையச் செய்யும், உணவு. உடைகள், அன்றாடம் பயன்படும் பொருள் ஆகியவற்றின் விலைகளைக் குறைத்ததால், ஏழை, பிற்பட்ட மக்களின் வாழ்வு வளம் பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. உச்ச வரம்பால் மீதமாகும் நிலங்கள், ஏழை, எளிய, பிற்பட்ட நிலமற்ற விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்க வழி பிறந்துள்ளது. வீடற்றோருக்கு வீட்டு வசதிகள் பெருகியுள்ளது. கடன்பட்ட நெஞ்சங்கள், கடன் நிவாரணச் சட்டத்தால் வாழ்வில் மறுமலர்ச்சி பெற்றுள்ளன. குறைந்த பட்ச விவசாயக் கூலி நிர்ணயிக்கப்பட்டதால் ஏழை, பிற்பட்ட, விவசாய, பாட்டாளி மக்கள் வாழ்வில் ஏற்றம் பெற்றுள்ளனர். நெசவைத் தொழிலாகக் கொண்டுள்ள குறிப்பிட்ட சில பிற்பட்ட மக்கள், அத்தொழிலுக்கு அளிக்கப்படும் ஊக்கத்தால் மேம்பாடடைந்து வருகின்றனர். கட்டுப்படுத்தப்பட்ட விலையில் அத்தியாவசிய உணவுப் பண்டங்கள், புத்தகங்கள், நோட்டுகள் வழங்கப்படுவதால் பிற்பட்ட மாணவர் சமூகம் மிகவும் பயன் பெற்றுள்ளது.

இம்முறைகளால், பிற்பட்ட வகுப்பு மக்கள் அரசு அளிக்கும் சலுகைகளை முழு அளவில் பெற்று, தங்களின் வாழ்க்கை முறைகளில் முன்னேற்றம் அடைந்து, கல்வி, பொருளாதார, சமுதாய நிலையில் உயர்வும் பெற்று, வளமான வாழ்க்கை நடத்த வழி வகுக்கப்பட்டுள்ளது.



## கதர்த் தொழிலை ஆதரியுங்கள்!

"மகாத்மா காந்தி, தனது பிறந்தநாளை சர்க்கா ஜெயந்தியாகக் கொண்டாடுமாறு கூறினார். கதர்த் தொழிலானது இலட்சக் கணக்கான மக்களுக்கு வேலையளிக்கிறது. எனவே நாம் காதியைப் பற்றி நினைக்கும் போது, வேலையற்றுள்ள ஏராளமான மக்களைப் பற்றி எண்ணிப் பார்க்க வேண்டியது அவசியமாகும். கதர் அணியும் பழக்கம் இல்லாதவர்கள் கூட படுக்கை விரிப்பு, ஜன்னல் திரை முதலியவற்றை வாங்குவதன் மூலம் கதர்த் தொழிலை ஆதரிக்க முன் வரவேண்டும்."

"காந்தியின் போதனைகளில் சத்தியமும், அகிம்சையும் இரு அடிப்படை இலட்சியங்களாகும். இவற்றைப் போதித்த காந்தியடிகள் பொருளாசை, பதுக்கல் ஆகியவற்றைப் பற்றியும், எச்சரித்தார். பதுக்கல், திருட்டைப் போன்றது என்றும் குறிப்பிட்டுள்ளார்."

"மகாத்மா, நிகழ்ச்சிகளின் போக்குகளிலிருந்து ஒதுங்கி நிற்கவில்லை. சரியோ, தவறோ, காந்தீயவாதி என்பவர் உலகைத் துறந்த சன்னியாசி என்ற எண்ணம் உள்ளது. இது தவறு. காந்தியடிகளின் பாதையை நாம் உண்மையாகப் பின்பற்றுகிறவர்கள் என்னும் முறையில், நாம் நாட்டு நடப்புகள் விசயத்தில் செயலற்ற போக்கை விட்டு, ஆக்கபூர்வமான முறையில் செயல்பட வேண்டும். குறிப்பாக, நாட்டின் சமூக, பொருளாதாரத் துறைகளில் வளர்சசி வேகத்தை விரைவுபடுத்த நமது பங்கினை அளித்திட வேண்டும்."

"காந்ீயவாதிகள் இன்னமும் தார்மீக பலத்தைப் பெற்றவர்களாகத் திகழ்கின்றனர். அவர்கள் 20 அம்சப் பொருளாதாரத் திட்டம், 12 அம்ச மதுவிலக்குத் திட்டம், குடும்பநலத் திட்டம், வரதட்சணை ஒழிப்பு இயக்கம் போன்றவைகளில் பங்கு கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்."

இவ்வாறு, இந்தியத் துணை ஜனாதிபதி திரு. ஜட்டி அவர்கள் சென்னை, கிண்டியிலுள்ள காந்தி மண்டபத்தில் காந்தியடிகள் பிறந்தநாள் விழாவினை 2.10.1976 நாளன்று துவக்கி வைத்து உரையாற்றியபோது குறிப்பிட்டார்.



# குடும்ப நலம் குறித்துக் காந்தியடிகள்....



பெரிய குடும்பம் இருப்பது சுபசூசகம். அதனால் அது விரும்பத்தக்கது என்ற மூட நம்பிக்கை இன்னும் இருந்து வருகிறது. சில சந்தர்ப்பங்களில் பிரஜோற்பத்தி செய்வது எப்படி ஒரு கடமையாகிறதோ, அதே மாதிரி வேறு சில சந்தர்ப்பங்களில் இதைக் கட்டுப்படுத்துவதும் ஒரு கடமையாகிறது.

* * * *

ஆரோக்கியத்திற்கான வழிகள் பல; அவை யாவும் முக்கியமானவையே. ஆனால், மற்றெல்லாவற்றையும்விட அவசியமானது பிரம்மச்சரியம். சுத்தமான காற்று, சுத்தமான தண்ணீர், நல்ல உணவு ஆகியவை நிச்சயம் ஆரோக்கியத்திற்கு உதவி செய்கின்றன. ஆனால், சம்பாதிக்கும் ஆரோக்யத்தையெல்லாம் செலவிட்டுக் கொண்டேயிருந்தால், நாம் எப்படி ஆரோக்கியம் உள்ளவர்களாக இருக்க முடியும்?

நாம் திரட்டும் பணத்தையெல்லாம் செலவழித்து விட்டால், ஓட்டாண்டியாகாமல் இருக்க முடியுமா? உண்மையான பிரம்மச்சரியத்தை அனுஷ்டித்தாலொழிய ஆண்களும், பெண்களும் வீரியமுள்ளவர்களாகவோ, வலிமை உள்ளவர்களாகவோ இருக்க முடியாது என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

பிரம்மச்சரியம் என்பதுதான் என்ன? ஆண்களும், பெண்களும், பரஸ்பரம் சரீர இச்சை உணர்வு அற்று இருப்பது என்பதே அதன் அர்த்தம். அதாவது, இருவரும் ஒருவரையொருவர் காம எண்ணத்துடன் தொடக் கூடாது ; கனவில் கூட அந்த எண்ணம் அவர்களுக்கு வரக் கூடாது. அவர்கள் ஒருவரை ஒருவர் பார்ப்பதிலும், காம நோக்கம் எதுவும் இருக்கலாகாது. கடவுள் நமக்கு அளித்துள்ள சக்தி மறைந்து கிடக்கிறது. கடுமையான சுயக் கட்டுப்பாட்டின் மூலம் அதை நாம் பத்திரப்படுத்தி, உடலுக்கு மட்டுமின்றி, மனதிற்கும் ஆத்மாவிற்கும் ஊக்கமும் வலிமையும் அளிக்கும் சக்தியாக அதை மாற்ற வேண்டும்.

* * * *

தங்களுடைய சரீர இச்சையைப் பூர்த்தி செய்து கொள்வதற்காகச் சேர்க்கையில் ஈடுபடுபவர்களே மிகப் பெரும்பான்மையாக இருக்கிறார்கள். இதன் பயனாக, வேண்டாத நிலையிலேயே அவர்களுக்குக் குழந்தைகள் பிறந்துவிடுகின்றன. சேர்க்கையினிடம் உள்ள வெறியில் அவர்கள் தம்முடைய செய்கைகளின் பலன்களைப் பற்றி நினைப்பதில்லை. இந்த விஷயத்தில் பெண்களை விட ஆண்கள் மீதுதான் அதிகம் குற்றம் சுமத்த வேண்டும். காம வெறியினால் கண் மறைக்கப்பட்ட ஆண், தன் மனைவி பலவீனமானவள் என்பதையும், அவள் கர்ப்பம் தரித்து, பிள்ளையைப் பெற்று வளர்க்கும் சக்தியில்லாதவள் என்பதையும் கூட மறந்துவிடுகிறான்.

* * * *

தாய்மை என்ற பெரும் பாரத்தை நமது பெண்களின் மீது சுமத்த நாம் தயங்கவில்லை. நமது குழந்தைகள் பலவீனமாகவும், ஆண்மையற்றும், மந்த புத்தி உடையவர்களாகவும் இருப்பதைப் பற்றிக்கூட நாம் கவலைப்படுவதில்லை. ஒவ்வொரு தடவையும் குழந்தை பிறக்கும் போது கடவுளுக்கு நன்றி செலுத்திவிட்டு, நமது செய்கைகளின் தீமைகளை மறைக்கப் பார்க்கிறோம். சோனிகளாகவும், காமாதுரர்களாகவும் முடவர்களாகவும், பயந்தவர்களாகவும் உள்ள குழந்தைகளைப் பெறுவது கடவுளின் கோபத்திற்கு அறிகுறியாகும் என்று நாம் கருத வேண்டாமா? சிறு பையன்களும், பெண்களும் குழந்தைகளைப் பெறுவது சந்தோஷப் படக்கூடிய விஷயமா? அது ஒரு சாபமல்லவா? ஓர் இளம் செடியில் காய் காய்த்துப் பழுக்க ஆரம்பிப்பது செடிக்குக் கெடுதல் செய்யும் என்பதற்காக அதை நாம் எப்படியும் தாமதப்படுத்த வேண்டுமென்று விரும்பவில்லையா? ஆனால் ஒரு சிறு பையனுக்கும், சிறு பெண்ணுக்கும் குழந்தை பிறந்தால், கடவுளுக்கு நன்றி செலுத்தித் துதி பாடுகிறோம்! இதை விடக் கொடூரமானது ஏதாவது இருக்க முடியுமா? இந்தியாவிலோ, இதர இடங்களிலோ, இம்மாதிரி ஆண்மையற்ற குழந்தைகள் கணக்கில் அடங்காமல் பெருகுவதால் உலகத்தைக் காப்பாற்றி விடப் போவதாக நினைக்கிறோமா? இந்த விஷயத்தில் நாம் மட்டமான மிருகங்களை விட மோசமாக இருக்கிறோம். ஏனெனில் ஈன்றெடுப்பதற்காக மட்டுமே தான் மிருகங்கள் ஒன்றோ[டு] ஒன்று சேர்கின்றன. கர்ப்ப[ம்] தரித்ததிலிருந்து, குழந்தை பா[ல்] குடியை மறக்கும் வரையி[ல்] ஆணும் பெண்ணும், தனித்திருக்[க] வேண்டுமென்பதை ஒரு புனி[த]மான கடமையாகக் கருத வேண்டும். ஆனால், அந்தப் புனிதமா[ன] கடமையைப் பொருட்படுத்த[ா]மலே, நாம் நாசகரமான இன்[ப] வாழ்க்கையை நடத்திக் கொண்டேயிருக்கிறோம். அநேகமாக[த்] தீராத வியாதியாக இருக்கும் இ[து] நமது மனத்தைச் சோர்வடைய செய்துவிடுவதோடு, கொஞ்[ச] காலம் பரிதாபகரமாக வாழ்க்[கை] நடத்திய பிறகு அகால மரண[ம்] அடையும்படியும் செய்துவி[டு]கிறது. திருமணத்தின் உண்மை[]யான நோக்கத்தை மணமான[]வர்கள் உணர வேண்டும்.

* * * *

உண்மையான பிரம்மசா[ரி] சரீர இச்சையுடன் போரா[ட] வேண்டியிராது; பிரஜோற்பத்[தி] ஆசையும் அவனுக்கு இரா[து.] அம்மாதிரி உபத்திரவங்களே அவனுக்குக் கிடையாது. உலக[ம்] முழுவதுமே அவனுக்கு ஓ[ர்] பெரிய குடும்பந்தான். அவனு[]டைய ஆசையெல்லாம் மனி[த] வர்க்கத்தின் துன்பத்தைத் தீர்[ப்]பதாகவே இருக்கும். பிரஜோ[ற்]பத்தி என்ற இச்சையே அவனுக்[கு] வேப்பங் காயாக இருக்கு[ம்.] மனித வர்க்கத்தின் துன்பம் எ[வ்]வளவு பிரம்மாண்டமானது எ[ன்]பதை உணர்ந்து விட்டவன் என்றும் இச்சையினால் தூண்ட[ப்] படமாட்டான். தன்னுள் இரு[க்]கும் சக்தி ஊற்று இயற்கைய[ா]கவே அவனுக்குத் தெரிந்திரு[க்]கும். அதை அசுத்தப்படுத்தாம[ல்] காப்பதற்கு அவன் என்று[ம்] முயல்வான். அவனுடை[ய] எளிமை நிறைந்த பலம் உலக[த்]தின் மதிப்பைப் பெறும். செ[ங்]கோல் பிடித்த மன்னனை விட அவனுக்கு அதிகச் செல்வாக்[கு] இருக்கும்.

ஆதாரம்: மகாத்மா காந்தி நூல்கள் தொகுப்பு (4).

# அஞ்சலக வங்கியின்
# மாபெரும் பரிசுத் திட்டம்

ஆண்டுக்கு இருமுறை

குலுக்கல்கள் ஜனவரியிலும் ஜூலையிலும் நடைபெறும்

ரூ. 20½ இலட்சத்திற்கு
11,116 பரிசுகள்

ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட 11,116 பரிசுகள் உண்டு.

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. | 1,00,000 |
| 5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50,000 |
| 10 மூன்றும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 20,000 |
| 100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 5,000 |
| 1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 500 |
| 10,000 ஆரும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50 |

ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு. பரிசு பெற வாய்ப்புண்டு.

உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசுபெற்றவர்க்கும், பெருதவர்க்கும் அளிக்கப்படும்.

விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**இயக்குநர்,**
தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,
சென்னை-600 002.




# தமிழ்நாட்டில் குடும்ப நலத் திட்டம்


—ஆர். வி. சுப்பிரமணியன்,
ஐ. ஏ. எஸ்.,
ஆளுநர் ஆலோசகர்,
தமிழ்நாடு அரசு.


குடும்ப நலத் திட்டம், தேசிய கண்ணோட்டத்தில் ஒரு முக்கியத் துவத்தைப் பெற்றுள்ளது. இந்திய அரசும், இத்திட்டத்திற்கு முதன்மை இடம் அளித்துள்ளது. தேசியத் திட்டத்துடன் இணைந்திருக்கும் குடும்ப நலத் திட்டத்தின் அடிப்படை பொருத்தத்தினை தமிழ்நாடுதான், முதலில் கண்டு கொண்டது. அத்துடன் மக்கள் தொகையினைக் கட்டுப்படுத்தும் வகையில் குடும்பநல அறுவைச் சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டது.

முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலிருந்தே இத்திட்டம் தமிழ்நாட்டில் நடைமுறையிலிருந்து வருகிறது. பின்னர் இத்திட்டம் நாடு பூராவிலும் வட்டார அளவில் விரிவாக்கப் பட்டது. அடைந்த வெற்றிகளும், பாராட்டுதலுக்குரிய தாகும்.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், ஆராய்ச்சியுடன் கூடிய செயல் திட்டம் உருவாக்கப்பட்டு, மக்களின் உபயோகத்திற்காக கருத்தடை சாதனங்கள் அதிகார பூர்வமாகச் சிபாரிசு செய்யப்பட்டன. குடும்பநல ஆலோசனைக் குழுவுடன் கூடிய ஒரு மைய நிலையம், மத்திய அளவில் நிறுவப்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், பயிற்சி வகுப்பு நடத்துதல், ஊழியர்களைப்பயிற்றுவித்தல், கருத்துக்களை உருவாக்கும் மக்கள் தலைவர்களை ஈடுபடுத்துதல், கல்வி விளக்கப் பிரசுரங்களைத் தயார் செய்து வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. அரசினர் மருத்துவமனைகளில், 15 நகர்ப்புற குடும்பநல நிலையங்களும், 83 கிராம குடும்பநல நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டன.

மூன்றும் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், பிறப்பு விகிதத்தை 1,000-க்கு 25 என, அடுத்து வரும் பத்தாண்டுக் காலத்தில் குறைப்பதற்கு, ஒரு நீண்ட கால குறிக்கோள் வரையறுக்கப்பட்டது.

## தேசிய விருதுகள்

நான்காம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், குடும்ப நலத் திட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அதிக நெருக்கமான பகுதிகளில் குடும்ப நலத் திட்டத்தைத் தீவிரப்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. 1961—62, 1962—63, 1965—66, 1966—67, 1074—75-ல் குடும்ப நலத் திட்டத்தைச் சிறப்பான முறையில் நிறைவேற்றியதற்கான தேசிய விருதுகள் தமிழ்நாட்டிற்கு அளிக்கப்பட்டன.

சிறு குடும்ப நெறி உணர்வினை ஏற்றுக்கொள்ளும் வகையில் மக்களுடைய எண்ணம் மற்றும் பழக்க வழக்கங்களில் ஒரு மனமாற்றத்தை ஏற்படுத்துவதே, குடும்பநல மக்கள் கல்வித் திட்டத்தின் குறிக்கோளாகும். சிறு குடும்ப நெறி உணர்வினை தீவிரமாக பிரச்சாரப் படுத்துவதன் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளது இத்திட்ட அத்துடன், படக் காட் வானொலி மற்றும் பத்திரி மூலம் செய்யப்படும் விளக் நம் மக்களில் 25 சதவிகிதத்தி ருக்கே சேர முடியும். என இருக்கக் கூடிய வசதிகள் அனை தையும் பயன்படுத்தி, மக்களி எழுத்தறிவின்மை என்னும் தன யினை உடைத்தெறியும் வகைய கிடைக்கும் தகவல் விளக் துறைகள் மூலம், இத்திட்ட செயல்பட்டு வருகின்றது.

## ஒருங்கிணைந்த செயல் மு

மக்களிடையே நிலவி வ பாரம்பரிய கலைகள், வழி யாக வந்துள்ள நாடகம், நிகழ்ச்சிகள், சுவர் விளம்பர தட்டி விளம்பரம் போன்ற கள் மற்றும், நிலையானவானொ படக்காட்சி போன்றவை ஆகிய அனைத்தின் மூலமும் ஒ கிணைந்த கல்வி விளக்கப் ப யினை குடும்பநல பிரச்சாரத் தி டம் செயல்படுத்தி வருகின்ற. மக்களை விழிப்புறச் செய் மக்கள் கல்வி விளக்கப் பணியு தனி நபரை ஊக்குவிக்கும்கருத் விளக்கப்பணியும்ஒன்றுக்கொன் இணைந்து செயல்பட்டு வருகி றது.

தேசிய குடும்பநலத் திட்ட இ வார விழா நாடு பூராவிலு கொண்டாடப்பட்டு வருகின்ற 1976 ஆகஸ்ட் 28-ஆம் தேதி லிருந்து ஊக்குவிப்புப் பணி

தொடர்ந்து செப்டம்பர் 16-லிருந்து 30 வரை இரு வார விழாவும் நடைபெற்றது. அவ்வியக்கத்தின் ஒரு பகுதியாக, பிரபல சினிமா நடிக, நடிகையர், பின்னணிப் பாடகர்கள், இசையமைப்பாளர்கள், பேச்சாளர்கள், கவிஞர்கள், ஆகியோரை ஈடுபடுத்தி குடும்பநல கவியரங்கம், பட்டி மன்றம் மற்றும் இசைக்கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பெற்று வருகின்றன. அது போன்றே, நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் கூட்டங்கள், குழு விவாதங்கள், படக்காட்சிகள், கலை நிகழ்ச்சிகள், நாடகங்கள் முதலியன நடத்தப்பெற்று, மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, அவர்கள் ஏதாவது ஒரு குடும்பநல முறையினை ஏற்கும்படி ஊக்குவிக்கப்படுகின்றனர்.

## தமிழ்நாட்டின் இலக்கு

1975—76-ல் தமிழ்நாட்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 1,11,300 அறுவைச் சிகிச்சையினையும் மீறி, 2,92,060 அறுவை சிகிச்சைகள் செய்து முடிக்கப்பட்டன. நடப்பு ஆண்டின் இலக்காக, 5,00,000 அறுவைச் சிகிச்சைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அறுவைச் சிகிச்சை ஏற்றுக் கொண்டவர்களின் மத வாரியான விகிதாசாரமும், மொத்த மக்கள் தொகையில் அவர் தம் விகிதாச்சாரமும் சற்றேறக்குறைய ஒன்றாகவே உள்ளது. குடும்பநலத் திட்டத்திற்கு மத அடிப்படையில் எவ்வித எதிர்ப்பும் இல்லை!

## மக்கள் திட்டமாக மாறி வருகிறது !

குடும்பநலத் திட்டத்தைத் தன்னால் இயன்ற அளவு செயல்படுத்தும் அதே நேரத்தில், தன்னியக்க நிறுவனங்களின் பங்கினையும் தமிழ் நாடு அரசு கவனிக்கத் தவறவில்லை. குடும்பநலத் திட்டத்தை ஏற்று நடத்த, அவர்களுக்குத் தேவையான உதவியும் அளிக்கப்படுகின்றது. இது ஒரு மக்கள் திட்டமாக-இயக்கமாக—மாறியதன் காரணமாக, 'ரோட்டரி', 'ரவுண்ட் டேபிள்' போன்ற தன்னியக்க நிறுவனங்கள் அரசின் ஒத்துழைப்புடன் முனைப்பு இயக்கம் நடத்தின. அரிமா சங்கம், இந்த ஆண்டினை குடும்ப நல ஆண்டாகத் தேர்ந்தெடுத்து உள்ளது. அவைகளுக்கும் தேவையான உதவி அளிக்கப்படுகின்றது. அது போலவே, சென்னை குடும்ப நல அமைப்பு, 7 குடும்பநலத் திரைப்படங்களைத் தயாரித்துள்ளது. முதற் கட்டமாக, அவைகள் அனைத்தும், சென்னை நகர திரையரங்குகளில் வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

## வெற்றி பெறுவோம் !

தேசிய மக்கள் தொகை கொள்கை அறிவிக்கப்பட்டபின், மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியும், தீவிரத் தன்மையும் ஏற்பட்டுள்ளது. அது மட்டுமன்றி, நீண்ட நாளையத் தேவையினையும் பூர்த்தி செய்துள்ளது. திருமண வயதினை உயர்த்துதல், அறுவைச் சிகிச்சையினை ஏற்போர்க்கு ஈட்டுத் தொகையினை உயர்த்துதல், அனைத்து அரசு துறைகளையும் இத்தேசிய திட்டத்தில் ஈடுபடுத்துதல் போன்றவைகள் காரணமாய், இத்திட்டம் வெற்றியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஒத்துழைப்பு நல்கிடுவீர் !

கட்டுக்கோப்பான அமைப்பு நிறுவனங்கள், ஆசிரியர்கள், மாதர் சங்கம் மற்றும் தன்னியக்க நிறுவனங்கள் ஆகியவற்றினை இத்திட்டத்தில் ஈடுபடுத்துவதன் காரணமாய், இலக்கினை அடைந்திடல் முடியும். இப்பிரச்சினையை ஒரு சவாலாகக் கொண்டு, ஒவ்வொருவரும் பொறுப்புணர்ச்சியுடன், இத்தேசியத் திட்டம் மக்கள் திட்டமாகச் செயல்பட, அவரவர் பங்குப் பணியினை செய்திடல் வேண்டும். எனவே, தொழிலதிபர்கள், மக்கட் பற்றுடையோர், சமூக நல ஊழியர்கள், தன்னியக்க நிறுவனங்கள், மற்றும் இத்திட்டத்தின்பால் ஆர்வம் கொண்டோர், அரசின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருந்து தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இப்பிரச்சினையைச் சமாளிப்பதில் ஒத்துழைப்பு நல்கி உதவிட வேண்டும் என அனைவரையும் வேண்டுகிறேன்.



# தரமான பால் தருவதே தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் இலட்சியம்!

அதிகாலை!

பால் டெப்போவை நோக்கி அவசர அவசரமாகச் செல்கிறோம்.

நாம் தூங்கி எழுவதற்குமுன், அங்கே குளிர்ந்த பால் தயாராக இருக்கின்றது!

கால்கடுக்கக் காத்திராமல், சண்டை சச்சரவு ஏதுமில்லாமல் சுலபமாகப் பால் வாங்க முடிகிறது இப்போது!

எத்தனைப் பேருக்கு வேண்டுமானாலும் பால் தாராளமாக வழங்கப்படுகிறது. 'பால் இல்லை!' என்ற பேச்சுக்கே இடமில்லாமல் நகரமக்களின் பால் தேவையை நிறைவேற்றி வைக்கப்படுகிறது.

சுவையான, தரமான, சிறிதும் கலப்படமில்லாத பால் கிடைக்கிறது என்ற மனநிறைவும் நமக்கு இருக்கிறது.

அன்றாட வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்றாக விளங்குவது பால். அந்தப் பாலை எங்கேயாவது வாங்கிக் கொள்கிறோம் என்றாலும், நல்ல தரமான பால் வாங்க முடிகிறதா என்பதுதான் பிரச்சினை. அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கிறது ஒரு காமதேனு! அதுதான் 'தமிழ்நாடு பால்வள நிறுவனம்'.

இந்நிறுவனம் என்ன செய்கிறது? அதன் பணிகள் எப்படியெல்லாம் விரிந்து பரந்து செயலாற்றுகின்றன என்பதைப் பற்றித் தெரிந்துகொள்ள நமக்கெல்லாம் ஆர்வம் எழுவது இயல்புதானே?

## தமிழ்நாடு பால்வள நிறுவனம்

தமிழ்நாடு பால்வள நிறுவனம் செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, தர்மபுரி, சேலம், கோயம்புத்தூர், நீலகிரி, மதுரை, ஆகிய மாவட்டங்களிலிருந்து பால் கொள்முதல் செய்கிறது. பிறகு பாலைக் குளிரூட்டி, மதுரை, மாதவரம் ஆகிய பால் பண்ணைகளில் பதப்படுத்தி, நிலைப்படுத்தி சென்னை, மதுரை, ஈரோடு ஆகிய நகரங்களில் விநியோகம் செய்கிறது.

நிருவாக வசதிக்காகத் தமிழ் நாடு பால்வள நிறுவனம் கீழ்க்கண்ட ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை:

| மண்டலம் | அடங்கியுள்ள மாவட்டங்கள் |
|---|---|
| சென்னை | செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு |
| வேலூர் | வட ஆர்க்காடு, தர்மபுரி |
| ஈரோடு | கோயம்புத்தூர், சேலம் |
| உதகை | நீலகிரி |
| மதுரை | மதுரை |

தமிழ்நாடு பால்வள நிறுவன பால் பண்ணைகள் நிறுவுவதற்கு தொழில் நுட்ப ஆலோசனையுப் தேசிய மயமாக்கப்பட்ட வங் களிலிருந்து கடன் வசதி பெ வும் வழி வகை செய்து தருகிறத

பால் பண்ணை ஆரம்பிக்க ஆர் முள்ளவர்கள்; சம்பந்தப்பட் மண்டல மேலாளரையோ பொது மேலாளரையோ சந்தி தால், மேற்படி அலுவலர்க தகுந்த ஆலோசனைகளை வழங் வார்கள்.

## தமிழ்நாடு பல்வள நிறுவனத்தி நற்பணிகள்

தமிழ்நாடு பால்வள நிறுவன தின் பால் சேகரிப்புக் குழுக்க ( Procurement teams ) த

கூட்டுறவுச் சங்கத்தில் பால் வழங்க கியூவில் நிற்கும் மக்கள்.



போது தமிழ்நாட்டில் கள்ளக்குறிச்சி, ஆரூர், குடியாத்தம், நாமக்கல், கோயம்புத்தூர், பழனி, போடிநாயக்கனூர், சங்கரன் கோயில் ஆகிய பகுதிகளிலும், தேசிய பால்வள வாரியம் ஈரோடு பகுதியிலும் இயங்கி வருகின்றன.

இக்குழுக்கள் கறவை மாடுகள் அதிகமுள்ள இடங்களிலும், அதிக அளவில் பால் உற்பத்தியாகும் இடங்களிலும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்களில் பால் உற்பத்தியாளர்கள் கொண்டு வரும் பாலில் இருந்து ஒவ்வொரு நாளும் காலையிலும், மாலையிலும் தனித்தனியாக மாதிரிகள் எடுக்கப்படுகின்றன. பிறகு, பாலின் கொழுப்புச்சத்து சங்கத்திலேயே பரிசோதனை செய்யப்பட்டு அதன் அடிப்படையில் தனித்தனியே, பால் உற்பத்தியாளர்கள் கொண்டு வரும் பாலுக்கு, விலை நிர்ணயிக்கப்படுகிறது.

அதிகக் கொழுப்புச் சத்துள்ள பாலுக்கு அதிகப்பணம் கொடுக்கப்படுகிறது. மேற்படி சங்கங்கள் பால் உற்பத்தியாளர்களாலேயே நிருவாகம் செய்யப்படுகிறது. பால் உற்பத்தியாளர்களுக்கு ஆண்டு முழுவதும் நியாயமான விலை கிடைப்பதுடன், ஆண்டு இறுதியில் ஒவ்வொருவரும் சங்கத்திற்கும்-அச்சங்கம் கொடுத்த பாலின் அளவிற்கேற்ப ஊக்கத் தொகையும் வழங்கப்படுகிறது.

இந்த நிறுவனம் சென்னையில் நாளொன்றுக்கு 1 இலட்சத்து 50 ஆயிரம் லிட்டரும், மதுரையில் 34 ஆயிரம் லிட்டரும் விற்பனை செய்கின்றது.

ஈரோட்டிலுள்ள பால்பண்ணை 50 ஆயிரம் லிட்டரிலிருந்து 1 இலட்சம் லிட்டருக்குத் தனது உற்பத்தியை அதிகரித்துள்ளது.

வேலூரிலுள்ள குளிர்பதனப்படுத்தும் பிரிவு தனது ஆற்றலை 7 ஆயிரம் லிட்டரிலிருந்து, 30 ஆயிரம் லிட்டருக்கு உயர்த்தியுள்ளது.

மாதவரம் பால்பண்ணை, தனது உற்பத்தியை 50 ஆயிரம் லிட்டரிலிருந்து. 1 இலட்சத்து 25 ஆயிரம் லிட்டருக்கு உயர்த்தியுள்ளது.

அம்பத்தூரில் புதிதாகத் துவக்கப்பட்ட பால்பண்ணை 2 இலட்சம் லிட்டர் பாலை உற்பத்தி செய்கிறது.

### பால் வழித் தடங்கள்

இந் நிறுவனம் மேற்படி சங்கத்தில் உற்பத்தியாகும் பாலை



புட்டிகளில் பால் நிரப்பும் இயந்திரம்.

காலையிலும், மாலையிலும் பால் வழித் தடங்கள் (Milk Routes) மூலம் ஆண்டு முழுவதும் எந்த அளவானாலும்-சேகரித்து குளிரூட்டும் நிலையங்களுக்கு எடுத்துச் செல்கிறது. அங்கு பாலின் தரம் ஆய்வு செய்யப்படுகிறது.

இந் நிறுவனம் பாலுக்கு நல்ல விலை தருவதோடு, உற்பத்தியாளர்களின் எருமை அல்லது பசு ஆகியவைகளின் பால் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்குத் தேவையான பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்தி வருகின்றது.

### கால்நடை மருத்துவ வழித் தடங்கள்

கால்நடை மருத்துவ வசதியை பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கே எடுத்துச் செல்லும் நோக்கத்துடன், அறுவைச் சிகிச்சைக் கருவிகள், செயற்கை முறை இன வளர்ச்சி செய்ய விந்து, குடற்புழு மருந்துகளுடன் காரில் அனுப்பும், கால்நடை மருத்துவ வழித் தடங்களை இந் நிறுவனம் நடத்தி வருகின்றது. கால்நடை மருத்துவர் குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட சங்கங்களுக்குச் சென்று மருத்துவ வசதியும், கால்நடை வளர்ப்புப் பணிகளும் செய்து வருகிறார்; அப்போது பால் உற்பத்தியாளர்கள் நோய்வாய்ப்பட்ட தத்தம் கால்நடைகளுக்கு இலவச மருத்துவம் பெறுகின்றனர். மலட்டுத் தன்மை கொண்ட கால்நடைகளையும் மருத்துவர் கவனித்து ஆவன செய்கிறார். பால் உற்பத்திப் பெருக்கம், கன்று வளர்ப்பு பற்றிய ஆலோசனைகளையும் அவர் வழங்குகிறார்.

### செயற்கை முறை இன வளர்ச்சி நிலையங்கள்

கால்நடைகளின் இன வளர்ச்சியையும் பால் உற்பத்தியையும், குறிக்கோளாகக் கொண்டு செயற்கை முறை கருத்தரிப்பு நிலையங்களை தமிழ்நாடு பால்வள நிறுவனம் நடத்தி வருகின்றது. இவை கால்நடை மருத்துவ அலுவலர்களின் பொறுப்பில் அயன்புரம், ஆம்பூர், கிருஷ்ணகிரி, சேலம், கோயம்புத்தூர், கொடைக்கானல், திண்டுக்கல், பழனி, ஊட்டி ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

இந்நிலையங்களிலிருந்து அதிகப் பால் தரவல்ல உற்பத்தித் திறன் படைத்த கன்றுகளை உருவாக்கிட 'ரெட்டேன்' (Red Dane), ஜெர்சி (Jersey), ஃபிரீஷியன் ( Fresian ), முர்ரா ( Murrah ) ஆகிய பொலி காளைகளின் விந்து ஒவ்வொரு நாளும் பால் வண்டிகளில் பால் வழங்கும் சங்கங்களுக்குக் குளிர் பதனக் குடுவைகளில் அனுப்பப்பட்டு வருகிறது. பயிற்சி பெற்ற கிராம நல ஊழியர், சங்கச் செயலர் ஆகியோர் சினைப் பருவத்தில் இருக்கும் கால்நடைகளுக்கு இவ்விந்தினை செயற்கை முறைக் கருவூட்டல் செய்வார்.

இன்றைய கன்று நாளைய பசு அல்லது எருமை என்ற அடிப்படையில் ரெட்டேன், ஜெர்சி, பிரீஷியன், முர்ரா ஆகிய உயரின காளைகளுக்குப் பிறந்த உயர்ரக கிடேரிக் கன்றுகளைப் பால் உற்பத்தியாளர்கள் நன்கு பேணி வளர்க்க மானியமாக மாதம் ரூ. 10 பெறுமானமுள்ள கன்றுத் தீவனம் பன்னிரண்டு மாதங்களுக்கு வழங்கப்படுகிறது.

செயற்கை முறையில் இந்நிறுவனத்தின் உயர் இன பொலிகாளைகளுக்குப் பிறந்த, அதிகப் பால் தரவல்ல கிடேரிக் கன்றுகளை உற்பத்தியாளர்கள் சீரிய முறையில் வளர்த்து வெகுவிரைவில் இக்கன்றுகள் மூலம் பால் உற்பத்தியைப் பெருக்குவதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

இந்நிறுவனம் பால் உற்பத்தியாளர்களின் கால் நடைகளுக்காகவே விஞ்ஞான முறைப்படி செவ்வனே சமன் செய்யப்பட்ட எல்லாச் சத்துக்களையும் கொண்ட கால்நடைத் தீவனத்தைத் தயாரித்து, நியாய விலையில் இலாப நோக்கமின்றி உற்பத்தியாளர்களுக்குச் சங்கங்கள் மூலம் விநியோகிக்கிறது.

### பச்சைப்புல் வளர்ச்சி

அதிக அளவில் பால் தரவல்ல உயரின பசுக்களின் பால் உற்பத்திக்கும் இன வளர்ச்சிக்கும் பசும்புல் மிக அவசியமன்றோ? பால் உற்பத்தியாளர்கள் தங்கள் நிலங்களிலேயே புல் பயிரிட்டு, கறவை மாடுகளுக்குப் புல்லை தீவனமாகக் கொடுத்தால், தீவனச் செலவைப் பெருமளவு குறைக்கலாம். புல்லை அதிக அளவில் கொடுத்தால் கலப்புத் தீவன ( Concentrates ) அளவைக் குறைத்துக் கொள்ளலாம். ஏறத்தாழ 15 அடி உயரம் வளரும் என். பி. 21 ( Napier Bajra-21 ) இராட்சச புல் நாற்றுக்களைப் பால் உற்பத்தியாளர்களுக்கு இந்நிறுவனம் விநியோகம் செய்து வருகிறது.

இப்புல்லை ஏறத்தாழ கரும்புப் பயிர் செய்வது போல் பயிர் செய்ய வேண்டும். இப் புல்லின் ஒரு நாற்று 5 கிலோ பசுந்தீவனத்தைத் தரவல்லது. இப்புல் ஒரு ஆண்டில் ஏக்கருக்கு 200 டன் பசுந்தீவனம் தருகின்றது. இப்புல்லை ஒரு ஏக்கரில் பயிரிட்டால், 12 முதல் 15 கறவை மாடுகளுக்குத் தேவையான பசுந்தீவனம் கிடைக்கும். ஒரு ஏக்கரில் புல் வளர்த்தால் தமிழ்நாடு பால்வள நிறுவனம் ரூ. 200 மானியமாக வழங்கி வருகிறது. அதோடு ஒரு ஏக்கரில் புல் வளர்த்து மற்ற விவசாயிகளுக்குப் புல் பயிரிடுவதற்காக 1,00,000 நாற்றுகளை விற்றால் ஏக்கருக்கு



பிளாஸ்டிக் பைகளில் பால் நிரப்பும் இயந்திரம்.

ரூ. 500 மானியமாக வழங்கி வருகிறது. நாற்றை விற்பதில் வரும் வருமானம் புல் பயிரிட்ட உற்பத்தியாளருக்கே சொந்தமாகிறது.

### அவசரச் சிகிச்சை

திடீரென நோய்வாய்ப்படும் பால் உற்பத்தியாளர்களின் கால்நடைகளுக்கு அவசரச் சிகிச்சை அளிக்கும் பொருட்டு, இந்நிறுவனம் அவசரச் சிகிச்சை கால்நடை மருத்துவப் பிரிவுகளை நடத்தி வருகிறது.

கால்நடை நோய்வாய்ப்பட்டிருப்பது குறித்து அவசரச் சிகிச்சைப் பிரிவு ( Emergency Unit ) இயங்கும் தலைமையகத்துக்குத் தொலைபேசி மூலமாகத் தகவல் தெரிவித்தால் அல்லது பால் சேகரிக்கும் 'வேன்' மூலம் தகவல் தெரிவித்தால் கால்நடை மருத்துவர் தேவையான மருந்துகளுடன் விரைவில் வந்து சிகிச்சை அளிப்பார். இதற்காக ஒரு சிறு தொகையே கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

### கால்நடைக் காப்புத் திட்டம்

கால்நடை பராமரிப்பில் தேசிய காப்பீட்டு நிறுவனம், தமிழ்நாடு பால்வள நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து செயல்படுகிறது.

காப்பீட்டு வசதி (இன்சூரன்ஸ்) சாதாரண மக்களுக்குக் கிடைப்பதற்காகவும், எல்லாக் கிராம மக்களுக்கும் கிடைப்பதற்காகவும் தான் காப்பீட்டு நிறுவனங்கள் அரசுடைமையாக்கப்பட்டன. காப்பீட்டு நிறுவனங்கள் மேற்கூறிய குறிக்கோளை அடைவதற்காகப் பல்வேறு காப்பீட்டுத் திட்டங்களை வகுத்துள்ளது. அத்தகைய காப்பீட்டுத் திட்டங்களிலே ஆவின காப்பீட்டுத் திட்டமும் ஒன்றாகும்.

எதிர்பாராத இழப்பு அல்லது சேதம் ஏற்படும்போது பாதுகாப்பளிப்பதே தாய் நிறுவனமான பொதுக்காப்பீட்டு நிறுவனத்தின் நோக்கமாகும். அதாவது, கால்நடை எதிர்பாராமல் இறக்கும் போது, அல்லது சேதம் ஏற்படும் பொழுது பாதுகாப்பளிப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

மாடு எதிர்பாராது இறக்கும் போது, ஈட்டுறுதி நிறுவனம் இழப்பை ஏற்றுக்கொண்டு பொருளுதவி புரிவதால், விவசாயி இறந்த மாட்டிற்குப் பதில் வேறு மாடு வாங்க முடிகிறது. ஆகவே, காப்பீட்டுத் திட்டம் என்பது எல்லாப் பால் வளர்ச்சித் திட்டங்களிலும் ஒரு முக்கிய அம்சமாக விளங்குகிறது.

கடந்த ஆண்டு பொதுக் காப்பீட்டு நிறுவனம் 65,000 கால்நடைகளைக் காப்பீடு செய்துள்ளது. இவ்வாண்டு மேலும் மேலும் விவசாயப் பெருங்குடி மக்கள் தங்கள் கால்நடைகளைக் காப்பீடு செய்துகொள்ள முன் வருவதால் நடப்பு ஆண்டில் 1 இலட்சம் கால்நடைகளுக்கு மேல் காப்பீடு செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

நோயாலோ, பாம்புக்கடியாலோ அல்லது தீ மற்றும் பிற விபத்தினாலோ கால்நடைகள் இறக்க நேரிட்டாலும், கடுமையான காயங்கள் ஏற்பட்டு மருத்துவ ஆலோசனையின் பேரில் கட்டாயமாக உயிர் நீக்கம் செய்யப்படும் பொழுதோ ஆவினக் காப்பீட்டுத் திட்டம் அவைகளுக்கு ஈடு செய்கிறது. இனப் பெருக்கத்தில் தடங்கல், கன்று ஈனும் போது ஏற்படும் இழப்பு, பால் உற்பத்திக்கு வழியில்லாத நிரந்தர இயலாமைகளால் ஏற்படும் இழப்புக்களையும் காப்பீடு ஈடு செய்கிறது.

### பால் குளிரூட்டும் நிலையங்கள்

இந்நிறுவனம் தமிழகத்தின் பால் வளத்தைப் பெருக்க பற்பல திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறது. தருமபுரி, வட ஆர்க்காடு, மதுரை, சேலம், கோவை, செங்கை, தென் ஆர்க்காடு, நீலகிரி, இராமநாதபுரம், நெல்லை மாவட்டங்களில் திட்டங்கள் தீவிரமாகச் செயல்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

பல, பால் குளிரூட்டும் நிலையங்கள் ( Milk Chilling Centres )

றுவப்பட்டுள்ளன. கிராமப் றங்களில் உற்பத்தியாகும் பாலை ஸிளூர்வாசிகளுக்கு வேண்டிய ளவு போக எஞ்சியதை காலை லும், மாலையிலும் குறிப்பிட்ட நரங்களில் பால் வண்டிகளின் லம் சேகரிக்கப்படுகிறது. பிறகு ளிரூட்டும் நிலையத்திற்குக் காண்டு வரப்படுகிறது. குளி ட்டப்பட்ட பால் சென்னை, துரை நகர வினியோகத்திற் ாக அனுப்பி வைக்கப்படுகிறது.

### ரமான பாலுக்கு அதிக விலை

இந்நிறுவனத்தின் பால் சேக ப்புக்குழுக்கள் தருமபுரி, வட ஆர்க்காடு, சேலம், கோவை, சங்கற்பட்டு, தென்னார்க்காடு, லகிரி, மதுரை மாவட்டங்களில் ால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் ங்கங்களை அமைத்து, பாலுக்கு ல்ல விலை தருகிறது.

எனவே, 'சங்கத்திற்குத் தர ான பாலை வழங்கி மேலும் திக விலையைப் பெறுவீர்!' னப் பால் உற்பத்தியாளரை ழைக்கிறது. அதற்கான கார ங்களையும் அது கூறுகிறது:

1. காலை மாலை இருமுறை ாலின் தரம் சோதனை. 2. நேரில் ார்த்து சந்தேகம் இருப்பின் மறு றை பரிசோதனை செய்து காள்ள வாய்ப்பு. 3. வாரம் ரு முறை தவறாமல் பால் பணம் ட்டுவாடா. 4. இலவச கால் டை மருத்துவ வசதி. 5. கால் டைகளுக்குச் செயற்கை முறை ருவூட்டல் வசதி. 6. கலப்பின டாரிக் கன்றுகளுக்கு மாதம் ரூ. 0 மானியம். 7. அவசரக் காலத் ல் கால்நடைகளுக்கு உடனடி ாக மருத்துவ உதவி. 8. றைந்த விலையில் தரமான லப்புத் தீவனம். 9. உயர்ரகப் ல் வகைகள் வளர்க்க மானி ம். 10. கூட்டுறவு ஆண்டு டிவில் இலாபத்தில் பங்கு.

### ல்ல கறவை மாடுகளைத் தேர்ந் தெடுத்தல்

பால்பண்ணை வைப்பதில் கவ ிக்க வேண்டிய விதிமுறைகளை ம் தமிழ்நாடு பால்வள நிறு னம் வெளியிட்டுள்ளது. அதில் றப்பட்டுள்ளதாவது:

(1) ஜெர்சி கலப்பினப் பசுக்கள் மது நாட்டிலுள்ள தட்ப வெட்ப நிலைக்கு ஏற்றதாகவும், திக அளவு பால் தரத்தக்க ாகவும் உள்ளது. (2) அதிக ளவு பால் தரவல்ல வம்சா ழியை உடைய கலப்பினப் சுக்களைத் தேர்ந்தெடுக்க வேண் ம். (3) முதல் அல்லது இரண்



நடமாடும் பால் விற்பனை ஊர்தி.

டாவது ஈற்று பசுக்களைத் தேர்ந் தெடுத்தால், மேற்படி பசுக்கள் வரும் ஆண்டுகளில் பல கன்று களை ஈன்று வாங்குவோருக்கு அதிக இலாபத்தைப் பெற்றுத் தரும். (4) கன்று ஈன்று 1 மாதத் திற்குள் கறவை மாடுகளை வாங்கி ஞல், அதற்குப் பிறகு 9 மாதம் பாலைக் கொடுத்து மாடு வாங்கிய வருக்கு நல்ல இலாபம் கிடைக்க ஏதுவாகும். (5) கறவை மாடு வாங்கும்போது, அதனுடைய கன்று கலப்பினக் கிடேரிக் கன்ருக இருந்தால் தமிழ்நாடு பால்வள நிறுவனத்திடமிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ. 10 வீதம் 12 மாதங் களுக்கு மானியம் பெறுவதுடன், கிடாரிக் கன்றுகள் 30 மாதங் களில் கன்று ஈன்று பால் பெற ஏதுவாகும்.

---

**அஞ்சல் வழிப் படிப்புக்கு வானொலி மூலம் பயிற்சி**

மதுரைப் பல்கலைக் கழகத்தின் அஞ்சல் வழிப் படிப்புகளுக்கு உதவும் வகையில், சென்னை வானொலி மூலம் நடத்தப்படும் பயிற்சி வகுப்புக்களுக்கு நல்ல வரவேற்பு இருந்து வருகிறது. இந்த பயிற்சி வகுப்பு நிகழ்ச்சிகள் மூலம், 'பி. ஏ.', 'பி. காம்'., பட்டப் படிப்புக்கான வகுப்புகளில் உள்ள 14,000-க்கும் அதிகமான மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

---

சென்ட்ரல் இரயில் நிலையம், தலைமைச் செயலகம், எழிலகம், குறளகம், வடக்குக் கடற்கரைச் சாலை, அண்ணாசாலை முதலான இடங்களில் பால்வள நிறுவனத் தின் பால் நிலையம் ( Milk Bar ) அமைக்கப்பட்டுள்ளது. இங்கு சுவையூட்டிய தயிர், சூடான பால், பதப்படுத்திய குளிர்ந்த இனிய பால், மற்றும் வெண் ணெய், பால்கோவா முதலியன விற்கப்படுகின்றன. இங்கெல் லாம் மக்கள் திரளாக வரு வதைப் பார்க்கிறோம். தர மான பொருளுக்குக் கூட்டம் கூடுவது இயல்புதானே?

இவ்வாறு மக்களின் அன்றாடத் தேவையான தரமான பால் எங்கும் எல்லார்க்கும் குறித்த நேரத்தில் கிடைக்கின்ற வகை யில், நமக்கெல்லாம் பால்மற்றும் பால் பொருள்களை வழங்கும் தோழனாக விளங்குகிறது, தமிழ் நாடு பால்வள நிறுவனம் என்றால் அது மிகையல்ல!

—பி. வி. கிரி

# கறவை மாடுகளைப் பராமரிப்பீர்!



கறவை மாடுகளுக்குத் தகுந்த அளவு தரமான தீவனமிடுதல் வேண்டும். கறவை மாடுகளுக்கு அது தரும் பாலுக்கு ஏற்பக் கலப்புத் தீவனம் (Concentrate feed), பசுந் தீவனம், வைக் கோல் முதலியவைகளை அளித்தல் வேண்டும்.

உதாரணமாக, ஒரு நாளைக்கு 4 லிட்டர் பால் கொடுக்கும் மாட்டுக்கு, 2.5 கிலோ கலப்புத் தீவனம் கொடுத்தல் வேண்டும். 4 லிட்டருக்கு மேல், கொடுக்கும் ஒவ்வொரு 2.5 லிட்டர் பாலுக் கும் 1 கிலோ கலப்புத் தீவனம் அளித்தல் வேண்டும். நாள் தோறும் 25 முதல் 30 கிலோ வரை பசும் புல் அளித்தல் வேண்டும். வைக்கோல் 5 முதல் 10 கிலோ வரை அளித்தல் வேண்டும்.

பசுந் தீவனமாக N.B. 21 புல், ( Napier Bajra grass ), கம்பு புல் (Hybrid Napier), நேப்பியர் புல் ( Napier grass ), கினியா புல் ( Guniea .ᵒrass ), எருமைப் புல் ( Buffalo grass ), மக்காச் சோளப் பயிர் ( Fooder Maize), தட்டைப் பயிர் ( Cow pea ), காக்காச் சோளப் பயிர் (Fooder Sorghum), சணப்பை (Sunhemp) குதிரை மசால் (Lucerne) ஆகிய வைகளைக் கொடுக்கலாம்.

மேற்கண்ட பசுந்தீவனங்களில் இரண்டை கலப்புப் பயிராகச் செய்யலாம். உதாரணமாக (1) மக்காச் சோளப் பயிர், தட்டைப் பயிர் (2) 21 புல், தட்டை பயிர், (3) சணப்பை, நேப்பியர் ஆகியவைகளை கலப்புப் பயிராகச் செய்யலாம்.

கறவை மாடுகளுக்குத் தேவை யான சுத்தமான தண்ணீர் வேண்டியபோது கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

### இனப் பெருக்கம்

பால் பண்ணை இலாபகரமாக நடைபெற, இனவிருத்தியை (Breeding aspect) மிக முக்கிய மாக கவனிக்க வேண்டும். மாடு கன்று போட்ட தினத்திலிருந்து 60 முதல் 90 நாட்களுக்குள் மாடு சினைப் பருவத்திற்கு வரும்போது அல்லது சினைக்குக் கத்தும்போது (Heat period) இயற்கையாகப் பொலிக் காளையுடன் சேர்த்தோ அல்லது செயற்கை முறை கரு வூட்டல் மூலமோ சினைப்படுத்த வேண்டும்.

கறவை மாடு 21 நாட்களுக்கு ஒரு முறைதான் சினைப் பருவத் திற்கு வருவதால், ஒரு முறை உரிய காலத்தில் சினைப்படுத்தத் தவறினால், கன்று பிறப்பது ஏறத் தாழ 1 மாதம் காலதாமதமாவ தால் மாட்டிற்கு ஒரு பிரதிபல னும் இல்லாமல் வீணாக ஒரு மாதக் காலம் தீவனச் செலவு செய்ய நேரிடும்.

நன்றாகப் பராமரிக்கப்படும் பால் பண்ணைகளில் ஒவ்வொரு கறவை மாடும் 300 நாட்கள் பால் தந்து, 60 நாட்கள் பால் தராமல் இருந்தும், பிறகு 300 நாட்கள் பால் தரும். இந்தத் தொடர் நிகழ்ச்சி தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கும். நான்கு முறை சினைப்படுத்த முயற்சித்தும் சினைபடாத மாடு களை விரைவில் பண்ணையிலிருந்து நீக்கிவிடுதல் வேண்டும். அப்படி நீக்கத் தவறினால் அதிக அளவில் பால் தரும் மாடுகளிலிருந்து கிடைக்கும் லாபத்தை இம் மலட்டு மாடுகள் சாப்பிட்டு பண்ணையின் இலாபத்தைப் பெரி தும் பாதிக்கும். ஆகவே, கறவை மாடுகளை விரைவில் சினைப்படுத்த எல்லா முயற்சிகளையும் மேற் கொள்ளவேண்டும். சினைப்படாத மாடுகளைப் பண்ணையிலிருந்து நீக்கி விடுதல் வேண்டும்.

### மாட்டுக் கொட்டகை வசதி

இக் கறவை மாடுகள் அதிக அளவில் பால் தருவதால் இவை களைச் சுற்றுப் புற சீதோஷ்ண நிலையின் இன்னல்களிலிருந்து காக்க, தக்க மாட்டுத் தொழுவ வசதி (மாட்டுக் கொட்டகை) அமைத்தல் வேண்டும்.

பால் பண்ணை ஆரம்பிக்க ஆர்வ முள்ளவர்கள் தமிழ்நாடு பால் வள நிறுவனத்தின் சம்பந்தப் பட்ட மண்டல மேலாளரையோ, மதுரை பொது மேலாளர் (அ) மதுரை மேலாளர் (பால் உற் பத்தி) அல்லது மதுரை துணைத் திட்ட அலுவலரையோ சந்தித் தால் பால் பண்ணை ஆரம்பிக்கத் தேவையான ஆலோசனைகளையும், உதவிகளையும் வழங்குவார்கள்.

பால் பண்ணை ஆரம்பித்துக் குறைந்தது நாள் ஒன்றுக்கு 100 லிட்டர் பாலை, தமிழ்நாடு பால் வள நிறுவனத்திற்கு வழங்க விருப்பமுள்ளவர்கள், இந்நிறுவ னத்தால் அளிக்கப்படும் சலுகை களைப் பெறலாம்.

பால் பண்ணை ஆரம்பிக்கும் இடம், தமிழ்நாடு பால்வள நிறு வனத்தின் பால் வழித் தடங்கள், மருத்துவ வழித் தடங்களிலிருந்து ஓரிரு மைல்களுக்குள் இருந்தால் மேற்கண்ட சேவைகளை அளிக்க மிக ஏதுவாக இருக்கும்.





சேரன் போக்குவரத்துக் கழகத்தின் மூலதனப் பங்குத் தொகைக்கு டிவிடெண்ட் தொகையாகக் கிடைத்த ரூபாய் 3,00,063-க்குரிய காசோலையைச் சேரன் போக்குவரத்துக் கழகத் தலைவர் திரு. ஆர். பசுபதி அவர்கள் 13.10.'76 அன்று, தமிழக ஆளுநர் அவர்களிடம் கொடுத்தார்.

கர்நாடக மாநில முதலமைச்சர் திரு. தேவராஜ் அர்ஸ் அவர்கள் 11.10.'76 அன்று, மைசூரில் நடைபெறும் 'தசரா' பொருட்காட்சியில் தமிழ்நாடு அரசின் அரங்கத்திற்கு வருகை தந்து பார்வையிட்டார்.

# படமும் செய்தியும்





சிறுகுடும்ப நெறியைக் கடைப்பிடிப்பதற்காக, சென்னைத் துறைமுகக் காப்புக் கழகமும், துறைமுகத் தொழிலாளர் வாரியமும் நடத்திய குடும்பநலத் திட்ட இயக்கத்தின் நிறைவு விழா 18.10.'76 அன்று, தண்டையார்பேட்டையில் உள்ள துறைமுகத் தொழிலாளர் காலனியில் நடைபெற்றது. அவ்விழாவில், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. வி. கார்த்திகேயன் அவர்கள் குடும்பநலத் திட்டத்தின் கீழ், அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கும், குடும்பநலத் திட்டத்தை ஊக்குவிப்போருக்கும் பரிசு அளித்தார்.



தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 15.10.'76 அன்று, கொடைக்கானலுக்கு வருகை தந்தார். அன்று அங்கு நடைபெற்ற புத்தகக் கண்காட்சியைப் பார்வையிட்டார்.



கொத்தடிமையிலிருந்து அண்மையில் விடுதலைபெற்ற தொழிலாளியுடன் 15.10.'76 அன்று, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கலந்துரையாடினார்.



தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 15.10.'76 அன்று, கொடைக்கானலில், கொத்தடிமையிலிருந்து விடுதலை பெற்ற தொழிலாளர்களுக்கு நிலப்பட்டா வழங்கினார்.



தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 16.10.1976 அன்று, காந்தி கிராம நிறுவனத்தின் 29-வது ஆண்டு விழாவில் தலைமை தாங்குவதற்காக வருகை தந்தபோது, காந்தி கிராமத்தின் நெசவுப் பிரிவைப் பார்வையிட்டார்.





சென்னை அடையாற்றில் கட்டப்பட்டுள்ள கேர் கனடா (CARE CANADA) நிறுவனத்தின் கிடங்கைத் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் திறந்துவைத்தார்.



தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 22.10.1976 அன்று, தீபாவளியை முன்னிட்டு, சென்னை நகரில் உள்ள பல்வேறு அனாதை இல்லங்களைச் சார்ந்த மாணவர்களுக்கு, சென்னை ராஜ்பவனத்தில் சிற்றுண்டியும், தேநீரும் வழங்கினார்.

தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 25.10.1976 அன்று, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி நாள் விழாவில் கலந்து கொண்டார். ஒரு கல்லூரி மாணவிக்கு, ஆளுநர் அவர்கள் 'மெடல்' வழங்குவதை இப்படத்தில் காணலாம்.





தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 25.10.1976 அன்று, ஏழை எளியோர்க்கான சட்ட உதவி அளிக்கும் சங்க அமைப்புக்குக் கையொப்பமிட்டார். நீதிபதி திரு. வி. ஆர். கிருஷ்ண அய்யர் உடனுள்ளார்.

சென்னையில் உள்ள தியாகராயர் கல்லூரியின் பொன்விழாவும், தியாகராயர் பள்ளியின் வைர விழாவும், சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் 25.10.1976 அன்று நடைபெற்றது. அவ்விழாவில், மேற்கூறிய நிறுவனங்களில் 25 ஆண்டுக் காலம் பணியாற்றிய ஆசிரியர்களுக்குத் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் பரிசுக் கோப்பை வழங்கினார்.





# பசுவின் பராமரிப்பில் கவனிக்க வேண்டியவை!

1. பசுவோ, எருமையோ கன்று போட்ட பின் இரண்டு மாதங்களுக்கு மேல் மூன்று மாதங்களுக்குள்ளாக கருத்தரிப்பு ஊசி போடுவது அவசியம். கன்று போட்ட உடன், மூன்று முறை பருவத்திற்கு வந்த பசு கருவூட்டப் படாவிட்டால், தற்காலிக மலட்டுத் தன்மை அடைந்துவிட ஏதுவாகிறது.

2. கருவுற்ற பசு தொடர்ந்து பால் கொடுத்து வரும். 7 மாதம் சினைப்பருவம் பூர்த்தியாகும் வரை கறவையை நீடிக்கலாம். அதன்பின்னர் நிறுத்தினால் பசுவிற்குச் சுமார் இரண்டு மாத கால ஓய்வு கிடைக்கும்.

3. கன்று பிறந்த சுமார் 6 மணி நேரத்திற்குள் பசு நஞ்சுக்கொடி போட்டுவிடும். கன்று போட்டு 24 மணி நேரமாகியும் நஞ்சுக் கொடி விழாவிடில் மருத்துவ உதவி நாட வேண்டும்.

4. கன்றிற்கு மூன்று மாதம் முடிந்ததும், தாய்ப்பாலை பூர்த்தியாக நிறுத்தி விடலாம். அதற்குப் பதிலாக காலை, மாலை கறவை நேரங்களில் ½ கிலோ ''கலவைத் தீவனம்'' கொடுக்க வேண்டும். இடைவேளையில், பச்சைத் தீவனம் 8 கிலோ கொடுக்க வேண்டும்.

5. கிடேரிகளுக்குக் கருத்தரிப்பு ஊசி போடுவதற்கு வயது முக்கியமல்ல. உடல் வளர்ச்சிதான் முக்கியம். அந்த வர்க்கப் பசுவின் எடையில் மூன்றில் இரண்டு பங்கு அளவு எடைக்கு வளர்ந்துவிட்டால், காளை சேர்ப்பதற்குத் தகுதியானதாகும்.

6. வெண்மை நிறம் கன்றின் சாணத்தில் தெரிவது, வயிற்று பூச்சிகளின் அறிகுறி, துர்நாற்றம், இளகிய தன்மை இவைகள் தோன்றினால் உடனடியாக மருத்துவ உதவி பெற வேண்டும்.

7. கன்று பிறந்த நாளிலிருந்து மூன்று மாதம் முடியும் வரை பிரதி 15 தினங்களுக்கு ஒரு முறை குடல் கிருமி மருந்து கொடுத்து வருவது அவசியம். ஆரம்பத்தில் நன்கு கவனிக்கப்படாத கன்று பின்னால் துரிதமாக வளராது.

8. சாணத்தின் மேல் மண்ணைத் தூவி அதன் பின்னர் கொட்டகையிலிருந்து எடுத்தால் நல்ல பலன் உண்டு. சாணத்தின் உரச் சத்து பாதுகாக்கப்படும். சாணத்துடன் வெளிப்படும் கிருமிகள் கொல்லப்படும்.

9.. கன்றுகளுக்கு ஆறுமாதம் பூர்த்தியானதும் ''வெக்கை நோய்'' தடுப்பு ஊசி போடுவது அவசியம். இதற்கு ஒரு மாதத்திற்குப் பின் ''சப்பை நோய்'' ''தொண்டை அடைப்பான் நோய்'' இவற்றிற்கான தடுப்பு ஊசி போட வேண்டும்.

10. மிதமான வெதுவெதுப்பான தண்ணீரில் நனைத்து பிழிந்தெடுத்த துணியினால் மடியை நன்கு துடைத்த பின் பால் கறக்க ஆரம்பித்தால் பால் சுரப்பு துரிதமாக ஏற்பட்டு அதிக அளவு பால் கிடைக்கும்.



11. மாதத்திற்கு இருமுறை மாட்டுத் தொழுவங்களின் சுவர்கள் (சுமார் 4 அடி வரை), தூண்கள், தரை முதலியவற்றிற்குச் சுண்ணாம்பு பூசுவது சிறந்த முறை. மண் தரையாயிருந்தால், சுண்ணாம்புத் தண்ணீரைத் தெளிக்க வேண்டும்.

## கறவைப் பசுவின் தீவன அளவுகள்

சுமார் 250 முதல் 400 கிலோ எடையுள்ள பசு நாள் ஒன்றுக்கு 5 லிட்டர் பால் கொடுத்தால் கீழ்க்கண்ட அளவில் தீவனம் கொடுக்க வேண்டும்.

| | கலவைத் தீவனம் | பசுந் தீவனம் (புல்) | உலர்ந்த தீவனம் (வைக் கோல்) |
|---|---|---|---|
| | கிலோ | கிலோ | கிலோ |
| பராமரிப்பு தீவனம் | ½ | 5 | 10 |
| உற்பத்தி தீவனம் | 2 | 5 | ... |
| (5 லிட்டர் பால் அளவிற்கு மொத்தம்) | 2½ | 10 | 10 |

5 லிட்டர் பாலுக்கு மேல் கொடுத்தால் அந்த அளவிற்கு ''உற்பத்தி தீவனத்தின்'' அளவை அதிகரிக்க வேண்டும். 10 லிட்டர் பால் அளவிற்கு, ''உற்பத்தி தீவன அளவு'' இரு மடங்கு ஆகும். ஆக மொத்த தீவன அளவு 4½ கிலோ கலவைத் திவனம் 15 கிலோ புல், 10 கிலோ வைக்கோல் முதலியன.

## சூரிய வெப்பத்தைக்கொண்டு தண்ணீரைக்கொதிக்க வைக்கும் கருவி!

ரூர்க்கியிலுள்ள மத்திய கட்டட ஆராய்ச்சிக் கழகம் சூரிய வெப்பத்தைக் கொண்டு தண்ணீரைக் கொதிக்க வைப்பதற்காக, குறைந்த விலையில் ஒரு கருவியை உருவாக்கியுள்ளது.

வீடுகளில் உபயோகிப்பதற்கு ஏற்றதாகவும், ஒரே சமயத்தில் 90 லிட்டர் தண்ணீரைச் சூடாக்குவதற்குப் பயன்படுத்தக் கூடியதாகவும், குறைந்த விலையுள்ளதாகவும் இக் கருவி வடிவமைத்து உருவாக்கப்பட்டுள்ளது. சூரிய வெப்பத்தைக் கொண்டு இக் கருவி இயங்குகிறது. ஒரு குழாய் வழியாக குளிர்ந்த நீர் சென்றால், மற்றொரு குழாய் வழியாகச் சூடான நீர் வெளி வருகிறது. இக்கருவியைப் பயன்படுத்துவதன் மூலம் கணிசமான அளவுக்கு வெப்பத்தை மிச்சப்படுத்தலாம். இக்கருவி உற்பத்தி செய்ய சுமார் 425 ரூபாய் செலவாகிறது.



கன்று நன்கு வளர கொடுக்கப்படவேண்டி தீவன அளவுகள் :

| வயது | கலப்புத் தீவனம் | பச்சைத் தீவனம் |
|---|---|---|
| 2 மாதம் முடிந்த கன்று | 200 கிராம் | பசும்புல்லி நுனிப் பாக களைக் க றின் முன் தொங்க வி வேண்டும். |
| 3 மாதம் | 400 கிராம் | .. |
| 4 மாதம் | 500 கிராம் | 4 கிலே |
| 5 மாதம் | 750 கிராம் | 5 கிலே |
| 6 மாதம் | 750 கிராம் | 6 கிலே |
| 7 மாதம் | 1 கிலோ | 7 கிலே |
| 8 மாதம் | 1 கிலோ | 8 கிலே |
| 9 மாதம் | 1.25 கிலோ | 9 கிலே |
| 10 மாதம் | 1.25 கிலோ | 10 கிலே |
| 11 மாதம் | 1.25 கிலோ | 12 கிலே |
| 1 வயதிற்கு மேல் கன்று போடும் வரை | 1.50 கிலோ | 12 கிலே |

குறிப்பு: இந்த அளவுகள் ஒரு வேளைக்கானது. அதாவது காலையிலும் மாலையிலு இந்த அளவுகள் கொடுக்கப்படல் வேண்டு

இவ்வாறு தகுந்த அளவில் தீவன கொடுக்கப் பெறும் கன்று செழித்து வளர்ந் 18 மாத காலத்தில் முதிர்ச்சியடைந்து 2 மாத முடிவில் கன்று போட முடியும்.

# இணைபிரியாதவை, இணையற்றவை!
# தீபாவளியும், கோ-ஆப்டெக்ஸ் துணிவகைகளும்!

தீபாவளிப் பண்டிகை விழாவுடன்
இணைந்ததே கோ-ஆப்டெக்ஸ்.
இந்தத் தீபாவளிக்கு உங்கள்
குடும்பத்தினர் அனைவருக்கும்
உகந்த ஏராளமான துணிவகைகள்
கோ-ஆப்டெக்ஸில்!
இப்பொழுதே சென்றிடுவீர்,
இனிதே வாங்கிடுவீர்!

கோ-ஆப்டெக்ஸில் எத்தனை
எத்தனையோ எழில் வண்ணத்
துணிகள்!

காஞ்சிபுரம், ஆரணி மற்றும்
கும்பகோணம் அசல் பட்டுச்
சேலைகள், உறையூர்,
கோயமுத்தூர், சேலம், மதுரை
கைத்தறி நூல் சேலைகள்,
சுங்கடி பிரிண்டுகள்
மற்றும் சின்னாளப்பட்டி சேலைகள்,
வேட்டிகள், துவாலைகள்,
லுங்கிகள், அலங்காரத்துணிகள்,
சட்டைத் துணிகள்,
உடுப்புகளுக்கான துணி
வகைகள்.

நீங்களும் — கோ-ஆப்டெக்ஸும் •
உங்கள் குடும்பமும் —
வண்ணத்துப் பூச்சியும் •
தரமேன்மையும் — நியாய
விலைகளும் (கோ-ஆப்டெக்ஸில்) •
பண்டைச் சிறப்பும் —
நவீன நளினமும் •
கோ-ஆப்டெக்ஸும் —
தீபாவளியும்
இணைபிரியாதவையன்றோ!

தீபாவளி
சிறப்புத் தள்ளுபடி
பருத்தி 10%
பட்டு 15%

22-9-76 முதல்
23-10-76 வரை







தீபாவளி வரையில்
ஞாயிற்றுக் கிழமைகளிலும்
விடுமுறை நாட்களிலும்
விற்பனை உண்டு.


# தரமான பாலுக்குத் தகுந்த விலை



தென் கிழக்கு ஆசியாவிலேயே 'அமுல்' நிறுவனத்தின் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் சிறந்தவை என்று பாராட்டப்படுகின்றன.

குஜராத் மாநிலம் 'கைரா' மாவட்டத்திலுள்ள அமுல்(Amul) நிறுவனத்தின் கூட்டுறவுச் சங்கங்கள் போன்று தமிழ்நாட்டிலும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை அரசு பால்வள நிறுவனம் அமைத்து வருகிறது.

இதுவரை ஈரோடு, நாமக்கல், பழனி ஆகிய மூன்று இடங்களிலும் 'அமுல் மாதிரி' பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து ஆயிரக்கணக்கான லிட்டர் பாலை கொள்முதல் செய்து வருகிறது தமிழ்நாடு பால் வள நிறுவனம்.

இப்பொழுது புதிதாக மதுராந்தகம் பகுதியிலும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவிட முன்னேடித் திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது.

'அமுல் மாதிரி' கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுவதினால் நன்மைகள் என்ன?

முதலில் தரமான பால் கிடைக்கும்.

ஆமாம், தரமான பாலுக்குத் தகுந்த விலை கொடுக்கப்படுகிறது.

இப்பொழுது மதுராந்தகம் பகுதியிலுள்ள மாம்பாக்கத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு வாங்கப்படும் பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு ரூ. 1.28 முதல் ரூ. 2.10 வரை பாலின் தரத்துக்குத் தகுந்த வகையில் விலை கொடுக்கப்படுகிறது.

பாலிலுள்ள கொழுபபுச்சத்தின் அடிப்படையில் இந்த விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தரமான பாலுக்கே நல்ல விலை கிடைப்பதால், தரமான கால்நடைகளை —உயர் இன மாடுகளை வளர்ப்பதில் பால் உற்பத்தியாளர்கள் ஆர்வம் காட்டுகின்றனர்.

இப்படி வாங்கும் பாலுக்குரிய பணத்தை வாரத்துக்கு ஒரு முறை குறிப்பிட்ட நாளில் தமிழ்நாடு பால்வள நிறுவனம் வழங்குகிறது.

பாலிலுள்ள கொழுப்புச் சத்தினைச் சோதனையிடும் கருவியும், பால் உற்பத்தியாளர் சங்கத்துக்குத் தேவையான பதிவேடுகளும் தமிழ்நாடு பால்வள நிறுவனத்தால் இலவசமாக அளிக்கப்படுகிறது. இவை ரூ. 2,000 மதிப்புடையவை.

பால் உற்பத்தியாளர் சங்கத்தின் சார்பில் அவ்வூரைச் சேர்ந்த ஒருவருக்குப் 'பால் பரிசோதகர்' வேலை வாய்ப்புக் கிடைக்கும். காலை, மாலை இரு நேரங்களிலும் ஒவ்வொருவர் வழங்கும் பாலு[க்]கும் தனித் தனியாக 'சாம்பிள்' எடுத்து அவைகளின் கொழுப்பு[ச்] சத்தைச் சோதனையிடுவது இ[வ]ரது வேலையாகும்.

இன்னொருவருக்கு பால் உ[ற்]பத்தியாளர்கள் சங்கத்தின் கண[க்]குகளை எழுதும் வேலை. இவருக்[கு] மாடுகளுக்குச் சினை ஊசி போடு[வ]தற்கான பயிற்சியும் அளிக்கப்படும். சினை ஊசிக்கான உயர்ர[க] விந்துவைப் பால் வள நிறுவனமே வழங்குகிறது.

இவ்வாறு கிராமத்திலுள்ள இரண்டு மூன்று படித்த இளைஞர்களுக்கு 'அமுல் மாதிரி' கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதா[ல்] வேலை வாய்ப்பு கிடைக்கிறது.

இவை மட்டுமல்ல.

பால் உற்பத்தியாளர் சங்க[த்]தில் உள்ளவர்கள் யாரும் மா[டு]களைச்சங்கத்துக்கு அழைத்துவந்[து] பால் கறக்க வேண்டாம். கறந்[த] பாலைச் சங்கத்திற்கு எடுத்[து] வந்து கொடுத்தால் போதும். அங்கு 'சோதனை' செய்த பிற[கு] விலை நிர்ணயிக்கப்படும்.



வாரம் ஒரு முறை கால் நடைகளுக்கு மருத்துவப் பரிசோதனை கிடைக்கிறது.

இச்சங்கங்களிலுள்ள உறுப்பினர்களின் கால்நடைகள் கருத்தரிக்க உயர் ரக பொலி காளைகளிலிருந்து எடுக்கப்பட்ட வீரிய விந்து ஊசி மூலம் செலுத்தப்படுகிறது. அதன் மூலம் சினைப்பட்டு பிறக்கும் உயர் ரக கன்றுகளை வளர்க்க மாதந்தோறும் குறிப்பிட்ட தொகை மான்யமாக வழங்கப்படுகிறது.

தீவனப் பற்றுக்குறையைப் போக்க உற்பத்தியாளர்களுக்கு உயர் ரக புல் வகைகளின் விதைகள் குறைந்த விலையில் வழங்கப்பட்டு அவைகளை நல்ல முறையில் வளர்ப்பதற்கான ஆலோசனை வழங்கப்படுவதுடன், ஏக்கருக்கு ரூ. 200 முதல் ரூ. 500 வரை மானியமும் வழங்கப்படுகிறது.

தரமான கலப்புத் தீவனம் குறைந்த விலையில் சங்கத்தின் மூலமாக வழங்கப்படுகிறது.

ஆண்டு முடிவில் சங்கம் சம்பாதிக்கும் இலாபத்தில் சரிபாதி, உறுப்பினர்களுக்கு இலாபப் பங்காகக் கிடைக்கும்.

இவ்வாறு பல் வகையான நன்மைகளைப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் மூலம் பெறலாம். இவ்வகையான சங்கங்களை மதுராந்தகம் பகுதியில் அமைத்திட தமிழ்நாடு பால்வள நிறுவனம் எடுத்துள்ள முயற்சிக்கு மக்கள் பேராதரவு அளித்து வருகின்றனர்.

இப்பணிக்காக நியமிக்கப்பட்டுள்ள கூட்டுறவு சார் பதிவாளர் திரு. ஆர். கிரிசேஷன் அவர்கள் கூட்டுறவுத் துறையிலும் பால் பண்ணைத் துறையிலும் நன்கு பயிற்சி பெற்றவர். இவருடைய பெரு முயற்சியாலும் இன்று மதுராந்தகத்தின் சுற்று வட்டாரத்திலுள்ள கிராம மக்கள் மிகுந்த ஆர்வம் காட்டுவதன் விளைவாலும் இன்னும் ஆறு மாதத்தில் மதுராந்தகம் பகுதியிலிருந்து 3,000 லிட்டர் பால் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வளமான கால்நடை வளர்ப்புக்கு ஊக்கம் தரும் இத்திட்டம் வெண்மைப் புரட்சியிலே புதிய வேகத்தை ஊட்டுவதாகும்.

சுருக்கமாகக் கூறினால், தரமான பாலுக்குத் தகுந்த விலை தரும் திட்டமாகும் இது!

—மாமூலன்

## எருமைக் கன்றுகளுக்கு ஏற்ற தீவனம்!....

எருமைக் கன்றுகள் பிறந்தவுடன் அவற்றின் எடையில் 15-ல் ஒரு பாகம் பால் அளிக்க வேண்டும். பிறந்த கன்றுகளுக்கு $1\frac{1}{2}$ முதல் 2 லிட்டர் பாலை மூன்று அல்லது நான்கு வேளைகளுக்குப் பகிர்ந்தளிக்கலாம். கொழுப்புச்சத்து அதிகமாயிருந்து கன்றுகள் பாலைச் செரிக்க முடியாவிட்டால் பாலை சரி பாகத்திற்கு சுத்தமான நீர் கலந்து கொடுக்க வேண்டும். பிறந்த கன்றுகளுக்கு சீம் பால் மிகவும் அவசியம். சீம் பாலில் புரதச் சத்துக்கள், தாதுப் பொருட்கள் அதிகமிருப்பது மட்டுமின்றி நோய்களை எதிர்க்கும் சக்தியையும் தருகின்றன. கன்றுகளுக்கு மூன்று மாதத்திற்கு மேல் முழுப்பாலை அளிக்க வேண்டியதில்லை.

வெண்ணெய் எடுத்த பாலுடன் கெட்டித் தீவனக் கலவை — மக்காச்சோளம், பிண்ணாக்கு, தவிடு ஆகியவை அரை கிலோ அளவிலிருந்து, ஒரு கிலோ வரையில் கஞ்சியாகச் செய்து 6 மாத வயது வரையில் கன்றுகளுக்குக் கொடுக்கலாம். நன்கு பராமரிக்கப்படும் கன்றுகள் நாள்தோறும் 400 முதல் 500 கிராம் எடை கூடுகிறது. ஆறுமாதத்திற்கு மேல் பெரிய எருமைகளுக்குக் கொடுக்கின்ற நல்ல கெட்டித் தீவனங்களையும் பசும்புற்கள், பயிர்வகைகளையும் அளிக்கலாம். கன்றுகளின் வயிற்றில் உருண்டைப் புழுக்களைத் தவிர்க்க 'பிப்ரஸிம் அடிபேட்' மருந்தினையோ அல்லது வேம்பின் இளந்தளிர் இலைகளை அரைத்தோ கொடுக்கலாம். வேப்ப எண்ணெய் 60 மில்லி லிட்டர் கொடுப்பது மிகவும் நல்லது. எருமைக் கிடாரிகளுக்கு பிண்ணாக்கு, மக்காச்சோளம், மரவள்ளிக்கிழங்கு மாவு, உளுத்தங்குருணை, கடலைக்குருணை போன்றவைகளைக் கலந்து சத்துள்ள கெட்டித் தீவனமாகக் கொடுத்து, பசுந்தீவனங்களையும் அளித்துப் பராமரித்தால் குறுகிய காலத்தில் பக்குவமடைந்து பலனடைந்து சிறிய வயதிலேயே கன்றை ஈன்று பால் அளிக்க ஆரம்பிக்கும்.

நன்கு பராமரிக்கப்பட்ட எருமைக் கிடாரிகள் 27 மாதத்திலேயே கன்றை ஈன்று பாலை அளிக்கத் தொடங்கும். பெரும்பாலும் பராமரிப்புக் குறைவினாலும் சத்தற்ற தீனியாலும், நாட்டு எருமைகள் $3\frac{1}{2}$ வயதில் பக்குவமடைந்து நான்கு முதல் நாலரை வயதில்தான் கன்றை ஈனுகின்றன.

வெளியீடு :

தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை—3.

# கேளுங்கள் கொடுக்கப்படும்



வினா : ஆண் அறுவைச் சிகிச்சை செய்து கொள்வதால் வலிவற்ற நிலை—ஆண்மையற்ற நிலை உருவாகிறதா?

விடை : இல்லை. ஆண்மையற்ற நிலையோ-வலிவற்ற நிலையோ ஆண் அறுவைச் சிகிச்சை செய்து கொள்வதால் உண்டாவதில்லை. ஆண் அறுவைச் சிகிச்சையின் மூலம், ஆண் அணுக்கள் அடங்கிய விந்து செல்லும் பாதையான விந்து அணுக் குழாயின் சிறு பகுதி (ஒரு அங்குலத்தில் நான்கில் ஒரு பகுதி) துண்டித்து அகற்றப்படுகிறது. அண்டம் அல்லது விதை (testicle) எவ்விதப் பாதிப்புக்கும் உள்ளாவதில்லை. எனவே ஆண் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டால், ஆண்மை இழந்து விடுவோம் என்பது பொருந்தமுடையதல்ல; விஞ்ஞான ரீதியாக ஏற்றுக் கொள்ளக் கூடியதுமல்ல.

வினா : ஆண் அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட பின்பு முதுகுவலி, அடிவயிற்றில் வலி ஏற்படுவதாக சிலர் கூறுகிறார்கள். இவற்றிற்கு ஆண் அறுவைச் சிகிச்சைதான் காரணமா?

விடை : ஆயிரத்தில் ஒருவருக்கு இத்தகைய வலி ஏற்படக் கூடும். ஆனால் ஓரிரண்டு நாட்களில் வலி மறைந்துவிடும். தொடர்ந்து வலி நீடிக்குமேல் மருத்துவரை அணுகித் தக்க சிகிச்சை பெற்றுக் கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

வினா : ஆண் அறுவைச் சிகிச்சைக்குப் பின் சில தொழிலாளர்கள் பளுவான பொருள்களைத் தூக்கமுடியவில்லை என்கிறார்கள். இதற்கான காரணங்கள் யாவை?

விடை : இது உண்மைக்குப் புறம்பானது ; வெறும் மன மயக்கத்தால் ஏற்படுவது. எந்தவொரு அறுவை செய்து கொள்ளும் எவரும்—மன மயக்கத்துக்குட்பட்டு—தனக்கு ஓய்வு தேவை ; பலமான சாமான்களைத் தூக்கக் கூடாது என நினைத்துக் கொள்வதுண்டு. சிறிது காலத்துக்கு உடலுழைப்பு தேவைப்படும் வேலைகளை மேற்கொள்ளவும் விரும்புவதில்லை. அறுவைச் சிகிச்சைக்கு முன்னும்-பின்னும் மருத்துவரிடமும், குடும்ப நல ஊழியரிடமும் மனம் விட்டுப் பேசி இவை போன்ற ஐயப்பாடுகளையும் அச்சங்களையும் அகற்றிக் கொள்ளலாம்.

வினா : ஆண் அறுவைச் சிகிச்சைக்குப்பின் அதிக அளவில் இல்லற இன்பம் துய்க்க ஊக்க உணர்வு ஏற்படுகிறதென்பது உண்மையா?

விடை : அறுவைச் சிகிச்சையின் காரணமாக இனிக் குழந்தை பிறக்காது என்று திட்ட வட்டமாகத் தெளிவு ஏற்பட்டுவிடுகிறது. ஆகையால், அதிக அளவில் இல்லற இன்பம் துய்க்க ஆவல் மேலிடுவது இயல்பேயாகும்.

வினா : ஆண் அறுவைச் சிகிச்சை செய்து கொள்வதால் பொதுவாக உடல் பலக் குறைவு ஏற்படுவது உண்டா?

விடை : ஆண் அறுவைச் சிகிச்சை செய்து கொள்வதால் பொதுவான உடல் பலக் குறைவு ஏற்படுகிறது என்பதற்கு மருத்துவ அல்லது மனோதத்துவ அடிப்படையில் சான்றுகள் எதுவும் இல்லை. சிலர் அறுவைச் சிகிச்சைக்கு முன்பே வலிவு குன்றியவர்களாக இருந்திருப்பார்கள். இன்னும் சிலர் அறுவைச் சிகிச்சையால் தங்களுக்கு வலிவு குன்றி விட்டதாகத் தாங்களே மனத்தில் தவறுதக் கருதிக் கொள்ளக்கூடும்.

வினா : கரு உண்டாவதற்கு உதவும் ஆண்விந்து அணுக்கள் செல்லும் பாதையை, ஆண் அறுவைச் சிகிச்சை தடுத்து விடுகிறது. இது ஒருவரின் உடல் நலத்திற்குக் கேடாக அமையுமா?

விடை : ஆண் விந்தணுக்கள் (Male Seeds), பெண் விந்தணுக்களுடன் (Ovum) கூடிச் சினைப்படுத்தும் தன்மை மட்டுமே வாய்ந்தவை. ஆகையால் தனிப்பட்டவருடைய உடல் நலத்திற்கும் அதற்கும் சம்பந்தமில்லை. எனவே ஆண் அறுவைச் சிகிச்சையால் உடல் நலக் குறைவு என்பது ஏற்படாது.

வினா : ஆண் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களின் மனைவியர் சிலர் கருத்தரித்து விடுவதற்கான காரணங்கள் யாவை?

விடை : இதற்கு இரண்டு விதமான காரணங்கள் உண்டு. ஆண் விந்து அணுக் குழாய் ஒன்று சிலருக்கு அதிகப்படியாக இருக்கக்கூடும். பத்தாயிரம் பேர்களில் ஒருவருக்குத்தான் அப்படியிருக்கும். எனவே அறுவைச் சிகிச்சை செய்யும் பொழுது, இத்தகைய விந்து அணுக்குழாய் ஒன்றை விட்டு விட்டிருந்தால் அவற்றில் உள்ள விந்து அணுக்களால் மனைவியர் கருத்தரிக்க வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகவே அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர், மருத்துவரின் அறிவுரைக்கிணங்க அவ்வப்போது (ஆறு முதல் எட்டு வாரங்கள் வரை) தன் விந்துவை சோதித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும். அவரது விந்துவில், அணுக்கள் இல்லை என்பது உறுதியாகும் வரை கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்த வேண்டும். இரண்டாவதாக, புறம்பான உடலுறவு முறை காரணமாகவும் கருத்தரித்தல் உண்டு.

வினா : பெண் அறுவைச் சிகிச்சை பெண்களைப் பருமனாக்கி விடுகிறதா? அப்படி என்றால் ஏன்,

விடை : பெண் அறுவைச் சிகிச்சை செய்து கொள்வதால் பெண்கள் பருமனாகி விடுவதில்லை. அளவுக்கு அதிகமான உணவை உட்கொள்ளுதல், உடற் பயிற்சியின்மை, சுரப்பிகளின் நீர் சப

மற்ற நிலையிலிருப்பது ஆகிய வையே உடல் பருப்பதற்கான காரணங்கள்! பெண் அறுவைச் சிகிச்சையில் பெண் அணுக் குழாய்கள் துண்டிக்கப்பட்டு முடிச்சிடப்படுகின்றனவே தவிர, வேறு எவ்வித தலையீடும் கிடையாது.

**வினு: பெண் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் தாய்க்கு இயலாமை அல்லது ஆற்றல் கேடு ஏற்படுகிறதா?**

**விடை:** பெண் அறுவைச் சிகிச்சையால் தாய்மார்களுக்கு பலக் குறைவு ஏற்படுவதில்லை. பெண் அறுவைச் சிகிச்சை உடலுக்கு எவ்வித ஊறும் ஏற்படுத்துவது இல்லை. பெண் அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட முதல் ஆறு வாரங்களுக்கு, பளுவான சாமான்களைத் தூக்குவது, மாவு அரைத்தல், மாடிப்படி ஏறுதல் ஆகியவற்றைத் தாய்மார்கள் தவிர்க்க வேண்டும்.

பிள்ளைப் பேற்றையொட்டி எடுத்துக் கொள்ளும் முன்னேற்பாட்டு நடவடிக்கைகளைப் போலவே அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட முதல் ஆறு வாரங்களுக்கு நடந்து கொள்ளுதல் நலம்.

**வினு: கருத்தடை வளையம் (IUD) பொருத்திக் கொள்வதால் அதிகப்படியான இரத்தக் கசிவு ஏற்படுகிறது என்பது உண்மையா?**

**விடை:** கருத்தடை வளையம் பொருத்திக் கொண்ட பின் சில பெண்களுக்கு அதிகப்படியான இரத்தக் கசிவு ஏற்படுகிறது. வீட்டு விலக்கின் போது இந்த அளவுக்கு இரத்தக் கசிவு ஏற்படலாம், அல்லது இடைப்பட்ட காலத்தில் ஏற்படலாம்.

இரத்தக் கசிவு அதிகமாக இருந்தால் கருத்தடை வளையத்தை அகற்றிவிடுவது நல்லது. அந்தக் கட்டத்தில் மருத்துவரின் உதவியை நாட வேண்டும். வேறு கருத்தடை முறையைப் பின்பற்ற முனைய வேண்டும். சில உணவுகள், சில மருந்துகள், சில பருவ காலங்கள் ஆகியவை எப்படி அனைவருக்கும் உகந்ததாக இருப்பதில்லையோ அதே போலக் கருத்தடை வளையம் (IUD) பொருத்திக் கொள்வது, சில பெண்களுக்கு உகந்ததாக இருப்பதில்லை.



**வினு: பொருத்தப்பட்ட கருத்தடை வளையங்கள் சிலர் விஷயத்தில் வெளிவந்து விடுவதுண்டா? கருத்தடை வளையம் பொருத்திக் கொள்வதால் சில பெண்களின் கருப்பையில் துளை (Perforation) ஏற்பட்டு விடுவதுண்டா?**

**விடை:** சரியான அளவினதாகக் கருத்தடை வளையம் இல்லாவிடின், அதாவது கருப்பைக்கு ஏற்றாற்போல் அல்லாமல் சிறியதாக இருந்தால், கருத்தடை வளையம் சிலர் விஷயத்தில் வெளி வந்துவிடக் கூடும். கருத்தடை வளையம் கருப்பையில் துளையினை ஏற்படுத்துவது மிக அரிதாக நடப்பதொன்றாகும். கருத்தடை வளையம் சரியாகப் பொருத்தப் படாவிட்டால் இந்நிலை ஏற்படக் கூடும். சில தாய்மார்களுக்குக் கருத்தடை வளையம் பொருத்தப் பட்டு பல நாட்கள் கடந்த பின் பெண் உறுப்புகளின் சுவர்களில் பதிந்து போய் துளை ஏற்படுத்தக் கூடும்.

**வினு: கருத்தடை வளையம் பொருத்திக் கொள்வதால் முதுகு வலி, அடிவயிற்று வலி போன்றவை ஏற்படுகின்றனவா?**

**விடை:** கருத்தடை வளையம் பொருத்தப்படுவதால் கருப்பையினுள் புதியதொரு வெளிப் பொருள் செல்வது காரணமாக, கருப்பை அதனை வெளித் தள்ள முயலும்போது—சுருங்கி விரிகிறது. அப்போது இந்த வலிகள் ஏற்படக்கூடும்.

**வினு: கருத்தடை வளையத்தின் பயன் என்ன?**

**விடை:** கருத்தடை வளையம் அல்லது 'லூப்' (IUD), எளிய, பாதுகாப்பான கருத்தடைச் சாதனமாகும். ஒரு குழந்தைக்கும் மற்றொரு குழந்தைக்கும் தகுந்த இடைவெளி தருவதற்குக் கருத்தடை வளையம் மிகுந்த பயனுள்ள சாதனமாகப் பயன்படுகிறது. மேலுமொரு குழந்தை தேவை என்று விரும்பினுல், கருத்தடை வளையத்தைஅகற்றிவிட்டு, 'கரு'த் தரிக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளலாம். கருப் பையினுள் ஒரு முறை கருத்தடை வளையத்தைப் பொருத்தி விட்டால், பல ஆண்டுகளுக்கு அதனைப் பத்திரமாக விட்டுவைக்கலாம்.

உலகம் முழுவதிலும் கருத்தடை வளையம் பயன் படுத்தப் படுகிறது; ஏழை நாடுகளில் வெகுவாக வரவேற்கப் பெற்றுப் பயன் படுத்தப் பெறுகிறது. இந்தியாவில் மட்டும் ஏறக்குறைய 4 கோடித் தாய்மார்கள், திட்டமிட்ட குடும்பத்தை அமைத்துக் கொள்வதன் பொருட்டுக் கருத்தடை வளையம் பொருத்திக் கொண்டுள்ளனர்.

**வினு: கருத்தடை வளையம் (IUD) என்றால் என்ன?**

**விடை:** கருத்தடை வளையம் பிளாஸ்டிக்கால் செய்யப்பட்ட சிறியதொரு சாதனமாகும். இது பெண்ணின் கருப்பையினுள் பொருத்தப்படுகிறது.

**வினு: கருத்தடை வளையம் பொருத்தும் பொழுது வலி ஏற்படுமா?**

**விடை:** கருத்தடை வளையம் பொருத்துவதால் வலி ஏதும் ஏற்படுவதில்லை. அப்படி சிறு அளவில் தொந்தரவு இருக்குமானுல் வலி போக்கும் சாதாரண மருந்தின் துணையால் இலகுவாக வலியை நீக்கிவிடலாம்.

**வினு: கருவே தரிக்காத பெண்கூட வளையத்தைப் பொருத்திக் கொள்ளலாமா?**

**விடை:** மாதர் எவரும் கருத்தடை வளையம் அணிந்து கொள்ளலாம். ஆனுல் ஒரு குழந்தையாவது பெற்றெடுத்த பெண்களுக்கு மட்டுமே இச்சாதனத்தைப் பொருத்த மருத்துவர்கள் ஊக்கமளிப்பர். 'கரு'வே தரிக்காத பெண்களுக்குக் கருத்தடை வளையம் பொருத்துவதில் சிறிது சிரமம் இருக்கக் கூடும்.

**வினு: கருத்தடை வளையம் பொருத்திக் கொள்வதற்கு செலவு ஏதேனும் உண்டா?**

**விடை:** இல்லை; அனைத்துக் குடும்ப நலத் திட்ட நிலையங்களிலும், கருத்தடை வளையம் இலவசமாகப் பொருத்தப்படுகிறது. கருத்தடை வளையம் பொருத்திக் கொள்ளும் பெண்களுக்கு ஈட்டுத் தொகை கூட வழங்கப்படுகிறது.



**வினு: கருத்தடை வளையம் பொருத்திக் கொள்வதற்குப் பக்குவமான காலம் எது?**

**விடை:** எப்போது வேண்டுமானுலும் கருத்தடை வளையம் பொருத்திக்கொள்ளலாம். ஆனுல் வீட்டுவிலக்கு ஆன உடனடியாகப் பொருத்திக் கொள்வது மிகவும் பொருத்தமும் சிறந்ததுமாகும். இந்த நேரத்தில் கருத்தடை வளையம் பொருத்துவது மிக எளிதாக இருக்கும். பிள்ளைப் பேற்றை யொட்டியும் கருத்தடை வளையம் பொருத்திக் கொள்ளலாம்.

**வினு: கருத்தடை வளையம் பொருத்துவதால் வீட்டு விலக்காலத்தில் ஏதாவது சிக்கல் ஏற்படுமா?**

**விடை:** கருத்தடை வளையம் பொருத்திய பின்னர் இரண்டு அல்லது மூன்று முறை வீட்டு விலக்காவது தள்ளிப் போகலாம். இரத்தக் கசிவும் அதிகம் போகலாம். இரண்டு மூன்று மாதங்களுக்குப் பின் மாதவிடாய் இயல்பாக நேரிடும்.

**வினு: கருத்தடை வளையம் பொருத்திக் கொண்ட பெண் எவ்வளவு காலத்திற்கு இல்லற இன்பம் துய்க்காமல் இருக்க வேண்டும்?**

**விடை:** கருத்தடை வளையம் பொருத்திக் கொண்ட பின் இல்லற இன்பம் துய்க்காமல் ஒதுங்கியிருக்க வேண்டிய அவசியமில்லை. இவ்வளையம் பொருத்திய பின் சிறு அளவில் இரத்தக் கசிவு இருந்தால், அக்காலத்தில் இல்லற இன்பம் துய்க்காமல் இருப்பது நல்லது.

**வினு: கருத்தடை வளையம் பொருத்திக் கொள்வதால் தாய்ப் பால் சுரப்பதில் தடை ஏற்படுமா?**

**விடை:** அப்படி ஏதும் ஏற்படுவதில்லை.

**வினு: கருத்தடை வளையத்தை அகற்றிய பின்னும் கருத் தரிக்கும் வாய்ப்பை அது பாதித்து விடுமா?**

**விடை:** கருத்தரிக்கும் வாய்ப்பை அது பாதிப்பதில்லை. கருத்தடை வளையம் பொருத்திக் கொள்வதால் பெண்ணின் கருவளம் பாதிப்புக்குள்ளாவதில்லை. குழந்தை வேண்டும் என்றவுடன், கருத்தடை வளையத்தை நீக்கி, கருத்தரிக்கும் வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளலாம்.

**வினு: கருத்தடை வளையம் பொருத்திக்கொண்ட பின்னும் பெண்ணுக்குக் கருத்தரிக்கும் வாய்ப்பு உண்டா?**

**விடை:** இப்படி ஏற்படுவது மிக மிக சொற்பமாகும். நூற்றில் இருவருக்கு இப்படி ஏற்பட்டாலும் ஏற்படலாம்!

**வினு: கருப்பையிலுள்ள கருத்தடை வளையம் இருக்கும்பொழுதே கரு உண்டாகி விட்டால், இந்தக் கருத்தடைச் சாதனம் கருவிற்கோ, வடிவம் பெற்று விட்ட குழந்தைக்கோ குந்தகம் ஏற்படுமா?**

**விடை:** அப்படிப்பட்ட குந்தகம் எதையும் இது ஏற்படுத்துவதில்லை. இது போன்ற சந்தர்ப்பங்களில் கருப்பைக்கோ, கருப்பையிலுள்ள பச்சிளங் குழந்தைக்கோ எக்கேடும் ஏற்படாமல் பத்து மாதங்களும் கழிகின்றன.



**வினு: கருப்பையினுள் கருத்தடை வளையம் எவ்வளவு காலத்திற்கு இருக்கலாம்?**

**விடை:** சொந்தக் காரணங்களுக்காகவோ, மருத்துவக் காரணங்களுக்காகவோ கருத்தடை வளையத்தை அகற்றி விடவேண்டும் என்ற நிலை வரும் வரை அல்லது முடிவு எடுக்கும் வரை பல ஆண்டுகளுக்கு அதை அப்படியே விட்டு வைக்கலாம். இவ்வகையில் அகற்றி விட்டு அவசியப் பட்டால் ஒரு மாத காலத்திற்குப் பின், பொருத்தி விட வேண்டும். அந்த இடைக் காலத்தில் பிற கருத்தடை முறைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

**வினு: கருத்தடை வளையம் பொருத்தப்பட்ட பின்பு தொல்லை, தொந்தரவுகள் ஏதேனும் ஏற்படுகின்றனவா?**

**விடை:** கருத்தடை வளையம் பொருத்தப்பட்ட பின்பு ஒரு வார காலத்திற்குச் சில பெண்களுக்குச் சிறு அளவில் இரத்தக் கசிவு இருக்கலாம். மாதவிடாய் ஏற்படுவது, முதல் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குத் தள்ளிப் போகலாம். அப்போது இரத்தக் கசிவும் அதிகமாகப் போகலாம். இதனுல் கவலைப்பட வேண்டியதில்லை. மருத்துவரை அணுகி ஆய்வுரை பெறுங்கள். மாதவிடாய் ஏற்படுவது சாதாரணமாகி விடும். எவ்விதத் தீங்கும் நேரிடுவதில்லை.

இக் கருத்தடைச் சாதனம் பொருத்தப்பட்ட பின்பு சில பெண்களுக்கு முதுகு வலி அல்லது அடிவயிற்று வலி ஏற்படலாம் சாதாரண வலிபோக்கும் மருந்தின் மூலம் இவ்வலியைப் போக்கி விடலாம்.

**வினு: கருத்தடை வளையம் பொருத்திக் கொள்வதால் புற்று நோய் ஏற்படுகிறதா?**

**விடை:** இல்லை; நிச்சயமாகப் புற்று நோய் ஏற்படுவதில்லை. பல்வேறு விஞ்ஞான ஆராய்ச்சிகளின் முடிவு இந்த உறுதியை அளிக்கின்றது. இக்கருத்தடைச் சாதனம் பொருத்திக் கொள்வதால், வேறு எந்த நோயும் கூட ஏற்படுவதில்லை.

**வினு: கருத்தடை வளையம் பொருத்திக் கொண்டவர்கள், கவனத்தில் கொள்ள வேண்டியவை யாவை?**

**விடை:** கருத்தடை வளையம் பொருத்திக் கொண்ட பின்பு தொந்தரவு ஏதும் இருந்தால் உடனடியாகக் குடும்பநலத்திட்ட நிலையத்திற்குச் சென்று தெரிவியுங்கள்.

இதைப் பொருத்திக் கொண்ட பின் ஏற்படும் முதல் மாதவிடாயின் போது கருப்பையிலிருந்து அது விழுந்துவிடுவதற்குப் பெரும் வாய்ப்பு உண்டு. ஆகவே மிகக் கவனமாக இருக்க வேண்டும்.

கருத்தடை வளையம் விழுந்து விட்டாலோ அல்லது மாதவிடாய் தவறி விட்டாலோ மருத்துவரைக் கலந்தாலோசியுங்கள். வதந்திகளால் நம்பிக்கை இழக்காதீர்கள்.

கருத்தடை வளையம் பாதுகாப்பானது—பலன் தரத் தக்கது—நம்பகமானது. வதந்திகளை நம்பாதீர்கள்!

**வினு: மருத்துவ முறை கருச் சிதைவுச் சட்டமென்றால் என்ன?**

**விடை:** கருத்தரித்த இருபதாவது வாரத்துக்கு முன்னதாக, கருவைக் கருப்பையிலிருந்து அகற்றி விடுவதற்கு மருத்துவ முறை கருச் சிதைவு (Medical Termination of pregnancy) என்று

...ளர். இக் குறைந்த காலத்தில் ...ற்றப்படும் 'கரு' உருவமற்ற ...—கருப்பைக்கு வெளியே ...ழும் சக்தி யற்றதாக இருக் ...ம். இதைத்தான் கருச்சிதைவு ...கிரோம்.

...விறு : கருச் சிதைவுச் சட்டம் ...நிறைவேற்றப்பட்டது?

...விடை :— உண்டான கரு ...தொடர்ந்து இருக்க அனுமதித் ...ல் தாயின் உயிருக்கு ஆபத்து ...ற நிலையில் தாயின் உயிர் ...ப்பாற்றப்பட வேண்டும் என்ற ...ரு காரணத்திற்காக மட்டும், ...72-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் ...ய சட்டம் கருச் சிதைவினை ...னுமதித்து வந்தது. இருந்தா ...ம், பயிற்சியற்ற பணம் பிடுங் ...ம் போலி மருத்துவர்களால் ...acks) ஆண்டுதோறும் சட்டத் ...ற்குப் புறம்பாக அல்லது கொலை ...ன்று சொல்லத்தக்க 40 இலட் ...ம் கருச் சிதைவுகள் நமது நாட் ...ல் செய்யப்பட்டு வந்தன. இது ...ருந்தத்தக்க விளைவை ஏற்படுத் ...யது—பயனைத் தந்தது. தாய் ...மார்களின் உடல் நலத்தைக் ...கெடுத்தது. பெரும்பாலும் தாய் ...மார்கள் சாவுக்காளானார்கள். ...வற்றை யெல்லாம் தவிர்க்க ...வண்டி, 1971-ஆம் ஆண்டு ...கஸ்டுத் திங்களில் கருச்சிதை ...ச் சட்டம் நிறைவேற்றப்பட்டு ...72-ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் ...ள் முதல் அமலுக்கு வந்தது.

இது, நல்வாழ்வு குடும்பநலத் ...ட்ட நடவடிக்கைகளுக்கான ...ந் திட்டமாக உள்ளது. நமது ...நிலத்தில் தாய் ஒருவர் குழந் ...த வேண்டாம் எனக் கருதினால், ...தற்கான வசதிகள் அனைத்தும் ...பெற்ற மாநிலத்திலுள்ள மருத் ...வ மனையைச் சார்ந்த, தகுதி ...ம், பயிற்சியும் பெற்ற ஒருவ ...ன் உதவியை நாட அவருக்கு ...ரிமை உண்டு.

...விறு : கருச்சிதைவு எப்போது ...ய்யலாம்?

...விடை : (1) ஏற்பட்ட கரு ...தொடர்ந்து இருக்குமானால் ...ந்தப் பெண்ணின் உடல் ...லத்திற்கோ, உள்ளநலத்திற்கோ ...ழ்காலத்திலோ அல்லது வருங் ...லத்திலோ ஊறினை விளைவிக்கும் ...ற்ற நிலையிலும்,

(2) பிறக்கப் போகும் குழந் ...க்கு உடல் அளவிலோ, உள்ள ...ளவிலோ ஊனம் ஏற்படும் ...ற்ற நிலையிலும்,

(3) கற்பழிப்பின் காரணமாகக் ...ரு உண்டாயிருந்தாலும்,

(4) கருத்தடைச் சாதனங் களைப் பயன் படுத்திய போதிலுங் கூட கரு உண்டாகி விட்டாலும், கருச்சிதைவு செய்யலாம். கருச் சிதைவுக்குள்ளாகும் பெண்ணின் வயது, அவருக்கு இருக்கும் குழந் தைகளின் எண்ணிக்கை, அவரது கடைசி குழந்தையின் வயது, அவர் என்ன வேலை செய்கிறார், எவ்வளவு வருமானம் என்ற விவ ரங்களை எல்லாம் கருத்திற் கொண்டு கருச்சிதைவு செய்யப் பட வேண்டும்.

கருச்சிதைவுச் சட்டம் எந்த உணர்வோடு செய்யப்பட்டதோ அந்த உணர்வோடு அணுக வேண்டும். சட்டம் சட்டம் என்று சொல்லி கருச்சிதைவுக்காகத் தகுதியும் பயிற்சியுமற்றவரிடம் (quack) செல்லும் அளவுக்கு விரட்டக் கூடாது பெண்களை!

விறு : கருச்சிதைவினை யார் செய்யலாம்?

விடை : கீழ்வரும் மருத்துவக் கல்வியில் தேர்ச்சி பெற்று அரசு அனுமதி பெற்ற மருத்துவர் (Registered Medical Practitioner) கருச்சிதைவு செய்யலாம்.

(1) மேல் பட்டப் படிப்பு (Post Graduate Degree) அல்லது 'டிப்ளமோ' பெற்றவரும், அறுவைச் சிகிச்சை செய்வ தில் அனுபவம் பெற்றவரும், மகப்பேறு மருத்துவத்திலும் பெண் பிணி இயலிலும் ஆறு மாதங்களுக்குக் குறையாமல் பணியாற்றியவருமான ஒருவர்.

(2) மேல் பட்டப் படிப்பு 'டிப்ளமோ' அல்லது மகப்பேறு மருத்துவத்திலும், பெண் பிணி இயலிலும் 'பட்டம்' பெற்றவ ராக இருக்க வேண்டும்.



(3) மகப்பேறு மருத்துவத்தி லும் பெண் பிணி இயலிலும் ஐந்து வருடங்களுக்குக் குறை யாத அனுபவம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

(4) மாநில அரசு அளிக்கும் கருச்சிதைவுக்கான சிறப்புப் பயிற்சியைப் பெற்றவ்ராக இருத் தல் வேண்டும்.

மேற்சொன்ன தகுதிகள் படைத்த மருத்துவர்கள் கருச் சிதைவு செய்யலாம்.

விறு : கருச்சிதைவு எங்கே செய்யப்படுகிறது?

விடை : அரசு அனுமதிபெற்ற மருத்துவ நிலையங்களே கருச் சிதைவு செய்ய வேண்டும். மருத் துவக் கல்லூரிகளைச் சார்ந்த மருத்துவ மனைகள் அனைத்தும், மாவட்டத் தலைமை மருத்துவ மனைகள் அனைத்தும், முப்பதுக்கும் மேற்பட்ட வட்ட மருத்துவ மனைகள், சில தனியார் மருத்துவ நிலையங்கள் ஆகியவற்றைக் கருச் சிதைவு செய்ய அரசு அனுமதித் துள்ளது. இந் நிலையங்களின் எண்ணிக்கை விரைவில் அதிகரிக் கப்படும்.

விறு : கருச்சிதைவு செய்து கொள்ள எப்படிப் பதிவு செய்து கொள்ள வேண்டும்?

விடை : கருச்சிதைவு செய் யும் மருத்துவரையும், நிலையத் தையும் அரசு அனுமதித்திருக்க வேண்டும். அதற்குரிய மனுவில், இதற்காக மருத்துவர்கள் நல் வாழ்வு குடும்ப நலத் துறை இயக்குநருக்கு எழுதி அனுப்ப வேண்டப்படுகிறது.

அரசு அனுமதிக்காத மருத்து வர் கருச்சிதைவு செய்வதும், அரசு அனுமதிக்காத மருத்துவ நிலையத்தில் கருச்சிதைவு செய் வதும் சட்டப்படி குற்றமாகும்.

விறு : கருச்சிதைவு எப்போது எப்படிச் செய்யவேண்டும்?

விடை : வீட்டுவிலக்காகவில்லை என்பது தெரிந்த உடன், கருச் சிதைவு செய்து கொள்வது என் பது மிகப் பாதுகாப்பானது. அப்படிச் சிதைவு செய்துகொள்ள முனைபவர்களை அநேகமாக மயக்க மருந்தில்லாமல் புற நோயாளிக ளாகவே வைத்துப் பார்த்து விட லாம். கரு உண்டாகி 12-வது வாரத்துக்கு முன்பாக, பெண் உறுப்பின் வழியாக மருத்துவ முறைப்படி இலகுவாக கருவை அகற்றிவிடலாம்.

கரு உண்டான 12-வது வாரத் துக்குப் பின், 20-வது வாரத்துக் குள் என்றால், கருச்சிதைவு அவ சியம் என்பது குறித்து இரண்டு மருத்துவர்கள் சான்றிதழ் வழங்க வேண்டும். இக்காலத்தில் கருப் பையைச் சுத்தம் செய்ய அதனுள் மருந்து செலுத்த வேண்டியது அவசியமாகும். இப்போது கருச் சிதைவு செய்து கொள்வது என்பது, கரு உண்டாகி 12-வது வாரத்துக்கு முன் கருச்சிதைவு செய்து கொள்வதை விட ஆறு மடங்கு கடினமானதாகும். இருந் தாலும் ஒரு குழந்தை பிறப்பதை விடப் பாதுகாப்பானது.

கருச்சிதைவு செய்து கொள்ள ஆலோசனைக்காக உங்களிடம் ஒரு பெண் வந்தால் அவரை உரிய இடத்திற்கு உடன் அனுப்பி அவருக்கு உதவி செய்யுங்கள்.

அரசு அனுமதித்துள்ள மருத் துவ மனையில் இருக்கும் பயிற்சி பெற்ற மருத்துவர், பெண்ணின் சம்மதத்துடன் கருச்சிதைவு செய்யலாம். கணவனின் ஒப்பு தல் தேவையில்லை. கருச்சிதைவு செய்தது பற்றிய எழுத்துச் சான்றுகள், பெண்ணின் நலங் கருதி மிக ரகசியமாக வைக்கப் பட்டிருக்கும்.



கருச்சிதைவுக்குள்ளாகும் பெண் வயதுக்கு வராதவராகவோ, பைத்தியம் பிடித்தவராகவோ அறிவுத் திறன் அற்றவராகவோ இருந்தால் பெற்றோர் அல்லது பாதுகாப்பாளரின் சம்மதம் தேவை.

திருமணமாகாத, கருவுற்றப் பெண்களைக் கடிந்து கொள்ளா தீர்கள். அனுதாபத்துக்குரியவர் —உதவிக்குரியவர் அப்பெண்கள்.

விறு : கருச்சிதைவு (Medical Termination of Pregnancy) என் பது தாய்-சேய் நலத்திட்ட, குடும்ப நலத்திட்ட நடவடிக்கையாகுமா?

விடை : விரும்பாத நேரத்தில் ஏற்படும் கரு, உயிர் உண்டாவ தற்கு முன்பே கலைக்கப்படுகிறது. இது தாய் நலத்தைக் காக்கிறது. தாய்ப்பால் அருந்திக் கொண் டிருக்கும் அவரது கடைசிக் குழ ந்தைக்கும் தாயின் முழுக் கவனி ப்பும், அன்பும் கிடைக்க வழி செ கிறது.

வேண்டாத நேரத்தில் உ டான விரும்பத்தகாத கருவை கலைக்க ஒரு பெண் விரும்பு போது குடும்ப நலத் திட்டத்தி அவசியத்தை முழுமையாக உ ருகின்றார். அந்த நேரத்தை போல வேறு எந்த நேரத்திலு குடும்ப நலத் திட்டத்தின் அவ யத்தை அவ்வளவு முழுமையா அவர் உணர்வதில்லை. அந்த தாய் இரண்டு குழந்தைக யுடையவராக இருந்தால் மிகுந் விருப்பத்துடன் ஒப்புதல் அளித் பெண் அறுவைச் சிகிச்சை செய் கொள்வார். போதிய குழந்ை கள் அவருக்கு இல்லை என்ற கருச்சிதைவு செய்து கொண் பிறகு தொடர்ந்து கருத்தை வளையம் பொருத்திக் கொள் மாறு அறிவுறுத்தலாம்.

கருச்சிதைவு செய்து கொள் வர்கள் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்து கொள்ள வே டுமென்று தயவு செய்து ெ புறுத்தாதீர்கள். சட்டப்படி அ அவர்களது விருப்பத்தை பொறுத்தது.

## இந்தியாவிலிருந்து இரத்தினக் கற்கள், நகைகள் ஏற்றுமதி!







**1976** ஏப்ரல்—ஜூலை காலத்தில் இந்தியாவி லிருந்து மொத்தம் 7 கோடியே 85 இலட்ச ரூபாய் மதிப்புள்ள இரத்தினக் கற்களையும், நகைகளையும் அமெரிக்கா வாங்கியுள்ளது. இதே காலத்தில் பின் கண்ட நாடுகளும் இந்தியா விலிருந்து இரத்தினக் கற்கள் போன்ற விலை மதிப்பு மிக்க கற்களையும், நகைகளையும் இறக்குமதி செய்துள்ளன.

| | | |
|---|---|---|
| | | (கோடி ரூபாய்) |
| ஹாங்காங் | ... | 6.667 |
| பெல்ஜியம் | ... | 6.032 |
| ஜப்பான் | ... | 3.779 |
| ஃபிரான்ஸ் | ... | 2.049 |
| ஸ்விட்சர்லாந்து | | 1.916 |
| சிங்கப்பூர் | ... | 1.380 |
| மேற்கு ஜெர்மனி | | 1.276 |
| இங்கிலாந்து | ... | 1.260 |
| | | (இலட்சம் ரூபாய்) |
| நெதர்லாந்து | | 68.7 |

நடப்பு நிதி ஆண்டில் முதல் நான்கு மாதங் களில் மொத்தம் 33 கோடியே 69 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப் புள்ள இரத்தினக்கற் களையும், நகைகளையும் இந்தியா ஏற்றுமதி செய் துள்ளது.

## தமிழ்நாட்டில் உள்ள வனவிலங்குச் சரணாலயங்கள்




| வனவிலங்குச் சரணாலயங்கள் | | சுற்றுலா செல்வதற்கு ஏற்ற பருவம் |
|---|---|---|
| முதுமலை | .. | பிப்ரவரி முதல் மே வரை |
| வேடந்தாங்கல் | .. | நவம்பர் முதல் பிப்ரவரி வரை |
| கிண்டி பூங்கா | .. | ஆண்டு முழுவதும் |
| கோடிக் கரை | .. | நவம்பர் முதல் மார்ச்சு வரை |
| முண்டந்துறை | .. | ஜனவரி முதல் செப்டம்பர் வரை |
| ஆனைமலை | .. | பிப்ரவரி முதல் மே வரை |
| களக்காடு | .. | ———— |

# வேடந்தாங்கலில் வெளிநாட்டுப் பறவைகள்!



மீத்தாளிக் கொக்கு, நாமக் கோழி, உப்புக் குருவி, மாட்டுக் கொக்கு, மடையான், வக்கா, நரையான், நத்தைக் கொத்தி நாரை, மண்வெட்டி வாயன், அரிவாள் மூக்கன், பாம்புத் தாரா இவையெல்லாம் எங்கே இருக்கின்றன?

வேடந்தாங்கல் நீர்ப் பறவைக் காப்புச் சாலையில் இந்தப் பறவை இனங்களைக் கண்டு பரவசமடையலாம்!

ஆரவார மிக்க சென்னை நகரைக் கடந்து சுமார் 53 மைல் தூரத்திற்குச் சென்றால் அமைதியான வேடந்தாங்கல் கிராமத்தை அடையலாம். அங்கே உள்ள ஒரு சிறிய ஏரியின் இடையே அடர்ந்து வளர்ந்துள்ளது. கடப்பமரத் தோப்பு. ஆண்டுதோறும் மழைக் காலத்தில் ஏரியில் நீர் தேங்கி தோப்பின் அடிமரங்களைச் சூழ்ந்து நிறைந்ததும், நீர்ப் பறவைகள் பெருங் கூட்டமாய் ஆயிரக் கணக்கில் கூடி நீர் மட்டத்தின் மேலுள்ள கொப்புகளில் கூடுகட்டி முட்டையிட்டு, குஞ்சு பொரித்து இனம் பெருக்குகின்றன.

வேடந்தாங்கலில் கூடும் பறவைகளில் வெளிநாட்டுப் பறவைகளும் உண்டா?

ரஷ்யா, முதலிய தூர தேசங்களிலிருந்து நீர்ப் பறவைகள் வேடந்தாங்கலுக்கு வந்து, அங்குள்ள கடப்பமரத் தோப்பில் இறங்கி கூடு கட்டுகின்றன என்றும், பல்லாயிரம் மைல்களையும் பல கடல்களையும் கடந்து இனம் பெருக்க அவை இங்கு தான் வருகின்றன என்றும் சொல்கிறார்கள்.

சுமார் 20 ஆண்டுகளுக்கு முன் வேடந்தாங்கலில் கிளுவை வேட்டையாடுகையில், குண்டுபட்டு விழுந்த கிளுவையொன்றின் காலில் ஒரு காப்பு பூட்டப்பட்டிருந்தது. அந்தக் காப்பில் 'மாஸ்கோ' என்று ரஷ்யாவின் தலைநகரின் பெயர் பதிக்கப்பட்டிருந்தது!

வேடந்தாங்கலில் அவ்வப்போது காணப்படும் அயல்நாட்டுப் பறவைகளில் முக்கியமானவை கிளுவைகள், வாலாட்டிக் குருவி, சில உள்ளான் வகைகள் ஆகியவையாகும்.

ஆவணி மாதத்தில் நல்ல மழை இருந்தால், புரட்டாசிக்கு முன்பாகவே பறவைகள் வேடந்தாங்கலின் கடப்பந் தோப்பில் வந்து இறங்கத் தொடங்கும்.



# நமது நாட்டின் தேசியப் பறவை......



இந்தியாவுக்குத் தனிப் பெருமை தரும் பறவை மயில். அதனால் தான் அது நமது நாட்டின் தேசியப் பறவை என்ற பெருமையைப் பெற்றிருக்கிறது.

மயில், உலகத்தில் பல நாடுகளிலும் இருக்கின்றது. என்றாலும் மற்ற நாடுகளில் இருக்கும் மயிலை விட, நமது நாட்டில் உள்ள மயில்தான் கம்பீரமும், ராஜ நடையும், வண்ண மேனியும் கொண்டு விளங்குகிறது.

இந்தியாவில் பல மாநிலங்களிலும் மயில் காணப்படுகிறது. உத்தரப் பிரதேசத்தில் மதுரா மாவட்டத்தில் மயில்கள் அதிகம் காணப்படுகின்றன.

கவிஞர்கள் அழகுப் பெண்களை மயிலுக்கு ஒப்பிட்டுக் கூறுவதுண்டு. ஆனால் மயில் இனத்தில் பெண்மயிலுக்கு அவ்வளவு அழகு கிடையாது; ஆண் மயிலுக்குத் தான் அழகு அதிகம்.

ஆண் மயிலின் உடல் நீளம் 40 அங்குலம் இருக்கும். தோகை 4 அடி இருக்கும். கொண்டையில் குட்டையான சுருள் இறகுகள் உள்ளன. இறகுகள் உச்சியில் நீல ஒளியும், கீழே பச்சை நிறமும் காட்டுகின்றன. கொண்டையின் நுனி, விசிறிபோல அமைந்துள்ளது. கழுத்து, ஒளிமிகுந்த நீல நிறத்துடன் திகழ்கிறது. தோகையில் உள்ள நீண்ட இறகுகள் ஆண்மயிலுக்குப் பெருமை தருகின்றன. கருநீல வண்ணம் கொண்ட ஒவ்வொரு இறகிலும், கண் போன்ற வடிவம் காணப்படுகிறது. மயில், தோகை விரித்து ஆடும்போது ஆயிரம் கண்கள் மலர்ந்ததுபோலத் தோன்றும்.

ஆண் மயிலைப் போன்ற அழகு பெண்மயிலுக்குக் கிடையாது. இது தவிட்டு நிறம் படைத்தது. கொண்டை உண்டு; இதன் வால் குட்டை; பெண் மயில்களின் முன்னர் ஆண் மயில்கள் வண்ணத் தோகை விரித்து நடனம் ஆடுகின்றன. மழைக் காலம் வந்து விட்டால் மயிலுக்குக் கொண்டாட்டம்தான்; அந்தச் சமயத்தில் அது, நடனம் ஆடிக் கொண்டே இருக்கிறது.



மயிலுக்கு நாணம் அதிகம்; அதைப் பழக்குவது சுலபம்; வளர்ப்பவர் அழைத்தால் அவரின் அருகே அது ஓடும்.

தானியங்கள், முளைத்தண்டுகள் பூச்சிகள், பல்லிகள் முதலியவை மயிலின் உணவுகள்; பாம்புகளைக் கூட அது தின்கிறது. மயிலைக்கண்டால் பாம்புக்கு பயம்.

மயில், அடர்ந்த புதர்களில், குறிப்பாக நதிக்கரைப் புதர்களில் வசிக்கிறது. புதர்களிடையே பெண்மயில் முட்டையிடுகிறது. சில சமயங்களில் பாழடைந்த வீட்டுக் கூரைகளிலும் முட்டை போடும். ஒரு தடவைக்கு ஏழு முட்டையிடும். முட்டைகள் தந்தம் போன்ற வெள்ளை நிறமாக, அல்லது 'கிரீம்' நிறமாக உள்ளன. முட்டையிடும் பருவம் ஜூன் முதல் ஆகஸ்ட் வரை.

மயில்கள் கூட்டம் கூட்டமாகத் திரிகின்றன. ராஜஸ்தானத்தில் நூற்றுக்கு மேற்பட்ட மயில்கள் சேர்ந்த கூட்டங்களைக் காணலாம். முற்றிலும் வெள்ளை நிறம் கொண்ட மயில்வகை ஒன்று. அஸ்ஸாம் காடுகளில் மாத்திரம் காணப்படுகிறது.

மயிலை, ஐரோப்பாவில் அறிமுகப்படுத்தியவர் மஹா அலெக்சாண்டர் என்று வரலாறு கூறுகிறது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஈரானில் வளர்க்க முயன்றனர். ஆனால் முடியவில்லை.

பாடலுக்குக் குயில் பெயர் பெற்றிருப்பது போல ஆடலுக்கு மயில் பெயர் பெற்றுள்ளது. அழகுக்கும் பெயர் பெற்றுள்ளது!



# உடும்புப் பிடி

'உடும்புப் பிடி' என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். அந்த உடும்பைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்வோமா?

பல்லி இன வகையிலே தமிழ் நாட்டில் மிகப் பெரிய பிராணியாக விளங்குவது உடும்பு. உடும்புகள் 3 முதல் 4 அடி வரை நீளமுள்ளவை.

முதிர்ந்த உடும்புகள், கருப்புப் புள்ளி மேனிக்கு மேல் பழுப்பு நிறமுள்ளவையாக இருக்கின்றன. அடிப்பாகம் மஞ்சள் நிறமாக அல்லது பல்வேறு புள்ளிகள் அமைந்ததாக உள்ளது. உடும்பின் உறுப்புகள் மிக உறுதியானவை. பாதங்கள், 'உடும்புப் பிடி' என்பதற்கேற்ப வெகு உறுதியோடு பற்றிக் கொள்ளும் தன்மை உள்ளவை. சூழ்நிலைக்கேற்ப, வண்ணம் மாறும் தன்மை உள்ளது உடும்பு.

உடும்பு, காடுகளிலும் நாட்டுப்புறங்களிலும் தென்படுகின்றது. இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உடும்பைக் காணலாம். இலங்கை, பர்மா, நேபாளம் ஆகியவைகளிலும் உடும்புகள் உள்ளன.

உடும்பு வேகமாக இயங்கக் கூடியது. சில சமயங்களில் தப்புவதற்காக, ஆடாமல் அசையாமல் படுத்துக் கொள்ளும். உணவுக்காக, வனங்களில் கூடாரங்கள், குடிசைகள் ஆகியவைகளில் இது துணிவுடன் நுழைந்துவிடும். தூரத்திலிருந்த நிலையில் ஆத்திரமூட்டப்பட்டால், வாலை ஆட்டிய படி சீறும் தன்மை உள்ளது. விரோதியைக் கடிக்கவும் அஞ்சாது. உடும்புப் பிடி என்பது பிரசித்தமானது. உடும்பு ஒரு பொருளைப் பற்றிக் கொண்டால் அதைப் பிடுங்குவது மிகவும் கடினம்.

புற்றிலோ, வளைகளிலோ உடும்பு முட்டையிடும். இலைகள் முதலியவற்றைப் போட்டு மூடி வைக்கும். பின்பு அப் பெண் உடும்பு அந்தப் பக்கமே திரும்பாது! ஒரு அடையில் 20-லிருந்து 25 முட்டைகள் வரை இருக்கும். உடும்பு வெயில் காலத்தில் முட்டை இடுகிறது.

உடும்பின் இறைச்சியும், முட்டையும் மிகச் சுவையானவை. உடும்பு இறைச்சி, பக்கவாதத்துக்குத் தக்க மருந்து என்று பழங்குடி மக்கள் நம்புகிறார்கள். வேட்டை நாய் அல்லது வலைப் பொறி உதவியுடன் மலைவாழ் மக்கள் உடும்பைப் பிடிக்கிறார்கள்.

எலி, பறவைகள், பறவை முட்டைகள், பூச்சிகள் போன்றவைகளைத் தின்று உடும்பு உயிர் வாழ்கிறது. பறவைகளின் கூடுகளில் உள்ள முட்டைகளைத் தின்பதற்காக, இது வெகு லாவகமாக மரம் ஏறும்.

உடும்பினால், கோழிகளுக்குப் பெருஞ் சேதம் ஏற்படுவதும் உண்டு. ஆனால், விஷப் பூச்சி, புழுக்களைக் கொல்லுவது மூலம் இது மனித குலத்துக்கு உதவுகிறது. எனவே, உடும்பு இனத்தைப் பாதுகாப்பது அவசியம்.

## "வனராஜா" வளர்ப்புப் பண்ணை!

சென்னை மிருகக் காட்சி சாலையை வண்டலூருக்கு மாற்றுவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராயும் ஐவர் குழு அக்டோபர் மாதக் கடைசிக்குள் அதன் அறிக்கையை தமிழக அரசிடம் சமர்ப்பிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

தண்ணீர் தட்டுப்பாடு காரணமாக வண்டலூர் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால், சென்னை-மகாபலிபுரம் சாலையிலுள்ள முட்டுக்காடு தேர்ந்தெடுக்கப்படலாம்.

புதிய மிருகக் காட்சிசாலை அமைக்கப்படும் இடத்தில், சிங்கங்கள் வளர்ப்புப் பண்ணையையும் நிறுவ அரசு உத்தேசித்துள்ளது.

அநேகமாக புதிய மிருகக் காட்சிசாலைக்கான அடிக்கல் நாட்டு விழாவை ஆளுநர் சுகாதியா அவர்கள் நவம்பர் 14-ந் தேதி நேரு பிறந்த நாளன்று நடத்தி வைப்பார்.



# எழுத்தறிவின்மைக்கு எதிரான போர்!

டாக்டர் எச். எஸ். எஸ். லாரென்ஸ்
பள்ளிக்கல்வி இயக்குநர்

ஒரு நாட்டின் உயிர்நாடியே அதன் கிராமங்கள்தான். நாட்டு மக்களில் பெரும்பாலோர் கிராமங்களில் தான் வசிக்கின்றனர். ஒரு நாட்டின் முன்னேற்றத்தைக் காணவேண்டுமாயின் அந்த நாட்டு கிராமங்கள் எந்த அளவுக்கு முன்னேறி உள்ளன என ஆராய்ந்து பார்த்தால் போதும். கிராமப்புறங்களின் வளர்ச்சியில் நாட்டு வளர்ச்சியைக் காணலாம். மக்களின் மிக முக்கிய தேவையாகிய உணவு மற்றும் உடைக்குத் தேவையான விவசாயப் பொருள்கள், கிராம மக்களால் தான் உற்பத்தி செய்யப்படுகின்றன. கிராமங்கள் இல்லையேல் நாடு இல்லை. இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த கிராமங்களை ஒருங்கிணைந்த முறையில் முன்னேற்றமடையச் செய்வது ஒரு நாட்டின் ஆளுமையில் பங்கு கொள்ளும் ஒவ்வொருவருடைய முக்கிய பங்காகும். ஒருங்கிணைந்த முறையில் வளர்ச்சி என்பது எல்லாத் துறைகளிலும் அதாவது கல்வி, பொது சுகாதாரம், வேளாண்மை, கால்நடை மற்றும் கோழி வளர்ப்புத்துறை, மின் சாரத்துறை, கிராமக் கைத்தொழில்துறை, போக்குவரத்துத் துறை முதலிய எல்லாத் துறைகளையும் உள்ளடக்கிய மொத்த வளர்ச்சி என்பதாகும்.

இதில் கல்வித்துறையைப்பற்றி நாம் எடுத்துக்கொள்வோம். கிராமப்புறக் கல்வி வளர்ச்சி என்பது கிராமப்புற மக்களின் எழுச்சிக்கு முதல்படியாகும். கல்வி வளர்ச்சியானது மற்ற வளர்ச்சிகளைப் பெற கிராம மக்களைத் தயார் செய்து கொள்வதற்குத் தகுதியுடையவர்களாக ஆக்கும். மக்களுடைய பொது அறிவு விரிவடைய கல்வியானது ஒரு மாபெரும் சக்திவாய்ந்த படைக்கலமாகும். இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த கல்வி அறிவை கிராம மக்களிடையே சிறப்பான, திறமையான முறையில் பரவச் செய்வது அத்துறையில் உள்ள ஒவ்வொருவரின் முக்கிய கடமையாகும். இதில் பள்ளி வயது வந்த சிறார்களுக்கு ஆரம்பக் கல்வியும், உயர்கல்வியும் முறையான முறையில் அளிப்பதுடன், பள்ளி நீக்கம் செய்யப் பட்டவர்களுக்கும் வேளாண்மை மற்றும் கைத்தொழில்களில் ஈடுபட்டிருக்கும் பள்ளி வயதுக்கு மேற்பட்ட இருபால் மக்களுக்குப் அளிக்கப்படும் முறைசாராக் கல்வியும் அடங்கும். இதில் முறையான கல்வியை கிராம மக்களிடையே பரப்புவதற்கு முன்னுரிமை தரப்பட்டு, ஆரம்ப, நடுநிலை மற்றும் உயர்நிலைப்பள்ளிகள் கிராமங்களில் நடத்தப்படுகின்றன.

தற்போது முறைசாராக் கல்விக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகின்றது. இந்த இரண்டு முறைகளின்படியும் போதிக்கப்படும் கல்வியானது மிகச் சிறப்பாகவும், சிக்கனமான முறையிலும், குறுகிய காலத்திலும், கிராம மக்கள் யாவருக்கும் பயன்படும் முறையிலும் பரப்பப் பட வேண்டும். ஒருநாடு போர்க் கோலத்தில் இருக்கும்போது அந்நாட்டு அரசும், மக்களும் ஒருங்கிணைந்து, சகல தியாகங்களிலும் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு பகையை வெல்ல முயல்வது போல், இந்நாட்டு மக்களும் குறிப்பாக கிராமப்புற மக்களும், கல்வித்துறையும் ஒருங்கிணைந்து மக்களின் எழுத்தறிவின்மைக்கு

எதிராகப் போர் தொடுக்க வேண்டும். இப்போரில் வெற்றி பெற, கல்வித்துறைக்கு உறுதுணையாக இருந்து அதன் சகல திட்டங்களையும் நிறைவேற்றுவதில் ஒத்துழைக்க வேண்டியது எல்லா மக்களின் கடமையுமாகும். யாருக்காகத் திட்டங்கள் தீட்டப்படுகின்றனவோ அவர்கள் அத் திட்டங்களில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டார்களானால், அத்திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற முடியும்.

தமிழ்நாட்டில் உள்ள மக்கள் இத்துறையில் சிறப்பான முறையில் கல்வித்துறையுடன் ஒத்துழைத்து நல்ல முன்னேற்றம் கண்டுள்ளனர். பள்ளிகளில் பயிலும் வசதி குறைந்த சிறார்களுக்கு அரசு இலவச மதிய உணவுத் திட்டத்தை நிறைவேற்றி வருவதுடன், இம்மதிய உணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் ஒன்று முதல் மூன்று வகுப்பு வரை பயிலும் சிறார்களுக்கு இலவச சிலேட்டு மற்றும் பாடப் புத்தகங்கள் வழங்கி வருகின்றது. இவ்வாண்டில் மக்கள் உதவியால் 2,800 உயர்நிலைப் பள்ளிகளிலும் 2,800 தொடக்க நடுநிலைப் பள்ளிகளிலும் புத்தக வங்கிகள் ஏழை மாணவர்களுக்காகத் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், பின்தங்கிய மற்றும் அரிசன வகுப்பைச் சார்ந்த வசதி குறைந்த பிள்ளைகளுக்குப் படிப்புதவி நிதியும் அளிக்கப்படுகிறது. முன்கூறிய எல்லாச் சலுகைகளையும் பெற்று அவற்றை நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு அம்மாணவர்கள் நல்ல முன்னேற்றமடைந்து வருகின்றனர். இது சம்பந்தமாகப் பெற்றோர் தனிக்கவனம் செலுத்தி அக்கறையுடன் தங்களின் பிள்ளைகளின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க வேண்டும்.

அரசும் தன் பங்கிற்கு, எங்கெல்லாம் பள்ளிகள் தேவையோ அங்கெல்லாம் உடனடியாகப் பள்ளிகள் திறந்திருக்கிறது. தமிழ்நாட்டில் ஆரம்பக்கல்வியைப் பொறுத்த மட்டில் கல்வி வசதி அற்ற கிராமங்களே இல்லையென்று சொல்லலாம். இவை தவிர நடுநிலைப் பள்ளிகளையும், உயர்நிலைப் பள்ளிகளையும் தேவையான இடங்களிலெல்லாம் அரசு திறந்து வந்திருக்கிறது. இப்படித் திறக்கப்பட்ட பள்ளிகள், அவை உள்ள இடங்களில் பள்ளி வயது வந்த எல்லாப் பிள்ளைகளும் அவைகளில் சேர, பள்ளி ஆசிரியர்களும், பெற்றோர்களும், கல்வித்துறையும் சேர்ந்து பெருமுயற்சி செய்து பெருமளவு வெற்றியும் பெற்றுள்ளது. குறிப்பாக நடப்பு ஆண்டில் கிராமப்புற மற்றும் நகர்ப்புற ஆரம்ப, நடுநிலை மற்றும் உயர்நிலைகளில் குறிப்பிட்ட இலக்கிற்கு மேலாகவே, பள்ளி வயது வந்த சிறார் சேர்க்கப்பட்டுள்ளனர். இது உண்மையிலேயே ஒரு பெரும் சாதனையாகும். எழுத்தறிவின்மைக்கு எதிராக நாம் தொடுத்த போரில் நாம் கண்டுள்ள முதல் வெற்றியின் அறிகுறியே இது என்பது மிகையாகாது. கிராமப்புற மக்களின் விழிப்புணர்ச்சிக்கு இது மற்றுமோர் எடுத்துக்காட்டு. கல்வி அறிவின் அவசியத்தை நன்குணர்ந்த இக்கால கிராமப்புற மக்கள் தங்களின் பிள்ளைகள் பள்ளி வயதிலேயே கல்வி கற்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் அவர்கள் செய்யும் எல்லாவித முயற்சிகளின் முதல் எடுத்துக்காட்டே இது. கல்வித் துறையுடன் ஒத்துழைக்க முன்வந்திருக்கும் கிராம மக்கள், தங்களின் பிள்ளைகள் தொடர்ந்து முழுக் கல்வியறிவு பெற எல்லாவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். மாணவர் பள்ளி வகுப்புகளில் தேக்கமடையாமலும் பள்ளியிலிருந்து பெயர் நீக்கம் ஆகாமலும் கல்வி பயின்று பள்ளியை விட்டுவெளியேற ஆசிரியர்களுடன் பெற்றோர் ஒத்துழைக்க வேண்டும்.

அரசும், கல்வித்துறையும் சேர்ந்து தேர்ந்தெடுத்த கல்வித் திட்டத்தை நிறைவேற்றி வைக்க பள்ளிக்கட்டிடங்கள், நூல்கள் மற்றும் கல்வித் துணைப் பொருட்கள் அரசாங்கத்தினால் இலவசமாக வழங்கப்படுகின்றன. திருத்தியமைக்கப்பட்ட பாடத் திட்டங்களின்படி ஆங்கிலம், அறிவியல் மற்றும் புதுமுறைக் கணிதம் போதிப்பதற்கு அந்தந்தத் துறை ஆசிரியர்களுக்கு உள்ளிடைப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. கிராமப்புற ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கும், 'ஐ. நா. சர்வதேச குழந்தைகள் நலநிதி ஸ்தாபனத்தாரால் (யுனிசெஃப்) வழங்கப்பட்ட அறிவியல் போதனைக்குத் தேவையான அறிவியல் போதனா உபகரணப் பெட்டகங்கள் வழங்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் இதுவரையில் 2,000 ஆரம்பப் பள்ளிகளுக்கும் 2,130 நடுநிலைப் பள்ளிகளுக்கும் இத்தகைய ஆய்வுக்கூட பெட்டகங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் கணிசமான அளவு கிராமப்புறப் பள்ளிகளுக்கே வழங்கப்பட்டன.



புதுமுறைக் கணிதம் மற்றும் உயர்நிலைப் பாடத்திட்ட அறிவியல் போதனா ஆசிரியர்களுக்குத் தனித்தனியே உள்ளிடைப் பயிற்சிகள் சிறப்பான முறையில் அளிக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் இப்பயிற்சித் திட்டத்தை நிறைவேற்றி வைக்க 'யுனிசெஃப்' ஸ்தாபனமும், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனமும் அரசுடன் ஒத்துழைத்துச் சிறந்த முன்னேற்றம் கண்டுள்ளன. இவை தவிர உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் சேவா மனப்பான்மையுடன் இலவச உள்ளிடைப் பயிற்சி வகுப்புகளும் நடத்தி வருகின்றனர். இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிலுள்ள ஆரம்ப, நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் பயன்பெற்றுள்ளனர். பள்ளி இடவசதியை எடுத்துக்கொண்டோமானால் அரசாங்கத்தினால் நடத்தப்படும் பள்ளிகளின் கட்டிடங்கள் தேவைக்கேற்ப ஆண்டுதோறும் புதுப்பித்தலோடு புதுக் கட்டிடங்களும் கட்டித் தரப்பட்டு வருகின்றன. தனியார் பள்ளிகளின் கட்டிடம் கட்டுவதற்கு, அங்கீகரித்த திட்டத்தின் கீழ் மானியங்களும் வழங்கப்படுகின்றன. பள்ளி விளையாடுமிடங்கள் வாங்குவதற்கும் அரசு தாராள சிந்தனையுடன் மானியம் வழங்கி வருகின்றது.

பள்ளி நூல் நிலையங்களைப் பற்றி எடுத்துக் கொள்வோமானால் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு ஆண்டுதோறும் கணிசமான தொகைக்கு அரசு நூல்களை நேரடியாக வாங்கி வழங்கி வருகின்றது. இதைப் போலவே ஆண்டுதோறும் நூறு அரசுயர் பள்ளிகளுக்கு ஒவ்வொன்றுக்கும் ரூபாய் ஆயிரத்திற்குக் குறையாமல் நூல்கள் நேராக வாங்கி வினியோகிக்கப்படுகின்றன.

மக்கள் உதவியால்எல்லா பள்ளிகளிலும் வானொலிப் பெட்டிகள் அமைக்கும் திட்டமும் வெற்றி பெற்று வருகின்றது. இத்திட்டங்கள் கிராமப்புற பள்ளிகளுக்கு மிகுந்த பயனுள்ளதாக இருக்கின்றன.

நாம் இதுவரை முறையான கல்வியைப் பற்றிப் பார்த்தோம். இனி முறைசாராக் கல்வியைப் பற்றிப் பார்ப்போம்.

கிராமப் புறங்களில் அறியாமையின் காரணமாகவோ, வசதிக் குறைவின் காரணமாகவோ பள்ளியை விட்டு நின்றுவிட்ட, வயது சற்று அதிகரித்த ஆண், பெண் இருபாலருக்கும் இம்முறைசாராக் கல்வியின் மூலம் கல்வி புகட்டத் திட்டமிடப்பட்டு அத்திட்டம் நிறைவேற்றவும் படுகின்றது. கிராமப் புறங்களுக்கு ஏற்ற வகையில் இது,

(1) ''முதியோர் கல்வி''
(2) 'உழவர் செயல்முறை எழுத்தறிவுத் திட்டம்'

(3) 'எழுத்தறியாமையைப் போக்கும் திறன் பணித்திட்டம்' மற்றும்

(4) 'முறைசாராக் கல்வி'

எனத் தனி வகைகளாகப் பிரிக்கப்பட்டு மாலை நேரங்களில் நடத்தப்பட்டு வருகின்றது.

இதில் முதலாவதாகக் கூறப்பட்ட முதியோர் கல்வித்திட்டத்தின் கீழ் 8 முதல் 18 வயது முடிய உள்ள ஆண், பெண் இருபாலருக்கும் பொதுக் கல்வி புகட்டப்படுகிறது. தமிழ்நாட்டில் மொத்தம் 10 இடங்களில் இவை செயல்பட்டு வருகின்றன. எழுதப் படிக்கவும், செய்தித்தாள்களைப் படித்துப் பொது அறிவை அபிவிருத்தி செய்து கொள்ளவும், சுலபமான கணக்குகளைச் செய்து கொள்ளவும், நடைமுறை அறிவியல் அறிவு பெறவும் இதில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ள மாணவர்களைத் தயார் செய்கிறது.

இரண்டாவதாகக் கூறப்பட்ட உழவர் செயல்முறை எழுத்தறிவு திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் (செங்கற்பட்டு, தென்னார்க்காடு, வடார்க்காடு, தஞ்சை, திருச்சி, கோவை, திருநெல்வேலி மற்றும் மதுரை மாவட்டங்கள்) 630 கிராமப்புற மையங்கள் செயல்பட்டு வருகின்றன ஒவ்வொரு மையத்திலும் 15 முதல் [illegible] வயதுள்ள இருபாலரும் 30 [illegible] படிக்க வசதி உள்ளது. ஒரு வருடம் வரையில போதிக்கப்படும் இக்கல்வித் திட்டத்தில் முதல் ஆறு மாதங்களுக்குச் செயல்முறை எழுத்தறிவுத் திட்டமும், அடுத்த ஆறு மாதங்களுக்கு உழவர் தொடர் கல்வித் திட்டமும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. முதல் ஆறு மாதத்தில் நன்றாக எழுதப்படிக்க, கணக்கு வைத்துக்கொள்ளத் தேர்ச்சி பெறுகின்றனர். அடுத்த ஆறு மாதங்களில் நடைமுறை வேளாண்மை, கோழிவளர்த்தல், ஆடு, மாடு மற்றும் தேனீ வளர்த்தல் முதலியவற்றில் நவீன முறைகளைப் பற்றித் தெரிந்து கொள்கின்றனர். அரசு வேளாண்மைத் துறை மற்றும் கால்நடைப் பராமரிப்புத் துறை இரண்டும் இதில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களுக்குத் துணை நிற்கின்றன. இத்திட்டத்தின் கீழ் கல்வி பெறுகின்றவர்களுக்குத் தேவையான நோட்டுப் புத்தகங்களும், பென்சில்களும் இலவசமாக வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்படுகின்றனர்.

மூன்றாவதாகக் கூறப்பட்ட எழுத்தறியாமையைப் போக்கும் திறன் பணித்திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் ஆயிரம் மையங்கள் தொடங்கப்பட்டு நடந்து வருகின்றன. 15 வயதுக்கு மேற்பட்ட இருபாலரும் இதில் சேர்ந்து பயன்பெறுகின்றனர். இதிலும் மாணவ, மாணவியருக்கு நோட்டுப் புத்தகங்கள், சிலேட்டு, மற்றும் பென்சில்கள் இலவசமாக அளிக்கப்படுகின்றன ஒவ்வொரு மையத்திலும் 30 மாணவர் சேர்க்கப்பட்டு உள்ளனர். இத்திட்டம் இரண்டுக்காலத்திற்கு நடைபெற்று வருகின்றது.

நான்காவதாகக் கூறப்பட்ட முறைசாராக் கல்வித் திட்டம் 15 முதல் 25 வயது வந்த கல்வியறிவற்ற மற்றும் நடுவிலேயே கல்வி கற்றலை நிறுத்திவிட்ட இருபாலருக்கும் பயன்தரும் திட்டமாகும். இத்திட்டம் கோவை மற்றும் திருச்சி மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் நூறு மையங்களில் செயல்படுத்தப்படுகின்றது. இதில் திருச்சி மாவட்டத்தில் இயங்கும் திட்டத்திற்கு மத்திய அரசும், கோவை மாவட்டத்தில் இயங்கும் திட்டத்திற்கு மாநில அரசும் நிதி வசதி அளித்து வருகின்றன. இத்திட்டத்திலும் ஒரு மையத்திற்கு 30 மாணவர் வீதம் சேர்க்கப்படுகின்றனர். மாணவருக்கு வேண்டிய நோட்டுப் புத்தகங்கள், புத்தகங்கள் மற்றும் பென்சில்கள் இலவசமாக அளிக்கப்பட்டு ஊக்குவிக்கப்படுகின்றனர்.

நாம் இதுவரை தமிழ்நாட்டில் கிராமங்களில் எழுத்தறிவின்மையைப் போக்கத் தொடுத்த போரைப் பற்றித் தெரிந்து கொண்டோம். இப்போரில் நாம் பெரும் வெற்றி பெற வேண்டு[illegible]ன், போர்க்காலத்தில் எந்தெந்த [illegible] முயற்சிகள் ஒன்றாக இணைந்து செய்ய வேண்டுமோ, அவற்றைப் போலவே, இதிலும் நாம் ஒருங்கிணைந்து செயல்புரிந்து அறியாமையை வெல்வோமாக!



# குறைந்த செலவில் வீடுகள்!

வீட்டு மனையற்ற ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு வீட்டு மனை விநியோகிக்கும் பணி, குறைந்த செலவில் வீடுகள் அமைப்பதற்கான வசதிகளை அளிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளது. நாட்டில் கட்டுமானப் பொருள்களில் வேறுபாடு காணப்படுவதால், கட்டடங்களின் வடிவமைப்பும் பல்வேறு விதமாக உள்ளது. மத்தியக் கட்டட ஆராய்ச்சிக் கழகம் கட்டுமானத் தொழில் நுட்ப முறைகளை வகுத்து, அந்த முறைகளை அமலுக்குக் கொண்டு வருவதற்கான தக்க கட்டுமானப் பொருட்களை வடிவமைத்து உருவாக்கியுள்ளது. அக்கழகத்தின் சில குறிப்பிடத்தக்க பணிகள் வருமாறு :

## 1. மண்சுவரிலிருந்து நீர்க்கசிவு ஏற்படாமல் இருக்க வழி

கிராமங்களில் மண் சுவரினால் வீடு கட்டுவது இன்னமும் கடைப்பிடிக்கப்படுகிறது. மழைக் காலத்தின்போது, மண் சுவர்களினால் கட்டப்பட்ட பல வீடுகள் நீர்க்கசிவு காரணமாக இடிந்து விடுகின்றன. இதனால் ஒவ்வொரு ஆண்டும் பெரிய அளவு பழுது பார்க்கும் பணி மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. 'பிடுமன்' கரைசலை இந்தச் சுவர்களின் மீது தெளிப்பதன் மூலம், நீர்க்கசிவைத் தடுக்க முடியும் என்பதை மத்தியக் கட்டட ஆராய்ச்சிக் கழகம் கண்டுபிடித்துள்ளது. இதற்காகும் செலவும் குறைவுதான். 50 லிட்டர் மண்ணெண்ணெயில் 25 கிலோ கிராம் பிடுமன் கரைசல் தயாரிக்கப்பட்டு, பின்னர் ஆறவைக்கப்பட்டு வடிகட்டப்படுகிறது. கிராமப் பஞ்சாயத்திடம் கிடைக்கக்கூடிய தெளிப்பானைக் கொண்டு, இந்தக் கரைசல் சுவர்மீது தெளிக்கப்படுகிறது. 4 மணி நேர இடைவேளையில் இரண்டு முறை இந்தக் கரைசலைத் தெளிக்க வேண்டும். இந்தக் கரைசல் தெளிக்கப்பட்ட சுவர்கள் பழுப்பு நிறத்தில் காட்சியளிக்கும். ஒரு கிலோ கிராம் சுண்ணாம்பில், 75 கிராம் பிசினைச் சேர்த்து வெள்ளையடித்து விட வேண்டும். பல கிராமங்களில் மண் வீடுகளின் வெளிச் சுவர்கள் மீது இந்தப் பிடுமன் கரைசல் தெளிக்கப்பட்டது. பெருமழை பெய்தபோது கூட அந்த வீடுகளின் சுவர்களிலிருந்து நீர்க்கசிவு ஏற்படவில்லை. இந்தப் பிடுமன் கரைசல் தெளிக்கப்பட்ட சுவர்களில் 4 லிருந்து 5 ஆண்டுக் காலத்திற்கு நீர்க்கசிவு ஏற்படுவதில்லை. ஒரு சதுர மீட்டர் சுவருக்கு இந்தக் கரைசலைத் தெளித்து, வெள்ளையடிக்க சுமார் ரூபாய் 1.50 தான் செலவாகிறது.

## 2. வீட்டுக் கூரை தீப்பிடிக்காமல் இருக்க வழி

கிராமங்களின் பல்வேறு வீடுகளின் கூரைகள், வைக்கோலினாலோ அல்லது பனை ஓலைகளினாலோ அல்லது தென்னை ஓலைகளாலோ தான் வேயப்பட்டுள்ளன. கூரைகளுக்கு மூங்கில் கழிகள் பயன்படுத்தப்படுகின்றன. கோடைக் காலத்தில், இந்தக் கூரைகள் தீப்பற்றிக் கொள்கின்றன. தீ கிராமம் முழுவதும் எளிதில் பரவி விடுகின்றது. கால்நடை, மனிதர்கள் ஆகியோரின் உயிருக்கு ஆபத்து நேரிடுகிறது. மேலும் சொத்து இழப்பும் ஏற்படுகிறது. கூரை வேயப் பயன்படுத்தப்படும் பொருட்கள் எளிதில் தீப்பிடிக்காமல் இருக்கவும், தீ விபத்து நேரிடாமல் இருக்கவும் இக்கழகம், எளிய சிறந்த சுலபமான முறையொன்றை உருவாக்கியுள்ளது.

கூரை வேயப்படும் எல்லாப் பொருட்களும் 'டை அமோனியம் பாஸ்ஃபேட்' (99.5 சதவிகிதம்), 'சோடியம் ஃப்ளோரைடு' (0.05 சதவிகிதம்) ஆகியவை கலந்த 14 சதவிகிதக் கரைசலில் முதலில் 10 முதல் 12 மணி நேரம் ஊற வேண்டும். பின்னர் அவற்றைக் காய வைக்க வேண்டும். பின்னர் அப்பொருட்களைக் கொண்டு கூரை வேய வேண்டும். தீப்பிடிக்காமல் இருப்பதற்கும், தண்ணீர் ஈர்க்காமல் இருப்பதற்குமான பெயின்டை அக்கூரையின் வெளிப்புறத்தில் பூச வேண்டும். இதனால் அக்கூரையில் நீர் ஒழுக்கு ஏற்படாது. மேலும் அதிக நாட்களுக்கு நீடித்து இருக்கும். முதலில் இரசாயனப் பொருட்களைக் கரைசலில் ஊற வைத்து, பின்னர் பெயின்ட் பூசுவதற்கு, ஒரு சதுர மீட்டருக்கு ரூ. 5.50 தான் செலவாகிறது. இரசாயனப் பொருட்கள் கலவையில் ஊற வைத்து பின்னர், பெயின்ட் பூசுவதற்கு கூடுதல் செலவு ஆன போதிலும் கூரைகளின் ஆயுட் காலம் அதிகரிக்கிறது.





## 3. சிமென்ட் எஃகு இல்லாமல் வீடு கட்ட முடியும்

சிமென்ட், எஃகுப் பொருட்கள், மற்ற அரிய பொருட்களின் உபயோகத்தைக் குறைத்துக் கொண்டோ, அல்லது அவை இல்லாமலேயோ வீடு கட்டுவதற்கான தொழில் நுட்ப முறைகள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. உள்ளூர் வளங்களையும் தொழில் திறமைகளையும் கொண்டு சிறந்த வீடுகளை அமைப்பதற்கான ஒரு முயற்சிதான் 'சர்வதோகிருஹத்' திட்டம்.

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாவன:

1. இந்தியாவில் பெரும்பாலும் எல்லாக் கிராமங்களிலும் எளிதில் கிடைக்கக் கூடிய செங்கற்கள், மண், மூங்கில் ஆகியவற்றைக் கொண்டு இந்த முறையில் வீடுகளைக் கட்டலாம்.

2. இத்தகைய வீடுகளைக் கட்டுவது மிகவும் சுலபம். ஆகையால் கட்டடத் தொழிலில் தொழில் தேர்ச்சி பெற்றவர்கள் அவசியம் இல்லை.

கூடுகளைக் கட்டுவது போன்ற முறை இந்த வீடுகளைக் கட்டும் விஷயத்தில் கடைப்பிடிக்கப்படுகிறது.

## 4. தானியக் களஞ்சியம்

மத்தியக் கட்டட ஆராய்ச்சிக் கழகம் வீட்டு உபயோகத்திற்காக, ஒரு டன் முதல் 3 டன் கொள்ளளவு கொண்ட தானியக் களஞ்சியத்தைக் கட்டும் புதிய பணியிலும் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. நிலத்தடியிலும், தரைக்கு மேலும் காங்கிரீட், செங்கற்கள் ஆகியவற்றினால் ஆன தானியக் களஞ்சியங்களை வடிவமைத்து உருவாக்கியுள்ளது. மண், மூங்கில், மரம் அறுக்கும் ஆலைகளிலிருந்து கிடைக்கும் மரத்தூள் போன்ற உள்ளூரில் கிடைக்கும் பொருட்களையும், சிமென்ட், செங்கல், பிடுமன், பூச்சிமருந்து ஆகியவற்றையும் பயன்படுத்தி 1 டன் கொள்ளளவு கொண்ட தானியக் களஞ்சியத்தை இக்கழகம் அண்மையில் வடிவமைத்துக் கட்டியுள்ளது. எலி, பூச்சி, ஈரப்பதம் ஆகியவற்றினால் இக்களஞ்சியம் பாதிக்கப்படாமல் இருக்க, சில தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சூரிய வெப்பத்தால் உலர்த்தி வைக்கப்பட்ட செங்கற்களும், மண்ணும் பயன்படுத்தப்படுவதோடு, மூங்கில் கழிகளினால் அந்தக் களஞ்சியத்தின் உட்புறச் சுவர் வலுவாக்கப்படுகிறது. எளிதில் கரைந்து விடாத விதத்தில் உட்புறச் சுவரில் மண் பூசப்படுகிறது. இந்தத் தானியக் களஞ்சியத்தை அமைக்க 275 ரூபாய்க்கு மேல் செலவாகாது. இருந்தாலும் ஒருவர் தாமாகவே இதை அமைத்துக் கொள்வதாக இருந்தால் செலவு இன்னமும் குறையும். மண், மூங்கில் ஆகியவை இலவசமாகக் கிடைக்க ஏற்பாடு செய்து சுயமுயற்சியில் ஈடுபட்டால், ஒருவர் சுமார் 90 ரூபாய்க்குள் தானியக் களஞ்சியத்தை ஏற்படுத்தி விடலாம்.

இந்தத் தானியக் களஞ்சியம் நம்பகமானதுதானா என்பது குறித்து ஆய்வு நடத்தப்பட்டது. ஹாப்பூரிலுள்ள இந்திய தானிய சேமிப்பு ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கழகம் இத்தகைய தானியக் களஞ்சியத்தில் நீர்க்கசிவு, காற்று புகாத் தன்மை ஆகியவை பற்றி தற்போது பரிசோதித்து வருகின்றது.

## 5. அரிசி தவிடையும், கழிவுச் சுண்ணாம்பையும் பயன்படுத்தி சுண்ணாம்புக் கலவை தயாரிக்கும் முறை

அரிசித் தவிடு, கழிவுச் சுண்ணாம்பு ஆகியவற்றைக் கொண்டு கட்டடப் பூச்சுக்கான சுண்ணாம்புக் கலவை தயாரிப்பதற்கான இரு முறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. முதல் முறைப்படி தண்ணீரைக் கொண்டு அரிசித் தவிடும் சுண்ணாம்பும் சிறு உருண்டைகளாக்கப்பட்டு வெய்யிலில் காய வைக்கப்பட வேண்டும். செங்கற்சூளையில் பின்னர் அந்த உருண்டைகள் வைக்கப்பட்டு சுடப்பட வேண்டும். பின்னர் அவை தூளாக்கப்பட வேண்டும். அத்தூளை சுண்ணாம்புடனோ அல்லது சுண்ணாம்பு, மணலுடனோ சேர்க்கப்பட்டு சுண்ணாம்புக் கலவையைத் தயாரிக்கலாம்.

இரண்டாவது முறைப்படி நெல் உமியும், சர்க்கரை ஆலை, காகித ஆலை, தோல் தொழிற்சாலை, அஸிடிலின் வாயு மற்றும் இரசாயன உரத் தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் கழிவுச் சுண்ணாம்பும், தண்ணீரைக் கொண்டு சேர்க்கப்பட்டு உருண்டைகளாக்கப்பட வேண்டும். பின்னர் வெய்யிலில் உலர்த்தப்பட்டுக் கடைசியில் தூளாக்கப்பட வேண்டும். இதைப் பின்னர் சுண்ணாம்புடன் கலந்து

கண்ணும்புக் கலவையாக மாற்றி, கட்டடம் கட்டப் பயன்படுத்தலாம்.

இவ்விரு முறைகளிலும் அதிக எரி பொருள் தேவைப்படுவதில்லை. ஏனெனில் தேவைப்படும் வெப்பத்தை அரிசித் தவிடு அளித்து விடுகிறது. நவீன சாதனமோ அல்லது யந்திரமோ அல்லது தொழில் நுட்ப முறையோ தேவையில்லை. முன்னோடி அடிப் படையில் கட்டப்பட்ட வீடுகள் விஷயத்தில் பல டன்னுக்கு இந்தப் பொருட்கள் பயன் படுத்தப்பட்டுள்ளன. அதிக அளவுக்கு இந்தச் சுண்ணும்புக் கலவையைத் தயாரிப்பதற்கான சாத்தியக் கூறு பற்றி தற்போது ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது.

### 6. தேவைப்படாத தென்னை நாரைக்கொண்டு கூரைப் பலகைகள்

கட்டடங்களுக்கான கூரைப் பொருட்கள் தேவை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, இக்கழகம் தென்னை நாரைக் கொண்டு கூரைப் பலகையைத் தயாரிக்கும் முறையைக் கண்டு பிடித்துள்ளது. முதலில் உலோகத் தண்ணீரில் இரண்டு மணி நேரத்திற்கு தென்னை நார் ஊற வைக்கப்படுகிறது. பின்னர் ஊறிய நாரிலிருந்து நீர் இறக்கப்படுகிறது. உலர்ந்த சிமென்டுடன் கலக்கப்படுகிறது. மோல்டில் இந்தக் கலவை போடப் படுகிறது. பின்னர் அழுத்தப்பட்டு அதே அழுத்தத்தில் 4 முதல் 8 மணி நேரம் வைத்திருக்கப்புடுகிறது. பின்னர் அந்தப் பலகை எடுக்கப்பட்டு உலர வைக்கப்படுகிறது.

இந்த முறையில் கூரைப் பலகை தயாரிக்க கனரக யந்திரமோ அதிக மூலதனமோ தேவையில்லை. இந்தப் பலகைக்கு மேற்பூச்சு கொடுத்தவுடன் மிகவும் நன்றாகக் காட்சியளிக்கிறது. மேலும் இத்தகைய பலகைகள், அதிக அளவுக்கு வெப்பத்தைத் தாங்கும் சக்தி உடையதாக உள்ளன.

### 7. வட இந்தியாவில் மங்களூர் ஓடு உற்பத்திக்கு வழி

தென்னிந்தியக் களிமண் கொண்டு மங்களூர் ஓடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இது நாள்வரை வட இந்தியாவில் வண்டல் மண் கொண்டு இத்தகைய ஓடுகளைத் தயாரிக்க முடியாமல் இருந்தது. மத்தியக் கட்டட ஆராய்ச்சிக் கழக ஆய்வுக் கூடத்திலும் தொழிற்சாலையிலும் மேற்கொண்ட ஆய்வுகளிலிருந்து வட இந்தியாவில் தேர்ந்தெடுத்த வண்டல் மண்ணிலிருந்து இத்தகைய கூரை ஓடுகளையும், தரை அமைப்புக்கான செங்கற்களையும் தயாரிக்க முடியும் என்பது தெரிய வந்துள்ளது. இந்த வண்டல் மண் களிமண்ணுடன் கலக்கப்பட்டு பின்னர் கையினால் இயக்கக் கூடிய கருவி மூலம் மங்களூர் ஓடுகள் உருவாக்கப்பட்டு, செங்கற் சூளையில் அதி வெப்பத்தில் சுடப்படுகிறது. இந்தியத் தரத்திற்கு ஏற்றவையாக அவை உள்ளன. அவை எளிதில் உடைவதில்லை.

ஆய்வு அடிப்படையில் இந்த ஓடுகள் தயாரிக்கும் முயற்சியில் இக்கழகம் ஈடுபட்டு உள்ளது. உள்ளூர் வண்டல் மண் கொண்டு 1,500க்கும் அதிகமான ஓடுகள் தயாரிக்கப் பட்டன. பள்ளிகளிலும், பொருட்காட்சிகளிலும் அவை வைக்கப்பட்டன.

## சோளப் பயிரில் சில புதிய கண்டுபிடிப்புகள்



தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், சோளப் பயிரில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு சோதனைகளில் கண்டறியப்பட்டதில் சில இங்கு கொடுக்கப் பட்டுள்ளன.

மானாவாரிச்சோளத்திற்கு ஏற்ற இடைவெளி 45×12 செ. மீ. என்று அறியப் பட்டது. இறவைச் சோளத்தில் ஊடுபயிர் சாகுபடி செய்தால் மிகுந்த இலாபம் அடையலாம். சோளத்தை இணைவரிசைகளாக 60×30 செ. மீ. இடைவெளியில் விதைத்து, இவற்றிற்கு நடுவில் உளுந்து அல்லது அவரையை இரண்டு வரிசைகளாக நட்டால் எக்டருக்கு சுமார் 6500 ரூபாய் நிகர வருமானம் கிடைக்கிறது.

சோளத்துடன் கோ. 8. அவரை இரகத்தைப் பயிரிட்டபொழுது தானியத்தில் உள்ள புரதச்சத்தின் அளவு தனிப்பயிராகப் பயிரிட்ட பொழுது இருந்ததைவிட அதிகமாக இருந்தது.

வெளியீடு :

தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை—3.



# பகத் சிங்

அடிமைப்பட்டுக்கிடந்தபாரத நாட்டை, உரிமை பெறச் செய்ய தம் உடல், பொருள், ஆவி, அனைத்தையும் தியாகம் செய்த வீரர்கள் பல்லாயிரக்கணக்கானோர்! அவர்கள் செய்த தியாகத்தின் விளைவே இன்று நாம் பெருமையுடன் வாழும் சுதந்திர பாரதம்

அத்தகைய சிறந்த தியாகிகள் வரிசையிலே ஒருவர் சர்தார் பகத்சிங்! பஞ்சாப் நாட்டு இளைஞன்! தன் உயிரைத் தியாகம் செய்த செம்மல்!

பஞ்சாப் மாநிலத்தில் லாயல்பூர் மாவட்டத்தில் புகழ் பெற்ற சீக்கிய வமிசத்திலே தோன்றியவர் (1907) பகத் சிங்! அவர் குடும்பமே தியாகக் குடும்பம்! லாகூரில் உள்ள ஆங்கிலப் பள்ளியில் ஆரம்பக் கல்வியும், பின்னர் கல்லூரிக் கல்வியும் பெற்ருர். இளமையிலேயே அவர் நெஞ்சில் நாட்டுப் பற்று அரும்பியது!

காந்தி அடிகள் வகுத்த அற வழிப்பாதையிலிருந்து விறு கொண்ட இளைஞர்கள், நாட்டுரிமை என்ற இலட்சியத்தை அடைய வேறு வழிகளைக் காண ஆரம்பித்தனர். புரட்சிகள் மூலம் இலக்கை அடைய எண்ணினர். பற்பல புரட்சி இயக்கங்களைத் தோற்றுவித்தனர் .பஞ்சாபில் ஒரு பெரும் இளைஞர் அணியை உருவாக்கி, அந்நியன் ஆதிக்கத்தை ஒழிக்க, பல சதித் திட்டங்களைத் தீட்டினுர் பகத்சிங். மாற்றுப் பெயர்கள் வைத்துக் கொண்டனர். வெள்ளையர் ஆட்சிக்குப் பல தொல்லைகளைக் கொடுத்தனர்.

1926-ல் லக்னோ அருகில் ககோரி என்னுமிடத்தில் ஓடும் ரயிலை நிறுத்தி சர்க்கார் கஜானவைக் கொள்ளையிட்டனர் இப் புரட்சியாளர்கள்! ஆங்கிலேயர் இப்புரட்சியாளர்களைக் கண்டு பிடிக்கப் பெரு முயற்சிகள் செய்ய வேண்டியிருந்தது.

பகத்சிங் வங்காளம், பிஹார் போன்ற பகுதிகளில் இருந்த புரட்சியாளர்களுடன் தொடர்பு கொண்டார். அவர்கள் ஒரு வலிவான அமைப்பை ஏற்படுத்திக் கொண்டனர்.

1928-ஆம் ஆண்டு 30-ஆம் நாள்! சைமன் கமிஷன் என்ற குழு லாகூருக்கு வந்தது. காந்தி அடிகள் அக்கமிஷனை பகிஷ்கரிக்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார். லாலா லஜபதிராய் தலைமையில் சென்ற ஊர்வலம், போலீசாரால் தடிகொண்டு தாக்கப்பட்டது. லஜபதிராய் கடுமையாகத்தாக்கப் பட்டார். அதன் விளைவாக அவர் இறக்க நேர்ந்தது.

லாலாஜி இறந்ததை இளைஞர்களால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. அவரைக்கண் மூடித்தனமாகத் தாக்கிய போலீஸ் சூப்பிரண்டு லாண்ட்ர்லை, கொந்தளித்த இளைஞர் நெஞ்சங்கள் 'பழிக்குப் பழி' வாங்க முடிவெடுத்தன. பகத்சிங்கும் அவரது தோழர்களும் சதித் திட்டம் தீட்டினர்.

1928-டிசம்பர் 17-ஆம் தேதி லாகூர் போலீஸ் ஸ்டேஷனுக்கு நேர் எதிரில் லாண்ட்ர்ஸ் கொலை செய்யப்பட்டார். கொலைகாரர்கள் தப்பிவிட்டார்கள். எல்லா சாலைகளும் கடுமையாக காவல் காக்கப்பட்டன. இளைஞர்களை யெல்லாம் சோதனை செய்தனர்.

பகத்சிங் ஒரு சர்க்கார் அதிகாரி போல் மாற்றுடை அணிந்தார். அவர் நண்பர் அவருக்கு 'பியூன்' ஆனுர். இருவரும் இரயில் நிலையம் சென்று முதல் வகுப்புப் பெட்டியில் ஏறித் தப்பினர். எந்த போலீஸ்காரரும் அவர்களைச் சந்தேகிக்கவில்லை.

பகத்சிங்கை, கைது செய்ய நாடெங்கும் விசேட போலீஸ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். பகத்சிங், வேறு வேறு மாற்றுடைகளில் பல இடங்களுக்குச் சென்று கொண்டிருந்தார். வங்கப் புரட்சியாளர்களைச் சந்தித்து, வெடி குண்டு தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அடுத்த பெரும் நிகழ்ச்சிக்குத் திட்டம் தீட்டிக் கொண்டிருந்தார் பகத்சிங்!

1929-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7-ஆம் நாள்! டில்லியில் நடந்த நிகழ்ச்சி நாட்டையே உலுக்கியது. டில்லி அசெம்பிளியில் வெடி குண்டுகள் வீசப்பட்டன. அறை முழுவதும் ஒரே புகை! ரகளை! ஆங்கிலேயர்களின் கூவக்குரல்!

வெடிகுண்டு வீசிய இரு இளைஞர்கள் ஓடவும் இல்லை, தப்ப முயலவுமில்லை. ரிவால்வார்கள் வைத்திருந்த அவர்கள் யாரையும் சுடவில்லை. சர்தார் பகத்சிங்கும், அவரது நண்பருமே அவர்கள்! தாங்கள் கைதுசெய்யப் படுவதை அவர்கள் விரும்பினுர்கள்! 'புரட்சி வாழ்க, ஆங்கில ஏகாதிபத்தியம் ஒழிக!' என்று முழக்கமிட்டனர். அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

அசெம்பிளி வெடிகுண்டு வழக்கு, லாகூர் கொலைவழக்கு ஆகிய வழக்குகளில் பகத்சிங் குற்றஞ்சாட்டப்பட்டார். சிறையில் அடைக்கப்பட்டார்.

சிறைச்சாலை பற்றிக் கவலைப் படாதவர் பகத்சிங். எப்பொழுதும் மகிழ்ச்சியுடன் ஏதாவது பாடிக் கொண்டே இருப்பாராம். பிற கைதிகளுக்குச் சுவையான நிகழ்ச்சிகள் பலவற்றைக் கூறுவாராம். சிறையிலேயும் கைதிகளின் சில வசதிகளுக்காகப் போராடினுர். உண்ணு விரதம் மேற்கொண்ட

டார். இதனுல் சிறைச்சாலை யில் சில வசதிகளைச் செய்ய அரசாங்கம் ஒப்புக் கொண்டது.

கோர்ட்டில் கைதிகளை ஆஜர்ப் படுத்துவதே பெருந்தொல்லை யாய் அமைந்தது போலீஸ்காரர் களுக்கு! அங்கு அழைந்து வரப் பட்டபோதெல்லாம் கோர்ட்டி லேயே 'புரட்சி ஓங்குக' ஏகாதி பத்தியம் ஒழிக!' என முழங்குவார் பகத்சிங்!

லாகூர் சதி வழக்குத் திட்டம் நாட்டின் கவனத்தைப் பெற்றது. அயல்நாடுகளிலும் அதுபற்றி அறிந்தனர். கோர்ட் நடவடிக் கைகளை பகத்சிங்கும் அவரது தோழர்களும் பகிஷ்கரித்தனர். விசாரணையின் பொழுது கோர்ட் டுக்கு வர மறுத்தனர்.

கைதிகள் விசாரணையின்றியே தீர்ப்பு வழங்கப்பட்டது. நீதி மன்றம் பகத்சிங் அவரது நண்பர் களான சுகதேவ், சிவராம் ஆகிய மூவருக்கும் தூக்கு தண்டனை வழங்கியது. அவர்களைப் பார்க்க உறவினர் கூட அனுமதிக்கப்பட வில்லை.

1931-ஆம் ஆண்டு மார்ச்சு 24 ஆம் நாள் பகத்சிங்கும் அவரு டைய இரு தோழர்களும் தூக்கி லிடப்பட்ட செய்தியைத் தாங்கி வந்தன காலைப் பத்திரிகைகள்.

மரணத்தின் போதும் பகத் சிங் தன் மன உறுதியையும், அஞ் சாமையையும் வெளிப்படுத்தினர். தூக்கிலிடப்படும் காட்சியைக் காண வந்த ஆங்கில மாஜிஸ்டி ரேட்டிடம் பகத்சிங் புன்னகை யுடன் கூறினர். ''மாஜிஸ்டி ரேட் அவர்களே நீங்கள் பெரிய அதிருஷ்டசாலி! ஒரு இந்தியப் புரட்சிக்காரன் தன் மகத்தான கொள்கைக்காகச் சிரித்தவாறே சாவைத் தழுவிக் கொள்வதை நேரில் காணும் வாய்ப்பு உங் களுக்குக் கிடைத்துள்ளது.''

''பகத்சிங்கும் அவருடைய நண்பர்களும் அமரத் தியாகிகள் ஆகிவிட்டார்கள். நான் அந்த இளம் தேச பக்தர்களைப் போற்று கிறேன்' என்றுர் காந்தி அடிகள்.

பகத்சிங் போன்ற இளைஞர் களின் தியாகமும், இணையற்ற துணிச்சலும், நமக்கு வேண்டும். ஆனல் புரட்சி வழிவிட்டு, காந்தி அடிகளின் அறவழியில் நின்று நம் நாட்டை எழில் மிகு பாரத நாடாக ஆக்குவோமாக.

(நன்றி: சென்னை வானெலி நிலையம்)





## காசு போட்டால் பால் கிடைக்கும்!

பால் வாங்கக் காலையும், மாலையும் கால்கடுக்கக் காத் திருக்கும் மக்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி!

இனி அவர்கள் 'கியூ'வில் நிற்க வேண்டியதில்லை. காசு போட்டதும் பால் கொடுக்கும் நவீன இயந்திரங்கள் சென்னை நகரில் இன்னும் 3 மாதங் களில் செயல்படவிருக்கின் றன.

இந்த இயந்திரங்களை தேசிய பால்வள நிறுவனம் தயாரித்துள்ளது. தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் சார் பில், இவை, சென்னை நகரில் மொத்தம் 25 இடங்களில் நிறுவப்பட்டு வருகிறது.

ஏற்கெனவே சென்னையில் 3 இடங்களில் பரீட்சார்த்த மாக நிறுவப்பட்டுள்ள இந்த இயந்திரங்கள் திருப்திகரமான முறையில் செயல்பட்டு வரு கின்றன.

ஒரு இயந்திரத்தில் மட்டும் குளுமைப்படுத்தப்பட்ட 1000 லிட்டர் பால் கொள்ளத்தக்க அளவில் பெரிய கண்ணுடி தொட்டி உள்ளது.

ஏற்கெனவே பாலுக்காகக் காசு கொடுத்து வாங்கிய ''டோக்கனை'' இயந்திரத்தில் உள்ள துவாரத்தில் போட வேண்டும். உடனே கண் ணுடிக் குழாயில் இருந்து தேவையான அளவு பால் கொட்டும். அதைப் பாத்திரத் தில் பிடித்துக் கொள்ள வேண்டும்.

இப்படி பால் விநியோகிப்ப தால், பால் செலவு இல்லை. எனவே பாலின் விலையும் மலிவாக இருக்கும்.

''பாலிதீன்'' பைகளில் அடைத்து விநியோகிக்கப் பட்டு வரும் பால் பிரபலமாகி வருவதுடன் அதற்கு கிராக்கி யும் அதிகரித்துள்ளது.

எனவே, தினமும் இப்படி விற்கப்படும் 60 ஆயிரம் பாலை இரட்டிப்பாக்க (1 இலட் சத்து, 20 ஆயிரம் லிட்டர்) உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக இந்த ஆண்டு இறுதிக்குள் மேலும் 2 இயந் திரங்கள் வரவழைக்கப்படும்.

சாதாரண பாலைவிட பை களில் விற்கப்படும் பால் லிட்டருக்கு 10 காசு அதிகம். கைகளில் எடுத்துச் செல்ல அடக்கமாகவும் கலப்படம் இல்லாமலும் கிடைப்பதால் இதனை மக்கள் அதிகமாக விரும்புகிறுர்கள்.

பதப்படுத்திய பால் விற்ப னையை செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, மதுரை மாவட்டங் களில் விரிவுபடுத்தவும் திட்ட மிடப்பட்டிருக்கிறது. சென்னை, மதுரை நகரங்களில் மொத்தம் 2 இலட்சத்து 50 ஆயிரம் லிட்டர் பதப்படுத்திய பால் தற்போது விநியோகிக்கப்படு கிறது.

## ஏழை எளியவர்களின் கடன் சுமை தீர்ந்தது!




**1976-ஆம் ஆண்டின் தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டத்தின்படி, ஆண்டு குடும்ப வருமானம் ரூபாய் 2,400-க்கு மேற்படாத கிராம மக்கள் பட்ட கடன்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.**

வெளியீடு: செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

பதிவு எண். M. 8676



# இளைய தலைமுறையினருக்கு இனியவாழ்வு பிறந்தது!

* அறிவைப் பெருக்கிக் கொள்ள அனைத்துப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் புத்தக வங்கிகள்!
* எல்லா மாணவர்களுக்கும் குறைந்த விலையில் நோட்டுப் புத்தகங்கள்!
* அரிசன, ஆதிவாசி, பிற்பட்ட, விமுக்த சாதி மாணவர்களுக்கு இலவசப் புத்தகங்கள் நோட்டுப் புத்தகங்கள், சிலேட்டுகள்!

இதனல் பயன்பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை :

1. அரிசன, ஆதிவாசி மாணவர்கள் - 1,45,520
2. பிற்பட்ட விமுக்த பரம்பரை மாணவர்கள் 30,339

* மாணவர் விடுதியில் தங்கிப் படிப்போர்க்குக் குறைந்த விலையில் உணவுப் பொருட்கள்!

இதனல் பயன்பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை :

1. அரிசன, ஆதிவாசி மாணவர்கள் - 41,296
2. பிற்பட்ட விமுக்த பரம்பரை மாணவர்கள் - 17,246

* மாதாந்திரச் சாப்பாட்டுச் செலவில் குறைவு !
* எல்லாப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கூட்டுறவுப் பண்டக சாலைகள் !
* இப்படி இருபது அம்சத் திட்டத்தால் ஏற்பட்டுள்ள நன்மைகள் ஏராளம் ! ஏராளம் .

**கல்வியைக் கண்ணெனக் கருதிக் கடமையைச் செய்வீர்!**

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.



# அரசு-மிகவுயர்ந்த தரமானது

## போர்ட்லேண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட். குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

**தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்**
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

**அரசு -வலிவும் வனப்பும் வாய்ந்தது**

AC-16





# தமிழரசு

16—11—1976

மலர் : 7 இதழ் : 10


## இந்த இதழில்...


| | பக்க எண் |
|---|---|
| அன்புருவாம் எங்கள் ஜவஹர் ... | 2 |
| நேருவே போற்றி ... ... | 3 |
| குழந்தைகளைச் செம்மையாக வளர்க்க வேண்டும் ... ... | 4 |
| நேருவின் வாழ்க்கைக் குறிப்புகள் ... | 6 |
| தேசிய ஒருமைப்பாடே நம் உயிர் மூச்சாகும்! ... | 9 |
| உலக அமைதிக்குப் பாடுபட்ட உத்தமர் | 11 |
| தீண்டாமை எனும்-பெரும்பாவம் ... | 26 |
| சாதி முறை நீடித்திருக்கும் வரை நமக்கு விடிவுகாலமே இல்லை ... | 28 |
| குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1955 ... | 30 |
| கவிஞர் போற்றும் சிதம்பரனார்! ... | 34 |
| கோவையில் என் தந்தை ... | 37 |
| தென்னாட்டுத் திலகர் ... | 41 |
| தேசபக்தர் சிதம்பரனார் ... | 45 |
| வ.உ.சிதம்பரனாரின் பெருமை ... | 46 |
| நேருவின் உயில் ... ... | 47 |


அட்டைப்பட விளக்கம்:
தமிழகக் குழந்தைகளுடன் நேரு.

# அன்புருவாம் எங்கள் ஜவஹர்!

நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளை



மன்னுயிரைப் போர்க்களத்தில் கொன்று வீழ்த்தி
  மலைமலையாய்ப் பிணக்குவியல் குவித்த தாலே
மன்னரெனப் பலர்வணங்கத் தருக்கி வாழ்ந்தோர்
  மாநிலத்தில் எத்தனையோ பேரைக் கண்டோம்!
தன்னுயிரை மன்னுயிர்க்காய்த் தத்தம் செய்து
  தருமநெறி தவறாத தன்மைக் காக
இன்னுயிர்கள் மனங்குளிர இளங்கோ என்றே
  எதிர்கொள்ளும் மன்னனெங்கள் ஜவஹர் லாலே!

சேனைகளை முன்செலுத்திப் பின்னால் நின்று
  'ஜெயித்து விட்டேன்' என்றுசொல்லிச் செருக்கி வாழும்
ஈனமுள்ள பெருமையினால் அரச ரென்போர்
  உலகத்தில் எத்தனையோ பேரைக் கண்டோம்!
தீனர்களின் துயர்துடைக்க முன்னால் நின்று
  தீரமுடன் பிறர்க்குழைக்கும் சிறப்புக் காக
மானமிகும் வீரரென எவரும் வாழ்த்த
  மன்னனென விளங்கிடுவான் ஜவஹர் லாலே!



ஆயுதத்தின் அதிகாரம் அதற்கே அஞ்சி
  அடிபரவும் பலபேர்கள் அருகே சூழப்
பேயுதித்துக் கொலுவிருக்கும் பெற்றி யேபோல்
  பிறர்நடுங்க அரசாண்டார் பலபேர் உண்டு;
போயுதித்த இடங்களெல்லாம் புதுமை பூட்டிப்
  புதையல்வந்து கிடைத்ததுபோல் பூரிப் பெய்தி
தாயெதிர்ந்த குழந்தைகள்போல் ஜனங்கள் பார்க்கத்
  தாவிவரும் மன்னனெங்கள் ஜவஹர் லாலே!

ஏழைகளின் குடிமுழுக வரிகள் வாங்கி
  இந்திரியச் சொந்தசுகங் களுக்கே வீசிக்
கோழையராய்ப் பிறர்உழைப்பில் கோலங் கொள்ளும்
  கோமான்கள் குவலயத்தில் பலபேர் உண்டு;
வாழையைப்போல் பிறர்க்குதவி வருத்தம் தாங்கி
  வறியவர்க்கே கனிந்துருகும் வரிசைக் காக
வாழிஜவர் வாழிஜவர் வாழி யென்று
  வாழ்த்திசைக்கும் மன்னனெங்கள் ஜவஹர் லாலே!





# நேருவே போற்றி!

சுத்தானந்த பாரதியார்



இந்தியா வுள்ள மட்டும்
  இமாலயம் உள்ள மட்டும்
சொந்தநா டினிது பெற்ற
  சுதந்திரம் உள்ள மட்டும்
எந்தையாம் காந்தி நாமம்
  இலகிடு மட்டும், எங்கள்
சிந்தையிற் கோயில் கொண்டாய்
  ஜெவஹரே ஜெய முனக்கே!

முத்திலே பூத்த வைரம்
  மோகன காந்தி ரத்னம்
புத்தரின் கருணை யுள்ளம்
  புதுயுகச் சிற்பி எம்மான்
சத்தியக் கொடிபி டித்து
  சகமெலாம் ஒருமை சேர
நித்தியம் பாடு பட்ட
  நேருவை நினையார் யாரே?

அச்சத்தைப் போக்கும் பார்வை
  ஆண்மையை ஊக்கும் செஞ்சொல்
வச்சிரம் போன்ற மேனி
  மனத்தினை அள்ளும் அன்பு
மெச்சிடக் கிழக்கும் மேற்கும்
  வீறுகொள் சாந்த சேவை
உச்சிவா னத்தில் வந்த
  உதயதா ரகையே வாழ்க!

வேருயர் நீரைப் போலே
  விடுதலைக் கொடித ழைத்துப்
பாருயர் நன்மை யோங்கப்
  பருவமா மழையே போன்றாய்
மேருயர் சீர்த்தி பெற்றாய்;
  மேதினி முழுதும் வாழ
நேருயர் அமைதி தந்த
  நேருவே போற்றி! போற்றி!



வானதி பதிப்பகத்தின்
'கவிஞர் நெஞ்சில் நேரு'
என்னும் நூலிலிருந்து.



## குழந்தைகளைச் செம்மையாக வளர்க்க வேண்டும்

—ஜவஹர்லால் நேரு

"இந்த நாட்டிலுள்ள குழந்தைகள் அனைவரும், நல்ல முறையில் வளர்த்து வரப்படுகிறார்களா என்று கவனித்துக் கொள்வதில் நம் அனைவருக்குமே பொறுப்பு உண்டு என்று நான் கருதுகிறேன். ஏனெனில், குழந்தைகள் இந்த நாட்டின் செல்வம். இந்தச் செல்வத்தை நாம் எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளுகிறோம் என்பதைப் பொறுத்துத்தான், இந்தியாவின் எதிர்காலம் அமைந்திருக்கிறது.

"உலக முழுவதிலும் உள்ள குழந்தைகளின் நினைவு எனக்கு வருகிறது. அவர்களிடம் பல விதங்களில் வெளிப்படையான மாறுதலைக் கண்டேன். பேசும் மொழிகள் எத்தனை! உடுத்தியிருந்த உடைகள்தான் எத்தனை விதம்! ஆனால் அவர்கள் அழகு முகங்களிலே காணப்பட்ட உணர்ச்சி, அதனால் தோன்றும் கவர்ச்சி, உலக முழுவதிலும் ஒன்றாகவே இருப்பதைக் கண்டேன். அவர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்தால், அவர்கள் விளையாடவோ, சண்டை போடவோ செய்வார்கள்.

"அவர்கள் சண்டை போட்டுக் கொள்வதும் ஒரு விளையாட்டுத்தான். தங்களுக்குள்ளே இன, நிற, சாதி, மத வேற்றுமைகளை அவர்கள் பார்ப்பதில்லை. அவர்களுடைய தாய் தந்தையரைவிடப் புத்திசாலிகளாக இருக்கிறார்கள். "துரதிருஷ்டவசமாக பெரியவர்களாக ஆகும்போது அவர்களுடைய இயற்கை அறிவை, பெரியவர்களின் போதனைகளும், நடத்தையும் மறைத்துவிடுகின்றன.

"ஆம், வயது வளர வளரத்தான் அவர்களுடைய உள்ளம் கறைப்படுகிறது என்று சொல்வதைவிட, கறைப்படுத்தப்படுகிறது என்றுதான் கூறவேண்டும்.

"குழந்தைகளின் பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு அறிவு போதித்து அறிவாளிகளாக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். என்னைக் கேட்டால் அவர்கள் குழந்தைகளை அதனதன் போக்கில் வளரவிட்டால் குழந்தைகள் தாங்களாகவே புத்திசாலிகளாக—அறிவாளிகளாக—விளங்குவார்கள்.

"உலகத்தின் பல விஷயங்களைக் குழந்தைகள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியந்தான். ஆனால் அவர்கள் தாங்களாகவே அவற்றைப் புரிந்து கொள்ள, நாம் வசதி வாய்ப்புக்கள் செய்து தரவேண்டும். நாமாக நமது மனப் போக்கின்படி உலக விஷயங்கள் பற்றிய ஞானத்தை அவர்கள் மூளையிலே திணிக்க முயற்சியெடுக்கக் கூடாது.

"குழந்தைகள் செம்மையாக வளருவதற்கு வகை செய்வதுதான் நமது நாட்டின் ஒவ்வொரு அரசியல் கட்சிகளின் இலட்சியமாகத் திகழ வேண்டும். சொல்லப்போனால் இதுதான் முழுமுதல் கொள்கையாக இருக்க வேண்டும்."

(இது ஒரு தொகுப்பு)

# ஓயாது உழைத்தவர்



செல்வத்தில் பிறந்தவர்; செல்வமாக வளர்ந்தவர்; செல்வத்தை ஈட்டுவதற்கு ஏற்ற கல்வியும் திறனும் ஒருங்கே அமைந்தவர். ஆனால், ஆங்கிலேயரின் அடிமை நாடாக இருந்த இந்தியாவில், அவர் பொருள் தேடி உயிர் வாழ விரும்பவில்லை. வழக்கறிஞராய் வாழ்வை நடத்த அவர் மனம் இசையவில்லை. எனவே, நாட்டின் விடுதலைக்கென்று இரவு பகலாக உழைத்தார். காந்தியடிகளின் தலைமையில் நடந்த அறப்போராட்டங்களில் பல முறை சிறை சென்றார். சிறையில்கூட அவர் ஓய்ந்திருக்கவில்லை. உலகம் புகழும் ஒப்பற்ற நூல்களை சிறையில் அவர் எழுதினார். பாரத நாட்டின் பிரதம மந்திரியாக ஆன பின்பும் ஒவ்வொரு நாளும் பதினெட்டு மணி நேரத்திற்கு மேல் ஓயாது உழைத்தார்.

இவ்வாறு, ஓய்வின்றி உழைத்ததன் காரணத்தினை அவர் கையினால் எழுதி வைத்திருந்த ஆங்கிலக் கவிதை நமக்கு உணர்த்துகிறது. அமெரிக்கக் கவிஞர் ராபர்ட் ஃப்ராஸ்டு ( Robert Frost ) என்பவர் இயற்றிய இக் கவிதையை ஒரு காகிதத்தில் எழுதித் தம் மேசைமீது நேரு வைத்திருந்தார்! அந்தக் கவிதை, கருமவீரர் நேருவின் உள்ளத்தை நன்கு உணர்த்துவதாக அமைந்திருக்கிறது! "கண் துஞ்சார் கருமமே கண்ணாயினார்" என்ற வார்த்தைகளை நமக்கு நினைவுபடுத்துகிறது.

1964-ல் புவனேசுவர் காங்கிரஸ் மகாநாட்டில் அவர் மயக்கமுற்று விழுந்தார். அவர் கை கால்களும் விழுந்தன. நான்கு மாதங்கள் இந்திரா காந்தி அவர்கள் தந்தையைக் கண்ணிமைபோல் காத்தார்; வைத்தியர்களின் கட்டளைகளுக்குப் பணியுமாறு தந்தையை அன்புடன் கடிந்தார், நாட்டு நடப்புக்களை எடுத்துக் கூறி வந்தார். மே மாதத்தில் அவர் நன்றாகத் தேறிவிட்டதாகத் தோன்றியது. அலுவலகக் கடிதங்களையும் 'பைல்'களையும் கூடப் பார்த்தார். மே மாதம் 26-ஆம் தேதி இரவு எல்லாப் 'பைல்'களையும் பார்த்து முடித்துவிட்டு, 'எல்லா வேலைகளையும் முடித்துவிட்டேன் என்று நினைக்கிறேன்" என்று கூறிவிட்டுப் படுக்கச் சென்றார். அதிகாலையில் மீண்டும் அவர் மயக்க முற்றார். பின்னர் அவருக்கு நினைவே திரும்பவில்லை. அவர் அருகில் அன்புமிக்க மகள் இருந்தார். மேஜையில் நேருஜி, தம் கையால் எழுதிய ராபர்ட் ஃப்ராஸ்ட்டின் கவிதை ஒன்று இருந்தது. அதன் புகைப்படம் கீழே வெளியிடப்பட்டுள்ளது.

The woods are lovely, dark and
deep,
But I have promises to keep,
And miles to go before I sleep
And miles to go before I sleep.
Robert Frost

அக்கவிதையின் பொருள்:

வனப்பு மிக்க சோலைதான், வளமுமிக்க சோலைதான்!
எனக்கு உற்ற கடமைகள் எத்தனையோ இருப்பதால்
காதம் பலவும் கடந்துதான் கண்ணயர முடியும் நான்
காதம் பலவும் கடந்துதான் கண்ணயர முடியும் நான்!

இக்கவிதையை நினைவுகொண்டு, நாம் ஒவ்வொருவரும் கடமையைச் செய்தால் நாடு முன்னேறும் என்பது திண்ணம்!

### நேருவைப்பற்றி அண்ணல்

"ஜவர்ஹர்லால் நேரு படிகக் கல்லைப் போலத் தூய்மையானவர். ஐயப்பட முடியாத அளவு உண்மையானவர். அச்சமும் பழிப்புமற்ற வீரர் அவர். நாடு அவர் கைகளில் நலமுடன் இருக்கும்."

—மகாத்மா காந்தி





# நேருவின் வாழ்க்கைக் குறிப்புகள்



889 நவம்பர்த் திங்கள், 14ஆம் நாள் மோதிலால் நேருவுக்கும் சொருப ராணிக்கும் அலகாபாத்தில் பிறந்தார்.

905 மே திங்களில் இங்கிலாந்தில் ஹாரோ பள்ளியில் சேர்ந்தார்.

910 பட்டப் படிப்பை முடித்து, சட்டப் படிப்பைத் தொடர்ந்தார்.

912 வழக்கறிஞராகி இந்தியா திரும்பினார். பங்கிபூர் காங்கிரசில் பார்வையாள ராகக் கலந்து கொண்டார்.

1915 காங்கிரசின் சார்பில் முதன் முறையாக மேடை ஏறிப் பேசினார்.

1916 பிப்ரவரி 8-ல், கமலாவை மணந்தார். டிசம்பரில் காந்தியடிகளுடன் முதல் சந்திப்பு.

1917 நவம்பர் 19-ல், ஒரே மகளான இந்திரா பிறந்தார்.

1919 மோதிலாலுடன் சேர்ந்து 'இண்டிபெண் டன்ட்' என்ற செய்தி இதழைத்தொடங் கினார்.

1921 கிசான் கிளர்ச்சியில் ஈடுபட்டார்; வேல்ஸ் இளவரசர் வருகையின்போது கடையடைப்பு நடத்தத் திட்டமிட்ட தற்காக, டிசம்பர் 6-ல் கைது செய்யப் பெற்று, ஆறு மாதச் சிறைத்தண்டனை அடைந்தார்.

1925 அலகாபாத் நகராட்சித் தலைவரானார். பின்னர் அப்பதவியைத் துறந்தார்.

1927 நவம்பரில், மாஸ்கோவில் நடைபெற்ற ருசியப் புரட்சியின் 10-ஆம் ஆண்டுவிழா வில் கலந்து கொண்டார். 'சோவியத் ருஷ்யா' என்ற நூலை எழுதினார். டிசம்ப ரில் சென்னையில் நடைபெற்ற 42-வது காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண் டார்.

1930 ஏப்ரல் 14-ல், உப்புச் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டதனால், ஆறு மாதச் சிறைத் தண்டனை பெற்றார்.

1931 பிப்ரவரி 6-ல் மோதிலால் மறைவு.

1934 ஜனவரி 1-ல் மகளுக்கு, கடிதங்கள் வாயி லாக 'உலக வரலாறு' என்னும் நூலை எழுதி முடித்தார்.

1935 பிப்ரவரி 14-ல், 'தன் வரலாற்றை' எழுதினார். செப்டம்பர் 4-ல் மனைவி மிகவும் உடல் நலம் குன்றியதால், அவரைப் பார்ப்பதற்காக, விடுதலை பெற்று, ஐரோப்பா சென்றார். வெளி நாட்டிலிருக்கும் போதே காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

1936 பிப்ரவரி 28-ல் கமலா சுவிட்சர்லாந்தில் காலமானார். ஜூன் 2-ல் இந்திய அரசி யல் சட்டத்தின் மாதிரிப் படியை உரு வாக்கினார்.

1938 நேருவின் தாயார் சொருபராணி மறைவு.

1939 சுபாஷ் சந்திர போஸுக்கும் காந்தியடி களுக்கும் இடையில் எழுந்த வேறு பாட்டைப் போக்க முயன்றார்.

1940 'இந்தியரைக் கேட்காமலே உலகப் போரில் இந்தியா கலந்து கொள்ளும்' என்று ஆங்கில அரசு அறிவித்ததனால் எழுந்த சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டமைக்காக அக்டோபர் 31-ல் கைது செய்யப்பெற்று, இரண்டாண்டு சிறைத் தண்டனை விதிக்கப் பெற்றார்.

1941 டிசம்பரில், விடுதலை பெற்றார்.

1942 ஜனவரி 1-ல், 'நேருவே என் வாரிசு' என்று காந்தியடிகளால் புகழ் மாலை சூட்டப் பெற்றார்.

ஆகஸ்ட் 7-ல் பம்பாய் காங்கிரஸில் 'வெள்ளையனே வெளியேறு' என்னும் தீர்மானத்தை நிறைவேற்றியதனால், ஆகஸ்ட் 8-ல் கைதானார். நீண்ட காலம் சிறைவாசம் பெற்றார்.

1944 ஏப்ரல் 13-ல், 'இந்தியாவின் கண்டு பிடிப்பு' என்ற நூலை, சிறையிலே எழுதத் தொடங்கி, செப்டம்பரில் முடித்தார்.

1945 ஜூலை 17-ல், முஸ்லீம் லீக் கேட்ட பாகிஸ்தான் பிரிவினையை வன்மையாகக் கண்டித்தார். பொதுத் தேர்தலில் ஈடு பட்ட காங்கிரசுக்கு முழு மூச்சுடன் தொண்டு செய்தார்.

1946 மார்ச் திங்களில், 'இந்தியாவின் கண்டு பிடிப்பு' நூலை வெளியிட்டார். ஆகஸ்ட் 12-ல், இடைக்கால அரசாங்கத்தை அமைக்குமாறு, வைஸ்ராய், நேருவிடம் கேட்க, அவர் ஒப்புக் கொண்டார்.

1947 ஆகஸ்ட் 15-ல் இந்தியா சுதந்திரம் பெற்றது. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரானார்.

1948 ஜனவரி 30-ல், காந்தியடிகள் சுட்டுக் கொல்லப்பட்டார்; நேரு கண்கலங்கி னார். வானொலியில் உருக்கமாக உரை யாற்றினார்.
ஆகஸ்ட் 20-ல் அணுசக்திக் குழுவின் முதற் கூட்டத்தைத் துவக்கினார்.

1950 ஜனவரி 26-ல், இந்தியா குடியரசு நாடு ஆகியது.

மார்ச் திங்களில், இந்தியத் திட்டக் குழுவைத் தொடங்கினார். ஜூலை 14-ல் கொரியாப் போரை நிறுத்தச் சொல்லி மூன்று வல்லரசுகளுக்கும் வேண்டுகோள் விடுத்தார்.

1954 ஜூன் 25-ல், சீனப் பிரதமர் சூ-என்-லாயை வரவேற்றார். பஞ்சசீலம் என் னும் ஐந்து கொள்கைகளை விளக்கினார்.

1955 ஜூலை 15-ல், 'பாரத ரத்னா' விருது பெற்றார்.

1957 ஜனவரி 12-ல், நாளந்தாவில் புத்தரின் 2,500-வது ஆண்டு விழாவில் பங்கேற் றார்.

1962 டிசம்பர் திங்களில், கோவா மக்களை போர்ச்சுக்கீசியரின் பிடியிலிருந்து விடு தலை பெறச் செய்தார்.

1964 ஜனவரியில், புவனேஸ்வரத்தில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றபொழுது நோய்வாய்ப்பட்டார். சிகிச்சைக்குப் பின் நலம் பெற்றார்.

மே 27. புதன் கிழமை காலை 6.20 மணிக்கு மீண்டும் நோய்வாய்ப்பட்டார். குருதிக் குழலில் கோளாறு ஏற்பட்டத னால், பகல் 2.00 மணிக்கு உயிர் துறந் தார்.

# பெண்களும் கல்வியும்

—ஜவஹர்லால் நேரு

பெண்கள் கல்விப் பயிற்சிபெற வேண்டு மென்ற ஆவல் இன்று சமுதாயத்தில் பெருகி யிருக்கிறது. இந்த விழிப்புணர்ச்சி வரவேற்கத் தக்கதாகும்.

சமுதாயத்தில் பெண்கள் பெறும் கல்வி யின் பயன், அவர்கள் குடும்பத்தோடு நின்று விடாமல் சமுதாய முழுமைக்கும் பயன்படு கிறது. ஒரு குடும்பத்தை மிகச் சிறந்த முறையில் வைத்துக் கொள்வதே உயர்ந்த தொரு சமுதாயப் பணியாயிற்றே! அந்தப் பணியை ஒழுங்குறச் செய்பவள் பெண்ணல் லவா! அவள் மனத்தெளிவுடன் செயற்பட வேண்டியது அவசியமல்லவா! அந்த மனத் தெளிவை அளிப்பது கல்வி என்பதில் இரண்டு கருத்துக்கள் ஏது!

பெண் கல்வி என்று சொல்லும்போது ஒரு விஷயத்தை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பெண்கள் இன்று பெரும் பாலும் ஏதாவது உத்தியோகம் பெறும் நோக்கத்தில் தான் கல்விப் பயிற்சியை விரும்ப கிறார்கள். இது தவறு என்றோ, குற்றம் என்றோ நான் கூறவில்லை. ஆனால் இது மட்டுமே கல்வியின் இலட்சணமாகி விடக்கூடாது.

ஒவ்வொரு பெண்ணும் பொது அறிவு ஞானம் பெற்று விளங்க வேண்டும். நாட்டின் சூழ்நிலையைத் தெளிவுறப் புரிந்து கொள்ளும் சக்தியைப் பெறவேண்டும். உலகம் எப்படிப் போகிறது, உலகத்தில் தோன்றும் குறிப்பிடத் தக்க மாறுதல்கள் என்ன என்பதையெல்லாம் கூர்ந்து நோக்கிப் புரிந்து வைத்துக் கொள்ளும் கூர்மதி வேண்டும்.

இந்தக் காலத்தில் உலகத்தின் எந்த மூலை யிலும் ஒதுங்கி வாழ்ந்துவிட முடியாது. உலகத் தில் எங்கோ ஓர் இடத்தில் நடக்கும் ஒரு காரியம், மறுகோடியில் உள்ள சாமானிய மனிதர்களையும் பாதிக்கும் அளவுக்கு விவகா ரம் பெருகிவிட்டது.

இந்த நிலையில் வெளி உலகத்தைப்பற்றி ஒரு சிறிதும் கவலைப்படாமல் தங்கள் குடும்பத் தோடு, வீட்டோடு முடங்கிக் கிடந்து வாழ்ந்து விட முடியாது. ஆகவேதான் ஆண்களைவிட பெண்களுக்கு வெளி உலகத்தைப் பற்றிய சரி யான ஞானம் இருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

இந்தியப் பெண்கள் பொதுநலத் தொண் டில் பெருவாரியாக ஈடுபடுவதில்லை என்று ஒரு குறை சொல்வார்கள். இந்தக் குறைக்கு அடிப்படையே, அடுத்த வீட்டைப் பற்றி அக் கறை கொள்ளாது தங்கள் வீட்டோடு முடங் கிக் கிடக்கும் நம் பெண்களின் பண்புதான்.

ஆகவேதான் வெறும் உத்தியோக நோக் கத்தோடு, கல்வி பயிலுவதோடு நின்றுவிடா மல் அறிவு வளர்ச்சி நோக்கத்தோடும் நம் பெண்கள் கல்வி பயில முற்பட வேண்டுவது அவசியம்.

# அஞ்சலக வங்கியின் மாபெரும் பரிசுத் திட்டம்

**ஆண்டுக்கு இருமுறை**

**குலுக்கல்கள் ஜனவரியிலும் ஜூலையிலும் நடைபெறும்**

**ரூ. 20½ இலட்சத்திற்கு**
**11,116 பரிசுகள்**

*ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட*
**11,116** *பரிசுகள் உண்டு.*

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. | 1,00,000 |
| 5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50,000 |
| 10 மூன்றும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 20,000 |
| 100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 5,000 |
| 1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 500 |
| 10,000 ஆறும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50 |

ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.

உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெறாதவர்க்கும் அளிக்கப்படும்.

விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**இயக்குநர்,**
**தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,**
**சென்னை-600 002.**


# தேசிய ஒருமைப்பாடே நம் உயிர் மூச்சாகும்!

—ஜவஹர்லால் நேரு



நம்முடைய தேசத்தின் ஒற்றுமைக்கு, ஐக்கியத்துக்கு இடையூறு செய்து அதைப் பலவீனப்படுத்தும் செயலைச் செய்வது, பாரத சமுதாயத்தினால் மன்னிக்க முடியாததொரு கொடுஞ்செயல் என்றே நான் விளக்க முற்படுகிறேன்.

**பாரத ஐக்கியம் இந்தியர் ஒவ்வொருவரின் உயிர் மூச்சாகும்.** பாரத ஐக்கியத்தைச் சிதைக்க எண்ணும் எந்தவொரு ஆணும், பெண்ணும் தற்கொலை செய்து கொள்ள முயலுகிறார் என்றுதான் அர்த்தம். தற்கொலை முயற்சியிலீடுபடும் எவனையும், மனிதத் தன்மையிலிருந்து கீழிறங்கியவன் என்றுதான் நான் கருதுகிறேன்.

தேச ஐக்கியத்துக்கு ஊறு செய்பவர்கள் என்று நான் குறிப்பிடும்போது, வெறும் பிரிவினைவாதிகளை மட்டுமே நான் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை. வகுப்பு வாதம், மாகாணத்துப் பித்து, சாதி வெறி, ஆகியவையும் தேச ஐக்கியத்தின் எதிர்ச் சக்திகள் என்று நான் கூறுகிறேன். மொழிப் பிரச்சினைகளைப் பிரமாதப்படுத்திக் கூச்சலிடுவதைக்கூட, முற்றிலும் சரியான முறை என்று நான் ஒப்புக் கொள்ளவில்லை.

திண்மையும், திரமும் வாய்ந்ததாக நம்முடைய தேசிய சமுதாயம் இருக்க வேண்டும். அதன் மக்கள், சகோதர பாவத்துடனும், ஐக்கிய உணர்வுடனும் இணைந்திருக்க வேண்டும். ஒரு தேசிய சமுதாயத்துக்கு ஆக்கம் அளிக்கின்ற மனோபாவ ரீதியான, இதயப் பூர்வமான, ஆன்மீக ரீதியான ஐக்கியத்தை உருவாக்குவதுதான் ஜீவாதாரமான செயல் முறையாகும்.

உணர்ச்சி பூர்வமான ஒருமைப்பாடு நமக்கு தேவை. லோகாயுத ரீதியில் நாம் முன்னேற்றம் காணலாம். ஆனால், மனவேறுபாடற்று ஒத்துவாழவும், ஒத்துழைக்கவும் நம்மால் முடியாவிட்டால் இந்த முன்னேற்றத்தின் பயனெல்லாம் வியர்த்தமாகத்தான் முடியும்

'நமது சமுதாயம்' என்று பெருமையுடன் நாம் கூறிக்கொள்வதெல்லாம் பாரத சமுதாயத்தைப் பற்றியதாகத்தான் இருக்க வேண்டும். நமது நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் இதனுள் அடக்கம்.

இந்தியாவில் ஏராளமான மதங்கள் இருந்தன; இருக்கின்றன, இந்தியாவின் ஒவ்வொரு மதத்திற்கும் தனிச் சிறப்புகள் உண்டு என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். இந்திய மதங்கள் எல்லாமே நம்முடைய மரியாதைக்கு உரியவைதான்.

நாம் சொந்த வாழ்வில் எந்த மதத்தை வேண்டுமானாலும் பின்பற்றலாம். எந்தவித தடங்கலும் இல்லை. ஆனால் நம் எல்லோருக்கும் பொதுவாகச் சேர்ந்து 'பொது மதம்' ஒன்று இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இந்த மதத்தை 'இந்திய மதம்' என்று அழைப்போமே!

இந்த மதத்தின் அடிப்படை ஒன்றே ஒன்றுதான்! பாரத சமுதாயத்தைச் சேர்ந்த எல்லோருக்கும் உடல் வெவ்வேறாக இருந்தாலும் உயிரும், உணர்ச்சியும் ஒன்று என்பதுதான் இந்த மதத்தின் தத்துவம்.

நீங்கள் எந்தக் காரியத்தைத் தொடங்குவதாக இருந்தாலும் தொடங்குவதற்கு முன்னால் அதன் மூலம் ஒற்றுமை ஏற்படுமா பிளவு ஏற்படுமா என்று உங்களையே கேட்டுக்கொள்ள வேண்டும். உங்களுடைய செயல்களையெல்லாம் மதிப்பிடுவதற்கான உரைகல் இதுவே

**மக்களை ஒன்று சேர்க்கின்ற காரியங்கள் எல்லாம் நல்லவை; மக்களைப் பிரித்து வைக்கும் காரியங்கள் எல்லாம் கெட்டவை.**

கட்டுப்பாடும், ஐக்கியமுமே நமது தேசத்திற்கு முதலில் தேவை. ஒன்றாக அடியெடுத்து வைக்கும் ராணுவக் கட்டுப்பாட்டை நான் குறிப்பிடவில்லை; இதயபூர்வமான, மனப்பூர்வமான கட்டுப்பாடும், ஐக்கியமுமே தேவை





# உலக அமைதிக்குப் பாடுபட்ட உத்தமர்



ஜவஹர்லால் நேரு நம் தலைமுறையில் மிகப் பெரிய மனிதர்களுள் ஒருவராய்த் திகழ்ந்தார். விடுதலைக்காக மிகச் சிறந்த வகையில் போரிட்ட வீராக விளங்கினார். தற்கால இந்தியாவை உருவாக்குவதற்காக அவர் ஆற்றிய பணிகள் ஈடுஇணையற்றவை. அவருடைய வாழ்க்கையும் பணியும் நம்முடைய மன அமைப்பையும், சமுதாய அமைப்பையும், அறிவு வளர்ச்சியையும் மிக்க அளவில் முன்னேற்றியிருக்கின்றன.

நேருவிடத்தில் அருமையான நுண்ணுணர்வும் அரிய உணர்ச்சிப் பாங்கும், பரந்த தாராள மனப் பாங்குடன் கலந்திருந்தன. எளியோர்க்கும், வாழ்க்கையில் வெறுப்புற்றோர்க்கும் அவர் மனமிரங்கினார். அவர் ஒரு சிறந்த நூலாசிரியர். தம்மைப் பற்றி மிகப் பரிந்து கூறுமலும், மிக உயர்த்திக் கூறுமலும் எழுதப் பட்டிருக்கும் நேருவின் சொந்த வாழ்க்கை வரலாறு நம் காலத்தில் எழுதப் பெற்றுள்ள மிகவும் குறிப்பிடத்தக்க நூல்களுள் ஒன்றாகும்.

இந்தியா சுதந்திரமடைந்த நாளிலிருந்தே நேரு பிரதம மந்திரிப் பதவியை வகித்து வந்திருக்கிறார். இந்த நீண்ட மந்திரிப் பதவிக் காலத்தில் அவர் முன்னேற்ற, விஞ்ஞான, இனவேற்றுமையில்லாத ஆக்க வழியில் இந்தியாவைச் செலுத்தி வந்திருக்கிறார். தாராள மனப்பான்மையில், சில அடிப்படைக் கொள்கைகளில், அவர் கொண்டிருந்த நீங்காத பற்றுள்ளம் நம்முடைய சிந்தனைக்கும், வாழ்க்கைக்கும் வழிகாட்டியாயிருந்து வந்திருக்கிறது. அவருடைய கொள்கைகளும், செயல்களும் அவர் ஜனநாயகம், சுதந்திரம் ஆகியவற்றில் வைத்துள்ள பற்றினையே காட்டுகின்றன. தற்காலத்துச் சமுதாய அரசியல் நிறுவனங்களைப் பயன்படுத்திய அவர், அவற்றினுள் புதிய உயிர்ப்பை ஊட்டினார்.

நேரு தம்முடைய பலப்பல பொதுக்கூட்டச் சொற்பொழிவுகளின் மூலம் தாம் போற்றி வந்த பண்பாடுகளை மக்கள் உணர்ந்து மதிக்குமளவுக்கு மக்களுக்குக் கல்வியறிவை யூட்டினார். மக்களுடைய வாழ்க்கைநிலை உயர வேண்டுமென்று போராடினார். தம்முடைய குறிக்கோள்களை மக்கள் நன்கு உணர்ந்து கொள்ளுமாறு செய்தார். தம்முடைய சக்திவாய்ந்த இசைக் குரலால் தாம் கண்ணெனப் போற்றும் சிறந்த கொள்கைகளில் விடாப் பற்றுக் கொண்டிருக்கும் ஓர் இந்தியத் தலைமுறையினையே தோற்றுவித்து, உருவாக்கி, ஊக்குணர்ச்சியூட்டி வளர்த்துள்ளார். உயர்ந்த குறிக்கோள்களைப் பெற்றிருத்தல் மட்டும் போதாது. அவற்றைப் பெறுவதற்காக நிரம் உழைக்க வேண்டும். காலம் மிகவும் முக்கியமானது. காலத்திடம் நேரு பெரு மதிப்பு வைத்திருந்தார்.

வசதியும் சொகுசும் நிறைந்த வாழ்க்கையில் வளர்ந்து வந்தவராயினும், துன்பம் நிறைந்த தேசியப் போராட்டத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு, காந்தியடிகளுக்கு அடுத்தபடியாகப் பெருந்தலைவரானார். தேசியப் போராட்டத்தில் அவர் எடுத்துக் கொண்ட பங்கும், 1947-ல் கிடைத்த சுதந்திரமும் அண்மைக் கால இந்திய வரலாற்றின் ஒரு பகுதியாகவுள்ளன.

நம்முடைய பொருளாதாரப் புதுவாழ்வு, நம்முடைய தற்கால முன்னேற்ற வாழ்க்கை இவை திட்டம் இல்லாவிடில் எய்துதற்கியலாதவை என்பதை விடுதலை கிடைக்குமுன்னரே நேரு உணர்ந்திருந்தார். உரிமை கிடைத்தவுடன் திட்டக்குழுவின் தலைவரான நேருவே, இப்போது செயற்படுத்தப்பட்டு வரும் வெவ்வேறு திட்டங்களுக்கு ஆக்கமும் சக்தியும் கொடுத்தார்.

இந்தியா சுதந்திரம் பெற்ற நாட்டை சில ஆண்டுகள் வரை நேரு நிர்மாணிக்கும் பாதையில் கற்பனைக்கும் எட்டாத துன்பங்களும், கடக்க முடியாத முட்டுப்பாடுகளும் ஏற்பட்டன. நாட்டுப் பிரிவினை ஏற்பட்டதால் இலட்சக்கணக்கான மக்கள் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு குடியேற முற்பட்டனர். அப்போது பயங்கரமான கலகங்களும், கொள்ளைகளும், தீயிடலும் நடந்தன. அப்போது ஏற்பட்ட அரசியல் பொருளாதாரப் பிரச்சினைகள் எளிதில் தீர்க்க கூடாதவையாய் இருந்தன. இவை காந்தியடிகளிடமிருந்து அவர் பெற்ற பெரும் பணியை நிறைவேற்றுவதற்கும் பெரும் குந்தகமாயிருந்தன.

## அனைத்துலக நோக்கு

உலகத்தின் பிறநாடுகளினின்று இந்தியாவைத் தனியாகப் பிரித்துப் பார்க்கக் கூடாதென்று நேரு எப்போதும் கருதி வந்திருக்கிறார். இந்தியா விடுதலைக்கு முன்பே அவர் 'இந்தியப் பிரச்சினையானது பிறநாட்டினரின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடும், ஒடுக்கப்பட்ட மக்களின் பெரிய இயக்கத்தின் ஒரு பகுதியாகும்' என்று மிக வற்புறுத்திக் கூறியுள்ளார். தம்முடைய சொந்த நாட்டு மக்களுக்காக மட்டுமின்றி உலகத்தில் எல்லா மக்களுக்கும் சுதந்திர

**டாக்டர் இராதாகிருஷ்ணன்**

ன்றுமென்று விரும்பினர்.
தனுல் ஆப்பிரிக்கா, ஆசியா,
ன் அமெரிக்கா ஆகிய கண்டங்
ரில் எழுந்த எல்லா விடுதலை
யக்கங்களுக்கும் அனுதாபத்தை
ம் ஆதரவையும் அளித்தார்.
தி, சமயம், நாடு என்ற வேறு
டுகள் இன்றி எல்லார்க்கும்
தந்திரம் வேண்டும் என்று
ரும்பினர்.

அமைதிக்குரல்

நேரு உலக அமைதியில் பெரு
ம்பிக்கை கொண்டிருந்தார்;
ரே சமுதாயம் என்ற கருத்தி
ம் நம்பிக்கை கொண்டிருந்தார்.
க்கிய நாடுகளின் குறிக்கோள்
ரகடனத்தில் நேருவைப்போல்
வறு யாரும் அவ்வளவு மிகுதி
க நம்பிக்கையும் பற்றுறுதியும்
காண்டிருக்கவில்லை. இந்த
ணுசக்தி ஊழியில் போர் என்
ல் நாகரிகப் பண்பாடுகளின்
ழிவுப்பாதை என்றே பொருள்
ன்பதை உணர்ந்திருந்தார்.
தனுல்தான் இந்த அலங்கோல
ான உலகில் அரசியலறிஞரின்
ண்மையான பணி, போரின்
யங்கர விளைவுகளை ஏற்படுத்தா
ல் உலக நாடுகளிடையே ஏற்
டும் வேறுபாடுகளைத் தீர்ப்ப
ற்காக, உலகநாடுகளின் நெருக்
டி நிலையைக் குறித்து ஒருவருக்
காருவர் புரிந்து கொண்டு
ற்றுமையுடன் வாழ வழிவகுப்
தே என்று அவர் உறுதியாக
ம்பினர்.

கொரியா, லாவோஸ், காங்கோ,
யட்நாம் முதலிய பல நாடு
ளின் பிரச்சினைகளில் அவருடைய
ரல், அமைதியை நாட்டும் குர
ாயிருந்தது; அவருடைய குரல்
ப்போதும் மதிப்புடன் கேட்கப்
ட்டது.

அவருடைய திரம், ஞானம்,
ருமை ஆகியவை நம் நாட்டை
ன்றுபடுத்தி வைத்திருந்தன.
ற்றுமை நீடிக்க வேண்டுமானல்
ந்தப் பண்புகள் போற்றிப் பாது
க்கப்பட வேண்டும்.

அவர் மனித இனத்தின் விடு
லைக்காக உழைத்த பெரும்
டுதலை வீரர் என்றும் அரசியல்
மை, பொருளாதார அடிமைத்
னம், சமுதாய அநீதி, பண்
ாட்டு நிலைத்தேக்கம் இவற்றி
ன்று மனிதர்களின் மனங்களை
டுவிக்கத் தம் வாழ்நாள் முழு
ம் தம் சக்தியையெல்லாம் செல
ட்டவர் என்றும் நாம் அவரை
ினைத்துப் போற்றுகிறோம்.

[ஆதாரம்: 'உலகப் பேரொளி'
ன்றி: சைவசித்தாந்த நூற்
பதிப்புக் கழகம்.

## வாழ்நாளில் எட்டில் ஒரு பகுதியைச் சிறைச்சாலையிலேயே கழித்துள்ளார்!

இந்தியாவின் சுதந்திரத்திற்குப் போராடியதற்காக, ஜவஹர்லால் நேரு அவர்கள், தம் வாழ்நாளில் 3,262 நாட்கள் (9 ஆண்டுகளுக்கு 23 நாட்களே குறைவு) சிறைத் தண்டனை அனுபவித்துள்ளார். இச்சிறைத் தண்டனையை அவர் 9 தடவைகளில் பின்கண்டவாறு அனுபவித்துள்ளார்.

| சிறைப்பட்ட காலம் | நாட்கள் | சிறைவாசம் அனுபவித்த இடம் |
|---|---|---|
| 6-12-1921—3-3-1922 | 87 | லக்னோ மாவட்டச்சிறை |
| 11-5-1922—31-1-1923 | 265 | லக்னோ மாவட்டச்சிறை |
| 22-9-1923—4-10-1925 | 12 | நாபா சிறை |
| 14-4-1930—11-10-1930 | 180 | நைனி மத்திய சிறை, அலகாபாத். |
| 19-10-1930—26-1-1931 | 99 | நைனி மத்திய சிறை |
| 26-12-1931—30-8-1933 | 612 | நைனி மத்திய சிறை, பரோலி மாவட்டச் சிறை, பஞ்சாப். டேராடூன் சிறை (உ. பி.) |
| 12-2-1934—4-9-1935 | 569 | மாநிலச் சிறை, கல்கத்தா. அலிப்பூர் மத்திய சிறை, கல்கத்தா. டேராடூன் சிறை, நைனி மத்திய சிறை, அல்மோரா மாவட்டச் சிறை (உ. பி.) |
| 31-10-1940—டிசம்பர் 1941 | 398 | கோரக்பூர் சிறை(உ.பி.) |
| 9-8-1942—15-6-1945 | 1040 | அகமத் நகர்கோட்டை, பம்பாய். |

இப்புள்ளி விவரங்களில் இருந்து கணக்கிட்டால், 74½ ஆண்டு காலம் வாழ்ந்த ஜவஹர்லால் நேரு அவர்கள், தம் வாழ்நாளில் ஏறத்தாழ எட்டில் ஒரு பகுதியைச் சிறைச்சாலையிலேயே கழித்துள்ளார் என்பது புலனுகின்றது. இச் சிறைவாச காலத்திலேயே ஜவஹர்லால் நேரு அவர்கள், - என் சுய சரிதை' (My Autobiography), உலக சரித்திரம் (Glimpses of World History), இந்தியாவின் கண்டுபிடிப்பு (The Discovery of India) ஆகிய உலகப் புகழ் பெற்ற நூல்களை எழுதினர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.



# கடின உழைப்புக்கு இணை ஏதுமில்லை!

—ஜவஹர்லால் நேரு

கடுமையான உழைப்பினுல்தான் நாம் முன்னேற்றம் அடைய முடியும். நம்முடைய சொந்த முயற்சியால் செல்வத்தைப் பெருக்க வேண்டியிருக்கும்; அப்போதுதான் சோஷலிசப் பாணியில் அமைந்த சமுதாயமும், பாரதத்துக்கு ஒரு வளமான நன்னல அரசும் ( Welfare State ) ஏற்படுத்தும் நம் கனவு நனவாகும்.

சோஷலிசம் என்ருல் விரிவான அளவில் சமத்துவம் என்பது பொருள்; சிலர் நினைப்பது போல, இருக்கின்ற செல்வத்தை எல்லாருக்கும் சமமாகப் பங்கிட்டு விடுவதால் அது வந்துவிடாது. பங்கிடுவதற்கு ஏதாவது இருக்க வேண்டும் என்பது சோஷலிசத்தின் முதல் தேவை; அதாவது, முதலில் போதுமான செல்வத்தை உற்பத்தி செய்ய வேண்டும். நிலங்களிலிருந்தும், தொழிற்சாலைகளிலிருந்தும் மேலும் மேலும் நாம் உற்பத்தி செய்யாவிட்டால், பங்கிடுவதற்கு வறுமையைத் தவிர உண்மையில் வேறு எதுவுமே இராது.

### இப்போதைய கனவு

நெடுங்காலத்திற்கு முன் பாரதத்திற்குச் சுதந்திரம் வரவேண்டும் என்று கனவு கண்டோம்; அந்தக் கனவு இப்போது நனவாகி விட்டது.

இப்போது நாம் காணும் கனவு என்ன? பாரதத்தின் நல் வாழ்விலும், அதன் வளர்ச்சிப் பணியில் பங்கு கொள்வதிலும்—ஆடவர், பெண்டிர், குழந்தைகள் இந்தியர் எல்லோரும் பங்கு கொள்ள வேண்டும்; அவ்வாறு பங்கு கொண்டு உழைப்பதால் ஏழ்மையையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஒழிக்க வேண்டும். இப்படிப்பட்ட மகத்தான உழைப்பைப் பற்றியே இப்போது நாம் கனவு காணுகின்ருேம்.

செல்வர்களுக்கும், ஏழைகளுக்கும் அதிக ஏற்றத்தாழ்வில்லாத பாரதத்தை-மக்கள் அனேகமாக எல்லோரும் சமத்துவமாக இருக்கின்ற, சாதி வேற்றுமைகளின் கொடுமை அதிகமாக இல்லாத பாரதத்தை—மக்கள் ஒன்று சேர்ந்து வாழுகின்ற பாரதத்தை—எந்தச் சாதியையும் சமயத்தையும் சேர்ந்திருந்தாலும் ஒருவருக்கொருவர் கூட்டுறவு உணர்ச்சியுடன் பாடுபடுகின்ற பாரதத்தை- உருவாக்குவது பற்றி இப்போது கனவு காண்கின்ருேம்.

இந்தப்பணி நம் சொந்த நலனுக்காக-நாட்டு நலனுக்காகச் செய்வது; அமைதியை உண்டாக்குவதற்காக-உலகம் முழுவதிலும் அமைதி பாதுகாக்கப்படுவதற்காக நாம் இந்தப் பணியைச் செய்கிருேம். நாம் முன்னேற்றம் அடைந்தால்தான் இது நடைபெற முடியும்.

### உற்பத்தியைப் பெருக்க வேண்டும்

வெளிநாடுகளிலிருந்து ஏதேனும் உதவி பெறுவதன் மூலம் வறுமையையும் வேலையின்மையையும் ஒழித்து விட முடியாது. இன்று வளமாக இருக்கிற நாடுகளெல்லாம், உற்பத்தியைப் பெருக்கிச் செல்வத்தைத் தங்கள் முயற்சியாலேயே உண்டாக்கியிருக்கின்றன. நமக்கு வேண்டியுள்ள செல்வத்தை நாமேதான் உண்டாக்க வேண்டும்.

பாரத நாட்டின் செல்வத்தை மிகுதியாக்குவதற்காக நாடு முழுவதிலும் பெரிய தொழிற்சாலைகளையும், இயந்திரங்களையும், மின்சார நிலையங்களையும் நிறுவி வருகிருேம். அப்படியிருந்தும்கூட, நிலத்திலிருந்து உண்டாகும் செல்வத்தை அதிகப்படுத்த வேண்டியது இன்றியமையாதது; ஏனெனில் விளைச்சல் உற்பத்தியின் மிகுதியைக் கொண்டு சிறிய தொழிற்சாலைகளையும், பெரிய தொழிற்சாலைகளையும் ஏற்படுத்த முடியும்.

### சமுதாய வளர்ச்சி இயக்கம்

அரசாங்கத்தாலோ, சட்டங்களாலோ, அதிகாரிகளாலோ இதைச் சாதிக்க முடியாது; மக்களால்தான் சாதிக்க முடியும். இதற்காகத்தான், கிராமவாசிக[ள்] தங்கள் உழைப்பாலேயே மு[ன்]னேற்றம் பெறுவதற்காகச் ச[மு]தாய வளர்ச்சி இயக்கம் தொட[ங்]கப்பட்டது.

கிராம வாசிகளின் வாழ்க்கை தரம் உயர்வதற்கும், முன்னேவி[ய] மக்கள் சுறுசுறுப்பாகக் கூட்டுற[வு] முயற்சியில் ஈடுபடுவதற்கும் ச[மு]தாய வளர்ச்சி வட்டார[ங்]கள் (Community Developme[nt] Blocks ) பொதுவாக உத[வி] செய்துள்ளன என்று நம்புகிறே[ன்]. சமுதாய வளர்ச்சி இயக்கத்தி[ல்] கூட்டுறவு இலட்சியமும் சேர்க்க[ப்]பட்டுள்ளது. இது, கூடி உழைப்[பை]யும் தன்னைத் தான் சார்ந்[தி]ருப்பதையுமே குறிக்கிறது. குடிமை ( Civic ) வாழ்[க்கை] பொருளாதார நடவடிக்கைக[ள்] ஆகியவற்றைக் கவனித்துக் கொ[ள்]ளுவதற்குப் போதிய அளவு அ[தி]காரம் பெற்ற வலிமையான ப[ஞ்]சாயத்தும், கிராமத்துக்கு ஒ[ரு] சிறந்த கூட்டுறவியக்கமும் இன்[றி]யமையாதவை.

தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்களின் ( Committees ) மூ[ல]மாக மக்களே கூடி வேலை செ[ய்]யும்படி செய்வதற்காக ஏ[ற்]பட்டவை சேவைக் கூட்டுறவுக[ள்] ( Service Co-operatives ). இந்த சேவைக் கூட்டுறவுகளைப் பரப[்ப] வேண்டுமென்றும், மக்கள் விரும்[பு]கின்றபொழுது அவர்களுக்[குப்] பயிற்சி தர வேண்டும் என்று முடிவு செய்திருக்கிருேம்.

மற்ற இடங்களைவிடச் சென்னை மாநிலத்தில் இந்தக் கூட்டுற[வு] இயக்கங்கள் மிக விரைவா[க] வளரும் என்பதில் எனக்கு ஐ[ய]மில்லை; எனவே, இந்தப் புதி[ய] திட்டத்தில் சென்னை விரைந்[து] முன்னேறுவதை எதிர்நோக்[கு]கிறேன்.

(இராச பாளையத்தில் ஆற்றி[ய] சொற்பொழிவிலிருந்து. மே. 1959.)

# குழந்தைக்குத் தேவை சத்தான உணவு பயிருக்குத் தேவை விஜய்

குழந்தையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவும் சத்துணவைப்போலவே பயிர்களும் நன்கு வளர்ந்து முழுப் பலனையும் தர தழை, மணி, சாம்பல் சத்துக்கள் அவசியம்.

ஆனால் நெற்பயிருக்கு தழைச்சத்தைத்தரும் யூரியாவை மட்டும் இட்டால போதுமானது எனக் கருதக்கூடும். அவ்வாறு யூரியாமட்டும் இட்டால் பயிர்கள் பூச்சிகளால தாக்கப்படும். வறட்சியைத் தாங்காது. மேலும் நாளடைவில் மண்ணின் தன்மைகெட்டு விளைச்சலும் குறையும்.

தழைச்சத்துடன் மணி, சாம்பல் சத்துக்களை இடுவதுதான் லாபகரமானது என ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன:—

நெல் (ஏக்கருக்கு)

| உரம் | சாகுபடி செலவு ரூ. | விளைச்சல் (மூட்டை 75 கிலோ) | வருவாய் (1 மூட்டை 60 ரூ. விகிதம்) |
|---|---|---|---|
| 40 கிலோ தழைச்சத்து மட்டும் | 1040 | 18. | 1080 |
| 40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து | 1180 | 23 | 1380 |
| 40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து 20 கிலோ சாம்பல்சத்து | 1215 | 30 | 1800 |

இவ்வாறு மூன்று சத்துக்களையும் இடும் போது கூடுதல் செலவு ரூ. 175க்கு அதிக வருவாய் ரூ. 720 கிடைக்கிறது.

அதிக வருவாய் தரும் தழை, மணி, சாம்பல் சத்துக்களை சமச்சீர் அளவில் கொண்டது விஜய் 17-17-17. இத்துடன் விஜய் யூரியாவையும்.உங்கள் நெற்பயிருக்கு உபயோகித்து அதிகப்பயன் பெறுங்கள்.

VIJAY

மேலும் விவரங்களுக்கு கீழ்கண்ட முகவரிக்கு எழுதுங்கள்:
ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், திருச்சி 620 017






MFL-1162




# வேற்றுமையில் ஒற்றுமை காண்போம்!

—ஜவஹர்லால் நேரு

உலகத்துக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற ஆசை மிக உயர் வானதுதான். ஆனால் அதற்கு முன்னதாக நாம் ஒரு உண்மையை நம் சிந்தனையில் நிறுத்த வேண்டும்.

முதலில் நம்முடைய சொந்த நாட்டுக்கு நாம் பணி புரிய வேண்டும். மிகப் பெரிய இந்திய சமுதாயத்தின் உறுப்பினர்கள் என்ற முறையில், நமக்கு நாமே பணி புரியக் கற்றுக்கொள்ள வேண்டும். அப்போதுதான் உலகத்துக்குச் சேவை செய்யும் தகுதியும், வசதியும் நம்மை வந்து அண்டி நிற்கும்.

மதக் குழப்பங்களையும், சாதிப் பூசல்களையும், வித விதமான தடை மதில் முட்டுக்கட்டைகளையும் தனக்குத் தானே உண்டாக்கி, தன்னைத் தானே கூறுபோட்டுக் கொள்வதில் நம்முடைய தேசிய சமுதாயத்துக்கு விருப்பமதிகம்.

கடந்த காலத்தில் நம்முடைய மாபெரும் பலவீனமாக, இந்த மனப்போக்கு நமது சமுதாயத்தில் நிலைத்து நின்று, நமது சமுதாயம் தனக்குத்தானே சீர் குலைந்து தாழ்வதற்கு வகை செய்து வந்திருக்கிறது.

இந்த மனப்பான்மை எதிர் காலத்தில் முறியடிக்கப் படா விட்டால், நாம் எந்த வகையிலும் தலையெடுக்கவே முடியாது என்பது திண்ணம்.

பல நூற்றாண்டுகளாக உலகத்தின் மற்ற பாகங்களுடன் ஸ்தூல மானசீகத் தொடர்புகளைத் துண்டித்துக் கொண்டு இந்தியா ஒதுங்கியிருந்தது. வளரும் சக்தியை நமது நாடு இழந்ததற்கு இதுவே அடிப்படைக் காரணமாகும். தற்பெருமை கொண்டு வெளியுலகை விழித்துப் பார்க்க மறுத்த இந்தியா, அப்படியே அசைவின்றித் தேங்கி நின்று விட்டது.

## தேசத்தின் பெருமை

ஒரு தேசத்தின் பெருமை— சிறப்பு எதில் அடங்கியிருக்கிறது? என்று ஒரு வினவை எழுப்பிக் கொண்டு விடையைத் தேடுவோம்.

என்னைப் பொறுத்தமட்டில் ஒரு தேசத்துக்குப் பெருமையளிப்பது அதன் பொன்னும், வெள்ளியும் அல்ல என்றுதான் சொல்வேன். மனித வரலாற்றைப் படித்திருந்தால், நான் சொல்லும் உண்மை எளிதி விளங்கும்.

ஒரு நாட்டின் இயற்கை வள களான இரும்பு, நிலக்கரி போன் ஸ்தூலப் பொருள்களின் மு கியத்துவத்தை நான் குறைத் மதிப்பிடவில்லை. என்றாலும் ஒரு நாட்டில் உள்ள மக்களி பண்புணர்ச்சியைப் பொறுத்தே அதற்குச் சிறப்பு ஏற்படுகிறது தங்கள் மக்களின் உயர் பண் காரணமாக (மக்கள் எண்ணிக்கை காரணமாக அல்ல) பெரும பெற்றுள்ள சிறிய தேசங்கள் எ தனையோ உண்டு.

## கலை உணர்ச்சியே பெரும அளிக்கிறது!

கடந்த காலத்தில் நமது ம களின் குறிப்பிட்ட ஒரு பண் இந்த நாட்டின் சிறப்பு ஓங்கிய இந்திய வரலாற்றில் பொற்கால என்று சில காலக் கட்டங்க குறிப்பிடுகிறோம். அவ்வித அவை பெருமை பெற்றதற்கு போர்திறவு கொண்ட மன்ன களின் வெற்றி மட்டும் காரண மல்ல. கலை வளர்ச்சியாலும், அ காலக் கட்டங்கள் பெருமை பெ றன. உண்மையில் இன்று நா

பெருமைகளைப் பள்ளிப் பள்ளிப் பேசுங்கால், நம்முடைய போர் உணர்ச்சியை விட, கலை உணர்ச்சியைப் பற்றிக் குறிக்கும் போதுதான் நமது உள்ளத்தில் பெருமையுணர்ச்சி பொங்கித் தவழுகிறது.

நாம் சுதந்திரம் பெற்ற பிறகு கோடிக்கணக்கான நமது மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தும் பெருநோக்கத்துடன், பொருளாதாரப் பிரச்சினைகளுடன் போராடிக் கொண்டிருக்கிறோம். நமக்கு நியாயமான—சரியான—வெற்றி தேவையென்று சொன்னால், நாடு உண்மையாகச் சீரான ஒரு வளர்ச்சியை எட்டிப் பார்க்க வேண்டுமென்றால், நமக்கென ஒரு நற்பண்பை நாம் வளர்த்தாக வேண்டும்.

இமயம், லடாக், காஷ்மீர் ஆகியவற்றில் தொடங்கி, கன்னியாகுமரி இறுதியாகப் பார்ப்போமானால் எத்தனையோ விதமான வேறுபாடுகள் நம்முடைய நாட்டிலே மண்டிக்கிடப்பதை உணரலாம். மற்றும் இயற்கை அமைப்பு, நிலச்சூழல், சீதோஷ்ண நிலை ஆகியவற்றிலும், இன்னும் பல விஷயங்களிலும் இங்கே வேறுபாடுகள் மலிந்து கிடக்கின்றன.

**உணர்ச்சிபூர்வமான ஒருமைப்பாடு தேவை!**

இன்று நாம் அரசியல் ரீதியில் ஒன்று பட்டிருக்கிறோம். ஆனால் இது மட்டுமே நம்முடைய பலமான ஒருமைப்பாட்டை நிச்சயப்படுத்திவிட முடியாது. மேலே கண்ட ஏராளமான வேறுபாடுகளின் இடையே உணர்ச்சி பூர்வமான ஒருமைப்பாடு-நெருக்கமான உறவு—தோன்றியாக வேண்டும். இன்று நம் முன் நிற்கும் மகத்தான குறிக்கோள் இதுதான். இந்தக் குறிக்கோளை நாம் எட்டிப் பிடிக்காதவரை, பாரத சமுதாயத்தின் பலத்தைப் பற்றிப் பெருமை பேசிக் கொள்வதில் அர்த்தமே இல்லை.

படை வீரர்களை ஒரே அணியில் நிறுத்துவது போன்றதொரு ஒருமைப்பாட்டை நாம் விரும்பவில்லை. சமுதாய அமைப்பில் அந்த முறை வெறுக்கத்தக்கதாகும்.

பாரத மண்ணிலே ஏற்கனவே முளைத்துத் தழைத்திருக்கும் கலாசார முறைகளை நாம் அழிக்க விரும்பவில்லை. அவைகளைக் கட்டிக்காக்க வேண்டும் என்பது தான் நம்முடைய ஆசை. ஆனால் தனித் தனியாகச் சிதறுண்டு கிடக்கும் கலாச்சாரக் கிளைகளை அறிவியல் பூர்வமாகவும், உணர்ச்சி பூர்வமாகவும் கட்டிச் சேர்க்க விரும்புகிறோம்.

நாம் ஒருவரையொருவர் புரிந்து கொள்ள முடியாமல், நெருங்கி உறவாட முடியாமல் பிரித்து வைக்கின்ற தடைகளை, நம்முடைய தீர்க்கமான பார்வையின் சக்தியைக் குறைக்கின்ற தீமைகளை ஒதுக்கித்தள்ளவே விரும்புகிறோம். இந்த நோக்கத்தில் தான் குறுகிய சாதி, மத, இனத்தடைகளையெல்லாம் களைந்து தள்ளும் முயற்சியில் ஈடுபடுகின்றோம்; இந்தத் தடைகளை நாம் துரிதமாக அகற்றுவிட்டால் நம்முடைய வளர்ச்சி அடியோடு குன்றிவிடும்.

நாம் மகத்தான காரியங்களைச் சாதித்தாகவேண்டியிருக்கின்றது. ஒவ்வொரு விதத்திலும் (உள்ளத்திலும் உணர்விலும்), நாம் பெரிய மனிதர்களாக விளங்கினால்தான் இத்தகைய பெரிய காரியங்களை நிறைவேற்ற முடியும்.

(1952—அக்டோபரில், சென்னை மாநிலக் கல்லூரியில் ஆற்றிய உரையின் ஒரு பகுதி.)



## ரூபா இருபதுக்குப் பலூன்

தென் இந்தியாவில் நேரு சுற்றுலா வந்து கொண்டிருந்தார். வழியெல்லாம் காரை நிறுத்தி மக்களுக்குக் காட்சியளித்து வந்தார். இடையில் ஓர் ஊரில் கார் நிறுத்தப்பட்டது. வழி ஓரத்தில் முதியவர் ஒருவர் பலூன் விற்றுக் கொண்டிருந்தார். அவருடைய முதிர்ந்த நிலையையும் தள்ளாத பருவத்தையும் பார்த்த நேரு வண்டியிலிருந்து இறங்கி அம் முதியவரின் தோள் மீது அன்புடன் கையைப் போட்டார்.

பலூன்களின் விலை என்னவென்று கேட்டார். பலூன் ஒன்றின் விலை இரண்டணா என்றார் அந்த முதியவர். அவரிடம் சில பலூன்கள் இருந்தன. நேரு வழக்கமாகப் பணம் எதுவும் கையில் எடுத்துச் செல்வதில்லை. உடனே அருகிலிருந்த ஒருவரிடம் ரூ. 20 கடன் வாங்கி முதியவரிடம் கொடுத்து அவரிடமிருந்து பலூன்களையெல்லாம் வாங்கி, சுற்றி நின்று கொண்டிருந்த சிறுவர்களிடம் கொடுத்து விட்டார்.

# படமும் செய்தியும்



குழந்தைப் பருவத்திலே நேரு.



ஐந்து வயதிலே நேரு.



ஹாரோ பள்ளியில் நேரு (1906)

தந்தை மோதிலால் நேரு, தாய் ஸ்வரூ ராணி ஆகியோருடன் நேரு.





லபாத் உயர்நீதிமன்றத்தில் வழக்கறி
ஞய்ப் பணியாற்றிய தந்தையுடன்
ரு (1912)



நேரு வளர்ந்த 'ஆனந்தபவனம்'



மனைவி கமலா, மகள் இந்திரா ஆகியோ
ருடன் நேரு (1931)

பேரறிஞர் பெர்னாட்ஷாவுடன் நேரு.



கவியரசர் ரவீந்திரநாத் தாகூருடன் நேரு
(1936)





சுபாஸ் சந்திர போஸ் அவர்களுடன்
நேரு (1937)



மகாத்மா காந்தி அடிகளின் அறிவுரையை
ஆழ்ந்து கேட்கிறார் நேரு.
(1945, புதுடில்லி)



குதிரைச் சவாரி என்றால் எனக்கு
மிகவும் விருப்பம் (கிண்டி ராஜ்பவனில்)



கிரிக்கெட்டும் விளையாடுவேன்!
(வெள்ளத் துயர்துடைப்பு நிதி வசூலுக்
காக, 1953-ஆம் ஆண்டில் டில்லியில்
நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில்
நேருவும் கலந்து கொண்டு விளையாடி
னார்)



மோட்டார் சைக்கிளும் ஓட்டுவார்
(அருகில் நிற்பது பேரன் ராஜீவ் காந்தி)



7-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14-ஆம்
இரவு -12 மணி அடித்தவுடன்,
யா சுதந்திரம் பெற்றது. சுதந்திர
யாவின் முதல் பிரதம மந்திரியாக
7, ஆகஸ்ட் 15 அன்று, பதவி
ர் நேரு.



செங்கோட்டையின் கொத்தளத்தில் நின்று சுதந்திர நாள் விழா உரையாற்றுகிறார்.



இந்தியா சுதந்திரம் அடைந்த போது இங்கிலாந்தின் பிரதமராக இருந்த அட்லி யுடன் நேரு (1947)



வின்ஸ்டன் சர்ச்சிலுடன் நேரு (1949).



கூட்டுச் சேராக் கொள்கையுடைய ஐம் பெரும் நாடுகளின் தலைவர்கள் (நேரு, நுக்குருமா, நாசர், சுகர்னோ, டிட்டோ)



மறைந்த அமெரிக்க ஜனாதிபதி கென்ன யுடன் நேரு (இடையில் நிற்பவர் லிண்ட பி. ஜான்சன்)



1954-ஆம் ஆண்டில் சைனாவுக்குச் சென்றபோது (மறைந்த) சீனப் பெருந் தலைவர் மா-சே-துங் அவர்களைச் சந்தித்துப் பஞ்சசீலக் கொள்கைகளைப் பற்றித் தெளிவு படுத்தினார்.

"நமது இலட்சியம் உலக சமாதான என்கிறார்களா?



# தமிழ்நாட்டில் நேரு



மும் முகமும் மலர மூதறிஞர் ராஜாஜியை, ன்னை விமான தளத்தில், கட்டித் தழுவிய கொள்ளாக் காட்சி, 'அன்பிற்கும் டோ அடைக்கும் தாழ்' என்பதை ப்பிக்கிறது.



றிஞர் ராஜாஜி, சி. சுப்ரமணியம், ஆகியோருடன் நேரு.

தூத்துக்குடியில் நடைபெற்ற கல்விச் சீர் திருத்த மாநாட்டில்......





அடையாறு குழந்தைகள் மன்றத்தில்.........



நேரு ஸ்டேடியத்தில் குழந்தைகள் வரவேற்பு



உங்கள் அன்புக்கு எவ்வாறு கைம் செய்வேன் என்று யோசிக்கிருரா?



ஆளியாறு திட்டத்தைத் துவக்கி வை வந்தபோது தொழிலாளர்களின் குழந் களுடன் அன்பு மழை பொழிந்தார்.



..திஞர் ராஜாஜி, கர்மவீரர் காமராஜ்
..வர்களுடன் நேரு.



சென்னை காமராஜ் சாலையில் அமைந்துள்ள காந்திசிலை, ராய்சௌத்ரியின் சிற்பக் கூடத்தில் உருவாகிக் கொண்டிருந்தபோது அதைப் பார்வையிட்டார் நேரு.



பெருந்தலைவர் காமராஜ், எம். பக்தவத்சலம், ஆளுநர் பிரகாசா ஆகியோருடன் நேரு அவர்கள் அளவளாவும் அரிய காட்சி.



..வேலி நிலக்கரிச் சுரங்கத்தைப் 'பைனுக்
..மூலமாகப் பார்வையிடுகிறார்.

இரும்புக் கம்பியின் மேல் ஏறி நின்று, பாதுகாப்புக்காக காமராஜ், சுப்ரமணியம் ஆகிய இருவரின் கைகளைப் பிடித்துக்கொண்டு நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தைப் பார்வையிடுகிறார்.





1959-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு வந்தபோது மரம் நடும் விழாவைத் துவக்கி வைத்தார்.



பெருந்தலைவர் காமராஜ் அவர்களும் ..
அவர்களும் கலந்துரையாடுதல்.



அடையாற்றில் உள்ள புற்றுநோய் மருத்துவ மனைக்கு வருகை தந்தார்.

மாமல்லபுரம் சிற்பங்களைக் கண்டு வியக்கிறார்.





# தீண்டாமை எனும் பெரும்பாவம்

—மகாத்மா காந்தி.

நான் தீண்டாமையை ஹிந்து த்தின் மீதுள்ள மிகப் பெரிய ங்கமென்று கருதுகிறேன். ந்த எண்ணம் வந்தது தென் ப்பிரிக்கப் போராட்டத்தில் க்கு ஏற்பட்ட கொடிய அனு ங்களினுல் அல்ல. நான் ஒரு லத்தில் கடவுள் நம்பிக்கை ல்லாதவனுக இருந்ததும் தற்குக் காரணமல்ல. சிலர் ப்பதைப் போல கிறிஸ்துவ வ நூல்களைப் படித்ததனுல், க்கு இந்தக் கருத்து வந்தி ப்பதாகநினைப்பதும் சரியாகாது. ல்லிவத்திடம் எனக்கு மோகம் ண்டாகாமலும், அது என்ன ன்றும் அதைப் பின்பற்றுகிற கள் யார் என்றும் தெரியாமலு ருந்த காலத்திலிருந்தே இந்தக் த்துக் கொண்டிருப்பவன் ன்.

இந்த எண்ணம் என் மனத்தில் த்த காலத்தில் எனக்கு 12 துகூட ஆகியிருக்கவில்லை. கா' என்ற பெயருள்ள ஒரு ாட்டி, அதாவது தீண்டாத ப்பைச் சேர்ந்தவன், எங்கள் டுக் கக்கூசுகளைச் சுத்தம் ய்வதற்காக வந்து கொண் ந்தான். அப்போது நான் என் யிடம், ''அவனைத் தொட் ல் என்ன? அவனைத் தொடாதே ன்று ஏன் சொல்லுகிறீர்கள்?' று கேட்பேன். தற்செயலாக ன் அவன் மீது பட்டுவிட்டால் னை என் வீட்டார் தலை முழு பிறகுதான் உள்ளே வர அனு ப்பார்கள். நான் இயல் லே அவர்கள் கூறியபடி செய்த போதிலும் சிரித்துக் கொண்டே, ''தீண்டாமைக்கு சமயத்தில் ஆதாரம் கிடையாது; சமயம் இதை அனுமதிக்கவே செய்யாது'' என்று சொல்லாமலும் இருந்ததில்லை. நான் பெற்றோருக்குப் பணிந்து நடக்கும் கடமையுணர்வுள்ள குழந்தையாயிருந்தும், இந்த விஷயத்தில் மட்டும் என் பெற்றோருடன் மல்லுக்கு நின்றிருக்கிறேன். நான் என் தாயிடம், ''நான் 'ஊகா'வைத் தொட்டு விட்டால் எனக்கு தீட்டு வந்து விடும் என்று சொல்வது முற்றிலும் தவறு. அதனுல் எனக்கு சிறிதும் பாவம் வராது'' என்று சொல்லியிருக்கிறேன்.

பள்ளியில் படித்த காலத்தில் நான் அடிக்கடி தீண்டாதாரைத் தொடுவதுண்டு. இதை நான் என் பெற்றோரிடமிருந்து ஒளித்ததேயில்லையாகையால், இவ்வாறு தீட்டாகிவிட்ட நான், மீண்டும் தூய்மையுறுவதற்குள்ள மிகவும் எளிய வழி, அதற்கு மாற்றுக கண்ணில் தென்பட்ட ஒரு முஸ்லீமைத் தொடுவதாகும் என்று என் தாய் சொல்லுவார். என் தாயிடம் எனக்கிருந்த மதிப்பு, மரியாதை காரணமாக நான் பலமுறை அவ்வாறு செய்திருக்கிறனேதவிர, அதை ஒரு சமயக் கடமையாகக் கருதிச் செய்ததே இல்லை. சிறிது காலத்திற்குப் பிறகு நாங்கள் போர்பந்தருக்கு இடம் பெயர்ந்து சென்றுவிட்டபோது, முதன் முதலாக சம்ஸ்கிருதம் படிக்க ஆரம்பித்தேன். நான் இன்னும் ஆங்கிலப் பள்ளியில் சேர்க்கப்படாகவில்லை. நானும், என் அண்ணனும் ஒரு பிராம்மணரிடம் படிப்பதற்காக அனுப்பப்பட்ட போது, அவர் எங்களுக்கு 'ராம ரட்சை' மந்திரமும், விஷ்ணு பூசை விதியும் சொல்லிக் கொடுத்தார். அப்போது கற்றுக்கொண்ட 'ஜலே விஷ்ணு: ஸ்தலே விஷ்ணு;' (விஷ்ணு பகவான் நீரிலும் இருக்கிறார், நிலத்திலும் இருக்கிறார்) என்ற மந்திரத்தை நான் பிறகு மறக்கவே இல்லை.

எங்கள் வீட்டிற்கருகில் தாய் போன்ற ஒரு மூதாட்டி வசித்து வந்தாள். நான் சிறு பிராயம் 'முதலே பெரிய பயங்கொள்ளி; இரவு நேரத்தில் வீட்டில் விளக்கு அணைக்கப்பட்டு எங்கும் இருளானதும், எனக்கு நாற்புறமிருந்தும் பேய்களும் பிசாசுகளும் என்னைப் பிடித்துக் கொள்வதற்காக வருவதாகத் தோன்றி ஒரே திகிலாகிவிடும். அப்பொழுதெல்லாம் எனக்கு இவ்வாறு பயம் தோன்றுதிருப்பதற்காக 'ராமரட்சை'' மந்திரத்தைச் சொல்லும்படியும் அதைக் கேட்டதும் பேய், பிசாசுகளெல்லாம் ஓடி .விடுமென்றும் அந்த மூதாட்டி சொன்னுள். நான் அவ்வாறே சொல்ல ஆரம்பித்த போது பேய், பிசாசின் பயம் என்னை விட்டு விட்டது. ராம ரட்சையில் தீண்டாதவர்களைத் தொட்டால் பாவம் வந்து ஒட்டிக் கொள்ளும் என்று எதுவும் இருப்பதாக என்னுல் நம்பவே முடியவில்லை. எனக்கு அந்தக் காலத்தில் அந்த மந்திரத்தின் பொருள் தெரியாது; தெரிந்திருந்தாலும் நன்றாய்த் தெரியாது என்றே சொல்லவேண்டும். ஆனுல் பேய், பிசாசுகளையே விரட்டியடிக்கக் கூடிய ஒரு மந்திரம், தீண்டாதவர்களைத் தீண்டினுல் தீட்டு வரும் என்ற பயத்தையும் நிச்சயமாய்ப் போக்கிவிடும் என்று நம்பினேன்.

எங்கள் வீட்டில் நாள் தவருமல் இராமாயணம் ஓதப்படுவது வழக்கம். லாதா மகாராஜ் என்ற ஒரு பிராம்மணர் வந்து வாசிப்பார். அவருக்குத் தொழுநோய் வந்திருந்தது; இராமாயணப் பாராயணம் செய்தால் குஷ்ட நோய் நீங்கிவிடுமென்று அவர் நம்பினுர்; அவரைப் பீடித்திருந்த நோய் நீங்கிவிட்டது. அந்தக் காலத்தில், ''தீண்டாதவனென்று கருதப்படும் ஒருவன், இராமனை ஓடத்தில் ஏற்றிக் கொண்டு கங்கையைக் கடக்க உதவினதாக இராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கிறதே, அது எப்படி சாத்தியமாகும்? மாசுற்ற ஆன்மாவுடன் பிறப்பதனுல் சிலரைத் தீண்டாதவர் என்று சொல்ல வேண்டும் என்பது இராமாயணத்திற்கு எப்படி ஒப்பாகும்?'' என்றவாறு நான் என்னுள்ளேயே யோசித்ததுண்டு. பதித பாவனன் என்றும், இதே போன்ற பிற திருநாமங்களினுலும்தான் நாம் கடவுளை அழைக்கிறோம் என்பதனுல் ஹிந்து மதத்தில் உள்ள எவனையும் அசுத்தமானவன், தீண்டத்தகாதவன் என்று நினைப்பதே மிகவும் கொடிய பாவம் ஆகும். இதனுல் எனக்கு இதைத் திரும்பத்திரும்பச் சொல்வதில் அலுப்பே தோன்றியதில்லை. என் 12-ஆம் வயதிலேயே எனக்கு இம்மாதிரியான எண்ணங்கள் திடமாக ஏற்பட்டுவிட்டதாகச் சொல்ல முடியாதாயினும், தீண்டாமையைப் பாவம் என்று நான் அப்பொழுதே கருத ஆரம்பித்துவிட்டேன் என்பேன். நான் இந்தக் கதையையெல்லாம் வைணவர்களுக்கும் சனுதன ஹிந்துக்களுக்கும் தெரிய வேண்டும் என்பதற்காகவே சொல்லுகிறேன்.

நான் என்னை எப்பொழுதும் சனுதன ஹிந்து என்றே கருதி வந்திருக்கிறேன். எனக்கு சாஸ்திரங்களே தெரியாது என்பதல்ல; நான் சம்ஸ்கிருதத்தில் பெரிய வித்துவானல்ல; நான் வேதங்களையும் உபநிடதங்களையும் அவைகளின் மொழிபெயர்ப்பைப் படித்துத்தான் தெரிந்துகொண்டிருக்கிறேன். எனவே, எனக்கு அவைகளைப் பற்றிய பூரண ஞானமுண்டு என்று சொல்லுவதற்கில்லை. நான் அவைகளை ஆழ்ந்து படித்துத் தெரிந்து கொண்டிருக்கவில்லையாயினும், ஒரு ஹிந்து படிக்கவேண்டிய முறையில் படித்து, அவைகளின் உண்மைக் கருத்தைப் புரிந்து கொண்டிருப்பதாகச் சொல்லுவேன். 21 வயது ஆவதற்குள்ளேயே நான் பிற சமயங்களைப் பற்றியும் படித்துத் தெரிந்து கொண்டு விட்டேன்.

ஒரு காலத்தில் ஹிந்துவாகவே இருப்பதா, அல்லது கிறிஸ்துவ சமயத்தில் சேர்ந்து விடுவதா என்று என் மனம் ஊசலாடியதுண்டு. எனக்கு நிதானம் வந்து, என் மனம் ஒரு நிலையில் நின்றுவிட்டபோது ஹிந்து மதத்தின் மூலமே நான் கடைத்தேற முடியும் என்ற உணர்வு வரவும், ஹிந்து மதத்தினிடம் ஆழ்ந்த, விளக்கமான நம்பிக்கை தோன்றி உறுதியாயிற்று.

ஆனுல் அப்போதும் தீண்டாமைக்கு ஹிந்து மதத்தில் இடமில்லை. அது தீண்டாமையை அனுமதிக்குமானுல் எனக்கு ஹிந்து மதமே வேண்டாம் என்ற எண்ணம் ஏற்பட்டுவிட்டது.

உண்மையான ஹிந்து மதம் தீண்டாமையைப் பாவம் என்று கருதவில்லை; சாஸ்திரங்களுக்கு எப்படி வியாக்கியானம் செய்ய வேண்டும் என்ற விவாதத்தில் நான் இறங்க விரும்பவில்லை. பாகவதத்திலிருந்தும், மனு ஸ்மிருதியிலிருந்தும்மேற்கோள்கள் காட்டி என் கட்சியை நிலைநிறுத்துவது எனக்குச் சிரமம்; ஆனுல் ஹிந்து மதத்தின் சாரப்பொருளை, உட்கருத்தை நான் நன்கு புரிந்து கொண்டிருப்பதாகச்சொல்வேன். தீண்டாமையை அனுமதித்ததில் அது பாவம் புரிந்திருக்கிறது; அது நம்மை இழிவுபடுத்தி, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பறையராக ஆக்கிவிட்டது. இந்த நோய் நம்மிடமிருந்து முஸல்மான்களிடமும் தொத்திக்கொண்டு விட்டமையால் தென்னுப்பிரிக்காவிலும் கீழ் ஆப்பிரிக்காவிலும், கனடாவிலும் ஹிந்துக்களைப்போலவே முஸல்மான்களும் தீண்டாதாராகக் கருதப்படுகிருர்கள். இந்தக் கொடுமை நிகழ்ந்திருப்பதற்குக் காரணம் நாம் புரிந்து வரும் தீண்டாமை என்ற பாவமே.

சூத்திரம்போல் நான் ஏற்கனவே கூறியுள்ள ஒன்றை இங்கே உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன். அதாவது, 'ஹிந்துக்கள் தீண்டாமையை தமது சமயத்தின் ஓர் அம்சமாகக் கருதி வரும் வரையில், ஹிந்துக்களில் பெரும் பகுதியினர் தம்மில் ஒரு வகுப்பாரைத் தொட்டால் தமக்குத் தீட்டு வந்துவிடும் என்று நினைத்து வரும்வரையில் நமக்கு சுயராஜ்யம் வரப்போவதில்லை.''

தம்மோடு வந்துகொண்டிருக்கும் நாயையும் அனுமதிக்கா விட்டால் தாமும் சொர்கத்தில் புக முடியாதென்று சொல்லி யுதிஷ்டிரர் தமக்குக் கிடைத்த சுவர்க்கத்தை ஏற்க மறுத்துவிட்டார். அந்த யுதிஷ்டிரரின் வழித் தோன்றல்களாகிய நாம் தீண்டாதோரை ஒதுக்கி வைத்துவிட்டு எப்படி சுயராஜ்யம் பெறப் பார்க்கலாம்? எந்தக் குற்றங்களைச் செய்ததற்காக நாம் அரசாங்கத்தை சைத்தான் என்று கண்டிக்கிறோமோ அதே குற்றங்களை—நாம் நமது தீண்டாதவ சகோதரர்களுக்கு இழைக்க வில்லையா?

நம் சகோதரர்களை அழுக்க வைத்து நாம் பாவம் புரிந்து கொண்டிருக்கிறோம். நாம் அவர்களை வயிற்றுல் ஊர்ந்து செல்லும்படியும், மூக்கு நிலத்தில் படும்படி விழுந்து வணங்கும்படியும் வற்புறுத்தியிருக்கிறோம். கண்களிலிருந்து கோபத்தீ பறக்க அவர்களை ரயில் வண்டியிலிருந்து கீழே தள்ளுகிறோம். பிரிட்டிஷ் ஆட்சி இதையும் பார்க்க, நமக்கு என்ன கொடுமை செய்துவிட்டது? நாம் 'டயர்' மீதும் 'ஓ டயர்' மீதும் எந்தக் குற்றங்களைச் சாட்டுகிறோமோ அவைகளை பிறர் ஏன், நம்மவர்களே நம் மீது சாட்ட மாட்டார்களா? நாம் முதலில் இந்தப் பாவத்தைக் கழுவி நம்மைத் தூய்மையாக்கிக் கொள்ள வேண்டும். பலவீனர்களையும் உதவியற்றவர்களையும் பாதுகாக்காமல் இருந்து, சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்த எவனும் இன்னொருவன் மனதைப் புண்படுத்த இயலும் வரையில் சுயராஜ்யம் பற்றிய பேச்சுக்கே அர்த்தமில்லை. எந்த ஒரு ஹிந்துவோ முஸ்லீமோ ஒரு கணம்கூட தான் இன்னொரு அப்பாவியான ஹிந்துவை அல்லது முஸ்லீமை நசுக்கி விட்டுத் தப்பி விடலாம் என்று எண்ண முடியாதிருப்பதே சுயராஜ்யம். இந்த நிபந்தனைகளை நிறைவேற்றினாலன்றி நாம் சுய ராஜ்யம் பெற்றாலும் மறுகணமே அது நழுவிப் போய்விடும். பலவீனர்களான நம் சகோதரர்கள் விஷயத்தில் நாம் செய்துவரும் பாவங்களைப் போக்கும் வரையில் நம்மை மிருகங்களினும் மேம்பட்டவர்களென்று கருதுவதற்கில்லை.

(1921 ஏப்ரல் 13-ம் தேதியன்று அகமதாபாத்தில் நடந்த அடக்கப்பட்ட வகுப்பாரின் மகாநாட்டில் ஆற்றிய உரையிலிருந்து)

# சாதிமுறை நீடித்திருக்கும் வரை நமக்கு விடிவு காலமே இல்லை!




—ஜவஹர்லால் நேரு

பாரத விடுதலைக்காக நாம் அறப்போர் புரிந்த காலம் உங்கள் நினைவிலிருக்கிறதா? நம்முடைய தேசப்பிதா, மகாத்மா காந்தியின் தலைமையின் கீழ், இமயம் முதல் குமரி வரை நாம் அணி வகுத்துப் போராடிய அந்தப் பெருமைக்குரிய காலம் உங்கள் கவனத்துக்கு வருகிறதா?

அந்தக் காலத்திலே தெற்கு, வடக்கு, கிழக்கு என்ற திசைகளில், நாட்டின் எந்த மூலையில் நாம் பணிபுரிந்த போதிலும், பாரதம் முழுமைக்குமே நாம் போராடி உழைத்தோம். நமக்கென தனித்தனி இலட்சியமில்லை; தனித்தனி சிந்தனையில்லை. நம் எல்லாருடைய விதியும் ஒரே விதிதான் என்பதையும், எல்லாருக்கும் சுதந்திரம் அல்லாது ஒருவருக்கும் விடுதலை இல்லை என்பதையும் அப்போது நாம் தெளிவாக உணர்ந்திருந்தோம்.

அதனுல்தான் அப்போது நம்மிடையே பிடிப்பான ஒற்றுமையிருந்தது. ஒன்று சேர்ந்து உழைத்தோம்; ஒன்ருகவே தியாகம் செய்தோம்.

விடுதலைப் போராட்டக் காலத்தைவிட மகத்தானதொரு பணியை-அதாவது புதுப் பாரதத்தை உருவாக்கும் திருப்பணியை, இப்போது நாம் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது.

வறுமையை, துன்பத்தை, வேலையில்லாக் கொடுமையை ஒழித்து நம்மிடையே இன்ப வாழ்வை நிர்மாணிக்கும் பெரும்பணி அது.

இந்த அரும்பணியை நாம் தனித்தனியாக நிறைவேற்ற முடியாது. .பாரத மக்கள் அனைவரும் ஒரே சமுதாயமாக இணைந்து, செயற்பட்டால்தான் அந்தப் பணியைத் தடங்கலின்றி நிறைவேற்ற முடியும்.

மாவட்டங்கள் நம்மைப் பிரிப்பதில்லை: இது போன்றே மாநிலங்களும் நம்மைப் பிரிக்க முடியாது. மொழி வேறுபாடுகளும் நம்மைப் பிரிக்க முடியாது. பாரதத்தின் மொழிகள் எல்லாம் தொன்மை வாய்ந்தவை. நன்கு நிலைபெற்றவை. பிரமாதமான முறையில் முன்னேற்றமடைந்தவை. அவையெல்லாம் சகோதர மொழிகள். அவற்றை எந்த விதத்திலும் உதாசினம் செய்ய முடியாது. அவற்றுக்கு ஆக்கமும், ஊக்கமும் தரவேண்டியது நம்முடைய கடமை.

## இந்தியப் பண்பாட்டின் இலட்சணம்

இந்த நாட்டில் ஏராளமான மதங்கள் இருக்கின்றன. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அவை சமரச நோக்குடன் இயங்கி வருகின்றன. ஒரு மதத்தைச் சார்ந்தவர்கள் மற்ற மதத்தினரிடம் சகிப்புத்தன்மை காண்பித்து, அவர்களைச் சகோதர நோக்கோடு பாவிப்பது, பாரத நாட்டின் வழிவழி வரும் நல்லதொரு வழக்கம்; இந்த நல்ல வழக்கத்தை இந்தியப் பண்பாட்டின் முக்கிய இலட்சணம் என்றே வர்ணிக்கலாம்.

இந்தப் பரம்பரை வழக்கம், இன்று மெல்ல மெல்லப் பாழ்பட்டு வருவதாகத் தோன்றுகிறது. இன்று நம்மிலே சிலர், மற்றவர்களுடன் சண்டை பிடிப்பதற்காக மதத்தின் பெயரை இழுக்கிருர்கள். அரசியலில் மதத்தைத் திணித்து வகுப்புவாத ஸ்தாபனங்களைச் சிலர் தோற்றுவித்திருக்கிருர்கள். அந்த செயல்களெல்லாம், மதத்தின் புனிதத் தன்மையைக் கெடுக்கும் செயல்கள் என்றுதான் கூறவேண்டும். உண்மையில் இத்தகைய நபர்களை மத விரோதிகள் என்று ஒதுக்க முயற்சிக்க வேண்டும்.

நமது மதத்தை மாத்திரமன்றி, மற்ற மதங்களையும் மதித்து நடக்க நாம் கற்றுக் கொள்ள வேண்டும். மற்றவர்களின் மதத்தைக் கௌரவிக்கும் பண்பு பெற்றவன், தன்னுடைய சொந்த மதத்திற்குக்கௌரவத்தைத் தேடித்தந்தவனுகிருன் என்றும், இந்த உன்னதச் செய்கையால் தன்னுடைய மதத்தைப் பிறர் மதிக்குமாறு அவன் செய்கிருன் என்றும் 2,300 ஆண்டுகளுக்கு முன்னர் நமது நாட்டில் வாழ்ந்த மாபெரும் இந்தியச் சக்கரவர்த்தியான அசோகர் மொழிந்திருக்கிருர்.

ஒருவன் மற்றவனுடைய மதத்தை மதித்துக் கௌரவிக்காவிட்டால் அவனுடைய சொந்த மதத்திற்கும் மதிப்பு இல்லாமல் போய்விடும். எத்தனையோ நூற்றுண்டுகளாக நமது மக்கள் கடைப்பிடித்து வரும் சகிப்புத் தன்மை என்ற உயரிய பாரம்பரியத்தை நாம் கைவிடலாமா?

## இந்தியாவின் சாபத்தீட்டு!

சாதியை நான் வெறுக்கிறேன்., சாதி மீது எனக்கு நல்ல அபிப்பிராயமே கிடையாது

சென்ற பல நூற்றுண்டுகளாக சாதிமுறையானது இந்தியாவின் சாபத்திட்டாகவே இருந்து வந்திருக்கிறது என்பது என்னுடைய கருத்து.

சாதிப்பாகுபாடு இந்தியாவின் சக்தியைச் சீரழித்தது; பலவீனப்படுத்தியது; பாரதத்தை அது தாழ்மைப் படுகுழியில் தள்ளி மீளவொட்டாமல் அழுத்தியது.

நாம் அன்னியருக்கு அடிமைப்பட்டதன் மூல காரணமே நம்மிடையேயிருந்த சாதிப் பிளவுகள்தான்! நம்முடைய ஐக்கியபாவத்தை அழித்தது சாதியுணர்வுதான். நம்முடைய சகோதரர்களிலேயே ஒரு பகுதியினரை இழிவுபடுத்தும் துர்நோக்கத்தை விளைவித்தது சாதிமுறைதான்.

கடந்த காலத்தில் சாதிமுறையினுல் ஏதாவது நன்மை ஏற்பட்டிருக்கக் கூடுமா என்பதைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனுல் இன்றைய உலகத்தில் சாதிமுறைதான் நம்முடைய படுமோசமான பலவீனம் என்பதென்னவோ மறுக்க முடியாது உண்மை.

இந்தச் சாதிமுறை நம்மிடையே நீடித்திருக்கும் வரை, நமக்கு விடிவு காலமே இல்லை. நமது குறிக்கோளை நாம் ஒருநாளும் அடைய முடியாது.

நம்முடைய இன்றைய இலட்சியம் என்ன?

நாம் விடுதலை பெற்றவுடன் நாம் மேற்கொண்ட இலட்சிய யாத்திரையின் ஒரு கட்டம் முடிந்தது. ஆனுல் யாத்திரையின் அடுத்த கட்டம் உடனே துவங்கி விட்டது.

இந்த யாத்திரையின் நோக்கமென்ன? நம்மிடையே வறுமை ஒழிய வேண்டும். நம் வாழ்விற்கேற்ற சமூக, பொருளாதார முன்னேற்றம் பெற வேண்டும்.

## நமது இலட்சியம்!

இதைப்பற்றி சுருக்கமாகக் கூற வேண்டுமானுல், கணிசமான சமத்துவமும், எல்லோருக்கும் சமசந்தர்ப்பமும் இருக்கக் கூடிய சோஷலிசபாணி சமுதாயத்தை உருவாக்குவதுதான் இன்றைய நமது அடிப்படை இலட்சியம்.

நம்முடைய சமூகத்தைச் சாதி அடிப்படையில் படை, படையாகப் பிரித்தோமானுல், முன்பு நாம் சொன்ன அடிப்படை இலட்சியம் சற்றும் ஈடேருது.

ஏன் என்ருல், சமத்துவம், கூடி உழைத்தல் என்ற கருத்துக்களுக்கெல்லாம் நேர் விரோதியாக சாதி நிற்கிறது.

சாதி பற்றிய பிடிப்பும், கருத்துக்களும் நம்மிடையே பலமாக வேரூன்றியுள்ளன என்பதையும், அந்த வேரைக்களைந்தெறிவது எளிதல்ல என்பதையும் நான் உணராமல் இல்லை. காலம் பிடித்தாலும் அவற்றை வேரொடு களைந்து தூக்கி எறிந்தாக வேண்டும்.

இந்தச் சாதி மனப்பான்மையை மாற்றுவதற்குப் பலாத்காரம் தேவையில்லை. பலாத்கார எதிர்ப்பு முறை நம்முடைய போராட்டத்தையே கெடுத்துத் திசை திருப்பி விட்டு விடக்கூடும். இதற்காக நாம் ஒருவரோடு ஒருவர் போராட வேண்டியதில்லை.

மற்றவர்களின் மனத்தை மாற்ற முயல வேண்டும். மற்றவர்களுடன். மனம் விட்டு ஒத்துழைக்க வேண்டும். இவைபோன்ற சமாதான வழிகளிலேயே சாதி முறையை ஒழிக்க வேண்டும்.

(1957-டிசம்பரில் மதுரையருகே காந்தி கிராமத்தில் பேசியது).

(ஆதாரம் : 'நேருவழி' என்ற நூலிலிருந்து..... நன்றி : குயிலன் பதிப்பகம், 82, பாண்டிபஜார் சென்னை-17)

## மூன்ருவது உலகயுத்தம் தோன்ருததற்குக் காரணம் நேருவே!

காந்தியடிகள் சுதந்திர பாரதத்தின் தந்தை என்ருல், நேருஜி சோஷலிச பாரதத்தின் தந்தையாகத் திகழ்ந்தார்.

மூன்ருவது மகாயுத்தம் தோன்ருத பெருமைக்கு ஒருவரைக் காரணமாக்க முடியும் என்ருல் அது பண்டித நேரு அவர்கள் தாம் என்பதை உலகமே ஒப்புக் கொண்டது.

அவருடைய.மூன்று தத்துவங்கள், ஒன்று சோஷலிசம் இன்னென்று கூட்டுச் சேராக் கொள்கை, மற்ருென்று உற்பத்தியைப் பெருக்குவதற்கான ஐந்தாண்டுத் திட்டங்கள். இவை மூன்றை ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதவாறு பிணைத்து வைத்த பெருமை உலகத்திலேயே ஒரு மாபெரும் தலைவனுக்குத்தான் உண்டு. அந்தத் தலைவன் நம்முடைய ஜலகர்லால் நேரு. ரத்தப் புரட்சியின்றி, உயிர்க் கொலையின்றி, உள்நாட்டுக் குழப்பமின்றி, சர்வதேச யுத்தமின்றி வாழ்வதற்கு வழி வகுக்க முடியும் என்ற தத்துவத்தை எடுத்துக் கொடுத்தார் ஜவகர்லால் நேரு. அதுதான் சமாதான சகவாழ்வு.

—ம. பொ. சிவஞானம்

# குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1955.



தீண்டத் தகாதவர்களிடையே அரசியல் விழிப்புணர்வினை ஏற்படுத்திய நமது தேசத் தந்தையான மகாத்மா காந்தியடிகள் தீண்டாமையை ஒழிப்பதையே தமது இலட்சியமாகக் கருதி, தீண்டாமை ஒழிப்பிற்கு முக்கியத்துவம் அளித்தார். இந்தியா அந்நியராட்சியிலிருந்து விடுதலை பெற்றவுடன், இந்திய அரசியலமைப்புச் சட்டம், தீண்டாமையைக் கடைப்பிடிக்கும் முறைகளை அறவே ஒழித்தது. தீண்டாமையைக் கடைப்பிடிப்பதன் காரணமாக குறைபாடுகளை (disability) ஏற்படுத்துவது. தண்டனைக்குரிய குற்றமாகும். அரசியல் அமைப்புச் சட்டத்தில் சிறப்பான இடம் பெற்ற தீண்டாமை ஒழிப்புக் கொள்கை. 1955-ஆம் ஆண்டின் தீண்டாமை (குற்றங்கள்) சட்டமாக ஆக்கப்பட்டது. எவ்வளவோ முயற்சிகள் எடுத்தும், ஏதாவதொரு, வடிவில் இச்சமுகக் கொடுமை தொடர்ந்து தலைகாட்டியே வந்தது. ஆகவேதான், இச் சமூகக் கொடுமையை அறவே ஒழிக்க, அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாயிற்று. எனவே, 1955-ஆம் ஆண்டின் மூலச் சட்டம் தற்பொழுது திருத்தியமைக்கப்பெற்றுள்ளது. "1955-ஆம் ஆண்டின் தீண்டாமை (குற்றங்கள்) சட்டம்", இனிமேல் "1955-ஆம் ஆண்டின் குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டம்" என வழங்கப்பெறும். "குடிமை உரிமைகள்" என்பது அரசியல் அமைப்புச் சட்டத்தின் 17-வது விதி முறையின் கீழ், தீண்டாமை ஒழிப்பின் காரணமாக ஒரு மனிதனுக்குக் கிடைக்கக் கூடிய எந்த உரிமையுமாகும் என்று விளக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டம், 1976-ஆம் ஆண்டு நவம்பர் 19-ஆம் தேதி முதல் அமலுக்கு வருகிறது.

## சிறப்பு அம்சங்கள்



சமூக உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் சிறப்பு அம்சங்களாவன

1. தீண்டாமைக் குற்றங்களனைத்தும் கைது செய்தற்குரிய குற்றங்களாகவே இருந்து வந்தன. இனியும் தொடர்ந்து அப்படியே இருக்கும். இதுவரை தீண்டாமைக் குற்றங்கள் சட்டப்படி சமரசமாகத் தீர்த்துக்கொள்ளக் கூடியவையாக இருந்தன. ஆனால், இப்பொழுது, அவை சட்டப்படி சமரசமாகத் தீர்த்துக் கொள்ள முடியாதவையாக ஆகின்றன.

2. தீண்டாமைக் குற்றங்களுக்கான தண்டனை குறிப்பிடத்தகுந்த அளவுக்கு உயர்த்தப்படுகிறது; இப்போது தீண்டாமைக் குற்றங்களுக்குச் சிறை வாசம், அபராதம் இரண்டுமே விதிக்கப்படும். முதல் தடவையாகப் புரியும் குற்றமெனில், குறைந்த பட்ச தண்டனை ஒருமாத சிறைவாசமும் ரூ. 100/. அபராதமும், அதிகபட்ச தண்டனை ஆறுமாத சிறைவாசமும், 500/- அபராதமும் ஆகும். இரண்டாந் தடவையாக புரியும் குற்றமெனில், குறைந்தபட்ச தண்டனை ஆறுமாத சிறைவாசமும், ரூ. 200 - அபராதமும், அதிகபட்ச தண்டனை ஓராண்டு சிறைவாசமும், ரூ. 500 - அபராதமும் ஆகும். மூன்றுந்தடவையாகவும், தொடர்ந்தும் புரியுங் குற்றங்களுக்கு, தண்டனை ஓராண்டு சிறைவாசம் மற்றும் ரூ. 500[- அபராதம் முதல் ஈராண்டு சிறைவாசம் மற்றும் ரூ. 1,000/- அபராதம் வரை விதிக்கப்படும்.




3. நேரடியாக அல்லது மறைமுகமாகத் தீண்டாமையைப் போதிப்ப மற்றும் சரித்திர, தத்துவ, மத அடிப்படையில் தீண்டாமைக்கு நியா கற்பிப்பதும் குற்றமாகும்.

4. கழிவிடங்களைச் சுத்தம் செய்தல், தெருக்கூட்டுதல், இறந்த பிரா களின் உடல்களை அகற்றுதல், கால்நடைகளின் தோல் உரித்தல், அல் தொப்புள்கொடி அகற்றுதல் இவற்றில் எதையேனும் செய்யுமாறு டப்படாதவர் என்ற வகையில் எவரையும் கட்டாயப்படுத்துதல் டனைக்குரியதாகும்.



5. எந்த ஒரு பகுதியிலும் வாழும் மக்கள், அப்பகுதியில் தீண்டா குற்றங்கள் செய்வதில் சம்பந்தப்பட்டிருந்தாலும் அல்லது தீண்டா குற்றங்களைச் செய்வதற்கு உடந்தையாக இருந்தாலும், அப்பகுதி மக்கள் அனைவருக்குமாகக் கூட்டு அபராதம் விதிக்க மாநில அரசுகளு அதிகாரம் அளிக்கப்படுகிறது.



6. தீண்டாமைக் குற்றங்களைச் செய்தமைக்காகத் தண்டிக்கப்பட்டவர் மத்திய மற்றும் மாநில சட்ட மன்றத் தேர்தல்களில் போட்டி சட்டப்படி அருகதையற்றவர்களாவார்கள்.

7. இச்சட்டத்தின்படி தண்டனை விதிக்கப்படக்கூடிய எந்தக் குற்ற யேனும் புலனாய்வு செய்யாமல், வேண்டுமென்றே அலட்சியமாயிரு பொது ஊழியர்கள், இச்சட்டத்தின்படி தண்டிக்கப்படக்கூடிய கு ஒன்றைச் செய்வதற்கு உடந்தையாக இருந்ததாகக் கருதப்படுவார்



8 தீண்டாமை ஒழிப்பினால் ஏற்படும் உரிமைகள், சம்பந்தப்பட்டவர்க உறுதியாகக் கிடைத்திடச் செய்வதற்குத் தேவையான சிறப்பு நட கைகளை மாநில அரசுகள் எடுத்தல் வேண்டும். இதற்கென சட்ட விவரிக்கப்பட்டுள்ள சிறப்பு நடவடிக்கைகளாவன:

(அ) 'தீண்டாமை' காரணமாக இடர்ப்பாடு ஏதேனும் உற்றோரு சட்ட உதவியுள்ளிட்ட போதிய வசதிகளையளிப்பதற்கு வகை செ அத்தகைய உரிமைகளை அவர்கள் பயன்படுத்திக் கொள்ள வித்தல்;

(ஆ) இந்தச் சட்டத்தின்படி விதிகளை மீறி நடப்போர்மீது வழக்குகள் தொடர்வதற்கு, அல்லது தொடர்ந்த வழக்குகளை பார்வையிடுவதற்கு அலுவலர்களை நியமித்தல்.

(இ) இந்தச் சட்டத்தின்படி குற்றங்களை விசாரணை செய்வதற்குச் சி நீதிமன்றங்களை அமைத்தல்.

(ஈ) இந்தச் சட்டத்தின் வகை முறைகளைச் சிறந்த முறையில் செ படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்கும்பொருட்டு, இ சட்டத்தின் வகைமுறைகள் செயல்படுவதைப் பற்றி அவ்வப்போ ஆய்வு நடத்துவதற்கு வகை செய்தல்.



இந்தச் சட்டம் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு சட்டமாகும். சாதி பேதமற்ற சமதர்மச் சமுதாயத்தை உருவாக்குவதில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவது, மற்றுமொரு சிறப்பான கட்டமாகும். சமுதாயத்தில் தாழ்ந்த நிலையில் உள்ள பிரிவினரின் சுயமரியாதையையும், கண்ணியத்தையும் உயர்த்தி, நாட்டு முன்னேற்றத்திற்கு அவர்களும் தங்கள் பங்குப் பணியைச் செய்ய அவர்களுக்குச் சரிசம வாய்ப்புகளை வழங்க இச்சட்டம் வகை செய்யும். இச்சட்டம், குறிப்பிடத் தக்க முக்கியத்துவம் வாய்ந்ததாதலின், இச்சட்டத்தின் விதிமுறைகளனைத்தும் நாடெங்கும் பெருமளவில் பரவலாகத் தெரிவிக்கப்படும். ஒன்றுபட்ட, சாதிபேதமற்ற சமுதாயத்தை உருவாக்குவதில் நாடு மேற்கொண்டுள்ள முயற்சிகளின் ஒரு கூறாக இச்சட்டத்தின் முக்கியத்துவத்தை சமுதாயத்தின் எல்லாப் பிரிவினரும் உணர வேண்டும். இச்சட்டம் அமலுக்கு வருவதையொட்டி, மாநில மெங்கும் — நகரங்களிலும், கிராமங்களிலும்—பொது மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகளும் பொதுக் கூட்டங்களும் நடைபெறும். அவைகளின் மூலம், தீண்டாமை என்னும் களங்கத்தைப் போக்க அரசு மேற்கொண்டுள்ள அரிய முயற்சிகளைப் பற்றி விளக்கப்படும். நவம்பர் 14-ஆம் தேதி முதல் 21-ஆம் தேதி வரை குடிமை உரிமைகள் பாதுகாப்பு வாரம் கொண்டாடப்படும். அவ்வமயம் அரசு அலுவலர்களும், அரசுச் சார்பற்ற பெரியோர்களும், மாநில—மாவட்ட—வட்டார நிலைகளில் நடைபெறும் விழாக்களில் கலந்து கொண்டு பெரு முக்கியத்துவம் வாய்ந்த இச்சிறப்பு மிகு முன்னேற்றம் குறித்தும், குடிமை உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நிறைவேற்றப்பட்டுள்ள சட்டம் குறித்தும் பொது மக்களுக்குத் தெள்ளத் தெளிவாக விளக்குவார்கள்.

எனவே இவ்விழாக்களில் பொது மக்கள் அனைவரும் கலந்து கொண்டு, தீண்டாமையை ஒழிக்க ஒவ்வொருவரும் சபதம் எடுத்துக் கொண்டு, சமூக உரிமைகளைப் பாதுகாக்க முன் வர வேண்டும் என்று வேண்டுகின்றோம்.



"நாம் அனைவரும் இந்தியக் குடிமக்கள். இருப்பினும் நம்மிடையே பெருமளவில் ஏற்றத்தாழ்வுகள் நிலவி வருகின்றன. கடந்த காலத்தில் எவரது வளர்ச்சியும், முன்னேற்றமும் மறுக்கப்பட்டனவோ அவர்களை முன்னேற்றவும், ஏற்றத்தாழ்வுகளை அகற்றிட முயற்சிப்பதும் நம் அனைவருடைய கடமையுமாகும்.

அரிசன, ஆதிவாசி சகோதர, சகோதரிகள் தங்கள் பிரச்சினைகளைத் தாங்களே தீர்த்துக் கொள்ளுமளவில், மிக மிக அதிக உயர்ந்த நிலைகளில் அவர்களை அமர்த்துவதற்கு நிச்சயமாக ஆவன செய்வேன்".

—பிரதமர் இந்திரா காந்தி.





# கவிஞர் போற்றும் சிதம்பரனர்



வேளாளன் சிறைபுகுந்தான் தமிழகத்தார்
மன்னனென மீண்டான் என்றே
கேளாத கதைவிரைவிற் கேட்பாய்நீ
வருந்த லைன் கேண்மைக்கோவே!
தாளாண்மை சிறிதுகொலோ யாம்புரிவேம்
நீஇறைக்குத் தவங்கள் ஆற்றி,
வேளாண்மை நின்துணைவர் பெறுகெனவே
வாழ்த்துதிநீ வாழ்தி! வாழ்தி!!

—சுப்ரமணிய பாரதியார்

எல்லாரும் தேசபக்தர் இந்த நாளில்
எத்தனையோ சிறைவாசம் இனிதாய்க் காண்பார்
சொல்லாலும் எழுத்தாலும் விளக்க வொண்ணுத்
துன்பமெல்லாம் சிறைவாசம் அந்த நாளில்
வல்லாளர் சிதம்பரனர் சிறையிற் பட்ட
வருத்தமெலாம் விரித்துரைத்தால் வாய்விட் டேங்கிக்
கல்லான மனத்தவரும் கண்ணீர் கொட்டிக்
கனல்பட்ட வெண்ணெயெனக் கரைவார் இன்றும்

—நாமக்கல் கவிஞர்

'அஞ்சுவனே! வெள்ளையரின் ஆட்சியொழிப் பேன்'என்று
வஞ்சினம் கூறிநின்ற மாவீரன்—விஞ்சுபுகழ்
செந்தமிழ்ச் செம்மல் சிதம்பரப்பே ரண்ணலைநாம்
வந்தனை செய்வோம் மகிழ்ந்து.

கைநோவக் கால்நோவக் கல்லுடைத்துச் செக்கிழுத்து
மெய்சோர்ந்தும் ஊக்கம் விடாதுநின்ற—ஐயன்
சிதம்பரம் அன்றுசிறை சென்றிலனேல், இன்று
சுதந்திரம் காண்பாயோ சொல்.

கப்பலை ஓட்டிக் கடுங்காவற் காளாகி
உப்பிலாக்கூழ் உண்டுடல் மெலிந்தோன்—ஒப்பிலாத்
தென்னுட்டு வீரதிலகன் சிதம்பரத்தின்
நன்னுமம் வாழ்த்துகஎன் நா.

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை



## சிதம்பரத்திற்கிணை செப்புவ தெங்கே ?

சுத்தானந்த பாரதியார்

வீரச்சி தம்பரம் பிள்ளை—தமிழ்
வித்தகன்; முத்தமி ழன்பன்
பாரத சுதந்திரச் சிங்கம்—நல்ல
பண்பாடு மிக்கவ ரகுணத் தங்கம்!

எங்கள்சி தம்பரம் என்னில்—நெஞ்சில்
ஏறிடும் வீரக்க னலெழுந் தாங்கே!
பொங்கிடும் தேசா பிமானம்—அச்சம்
போயொழி யும்இன்பப் புன்னகை மலரும்!

திலகரின் வலக்கரம் ஆனுன்—அவன்
செந்தமிழ் நாட்டுச் செயமுரசானுன்!
பொலமிகு பாரதி பாட்டில்—வீரப்
புலவனின் உள்ளமே துள்ளிடக் காண்போம்!

வங்கம்ந டத்திய சிங்கம்—ஓம்
வந்தேமா தரமெனும் மந்திரம் பொங்கும்!
எங்கள்சு தேசி இயக்கம்—வெல்லும்
என்றுமுன் சென்றனன் இடர்களி னூடே!

காலில் விலங்குகள் பூட்டி—கடுங்
கார்சிறை யிட்டங்கு செக்கும் இழுக்க
வேலைசெய் வேர்வைத் துளிகள்—நாட்டு
விடுதலைப் பயிருக்கு விண்மழை போலும்!





தியாகச்சி தம்பரம் என்னில்—எங்கள்
செய்கையி லேஒரு திட்பங்க னலுது!
வேகம் பறக்குது வாழ்வில்—ஆண்மை
வீறுபெ ருகுது விடுதலைப் போரில்!

திருக்குற ளேஅவன் மூச்சு—வீரத்
திலகரின் உள்ளத் துடிப்பவன் பேச்சு!
உருக்குமென் னெஞ்சத்தை அன்னேன்-சொன்ன
உரைகளைப் பருகியு யர்ந்தனன் முன்னே!

அத்தகை நண்பனின் றெங்கே?—சற்றும்
அச்சமில் லாதஅ றிஞனிங் கெங்கே?
சித்த வுறுதியும் எங்கே?—ஒரு
சிதம்பரத் திற்கிணை செப்புவ தெங்கே?

(புக்ஸ் வொர்ல்டு வெளியிட்டுள்ள ' விடுதலை வீரர் வ. உ. சி. என்னும் நூலிலிருந்து)



# கோவையில் என் தந்தை

—வ. உ. சி. ஆறுமுகம்

['கப்பலோட்டிய தமிழன்' வ. உ. சிதம்பரனாரின் மூத்த புதல்வரான, திரு. வ. உ. சி. ஆறுமுகம் அவர்கள், வ. உ. சி. கோவையில் இருந்த காலத்தில் நடந்த சுவையான தகவல்களை இங்கே கூறுகிறார். திரு. வ.உ.சி. ஆறுமுகம் அவர்கள் இன்று நம்மிடையே இல்லை.]

**1912**-ஆம் ஆண்டில் கண்ணனூர் சிறையிலிருந்து விடுதலை அடைந்த பின்னர் என்தந்தை தேசபக்தர் வ. உ. சிதம்பரனார், பல நண்பர்களின் வேண்டுகோளின்படி எங்கள் சொந்த ஊரான ஒட்டப்பிடாரத்தில் தன் பெற்றோர்களைக் காணச் செல்லாமல் சென்னைக்குச் சென்றார்கள்.

சென்னை மயிலாப்பூரில் பரிபூரண விநாயகர் கோவில் தெருவில் சிறிது காலம் வசித்து வந்தோம். மயிலாப்பூரில்தான் தேசபக்தர் சுப்பிரமணிய சிவா வசித்து வந்தார். அவர் 'ஞானபானு' என்ற ஒரு தமிழ்ப் பத்திரிகை நடத்தி வந்தார். கவி சுப்பிரமணிய பாரதியும் குடும்பத்துடன் மயிலையில்தான் வாழ்ந்து வந்தார். இரு தேசபக்தர்களும் அடிக்கடி என் தந்தையவர்களுடன் அரசியல் சம்பந்தமாகப் பேசுவார்கள்.

நான் சிறுவன், கூடமாட அவர்கள் சிற்றேவல்களைச் செய்து வருவேன். தமிழ்த் தந்தை திரு வி. கலியாணசுந்தர முதலியாரும், தமிழ்ப் பேராசிரியர் டி. செங்கல்வராய முதலியாரும் என் தந்தையைக் காண வருவார்கள். சென்னையில்தான் என் தந்தை 'வலிமைக்கு மார்க்கம்' 'சாந்திக்கு மார்க்கம்' என்ற நூல்களை எழுதிக் கொண்டு இருந்தார்கள். நமது முன்னாள் இந்திய ஜனாதிபதி திரு. வி. வி. கிரி, ஆதியில் என் தந்தையுடன் தொழிலாளர் இயக்கத் தலைவராக இருந்தார். டாக்டர் பெசண்ட் அம்மையார், பி. சக்கரைச் செட்டியார், டாக்டர் அருண்டேல், என். தண்டபாணி பிள்ளை முதலியோர் தலைமையில் சென்னை எம். எஸ். எம். இரயில்வேத் தொழிலாளர் சங்கம் ஆரம்பமாயிற்று. காலையில் ஆறுமணிக்கு வேலைக்குப் போனால் மாலை 6 மணிக்குத்தான் வேலையிலிருந்து விடுவிப்பார்கள். தொழிலாளர் சங்கம் ஆரம்பித்த பின்னர், 12 மணி நேர வேலை 10 மணி நேர வேலை ஆயிற்று. சம்பள உயர்வு, ஞாயிறு விடுமுறை, 'கேசுவல் லீவு' மருத்துவ விடுமுறை முதலியன நாளாரம்பத்தில் அனுமதிக்கப்பட்டன.

சென்னையில் எங்கள் குடும்பம் துன்ப நிலையில்தான் இருந்தது. லோகமான்ய பால கங்காதர திலகர் இந்தியன் ஹோம் ரூல் நிதியிலிருந்து என் தந்தைக்கு மாதம் நூறு ரூபாய் அனுப்பி வந்தார். சென்னையில் நாங்கள் இருந்த சமயம் 1918-ஆம் ஆண்டு திலகர் பெருமகன் சென்னைக்கு வந்தார். மாலையில் கொட்டும் மழையில் திலகர் பிரசங்கம் நடந்தது. திலகரின் ஆங்கிலப் பேச்சை என் தந்தை தமிழில் மொழி பெயர்த்தார். திரு. வி.வி. கிரி கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார். சென்னையில் தொழிலாளர் இயக்கம் வெற்றியோடு முன்னேறி வந்தது. அந்தச் சமயம் கோயம்புத்தூரில் ஏழு மில்கள் தான் இருந்தன. அங்கு தொழிலாளர் இயக்கம் நல்ல முறையில் ஆரம்பிக்கப்படவில்லை. கோவையிலிருந்து திரு சி.பி. சுப்பையா, வெள்ளிங்கிரிக் கவுண்டர் முதலிய தொழிலாளர் தலைவர்கள் சென்னைக்கு வந்து என் தந்தையைக் கோவைக்கு வரும்படி அழைத்தார்கள். என்தந்தையும் கோவையில் தொழிலாளர் இயக்கத்தை ஆரம்பிக்க எண்ணிக் குடி பெயர்ந்தார்.

1919-ஆம் ஆண்டு கோவைக்கு நாங்கள் குடிவந்ததும் மால்மில் ரோடில் சுப்புராய ஆச்சாரி வீட்டில் தங்கியிருந்தோம். அந்தக் காலத்தில் கோயம்புத்தூரில் என் தந்தைக்கு உறுதுணையாக இருந்த தமிழ்ப் பெரியார் திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் ஆவர். கோவைச் சிறையில் என்தந்தை கொடுந் தண்டனை அனுபவித்து, செக்கிழுத்து, கல் உடைத்துத் துன்பப்பட்டபோது திரு முதலியார் என் தந்தைக்குச் சிறையில், இரகசியமாகப் பல உதவிகள் புரிந்து வந்தார். அவருக்கு ஜெயில் வார்டன் திரு. கே. இராமய்யக் கவுண்டர் தூதுவராக இருந்து, வேண்டிய உதவிகள் செய்து வந்தார். அதன் பயனாய் திரு. இராமய்யக் கவுண்டர் வேலை நீக்கம் செய்யப்பட்







...திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் என் தந்தைக்குச் செய்த உதவியைப் போற்றுவான் வேண்டி, என் தம்பிக்கு சுப்பிரமணியனெப் பெயரிட்டுத் தன் நன்றியறிதலைத் தெரிவித்தார்கள்.

1920-21-ஆம் ஆண்டில் கோவை நகராட்சித் தலைவராகத் திவான்பகதூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் இருந்தார். சாரட்டு வண்டியில் திரு. இரத்தினசபாபதி முதலியார் என் தந்தையைக் காணவருவார். திரு. ஆர்.கே. சண்முகம் செட்டியார், 'ஹோம்ரூல்' இயக்கப் பிரமுகர் திரு. என்.எஸ். இராமசாமி அய்யங்கார், தமிழ் மேதை திரு. சி. எஸ். இராமச்சந்திரன் செட்டியார், கூட்டுறவுத் தந்தை திரு. டி. ஏ. இராமலிங்கம் செட்டியார் முதலிய பெரியோர்களும், மில் தொழிலாளர் சங்கத் தலைவர்களும் என் தந்தைக்குப் பூரண ஒத்துழைப்புக் கொடுத்து வந்தார்கள். அதன் பயனாகக் 'கோயம்புத்தூர் தொழிலாளர் பேங்கு அண்டு ஸ்டோர்ஸ் லிமிடெட்' என்ற ஒரு நிறுவனம் கம்பெனி சட்டப்படி பதிவு செய்யப்பட்டது. தொழிலாளர்களுக்குக் கடன் வசதியும், பண்டகசாலையில் உணவுப் பொருள் முதலியன குறைந்த விலையில், குறையாத எடையில் அதிக இலாபமின்றி விநியோகம் செய்யப்பட்டு வந்தது. தொழிலாளர் வங்கியும் பண்டகசாலையும் நல்லமுறையில் பல ஆண்டுகள் நடந்து வந்தன.

அந்தச் சமயம் 1920-ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். மகாத்மா காந்தி கோவைக்கு எங்கள் வீட்டுக்கு வந்தார். அப்போது மகாத்மா காந்தி அரை நிர்வாண உடை தரிப்பதில்லை. பஞ்சகச்சம் வைத்துக் கட்டிய கதர் வேட்டியும் முழுக்கை ஷர்வாணியும், தலைப்பாகையும் அணிந்து வந்தார். என் அன்னை மீனாட்சி அம்மையார், காந்தி மகானுக்கு நமது தமிழ்நாட்டுச் சைவ உணவு பரிமாறினார். அதைக் காந்தி ரசித்து உண்டார். கீரை வகைகளும், காய்கறிகளும் அவர் விரும்பி உட்கொண்டார்.

அன்று மாலையில் புளியந்தோப்பு மைதானத்தில் மாபெரும் கூட்டம் நடந்தது. வழக்கறிஞர் திரு. என். எஸ். இராமசாமி அய்யங்கார் தலைமை தாங்கினார். காந்தியின் ஆங்கிலப் பேச்சை என் தந்தை தமிழ்படுத்தினார். உடுமலை திருமதி மீனாஷி அம்மையார் ஆவேசமாகப் பிரசங்கம் செய்தார். மற்றும் பல தேச பக்தர்கள் ஆங்கில ஆட்சிக்கு எதிராகப் பிரசங்கம் செய்தார்கள்.

கோவையில் நாங்கள் வசித்து வந்த சமயம் நடந்த ஒன்றிரண்டு சம்பவங்களைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

தினந்தோறும் ஒரு பரங்கியன் குடையைத் தோளில் சாத்திக் கொண்டு எங்கள் வீட்டைப் பார்த்துக் கொண்டே போவான். அவன் மில்லில் டைம் கீப்பராகவோ என்னவோ வேலை பார்த்து வந்தான். என் தந்தைக்கு அவன் மீது ஏனோ வெறுப்பு. ஒருநாள் மாலை சுமார் 5 மணி இருக்கும். அந்தப் பரங்கி, வேலையிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தான். நான் வீட்டில் இருந்தேன். என் தந்தை என்னைக் கூப்பிட்டு 'அதோ வருகிறானே ஒரு துரை, அவனை இந்தச் செருப்பால் முதுகில் இரண்டு அடி கொடு' என்று கூறினார். நான் பயமறியாத சிறுவன். ஓடிப்போய் அந்த பரங்கியன் முதுகில் இரண்டடி போட்டேன். அவன் கூக்குரல் போட்டான். கூட்டம் கூடிவிட்டது. அவன் போலீசில் புகார் செய்தான். சிறிது நேரத்தில் சரிகைத் தலைப்பாகை வைத்த ஒரு சப்-இன்ஸ்பெக்டரும், இரண்டு போலீசாரும் வந்தனர். என் தந்தையிடம் விவரம் கேட்டனர். 'சிறு பையன் அடித்து விட்டான். இனிமேல் பார்த்துக் கொள்கிறேன்' என்று என் தந்தை சமாதானம் கூறியதும் சப்-இன்ஸ்பெக்டர் திரும்பி விட்டார். ஆங்கிலேயர் மீதுள்ள வெறுப்பேதான் இதற்குக் காரணம் என்பதை நான் பின்னர் தெரிந்து கொண்டேன்.

## வ. உ.சி.யின் திருக்குறள் பாடம்

பிள்ளையவர்கள் அநேகருக்குத் தமிழ்க் கல்வி போதித்து வந்தார். தாம் சொல்லிக் கொடுத்தவற்றை மறுநாள் ஒப்புவிக்க வேண்டும். இன்றேல் வேறு பாடம் நடத்த மாட்டார்.

இவரிடம் பாடம் கற்றுக் கொள்வது எல்லோருக்கும் எளிதல்ல. ராஜாஜி அவர்கள் சிதம்பரனாரிடம் திருக்குறள் பாடங் கேட்டபோது அவரது நிபந்தனைகள் பிடிக்காமையால் "எனக்குப் பாடஞ் சொல்லித் தரும் பொறுமை தங்களுக்கில்லை தங்களிடம் பாடம் கேட்கும் பொறுமை எனக்குமில்லை" எனக் கூறி விடை பெற்றுக் கொண்டாராம்.

இதனை, ராஜாஜியே சென்னைப் பொதுக்கூட்டம் ஒன்றில் வெளியிட்டார். இவர் திருக்குறளைப் பெரும்பாலும் மணக்குடவர் உரை கொண்டே விளக்குவார். பரிமேலழகர் உரையில் கலந்துள்ள காலத்திற்குப் பொருந்தாத கருத்துக்களைக் கண்டிப்பார். அவ்விருவர் உரையும் பொருந்தாவிடில் தம் உரையைச் சொல்லுவார்.

தமிழ்க் கல்வியில் ஆர்வமுடையோருக்கு உண்டி உதவியும், உறுபொருள் கொடுத்துங் கற்பிப்பார். இதற்கு சுவாமி சகஜானந்தர் அவர்களே சான்றாகும்.

தினந்தோறும், காலையிலும், மாலையிலும் கள்ளுப் பானைகளை ஏந்திய ஒத்தை மாட்டு வண்டி எங்கள் வீட்டு வழியாகச் செல்லும். நான்கு மொடா பானைகள், வண்டியிலிருக்கும். பெரிய பானைகள், மிகப் பெரிய பானைகள். ஒருநாள் என் தந்தை ஒரு கல்லைக் கொடுத்து "கள்ளு வண்டி அதோ வருகிறது. வரும்போது முன்னால் உள்ள பானையை உடைத்துவிடு" என்று கூறினார். நானும் ஓடிப் போய் முன்பானையை ஓங்கி ஒரு இடி இடித்தேன்; பானை உடைந்தது. கள் ஆறுபோல் பெருக்கெடுத்து ஓடியது. அதுமட்டுமல்ல, முன்னால் உள்ள பானை காலியானதால் பின்பாரம் அதிகமாகி வண்டி குடை கவிழ்ந்து, எல்லாக் கள் மொடாக்களும் உடைந்து, தெருவெல்லாம் கள், ஆறுபோல் பெருக்கெடுத்து ஓடியது!

அந்தக் காலத்தில் மதுவிலக்கு இல்லாத காலம்! கோயம்புத்தூரில் நாங்கள் வசித்து வந்த சமயம் பாலக்காட்டுப் பிரதேசத்தில் 'மாப்பிள்ளைக் கலகம்,' நடந்தது. ஆங்கிலேயரை எதிர்த்து மலையாளிகள் கலகம் செய்தார்கள். ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இப்போது மாதிரி கார் வசதி, ஆகாய விமானம், துரித இரயில் போக்குவரத்துக் கிடையாது. தந்திக் கம்பிகளை அறுத்து தொடர்பில்லாமல் செய்து, இரயில் பாலம், தண்டவாளம் முதலியவைகளை அகற்றி, ஆங்கில சிப்பாய்களை எதிர்த்து, மலையாளக் குடிமக்கள் போர்புரிந்து அவர்களைக் கலங்க வைத்தனர். ஆங்கிலேயர்களும் முதலில் கொஞ்சம் அஞ்சி நடுங்கத்தான் செய்தார்கள். அப்போது கோயம்புத்தூர் இரயில் நிலையம் மிகச் சிறியதாக புளியந்தோப்புக்குப் பக்கத்தில் இருந்தது. காற்றுப் புகாத குட்ஸ் இரயில் பெட்டியில் மலையாளக் கைதிகளை வாகன் நிறையத் திணித்து குட்ஸ் வண்டியில் ஏற்றி வெளியூர்களுக்கு அனுப்பினார்கள்.

கோவை இரயில் நிலையத்தில் வாகனைத் திறந்தால் மலையாள



'கப்பலோட்டிய தமிழன்' வ. உ. சிதம்பரனாரின் நூற்றாண்டு விழாவை யொட்டி தூத்துக்குடி துறைமுகத்தில் நிறுவப்பட்டுள்ள வ. உ. சி.யின் முழு உருவவெண்கலச்சிலையை பிரதமர் திருமதி இந்திரா காந்திஅவர்கள் 5—9—1972 அன்று திறந்துவைத்தார்கள்.

மக்கள் மூச்சுத் திணறிப் பிணமாகக் கிடப்பார்கள். மோட்டார் வாகனங்களில் பிரேதங்களைத் தூக்கிப் போட்டு மயானத்துக்கு எடுத்துச் செல்லும் சோகக் காட்சியை நானும் பலநாள் பார்த்துக் கண்ணீர்விட்டுக் குமுறியுள்ளேன்! ஆங்கில ஆட்சி, கொடுமை மிகுந்த ஆட்சி! மக்கள் இப்போது போல் எழுச்சி அடையாத காலம். பாவம்! பரிதாபம்!

நாங்கள் கோவையில் வசித்து வந்த சமயம் 1920-21-ஆம் ஆண்டு 'பிளேக்' நோய் நகரெங்கும் பரவி மக்கள் மாண்டு மடிந்தனர். முதல் நாள் மாலையில் எங்கள் வீட்டுச் சொந்தக்காரச் சுப்புராய ஆச்சாரி என் தந்தையுடன் பேசிக் கொண்டிருந்தார். மறுநாள் அதிகாலையில் அவர் 'பிளேக்' நோயால் இறந்து போனார் என்று அறிந்ததும் நாங்கள் பயந்து விட்டோம். எங்கள் வீட்டிலும் எலிகள் விழுந்து செத்தன. திரு. ஆர். கே. சண்முகம் செட்டியார் உதவியால் நாங்கள் உடனே கோவைக்குச் சமீபமுள்ள திருப்பேரூர் பட்டிலிங்க சுவாமிகள் ஆச்சிரமத்துக்குக் குடிபெயர்ந்தோம். தினம் காலையில் ஒற்றை மாட்டு வண்டியில் கோவைக்குத் தொழிலாளர் வங்கி மற்றும் பண்டகச்சாலை நிருவாகத்தைக் கவனிக்கச் சென்று மாலையில் பேரூருக்குத் திரும்பி விடுவார்கள். நாங்கள் பேரூரில் வசித்து வந்த சமயம் என் கடைசித் தங்கை பேரூரில் பிறந்தாள். அவளுக்கு ஸ்தல அம்பாளான மரகதவல்லியின் பெயரைச் சூட்டினார்.

## வ. உ. சி. கேட்ட கடைசிப் பாடல்கள்!

சிதம்பரனார், தமது ஆவி பிரியும் முன்னர் கவியரசர் பாரதியாரின் தேசியப் பாடல்களைப் பாடச் சொல்லிக் கேட்டு உள்ளம் பூரித்தார்.

உயிர் விடுந்தறுவாயில், தேவாரத்தையோ, திருவாசகத்தையோ பாடச் சொல்லிக் கேட்பர் சைவர்கள். இந்தக் கொள்கை தூய சைவரான வ.உ.சிக்கும் உடன்பாடே. ஆனால், தெய்வ பக்தியினும் தேசபக்தியே மிகுந்திருந்த காரணத்தால், பாரதியாரின் நாட்டுப் பாடலைப் பாடச்சொல்லி கேட்டுக்கொண்டே உயிர் நீத்தார்.

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்தது மிந்நாடே" என்று துவங்கும் பாடலும், "என்று தணியு மெங்கள் சுதந்தர தாகம்" என்ற முதலை கொண்ட பாடலுந்தான் வ.உ. கேட்ட கடைசிப் பாடல்கள்.

"சாவதற்கு முன்னர் சுதந்ரத்தைக் காணக்கொடுத்து வைகாமற் போனேனே!" என் கண்களில் நீர் ததும்பக் கூறி சொற்களே அவர் வழங்கி கடைசிச் சொற்கள்.

பிள்ளையவர்கள் இம்மண்ணுலகை விட்டுப் பிரியுந் தறுவாய் —அதாவது, 1936-ஆம் ஆண்டிலேயே, "கூடிய சீக்கிரத்தி உண்டாகும் உலக யுத்தத்தின் மூலம் இந்திய நாடு சுதந்தரம் எய்துவது திண்ணம்" என் கூறிப் போனார். இவரது ஆழ்ந்த அரசியல் அறிவையும், கனிந்த நாட்டுப் பற்றையும் என்னென் கூறுவது!




வ. உ. சிதம்பரனாரின் நூற்றாண்டு விழாவையொட்டி வெளியிடப் பெற்ற வ. உ. சி. அஞ்சல் தலைகள் அடங்கிய ஆல்பத்தை நமது பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் திரு. வ.உ.சி. ஆறுமுகம் அவர்களிடம் அளிக்கிறார்.

என் தந்தைக்கு தேசபக்தியோடு தெய்வ பக்தியும் நிறைய உண்டு. தினம் காலையில் குளித்தவுடன் தூய உடை அணிந்து நெற்றியில் விபூதி பூசிச் சந்தனப் பொட்டு இட்டுக் கடவுளை வணங்கி, எல்லோருடனும் சிரித்து, அன்போடு பேசி உபசரிப்பார்கள். நாங்கள் பேரூரிலிருந்த சமயம் பட்டிலிங்க ஈஸ்வரர் தேவ ஆலயத்தில் ஆண்டு தோறும் நடக்கும் பிரம்மோத்சவத்தில் எட்டாம் திருவிழா மண்டகப்படி அவர்கள் ஆயுள் உள்ளவரை நடத்தி வந்தார்கள். இப்பவும் எங்கள் சொந்த ஊரில் விஸ்வநாத சுவாமி திருக்கோயிலில் ஒன்பதாம் திருவிழா மற்றும் உற்சவம் எங்கள் மூதாதையர் காலமுதல் நாங்கள் நடத்தி வருகிறோம்.

ஆங்கில ஏகாதிபத்தியம் ஒழிய வேண்டும் என்று என் தந்தை கண்ட கனவு நனவாகிவிட்டது. நம்நாடு விடுதலை அடைந்து 25 ஆண்டுகள் பூர்த்தி ஆகிவிட்டது. என் தந்தையின் தேசத் தியாகத்தைப் போற்றி நமது இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் 1972 செப்டம்பர் மாதம் 5-ம் தேதி என் தந்தையின் நூற்றாண்டு விழாவை ஒட்டி தூத்துக்குடி துறைமுகத்தில் வ. உ. சி. யின் முழுஉருவ வெண்கலச் சிலையைப் பல இலட்சம் தமிழ் மக்கள் முன்னிலையில் திறந்து வைத்தார்கள். இந்திய அரசின் தபால் தந்தி அமைச்சர் திரு. பகுகுணா, எந்தந்தையவர்கள் திரு உருவம் பொறித்த தபால் தலையை வெளியிட்டார்கள். மத்திய தொழில் வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் என் தந்தையின் தேசத் தியாகத்தைப் பற்றிச் சொற்பொழிவாற்றினார்.

தூத்துக்குடி துறைமுகத்துக்கு 'வ. உ. சி. துறைமுகம்' என்று பெயரிட்டமைக்கும், சென்னை ஜார்ஜ் டவுனை 'வ.உ.சி. நகர்' என்று பெயரிட்டமைக்கும், கோவை காரனேஷன் பார்க்கை, 'சிதம்பரனார் பூங்கா' என்று பெயரிட்டமைக்கும் தமிழகமெங்கும் வ. உ. சி. நூற்றாண்டு விழா ஆங்காங்கு சிறப்பாகக் கொண்டாடிச் சிறப்பித்தமைக்கும், கோவையில் சைவப் பேரவையின் ஆதரவில் வ. உ. சி. மலர் வெளியிட்டு, திரு உருவப் படம் திறந்து வைத்தமைக்கும், வ.உ. சியின் குடும்பத்தின் சார்பில் நான் என் நன்றியறிதலையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். வாழ்க சிதம்பர நாமம்!

## 'என் பிள்ளையவர்கள் எங்கே?'

வீரச் சிதம்பரனாரை அந்த நாளில் வட நாட்டார் அறிந்து கொண்ட அளவு தமிழ் நாட்டார் தெரிந்து கொள்ளவில்லை எனத் துணிந்து கூறலாம். இதற்குச் சான்றாகச் சில சம்பவங்களை இங்கு எடுத்துக் கூறுவோம்.

சூரத் காங்கிரஸின்போது பிரதிநிதிகள் விடுதியில் மகான் அரவிந்தர், லாலா லஜபதி போன்ற தீவிரவாதத் தலைவர்களும், வேறு பல பிரதிநிதிகளும் உட்கார்ந்திருந்தனர்.

அச்சமயத்தில், அரவிந்தர் அங்கிருந்தவர்களை நோக்கி, "Where is my Pillai?" (என் பிள்ளை எங்கே?') என்று கேட்டார். யாவரும் சற்றுத் திகைத்திருந்தனர்.

உடனே அரவிந்தர் விளக்கமாக "அவர்தான், புகழ்பெற்ற தேச பக்தர் தூத்துக்குடி சிதம்பரம் பிள்ளை" என்றார். எல்லோருக்கும் இவ்வார்த்தைகள் தூக்கி வாரிப் போட்டதைப் போலிருந்தன.

பிள்ளையவர்களும் அங்கு வந்து சேர்ந்தார். அரவிந்தர் அவரை அன்போடு அணைத்துக் கொண்டார்.

# தென்னாட்டுத் திலகர்

—ஏ. வி. பால் நாடார்

**1872**-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ஆம் தேதியன்று சிதம்பரம் பிள்ளை ஒட்டப்பிடாரத்தில், சைவ வேளாளர் குலத்தில், சிதம்பரக் கவிஞன் குடும்பத்தில் வள்ளி நாயகம் பிள்ளை குமாரர் உலகநாத பிள்ளைக்கும் பரமாயி அம்மாளுக்கும் புதல்வராய் உதித்தார்.

வீராதி வீரன் கட்டபொம்முவுக்கு ஸ்தானாதிபதி பிள்ளையாயிருந்த சுப்பிரமணியப் பிள்ளையும் இவருக்கு நெருங்கிய பந்து. எனவே, வீரமும், கவித்வமும், கலைவாசனையும் இவருக்குப் பிறப்புரிமையாய் அமைந்தன. தம் பிதா மகரிடம் முதற் கல்வி பயின்று, ஒட்டப்பிடாரம் கம்மவார் இந்துப் பள்ளியில் ஆரம்பக் கல்வி கற்று, தூத்துக்குடி புனித சேவியர் உயர்தரப்பள்ளியில் மெட்ரிகுலேஷன் படித்து, 1891-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடந்த பரீட்சையில் தேறினார். பின்னர் திருச்சிராப்பள்ளியில் சட்டக் கல்வி பயின்று, திருநெல்வேலியில் 1895-ஆம் ஆண்டு பிப்ரவரியில் நடந்த பரீட்சையில் தேறி, சென்னை உயர்தர நீதி மன்றத்தில் சன்னது பெற்று, தூத்துக்குடியில் இரண்டாவது கிரேடு பிளீடராக 1895 முதல் வக்கீல் உத்தியோகம் செய்தார். பத்து ஆண்டுகளுக்குள்ளாக அத்தொழிலில் பெரும் புகழ்பெற்று செல்வாக்குள்ளவராய்த் திகழ்ந்தார்.

அந்நாளிலும் ஏழைகள்பால் இரக்கங் காண்பித்தார். அவர்களுக்கு உபகாரமாக வழக்கறிஞர் ஊழியஞ் செய்வதுண்டு. ஒழிந்த நேரங்களிலே 'சைவ நூல் ஆராய்ச்சி செய்தார். திருக்குறளை நன்றாய்க் கற்றுணர்ந்தார். சுவாமி வள்ளிநாயகம் என்னும் அறிஞருடன் சேர்ந்து 'விவேக பாநு' எனும் மாதப் பத்திரிகையும் நடத்தி வந்தார்.

அவ்விதம் வாழும் நாளில் இந்தியாவின் அரசியல் நிலையைப் பற்றி மக்களின் மனப்பான்மையில் ஒரு மாறுதல் தோன்றியது. இந்தியரின் மீது அனுதாபங் கொண்ட சில பிரிட்டிஷ் பெருமக்களின் எழுப்புதலின் பேரில், தேசிய உணர்ச்சி மிக்க இந்தியத் தலைவர்கள் 1885-ல் இந்திய நேஷனல் காங்கிரஸை ஸ்தாபித்தார்கள். ஆண்டுகள் தோறும் கூட்டங்கூடி, இந்தியாவின் குறைபாடுகளை முறையிட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றி ராஜப் பிரதிநிதிக்கு மனுச் செய்து கொண்டேயிருந்தார்கள். ஆயினும், அதனால் பொது மக்களிடையே யாதொரு கிளர்ச்சியும் உண்டாகவில்லை. 1900-ம் வருடம் முதல் தன்மூப்புள்ள கர்ஸான் பிரபு ராஜப் பிரதிநிதியாக இருந்தார். கோலாகலத்துடன் கல்கத்தாவிலிருந்து கொண்டு இந்தியாவை அரசு புரிந்து வந்தார். தமது குத்தலான மொழிகளால் தூங்கிக் கொண்டிருந்த இந்தியரை அதட்டி எழுப்பினார். இந்தியரின் தன்மானத்தைப் புண்படுத்தினார். வங்காளிகளை விசேஷமாகப் பழித்தார். தலைமுறை தத்துவமாக இந்தியாவைக் கட்டியாள முறைகள் தேடினார். வங்காளிகள் ஏகோபித்து எதிர்த்தனர். அவர்களை அடக்க, வங்காளத்தை இரண்டு துண்டாக்கினார். வங்கையில் மூண்டது நெருப்பு! இந்தியாவெங்கும் எழுந்தது கிளர்ச்சி! முழங்கினது போர் முரசு! சுதந்திரச் சங்கு எங்கும் தொனித்தது! வங்காளத்தில் இத்தொண்டாற்றினவர்கள் சுரேந்திரநாத் பானர்ஜி, அஸ்விநி குமார் தத்தர், அரவிந்த கோஷ் முதலியோர். லாலா லஜபத் ராய் பஞ்சாபின் சுதந்திர இயக்கத்திற்குக் காரணர். மஹாராஷ்டிரத்தில் இவ்வியக்கத்தின் தலைவர்கள் திலகரும் கோகலேயும். தமிழ்நாட்டில் அத்தகைய இயக்கத்தை உண்டாக்கினவர் நமது வீரன் வ. உ. சிதம்பரம் பிள்ளை.

பூர்வ கால முதல் தமிழர்கள் வியாபாரத்தில் சிறந்தவர்கள். 'திரை கடலோடியும் திரவியம் தேடு' என்பது அவர்களின் கோட்பாடு. அக்காலத்தில் வாணிபத்திற்காகப் பல சிறந்த துறைமுகங்கள் இருந்தன. கொற்கை,

வ. உ. சிதம்பரனாரும், அவருடைய முதல் மனைவி வள்ளியம்மையாரும்.





வ. உ. சிதம்பரனாரும் அவருடைய இரண்டாவது மனைவி மீனாட்சி அம்மையாரும்.

பழைய காயல், தொண்டி, காவிரிப்பூம்பட்டினம், நாகப்பட்டினம் முதலிய துறைகளிலிருந்து கிழக்கே சீனாவுக்கும், மேற்கே ரோம் ராஜ்யத்திற்கும் சரக்குகள் போய் வந்து கொண்டிருந்தன. இவ்வளவு சிறப்பாக விளங்கிய தமிழ்நாட்டின் வியாபாரமும் தொலைந்தது. பொது மக்கள் வறுமை வாய்ப்பட்டனர். வயிறு வளர்ப்பதற்காக, அருகாமையிலுள்ள இலங்கைத் தீவிற்குப் போவதற்குக்கூட அந்நிய நாட்டினரின் கப்பல் உதவியை நாடும்படியான நிர்ப்பந்த நிலைமையும் ஏற்பட்டுவிட்டது. இலங்கைத் தீவோடு சொந்தமாய் நாம் செய்து வந்த வியாபாரமும் அந்நிய நாட்டாரின் தயவில் நடந்தது.

இந்நிலையை உணர்ந்த வ.உ.சி. தூத்துக்குடியில் சுதேசிக் கப்பல் கம்பெனி ஒன்று நிறுவ முன் வந்தார். தென்னாட்டு வியாபாரிகள் செல்வர்கள், தேச பக்தர்கள் இவர்களின் ஆதரவைப் பெற்று, பங்கு ஒன்றுக்குப் பத்து ரூபாய் வீதம் பத்து லட்ச ரூபாய் மூலதனம் சேர்த்து, சுதேசிக் கப்பல் கம்பெனியை 16-10-1906-ல் [illegible] செய்தார். வாலிபர்களுக்கு [illegible]ளிக்கத் தூத்துக்குடியில் [illegible] பரஷ்யர் சங்கம்' ஏற்படுத்தி நடத்தினார். நெசவுத் தொழிலைப் பரவச் செய்யக் கைத்தறிச் சாலை ஒன்று நிறுவினார். பொது மக்களிடையே தேசிய உணர்ச்சியைத் தூண்டிவிடும்படியாகப் பொதுக்கூட்டங்களில் அடிக்கடி பிரசங்கம் செய்து வந்தார். தூத்துக்குடியில் பருத்தி ஆலையில் வேலை செய்யும் தொழிலாளிகளுக்கும், முதலாளிகளுக்கும் வேற்றுமை ஏற்பட்டபொழுது அவர்களைச் சமரசப்படுத்த முயன்றார். தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து கஷ்டப்பட்ட பொழுது, அவர்களுக்கு ஆகாரம் அளிக்க, பொதுஜன ஆதரவைப் பெற்றதோடுகூட சர்க்காரையும் உதவி செய்யும்படியாகச் செய்து விட்டார். 'சுதேசி' உணர்ச்சி தூத்துக்குடியில் உச்ச நிலையை அடைந்தது. அந்நிய நாட்டுச் சரக்குகளைப் பொதுமக்கள் வெறுத்தனர். 'சுதேசி இயக்கத்திற்கு' விரோதமாயிருந்தவர்களும் பொது மக்கள் வெறுப்பிற்கு இலக்காயினர்.

இவ்விதமாக நாட்டிலெங்கும் சுதேச வாஞ்சையை நாட்டினார். இதற்குப் பல இடையூறுகளும் ஏற்பட்டன. அந்நியக் கப்பல் கம்பெனியின் போட்டி ஒரு புறம்; பொது மக்களின் கட்டுப்பாடில்லாத அளவு கடந்த உற்சாகத்தினால் உண்டான அழிவுகளும் நஷ்டங்களும் இன்னொரு புறம்; சுப்பிரமணிய சிவாவின் அரசியற் கிளர்ச்சி மற்றொரு புறம்; இதற்கு மத்தியில் சர்க்காரின் அடக்கு முறை வேறு. எல்லாஞ் சேர்ந்து சிதம்பரம் பிள்ளைக்கும் சுதேசிக் கப்பலுக்கும் ஆபத்து விளைவித்தன. சுப்பிரமணிய சிவாவின் பேரில் ராஜத்துரோகக் குற்றம் சாட்டப்பட்டது. சிதம்பரம் பிள்ளை சிவாவுக்குத் தூண்டுகோலாயிருந்ததாக அவர் பேரிலும் குற்றம் சாட்டி விசாரணை நடந்தது. திருநெல்வேலி அடிஷனல் செஷன்ஸ் ஜட்ஜ் ஆயுள் கால தீவாந்திர தண்டனை விதித்தார். சென்னை ஐக்கோர்ட்டார் ஆறு வருடத் தண்டனையாக மாற்றினர்.

சிறை வாசத்திலும் தமிழ் மொழியை மறக்கவில்லை. திருக்குறளை மிகவும் நன்றாய் ஆராய்ச்சி செய்தார். ஆங்கிலேய ஞானி ஜேம்ஸ் ஆலன் என்பவர் இயற்றிய சில அரிய நூல்களை மொழி பெயர்த்தார். 'மனம் போல வாழ்வு', 'அகமே புறம்' 'வலிமைக்கு மார்க்கம்' என்ற பெயர்களுடன் பிரசுரஞ் செய்தார். சிறையிலிருந்தே பிரசுரமான "மனம் போல வாழ்வு, காகிதம், அச்சு, மை, கட்டடம் அனைத்தும் சுதேசியம்" என்ற குறிப்புடன் வெளியாயிற்று.

சுமார் நாலரை ஆண்டுகளுக்குள் 1912-ஆம் வருடம் டிசம்பர் மாதத்தில் சிதம்பரம்பிள்ளை விடுதலை அடைந்தார். அப்போது வயது நாற்பது. சிறந்த உடற்கட்டு உடையவராயினும் சிறை வாசம் உடல் நலத்தைப் பெரிதும் கெடுத்துவிட்டது. ஆயினும் திடச்சித்தமும், அஞ்சா நெஞ்சமும் முன்போலவே இருந்தன. சுதேசிக் கம்பெனியும் தொலைந்துவிட்டது. வருவாயின்றி வறுமையில் வருந்த நேர்ந்தது. 1922-ஆம் வருடம் மீண்டும் வக்கீலானார். தூத்துக்குடியிலும் சிலகாலம் கோவில்பட்டியிலும் வக்கீல் தொழில் புரிந்தார்.

சிதம்பரம் பிள்ளை எந்நிலைமையில் இருந்தாலும் தமிழ்மொழியின் மீதுள்ள பற்றை மறக்கவில்லை. சிறைவாச காலத்தில் 1910-ல் முதன் முதலாகத் தொல்காப்பியத்தைப் படிக்க ஆரம்பித்தார். பொருளதிகாரத்தின் பேரில் பெரிய ஆர்வம் ஏற்பட்டது. தமிழன் ஒவ்வொருவரும் அதைப் படிக்க வேண்டுமென்ற அவாவும் உண்டானது. ஆயினும் அந்நூலுக்கு ஏற்றியுள்ள உரைகள் கடின நடையிலுள்ளன வென்பதை உணர்ந்தார். தமிழ் மக்கள் யாவரும் கற்கும்படி எளிய நடையில் ஓர் உரை எழுத வேண்டுமென்று கருதி எழுதவும் ஆரம்பித்து விட்டார். விடுதலையான பின் இளம்பூரணரின் உரையொன்று கிடைத்தது. அதன் உயர்வையும் சிறப்பையும் எளிய நடையையும் கண்டு, தாம் உரை எழுதுவது மிகையென்று நினைத்து அதை நிறுத்திக்கொண்டார். அப்பால் இளம்பூரணர் உரையை அச்சிட்டு, வெளிப்படுத்திக் குறைந்த விலைக்கு விற்றார். அதன் கடைசிப் பாகமாகிய மெய்ப் பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் இவற்றை 1936-ஆம் வருடம் பூரணப் படுத்தி வெளியிட்டு, அவ்வருடமே காலஞ்சென்றார்.

ஆயுட்காலம் வரையில் திருக்குறள் ஆராய்ச்சி அவர் மனத்தைக் கவர்ந்து கொண்டேயிருந்தது. 'யான் பெற்ற இன்பம் இவ்வையம் பெறுக' எனும் நோக்கத்துடன் அறத்துப்பால் ஆராய்ச்சியை 1935-ல் வெளியிட்டார். அவற்றில் 30 பாடங்கள் முந்திய உரையாசிரியர் கொண்டுள்ள பாடங்கள். மீதம் 44-ம் வ. உ. சி. யின் தானாகக் கொண்டுள்ள பாடங்கள். பரிமேலழகர் பாடங்களிலுள்ள வித்தியாசங்கள் ஏடு பெயர்த்தெழுதுவோரால் ஏற்பட்ட வித்தியாசங்கள் என்று கருதுகிறார். திருக்குறள் பாயிரத்தில் காணப்படும் 'கடவுள் வாழ்த்து, 'வான்சிறப்பு' 'நீத்தார் பெருமை' என்னும் மூன்று அதிகாரங்களும் திருவள்ளுவர் இயற்றவில்லை என்றும் அபிப்பிராயப்படுகிறார்.

1933-ஆம் வருடம் தூத்துக்குடிக் கம்பன் கழகம் நிறுவப்பட்டது. அதன் மூல ஸ்தாபகர்களில் வ. உ. சி. ஒருவர். கழகத்தார் ஒவ்வொரு வாரமும் எனது இல்லமாகிய சௌந்திர விலாஸத்தில் கம்ப ராமாயணத்தை ஆராய்ச்சி செய்து வந்தனர். இக்கழகம் வ. உ. சி. யின் இறுதிக் காலத்தில்தான் ஸ்தாபிக்கப்பட்டதென்றாலும் தீவிர சைவராகிய இவர் இந்நூலைப் பெரிதும் பாராட்டி சுமார் 150 கூட்டங்களில் பிரசன்னமாயிருந்து கழகத்தாருக்கு மிகுந்த உற்சாகம் அளித்து வந்தார். கழகத்தில் ஊக்கமளித்ததோடமையாமல் தமது வீட்டிலும் கம்ப ராமாயணத்தை ஆராய்ச்சி செய்து வந்தார்.

'இன்மை ஒருவற்கு இளிவன்று
சால்பென்னுந்
திண்மை யுண்டாகப் பெறின்'

எனும் அருங் குறளுக்கு இலக்காயமைந்தவர்.

(பம்பாய்த் தமிழ்ச் சங்கம் வெளியிட்ட வ. உ. சி. மலரிலிருந்து.)

## துணைவியைப் பாராட்டிய சிதம்பரனார்!

திருவள்ளுவர், தம் மனைவி இறந்தபோது, 'அடிசிற்கினியாளே'! 'அன்புடையாளே'! என்று மனைவியின் பெருமையைச் செய்யுள் வடிவில் எடுத்துரைத்ததாகச் செவி வழிச் செய்தி ஒன்று நெடுங்காலமாக நிலவி வருகிறது. வள்ளுவரைப் போலவே வ. உ. சிதம்பரனாரும் மனைவியின் மாண்பை உணர்ந்தவர். தமது முதல் மனைவி வள்ளியம்மை மறைந்தபோது, துன்பமுற்று, வருந்தி, அவரது பெருமையைப் பாட்டாக வடித்துள்ளார். அப்பாடல் வருமாறு :

இல்லமதில் ஒன்றுமே இல்லையென்னுள்; எக்காலும்
நல்லுணவு தான்சமைத்து நல்குவாள்—அல்லலற
இன்புறவே செய்திடுவாள் ; எப்பணியும் உள்ளமுடன்
அன்புமிக நல்லாள் அமைந்து.

என்னுடைய நண்பர்களும் ஏழையரும் மற்றவரும்
என்னுடைய வீடுவந்தால் ஏந்திழைதான்—தன்னுடைய
பெற்றோர்வந் தார்களெனப் பேணி உபசரிப்பாள்
கற்றோரும் உள்ளுவக்கக் கண்டு.

## நந்தனர் வகுப்புப் பிள்ளை!

ஆதித் தமிழரொருவரை, தமது இன்னுயிர்த் துணைவராகக் கொண்டு தமிழ் இலக்கியங்களைக் கற்பித்தார் வ.உ.சி. அவர்தான் சுவாமி சகஜானந்தர். பிற்காலத்தில் சிதம்பரனார் சிறையிலிருந்து மீண்டதும் சில காலம் சென்னையில் வசிக்க நேர்ந்தது. அப்போது ஒரு நாள் சென்னை ரிப்பன் அச்சு யந்திரசாலையில் சிதம்பரனாரும் சகஜானந்தரும் முதன் முதலாக ஒருவரை ஒருவர் சந்தித்து உரையாட நேர்ந்த காலையில், பிள்ளை அவரது சாதியைவிசாரித்தாராம். "நான் நந்தனர்வகுப்புப்பிள்ளை" யென சகஜானந்தர் பதிலளிக்க, உடனே சிதம்பரனார், சகஜானந்தரின் இரு கைகளையும் இறுகப் பிடித்து, "உண்மையைக் கூறியதால் நீர்தான் உண்மை அந்தணர்" எனக் கூறி, சகஜானந்தரைத் தம் இல்லத்திற்குக்கூட்டிச் சென்றார். பின்னர் பல ஆண்டுகள் அவரைத் தம் வீட்டிலேயே வைத்திருந்து உணவளித்துத் தொல்காப்பியம், திருக்குறள் முதலிய சிறந்த நூல்களைப் பயிற்றுவித்துப் பண்டிதராக்கினார்.

சிதம்பரனார் சென்னையை விட்டு நீங்கி, மீண்டும் தமது சொந்த ஊராகிய ஒட்டப்பிடாரம் சென்ற போது சகஜானந்தரையும் தம்முடன் கூட்டிச் சென்றார். தமது உறவினர் இல்லங்களில் நடக்கும்விழாக்களுக்குச் சகஜானந்தரையும் தம்முடன் அழைத்துச் செல்வார். யாராவது சகஜானந்தரின் குலத்தைக் குறித்துக் கேட்டால், "இவர் ஒரு துறவி; இவரைச் சாதி விசாரிக்கக்கூடாது" என்பாராம். "தமது பிள்ளையைப் போன்று என்னை வளர்த்தார். அப்பெருந்தகை வள்ளல்!" எனச் சகஜானந்தரே கூறுகிறாரெனில், பிள்ளையவர்களின் பெருங்குணத்திற்கு வேறு என்ன சான்று தர வேண்டும்?




# தேசபக்தர் சிதம்பரனார்!

—எம். பக்தவத்சலம்

இந்த நூற்றாண்டில் இந்தியாவில் முதன் முதலில் சுதேசிக் கப்பல் ஓட்டிய தலைவர் தீர்க்க தரிசி, தளபதி, வழிகாட்டி — வ.உ.சிதம்பரம் பிள்ளை ஒருவர் தான்! சுதேசிக் கப்பல் கம்பெனியால் ஆங்கிலக் கம்பெனிக்கு நஷ்டம் வந்தது. ஆங்கிலேயனது பிழைப்புக்கே, சிரமம் வந்தது! இதைப் பார்த்த அப்போதைய திருநெல்வேலி கலெக்டர் விஞ்ச் துரை இவரை எப்படியாவது வேறு வகையில் பழி வாங்கி அழித்தால்தான், தூத்துக்குடியில் தனது வெள்ளை இனம், சுகமாக வாழமுடியும் என்று நாள் குறித்து விட்டான்.

இதையறிந்த பிள்ளையின் நண்பர்கள் பயந்தார்கள். சுதேசிக் கப்பல் இலாபத்தோடு நடக்க வேண்டுமானால் அவர் சுதந்திர இயக்கத்தில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கி இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

அவர் குடும்பத்தினரும், உறவினர்களும், உற்ற நண்பர்களும், பெரியவர்களும், வ.உ.சி. சிரமப் படக்கூடாது என்ற அக்கறை கொண்டு, சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட வேண்டாம் என்று வேண்டினர். பிள்ளையவர்கள் கேட்கவில்லை. சுதந்திரப் போரின் ஒரு அங்கந்தான் சுதேசிக் கப்பல் கம்பெனி என்று கூறிவிட்டார்.

வெள்ளையன் எதிர்பார்த்திருந்த சோதனை நாள் வந்தது. திருநெல்வேலி மாவட்டத்தில் விஞ்ச் துரை தேசியக் கூட்டங்களுக்குத் தடை விதித்திருந்தான். 144-வது செக்ஷன் போட்டான்! அப்போது அந்த மாவட்டத்தில் மற்றொரு பிரபல தேச வீரரான சுப்பிரமணிய சிவா என்பவர்க்கும் தடை விதிக்கப்பட்டது. அவர் கூட்டத்தில் பேசக்கூடாது; அவருக்கு யாரும் ஆதரவு தரக் கூடாது. ஆதரவு தந்தால் அவர்களுக்கும் தண்டனை உண்டு என்றது அடக்குமுறை.

ஆனால் வ.உ.சிதம்பரம் பிள்ளை சுப்பிரமணிய சிவத்தைத் தனது உடன் பிறந்த சகோதரராகவே பாவித்து, மதிப்புடன் நடத்தி ஆதரித்தார். இருவரும் சேர்ந்தே பல கூட்டங்களில் வீர கர்ஜனை செய்து மக்கள் மனத்திலிருந்த பயத்தைப் போக்கிப் புதிய உற்சாகத்தை அளித்தார்கள். அப்போது பாரத மெங்கும் புகழ் பெற்றிருந்த தலைவர் விபின் சந்திர பாலரின், விடுதலை தினத்தை விழாவாகக் கொண்டாடப் பிள்ளையவர்கள் ஏற்பாடு செய்தார்கள்.

விழாவிற்கு 144 போட்டிருந்தது அரசாங்கம். தெருவில் நாலு பேருக்கு மேல் கூட்டம் கூடிப் பேசக் கூடாது என்பது தடையுத்தரவு. வ.உ.. சிதம்பரம் பிள்ளையும், சிவாவும் கூட்டத்தில் பேசினார்கள். வந்தே மாதரம் என்று வானளாவக் கர்ஜித்தனர். பிள்ளையவர்கள் ஆட்சியின் அடக்கு முறையை எதிர்த்துப் பேசினார். அரசாங்கம் அவர் மேல் இராஜத் துவேஷ வழக்கைப் போட்டு செஷன்ஸ் கோர்ட்டில் விசாரித்தது. பின்ஹே என்ற மாவட்ட நீதிபதி சிதம்பரம் பிள்ளையவர்கள் இராஜ நிந்தனையாகப்பேசிய குற்றத்திற்கு இருபதாண்டு, சிவாவுக்கு ஆதரவு தந்தமைக்கு இருபதாண்டு, ஆக நாற்பதாண்டுச் சிறைவாசத்தையும், தடை மீறிப் பிரசங்கம் செய்த சிவாவுக்குப் பத்தாண்டுச் சிறைவாசமும் விதித்துத் தீர்ப்புக் கூறினார். இந்தக் கொடுமையான தீர்ப்பைக் கேட்டு ஊர் நடுங்கியது. திருநெல்வேலிச் சீமையே அதிர்ச்சி கொண்டது. எங்கும் புரட்சிக் கனல் எழுந்தது. மக்கள் பொறுமையிழந்தனர். பிள்ளையவர்கள் மனம் மட்டும் ஆழியினும் அமைதியாக இருந்தது. ஆத்ம பலத்தில் ஆழ்ந்த நம்பிக்கையுள்ளவர், மக்களை அமைதியாக இருக்க வேண்டினார். நாற்பது ஆண்டு தண்டனை என்றதைக் கேட்டும் சிரித்துக் கொண்டே இருந்தார்.

அன்று சிதம்பரம் பிள்ளையைத் தண்டித்த அந்தக் கோர்ட்டுத் தீர்ப்பைக் கேட்டு, பாரத மக்களும் பிள்ளையின் உற்றார் உறவினர்களும் கலங்கி வெகுண்டார்கள். இளைஞர்கள் சீறி எழுந்தார்கள். இதெல்லாம் ஒரு பெரிதல்ல. அன்று இந்தியா மந்திரியாயிருந்த லார்டு மார்லி என்பவர், இங்கு வைஸ்ராயாயிருந்த மிண்டோ என்பவருக்கு ஓர் எச்சரிக்கைக் கடிதம் எழுதினாராம். "இப்படியெல்லாம் இந்திய நாட்டுத் தேச பக்தர்களை அடக்கு முறையில் கொடுமைப் படுத்தினால், இந்தியாவில் ஆங்கில ஆட்சி அதிக நாள் இருக்க முடியாது! அந்த மக்களின் மனம் பயங்கர இயக்கத்தில் ஈடுபட்டு விடும்" என்று அதில் குறிப்பிட்டிருந்தார். நம் நாட்டுத் தலைவர்களும், பெரியவர்களும் சேலம் சி. விஜயராகவாச்சாரியார் போன்ற சட்ட மேதைகளும் சும்மா கை கட்டிக் கொண்டு இருந்துவிடவில்லை. அரசாங்கத்தோடு விடாமல் வாதாடி, பிரிவி கவுன்சில் வரை போய், நாற்பதாண்டுத் தண்டனையை ஆறு ஆண்டுகளுக்குக் குறைக்கச் செய்தனர். சிதம்பரம் பிள்ளை அவர்களும், சிவம் அவர்களும் ஆறாண்டுத் தண்டனையை, கடினமான சிறை வாசத்தை முடித்து மீண்டும் வெளியே வந்து, தேச பக்தர்களாகவே தொடர்ந்து பணி செய்து தொழிற்சங்க அலுவல்களையும் சிறந்த இலக்கியப் பணிகளையும் புரிந்தனர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் சார்பில், சத்யமூர்த்தி தலைமையில் வ. உ. சி. சிலை ஒன்று நிறுவப்பட்டது. வ.உ.சி. கடைசி வரை மக்கள் விடுதலை பெறுவதற்குரிய வழி வகைகளைச் செய்து கொண்டேயிருந்தார்கள். சிறையிலே அவர்கள் பட்ட சித்திர வதைகளை எல்லாம் விவரித்தார். இது ஒரு சோக காவியமாக முடியும்.

தியாகச் செம்மல் சிதம்பரம் செக்கிழுத்தார்; கல்லுடைத்தார். சிவம் கம்பளிப்புழுக்கள் நிறைந்த கம்பளி வேலை செய்து தீராத வியாதியைப் பெற்றார்.

வ.உ.சி. ஒரு சிறந்த மனிதர். பாரதப் பண்பாட்டில் மாறாத நம்பிக்கையுள்ளவர் 'தேசபக்தர்' —சந்தேகமில்லாத தெய்வ பக்தர். நல்ல தொழிற் சங்கத் தலைவர்—நாணயமுள்ள நிர்வாகி—இரக்க குணமுள்ள நல்லோர். சிறந்த இலக்கிய மேதை—மகாகவி பாரதியாரின் உற்ற நண்பர்—பல நன்னூல்களின் ஆசிரியர்—மனிதாபிமானி—சிறந்த கனவான்—அவரைப் பெற்றதால் தமிழ்நாடு பெருமை கொண்டது. பாரத நாட்டின் தவப் புதல்வர் அவர்.

இத்தகைய மகான்களின் தியாகத்தால் வந்த விடுதலைச் செல்வத்தைப் போற்றிக் காப்பாற்றுவதே நாம் அவர்களுக்குச் செய்யும் கைம்மாறாகும். ஆன்றோர்கள் நமக்குத் தேடி வைத்த செல்வம் சுதந்திரம்! அதைப் பழுதில்லாமல் காப்பது நல்ல மனிதர்களின் கடமையாகும். வாழ்க பாரதம்! வாழ்க வ.உ.சிதம்பரம் பிள்ளையவர்கள் திருநாமம்!

வந்தே மாதரம்!

**(புக்ஸ் வொர்ல்ட் வெளியீடான 'விடுதலை வீரர் வ.உ.சி.' என்னும் நூலிலிருந்து... )**

# வ. உ. சிதம்பரனாரின் பெருமை

—நாவலர் சோமசுந்தர பாரதியார்

'தென்னாட்டுத் திலகர்' எனப் புகழ்ப் பேர் பூண்ட காலஞ் சென்ற திரு வ.உ.சிதம்பரம் பிள்ளையவர்களைப் புதிய இந்தியா முழுவதும் அறியும். குடிமையறமும் உரிமையும் துறந்து, மக்கள் 'அடிமை மோகத்தில்' ஆழ்ந்து மடிந்து இருந்த காலத்தில், தாய்நாடு முற்றுரிமை பெற்றுயர முதலில் முயன்ற பெருந் தலைவருள் ஒருவர் இப்பெரியார். இவர் தமிழகத்தில் தனக்கென வாழாப் பிறர்க்கு உரியாளராய், பொது நலம் பேணப் பிறந்த பெரியார். இளம் பருவ முதல் அஞ்சா நெஞ்சராய் பெருமையும் உரனும் பிறங்க வளர்ந்தவர். ஆங்கிலமறியாமல், ஓங்கு புகழோடு வக்கீல் வேலை பார்த்த உலகநாத பிள்ளையவர்களின் புதல்வர். ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி ஊர்களில் குற்ற நீதி மன்றங்களில் திறம்பட வாது புரிந்து, பொருளும் புகழும் செல்வாக்கும் பெருக வாழ்ந்த தமிழ்வாணர்.

காளைப் பருவத்தில் 'தாளாற்றித் தந்த பொருள் எல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்து' வாழ்ந்தார். கூர்த்த மதியும் சீர்த்த நடுநிலை உணர்வும் வாய்ந்த வழக்கறிஞர். வள்ளுவர் குறளும் கைவல்ய நூலும் பல்கால் பயின்று, சொல் வன்மையும், நல்லியல்பும் நிரம்பி, கற்றோர் களிக்க மற்றோரும் மகிழ்ச் சல்லாபிக்க வல்லவர். நேர்மை நிறைந்த அதிகாரிகளை நட்டு, அறம் திறம்புபவர் அஞ்ச, மறத்தோடெதிர்த்து எளியோரை ஆதரிக்கும் தறுகணாளர். அறிவொடு முரணும் குருட்டுக் கொள்கைகளை அறவாதத் தாவடர்த்து, சமுதாயச் சீர்திருத்தங்களில் முனைந்து நின்றவர். தென்னாட்டுத் தேசத் தொண்டர் முன்னணியில் முதலிடம் கொள்ளும் பெருமை பெற்றவர். ஆசுகவி அரசரான கந்தசாமிக் கவிராயர், மதி நுட்பம் நூலோடு சிறக்க வாழ்ந்த அரசஞ் சண்முகனார் போன்ற புலவருக்கும், நிதிக் கிழவரான செல்வருக்கும் நண்பர். சூரத்துக் காங்கிரசில் திலகரோடு சேர்ந்து தேர்தலுரிமையைப் பேராது வாய்ந்த வீரர்.

இந்திய நாட்டில், பெருங்கடலோடும் கப்பல்களை அந்நியர் ஆதிக்கமின்றி தம்மவர் முதலாம் ஓட்ட நினைத்து, முதன் முதலில் பொருள் திரட்டி, 'சுதேசி நீராவிக் கப்பல்' கம்பெனி கூட்டிய தனிப் பெருமை இவருடைமை. வாணிப, யாத்திரை மரக்கலக் கம்பெனிகளிலெல்லாம் உலகத்திலேயே பெரிதான பிரிட்டிஷ் இந்தியன் நீராவிக் கப்பல் கம்பெனியாரோடு போட்டி செய்து, தூத்துக்குடிக்கும் கொழும்புக்குமிடையே, ஆங்கிலர் கலங்களில் ஆளும் சரக்கும் ஏறாதபடி வெற்றி கண்டார்.

பிள்ளையவர்களுக்கு நான்புச் சிறை விதித்த ஆங்கில நீதிபதியின் கொடுமைக்கும், இழிவுணர்ச்சிக்கும் அக்காலத்திய இந்திய மந்திரியான மார்லிப் பிரபு வெட்கப்பட்டு, உயர்நீதி மன்ற அதிபர் வேலைக்கு உத்தரவு பெற்றிருந்த ஆங்கிலேயரை அவ்வுத்தரவை மாற்றி அவர் ஆயுள் வரை நீதிபதி வேலைக்கே அருகரில்லை என விலக்கின செய்தி உலகறிந்த உண்மை.

இப்பெருங்குணச் செல்வர் சிறையிற்பட்ட அல்லல்களுக்கு எல்லையில்லை. கொசுவலைக் கட்டிலொடு வேண்டுணவு கொண்டு சுக வாழ்வு கொள்ளும் தற்கால மேல் வகுப்புச் சிறைவாசம் அக்காலமறியாதது. கொலை, வழிப்பறிக் குற்றவாளிகளுக்கிடையே அவர்களுக்கொப்ப, கல்லுடைப்பு —செக்காட்டல் —மண் வெட்டு முதலிய கடுமையான வேலைகளைச் செய்து, சவுக்கடிபட்டு, கேப்பைக் கூழ் கறியின்றி சட்டியில் வாங்கியுண்ணும் கொடுங் குற்றவாளிகளின் வாழ்வு, பிள்ளையவர்களின் சிறைவாசம். அது போதாமல், தண்டனை அவதி கடந்த பின்னும் முன்னைய வக்கீல் தொழில் செய்ய வொட்டாமல் வறுமையும், கவலையும் வழங்கப்பட்டனர். உடல் நலிவும், உளத் தளர்வும் இடையறுத் துணையாக, எஞ்சிய கால முழுதும் இருந்து இறைவனடி சேர்த்த வள்ளல் இவர். தமிழர் புத்துணர்வும் நல்வாழ்வும் எய்த வழிவகுத்து வாழ்ந்த இப்பெரியாரை வழுத்தாத நாள் எல்லாம் வீணாளாகும்.

—பம்பாய்த் தமிழ்ச் சங்கம் வெளியிட்ட - 'வ. உ. சிதம்பரம் பிள்ளை' என்னும் நூலிலிருந்து.

## வ. உ. சி. அவர்களின் தமிழ்ப்பணி

**எழுதிய நூல்கள் :**

1. மெய்யறிவு
2. மெய்யறம்
3. எனது பாடல் திரட்டு
4. வ. உ. சி. கண்ட பாரதி
5. சுயசரிதை.

**மொழிபெயர்ப்பு நூல்கள் :**

1. மனம்போல வாழ்வு
2. அகமே புறம்
3. வலிமைக்கு மார்க்கம்
4. சாந்திக்கு மார்க்கம்

**உரை எழுதிய நூல்கள் :**

1. இன்னிலை
2. திருக்குறள்
3. சிவஞான போதம்.

**பதிப்பித்த நூல்கள் :**

1. தொல்காப்பியம் — எழுத்ததிகாரம் [இளம்பூரணர் உரை]
2. தொல்காப்பியம்— சொல்லதிகாரம் [இளம்பூரணர் உரை]
3. சிவஞான போதம்

**அச்சு வடிவில் வந்த அரசியல் சொற்பொழிவு :**

"எனது அரசியல் பெருஞ்செயல்"

**நடத்திய ஏடுகள் :**

1. விவேகபாநு
2. தமிழ் நேஷனல் பத்திரிகை
3. இந்துநேசன்.

**அச்சில் வராத நூல்கள் :**

1. அழகும் ஆரோக்கியமும்
2. ஆயுளை நீடிக்கும் ஆறு
3. ஊழை வெல்ல உபாயம்
4. சிவ மதம்
5. விஷ்ணு மதம்
6. புத்த மதம்
7. இஸ்லாம் மதம்
8. கிறிஸ்து மதம்
9. மனித மதம்
10. முக்தி நெறி
11. The Universal Scripture
12. திருக்குறள்- மணக்குடவர் உரை [பொருள்]
13. திருக்குறள் - மணக்குடவர் உரை [இன்பம்]
14. திலக மகரிஷி

# நேருவின் உயில்!



பண்டித நேரு அவர்கள் 1954 ஜூன் 21 அன்று விருப்ப ஆவணம் ஒன்று எழுதி வைத்திருந்தார். அந்த ஆவணத்தைப் பின் மாற்றவோ திருத்தவோ இல்லை. எனவே அது அவர் தம் இறுதி விருப்ப ஆவணமாயிற்று. அதன் ஒரு பகுதி கீழே கொடுக்கப் பெற்றுள்ளது.

"இந்திய மக்களின் பேரன்பையும் பெருமதிப்பையும் நான் பெருமளவில் பெற்றுள்ளேன். அதில் ஒரு சிறு அளவுகூட நான் அவர்களிடம் திரும்பக் காட்ட முடியாது. மேலும் ஈடிணையற்ற அன்புக்குக் கைம்மாறு செய்வது என்பதும் இயலாத தொன்று.

"இந்திய மக்கள் பலரைப் பாராட்டியிருக்கிறார்கள். சிலரைப் போற்றி வணங்கியிருக்கிறார்கள். ஆனால் இந்தியாவின் பல தரப்பட்ட மக்களும் என்மீது பெருத்த அளவில் அன்பு சொரிந்துள்ளனர். இதைக்கண்டு என் மகிழ்ச்சி பொங்கிப் பெருகியது. என் அவா ஒன்றே ஒன்றுதான். அது என் வாழ்நாளின் எஞ்சிய பகுதியிலும் என் நாட்டினருக்கும் அவர்கள் காட்டும் அன்பிற்கும் நான் தகுதியுடையவனாகத் தொடர்ந்து நடப்பேன் என்பதுதான்.

"என்னுடைய கணக்கற்ற தோழர்களுக்கும் என்னுடன் பணி செய்வோர்க்கும் நான் இன்னும் தனிப்பெருங் கடப்பாடுடையேன்.

"பல பெருமுயற்சிகளிலும் பணிகளிலும் நாங்கள் ஒன்றாகப் பங்கெடுத்துள்ளோம். அதில் கிடைத்த வெற்றிகளையும் வேதனைகளையும் பகிர்ந்துள்ளோம்.

"நான் இறந்தபின் எனக்காகச் சமய அடிப்படையில் இறுதிச் சடங்குகள் எவையும் செய்ய வேண்டாம் என்று மனப்பூர்வமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இவை போன்ற சடங்குகளில் எனக்கு நம்பிக்கை இல்லை. பெயரளவில் அவற்றில் ஈடுபடுவது கூட வெளிவேடமாகவும் நம்மையும் பிறரையும் ஏமாற்றும் முயற்சியாகவும் அமையும்.

### அண்ணலைப் பற்றி நேரு

மகாத்மா காந்தி உண்மையையே உயிராகக் கொண்டிருந்தார். அதனால்தான் நல்ல குறிக்கோளை எய்த வேண்டுமானால் நாம் நல்ல வழிமுறையிலேயே செல்ல வேண்டும். என்பதை இடைவிடாது எடுத்தோதி வந்தார். அவர் உண்மையையே போற்றி வந்ததால் எங்கெங்கு தீமையும் பொய்ம்மையும் காணப்பட்டனவோ அங்கெல்லாம் அவைகளை எதிர்த்தார். இவ்வாறு. "உள்ளத்தாற் பொய்யாது" ஒழுகி வந்ததால்தான், அவர் அமர்ந்திருந்த இடங்கள் ஆலயங்கள் ஆயின; அவர் திருவடி தீண்டிய இடங்கள் திருத்தலங்கள் ஆயின.

(1-2-1948-இல் நிகழ்த்திய பேச்சில் இருந்து)

''இறந்தபின் என் உடலை எரியூட்ட வேண்டுமென்பதே என் விருப்பம். அயல் நாட்டில் இறந்துவிட்டால் உடலை அங்கேயே எரித்து விட்டுச் சாம்பலை மட்டும் அலகாபாத் கொண்டு வரவேண்டும். ஒரு பிடி சாம்பல் கங்கையில் தூவப்பட வேண்டும். சாம்பலின் பெரும்பகுதியைக் கீழ்க்கண்டவாறு செய்ய வேண்டும். சாம்பல் சிறிது கூடக் காப்பாற்றி வைக்கப் பெறக் கூடாது.

''அலகாபாத்தில் ஓடும் கங்கையில் ஒரு பிடி சாம்பலைப் போட வேண்டுமென்பதில் சமய நோக்கம் ஒன்றும் கிடையாது. இளமையிலிருந்தே அலகாபாத்தில் ஓடும் கங்கை, யமுனை மீது பற்று மிகவுடையவன் நான். நான் வளர வளர இந்தப் பற்றும் வளர்ந்து கொண்டே வந்திருக்கிறது.

''பருவங்களின் மாறுதல்களுக்கேற்ப நதியின் போக்கும் மாறுபடுவதை நான் கண்டிருக்கிறேன். அப்பொழுது பன்னெடுங் காலமாக அந்த நதியோடு ஒட்டி வளர்ந்து வந்துள்ள வரலாறு, புராணம், மரபு, பாட்டு, கதை ஆகியவற்றை நினைத்துப் பார்ப்பதுண்டு.

''இந்தியாவின் வற்றாத நதியான கங்கை மக்களால் பெரிதும் விரும்பப்படுகிறது. அதைச் சுற்றியே பல இனமக்களின் நினைவுகளும், அவர்களுடைய ஆர்வங்களும், அச்சங்களும், அவர்களுடைய வெற்றிப் பாடல்களும் அவர்களுடைய வெற்றி தோல்விகளும் பின்னிப் பின்னிக் கிடக்கின்றன.

''இந்தியாவின் நெடுங்காலப் பண்பாட்டிற்கும் நாகரிகத்திற்கும் அது ஒரு சின்னமாக விளங்குகிறது. அந்நதி ஓடிக் கொண்டேயிருந்தாலும், மாறிக் கொண்டேயிருந்தாலும் அது என்றும் மாறாத நதியாகவே உள்ளது. அது என்னை என்றென்றும் கவரும். இமயத்தின் பனிபடிந்த சிகரங்களையும் ஆழ்ந்தகன்ற பள்ளத்தாக்குகளையும் என் வாழ்வும் பணியும் உருவாவதற்கிடமாக அமைந்த வளமிக்க சமவெளிகளையும் அது நினைவூட்டுகிறது.

''கங்கை காலை இளவெயிலில் ஒளி வீசிக் களிநடமிடுகின்றாள். மாலை நிழலிலே கறுத்து இருண்டு மறை பொருளாய் இருள் பரவும் பொழுது இனம் புரியாத அச்சத்தை ஊட்டுபவளாய் மாறுகிறாள். குளிர் காலத்தில் குறுகி மென்னடையிட்டு ஒயிலாக ஓடுகிறாள். இந்தியாவின் கடந்தகால நினைவில் தோன்றி, நிகழ்கால நனவாக ஓடி, எதிர்காலக் கனவுக் கடலில் கலக்கச் செல்லும் கன்னியாகக் கங்கை காட்சியளிக்கிறாள்.

''கடந்த காலத்தின் மரபுகளையும் பழக்க வழக்கங்களையும் நான் கைவிட்டுவிட விரும்புகிறேன். இந்தியாவும் தன்னைப் பிணைத்துள்ள தளைகள் அனைத்தையும் உடைத்தெறிந்து விடுதலையடைய வேண்டுமென்று விரும்புகிறேன். மக்களுக்குள் பல பிரிவை உண்டு பண்ணி அவர்களில் பெரும்பாலோரைத் தாழ்த்தி, உடலும் மனமும் தன்னிச்சைபோல் வளரவிடாது தடுக்கும் நிலை மாறவேண்டுமென நான் விரும்புகிறேன். ஆயினும் கடந்த காலத்திலிருந்து என்னை முழுதும் துண்டித்துக் கொள்ளவிரும்பவில்லை.

''மாபெரும் மரபின் வழியில் ஒருவனாகத் தோன்றியதற்கு நான் பெருமைப்படுகிறேன். வரலாற்றின் தொடக்கக் காலத்திலிருந்து தொடர்ந்து வரும் சங்கிலிப் பிணைப்பில் ஓர் இணைப்பாக நானும் மற்ற எல்லோரையும் போல இருப்பதை எண்ணிப் பெருமைப்படுகிறேன். எனக்கு இந்தப் பிணைப்பை உடைக்க விரும்பவில்லை.

''ஏனெனில் நான் அதைப் போற்றிக் காத்து அதிலிருந்து ஊக்கம் பெறவும் விரும்புகிறேன். என்னுடைய இந்த அவாவை வெளிப்படுத்தவும் இந்தியப் பண்பாட்டின் பெருமைக்கு நான் செய்யும் இறுதி வணக்கமாகவுமே என்னுடைய சாம்பலில் ஒரு பிடியை அலகாபாத்தில் ஓடும் கங்கை நீரில் போட வேண்டும் என்று என்வேண்டுகோளை எழுப்புகிறேன். இந்தியாவை அலைகளால் அரவணைத்துக் கிடக்கும் பெருங்கடலுக்கு அச் சாம்பலைக் கங்கையாறு சுமந்து செல்லுமாக.

மீதியுள்ள சாம்பலை வான்மீது ஊர்தியில் கொண்டு சென்று இந்தியாவின் உழவர்கள் பாடுபடும் வயல்கள் மீது தூவி, அச்சாம்பல் நாட்டின் மண்ணோடு மண்ணாகக் கலந்து மக்கிப் போய் இந்திய மண்ணிலிருந்து பிரிக்க முடியாதவாறு இரண்டறக் கலக்கவேண்டும் என்பதே என் அவா.''

(குறிப்பு : உயிலின் பிறபகுதிகள் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படவில்லை.)

ஆதாரம் : சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்டுள்ள உலகப்பேரொளி.



அதிகமாக யாருக்கும் அறிவுரை கூறவேண்டாம். உங்கள் கடமையை நீங்கள் செய்யுங்கள். அது ஒன்று தான் நீங்கள் பிறருக்கு அளிக்கக்கூடிய அறிவுரை. நீங்கள் செய்யுங்கள்: பிறர் அதைப் பின்பற்றுவார்கள்.

—நேரு

# ஏழை எளியவர்களின் கடன் சுமை தீர்ந்தது!




1976-ஆம் ஆண்டின் தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டத்தின்படி, ஆண்டு குடும்ப வருமானம் ரூபாய் 2,400-க்கு மேற்படாத கிராம மக்கள் பட்ட கடன்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.


வெளியீடு : செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

பதிவு எண். M. 8676



# இளைய தலைமுறையினருக்கு இனியவாழ்வு பிறந்தது!

- அறிவைப் பெருக்கிக் கொள்ள அனைத்துப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் புத்தக வங்கிகள்!
- ஏழை மாணவர்களுக்கும் குறைந்த விலையில் நோட்டுப் புத்தகங்கள்!
- அரிசன, ஆதிவாசி, பிற்பட்ட, விமுக்த சாதி மாணவர்களுக்கு இலவசப் புத்தகங்கள் நோட்டுப் புத்தகங்கள், சிலேட்டுகள்!

இதனால் பயன்பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை:

1. அரிசன, ஆதிவாசி மாணவர்கள் - 1,45,320
2. பிற்பட்ட விமுக்த பரம்பரை மாணவர்கள் - 38,339

- மாணவர் விடுதியில் தங்கிப் படிப்போர்க்குக் குறைந்த விலையில் உணவுப் பொருட்கள்!

இதனால் பயன்பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை:

1. அரிசன, ஆதிவாசி மாணவர்கள் - 41,296
2. பிற்பட்ட விமுக்த பரம்பரை மாணவர்கள் - 17,246

- மாதாந்திரச் சாப்பாட்டுச் செலவில் குறைவு!
- எல்லாப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கூட்டுறவுப் பண்டக சாலைகள்!
- இப்படி இருபது அம்சத் திட்டத்தால் ஏற்பட்டுள்ள நன்மைகள் ஏராளம்! ஏராளம்!

**கல்வியைக் கண்ணெனக் கருதிக் கடமையைச் செய்வீர்!**

ஆசிரியரும் வெளியிடுபவரும்: தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.






குடும்பநலத்துறை,
தமிழ்நாடு அரசு.

# தமிழரசு

1—12—1976

மலர் : 7 இதழ் : 11

## இந்த இதழில்

| | பக்க எண் |
|---|---|
| அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரைத் துடைத்தது அரசு! ... | 2 |
| 'கொடி நாள்' நிதி வழங்கிடுவீர்! ... | 6 |
| சிறுதொழில் பெருக்குவோம்! ... | 7 |
| தீண்டாமை கடவுள் திருமுன் இழைக்கப் படும் பாவமாகும்! ... | 9 |
| விஞ்ஞானத்தின் பயன்கள் ... | 11 |
| சின்னஞ்சிறு குழந்தைகளின் சிறப்புமிகு தொண்டு! ... | 17 |
| மணற்புயல் விளைத்ததோ வேதனை! ... அரசு செய்ததோ சாதனை! ... | 18 |
| படமும் செய்தியும் ... | 24 |
| என்ன கோழி வளர்க்கலாம்? ... | 29 |
| கோழி வளர்த்தால் குபேரனாகலாம்! ... | 30 |
| தீண்டாமை சமுதாயத்திற்குப் பெரிய அவமானம்! | 33 |
| கொடுமை! கொடுமை!! கொடுமை!!! ... | 35 |
| ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சி ... | 36 |
| வேகத்தைத் தடுப்போம்! ... | 38 |
| ஆழ்கூளக் கோழிவீடு அமைத்திடுவீர்! அதிக இலாபம் பெற்றிடுவீர்! ... | 41 |
| ஒருநாள் வயது முதல் முட்டையிடும் வரை கோழிகளுக்குப் பராமரிப்பு முறைகள் ... | 45 |
| உங்களுக்குத் தெரியுமா? ... | 48 |

கட்டுரையாளர்களின் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளி அல்ல.



## ஒரே நாளில் 18 அங்குல மழை!

கடந்த நவம்பர் 24-ஆம் நாள் காலை 8-30 மணி முதல் நவம்பர் 25-ஆம் நாள் காலை 8-30 மணி வரையில் சென்னை நகரில் 18 அங்குலம் மழை பெய்துள்ளது.

சென்னை நகரில் இதற்கு முன்பு எப்போதுமே ஒரே நாளில் இவ்வளவு மழை பெய்தது கிடையாது. இது ஒரு புதிய "ரிக்கார்ட்" ஆகும்.

இத்தகவலைச் சென்னையிலுள்ள பிராந்திய வானிலை ஆய்வு நிலையத்தின் டைரக்டர் ஏ. ஏ. ராமசாஸ்திரி அவர்கள் தெரிவித்தார்.

நுங்கம்பாக்கம் பகுதியில் 45.2 செண்டி மீட்டர் (18 அங்குலம்) மழையும், மீனம்பாக்கம் பகுதியில் 34.7 செ.மீ. (17 அங்) மழையும் பெய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

நுங்கம்பாக்கம் வானிலை நிலையம் இந்தியா விலேயே மிகவும் பழமையானதாகும். 1792-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. அப்போது முதற் கொண்டு இதுவரையில் சென்னையில் இவ்வளவு அதிக மழை பெய்ததாக, இதுவரை பதிவு ஆக வில்லை என்று டாக்டர் ராமசாஸ்திரி அவர்கள் கூறினார்.

"இதற்கு முன்பு 1901-ஆம் ஆண்டு டிசம்பர் 10-ஆம் தேதி அதிகபட்சமாக 26 செ. மீ. (10 அங்குலம்) மழை பெய்தது. 1922-ஆம் ஆண்டு, நவம்பர் 16-ஆம் தேதி 23.6 செ.மீ; 1943-ஆம் ஆண்டு மே 17-ஆம் தேதி 21.5 செ. மீ. ஆகியவை இதர அதிக மழை அளவுகளாகும்". இவ்வாறு ராமசாஸ்திரி அவர்கள் கூறினார்.



# அல்லற்பட்டு, ஆற்றாது அழுத கண்ணீரைத் துடைத்தது அரசு!



எங்கு பார்த்தாலும் வெள்ளக் காட்சியே!

வரலாறு காணாத அளவில் கடந்த நவம்பர் மாதம் 23, 24, 25 தேதிகளில் புயல் மழை பெய்ததன் காரணமாக சென்னை மாநகரமும், அதன் சுற்றுப் புறங்களும் வெள்ளக்காடாகக் காட்சி அளித்தன! நவம்பர் 24-ஆம் நாள் காலை 8.30 மணி முதல் நவம்பர் 25-ஆம் நாள் காலை 8.30 மணி வரையில் சென்னை நகரில் மட்டும் 18 அங்குலம் மழை பெய்துள்ளது! சென்னை நகரில் இதற்கு முன்பு எப்பொழுதுமே ஒரே நாளில் இவ்வளவு மழை பெய்தது கிடையாது! இப்பெரு மழையின் காரணமாகத் தாழ்வான பகுதிகளிலும், அடையாறு, கூவம், கொரட்டலையாறு, பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி கால்வாய் ஆகியவற்றின் கரையோரங்களிலும் அமைந்துள்ள குடிசைகள் வெள்ளத்தில் மூழ்கின!

கோட்டூர் புரத்திலும், வியாசர் பாடியிலும் கட்டப்பட்டிருந்த குடிசை மாற்று வாரியம் மற்றும் வீட்டு வசதி வாரியத்தின் பல மாடிக் கட்டடங்களும் வெள்ளத்தில் 10 அடி அளவுக்கு மூழ்கின. இப்பெரும் வெள்ளத்தினால் பெரும்பாலும் சமுதாயத்தில் நலிவுற்ற நிலையில் உள்ள, ஏழை, எளிய, பாமர மக்களே அதிகமாக பாதிக்கப்பட்டனர்.

சென்னை மாநகரில் மட்டும் ஏறத்தாழ 2 இலட்சம் மக்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு, தங்கள் வீடுகளையும், உடைமைகளையும் இழந்து வாடிய நிலையில் உள்ளனர். செங்கற்பட்டு மாவட்டத்திலும் 40,000 குடும்பங்கள் வெள்ளத்தால் வேதனை அடைந்துள்ளன.

எதிர்பாராத வகையில் மிகக் குறுகிய காலத்தில் ஏற்பட்டு விட்ட வெள்ளத்தில் சிக்கிய மக்களைக் காப்பாற்றுவதற்கு ஆளுநர் ஆலோசகர் திரு பி. கே. தவே அவர்களும், தலைமைச் செயலாளர் திரு வி. கார்த்திகேயன் அவர்களும் உடனடியாக ஆவன செய்ததுடன், வெள்ளத்தில் மூழ்கியப் பகுதிகளை விமானத்தில் பறந்து ஆய்வு செய்தனர். மீட்புப் பணிகளை ஒருங்கிணைப்பதற்கென பொதுத்துறை சிறப்புச் செயலாளர் திரு கே. ஆர். ஷெனய் அவர்கள் நியமிக்கப்பட்டார்.

வெள்ளத்திற்குப் பயந்து பலமாடிக்கட்டடங்களின் மேல் தளத்திற்கு ஓடி, கொட்டும் மழையிலும், குலைநடுங்கும் குளிரிலும், உண்ண உணவின்றி உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த மக்களைக் காப்பாற்ற 'ஹெலிகாப்டர்கள்' வரவழைக்கப்பட்டன. 'ஹெலிகாப்டர்கள்' அவர்களை இரண்டிரண்டு பேர்களாகக் காப்பாற்றின.

கட்டு மரங்களைக் கொண்டும், படகுகளைக் கொண்டும் வெள்ளத்தில் சிக்கித் தவித்த மக்களைக் கரைக்குக்கொண்டுவரக் காவல்துறையினரும், மீனவர்களும், முப்படை வீரர்களும், தீயணைப்புத் துறையினரும், துறைமுகத் தொழிலாளர்களும், மத்திய ரிசர்வ் போலிசாரும், ஊர்க்காவல் படையினரும், மாநகராட்சிப் பணியாளர்களும், சமூகநல வாரியத்தினரும், அரசின் உயர் அலுவலர்களும் தங்கள் உயிரையும் துச்சமெனக் கருதி மகத்தான பணியாற்றியுள்ளனர்.

வெள்ளத்தில் சிக்கியவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் விமானத்திலிருந்து போடப்பட்டன. குடிசை வாழ்மக்களுக்கு நாளொன்றுக்கு ஏறத்தாழ 3 இலட்சம் உணவுப் பொட்டலங்கள் வீதம் வழங்கப்பட்டன. காப்பாற்றப்பட்ட மக்களுக்கு உடனடியாக மருத்துவ வசதிகள் அளிக்கப்பட்டன.

மீட்புப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே, இச்சோகச் செய்தி, இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களுக்கு எட்டியது! உடனடியாக பிரதமர் நிதியிலிருந்து தமிழகத்திற்கு 3 இலட்சம் ரூபாய் வழங்கச் செய்ததுடன், வெள்ளப்பகுதியைப் பார்வையிட்டு வருமாறு இந்திய அரசின் உள்துறைத் துணை அமைச்சர் திரு ஓம். மேத்தா அவர்களை அனுப்பி வைத்தார். இராஜஸ்தான் சென்றிருந்த ஆளுநர் அவர்கள் செய்தி கேட்டு உடனடியாகத் திரும்பினார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட இந்திய நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும், திரு. ஓம். மேத்தா அவர்களும், சென்னைக்கு வந்தனர்.

சோகமே உருவாக இருந்த மக்களுக்கு அவர்கள் ஆறுதல் கூறினர். மீட்புப் பணிகளைத் தீவிரப்படுத்த ஆவன செய்தனர். வெள்ளத்துயர் துடைப்புக்கான நிதி வழங்குவது பற்றிய முடிவு செய்வதற்காக, மத்திய ஆய்வுக்குழு ஒன்றை அனுப்புவதாக திரு ஓம். மேத்தா அவர்கள் அறிவித்தார். இதற்கான மத்திய ஆய்வுக்குழு டிசம்பர் 10-ந் தேதிவாக்கில் சென்னை வரவிருக்கிறது.



வெள்ளத்தால் சூழப்பட்டுள்ள கோட்டூர் புரம் காண்போர் உள்ளத்தைக் கலக்கியது!

வெள்ளத்தால் சூழப்பட்டுள்ள கட்டடங்களிலிருந்து மக்களைப் படகு மூலம் பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு வருகின்றனர்.





வியாசர்பாடியில் மக்களை வெள்ளத்திலிருந்து மீட்கும் பணி நடைபெறுகிறது.



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட மத்திய நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம், உள்துறை துணை அமைச்சர் திரு. ஓம் மேத்தா, திரு. சஞ்சய் காந்தி ஆகியோர் சென்னை வந்தனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, வீடிழந்தவர்கள், சேதத்திற்கு ஆளானவர்கள் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இதற்கிடையில் முதல் உடனடி நடவடிக்கையாக குடிசை இழந்தவர்களுக்கு வழங்குவதற்கென சென்னைக்கு ரூபாய் 10 இலட்சத்தையும், செங்கற்பட்டு மாவட்டத்திற்கு ரூபாய் 5 இலட்சத்தையும் தமிழ்நாடு அரசு ஒதுக்கியுள்ளது. குடிசை முழுவதும் அழிந்து போயிருந்தால், குடிசை ஒன்றுக்கு ரூபாய் 100 வீதமும், பாதியளவு சேதம் அடைந்த குடிசை ஒன்றுக்கு ரூபாய் 50 வீதமும் சென்னை மற்றும் செங்கை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு பல்வேறு வகையிலும் உதவி செய்து, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களின் கண்ணீரைத் துடைத்தது தமிழ்நாடு அரசு! வெள்ளத்தண்ணீரும் வடிந்தது!

வெள்ளத்துயர் துடைப்பு நிதிக்காக 3-12-'76 வரை ரூபாய் 13.37 இலட்சம் நிதி சேர்ந்துள்ளது.

பெருமழை மற்றும் வெள்ளத்தின் காரணமாக அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரைத் துடைத்திட்ட அரசு, அவதியுற்ற மக்களுக்கு எல்லாவகையிலும் உதவி செய்து, அவர்களுக்கு நல்வாழ்வு கிடைத்திட அயராது உழைத்து வருகிறது என்பதில் ஐயமில்லை. எனவே, தமிழ்நாடு அரசின் வெள்ளத்துயர் துடைப்புப் பணிகளுக்கு ஒத்துழைப்பு நல்கும்படி அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

# தமிழக அரசுத் தலைமைச் செயலாளரின் வேண்டுகோள்

சமீபத்தில் ஏற்பட்ட எதிர்பாராத வெள்ளம் காரணமாக சென்னை நகரிலும், செங்கற்பட்டு மாவட்டத்திலும் இலட்சக்கணக்கான மக்கள் வீடிழந்துள்ளார்கள் என்பதை பொதுமக்கள் அறிவார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் உடைமைகள் அனைத்தையும் இழந்து உள்ளனர். சோதனை மிகுந்த இந்த நேரத்திலும், வெள்ளத்தால் துன்பமடைந்துள்ள நமது சகோதரர்களுக்கு இயன்ற உதவியைச் செய்வது நமது கடமையாகும். அரசாங்கம் நிவாரணப் பணிகளைத் தீவிரமாகச் செய்து வரும் நேரத்தில், பொது மக்கள் அந்த நிவாரணப் பணிகளுக்கு துணை நிற்கும் வகையில் தங்களால் இயன்ற உதவிகளைப் பணமாகவோ அல்லது பொருளாகவோ அளிக்கலாம்.

ரொக்கமாகப் பண உதவி அளிப்பதைத் தவிர்க்கவும்.

நிதி உதவி அளிக்க விரும்புகிறவர்கள், "முதலமைச்சர் பொது நிவாரண நிதி" (**Chief Minister's Public Relief Fund**) என்ற தலைப்பில், 'செக்' அல்லது 'டிராப்ட்' மூலமாக "திரு. ஆர். சீனிவாசகோபாலன், அரசுத் துணைச் செயலாளர், நிதித்துறை, செயின்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை-9", என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

தொகை அல்லாமல் மற்றும் உபயோகப் படுத்தக்கூடிய துணிகள், வீட்டுச் சாமான்கள், போர்வைகள், துணி விரிப்புகள், துண்டுகள் ஆகியவற்றையும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுப்பலாம். இவற்றை அனுப்புகிறவர்கள், "திரு. பாப்பையா, விசேஷ துணைக் கலெக்டர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடற்கரை முதல் சாலை, சென்னை.1" என்ற முகவரிக்கு அனுப்பலாம்.



இந்திய அரசின் நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் 28.11.'76 அன்று கோட்டூர் புரத்தைப் பார்வையிட்டார். ஆளுநர் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் உடன் இருந்தார்.



ஆளுநர் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்களுக்கும், பத்திரிகைச் செய்தியாளர்களுக்கும், உணவுத் துறைச் செயலாளர் திரு. க. திரவியம் அவர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காகத் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபத்துறை மூலம் தயாரிக்கப்பட்ட உணவுகளைக் காட்டுகிறார்.



## "கொடிநாள்" நிதி வழங்கிடுவீர்!

"இந்தியாவின் பிற இடங்களைப் போன்றே தமிழ்நாட்டிலும் 1976 டிசம்பர் 7-ஆம் தேதியன்று இராணுவ வீரர் கொடி நாளைக் கொண்டாட இருக்கிறோம்."

"முன்னாள் இராணுவ வீரர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது என்பது ஒரு தேசியக் கடமையாகும். இராணுவத்தி லிருந்து வெளிவந்த வீரர்களுக்கு எல்லா வசதிகளையும், உதவிகளையும் அளித்து அவர்கள் நல்வாழ்வு பெற வாய்ப்பளிக்க வேண்டியது இன்றியமையாததாகும். மக்கள் நலத்துக்கான நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு, இவர்களுடைய சேவையைச் சமுதாயம் நன்கு பயன் படுத்திக் கொள்ளலாம். கொடிநாளன்று, பொதுமக்களிடமிருந்து நன்கொடை வசூலிக்கப்பட்டு, முன்னாள் இராணுவ வீரர் களுடைய நல்வாழ்வுக்கும், அவர்களின் குடும்பங்களின் நல மேம்பாட்டுக்கும் பயன்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டு மக்கள் தங்களுடைய மரபுக்கேற்ப, நல்ல காரியங்கள் அனைத்துக்கும் தங்களது மனமுவந்த ஒத்துழைப்பை வழங்கி வந்திருக்கின்றனர். இதுவும் அத்தகைய நல்ல காரியங்களில் ஒன்றாகும். எனவே, கொடி நாளன்று தாராளமாக மனமுவந்து நன்கொடை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்."

(ஒ-ம்) மோஹன்லால் சுகாதியா,

(தமிழ்நாடு ஆளுநர்)

## முன்னாள் இராணுவ வீரர்களின் முன்னேற்றத்திற்கு உதவிடுவீர்!

"இராணுவ வீரர்களையும், போர்க் காலத்திலும், அமைதிக் காலத்திலும் இந் நாடு அவர்களுக்கு ஆற்ற வேண்டிய நன்றிக் கடன்பாட்டினையும், 'கொடி நாள்' ஒவ்வோர் ஆண்டும், நமக்கு நினைவு படுத்துகிறது. தமிழ்நாடு ஆடவரையும், பெண்டிரையும் நீண்ட காலமாகவே இராணுவப் படைக்கு வழங்கி வந்திருக் கிறது. சுதந்திரம் பெற்ற பிறகு இச் சிறப்புத் தொடர்ந்து பெருகி வருகிறது. முன்னாள் இராணுவ வீரர்களும், நாட்டுச் சேவையில் உயிர்நீத்த வீரர்களின் குடும்பத்தாரும் முழு ஆதரவும் பாதுகாப்பும் பெறும் வகையில், பெரு முயற்சியில் ஈடுபடவேண்டியது நமது கடமையாகும்.

"இராணுவ வீரர் கொடி நாள் என்பது, நிதி திரட்டுவதற்கென ஆண்டுக் கொருமுறை வரும்நாள் அல்ல. தேசியக் கடமையொன்றினை நினைவு படுத்திக் கொள்ளும் நாளாகும் அது. மாநிலத்தில் சட்ட திட்டங்களை நிருவாகிக்கும் பொறுப் பினை மேற்கொண்டுள்ள எல்லா அலுவலர் களும், முன்னாள் இராணுவ வீரர்களி டமும், அவர்களின் குடும்பத்தாரிடமும் பரிவுடன் நடந்து கொண்டு உதவி புரிவர் என்று நம்புகிறேன். பொதுத் துறையிலும், தனியார் துறையிலுமுள்ள நிறுவனத் தலைவர்கள், முன்னாள் இராணுவ வீரர்களிடம் சிறப்பான கவனம் செலுத்துவர் என்றும் நம்புகிறேன். எனெனில், இராணுவ வீரர்களின் ஒழுங் கும், கட்டுப்பாடும் பாதுகாப்புப் படை களில் அவர்கள் கற்ற தொழில் பயிற்சி களும், இப்போது அவர்கள் பல்வேறு தொழில்களை மேற்கொள்ளச் சிறப்பாகப் பயன்படுபவைகளாயுள்ளன."

(ஒ-ம்.) பி. கே. தவே.

(தமிழ்நாடு ஆளுநர் ஆலோசகர்)



# சிறு தொழில் பெருக்குவோம்!

—மோகன்லால் சுகாதியா,

தமிழ்நாடு ஆளுநர்.



"தமிழகமெங்கும் 5,900 சிறுதொழில் களைப் பதிவு செய்யும் தீவிர திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது அறிந்து நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

"சிறு தொழில்கள் அளவிலும், நவீன மயமாவதிலும் பெருமளவிற்கு-இனியும் அவை களைச் சிறுதொழில்கள் என்று அழைத்தல் சரி யல்ல என்று கூறுமளவிற்கு-வளர்ந்துள்ளன. அவைகளின் வரையறுக்கப்பட்ட முதலீடு, இயக்கத்தின் அளவு ஆகியவற்றின் காரண மாகவே அவைகள் சிறியவையாக உள்ளன. தேசியப் பொருளாதாரத்தில் அவைகளின் பங்கு மிகவும் குறிப்பிடத்தக்கதாக உள்ளது.

"தேசத்தின் பொருளாதாரத்தில் சிறு தொழில்களின் முக்கியத்துவத்தை இந்திய அரசும், தமிழ்நாடு அரசும் தெளிவாக உணர்ந் துள்ளது. உடனடியாக பெருமளவில் வேலை வாய்ப்பு அளிப்பதுடன், இதுவரை பயன் படுத்தப்படாமல் இருந்து வந்த ஆதாரங்கள், மூலதனம், திறமை ஆகியவைகளைத் திறமை யாகப் பயன்படுத்தவும் சிறுதொழில்கள் உதவு கின்றன என்பதை நாம் அனைவரும் அறிந்துள் ளோம்.

"இந்த நாட்டில் ஏறத்தாழ 4 இலட்சம் பதிவு செய்யப்பட்ட சிறு தொழில் நிறுவ னங்கள் உள்ளன. அவைகள் ஏறத்தாழ 70 இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளித் துள்ளன. மொத்தத் தொழில் உற்பத்தியில் 40 சத அளவு சிறு தொழில் உற்பத்தியாகவே உள்ளது. நமது சொந்த மாநிலமான தமிழ் நாட்டில், சிறு தொழில்கள் ஷூக்களும், வாளி களும் செய்துகொண்டிருந்த காலத்திலிருந்து தரத்தில் உயர்ந்த எலக்ட்ரானிக் பொருள்கள், 'பிரிசிஷென்' கருவிகள், அளவைக் கருவிகள் ஆகியவைகளை உற்பத்தி செய்யும் காலத்திற்கு முன்னேறியுள்ளது. அச்சிறு தொழில்களில் சில, பெருமளவில் உற்பத்தி செய்கின்றவர்களுடன் உள்நாட்டு வெளிநாட்டு விற்பனையில் வெற்றி கரமாகப் போட்டியிடும் நிலைக்கு உயர்ந்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி யடைகின்றேன். புத்திசாலித்தனமும், கடின உழைப்பும் கொண்ட தமிழகத்தின் இளம் தொழில் முனைவோர்கள், அரசு அளித்துள்ள பல்வேறு வசதிகளைப் பயன்படுத்திக் கொள் ளத் தவறவில்லை என்பதை அறிந்து மகிழ்ச்சி யடைகின்றேன்.

"கடந்த காலத்தில் பலவற்றைச் சாதித் திருந்தாலும், இன்னும் செய்ய வேண்டிய வைகள் நிறைய உள்ளன. நமது நாட்டின் பொருளாதாரச் செழிப்புக்காகவே, நமது பிர தமர் அவர்கள் 20 அம்சத் திட்டத்தைத் துவக்கினார் என்பதை நீங்கள் அனைவரும் அறி வீர்கள். இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்று, விலைவாசி குறைப்பாகும். விலைவாசி யைக் குறைக்கும் பணியில் சிறு தொழில்கள் திறமையாகப் பணியாற்றலாம். சிறு தொழில்கள் தங்கள் உற்பத்தியைப் பெருக்கி

## சிறு தொழில்களின் சிறப்பு

மண்டல ஏற்றத் தாழ்வைச் சரி செய்யவும், பின்தங்கிய பகுதிகளில் புதுமைகளைப் புகுத்து வதற்கும் சிறுதொழில்கள் முக்கிய வழியாக உள்ளன. அவைகள் புதிய தொழில் முனை வோர்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதுடன் தொழில் நுட்பப் பயிற்சி, பெற்றுள்ள இளைஞர் களுக்கு வேலை வாய்ப்பும் ஏற்படுத்தித் தருகின் றன. உள்ளூர் ஆதாரங்களை மக்களின் தேவைக்கு ஏற்பப் பயன்படுத்துவதற்குச் சிறுதொழில்களே சரியான சாதனமாக உள்ளன.' அவைகள், பெருந் தொழில்களுக்குத் தேவையான துணைப் பொருள்களையும், பாகங்களையும் கூட அளிக் கின்றன.

—திருமதி இந்திரா காந்தி.



தமிழ்நாட்டில் 10-8-'76 முதல் 18-11-'76 முடிய 5,900 சிறு தொழில்கள் பதிவு செய்யும் தீவிரத் திட்டம் நிறைவேற்று விழா 19-11-'76 அன்று சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில், ஆளுநர் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்விழாவில் தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள், புதிய தொழிலதிபர்களுக்கு ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா அளிக்கும் கடனுதவியை வழங்கினார்.

விற்பனைக் கூடங்களில் அதிக அளவு சிறு தொழில் உற்பத்திப் பொருள்களைக் கிடைக்கச் செய்வதன் மூலம், நுகர் பொருள்களின் விலைவாசியைக் குறைக்க முடியும். இத்துறையில் மேலும் ஏற்படவிருக்கும் முன்னேற்றத்தின் மூலம், பலருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதுடன் நுகர்வோர்களுக்கு நியாயமான விலையில் தரமான பொருள்களை வழங்கி உதவ முடியும் என்றும் உறுதி கூறுகின்றேன்.

"சிறு தொழில் துறையில், தொழிலதிபர்-தொழிலாளர் உறவு சுமுகமாக உள்ளது என்பதை நானறிவேன். சிறுதொழில் துறையில் சுமுகமான உறவு இருப்பதற்குக் காரணம் தொழில் முனைவோர்களுக்கும் அவர்களுடைய தொழிலாளர்களுக்கும் இடையே நிலவும் நேரடி உறவேயாகும். சிறுதொழிற்சாலைகளின் உற்பத்தியை மேலும் மேலும் பெருக்கும் வகையில் தொழிலாளர்களை ஈடுபடுத்தும் நோக்குடன், தொழிலதிபர்-தொழிலாளர் ஆகியோருக்கிடையே உள்ள கூட்டுறவு உணர்வை மேலும் ஊக்குவிக்க வேண்டும். இந்த இலட்சியத்தினை எய்துவதன் மூலமாக, சமூக—பொருளாதார உறவைப் பொறுத்த வரையில், நடுத்தர மற்றும் பெரிய தொழில் துறைக்கு, சிறு தொழில் துறை சிறந்த எடுத்துக்காட்டாக விளங்க முடியும்.

"நகரப் பகுதிகளில் தொழிற்சாலைகள் அதிகமாகத் தோன்றுவதன் காரணமாகவே, ஊரக மற்றும் பிற்பட்ட பகுதிகளின் வளர்ச்சியில் சமனற்ற நிலை உள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள். வேளாண்மையையே முக்கியத் தொழிலாகக் கொண்டுள்ள நமது மக்கள் தொகை பொருளாதார மறுமலர்ச்சி பெற வேண்டுமானால், ஊரக மற்றும் பிற்பட்ட பகுதிகளிலேயே அதிக அளவுத் தொழிற்சாலைகளைத் துவக்க வேண்டும்.

"தற்பொழுது வசூலிக்கப்படும் வட்டி விகிதத்தை விடக் குறைந்த வட்டியுடன் கூடிய எளிய கடன் கொள்கை வகுக்கப்பட வேண்டும் என்று சிறு தொழிற்சாலைகள் வற்புறுத்தி வருகின்றன. இது, தேசிய கடன் கொள்கையுடன் தொடர்புடையதாகும். எங்கெங்கு தேர்ந்தெடுத்த வகையில் கடன் கொள்கை தளர்த்தப்பட வேண்டியது அவசியமோ, அதற்காக இவ்வரசு உறுதியாகத் தன்னால் இயன்ற அளவில் ஆவன செய்யும்.

"சிறு தொழில்களுக்கு மின்சார வெட்டில் சலுகை அளிப்பதுபற்றி பரிசீலிக்கப்பட்டு, விரைவில் முடிவு எடுக்கும் என்பதையும் இச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"1976-ஆம் ஆண்டு நவம்பர் 18-ஆம் தேதிக்குள், கூடுதலாக 60,000 பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கச் செய்யும் வகையில் சிறுதொழில்கள் துவக்கப்படும்."

வணக்கம். ஜெய் ஹிந்த்.

(பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் 59-வது பிறந்த நாளையொட்டி, 19-11-1976 அன்று சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில், தமிழ்நாட்டில் 5,900 சிறுதொழில்கள் பதிவு செய்யும் தீவிர திட்ட நிறைவேற்று விழாவில் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின் தமிழாக்கம்.)

# தீண்டாமை கடவுள் திருமுன் இழைக்கப்படும் பாவமாகும்

—மகாத்மா காந்தி.

வாழ்க்கை ஒன்றிலிருந்து மற்றதற்கு காற்றும் புகாத பல்வேறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் நம்பவில்லை. மாறாக, அது பிரிக்கப்படாததும் பிரிக்க முடியாததுமான முழு அமைப்பு. ஆகையால் அதில் ஒன்றுக்கு நல்லதாய் இருப்பதும், இருக்கக் கூடியதும் அனைத்திற்கும் நல்லதாய்த்தான் இருக்க வேண்டும். இந்தப் பிழைபடாத பரீட்சையில் தேறாத எதையும், எந்த நடவடிக்கையையும் பொது நலத்தில் கருத்துள்ள எல்லோரும் ஒதுக்கியே ஆக வேண்டும்.

ஆயுள் முழுவதிலும் எல்லோருக்கும் நல்லதாய் இருப்பதையே செய்வது என்ற கொள்கையை ஏற்று வந்துள்ள நான், மக்களினம் முழுவதற்கும் ஆபத்து விளைவிக்கக்கூடிய எந்த முயற்சியிலும், அது நாடு முழுவதற்காகவோ அதன் ஒரு பகுதிக்காகவோ இருந்தாலும், ஈடுபட்டதில்லை. உலகம் முழுவதற்கும் பொதுவான குறிக்கோளை எய்தும் முயற்சியில் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னர், இப்போது ஹிந்துக்களிடையே அனுஷ்டிக்கப்படும் தீண்டாமை, ஹிந்துக்கள் தம் நல்லை நோக்கி முன்னேறுகையிலும் சரி, எல்லோருடைய பொது நலனைக் கருதுகையிலும் சரி, பெருந் தடையாய் இருப்பதை உணர்ந்தேன். இந்தத் தீண்டாமை என்ற கரு நாகம் உயர் சாதி ஹிந்துக்களை மட்டுமல்லாமல், இந்தியாவின் பல்வேறு சமயங்களைச் சேர்ந்தவர்களையும்—அதாவது முஸ்லீம்கள், கிறிஸ்துவர்கள் முதலியோரையும்—வளைத்துச் சுற்றிக் கொண்டிருக்கிறது என்பதை எவரும் இலகுவில் கண்டறியலாம். தீண்டாமை என்ற இந்தப் பெரும் பேய்க்குப் பரிகாரம் தேடும் முயற்சியில் ஹிந்துக்களிடையே மட்டும் சகோதர பாவத்தை உண்டாக்கினால் போதாது; மனித இனம் முழுவதையுமே—அவர்கள் ஹிந்துக்களாகவோ, முஸல்மான்களாகவோ கிறிஸ்துவர்களாகவோ, பார்ஸிகளாகவோ, யூதர்களாகவோ இருந்தாலும் அவர்கள் அனைவரும் நம் சகோதரர்கள் என்பதை உணரச் செய்ய வேண்டும் என்பதே எனது அந்தரங்கமான ஆசை. ஏனெனில் உலகப் பெருஞ் சமயங்கள் அனைத்திலும் அடங்கியுள்ள அடிப்படையான உண்மைகளை நான் நம்புகிறேன். அவை எல்லாமே கடவுள் அளித்தவை என்றும், எந்த மக்களுக்காக அவை ஒவ்வொன்றும் தோன்றினவோ அவர்களுக்குத் தேவையாய் இருந்தனவென்றும் நம்புகிறேன்.

மேலும், நாம் எல்லோருமே பல்வேறு சமயங்களின் நூல்களையும் அந்தந்த சமயத்தாரின் நிலையிலிருந்து படித்துணர முடியுமானால் அடிப்படையில் இவை ஒவ்வொன்றும் சொல்லுவது ஒரே விஷயத்தைத்தான் என்றும், அவை ஒன்றுக்கொன்று உதவுபவையே என்றும் தெரிந்துகொள்வோம் என்றும் நம்புகிறேன். இதனாலேயே ஹிந்து அல்லாத எல்லோரிடமும் நான் மேற்கொண்டுள்ள இந்தப் பணி வெற்றி பெறுமாறு தம் தெய்வங்களிடம் வேண்டிக் கொள்ளுமாறு சொல்லவும் தயங்கவில்லை. எனது இப்பணியில் சிறிதும் மங்காத நம்பிக்கை இருப்பதனாலும், அந்த நம்பிக்கை மிகவும் பரந்த அனுபவத்தின் மீது அமைந்திருப்பதாலுமே ஹிந்துக்களாகிய நாம் தீண்டாமை என்ற இந்தக் கொடிய பூதத்தை அழித்தொழிக்காவிட்டால் அது ஹிந்துக்களையும் ஹிந்து மதத்தையுமே விழுங்கித் தீர்த்து விடும் என்று தீர்மானமாகச் சொல்லவும் தயங்கவில்லை.

நான் உங்களிடம் உங்கள் உள்ளங்களிலிருந்து தீண்டாமையை அகற்றி, அதைத் தூய்மையாக்கிக் கொள்ளுமாறு சொல்லுகையில் நீங்கள் மக்கள் அனைவரிடையிலும் உள்ள ஒற்றுமை, அவர்களிடையே உள்ள சமத்துவம் ஆகியவற்றிலும் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்றதற்குக் குறைவான எதையும் கோரவில்லை.

இதனால்தான் சனாதனிகள் என்று கூறப்படும் சாதி ஹிந்துக்கள் முன்பும் மண்டியிட்டு, நம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்வதற்காக நடக்கும் இந்த இயக்கத்தில் என்னோடு சேர்ந்து பாடுபட அவர்களை அழைக்கவும் தயங்கவில்லை. அவர்கள் மட்டும் பொறுமையுடன் இந்த இயக்கத்தையும், இதனால் விளையக் கூடியவைகளையும் ஆய்ந்து பார்ப்பார்களானால் நமக்கும் சீர்திருத்தவாதிகளுக்குமிடையே வித்தியாசங்களைவிட, ஒற்றுமைகள் அதிகம் இருப்பதைக் காண்பார்கள். இவ்வியக்கத்தை நன்கு கவனிப்பார்களானால், தீண்டாதார் எனப்படுவோரைப் பல்வேறு அவமதிப்புகளுக்கு உள்ளாக்குவது நியாயம் அல்ல என்பதை அவர்கள் உணராது இரார்.

திருச்சிராப்பள்ளிக்கு அருகாமையில் மேலரசூர் என்ற ஊர் ஒன்று இருக்கிறது. அவ்வூரிலுள்ள ஹரிஜனங்கள் மற்றவர்களைப் போலவே தமக்கும் தம் கிராமத்தின் குளங்களில் இறங்கிக் குளிக்கவும், நீர் எடுத்துப் போகவும் உரிமை உண்டு என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தக் குளங்களை ஹரிஜனங்களும் உபயோகிப்பதைச் சட்டம் அனுமதிக்கிறது. ஆயினும் உயர் சாதி ஹிந்துக்கள் சட்டத்தைப் புறக்கணித்துவிட்டு நமது சகோதரர்களாகிய ஹரிஜனங்களை பல்வேறு வகையில் துன்புறுத்தியிருக்கிறார்கள் என்று தெரிகிறது. ஹரிஜனங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை விளக்குவதற்கு நான் கூறக்கூடிய உதாரணங்களில் இது ஒன்று. ஒருவர் தம்மை எவ்வளவு மத பக்தி உள்ளவரென்று சொல்லிக் கொண்டாலும், அவர் இம்மாதிரியான கொடுமைகள் செய்வதை எவரும் அனுமதியார். (1)

தொட்டால் தீட்டு ஒட்டிக் கொள்ளும் என்ற இக்கருத்து ஹரிஜனங்கள் விஷயத்தில் மட்டுமல்லாது பல்வேறு சாதிகளையும் சமயங்களையும் கூட பாதித்திருக்கிறது. என்னைப் பற்றிய வரையில் இந்த இயக்கத்தின் விளைவாக இந்நாட்டில் வாழும் பல்வேறு இனத்தார், சாதியார் ஆகியோரிடையிலும் மனப்பூர்வமான ஒற்றுமை உண்டாகுவல்லது எனக்குத் திருப்தி உண்டாகாது. இதனுல் நான் இந்தியாவிலும், வெளியேயும் வாழ்ந்து வரும் எல்லோருடைய ஒத்துழைப்பையும் கோரியிருக்கிறேன். (2)

இந்தத் தீண்டாமை ஒழிப்பினுல் பெறலாமென்று நாம் நினைக்கும் அல்லது பெற விரும்பும் மாபெரும் பயனை எண்ணிப் பாருங்கள். மாந்தரனைவரிடையிலும் சகோதரத்துவம் என்பதற்குக் குறைந்ததல்ல அது. கோடிக்கணக்கான உயர் சாதி இந்துக்கள் பல நூற்றுண்டுகளாகத்தாம் அமுக்கி வைத்திருந்த பல கோடி ஹரிஜனங்களுக்குப் பரிகாரம் செய்கிருர்கள் என்னும்போது மானிட குலம் முழுவதையுமே ஆட்கொண்டு, அதன் உறுப்பினர் அனைவரையும் ஒன்ருக இணைக்கக் கூடிய ஒரு சக்தியைத் தோற்றுவிக்காமல் இராது. இந்த இலட்சியத்தை நான் என்றுமே மறந்ததில்லையாகையால் இந்த இயக்கத்தைப் பாரமார்த்திக இயக்கமென்றும், முழுக்க முழுக்க சமய இயக்கம் என்றும் அழைத்திருக்கிறேன். நாம் இன்று சமயத்தின் பெயரால் அனுஷ்டித்து வரும் தீண்டாமை, இந்த சகோதரத்துவத்தை எய்தாமல் தடுக்கும் பெரிய தடையாய் இருப்பதை நன்கு உணருவதனுலேயே இந்தப் பொல்லாத தீண்டாமையை ஒழித்து நம்மைத் தூய்மைப் படுத்திக்கொள்ளவிட்டால் ஹிந்து மதமும் அழிந்து, ஹிந்துக்களும் அழிந்து போவர் என்று சொல்லவும் நான் தயங்கவில்லை.

.. .. .. நம்மிடையேயே தீண்டாமை பாவம் அல்ல என்பது மட்டுமல்லாது, சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டுள்ள கடமையுமாகும் அது என்ற நம்பிக்கையை விடாது பிடித்துக் கொண்டிருப்பவர் சிலர் இருப்பது எனக்குத் தெரியும். இதற்கு எதிராக நான் என் கடந்த 50 ஆண்டின் ஒரே வகையான அனுபவத்தைத்தான் சொல்ல முடியும். அந்த அனுபவத்திற்கு ஆதாரமாய் பல வேலைகள் உள்ளவனும், உலக விவகாரங்களில் உழலுபவனுமாகிய நான் நமது சாஸ்திரங்களைப் படித்துத் தெரிந்து கொண்டிருப்பதும் இருக்கிறது. இவ்வாறு பக்தி பூர்வமாய்ப் படித்தும், தீண்டாமையில் நம்பிக்கையுள்ள வித்வான்களான சாஸ்திரிகளோடு விவாதித்தும் ஆன பிறகு ஹிந்து சாஸ்திரங்களில் தீண்டாமைக்குச் சிறிதும் ஆதாரம் இல்லை என்ற தீர்மானமான முடிவுக்கு வந்திருக்கிறேன். தீண்டாமை கடவுள் திருமுன் மனிதனுக்கு இழைக்கப்படும் பாவமாகும். இந்தப் பாவத்தை நாம் எவ்வளவு விரைவில் போக்குகிறேமோ அவ்வளவு நமக்கும் உலகிற்கும் நல்லது. (3)

தீண்டாமையை எதிர்த்துப் போராடுகையிலும், அந்தப் போருக்கு என்னையே அர்ப்பணிக்கையிலும் மானிட இனம் முழுவதையும் முற்றிலும் மாற்றி உயர்த்துவதற்குக் குறைந்த ஆசை எதுவும் எனக்குக் கிடையாது. இது வெறும் கனவாய் இருக்கலாம்; அது கடல் கிளிஞ்சலை வெள்ளி என்று நினைப்பது போன்று சுவைக்குதவாத ஆசையாகவும் இருக்கலாம். ஆனுல் இந்தக் கனவைக் காண்கையில் எனக்கு அது உண்மையாகவே தான் தோன்றுகிறது. ஏனெனில் ரொமேன் ரோலண்ட் கூறுகிறபடி வெற்றி என்பது இலட்சியத்தை எய்துவதில் இல்லை; அதை நோக்கி, அயராது போய்க் கொண்டிருப்பதில்தான் இருக்கிறது. (4)

குறிப்பு :

1. 10-2-1934 அன்று காந்தியடிகள் திருச்சிராப்பள்ளியில் நடந்த பொதுக் கூட்டத்தில் ஆற்றிய உரையிலிருந்து.

2. அரிஜன், 16-2-1934.

3. 21-2-1934 அன்று அரக்கோணத்தில் ஆற்றிய உரையிலிருந்து.

4. யங் இந்தியா, 26-11-1931.

## ஜாதிகள் இல்லை !

சாதிகள் இல்லையடி பாப்பா—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி உயர்ந்த மதிகல்வி—அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்.

எல்லாரும் இந்நாட்டு மன்னர் !

எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்தியா மக்கள்
எல்லாரும் ஓர்நிறை; எல்லாரும் ஓர்விலை;
எல்லாரும் இந்நாட்டு மன்னர்.

—பாரதியார்.



# விஞ்ஞானத்தின் பயன்கள்

—ஜவஹர்லால் நேரு

[ஜவஹர்லால் நேரு அவர்கள் 1930 முதல் 1933 வரை சிறையிலிருந்த பொழுது, தமது சின்னஞ்சிறு மகளான இந்திராவுக்கு எழுதிய கடிதங்களின் தொகுப்பே "உலக சரித்திரக் காட்சிகள்" என்னும் நூலாக வெளியிடப்பட்டுள்ளது. அதிலிருந்து ஒரு பகுதி ஈண்டு விஞ்ஞானத்தின் பயன்கள் என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது.]

விஞ்ஞானத்தின் விளைவாகக் கண்டுபிடித்த சாதனங்கள் ரயில் வண்டி, மின்சாரம், கம்பியில்லாத் தந்தி போன்றவை; இப்படி ஆயிரக்கணக்கில் கண்டு பிடித்திருக்கிருர்கள். இவற்றை நாம் பயன்படுத்தத் தெரிந்துகொண்டிருந்தாலும் இவை எப்படி வந்தன என்று எண்ணிப்பார்ப்பதில்லை. இப்போது இவை நம் கைவசப்பட்டு விட்டன. இவை நமக்கே உரியவை என்ற ரீதியில் தான் நடந்து கொள்கிறேம். அதோடு நாம் முன்னேற்ற யுகத்தில் இருப்பதாகவும், அதற்கேற்றபடி நாமும் அபாரமாக முன்னேறிவிட்டதாகவும் எண்ணிப் பெருமை பாராட்டிக் கொள்கிறேம். முந்திய யுகங்களுக்கும், இன்றைய நிலைக்கும் பெருத்த வித்தியாசம் இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை; காலம் முன்னேறியிருக்கிறது என்பதும் சரிதான். ஆனுல், நாம் தனிப்பட்ட முறையிலோ, சமூகம் என்ற ரீதியிலோ முன்னைவிட முன்னேறியிருக்கிறேமா என்ருல் அது வேறு விஷயம்!

ஓர் ஆசாமி எஞ்சின்-டிரைவர்; அவனுக்கு எஞ்சினைச் செலுத்தத் தெரியும் என்பதால், ''ப்ளேட்டோ, சாக்ரட்டீஸ் போன்ற ஆதி காலத்து ஞானிகளுக்கு இதெல்லாம் தெரியுமா? ஆகவே, எஞ்சின்-டிரைவர்தான் அவர்களைவிட முன்னேற்றம் அடைந்தவன், மேலானவன்'' என்று சொல்வது சுத்த அபத்தமில்லையா? ஆனுல், ''ப்ளேட்டோ பயன்படுத்திய பழங்கால வண்டியைவிட, இன்று காணும் எஞ்சின் போன்ற இயந்திரம் மிகவும் முன்னேற்றமான சாதனம்'' என்பதில் தவறில்லை; அதுவரைக்கும் உண்மைதானே?

இப்போது நாம் ஏராளமாகப் புத்தகங்கள் படிக்கிறேம்; ஆனுல் அவை பெரும்பாலும் அசட்டுத்தனமான புத்தகங்களே, ஆதி காலத்தில் மக்கள் சில புத்தகங்களையே படித்தார்கள்; ஆனுல், அவை நல்ல புத்தகங்கள்; அவற்றை ஆழ்ந்து படித்துப் பல விஷயங்களை அறிந்து கொண்டார்கள். நமக்குத் தெரிந்த சிறந்த ஐரோப்பியத் தத்துவ ஞானிகளில் ஒருவர் 'ஸ்பைநோஸா' அவர் நல்ல கல்விமான்; மேதை; 17-ஆம் நூற்றுண்டில் 'ஆம்ஸ்டர்டாம்' நகரில் வாழ்ந்தார். அவருடைய நூல் நிலையத்தில் அறுபது புத்தகங்களுக்குக் குறைவாகவே இருந்தனவாம்.

### வாழ்க்கையின் இலட்சியம்

ஆகவே, என்னதான் இந்த உலகத்தில் நாம் கற்றறிந்தாலும் நாம் நாம் முன்னேறிவிட்டதாகவோ, மேதைகளாகிவிட்டதாகவோ எண்ணிக்கொள்ளக்கூடாது. கற்ற வித்தையைச் சரியான முறையில் பயன்படுத்தத்தெரிந்து கொள்ள வேண்டும்; அப்போது தான் அதனுல் முழு நன்மையும் கிட்டும். சக்தி வாய்ந்த மோட்டாரில் ஏறி, வெகு வேகமாகப் போக வேண்டியிருக்கிறது என்ருல், முதலில் எங்கே அப்படிப் புறப்பட்டுப் போகிறேம் என்று தெரிந்து கொள்ள வேண்டாமா? வாழ்க்கையின் இலட்சியம் என்ன என்பதை நாம் ஓரளவாவது தெரிந்து கொண்டிருக்க வேண்டியது அவசியம். இன்று பெரும்பாலோர் அதைப்பற்றி எண்ணுவதுமில்லை; அக்கறை கொள்வதுமில்லை. விஞ்ஞான யுகத்தில் இருந்தும், பழங்கருத்துக்களே அவர்கள் உள்ளத்தில் ஊறிக் கிடக்கின்றன; அவற்றில் கட்டுண்டு கிடக்கிருர்கள். இந்த நிலையில் தொல்லைகளும், சச்சரவும் ஏற்படுவது இயல்புதானே? சூட்சமம் தெரிந்த குரங்கு மோட்டார் ஓட்டக் கற்றுக் கொண்டிருக்கலாம். ஆனுல், அதை நம்பிக் காரில் போக முடியுமா?

### பண்பாடு

இன்று அறிவு அபாரமாக வளர்ந்து அதில் எத்தனையோ நன்மைகள் செறிந்து, பரந்திருப்பதைக் காணலாம். ஆயிரக்கணக்கில் ஆராய்ச்சியாளர்கள் ஒவ்வொரு துறையிலும் ஈடுபட்டு, அறிவு வளர்ச்சிக்குத் தம்மால் ஆன தொண்டு புரிந்து வருகிருர்கள். அறிவு எல்லையற்றது; அதைக் கண்டறியும் முயற்சியில் ஈடுபடும் ஒவ்வொருவரும் தத்தமக்குரிய துறையில் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தாக வேண்டும். இதனுல் பிற துறைகளைப் பற்றி அவர்களுக்குப் பெரும்பாலும் தெரிவதில்லை; ஆகவே, சில துறைகளில் அறிவாளிகளாக இருந்தாலும் பிற துறைகளில் என்ன நடக்கிறதென்றே தெரியாமல் இருக்கின்ருர்கள். இந்த நிலையில் மொத்தத்தில் உலக அநுபவம் அவர்களுக்கு இல்லை என்றுதானே ஆகிறது? பண்பாடு என்ருல் உலகத்தோடு ஒட்ட ஒழுகுவது தான்; ஆகவே, அத்தகையவர்கள் ஒரு துறையில் என்னதான் தேர்ச்சி பெற்றிருந்தும், அரை

துறை அறிவுள்ளவர்களாய், பண்பட்டவர்கள் என்று சொல்லத் தகுதியற்றவர்களாகவே ஆகிவிடுகிறார்கள்.

**உலகின் சிறந்த விஞ்ஞானி**

ஒரு துறையில் மட்டுமே தேர்ச்சி பெற்று மற்றப்படி குறுகிய அறிவு படைத்தவர் இருந்தாலும், சிற்சில பேரறிவாளிகளும் உலகத்தில் தோன்றாமலில்லை. அவர்கள் தமக்குரிய துறையில் தேர்ந்து விளங்குவதோடு பரந்த நோக்கம் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள்; உலகத்திலே போர், சச்சரவு, தொல்லைகள் என்ன தான் நேர்ந்தாலும் அவற்றைப் பற்றிக் கவலைப்படாமல் அவர்கள் விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்கள் அறிவுக்களஞ்சியத்தில் திரட்டி வைத்த அநுபவஞானம் கொஞ்ச நஞ்சமில்லை. இன்று உலகத்திலேயே சிறந்த விஞ்ஞானி என்று சொல்லுகிறார்கள், ஆல்பர்ட் ஐன்ஸ்டின் என்பவரை. அவர் ஜெர்மானிய யூதர். ஹிட்லரின் அரசாங்கத்துக்கு யூதர்களைக் கண்டால் ஆவதில்லை. ஆகவே, அது ஐன்ஸ்டினை ஜெர்மனியை விட்டே விரட்டிவிட்டது.

ஐன்ஸ்டின் பௌதிகத் துறையில் சில புதிய அடிப்படை விதிகளைக் கண்டறிந்தார்; பிரபஞ்சம் முழுவதுமே இந்த விதிகளை அநுசரித்துத்தான் நடப்பதாக மிகவும் நுண்மையான முறையில் கணக்கிட்டுத் தெரிந்து கொண்டார். இருநூறு ஆண்டுகளாக கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றி வந்தார்கள் விஞ்ஞானிகள். ஐன்ஸ்டின் இவற்றில் சில கருத்துகளைத் தாம் கண்ட அநுபவத்தைக் கொண்டு மாற்றி அமைத்தார். அவருடைய கொள்கை சரியானதுதான் என்று, பின்னால் கண்ட ரசமான ஓர் உண்மை அநுபவத்திலிருந்து தெரிந்தது. அவர் தாம் கண்ட முடிவின்படி "ஒளி குறிப்பிட்ட ஒரு ரீதியில் நடந்து கொள்ளும்; சூரிய கிரகணத்தின்போது இதைப் பரிசோதித்தறியலாம்" என்று தெரிவித்திருந்தார். இப்படிச் சூரிய கிரகணம் ஏற்பட்டபோது அவர் சொன்னவிதமே ஒளியின் இயல்பு இருக்கவே, கணித முறைப்படி அவர் ஆராய்ந்து கண்டது பரிசோதனையின்போது சரி என்று நிரூபணமாயிற்று.

இந்தக் கொள்கையை நான் உனக்கு விளக்க முற்படப் போவதில்லை; அது மிகவும் சிரமம். இதை 'ரிலேடிவிடி கொள்கை' என்பார்கள். ஐன்ஸ்டின் பிரபஞ்சத்தைக் குறித்து ஆராய்ந்தபோது, 'காலம், அண்டவெளி என்ற இரண்டைப் பற்றிய கருத்தையும் பிரித்துத் தனித்தனியே நோக்கும்போது பொருந்தாமல் போய்விடும்' என்று கண்டறிந்தார். ஆகவே, அப்படிப் பிரித்து நோக்குவதை விட்டு இரண்டையும் இணைத்து, 'அண்டவெளியுடன் பொருந்திய காலம்' என்ற ஒரு கருத்தை வெளியிட்டார்.



அறிவியல் அறிஞர் 'ஆல்பர்ட் ஐன்ஸ்டின்' அவர்களைப் பிரின்ஸ்டன் பல்கலைக் கழகத்தில் சந்தித்து உரையாடினார் நேரு.

**அணுவைப் பிளந்தார்கள்!**

பிரபஞ்சம் பற்றி ஐன்ஸ்டின் ஆராயும்போது அதற்கு நேர் மாறான நுண்மை பற்றி விஞ்ஞானிகள் ஆராயலானார்கள். ஊசிமுனையை வேறு எந்தத் துணையுமின்றி வெறுங் கண்ணால் பார்க்க முடியும். இந்த ஊசிமுனையும் ஒருவிதத்தில் பிரபஞ்சத்தைப் போன்றதே என்று விஞ்ஞான முறைகளின் மூலம் நிரூபணமாயிற்று. இந்த ஊசிமுனை இடத்தில் 'மாலிக்யூல்ஸ்' என்ற மூலக்கூறுகள் ஒன்றைச் சுற்றி ஒன்று சுழன்று ஒலித்தன; அதோடு ஒவ்வொரு மூலக்கூறிலும் அணுக்கள் உண்டு. அவையும் ஒன்றின்மேல் ஒன்று பட்டுக்கொள்ளாமல் சுற்றிச் சுழன்று வருகின்றன; ஒவ்வோர் அணுவிலும் ஏராளமான மின்சாரத் துகளோ அல்லது 'சார்ஜ்' போன்ற ஏதோ சில 'ப்ரோட்டோனும்' 'எலெக்ட்ரோனுமோ' உண்டு. அவையும் எப்போதும் வெகுவேகமாகச் சுழன்று வருகின்றன. அவற்றையும் விட நுண்மையானவை 'போஸிட்ரோன்', 'நியூட்ரோன்', 'டெண்டோன்' என்பவை; 'போஸிட்ரோன்' என்பதன் வாழ்வு ஒரு செகண்டில் நூறு கோடியில் ஒரு பகுதி என்றால் பார்த்துக் கொள்! பிரபஞ்சத்தில் கிரகங்களும் நட்சத்திரங்களும் சுழன்று சுழன்று வருவதுபோல் மிக மிக நுண்மையான அளவில் அந்த ஊசிமுனையிடத்தில் நிகழ்ந்து வருகிறது! மூலக்கூறு என்ற 'மாலிக்யூல்ஸ்' மிக மிக நுண்மையானது; மிகமிக அதிகமாகப் பெருக்கிக் காட்டக்கூடிய அணுதரிசினியினால்கூட இந்த 'மாலிக்யூல்ஸ்' என்ற மூலக்கூறைப் பார்க்க முடியாது; அவ்வளவு சின்னது! அணுக்கள், 'ப்ரோட்டோன்', 'எலெக்ட்ரோன்' இவற்றைப் பற்றி எண்ணிப் பார்க்கவும் முடியாது. ஆனால் விஞ்ஞான ஆராய்ச்சி முறை பெரிதும் முன்னேறியிருப்பதால் இந்த 'ப்ரோட்டோன்', 'எலெக்ரோன்'களைப் பற்றி ஏராளமான தகவல் சேகரித்திருக்கிறார்கள். சமீபத்தில் அணுவைப் பிளந்து விட்டார்கள்.

**அண்டவெளியுடன் பொருந்திய காலம்**

விஞ்ஞானத்தினால் சமீபத்தில் கண்டறிந்த பல கொள்கைகளை ஆராய முற்பட்டால் நமக்கு தலைசுற்றும்; அவற்றைப் புரிந்து கொள்வதென்றாலும் மிகவும் சிரமந்தான். நமக்கு இந்தப் பூமி மிகப் பெரிதாகப் பட்டாலும், அது என்னவோ சூரியனைப் பொறுத்தவரையில் சிறிய கிரகந்தான்; ஏன், அந்தச் சூரியனே கூட எத்தனையோ சின்னஞ்சிறு நட்சத்திரங்களில் ஒன்றுதான்! சூரிய மண்டலமே அண்டவெளி என்னும் பெருங்கடலில் ஒரு சிறு துளி என்றுதான் சொல்ல வேண்டும். இந்தப் பிரபஞ்சத்தின் தூரத்தை இலேசில் கணக்கிட்டு விட முடியாது; பிரபஞ்சத்தின் சில பகுதிகளிலிருந்து ஒளி நம் பூமிக்கு வந்து சேர ஆயிரக்கணக்கான ஒளி ஆண்டுகள்-ஏன், இலட்சக்கணக்கான ஒளி ஆண்டுகள்-ஆகின்றன! இரவில் ஒரு நட்சத்திரத்தைப் பார்க்கிறோம்; அது இன்று அப்படி ஒளிருவதுபோல் நமக்குப் பட்டாலும், நம்மிடம் அதன் ஒளி வந்து சேர வெகு காலமாகிறது; நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆகின்றன. காலம், அண்டவெளி இவைகளைப் பற்றி எண்ணிப் பார்க்கும்போது ஒரே குழப்பமாகத்தான் இருக்கும். இதனால்தான் ஐன்ஸ்டினின் 'அண்டவெளியுடன் பொருந்திய காலம்' என்ற கொள்கை இந்த ஆராய்ச்சியில் மிகவும் உதவியிருக்கிறது. அண்டவெளி என்ற கருத்தை விட்டுக் காலத்தை மட்டும் நோக்கும்போது சென்ற காலமும், நிகழ்காலமும் ஒன்றோடு ஒன்று குழம்பிவிடும் நிலை ஏற்படுகிறது. நாம் இதோ கண்ணெதிரே பார்க்கும் நட்சத்திரம் உண்மையில் ஏதோ வெகு காலத்துக்கு முன்னே இந்த நிலையில் இருந்தது என்றுதான் அர்த்தம். அதன் ஒளி நம்மை வந்து அடைவதற்குள் அந்த நட்சத்திரமே கூட அவிந்துவிட்டிருக்கலாம்!

சூரியன் எத்தனையோ நட்சத்திரங்களில் சின்னஞ்சிறிய ஒரு நட்சத்திரந்தான் என்று சொன்னேனில்லையா? நமக்குத் தெரிந்து இப்படிச் சுமார் 1,00,000 நட்சத்திரங்கள் உண்டு. இவற்றையெல்லாம் சேர்த்து நட்சத்திர மண்டலம் என்கிறார்கள். இவற்றில் ஒரு சில நட்சத்திரங்களையே வெறுங்கண்ணால் காணமுடியும். மிகமிகப் பெரிதாக்கிக் காட்டும் தூரதரிசினிகளின் மூலம் இன்னும் பலவற்றைக் காணமுடிகிறது. வானமண்டல ஆராய்ச்சி நிபுணர்கள் இந்தப் பிரபஞ்சத்தில் சுமார் இப்படி 100,000 வெவ்வேறு நட்சத்திர மண்டலங்கள் உண்டென்று கணக்கிட்டிருக்கிறார்கள்!

**பிரபஞ்சம் விரிந்து கொண்டிருக்கிறது!**

இன்னும் ஓர் ஆச்சரியமான விஷயம். இந்தப் பிரபஞ்சம் விரிந்துகொண்டேயிருக்கிறதாம். 'ஸர்ஜேம்ஸ் ஜீன்ஸ்' என்ற கணித நிபுணர், இந்தப் பிரபஞ்சம் ஒரு சோப்புக் கொப்புளம் வர வர உப்பிக்கொண்டே போவதுபோல் விரிந்து வருகிறது என்கிறார். இப்படிக் கொப்புளம்போல் விளங்கும் இந்தப் பிரபஞ்சம் எவ்வளவு பெரிது தெரியுமா? அதற்குள் ஒரு மூலையிலிருந்து இன்னும் ஓர் மூலைக்கு ஒளி போய்ச்சேர இலட்சோபலட்சம் ஆண்டுகள் ஆகின்றன என்றால் பார்த்துக்கொள்!

இந்த அதிசயப் பிரபஞ்சத்தைப் பற்றி இதையும்விடப் பேராச்சரியமான ஒரு விஷயம் உண்டு தெரியுமா? 'ஸர் ஆர்தர் எட்டிங்டன்' என்ற பிரபல கேம்பிரிட்ஜ் வான ஆராய்ச்சியாளர், 'இந்தப் பிரபஞ்சம் வர வரச் சிதறுண்டு வருகிறது; ஓடி ஓடி ஆட்டங்கண்டு, மறுபடி சாவி கொடுக்காவிட்டால், வீணாகிவிடும் கடிகாரம்போல் இருக்கிறது' என்றார். ஆனால் இப்படி நேருவதற்கு இலட்சக்கணக்கான ஆண்டுகள் ஆகும்; ஆகவே, நாம் கவலைப்பட வேண்டியதில்லை.

**கோழையையும் வீரனாக்கலாம்!**

பௌதிகம், ரசாயனம் இந்த இரண்டும் 19-ஆம் நூற்றாண்டில்

**பண்டித நேருவின் சொற்பொழிவுகள்!**

"உங்களுக்கு நினைவிருக்கலாம். பண்டித ஜவாஹர்லால் நேரு அடிக்கடி நீண்ட சொற்பொழிவுகளை ஆற்றுவர். மேடையில் அமர்ந்திருக்கும் அவருடைய தோழர்கள் விவசாயிகள் முன்னிலையில் அவர் ஏன் இத்தகைய நீண்ட சொற்பொழிவுகளை ஆற்றுகிறார் என்று வியப்பார்கள். விஞ்ஞானம், வெளிநாட்டுக் கொள்கை, தொழிலகங்கள் ஆகியவை பற்றிப் பேசுவதற்கு என்ன அவசியம்? ஆனால், நாட்டு மக்கள் இவை அனைத்தையும் புரிந்து கொண்டாலன்றி நாடு முன்னேறாது என்று பண்டிட்ஜி கூறுவார். அவர் மக்களிடையே விஞ்ஞானத்தைப் பற்றிப் பேசியதால்தான் ஒரு அஸ்திவாரம் இடப்பட்டு, அதன் காரணமாக, நாம் விஞ்ஞான அறிவை விவசாயியிடம் எடுத்துச்சென்ற போது அவரால் புதிய உத்திகளை ஏற்றுக் கொள்ள முடிந்தது என்று கருதுகிறேன். காந்திஜி அடிக்கடி கூறுவார் : "என்னுடைய மனதின் கதவுகளும் ஜன்னல்களும் திறந்திருக்க வேண்டும். அப்போதே வெளிக்காற்று உள்ளே புகமுடியும்". ஆனால் அது நம்மை அடித்துக் கொண்டு போய்விடக் கூடாது. கால்கள் பூமியில் நன்கு பதிந்தே இருக்க வேண்டும். வெளியே பரவலாக உள்ள உத்திகளை நாம் ஏற்க வேண்டும். விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவற்றின் நல்ல அம்சங்களை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால் நம்மைச் சேர்ந்தவற்றை நாம் ஒதுக்கித் தள்ளிவிடக் கூடாது.

—இந்திரா காந்தி

விஞ்ஞானத் துறையின் முக்கிய அம்சங்களாக இருந்தன. இயற்கை அல்லது உலகத்துக்கு அப்பால் உள்ள சக்திகளை அடக்கியாள மனிதனுக்குத் துணையாக இருந்தன. அப்பால், விஞ்ஞானியான மனிதன் தன்னைப்பற்றியே ஆராயலானான். உயிரியல் என்பது முக்கியமாயிற்று. மனிதன், பிற பிராணிகள், தாவரம் ஆகியவற்றின் வாழ்வு பற்றிய ஆராய்ச்சிதான் உயிரியல். ஏற்கனவே இந்த ஆராய்ச்சி வெகு தூரம் முன்னேறிவிட்டது. உயிரியல் நிபுணர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? மனிதனுடைய குணம் அல்லது போக்கை 'இஞ்செக்ஷன்' போன்ற முறைகளின் மூலம் மாற்றிவிடலாமாம். ஆகவே, மிகவும்கோழையாக இருந்தவனைக்கூடத் தீர புருஷனாக்கவும், அரசாங்கமாயின் தன்னை யாரேனும் கண்டித்தாலும் சரி, எதிர்த்தாலும் சரி அவர்களுடைய கண்டனம் அல்லது எதிர்ப்புச் சக்தியைக் குறைக்கவும் இந்த முறையைக் கையாள முடியும் என்று தோன்றுகிறது.

உயிரியலை அடுத்து மனத்தத்துவ ஆராய்ச்சி முன்னேறியது. மனிதர்களுடைய சிந்தனைகள், நோக்கங்கள், நிலை, விருப்பம் இவற்றைப் பற்றியதுதான் மனத்தத்துவம். இப்படி விஞ்ஞானம் புதிய புதிய துறைகளில் ஆராய்ச்சி செய்ய முனைந்துவிட்டது; நம்மைப் பற்றி நாமே தெரிந்துகொள்ள-நம்மை நாமே கட்டுப்படுத்திக் கொள்வதற்கு அனுகூலமாகவோ என்னவோ இருந்தது-உதவுகிறது.

**பாரம்பரிய வளர்ச்சி**

சில பிராணிகளைப் பற்றிய ஆராய்ச்சி காரணமாக விஞ்ஞானம் பெரிதும் முன்னேறியிருக்கிறது. பாவம், தவளையை வெட்டிப் பார்த்து நரம்புகளும், தசை நார்களும் எப்படி இயங்குகின்றன என்று தெரிந்து கொண்டார்கள். அதிகமாகப் பழுத்த வாழைப் பழத்தின்மேல் மொய்க்கிறதே, அந்த அற்புதமான சின்னஞ்சிறு ஈயை இப்படி ஆராய்ந்ததில், பாரம்பரியம் அல்லது வழிவழியாகப் பிராணிகளின் வளர்ச்சி பற்றிய விவரம் தெரிந்ததென்றால், அதற்குமேல் சொல்வானேன்? கூர்ந்து அந்த ஈயைக் கவனித்ததில் ஒரு தலைமுறையிலிருந்து இன்னொரு தலைமுறைக்கு எந்த எந்தக் குணவிசேஷங்கள், எப்படி எப்படி வருகின்றன என்று கண்டு கொண்டார்கள்; ஓரளவுக்கு மனித இனமும் எப்படி வழி வழியாக வளர்ச்சி பெற்றது என்பதை அறிய இது பயன்படுகிறது.

**ஆண் பெண் வேற்றுமை**

வெறும் தத்துக்கிளி அல்லது வெட்டுக்கிளியின் போக்கிலிருந்து எவ்வளவோ விஷயம் நமக்குத் தெரிகிறதென்றால் பாரேன்! அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் நெடுநாளாக இந்த வெட்டுக்கிளிகளைக் கவனித்து வந்ததிலிருந்து பிராணிகளிலும் மனித இனத்திலும் ஆண்—பெண் என்ற வேற்றுமை எப்படித் தீர்மானமாகிறது?' என்று தெரிந்தது. சின்னஞ்சிறு கரு ஆரம்பத்திலேயே ஆணாகவோ பெண்ணாகவோ ஆவது எப்படி, நாளடைவில் சின்னஞ்சிறு ஆண்-பெண் பிராணியாகவும், பையனாகவும் பெண்ணாகவும் வளர்வது எப்படி என்று நன்றாகத் தெரிந்துகொண்டிருக்கிறோம்.

**மனித மனப்போக்கை அறிய நாய் உதவியது!**

நான்காவது உதாரணம் ஒன்று சொல்லுகிறேன்; நாம் வீட்டில் வளர்த்து வரும் நாயை எடுத்துக் கொள்வோம்; நம் நாளில் பிரபலமாக விளங்கிய ருஷிய விஞ்ஞானி 'பாவ்லோவ்' நாய்களைக் கூர்ந்து கவனித்தவர்; அதிலும் முக்கியமாக உணவைப் பார்த்ததும் அவற்றின் வாயிலிருந்து நீர் சொட்டுவதை அவர் ஆராய்ந்தார். அந்த எச்சில் நீர், எவ்வளவு நீளம் சொட்டுகிறது என்றுகூட அளந்து பார்த்தார். நாய் உணவைக் கண்டதும் இப்படி அதன் வாயில் நீர் சுரப்பது இயல்பாகவே நிகழும் நிகழ்ச்சி. முந்திய அநுபவம் இராமலே குழந்தை தும்முவதோ, கொட்டாவி விடுவதோ, கைகாலை அசைத்து நீட்டுவதோ இல்லையா, அதுபோலவே இதுவும் ஒன்று.

அப்புறம் 'பாவ்லோவ்' அதைக் குறிப்பிட்ட விதமாகத் தாமே பழக்கி அதன் வாயில் நீர் சுரக்கும்படி செய்தார். உணவு வருகிறது என்று ஒரு சமிக்ஞையின் மூலம் தெரிந்து கொள்ளும்படி பழக்கிவிட்டார். அப்போது உணவைக் கண்ணால் பாராமலே கூட—அந்தச் சமிக்ஞை செய்ததும்—அதன் வாயிலிருந்து நீர் சுரந்தது.

இப்படி நாயையும் அதன் எச்சில் நீரையும் பற்றி ஆராய்ந்ததை அடிப்படையாகக்கொண்டு, மனிதனுடைய மனப்போக்கையும் அறிய முடிந்தது. 'மனிதன் குழந்தையாக இருக்கும்போது தன்னை அறியாமல் இயல்பாகவே என்ன என்ன விளைவுகள் அவனிடம் தோன்றுகின்றன? வளர, வளர எப்படி எப்படிப் புதிய விளைவுகள் பழக்கத்தால் ஏற்படுகின்றன? என்று தெரிந்தது. நாம் கற்றறிவதெல்லாம் இந்த ரீதியை அநுசரித்து தான். பழக்க வழக்கங்களும் இப்படித்தான் ஏற்படுகின்றன; மொழிகளையும் இதேமுறையில்தான் கற்றுக்கொள்கிறோம். இதைப் பொறுத்துத்தான் நம் செயல்களும் போக்கும் அமைகின்றன. சில சமயம் இதனால் நன்மையும் விளையலாம்; சில சமயம் தீமையும் நேரலாம். பொதுவாக எல்லாரிடமும் இருப்பது திகில் என்ற ஒரு தன்மை. அருகில் ஒரு பாம்பையோ, பாம்புபோல் காணும் கயிற்றையோ பார்த்ததும் மனிதன் கப்பென்று தாவி ஓடிவிடுகிறானே; இதற்குப் 'பாவ்லோவ்' செய்த பரிசோதனையைப் பற்றித் தெரிந்திருக்க வேண்டும் என்பது அவசியமா என்ன? இல்லையே!

இருந்தாலும், 'பாவ்லோவ்' செய்த பரிசோதனைகளினால் மனத்தத்துவ ஆராய்ச்சி முறையே மாறிவிட்டது. சில விளைவுகளைப் பற்றிக் கேட்க ரசமாக இருக்கும். ஆனால், இவற்றைப் பற்றி இங்கே இதற்குமேல் வளர்த்துக்கொண்டு போவதற்கில்லை. ஆனால் இன்னும் இதைப்போல் மனத்தத்துவம் பற்றிய பல ஆராய்ச்சிகளும் முறைகளும் உண்டு என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

**விஞ்ஞான ஆராய்ச்சியைத் தெரிந்துகொள்ள வேண்டும்**

விஞ்ஞான ஆராய்ச்சி எப்படியெல்லாம் நடந்து வருகிறது என்பதைப்பற்றி உனக்கு ஓரளவு தெரியவேண்டுமென்றே, இப்படிச் சில உதாரணங்களை எடுத்துச் சொன்னேன். முன்பெல்லாம் விளங்காமலோ, நம் ஆராய்ச்சிக்கு எட்டாமலோ உள்ள பெரிய பெரிய விஷயங்களைப் பற்றித் தெளிவில்லாமல் பேசி வருவது தான் வழக்கம்; மக்கள் ஏதேதோ பேசி, வாத விவாதம் செய்து பரஸ்பரம் ஆத்திரமும், பரபரப்பும் அடைந்ததுதான் மிச்சம். இப்படி வாதிக்கும் ஒரு விஷயம் உண்மையா இல்லையா என்பதை முடிவாக அறிய முயல்வதில்லை; அது அந்தரத்திலேயே தொங்கிக் கொண்டிருக்கும்; அவ்வளவுதான்! மறுவுலகத்தைப் பற்றித் தீவிரமாக வாதம் நடத்திக்கொண்டிருப்பார்களேயொழிய இந்த உலகத்தில் நடக்கவேண்டிய சாவ சாதாரணமான விஷயங்களைக் கவனிக்கமாட்டார்கள். விஞ்ஞான முறை இதற்கு நேர்மாறானது. அற்பம் என்று சகஜமாகத் தள்ளிவிடக்கூடிய விஷயங்களை கூர்ந்து கவனித்து வருகிறார்கள் விஞ்ஞானிகள்; இதனால் பல முக்கியமான விளைவுகளைப் பற்றித் தெரிந்து கொள்ள முடிகிறது. இந்த விளைவுகளிலிருந்து சில முடிவுகளை வகுத்துக் கொள்கிறார்கள். மேலும் மேலும் ஆராய்ந்தும், பரிசோதனை செய்தும் அந்த முடிவுகள் சரிதானா என்று கண்டறிந்து கொள்கிறார்கள்.

இதிலிருந்து விஞ்ஞான ஆராய்ச்சியில் தவறு ஏற்படவே ஏற்படாது என்று சொல்வதாக எண்ணிவிடாதே! அடிக்கடி தவறு ஏற்படத்தான் ஏற்படுகிறது; உடனே அதைத் திருத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது. அதனாலும், விஞ்ஞான ஆராய்ச்சி முறைதான் ஒரு விஷயத்தைத் தீர்மானிப்பதற்குச் சரியான வழி. 19-ஆம் நூற்றாண்டில் விஞ்ஞானிகளிடம் இருந்த 'அகந்தையும், இவ்வளவுதான்; இதற்குமேல் ஆராயத் தேவையில்லை' என்ற மனப்பான்மையும் இப்போது அடியோடு போய்விட்டன. இவ்வளவு தூரம் கண்டு பிடித்திருக்கிறோம் என்று பெருமைப்பட்டாலும், அதே சமயம் பின்னும் பரந்து விரிந்துவரும் அறிவென்னும் பெருங்கடலில் முக்குளித்துக் கண்டறியாத எத்தனையோ விஷயம் உண்டு என்பதை விஞ்ஞானிகள் உணர்ந்துதான் இருக்கிறார்கள்.

**விஞ்ஞானத்தினால் நல்வாழ்வு கிடைக்கும்!**

உண்மையை உணர்ந்த பேரறிவாளிக்கு, தான் அறிந்தது வெகு சொற்பமே என்று தெரியும்; மூடனே எல்லாவற்றையும் தான் அறிந்துவிட்டதாக எண்ணிக்கொள்வான். விஞ்ஞானிகளும் இப்படித்தான் அடக்கமாக இருக்க வேண்டியிருக்கிறது. விஞ்ஞானம் வளர வளர, 'இதுதான் முடிந்த முடிபு' என்று வரையறுத்துக் கூறும் நிலை போய்விட்டது; அதற்கு மாறாகச் சற்றுத் தயக்கத்துடனேயே விடை அளிக்கிறார்கள் விஞ்ஞானிகள். எட்டிங்டன், "நாம் எத்தனையோ விஷயங்களைப் பற்றி யார் கேட்டாலும் பதில் சொல்ல முடியும் என்பதைவிட, இன்னும் நமக்குத் தெரியாத எத்தனையோ விஷயங்களைப் பற்றி ஆராய்ந்தறிய வேண்டியிருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும்" என்கிறார். இதுதான் இன்றைய நிலைமை. இருந்தாலும், விஞ்ஞான ஆராய்ச்சியினால் எத்தனை எத்தனையோ விஷயங்கள் தெரிகின்றன; வாழ்வு பற்றிய அநுபவம் அதனால் நமக்குக் கிட்டுகிறது. நாம் அதைப் பயன்படுத்திக் கொண்டால், நல்லபடியாக வாழ முடியும்; இதுவரை ஆராய்ந்து தெளிவாகாமல் கிடந்த-நமக்கு விளங்காத—பல விஷயங்களை அது விளக்கி உண்மையை உணர வைத்திருக்கிறது.

('நேருவின் உலக சரித்திரம்' என்னும் நூலிலிருந்து...)

நன்றி :
கல்ச்சரல் புக்ஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை-11.

## புன்னகை புரிய வைத்த ரோஜா



தேர்தல் காலத்தில் பல ஊர்களுக்கு இரவு பகலென்று பாராமற் சென்று சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார் நேரு. ஓயாது அயராது அலைச்சலில் ஈடுபட்டிருந்ததால் அவருக்குச் சினம் எடுத்த எடுப்பில் வந்துவிடும்.

நேரு எங்கு சென்றாலும் புகைப்படமெடுப்பவர்களும் அவரைச் சுற்றிக் கொண்டேயிருப்பார்கள். ஆனால் அவருடைய சினத்தைக் கண்டால் விலகிக் கொள்வர்.

இந்நிலையில் துணிச்சலும் நுண்ணறிவும் மிக்க புகைப்படக்காரர் ஒருவர் துணிவுடன் நேருவை நெருங்கி அவருடைய சட்டையில் அன்றலர்ந்த மணமிக்க ரோஜா ஒன்றைக் குத்தினார். அதைக் கண்ட நேரு முகமலர்ந்தார். புகைப்படக்காரர் நோக்கம் கைகூடிற்று. அவர் விரும்பிய வண்ணம் பல புகைப்படங்களை எடுத்துக் கொண்டார்.

## நேருஜி சந்திக்க மறுத்த தலைவர்

நேருஜி சந்திக்க மறுத்த பெரிய தலைவர் ஒருவர் உண்டு. அவர்தான் மேலைநாட்டையே ஆட்டிப் படைத்த முசோலினி. அவர் நேருவைப்பார்க்க விரும்பினார். அப்போது நேருஜி மேல் நாட்டிற்குச் சென்றிருந்த சமயம். அவர் மனைவி கமலா மரணப் படுக்கையில் இருக்கையில், முசோலினி நேருவைச் சந்திக்க ஆவலுடன் இருப்பதாகச் செய்தி கிடைத்தது. பாஸிஸத்தை வெறுத்த நேருஜி, முசோலினியைச் சந்திக்க விரும்பவில்லை.

நேருஜி, தாய்நாட்டிற்குத் திரும்புகையில் அவரது விமானம் ரோம் நகரில் இறங்கியது. இத்தாலிய சர்வாதிகாரி, அவரைச் சந்திக்க விரும்புவதாக மீண்டும் செய்தி அனுப்பினார்.

''அவரது மனைவி இறந்தமை குறித்து வருத்தம் தெரிவிப்பதற்காகவே முசோலினி அவரைப் பார்க்க விரும்புவதாகவும்'' சொன்னார்கள்! ஆனால், நேருஜி—ஜனநாயகக் கொள்கையில் திளைத்தவர்—தமது கொள்கைக்கு விரோதியைச் சந்திக்கத் தயாராய் இல்லை.

நேருஜி - முசோலினி சந்திப்பு என்றுமே நடைபெறவில்லை.






# சின்னஞ்சிறு குழந்தைகளின் சிறப்புமிகு தொண்டு!

வரலாறு காணாத அளவுக்குத் தொடர்ந்து வறட்சி வாட்டி வருவதால் இராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தருமபுரி, சேலம், புதுக்கோட்டை, வடஆர்க்காடு, தென்ஆர்க்காடு ஆகிய 9 மாவட்டங்களைச் சார்ந்த 10,000 கிராமங்கள் சொல்லவொண்ணாத் தொல்லைகளை அனுபவித்து வருகின்றன. அந்தக் கிராமங்களில் வாழும் மக்கள் குடிப்பதற்கும் தண்ணீர் இன்றி, கொடுந்துயர் அனுபவித்து வருகின்றனர். வறட்சியால் பாதிக்கப்பட்ட எல்லா மாவட்டங்களிலும் பெருமளவில் வறட்சித்துயர் துடைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 'வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்களின் துயர்துடைப்பதற்காக மனமுவந்து நிதி வழங்க முன்வர வேண்டும்'' என்று, பொதுவாகத் தமிழ்நாட்டு மக்களையும், குறிப்பாகச் சமூகப் பணியாளர்களையும், சமூகப்பணியாற்றும் நிறுவனங்களையும் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

ஆளுநர் அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கு ஏற்ப, சென்னைக் காலடிப்பேட்டையில் உள்ள டாக்டர் அன்னிபெசண்ட் நர்சரி பள்ளியைச் சார்ந்த சின்னஞ்சிறு குழந்தைகள் வறட்சித் துயர்துடைப்புப் பணிகளுக்கு நிதி உதவி செய்ய முன்வந்தனர். அப்பள்ளியைச் சார்ந்த சின்னஞ்சிறு குழந்தைகள் வறட்சித் துயர்துடைப்புப் பணிகளுக்காகச் சிறு சிறு தொகையாகக் கொடுத்து உதவினர்.

"சிறுதுளி பெருவெள்ளம்'' என்பதுபோல் அச்சிறுவர்கள் சேர்த்துக் கொடுத்த தொகை ரூபாய் 80 ஆயிற்று! அத்தொகையை வறட்சித் துயர்துடைப்பு நிதியாகத் தமிழ்நாடு அரசின் வருவாய்த்துறைச் செயலாளர் அவர்களுக்கு அனுப்பி வைத்தார்.

நாட்டு நலன் காக்க, நாமும் நம்மால் ஆன தொண்டு செய்ய வேண்டும் என்ற நல்ல உள்ளத்துடன், டாக்டர் அன்னிபெசண்ட் நர்சரி பள்ளியின் சின்னஞ்சிறு குழந்தைகள் செய்துள்ள சேவையைத் தமிழ்நாடு அரசு மனமாரப் பாராட்டியுள்ளது.

"எங்கோ வறட்சி ஏற்பட்டுள்ளது! அதைப் பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்?'' என்ற மனப்பான்மையுடன் பெரியவர்களெல்லாம் பேசாமலிருக்கும்போது, அரும்புகள் என்று சொல்லத் தக்க சிறுகுழந்தைகள் வறட்சித்துயர் துடைப்பு நிதிக்கு ரூபாய் 80 வழங்கியுள்ளது அருஞ்செயலே என்றால் மிகையாகாது! அவர்கள் உருவத்தால்தான் சிறியவர்களே தவிர, உள்ளத்தால் பெரியவர்களே என்றால் தவறாகாது! இதைப் போல் எல்லாப் பள்ளிக்கூட மாணவர்களும், நாட்டு நலனில் அக்கறை கொண்டு தங்களால் இயன்ற நிதி வழங்க முன்வருவார்களேயானால், அவர்களை அந்த வழிகளில் ஆசிரியர்கள் ஈடுபடுத்துவார்களேயானால், இயற்கையின் சீற்றத்தால் ஏற்படும் வறட்சியாயினும், புயலாயினும், வெள்ளமாயினும் அவைகளை வென்றிடல் எளிதே என்பதில் ஐயமில்லை.



# மணற்புயல் விளைத்ததோ வேதனை! அரசு செய்ததோ சாதனை!!

"தொல்லைகள் தனித்து வருவதில்லை; தொடர்ந்தே வரும்!'' என்பது பழமொழி. இப்பழமொழி, இராமநாதபுரம் மாவட்டம், இராஜ பாளையம் வட்டம், சேத்தூர் 'பிர்க்கா' உழவர் பெருமக்களைப் பொறுத்த வரையில் உண்மையாகிவிட்டது. 1975-ஆம் ஆண்டின் பின் பருவத்திலும்,' 1976-ஆம் ஆண்டின் முன் பருவத்திலும் ஏற்பட்ட வறட்சி, இது வரை இத்தகைய வறட்சி ஏற்பட்டதில்லை என்று சொல்லத் தக்க அளவில் அமைந்திருந்தது. அதனால் அவதியுற்ற உழவர் பெரு மக்களுக்கு, 1976, ஆகஸ்ட் மாதத்தில் மேலும் ஒரு தொல்லை ஏற்பட்டது!

கொடும் புயற்காற்று தோன்றியது! அக் காற்று மணற்காற்று ஆக மாறி, வட தேவ தானம், தென் தேவதானம், முத்துசாமிபுரம், சேத்தூர், மேட்டுப்பட்டி, சோலைச்சேரி, சுந் தரராஜபுரம் ஆகிய கிராமங்களில் ஏறத்தாழ 2,400 ஏக்கர் சாகுபடிக்குகந்த நிலங்களைப் பாழாக்கியது. 128 கிணறுகளில் மணல்மூடின. பல ஏரிகளும், பாசன வாய்க்கால்களும், மண லால் மூடப்பட்டன!





இப்புதிய தொல்லையால் உழவர் பெரு மக்கள் நடுக்குற்றனர். அவர்களால், அவர் களது சொந்த நிலங்களும், கிணறுகளும் இருந்த இடத்தைக் கூடத் தெரிந்து கொள்ள முடியாத அளவுக்கு எங்கணும் மணற்காடாகக் காட்சியளித்தது! சாகுபடி செய்வதென்பது எண்ணிப் பார்க்க முடியாததாகிவிட்டது!

இப்பிரச்சினையைத் தீர்க்க தமிழ் நாடு அரசு விரைந்து நடவடிக்கை எடுத்தது. ஆளுநர் ஆலோசகர் திரு பி. கே. தவே அவர்கள், 19-8-1976 அன்று இப்பகுதியைப் பார்வை யிட்டார். மணல் அகற்றும் பணிக்காக ரூ. 15 இலட்சம் அனுமதியளித்தார். அதில் பாதிக்கு மேற்பட்ட தொகையை உழவர் பெருமக்களுக்கு மானியம் அளிப்பதற்காகவே ஒதுக்கினர்.

மணலை அகற்றும் பணி, போர்க்காலப்பணி களைப் போல், வேளாண்மைத் துறையால் மேற்கொள்ளப்பட்டது. மாநில மெங்கும் இருந்த, 40 'புல்டோசர்கள்' வயல்களில் குவிந்த மணலை அகற்றும் பணிக்காக வந்து சேர்ந் தன!





கிணறுகளில் தூரெடுக்கும் பணி உழவர் களிடமே விடப்பட்டது. ஏரிகளிலும், வாய்க் கால்களிலும் குவிந்த மணலை அகற்றும் பணியைப் பொதுப் பணித் துறை ஏற்றுக் கொண்டது.

மணல் அகற்றும் பணி 40 நாட்களில் முடிவுற்றது. மூத்தையா என்ற அரிசன உழவரின் 3 ஏக்கர் நிலமும், அவருடைய கிணறும் சீர்திருத்தப்பட்டன. அதனால் அவருடைய முகத்திலே மகிழ்ச்சி மலர்ந்தது. இவ்வாறு மகிழ்ச்சியுற்ற உழவர்கள் பலர். மகிழ்ச்சியுற்ற உழவர்களைக் காண்பது கடவுள் உழவர்களைப் பார்த்து மீண்டும் புன்னகை புரிவது போல் இருந்தது!





பருவ மழை பெய்ததால், உழவர்கள் சாகுபடி வேலையைத் துவங்கினர்! எனவே, மணல் அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த வேளாண்மைத் துறையினர் தங்களுடைய பணியைக் காலத்திற்கு ஏற்ப, விரைந்து மாற்றிக் கொண்டனர் ; உழவர்களைச் சந்தித்து சாகுபடி செய்வதற்கு ஏற்ற பல்வேறு பயிர் வகைகளைப் பற்றி விளக்கினர்.

செயலற்றிருந்த பம்பு செட்டுகள் மீண்டும் இயங்கின! அப்பகுதி உழவர்களின் முகத்திலே புதிய நம்பிக்கை உதயமாகியது!









மணல் அகற்றும் பணி முடிந்ததும் மீண்டும் ஒரு முறை, ஆளுநர் ஆலோசகர் திரு. பி. கே. தவே அவர்கள் அப்பகுதியைப் பார்வையிட்டார். முத்தையா போன்ற உழவர்களைப் பார்த்து திருப்திதானே என்று கேட்டார்.

உழவர்கள், அரசு செய்த பணியைப் பாராட்டிக் கூறியது கேட்டு ஆளுநர் ஆலோசகர் மகிழ்ச்சியடைந்தார். அத்துடன் நின்றிடாமல், ஏராளமான அளவில் மரம் நடும் பணியைத் துவக்கி வைத்தார்.







இலட்சம் மரங்கள் நடப் பெற்றன. இப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் இத்திட்டத்தில் ஆர்வத்தோடு ஈடுபட்டனர்.

இப்பெரும் பணி வெற்றிகரமாக நிறைவேறியதை யொட்டி, 11-10-1976 அன்று நடைபெற்ற விழாவில் திரு பி. கே. தவே அவர்கள் தலைமை தாங்கினர்.



# படமும் செய்தியும்





பண்டித ஜவஹர்லால் நேரு அ... களின் பிறந்த நாள், குழந்தைகள் நாளாகக் கொண்டாடப் படுவதையொட்டி சென்னை பெ... நு ஸ்டேடியத்தில் 14-11-'76 அன்று தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாடியா ... வர்கள் குழந்தைகள் பேரணியைத் துவக்கி வைத்தார்.

...ந்திய அரசின் நிதியமைச்சர் திரு. சி. சுப்பிர ...ணியம் அவர்கள் இராஜாஜி அரங்கில் ...-11-1976 அன்று, தமிழ்நாடு ஆளுநர் ...வர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில் ...மிழ்நாட்டின் சார்பில் குற்ற வழக்கு நீதி ...ன்றங்களில் தமிழில் தீர்ப்பு வழங்கும் ...ட்டத்தைத் துவக்கி வைத்தார். அவ்விழா ...ல் குற்ற இயல் நடைமுறைச் சட்டம், ...ந்தியச் சாட்சியச் சட்டம், இந்திய ஒறுப்பு ...றைச் சட்டத் தொகுப்பு ஆகியவற்றின் ...மிழ் மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிட்டு, ...வைகளின் முதல் பிரதிகளை, சென்னை உயர் ...ிமன்ற நீதிபதி திரு. டி. ராமபிரசாத் ராவ் ...வர்களிடம் வழங்கினார். ▼



மறைந்த பாரதப் பிரதமர் பண்டித ஜவஹ... லால் நேரு அவர்களின் 87-வது பிறந்த நா... யொட்டி, சங்கீத கலாநிதி திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களின் இன்னிசை நிகழ்ச்... 14-11-1976 அன்று மாலை, வள்ளுவர் கோ... டத்தில் நடைபெற்றது. அவ்விழாவில் தமி... நாடு ஆளுநர் அவர்கள் திருமதி எம். எஸ். ▼ சுப்புலட்சுமி அவர்களுக்குத் தஞ்சாவூர்த் தட்... ஒன்றைப் பரிசாக வழங்கினார்.





ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த நாள் குழந்தைகள் நாளாகக் கொண்டாடப்பட்டதையொட்டி, 15-11-1976 அன்று சென்னை இராஜாஜி 'அரங்கில், குழந்தைகளுக்கான புத்தகக் கண்காட்சி நடத்தப் பெற்றது. தமிழ்நாடு சமூக நல வாரியத் தலைவர் திருமதி தாரா செரியன் அவர்கள் அக்கண்காட்சியைத் துவக்கி வைத்துப் பார்வையிட்டார்.



வஹர்லால் நேரு அவர்களின் பிறந்த நாளை யொட்டி 15-11-1976 அன்று, வள்ளுவர் கோட்டத்தில், பல்வேறு பள்ளிக்கூட மாணவ மாணவிகளால் நடத்தப்பெற்ற கலைநிகழ்ச்சி யில் ஒரு காட்சி.





செங்கற்பட்டு மாவட்டம் சந்தோஷபுரம் கிராமத்தில் 16-11-1976 அன்று குழந்தைகள் நாள் விழாவும், 20 அம்சத் திட்ட வார விழாவும் நடத்தப்பெற்றது. அவ்விழாவில் ஆளுநர் ஆலோசகர் திரு. பி. கே. தவே அவர்கள், 20 அம்சத் திட்டத்தின் கீழ், தெளிப்பான்கள் மற்றும் தையல் இயந்திரங்களைக் கிராமவாசிகளுக்கு வழங்குகிறார்.



''நேஷனல் ஹெரால்டு'' நாளேடு, ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த நாளையொட்டி 72 பக்கங்கள் கொண்ட சிறப்பிதழ் ஒன்றை வெளியிட்டுள்ளது. அச்சிறப்பிதழின் வெளியீட்டு விழா சென்னை இராஜாஜி அரங்கில் 17-11-1976 அன்று நடைபெற்றது. அவ்விழாவில், 'அசோசியேடட் ஜர்னல்ஸ் லிமிடெட்' நிறுவனத்தின் நிருவாக இயக்குநர் திரு முகமத் யூனுஸ் அவர்கள், 'நேஷனல் ஹெரால்டு' சிறப்பிதழின் முதல் பிரதியைத் தமிழ்நாடு ஆளுநர் அவர்களிடம் வழங்குகிறார்.

குழந்தைகள் நாள் விழா, நேரு பிறந்த நாள் விழா ஆகியவற்றை யொட்டி, சென்னை ராஜ் பவனில், 17-11-1976 அன்று 1,000 அனாதைக் குழந்தைகளுக்குத் தமிழ்நாடு சமூக நல வாரியம் தேநீர் விருந்து அளித்தது.





ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த நாள் குழந்தைகள் நாளாகக் கொண்டாடப்படுவதை யொட்டி, 17-11-1976 அன்று சென்னை நகரில் பல்வேறு அனாதை இல்லங்களிலும், மருத்துவ மனைகளிலும் உள்ள குழந்தைகளுக்குப் பொம்மைகள், துணிகள், மற்றும் இதர பொருள்கள் பரிசாக வழங்கப்பட்டன. திருமதி பார்வதி கார்த்திகேயன் அவர்களும், திருமதி பணிக்கர் அவர்களும் அனாதைக் குழந்தைகளுக்குப் பொம்மைகள் வழங்குவதை இப்படத்தில் காணலாம்.

20 அம்சத் திட்ட நிறைவு விழாவும், குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டத் துவக்க விழாவும் சென்னை ஷெனாய் நகர் பகுதியில் 19-11-1976 அன்று காலை, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.





...து பாரதப் பிரதமர் திருமதி இந்திரா ▲
...ந்தி அவர்களின் 59-வது பிறந்த நாள்
...ாவையொட்டி, சென்னைச் சேத்துப்பட்டில்
...ள்ள, அகவிளையாட்டு அரங்கில் குழந்தைகள்
...ரணி நடைபெற்றது.





...ரதட்சணை வாங்க மாட்டோம்'' என்று ▼
...தி தெரிவித்து 10,000 பேர் கையெழுத்
...ட உறுதிமொழிப் பத்திரங்களைப் பாரதப்
...தமர் திருமதி இந்திரா காந்தி அவர்களிடம்
...ாடுப்பதற்காக, சென்னை இளைஞர் சங்கத்
... இயக்குநர் டாக்டர் எஸ். சி. புருஷோத்
...ன், 20-11-1976 அன்று, ''தமிழ்நாடு
...ஸ்பிரஸ்'' இரயில் மூலம் புறப்பட்டார்.
...ரிடம், தமிழ்நாடு அரசின் நல்வாழ்வு
...றும் குடும்பநலத் துறைச் செயலாளர் திரு.
...ாக் அவர்களும், இளைஞர் சங்க உறுப்பினர்
...ம் சேர்ந்து உறுதிமொழிப் பத்திரங்களை
...ிப்பதைப் படத்தில் காணலாம்.



▲ தாமபரத்தில் உள்ள உருக்குநோய் மருத்துவ மனையில் தொழிலாளர்களுக்காக, 26 படுக்கைகள் கொண்ட வார்டு கட்டுவதற்கு ஆளுநர் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில், தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 19-11-1976 அன்று அடிக்கல் நாட்டினார்.

▶ தேசிய மாணவர் படையினரின் 28-வது ஆண்டு விழா 21-11-1976 அன்று சென்னை இராஜரத்தினம் விளையாட்டரங்கத்தில் நடைபெற்றது. அவ்விழாவையொட்டி அமைக்கப்பட்டிருந்த பொருட்காட்சியைத் தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு. பி. கே. தவே அவர்கள் பார்வையிட்டார்.





# என்ன கோழி வளர்க்கலாம்?

**கோ**ழிப் பண்ணையில் கோழிகளின் தரம் முதலிடம் வகிக்கின்றது. கோழிகளை, அவைகளின் உபயோகத்தைப் பொறுத்து மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அதாவது :

1. முட்டை இனம்.
2. இறைச்சி இனம்.
3. இரண்டிற்கும் பயன்படும் இனம்.

## அ) முட்டை இனம்

வெள்ளை லெகார்ன் (White Leghorn) ஆஸ்டர்லாப் ( Austrolorp ) போன்ற கோழிகள் முட்டை இடும் இனத்தைச் சார்ந்தவை. இவ்வினக் கோழிகள் இயற்கையாகவே நிறைய முட்டையிடும் தன்மைக்குரிய மரபியல் குணங்களைப் பெற்றிருப்பதால், சராசரி ஆண்டொன்றுக்குச் சுமார் 225 முட்டைகள் இடும் தன்மையுடைவையாகும்.

## ஆ) இறைச்சி இனம்

ஒயிட் ராக் (White Rock), ஒயிட் கார்னிஷ் ( White Cornish ) போன்றவைகள் இறைச்சி இனத்தைச் சேர்ந்தவை. இக்கோழிகள் சுமார் 10 வாரத்தில் 3 முதல் 3.25 கிலோ அளவுள்ள தீவனத்தை உட்கொண்டு, 1.5 கிலோ எடையைப் பெற்றிடும் தன்மையுடையவை. மேலும் இவ்வகைக் கோழிகளின் இறைச்சி மிகச் சுவையுடையதாகவும், மிருதுவாகவும் இருக்கும்.

## இ) இரண்டிற்கும் பயன்படும் இனம்

தற்போது சிகப்பு போந்தாக் கோழி (Rhode Island Red) போன்றவைகள் முட்டைக்காகவும், இறைச்சிக்காகவும் வளர்க்கப்படுகின்றன. இவ்வகைக் கோழியிலிருந்து ஆண்டு ஒன்றிற்கு சுமார் 180 முட்டைகள்தான் பெற்றிட முடியும்.

தற்போது சமீப காலமாகத் தனியார் நிறுவனங்களும், அரசுப் பண்ணைகளும், முட்டை, இறைச்சியினம் இரு வகையிலும் தரம் உயர்த்தப்பட்ட கோழிகளை (Improved Strain) விநியோகம் செய்கின்றனர்.

தரம் உயர்த்தப்பட்டவைகளை இரு வகையாகப் பிரிக்கலாம்:

1. 'ஹைபிரிட்': 'இராணி ஷேவர்ஸ்', 'தார்ன்பர்ஸ்' முதலியன.
2. 'பியூர் லைன்' ஓரினம் : 'மேயர்', 'விடோரியா' முதலியன.

'ஹைபிரிட்' கோழிக்கும், 'பியூர் லைன் கோழிகளுக்கும் உள்ள வேறுபாடுகள் என்... வெனில், 'ஹைபிரிட்' கோழிகளிலிருந்... கிடைக்கும் குஞ்சுகள் தாய்க் கோழிகளை... போல் வேண்டிய பலனைத் தராது. வீரிய... கலப்பினக் (Hybrid) கோழிகளின் முட்டை... குஞ்சு பொரிக்க வைத்துக் கிடைக்கும் குஞ்... கள், தாய்ப் பறவையைப் போல் அதிக மு... டையிடும் தன்மை பெற்றிருக்காது. என... அதன் குஞ்சுகள் அதிக முட்டை இடாத... எனவேதான் ஹைபிரிட் வைத்து வளர்க்கு... பண்ணையாளர்கள் சேவலின்றி முட்டை உ... பத்தி செய்து, அவைகளைச் சாப்பாட்டிற்... மட்டுமே விற்பனை செய்து விடுகின்றன... ஆனால் 'பியூர் லைன்' கோழிகளைக் கொண்... குஞ்சு பொரித்தால் அக்குஞ்சுகள் தாய்... கோழிகளைப் போலவே, மரபியல் குணங்களை... பெற்றிருக்கும்.

எனவே பண்ணை அமைப்பதற்கு முன்... நல்ல தரமான கோழிகளைத் தேர்ந்தெடுப்ப... மிகவும் அவசியம். பொதுவாக நம் கிராம... புறங்களில் வளர்க்கின்ற நாட்டினக் கோழிக... தங்கள் போக்கிலே திரிந்து ஆண்டொன்றிற்கு... சுமார் 60 முட்டைகள்தான் உற்பத்தி செ... கின்றன. ஆனால் 'வெள்ளை லெகார்ன்... போன்றவைகள் சுமார் 200 முதல் 225 வ... உற்பத்தி செய்யும் திறனைப் பெற்றுள்ள... இது, நாட்டினத்தைப் போன்று சுமார் மூன்... மடங்கிற்கும் அதிகமான முட்டைகளை உ... பத்தி செய்யக் கூடியதாய் உள்ளது. இப்ப... அதிக உற்பத்தி செய்யும் திறன், மரபிய... குணங்களைப் பொறுத்ததே. எனவே இப்படி... பட்ட கோழிகளை வளர்ப்பதன் மூலம்தா... பண்ணையில் இலாபத்தை அடைய முடியும்.



மேயர் இனம்




"**ஏ**ழையாக இருந்தாலும் இரு ;
ஆனால் ஏழையாக இருக்காதே!" என்பது ...ரோஞ்க நாட்டுப் பழமொழியாக இருந்தா...லும், இன்று எல்லா நாட்டிற்கும் பொருந்துவ...தாகவே உள்ளது. எனவே, ஏழையாக இருப்...பவர்கள் தங்கள் ஏழ்மையைப் போக்கிக் ...கொண்டு, ஏற்றமுடன் வாழ, என்ன செய்ய...லாம் என்று சிந்தித்தால், இன்றைய நிலையில் ...கோழி வளர்ப்பதே சிறந்த வழி என்பது புல...ஞகும்.

தற்பொழுது பலர் கோழிப் பண்ணை ...அமைத்துக் குபேரர்களாக மாறி வருகிறார்கள் ...என்பது ஒரு சிலருக்கே தெரிந்த உண்மையாக ...உள்ளது!

கிராமப்புறங்களில் கோழி வளர்ப்பு எந்த ...ரு செலவும் இல்லாத புறக்கடைத் தொழி...லாக இதுவரை இருந்து வந்துள்ளது. ஆனால் ...நாட்டுக் கோழிகள் ஆண்டொன்றுக்கு 50 ...முதல் 60 முட்டைகளையே இடுவதால், நாட்டுக் ...கோழிகளை வளர்ப்பது இலாபகரமானதாக ...இல்லை.



...வீரியக் கோழிகள் ஆண்டொன்றுக்கு ...30 முட்டைகளுக்குக் குறையாமல் இடுகின்...றன. வளர்ந்து வரும் அறிவியலின் பயனாக ...கோழி வளர்ப்பு இன்று, குறைந்த செலவில் ...—குறுகிய காலத்தில்—பலன் தரும் சிறந்த ...தொழிலாக மலர்ந்துள்ளது. முட்டைகளி...லிருந்து வெளிவந்த பெட்டைக் குஞ்சுகள் ஆறு ...மாதத்தில் முட்டையிடும் நிலையினை அடைந்து ...விடுவதால், கோழி வளர்ப்பில் செய்யும் முத...லீட்டின் பயனை ஆறு மாதத்திலேயே அனு...பவிக்க இயலும்! கோழிப் பண்ணை அமைப்ப...தன் மூலம், குறுகிய காலத்தில் அதிக இலாபம் ...பெற முடிவதாலேயே, இன்று கோழி வளர்ப்பு ...பற்றிய விழிப்புணர்ச்சி—படித்தவர்களிடம் ...மட்டுமல்ல; பாமரர்களிடத்திலும் ஏற்பட்டு ...வருகிறது.



### கோழி வளர்ப்பின் அவசியம்

''நாளொன்றுக்கு ஒரு முட்டை சாப்பிட்டால், நோய்கள் நம்மை அணுகாது!'' (An egg a day keeps the diseaseaway.) என்பது ஆங்கில நாட்டுப் பழமொழியாகும். எனவே, நாம் உடல் நலம் பெறவும், அறிவாற்றல் பெறவும் நாளொன்றுக்கு ஒரு முட்டை வீதம் சாப்பிட வேண்டும். ஆனால் வளர்ந்து வரும் நாடான இந்தியாவில் வாழும் நம்மால், நாள் ஒன்றுக்கு ஒரு முட்டை வீதம் சாப்பிட நமது பொருளாதாரம் இடம் தராது! ஆகவே, நாம் ஒவ்வொருவரும் நலமாக வாழ, நாள் ஒன்றுக்கு 8.5 கிராம் (0.3 அவுன்சு) முட்டை சாப்பிட வேண்டும் என்று ஊட்டச் சத்துணவு வல்லுநர்கள் குறிப்பிடுகின்றார்கள். ஆனால் தமிழ்நாட்டிலுள்ள மக்களுக்கு இன்றைய நிலையில் ஒவ்வொருவருக்கும் 1 கிராம் அளவு முட்டையே கிடைப்பதாக மதிப்பிடப்பட்டு உள்ளது.

இன்னும் சற்று விரிவாகக் கூற வேண்டுமானால் தற்பொழுது தமிழ்நாட்டில் உள்ள மக்கள் ஒவ்வொருவரும் ஒரு ஆண்டுக் காலத்தில் 8 முட்டைகளே உண்கின்றார்கள். ஆனால் தமிழ்நாடு அரசின் மாநில திட்டக் குழு, தொலை நோக்குத் திட்டத்தின் (Perspective Plan) முடிவில், அதாவது 1984-க்குள் தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் நாள் ஒன்றுக்குக் கால் முட்டை அளவாவது கிடைத்திடச் செய்ய வேண்டும் என்ற இலட்சியத்துடன் திட்டமிட்டுள்ளது.

### நாளொன்றுக்கு 90 இலட்சம் முட்டை தேவை!

வெளிநாட்டு இனக் கோழிகள் பெரிய முட்டைகளை இடுவதால், அம்முட்டை ஒவ்வொன்றும் சராசரியாக 50 கிராம் எடை இருக்கும் என்று வைத்துக் கொண்டு, (நாட்டுக் கோழி முட்டை ஒவ்வொன்றும் சராசரியாக 37 கிராம் இருக்கும்), ஒவ்வொருவருக்கும் நாளொன்றும் 8.5 கிராம் முட்டை தேவையென்ற அடிப்படையில் கணக்கிட்டால் 1984-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் வசிக்கப் போகும் 5.37 கோடி மக்களுக்கும் நாள் ஒன்றுக்கு ஏறத்தாழ 90 இலட்சம் முட்டைகள் தேவைப்படும்!

நாளொன்றுக்கு ஒவ்வொருவருக்கும் 8.5 கிராம் முட்டை வீதம் (அதாவது 6 பேருக்கு ஒரு முட்டை வீதம்) என்பதற்குப் பதிலாக நாளொன்றுக்கு ஒவ்வொருவரும் ஒரு முட்டை வீதம் உண்ணும் நிலைமை ஏற்படுமானால், 1984-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் வாழும் மக்களுக்கு நாளொன்றுக்கு ஏறத்தாழ 5.4 கோடி முட்டைகள் தேவைப்படக் கூடும் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

### 1,50,000 கோழிப் பண்ணைகளை அமைத்திட வேண்டும்

ஒரு கோழிப் பண்ணையில் 100 முட்டையிடும் கோழிகள் இருந்தால், சராசரியாக அக் கோழிப் பண்ணையில் நாள்தோறும் 60 கோழிகளே முட்டை இடுகின்றன. இந்த அடிப்படையில், 90 இலட்சம் முட்டைகள் பெற, 150 இலட்சம் முட்டையிடும் கோழிகள் தேவைப்படும். இந்த அளவுக்குக் கோழிகளை வளர்க்க, ஒவ்வொரு கோழிப் பண்ணைக்கும் (யூனிட்) 100 பெட்டைக் கோழிகள் வீதம் தமிழ்நாட்டில் 1984-ஆம் ஆண்டிற்குள், 1,50,000 கிராமக் கோழிப் பண்ணைகளை நிறுவிட வேண்டும்.

கோழிப் பண்ணை அமைப்பதைத் துணைத் தொழிலாகக் கொண்டு, 100 பெட்டைக் கோழிகள் கொண்ட கோழிப் பண்ணைகளைக் குறிப்பாகக் கிராமப் புறங்களில் அமைப்பதே பொருளாதார நோக்கில் சிறந்ததாக — இலாபம் தரும் அமைப்பாக—இருக்கும். இத்தகைய 100 கோழிப் பண்ணைகள் (ஒவ்வொன்றும், 100 கோழிகள் கொண்டது) ஒன்று சேர்ந்து கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை அமைத்துக் கொண்டால், முட்டைகளைச் சேகரித்து விற்பனை செய்யவும், கால்நடை மற்றும் கூட்டுறவுத் துறைகளின் உதவிகளைப் பெறவும் தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் உதவியுடன், ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா மற்றும் நாட்டுடைமை ஆக்கப்பெற்ற வங்கிகளில் இருந்து கடன் உதவி பெறவும் எளிதாக இருக்கும். இத்தகைய கூட்டுறவுச் சங்கங்களை ஆண்டு ஒன்றுக்கு 150 வீதம் அமைத்துச் செயல்படுத்தினால், 1984-ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டில் 1,500 கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படும். இவைகளின் மூலம் தமிழ்நாட்டில் 1984-ஆம் ஆண்டின் முடிவில் நாள் ஒன்றுக்கு 90 இலட்சம் முட்டைகள் கிடைக்கும் என்பது உறுதி!

### 1,70,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்!

இத்தகைய கோழிப் பண்ணைகளை அமைத்து முட்டை உற்பத்தி செய்வதன் மூலம் தமிழ்நாட்டில் 1.5 இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதுடன், முட்டைகளை விற்கும் பணியில் 18,000 பேர்களுக்கும் (500 முட்டைகளை விற்பனை செய்ய ஒருவர் வீதம்) முட்டைகளைச் சேகரித்தல், விற்பனைக் கூட...களுக்கு அனுப்புதல் ஆகிய பணிகளில் 2,00... பேர்களுக்கும் (75 கோழிப்பண்ணைக்கு ஒருவ... வீதம்) ஆக மொத்தம் 1,70,000 பேர்களுக்... வேலை வாய்ப்புக் கிடைப்பது திண்ணம்.

மேலும், மேற்கூறியவாறு 1,50,00... கிராமக் கோழிப் பண்ணைகளை அமைத்தா... அவைகளுக்குத் தேவையான தீனியை உ... பத்தி செய்யும் வகையிலும் பல்வேறு ந... மைகள்—குறிப்பாக உழவர் பெருமக்களுக்கு... கிராமப்புற மக்களுக்கும் கிடைக்க விருக்கி...றன.

### மக்காச்சோளம் பயிரிட வாய்ப்பு

சாதாரணமாக முட்டையிடும் பெட்டை கோழி ஒவ்வொன்றுக்கும் நாளொன்றுக்... 100 கிராம் தீனி வீதம் கொடுக்க வேண்டு... தீனியை கோழிகள் உண்ணும்போது சேதார... ஏற்படுத்துவதையும் கணக்கில் எடுத்து... கொண்டால், சராசரியாக ஒரு கோழிக்கு ஒ... ஆண்டுக்கு 40 கிலோ தீனி தேவைப்படுகிற... ஆகவே, 100 கோழிகளைக் கொண்ட ஒ...வொரு கிராமக் கோழிப் பண்ணைக்கும் ஆ...டொன்றுக்கு 4 மெட்ரிக் டன் தீனி தேவை...படும். இந்த அடிப்படையில் கணக்கிடு... போது 1,50,000 கிராமக் கோழிப் பண்ணை...களுக்கும் ஆண்டொன்றுக்கு 6 இலட்ச... மெட்ரிக் டன் தீனி தேவைப்படுகிறது. இதி... பாதியை மக்காச் சோள தானியங்களாக... கொடுப்பது சிறந்தது. கோழித் தீனியில், பா...யளவுக்கு மக்காச் சோளத்தைப் பயன்படு...துவதாகக் கொண்டால் 1,50,000 கிராம... கோழிப் பண்ணைகளுக்கும் ஆண்டொன்றுக்...



[illegible] டன் மக்காச் சோளம் தேவைப் படும். ஆண்டு ஒன்றுக்கு 2 தடவை மக்காச் சோளம் பயிரிடுவதாகவும், ஏக்கருக்குச் சராசரியாக 2 டன் மக்காச் சோளம் விளைவதாக வும் வைத்துக் கொண்டால், 1,50,000 கிராமக் கோழிப் பண்ணைகளுக்கும் தேவையான மக்காச் சோளத்தை உற்பத்தி செய்ய 75,000 ஏக்கர் நிலம் தேவைப்படும்.

தற்பொழுது மக்காச் சோளச் சாகுபடி பரவி வந்தாலும், மக்காச் சோளத்தை விற்பனை செய்ய நல்ல வாய்ப்பு இல்லை என்று கூறுகிறார்கள். இக்குறையை கிராமக் கோழிப் பண்ணைகள் தீர்த்திடும் என்பதில் ஐயமில்லை. எனவே, கோழிப் பண்ணை, உழவர்கள் பயன் பெறவும் வழி ஏற்படுகிறது.

**சத்து மிகுந்த எரு**

மேலும், ஒவ்வொரு கிராமக் கோழிப் பண்ணையில் இருந்தும் ஒரு ஆண்டில் 2.5 மெட்ரிக் டன் கோழி எரு (சாணம்) கிடைக்கும் என்றும், 1,50,000 கோழிப் பண்ணைகளிலிருந்தும் மொத்தம் 3.75 இலட்சம் மெட்ரிக் டன் கோழி எரு கிடைக்கும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. ஒரு ஏக்கர் மக்காச் சோளத்திற்கு 5 டன் கோழி எரு விதம் இட்டால் மொத்தம் கிடைக்கும் 3.75 இலட்சம் மெட்ரிக் டன் கோழி எருவைக் கொண்டு 75,000 ஏக்கர் மக்காச் சோளத்திற்குத் தாராளமாக எருவிட இயலும். கோழி எருவில் (காய்ந்த நிலையில்) 0.92 சதத் தழைச்சத்தும், 1.88 சத மணிச்சத்தும், 0.60 சதச் சாம்பல் சத்தும் அடங்கியுள்ளதால், இரசாயன உரங்களின் விலை ஏற்றமாக உள்ள இந்த நேரத்தில், கோழி எருவைப் பயன்படுத்தி மக்காச்சோளம் பயிரிடுவது சிக்கனமாகவும், சிறந்த பலன் தரத்தக்கதாகவும் இருக்கும். எனவே, 75,000 ஏக்கரில் மக்காச் சோளம் பயிரிடுவதன் மூலம் உழவர் பெருமக்களுக்கு அதிக வருவாய் கிடைப்பதுடன், பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

**இலாபம்**

100 கோழிகளைக் கொண்ட கிராமக் கோழிப் பண்ணை ஒவ்வொன்றுக்கும் நல்ல கட்டடம், கோழிகள், மாற்றுக் கோழிகள் உட்பட எல்லாச் செலவுகளும் சேர்த்து 3 ஆண்டுக் காலத்திற்கு ரூபாய் 7,150 செலவு ஆகும் என்றும், முதலாண்டில் ரூபாய் 1,275 இலாபம் கிடைக்கும் என்றும், 2-வது, 3-வது ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் ரூபாய் 1,925 இலாபம் கிடைக்கும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், கிராமத்தில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு கோழி வீடு, கருவிகள், தீனி ஆகியவற்றைத் தயாரித்துக் கொண்டால் இலாபம் மேலும் அதிகம் ஆகும்!

[illegible] இடங்களில் முட்டையிடும் நிலைக்கு வந்த 100 கோழிகளை வளர்த்து, முட்டைகளை விற்பனை செய்வதன் மூலம், மாதம் ஒன்றுக்கு ரூபாய் 450-க்குக் குறையாமல் வருவாயும், ரூபாய் 125 முதல் ரூபாய் 150 வரை நிகர இலாபமும் பெற்று வருகின்றனர் என்றால் [illegible]!

இந்த அளவுக்கு 100 கோழிகளை வளர்க்க வசதியும் வாய்ப்பும் இல்லாதவர்கள் குறைந்தது 10 கோழிகளையாவது வீட்டின் பின்புறத்தில் குறைந்த செலவில்—ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி —வளர்த்திட முடியும். இதன் மூலம் நாளொன்றுக்குக் குறைந்தது 6 முட்டைகளாவது கிடைக்கும். அம் முட்டைகளில் சிலவற்றை குடும்பத்தினரின் உணவுக்குப் பயன்படுத்திக் கொண்டாலும், மீதியை விற்பனை செய்து வருவாய் பெற முடியும். இதனால் நம் உடல் நலத்தைப் பாதுகாத்துக் கொண்டு வலிவோடும், வனப்போடும், அறிவோடும், ஆற்றலோடும் விளங்க முடிவதுடன் முட்டை விற்பனை மூலம் நாளொன்றுக்குக் குறைந்தது 1 ரூபாய் வருவாய் பெற முடியும்.

எனவே, "கோழி வளர்த்தால் குபேரன் ஆகலாம்" என்ற புதுமொழிக்கு ஏற்ப, சமுதாயத்தின் அடித்தளத்திலே உள்ள குறைந்த வருவாய் உள்ளவர்கள், தங்கள் ஏழ்மையை போக்கிக் கொள்ளவும், ஊட்டச் சத்து மிகுந்த முட்டை, இறைச்சி ஆகியவைகளைப் பெறுவதற்கும் கோழி வளர்ப்பதே சிறந்த வழியாகும்!

—R. மாணிக்கம்.


## கிங் இன்ஸ்டிடியூட்

**சென்னை - 600032.**

**அறிவிப்பு**

சென்னை, கிண்டியில் உள்ள கிங் இன்ஸ்டிடியூட்டில், 1977-ஆம் ஆண்டு, ஜனவரி முதல் துவக்கப்படவிருக்கும் பரிசோதனைக்கூட நுட்பவியல் சான்றிதழ் பயிற்சியில் (Course of Certificate of Laboratory Technology) சேர்த்துக் கொள்வதற்கு, தமிழ்நாட்டைச் சார்ந்த, குறைந்தபட்சக் கல்வித் தகுதியாக ஆங்கிலம் மற்றும் விஞ்ஞான பாடங்களுடன் கூடிய புகுமுக வகுப்பில் தேர்வு பெற்ற, 18-க்கும் 25-க்கும் இடைப்பட்ட வயதுடையவர்களிடமிருந்து, விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இதற்கென வரையறுக்கப்பட்டுள்ள படிவத்திலேயே விண்ணப்பிக்க வேண்டும். 'இயக்குநர்' கிங் இன்ஸ்டிடியூட், கிண்டி, சென்னை-600032' அவர்கள் சார்பாக வாங்கிய—சென்னை - 600032-ல் மாற்றக் கூடிய—ரூபாய் ஒன்று மதிப்புடைய அஞ்சல் ஆணையைப் (போஸ்டல் ஆர்டர்) சுய முகவரி எழுதிய, போதிய அஞ்சல் தலை ஒட்டிய ஒரு உறையையும் இணைத்து, 'இயக்குநர் அலுவலகம், கிங் இன்ஸ்டிடியூட், கிண்டி சென்னை-600 032' என்ற முகவரிக்கு எழுதி, விண்ணப்ப படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். எல்லா இணைப்புகளும் அடங்கிய பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், இயக்குநர் அவர்களுக்கு—இயக்குநரின் சொந்தப் பெயரில் அல்ல—15—12—1976-க்குள் வந்து சேர வேண்டும்.

—(ஒ-ம்.) டாக்டர் எஸ். ஞானதேசிகன்.
இயக்குநர்.

கிங் இன்ஸ்டிடியூட்,
சென்னை-600 032,
நாள் : 2—11—1976. Advt.


# தீண்டாமை சமுதாயத்திற்குப் பெரிய அவமானம்!

—மகாத்மா காந்தி.

சென்னையில் ராஜதானி நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட, இதுவரையில் எங்கும் கேள்விப் படாத ஒரு வழக்குநமது அமுக்கப்பட்ட சகோதரர்களின் பரிதாபகரமான நிலைமையை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. ஓர் எளிய, தூய ஆடை உடுத்தியிருந்த பஞ்சமர் மிகுந்த பக்தி சிரத்தையுடன் எந்தச் சமயத்தையும் அவமதிக்கும் எண்ணமோ, எவர் மனத்தையும் புண்படுத்தும் கருத்தோ சிறிதும் இன்றி ஒரு கோயிலுக்குள் சென்றார். அவர் ஆண்டுதோறும் இந்தக் கோயிலினுள் சென்றதில்லையாயினும், தவறாமல் அதன் முன்சென்று வழிபாடு நடத்துவது வழக்கம். ஆனால் சென்ற ஆண்டில் பக்தி உணர்ச்சியில் தம்மையே மறந்துபோய் கோவிலுக்குள் புகுந்துவிட்டார். அர்ச்சகரும், இவருக்கும் மற்றவர்களுக்கும் வித்தியாசம் தெரியாமையால், இவர்கொண்டு வந்திருந்த பழம், பாக்கு ,வெற்றிலை முதலிய காணிக்கைகளைப் பெற்றுக் கொண்டார். ஆனால் இந்த பக்தர் சுய நினைவு பெற்றதும் வரக் கூடாத இடத்தில் தாம் வந்து நிற்பதை உணர்ந்தபோது பெருந் திகிலுற்று வெளியே ஓடத் துவங்கினார். ஆனால் இவர் யார் என்பதை அறிந்திருந்த சிலர், இவரை அப்படியே பிடித்துப் போலீசிடம் ஒப்புவித்துவிட்டார்கள். கோயில் அதிகாரிகளுக்கு நடந்துவிட்ட அபசாரம் தெரியவந்ததும் அவர்கள் வழக்கப்படி சம்புரோட்சணம் (தூய்மைச் சடங்கு) செய்தார்கள். இதையடுத்து விசாரணை நடந்தது. ஒரு ஹிந்து 'மாஜிஸ்ட்ரேட்' இவரைக் குற்றவாளியென்று முடிவு செய்து தன் சமயத்தை அவமதித்த குற்றத்திற்காக இவர் ரூ. 75 அபராதம் செலுத்த வேண்டும் அல்லது ஒரு மாதம் கடுங்காவல் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தார். இதை எதிர்த்து அப்பீல் செய்யப்பட்டது. அப்போது இரு தரப்புக்களிலும் விஸ்தாரமாக வாதப் பிரதிவாதங்கள் நடந்தன. எல்லாவற்றையும் கேட்ட நீதிபதி தீர்ப்புக் கூறுவதை ஒரு நாள் ஒத்திப் போட்டார்! பிறகு அளித்த தீர்ப்பில் கீழ்க் கோர்ட்டின் முடிவு ரத்து செய்யப்பட்டதென்றால், அதற்குக் காரணம் அந்த ஏழைப் பஞ்சமனுக்கும் கோயிலில் புக உரிமை யுண்டு என்று நீதிபதி முடிவு செய்ததனால் அல்ல; கீழ்க் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்த வாதிகள் குற்றம் செய்ததாகக் கூறப்பட்டவர் சமயத்தை அவமதித்ததை ருஜுப் படுத்தத் தவறிவிட்டதனாலேயே ஆகும். இதை நீதியோ, உண்மையோ, சமயமோ, நன்னடத்தையோ பெற்ற வெற்றியென்று கருதுவதற்கில்லை.

அப்பீலில், வழக்கு பஞ்சமனுக்குச் சாதகமாய் முடிந்ததிலிருந்து நாம் பெறக் கூடிய சமாதானம், அவர் கடவுளை தரிசிக்கும் உற்சாகத்தில் தாம் கோயிலில் புகக் கூடாதவர் என்பதை மறந்துவிட்ட குற்றத்திற்காகச் சிறைத்தண்டனை அனுபவிக்க நேராது என்பது ஒன்றே. ஆனால் அவரோ அல்லது அவரைப் போன்ற வேறு பஞ்சமர்களோ மீண்டும் கோயிலில் புகத் துணிவார்களானால் அவர்களைத் தாழ்ந்தவர்கள் என்று கருதி வெறுப்போர் அவர்களை சித்திரவதை செய்யாவிட்டாலும், மிகவும் கடுமையான தண்டனைக்குள்ளாக்காமல் விடார் என்பது நிச்சயம்.

ஹிந்துக்களாகிய நாம் நம் சமயத்தைச் சேர்ந்தவர்களிலேயே ஐந்தில் ஒரு பகுதியினரை நாய்களுக்கும் கேடாக நினைத்து நடத்தி வருவது முன்னுக்குப் பின் முரணானது என்பதை ஒப்புக்கொள்ள மறுக்கிறோம். நாய்களைத் தீண்டத் தகாதவை என்று நாம் கருதவில்லை. இந்தக் காலத்தில் நம்மில் சிலர் வீட்டின் வரவேற்பு அறையிலேயே அவைகளை மிகவும் செல்லமாக வைத்துக் கொள்வதில் பெருமைப் படுகிறோம்.

இந்தக் கொடுமையை அகற்ற எவ்வளவோ செய்யப்பட்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் கோயிலுள் புகுந்ததற்காக ஒருவர் மீது வழக்குத் தொடரப்பட்டும், அமுக்கப்பட்ட வகுப்பாருக்குக் கோயிலுக்குப் போய் கடவுளைத் தரிசிப்பதற்கும், பொதுக் கிணறுகளில் நீர் சேந்துவதற்கும், தடையின்றி நாட்டுப்புறப் பள்ளிகளுக்குத் தம் குழந்தைகளைப் படிக்க அனுப்புவதற்கும் உரிமை மறுக்கப்பட்டு வரும் வரையில் நடந்திருப்பதை மிகவும் குறைவு என்றே சொல்ல வேண்டும்.

ஆனால் இந்த வழக்கிலும் நாம் திருப்திபடக்கூடிய அம்சங்கள் சில இல்லாமலில்லை. கீழ்க் கோர்ட்டில் அளிக்கப்பட்ட தண்டனை மேல் கோர்ட்டில் ரத்து செய்யப்பட்டது ஓரளவு திருப்திபட வேண்டிய விஷயம்தான். ஆனால் அதைவிட மிகவும் அதிகத் திருப்தியளிக்கும் விஷயம், இவ்வளவு உயர் சாதி இந்துக்கள் அந்த ஏழைப் பஞ்சமரின் கட்சியில் நின்று அப்பீல் செய்து அவருக்காகப் போராட முன் வந்ததாகும். இவ்வாறு தண்டிக்கப்பட்டவருக்கு உதவ முன் வந்திராவிட்டால், அவர் பேசாமல் சிறைக்குச் செல்லவே நேர்ந்திருக்கும் ; அதை எவரும் கவனித்திருக்கவும் மாட்டார்கள்.

படித்த ஹிந்து ஒவ்வொருவரும் தீண்டாவதவனின் நண்பனாக இருந்துகொண்டு சமயத்தின் பெயரால் நடந்து வரும் இந்தக் கொடுமையிலிருந்து அவனைத் தப்புவிப்பதைத் தன் கடமையென்று கருதி நடந்தால் நன்றாயிருக்கும். **ஒரு பஞ்சமன் ஒரு கோயிலில் புகுவது அல்ல, அவன் புகாது தடுக்கப்படுவதுதான் சமயத்திற்கும்,சமுதாயத்திற்கும் பெரிய அவமானம்.**

**(ஆதாரம் : யங் இந்தியா, 14-1-1926)**




# கொடுமை! கொடுமை!! கொடுமை!!!

**ஜவஹர்லால் நேரு**

சத்தியாக்கிரக நாளில் நாடெங்கும் கடையடைப்பும், வேலை நிறுத்தமும் நடைபெற்றன. ஒவ்வொரு நகரத்திலும் பெருங்கூட்டங்கள் நடந்தன. டெல்லியிலும் அமிர்தசரசிலும் அப்படிக் கூடிய கூட்டங்களின் மீது போலீசாரும் போர்வீரர்களும் துப்பாக்கியால் சுட்டனர். பலர் மாண்டனர். இதைக்கண்டு அமிர்தசரசிலும், அகமதாபாத்திலும் பீறிட்டு எழுந்த மக்கள் பலாத்காரச் செயல்களில் ஈடுபட்டனர். பஞ்சாப்பில் அமிர்தசரசு நகரில் ஜாலியன் வாலாபாக் தோட்டத்தில் நூற்றுக்கணக்கான மக்களை ஆங்கிலேயர் சுட்டுக் கொன்றனர். பஞ்சாப்பில் இராணுவச் சட்டத்தின் கொடுமை தாங்க முடியாததாக இருந்தது. பஞ்சாப் தனியாகத் துண்டிக்கப்பட்டது. பஞ்சாப்பிலிருந்து எத்தகைய செய்தியும் வெளிவராமல் தடுத்துவிட்டனர். யாரும் அங்குச் செல்ல முடியாது; அங்கிருந்தும் யாரும் வர முடியாது.

இக்குழப்பத்திலிருந்து தப்பி வந்த ஓரிருவரும் நடந்ததைத் தெளிவாகக் கூற முடியாத அளவுக்கு அதிர்ச்சியடைந்திருந்தனர். பஞ்சாப்புக்கு வெளியே இருந்த நாங்கள் அனைவரும் கலங்கினோம். ஏதேனும் செய்தி கிடைக்காதா என்று ஏங்கிக் கிடந்தோம். பஞ்சாப்பில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நேரில் சென்று இராணுவச் சட்டத்தை எதிர்க்க விரும்பினோம். ஆனால் நாங்கள் அங்குச் செல்ல முடியாமல் தடுக்கப்பட்டோம். இதற்கிடையில் காங்கிரசின் சார்பில் நிவாரண, விசாரணை ஏற்பாடுகள் விரைவாக நடைபெற்றன.

இராணுவச் சட்டம் நீக்கப்பட்டதும் முக்கியமான காங்கிரசுக்காரர்களும் மற்றவர்களும் பஞ்சாப்புக்குச் சென்று நிவாரண, விசாரணை வேலைகளில் ஈடுபட்டனர். நிவாரண வேலைக்குப் பண்டித மதன்மோகன் மாளவியாவும் சுவாமி சிரத்தானந்தாவும், விசாரணை வேலைக்கு என் தந்தையாரும், சி. ஆர். தாஸும் பொறுப்பாளிகளாக இருந்தனர். விசாரணை வேலையில் காந்தியடிகளும் மிகுந்த கருத்துச் செலுத்தினார்; அவ்வப்போது தக்க அறிவுரைகளை வழங்கி வழிகாட்டினார். அமிர்தசரசுக்கு தேசபந்து தாஸ் பொறுப்பாளராக இருந்தார். அவருக்கு எல்லா வகைகளிலும் துணைபுரிய என்னை அனுப்பி வைத்தார்கள். நான் அவரோடு சேர்ந்து பணியாற்றியது இதுவே முதல் தடவை. இது எனக்கு மிகச் சிறந்த அனுபவம். இவ்வனுபவத்துக்குப் பின், அவர், பால் நான் கொண்டிருந்த அன்பும் மதிப்பும் வளர்ந்தன. காங்கிரசின் விசாரணை அறிக்கையிங் வெளியிடப்பெற்ற கொடிய ஜாலியன் வாலாபாக் படுகொலை பற்றிய ஆதாரங்கள் எல்லாம் நாங்கள் சேகரித்தவையே. படுகொலை நடந்த தோட்டத்திற்கே பலமுறை நேரில் சென்று ஒவ்வொன்றையும் நுணுக்கமாக ஆராய்ந்து அவ்வாதாரங்களைத் திரட்டினோம்.

ஜாலியன் வாலா பாக்கில் கூட்டத்தினர் வெளியேறக்கூடிய வழிகள் பல இருந்தன; அவ்வழிகளின் வழியாக அவர்கள் கலைந்து சென்று கூட்டம் முழுதும் கலையட்டும் என்ற கருத்தின்பேரில் தான் படைத்தலைவர் 'டயர்' நீண்ட நேரம் தொடர்ந்து கூட்டத்தைத் துப்பாக்கியால் சுட்டார் என்று 'எட்வர்டு தாம்சன்' என்பவர் சொன்னாராம். அப்படியே அவர் கருதியிருந்தபோதிலும் உண்மையிலேயே வெளியேறும் வழிகள் சில இருந்தபோதிலும் அவர்கள் பொறுப்புக் குறைந்து விடுமா? அவருக்கு அத்தகைய கருத்துத் தோன்றியது புதுமையாகத்தான் இருக்கிறது. அவர் நின்றிருந்த உயரமான இடத்திலிருந்து பார்த்தால் ஜாலியன் வாலா பாக்கின் இடம் முழுதும் நன்கு தெரியுமே! அது சுற்றிலும் பல அடுக்கு வீடுகளால் சூழப் பெற்றது என்பதும் நன்கு தெரியுமே! ஒரே ஒரு பக்கத்தில் மட்டும் நூறு அடி தூரத்துக்கு வீடொன்றும் இல்லை. ஆனால் அப்பக்கத்தில் சுமார் ஐந்தடி உயரமுள்ள சுவர் ஒன்று இருந்தது. ஆனால் இரக்கமற்ற டயரும் அவருடைய படைவீரர்களும் ஓயாது சுடவே, அங்குக் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களும் அச்சுவரண்டை ஒதுங்கினர்; அச்சுவரின்மேல் ஏறித் தப்பியோட முயன்றனர். அதற்கும் விடவில்லை டயர். அவர்கள் தப்பிச் செல்வதைத் தடுக்க அச்சுவரை நோக்கிச் சுட்டனர். சுவரின்மேல் குண்டுகளின் அடையாளங்கள் பதிந்திருந்தது இதற்கு சான்றாக உள்ளன. முடிவு என்ன? அச்சுவரின் இருமருங்கிலும் குன்றுகளனைய பிணக் குவியல்கள் குவிந்தன. கொடுமை! கொடுமை!

அவ்வாண்டின் (1919) முடிவில் ஒருநாள் நான் அமிர்தசரசிலிருந்து டெல்லிக்குச் செல்ல இரவு வண்டியில் ஏறினேன். நான் ஏறிய பெட்டியில் மேல் பலகை ஒன்றைத் தவிர பிற இடங்களிலெல்லாம் பிரயாணிகள் படுத்திருந்தனர். நான், காலியாக இருந்த பலகையின் மேல் ஏறிப் படுத்துக் கொண்டேன். காலையில் தான் கண்டேன். பெட்டியில் இருந்தவர்கள் அனைவரும் இராணுவ அதிகாரிகள் என்று. அவர்கள் ஒருவரோடொருவர் உரையாடிக் கொண்டு வந்தார்கள். அவர்கள் உரக்கப் பேசியதால், அவர்கள் பேசியது எனக்குத் தெளிவாகக் கேட்டது. அவர்களில் ஒருவர் தாம் ஏதோ பெரிய காரியத்தைச் சாதித்து விட்டவர் போன்று வெற்றி முழக்கமிட்டார். அவர்தான் ஜாலியன் வாலாபாக் படுகொலை வீரர் டயர் எனக் கண்டேன். அவர் ஜாலியன் வாலாபாக் படுகொலையை விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட 'ஹண்டர்' குழுவினர் முன் சாட்சியம் கூறிவிட்டு, லாகூரிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தார். அவர், தம் அமிர்தசரசு அனுபவத்தைத் தான் அப்படிப் பெருமையாகப் பேசிக் கொண்டு வந்தார். நகரம் முழுவதும் அவருடைய கையில் இருந்ததாம். கிளர்ச்சி செய்யும் மக்கள் நிறைந்த அந்நகரையே எரித்துச் சாம்பலாக்க வேண்டும் என்று எண்ணினாராம். ஆனால் இரக்கம் தோன்றி அதை அழிக்காமல் விட்டுவிட்டாராம். அவர் இவ்வாறு சிறிதும் மனிதத் தன்மையே இல்லாத பாணியில் பேசிக் கொண்டு வந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தேன். ஆடம்பர உடையணிந்திருந்த டயர், டெல்லி நிலையத்தில் வண்டி நின்றதும் இறங்கினார்.

பஞ்சாப் விசாரணையில் காந்தியடிகள் மிகுதியாகக் கலந்து கொண்டார். அவருடைய கருத்துக்கள் குழுவினருக்குப் புதுமையாகப்பட்டன. குழுவினர் அவைகளை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் அவைகளை அவர்கள் ஏற்றுக் கொள்ளும் அளவிற்கு வாதித்தார். அவருடைய அறிவுரைகள் எவ்வளவு சரியானவை என்பதைப் பின்னர் நடந்த நிகழ்ச்சிகள் உணர்த்தின. அவருடைய அரசியல் நுண்ணறிவில் எனக்கு நம்பிக்கை பிறந்தது.




# ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சி

டாக்டர் பா. நடராஜன்

கிராமங்களை இறைவன் படைத்தான்; நகரங்களை மனிதன் படைத்தான். இது தொன்று தொட்டு வரும் ஒரு பழமொழி.

கிராமப்பணியை இறைப்பணியாகவே காந்தி அடிகள் கருதினார். தரித்திர நாராயணர்கள் நிறைந்தது கிராமங்கள். தரித்திர நாராயணர்க்குச் செய்யும் தொண்டு தெய்வத் தொண்டு எனக் கொண்டார்.

கிராமப்புறவாழ்வைக் காண்பதிலே ஆன்மீகமும், பொருளாதாரமும், அறமும், நல்வாழ்வும் ஒருங்கே அமைந்துள்ளது.

நமது நாட்டு மக்களில், 80 சதத்தினர் கிராமங்களில் வாழ்கின்றனர். 70 சதத்தினர் உழவையும், உழவு சார்ந்த பணிகளையும் வாழ்க்கைக்கு ஆதாரமாகக் கொண்டுள்ளனர்.

தேசிய வருமானத்தில் ஐம்பது சதம் கிராமங்களில் உற்பத்தியாகும் பொருள்களிலிருந்தும், உழைப்பிலிருந்தும் எழுவதே. உண்ண உணவு, உடுக்க உடை, வாழ வீடு ஆகிய இன்றியமையா மனிதத் தேவைகளுக்கெல்லாம் கிராமங்களில் உற்பத்தியாகும் மூலப்பொருள்களே முதலாக இருக்கின்றன. தொழிலுக்கும், வாணிபத்துக்கும் கிராமமே உயிர் நாடியாக இயங்குகிறது.

ஆயினும் கிராம மக்கள் இன்னும் கொடிய வறுமை நிலையிலேயே வாழ்கின்றார்கள். வறுமைக் கோடு என்று பொருளாதார அறிஞர் வகுக்கும் 40 ரூபாய் மாத வருமான எல்லைக்கும் கீழேயே, 40 சத கிராம மக்கள் வாழ்கின்றனர். ஐந்துஐந்தாண்டுத் திட்டங்களால் கிராமங்கள் பலவற்றில் மின்சார வசதி, பாசன வசதி, போக்குவரத்து வசதி போன்றவை பெருகியிருந்தும், பசுமைப் புரட்சி பல பகுதிகளில் விளைச்சலைப் பெருக்கத் துணை செய்தும், கிராமப்புற வறுமை நீங்காத, நிலைத்த, கண்ணை உறுத்தும் உண்மையாகவே இருந்து வருகிறது.

ஆப்ரகாம் லிங்கன் கூறுவார்: "பாதிப்பகுதியில்சுதந்திரமாகவும் பாதிப் பகுதியில் அடிமையாகவும் எந்தச் சமுதாயமும் வாழ முடியாது. அதுபோல் ஒரு நாட்டின் ஒரு பகுதி ஏழ்மையாகவும், மற்றப் பகுதி வளப்பமாகவும் என்றுமே தொடர்ந்து நிலைபெற முடியாது. கிராமப்புறம், நகர்ப்புறம் என்பவை இருவேறு உலகத்து இயற்கை என்று நாம் பிரச்சினையை ஒதுக்க முடியாது."

என்று கிராமப்புற வாழ்வு இந்தத் தாழ்வு நிலையிலிருந்து மீட்சி அடையுமோ அன்றுதான் நமது சுதந்திரம் பொருள் கொண்டதாகும். காந்தியடிகள் இதனை இடையறாது போதித்து வந்தார். இன்று நமது பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் அந்தப் போதனையைச் செயற்படுத்த இருபது அம்சத் திட்டத்தை வகுத்துத் தந்தார். இருபது அம்சத் திட்டத்தில் பதினைந்து அம்சங்களுக்கு மேல் கிராம நல்வாழ்வுக்கு நேரடியாக வழி வகுக்கின்றன.

இருபது அம்சத் திட்டத்தை நமது பிரதமர் வகுத்ததைத் தொடர்ந்து ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தை நமது நிதி அமைச்சர் சுப்பிரமணியம் சென்ற மத்திய நிதி வரவு செலவுக் கூட்டத்தில் பாராளுமன்றத்தில் அரங்கேற்றினார்.

இதுகாறும் கிராமப் புது வாழ்வுக்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளெல்லாம் அங்குமிங்குமாக அவ்வப்போதாக நிலச்சீர் திருத்தம், கிராமக் கடனுதவி, கிராமத் தொழில் வளர்ச்சி, பஞ்ச நிவாரணம், வெள்ள நிவாரணம் என்று மேற்கொள்ளப்பட்டவை. எல்லாத் துறையினரும் ஒருங்கு சேர்ந்து ஒரு திட்டத்தை வகுத்து, கிராம வறுமையை ஒருமுகமாகச் சந்திக்க எந்தப் பெரு முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. நிதி அமைச்சர் சுப்பிரமணியம் இந்த ஒருமுகத் தாக்கல் நாடறிய முன் வைத்தார்.

இந்தத் திட்டத்தின் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையான சில புதுமைக் கருத்துக்களை நாம் நன்கு தெரிந்து கொள்ளுதல் வேண்டும். அப்படித் தெரிந்து கொள்வதே திட்ட வெற்றிக்கு உறுதி அளிக்கும்.

மேலைநாடுகளின் பொருளாதார வளர்ச்சியெல்லாம் வரலாற்றுக் கண்ணோடு பார்ப்போமானால் சென்ற இருநூறு, இருநூற்றைம்பது ஆண்டுகளில் பெறப்பட்டதேயாகும். பல நூறாண்டுகளாக அந்த நாடுகள் வறுமைப்படுகுழியிலும், அநாகரீக அந்தகாரத்திலும் அமிழ்ந்திருந்தன. அந்த நிலையிலிருந்து அவை விழித்து, விரைந்தெழுந்து பீடுநடை போடத் துணை செய்தவை இரண்டு. ஒன்று சேமிப்பு, மற்றது விஞ்ஞானம். இந்த இரண்டையும் கிராமப்புற வாழ்வில் புகுத்துவதுதான் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படை ஏவுகணைகள் எனலாம்.

சேமிப்பைப் பெருக்கும் கருவி பாங்கு. ஆகவே பிராந்திய வளர்ச்சி பாங்குகளை நிதி அமைச்சர் முதலில் நிறுவ ஏற்பாடு செய்தார். ஐம்பது கோடி கிராம மக்களுக்கு ஐம்பது கோடி முதலீடு செய்து, ஐம்பது பிராந்திய கிராம பாங்குகளைத் தொடங்குவதென்றும், ஒவ்வொரு பாங்கும் ஏராளமான கிளைகளை வரித்து கிராமப் பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டும் சேமிப்பு நிதியைத் திரளச் செய்வதென்றும் நிதி அமைச்சர் வகுத்தது வளர்ச்சித் திட்டத்தின் முதற்படியாகும்.

கிராமப் புறங்களில் இன்று வகைவகையாக வங்கிகள் வந்துள்ளன. கூட்டுறவு வங்கிகள், வணிக வங்கிகள், தேசியக்கிளை வங்கிகள், நில அடமான வங்கிகள்—என்றெல்லாம். ஆனால் எத்தனை வந்தாலும், என்னதான் சொன்னாலும் அவைகள் அடிநிலையிலிருக்கும் கிராம மக்களுக்குப் போதிய பயனளிக்க முடியுமா என்பது கேள்வி. நிலமில்லாத உழவர்கள், உழவுத் தொழிலாளர்கள், சிறு உழவர்கள் போன்றவர்கள் போனால், சொத்து ஜாமீன் என்ன என்று வங்கி அலுவலாளர்கள் கேட்கிறார்களே தவிர, உன் உழைப்பு என்ன, உற்பத்தித் திறன் என்ன, குடும்பத்தில் ஆணும் பெண்ணும் சிறுவர் சிறுமிகளாக எத்தனை பேர் வேலை செய்கிறீர்கள், மொத்தத்தில் என்ன சம்பாதிக்கிறீர்கள், மீன்பிடித்தல், கோழி வளர்த்தல், பன்றி வளர்த்தல், மாடு வளர்த்தல் போன்ற வேறு துணைத் தொழில்களைச் செய்கின்றீர்களா, அவற்றிலிருந்து என்ன வருமானம் வருகிறது என்றெல்லாம் உற்பத்தித் திறனை மையமாக வைத்து அடித்தளத்திலிருக்கும் கிராம மக்களுக்குக் கடன் வழங்கப் பல வங்கிகள் முன்வருவதில்லை. ஏழைகளை இந்த வங்கிகள் அணுகுவதில்லை. இந்த வங்கிகளை ஏழைகளும் அணுகுவதில்லை, அச்சத்தால், அத்தனை படாடோபமாக பல வங்கி அலுவலகங்கள் குடிசைகள் பரவிய கிராமப்புறங்களிலே காட்சி தருவதால்!

ஆகவேதான் கிராமச் சமுதாயத்தில் அடிமட்டத்திலிருப்பவர்களுக்கு ஆதரவாக இந்த பிராந்திய கிராம வங்கிகள் முதலில் தொடங்கப் பெற்றன. ஐம்பதில் 33 வங்கிகள் இவ்வாறு இதுவரையிலும் தொடங்கப் பெற்றுள்ளன. தமிழகத்திலும் ஒரு வங்கி அண்மையில் தொடங்கப்படுவதாகச் செய்தி வந்துள்ளது.

இந்த பிராந்திய கிராமப்புறப் புது வங்கிகள் வெறும் கடன் கொடுக்கும் நிறுவனங்களல்ல. கிராமங்களில் என்னென்ன புதுத் தொழில்களைத் தொடங்குவது, அவற்றிற்கு வேண்டிய யோசனைகளைக் கூறுவது, அவற்றை அமைக்க வேண்டிய உதவிகளைச் செய்வது என்று பற்பல வகையில் கிராமத்து மக்களுக்கு உறுதுணையாக அமைந்து கிராம வளர்ச்சி கேந்திரங்களாகச் செயல்படும். கிராமத்தில், அடித்தளத்தில் வாழும் முதுகுடி உழைப்பாளர்க்கு, பொருளாளராய், நண்பனாய், வழி காட்டியாய் அவை அமைந்து கிராம மக்களின் உற்பத்தியை மிகுத்து, வருமானத்தைப் பெருக்கி சேமிப்பை வளர்க்கத் துணை செய்யும்.

இவ்வாறு சேமிப்பு முனையில் வறுமையை எதிர்த்த பின்னர் வளர்ச்சிக்கு மற்றொரு ஏவுகணையாக அமையும் விஞ்ஞானத் துறையை இத்திட்டம் கவனிக்கிறது.

நகர்ப்புற இயந்திரத் தொழில்களில் விஞ்ஞானமும், தொழில் நுட்பமும் ஊடுருவி, சென்ற முப்பதாண்டுகளில் நமது நாட்டை அணு சகாப்தத்துக்கும் விண்வெளிப்பயண நிலைக்கும் கொண்டு வந்துவிட்டது. ஆனால் இந்த விஞ்ஞானத் தொழில்நுட்பத்தின் வேகம் கிராமப் பொருளாதாரத்தை இன்னும் வேகத்தோடு தாக்கியதில்லை. தொன்றுதொட்டு வரும் கைவினைத் திறன் எத்தனை சிறந்ததாயினும் விஞ்ஞானத் தொழில்நுட்பத் தாக்கலினாலேயே கிராமப் பொருளாதாரத்தில் ஒரு புரட்சியைக் காணலாகும் என்பது வரலாறு கண்ட உண்மை.



சென்ற சிலமாதங்களுக்கு முன்பு வால்டயரில் கூடிய விஞ்ஞானிகள் மகாநாடு இதைச் சிந்திக்கலாயிற்று. பின்னே நடந்த விவசாயப் பல்கலைக் கழகங்களின் மகாநாட்டுக்கு விடுத்த செய்தியில் நிதி அமைச்சர் இதை வற்புறுத்துவாராயினார். இதன் பயனாக ஒவ்வொரு விவசாயப் பல்கலைக் கழகமும் ஒரு மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்து, அங்கே எவ்வாறு உழவிலும், தொழிலிலும் கிராமப்புறங்களில் விஞ்ஞானத் தொழில் நுட்பத்தைப் புகுத்துவது என்பதை ஆராய முற்பட்டுள்ளன. தனி விஞ்ஞானக் குழுக்குள் அமைக்கப் பட்டு வருகின்றன. உழவு விஞ்ஞான கேந்திரம் என்றும் தொழில் விஞ்ஞான கேந்திரம் என்றும் அமைப்புகளைக் கண்டு மாவட்ட ஆட்சியாளர் தலைமையில் இவற்றின் முடிவுகளை இணைத்துச் செயல்பட ஆட்சி அமைப்பு ஒன்றையும் நிறுவி வருகிறார்கள். கோயமுத்தூர் விவசாயப் பல்கலைக்கழகம் இந்த முயற்சியில் முன்னோடியாக நின்று தருமபுரி மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்து அந்த மாவட்டத்தில் அமைந்து கிடக்கும் நீர்வளம், நிலவளம், மனிதவளம் ஆகியவற்றை மதிப்பீடு செய்து வருகின்றது. சமூகத் தொண்டர் அமைப்பு ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. இதில் பஞ்சாயத்து நிறுவனங்கள், இளைஞர் சங்கங்கள், மாதர் சங்கங்கள் போன்றவை பங்கு கொள்வதாக இருக்கின்றது. ஆட்சிக் குழு, நிதி திரட்டுதல், விலைவாசி நிர்ணயித்தல், கடன் வழங்குதல், விற்பனைக்கு வழி காணுதல் ஆகியவற்றை மாவட்ட ஆட்சியாளர் மேற்பார்வையில் செய்து முடிக்கும்.



இவ்வாறாக ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் உருப் பெற்று, செயல்படத் தொடங்கி விட்டது. இதுபோன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் தொடர்ந்து இத்திட்டம் அமலாக்கப்படும் போது கிராமப் பொருளாதார புரட்சி. வேகம் பெறும் என்று உறுதியாகக் கூறலாம். சேமிப்பு, விஞ்ஞானத் தொழில்நுட்பம் ஆகிய இரண்டினையும் வலது காலும் இடது காலுமாகக் கொண்டு ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம், காந்தி அடிகள் கண்ட கிராம மறுமலர்ச்சிக் கனவை நனவாக்குவதாக!

(நன்றி: சென்னை வானொலி நிலையம்)

## கல்வி காட்ட வேண்டிய வழி

நமது புலன்களின் திறனைக் கண்டுபிடித்து ஏற்று, ஆக்கப்பூர்வமான செயல்களில் ஈடுபடுவதற்கான ஒரு பயிற்சியை அளிக்கிறது கல்வி. ஒருவர் சுயமாக முன் வந்து பொறுப்பை ஏற்றுக் கொள்ள விருப்பம் தெரிவிப்பதைக் குறிக்கும் விதத்தில் மனமுதிர்ச்சி அடைய, கல்வி, வழி காட்ட வேண்டும். ஒத்துழைப்பு உணர்வு, மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்ற தன்மை, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களில் ஈடுபட வேண்டும் என்ற ஓர் உணர்வு ஆகியவை கல்வி கற்பதன் மூலம் மனத்தில் ஏற்பட வேண்டும்.

—இந்திரா காந்தி.

# வேகத்தைத் தடுப்போம்!

—எஸ். எம். நாராயணன்,
ஐ.என்.டி.யு.சி.

வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன் பசியினு லிளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறு தயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின் றோரென்
நேருறக் கண்டுளந் துடித்தேன்
ஈடின்மா னிகளா யேழைக ளாய்நெஞ்
சிளைத்தவர் தமைக்கண்டே யிளைத்தேன்.

இவ்வாறு இராமலிங்க அடிகள் பாடினார்.

பெற்றோர்களுடன் சிறுவர் சிறுமியர்களும் சேர்ந்து வேலை செய்வதையும்; தனியாகச் சிறுவர் சிறுமியர் வேலை செய்வதுதான் தங்கள் வயிற்றுப் பசியைத் தீர்த்துக் கொள்ள வேண்டிய நிலையைக் கண்டு மனம் வருந்தி, "இவர்களுக்குப் படிப்பைத் தர வேண்டும். வறுமையில் வாடும் இவர்கள் படிப்பை நாடி வரமாட்டார்கள். கல்வியைத் தேடும் சிந்தை, இவர்களுக்கு வர முடியாது. எனவே, கல்வி இத்தகைய ஏழைகள் இருக்கும் இடந் தேடிப் போக வேண்டும்'' என்று மைசூர் மன்னருக்கு துறவி விவேகானந்தர் கடிதம் எழுதினார்.

''வயிற்றுக்குச் சோறிட வேண்டும்—இங்கு
வாழும் மாந்தர்க்கெல்லாம்''

என்று பாரதி கூறினான்.

''தனி ஒருவருக்கு உணவில்லை யெனில்
ஜெகத்தினை அழித்திடுவோம்''

என்று கர்ஜித்தானவன்.

''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக வுலகியற்றி யான்''

என்றார் வள்ளுவர்.

ஏற்பாரும், ஈவாரும் இல்லாத கம்பன் கண்ட ராமராஜ்யம் ஏற்பட வேண்டுமென்று மகாத்மா கனவு கண்டார். அதற்காகவே சுயராஜ்யம் என்றார் அவர்.

ஜனநாயகம் வேரூன்ற சமதர்மம் ஏற்பட வேண்டும். சமதர்மம் இன்றி ஜனநாயகம் நிலைக்காது. ஜனநாயகம் இன்றிச் சமதர்மம் வராது. வறுமையில் வாழும் மக்கள் சரியான ஜனநாயகத்தை உருவாக்க முடியாது. பிறரை எதிர்பார்த்து வாழும் நிலையில் உள்ளவர்கள் சரியான ஜனநாயகத்தை உருவாக்கவும் காப்பாற்றவும் முடியாதென்றார், மனிதருள் மாணிக்கம் பண்டித ஜவஹர்லால் நேரு.

''அனைவருக்கும் உணவு, கல்வி, வேலை, வைத்திய வசதி, இருக்க இடம், உடுக்க உடை, வேலை செய்ய முடியாதோருக்கு அரசுப் பாதுகாப்பு, இவைகளைத் தந்தாக வேண்டும்'' என்றார் ஏழை பங்காளன் காமராஜர்.

இத்தனை பெரியவர்களும், மகான்களும், மகாத்மாக்களும் சொன்னதை யெல்லாம், நாம் நிறைவேற்ற வேண்டுமென்றால் திட்டங்களைத் தீட்ட வேண்டுமல்லவா?

திட்டங்களைத் தீட்டும் போது யாருக்காகத் திட்டமிடுகின்றோம் என்பது தெரிய வேண்டும். எத்தனை பேருக்குத் திட்டமிடுகின்றோம் என்றும் தெரிய வேண்டும்.

10 பேர் பிரயாணம் செய்யக்கூடிய ரயில் பெட்டியில் 100 பேர் பிரயாணம் செய்வது எப்படி?

4 பேர் வசிக்கக்கூடிய வீட்டில் 40 பேர் வசிப்பது எப்படி?

நடைபாதையில் எல்லாம் மக்கள் வசிப்பதைப் பார்க்கிறோம்.

''எல்லாருக்கும் வீடு தருவது'' என்று ஒரு திட்டமிடுவோமானால், திட்டம் நிறைவேறுவதற்கு முன், தேவை இரண்டு மடங்காக உயர்ந்துவிடுகிறது.

திட்டங்களைப் போட்டோம். உணவு உற்பத்தியைப் பெருக்கினோம். தொழிற்சாலைகளைக் கட்டினோம். நாளுக்கொரு தொழிற்சாலை என்ற கணக்கில் கட்டினோம். பொருள் உற்பத்தியைப் பெருக்கினோம். ஏராளமான கல்விச் சாலைகள் ஏற்படுத்தினோம். வீடுகளைக் கட்டினோம். இருந்தபோதும், அனைவருக்கும் போதிய உணவு இல்லை. வேலையில்லாத் திண்டாட்டம் தீரவில்லை. குடியிருக்க வீடில்லை. பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் இடமில்லை. ஆஸ்பத்திரியில் இடமில்லை.



தொழிற்சங்க அலுவலகங்களில் இன்று வரக்கூடிய கோரிக்கைகள் எல்லாம் பெரும்பாலும் ''மகனுக்கு வேலை வேண்டும், மகளுக்கு வேலை வேண்டும். மருமகனுக்கு வேலை வேண்டும்'' என்பதே!

இன்றுள்ள நிலை இப்படியே போகுமானால், ஒரு வருடத்திற்கு 12,500 புதிய பள்ளிக்கூடங்களைக் கட்டியாக வேண்டும்.

நான்கு இலட்சம் ஆசிரியர்களை உருவாக்க வேண்டும்.

25 இலட்சம் வீடுகளைக் கட்டியாக வேண்டும்.

40 இலட்சம் பேருக்குப் புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும். இதெல்லாம் சாத்தியம்தானா என்பதை எண்ணிப் பார்த்த பிறகுதான், வளர்ந்து வரும் ஜனத்தொகையின் வேகத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்கிற முடிவுக்கு அரசு வந்தது.

உலகத்தில் 2.4 சதமான நிலப்பரப்பு உள்ள நமது நாட்டில், உலக ஜனத்தொகையில் 15 சதம் இருக்கிறது. 1976 ஜனவரி முதல் தேதியில் 60 கோடி மக்கள் இருப்பதாக கணக்குச் சொல்லுகிறது. சுதந்திரம் வந்த பிறகு 25 கோடிப் பேர் அதிகமாகியுள்ளனர். இது நமது நாட்டைப் போல 6 மடங்கு நிலப்பரப்புள்ள ரஷ்யாவின் மொத்த ஜனத்தொகைக்குச் சமமாகும்.

ஒவ்வொரு ஆண்டும், நமது நாட்டில் அதிகரிக்கும் ஜனத்தொகை, நம்மைப்போல 2.5 மடங்கு அதிக நிலப்பரப்புள்ள ஆஸ்திரேலிய நாட்டில் உள்ள மொத்த ஜனத்தொகைக்குச் சமமாகும்.

இந்த நிலை இப்படியே நீடித்துக் கொண்டிருந்தால், குடிக்கத் தண்ணீர் இல்லாமலும், சுவாசிக்கக் காற்று இல்லாமலும் போய்விடலாம்.

எனவேதான், ஜனத்தொகையின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தியாக வேண்டும் என்கிற கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

குழந்தைகளே கூடாது என்கிற எண்ணம் யாருக்கும் இல்லை. ஆயிரத்துக்கு 35 விதம் பிறப்பு விகிதம் உள்ளது. அதை 25 ஆகக் குறைக்க வேண்டுமென்பதே அரசின் நோக்கம்.

அதற்காக அத்தனை பேரையும் சாமியார்களாகச் சொல்ல முடியுமா? பிரம்மச்சாரியாக இருக்கச் சொல்ல முடியுமா?

புரட்சிக்கவிபாரதிதாசன் சொன்னதைப் போல காதலுக்கு வழி வைத்து கருப்பாதை சாத்தவழி காண வேண்டும்.

''அதுதான் குடும்பநலத் திட்டம்''.

ஆரம்பத்தில் இதைப் புரிய வைப்பது மிகச் சிரமமாக இருந்தது என்பது உண்மைதான். ஆனால் இன்று ஆண்கள், பெண்கள் அனைவருடைய மத்தியிலும் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு மிகுந்த ஆதரவு இருப்பது பெரிதும் மகிழ்ச்சி தரக் கூடிய மாறுதலாகும்.



உதாரணமாக துறைமுகத் தொழிலாளர் காலனியில் ஏற்படுத்தியுள்ள குடும்பநல முகாமில் 20 தினங்களில் 820 பேர் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டுள்ளார்கள். என்பதைச் சொல்லிக் கொள்ளப் பெருமைப்படுகிறேன்.

ஏதோ அறுவைச் சிகிச்சை செய்துகொள்வோருக்குத் தரப்படும் சில சலுகைகளுக்காக அவர்கள் வருகின்றார்கள் என்பதை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். இதன் அவசியத்தை அவர்கள் உணர்ந்து உள்ளார்கள் என்பதால்தான் இத்தனை ஆதரவு.

அதிகக் குழந்தைகளுக்கு எதிர்ப்பானவர்கள் அல்ல நாம். இருக்கின்ற குழந்தைகளுக்கு நல்வாழ்வளிக்க வேண்டும் என்கிற நல்ல பெற்றோராக நாம் இருக்க வேண்டும். நம்மை விட நமது குழந்தைகளுக்குச் சிறந்த வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற ஆசையும், பொறுப்பும் நமக்கு இருக்க வேண்டாமா? அதைத்தான் நமது பிரதமர் அடிக்கடி வலியுறுத்திச் சொல்லியுள்ளார்.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை நாம் நிறைவேற்றாமல் போனால் ராமலிங்க அடிகள் வருந்தியதைப் போல வருந்தவேண்டி வரும்.

மகாத்மா விரும்பிய ராம ராஜ்ஜியமோ, நேரு விரும்பிய சோசலிசமோ, காமராஜர் விரும்பிய ''அனைவருக்கும் உணவு, படிப்பு, உடை, இடம், வேலை'' என்கிற திட்டத்தையோ நிறைவேற்ற முடியாதவர்களாகி விடுவோம்!

# அஞ்சலக வங்கியின் மாபெரும் பரிசுத் திட்டம்

**ஆண்டுக்கு இருமுறை**

**குலுக்கல்கள் ஜனவரியிலும் ஜூலையிலும் நடைபெறும்**

**ரூ. 20¼ இலட்சத்திற்கு**
**11,116 பரிசுகள்**

*ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20¼ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட 11,116 பரிசுகள் உண்டு.*

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. | 1,00,000 |
| 5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50,000 |
| 10 மூன்றும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 20,000 |
| 100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 5,000 |
| 1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 500 |
| 10,000 ஆரும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50 |

*ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.*

*உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெருதவர்க்கும் அளிக்கப்படும்.*

*விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.*

**இயக்குநர்,**
**தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,**
**சென்னை-600 002.**




# ஆழ்கூளக் கோழி வீடு அமைத்திடுவீர்! அதிக இலாபம் பெற்றிடுவீர்!

**கோ**ழிப் பண்ணை அமைப்பது இலாபகரமான ஒரு துணைத் தொழில்! ஆனல் பலர்—ஆர்வத்தின் காரணமாகக் கோழிப் பண்ணை அமைப்பது பற்றிய விவரங்களை நன்கு அறிந்து கொள்ளாமல்—பெரும் செலவு செய்து கட்டடம் கட்டி, கருவிகளையும் வாங்கி வைத்து, வீரிய இனக் கோழிகளையும் வாங்கி வளர்க்கின்றனர். கொஞ்ச நாள் கழித்து எதிர் பார்த்த இலாபம் கிடைக்காது போகவே கோழிப்பண்ணை இலாபகரமானது அல்ல என்று கூறிக் கூக்குரலிட ஆரம்பித்துவிடுகின்றனர். இதனுல் கோழிப் பண்ணை அமைக்க முன் வருகிறவர்களும் 'நட்டம் ஏற்பட்டு விடுமோ?' என்று அஞ்சி, கோழிப் பண்ணை அமைக்கும் முயற்சியைக் கைவிட்டு விடுகின்றனர். இது தவறு! எனவே, கோழிப்பண்ணை அமைக்க விரும்புகின்றவர்கள் முதலில் கோழி 'வீடு அமைப்பது எப்படி என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

'கிராமப்புறங்களிலே பரம்பரை பரம்பரையாகக் கோழி வளர்த்து வந்துள்ளார்களே அவர்களெல்லாம், கோழி வீடு அமைத்துத்தான் கோழி வளர்த்தார்களா? திறந்த வெளியில் அலைய வேண்டிய கோழிகளுக்கு, வீடு வேண்டிக் கிடக்குதா?'' என்று கேட்டுப் 'பிற்போக்கு வாதம்' பேசுகின்றவர்களும் நாட்டில் இருப்பதால், முதலில் கோழிகளுக்கு ஏன் வீடு அமைக்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

**பெட்டைக் கோழிகள் திறந்த வெளியில் அலைந்து திரிந்து, குப்பையைக் கிளறி, இரை தேடினுல், அவைகளின் சக்தி வீணுகி, முட்டையிடும் திறன் குன்றிவிடுகிறது என்பது வளர்ந்து வரும் அறிவியலின் மூலம் தெரியவருகிறது.**

கிராமப்புறங்களில் அலைந்து திரிந்து குப்பையைக் கிளறி இரை தேடி வாழும் கோழிகள் ஒரு ஆண்டில் 50 அல்லது 60 என்று குறைந்த எண்ணிக்கை முட்டைகள் இடுவதிலிருந்தும், கோழி வீடு அமைத்துத் தீனியும் கொடுத்து வளர்த்தால் அதே நாட்டுக் கோழிகளிலிருந்து ஒரு ஆண்டில் 90 முதல் 100 முட்டைகள் வரை கிடைப்பதிலிருந்தும் மேற்கூறிய உண்மை தெளிவாகும்.

**கோழிகள் எக்காரணம் கொண்டும் தீனிக்காகவோ அல்லது தண்ணீருக்காகவோ, 10 அடி தூரத்திற்கு மேல் நடக்கக் கூடாது. அவ்வாறு நடக்க நேர்ந்தால், முட்டை உற்பத்தி குறையும்.** எனவே பெட்டைக் கோழிகளின் முட்டை உற்பத்தித் திறன் வீணுவதைத் தடுக்க, முதலில் கோழி வீடு அமைத்து, மிகவும் நல்ல தீனியும் கொடுப்பது மிகவும் இன்றியமையாததாகும். இவ்வாறு செய்தால் ஒவ்வொரு கோழியின் மூலமும் அதிக முட்டைகளைப் பெறலாம்!

## ஆழ்கூளக் கோழி வீட்டின் பயன்

கோழி வீடு அமைக்கப் பல்வேறு முறைகள் இருந்தாலும் அவைகளில் ஆழ்கூள வீடு ( Deep Litre House ) முறையே சிறந்தது. ஏனெனில் கிராமியச் சூழ்நிலையில் அங்கே கிடைத்திடும் பொருள்களைப் பயன்படுத்தி—அதிகச் செலவில்லாமல்—ஆழ்கூளக் கோழி வீடு அமைக்க முடிவதுடன், அதிக முட்டைகளையும், விலையுயர்ந்த எருவையும் பெற முடிகிறது. இதனுல் இலாபம் இரட்டிப்பாகிறது!

**ஆழ்கூளக் கோழிவீடு அமைப்பின் மூலம், ஒரு ஆண்டில் மூன்று கோழிகளிலிருந்து கிடைக்கும் எரு, ஒரு பசுவிலிருந்து கிடைக்கும் எருவிற்குச் சமமாகும்!**

ஆழ்கூளக் கோழிவீடு அமைத்து 40 கோழிகளை வளர்ப்பதன் மூலம், ஒரு ஆண்டில் கிடைக்கும் எரு, 1 ஏக்கர் நன்செய் நிலத்திற்கு அல்லது 0.5 ஏக்கர் காய்கறி பயிரிடும் நிலத்திற்குப் போதுமானதாகும்.

ஆகவே, கோழிகள் மூலம் அதிக முட்டை பெறவும், எருப் பற்ருக்குறையைப் போக்கி மகசூலைப் பெருக்கவும், ஆழ்கூளக் கோழி வீடு அமைப்பதே சிறந்தது.

## ஆழ்கூளக் கோழிவீடு அமைக்கும் முறை

ஆழ்கூளக் கோழிவீடு அமைக்க மேட்டுப் பாங்கான இடத்தையே தேர்ந்தெடுக்க வேண்டும். உயரமான இடத்தில் கோழி வீடு அமைத்தால், மழைக் காலத்தில் சுற்றுப்புறத்தில் தேங்கும் தண்ணீரினுல், கோழிவீட்டிற்குள் கசிவு ஏற்படாது.

கோழிகளுக்குத் தேவையான எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டுமாறுல், ஒரு கோழிக்கு 2.5 சதுர அடி இட வசதி இன்றியமையாததாகும். 100 சதுர அடி பரப்புள்ள ஆழ்கூள வீட்டில், 40 கோழிகள் வளர்க்கலாம்.

கோழிப் பண்ணை அமைப்பவர்கள் அவரவர்களுடைய வசதிக்கு ஏற்ப செங்கல் சுவர் எழுப்பியோ அல்லது மண் சுவர் வைத்தோ ஆழ்கூளக் கோழி வீடு அமைத்துக் கொள்ளலாம்.



### குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு

குறைந்த வருவாய் உடைய கிராமப்புற மக்களின் பொருளாதாரத்தை உயர்த்திட வேண்டும் என்ற இலட்சியத்துடன், கிராமப்புறங்களில் கிடைக்கக் கூடிய பொருள்களைக் கொண்டே பின்கண்டவாறு ஆழ்கூளக் கோழி வீடு அமைத்திடலாம்.

கிராமப்புறங்களில் உள்ளவர்கள் 40 கோழி வளர்க்க விரும்பினுல் மேடான இடத்தில் 10 அடிக்கு 10 அடி அளவிற்குக் கடைக்கால் (அஸ்திவாரம்) இட்டு, பூமிக்கு மேல் 2 அடி உயரத்திற்கு மண் சுவர் எழுப்பி 4 சவுக்குக் கால்களை நட்டு, தென்னங்கீற்றினுல் அல்லது விழற்புல்லினுல் கூரை வேய்ந்து, சுற்றிலும் கம்பி வலை அடைத்து, ஆழ்கூளக் கோழி வீடு அமைக்கலாம். ஆழ்கூளக் கோழி வீட்டின் தரையை நன்கு கெட்டித்து மெழுகி, 6 அங்குல உயரத்திற்கு உமி அல்லது துண்டு செய்த வைக்கோல் தாளைப் பரப்பிட வேண்டும். உமி மழையில் நனையாதிருக்கக் கூரையைத் தாழ்வாகவும், சுவரைவிட 2.5 அடி நீளமாகவும் அமைக்க வேண்டும்.

கோழிகளுக்குத் தீனி வைப்பதற்காக 6 அடி நீளமுள்ள மூங்கிலைக் குடைந்து, தீனித் தொட்டியாகப் பயன்படுத்தலாம். 20 கோழிகளுக்கு ஒரு தீனித் தொட்டி வீதம் அமைக்க வேண்டும்.

கோழிகளுக்குத் தண்ணீர் வைப்பதற்கு, 10 கோழிகளுக்கு 2 லிட்டர் தண்ணீர் கொள்ளக்கூடிய ஒரு மண் சட்டி அல்லது பிளாஸ்டிக் பாத்திரம் வீதம் வைக்கவேண்டும்.

கோழிகள் முட்டையிடுவதற்கு 10 கோழிகளுக்கு ஒரு பானை வீதம் மண் பானைகளைச் சுவரின் ஓரத்தில் அமைக்க வேண்டும்.

வெளிச்சல் பொடியை எப்பொழுதும் ஒரு பாத்திரத்தில் வைத்திருக்க வேண்டும்.

மேற்கண்டவாறு 40 கோழிகளுக்கு ஆழ்கூளக் கோழி வீடு அமைக்கக் கீழ்க்கண்ட பொருள்கள் தேவைப்படும்.

1. சவுக்குக் கால்—4.
2. மூங்கில் கட்டு—4.
3. தென்னங்கீற்று—200.
4. கயிறு (பாளை) கட்டு—4.
5. 6 அடி மூங்கில் குடைந்த தீனித் தொட்டி—2.
6. மண் தண்ணீர்த் தொட்டி—4.
7. கம்பி வலை—3 அடி × 40 அடி.
8. முட்டையிடப் பானைகள்—4.

மேற்கூறியவைகளை வாங்குவதற்கும், கூலிக்கும் ஆக மொத்தம் ரூபாய் 125 முதல் ரூபாய் 150 வரை செலவிட வேண்டியிருக்கும். உழவர்கள் தங்களிடம் உள்ள பொருள்களைக் கொண்டே ஆழ்கூள வீடு அமைக்கும்பொழுது, மேற்கூறிய செலவு கணிசமாக்க குறையும்.

### வசதியுள்ளவர்களுக்கு

பொருளாதார வசதியுள்ளவர்கள் ஆழ்கூளக் கோழி வீடு அமைக்கப் பின்கண்ட முறையைப் பின்பற்றலாம்.

### கட்டடம்

ஆழ்கூளக் கோழி வீடு அமைக்க தரை மட்டத்திற்குக் கீழே 2 அடி ஆழம் வரை தோண்டி 1 அடி உயரத்திற்குக் 'கான்கிரீட்' கடைக்கால் அமைக்க வேண்டும். அதன்மேல் தரைமட்டம் வரை 1.25 அடி அகலமுள்ள அகலமுள்ள செங்கல் சுவர் எழுப்பவும். தரை மட்டத்திற்கு மேல் செங்கல் சுவர் அரைச் செங்கல் அகலம் இருந்தால் போதுமானது. தரைமட்டத்திற்கு மேல் 1.5 அடி முதல் 2 அடி உயரத்திற்குச் செங்கல் சுவர் அமைக்க வேண்டும்.



செங்கல் சுவர் உயரம், ஆழ்கூளத்தின் மேல் நிற்கும் கோழியின் தலைமட்ட உயரத்தை விடச் சற்றுக் குறைவாகவே இருக்க வேண்டும் இதனுல் கோழிகளுக்கு நல்ல காற்றோட்ட வசதி ஏற்படும்.

செங்கல், சுண்ணும்பு ஆகியவற்றைப் பயன்படுத்தி சுவரை அமைத்து, மேலே சுண்ணும்புக் கலவையால் பூச வேண்டும். சுவரின் மேல் மேடு பள்ளங்களோ, கீறல்களோ இருக்கக் கூடாது. அவ்வாறு இருந்தால், கோழிப் பேன், உண்ணி முதலியவைகள் பரவக்கூடும்.

கோழி வீட்டின் தரையை 'கான்கிரீட்' போட்டு நன்கு கெட்டித்து சிமெண்டினுல் பூச வேண்டும். கோழி வீட்டின் தரை சுற்றுப்புறத் தரையின் உயரத்தை விட 6 அங்குலம் உயரமாக இருக்க வேண்டும். அதன் மேல் 2 முதல் 3 அங்குல உயரத்திற்குச் சுத்தமான மண் பரப்பி அழுத்தமாகத் தளம் போட வேண்டும். அதன் மேல்தான் ஆழ்கூளம் பரப்ப வேண்டும். மண் தரையின் மேல் 6 அங்குல உயரத்திற்கு உமி, மரத்தூள், வைக்கோல் துண்டு போன்ற ஏதாவது ஒன்றைப் பரப்பிட வேண்டும்.

### கதவு

ஆழ்கூள வீட்டின் அகல வாட்டத்தில் தரைக்கு மேல் 1 அடி உயரத்தில் 4 அல்லது 5 அடி உயரமும், 2 அடி அகலமும் உள்ள கம்பிக் கதவு அமைக்கவும்.

### கம்பிவலைத் தட்டி

ஆழ்கூள வீட்டைச் சுற்றிலும் சுவரின் மேல் 3 அடி உயரத்திற்கு 0.5 அங்குல வலைக் கம்பி தட்டிகளைப் பொறுத்த வேண்டும். கூரைக்கும் இத்தட்டிகளுக்கும் இடையில் இடைவெளி இருக்கக் கூடாது.

### கூரை

ஆழ்கூளக் கோழி வீட்டின் கூரைக்கு தென்னங்கீற்று, பனை ஓலை, விழற்புல், துத்தநாகத் தகடு, ஆஸ்பெஸ்டாஸ் தகடு, இலேசான கூரை அட்டை ( Light roofing material ) ஆகியவற்றை உபயோகிக்கலாம். உலோகத் தகடுகளைக் கொண்டு கூரை அமைத்தால், அவற்றின்மேல் வைக்கோல் அல்லது விழற்புல் ஆகியவைகளை வேய்ந்து கோடைக்காலத்தின் வெப்பத்தைக் குறைத்திட வேண்டும். அல்லது உலோகத் தகடுகளின் உட்புறத்தில் வெள்ளை வர்ணம் பூசி வெப்பத்தைக் குறைத்திட வேண்டும்.

தென்னங் கீற்று, பனை ஓலை ஆகியவைகளைக் கொண்டு கூரை அமைத்தால் கோழி வீட்டில் வெப்பம் குறைவாக இருக்கும். ஆனுல் இத்தகைய கூரைகளில் எலிகள் தங்கிச் சேதம் ஏற்படுத்தக் கூடும். இதைத் தவிர்க்க, கூரையின் அடியிலும் கம்பி வலை அமைப்பது சிறந்தது.

மழைத் தூரல் சிதறி கோழி வீடும், ஆழ்கூள்மும், கோழிகளும் நனையாதிருக்க சுவரை விட கூரை 2.5 அடி நீளம் நீண்டிருக்கும் படி அமைக்க வேண்டும்.



தானியங்கு தண்ணீர்த் தொட்டி

### தீனி, தண்ணீர் பாத்திரங்கள்

ஆழ்கூளக் கோழி வீட்டில் 20 கோழிகளுக்கு ஒன்று வீதம் தானியங்கித் தீனித் தொட்டிகளையும், 10 கோழிகளுக்கு ஒன்று வீதம் தானியங்கித் தண்ணீர்த் தொட்டிகளையும் அமைக்க வேண்டும். உலோகத்தினுல் செய்யப்பட்ட தண்ணீர்த் தொட்டிகளாக இருந்தால், அவை துருப் பிடிக்கும். அதைத் தவிர்க்கத் துத்தநாகத் தகட்டினுல் தண்ணீர்த் தொட்டிகளைச் செய்வதே சிறந்தது.

உங்களுடைய கோழிக் குஞ்சுகளின் வயது 5 வாரத்திற்குட்பட்டதெனில், தீவனத் தொட்டிகளின் அடித் தட்டு ஆழ்கூளத்திற்குள் பாதி வரை பதியும்படியும், 6 முதல் 10 வார வயதுடைய கோழிகள் எனில், தீவனத் தொட்டியின் அடித் தட்டு ஆழ்கூளத்திலிருந்து 1 அங்குல உயரத்தில் தொங்கும் படியும், 10 வார வயதுக்கு மேற்பட்ட கோழிகள் எனில், தீவனத் தொட்டிகளின் அடித்தட்டு ஆழ்கூளத்திலிருந்து 3 அங்குல உயரத்தில் தொங்கும்படியும் அமைடிக்க வேண்டும்.

### முட்டையிட மாடம்

கோழிகள் முட்டையிடுவதற்கு வசதியாக ஆழ்கூளக் கோழி வீட்டின் நீண்ட சுவர்களின் ஓரத்தில் 10 அங்குல நீளம், 10 அங்குல அகலம், 10 அங்குல உயரம் உள்ள மாடங்களை —5 கோழிகளுக்கு ஒரு மாடம் வீதம் — அமைக்க வேண்டும்.

இம்மாடங்களைத் தரை மட்டத்திலிருந்து 1.25 அடி உயரத்தில் அமைப்பது நல்லது.

**கிருமி நாசினித் தொட்டி**

ஆழ்கூளக் கோழி வீட்டின் வெளிப்புறத் தில் கதவுக்கு முன்னால் 3 அங்குல ஆழமுள்ள 2 நீண்ட சதுரத் தொட்டிகளை அமைக்க வேண்டும். முதல் தொட்டியில் கிருமி நாசினி கலந்த நீரை ஊற்றி வைக்க வேண்டும். இரண்டாவது தொட்டியில் கால் துடைப்பதற்காக, சுண்ணாம்பு அல்லது கயிற்று விரிப்பு இருக்க வேண்டும். கோழி வீட்டின் உள்ளே செல்பவர்கள் முதலில் கிருமி நாசினி கலந்த கலவை நீரில் காலை நனைத்துக் கொண்டு சென்று, பிறகு சுண்ணாம்பு அல்லது கயிற்று விரிப்பில் ஈரத்தை நன்கு துடைத்துக் கொண்ட பிறகே உள்ளே செல்ல வேண்டும்.

**சுற்றுப்புறம்**

கோழி வீடுகளின் சுற்றுப்புறத்தில் உள்ள வேலியை, கோழி வீட்டிற்குள் புகுந்து கோழி களைத் தாக்காதிருக்க கோழி வீடுகளைச் சுற்றி லும் புல்பாத்தி அமைப்பது சிறந்தது. புல் பாத்தியின் வெளி வரிசையில் அகத்தி, மல் பெரி, கல்யாண முருங்கை போன்ற மரங்களை வளர்க்க வேண்டும். அம்மரங்களின் பயனும் கோழி வீட்டைக் குளிர்ந்த நிலையில் வைத்து இருக்க முடிவதுடன், அம்மரங்களின் இலைகளைக் கோழிகளுக்குத் தீவனமாக அளித்திட முடியும்.

**ஆழ்கூளப் பராமரிப்பு**

ஆழ்கூளக் கோழி வீடு அமைக்க விரும்பு கின்றவர்கள் ஆழ்கூளப் பராமரிப்பு பற்றிய நுட்பத்தையும் தெரிந்து கொள்ள வேண்டும். சிலவகை நுண்கிருமிகள் கூளத்தையும் கோழி மலத்தையும் தாளாக்கி ஈரத்தை உறிஞ்சக் கூடிய ஆழ்கூளத்தை உற்பத்தி செய்கின்றன. அந்த ஆழ்கூளத்தில் மீன்தூள், இறைச்சி ஆகிய வற்றில் இருப்பது போன்ற வைட்டமின் 'பி-12', 'பி-2' மற்றும் தாதுப் பொருள்கள், உற்பத்தி ஆகி, கோழிகளுக்குச் சத்துள்ள உணவை அளிக்கின்றன.

ஆகவே ஆழ்கூளத்தைப் பின்கண்ட முறை யில் பராமரிக்க வேண்டும் :

1. ஆழ்கூளம் அமைப்பதற்கு மார்ச், ஏப் ரல் மாதங்கள் சிறந்தவை. மழைக் காலத்தில் ஆழ்கூளம் ஆரம்பிக்கக் கூடாது. மழைக்காலம் முடிந்த பிறகே ஆரம்பிக்க வேண்டும்.

2. உமி, மரத்தூள், வைக்கோல் துண்டு, கரும்புச் சக்கை, கடலைத் தோல் முதலிய எந்தப் பொருள் எளிதாகவும் குறைந்த விலையிலும் கிடைக்கிறதோ, அவைகளை ஆழ்கூளங்களாகப் பயன் படுத்த முற்பட வேண்டும்.

3. கூளம் மிகவும் தூளாக இருக்கக் கூடாது. அவ்வாறு இருந்தால் கோழி களின் கண்களுக்கும் மூச்சுக் குழல் களுக்கும் தீங்கு நேரிடும்.

4. கூளம் கூர்மையானதாக இருக்கக் கூடாது. அவ்வாறு இருந்தால் கோழிகள் அவைகளை உட்கொள்ளும் பொழுது தீங்கு நேரிடலாம்.

5. ஈரத்தை நன்கு உறிஞ்சக் கூடியதாக வும், விரைவில் காயக் கூடியதாகவும் கூளம் இருக்க வேண்டும்.



6. புதிதாகக் கோழிக் குஞ்சுகளை வாங்கி வளர்க்கத் தொடங்கும் ஒவ்வொரு முறையும், புதிய கூளத்தின் மீதே தொடங்க வேண்டும்.

7. ஆரம்பத்தில் சிமெண்டு தரையின் மேல் 2 முதல் 3 அங்குல உயரத்திற்குத் தூய மண் பரப்பிக் கெட்டித்துத் தள மிட வேண்டும். இது அதிக ஈரத்தை உறிஞ்ச உதவும்.

8. புதிதாக ஆழ்கூளம் துவங்கும்போது முதலில் மண் தரை மீது 4 அங்குல உயரத்திற்கே கூளத்தைப் பரப்ப வேண்டும்.

9. நாளடைவில் கொஞ்சம் கொஞ்சமாகக் கூளத்தைப் போட்டு, 6 அங்குலம் முதல் 8 அங்குலம் உயரத்திற்கு ஆழ்கூளத்தை உயர்த்த வேண்டும்.

10. மழைக்காலத்தில் கூளம் சேர்ப்பதைத் தவிர்க்க வேண்டும்.

11. அடிக்கடி கூளத்தைக் கிளறிவிட வேண்டும். அதனால் கூளத்துடன் கோழி மலம் சமமாகக் கலந்து நல்ல ஆழ்கூளம் ஏற்படும். மேலும் அடியி லுள்ள ஈரமான கூளம் மேலே வந்து, உலர்வதற்கும் ஏதுவாகிறது.

12. கூளத்தில் ஈரம் ஏற்பட்டால் 10 சதுர அடிக்கு 1 கிலோ சூப்பர் பாஸ்பேட் விதம் கலந்து நன்றாகக் கிளறி விடவும். சூப்பர் பாஸ்பேட்டிற்குப் பதிலாக நீர்த்த சுண்ணாம்புத் தூளும் சேர்க்க லாம். இதனால் அமோனியா வாயு உற்பத்தியாகும். ஆனால் அதிக அளவு சுண்ணாம்பு நீர் சேர்க்கக் கூடாது.

13. ஒவ்வொரு கோழிக்கும் 2.5 சதுர அடி பரப்பளவு ஆழ்கூளம் இருப்பது அவ சியம். ஆழ்கூளத்தின் மேல் இந்த அளவுக்கு மேல் மிகவும் நெருக்கமாகக் கோழிகளை நிறுத்தக் கூடாது. அவ் வாறு நெருக்கமாக நிறுத்தினால் கோழிக் கிருமிகள் பரவவும், கோழிகள் ஒன்றுக் கொன்று கொத்திக் கொள்ளவும் ஏது வாகிறது.

14. மழைக்காலத்தில் ஒழுக்கினாலோ அல் லது மழைச் சாரலினாலோ அல்லது தண்ணீர்த் தொட்டி கவிழ்வதாலோ கூளம் ஈரமடைய நேரிட்டால், ஈரம் அடைந்த கூளத்தை அகற்றிவிட்டு, புதிய கூளம் போட வேண்டும். இல்லா விட்டால் நச்சுக் கிருமிகள் பெருகிக் கோழிகளைத் தாக்கி நட்டம் ஏற்படுத் தும். மேலும் ஆழ்கூளமும் கெட்டு விடும்.

மேற்கூறியவாறு ஆழ்கூளக் கோழி வீடு அமைத்து, வீரிய இனக்கோழிகளை வளர்த்தால் அதிக முட்டைகளைப் பெற்று அதிக இலாபம் பெறவும், சத்து நிறைந்த ஆழ்கூளத்தைப் பயன்படுத்தி வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கவும் முயற்சிக்கும்படி கோழிப்பண்ணை அமைப்பதில் ஆர்வம் உள்ள அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

—R. மாணிக்கம்.





# ஒரு நாள் வயது முதல் முட்டையிடும் வரை கோழிகளுக்குப் பராமரிப்பு முறைகள்!

— டாக்டர் ஆர். நடனம், எம்.வி.எஸ்.ஸி.,

கோழிப்பண்ணை இலாபகர மாக இயங்க வேண்டுமானால், கோழிப்பண்ணைப் பராமரிப்பில் நல்ல கவனம் செலுத்த வேண் டும். கோழிக் குஞ்சுகள் பண் ணைக்கு வந்து சேரும் தேதியை முன்கூட்டியே தெரிந்துகொண்டு சுமார் 3 வாரத்திற்கு முன்பே, கோழி வீடுகளையும், மற்றைய சாதனங்களையும் சுத்தம் செய்து சரி செய்து கொள்ள வேண்டும். வீட்டின் தரை, பக்கச் சுவர், மேற்கூரை முதலியவற்றை நன்கு சுத்தம் செய்து, 'மேலதியான்' போன்ற கிருமி நாசினியை உப யோகித்து சுத்தம் செய்ய வேண் டும். பின்பக்கச் சுவர்களுக்கும் சுண்ணாம்பு அடிக்க வேண்டும்.

பிறகு தரையில் சுண்ணாம்புத் தூளைத் தெளித்து, அதன் மீது 2 முதல் 3 அங்குல உயரத்திற்கு ஆழ்கூளப் பொருள்களைப் பரவ லாகப் பரப்பி அதன்மீது கோழி வளர்ப்புப் பெட்டியைத் தடுப்பு டன் அமைத்தல் வேண்டும்.

குஞ்சுகள் வந்து சேருவதற்கு 48 மணி நேரத்திற்கு முன்பே கோழிக்குஞ்சு வளர்ப்புப் பெட்டி யிலுள்ள மின் விளக்குகளை எரியச் செய்து 95 டிகிரி பாரன் ஹைட் வெப்பநிலையில் வைக்க வேண்டும். சாதாரணமாக ஒரு குஞ்சுக்கு இரண்டு 'வாட்' என்ற அளவில், மின்சார விளக்குகள் பொருத்தப் பட வேண்டும்.

ஒரு நாள் வயதுடைய கோழிக் குஞ்சுகளைப் பண்ணைக்குத் தரு விப்பதற்குக் குறைந்தது 24 மணி நேரத்திற்கு முன்பே, கோழிக் குஞ்சு வளர்ப்புச் சாதனப்பெட்டி களை அமைத்துச் சரி செய்து கொள்ள வேண்டும்.

தீவனத் தட்டையும், தண் ணீர்க் குவளைகளையும் வளர்ப்புப் பெட்டியைச் சுற்றிலும் பரவ லாக வைக்க வேண்டும். ஆழ் கூளத்தின்மீது காகிதத்தைப் பரப்பி, அதன்மீது தீவனத் தட்டை வைப்பது வழக்கம். இதன் மூலம் குஞ்சுகள் தீவ னத்தை எளிதில் கண்டு கொள்வ துடன், ஆழ்கூளப் பொருள்களைத் தின்பதைத் தடுக்கவும் உதவும்.

ஒருநாள் வயதுடைய கோழிக் குஞ்சுகளை வளர்க்க, செயற்கை முறையில் வளர்ப்புப் பெட்டிகளை வைத்து வளர்த்தால்தான் முடி யும். கோழிக் குஞ்சு வளர்ப்புப் பெட்டிகளில் பல வகையான பெட்டிகள் தற்போது கோழிப் பண்ணையாளர்களால் உபயோகப் படுத்தப்படுகின்றன.

(1) அடுக்குக் குஞ்சு வளர்ப்புப் பெட்டி (Battory Brooder)

2. ஹோவர் (Hover Brooder)

3. மரப்பெட்டி

4. மூங்கில் கூடையாலான பெட்டி.

முதல் நான்கு வாரம் வரையில் மேற்குறிப்பிட்ட பெட்டிகளில் கோழிக்குஞ்சுகளை வைத்து வளர்ப்

பதன் மூலம், இயற்கையாகக் கோழிக் குஞ்சுகளுக்குத் தேவைப்படுகின்ற வெப்பத்தைக் கொடுக்க முடியும். தேவைப்படுகின்ற வெப்பத்தை, மின்சார 'பல்புகள்' மூலமாகவோ அல்லது 'பெட்ரோமாக்ஸ்' போன்ற விளக்குகள் மூலமாகவோ அளிக்கலாம்.

### அடுக்குக் குஞ்சு வளர்ப்புப் பெட்டி

இதில் நான்கு அல்லது ஐந்து அடுக்குகள் கொண்ட அறைகள் உள்ளன. அதனால் குறைந்த இடத்தில் அதிகமான குஞ்சுகளை வளர்க்க முடியும். ஆனால் இதற்கு தேவைப்படுகின்ற மூலதனம் மிகவும் அதிகம். சிறு அளவில் கோழி வளர்க்க விரும்புகின்றவர்களுக்கு இது தேவை இல்லை.

### ஹோவர் பெட்டி

'ஹோவர்' பெட்டி மூலம் தரையிலே கோழிக் குஞ்சுகளை வளர்க்கலாம். சாதாரணமாகக் கிடைக்கக்கூடிய 1.5 மீட்டர் (60 அங்குலம்) விட்டமுள்ள 'ஹோவர்' பெட்டியில் சுமார் 300/400 குஞ்சுகளை வளர்க்கலாம். இதில் ஒரு குஞ்சுக்கு 7 சதுர அங்குல இடவசதி கிடைக்கும்.



சிறு அளவில் கோழி வளர்ப்போர் ஹோவர் பெட்டிக்குப் பதிலாக மரத்தாலும், மூங்கில் கூடைகளாலும் (படத்தில் உள்ளவாறு) கோழிக் குஞ்சு வளர்ப்பு சாதனம் அமைத்துக் கொள்ளலாம்.

பொதுவாகப் புதிதாகக் கோழிப் பண்ணை தொடங்குபவர்கள் மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்தில், ஒரு நாள் வயதுடைய கோழிக் குஞ்சுகளைக் கொண்டு துவங்குவது நலம். ஏனெனில் மார்ச், ஏப்ரலில் பொரிக்கப்பட்ட குஞ்சுகள் ஜூன், ஆகஸ்ட் மாதங்களில் முட்டையிடத் துவங்கும். அப்போது முட்டைகளுக்கு நல்ல விற்பனை வசதியுண்டு. ஆனால் குளிர் காலங்களில் ஒரு நாள் வயதுடைய கோழிக் குஞ்சுகளைக் கொண்டு தொடங்குகின்ற பண்ணையின் கோழிகள், கோடையில் முட்டையிடும் பருவம் எய்தி முட்டையிட ஆரம்பிக்கும். கோடையில் முட்டை விற்பனை சற்றுத் தேக்கப்படுவதால், கோழிப்பண்ணையாளரின் ஆர்வம் குறைய நேரிடும். மேலும் கோடையில் வளர்க்கப்படுகின்ற கோழிக் குஞ்சுகளுக்கு, வளர்ப்புப் பெட்டியில் குறைந்த அளவு மின்சாரமே தேவைப்படும்.

ஒரு நாள் வயதுடைய கோழிக் குஞ்சுகளைக் கொண்டு கோழிப் பண்ணை அமைப்பவர்கள் பின் கண்டவாறு கோழிப்பண்ணையைப் பராமரிக்க வேண்டும்.

## பராமரிப்பு முறைகள்

### முதல் வாரம்

கோழிக் குஞ்சுகளைப் பண்ணைக்கு கொண்டு வந்தவுடன் சரி பார்த்து, வளர்ப்பு அறையில் விடவும். அப்பொழுதே அவைகளுக்குக் கோழிக் கழிச்சல் (R. D. V. F.) தடுப்பு மருந்தைச் செலுத்த வேண்டும். பிரயாணத்தில் ஏற்பட்ட களைப்பையும் சோர்வையும் நீக்க 'ஹாஸ்டா சைக்கிளின்' 'டெர்ராமைசின்' ஆன்டிஜெர்ம்-77 போன்ற மருந்துகளைக்கொண்டு குடிநீரில் கலந்து கொடுக்கலாம்.

முதல் 3 நாட்களுக்குச் சிறிய பெட்டி மேல் மூடியில் தீவனத்தைப் பரப்பி வைக்கலாம். பிறகு சில தீவனத் தட்டில் முழுவதும் தீவனத்தை நிரப்பி வைக்க வேண்டும். தண்ணீர்த் தொட்டிகளில் எப்போதும் தண்ணீர் உள்ளதா என்பதையும் கவனிக்க வேண்டும்.

குஞ்சுகளுக்கு அதிகக் குளிர் காற்றும் அதிக வெப்பமும் இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். முதல் வாரத்தில் 95 டிகிரி பாரன்ஹைட் வெப்பம் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு வாரமும் 5 டிகிரி பாரன்ஹைட் வெப்பத்தைக் குறைத்துக் கொண்டே வரவேண்டும். வெப்பமானி தரையிலிருந்து 2 அங்குல உயரத்தில் வைக்கப்பட வேண்டும்.

| | டிகிரி பாரன்ஹைட் |
|---|---|
| முதல் வாரம் | 95 |
| 2-வது வாரம் | 90 |
| 3-வது வாரம் | 85 |
| 4-வது வாரம் | 80 |

முதல் பத்து நாட்களுக்குக் குஞ்சுகளைக் குழந்தையைப்போல் காப்பாற்ற வேண்டும். சரியான வெப்பநிலை உள்ளதா என அடிக்கடி பார்த்துக் கொள்ள வேண்டும். குஞ்சுகள் ஒன்றுடன் ஒன்று மோதி அடைத்துக் கொண்டால், வெப்பம் போதவில்லை என்றும்,



எல்லாக் குஞ்சுகளும், விளக்கை விட்டு, வளர்ப்புப் பெட்டிகள் விளிம்போடு இருந்தால் அதிக வெப்பம் என்றும் பொருள். எனவே குஞ்சுகள் எல்லா இடங்களிலும், பரவலாகப் பரவி, மகிழ்ச்சியாகத் திரிந்து கொண்டிருத்தலும் அவசியம். குஞ்சுகள் சரியான வெப்பத்தில் தீவனத்தையும், தண்ணீரையும் உட்கொண்டு நல்ல நிலையில் வளர்கின்றனவா என்பதை அடிக்கடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

### 2-வது வாரம்

இரண்டாவது வாரம் முதல் குஞ்சுகள் ''காக்ஸிடியோஸிஸ்'' அல்லது 'இரத்தக் கழிச்சல்' என்ற நோயால் பாதிக்கப்படலாம். ஆகவே, ஆழ்குப்பையில் ஈரமில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதில் தண்ணீர் சிந்தாமல் கவனித்துக் கொள்ள வேண்டும். ஈரமான லிட்டரை உடனே அப்புறப்படுத்திவிட வேண்டும். இவ்வியாதியைத் தடுக்க, குஞ்சுக்குத் தீவனத்திலோ, தண்ணீரிலோ 'எம்பஸின்' 'ஆம்பரால்' 'பைஃப்ரான்', 'சல்பெட்' 'எம்பனின்' போன்ற மருந்துகளைக் கொடுக்கலாம். இம்மருந்துகளை 12-வது வாரம் வரை கொடுப்பது நல்லது. குடிக்கும் தண்ணீர் மிகவும் சுத்தமாகவும் இருத்தல் அவசியம்.

2-வது வாரத்தில் குஞ்சுகளுக்கு கோழி சின்ன அம்மை (P. P. V.) தடுப்பூசி போட வேண்டும். தடுப்பூசி போடுவதனால் ஏற்படும் களைப்பை நீக்க, ஊசி போடுவதற்கு முன்பும், பின்பும் வைட்டமின் சத்துக்களைத் தண்ணீரில் கலந்து கொடுக்கலாம்.

### 3—4-வது வாரங்கள்

தற்போது தீவனப்பெட்டியை சற்றுப் பெரியதாக வைக்கலாம். வலுவற்ற குஞ்சுகளைத் தனியாகப் பிரித்து வைக்கவும். நோய் வாய்ப்பட்ட குஞ்சுகளையும் உடனே பிரித்திடல் வேண்டும். பண்ணையில் சேவல் குஞ்சுகள் இருந்தால் அவைகளையும் நீக்கி விடலாம். குஞ்சுகள் வளர வளரத் தடுப்பினை நகர்த்திப் பெரிதுபடுத்த வேண்டும். நான்கு வாரத்திற்குப் பிறகு குஞ்சு வளர்ப்புப் பெட்டியையும், தடுப்பினையும் நீக்கிவிடலாம். 3-வது 4-வது வாரத்தில் இரவில் மட்டும் வெப்பம் தேவைப்படலாம். 4-வது வாரம் வரை ஒவ்வொரு குஞ்சுக்கும் 1 முதல் 2 அங்குல இடம் தீவனத் தட்டிலும், தண்ணீர்க் குவளையிலும் ஒதுக்கலாம்.

### 5 முதல் 8 வாரங்கள்

8 வாரம் வரையில் இளங் குஞ்சுகளுக்குரிய தீவனமளித்தல் வேண்டும். ஒவ்வொரு குஞ்சுக்கும், தீவனத் தட்டிலும், தண்ணீர்த் தொட்டியிலும் குறைந்தது 2.5 அங்குலம் முதல் 3 அங்குலம் இடமாவது இருக்கும்படி செய்ய வேண்டும். குஞ்சுகளுக்கு 6-7 வாரத்தில் ''கோழி பெரியம்மை'' (F. P. V.) தடுப்பூசி போடலாம். பண்ணையில் 8 வாரம் வரை இறப்பு விகிதம் 5 சதவிகிதத்திற்கு மேற்படாமல் பார்த்துக் கொள்ளல் வேண்டும்.

### 8 முதல் 12 வாரங்கள்

8 வாரத்திற்குப் பிறகு, வளரும் கோழிகளுக்குரிய தீவனத்தை அளித்தல் வேண்டும்.

தேவையானல் இன்னும் 1-2 அங்குல உயரத்திற்கு ஆழ்குப்பையைச் சேர்க்கலாம். முதல் 100 ச. அடிக்குச் சுமார் 3 கிலோ சுண்ணாம்புத் தூளைத் தெளித்து அதன் மீது புதிய ஆழ்குப்பையைப் பரப்பி நன்கு கிளறிவிட வேண்டும்.

குஞ்சுகள் வளர வளரத் தீவனத் தட்டுக்களைத் தரையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்திக் கட்ட வேண்டும். தீவனத் தட்டின் அடிப்பாகம் கோழியின் முதுகிலிருந்து 1 அங்குல உயரத்தில் இருக்குமாறு வைக்க வேண்டும். தீவனத் தட்டுக்களை அடிக்கடி கொஞ்சம் கொஞ்சமாக நிரப்ப வேண்டும். ஆழ்குப்பையை ஈரம்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். குஞ்சுகளுக்கு 10-வது வாரத்தில் ''கோழிக் கழிச்சல்'' வீரிய ஊசி போடவேண்டும். இந்த ஊசி போடுமுன், ஒரு வாரத்திற்கு முன்பு, குஞ்சுகளுக்கு குடற்புழுக்களை நீக்கும் மருந்து கொடுத்து, அவைகளைத் தயார்ப்படுத்த வேண்டும். முன்பு கூறியது போல், 5 நாட்களுக்கு முன்பும், பின்பும் வைட்டமின் சத்துக்களைக் கொடுக்கலாம். இதனால் ஊசி போடுவதால் பாதிக்கப்படும் குஞ்சுகளின் எண்ணிக்கை மிகவும் குறையும்.

### 13 முதல் 18 வாரங்கள்

வசதிகள் இருந்தால் 12 வாரம் முடிந்தவுடன் வேறு விட்டிற்குக் கோழிகளை மாற்றலாம். கோழிகளை ஒரு வீட்டிலிருந்து மற்றோர் வீட்டிற்கு மாற்றும்போது, குடற்புழு நீக்கும் மருந்துகளைக் கொடுத்து, நீக்கம் செய்ய வேண்டும். மாற்றப்படும் கோழி வீட்டில், ஆழ்குப்பை, தீவனத்தட்டு, தண்ணீர்க்குவளை முதலியவற்றை முன்கூட்டியே சரிப்படுத்தி வைத்துக் கொள்ள வேண்டும். கோழிகளின் எண்ணிக்கைக்குத் தகுந்தவாறு மேற்கண்ட சாதனங்களை அமைத்தல் வேண்டும். அதாவது 18 அங்குல விட்டமுள்ள சாதனங்கள், குறைந்தது 20 கோழிகளுக்கு ஒரு தீவனத் தட்டு, தண்ணீர்க்குவளை என்ற கணக்கில் வைக்க வேண்டும்.

குஞ்சுகளும் கோழிகளும் தண்ணீருக்கோ அல்லது தீவனத்திற்கோ 10 அடிகளுக்குமேல் போகக் கூடாது.



இரவு நேரங்களில் 100 கோழிகளுக்கு 15 'வாட்' கொண்ட ஒரு மின்சார விளக்கு எரியவிடலாம். இரவில் கோழிகள் தீவனத்தை உண்பதற்கும், கீரி, பூனை போன்றவைகளைத் தடுப்பதற்கும் விளக்கு உதவும்.

### 19 வாரம் முதல் முட்டையிடும் வரை

கோழிகள் 18-வது வாரத்தில் நன்கு வளர்ந்து செழிப்பாகக் காணப்படும். 18-வது வாரத்திலிருந்தே கோழி, முட்டை வைப்பதற்குரிய அறிகுறிகள் தோன்றக் கூடும்.

வீரிய இனக்கோழிகள் சாதாரணமாக 22-வது வாரத்தில் முட்டையிடத் தொடங்கிவிடும். எனவே, கோழிகள் முட்டையிடும் பெட்டிகளில் முட்டை இடும்படி பழக்க 18-வது வாரம் முதல், கோழி வீடுகளில் முட்டையிடும் பெட்டிகளை அமைத்தல் நல்லது. இதனால் பின்னால் தரைகளில் இடும் முட்டைகளைத் தவிர்ப்பதுடன் சுத்தமான முட்டைகளையும் பெற முடியும். 5 கோழிகளுக்கு ஒரு முட்டையிடும் பெட்டி என்ற எண்ணிக்கையில் வேண்டும். 15" × 15" × 15" என்ற அளவு முறையில் முட்டையிடும் பெட்டி அமைக்கப்படலாம். கோழிகள் முட்டையிடுவதற்குச் சற்று ஒதுங்கிய, இருட்டான இடத்தையே நாடுகின்றன. எனவே முட்டையிடும் பெட்டியின் வாயிற்புறத்தைப் பாதி மூடியபடி துணிகளைத் தொங்கவிடலாம். முட்டையிடும் பெட்டிக்குள்ளும், உமி, மரத்தூள் போன்றவைகளைப் போட்டு முட்டைகள் உடையாமல் பார்த்துக் கொள்ளலாம். அப்பெட்டிகளைச் சுத்தமாகவும், ஈரமில்லாமலும் வைத்துக் கொள்ள வேண்டும். வசதிக்கேற்றவாறு, கோழி வீட்டிற்குள் சென்றோ அல்லது வெளியிலிருந்தபடியோ, முட்டைகளைச் சேகரிக்க இப்படி பெட்டிகளை அமைத்துக் கொள்ளலாம்.

கோழிகளுக்கு 18 வாரம் முதல் 'கிளிஞ்சல் தூள்' கொடுக்க ஆரம்பிப்பதும் நலம். கிளிஞ்சல் தூளைச் சிறு தட்டில் நிரப்பி அளிக்கலாம். கோழிகள் தேவையான அளவு கிளிஞ்சல் தூள் உண்ணும். அதனால் அவைகள் வைக்கும் முட்டைகளின் ஓடுகள் கெட்டியாகவும், உறுதியாகவும் இருக்கும். தோல் முட்டைகளையும் தவிர்க்கலாம்.

முட்டையிடும் வீட்டில், கோழிக்குக் குறைந்தது 2.5 சதுர அடி இடமாவது இருக்க வேண்டும். முன்பு கூறியதுபோல் 20 கோழிகளுக்கு ஒரு தீவனப் பெட்டி, ஒரு தண்ணீர்க் குவளையும் என்ற கணக்கில் இருக்க வேண்டும். 19-வது வாரம் முதல் முட்டையிடுவதற்குரிய தீவனத்தை அளிக்க வேண்டும். தீவனப் பெட்டிகளில் தீவனமும், தண்ணீர்க் குவளைகளில் தண்ணீரும் எப்போதும் இருக்க வேண்டும். தினமும் இருமுறை தண்ணீர் நிரப்புவது நலம்.

இதுவரை கூறியவாறு கோழிப் பண்ணைகளைப் பராமரித்தால், கோழிப்பண்ணை இலாபகரமாக இயங்கும் என்பதில் ஐயமில்லை.



## உங்களுக்குத் தெரியுமா!

கோழிகள் முட்டையிடச் சேவல் தேவையில்லை!

கோழிகள் உண்ணும் உணவு, சத்தான முட்டையாக வெளிப்படுகிறது.

கோழியின் முட்டையில் 60 சதவிகிதம் தண்ணீரும், 13 சதவிகிதம் புரதச் சத்தும் உள்ளன.

கோழியின் அன்றாடத் தேவை 100 கிராம் தீனி. அதன் விலை 7 முதல் 12 பைசா. ஆனால் அவையிடும் முட்டையின் விலை குறைந்தது 25 பைசாவாகும்.

கோழிகளுக்குத் தேவையான இடவசதி :

0 முதல் 4 வாரக் குஞ்சுகளுக்கு ...... 0.5 சதுர அடி.

4 முதல் 8 வாரம் வரை ...... 1 சதுர அடி.

8 முதல் 20 வாரம் வரை ...... 2 சதுர அடி.

20 வாரத்துக்கு மேல் ...... 2.5 சதுர அடி.

கோழி முட்டை கலப்படம் செய்யமுடியாத ஓர் உணவு!

40 கோழிகள் ஓர் ஆண்டில், 1 டன் எரு கொடுக்கும்!

3 கோழிகளின் உரம், ஒரு பசுவின் எருவிற்குச் சமம்!

வீரியக் கோழிகள் ஓராண்டில் 230 சிறிய முட்டைகள் இடும்.

ஒரு நாள் கோழிக்குத் தண்ணீர் மறந்தால், ஒரு வாரம் வரை முட்டைகள் குறைந்திடக் காண்பீர்!

## கோழிப்பண்ணை அமைக்க விரும்புகின்றவர்களுக்கு ஓர் முக்கிய அறிவிப்பு!

"கோழிப்பண்ணை அமைக்க விரும்புகின்றேன். ஆனால் பண வசதி இல்லை. கடன் பெற யாரை அல்லது எந்த வங்கியை நாடுவது?" என்று கேட்டுப் பலர் "தமிழரசு" அலுவலகத்திற்குக் கடிதம் எழுதி வருகின்றனர். அவர்கள் அனைவருக்கும், கோழிப்பண்ணை அமைப்பதற்கான கடன் வசதி பெற தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் (Tamil Nadu Poultry Development Corporation Limited) மூலம் முயற்சி செய்வதே சிறந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம். கோழிப்பண்ணை அமைப்பதற்கான கடன் வசதி, பயிற்சி வசதி மற்றும் கோழிக் குஞ்சுகள் ஆகியவைகளைப் பற்றிய விவரம் அறிய பின்கண்ட முகவரிக்கு எழுதிக் கேட்கலாம்.

நிருவாக இயக்குநர்,
தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம்,
98, லாயிட்ஸ் சாலை,
சென்னை—600 086.

ஓம்

## அதிசய நீர் ஊற்று நிபுணர்!

1. குழாய் கிணறு இறக்கவும், புதிய கிணறு வெட்டவும், (பழைய கிணற்றில் போரிங் குழி இறக்கவும்) குறிப்பிட்ட பூமியில் தெற்குத் திசையிலிருந்து வடக்கு நோக்கியும், மேற்கு திசையிலிருந்து கிழக்கு நோக்கியும் சென்று கொண்டிருக்கும் எல்லா நீர் ஊற்றுகளையும் விஞ்ஞான முறைப்படி கண்டுபிடித்து அந்த நீர் ஊற்றுகளிலேயே மிக அதிகமான தண்ணீர் உள்ள இரண்டு நீர் ஊற்றுகள் கிராஸ் செய்யும் சரியான இடம் கண்டுபிடித்துக் குறிக்கப்படும். நீர் ஊற்று உள்ள ஆழமும், அதில் கிடைக்கும் தண்ணீரின் அளவும் தெரிவிக்கப்படும்.

2. என்னுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு நான் குறிக்கும் இடத்தில் குழாய் கிணறு இறக்குபவர்களுக்கு அதில் போதுமான அளவு தண்ணீர் சப்ளை கிடைக்கவில்லை என்று நிரூபித்தால், 2:3 என்ற விகிதத்தில் 3 ஆயிரம் ரூபாய் நஷ்ட ஈடு கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு—25 பைசா ஸ்டாம்பு அனுப்பவும்.

கே. கந்தசாமி,
(Ex-Member of the British Society of Diviners, London)
நீர் ஊற்று நிபுணர்,
கணபதி அஞ்சல் கோயமுத்தூர்-6

தொலைபேசி எண். 31912. Advt.

## ஏழை எளியவர்களின் கடன் சுமை தீர்ந்தது!




1976-ஆம் ஆண்டின் தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டத்தின்படி, ஆண்டு குடும்ப வருமானம் ரூபாய் 2,400-க்கு மேற்படாத கிராம மக்கள் பட்ட கடன்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

…யீடு: செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

பதிவு எண். M. 8676



# தீண்டாமை ஒழிப்பு

"பிறப்பினால் தீண்டத்தகாதவன் என்று கருதப்படும் கடைசி மனிதன் இருக்கும் வரை நமது போராட்டம் ஓயப் போவதில்லை"

"காந்தி அடிகள்"



"ஜாதி மதங்களைப் பாரோம்—
உயர் ஜன்மம் இத்தேசத்தில்
எய்தினராயின் வேதிய ராயினும்
ஒன்றே—அன்றி வேறு
குலத்தின ராயினும் ஒன்றே"

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே
—நம்மில் ஒற்றுமை நீங்கில்
அனைவர்க்கும் தாழ்வே நன்றிது
தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின்
நமக்கெது வேண்டும்?"

"மகாகவி பாரதியார்"

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை







# தமிழரசு

16 - 12 - 1976

மலர் : 7 இதழ் : 12


## இந்த இதழில்


| | பக்க எண் |
|---|---|
| இந்த அரசியல் சாசனத்தின் தனிச்சிறப்பு ... | 2 |
| 10 கடமைகள் ... | 3 |
| மாணவர்கள் செய்த மகத்தான பணி ... | 4 |
| சிறு தொழில் செழித்திட எல்லா வகையிலும் உதவிடுவோம்! ... | 7 |
| ராஜாஜி தொட்டதெல்லாம் தெளிவாகியது! ... | 10 |
| தமிழ்நாட்டு அறிவு | 11 |
| ராஜாஜியின் நிர்வாகத் திறன் ... | 13 |
| ராஜாஜி—சில நினைவுகள் ... | 17 |
| வாதியும் அவரே, வக்கீலும் அவரே! ... | 19 |
| ராஜாஜி பாட்டு ... | 21 |
| அவர் கையாண்ட யுக்தி! ... | 23 |
| படமும் செய்தியும் ... | 24 |
| தமிழ் இலக்கிய வானிலே ஒரு முழுநிலா! | 29 |
| பித்தளை ஒட்டியாணம் ... | 31 |
| உழவர் பெருமக்களுக்கு உதவும் செய்திகள் ... | 41 |
| பாம்பென்றால் படைநடுங்கும் ... | 45 |
| யுனெஸ்கோ ... | 47 |


கட்டுரையாளர்களின் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளி அல்ல.





மூதறிஞர் ராஜாஜி அவர்களைப் பற்றிய அண்மைக்காலச் செய்திகளைப் பலர் அறிவர். எனவே, ராஜாஜி அவர்களைப்பற்றி பலருக்குத் தெரியாத செய்திகளைத் திரட்டி, ராஜாஜி அவர்களின் நினைவு நாளையொட்டி, வழங்கியுள்ளோம்.

அதுபோலவே, தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பாடுபட்ட 'கல்கி' அவர்களின் 'பித்தளை ஒட்டியாணம்' என்ற பழைய கதையையும் 'கல்கி' அவர்களின் நினைவாக வெளியிட்டுள்ளோம்.

—ஆசிரியர்.



# இந்திய அரசியல் சாசனத்தின் தனிச்சிறப்பு

—ஓம் மேத்தா
உள்துறை ராஜாங்க அமைச்சர்

"நாடாளுமன்ற முறையைப் பின்பற்றி வருகின்ற உலகத்திலுள்ள பல்வேறு நாடுகளின் அரசியல் சாசனங்களிலேயே இந்திய அரசியல் சாசனம் தான் சிறப்பிடம் வகித்து வருகின்றது.

"நம் நாட்டின் அரசியல் சாசனக் கர்த்தாக்கள், மக்களுக்குப் பொறுப்புள்ள பிரதிநிதித்துவ அரசாங்கத்தை அமைத்துக் கொடுப்பதற்காக, நம் நாட்டு மக்களுக்கு ஏற்றவற்றை மட்டும் மற்ற நாடுகளின் அரசியல் சாசனங்களிலிருந்து எடுத்துக் கொண்டார்கள்.

"நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மூன்று முக்கிய பிரிவுகளான சட்ட மன்றம், நீதித்துறை, நிர்வாகத்துறை ஆகியவற்றின் அதிகாரங்களையும், அலுவல்களையும், அரசியல் சாசனம் தெளிவாக வரையறுத்துக் கூறியுள்ளது. அதே நேரத்தில் நமது அரசியல் சாசனக் கர்த்தாக்களின் முக்கிய கவலையெல்லாம், ஜனநாயகத்தின் இந்த மூன்று முக்கியப் பிரிவுகளும், சுமுகமாகவும், ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கை வைத்தும் செயல்பட வேண்டுமென்பது தான். இந்த மூன்று பிரிவுகளும் போட்டி போடுவதற்காக அமைக்கப்படவில்லை. மாறாக, மக்களின் நன்மைக்காக ஒன்றாக இணைந்து செயல்படுவதற்காக அமைக்கப்பட்டவை.

"வயது வந்த அனைவருக்கும் ஓட்டுரிமை என்ற மிகப் பரந்த அடிப்படையிலான ஓட்டுரிமையின் மூலம் நமது நாடாளுமன்றம் தேர்ந்தெடுக்கப்பட்டது. நமது அரசியல் சாசனம் வகுக்கப்பட்ட போது, ஓட்டுரிமைபற்றிய இந்த நடவடிக்கை அறிவுடைமையாகுமா என்று சந்தேகப்பட்டவர்களும் இருந்தார்கள். நமது மக்களில் பெரும்பாலானவர்கள் கல்வியறிவில்லாதவர்கள் என்பது தான் அவர்கள் கூறிய காரணம். ஆனால் ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் அரசியலில் சம உரிமை பெற வேண்டுமானால் ஓட்டுரிமை பெறுவதுதான் ஒரே வழி என்று நமது அரசியல் நிர்ணய சபை கருதியது. மக்கள் அனைவரும் நியாயமான பிரதிநிதித்துவம் பெறுவதற்கு ஓட்டுரிமைதான் ஒரே வழி. ஆகவேதான், இந்தியா உலகிலேயே மிகப் பெரிய ஜனநாயக நாடாகக் கருதப்படுகிறது. இந்தக் கருத்தும் மிகப் பொருத்த முடையதே.

"1951-ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலின்போது நமது வாக்காளர்களின் எண்ணிக்கை 17 கோடியே 30 இலட்சமாக இருந்தது. இன்றைக்கு அது இரண்டு மடங்காகப் பெருகி 32 கோடியைத் தாண்டியுள்ளது. இந்தியாவிலுள்ள 22 மாநிலங்களில், 15 பெரிய மாநிலங்களில் ஒரு நாடாளுமன்றத் தொகுதி என்பது ஏறக்குறைய 10 இலட்சம் மக்களைக் கொண்டதாகும். இதுவரை நாடாளுமன்றத்துக்கும், மாநில சட்டமன்றங்களுக்கும் ஐந்து பொதுத் தேர்தல்கள் நடைபெற்றிருக்கின்றன. இந்தியாவில் பாராளுமன்ற மரபு வேரூன்றி விட்டது என்பதைச் சந்தேகத்துக்கு இடமில்லாமல் இந்தப் பொதுத் தேர்தல்கள் நிரூபித்து விட்டன.

"அரசாங்கம் செய்யும் தவறுகளைக் கண்டுபிடித்துத் திருத்துவதற்கு நாடாளுமன்றம் சில குழுக்களை அமைத்திருக்கிறது. பொதுக் கணக்குக்குழு, மதிப்பீட்டுக் குழு, அரசுத்துறை நிறுவனங்களுக்கான குழு ஆகிய மூன்றும் நிதி சம்பந்தப்பட்ட முக்கிய குழுக்களாகும்.

"நீதித்துறை சுதந்தரமாகச் செயல்பட வேண்டியதன் அவசியத்தை நமது அரசியல் சாசன கர்த்தாக்கள் உணர்ந்திருந்தார்கள். அதற்கான அதிகாரத்தையும் அதற்கு அளித்திருந்தார்கள். இந்த அதிகாரங்களின் எல்லையைப் பற்றி யாருடைய உள்ளத்திலேயேயும் எந்தவித சந்தேகத்திற்கும் அவர்கள் இடம் வைக்கவில்லை.

'மக்களின் அரசியல் சக்தி நாடாளுமன்றத்தில் குடிகொண்டிருக்கிறது. அந்த அரசியல் சக்தி மற்றெல்லாவற்றிலும் பரவியிருக்கிறது என்பதே நமது அரசியல் சாசனத்தின் திட்டமாகும். மக்கள் சக்திக்கும் மேலாக ஒன்று இருக்கிறது என்றால் அது நாடாளுமன்றம் மட்டும்தான். அதைத்தவிர வேறொன்றுமில்லை, என்ற உண்மையிலிருந்து, நாடாளுமன்றத்தின் பெருமையை மக்களுடன் அதற்குள்ள தொடர்பையும் அறியலாம்."

[புதுடில்லியில் 1976 நவம்பர் 23-ஆம் தேதி நடைபெற்ற நாடாளுமன்ற முறைகள், நடைமுறைகளுக்கான இரண்டாவது பயிற்சி வகுப்பின் துவக்கக் கூட்டத்தில் ஆற்றிய உரை.]

# 10 கடமைகள்



இந்திய அரசு கொண்டு வந்துள்ள அரசியல் சட்ட 42-வது திருத்தத்தில், இந்திய மக்கள் ஒவ்வொருவரும் கடைப் பிடிக்க வேண்டிய 10 கடமைகள் வலியுறுத்தப்பட்டுள்ளன. இந்திய மக்கள் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய கடமைகளுக்குப் பாராளுமன்றம், 29-10-1976 அன்று, ஒப்புதல் அளித்தது.

அந்தப் பத்துக் கடமைகளாவன :—

1. அரசியல் சட்டம், தேசியக் கொடி, தேசிய கீதம் ஆகியவற்றுக்கு மரியாதை செலுத்த வேண்டும்.
2. சுதந்திரப் போராட்டத்தின் உயர்ந்த இலட்சியங்களை என்றென்றும் மனத்தில் போற்றிப் பாதுகாக்க வேண்டும்.
3. தேசத்தின் சுதந்திரம், ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பாதுகாத்து நிலைநிறுத்தப் பாடுபட வேண்டும்.
4. தேசத்தைப் பாதுகாக்க வேண்டும். யுத்த சேவைக்கு அழைக்கப்படும் போது செல்ல வேண்டும். .
5. தேசத்தில் உள்ள அனைவருடனும் சகோதர மனப்பான்மையை வளர்ப்பதுடன், பெண்மையை இழிவுபடுத்தும் பழக்கங்களைக் கைவிட வேண்டும்.
6. தேசத்தின் கூட்டுக் கலாச்சாரத்தின் பழம்பெருமையைக் கட்டிக் காத்திட வேண்டும்.
7. இயற்கைச் சூழ்நிலைகளைப் பாதுகாத்து, உயிர்ப் பிராணிகளை அன்புடன் நடத்த வேண்டும்.
8. விஞ்ஞானத்தில் அக்கறை, மனிதத் தன்மை, விசாரித்து அறிந்து உண்மை அறிவதுடன் தவற்றைத் திருத்திக் கொள்வது ஆகிய பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.
9. தேசத்தில் பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்பதுடன், வன்முறைகளைத் தவிர்க்க வேண்டும்.
10. தனிப்பட்ட முறையிலும், கூட்டு நடவடிக்கைகளிலும் சிறப்பான நிலை அடைய, உழைக்க வேண்டும்.

மேற்கண்ட 10 கடமைகளை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும் என்று சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

எனவே, இக்கடமைகளைச் செய்து நமது நாட்டினைக் கண்போல் காத்து, உலக அரங்கில் இந்தியா ஒப்பற்ற இடம் பெறச் செய்ய வேண்டும் என்று தமிழக மக்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.



# மாணவர்கள் செய்த மகத்தான பணி



அட்டைப் படக் கட்டுரை.

'பசுமை நிறைந்த நினைவுகளோடு பாடித் திரியும் பறவைகள்!' என்றுதான் மாணவர்களைப் பற்றிப் பலர் எண்ணி வருகின்றனர். ஆனால் மாணவர்கள் காட்டின் ஆக்கப் பணிகளுக்கு உதவும் நல்லதோர் ஆதாரம் என்பதைச் சென்னை மாநகரில் உள்ள 20 கல்லூரிகளைச் சேர்ந்த தேசிய சேவைத் திட்டத்தில் தொண்டர்களாக உள்ள மாணவர்கள் மெய்ப்பித்து விட்டனர்!

மாட்சிமை பொருந்திய—பாராட்டிற்குரிய—செயல்களைச் செய்கின்றவர்களே மாணவர்கள் என்பதற்கோர் எடுத்துக் காட்டாகவும் சென்னைக் கல்லூரிகளின் மாணவர்கள் விளங்கியுள்ளனர்!



கடந்த நவம்பர் 23, 24, 25 தேதிகளில் சென்னை மாநகரில், வரலாறு காணாத அளவுக்கு அதிக அளவில் மழை பெய்ததால், சென்னை மாநகரின் தாழ்வான பகுதிகள் எல்லாம் வெள்ளக் காடாகக் காட்சியளித்தன.

அவ்வெள்ளத்தில் சிக்கித் தவித்த மக்களைக் காப்பாற்றும் பணியில் பல மாணவர்களும் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். கிண்டி பொறியியல் கல்லூரி, அழகப்பச் செட்டியார் இரசாயன தொழில் நுட்பக் கல்லூரி, அம்பேத்கார் கலைக்கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த சில மாணவர்கள், தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் வெள்ளத்தில் நீந்திச் சென்று, வெள்ளத்தால் சூழப்பட்டிருந்த வீடுகளின் கூரைகளிலும், மாடிகளிலும் நடுங்கிக் கொண்டிருந்த மக்களைக் கரைக்குக் கொண்டுவரும் பணியில் ஈடுபட்ட நிகழ்ச்சிகள், நெஞ்சை விட்டு அகலாத நினைவுகளாக உள்ளன.



மகளிர் கல்லூரிகளைச் சார்ந்த மாணவிகள் தங்களுடைய உணவுகளை எல்லாம் எடுத்துச் சென்று, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கொடுத்துவிட்டு, தாங்கள் பட்டினி கிடந்த செய்தி மறக்க முடியாததாக உள்ளது.

மாணவர்களும், மாணவிகளும் அத்துடன் தங்கள் பணி முடிந்துவிட்டதென்று அமைதி படைத்துவிடவில்லை.





சென்னை வியாசர்பாடியில் கடந்த 4-12-1976 அன்று 20 கல்லூரிகளைச் சேர்ந்த 410 மாணவிகளும், 1,000 மாணவர்களும் தேசிய சேவைத் திட்டத்தின் கீழ் வெள்ளத் துயர் துடைப்புப் பணியாற்றுவதற்காகத் திரண்டனர். திரண்ட மாணவர்கள் 4 பிரிவுகளாகப் பிரிந்து செயல்படத் துவங்கினர்.



வெள்ளத்தின் காரணமாக வியாசர்பாடியில் உள்ள சாஸ்திரி நகர் தொழிலாளர் குடியிருப்புகள் சேறும் சகதியுமாகக் காட்சியளித்தன. அச்சேற்றையும், சகதியையும் அப்புறப்படுத்தி, தாழ்வான பகுதிகளில் மண்போட்டு நிரப்பும் பணியில் ஒரு பிரிவினர் ஈடுபட்டனர்.

அம்பேத்கார் கல்லூரியை ஒட்டியுள்ள தாழ்வான பகுதியில் மண்நிரப்பி தரை மட்டத்தை உயர்த்தும் பணியில் 3 பிரிவு மாணவர்கள் ஈடுபட்டனர்.

"ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காண்" என்று அமரகவி பாரதியார் கூறியது போல், வெள்ளத்தின் காரணமாக வீடுகளில் படிந்த மண்ணை அகற்றும் பணியில் மாணவிகளும் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.



மாணவர்கள் மண்வெட்டியால் மண்ணை வெட்டிக் கொடுக்க அதை மாணவிகள் தூக்கிச் சென்று பள்ளங்களில் போட்டு நிரப்பினார்கள்.

வெள்ளத்தால் சேதம் அடைந்த பகுதிகளைச் சீர்திருத்துவதிலும், சாலை அமைப்பதிலும் ஈடுபட்டிருந்த மாணவர்களின் கடமை உணர்வினைக் கண்டு, தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள் அளவற்ற மகிழ்ச்சி அடைந்ததுடன் மாணவர்களையும், மாணவிகளையும் பாராட்டினார்.



ஆளுநர் அளித்த பாராட்டு !

"மாணவ, மாணவிகள் இங்கு செய்யும் வேலை பாராட்டத்தக்கது. இவ்வாறான வேலையில் அவர்கள் காட்டும் ஆர்வம் எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. இதைப் பார்த்து மற்றவர்களும் சேவை செய்ய முன்வருவார்கள் என நம்புகிறேன். சாலை அமைத்தல், தரை மட்டத்தைச் சமப்படுத்துதல் போன்ற வேலைகளில் மாணவர்கள் தொடர்ந்து வேலை செய்ய ஏற்பாடு செய்யும்படி, கல்வி அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டுள்ளேன்"—இவ்வாறு தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள் கூறினார்.

ஏறத்தாழ ஒரு மணி நேரம் சேற்றில் தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள் நடந்து சென்று மாணவர்களை உற்சாகப்படுத்தியதோடு, யோசனைகளையும் கூறினார்.

வெள்ளத் துயர்துடைப்புப் பணிகளில் ஈடுபட்ட மாணவர்கள், "பேனு பிடிக்கும் கைகளுக்கு நாட்டின் நலனுக்காக மண்வெட்டியைப் பிடித்து வேலை செய்யவும் தெரியும்" என்பதைத் தெளிவுபடுத்திவிட்டனர். அதேபோல், மாணவிகளும், "நாட்டின் நலனுக்காகக் கடின உழைப்பு மேற்கொள்ளவும் நாங்கள் தயார்!" என்பதைச் சொல்லாமல் சொல்லிவிட்டனர்.

இம்மகத்தான பணியில் ஈடுபட்ட மாணவர்களையும், மாணவிகளையும், அவர்களை இப்பணியில் ஈடுபடுத்திய அலுவலர்களையும் சென்னை நகர மக்களின் சார்பாக "சபாஷ் மாணவர்கள்" என்று பாராட்டுகின்றோம்.





# சிறுதொழில் செழிக்க எல்லா வகையிலும் உதவிடுவோம்!


ஆர். வி. சுப்பிரமணியன்
ஆளுநர் ஆலோசகர்


"இறு நாட்களில் தொழில் துறை இயக்ககத்தால், தமிழ்நாடெங்கும் 5,900-க்கும் மேற்பட்ட சிறுதொழில்கள் பதிவு செய்யப்பட முடிந்துள்ளதற்காக மகிழ்ச்சியடைகின்றேன்.

"தொழில் மேம்படுத்தும் திட்டத்தில், சிறுதொழில் துறைக்கு உயர்ந்த முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. மாநில அரசு சிறுதொழில் துறைக்குப் பல்வேறு வகையில் உதவி வருகிறது. இம்மாநிலத்தால் தொழிற்சாலைகளைத் துவக்குவதற்காக வழங்கப்படும் உள்ளமைப்பு வசதிகள், இந்த நாட்டின் எப்பகுதியிலும் வழங்கப்படும் வசதிகளை விடச் சிறந்ததாகக் காணப்படுகிறது. இவ்வசதிகளில், தொழிற்சாலைகளைத் துவக்குவதற்குரிய தயார் நிலையில் உள்ள இடம் கிடைக்கச் செய்தல், சிறந்த போக்குவரத்து வசதிகள்,—இரயில் மற்றும் சாலைப் போக்குவரத்து—போதிய மின் சக்தி வழங்கல், பொது மற்றும் தொழில் நுட்பக் கல்விக்குச் சிறந்த வசதிகள், புத்திசாலித்தனம் மிக்க தொழிலாளர்கள், உயர்ந்த அளவில் நகர்ப்புறமாக்குதல் ஆகியவை அடங்கும். 'எலக்ட்ரானிக்ஸ்' மற்றும் அளவைக் கருவிகள் உற்பத்தி செய்தல் போன்ற நுண்மை வாய்ந்த தொழிற்சாலைகளுக்குரிய சிறப்புத் தொழிற்பேட்டைகள் உட்பட நல்ல முறையில் திட்டமிடப்பட்டு, நல்ல முறையில் மேம்படுத்தப்பட்டுள்ள தொழிற்பேட்டைகள் இம்மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ளன. சோதனை மற்றும் மேம்பாட்டு நிலையங்கள், 'டேடா' வங்கிகள், செய்தி நிலையங்கள் முதலியவைகளும் கூட அமைக்கப்பட்டுள்ளன. நுண்மைத் தன்மை வாய்ந்த தொழில் சார்பான மற்றும் நுகர்வோர்களுக்குரிய பல்வேறு பொருள்களை உற்பத்தி செய்யக் கூடிய ஏராளமான தொழிற்சாலைகள் துவக்கப்பட்டு இயங்கி வருவதால், மத்திய அரசு மற்றும் மாநில அரசு ஆகிய இரண்டும் செய்துள்ள உதவிக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். இத்தகைய தொழிற்சாலைகள் சில அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதிலும் ஈடுபட்டுள்ளன. கார், ரேடியோ, 'எலக்ட்ரானிக் புராசஸ் கண்ட்ரோல்' போன்ற நுண்மை வாய்ந்த கருவிகள் சிறுதொழில் துறையிலிருந்து, வளர்ந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

"தொழில் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், காண்போரின் கவனத்தைக் கவருவதாக உள்ளது. ஆயினும் மேலும் செய்ய வேண்டியவை ஏராளமாக உள்ளன. சிறுதொழில்களுக்கு உள்ளமைப்பு வசதிகளையும், நிதி வசதிகளையும் செய்து கொடுப்பது மட்டும் போதுமானதல்ல. விற்பனை வாய்ப்புக் காணுதலும், தொழில்நுட்ப உதவியும் சிறுதொழில்களுக்குத் தேவைப்படுகின்றன. உள்நாட்டிலும் அயல்நாட்டிலும் விற்பனை செய்வதில் கடும்போட்டி ஏற்பட்டு உள்ளதால், உற்பத்தி முறைகளை ஒருமுனைப்படுத்துவதும், உற்பத்திச் செலவை குறைந்த பட்சத்திற்குக் குறைப்பதும் அவசியமாகிறது.

"தொழில் முனைவோர்களுக்காக—குறிப்பாகச் சிறு தொழில் முனைவோர்களுக்காக—இனியும் நாம் காத்துக் கொண்டிருக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. தொழில் முனையும் தன்மையை நாம் மனப்பூர்வமாக ஏற்படுத்த வேண்டும். தீவிர திட்டம் இவ்வகையில் ஒரு முயற்சியாகும். 5,900 சிறு தொழில்களைப் பதிவு செய்ய வேண்டும் என்ற குறிக்கோளை நமக்கு விதித்துக் கொண்டிருந்தாலும், நம்மால் 8,750 சிறு தொழில்களைப் பதிவு செய்ய முடிந்துள்ளது.

"அவ்வாறு பதிவு செய்யப்பட்டவைகளில், மூன்றில் ஒரு பகுதிக்கும் மேற்பட்டவை தொழில் துறையில் பின்தங்கிய 8 மாவட்டங்களில் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். பதிவு செய்யப்பட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள சிறு தொழில்கள் உற்பத்தியைத் துவங்குவதற்கு முறையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். புதிதாகப் பதிவு செய்யப்பட்டுள்ள பல சிறு தொழில் யூனிட்டுகளுக்கு வங்கி உதவி அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த யூனிட்டுகள் அனைத்தும் விரைவில் துவங்கப்படுவதற்குரிய எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

"புதிய, சிறிய தொழில் யூனிட்டுகளில் சிறப்புக்கவனம் செலுத்தப்பட்டு வந்தபோதிலும், முன்பே உள்ள யூனிட்டுகளின் தேவை,

[illegible]படவில்லை. மாநில தொழில் துறை இயக்கம், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் ஆகிய இரண்டும் முன்பே பதிவு செய்யப்பட்டுள்ள சிறு தொழிற்சாலைகளுக்கு உதவிடும் பொறுப்பைப் பங்கிட்டுக் கொண்டுள்ளன.

"இந்திய அரசும், சிறுதொழிற்சாலைகளைப் பற்றிய கொள்கை மற்றும் திட்டங்களை முறைப்படுத்துவதுடன் மறுஆய்வும் செய்து வருகிறது. சிறுதொழில் துறையில் நவீனமயமாக்குதல், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான திட்டம் அண்மையில் இந்திய அரசினால் அறிவிக்கப்பட்டது. இத்தகைய திட்டங்களின் பயன்கள், சிறு தொழிலதிபர்களுக்கு விரைவில் கிடைத்திடச் செய்ய மாநில தொழில் துறை இயக்கமும், 'சிட்கோ'வும் ஆவன செய்யும்.

"பதிவு செய்யப்பட்டுள்ள சிறு தொழில் யூனிட்டுகளில், குறிப்பிடத்தகுந்த எண்ணிக்கையுள்ள யூனிட்டுகள் ஏதாவது ஒரு காரணத்தால் துவக்கப்படாமலோ, மூடப்பட்டோ, உற்பத்தி நிறுத்தப்பட்டோ உள்ள நிலையில் உள்ளன என்பதை நான் அறிவேன். தற்காலிகச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள அத்தகைய யூனிட்டுகளின் பிரச்சினைகளை ஆராய, அவைகள் தனித்தனியே அணுகப்படும். செயற்படாமல் உள்ள சிறுதொழில் யூனிட்டுகளின் பிரச்சினைகளை ஆராய்ந்து, அவைகள் புத்துயிர் பெறுவதற்கான வழிமுறைகளைக் கூற [illegible] முதுநிலை அலுவலர்கள் அடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் நலிவுற்றிருக்கும் யூனிட்டுகளே முன்வந்து தங்களுடைய பிரச்சினையின் வகை மற்றும் அளவுகளைப் பற்றித் தெரிவிக்காவிட்டால், அரசின் முயற்சியால் மட்டும் மேற்கொள்ளப்படும் கணிப்பு, அந்த யூனிட்டுகளை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை முழு அளவில் அறிந்து கொள்ள உதவாது. சிறு தொழில்களை எதிர்நோக்கியுள்ள பல்வேறு பிரச்சினைகளைக் கண்டறியவும் அவைகளுக்குத் தீர்வுகாணவும் அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளுக்குத் தொழிலதிபர்கள் தங்களுடைய முழு ஒத்துழைப்பையும் நல்கிட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துக் கொள்கின்றேன்.

"தொழில் முனைவோர்கள் மற்றும் பொது மக்களிடம் தொழில் மயமாக்குவதின் அவசியம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ள தீவிர இயக்கம் செய்துள்ள தர அடிப்படையான பணி, மாநிலத்தின் மொத்த உற்பத்தியைப் பெருக்குவதில் புதிதாகப் பதிவு செய்யப்பட்டுள்ள யூனிட்டுகள் செய்யவிருக்கும் எண்ணிக்கை அடிப்படையான பணியைப் போல் முக்கியமானதாகும் என்று கருதுகின்றேன். இப்புதிய யூனிட்டுகள் விரைவில் செழிப்பான தொழில் முனைப்புகளாக மேம்பாடு அடையும் என்றும், மேலும் தொழில் முன்னேற்றம் ஏற்படுவதற்கு அடிப்படையாக அமையும் என்றும் நம்புகின்றேன். அவர்களுடைய முயற்சியில் வெற்றியும் செழிப்பும் ஏற்பட வாழ்த்துகின்றேன்."

(1[illegible]-11-1976 அன்று, சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெற்ற 5,900 சிறு தொழில்கள் பதிவு செய்யும் தீவிர திட்ட நிறைவேற்று விழாவிற்குத் தலைமை தாங்கி ஆற்றிய உரையின் தமிழாக்கம்)

## தேசிய ராணுவ அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியில் சேர நுழைவுத் தேர்வு!

டேராடூனிலுள்ள தேசிய ராணுவ அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியில் சேருவதற்கான நுழைவுத் தேர்வு, நாட்டின் பல்வேறு இடங்களில் 1977-ம் ஆண்டு பிப்ரவரி 16, 17 தேதிகளில் நடைபெறும்.

டேராடூனிலுள்ள தேசிய ராணுவ அகாடமியின் தலைவரிடமிருந்தும், மாணவர்கள் வசிக்கும் மாநிலங்களின் மாநில அரசு தலைமைச் செயலாளரிடமிருந்தும், தமிழ்நாடு, ஆந்திர மாநிலங்களைப் பொறுத்தவரையில் சென்னையிலுள்ள தமிழ்நாடு அரசு ஊழியர் தேர்வுக் கமிஷன், ஐதராபாத்திலுள்ள, ஆந்திரப்பிரதேஷ் அரசு ஊழியர் தேர்வுக்கமிஷன் செயலாளர்களிடமிருந்தும் பயிற்சி முறை பற்றிய முழு விவரங்கள், விண்ணப்ப நமூனாக்கள் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். தேசிய ராணுவ அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியின் விதிமுறைகள் அடங்கிய புத்தகம் ஒவ்வொன்றும் 90 பைசா விலைக்கு புது டில்லி, சிவில் லைன்ஸ் பகுதியில் உள்ள புத்தக வெளியீட்டுப் பிரிவின் மேலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

1977-ம் ஆண்டு ஜூலை முதல் தேதியன்று 11-12 வயது வரம்பிலுள்ளவர்கள் இக்கல்லூரியில் சேரலாம். இக்கல்லூரியில் சேர விரும்புவோரின் பெற்றோர்களோ அல்லது காப்பாளர்களோ தத்தம் பகுதியிலுள்ள மாநில அரசுத் தலைமைச் செயலாளர்களுக்குப் பூர்த்தி செய்த விண்ணப்ப நமூனாக்களின் இரு பிரதிகளை 1977 ஜனவரி 15-ம் தேதிக்குள் அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களோடு மாணவர்களின் கையொப்பம் இடப்பட்ட மூன்று பாஸ்போர்ட் அளவு புகைப்படங்களையும் அனுப்ப வேண்டும்.

எழுத்து மூலமான தேர்விலும், நேர்முகத் தேர்விலும் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் ராணுவ மருத்துவமனைகளில் மருத்துவ சோதனை செய்யப்படுவார்கள். முடிவாக எல்லாச் சோதனைகளிலும் தேர்வு பெற்ற மாணவர்களின் பெயர்கள் அந்தந்த மாநில அரசுகளுக்கு அனுப்பப்படும். பிறகு டேராடூனிலுள்ள தேசிய ராணுவ அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியின் தலைவர், தேர்வு பெற்ற மாணவர்களுக்கு அழைப்புக் கடிதம் அனுப்புவார்.



தோற்றம்: 8-12-1878 • மறைவு: 25-12-1972

# ராஜாஜி தொட்டதெல்லாம் தெளிவாகியது!

**— கல்கி**



கதைகளில் எத்தனையோ வகைக் கதைகள் இருக்கின்றன. அராபிக்கதை, அத்தைப் பாட்டிக் கதை, விக்ரமாதித்தன் கதை, மதனகாமராஜன் கதை. தற்காலத்து நவீனச் சிறு கதைகள் எல்லாம் இருக்கின்றன. உபநிஷதங்களிலும், பைபிளிலும் கூடக் கதைகள் இருக்கின்றன. இவற்றில் ராஜாஜியின் கதைகள், உபநிஷதக் கதைகளோடு சேர்க்கப்பட வேண்டியவை.

கட்டுரைகளில் எத்தனையோ வகைகள் உண்டு. ஒரு தடவை படித்து விட்டு எறிய வேண்டியவை. இரண்டு மூன்று தடவைகள் படித்துச் சிந்தித்துப் பயன்பெற வேண்டியவை. படிக்காமலேயிருந்தால் க்ஷேமம் என்ற இனத்தில் சேர்ந்தவை-இப்படிப் பலவகைக் கட்டுரைகள் உண்டு. பகவத்கீதையைப் போல் தினம் பக்தியுடன் பாராயணம் செய்ய வேண்டிய கட்டுரைகளும் உண்டு.

இந்தக் கடைசி வகையைச் சேர்ந்தவை ராஜாஜியின் கட்டுரைகள்.

சென்ற நாற்பதாண்டுக் காலத்தில் தமிழ் மொழியிலே எத்தனை எத்தனையோ வசன நூல்கள், கவிதை நூல்கள்-பதினாயிரம், லட்சம் என்ற கணக்கில் வெளியாகியிருக்கின்றன.

இவ்வளவு நூல்களிலே இன்னும் நூறு வருஷங்களுக்குப் பிறகு வரும் தமிழர் சந்ததிகள் படிக்கக் கூடிய நூல்கள் எவை என்று கேட்டால், பாரதியாரின் கவிதைகளும், ராஜாஜியின் கதைகள்- கட்டுரைகளும்தான் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

ஏனெனில் இந்தக் கதைகளில் வரும் பாத்திரங்கள் நம் காலத்து ஸ்திரீகள், புருஷர்களேயானாலும், அவர்களைக் கொண்டு விளக்கப் படும் உண்மைத் தத்துவம் முக்காலத்துக்கும் பொதுவானது: சாசுவதமானது; அழிவில்லாதது, உண்மைத் தத்துவத்தை விளக்கும் காரணத்தினலே, கதையின் ஓட்டமும் சுவையும் குறைந்து விடுகின்றனவா? படிக்க ஆரம்பிக்கும் போதே, "இதெல்லாம் பெரிய விஷயங்கள், நமக்கு எங்கே விளங்கப் போகிறது?" என்று தோன்றி விடுகிறதா?

ராஜாஜி அப்படியெல்லாம் நம்மைப் பயமுறுத்துவதில்லை. சின்னஞ் சிறு பிள்ளைகள் கூடப் படிக்க ஆசை கொள்ளும் முறையிலே கதையைத் தொடங்குகிருர். அப்புறம் கதையின் சுவாரசியத்திலே தங்கு தடை இல்லாமல் நம்மை இழுத்துக் கொண்டே போகிருர். கதையை முடிக்கும் போது, "இத்தனை நேரமும் நாம் கதை படித்தோமா, வேத மந்திரம் படித்தோமா?" என்று திகைக்கும்படிச் செய்து விடுகிருர்.

எளிய வாழ்வுக்கும் உயரிய சிந்தனைக்கும் ராஜாஜி உதாரண புருஷராக விளங்குகிருர். இந்த இரண்டு அம்சங்களையும் அவருடைய தமிழ் நடையிலும் காண்கிருேம்.

எளிமை என்ருல், இதைவிட எளிமையாகத் தமிழ் எழுதவே முடியாது என்று சொல்லலாம். ஆனுல், நடை எவ்வளவுக்கு எளியதோ, அவ்வளவுக்கு ராஜாஜி எழுதும் விஷயங்கள் உயர்வானவை.

இன்னும் ராஜாஜியிடம் நாம் காணும் ஒப்பற்ற தூய்மை, கட்டுப்பாடு, வினைத்திட்பம் ஆகியவற்றையும் அவருடைய தமிழ்நடையில் காண்கிருேம். மலைச் சுனையில் உற்பத்தியாகிப் பாருங்கற்களின் மீதும் கூழாங்கற்களின் மீதும் சலசல வென்று ஓடும் பளிங்கு போன்ற தூய்மையான ஓடை நீரில் எத்தகைய தெளிவை நாம் காண்கிருேமோ, அத்தகைய தெளிவை ராஜாஜியின் தமிழ் நடையில் காண்கிருேம்.

குற்ருலம், பாபநாசம் முதலிய மலைகளில் தெளிந்த நீரருவி ஆடிக் கொண்டும் பாடிக்கொண்டும் வரும்போது நடுவில் சில இடங்களில் ஆழமான சுனைகளில் விழுந்தும் வருவதுண்டு. அந்தச் சுனைகளில் கழுத்து அளவு ஆழமும், அதைவிட அதிகமான ஆழமுங்கூடச் சில இடங்களில் இருப்பதுண்டு. ஆனுல் சுனையில் குனிந்து பார்த்தோமானுல், அவ்வளவு ஆழத்தின் அடியில் கிடக்கும் கூழாங் கற்களும் சரள்கற்களும் நன்கு புலனுகும். அப்படியே ராஜாஜியின் கட்டுரைகளைப் படித்துக் கொண்டே போகும் போது சில சமயம் ஆழ்ந்த கருத்துக்களடைந்த பகுதிகளுக்கு வருகிருேம். ஆனுல் ஆழத்தைக் கண்டு நாம் பயப்படுவதில்லை. அடியிலுள்ள முத்துக்களையும் ரத்தினங்களையும் தெளிவாகக் கண்டு அதிசயிக்கிருேம். சிலர் தொட்டதெல்லாம் பொன்னுகும் என்று உபசாரத்துக்குச் சொல்வதுண்டு. ராஜாஜி தொட்டதெல்லாம் தெளிவாகிறதென்று நிச்சயமாகச் சொல்லலாம்.

**—ஆதாரம்: கல்கி இதழ் (1961)**



# தமிழ்நாட்டு அறிவு

**—திரு. வி. க**

ஆச்சாரியார் அறிவு நுண்ணியது; கூரியது; சிந்தை ஆழச் செல்வது; நியாய வாதம் வன்மையது. இராஜதந்திரம் அவர் அறிவுக்கும் சிந்தனைக்கும் வாதத்துக்கும் அகழியாக நிற்கும். தங்கோன் நிறுத்துவதில் ஆச்சாரியார் பேர் பெற்றவர். எனது அரசியல் வாழ்க்கை அவருடனும் உறவு கொண்டது.

எனது அன்பு ஒவ்வொரு தேச பக்தரை ஒவ்வொரு விதமாகச் சிறப்பித்துப் பேசும்; எழுதும். அவ்வன்பு இராஜகோபாலாச்சாரியாரை எப்படிப் பேசும்? எழுதும்? ஒரு முறை லஜபதிக்கும், ஆச்சாரியார்க்கும் பத்திரிகையில் வாக்கு வாதம் நடந்தது. அதைப்பற்றி 'நவசக்தி'யில் என் கருத்தைத் தெரிவிக்கப் புகுந்தேன். அப்பொழுது லஜபதியைப் பாஞ்சால சிங்கம் என்றேன்-ஆச்சாரியாரைத் தமிழ் நாட்டு அறிவு என்றேன்.

சக்கரவர்த்தி இராஜபோலாச்சாரியாரின் சென்னை உறைவிடம் 'திலகர் பவனம்' ஆயிற்று. இப்பவனத்துக்கு அணித்தே 'தேச பக்தன்' நிலையமிருந்தது. அவ்வணிமை ஆச்சாரியாரையும், என்னையும் அடிக்கடி சந்திக்கச் செய்யும். அச்சந்திப்பு ஆச்சாரியாரைத் தொழிலாளர் இயக்கத்திலும் ஈடுபடுத்தியது.

ஆச்சாரியாரைச் சென்னைக்கு அழைத்தது எது? வக்கீல் உலகம். அந்தப் பெரிய வக்கீல் உலகம் ஆச்சாரியாரை ஹைகோர்ட்டில் சில காலமாதல் வாதிக்க விடுத்ததா? இல்லை. இங்கேயே மனித முயற்சிக்கு மேம்பட்ட ஒரு சக்தியிருத்தல் விளங்குகிறது. அச்சக்தி ஆச்சாரியாரை என்ன செய்தது? அகிம்சா தர்ம தீட்சையில் வேட்கை கொள்ள ஏவியது; சத்தியாக்கிரக யாகத்தில் நாட்டம் பெறச் செய்தது; தியாகியாக்கியது.

'ரௌலட்' மசோதாவை முன்னிட்டுக் காந்தியடிகள் பரத கண்டத்தை வலம் வந்தார்; சென்னைக்கும் வந்தார்; எங்கே தங்கினுர்? 'திலகர் பவனத்'தில் தங்கினுர். அப்பவனத்தில் தென்னுட்டுத் தேச பக்தியே பொங்கித் ததும்பி வழிந்தது. ஆச்சாரியார் நிலையம் திருவள்ளுவர் விருந்ததிகாரமெனப் பொலிந்தது.

'திலகர் பவனம்' குருந்த மரமாயிற்று. காந்தியடிகள் தட்சணுமூர்த்தியானுர். இராஜகோபாலாச்சாரியார்வாதவூரடிகளானுர். தீட்சை சூட்மமாக நிகழ்ந்தது. ஆச்சாரியாரின் உடல் பொருள் ஆவியெல்லாம் காந்தியத்துக்கு அர்ப்பணமாயின.

1917-ஆம் ஆண்டில் சேலத்தில் ஆச்சாரியாரை என் கண் எப்படிப் பார்த்தது? 1919-ல் அக் கண் அவரை எப்படிக் கண்டது? அரசராயிருக்க அசாரியார். ஆண்டியானுர். யான் எப்பொழுதும் ஆண்டி. அதனுல் மாற்றம் எனக்கு நன்கு புலனுயிற்று.

இராஜகோபாலச்சாரியாரும் யானும் கதராண்டியானேம்; ஈருடல் ஓருயிரானேம்; சத்தியாக்கிரகப் போர்க் களத்தில் நின்றேம்; போர் புரிந்தோம்; பெரும் போர் புரிந்தோம். ஒருடல் சிறைப்பட்டது; மற்ருருடல் சிறைப்பட வில்லை.

வேலூரில் (4-12-1921) தமிழ் நாட்டுக் காங்கிரஸ் காரியக் கூட்டங் கூடியது. அவ்வேளையில் கூட்டத்திலேயே இராஜகோபாலாச்சாரியார், டாக்டர் ராஜன், இராமசாமி நாயக்கர், சுப்பிரமணிய சாஸ்திரியார் முதலிய எல்லோர்க்கும் 144 வழங்கப்பட்டது. எனக்கு மட்டும் அஃது வழங்கப்படவில்லை. அன்று மாலை வேலூர் கோட்டை மைதானத்தில் பெருங்கூட்டம் கூடியது. பேசுவோர் யார்? யான் பேசினேன். என்ன பேசினேன்? 'இப்பொழுது சட்ட மீறல் நடைபெறல் வேண்டும். ஆனுல் அது நடைபெருது. ஏன்? வேலூரில் கதர் மணங்கமழவில்லை. கதர் மணத்திடையே சட்ட மீறல் நிகழ்வது சிறப்பு. இன்னும் ஒரு வாரத்துக்குள் கதர் மணங்கமழ்ந்தே தீர வேண்டும். அம்மணச் சூழலில் நின்று, தேச பக்தர்கள் சட்டமீறுவார்கள்; சிறை புகுவார்கள். ஆதலின் உடனே வேலூர் கதர் அணிவ

...கதர் ... வண்ணமாவதாக ... கருத்துப்படப் பேசினேன்.

...வேலூரிலிருந்து திரும்பிய ... பக்தர் பலர் ஆங்காங்கே ...றைக்கு இரையாயினர். இராஜ...பாலாசாரியாரும், சுப்பிர...மணிய சிவ...ரியாரும் வேலூரி...லே கதர் மணம் கமழச் சட்ட...மீறிச் சிறை நோக்கினர்.

வேலூரில் அஹிம்சா தர்ம ...டீட்சிதர் காலம் எப்படிக் கழிந்தது? அவர் மற்றோர் அஹிம்சா தர்மத் தீட்சிதருடன் உறவு கொண்டார். அவ்வுறவு ஒரு தமிழ் நூலாயிற்று. ஆச்சாரியார் 'சோக்ரதர்' என்ற நூலுடன் வெளிவந்தார். ஆச்சாரியார் இயற்றிய அவ்வரிய தமிழ் நூல் எனது அணிந்துரையைப் புனைந்து வெளியாயிற்று.



...கயை காங்கிரஸுக்குப் பின்னே ஆச்சாரியாரின் பெரும் பொழுது ...க்க வேலையில் கழிந்தது. திருச்செங்கோட்டுக்கு அருகேயுள்ள புதுப்பாளையத்திலே காந்தி ஆசிரமம் அமைக்கப்பட்டது. அது ...ரோம்பல் தெளியும் ஆசிரமம் ...ன்று. அது சுறுசுறுப்பும் ஊக்க...மும் முயற்சியும் நாணயமும் ...றைந்து நிற்கும் உயிர்ப்பிடம். ...காந்தி ஆசிரமம் கதர்ச் சரங்கம் ...ஆயிற்று. தென்னாட்டிலே கதர் ...இயக்கத்திற்கு அதுவே பெரும் பீடமாயிருந்தது. அந்த நல்லாசிரமம் ஆச்சாரியார் மேற்பார்வையில் நடந்து வந்தது. அக் கதர் சரங்கத்தை யான் ஒரே முறை பார்த்தேன். அங்கே யான் போன போது ஆச்சாரியார் கையில் '...ராவிரம்' இருந்தது. அவ் ...வேளையில் அரிசிப் பொரிமா ...வந்தது. அதை அவர் எனக்குங் ...கொடுத்தார்; தாமும் உண்டார். ...அம்மாவ் தமிழ்த் தேனில் கலந்த ...பொரிமா அமிழ்தென இனித்தது.

## நேர்மையாகக் கிடைக்கும் புகழையே விரும்பியவர்!

ஒரு அன்பர் காந்திஜிக்கு தமிழ்நாட்டு அரசியலைப்பற்றிக் கடிதம் எழுதி இருந்தார். அந்தக் கடிதத்துக்கு காந்திஜி பதில் எழுதினார். அதில் ராஜாஜியின் குணத்தையும், திறமையையும் புகழ்ந்து தோத்திரம் செய்து எழுதியிருந்தார் காந்திஜி.

பதிலைப் பெற்ற அந்த அன்பர் காந்திஜியின் கடிதத்தில் ராஜாஜியைப் பற்றி அவர் குறிப்பிட்டிருந்ததைத் தமிழ் மக்களுக்கெல்லாம் தெரிவிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். இதனால் தமிழ் மக்களின் ஆதரவு ராஜாஜிக்கு அமோகமாகப் பெருகும் என்று அந்த அன்பர் தீர்மானித்தார். அதன்படியே காந்திஜியின் கடிதத்தைத் துண்டுப் பிரசுரமாக அச்சடித்து விட்டார். அச்சடித்தபிறகு தான் அவருக்கு அச்சம் பிறந்தது.

'இதை ராஜாஜிக்குக் காட்டாமல் விநியோகிக்கலாமோ கூடாதோ' என்று குழம்பியவர், முடிவில் நோட்டீஸை ராஜாஜியிடம் காட்டித் தம் விருப்பத்தை வெளியிட்டார்.

துண்டுப் பிரசுரங்களைப் படித்தார் ராஜாஜி. பிறகு நிதானமாக, "அச்சடித்த அத்தனை பிரதிகளையும் கண்டிப்பாகக் கொளுத்தி விடுங்கள். இவைகளை விநியோகிக்கவே கூடாது. காந்திஜியின் சிபாரிசினால் நான் தமிழ் மக்களின் ஆதரவைப் பெறுவது பிரயோஜனமில்லை. காந்திஜி போதித்த சத்திய மார்க்கத்தை நான் சரியாகக் கடைப்பிடித்தொழுகி இருந்தால், தமிழ் மக்களின் ஆதரவை நான் ஒருக்காலும் இழந்து விடமாட்டேன்" என்று கூறினார்!

ராஜாஜியின் இந்த முடிவைக்கேட்ட அன்பர்கள் திகைத்துப் போனார்கள்! உடனடியாகக் கைமேல் கிடைத்த பலனை உபயோகப் படுத்திக் கொள்ளாமல், கனவு உலகில் வாழும் வேதாந்தியாகி விட்டாரே நம் ராஜாஜி என்று வருந்தினார்கள். வியாகுலப்பட்டார்கள். அரிய சந்தர்ப்பத்தைக் கை நழுவ விடுகிறாரே என்று அங்கலாய்த்தார்கள் அன்பர் சிலர்! நேர்மையாகக் கிடைக்கும் புகழையே விரும்புபவர் ராஜாஜி என்பதை அறியாத அப்பாவிகள் அவர்கள்! அத்தனை துண்டுப் பிரசுரங்களும் அக்கினி பகவானுக்கு அர்ப்பணமாயின!.

(கௌசிகன் எழுதிய 'ராஜாஜி' என்னும் நூலிலிருந்து..)

# ராஜாஜியின் நிர்வாகத் திறன்

—ஆர். வெங்கட்ராமன்,
முன்னாள் தொழில் அமைச்சர்,
தமிழ்நாடு அரசு.

ராஜாஜி அவர்கள் ஒத்துழையாமை இயக்கத்தில் தீவிர பங்கு கொண்டவர். சுயராஜ்யக் கட்சி வற்புறுத்திய சட்டசபைப் பிரவேசத்தைக் கடுமையாக எதிர்த்தவர். சட்டத்தை மீறி வேதாரண்யத்தில் உப்புச் சத்தியாக்கிரஹத்தைப்புகழுடன் நடத்தியவர்.

இவ்விதமாக சட்ட மறுப்புகள் செய்த அவர் 1937-ஆம் ஆண்டு ஒன்றுபட்டிருந்த சென்னை ராஜதானிக்கு முதல் மந்திரிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பொழுது பலருக்குப் பலவிதமான ஐயப்பாடுகள் எழுந்தன.

அதே நேரத்தில் தனது மனச் சாட்சிக்கு எது சரி அல்லது நியாயம் என்று தோன்றுகிறதோ அதை யார் எதிர்த்தாலும் விட்டுக் கொடுக்கமாட்டார். பாகிஸ்தான் பிரிவினையை அவர் வலியுறுத்தியது, அவரை மக்கள் வெறுப்புக்கும் பாரதத் தலைவர்கள் எதிர்ப்புக்கும் உள்ளாக்கியது என்றாலும் இறுதிவரை அவர் தனது கருத்தை மாற்றிக்கொள்ளவில்லை. அதேபோல தனக்குத் தவறு என்று தோன்றியதை யார் சொல்லுக்காகவும் ஏற்றுக் கொள்ள மாட்டார். இதனால் அரசு ஊழியர்களும், மேல்மட்ட அரசாங்க அதிகாரிகளும்-ஏன்? பொதுமக்களும்கூடச் சற்றுக் கலவை கொண்டனர். சட்டத்தை மீறிய ஒருவரால் எப்படி சட்டம் ஒழுங்கு இவற்றை நிலைநாட்ட முடியும் என்று எண்ணினர்.

பிரிட்டிஷ் அரசாங்கமோ நிர்வாகத் துறையில் ராஜாஜி எந்த முறையைக் கையாளுவாரெனத் தெரியாமல் ஒரு புறம் தவித்தது. அதே நேரத்தில் பிரிட்டிஷ் அடக்கு முறைகளை அமல்செய்த அதிகாரிகளுக்கு நல்ல பாடம் கற்பிக்க வேண்டுமென்று பொது மக்களும் குறிப்பாக காங்கிரஸ் கட்சியினரும் மறுபுறத்தில் துடித்துக் கொண்டிருந்தனர். ராஜாஜி அவர்கள் தனது தெளிந்த அறிவாற்றலாலும், உயர்ந்த பண்பினாலும் இந்த நிலையைச் சமாளித்ததுமல்லாமல் நல்ல ஜனநாயக



நாட்டின் நலனுக்காகவே உழைத்த முப்பெருந் தலைவர்கள்!

முறையை வரும் சந்ததியாருக்கு எடுத்துக் கொடுத்தார். ஆளும் கட்சிக்கும் நாட்டின் நிர்வாகத் துக்கும் உள்ள எல்லைகளை வரையறுத்துக் கூறி, சட்டசபை அங்கத்தினர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நெறிகளையும் கற்பித்தார். இதனால் கட்சி அங்கத்தினரிடத்தில் சற்று மனக்கசப்பு ஏற்பட்டாலும் அதைப் பொருட்படுத்தாமல் தனது கொள்கையை நிறைவேற்றினார்.

நிர்வாகத் துறையில் ராஜாஜி ஒரு சம்பிரதாய பிற்போக்குவாதியா என்று கேட்டால், இல்லை என்றே கூறுவேன். 1930-ஆம் ஆண்டில் ஏற்பட்ட உலக மந்தத்தின் (World depression) காரணமாக விவசாயப் பண்டங்களின் விலை வெகுவாகச் சரிந்துவிட்டது. நமது நாட்டிலும் வேளாண்மையையே தமது வாழ்வாகக்கொண்ட மக்கள் தாங்கள் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க இயலாமல் கடன் சுமையில் தவித்துக்கொண்டிருந்ததுமன்றி, தங்கள் நிலங்களை இழக்கும் நிலைக்கு வந்துகொண்டிருந்தனர். வேளாண்மை தமிழ்நாட்டின் பொருளாதாரத்துக்கு முதுகெலும்பு போன்றது என்பதை உணர்ந்த ராஜாஜி 1938-ஆம் வருஷத்திய கடன் நிவாரணச் சட்டத்தைப் பிறப்பித்து விவசாயிகள் துயர் துடைத்தார்.

இன்றுபோலவே, அன்றும் அச்சட்டத்திற்கு பலத்த எதிர்ப்பு உருவாயிது. ஒப்பந்தங்களின் புனிதம் அழிந்துவிடும்; கிராமப் பொருளாதாரம் குறிப்பாகக் கொடுக்கல்—வாங்கல் முறை நசித்துவிடும் என்றெல்லாம் கூப்பாடு போட்டனர். ஆனால் இவை ஒன்றும் ராஜாஜியை அச்சுறுத்தவில்லை. தாம் ஏற்ற பணியைத் தீவிரமாகவும், வெற்றிகரமாகவும் செயல்படுத்தினார்.

1952-54-க்குமிடையே ராஜாஜி இரண்டாவது முறையாக சென்னை ராஜதானியின் முதல் அமைச்சர் பதவி வகித்தபொழுது தஞ்சை மாவட்டத்தில் விவசாயத் தொழிலாளர் பிரச்சனை தலையெடுத்து. பல இடங்களில் குழப்பங்கள் விளைவித்தது. குறிப்பாக, தஞ்சையிலுள்ள பண்ணையாட்களுக்கு நியாயமான கூலி கிடைப்பதில்லை, வேலை நிரந்தரமுமில்லை. இவற்றிற்கான பாதுகாப்புகள் சட்டபூர்வமாக எதுவும் இல்லை.

அன்று தஞ்சைத் தொகுதியின் பாராளுமன்றத்தின் உறுப்பினராகவும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தொழிலாளர் பகுதியின் பொறுப்பாளராகவும் இருந்த என்னை ராஜாஜி அழைத்து இப்பிரச்சனை சம்பந்தமாகப் பேசினார். பண்ணையாட்களின் நிலையை நான் விளக்கியபொழுது முதலில் ராஜாஜி சற்று நம்பக் கூட இல்லை. நான் எழுதிக் கொடுத்த விவரங்களை அதிகாரிகளுடனும், சகாக்களுடனும் தீவிரமாக விசாரித்து உண்மை உணர்ந்தவுடன் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தை அவசரப் பிரகடனம் செய்தார். இது ஒரு பிற்போக்குச் சம்பிரதாயவாதி செய்யும் காரியமல்ல.

மற்றும் ஓர் உதாரணம் கூறலாம். சென்னையில் முதல் காங்கிரஸ் அமைச்சரவை நடந்துகொண்டிருந்த காலத்தில் பஞ்சாலைத் தொழிலில் பெரும் நெருக்கடி. தென் இந்தியாவிலேயே மிகப் பெரிய நூற்பு ஆலையான மதுரை மில்ஸ் கதவடைப்பு செய்திருந்தது. தொழிலாளர்களைப் பட்டினி போட்டு, பணிய வைத்து, தங்கள் நிபந்தனைகளை ஏற்கும் தொழிலாளர்களை மட்டும் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்வதென்றும் மற்ற தொழிலாளர்களைப் பழிவாங்குவது என்றும் முடிவெடுத்து மில்லைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்தது. இணையற்ற தொழிலாளர் தலைவரும், பிற்காலத்தில் தொழிற் கோர்ட்டு தீர்ப்புகளில் சர்க்கார் குறுக்கிடு செய்யக்கூடாது என்ற கொள்கையை நிலைநாட்டுவதற்காக மத்திய அரசின் தொழிலாளர் நலன் மந்திரிப் பதவியைத் துறந்தவருமான திரு வி. வி. கிரி அவர்கள் ராஜாஜி அமைச்சரவையில் தொழிலாளர் இலாகா மந்திரியாக இருந்தார். தொழிலாளர்களுடன் ஒப்பந்தமில்லாமல் ஆலையைத் திறப்பதனால், சட்டம் ஒழுங்கு இவைகளுக்குக் குந்தகம் ஏற்படும் என்று காரணம் காட்டி மில் திறப்பதற்குத் தடை உத்தரவு விதிக்கவேண்டுமென திரு கிரி அவர்கள் ராஜாஜிக்கு ஆலோசனை கூறினார். பிரிட்டிஷார் ஆட்சி நடக்கையில் பிரிட்டிஷ் கம்பெனிக்கு எதிராக இவ்விதத் தடை உத்தரவு ஒன்று பிறப்பிப்பதென்பது அக்காலத்தில் யாரும் கேட்டிராத விஷயம். ஆனால் துணிவுடன் ராஜாஜி அவர்கள் உடனடியாகத் தடை உத்தரவு பிறப்பித்து, ஆயிரக்கணக்கான ஆலை ஊழியர்களைப் பழிவாங்குவதிலிருந்தும், பட்டினி போடுவதிலிருந்தும் காப்பாற்றினார்! தொழிற்சங்க இயக்கத்தின் சரித்திரத்தில் இவ்வித புரட்சிகரமான செயல் மற்றொன்று இடம் பெறவில்லை.

சமுதாய சீர்திருத்தத்தின் வழிகாட்டியாகவும், கருவியாகவும் அரசு திகழவேண்டுமென்பது ராஜாஜியின் கொள்கை. ஆலயப் பிரவேசம், மதுவிலக்கு போன்ற சமுதாய முன்னேற்றத் திட்டங்களைச் சம்பிரதாயவாதிகளின் எதிர்ப்புக்கிடையே தீவிரமாக நிறைவேற்றினார். தன்னை ஒரு சமுதாயச் சீர்திருத்தப் போர் வீரனாகக் கருதினாரேயன்றி, அலங்கார மேடையில் அமர்ந்திருக்கும் சித்திரமாக எண்ணியதில்லை.

தனது சொந்த வாழ்க்கையில் கையாண்ட எளிமையையும் சிக்கனத்தையும் பொதுவாழ்விலும் கடைப்பிடித்தவர். எனவே, அவர் காலத்தில் படாடோபமான பெருந்திட்டங்கள் தீட்டப்படவில்லை. பெருந்திட்டங்களைவிட சிறுசிறு திட்டங்களுக்கே அவரது ஒப்புதல் எளிதில் கிடைத்தது. ராட்சதத் திட்டங்களில் ஏராளமாக செல்வம் விரயமாக்கப்படுகின்றது, திறமை குறைகின்றது என்பதெல்லாம் அவருடைய கருத்து.

எனக்கு இன்னும் ஒரு விஷயம் பசுமையாக நினைவிருக்கிறது. 1953-ஆம் ஆண்டு சென்னை டிராம்வே கம்பெனி மூடப்பட்டவுடன், கம்பெனியின் சகல சொத்துக்களையும் 20 இலட்ச ரூபாய்க்குக் குறைவாக அரசாங்கத்துக்குக் கொடுப்பதாகக் கூறினார்கள்.

அதை ஏற்றுக் கொள்ளும்படி நான் ராஜாஜியிடம் வாதாடினேன்.

''20 லட்சமா''? என்று வியந்தார். ''நீங்கள் அமைச்சராக இருந்தால், கஜானாவைக் காலி செய்து விடுவீர்கள் போலிருக்கிறது'' என்று வேடிக்கையாக ஆனால் திட்டவட்டமாக மறுத்துவிட்டார்.

ஆனால் இதே ராஜாஜி . மதுவிலக்கு அமல்செய்து ஏழை எளிய மக்கள் துயர் துடைக்க வேண்டுமென்பதற்காக கலால் வருமானத்தை இழப்பதற்குத் துணிந்தார். அவரை பொருளாதார நிபுணர் என்று கூறமுடியாவிட்டாலும், ஆச்சரியப்படத்தக்க அளவுக்கு நிதி நிர்வாகத்திறன் அவரிடமிருந்தது. சென்னை சட்டசபையில் பொருளாதார மேதை திரு டி.டி. கிருஷ்ணமாச்சாரி போன்றவர்கள் விற்பனை வரிக்கு எதிராகப்புரிந்தவாதத்தை முறியடித்து ராஜாஜி கொடுத்த விளக்கங்கள் வரலாற்றுப்பெருமை உடையதாகும். வரி விதிப்புக் கொள்கைகள், முறைகள் இவற்றின் நுணுக்கங்களை அவர் எடுத்துக் கூறிய முறை அவர் அறிவாற்றலுக்கு அழியாச் சான்றாகும்.

ராஜாஜி அவர்கள் மத்திய அரசின் அமைச்சராகவும், வங்கத்தின் ஆளுநராகவும், அகண்ட இந்தியாவின் கவர்னர்ஜெனரலாகவும் பணியாற்றியிருக்கிறார். ஒவ்வொரு பதவியின் வழிமுறைகளையும் நேர்மையுடனும் உறுதியாகவும் ஜனநாயக அடிப்படையில் கடைப்பிடித்து வந்திருக்கிறார்.

பொதுவாக ராஜாஜி அவர்கள் பிடிவாதக்காரர், தன் வாதத்தைச் சாதிப்பவர் என்ற எண்ணம் நிலவியது உண்டு. ஆனால் அவர் சட்டசபைகளில் நல்ல கருத்தைக் கூறினால் ஏற்க மறுத்ததில்லை. தாற்காலிக பார்லிமெண்டில் குற்றத்துறை விதி முறைகள் சட்டத் திருத்தம் விவாதிக்கப்படும் பொழுது, ஓர் உயர்நீதி மன்றத்திலிருந்து வேறு உயர்நீதி மன்றத்துக்கு வழக்கை மாற்றும் அதிகாரம் மத்திய அரசுக்கு வழங்கலாமென்ற திருத்தத்தை ராஜாஜி சற்று அவசரப்பட்டு ஒப்புக் கொண்டு விட்டார். அதற்கு நான் ஆட்சேபனை எழுப்பினேன். நீதி நிர்வாகப் பிரிவினை என்பது நமது அரசியல் சட்டசாசனத்தில் பொறிக்கப்பட்ட லட்சியமாகவிருக்கும் பொழுது வழக்கை மாற்றும் அதிகாரத்தை மத்திய அரசுக்கு அளிப்பது கொள்கைக்கு மாறானதென்றும் அந்தப் பொறுப்பு சுப்ரீம்கோர்ட்டுக்கே உரியதென்றும் வலியுறுத்தினேன். நியாயத்தை உணர்ந்தவுடன் ராஜாஜி தன் ஒப்புதலை வாபஸ் பெற்றதுமன்றி, எதிராகவும் ஓட்டளித்தார்.

அவ்வாறே விற்பனை வரி, சென்னை சட்டசபையில் ஆய்வுக் குழுவின் பரிசீலனையிலிருந்த பொழுது, திரு டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் எதிர்க்கட்சியிலிருந்த போதிலும் நியாயமாகக் கொடுத்த பல திருத்தங்களை ஏற்றுக் கொண்டார். ஜனநாயகத்தின் பண்பு கட்சிப்பாகுபாடின்றி நேர்மையான நிர்வாகம் நடத்துவது: அதேபோலக் கட்சி வேற்றுமையின்றி நியாயமான ஆலோசனைகளை ஏற்பது, இவ்விரண்டிற்கும் எடுத்துக்காட்டாக விளங்கியவர் ராஜாஜி அவர்கள்.

பாரதத்தின் முதல் கவர்னர் ஜெனரலாக இருந்தபொழுது பாரதப் பிரதமர் நேரு அவர்களுடன் நல்லுறவு கொண்டிருந்ததோடு எடுப்பான யோசனைகள் கூறி அவருக்கு வழிகாட்டியாக விளங்கினார்.

ஆனால் பிரதமருடைய அதிகார எல்லைக்குட்பட்ட எவ்விஷயத்திலும் தலையிட்டதில்லை. பொதுவாகப் பிறர் தலையிடக்கூடாது என்று வற்புறுத்துபவர்கள், தாங்கள் குறுக்கிடாமல் இருக்க மாட்டார்கள். ராஜாஜி இதற்கு இலக்கணம் வகுத்தவர். சொல்லுக்கும் செயலுக்கும் முரண்பாடு அறியாதவர்.

சுருங்கச் சொன்னால் ராஜாஜி ஓர் அரசியல் மேதை.

செயல் வீரர்

பற்றற்ற துறவி

வரலாற்றில் நிரந்தர இடம் பெற்ற அரிய பிறவி

இதனால்தான், காந்திஜி அவர்கள் ராஜாஜியைத் தனது மனச்சாட்சிக் காப்பாளர் (Conscience keeper) என்று கூறினார்.

நன்றி : சென்னை வானொலி நிலையம்



பாரதத்தின் பெருமையைப் பாரெங்கும் பரப்பிய 'பாரத ரத்னா'க்கள் !

# ராஜாஜி கடைசியாகப் போட்ட கையெழுத்து!

ராஜாஜி கடைசியாகப் போட்ட கையெழுத்து அவரது 'திக்கற்ற பார்வதி'யைப் படமாக்க ஒப்புக் கொண்டு, கதையின் போக்கு மாறாமல் படமாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, போட்டதுதான்.

இந்த ஒப்புதல் கடிதத்தைத் 'திக்கற்ற பார்வதி'யின் பட டைரக்டர் சிங்கீதம் சீனிவாசராவ பிரேம் போட்டு தனது அலுவலகத்தில், மாட்டி வைத்திருக்கிறார்.

'திக்கற்ற பார்வதி' ராஜாஜியின் ஊரான தொரப்பள்ளியில் இருபத்தேழு நாட்களில் படமாக்கப்பட்டிருக்கிறது.

ஒரு குடியானவனின் இரண்டு மகன்களில் இளையவன் சோம்பேறி. திருமணமானவன். உழைப்பின் பலனை அறிய வேண்டுமென்பதற்காக அவனைத் தனிக் குடித்தனம் நடத்த அனுப்புகிறார்கள் பெற்றோர். அவன் வண்டி ஓட்டிக் கைநிறையச் சம்பாதிக்கிறான். நண்பர்கள் பலரின் கெட்ட பழக்கத்தினால் குடிக்கக் கற்றுக் கொள்கிறான். கடன் படுகிறான். கடன் கொடுத்தவனிடம் கற்பைப் பறிகொடுக்கிறாள் அவன் மனைவி — இப்படிச் செல்கிறது 'திக்கற்ற பார்வதி'யின் கதை.

(நன்றி : தினமணிகதிர்)

# அஞ்சலக வங்கியின் மாபெரும் பரிசுத் திட்டம்

ஆண்டுக்கு இருமுறை
குலுக்கல்கள் ஜனவரியிலும் ஜூலையிலும் நடைபெறும்

ரூ. 20¼ இலட்சத்திற்கு
11,116 பரிசுகள்

ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20¼ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட
11,116 பரிசுகள் உண்டு.

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. | 1,00,000 |
| 5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50,000 |
| 10 மூன்றாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 20,000 |
| 100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 5,000 |
| 1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 500 |
| 10,000 ஆறாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50 |

ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.

உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெறாதவர்க்கும் அளிக்கப்படும்.

விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

இயக்குநர்,
தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,
சென்னை-600 002.


# ராஜாஜி -சில நினைவுகள்

—சுப்புடு

ஆங்கிலத்தில் 'Meticulous' என்பார்கள். அதன் தமிழாக்கம் பொருத்தமாகச் சொல்ல வேண்டுமானால், ராஜாஜிதான். அவருடைய நுண்ணறிவு உலகப் பிரசித்தி! ஆய்ந்தோய்ந்து பாராமல் எந்தக் காரியத்திலும் செயல்படமாட்டார்.

அவருடன் சற்றே 'தூரத்தில்' இருந்து 'நெருங்கிப்' பழக எனக்குப் பல வாய்ப்புகள் கிட்டின.

கல்கியின் 'கள்வனின் காதலி'யை நாடகமாக அரங்கேற்றத் தீர்மானித்திருந்தோம். திரு பூர்ணம் விசுவநாதன் அதை நாடகமாக்கினார். அதில் பிரதான பாத்திரமாகவும் நடித்தார். அப்போது டில்லியில் கல்வி-கலை மந்திரியாகப் பணியாற்றியவர் ராஜாஜி. அந்த நாடகத்திற்குத் தலைமை தாங்க மனம் உவந்து ஒப்புக் கொண்டார். நாடக ஒத்திகைகள் மும்முரமாக நடந்துகொண்டிருந்தன. நாடகத்திற்கு இரண்டு மூன்று நாட்கள்தான் இருந்தன. அந்தச் சமயம் இந்து-முஸ்லீம் தகராறு தலையெடுத்திருந்தது. எந்த நிமிடம் அது வகுப்புக் கலவரமாக மாறுமோ என்ற அச்சம் எல்லோர் மனத்திலும் குடிகொண்டிருந்தது. ஏதோ கடவுளை நம்பி நாங்கள் எங்கள் முயற்சியை விடாப்பிடியாகக் கடைப்பிடித்து வந்தோம். நாடகம், திருச்சி நேஷனல் கல்லூரி உதவி நிதிக்காக.

நாடகத்திற்கு இரண்டே நாள் முன்பு டில்லி முஸ்லீம் பத்திரிகையான 'டான்' இதழில் ஒ அதிர்ச்சி தரும் தலையங்கம் கா சாரமாகத் தீட்டப்பட்டிருந்தது அத் தலையங்கத்தின் சாராம்ச வருமாறு:

''டில்லி வாழ் தமிழர்கள் கல் ரா. கிருஷ்ணமூர்த்தியின் 'கள் னின் காதலி' என்ற நாடகத்தை அரங்கேற்றப் போவதாக கேள்வியுறுகிறோம். மத்திய சர்க்கார் நிதி இலாகாவைச் சேர்ந் சுப்புடு என்னும் நபர் அ டைரக்ட் செய்வதாகவும் அ கிறோம். வானொலியைச் சேர்ந் பூர்ணம் விசுவநாதன் என்பவ அதை நாடகமாக்கியுள்ளதா

முதறிஞர் ராஜாஜி அவர்களின் பிறந்த வீடு (தருமபுரி மாவட்டம், தொரப்பள்ளி என்ற ஊரில் உள்ளது).



வும் அறிகிருேம். இந்த நாடகத்திற்கு ராஜாஜி தலைமை தாங்கப் போகிருராம்.

''துரதிருஷ்ட வசமாக இந்த நாடகத்தில் எங்கள் மதிப்புக்குரிய தலைவர் காயிதே ஆஜம் ஜின்ஞ அவர்களை நையாண்டி செய்து சில காட்சிகள் புகுத்தப்பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிருேம். இது எவ்வளவு தவருன காரியம் என்பது நாங்கள் சொல்லத் தேவையில்லை. ஆச்சரியம் என்னவென்ருல், இந்த நாடகத்திற்கு மத்திய கல்வி-கலை மந்திரி ராஜாஜி தலைமை தாங்கப்போவது தான்! இந்த நையாண்டி நாடகத்திற்கு இந்த மந்திரி தலைமை வகிக்க எப்படி ஒப்புக்கொண்டார் என்பது எங்களுக்கு வியப்பையும் வருத்தத்தையும் தருகிறது. இது தான் காங்கிரசின் கொள்கையா என்று சந்தேகிக்க இடம் தருகிறது.

''ஒன்று மாத்திரம் சொல்ல விரும்புகிருேம். இரண்டு கைகள் சேர்ந்தால்தான் சத்தம். இம் மாதிரி கேலிக்கூத்துக்களில் தமிழர்கள் ஈடுபட்டால், நாங்கள் வெறுமே பார்த்துக் கொண்டு சும்மா இருக்க மாட்டோம்.''

வயதில் சிறியவர்களாகிய எங்களுக்கு இந்தத் தலையங்கம் எவ்வளவு அதிர்ச்சியையும் பயத்தையும் தந்திருக்கும் என்பதை வாசகர்களின் ஊகத்திற்கே விட்டு விடுகிறேன். ஒன்றுமே தோன்றவில்லை. அப்படியே செயலற்றுப் போய்விட்டோம். 'டான்' பத்திரிகையைக் கையிலேந்திக் கொண்டு காலை ஆறரை மணிக்கு ராஜாஜியின் இல்லத்தை நோக்கி விரைந்தேன். தலையங்கத்தை அவரிடம் சமர்ப்பித்தேன். சாவதானமாகக் கூர்ந்து படித்தார். ஏதோ சொல்ல முயற்சித்தேன். வாய் உளறியது; கை நடுங்கியது.

''ஏன் இவ்வளவு பதற்றப்படுகிருய்? பொதுக் காரியத்தில் ஈடுபடுபவர்கள் நிதானம் இழக்கக் கூடாது. அது சரி, உன் நாடகத்தில் உண்மையாகவே இம் மாதிரி நையாண்டிக் காட்சிகளை இணைத்திருக்கிருயா? அது ஆபத்து என்று தோன்றவில்லையா?''

''கடவுள் சத்தியமாக அப்படி ஒன்றும் செய்யவில்லை. ஆதாரத்திற்கு நாடக நகல் ஒன்று கையோடு கொண்டு வந்திருக்கிறேன். இது யாரோ எனக்கு வேண்டாதவர்கள் செய்த சூழ்ச்சி.''

''அப்படி இல்லை என்று நீ வாக்குறுதி கொடுத்தாலே போதும். நீ கவலைப்படாமல் போய் நாடகத்தை நடத்து. இரண்டு நாள் போடுகிருய். அல்லவா? இரண்டு நாளும் வந்திருந்து தலைமை தாங்குகிறேன். இதற்கு வேண்டிய பரிகாரத்தை நான் கவனிக்கிறேன். நீ போகலாம்.''

நான் வெளியேறிய கையோடு 'டான்' ஆசிரியர் அல்டாப் ஹுசேனை ஓர் உலுக்கு உலுக்கியிருக்கிருர் போலும்! ''ஆய்ந்தோய்ந்து பாராமல், சம்பந்தப்பட்டவர்களை விசாரிக்காமல் இப்படி ஒரு தவருன தலையங்கம் எழுதினது பத்திரிகை தர்மத்துக்கு விரோதமானதல்லவா?'' என்று தொலைபேசி மூலம் ஆசிரியரைக் கண்டித்திருக்கிருர் என்று பின்னர் அறிந்தேன். அடுத்த நாள் 'டான்' பத்திரிகையில் கட்டம் கட்டி மன்னிப்புத் தெரிவிக்கப்பட்டது.

சென்னை சட்டசபையில் மதுவிலக்கு மசோதா விவாதிக்கப்பட்டு வந்தது. பதனீருக்குத் தடையில்லை என்பது அம் மசோதாவில் ஒரு ஷரத்து. பதனீர் சாப்பிடலாம், கள் சாப்பிடக் கூடாது என்பது அம் மசோதாவின் அடிப்படை.

ஓர் அங்கத்தினருக்குக் கொஞ்சம் கிண்டலாகப் பேசவேண்டும் என்று தோன்றியது போலும். அல்லது சட்டசபை விவாதத்தில் லேசாகக் கொஞ்சம் நகைச்சுவையைப் புரையோடலாம் என்று தோன்றியிருக்கலாம். ஒரு கேள்வி பாணம் தொடுத்தார். 'பதனீர் சாப்பிடலாம், கள் சாப்பிடக் கூடாது என்று சொல்கிறீர்களே? ஒருவன் பதனீர் சாப்பிட்டுவிட்டு அது வயிற்றுக்குள் போனபின் சற்று நேரம், கழித்து, அது கள்ளாக மாறிவிட்டால், காவல் துறையாளர்கள் எப்படிக் கண்டு பிடிப்பார்கள்? நிரூபிப்பீர்களா?''

சபையில் லேசாகச் சிரிப்பொலி உண்டாகியது. . அதையொட்டி ராஜாஜி என்ன பதில் அளிப்பார் என்ற ஆவல் முந்தியது. ஆனல் ராஜாஜியா சலசலப்புக்கு அஞ்சுபவர்? பட்டென்று பதில் வந்தது.

''ரொம்ப சுலபமாயிற்றே? பதனீர் அருந்திய பின் அங்கத்தினர் இப்போது பேசியது போல் பேசினல், பதனீர் கள்ளாக மாறிவிட்டது என்று எளிதில் கண்டு பிடித்து விடலாமே!''

(நன்றி: தினமணி கதிர்).

சென்னையில் உள்ள ராஜாஜி நினைவாலயம்.



# வாதியும் அவரே வக்கீலும் அவரே



ஒரு நாள் காலை சுமார் பத்து மணி இருக்கும். ராஜாஜி அவர்கள் கோர்ட்டுக்குக் கிளம்புவதற்கான நிலையில் தயாராக இருந்தார். அப்போது யாரோ ஒருவர் வாசலில் குடும்பத்தோடு வந்து நின்ருர் மனைவி, குழந்தைகள்,. வந்தவர் காணக் கௌரவமுள்ளவராகத் தோன்றிஞர்.

வந்தவரை ராஜாஜி வரவேற்று என்ன காரியம் என்று வினவிஞர். வந்தவர், குடும்பத்துடன் பிரார்த்தனைக்குத் திருப்பதி வந்ததாகவும் பிரார்த்தனை முடிந்து திரும்பும்போது வழியில் பணப்பையைப் பறி கொடுத்து விட்டதாகவும், ஆகவே ஊருக்குச் செல்ல ராஜாஜி தான் உதவவேண்டும் என்றும் வேண்டிக் கொண்டார்.

. வழக்கமான நிதானத்துடன் ராஜாஜி அவர்கள் உணர்ச்சி வசப்படாமல் எவ்விதப் பரபரப்புமடையாமல், ''இவ்வளவுதானே? கவலைப்படாதீர்கள். வண்டி மாலையில்தான்! நீங்கள் வேறு எங்கும் போய் அலையவேண்டாம். என் வீட்டிலேயே குளித்துச் சாப்பிட்டு விட்டு இளைப்பாறிக் கொண்டிருங்கள். இன்றைக்கு முக்கியமான கேஸ் ஒன்றுஇருக்கிறது. நான் கோர்ட்டுக்குப் போய் விட்டுப் பகல் திரும்பி வந்து விடுகிறேன்'' என்று கூறி அவர்களை உபசரிக்குமாறு உள்ளேயும் உத்தரவு செய்து விட்டு வெளியேறிஞர்.

கோர்ட்டுக்கா போஞர்? அது தான் இல்லை. வந்தவரின் வார்த்தைகளில் ஏனே அவருக்கு நம்பிக்கை விழவில்லை. எதையும் அறிவுக் கூர்மையோடு ஆராயும் ஆச்சாரியாருக்குத்தான் இந்தத் திறன் உண்டு போலும்! இனம் புரியாத சந்தேகத்துடன் தபால் நிலையத்துக்குச் சென்ருர். வந்தவர் கூறியது போல் யாராவது அந்த ஊரில் இருக்கின்ருர்களா, என்று கேட்டு, வந்தவர் கூறிய ஊருக்கு அவசரத் தந்தியொன்று கொடுத்தார். பதிலுக்காகக் காத்திருந்தார்.

குறித்த நேரத்தில் பதில் வந்தது, அந்தப் பெயர் • கொண்டவர் அங்கு யாருமில்லை என்று! தன் சந்தேகம் வீண் போகவில்லை என்ற மனநிறைவோடு கோர்ட்டுக்குப் போஞர் ராஜாஜி.

அதே நேரத்தில் இரண்டு போலீஸ் ஜவான்கள் ராஜாஜியின் வீட்டுக்குப் போஞர்கள். குடும்பத்தோடு உண்டு இளைப்பாறிக் கொண்டிருந்தவரைப் போலீஸ்காரர்கள் கைது செய்தார்கள். தாம் ஆடிய நாடகம் வெற்றிகரமாக நிறைவேறியதாக எண்ணி மகிழ்ச்சியோடிருந்தவருக்குத் தூக்கி வாரிப்போட்டது. மோசம் செய்ய நினைத்தவரைக் கொண்டு வந்து மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் நிறுத்திஞர்கள். அங்கு அவரை வரவேற்க ராஜாஜியும் இருந்தார். அவர் அனுப்பித்தானே தாஞக்காரர்கள் • மோசம் செய்ய நினைத்தவரை அங்கு அழைத்து வந்திருந்தார்கள்!

பொய் சொல்லி ஏமாற்றிப் பணம் சம்பாதிக்க முயன்றதாகக் கூறி அவர்மீது ராஜாஜி வழக்கைத் தாக்கல் செய்தார். வக்கீலின் வழக்கு, அதுவும் சாதாரணமான வக்கீலா? பிரபலமான வக்கீலாயிற்றே! உடனே வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ராஜாஜி தான் தாக்கல் செய்த வழக்கின் சாராம்சத்தைக் கோர்ட்டில் விளக்கிஞர். கூடி இருந்தோர் வியப்பிலாழ்ந்தார்கள். இப்படித் தாங்கள் பல தடவை பல பேர்களுக்கு உதவி செய்ததை நினைத்துத் தாங்கள் எவ்வளவு சுலபமாக ஏமாற்றப்பட்டிருப்போம் என்று நினைக்கலாஞர்கள். ராஜாஜியின் நுண்ணறிவையும் கூடவே முறையான நடவடிக்கை எடுத்து, மோசக்காரரைக் கோர்ட்டுக்குக் கொண்டு வந்ததையும் எண்ணிப் பாராட்டிஞர்கள்.

இத்தனைக்குப் பிறகுமா பொய் பேசியவர்தான் நிரபராதி என்று சொல்ல முடியும்? அதுவும் ராஜாஜியின் முன்னிலையில்! தாம் குற்றவாளிதான் என்பதை அவர் அழமாட்டாக் குறையாக ஒப்புக் கொண்டார்.

மாஜிஸ்ட்ரேட்டுக்கும் இப்படி மோசடி செய்த அந்த நபர் மீது அசாத்தியக் கோபம் ஏற்பட்டது. அந்த வேகத்தில்' இருநூறு ரூபாய் அபராதம்'; கட்டத் தவறினல் மூன்று மாதச் சிறை வாசம்' என்று தீர்ப்பளித்தார்.

தீர்ப்பைக் கேட்டதும் கோர்ட்டுக்கு வந்திருந்த குற்றவாளியின் மனைவி 'குய்யோ முறையோ' என்று கத்தலாஞள். பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

ஏமாற்ற வந்து மாட்டிக் கொண்டவரும் நிலைமை இப்படியாகுமென்று நினைக்காததால் தவித்துப் போய்விட்டார்.

''ஏதோ தெரியாமல் செய்து விட்டேன், என்னை மன்னித்து நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும்'' என்று ராஜாஜியின் காலிலேயே விழுந்தார் அவர். இளகிய மனம் கொண்ட ராஜாஜியை அவர் நிலை உருக்கிவிட்டது. எழுந்திருந்தார்.

''கோர்ட்டார் அவர்களே! குற்றவாளிக்குத் தண்டனை மிகவும் கடுமை என்று எண்ணுகிறேன். கொஞ்சம் கருணை காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்'' என்று வக்காலத்து வாங்கிப் பேசிஞர் ராஜாஜி!

வழக்குத் தொடுத்தவரே கூறும்போது நீதிபதி மறுப்பாரா? ''சரி, அபராதத் தொகையைக் கணிசமாகக் குறைக்கிறேன். ஐம்பது ரூபாயைக் கட்டச் சொல்லுங்கள்'' என்ருர் நீதிபதி.

அதைக் கேட்ட வேஷக்காரர் ''ஐயோ ஐம்பதா?'' என்ருர், ''அத்தனை ரூபாய் இருந்திருந்தால், நான் இந்தக் காரியம் ஏன் செய்திருக்கப் போகிறேன்?'' என்று கண்ணீர் விட்டார்.

ராஜாஜிக்கும் குற்றவாளியின் நிலைமை நியாயம் என்றேபட்டது. ஆகவே மறுபடியும் ''காருண்யம் மிக்க கோர்ட்டார் அவர்களிடம் அபராதத்தை இன்னமும்குறைக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்'' என்ருர் ராஜாஜி.

மாஜிஸ்ட்ரேட்டுக்கு எரிச்சலாக வந்தது. இப்படி ஒரு வழக்கைக் கொண்டுவந்து விட்டுக் குற்றவாளிக்குச் சாதகமாகவே இப்படிப் பேசும் ராஜாஜியை அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை.

நேர்மையை நிலைநாட்ட நடவடிக்கை எடுப்பது வேறு, கருணை உள்ளத்துடன் நடந்து கொள்ளுவது வேறு என்பதைப் பாவம் அவர் உணரவில்லை.

"சரி...அபராதம் ரூபாய் பத்து. இதற்கு மேல் ஒன்றும் செய்ய முடியாது" என்று கூறி எழுந்து விட்டார் மாஜிஸ்ட்ரேட்.

நீதிபதிக்குத் தன் நன்றியைத் தெரிவித்த ராஜாஜி அபராதத் தொகை, ரூபாய் பத்தையும் தாமே கட்டி குற்றவாளியை வெளியே அழைத்து வந்தார். ஏமாற்ற வந்த நபருக்கு எப்படிப் பேசுவது, என்ன செய்வது என்றே புரியவில்லை. ஆனால் ராஜாஜி அவரை ஏதும் பேச விடவில்லை. அவரையும் குடும்பத்தினரையும் மறுபடி தம் வீட்டிற்கே அழைத்துப் போய் உபசரித்து இம்மாதிரியான காரியங்களில் இனியும் இறங்க வேண்டாமென்று உபதேசம் செய்து, உண்மையில் அவர் போக வேண்டிய ஊருக்கு டிக்கெட் வாங்கிக் கொடுத்துக் கைச் செலவுக்கும் அளித்து அனுப்பி வைத்தார்.

—(கௌசிகன் எழுதிய ராஜாஜி என்னும் நூலிலிருந்து)



## ராஜாஜியின் சொல்லாற்றல்!

ராஜாஜி அவர்கள் சென்னையில் முதலமைச்சராக இருந்தபோது சட்டசபையில் இரண்டு முக்கியச் சட்டங்களைக் கொண்டு வந்தார். ஒன்று, மதுவிலக்குச் சட்டம்; மற்றொன்று விற்பனை வரிச் சட்டம். சட்டம் கொண்டு வருவதற்கு முதல் நாளே பொதுமக்களை அணுகி, அந்தச் சட்டத்தைப் பற்றி விளக்கமாகப் பேசிவிட்டு வருவது அவர் வழக்கமாயிருந்தது.

மதுவிலக்குச் சட்டம் அமலுக்கு வருமுன் ராயபுரம் 'ராபின்சன்' பார்க்கில் பொதுக் கூட்டம் நடந்தது. திரு. சி. பி. சுப்பையா அதற்குத் தலைமை தாங்கினார். ராஜாஜி பேசினார் :

"முதலில் சேலத்தில் ஏன் மதுவிலக்கைக் கொண்டு வருகிறேன் என்று என்னைப் பலர் கேட்கிறார்கள். சேலம் என் சொந்த ஜில்லா என்பதற்காக அல்ல. சுடச் சுடத் தட்டு நிறையக் கூழ் வைத்துக் கொண்டு சாப்பிடுகிறவர்கள் முதலில் ஓரத்தில்தான் விரலால் தடவி எடுத்துச் சாப்பிடுவார்கள். நடுவில் தொட்டால் கையைச் சுட்டுவிடும். அது போல மதுவிலக்கை அமல்படுத்தும் போதும் உஷாராக இருக்க வேண்டும், ஓரத்திலிருந்துதான் மத்தியப் பகுதிக்கு வரவேண்டும். சேலம் ஜில்லா ஓரப்பகுதி. ஆகவே, அங்கே முதலில் கை வைத்திருக்கிறேன்."

"விற்பனை வரி பற்றி வியாபாரிகள் பயப்பட வேண்டாம்; அதைக் கொடுக்கப் போகிறவர்கள் வாங்குகிறவர்கள்தான்!" என்பதை



விளக்குவதற்காக அன்று அவர் கொத்தவால் சாவடிக் கூட்டத்தில் பேசிய பேச்சு என்றும் மறக்க முடியாத ஒன்று.

கடைசியாக, 1962-ல் அணுகுண்டு சோதனையை நிறுத்த வேண்டும் என்பதற்காக அமெரிக்காவுக்குச் சென்று, வாஷிங்டன் வெள்ளை மாளிகையில் கென்னடியைச் சந்தித்துப் பேசிவிட்டு வந்தாரே, அப்போது நிருபர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு, "போன காரியம் என்ன ஆயிற்று? காயா, பழமா?" என்று கேட்ட போது, "*If you can coin a new word, you may say not fruitful, but flowerful. The flower may become fruit later on*" என்று கூறினாரே, அவரைத் தவிர அப்படி வேறு யாரால் கூறமுடியும் ?

நன்றி : தினமணிகதிர்

# ராஜாஜி பாட்டு



நாம், பெரியவர்கள் யாரையாவது சந்திக்கச் செல்லும் பொழுது. கையில் மாலையுடனோ அல்லது பழங்களுடனோ போவது வழக்கமல்லவா?

ஆனால், கவிதையை யாரேனும் எடுத்துப் போவார்களா?

அமரகவி பாரதியாரின் மகள் திருமதி. சகுந்தலா பாரதி அவர்கள், சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்களைச் சந்திக்கச் செல்லும் போதெல்லாம் ஏதேனும் கவிதை ஒன்றை எழுதிக் கொண்டு போவாராம்.

'கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவி பாடும்' என்பது போலக் கவிச்சக்கரவர்த்தி பாரதியின் மகளும் கவிதை எழுதுவார், பாடுவார்.

சில சமயங்களில் தந்தை பாரதியும், மகள் சகுந்தலாவும் சேர்ந்தே கவிதை கட்டுவார்களாம். அப்படிப் பாடிய ஒரு பாடல் தான்: 'காலைப் பொழுது'.

தேசியக் கவிஞன் பாரதியின் பாடல்களைப் படிக்கும்போதே வீரம் பொங்கி எழுகிறதே, அதை அவரே பாடக் கேட்டால் எப்படி இருக்கும்?

திருமதி. சகுந்தலா பாரதி அவர்கள் தம் தந்தையின் பாடல்களைக் கணீரென்று பாடுகிறார். அங்கே பாரதியே நேரில் வந்து பாடுவதுபோல இருக்கிறது! ஆம். நம் எதிரே காட்சி தரும் கம்பீரமான பாரதியின் திருவுருவம் நம் முன்னே பாடுவது போன்ற ஒரு பிரமை ஏற்படுகிறது.

அப்பா வைத்து விட்டுப் போன சொத்து, அருந்தமிழ்ப் பாடல்கள் அன்றோ? அன்னைத் தமிழுக்கு அவர் உருவாக்கிய அணிகலன்கள் அன்றோ? அந்த அரிய சொத்தை—அழகிய அணிகலன்களை எப்படியெல்லாம் பாதுகாத்து வைத்திருக்கிறார் அவரது அருமை மகளார்!

நாளையத் தலைமுறைக்கு இவை பயன்பட வேண்டும் என்ற மேலான கருத்தில், அவற்றையெல்லாம் கண்மணிபோல் காத்து வந்திருக்கிறார் திருமதி. சகுந்தலா பாரதி அவர்கள். இன்று அவர் நம்மிடையே இல்லை. ஆனால் அவர் எழுதிய எண்ணற்ற பாடல்களிலே ஒன்று—அதுவும் திரு. இராஜாஜி அவர்களைப் பற்றிப் பாடிய பாடல் ஒன்று நம் சிந்தைக்கு விருந்தாய் விளங்குகின்றது.

ஒரு சமயம் இவர் திரு. இராஜாஜி அவர்களைச் சந்திக்கச் சென்றிருந்தாராம். அப்போது இவர் வழக்கம் போல ஒரு கவிதையை எழுதிக் கொண்டு வந்திருந்தாராம். கவிதையை திரு. இராஜாஜி அவர்களிடம் கொடுத்தாராம். அந்தக் கவிதையை திரு. இராஜாஜி அவர்கள் படித்து விட்டுப் பெரிதும் மகிழ்ந்து, திருமதி. சகுந்தலா பாரதி அவர்களை வெகுவாகப் பாராட்டினாராம். அந்தக் கவிதையின் தலைப்பு என்ன தெரியுமா? 'ராஜாஜி'. இதோ அந்தப் பாடல்:

கண்ணன் காட்டும் வழியை நமக்குக்
காட்டுகின்ற ராஜாஜி
திண்ணமுடைய நெஞ்சில் உண்மை
தெய்வம் கண்ட ராஜாஜி.

வேதமுனிவர் விரித்துரைத்த
வேதாந்தத்தின் தத்துவத்தை
ஓதியுணர்ந்து உலகோர் உய்ய
உறுவழி காட்டும் இராஜாஜி.

வழவழப் பேச்சும் வஞ்சக எண்ணமும்
வாழும் வழியை விட்டகல
அழஅழப்பேசி ஆறுதல் அளிக்கும்
ஆற்றல் படைத்த ராஜாஜி.

அருகில் நெருங்கிப் பழகுவதில்லை
அன்புமொழிகள் பேசுவதில்லை
தொலைவில் தெரியும் சூரியனைப் போல்
தோற்றமளிக்கும் ராஜாஜி.

—பேட்டி: பி. வி. கிரி.




# அவர் கையாண்ட யுக்தி

**1927**-ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தென்னகத்துக்கு வந்திருந்தார். மைசூர் மகாராஜாவின் விருந்தாளியாக 'குமார பார்க்'கில் தங்கி இருந்தார். ராஜாஜியும் காந்தியுடன் சென்றிருந்தார்.

காந்திஜியைச் சந்திப்பதற்கு ஏராளமானவர்கள் துடித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் நேரமும் காலமும் வரையறுக்கப்பட்டிருந்தன. இப்படி முன் ஏற்பாடு இல்லாதவர்களால் காந்திஜியைக் காண முடியாது. அதற்கெல்லாம் இப்படி ஏற்பாடு செய்தவர் ராஜாஜிதான். காரணம், காந்திஜி ரத்தக் கொதிப்பு நோயால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். அவருக்கு அதிர்ச்சியான பேச்சு, சம்பவம் எதுவும் ஏற்படக்கூடாது என்பது டாக்டர்களின் உத்தரவு. அதனால்தான் பேட்டியாளர்களைக் கண்காணித்துக் கணக்காக காந்திஜியிடம் அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு நாள், இரவு 8-30-லிருந்து 9 மணி வரை ஒரு பெரியவருக்குக் காந்திஜியுடன் பேட்டிக்கு நேரம் குறிப்பிடப்பட்டிருந்தது. அவரும் அந்த நேரத்தில் தயாராகக் காத்திருந்தார். ராஜாஜி அவரை 8-30 மணிக்கு காந்திஜியின் அறைக்குள் கொண்டுபோய் விட்டுவிட்டு வந்தார். பத்து நிமிஷங்கள் ஆகி இருக்கும். உள்ளே பேச்சுக் குரல் பலமாயிற்று. விவாதம் சூடாக இருக்கும் என்று பட்டது. வாக்குவாதம் காரசாரமாக இருப்பதை வெளியிலிருந்தவர்கள் உணரலானார்கள். காந்திஜியின் உடல் நிலைக்கு இம்மாதிரி ஒரு சூழ்நிலை நல்லதல்ல. வெளியிலிருந்தவர்கள் தவித்தார்கள். உள்ளே சென்று அந்தப் பெரியவரை வெளியே இழுத்து வருவது நாகரிகமல்ல. அவருக்கு பேட்டி நேரம் 30 நிமிஷங்கள். இன்னும் 20 நிமிஷங்கள் இதே ரீதியில் போகுமானால் என்ன ஆகுமோ என்று காந்தி அன்பர்கள் தவிக்கலானார்கள். தவித்தவர்களில் ராஜாஜியும் இருந்தார்.

திடீரென்று 'குமாரபார்க்'கில் விளக்குகள் எல்லாம் அணைந்தன. ஒரு விநாடிதான். சட்டென்று மறுபடி எரியத் தொடங்கின. எல்லோரும் தங்கள் தங்கள் கைக் கடிகாரங்களைப் பார்த்துக் கொண்டார்கள். சுவரில் மாட்டியிருந்த கடிகாரங்களையும் பார்த்தார்கள். எல்லாவற்றிலும் மணி 8-45தான்! ராஜாஜியும் கூடத் தம் பாக்கெட் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டார். பிறகு பரபரப்புடன் காந்திஜியின் அறைக்குள் புகுந்தார்.

மின்சார விளக்குகள் இரவு ஒரு விநாடி அணைந்து மறுபடி எரிந்தால் அப்போது மணி ஒன்பது என்பதை மைசூரிலுள்ள அனைவரும் அறிவர். சில ஊர்களில் நேரத்தை அறிவிக்கச் சங்குகளும், ஆலய மணிகளும், பீரங்கி முழக்கங்களும் இருப்பதைப்போல் மைசூரில் மணி ஒன்பது என்பதை அறிவிப்பதற்காக விளக்குகள் இரவு நேரத்தில் ஒரு விநாடி அணைந்து எரியும் ஏற்பாட்டைச் செய்திருந்தார்கள். உள்ளே சென்ற ராஜாஜி காந்திஜியுடன் பெரியவருக்கான சந்திப்பு, நேரம் முடிந்து விட்டது என்று கூறி, அவரை வெளியே அழைத்து வந்து ரொம்ப மரியாதையுடன் அவரை அனுப்பியும் வைத்தார். அந்தப் பெரியவர் சென்ற கொஞ்ச நேரத்திற்கெல்லாம் வழக்கப்படியான விளக்கணைப்பு மறுபடி நடந்தது. அப்போதுதான் மைசூர் நகரில் உண்மையாக மணி ஒன்பது! ஆனால் 'குமாரபார்க்'கில் மட்டும் பதினைந்து நிமிஷங்களுக்கு முன்பே மணி ஒன்பதாகிவிட்டதே, அது எப்படி?

காந்திஜியின் அறைக்குள் வாக்குவாதங்களைக் கேட்டதும் ராஜாஜியின் வலக்கை அந்த மாளிகைகளின் மின்சார மெயினை இயக்கி, மணி ஒன்பதாகச் செய்தது என்பதை நாம் விளக்கவா வேண்டும்?

—(கௌசிகன் எழுதிய 'ராஜாஜி' என்னும் நூலிலிருந்து.)

# சென்னையில் காந்தி மண்டபம் பிறந்த கதை...

காந்தி அஸ்தி மற்றப் பகுதிகளுக்குக் கிடைத்தது போல தமிழ்நாட்டுக்கும் கிடைத்தது. அப்பொழுது முதல் அமைச்சராயிருந்த ஓமந்தூரார் அதை வாங்கி வந்து தன் வீட்டிலேயே வைத்துப் பூஜை செய்து வந்தார்.

அதை வைத்து ஒரு ஞாபகச் சின்னம் எழுப்ப வேண்டுமென்பது அவர் ஆசை. அதை நிறைவேற்ற அப்போதைய முதலமைச்சர் குமாரசாமி ராஜா முன் வந்தார்.

இடம் வேண்டுமே '...



பல்கலைக் கழகத்துக்கு எதிரே அமைப்பது என முடிவு செய்தனர். அதற்கான நிலமும் ஒதுக்கப்பட்டது.

அதற்குப் பிறகு ராஜாஜி அவர்களின் யோசனைப்படி அந்த ஞாபகச்சின்னம் கிண்டி ராஜ்பவன் தோட்டத்தில் கட்டுவது என்று தீர்மானம் ஆயிற்று. அதன்படி அமைதி தவழும் அந்த இடத்தில்தான் இப்பொழுது காந்தி நினைவு மண்டபம், காந்தியின் அஸ்தியை வைத்து எழும்பி இருக்கிறது.

—'கல்கி' இதழ் தலையங்கம்,
1949—அக்—2



# படமும் செய்தியும்

▲ 'கப்பலோட்டிய தமிழன்' வ. உ. சிதம்பரனார் அவர்களின் நினைவு நாள் விழா 18-11-'76 அன்று, சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில், வ. உ. சிதம்பரனாரின் மகனார் திரு. வ.உ.சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாடு அரசின் உள்துறைச் செயலாளர் திரு. கே. சுப்பிரமணியம் அவர்கள் வ. உ. சி. அவர்களின் திருவுருவம் எழுதப்பெற்ற படத்தைத் திறந்து வைத்தார்.



▲ தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள் 2-12-'76 அன்று வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொன்னேரி, மீஞ்சூர் ஆகிய பகுதிகளைப் பார்வையிட்டார். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் குறைகளைக் கேட்டறிந்ததுடன் அவர்களுக்குச் சேலை, வேட்டி முதலியவற்றை ஆளுநர் அவர்கள் வழங்கினார்.





◀ சென்னை ராஜாஜி அரங்கில் 2-12-'76 அன்று நடைபெற்ற நகரப் பெருமக்கள் சிறப்புக் கூட்டத்தில் தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால்சுகாதியா அவர்கள், தமிழ்நாடு அரசு மேற்கொண்டுவரும் வெள்ளத்துயர் துடைப்புப் பணிகளைப் பற்றி விளக்கி உரையாற்றினார்.

▶ ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசின் தலைமைத் தூதர் திரு. டெய்ட்ரிச் வென்ஸ்லாப் அவர்கள், வெள்ளத் துயர்த் துடைப்பு நிதிக்காக ரூபாய் 36,001-க்கான காசோலையைத் தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு. பி. கே. தவே அவர்களிடம் 3-12-'76 அன்று வழங்கினார்.



▶ இந்தியாவில் உள்ள 'ஐ.சி ஐ' கம்பெனிகளின் சார்பாக, வெள்ளத்துயர்த் துடைப்பு நிதியாக ரூபாய் 1.5 இலட்சத்திற்கான காசோலையைத் திருவாளர்கள் வி. எஸ். வாசுதேவன், ஜே. எப். மாதன், கே. வி. சாரி ஆகியோர் தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்களிடம் 4-12-'76 அன்று அளித்தனர்.







▲ சென்னையை அச்சுறுத்திய செம்பரம்பாக்கம் ஏரியின் கரை 5 மைல். 4 பர்லாங் நீளம் உடையது. இந்த ஏரியின் நீர்பிடி பரப்பு 29.28 சதுர மைல். இதனால் பாசனம் பெறும் ஆயக்கட்டின் பரப்பு 13,222.98 ஏக்கர்.

எதிர்பாராத நிலையில் வெள்ளத்தால் நிரம்பிய செம்பரம்பாக்கம் ஏரியைத் தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் 5-12-'76 அன்று பார்வையிட்டார். ▲



1976-ஆம் ஆண்டு, மார்ச்சுத் திங்களில் நடைபெற்ற பள்ளி இறுதித் தேர்வில் வெற்றி பெற்ற அரிசன-ஆதிவாசி மாணவர்களில் மிக அதிக மதிப்பெண் பெற்ற மாணவர் திரு. சி. செழியன், மாணவி செல்வி சி. சத்தியபாமா ஆகியவர்களுக்கு சென்னை நகர மக்களின் கல்வி, சமுதாய, கலாச்சார சங்கத்தின் சார்பாக அளிக்கப்பட்ட தங்கப் பதக்கத்தை மத்திய உள்துறை ராஜாங்க அமைச்சர் திரு. ஓம்மேத்தா அவர்கள் 5-12-'76 அன்று வழங்கினர். ▲ ▶



▶ செம்பரம்பாக்கம் ஏரியின் கரையை வலுப்படுத்துவதற்காக லாரிகளில் மண் கொண்டு வந்து குவிக்கப்படுகிறது. குவிக்கப்பட்ட மண்ணை புல்டோசர் மூலம் நிரவியும் அழுத்தியும் கரைக்கு வலுவூட்டப்படுகிறது.





◀ சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. லாட்டிகா டி. படால்கர் அவர்களிடம், தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கொடிநாள் நிதி வழங்கினர்.



◀ செம்பரம்பாக்கம் ஏரிக்கரையில் 400 அடி நீளத்திற்கு 10 அடி ஆழத்திற்கு வெடிப்பு ஏற்பட்டதால் கரை உடைந்து விடுமோ என்று அப்பகுதி மக்கள் பயந்தனர். அப்பகுதியைத் தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் 5-12-'76 அன்று பார்வையிட்டார். கரையில் ஏற்பட்ட வெடிப்பில் மணல், கிராவல், சிமெண்ட் ஆகியவற்றைக் கலந்து போட்டு கரைக்கு வலுவூட்டப்படுவதைப் பொதுப்பணித்துறையின் நீர்ப்பாசனப் பிரிவுத் தலைமைப் பொறியாளர் திரு. பி. கே. வேதநாயகம் அவர்கள், ஆளுநர் ஆலோசகருக்கு எடுத்துரைத்தார்.




தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் அவர்களின் ஆட்சி நடைபெறுவதால், தமிழ்நாட்டிற்குரிய சட்டங்களை உருவாக்கும் பாராளுமன்ற ஆலோசனைக் குழுவின் மூன்றாவது கூட்டம் 7-12-76 அன்று மதுரையில், மத்திய அரசின் உள்துறை அமைச்சர் திரு. கே. பிரம்மானந்த ரெட்டி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் மத்திய அரசின் உள்துறை ராஜாங்க அமைச்சர் திரு. ஓம்மேத்தா அவர்களும் கலந்து கொண்டார்.



கடந்த நவம்பர் 23, 24, 25 தேதிகளில் பெய்த வரலாறு காணாத பெரு மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக சென்னை மாநகரிலும், செங்கை மாவட்டத்திலும் ஏற்பட்ட சேதங்களை மதிப்பீடு செய்வதற்கு வருகை தந்த மத்திய அரசின் ஆய்வுக் குழுவினருடன், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. வி. கார்த்திகேயன் அவர்களும் மற்றும் தமிழ்நாடு அரசின் உயர் அலுவலர்களும் 9.12.76 அன்று, தலைமைச் செயலகத்தில் வெள்ளச்சேதம், அரசு மேற்கொண்ட துயர்துடைப்புப் பணிகள் ஆகியவற்றை எடுத்துரைத்து மத்திய அரசின் நிதி உதவி வேண்டினர்.





# தமிழ் இலக்கிய வானிலே ஒரு முழு நிலா

மீ. ப. சோமசுந்தரம்

(சென்னை வானொலி)

தேச பக்தரும் காந்தியவாதியுமான கல்கி அவர்கள் அரசியலும் இலக்கியமும் இரண்டும் இணைந்து கலந்த எழுத்தாளராக விளங்கினர்.

9-9-1899-ல் தஞ்சாவூர் மாவட்டம், புத்தமங்கலம் என்ற சிற்றூரில் ஒரு கிராமக் கர்ணத்துக்கு மகனாகப் பிறந்து தமது எழுத்தாற்றல் ஒன்றினாலேயே மிகப் பெரிய உன்னத நிலைகளை அடைந்தார். அந்த எழுத்தாற்றல் பல ஸ்தாயிகளில் சஞ்சரித்த போதிலும் அவருடைய வாழ்க்கைப் பாடலின் ஆதார சுருதி தேசியமும் காந்தியமுமேயாகும். 1921இல் திருச்சி தேசியக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோதே காந்திய ஒத்துழையாமை இயக்கத்தில் ஈர்க்கப்பட்டுக் கருரிலே சிறை செய்யப்பட்டார். பிற்கால வாழ்விலும் மேலும் இரண்டு முறைகள் சிறை புகுந்தார்.

பத்திரிகை எழுத்தாளராக அவர் முதன்முதல் சேர்ந்தது திரு. வி. க. அவர்களின் 'நவசக்தி'யிலே தான். பிறகு மதுவிலக்குப் பிரச்சாரத்துக்கென்றே ராஜாஜி நடத்தி வந்த 'விமோசனம்' என்னும் பத்திரிகையில் சேர்ந்து ராஜாஜியிடமே பயிற்சி பெறும் பேறு அவருக்குக் கிட்டியது. இந்த இரண்டு பத்திரிகைகளிலும் தாம் பெற்ற பயிற்சியின் நினைவுகளை அவர் எப்போதும் நன்றியுணர்ச்சியோடு போற்றி வந்தார்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு வாசன் அவர்கள் நடத்திய ஆனந்தவிகடனில் சேர்ந்து தமது சலியாத ஊக்கத்தாலும், ஏராளமான எழுத்தாலும் அந்தப் பத்திரிகையை இந்தியாவிலேயே மிகுந்த வாசகர்கள் கொண்ட வார இதழ்களில் ஒன்று வளர்த்துவிட்டார். அவருடைய தலையங்கங்களை மக்கள் வேட்கையோடு படித்தார்கள். ஏனென்று அவர் எந்த அரசியல் சிக்கல்களையும் தகைமையோடும் தெளிவோடும் ஆராய்ந்து அம்பு பாய்வதுபோல நெஞ்சுக்குள் செல்கிற நேரான தமிழ் நடையில் எழுதினார். அந்தப் பத்திரிகை அத்தனை ஆதரவு பெற்றதற்கு முக்கிய காரணம் கல்கியின் நகைச்சுவையே. எல்லாருக்கும் வியப்பூட்டிய ஒரு விஷயம் என்னவென்றால், எத்தனை பயங்கரமான அரசியல் தத்துவங்களையும் புன்முறுவலோடு அணுகி, அகில உலக சமுதாயப் பொருளாதாரச் சிக்கல்களையெல்லாம் எளிமையோடும் அழகோடும் விளக்கினர் கல்கி அவர்கள்! அதோடு நிற்கவில்லை அவர் தொண்டு. அவருடைய எழுதுகோலானது சாதிப் பூசல்களையும் பிரிவினைச் சக்திகளையும் எதிர்த்துப் போராடி பாரத ஒருமைப்பாட்டுக்கும் ஒற்றுமைக்கும் அரண் செய்தது; நமது விடுதலைப் போரில் இவ்வாறு அவர் செய்த சேவையானது, ஆற்றல் மிகுந்த பேராசிரியர் ஒருவர் தமது எழுத்தின் மூலம் பொது மக்களுடைய கருத்துக்களை உருவாக்குவதிலும் நாட்டு நடவடிக்கைகளில் சாமானிய மக்களும் பங்குகொள்ளும்படி செய்வதிலும் எத்தகைய அரிய சாதனைகளைப் புரிய முடியும் என்பதை எடுத்துக் காட்டியது. இந்த அரிய சேவையில் கல்கி தமது அரசியல் குருவான ராஜாஜியின் வழியில் நின்று தொண்டாற்றினர். கலை, இலக்கியம் ஆகிய துறைகளில் ரசிகமணி டி. கே. சி. யின் கொள்கைகளை உறுதியோடு கடைப்பிடித்தார்.

கல்கியின் பெருமை அவருடைய பல்கலை ஆற்றலாகும். சிறுகதை, நாவல், விமரிசனம், நகைச்சுவைக் கட்டுரை, கவிதை, அரசியல் எழுத்து, எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு பத்திரிகை ஆசிரியர் என்ற எழுத்துப் பொறுப்பு ஆகிய அத்தனை வகையிலும் அவர் தமது திறமையை நிலைநாட்டினார். அவருடைய காலத்தில் அவர் பங்குகொள்ளாத, பங்கு கொண்டு வேகம் பெறாத எந்த அரசியல் அல்லது சமுதாயப் போராட்டமும் இருந்ததில்லை. எட்டையபுரம் பாரதி மண்டபம், கிண்டி காந்தி மண்டபம் போன்ற பல நினைவாலயங்களை நிறுவுவதற்கு அவர் பொறுப்பாக இருந்தார். அதோடு பல இலக்கிய ஆசிரியர்களுக்கும், தியாகிகளுக்கும் நிதி திரட்டிக் கொடுத்திருக்கிறார். எத்தனையோ எழுத்தாளர்களையும் கலைஞர்களையும் கண்டு பிடித்து ஊக்கமூட்டிப் பிரபலப்படுத்தியிருக்கிறார். எல்லாம் அவருடைய எழுதுகோலின் ஆற்றல்! 1941இல் ஆனந்த விகடனைப் பிரிந்து தமது தோழர் சதாசிவத்தின் ஒத்துழைப்புடன் சொந்தப் பத்திரிகை தொடங்கியபோது அவருடைய புனைபெயர் விடுமனைகளில் எல்லாம் வழங்கிய ஒரு குடும்பப் பெயராகவே விளங்கியதால், சில மாதங்களிலேயே அந்தப் பத்திரிகை ஒரு பெரிய சக்தியாக வளர்ந்து துலங்கியது. இத்தனை பெரிய இமாலய சாதனைகளைக் கல்கி புரிய முடிந்ததற்குக் காரணம், அவர் ஒரு எழுத்தாளர் என்பது மட்டும் அல்ல, அவர் ஒரு பத்திரிகைக் குறிப்பாளராகவும் இருந்ததுதான். ஒரு பத்திரிகை ஆசிரியரின் வெற்றிக்கு அந்த ஆசிரியரின் கற்பனை எழுத்துக்களோடு கூட அவர் மற்றத் துறைகளில் தக்க குறிப்புகள் எழுதும் ஆற்றல் உடையவராகவும் இருக்க வேண்டும் அல்லவா? கல்கியிலும் இரட்டை ஆற்றல் வளமாக இருந்தது. எனவே அவர் எதை எழுதினாலும் வெளியிட்டாலும் மக்களிடம் அது எடுபட்டது.

கல்கிக்குத் தமிழ்மொழிமீதும் தமிழர் கலைகளின்மீதும் மிகுந்த ஈடுபாடு உண்டு. அந்த ஈடுபாட்டை அப்படியே வாசகர்கள் உள்ளத்திலும் உண்டாக்கி விடுவார். தமிழுக்கோ தமிழ்க் கலைகளுக்கோ ஏதேனும் இழுக்கு ஏற்பட்ட போதெல்லாம் தமது பேனா முனையிலே வீரத்தோடு போர் தொடுத்தார். எனினும் அவர் குறுகிய மனப்பான்மை கொண்டவர் அல்ல. தமிழ் இசையின் மறுமலர்ச்சியிலும், தமிழ் பாடமொழியாக இடம்பெறுவதிலும், இதுபோன்ற பிற கிளர்ச்சிகளிலும் அவர் முழு மூச்சோடு போரிட்ட போதிலும், தமது மொழிப்பற்றும் தமிழ்நாட்டுப் பற்றும் தம்முடைய பாரததேசப் பற்றை, அந்த ஐக்கிய சிந்தனையை அமுக்கும்படி அவர் விட்டதில்லை. தேசிய ஒருமைப்பாடும் காந்திய பக்தியுமே அவர் எழுத்துக்கள் அனைத்திலும் பிரதிபலித்தன. விடுதலை வீரர்களை நாயகர்களாகக் கொண்ட சிறுகதைகள் தவிர அத்தகைய தேசிய நெடுங்கதைகளும் அவர் எழுதி வழங்கினார். ''தியாக பூமி'' பலரும் விரும்பிப் படித்த அத்தகு நாவல்களில் ஒன்று. இது திரைப்படமாகவும் ஓடியது. இது போலவே தான் சாகித்திய அகாதமியின் விருதுபெற்ற அவருடைய ''அலை ஓசை'' என்ற நவீனமும். விடுதலைப் போரின் வீர நிகழ்ச்சிகள் இந்தக் கதைக்கு விறுவிறுப்புத் தந்து, காந்திய சித்தாந்தம் கதையின் ஆழத்திலே சுழித்து ஓடுகிறது. இவைதவிர மகாத்மாவின் வரலாறும், சத்தியசோதனை மொழிபெயர்ப்பும் அவர் எழுதியுள்ள தேசிய நூல்களில் முக்கியமானவை.

கல்கியின் தனிப்பண்பு அவருடைய இனிய எளிய தமிழ்நடை. பழமையான கரடுமுரடுச் சொற்களை நீக்கினார். அதேசமயம் புதுமை என்ற பெயரில் வெளிநாட்டு வாடை வீசுகிற மயக்க நடையையும் புறக்கணித்தார். அவருடைய கையிலே பேச்சுத் தமிழானது இலக்கிய வல்லமை பெற்று ஆழமும் விசாலமும், ஒலியும் ஓட்டமும், ஒளியும் நிழலும் பெற்றுத் திகழ்ந்தது. அவர் தமது மனக் கண்ணுக்கு முன்னால் சாமானிய வாசக நேயரையே நிறுத்திக்கொண்டு எழுதினார். எனவே எல்லாருக்கும் புரியும்படி எழுதவேண்டும் என்பது அவருடைய அடிப்படை நோக்கம். கற்பனைத்திறம் மிகுந்த கலைஞராக அவர் இருந்த காரணத்தினால், பேச்சுத் தமிழ் அவர் எழுதுகோலிலே கலைத் தமிழாகவும் மிளிர்ந்து பண்டிதரையும், பாமரரையும் கவர்ந்தது.

கல்கியின் சாதனைகளை இன்று எண்ணிப்பார்த்தால் வியப்பு மேலிடுகிறது. ஒவ்வொரு கோணத்திலும் ஒரொரு வர்ணக் கோலத்தைக் காட்டுகிற ஓவியக் கண்ணாடியைப்போல பல்துறைக் கலைஞராக அவர் விளங்கினார். பீரங்கி நெருப்பைக் கக்கும் அரசியல் தலையங்கங்கள், இளம் எழுத்தாளருக்கும் கலைஞருக்கும் தெம்பு ஊட்டுகிற வைடமின் மதிப்புரைகள், மேனி அலுங்காமல் வானவெளியிலே நம்மை அழைத்துச் செல்லும் பிரயாணக் கட்டுரைகள், ஆடல் பாடல் குறிப்புகளிலிருந்து கச்சேரியை நேரிலே கேட்பதுபோல் அனுபவம் தருகிற விமரிசனங்கள், புகைப்படம் பிடித்தாற்போல நம் கண்முன் சொற்படமாகச் சுழலும் விழா வர்ணனைகள் என்று அவர் எல்லாத் துறைகளிலும் ஒளிவீசிப் பிரகாசித்தார்.

*1954-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஐந்தாம் தேதிதான் பேராசிரியர் கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தமிழுலகை வெறிச்சோடவிட்டு இவ்வுலகிலிருந்து மறைந்தார்.*

கடைசி மூச்சுவரை தமிழ் இலக்கிய வானிலே ஒரு முழு நிலாவாகவே தேய்பிறையில்லாமல், கல்கி ஒளி வீசினார். முழு மதியாகவே வானிலே எழுந்தார். மறையும்போதும் முழுமதியாகவே மறைந்தார். எனவே நம் நினைவில் அவர் முழுமதியாகவே எப்போதும் வாழ்ந்து வருகிறார். ✱







# பித்தளை ஒட்டியாணம்

## கல்கி

தங்கம்மாள் நடு நிசியில் திடுக்கென்று கண் விழித்துக் கொண்டாள். கதவு திறக்கும் ஓசையைப் போல் கேட்டது. படுத்தபடியே நிமிர்ந்து பார்த்தாள். சௌந்தரம் கதவைத் திறந்து கொண்டிருந்தான். வெளியே சென்று மெதுவாய்க் கதவைச் சாத்தினான்.

மாடிப் படிகளில் அவன் இறங்கிச் செல்லும் சத்தம் கேட்டது. சற்று நேரத்துக்கெல்லாம் அவன் கீழே ஆபீஸ் அறையைத் திறந்தான்; உள்ளே போய் விளக்குப்போட்டுக் கொண்டான்.

தங்கத்துக்கு இருதயம் பதை பதைத்துக் கொண்டிருந்தது. 'இந்தப் பாதி நிசியில், இவர் எங்கே எதற்காக இறங்கிப் போகிறார்? ஆபீஸ் அறையில் இப்போது என்ன செய்கிறார்? இவ்வளவு இரகசியம் என்ன? நான் எழுந்திருக்கக் கூடாது என்பதற்காகத் தானே ஓசைப்படாமல் அவ்வளவு ஜாக்கிரதையாய்க் கதவைத் திறந்துகொண்டு நிதானமாய் நடந்து போனார்? இதெல்லாம் எதற்காக? என்னிடம் என்னத்தை ஒளிப்பதற்கு முயல்கிறார்?

சென்ற ஐந்தாறு நாட்களாகவே சௌந்தரம் ஒரு மாதிரியாயிருப்பது பற்றித் தங்கத்தின் உள்ளம் ரொம்பவும் சஞ்சலப் பட்டுக் கொண்டிருந்தது. அவர் பழைய மனுஷராகவே இல்லை; அடியோடு மாறிப் போய்விட்டார். எப்போதும் சிரிப்பும் விளையாட்டுமாயிருப்பவருடைய முகத்தில் ஐந்தாறு நாளாய் மலர்ச்சி என்பதையே காணவில்லை. சுய ஞாபகமே கிடையாது. என்ன சாப்பிடுகிறோம், என்ன பேசுகிறோம் என்பது கூட நினைவிருப்பதில்லை. இராத்திரியில் சரியாகத் தூங்குவதுமில்லை. புரளுகிறார்; பிதற்றுகிறார். தூங்கும்போது உடம்பு திடீரென்று நடுங்குகிறது. கேட்டால் சொல்ல மாட்டேனென்கிறார். 'ஒன்றுமேயில்லை' என்று சாதிக்கிறார். பொய், பொய், பொய்! ஒன்றுமேயில்லாததற்கா இவ்வளவு கவலை? இவ்வளவு குழப்பம்? இவ்வளவு மெய்ம் மறதி?

என்னமோ சமாசாரம் இருக்கிறது, சந்தேகமில்லை. அது என்னவாயிருக்கும்? தங்கம் போன மாதத்தில் பார்த்திருந்த ஒரு 'தமிழ் டாக்கி' ஞாபகம் வந்தது. அதில் கதாநாயகன் ஒரு தாசியின் மோக வலையில் விழ்ந்து விடுகிறான். அது முதல் அவனுடைய நடை உடை பாவனைகளில் மாறுதல் ஏற்பட்டுவிடுகிறது. அடிக்கடி மெய்ம்மறதி உண்டாகிறது. மனைவியிடம் 'ஒன்றுமில்லை' என்றுதான் அவனும் சொல்லிக் கொண்டிருக்கிறான்.

**'கல்கி' அவர்களால் எழுதப்பெற்று 'ஆனந்தவிகடன்' 21-7-1940 தேதிய இதழில் வெளியாகிய கதை.**

அப்படி ஏதாவது இருக்குமோ என்று தங்கம் ஒரு நிமிஷம் எண்ணியபோது, அவளுக்கு உயிரே போய்விடும் போலிருந்தது. ''சீச்சி! ஒரு நாளுமிராது! பத்து நாளைக்கு முன்புதானே அவர் என்னிடம் வைத்திருக்கும் அளவிலாத அன்பை ருசுப்படுத்தினார்? தங்க ஒட்டியாணம் போட்டுக் கொள்ள எனக்கு என்ன யோக்யதை இருக்கிறது? இத்தனை நாளும் எனக்குத் தெரியாமல் பணம் சேர்த்து வைத்திருந்து, பிறந்த நாள் பரிசாக அளித்தாரே'' என்று எண்ணி, ஒரு நாளும் அவர் தனக்கு துரோகம் செய்ய மாட்டார் என்று தீர்மானித்தாள். ஆனால் வேறு என்னதான் இருக்கும்?

ஆபீஸ் அறையில் அவர் என்ன செய்கிறார் என்று பார்க்க அவளுக்கு ஆவல் உண்டாயிற்று. எப்படியும் இன்று ராத்திரி உண்மையைத் தெரிந்து கொண்டுவிட வேண்டும். மனதில் இந்த பாரத்துடன் இனிமேல் தூங்க முடியாது.

தங்கம், எழுந்திருந்தாள். அடி மேல் அடி வைத்துக் கீழே இறங்கிச் சென்றாள். ஜன்னல் வழியாக ஆபீஸ் அறைக்குள் பார்த்தாள். சௌந்தரம், மேஜை மேல் காகிதம் வைத்துக்கொண்டு ஏதோ எழுதிக்கொண்டிருந்தான். சற்று நேரம் தங்கம் சும்மா நின்று பார்த்துக் கொண்டிருந்தாள். சௌந்தரம் எழுதி முடித்து விட்டுத் தலையை நிமிர்ந்தான். அவனுடைய கண்களில் நீர்த் துளிகள் ததும்பின.

தங்கத்துக்குக் கதி கலங்கிற்று. ஒன்றும் செய்யத் தோன்றாமல் பிரமை பிடித்தவள்போல் நின்றாள்.

சௌந்தரம் ஒரு கவர் எடுத்து அதன் மீது விலாசம் எழுதினான். பிறகு அதை ஒட்டுவதற்காகப் பிசின் கொட்டாங்கச்சியை எடுத்தான். பிசினில் தண்ணீரே விடாமல் காய்ந்து போயிருந்தது. கொட்டாங்கச்சியைக் கையில் எடுத்துக் கொண்டு தண்ணீருக்காகச் சமையலறைக்குச் சென்றான். போகும்போது, வெளியே ஜன்னல் கதவுக்குப் பின்னால் நின்ற தங்கத்தை அவன் பார்க்கவில்லை.

அவன் சமையலறைக்குள் நுழைந்ததும், தங்கம் மின்னல் வேகத்தில் ஆபீஸ் அறைக்குள் சென்றாள். மேஜை மேல் கிடந்த உறையை எடுத்துப் பார்த்தாள். அதன் மேல் இவள் பெயர்தான் எழுதியிருந்தது. பதைபதைப்புடன் கடிதத்தை உறையிலிருந்து எடுத்துப் படிக்கத் தொடங்கினாள்:—

சௌ. தங்கத்துக்கு
அநேக ஆசீர்வாதம்,

உனக்கு இந்தக் கடிதம் மிகவும் ஆச்சரியத்தை அளிக்கலாம். நீ இதைப் படிக்கும்போது நான் வெகு தூரம் போய் விடுவேன். உன்னைப் பிரியும் படியான காரணம் ஏற்பட்டிருக்கிறது. ஒரு பெரிய விபத்தில் அகப்பட்டுக்கொண்டு விட்டேன். நான் இங்கிருந்தால் உன் மனது ரொம்பவும் கஷ்டமடையும், ஆகையால் தான் போகிறேன். நீ உன் தாயார் வீட்டுக்குச் சென்று சௌக்கியமாயிரு. உன் பேரில் எனக்கு ஒரு கோபமும் இல்லை.

கடவுள் கிருபை இருந்தால் மறுபடியும் சந்திப்போம். என்னைப் பற்றி ஏதாவது அபவாதம் கேள்விப் பட்டால் உன் பேரில் நான் வைத்த பிரியத்தினால்தான் செய்தேன் என்று அறிந்து, நீயே தெரிந்து கொள்வாய்.

இப்படிக்கு,
உன்னை ஒரு நாளும் மறவாத
. சௌந்தரராஜன்.''

மேற்படி கடிதத்தைத் தங்கம் ஒரு தரம் படித்தாள். அவளுடைய தலை சுழன்றது. கீழே விழுந்து விடாமல் மேஜையைப் பிடித்துக் கொண்டாள். இதற்குள் சமையலறைக்குச் சென்றிருந்த சௌந்தரம் திரும்பி வந்தான். தங்கம் கையில் கடிதத்துடன் நிற்பதைக் கண்டு அவன் திடுக்கிட்டு நின்றான்.

பிரமை கொண்டவள் போல் நின்ற தங்கத்துக்குப் பளிச் சென்று உயிர் வந்தது. அவள் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து வந்து, அந்த அறையின் கதவைச் சாத்தினாள். சாத்திய கதவின் மேல் சாய்ந்து கொண்டு, 'எங்கே நீங்கள் போவதைப் பார்க்கலாம்' என்று கூறும் பாவனையில் நின்றாள். அவள் கடிதத்தைப் படித்து விட்டாள் என்பதை சௌந்தரம் தெரிந்து கொண்டான். தட்டுத் தடுமாறி, ''தங்கம்! நான் சொல்கிறதைக் கேள்'' என்று ஆரம்பித்தான்.

''கேட்க மாட்டேன்! கேட்க மாட்டேன்'' என்று அலறினாள் தங்கம். உடனே 'கோ' வென்று அழத் தொடங்கினாள். விம்மலுக்கு இடையிடையே, ''என்னை திக்கற்றவளாய் விட்டுப் போகப் பார்த்தீர்களே? நீங்கள் போய் நான் சௌக்யமாயிருக்க வேணுமா?'' என்பது போன்ற ஆத்திரமான சொற்கள் உளறிக் குளறிக் கொண்டு அவள் வாயிலிருந்து வெளி வந்தன.

## 2

சௌந்தரராஜனுக்குக் 'குபேரா பாங்கி'யில் குமாஸ்தா வேலை, பள்ளிக் கூடத்தில் படித்த காலத்திலிருந்து ரொம்ப யோக்யன் என்று பெயர் வாங்கியவன். அவனுக்கு 'சர்டிபிகேட்' கொடுத்த உபாத்தியாயர்கள் எல்லாரும் அவனுடைய கல்வித் திறமையையும், புத்திசாலித் தனத்தையும் விட அவனுடைய நற்குணத்தையே அதிகமாகச் சிலாகித்திருந்தார்கள். உண்மையிலேயே அவன் தெய்வ நம்பிக்கையுள்ள பிள்ளை. பாவ, புண்ணியத்திற்கு அஞ்சியவன். அப்படிப்பட்டவன் அவன் வேலை செய்த பாங்கியின் பணத்தில் ஆயிரத்தைந்நூறு ரூபாய் திருடினான் என்று சொன்னால், அவனை அறிந்தவர்கள் யாரும் அதை நம்பவே மாட்டார்கள். 'ஒரு நாளும் இராது' என்றுதான் சொல்லுவார்கள். ஆனாலும், அத்தகைய நம்பத் தகாத காரியத்தை அவன் செய்துதானிருந்தான். அப்படி அவன் செய்ததற்குக் காரணம், கடிதத்தில் அவன் எழுதியிருந்ததுபோல் தங்கத்தின் பேரில் அவன் வைத்திருந்த அளவிலாத பிரியமேயாகும்.

> **பெயர் வந்த காரணம்!**
>
> திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி' திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரின் 'நவசக்தி' பத்திரிகையில் சில காலம் தொண்டு புரிந்தார். அதனால் தம் குருநாதர் பெயரான கல்யாணசுந்தரம் என்பதில் 'கல்' என்ற முதல் இரண்டு எழுத்துக்களையும், தம்முடைய பெயரின் முதல் எழுத்தையும் சேர்த்து "கல்கி" என்ற புனைப் பெயரைச் சூட்டிக் கொண்டார் !

தங்கம் டிபுடி கலெக்டர் சதாசிவய்யரின் பெண். சதாசிவய்யர் உயிரோடு இருந்து, உத்தியோகமும் பார்த்திருந்தாரானால், தங்கத்துக்கும் சௌந்தரத்துக்கும் கல்யாணமே ஆகியிராது. அவர், தம்முடைய மூத்த பெண்கள் இருவரையும் பெரிய இடத்தில் கொடுத்ததுபோல், தங்கத்தையும் கொடுத்திருப்பார். ஒரு ஐ.சி.எஸ்., ஒரு எப்.சி.எஸ்., அல்லது ஒரு எம்.பி.பி.எஸ்.லுக்காவது வாழ்க்கைப் பட்டிருப்பாள். ஆனால் தங்கத்துக்கு அவ்வளவு பாக்கியம் கிட்டவில்லை. யமன் திடீரென்று ஒரு நாள் வந்து, டிபுடி கலெக்டராச்சே என்றுகூடப் பார்க்காமல், சதாசிவய்யரைக் கொண்டு போய் விட்டான். அவர் மாரடைப்பினால் இறந்து போனதாக ஜனங்கள் சொன்னார்கள்.



போனவர், நிறையப் பணமாவது வைத்து விட்டுப் போனாரா? பெரிய தொகைக்கு இன்ஷ்யூராவது செய்திருந்தாரா? ஒன்றுமில்லை. இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்டுகள், தங்களுடைய பிரச்சாரத்துக்கு அனுகூலமாக அவருடைய பெயரை உபயோகிக்கும் படியாகக் குடும்பத்தை விட்டு விட்டுப் போனார். 'டிபுடி கலெக்டர் சதாசிவய்யரைப் பாருங்கள். இப்படித்தான் 'இன்ஷ்யூரன்ஸில் எனக்கு நம்பிக்கையில்லை' என்று சொல்லிக் கொண்டிருந்தார். திடீரென்று ஒரு நாளைக்குக் கண்ணை மூடினார். இதோ அவருடைய பெண்டாட்டி பிள்ளைகள் திண்டாடுகிறார்கள்'', என்று இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்டுகள் சொல்வது சர்வ சகஜமாயிற்று.

தங்கத்துக்கும் சௌந்தரத்துக்கும் மூடிச்சுப் போட்டிருந்தபடியால்தான், சதாசிவய்யர் அப்படி இறந்து போனாரோ, என்னமோ? அதுதான் யாருக்குத் தெரியும்? சில பேர், ''பெரிய இடமாக, இளையாளாய்ப் பார்த்துத் தங்கத்தைக் கொடுத்து விடலாம்'' என்று யோசனை சொன்னார்கள். அதற்குத் தங்கத்தின் தாயார் சம்மதிக்கவில்லை. இரண்டு பெண்களைப் பணக்கார இடத்தில் கொடுத்து அனுபவம் பெற்றிருந்த அந்த அம்மாள், 'வேண்டவே வேண்டாம். ஏழையாயிருந்தால் இருக்கட்டும், நல்ல பிள்ளையாய், கண்ணுக்கும் சுமாராயிருந்தால் போதும், தங்கத்துக்கு அதிர்ஷ்டம் இருந்தால், பணங் காசெல்லாம் தானே வந்து விடுகிறது' என்றாள். சதாசிவய்யருக்குத் தன்னைக் கல்யாணம் செய்து கொண்ட பிறகுதான் அதிர்ஷ்டம் அடித்தது. பெரிய உத்தியோகம் ஆயிற்று என்று அந்த நாளில் எல்லாரும் சொன்னதை நினைத்துக் கொண்டு தங்கத்தின் தாயார் அவ்விதம் சொன்னாள்.

தங்கத்தின் தமக்கைமார்களில் ஒருத்தி ஐ. சி. எஸ். லுக்கும், இன்னொருத்தி பெரிய, வருமானமுள்ள வக்கீலுக்கும் வாழ்க்கைப் பட்டிருந்தார்கள். இவர்களுக்கெல்லாம் தங்கத்தை அவ்வளவு சின்ன இடத்தில் கொடுப்பதில் திருப்தியில்லை. தங்களுடைய கௌரவத்துக்கு அது குறைவு என்று நினைத்தார்கள். ஆனால் அவர்கள் பணம் கொடுத்து ஒத்தாசை செய்யவும் தயாராயில்லை. அம்மாவிடம் மட்டும் தங்கைக்குப் பரிந்தவர்கள் போல் பேசினார்கள். தாயாரோ, ''நான் என்னடி அம்மா, செய்வேன்? மூன்று பிள்ளைகளைப் படிக்க வைத்தாக வேண்டும். கையில் இருக்கிற அற்ப சொற்பத்தையும் தொலைத்து விட்டால், அப்புறம் என்ன கதியாகிறது? ஏதோ நீங்கள் இரண்டு பேரும் பெரிய இடத்தில் வாழ்க்கைப்பட்டு ஓசத்தியாயிருக்கிறது போதும். அவளுக்கு அதிர்ஷ்டம் இருந்தால், தானே பணம் காசெல்லாம் வருகிறது'' என்று சமாதானம் சொன்னாள்.

கடைசியில் சௌந்தரத்துக்கும் தங்கத்துக்கும் நல்ல சுபலக்னத்தில் கல்யாணம் ஆயிற்று.

தாயாரின் வாக்குப் பலிக்கும் போலவே இருந்தது. பெண் அதிருஷ்டசாலியாகக் காணப்பட்டாள். கல்யாணம் ஆனதும், பையனுக்குப் பாங்கியில் உத்தியோகம் ஆயிற்று. சம்பளம் இரண்டு வருஷத்தில் உயர்ந்து அறுபது ரூபாய்க்கு வந்தது.

இது வரையில் ஒண்டுக் குடியிருந்ததில் தங்கத்துக்குப் போதும் போதும் என்றாகி விட்டது. 'அரை வயிற்றுச் சாப்பாடு கிடைத்தாலும் போதும்; தனி வீட்டில் தானிருக்க வேண்டும்' என்று தீர்மானித்து, இருபத்தைந்து ரூபாய்க்கு ஒரு சின்ன வீடு எடுத்துக் கொண்டு, அதில் குடித்தனம் செய்தார்கள். அவர்களுடன், மைத்துனன் ஒருவனும் இருந்து படித்துக் கொண்டிருந்தான். அவர்களுடைய வாழ்க்கை சந்தோஷமயமாக இருந்தது. ஒரு குறைவும் இருக்கவில்லை. தங்கத்தின் தாயார் அவர்களை வந்து பார்த்துவிட்டுப் போன போதெல்லாம், 'பணக்கார இடத்தில் கொடுத்த பெண்களைவிட என் தங்கந்தான் சந்தோஷமாயிருக்கிறாள்' என்று பெருமையுடன் சொல்லிக் கொண்டிருந்தாள்.

இப்படியிருக்கும்போதுதான் ஒரு பித்தளை ஒட்டியாணம் வந்து அவர்களுடைய வாழ்க்கையே குலைந்து போகும்படியான பெரும் விபத்துக்குக் காரணமாயிற்று.

ஒரு நாள் சௌந்தரம் ஆபீஸிலிருந்து வீடு திரும்பிய போது, தங்கம் இடுப்பில் பள பளவென்று ஜொலித்த ஒட்டியாணம் தரித்துக் கொண்டிருந்தாள்.

''பலே! ரொம்ப ஜோராயிருக்கிறதே!'' என்றான் சௌந்தரம்.

''ஆயிரத்திருநூறு ரூபாய்தான் விலை. வாங்கித் தருகிறீர்களா?'' என்று தங்கம் கேட்டாள்.

''உன் பிறந்தாத்துக்கு எழுதினால் உடனே தந்தி மணியார்டர் கதறிக் கொண்டு வருகிறது'' என்றான் சௌந்தரம்.

இம்மாதிரி சிறிது நேரம் வேடிக்கைப் பேச்சு நடந்த பிறகு, அந்தப் பித்தளை ஒட்டியாணத்தின் விலை ஏழு ரூபாய் என்றும், இரண்டு வருஷத்துக்கு மெருகு 'காரண்டி' என்றும் அடுத்த வீட்டு அம்மாள் வாங்கியிருந்ததைப் பார்த்துத் தானும் ஒன்று வாங்கிக் கொண்டிருப்பதாகவும் தங்கம் தெரிவித்தாள்.

## 3

கொஞ்ச நாளைக்கெல்லாம், தங்கத்தின் தமக்கை மிஸஸ் கமலா ராமச்சந்திரனின் வீட்டில், அவளுடைய மூன்றாம் குழந்தைக்கு ஆண்டு நிறைவுக் கல்யாணம் நடந்தது. அதற்குத் தங்கமும் சௌந்தரமும் போயிருந்தார்கள். தங்கம் அந்த ஏழு ரூபாய்ப் பித்தளை ஒட்டியாணத்தைப் போட்டுக்கொண்டு கிளம்பியபோது சௌந்தரத்துக்கு அவ்வளவு திருப்தியில்லை. ''இது என்னத்திற்கு?'' என்று கேட்டான். ''பித்தளை ஒட்டியாணம் என்று ஜாதியை விட்டுத் தள்ளி விடுவார்களோ? அப்படித் தள்ளினால் தள்ளிக் கொண்டு போகட்டுமே!'' என்றாள் தங்கம்.

''நன்றாயிருக்கிறது. நீயேதான் பத்தரை மாத்துத் தங்கமாயிற்றே! உன்னை உருக்கினால் நூறு ஒட்டியாணம் செய்யலாமே?'' என்றான் சௌந்தரம்.

''நானே தங்கம். அதிலும் அழகைக் கல்யாணம் செய்து கொண்டிருக்கேன்! எனக்கு என்ன குறைச்சல்?'' என்றாள் தங்கம்.

> **கல்கி வளர்த்த தமிழ் !**
>
> கல்கியின் எழுத்துக்களில் கதைகள் மிகவும் சிறப்புள்ளவை. ஆனாலும் மற்றவைகளும் வெகு பொறுப்புள்ளவை. அவருடைய அரசியல் எழுத்து மிகவும் அறிவுடையது. அபிப்பிராயங்களில் பேதமுடையவர்களும் அவர் எழுதும் ஆதாரங்களையும் தர்க்க ரீதியையும் அலட்சியம் செய்துவிட முடியாது.
>
> பொருளாதாரத் துறையிலும், நாணய மாற்று வித்தைகளிலும் அவர் நிபுணர்களுடைய பாடங்களைப் படித்தவர் என்றாலும், அவற்றின் நுணுக்கங்களைத் தெள்ளிய முறையில் கல்வி அறிவு குறைந்தவர்களுக்கும் புரியும்படி எழுதக்கூடியவர். ஏன் ? கல்வியறிவு மிகுந்த என்னுடைய பல நண்பர்களும் நாணய மாற்றுச் சிக்கல்களைக் கல்கியினுடைய கட்டுரையிலிருந்துதான் சிக்கெடுத்துப் பார்க்கத் தெரிந்து கொண்டதாக என்னிடம் கூறியிருக்கிறார்கள்.
>
> எழுத்தாளர் தொழில் முறையில் சொந்த முயற்சிகளால் மகத்தான வெற்றியடைந்தவர் கல்கி.
>
> —நாமக்கல்
>
> வெ. இராமலிங்கம்பிள்ளை.

இந்தக் குதூகலமெல்லாம் கல்யாண வீட்டிற்குப் போகும்வரையில்தான் இருந்தது. அங்கே சென்று சற்று நேரம் ஆனதும், தங்கம் தன்னுடைய ஒட்டியாணம் மற்றவர்களின் கவனத்தைக் கவர்ந்திருப்பதைக் கண்டாள். ஸ்திரீகள் ஒருவருக்கொருவர் அந்த ஒட்டியாணத்தைச் சுட்டிக் காட்டிப் பேசிக் கொண்டார்கள். ''இது தான் இப்போது புதிசா வந்திருக்காம். ஒன்பது ரூபாயாம்'' என்றாள் ஒருத்தி, 'இல்லை, ஏழு ரூபாய்தான்' என்றாள் இன்னொருத்தி. ''இவ்வளவு சுலபமாயிருக்கும்போது என்னத்திற்காக ஆயிரம் ஆயிரத்தைந்நூறு கொடுத்து வாங்க வேண்டும்'' என்றாள் வேறொரு ஸ்திரீ.

''பத்து நாளைக்கெல்லாம் பல்லை இளித்து விடுமே? அப்போது என்ன பண்ணுகிறது?'' என்றான் மற்றொருத்தி.

இந்தப் பேச்செல்லாம் தங்கத்தின் காதில் நாராசமாக விழுந்தன. அங்கு வந்திருந்தவர்கள் எல்லாரும் தேகமெல்லாம் ஒரே வைரமாய் வைத்து இழைத்துக் கொண்டு வந்திருந்தார்கள். ஒரு பத்து லட்சம் பேர் தற்கொலை செய்து கொள்வதற்குப் போதுமான வைரம் அவர்கள் மேல் இருந்தது! பாவம்! இவர்களுக்கு மத்தியில், பித்தளை ஒட்டியாணம் போட்டுக் கொண்டு வந்த தங்கம் அவமானத்தினால் மனம் குன்றி நின்றாள். கொஞ்சங்கூட அவளுக்கு உற்சாகம் ஏற்படவில்லை. எப்போது வீட்டுக்குக் கிளம்பப் போகிறோம் என்று தவித்துக் கொண்டிருந்தாள். கடைசியில், வீட்டுக்குக் கிளம்பும் நேரம் வந்தது. வாசலில் குதிரை வண்டியில் ஏறத் தயாராயிருந்தபோது, கையில் பட்சணப் பொட்டலத்துடன் அவளுடைய தமக்கை வந்தாள். தங்கத்தின் காதோடு இரகசியமாக, ''ஏண்டி அசடே! இந்தப் பித்தளை ஒட்டியாணத்தைத் ஏன் போட்டுக் கொண்டு வந்தாய்? ஆசையாயிருந்தால், என்னைக் கேட்டால் நான் கொஞ்ச நாழி போட்டுக் கொள்ளக் கொடுக்கமாட்டேனா? இந்த மாதிரியெல்லாம் இனிமேல் செய்யாதே! அற்பம் என்று எண்ணிக் கொள்ளப் போகிறார்கள்'' என்று சொன்னாள். இதையெல்லாம் இரகசியமாய்ச் சொல்வதாக அவள் எண்ணியிருந்த போதிலும் ஏற்கெனவே வண்டிக்குள் ஏறியிருந்த சௌந்தரத்தின் காதில் அவ்வளவும் ஸ்பஷ்டமாக விழுந்தது.

வீடு போய்ச் சேரும் வரையில் தங்கமும் சௌந்தரமும் பேசவில்லை. தங்கம், பொங்கிக் கொண்டு வந்த அழுகையை வெகு சிரமப்பட்டு அடக்கிக் கொண்டிருந்தாள். வண்டியிலிருந்து இறங்கி வீட்டுக்குள் போனாளோ இல்லையோ, ஒட்டியாணத்தைக் கழற்றி எறிந்து விட்டு, விசித்து விசித்து அழ ஆரம்பித்தாள். வண்டிக்காரனுக்குச் சத்தம் கொடுத்து விட்டு உள்ளே வந்த சௌந்தரம் அவள் விசிப்பதைப் பார்த்து விட்டு, ''இந்தச் சனியன் பிடித்த ஒட்டியாணம் என்னத்திற்கு? அந்த தரித்திரங்கள் ஏதாவது நினைத்துக் கொள்ளும் என்று அப்போதே சொன்னேனா இல்லையோ; கேட்காமல் போட்டுக் கொண்டு வந்தாய். இப்போது அழுது என்ன பிரயோசனம்?'' என்றான்.



இதைக் கேட்ட தங்கம் விம்மிக் கொண்டே, ''எங்க அப்பா மட்டும் இருந்திருந்தால், இப்படி இவர்களிடம் பேச்சுக் கேட்கும்படி விட்டிருப்பாரா? இவர்களைப் போல் நானும் தங்க ஒட்டியாணம் பூட்டிக் கொண்டிருக்க மாட்டேனா?'' என்று கூறிவிட்டு, கோவென்று கதறி அழ ஆரம்பித்தாள்.

அவளுடைய சொல்லும், அழுகையும் சௌந்தரத்தின் நெஞ்சைப் பிளப்பது போலிருந்தன. ''நம்மைக் கல்யாணம் செய்து கொண்டதனால் தானே இவளுக்கு இந்த கதி நேர்ந்தது? இவளுக்கு ஒரு தங்க ஒட்டியாணம் வாங்கிக் கொடுக்க நமக்கு கதியில்லையே?'' என்ற எண்ணம் அவனுடைய உள்ளத்தைப் பெரும் வேதனையில் ஆழ்த்தியது.

''ஆமாம், உங்க அப்பா இருந்திருந்தால் உன்னையும் பணக்கார இடத்தில் கல்யாணம் செய்து கொடுத்திருப்பார். இந்த ஏழையைக் கட்டிக் கொண்டு திண்டாடும் கதி உனக்கு நேர்ந்திருக்காது'' என்றான்.

இப்படிச் சொன்னானோ இல்லையோ தங்கத்தின் அழுகை பனிச் சென்று நின்றது. அவள் ஓடி வந்து சௌந்தரத்தின் கழுத்தைக் கட்டிக் கொண்டு ''உங்களுடைய அன்பு ஒன்றே எனக்குப் போதும். நகையும் வேண்டாம். நட்டும் வேண்டாம்'' என்றாள்.

அந்த நிமிடத்தில் சௌந்தரம் தன் மனத்திற்குள்ளே ''எப்படியாவது இவளுக்குத் தங்க ஒட்டியாணம் பண்ணிக் கொடுத்துவிட்டு மறு காரியம் பார்க்க வேண்டும்; இல்லாவிட்டால் நான் மனுஷன் இல்லை'' என்று தீர்மானம் செய்து கொண்டான்.

கொஞ்ச நாளாகக் 'குபேரா பாங்கை'ப்பற்றி ஊரில் வதந்திகள் உலாவிக் கொண்டிருந்தன. அந்த பாங்கியில் பணம் போட்டிருந்தவர்கள் அவசரம் அவசரமாகப் பணத்தை வாபீஸ் வாங்கிக் கொண்டிருந்தார்கள். இந்த நெருக்கடியில் தினந்தோறும் மானேஜிங் டைரக்டரே பாங்கிக்கு வந்து காரியங்களை நேரில் நடத்திக் கொண்டு வந்தார். ''ஒன்றும் பயம் இல்லை; இம்மாதிரி நெருக்கடி இதற்கு முன்பும் நமது பாங்கிக்கு ஏற்பட்டிருக்கிறது. அதையெல்லாம் சமாளித்தது போல் இதையும் சமாளித்துக் கொள்வோம்'' என்று அவர் பாங்கியின் சிப்பந்திகளுக்குத் தைரியம் சொல்லிக் கொண்டு வந்தார்.

பாங்கியின் மேல் நம்பிக்கையை ஸ்திரப்படுத்துவதற்காக, மானேஜிங் டைரக்டர், பணம் போட்டிருந்தவர்கள் பணத்தைக் கேட்டவுடனேயே கொடுக்க ஏற்பாடு செய்திருந்தார். 'பிக்ஸட் டெபாஸிட்'டுகளை நியாயப்படி கொடுக்க வேண்டியதில்லையானாலும், அநேகம் பேருக்கு 'பிக்ஸட்' டெபாஸிட்'டுகளையும் திருப்பிக் கொடுத்து வந்தார். இது மட்டுமல்ல. சில பேருக்கு 'ஓவர் டிராப்ட்'களும் தாராளமாய் அனுமதித்து வந்தார். சில பேருக்குப் புதிய கடன்கள் கூட 'ஸாங்ஷன்' செய்தார். இப்படியெல்லாம் செய்தால் பாங்கியைப் பற்றி ஜனங்களின் சந்தேகங்கள் தீர்ந்து மறுபடியும் அவர்கள் பணம் போட ஆரம்பிப்பார்கள் என்பது அவர் அபிப்பிராயமெனத் தெரிந்தது.

இவ்விதம் 'குபேரா பாங்கி சம்பந்தமாக ஊரில் பரபரப்பு ஏற்பட்டிருந்த நிலைமையில் தான், ஒருநாள் சாயங்காலம் சௌந்தரம் வெகு குதூகலமாக வீட்டுக்கு வந்தான். ''தங்கம்! இன்றைக்கு உனக்குப் பிறந்த நாள் ஆயிற்றே! கடைத் தெருவுக்குப் போகலாம், வருகிறாயா?'' என்று கேட்டான்.

''கடைத் தெருவுக்குப் போய் பிறந்த நாள் பரிசு என்ன வாங்கித் தரப் போகிறீர்கள்? வைரத்தோடும் தங்க ஒட்டியாணமும் வாங்கித் தரப் போகிறீர்களா?'' என்று கேட்டாள் தங்கம்.

''ஆமாம்!'' என்றான் சௌந்தரம்.

''பரிகாசம் பண்ணுகிறீர்கள்! அப்படி ஒன்றும் நான் நகை ஆசை பிடித்துக் கிடக்கவில்லை'' என்றாள் தங்கம்.

''உனக்கு ஆசையில்லாதபடியினால்தான் நான் பண்ணிக் கொடுக்கப் போகிறேன்'' என்று சௌந்தரம் சொல்லி, சட்டைப் பையிலிருந்து ஒரு கட்டு நூறு ரூபாய் நோட்டுகளை எடுத்துப் போட்டான். ஒரு நிமிஷம் தங்கம் ஸ்தம்பித்துப் போய் நின்று விட்டாள். பிறகு, அந்த நோட்டுக்களைக் கையில் எடுத்துக் கொண்டு எண்ணினாள். பதினைந்து நோட்டுகள் இருந்தன. ஆயிரத்தைந்நூறு ரூபாய்!

''ஏது இந்தப் பணம்! நிஜமாக நகை வாங்கப் போகிறீர்களா?'' என்று தங்கம் நாத் தழுதழுக்கக் கேட்டாள்.

''ஆமாண்டி அசடே! உன்னை ஏமாற்றுவேனா? மாதம் கொஞ்சம் கொஞ்சமாகச் சம்பளத்தில் மீத்து பாங்கில் போட்டுக் கொண்டு வந்தேன். இரண்டாயிரம் ரூபாய் ஆனதும் உனக்குச் சொல்ல வேணும் என்றிருந்தேன். அது வரையில் பொறுமையில்லை. இன்றைக்கு உன் பிறந்த நாளாயிருக்கிறதே என்று கொண்டு வந்து விட்டேன். கிளம்பு, போகலாம்!'' என்றான் சௌந்தரம்.

பத்து நாளைக்குள் தங்கம் இரண்டாவது முறையாக சௌந்தரத்தின் கழுத்தைக் கட்டிக் கொண்டு கண்ணீர் பெருக்கினாள். இந்தத் தடவை அவள் கண்ணில் பெருகியது ஆனந்தக் கண்ணீர் என்று சொல்ல வேண்டியதில்லையல்லவா?

இரண்டு பேரும் கடைத் தெருவுக்குப் போய்ப் பல கடைகளில் பார்த்துத் தங்க ஒட்டியாணம் ஒன்று, ஆயிரத்தைந்நூறு ரூபாய்க்கு வாங்கிக்கொண்டு வைரத்தோடு செய்வதற்கு 'ஆர்டர்' கொடுத்து விட்டு வந்தனர்.

அந்த இரண்டு மூன்று தினங்கள் சௌந்தரம் சந்தோஷமாயிருந்ததைப் போல் அவனுடைய வாழ்நாளில் வேறெந்த நாளிலும் இருந்ததில்லை. தங்கத்தின் இடுப்பில் தங்க ஒட்டியாணத்தைப் பாத்துப் பார்த்து அவன் மகிழ்ந்தான். தங்கத்தின் முக மலர்ச்சியைக் கண்டு அவன் உளம் பூரித்தான்.

காரியம் எவ்வளவு சுலபமாக முடிந்து விட்டது என்பதை நினைக்கும்போது அவனுக்கே ஆச்சரியமாயிருந்தது. நல்லவேளை! அவ்வளவு மனோ தைரியம் தனக்கு இருந்ததே என்று எண்ணிப் பெருமையடைந்தான். அந்த ஒரு நிமிஷம் தப்பவிட்டிருந்தால், போனது தான். சம்பளத்தில் பணம் மீத்து எந்தக் காலத்தில் தங்க ஒட்டியாணம் செய்து கொடுத்திருக்க முடியும்? மாதம் பத்து ரூபாய் பல்லைக் கடித்துக் கொண்டு மீத்து வந்தாலும், வருஷத்துக்கு 120 ரூபாய்தான் சேரும். ஆயிரத்தைந்நூறு ரூபாய் சேர்வதற்கு 12 வருஷம்- ஒரு மாமாங்கம் ஆகிவிடுமே! சிவ சிவா! அதற்குள்ளே எந்த ராஜா எந்தப் பட்டணம் போய் விடுவானோ, யார் கண்டது? அப்புறம் தங்கம் அவளுடைய வாழ்நாளில் பித்தளை ஒட்டியாணத்துடனே திருப்தி யடைந்திருக்க வேண்டியதுதான்!

ஒவ்வொரு சமயம் ''விஷயம் ஒரு வேளை வெளியாகிவிட்டால்?' என்ற நினைவு வந்து அவனைத் திடுக்கிடச் செய்தது. ஆனால் அந்த நினைவுக்கு அவன் அதிகம் இடம் கொடுக்கவில்லை. விஷயம் வெளியாவதற்கு வழியே கிடையாது. அன்று நடந்தது எல்லாவற்றையும் அவன் ஞாபகப்படுத்திக் கொண்டு பார்த்தான். பகல் பன்னிரண்டு மணிக்கு, பணம் வாங்க வந்தவர்களின் கூட்டம் பாங்கியில் அசாத்தியமாயிருந்தது. ஸௌந்தரத்தின் பெட்டியில் இருந்த பணமெல்லாம் ஆகி விட்டது. இன்னும் ஐந்து நிமிஷம் போனால், கேட்பவர்களுக்குக் கையை விரிக்க வேண்டியதுதான். இந்தச் சமயத்தில் மானேஜிங் டைரக்டரின் அறையிலிருந்து ''ரிஸர்வ்'' பாங்கியிலிருந்து பணம் வந்துவிட்டது; ஒவ்வொரு குமாஸ்தாவாக வந்து பணம் வாங்கிக் கொண்டு போகவேண்டியது'' என்று தகவல் வந்தது. ஸௌந்தரத்தின் முறை வந்தபோது, அவனும் பணம் வாங்கப் போனான். நூறு ரூபாய், ஐம்பது ரூபாய், பத்து ரூபாய், ஐந்து ரூபாய் நோட்டுகளாக ஐயாயிரம் ரூபாய் அவன் எண்ணி எடுத்துக் கொள்ள வேண்டியிருந்தது. அவன் பணத்தை எண்ணிக்கொண்டிருந்தபோது, டெலிபோனில் மணி அடிக்கவே, மானேஜிங் டைரக்டர் டெலிபோன் குழாயை எடுத்துப் பேசத் தொடங்கினார். யார் என்ன சொன்னார்களோ தெரியாது. மானேஜிங் டைரக்டர் ராவ்சாகிப் ஸகஸ்ரநாமத்தின் முகம் கவலையால் வாடியது. அந்தச் சமயத்தில், அதாவது ஸகஸ்ரநாமம் டெலிபோனில் கவனமாக இருந்தபோது, ஸௌந்தரம் அதிகப்படியாக இரண்டு கட்டுகளை எடுத்துப் போட்டுக் கொண்டான். பிறகு, ஐயாயிரம் ரூபாய்க்குக் கையெழுத்துப் போட்டுவிட்டு, கீழே பணம் வாங்க வந்திருந்தவர்கள் காத்துக் கொண்டிருப்பதால் அவசர அவசரமாக இறங்கிச் சென்றான். மாடிப்படி இறங்கும்போதே அந்த அதிகப்படி நோட்டுக்கள் அவனுடைய பெரிய கோட்டுப் பைகளில் சென்று விட்டன. கோட்டுப் பை பெரியதாயிருப்பது சில சமயத்தில் எவ்வளவு சௌகரியமாக இருக்கிறது!

அன்று மாலை பாங்கி சாத்தும் நேரம் வரையில் சௌந்தரத்துக்கு திக்கு திக்கென்று அடித்துக் கொண்டிருந்தது. ''யாரிடமாவது அதிகப்படி பணம் இருக்கிறதா?'' என்று மானேஜிங் டைரக்டர் கேட்டனுப்பினால், உடனே பையிலிருந்த நோட்டுக்களைப் பெட்டியில் போட்டு விட்டு ''ஆமாம்; அதிகம் இருக்கிறது'' என்று ஒப்புக் கொண்டு விட அவன் தயாராயிருந்தான். சோதனை கீதனை என்று பேச்சு ஏற்பட்டாலும், அப்படிச் செய்வதற்கு அவன் சித்தமாயிருந்தான். ஆனால் தங்கத்திற்கு அதிருஷ்டம் இருக்கும்போது அப்படியெல்லாம் ஏன் நடக்கிறது?

## இனிய வசன நடை

நமது இலக்கியத்தில் வசனம் அரிதாக இருக்கிறது. ஆனால் கல்கி இந்த வழியிலிருந்து விலகி தமக்கே உரிய எளிய அழகான அர்த்த புஷ்டியுடன் கூடிய நடையில் வசனம் எழுதினார். கல்கியின் வசன நடை வாழைப்பழத்தைப்போன்றது. யார்வேண்டுமானாலும் வாழைப்பழத்தை எட்டிப் பறித்துப் புசித்து, அதன் இனிமையை அனுபவிக்கலாம் அல்லவா அதைப் போலவே கல்கியின் வசன நடையின் இனிமையை யார் வேண்டுமானாலும் அனுபவிக்கலாம்.

—ராஜாஜி.

மறுநாளும் அதற்கடுத்த நாளும் பாங்கியில் ஏதாவது 'கசமுசா' ஏற்படுகிறதா என்று ஆவலுடன் கவனித்தான். ஒன்றுமே கிடையாது. கிணற்றிலே கல்லைப் போட்டதுபோல் இருந்தது.



பணங் கேட்பவர்களின் கூட்டங் கூட குறைந்து போயிற்று. கேட்பவர்களுக்கெல்லாம் வட்டியின்றிப் பணம் கொடுத்து வந்ததிலிருந்து, ஜனங்களுக்கு பாங்கியில் நம்பிக்கை வந்துவிட்டதாகத் தோன்றியது. சிலர், வாங்கிய பணத்தைத் திருப்பிப் போடுவதற்குக்கூட வந்தார்கள்.

சௌந்தரத்தின் மனம் நிம்மதி அடைந்தது. அந்த நிம்மதியின் மத்தியில் ஒரு விநோத குறையும் உண்டாயிற்று. "எடுத்ததுதான் எடுத்தோம்; இன்னும் இரண்டு கட்டு, சேர்த்து எடுத்திருக்கக் கூடாதா?" என்று விசாரப்பட்டான். தங்கத்துக்கு ஒட்டியாணமும் வைரத் தோடும் வாங்கிக் கொடுத்த பிறகு, கையிலும் ஒரு ஆயிரம் ரூபாய் இருந்தால், வருங்காலத்தில் ஆபத்து சம்பத்துக்கு உதவுமல்லவா? மறுபடியும் அந்த மாதிரி சந்தர்ப்பம் தன் வாழ்நாளில் எங்கே வரப் போகிறது..?

## 4

'குபேரா பாங்கிக்கு' எதிர்ப்புறத்தில் இருந்த பெரிய கட்டடத்தில் ஒரு பிரசித்தமான ஹோட்டல் இருந்தது. இந்த நவநாகரிகமான ஹோட்டலில் சாப்பாடுபோட்டதுடன் தங்குவதற்கு இடமும் கொடுத்தார்கள். மேல் மாடியில் இருந்த சிறு அறைகள், தினசரியிலும் மாதவாரியிலும் வாடகைக்கு விடப்பட்டன. அந்த மேல் மாடி அறைகளையும் தாழ்வாரத்தையும் சௌந்தரம், வேலை செய்யும் கவுண்டரிலிருந்து நன்றாகப் பார்க்கலாம். பாங்கியில் அதிகக் கூட்டமில்லாத போது, . சௌந்தரம் அந்த ஹோட்டல் அறைகளுக்கு அன்றாடம் புதிது புதிதாக வரும் மனிதர்களைப் பார்த்தும், அவர்களுடைய நடை உடை பாவனைகளைக் கவனித்தும், பொழுது போக்குவது வழக்கம். அருகிலுள்ள மற்ற பாங்கி குமாஸ்தாக்களிடம் கூட "அவனுடைய இட்லர் மீசையைப் பார்" என்றும், 'இவன் யாழ்ப்பாணத்து மனிதன் போலிருக்கிறது!" "அடேயப்பா! எவ்வளவு உயரம்! நம்முடைய புது கவர்னரை விட உயரமாய் இருப்பான் போலிருக்கிறதே!" என்றெல்லாம் வம்பு பேசி சந்தோஷப்படுவதுண்டு.

தங்க ஒட்டியாணம் வாங்கிக் கொடுத்த நாலாம் நாள், சௌந்தரம் வழக்கம் போல் அந்த மாடி அறைகளின் பக்கம் பார்த்தான். அந்த அறைகளில் ஒன்றில், கையில் புத்தகத்துடன் உட்கார்ந்திருந்த ஓர் ஆசாமி தன்னை நோக்கிப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டதும், ஸௌந்தரத்துக்கு துணுக்கென்றது. அந்த முகம் எங்கேயோ பார்த்த முகமாய்த் தோன்றியபடியால், அவனுடைய துணுக்கம் அதிகமாயிற்று. அப்புறம் இன்னும் சில தடவை சௌந்தரம் அந்தப் பக்கம் நோக்கினான். ஒவ்வொரு சமயம் அந்த ஆசாமி நேரடியாக இவனைப் பார்ப்பது போலவும், இன்னும் சில சமயம் புத்தகத்தில் கவனமாய் இருப்பதாகப் பாசாங்கு செய்து கொண்டு கடைக் கண்ணால் இவனைப் பார்ப்பது போலவும் தோன்றியது. சௌந்தரத்துக்கு இன்னதென்று சொல்வதற்கில்லாத பயம் உண்டாயிற்று. "இவன் யார்? இந்த முகத்தை எங்கே பார்த்திருக்கிறோம்?" என்று யோசனை செய்தான். பளிச்சென்று ஞாபகம் வந்தது. உடனே அவனுக்குக் கதி கலங்கிற்று.

ஆம்; சௌந்தரத்தின் மைத்துனி குழந்தை ஆண்டு நிறைவுக் கல்யாணத்திற்கு இந்த ஆசாமி வந்திருந்தான். அவனைப் பற்றி வேறு இரண்டு பேர் பேசிக்கொண்டிருந்தார்கள். "ராமாநுஜம் இப்போது சி.ஐ.டி. யில் இருக்கிறான் என்று தெரியுமோ இல்லையோ? டிபார்ட்மெண்டில் அவனுக்கு ரொம்ப நல்ல பெயர்! சீக்கிரம் 'பிரமோஷன்' ஆகும் என்று சொல்கிறார்கள்," என்று ஒருவர் இன்னொருவரிடம் சொன்னார். அது சௌந்தரத்தின் காதில் விழவும் அவர்கள் சுட்டிக் காட்டிப் பேசிய ஆசாமியை இவனும் பார்த்தான். அதே ஆசாமிதான் இவன் என்பதில் சந்தேகமில்லை.

சௌந்தரத்துக்குப் பெரும் திகில் உண்டாயிற்று. உடம்பெல்லாம் சொட்ட வியர்த்தது. "வெய்யில் சகிக்கவில்லை" என்று முணுமுணுத்துக் கொண்டு, தன் கைக்குட்டையினால் வியர்வையைத் துடைத்துக் கொண்டான். நீண்டநாள் வழக்கத்தினால் இயந்திரத்தைப் போல் வேலை செய்தானே தவிர, அவனுக்கு வேலையில் கவனமே இருக்கவில்லை.

இந்த சி. ஐ. டி. போலீஸ்காரன் இங்கே எதற்காக வந்திருக்கிறான்? இத்தனை நாளும் இல்லாமல் இப்போது வரக் காரணம் என்ன? பணம் குறைந்த விஷயமாகத்தான் தன் பேரில் சந்தேகம் தோன்றியிருக்க வேண்டும். வேறெதற்காக அங்கே வந்து உட்கார்ந்திருக்கிறான்? எதற்காகத் தன்னையே பார்த்துக் கொண்டிருக்கிறான்?

அன்று சாயங்காலம் வீடு சேர்ந்ததும் தங்கம் அவனைப் பார்த்து, 'ஏன் ஒரு மாதிரியாயிருக்கிறீர்கள்? முகம் வாடியிருக்கிறதே?" என்று கேட்டாள். "வேலை அதிகம்; வேறொன்றுமில்லை" என்று பதில் சொன்னான்.

மறுநாள் சௌந்தரம் பேங்கிக்குச் சென்றபோது 'இன்றைக்கு அந்த சி. ஐ. டி.காரன் அங்கே இல்லாவிட்டால் ஒரு ஆபத்தும் இல்லை' என்று எண்ணிக்கொண்டு போனான். 'இன்றைக்கு அவன் இருக்க மாட்டான்; நம்முடைய பயம் வீண் பயம்' என்று மனத்தைத் தைரியப்படுத்திக் கொண்டான். 'அங்கே அவன் இருந்தால் தான் என்ன? வேறு காரியமாய் வந்திருக்கக் கூடாதா? பட்டணத்துக்கு வெளியூரிலிருந்து வரும் எத்தனையோ உத்தியோகஸ்தர்கள் அந்த ஹோட்டலில் தங்குகிறார்கள். அந்த மாதிரி இவனும் வந்து தங்கியிருப்பான். நாம் எதற்காகப் பயப்பட வேண்டும்?' என்று தேறுதல் சொல்லிக் கொண்டான். 'இன்றைக்கு அந்த மாடிப் பக்கம் பார்க்கவே கூடாது. பார்த்தால் நம் பேரில் சந்தேகம் உண்டானாலும் உண்டாகும்' என்று உறுதி செய்து கொண்டான்.

ஆனால், பாங்கியில் அவனுடைய வழக்கமான இடத்தில் போய் உட்கார்ந்ததும் அவனையறியாமலே கண்கள் எதிர்ப்பக்கம் நோக்கின. அங்கே சி.ஐ.டி. காரன் இல்லை. 'அப்பா! பிழைத்தோம்! என்ன வீண் பயம்! என்ன வீண் பீதி! குற்றமுள்ள நெஞ்சு என்பது சரியாய்ப் போய்விட்டதே! இந்த ஒரு தடவையோடு போதும்! இனிமேல் நம் வாழ்நாளில் இம்மாதிரி காரியம் செய்யவே கூடாது...!'

வாசலில் அப்போது மானேஜிங் டைரக்டர் கார் வந்து நின்றது. அவர் பாங்கிக்குள்ளே வந்து பத்து நிமிஷத்துக்கெல்லாம், ஸௌந்தரம் தற்செயலாக மறுபடியும் எதிர் மாடிப் பக்கம் பார்த்தான்.

அங்கே சி.ஐ.டி. கழுகு உட்கார்ந்து தன்னை வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டான். ஸௌந்தரத்தின் உடம்பு ஒரு குலுங்கு குலுங்கிற்று.

மானேஜிங் டைரக்டரும் இவனும் ஒத்துப் பேசிக்கொண்டு வந்திருக்க வேண்டும்; இவன் தன்னுடைய சந்தேகத்தைத் தெரியப்படுத்தியிருப்பான். மானேஜிங் டைரக்டர் என்ன சொன்னாரோ, என்னமோ? ஒரு வேளை 'அரெஸ்டு' செய்து விடுவதென்று தீர்மானித்திருப்பார்களோ!

போலீஸ்காரர்கள் வந்து தன்னுடைய கையில் விலங்கு மாட்டித் தெருவீதி வழியாக அழைத்துப் போகும் காட்சியை சௌந்தரம் தன் மனத்தில் கற்பனை செய்து பார்த்துக் கொண்டான். அந்தக் காட்சியை மட்டும் தங்கம் பார்த்து விட்டால்? அவன் தேகத்திலுள்ள ரோமங்கள் எல்லாம் குத்திட்டு நின்றன.

போலீஸ்காரர்கள் விலங்குடன் வருவதை ஒவ்வொரு நிமிஷமும் சௌந்தரம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். ஹோட்டல் மாடிப் பக்கம் பார்க்கக்கூடாதென்று அவன் பல்லைக் கடித்துக் கொண்டு சிரமப்பட்டான். ஆனால் அந்த, சி. ஐ. டி.க்காரனின் கண்கள் தன் பேரிலேயே இருப்பதாக அவனுக்குத் தோன்றிக் கொண்டிருந்தது. கழுகு மூக்கும் வெறித்த கண்களும் உள்ள அந்தக் குரூரமான முகம் அவன் மனக் கண்ணின் முன்னால் அடிக்கடி வந்து கொண்டிருந்தது.

சாயங்காலம் பாங்கி சாத்துகிற வரையில் ஒன்றும் நடக்கவில்லை. 'நம் பேரில் வெறும் சந்தேகம் மட்டும் தோன்றியிருக்கும்; ருசு ஒன்றும் அகப்பட்டிராது. அதனால்தான் 'அரெஸ்ட் வாரண்ட்' எடுக்கவில்லை' என்று எண்ணிக் கொண்டான். ஆனால் அவர்களுக்கு என்னதான் ருசு இருக்கிறது?-ஓ! ஒருவேளை தங்க ஒட்டியாணம் வாங்கிய செய்தி தெரிந்து விட்டால்?

அன்று சாயங்காலம் சௌந்தரம் தங்கத்தைப் பார்த்து, சாதாரணமாய்க் கேட்பதுபோல், "ஆமாம்; ஒட்டியாணம் வாங்கிக் கொண்ட சமாசாரம் அடுத்த வீடு அண்டை வீடுகளுக்கெல்லாம் இதற்குள் தெரிந்திருக்குமே, அப்படித்தானே?" என்று கேட்டான்.

"நன்றாகயிருக்கிறது; வீடு வீடாகப் போய்ச் சொல்லிவிட்டு வருவேன் என்று நினைத்தீர்கள்? நேற்றைக்கு அடுத்த வீட்டு அம்மாமி பார்த்துவிட்டு 'அசல் தங்க ஒட்டியாணம் மாதிரி இருக்கிறதே என்றாள். அப்போதுகூட நான் நிஜத்தைச் சொல்லவில்லை. என்ன அவசரம்? தானே தெரிகிறது என்று இருந்துவிட்டேன்-எதற்காகக் கேட்கிறீர்கள்?" என்றாள்.

"விசேஷம் ஒன்றுமில்லை. ஆனால் இப்போதைக்கு யாரிடமும் சொல்ல வேண்டாம். இந்தக் காலத்திலேதான் அசூயை அசாத்தியமாயிருக்கிறதே!" என்றான் சௌந்தரம்.

அதற்கப்புறம், இன்னும் நாலு தினங்கள் சென்றன. சௌந்தரம் வழக்கம்போல் பாங்கிக்குப் போய் வேலை செய்து வந்தான். ஒவ்வொரு நாளும் 'இன்றைக்கு அந்த சி.ஐ.டி. காரன் இருக்க மாட்டான்' என்று எண்ணிக் கொண்டு போவான். அங்கே அந்தக் கழுகு மூஞ்சியைக் கண்டதும் ஏமாற்றமடைவான்.



நாளுக்கு நாள் அவனுடைய பீதியும் பதை பதைப்பும் அதிகமாகிக் கொண்டிருந்தன. இரண்டில் ஒன்று சீக்கிரம் தீர்ந்து விட்டால் தேவலையென்று தோன்றிற்று. இந்த நாட்களில் இரவில் தூங்கும் போது அவனுடைய உடம்பு தூக்கிப் போடுவதையும், ஏதேதோ பிதற்றுவதையும் கண்டு தங்கத்தின் கவலையும் அதிகமாகிக் கொண்டு வந்தது.

ஒருநாள் பாங்கியில் இரண்டு குமாஸ்தாக்கள் கூடி இரகசியம் பேசிக் கொண்டிருந்ததை சௌந்தரம் பார்த்துவிட்டு, அவர்கள் அருகில் தானும் போய், "என்ன சமாசாரம்?" என்று கேட்டான். "உனக்குத் தெரியாதா என்ன? பாங்கியில் ஏதோ பணம் காணாமற் போயிருக்கிறது. ஏற்கெனவே ஊரில் இருக்கிற காபராவில் அதை வெளியில் விடக்கூடாது என்று மானேஜிங் டைரக்டர் மூடி வைத்திருக்கிறாராம். திருட்டுப் போன தொகை எவ்வளவு என்று தெரியவில்லை. அது டைரக்டருக்கும் காஷியருக்கும்தான் தெரியுமாம்!" என்று குமாஸ்தாக்களில் ஒருவர் சொன்னார்.

பின்னர் இதற்கு முன்னால் நடந்திருக்கும் பெரிய பாங்கி மோசடி வழக்குகளைப் பற்றியும், அதிலெல்லாம் எப்படி எப்படித் திருடினார்கள், எப்படி எப்படி அகப்பட்டுக் கொண்டார்கள் என்பது பற்றியும் அவர்கள் பேசிக் கொண்டார்கள். மேற்படி குற்றவாளிகளின் கடுந்தண்டனையைக் கேட்டபோது, ஸௌந்தரத்துக்கு சப்தநாடியும் ஒடுங்கி விட்டன. ஒரு கேஸில் 'அப்ரூவர்' ஆனவன் மன்னிக்கப்பட்டதை அறிந்தபோது, 'நாமும் ஒரு வேளை ஒப்புக் கொண்டு விட்டால் மன்னித்து விடுவார்களோ?' என்று எண்ணினான். ஆனால் அது எப்படி முடியும்? குற்றத்தை ஒப்புக் கொள்வதென்றால், தங்கத்தினிடமும் சொல்லியாக வேண்டுமே! அவளிடம் எப்படி இந்த வெட்கக் கேட்டைச் சொல்வது? அதைவிடப் பிராணனை மாய்த்துக் கொள்ளலாம்.

தற்கொலை செய்வதற்குரிய வழிகளைப் பற்றி அவன் மனம் சிந்திக்கத் தொடங்கியது. இடையிடையே 'எதற்காக இந்தப் பைத்தியக்கார எண்ணங்கள் எல்லாம்? வெறும் சந்தேகத்தின் பேரில் சிறைக்கு அனுப்ப முடியுமா? தடயம் கிடைத்தால் தானே நடவடிக்கை எடுக்க முடியும்! தடயம் என்ன இருக்கிறது? தங்கம் வாயை மூடிக் கொண்டிருக்கிற வரையில் யார் என்ன செய்ய முடியும்?' என்று எண்ணமிட்டான்.

நகைக் கடையில் ஒட்டியாணம் வாங்கியதும், வைரத் தோட்டுக்கு ஆர்டர் கொடுத்திருப்பதும் அவனுக்கு ஞாபகம் வந்தது. ஆர்டர் புத்தகத்தில் இவனுடைய கையெழுத்துக் கூட இருக்கிறது. ஒரு வேளை அங்கே போய் விசாரித்திருப்பார்களோ?-இந்த ஒரு வழியில்தான் விஷயம் வெளியானால் வெளியாக வேண்டும்.

அன்று மாலை பாங்க் மூடியான பிறகு சௌந்தரம் நேரே வீட்டுக்குப் போகாமல் கடைத் தெருவுக்குச் சென்றான். வைரத்தோடு தயாராகிவிட்டதா என்று கேட்டுக் கொண்டு, அத்துடன் யாராவது தன்னைப் பற்றி விசாரித்தார்களா என்றும் தெரிந்து கொண்டும் வரலாம் என்று, ஒட்டியாணம் வாங்கிய கடையை நோக்கிப் போனான். கடைக்குக் கொஞ்ச தூரத்தில் அவன் வந்துகொண்டிருந்தபோது, மேற்படி கடை வாசலில் மானேஜிங் டைரக்டர் ஸஹஸ்ரநாமத்தின் மோட்டார் வண்டி நிற்பதைக் கண்டு, திடுக்கிட்டான். அங்கேயே ஒரு சந்தில் ஒதுங்கி நின்றான். சற்று நேரத்

துக்கெல்லாம் வண்டி சாலேயோடு போயிற்று. அதற்குள் ஸஹஸ்ர நாமம் இருந்தார். சரி, நம்மைப் பற்றித்தான் விசாரித்திருக்கிறர் என்று அவனுக்கு நிச்சயம் ஆயிற்று. பயத்திஞல் அவன் நெஞ்சு திக் திக்கென்று அடித்துக் கொண்டது. கடைக்குப் போகலாமா வேண்டாமா என்று ஒரு கணம் யோசித்தான். போய்த் தான் பார்த்து விடலாம் என்று துணிந்து போஞன். கடை வாசலில் போனதும் மறுபடியும் ஒரு கணம் தயங்கி நின்று உள்ளே நோக்கிஞன். அவனுடைய நெஞ்சு ஒரு நிமிஷம் அடித்துக் கொள்ளாமல் நின்றுவிட்டது. ஏனெனில், அங்கே கடை முதலாளிக்கு அருகில் அந்த சி.ஐ.டி. கழுகு உட்கார்ந்து அவருடன் ஏதோ பேசிக் கொண்டிருந்தது.

கடைக்குள் நுழையாமலே செளந்தரம் விரைவாகத் திரும்பிஞன். வீட்டுக்கு எப்படித்தான் வந்து சேர்ந்தாஞே தெரியாது. தான் செய்த காரியம் தெரிந்து போய்விட்டது என்பதைப்பற்றி அவனுக்கு இப்போது சந்தேகமே இருக்கவில்லே. எப்படியும், நாளேக்குக் கட்டாயம் கைது செய்து விடுவார்கள். அந்த அவமானத்தைச் சகித்துக் கொண்டிருக்க முடியாது. தங்கம் என்ன நினேப்பாள்? அவளுடைய தமக்கைமார்கள் என்ன நினேப்பார்கள்? "ஏழைக்குக் கொடுத்த என்னுடைய கடைசிப் பெண் தான் சந்தோஷமாயிருக்கிருள்" என்று சொல்லிப் பெருமைப் பட்டுக் கொண்டிருந்த மாமியார் என்ன நினேப்பாள்?

உயிரை விடுவதா, அல்லது ஓடிப்போவதா என்பதுதான் இப்போது கேள்வி. உயிரை விடுவதற்கு வழி என்ன என்று யோசிப்பதற்குக் கூட அவனுக்கு இப்போது சக்தியில்லே. மனது அவ்வளவு கலக்கமாக இருந்தது. கடைசியில், "இப்போதைக்கு எங்கேயாவது கண் காணுத இடத்துக்கு ஓடிப் போகலாம்; பிறகு நிலேமைக்குத் தகுந்தாற்போல் பார்த்துக் கொள்ளலாம்" என்று தீர்மானித்தான்.

அன்று இரவுதான் செளந்தரம், தங்கத்துக்குக் கடிதம் எழுதி வைத்து விட்டு அவளுக்குத் தெரியாமல் வெளியேற முயன்ருன்.

## 5

தங்கத்தினிடம் செளந்தரம் இலேசில் உண்மையைச் சொல்லிவிடவில்லே. கேள்வி கேட்டும், கண்ணீர் விட்டும், ஆணே வைத்தும் கொஞ்சம் கொஞ்சமாக அவள் விஷயங்களேத் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது. அப்படியிருந்துங்கூட, ஒரு விஷயம் ஸெளந்தரம் அதிகப்படியாகக் கற்பனே செய்துதான் சொன்ஞன். ஒரு சிநேகிதன் 2,000 ரூபாய் கடன் கொடுப்பதாகச் சொல்லியிருந்ததாகவும், அது மறுநாள் வந்துவிடுமென்று நம்பி பாங்கிப் பணத்தைப் போட்டு ஒட்டியாணம் வாங்கியதாகவும், அந்தப் பாவி பிறகு கையை விரித்துவிட்டான் என்றும் கூறிஞன். தன்னுடைய குற்றத்தைக் குறைத்துக் கொள்ளும் எண்ணத்துடனேதான் ஸெளந்தரம் இப்படிக் கற்பனே செய்து சொன்ஞன். ஆனல் இது தங்கத்துக்குப் பெரிய ஆறுதல் அளித்தது. கவலேயிஞலும் கண்ணீரிஞலும் பயத்திஞலும் வாடி வதங்கிப் போயிருந்த அவளுடைய முகம் ஒரு நிமிஷம் பிரகாசமடைந்தது. 'அப்படியாஞல் எடுத்தது தெரியாமல் இப்போது கூடப் பணத்தைப் போட்டு விடலாமா?" என்று கேட்டாள்.

"இப்போது ரொம்ப நாளாகி விட்டதே!" என்று சொன்ஞன் ஸெளந்தரம்.

"அதஞல் என்ன மோசம்? நான் பெண் பேதை, ஒன்றும் தெரியாதவள்தான். இருந்தாலும் இந்த ஒரு விஷயத்தில் நான் சொல்கிறதைக் கேளுங்கள். இந்த ஒட்டியாணத்தை நாளேக்குக் காலேயில் கொண்டு போய் விற்றுவிடுங்கள். நல்ல வேளேயாகத் தங்க நகையாக வாங்கிஞேம்! வைரமாயிருந்தால் பாதிப் பணம்கூட வராது. விற்றுவிட்டு கையில் பாக்கியுள்ளதையும் எடுத்துக் கொண்டு நேரே மேனேஜரிடம் போய், நடந்தது நடந்தபடி சொல்லிவிடுங்கள். பகவான் இருக்கிருர்; நமக்கு ஒன்றும் கெடுதி வராது" என்ருள் தங்கம்.

ஒருவிதத்தில் அது சரியான யோசனே என்றுதான் செளந்தரத்துக்கும் தோன்றியது. இப்போதுள்ள பாங்கி நெருக்கடி காபராவில், மானேஜிங் டைரக்டர் கேஸ் நடத்துவதற்கு விரும்பமாட்டார். பணம் வந்தால் போதும் என்று விட்டு விடுவார். உண்மையைச் சொல்லி மன்னிப்புக் கேட்டுக் கொண்டால் அதற்குப் பலன் இல்லாமலா போகும்? ஆஞலும் எவ்வளவோ ஆசையுடன் தங்கத்துக்கு வாங்கிக் கொடுத்த ஒட்டியாணத்தை விற்கிறதா? இப்போது அவள் சம்மதித்தாலும் பிறகு வாழ்நாளெல்லாம் சொல்லிக் காட்டமாட்டாளா?

"என்ன யோசிக்கிறீர்கள்? நான் சொன்னபடி செய்கிறதாகச் சத்தியம் செய்து கொடுங்கள். இல்லாவிட்டால் விடமாட்டேன்' என்ருள் தங்கம். அந்தப்படியே அவன் சத்தியம் செய்து கொடுக்கிற வரையில் அவள் விடவில்லே.

அடுத்தநாள் காலே 'செளந்தரம் ஒட்டியாணத்தைக் கடைத் தெருவுக்கு எடுத்துக் கொண்டு போய் வேறொரு நகைக் கடையில் அதை விற்ருன். வழக்கம்போலக் கூலியைக் குறைத்துக் கொண்டு தங்க விலேக்கு எடுத்துக் கொண்டார்கள். அதிர்ஷ்டவசமாக அந்தப் பத்து நாளில் பவுன் விலே மூன்று ரூபாய்க்கு மேல் உயர்ந்து இருந்தது. ஆகையால் ஒட்டியாணத்துக்குக் கொடுத்த பணம் அப்படியே திரும்பி வந்துவிட்டது.

மானேஜிங் டைரக்டரிடம் கொண்டு போய் ஆயிரத்தைந்நூறு ரூபாயையும் வைத்து செளந்தரம் விஷயத்தைச் சொன்னபோது, அவர் ஆச்சரியத்திஞல் பிரமித்துப் போஞர். "நல்ல வேளே; இன்றைக்கே கொண்டு வந்து கொடுத்தாய்; நாளேக்கு 'டூ லேட்' ஆகிப் போயிருக்கும்" என்ருர். அவனே மன்னித்து விடுவதாகவும், அவன் மேல் வழக்குத் தொடுப்பதில்லேயென்றும் வாக்குக் கொடுத்தார்.

இவ்வளவு சுலபமாகக் காரியம் நடந்து விடுமென்று செளந்தரம் எதிர்பார்க்கவேயில்லே. ஆகவே கொஞ்சம் தைரியம் அடைந்து "சார்! தயவு செய்து அந்த சி.ஐ.டி. காரனே உடனே போகச் சொல்லிவிடுங்கள். அவன் முழிச்சுப் பார்த்துக் கொண்டேயிருந்தால், ஒரு வேலேயும் ஓடமாட்டேனென்கிறது" என்ருன்.

மானேஜிங் டைரக்டரின் புருவங்கள் மறுபடியும் ஆச்சரியத்திஞல் நெரிந்தன.

"எந்த சி.ஐ.டி. யைச் சொல்கிருய்?" என்று ஒன்றும் தெரியாதவர்போல் கேட்டார்.

"எதிர் ஹோட்டல் மாடியில் இருக்கிறவனேத்தான் ஸார்! அவன் முகத்தை நினேத்துக் கொண்டால் இராத்திரியில் தூக்கம் வரமாட்டேனென்கிறது' என்ருன் செளந்தரம்.

மானேஜிங் டைரக்டர் மூக்கிலே விரலே வைத்து, தம்முடைய ஆச்சரியத்தைத் தெரியப்படுத்திஞர்.

"பலே கெட்டிக்காரன் நீ! சி.ஐ.டி. போட்டிருக்கிறதைக் கூடக் கண்டு பிடித்துவிட்டாயா? இன்றைக்கு ஒரு நாள்தான் அவன் இருப்பான், நாளேக்கு, வரமாட்டான்" என்ருர்.

"ரொம்ப வந்தனம் 'கவுண்டரு'க்குப் போகிறேன் ஸார்!" என்ருன் செளந்தரம்.

"இவ்வளவு புத்திசாலி இந்தச் சின்ன வேலேயில் இருக்கக்கூடாது. சீக்கிரம் உன்னே ஒரு கிளே ஆபீஸ் ஏஜெண்டாகப் போடுகிறேன்" என்ருர் ராவ்சாகேப் ஸகஸ்ரநாமம்.

செளந்தரம் மிக்க உற்சாகத்துடன் கீழே சென்ருன். அன்று நிம்மதியாக வேலே பார்த்தான். சி.ஐ.டி. காரனேயோ அவனுடைய கழுகுப் பார்வையையோ கொஞ்சம் கூட லட்சியம் செய்யவில்லே.

சாயங்காலம் வீட்டுக்குப் போனதும் தங்கத்தினிடம் எல்லா விவரங்களேயும் சொன்ஞன். அந்தச் சந்தோஷத்தைக் கொண்டாடுவதற்காக இரண்டு பேரும் ஒரு ஹிந்தி டாக்கிக்குப் போய் விட்டு வந்தார்கள். ஹிந்தி டாக்கியில் ஒரு பெரிய செளகரியம் உண்டு. திரையில் பேசுகிறது என்னவோ இவர்களுக்குத் தெரியாது; இவர்கள் பாட்டுக்குத் தங்கள் சமாசாரம் பேசிக்கொண்டிருக்கலாமல்லவா?

'இராத்திரி இரண்டு பேரும் வெகு நேரம் வரையில் பேசிக் கொண்டிருந்தால் நிம்மதியாகத் தூங்கிஞர்கள்.

* * *



மறுதினம் காலேயில் அடுத்த வீட்டு அய்யாசாமி அய்யர் கையில் காலே தினசரிப் பத்திரிகையுடன் அவசரமாய் வந்தார். "என்ன மிஸ்டர் செளந்தரம்! கடைசியில் கல்லேத் தூக்கிப் போட்டு விட்டீர்களே!" என்று கேட்டுக் கொண்டே வந்தார்.

செளந்தரம் ஒன்றும் புரியாமல் "என்ன என்ன?" என்று பரபரப்புடன் கேட்டான்.

"உங்களுக்குத் தெரியாதா என்ன? 'குபேரா பாங்க், கோவிந்தா ஆகி விட்டதாமே? ஸகஸ்ரநாமம் எல்லோருக்கும் பெரிய நாமத்தைப் போட்டு விட்டுப் போய் விட்டாஞமே!" என்று சொல்லிப் பத்திரிகையைக் கொடுத்தார். செளந்தரம் அளவில்லாத திகைப்புடன் பத்திரிகையை வாங்கிப் படித்தான். அதில் பின்வரும் செய்தி கட்டம் கட்டிப் பெரிய எழுத்தில் போட்டிருந்தது.

"குபேரா பாங்கியில் சில நாளேக்கு முன் பரபரப்பு ஏற்பட்டிருந்தது நேயர்களுக்குத் தெரியும். அந்தப் பரபரப்பு ஒரு வாரமாக அடங்கியிருந்தது. பாங்கிக்கு நெருக்கடி தீர்ந்து விட்டது என்று எல்லாரும் எண்ணியிருந்த சமயத்தில் திடுக்கிடும்படியான சம்பவங்கள் நேற்று இரவு நடந்திருக்கின்றன. குபேரா பாங்கியின் மானேஜிங் டைரக்டர் ராவ் சாகிப் ஸகஸ்ரநாமம் நேற்று இரவு எழும்பூர் ரயில்வே ஸ்டேஷனில் கைது செய்யப்பட்டார். பாங்கியின் கையிருப்பிலிருந்து அவர் ஏராளமான தொகையைக் கையாடியிருப்பதாகத் தெரிந்து, சில நாளாக இரகசியப் போலீஸார் அவரைக் கண்காணித்து வந்தனர். நேற்று இரவு கைது செய்யப்பட்டபோது அவர் வசம் சுமார் இரண்டு லட்சம் ரூபாய் பெறுமான ஸவரன்களும் தங்க நகைகளும் இருந்தன என்று தெரிகிறது. முந்தைய இரண்டு தினங்களில் அவர் மார்க்கெட்டில் ஏராளமாக ஸவரன்கள் வாங்கிச் சேகரித்திருந்தாராம்.

அவர் மதுரைக்கு டிக்கட் வாங்கியிருந்த போதிலும் உண்மையில் புதுச்சேரிக்குப் போக உத்தேசித்திருந்தாரென்று தெரிகிறது. அவரை நல்ல சமயத்தில் கைது செய்த ஸி.ஐ.டி. போலீசாரின் சாமர்த்தியம் பெரிதும் பாராட்டப்படுகிறது."

இதைப் படித்ததும் சுமார் கால்மணி நேரம் வரையில் ஸெளந்தரம் ஸ்தம்பித்து உட்கார்ந்திருந்தான். யோசிக்க யோசிக்க அவனுக்கு எல்லா விஷயங்களும் தெளிவாகத் தெரிய வந்தன. சி.ஐ.டி. காரன் பாங்கியைக் காவல் புரிந்ததெல்லாம் தனக்காக அல்ல, மானேஜிங் டைரக்டருக்காகத்தான். தான் ஒட்டியாணம் வாங்கிய நகைக் கடையில் மானேஜிங் டைரக்டர் ஸவரன் வாங்கியிருக்கவேண்டும். அவர் அங்கே என்ன செய்தார் என்றுதான் சி.ஐ.டி. காரன் விசாரித்திருக்க வேண்டும்! தனக்கு ஒரு ஆபத்தும் ஏற்பட்டிருக்கவில்லே; பணம் திருப்பிக் கொடுத்திருக்க வேண்டியதில்லே. வீண் பயம்! வீண் நஷ்டம்!

அவனுடைய மனம் ஒருவாறு தெளிவடைந்ததும் உள்ளே போய் தங்கத்தைக் கூப்பிட்டு விஷயத்தைச் சொன்ஞன். அவளும் ரொம்ப ஆச்சரியப்பட்டாள்.

"நாம் பயப்பட்டது எல்லாம் வீண்" என்று செளந்தரம் சொன்னபோது அவனுடைய மனத்தில் இருந்ததைத் தெரிந்து கொண்ட தங்கம், "நல்ல வேளே, நேற்றைக்கே ஒட்டியாணத்தை விற்றுப் பணத்தைக் கொடுத்துத் தொலேத்தீர்களே! இல்லாமற் போஞல் அது நம் தலேயில் எப்போதும் ஒரு பெரிய பாரமாயிருக்கும்" என்ருள்.

இதற்கு என்ன பதில் சொல்வதென்று செளந்தரத்துக்குத் தெரியவில்லே. சற்று நேரம் கழித்து, திடீரென்று "தங்கம்! இதில் இன்ஞெரு சங்கடம் இருக்கிறதே! பாங்கியை மூடிவிட்டபடியால் எனக்கு வேலே போய் விட்டதே!" என்று கவலேயுடன் கூறிஞன்.

"வேலேதானே போச்சு? போஞல் போகட்டும். நீங்கள் போகாமல் இருக்கிறீர்களே, அதுவே எனக்குப் போதும்" என்ருள் தங்கம்.



செளந்தரத்துக்கு வேறொன்றும் சொல்லத் தோன்ருமல், "என் தங்கமே!" என்ருன்.

**(ஆனந்த விகடன் 21-7-1940)**

**நன்றி: ஆனந்த விகடன்**



# வில்லியர்ஸ் இஞ்சின்கள்

## தமிழக அரசு, சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் வங்கிகளால் ஏற்கப்படுவது எதனால்? காரணங்கள் பல.

**3.4 மற்றும் 2 H.P. பம்பு செட்டுக்கள்**
விலையில் ரூ. 1500 வரை குறைவு. மணிக்கு 12,000 காலன்கள் வரை தண்ணீர் பாய்ச்சுகின்றன. எடுத்து செல்ல எளிதானவை.
சிறு விவசாயிகளுக்கும், வெவ்வேறு இடங்களில உள்ள நிலங்களில நீர் பாசனம் செய்யவும் மிகவும் ஏற்றவை. சுலபமாகக் கிடைக்கும் மண்ணெண்ணெய் அல்லது டீசல் கலவையில் இயங்கக் கூடியவை.
2500 பம்பு செட்டுகள் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒரே மாவட்டத்தில் விற்கப் பட்டது வில்லியர்ஸின் திறமைக்கு ஒரு சான்று.

**ஸ்ப்ரேயர்களுக்கான L-34 இஞ்சின்கள்**
குறைந்த விலையில் கிடைக்கின்றன.
விசைத்தெளிப்பான் இயக்கத்திற்கு போதுமான சக்தி கொண்டது.
தேவையற்ற அதிக சக்தி இல்லாததால் இயக்கும் செலவு குறைவு.
ஒவ்வொரு பருவத்திற்கும் ரூ. 300 வரை மிச்சம்.
வில்லியர்ஸ் L-34 இஞ்சின் பொருத்திய 1,45,000 ஸ்ப்ரேயர்கள் நாடு முழுவதும் இயங்குகின்றன.



வில்லியர்ஸ் இஞ்சின்களின் குறைந்த விலை காரணமாக மேலும் அதிக விவசாயிகள் ஒரே கடன் திட்டத்தின் கீழ் பயனடைகிறார்கள்.
நாடு முழுவதும் சர்வீஸ் அமைப்பு கொண்டது. ஸ்பேர் பார்ட்சுகள் உடனடி கிடைக்கின்றன. வருடாவருடம் ஆயிரக்கணக்கில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.

Villiers TEXMO IS:7347 ISI

தி என்பீல்ட் இந்தியா லிமிடெட்
அக்ரோ இஞ்சின் டிவிஷன் சென்னை 600 020

ADWAVE/AE/492


# உழவர்களுக்கு உதவும் புதிய செய்திகள்!

**மக்காச்சோளம் - தட்டைப்பயறு கால்நடைகளுக்கு நல்ல கலப்புப் பயிர்.**

கால்நடை தீவனத்திற்கு ஏற்ற தீவன கலப்புப் பயிர்கள் எவை என்பது குறித்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற ஆராய்ச்சியில் மக்காச்சோளம் - தட்டைப்பயறு கலப்புப்பயிர் அதிக பசுந்தீவனத்தையும் அதிக புரதத்தையும் கொடுப்பதாகக் கண்டறியப்பட்டது. டெக்கான் மக்காச் சோளமும், கோ. 2 தட்டைப்பயறும் 25 செ. மீ. இடைவெளியில் சாகுபடி செய்தபோது 55 நாட்களில் எக்டருக்கு 35 டன் மகசூல் கொடுத்துள்ளது. ஆனால் மக்காச் சோளம் தனிப்பட்ட முறையில் எக்டருக்கு 33 டன் மகசூலும் தட்டைப்பயறு எக்டருக்கு 24 டன் மட்டுமே கொடுத்துள்ளது. நீர்ப்பாசன வசதியிருந்தால் வருடத்தில் 5 முறை இவ்வாறு பயிர் செய்து அதிக பசுந்தீவனமும், புரதச்சத்தும் கால்நடைகளுக்கு அளிக்க முடியும் என்று தெளிவாக அறியப்பட்டது. கால்நடைகளும் இந்த கலப்புத் தீவனத்தை, தனித் தீவனத்தைவிட மிகவும் விரும்பி உண்ணுகின்றன. மேலும் புரதச் சத்து மிகுதியாக இருப்பதால், கால்நடைகளுக்கு இத்தீவனமே போதுமானது; பிண்ணாக்கு போன்றவை தேவையில்லை.

**தழைச்சத்து உர அளவை நிர்ணயிக்கப் புதிய முறை**

நெற்பயிருக்கு மேலுரமிட விவசாயிகள் பொதுவாக குறிப்பிட்ட ரகத்திற்குப் பரிந்துரைக்கப்படும் உர அளவையோ அல்லது பயிரின் வளர்ச்சி மண்ணின் வளம் ஆகியவற்றைப் பொறுத்தோ ஓரளவு தோராயமாக அளிக்கின்றனர். ஆனால் இதனை மிகவும் துல்லியமாகக் கணக்கிட ஒரு புது முறையைக் கண்டுபிடித்துள்ளார்கள். இந்த முறைப்படி, நெற்பயிரின் முக்கிய சிம்புகளைத் தேர்தெடுத்து அதில் நுனியிலிருந்து நான்காவது இலையின் அடிப்பாகமாகிய காம்புப் பகுதியை(Leaf Sheact) எடுத்து விரல்களுக்கிடையில் வைத்து லேசாக நசுக்கி அயோடின் திரவத்திற்குள் 5 மணி நேரம் ஊற விட வேண்டும். இந்த திரவம் தயாரிக்க 0.1 கிராம் அயோடின் கட்டிகளையும் 0.5 கிராம் பொட்டாசியம் அயோடைடு என்ற இரசாயனப் பொருளையும் 100 மி.லி. நீரில் கரைத்துக் கொள்ளவேண்டும்.

இவ்வாறு சோதனை செய்து பார்ப்பதில் 40 சதத்திற்கும் குறைவான பகுதி திரவம் மட்டுமே புது நிறமடைந்தால் மேலுரமாக தழைச்சத்து இடத் தேவையில்லை. சோதனையில் 40 சதம் திரவம் நிறமாறினால் எக்டருக்கு 20 கிலோவும் 45 சதம் நிறமாறினால் 30 கிலோவும் 50 சதம் மாறினால் 40 கிலோவும், 60 சதம் மாறினால் 50 கிலோவும் தழைச் சத்து உர மேலுரமாக இடவேண்டும். இம்முறையைக் கையாண்டால் பயிருக்கு எந்த அளவு தேவையோ அந்த அளவு மட்டும் இட்டு உரத்தின் சேதாரத்தையும் குறைத்து அதிக மகசூலைப் பெற வாய்ப்புண்டு.

**கரு நீலப் பாசி உரம்**

கரு நீலப் பாசி இனத்தைச் சேர்ந்த அனபீனா, நாஸ்டாக், போலிபோத்திரிக்ஸ், அல்போசிரா போன்ற நுண்ணுயிர்கள் நெல் வயல்களில் நைட்ரஜனை நிலைப்படுத்தி நெல்லுக்குச் சிறந்த பலனைக் கொடுக்கின்றன என்று அறியப்படுகின்றது. புது டில்லியிலுள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தில் மேற்கூறிய நான்கு கருநீலப் பாசி நுண்ணுயிர்களைக் கொண்ட நுண்ணுயிர் உரக் கலவையை வழங்குகின்றனர். அதை உபயோகித்து விவசாயிகள் தங்களுக்குத் தேவையான பாசி உரத்தைக்கீழ்க் காணும் முறையில் தாங்களே தயாரித்துக் கொள்ளலாம்.

நன்றாக சலிக்கப்பட்ட 5-6 கிலோ மண்ணுடன் 250 கிராம் சூப்பர் பாஸ்பேட்டையும், 2 கிராம் சோடியம் மாலிப்டேட்டையும் கலந்து 6' × 33' × 7" அளவுள்ள துத்தநாகத் தட்டுக்களில் பரப்பி 6 அங்குலம் அளவுக்கு நீரினைக் கலந்து, ஒருநாள் தேங்கி நிற்கும்படி விடவேண்டும். பின் ஒரு பாக்கெட்டிலிருக்கும் கருநீலப்பாசி உரக்கலவையைத் தூவி இந்தத் தட்டுக்களை சூரிய வெளிச்சம் உள்ள திறந்த வெளியில் 15-20 நாட்கள் வைத்திருக்க வேண்டும். கருநீலப் பாசிகள் ஒளிச்சேர்க்கை முறையில் செயல்பட்டு நீர்மட்டத்தின் மீது பரவலாக வளர்ச்சியடையும். நீர் மட்டம் குறையாமலிருக்க அவ்வப்போது நீர் ஊற்றி வரவேண்டும். பாசிகள் நன்றாக வளர்ச்சியடைந்த பின் வெயிலில் காயவைத்துப் பிரித்தெடுத்து நெல் வயலுக்கு உடனே உபயோகிக்கலாம். பாலித்தீன் பைகளில் வைத்திருந்தும் தேவையான போது உபயோகிக்கலாம். நாற்று



நடவு செய்த ஒரு வாரத்திற்குப் பின், நெல் வயல்களில் தேங்கி நிற்கும் நீரில் ஒரு ஏக்கருக்கு 3-4 கிலோ அளவில் இந்தக் கருநீலப் பாசியைத் தூவ வேண்டும்.

இப்பாசிகள் சூரிய ஒளியைப் பயன்படுத்தி நன்றாக வளர்ச்சி பெற்று செயல் புரிந்து நெற்பயிருக்கு நல்ல பலன் கொடுக்கின்றன. இப்பாசிகள் 30-50 கிலோ நைட்ரஜனை ஒரு எக்டரில் ஒரு ஆண்டில் நெல் வயல்களில் நிலைப்படுத்தி நெற்பயிர் பலன் பெறச் செய்கின்றன. மேலும், சில வைட்டமின்களையும், நுண் ஊக்கிகளையும் தயாரித்துத் தாவரங்கள் பலனடையச் செய்கின்றன. அது மட்டுமின்றி, நெல் வயலுக்குப் போடப்படும் இரசாயன உரத்தை நெற்பயிர்கள் சிறந்த முறையில் உபயோகித்துக்கொள்ள இப்பாசிகள் துணை புரிகின்றன.

**நுண்ணுயிர் உரக்கலவையை உபயோகிக்கும் முறைகள் :**

அசட்டோபெக்டர் நுண்ணுயிர் உரக்கலவையை உபயோகிப்பதனால் தூர்களின் எண்ணிக்கையும், பயிர்களின் உயரமும் அதிகரிக்கின்றது. பல்வேறு பயிர்களுக்கு அசட்டோபெக்டர் நுண்ணுயிர் உரக்கலவையினை உபயோகிப்பதால், தழைச்சத்து கிடைக்க வழங்கப்படும் இரசாயன உரங்களின் (யூரியா, அம்மோனியம் சல்பேட் போன்றவை) அளவில் 25 முதல் 30 சதம் குறைக்க முடியும் எனப் பல்வேறு சோதனைகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இதனால் விளைச்சல் எந்த விதத்திலும்பாதிக்கப்படுவதில்லை. அசட்டோபெக்டர் நுண்ணுயிர்கள் நெல், ராகி, சோளம், சூரியகாந்தி, பருத்தி, வெண்டைக்காய், சர்க்கரை வள்ளி முதலிய பயிர்களில் நல்ல பலன் கொடுத்துள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

பாக்கெட்டுகளிலிருக்கும் இலைமக்குடன் கலந்த அசட்டோபெக்டர் நுண்ணுயிர் உரக்கலவையை உபயோகிக்கும் முறையைப் பார்ப்போம். அசட்டோபெக்டர் நுண்ணுயிர் உரக்கலவையை மூன்று முறைகளில் உபயோகப்படுத்தலாம். (1) நுண்ணுயிர்க் கலவையை விதைகளுடன் கலந்து விதைக்கலாம்; (2) நுண்ணுயிர் கலவையுள்ள கரைசலில் நாற்றுக்களின் வேர்களை நனைத்து எடுத்து நடவு செய்யலாம்; (3) நுண்ணுயிர் கலவையை தொழுஉரம் மற்றும் மண்ணுடன் கலந்து நிலத்தில் பரப்பலாம்.

விதைகளுடன் கலக்க, சுமார் 125 கிராம் வெல்லத்தை அரை லிட்டர் நீரில் கரைத்து 30 நிமிடங்கள் கொதிக்க வைத்து குளிர வைக்கவேண்டும். பின் விதைகளுடன் கொட்டிக் கலந்து நிழலில் காயவைத்து உலர்ந்த விதைகளை உடனேயோ 24 மணி நேரத்திற்குள்ளோ விதைத்து விட வேண்டும்.

நாற்றுடன் கலக்க, இரண்டு பாக்கெட்டுகளிலிருக்கும் அசட்டோபெக்டர் கலவையினை 10-20 லிட்டர் நீரில் கரைத்துக்கொண்டு ஒரு ஏக்கருக்குத் தேவையான நாற்றுக்களின் வேர்ப்பகுதியினை 15-20 நிமிடங்கள் அக்கரைசலில் நனைய வைத்துப் பின் நடவு செய்யவேண்டும்.

மண்-தொழு உரத்துடன் கலக்க, நான்கு பாக்கெட்டுகளிலுள்ள அசட்டோபெக்டர் கலவையை 10 கிலோ நன்றாக மக்கிய தொழு உரத்துடன் சிறிதளவு நீர் தெளித்துக் கலந்துவிட வேண்டும். பின் அதே அளவு மண்ணுடன் கலந்து கொண்டு ஒரு ஏக்கர் நிலத்தில் விதைக்கும் பொழுதோ நடவு செய்வதற்கு முன்போ, களையெடுத்த பின்போ தூவி மண்ணில் கலக்கும்படி செய்ய வேண்டும். அதிகாலையிலோ மாலையிலோ இக்கலவையைத் தூவுதல் வேண்டும். இவ்வாறு செய்வதனால் அசட்டோபெக்டர் நுண்ணுயிர்கள் வேர் வெளி மண்டலத்தில் இருந்து செயல்பட்டுச் சிறந்த பலனளிக்கின்றன.

**நெல்லும் நீர் பாய்ச்சுதலும்**

தமிழ்நாட்டில் பயிராகும் பயிர்களுக்குள் நெல்லுக்குத்தான் அதிக அளவு நீர் தேவைப்படுகிறது. நெற்பயிரைப் போன்ற வயதுடைய மற்றப் பயிர்களுடன் ஒப்பிடும்போது நெல்லுக்கு இரண்டு முதல் நான்கு மடங்கு நீர் அதிகம் தேவைப்படுகிறது. சோளப் பயிருக்கும் கம்புக்கும் 500 மி. மீட்டர். நிலக்கடலைப் பயிருக்கு 540 மி.மீ. ராகி பயிருக்கு 580 மி.மீ. மக்காச்சோளத்திற்கு 625 மி.மீ. நீர் தேவைப்படுகிறது. ஆனால் நெற்பயிருக்கு 1800 மி.மீ. நீர் தேவை. மற்றும் நெற்பயிரின் உற்பத்தித் திறன் குறைவுதான். அதாவது ஒரு மி.மீ. நீர் அளவுக்கு 2.8 கிலோ நெல்லும், 12.5 கிலோ கோதுமையும், 9 கிலோ சோளமும், 8 கிலோ மக்காச் சோளம், கம்பு மகசூலும், 6.2 கிலோ ராகியும் 5.5 கிலோ நிலக்கடலையும் மகசூலாகப் பெறலாம்.

நெல்லில் அதிக மகசூல் பெற நீர் நன்கு பாய்ச்சுதல் அவசியம். நெற்பயிரைக் குறைந்த அளவு நீரை உபயோகித்தும் பயிரிடலாம். ஆனால் மகசூல் குறைந்துவிடும். நீர்த் தேவையைப் பொறுத்து நெற்பயிரை மூன்று விதமாகப் பிரிக்கலாம். முதலாவது நன்கு நீர் பாய்ச்சிப் பயிரிடப்படுவது. இரண்டாவது ஓரளவு நீர் பாய்ச்சப்பட்டுப் பயிரிடப்படுவது. அதாவது மானாவாரியாக விதைக்கப்பட்டு பின்பு நீர் பாய்ச்சப்படுவது. மூன்றாவது, முழுமையாக மழையையே நம்பிப் பயிரிடப்படும் முறை. நம் தமிழ்நாட்டில் நெல்லுக்கு நீர்த் தேவையை அறிய நடத்தப்பட்ட சோதனைகளின் முடிவுகளைப் பார்ப்போம்.

நம் மாநிலத்தைப் பொறுத்த மட்டில் நெல்லுக்கு 5 செ. மீ. முதல் 1 செ. மீ. வரை நீர் தேவைப்படுகிறது. அதாவது நீரைப் பாய்ச்சும் பொழுது 5 செ. மீ. உயரத்திற்கு நீரைத் தேக்க வேண்டியது. பின்பு ஓரிரு நாட்களில் நீர் குறைந்து 1 செ.மீ உயரமிருக்கும் பொழுது திரும்பவும் 5 செ. மீ. உயரமிருக்குமாறு நீர் பாய்ச்சுவது. இவ்வாறு தொடர்ந்து நீரைப் பாய்ச்சுவதும் வடிய விடுவதுமாக இருக்க வேண்டும். இருப்பினும் எங்கெல்லாம் களைகள் அதிகமாக இருக்கிறதோ அங்கெல்லாம் 10 செ. மீ. முதல் 5 செ. மீ. என்ற அளவிலோ 7.5 செ. மீ. முதல் 2.5 செ. மீ. என்ற அளவிலோ நீரை பாய்ச்சலாம்.

அதிக விளைச்சலைக் கொடுக்கும் குட்டை ரகங்களான ஐ. ஆர். 8 போன்ற ரகங்களுக்கு 5 செ. மீ. முதல் பூஜ்ஜியம் செ. மீ. என்ற அளவில் நீரை உபயோகிக்கலாம். நிலத்தில் மயிரிழை போன்ற வெடிப்புகள் உண்டாக ஆரம்பிக்கும் சமயம் திரும்ப நீர்பாய்ச்சலாம். இருப்பினும் தஞ்சை பழைய டெல்டா பகுதிகளுக்கும் இது போன்ற இதர இடங்களுக்கும் 20 செ. மீ. முதல் 10 செ.மீ. என்ற அளவிலோ 15 செ. மீ. முதல் 5 செ. மீ. என்ற அளவிலோ நீரைப் பாய்ச்சலாம். பூமியின் தன்மையைப் பொறுத்தும், களைகளின் தொல்லையைப் பொறுத்தும் நீர் அளவைப் பராமரிக்கலாம். குறைந்த நீரை உபயோகித்து அதிக உற்பத்தியை எடுக்கும் முறையை நாம் பின்பற்ற வேண்டும்.

**கொத்துக்கடலைக்கு பொட்டாசு உரத்தேவை :**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த திண்டிவனம் அகில இந்திய ஒருங்கிணைந்த எண்ணெய் வித்து ஆராய்ச்சியில் டிஎம்வி. 7 நிலக்கடலைக்கு எந்த அளவு சாம்பல் சத்து உரமிடவேண்டும் எனக் கடந்த பருவத்தில் ஆராயப்பட்டது.

எக்டருக்கு 89 கிலோ பொட்டாஷ் உரமிட்டு நீர்பாய்ச்சிச் சாகுபடி செய்ததில் அதிக அளவான 2002 கிலோ கடலை மகசூல் கிடைத்துள்ளது. இருப்பினும் வரவு-செலவுக் கணக்கைப் பார்க்கும்பொழுது எக்டருக்கு 75 கிலோ என்ற அளவில் பொட்டாஷ் உரமிட்டதில் 1994 கிலோ மகசூல் கிடைத்துள்ளது தான் விவசாயிக்கு லாபகரமாக இருக்கும் என்று தெரிகிறது. எக்டருக்கு 89 கிலோ உரமிட்டதில் ஒரு ரூபாய் செலவுக்கு ரூ. 1.90 வருமானமும் 75 கிலோ உரமிட்டதில் ரூ. 2.38 வருமானமும் கிடைத்திருக்கின்றன. எனவே எக்டருக்கு 53 கிலோ சாம்பல் சத்து இடவேண்டும் என்கிற தற்போதைய பரிந்துரையை மாற்றி 75 கிலோ இட்டால் அதிக உற்பத்தியும் அதே சமயம் அதிக லாபமும் பெறலாம் எனத் தோன்றுகிறது.

**புதிய சர்க்கரைவள்ளிக் கிழங்கு**

சர்க்கரைவள்ளிக் கிழங்கில் உயர் விளைச்சல் தரும் சிறந்த கோ. 1 என்ற ரகத்தை சமீபத்தில் கோயமுத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப்பல்கலைக் கழகம் வெளியிட்டது. இந்த ரகம் எக்டருக்கு 28.33 டன்கள் வரை மகசூல் கொடுக்கக்கூடியது. இது சாதாரணமாகக் கிடைக்கும் மகசூலை விட 17 சதவீதம் அதிகமாகும். 'கிழங்கு துளைப்பான்' வண்டு இதனைத் தாக்குவதில்லை. மற்ற வகைகளை கிழங்கு துளைக்கும் வண்டு சுமார் 40 முதல் 80 சதவிதம் தாக்கும். ஆனால் கோ. 1 ரகத்தை 11 முதல் 15 சதவிதம் தான் தாக்குகிறது. இதன் வயது 135 நாட்கள்.

எனவே சர்க்கரைவள்ளிக் கிழங்கு பயிரிடும் விவசாயிகள் கோ. 1 ரகத்தைப் பயிரிட்டு அதிக லாபம் அடையக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**பருத்தியில் கொழுந்துவெட்டுவதால் அதிகலாபம்**

கோயமுத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தாவர உடற் கூறு இயல்துறையில் 5 பருத்தி ரகங்களுக்கு கொழுந்து வெட்டுதல் செய்யப்பட்டு மகசூல் ஆராயப்பட்டது. விதைத்த 45-வது, 60-வது 75-வது மற்றும் 90-வது நாட்களில் கொழுந்து வெட்டுதல் செய்து எக்டருக்கு, 60 கிலோ, 120 கிலோ தழைச் சத்து என்ற இரண்டு நிலையில் உரமிட்டு ஆராயப்பட்டது.

எம். சி. யூ. 5 : விதைத்த 75-வது நாளில் கொழுந்து வெட்டி, எக்டருக்கு 120 கிலோ தழைச் சத்து கொடுத்ததில் எக்டருக்கு 2073 கிலோ மகசூல் கிடைத்தது. கட்டுப்படுத்தப்பட்ட அதாவது கொழுந்து வெட்டாமல், உரமிடாமல் உள்ள சோதனைப் பாத்தியின் எக்டர் மகசூல் 1515 கிலோ. கொழுந்து வெட்டுவதால் எக்டருக்கு ரூ. 2745 அதிக லாபம் கிடைத்தது.

சுஜாதா : கட்டுப்படுத்தப்பட்ட சோதனைப் பாத்தியின் மகசூல் எக்டருக்கு 1236 கிலோவும் 75-வது நாள் கொழுந்து வெட்டி, எக்டருக்கு 60 கிலோ தழைச் சத்து உரமிட்டதில் எக்டருக்கு 1356 கிலோவும் மகசூல் கிடைத்தது. இதனால் எக்டருக்கு ரூ. 180 அதிக லாபம் கிடைத்தது.

சி. பி. எஸ். 156:—கட்டுப்படுத்தப்பட்ட சோதனைப் பாத்தியின் எக்டர் மகசூல் 973 கிலோவும் 75வது நாள் கொழுந்து வெட்டிய பாத்தியில் எக்டருக்கு 1268 கிலோ மகசூல் கிடைத்தது.

இதனால் எக்டருக்கு ரூ. 1602 அதிக லாபம் கிடைத்தது.

எம். சி. யூ. 7 : கட்டுப்படுத்தப்பட்ட சோதனைப் பாத்தியின் எக்டர் மகசூல் 2392 கிலோவும், 90-வது நாள் கொழுந்து வெட்டி எக்டருக்கு 60கிலோ தழைச்சத்து கொடுத்த பாத்தியில் எக்டருக்கு 2535 கிலோவும் மகசூல் கிடைத்தது. இதனால் எக்டருக்கு ரூ. 481 கூடுதல் வருமானம் கிடைக்கும்.

பி. ஆர். எஸ். 72 : எல்லாச் சோதனைப் பாத்திகளிலும் கொழுந்து வெட்டுதல் சிறந்தது எனத் தெரிந்தது. ஆனாலும் 90 வது நாள் கொழுந்து வெட்டியதில் எக்டருக்கு 2041 கிலோவும் களீடுப்படுத்தப்பட்ட சோதனைப் பாத்தியில் எக்டருக்கு 1658 கிலோவும் மகசூல் கிடைத்தது. இதனால் எக்டருக்கு ரூ. 1703 அதிக லாபம் கிடைத்தது.



# குழந்தைக்குத் தேவை சத்தான உணவு
# பயிருக்குத் தேவை விஜய்

குழந்தையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவும் சத்துணவைப்போலவே பயிர்களும் நன்கு வளர்ந்து முழுப் பலனையும் தர தழை, மணி, சாம்பல் சத்துக்கள் அவசியம்.

ஆனால் நெற்பயிருக்கு தழைச்சத்தைத்தரும் யூரியாவை மட்டும் இட்டால போதுமானது எனக் கருதக்கூடும். அவ்வாறு யூரியாமட்டும் இட்டால் பயிர்கள் பூச்சிகளால தாக்கப்படும். வறட்சியைத் தாங்காது. மேலும் நாளடைவில் மண்ணின் தன்மைகெட்டு விளைச்சலும் குறையும்.

தழைச்சத்துடன் மணி, சாம்பல் சத்துக்களை இடுவதுதான் லாபகரமானது என ஆராய்ச்சிகள் நிருபித்துள்ளன:—

நெல் (ஏக்கருக்கு)

| உரம் | சாகுபடி செலவு ரூ. | விளைச்சல் (மூட்டை 75 கிலோ) | வருவாய் (1 மூட்டை 60 ரூ. விகிதம்) |
|---|---|---|---|
| 40 கிலோ தழைச்சத்து மட்டும் | 1040 | 18. | 1080 |
| 40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து | 1180 | 23 | 1380 |
| 40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து 20 கிலோ சாம்பல்சத்து | 1215 | 30 | 1800 |

இவ்வாறு மூன்று சத்துக்களையும் இடும் போது கூடுதல் செலவு ரூ. 175க்கு அதிக வருவாய் ரூ. 720 கிடைக்கிறது.

அதிக வருவாய் தரும் தழை, மணி, சாம்பல் சத்துக்களை சமச்சீர் அளவில் கொண்டது விஜய் 17-17-17. இத்துடன் விஜய் யூரியாவையும்.உங்கள் நெற்பயிருக்கு உபயோகித்து அதிகப்பயன் பெறுங்கள்.

VIJAY
MADRAS FERTILIZERS

மேலும் விவரங்களுக்கு கீழ்கண்ட முகவரிக்கு எழுதுங்கள்:
ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்டிலேசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், திருச்சி 620 017






MFL-1162




# பாம்பு என்றால் பதறாதீர்!


—டாக்டர் எ. கருப்பண்ண பிள்ளை

உதவி அறுவை மருத்துவர்

இராயப்பேட்டை மருத்துவமனை

சென்னை


பாம்பு என்றால் படையும் நடுங்கும் என்பது முதுமொழி. ஆனால் இந்த நவீன உலகத்தில் நாம் பாம்பைக் கண்டு பயப்பட வேண்டாம்! ஏனென்றால் இப்பொழுது பாம்புக் கடியின் அபாயத்திலிருந்து, காத்துக் கொள்ள நல்ல மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது.

நியூஸிலாந்து அயர்லாந்து தவிர உலகின் எல்லாப் பகுதிகளிலும் பாம்பு உள்ளது.

பாம்புகளில் 2,500 வகைகள் உள்ளன. ஆனால் அவற்றில் 216 வகைப் பாம்புகள்தான் விஷம் உள்ளவை. இந்தியாவில் 52 வகை பாம்புகள்தான் உள்ளன. அதிலும் சாதாரணமாக 4 வகைப் பாம்புகள்தான் மிகவும் முக்கியமான விஷமுள்ளவை.

ஆண்டிற்குச் சுமாராக 2,00,000 பேர் பாம்புக்கடியினால் துன்புறுகின்றனர். இவற்றில் 15,000 பேர் பாம்புக்கடிக்குப் பலியாகின்றனர்.

**விஷமுள்ள பாம்புகள் :** நல்ல பாம்பு, கட்டு விரியன், கண்ணாடி விரியன், சுருட்டைப் பாம்பு, குழி விரியன் ஆகியவை விஷமுள்ள பாம்புகள் ஆகும். இவற்றில் கட்டுவிரியன் கொடிய விஷமுள்ள பாம்பு.

**விஷமில்லாத பாம்புகள் :** மண் பாம்பு, சாரைப்பாம்பு, தண்ணீர்ப் பாம்பு, பச்சைப் பாம்பு, மலைப்பாம்பு, கொம்பேறி மூக்கன் ஆகியவை விஷமற்றவை.

**பாம்பைப்பற்றி சில உண்மைகள் :**

பாம்புகள் 10, 20 ஆண்டு உயிருடன் இருக்கும். பாம்புகளுக்கு ஒரே தலைதான் உள்ளது.பாம்புகள் பழி வாங்குவதில்லை. பாம்புகள் உணவின்றி நீரை மட்டுமே பருகி ஓராண்டுக் காலம்வரை உயிர் வாழ முடியும். பாம்பிலிருந்து மாணிக்கம் கிடைக்கிறது என்பதும் பொய். பாம்புகளால் தொழுநோய் வராது.

**பாம்பு கடிததால் ஏற்படும் அறிகுறிகள் :**

**கண்ணாடி விரியன்** கடித்தால் எரிச்சலுடன் கூடிய தொடர்வலியும் வீக்கமும் ஏற்படும். கடிபட்ட இடத்தில் நிறம் மாறி, கொப்புளங்கள் உண்டாகும், தலை சுற்றி வாந்தி ஏற்படும். எச்சில், சிறுநீர் ஆகியவற்றில் இரத்தம் கலந்திருக்கும். கண்பார்வையும், சுவாசமும் பாதிக்கப்படும்.

**நல்ல பாம்பு** கடித்தால் கடிபட்ட இடத்தில் வலி, வீக்கம், கண் இமை பாதிப்பு, பாதம் சோர்ந்து போதல், நாக்கு பேச்சு குளறல், எச்சில் வடிதல், மயக்கம், நினைவற்ற தன்மை, மூச்சுத் திணறல் ஏற்படலாம். இதன் விஷம் நரம்புகளைப் பாதிக்கும். சுவாசம் பாதிக்கப்படுவதாலோ, மூச்சுத் திணறல் ஏற்படுவதாலோ உயிர் பிரியும்.

**கட்டு விரியன்** கொடிய விஷமுள்ள பாம்பு. இதன் விஷம் நல்ல பாம்பின் விஷத்தை விட 8 மடங்கு அதிக வீரியமுள்ளது. கட்டுவிரியனின் கடி நல்ல பாம்பின் கடியை ஒத்திருக்கும். அதே அறிகுறிகள் தென்படும்.

**சுருட்டைப் பாம்பு** ஒரு அடி நீளமுள்ள மிகச்சிறிய பாம்பு. இதன் விஷம் குறைவான அளவு உள்ளதால் உயிருக்கு ஆபத்து ஏற்படுவதில்லை. இரத்தக் கசிவு ஏற்படுகின்றது.

**பாம்பு கடித்தால் செய்ய வேண்டிய முதலுதவி :**

பாம்பு கடித்தால் பயம் கொள்ளக்கூடாது. பயம்தான் நமது முதல் எதிரி. கடிபட்டவருக்குத் தைரியம் சொல்ல வேண்டும். காரணம் பாம்புகளில் பல விஷமற்றவை. கடிபட்ட இடத்திற்கு மேல் இறுக்கமாகக் கட்டுப் போட வேண்டும். இதன் மூலம் விஷம் மேலும் பரவுவதைத் தடுக்கலாம். வீக்கம் அதிகமானால் மட்டும் கட்டைச் சிறிது தளர்த்தி விட வேண்டும்.



கடித்த பாம்பு அகப்பட்டால் விஷம் உள்ளதா, விஷம் இல்லாததா என்பதை அறிதல் வேண்டும்.

கடிபட்ட நபரை, கட்டில் அல்லது ஸ்ட்ரெச்சர் மூலமாக மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்ல வேண்டும். கடிபட்ட நபர் நடக்கக்கூடாது. கடிபட்ட இடத்தை அறுப்பதும் கூடாது.

பாம்புக்கடிக்கு விஞ்ஞான ரீதியில் தயாரிக்கப்பட்ட பாம்பு விஷமுறிவு மருந்தான "Anti venom serum" மிகவும் சிறந்தது. இது பம்பாயில் உள்ள Hafficine Instituteல் தயாரிக்கப்படுகிறது.

**மருத்துவ சிகிச்சை**

பாம்புக்கடிக்கு ஆளான நபரின் அதிர்ச்சியைப் போக்குவதற்கு முதலில் சிகிச்சை அளிக்க வேண்டும். கடித்த நபரைப் போர்வை கொண்டு போர்த்த வேண்டும். கால் வைத்திருக்கும் பாகத்தை உயர்த்தி வைக்க வேண்டும்.

குளுகோஸ் உப்புநீரை (Glucose Saline) ஊசி மூலம் செலுத்த வேண்டும். அதிர்ச்சி அதிகமாக ஏற்பட்டால் 'டிக்காட்ரான்' ( Decadran ) 'மெப்படீன்' (Mephantine) போன்ற உயிர்காக்கும் மருந்துகளைக் கொடுக்க வேண்டும். மூச்சுத் திணறல் இருந்தால் பிராணவாயு, செயற்கை சுவாசம் கொடுக்க வேண்டும். பாம்பு விஷமுறிவு மருந்தை (Anti venom serum கடித்த பாம்பிற்கு ஏற்ப 10 மி. லிட்டர் நீரில் (Distilled Water) கலந்து ஒன்று அல்லது இரண்டு சொட்டு அட்ரினிலின் (Adrenelene) சேர்த்து மெதுவாக நரம்பு மூலம் உடலுக்கு ஒத்துக் கொள்கிறதா என்பதை (Test Dose) பரீட்சை செய்து கொண்டு, பிறகு கொடுக்க வேண்டும். அவசியம் ஏற்பட்டால் 6 மணி நேரத்திற்குப் பிறகு மீண்டும் ஒருமுறை கொடுக்கலாம்.

**பாம்பு கடிக்காமலிருக்க சில தடுப்பு முறைகள் :**

வீடுகளைச் சுத்தப்படுத்தி எலிகள் வராதபடி செய்யவேண்டும். இரவில் நடக்கும்போது கைத்தடி கொண்டு தட்டிச் செல்வதாலும் பலமாக நடந்து செல்வதாலும் பாம்புகள் நிலத்தின் அதிர்ச்சியை உணர்ந்து விலகிவிடும்.

எனவே பாம்புக்கடிக்கு நவீன முறையில் பூரண சிகிச்சை அளிக்கப்படுவதால், இனி, பாம்பைக் கண்டு பதற வேண்டாம்!



## அப்படியும் நடக்குமா?

**க**ல்கி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராயிருந்த போது ஒரு சமயம் சங்கத்தின் காரியக் கமிட்டிக் கூட்டம் நடைபெறவிருந்தது. காரியக் கமிட்டி அங்கத்தினர் வெகு சிலரே வந்திருந்தனர். மற்ற அங்கத்தினர்கள் வருவதற்காக எல்லோரும் காத்துக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கிருந்த திரு. வெ. சாமிநாத சர்மா, ஏதோ காரியமாகத் தன் இடத்தை விட்டு எழுந்து அப்பால் சென்றார். அவர் சென்ற மறுகணம் கூரையிலிருந்த மின்சார விசிறி பெயர்ந்து, திரு. சாமிநாத சர்மா உட்கார்ந்திருந்த இடத்தில் விழுந்தது. வந்திருந்தவர்கள் அனைவரும் அதிர்ச்சி அடைந்தனர். இந்தச் சம்பவத்தை எண்ணிச் சிலிர்ப்படைந்தனர். 'இன்னும் ஒரு சில விநாடிகளுக்கு முன்னர் இது நிகழ்ந்திருந்தால் திரு. சாமிநாத சர்மாவின் கதி என்ன ஆகியிருக்கும்!' என்று பேசிக்கொண்டனர்.

'கல்கி' அவர்கள் வந்ததும் இந்தச் செய்தியை அறிந்து அதிசயப்பட்டார். பக்கத்திலிருந்த திரு. நாரண துரைக்கண்ணன் அவர்களிடம் "பார்த்தீர்களா துரைக்கண்ணன்! இந்த மாதிரி திடீர் சம்பவங்களை நாம் கற்பனை செய்து, கதைகளில் கதாநாயகன் மேல் அது விழுந்தது ; இது விழந்தது என்று எழுதினால் யாரும் நம்ப மாட்டார்கள். அப்படியும் நடக்குமா என்று கேட்பார்கள். இங்கே அந்த அதிசயம் நடந்திருக்கிறது!' என்று சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி நகைச்சுவையுடன் கூறி எல்லோரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்.

## ராஜாஜியின் ஆற்றல்!

**செ**ன்னை சர்க்காரின் பிரதம காரியதரிசியாக இருந்தார் 'பிரேகன்பரி' என்ற ஆங்கிலேயர். ராஜாஜி அவரைத் தம் மாயப் புன்னகையால் மயக்கி விட்டார் முதன் முதல், பிரதமக் காரியதரிசியான அந்த ஆங்கிலேயர் ராஜாஜியைச் சந்தித்தது ஒரு ரசமான சம்பவம். அவர்கள் பேச்சு அன்று கதராடையைப் பற்றி இருந்தது. ராஜாஜி கதராடையின் மகிமையை, புனிதத்தை, எளிமையை விளக்க — விளக்க, 'பிரேகன்பரி' அதில் மெய்ம் மறந்தார்; மறு நாள் ராஜாஜி அந்த ஆங்கிலேயருக்கு உடைதைத்துக் கொள்ளுவதற்கான கதர்த்துணிகளைத் தம் அன்பளிப்பாகக் கொடுத்தார். பிரேகன்பரியும் அந்தக் கதர்த்துணிகளைப் பெற்றுக் கொண்டு பிரபல தையற்காரரிடம் கொடுத்து அதில் சூட்டுத் தைத்துப் போட்டுக் கொண்டு வந்தார். ஆங்கிலேயரைக் கதராடை உடுத்தச் செய்த ராஜாஜியின் ஆற்றலைப் பற்றியே அப்போது பேச்சாக இருந்தது.

## ராஜாஜியின் ஒப்பற்ற குணம்

*ராஜாஜி, யாரையாகிலும் பார்க்கவிரும்பினால் அந்த நபர் ராஜாஜியின் வீட்டுக்கு ஓடிப் போய்ச் சந்திக்கத் தயாராய் இருந்தார்கள். ஆனால் ராஜாஜி, யாரையும் கேட்காமலே, எந்த வித முன்னறிவிப்பும் இன்றி அவர் வீட்டுக்குப் போய்விடுவார். இது ராஜாஜியின் ஒப்பற்ற தோர் குணம்.*

—காமராஜர்

# யுனெஸ்கோ

**'யுனெஸ்கோ' (UNESCO) என்றால் என்ன?**

"சமாதானம், சர்வதேச நட்புறவு, முன்னேறும் நாடுகளின் சமூக, கல்வி, கலாச்சார முன்னேற்றத்துக்குப் பாடுபடும் கழகமே 'யுனெஸ்கோ''. அதாவது, ஐக்கிய நாடுகள் கல்வி, சமூக, கலாச்சாரக் கழகம். இது தன் 30-வது ஆண்டை வெற்றிகரமாக முடித்து, இப்போது 31-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது.

1946-ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் கல்வி, சமூக, கலாச்சாரக் கழகம் (யுனெஸ்கோ) துவக்கப்பட்டது. அப்போது அதன் பொது மாநாட்டில் இந்தியா உட்பட மூன்று ஆசிய நாடுகளே பங்கேற்றன. ஆனால், இன்றைக்கோ ஆசியா சார்பில் 23 நாடுகள் யுனெஸ்கோவில் அங்கம் வகிக்கின்றன. இப்போது மொத்தம் இடம் பெற்றிருக்கும் நாடுகள் 136.

**யுனெஸ்கோவின் இலட்சியம்**

"மனிதர்கள் மனத்தில் 'போர்' பற்றிய நினைவுகள் பிறப்பெடுக்கின்றபடியால், அதேபோலவே மனிதர்கள் மனத்தில் சமாதானத்துக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளும் பிறப்பெடுக்க வேண்டும் என்பது யுனெஸ்கோவின் பிரபலமான ஒரு சித்தாந்தம்.

ஆகவே இனம், மொழி, மதம், பால் என்ற பாகுபாடுகளின்றி உலகம் முழுவதிலுமுள்ள மக்கள் மத்தியில்-கல்வி, விஞ்ஞானம், கலாச்சாரம் ஆகியவை மூலம் நாடுகளுக்கு இடையில் கழக நட்புறவை ஏற்படுத்தி, சமாதானம், நீதிக்கு கவுரவம், அடிப்படை உரிமைகள், சுதந்திரம் ஆகியவற்றுக்கு நல்வழி காணுவதே யுனெஸ்கோவின் இலட்சியம். இந்த இலட்சியத்துக்காக யுனெஸ்கோ கடந்த முப்பதாண்டுக் காலமாக மேற்கொண்ட நடவடிக்கைகளும், தொடர்ந்த பணிகளும் எண்ணிலடங்கா.

**இந்தியாவின் பங்கு :**

யுனெஸ்கோவின் பல்வேறு வகையான திட்டங்களில் இந்தியாவும் சீரிய பங்கு கொண்டு செயலாற்றி வந்துள்ளது குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும். யுனெஸ்கோ சார்பில் நடந்த வட்டார, சர்வதேசக் கூட்டங்கள் பல-1956-ஆம் ஆண்டு முதல் 1976-ஆம் ஆண்டு வரை இந்தியாவில் நடத்தப்பட்டுள்ளது. காலஞ்சென்ற டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன், டாக்டர் ஜாகீர் உசேன் போன்ற புகழ்மிக்க இந்தியத் தலைவர்கள் தங்களால் இயன்ற உதவிகளை யுனெஸ்கோவுக்குச் செய்துள்ளனர்.

இவர்களைத் தொடர்ந்து இந்தியாவைச் சேர்ந்த 47 நிபுணர்கள்-கல்வி, விஞ்ஞானம், கலாச்சாரம், தகவல் தொடர்பு போன்ற துறைகளில்உலகின் பல்வேறு பாகங்களில் யுனெஸ்கோ நிபுணர்களாகச் செயலாற்றி வருகின்றனர்.

உலக நாடுகளுடன் கூட்டுறவுக்கென தேசிய கமிஷன் அமைத்த யுனெஸ்கோ உறுப்பினர்களில் முதல் நாடு இந்தியாதான். கல்வி அமைச்சர் தலைமையிலான இந்தக் கமிஷன், உலக சமாதானம், சர்வதேச நட்புறவு போன்ற யுனெஸ்கோவின் இலட்சியங்களைச் செயலாக்கப் பல்வேறு திட்டங்களைத் தீட்டி, தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது.

**வகுப்பறையில் உலகம்**

கல்வி, சர்வதேச நட்புறவு, மற்றும் கூட்டுறவுத் துறையில் யுனெஸ்கோ ஆற்றி வரும் பணிகளை எடுத்துக்கூறும் ,வகையில் "வகுப்பறையில் உலகம்" என்ற தலைப்பில் ஒரு பத்திரிகையை இந்திய தேசியக் கமிஷன் வெளியிட்டு வருகிறது. அத்துடன் 3 மாதங்களுக்கு ஒருமுறை செய்திக் கதிர்களையும் வெளியிடுகிறது.

யுனெஸ்கோவின் இலட்சியம், செயல்முறைகள் பற்றிய விவரங்களைத் தெரிவிக்கும் வகையில் இந்தியாவில் 128 யுனெஸ்கோ சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**இந்தியா செய்த பேருதவி**

யுனெஸ்கோ பட்ஜெட்டுக்கென இந்த ஆண்டு இந்தியா 9,26,891 ஷில்லிங் வழங்கியுள்ளது. இந்தோனேஷியாவில் உள்ள போரோபுதூர் நினைவுச் சின்னங்கள் அடிக்கல் ஆட்டம் கண்டு அழிந்து போகாமல் காக்கும் பொருட்டு 5 இலட்சம் ரூபாய் பெறுமான இரும்புப் பாளங்களை இந்தோனேசியாவுக்கு இந்தியா வழங்கியுள்ளது. யுனெஸ்கோ திட்டத்தில் பங்கேற்கு முகமாக இந்த உதவி செய்துள்ளது இந்தியா.

இதேபோலவே காலனி பிரதேசங்களிலிருந்து வெளியேறிய ஆப்பிரிக்க அகதிகளுக்கான யுனெஸ்கோ கல்வித் திட்டங்களின்கீழ் ரூபாய் 1 இலட்சம் மதிப்புள்ள பென்சில், அளவு கோல், ஜாமெட்ரி பெட்டிகள் போன்ற கல்விக்கான சாதனங்களை இந்தியா வழங்கியுள்ளது.

ஆஸ்வான் அணை தண்ணீரில் மூழ்கிய நுபியா நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்க 1960-ஆம் ஆண்டு யுனெஸ்கோ மேற்கொண்ட திட்டத்தில் இந்தியா பங்கேற்றது. இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகளின்போது சில கோவில்கள் இடித்துத் தள்ளப்பட்டு, பின் மீண்டும் கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டி முடிக்கப்பட்டன.

**பல்வேறு துறைகளுக்கு நிதி உதவிகள்**

முதியோர் கல்வி, விஞ்ஞான போதனை, புத்தக வளர்ச்சி, பொறியியல், கல்வி, விஞ்ஞான விளக்கப்படம், பல்கலைக்கழகக் கல்வி, கலாச்சாரப் படிப்பு, தகவல் தொடர்பு சாதனம்-இப்படி பலப் பல துறைகளுக்கும் நிதியுதவி அளித்து யுனெஸ்கோ சீரிய பணியாற்றி வருகிறது. பலனடைந்த துறைகளும் ஏராளம்.

**ரங்கநாதர் கோவில் புனரமைப்பு**

ஸ்ரீரங்கத்தில் உள்ள ரங்கநாத சுவாமி கோவிலைப் புனரமைக்கும் புனிதமானதோர் பணியிலும் யுனெஸ்கோ உதவியுள்ளது. யுனெஸ்கோவின் கலாச்சாரப் பணிகளும் நினைவில் நிற்கின்றன. யுனெஸ்கோ கலாச்சாரப் பணிகளின் பயனாக புதுடெல்லியில் கலாச்சார ஆய்வுக்கான ஆராய்ச்சிக்குழு துவக்கப்பட்டது. இக்குழு பல்வேறு கலாச்சார திட்டங்களை மேற்கொண்டது. உலக இலக்



யுனஸ்கோவின் பெருமுயற்சித் திட்டத்தின் மூலம், தமிழ்நாட்டின் புகழ்மிக்க கோவில் தன் தனித்தன்மையான அழகுச் சிறப்பை மீண்டும் பெற்று வருகிறது.

69678
JL
V211m, N70
N76.7

கியப் பணியிலும் யுனெஸ்கோ நற்சேவை புரிந்துள்ளது.

இந்திய மொழியிலான 65 நூல்களை பிரெஞ்சு மொழியிலும் (18 நூல்கள்) ஆங்கிலத்திலும் (42 நூல்கள்) ஜெர்மனியிலும் (5 நூல்கள்) இதுவரை மொழி பெயர்த்துள்ளது யுனெஸ்கோ.

**'ஆரோவில்' நகரம்**

யுனெஸ்கோ ஒத்துழைப்புடன் இந்தியாவில் நிறைவேற்றப்பட்டு வரும் திட்டம் — பாண்டிச்சேரியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 'ஆரோவில்' நகரம். ஸ்ரீ அரவிந்தர் சங்கத்தின் ஆதரவில் நிர்மாணிக்கப்பட்ட இந்த எழில் மிகு ஆரோவில் நகரம்—குறிப்பிடத்தக்க ஓர் அம்சம்.

பாரீஸ் நகரில் கடந்த யுனெஸ்கோவின் பொது மாநாட்டில் இந்தியக் குழுவிற்குத் தலைமை தாங்கிச் சென்ற கல்வி அமைச்சர் பேராசிரியர் நூருல் ஹாசன் சிறப்புரையாற்றினார்.

**பொருளாதார நெருக்கடி :**

''நாட்டில் நிதி பற்றாக்குறையால் கல்வி முறை அச்சுறுத்தப்பட்டு வருகிறது. பல்கலைக் கழகங்களுக்கு மானியங்கள், விஞ்ஞான ஆராய்ச்சி மற்றும் கலாச்சார மேம்பாட்டுக்கு ஒதுக்கீடு, போன்றவை எளிதில் கிடைப்பதாக இல்லை. தங்களது தொழில் திறமையை சரிவரக் காட்ட இயலாத ஒரு வேலையை மேற்கொள்ளுமாறு விஞ்ஞான நிபுணர்களும், தொழில் வல்லுனர்களும் நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். சாதாரண மனிதன் நெருங்க முடியாத இடத்தில் புத்தகங்கள் இருக்கின்றன. கலாச்சார நிலையங்களோ சொல்லொண்ணு இடையூறுகளை எதிர் நோக்கியிருக்கின்றன'' என்று அவர் குறிப்பிட்டார்.

**இந்தியக் குழு கோரிக்கை**

யுனெஸ்கோ திட்டங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுத்தல், முன்னேறும் நாடுகள் தங்கள் சொந்த வளங்களைப் பயன்படுத்த உதவுவதே திட்டங்களின் அவசியம்; முன்னேறும் நாடுகளில் உள்ள விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப நிபுணர்களை உதவித் திட்டத்தில் சிறப்பாகப் பயன்படுத்திக்கொள்வது போன்ற தங்களது எண்ணத்தை இந்தியப் பிரதிநிதிகள் யுனெஸ்கோவிடம் எடுத்துரைத்தனர்.

சமீபத்தில் புதுடெல்லியில் துணை வட்டார மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டின் பங்கேற்ற டைரக்டர் ஜெனரலின் பிரதிநிதி, பணிகளைப் பரவலாக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு யுனெஸ்கோ ஒப்புதல் அளித்துள்ளதாக அறிவித்தார். இதனைத் தொடர்ந்து வட்டார அலுவலகங்கள் பலவற்றுக்கும் கூடுதலாகப் பணிகள் ஒதுக்கப்பட்டன.

கல்வி, இயற்கை, விஞ்ஞானம், கலாச்சாரம் ஆகிய துறைகளில் தங்கள் தேவைகளுக்காகத் திட்டமிட தொலைவில் உள்ள நாடுகள் பலவற்றை யுனெஸ்கோ நெருங்கி வரச் செய்திருக்கிறது என்பதில் ஐயமில்லை. ஒவ்வொரு நாடும் தனது வருங்காலத்தை, தானே உருவாக்கிக் கொள்வதற்கு இதுதான் தேவை என்பதை இந்தியா பூரணமாக நம்புகிறது.





# தீண்டாமை ஒழிப்பு

''பிறப்பினால் தீண்டத்தகாதவன் என்று கருதப்படும் கடைசி மனிதன் இருக்கும் வரை நமது போராட்டம் ஓயப் போவதில்லை''.

" காந்தி அடிகள் "

Jen...



''ஜாதி மதங்களைப் பாரோம்—
உயர் ஜன்மம் இத்தேசத்தில்
எய்தினராயின் வேதிய ராயினும்
ஒன்றே—அன்றி வேறு
குலத்தின ராயினும் ஒன்றே''

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே
—நம்மில் ஒற்றுமை நீங்கில்
அனைவர்க்கும் தாழ்வே நன்றிது
தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின்
நமக்கெது வேண்டும்?''

" மகாகவி பாரதியார் "




ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.